DIGITIZED

JL
Rm211, Msc
M92.17-13
16/180

# TABLE OF CONTENTS.

## VOL. XVII. (JAN. 1909—MARCH 1910.)

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
27 APR 1910
MADRAS.

### No. 1, for JANUARY, 1909.

1. "Our New Year" —17th volume, or "Nine years' Growth in Grace"—Arudra Darisanam 1901-09 .. 1
2. The Greatness of Divine Grace .. .. .. .. .. 5
3. Guru Bhakti, By T. A. Gopinatha Rao, M. A .. .. .. .. 6
4. Shakespeare's Hamlet and its Adaptations .. .. .. .. 10
5. The Congresses and Conferences of 1908.. .. .. .. .. 15
6. Agricultural Notes.—The Sowing of Paddy .. .. .. .. 19
7. Chillies—Some more Varieties, By S. Muthukumarasawmy Pillay .. .. .. 20
8. "Free from Bonds"—The Autobiography of a Taluq Gumastah .. .. .. 21
9. Health of Body, By P. D. Ratnam Pillay .. .. .. ... 2?
10. Sankara-Pryan, By M. N Ganesa Iyer .. .. .. ... 28
11. The Unity of Religion & the Variety of Creeds .. .. .. .. 31

### 1909ம்-ஞூ. ஜனவரி-மீ, 1-வது சஞ்சிகை.

1. நமது புதுவருஷம் 17- வது புஸ்தகாரம்பம்: 'நவமிவிருதம்' ஆருத்ராதரிசனம் (ஒன்பதாமுறை 1901—1909) ... ... ... ... ... ... ... 1
2. திருவிளையாட்டுச்சிறப்பு ... ... ... ... ... ... 5
3. குருபக்தி, தி. அ. கோபிநாதராவ், எம். ஏ.... ... ... ... .... 6
4. ஷேக்ஸ்பியர் இயற்றிய ஹாம்லெட் நாடகமும், அதன் வழிநூல்களும் ... ... ... 10
5. 1908 ஞூத்திய காங்கிரஸ்களும், கான்பரென்ஸ்களும் ... ... .. ... 15
6. விவசாயக்குறிப்புகள்: நெல்விதைத்தல் ... ... ... ... ... 19
7. மிளகாய், (எஸ். முத்துக்குமாரசாமி பிள்ளை) .. ... ... ... ... 20
8. அவிழ்த்துவிட்ட கழுதை. (ஒரு தாலுகாகுமாஸ்தாவின் சரித்திரம்). ... ... 21
தேகசௌக்கியம், (பு து. இரத்தினப்பிள்ளை) ... ... ...
சங்கரப்பிரியன், (எம். என். கணேசய்யர்) ... ..., ...
"எம்மதமும் சம்மதமே." ... ... ... ... ...

### No 2. For FEBRUARY, 1909.

The Place of Physical Education in a Nation's Vitality .. .. .. 33
ord Morley's Reform Scheme .. .. .. .. .. 37
e I. Majesty on Indian Reforms .. .. .. .. .. 40
Institution of Marriage As It Is, (Communicated).
tical Hints: Sesamum Oil-Its use and Characteristics, Cocoanut Oil-By Pandit T. Venkatarama Iyengar 47
ultural Notes: Tobacco Cultivation about Tanjore, By S. Muthukumarasawmy Pillay. .. 47
groom-Hunting"—or, The Lost Ideal, By Satyananta Sonia Sarma .. .. 50
e We Wantingin In fluence? .. .. .. .. 53
om Bonds"—(The Autobiography of a Taluq Gumastah) .. .. ..
Vale of Hindu Domestic Life ... .. .. .. ..
yan .. .. .. .. ..
ies and Notes The Mahamakham Exhibition—The Medical Congress—Experience the
.. .. .. .. ..

1909-ம் ஸ்ரீ பிப்ரவரி மீ, 2-வது.சஞ்சிகை


1. தேஹப்பயிர்ச்சியும் ஜாதிவீரியமும் ... ... ... ...
2. லார்ட் மார்லி செய்யவிருக்கும் துரைத்தனச் சீர்திருத்தங்கள் ... ...
3. இந்தியா சீர்திருத்தங்களைப்பற்றி மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியவர்கள் பேசியது
4. தற்கால கலியாண நிலைமை ... ... ... ...
5. அனுபவம்:—எள் நெய்யும் அதன் குணகுணங்களும், தேங்காய் எண்ணெய் ...
6. தஞ்சையின் சுற்றுப்பக்கங்களிலுள்ள புகையிலைச் சாகுபடி. முறை ...
7. "மாப்பிள்ளை தேடல்" அல்லது காணமற் போன கட்டழகன் ... ..
8. நமக்கேன் செல்வாக்கல்லை? ... ... ... ... ...
9 அவிழ்த்துவிட்ட கழுதை ... ... ... ... ...
10. சீதா, அல்லது, இல்லறவாழ்க்கை ... ... ... ... ...
11. சங்கரப்பிரியன் ... ... ... ... ... ...
12. காலவிசேஷங்களும், குறிப்புகளும் ... ... ... ... ...


No. 3. For MARCH, 1909.


1. True Men and False, Or, Saintly Men and Hypocrites .. .. ..
2. The Holy City of Muttra By T. C. Venkatamana Iyer .. .. ..
3. A Plea for the Study of our Mother-Tongue .. .. .. ..
4. "Free from Bonds" (The Autobiography of a Taluq Gumastah .. .. ..
5. "Bridegroom-Hunting" Or, the Lost Ideal. .. .. .. ..
6. Practical Hints About Water .. .. .. .. ..
7. Health of Body – Earth's influence on it, By P. D. Ratnam Pillay .. .. ..
8. Sankarapriyan, By M. N. Ganesa Iyer .. .. .. ..
9. The South Indian Association "Plate's Republic" .. .. .. ..
0, Current Topics and Notes .. ... .. .. .
1. The Mylapore Festival. ... .. .. ..


1909-ம் ஸ்ரீ-மார்சு மீ- 3-வது-சஞ்சிகை.


1. நிஜமனிதர்களும் பொய் மனிதர்களும், அல்லது, மஹாத்ம துராத்ம வித்யாசம் ...
2. வடமதுரை,(டி. ஸி. வெங்கட்ரமணயர்,) ... ... ...
3. நமது தாய்பாஷையை நன்றாகக் கற்கவேண்டும். ... ... ...
4. அவிழ்த்துவிட்டகழுதை.(ஒரு தாலுக்கா குமாஸ்தாவின் சரித்திரம்.)... ...
5. "மாப்பிள்ளை தேடல்" அல்லது காணமற்றபோனகட்டழகன் .. ...
6. தண்ணீரைப்பற்றி. ... ... ... ... ...
7. தேகசௌக்கியம்—(1) நிலம்.(பு.து. இரத்தினப்பிள்ளை.) ... ...
8. சங்கரப்பிரியன், எம், என், கணேசய்யர்... ... ... ...
தென் இந்தியா சங்கம்: சமஷ்டியில்- வியஷ்டி ... ...
காலவிஷயங்களும் குறிப்புகளும் ... ... ...
திருமயிலை மஹோற்சவம். ... .. ... ...




எனக்கு இஷ்டமில்லை; ஏதாகிலும் பி. ஏ, பி. எல், பரிக்ஷையாவது தேறினால் நல்லது என்று யோசிக்கிறேன். இது எல்லாம் கிடக்கட்டுமென்றாலும், இருக்கிற கடனைத் தீர்த்தன்றோ கலியாணம் பண்ண யோசிக்கவேண்டும் நான். மேலைக்குப் பார்த்துக் கொள்ளுவோம்".—என்று நிச்சிந்தையாய் சொல்லுகிறான். இதில் எவ்வளவுநிசம் எவ்வளவு பொய் என்பது சாதாரணமாய் லோகரூடியை அநுபவித்தவர்கட்கு நன்கு விளங்கும். பையன்களுக்கு கலியாணகாலங்களிலும் உத்தியோககாலங்களிலும் வயது பின்னேசெல்ல வாரம்பிக்கிறது. அதாவது, 20 வயதுக்காரன் கலியாணகாலத்தில் 16 வயதினவனாய்விடுகிறான். இதேமாதிரியாக 25-30 வயதுக்காரன் உத்தியோகமாகும் தருவாயில் 22,23 பிராயத்தானை சிறுவனாய்விடுகிறான். மேற்சொன்னபிள்ளையின் பிதா,கலியாணமாகாதேயென்று ஏங்கியிருந்தகாலத்தில், தன் பிள்ளைக்கும் பெண்கொடுக்க வந்தார்களே, எப்படியாவது, ஆயிரம்பொய் சொல்லியாவது கலியாணத்தை முடித்து விடலாமென்று யோசித்து விட்டார்.

'பையனுக்கு 20 வயது ஆய்விட்டதே என்று யோசித்து பெண்ணைக்கொடுக்க கூசுவார்களோ? ஏன், 16 வயதாயிற்று என்று சொன்னால்தான் என்ன, அவர்கள் கண்டார்களா, அதுதான் நல்லது.' என்று அவர் மனதில் எண்ணங்கள் ஜனித்தன.

இந்தக்காலத்தில் பிள்ளைகள் மெட்ரிகுலேஷன் கிளாஸ்வரையில் சரசரவென்று ஏறி வந்துவிடுவது சுலபம். 1880—1885 வருஷங்களில் முதல்கிளாசிலிருந்து இரண்டாவது கிளாஸுக்கு பிரமோஷனாக வேண்டுமானால் சர்க்கார் பரீக்ஷையொன்று பாஸ்செய்ய வேண்டும்; அதுபோலவே இரண்டாவதிலிருந்து மூன்றாவதுக்குப் போவதானால் மற்றொருபரிக்ஷை பாஸ்செய்யவேண்டும்; இப்படி மெட்ரிகுலேஷன்வரையும் படிப்படியாகவே ஏறவேண்டியிருந்தது. பையன்கள் சுலபமாய் மெட்ரிகுலேஷன் கிளாஸில் வரமுடியாதிருந்தது. அப்பொழுது "பையன் மெட்ரிகுலேஷனில் வாசிக்கிறான், இந்தத்தடவை பரிக்ஷைக்குப் பணங்கட்டியிருக்கிறான்" என்றால், அவன் படிப்படியாய் கஷ்டப்பட்டு மேலேறி வந்தவனென்றும், இப்பொழுதும் இதுவரையிலும் போல பரீக்ஷை தேறுவானென்றும் நிச்சயமாய் அர்த்தமாய்க்கொண்டிருந்தது. இந்நாட்களிலோ, முதல்கிளாஸ்முதல் ஆறாவதுபாரம் வரையில் 'லயன் கிளீயர்' கொடுத்துவிட்டிருக்கிறபடியால், தேறுகிறபிள்ளையும், உருப்படாப்பிள்ளையும் ஒன்றுபோலவே சரசரவென்று ஏறிவந்துவிடலாம். இரண்டு பேர்களும் 'மெட்ரிகுலேஷன் கிளாஸிலிருக்கிறான்' என்றுதான் சொல்லப்படுவார்கள். ஆனால் ஒருவன் தேறக்கூடியவன், மற்றவன் பலகாரணங்கட்காய் 'மெட்ரிகுலேஷனில் வாசிக்கிறான்' என்னும் வார்த்தையை அபேக்ஷித்து அங்கு தங்கியிருக்கிறான். அவைகளில் முக்கியமானது என்னவென்றால், பையனுக்குக் கலியாணகாலத்தில் "வயதாயிற்றே, பிள்ளையென்ன வாசிக்கிறான்?" என்று கேட்கிறவர்களுக்கு என்னபதில் சொல்லுகிறது? ஒரு மெட்ரிகுலேஷன் கிளாஸிலாவது வாசிக்கிறானென்றால்லவோ நன்றாயிருக்கும்; கொடுக்கிறவர்களும், பெண்ணை நல்ல இடத்தில் கொடுத்தோமென்று எண்ணிக் கொண்டு கொடுப்பார்கள்" என்னும் கருத்தை யுடையவர்களாய்ப் பிள்ளையை "அப்பா! கலியாணமாகிற வரையிலாவது பள்ளிக் கூடத்துக்குப் போய்க் கொண்டிருடா, இல்லாதுபோனால் தக்க இடத்துப் பெண்ணைக் கொடுக்கமாட்டார்களடா! நீ வாசிக்கவேண்டாம், சும்மாவாவது அங்கேபோய் உட்கார்ந்து விட்டுவாடா, அப்பா" என்று மன்றாடி அனுப்பப்பட்டவனாயிருக்கிறான். "ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங்கொக்கு" என்பதுபோல, ஒவ்வொருத்தராய் வருகிறபெண் பெற்ற கிரஹஸ்தர்கட்கு வெவ்வேறு காரண

ங்கள் சொல்லியனுப்பி விட்டு, "தக்க இடமகப்பட்டதும்" உடனே "பேசித்தீர்த்து" கலியாணம் செய்துவிடுகிறார்கள். இப்படி கலியாணங்கள் நடக்குமிக்காலத்திலா "கை பிறந்தால் தானே கலியாணமாகும்"?.

மேற்கூறிய நம்பையன் பிதாவாகிய மகான், நாம் முன்னமேயே சொன்னபடி நம்பையனுக்கு சிறுவயதென்றும், பதினாறுவது பிராயத்தில் நாலாவதிலிருந்து ஐந்தாவது பாரத்துக்கு பிரமோஷனாயிருக்கிறதென்றும், பையன் ஒரு பி-ஏ, பி-எல், லாவது பியாஸ் செய்யவேண்டுமென்றும், கடனும் அடைத்துவிட வேண்டுமென்றும் விருதாவாய்ச் சொன்னவரல்லர். இக்காருண்ணியவானுடைய எண்ணம் இன்னாளில் எல்லோருக்கும் விசதமாய்விளங்கக்கூடியதுதான். அதாவது, வயதுசென்ற நம்பையனை, வந்தவர் வெகு சிறுபிராயத்தான் என்று எண்ண வேண்டுமென்று பதினாறு பிராயமென்றார். ஐயோ! பதினாறு பிராயத்துக்கு நாலாவதிலிருந்து ஐந்தாவதற்கு பிரமோஷனானது வெகு ஆச்சரியகரமான வித்தையொன்றுமில்லை யென்பது இந்த பிராமணருக்குத் தெரியாது. வந்தவன் புத்திசாலி யானதினால். எளிதில் வரனுடைய புத்தி தீக்ஷண்ணியத்தை அறிந்து கொள்ளுகிறான். நாலிலிருந்து ஐந்தாவது பாரத்துக்கு பிரமோஷன் ஆயிற்று எனவே, அதற்குத் தக்கபடி, பெண்ணைப் பெறத் துர்ப்பாக்கியப் பட்டவன் வரதக்ஷிணை கொடுக்கவேண்டுமென்பது அர்த்தம். இந்தக்காலத்தில் சந்தையில் மாடுகளுக்கு விலையேற்பட்டுவிட்டதுபோலவும், ஷாப்புகளில் கடியாரம், கண்ணாடி சாமான்கள் முதலியவைகளின் கழுத்தில் ஒரு காகிதச் சீட்டில் அவைகளின் விலைகளை முறையே எழுதி ஒரு கயிற்றில் கோர்த்து கட்டியிருப்பதுபோலவும், தரம்வாரி, பையன்களென்னும் கலியாண கடைச்சாமான்களுக்கும் "லேபில்" எழுதி ஒட்டிப்போட்டிருக்கிறது. விலையின் விவரம் சுமார் அடியில் வருமாறு இருக்கும். அபேக்ஷைப்பட்டவர்கள் அவரவர்கள் யோக்கியதானுசாரமாய் தேடி எடுத்துக்கொள்ளலாம்:—

(1.) குலம், கோத்திரம், முதலியன நல்லவை; பையன் கண்ணுக்கு லக்ஷணமாயிருக்கிறான்; பிராயம் 15; மெட்ரிகுலேஷனுக்கு வாசிக்கிறான்; சரீரஸ்திதி நன்றாயிருக்கிறது. தகப்பனார் எக்சிகூடிவ் இஞ்ஜினிர். ஆக ஆறு லக்ஷணங்களையுடையவன்; லக்ஷணம் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு ஆயிரம்,-மொத்தம் 6000 ரூபா விலை.

(2.) மேற்படி லக்ஷணங்களில் முதல் ஐந்து மட்டுமே உள்ளன. கடைசியது மாத்திரமில்லை; தகப்பனார் வியவசாய அந்தஸ்துள்ளவர், சொத்து நிரம்பக்கிடையாது; அன்னவஸ்திரங்களுக்குக் காணும். விலை 2000 ரூபா.

எனவே, சொத்து அதிகமாயிருக்க, பெண் கொடுப்போரிடமிருந்து மேன்மேலும் பறிக்க வேண்டுமென்பது ஒருவித "ரூல்" ஆய்விட்டிருக்கிறது. இதைப்பற்றி கீழே விவரமாய் பின்னும் எழுதுவோம்.

(3.) மேற்படி லக்ஷணங்களில் ஒவ்வொன்று குறைந்து வந்தால் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் குறைத்துவிட வேண்டும். என்! கணக்கு எவ்வளவு சுலபமாயிருக்கிறது! எப்பேர்ப்பட்ட முட்டாளும் அறியக்கூடியதாயில்லை? இவைகிடக்க,

(4.) பரீக்ஷைகள் ஒவ்வொன்றதிகமாய் பியாஸ் ஆயிருந்தால், பரீக்ஷை ஒன்றுக்கு ரூ. 1000 உயர்த்தவேண்டும்; அதெப்படி-என்றால், முதலிற்சொன்ன பையன் மெட்ரிகுலேஷனல்லாமல் 18 வயதில் பி. ஏ. தேறியிருந்தால் அவனுக்கு விலை ரூபாய் பதினாயிரமானாலும் கொடுப்பார்கள்—அல்ல, கொடுக்கச் செய்யப்டுவார்கள்! இது நிற்க.

"நம்மபய்ல் பி. ஏ, பிஎல் பியாஸ் செய்ய வேணுமென்று நம்ம பிராமணன் என்சொன்



னாரென்றால், தம்பிள்ளைக்கு வந்தவர் பெண்ணையும் கொடுத்து, தம்மகத்துக்குக் கூட்டிச் சென்று, கலியாணத்துக்காக பதினாறுவது வயதையடைந்த—ஏன், இவன் கலியாணமாகாதவனால் என்றும் பதினாறுவயதுக்காரனே!—20 பிராயத்தனை நாலாவதிலிருந்து ஐந்தாவதற்கு பிரமோஷன் செய்யப்பெற்ற புத்திசாலியை படிக்கவைத்து, என்றைக்கும் சொப்பனத்திலும் இவனால் தேற ஒண்ணா இப்பரீக்ஷைகளை தேறவைக்கவெண்டுமாம். பிள்ளைபெற்றதற்குத் தகப்பன், பெண்பெற்றவனிடம் 1000, 2000 வழிப்பறிசெய்வது போதாதென்று, தன் பிள்ளையாகிய கல்லுப் பிள்ளையார் பரீக்ஷை தேறும்பொருட்டாக, சமுத்திரத்திலிறைத்தாற்போல மறுபடியும் பணத்தை பாழாக்கவேணுமாம்; ஆகவே, இம்மகான் தாம்பிள்ளைபடைத்ததற்காக ஒரு கூலிவாங்கிக்கொண்டு, தம்மகனைப் பிறனுக்கு விற்றுவிட்டு, மேலும் மேலும் தமக்கும் தம் பையனுக்கும், சம்பந்தியிடமிருந்து எப்படி பணம் தட்டலாமென்று பார்த்திருக்கிறான். என்ன நிஸ்கண்டத்தனம்! லோகம் என்ன ஸ்திதிக்கு வந்துவிட்டதுபாருங்கள்! தாது வருஷத்து க்ஷாமத்தில் காப்பாற்றமுடியாது போனபின்பு சில ஈனசாதியார் தங்கள் குழந்தைகளை விற்றுவிட்டனராம். அப்படி கஷ்டதசையில் செய்ததைக்கூட நினைக்கில் அவர்கள் மனம்பதறுமாம். அப்படி ஒருக்காலத்திலிருந்த ஜனங்களில் உயர்ந்தசாதியென்று புகழப்பட்ட பிராமணர்கள், நல்லஸ்திதியிலிருக்கையிலேயே, தாம் அருமையாய் பெற்றுவளர்த்தபிள்ளைகளை ஏனையா இலஜ்ஜையின்றி விற்கிறார்கள்? ஏன்! இது தெரியாதோ! நான் சொல்லுகிறேன், கேளுமையா: அப்போதெல்லாம் 'மக்கட்பேற்றிற்பெரும் பேறில்லை' என்றிருந்தது பழமொழி; இக்காலத்தார் இங்கிலீஷ்முதலியது வாசித்து குழந்தை பிறத்தல் வெகு தொந்திரவு, அவை பிறக்காதிருக்கவேண்டும், நாம் அப்பொழுது சுகமே வாழலாமென்று, தான் என்னும் பிரதாபமே முன்னிட்டுக்கொண்டு 'மக்கட்பேற்றிற் பெருங்கேடில்லை' என்றும்,

"குழலினிது யாழினிதென்பர் தம்மக்கள்
மழலைச்சொற்கேளாதவர்"

என்பதைச் சலிப்புடன்

குழலினிதுயாழினிதென்பர் தம்மக்கள்
மழலைச்சொற்கேட்டோய்ந்தவர்'

என்று மாற்றி, குழந்தைகளென்றால் ஆசூயைப்படுகிற மகான்களுக்கு 'அவைகளை எப்படியாவது, ஒப்படைத்தால் சரி' என்று தோன்றிவிடுகிறது. இதிருக்கட்டும். நாமறிய, நம் பாட்டன்மார்கள் பெற்ற குழந்தைகளெவ்வளவு, நாம் பெறும் மக்கள் எவ்வளவு? அவர்கள் சாதாரணமாய் 7—8, சிற்சிலர் 10 வரையும், குழந்தைகளைப் பெற்று அவைகளை நல்ல இடங்களில் கலியாணஞ்செய்து கொடுத்தும் செய்து கொண்டும் நன்றாய் வாழவில்லையா? "ஆமாம் அந்த நாளெல்லாம் சுபிக்ஷமாயிருந்தது. அப்பொழுது நானும் வாழ்ந்திருந்தால் எனக்கும் தாராளமாய்க் குழந்தைகளிருக்கத்தான் செய்யும். இப்பொழுது ஒருகுழந்தைக்குக் கலியாணமென்றால், 1000, 2000 கொடுக்கவேண்டியிருக்கிறதே" என்கிறார். இதனையெல்லாம் கேட்ட ஒருவர். "சரி, அப்படியானால், நீரும் உம்முடைய பெண்களுக்காக வரதக்ஷிணை கொடுக்கவேண்டாம். உம்முடைய பிள்ளைகளையும் விற்காதேயும்" என்று சொல்வதில்லையே! "ஆமாம், இருந்தாற்போலிருந்து கலியாண விஷயத்திலேன் இவ்வளவு கஷ்டம் வந்துவிட்டிருக்கிறது?" "ஏன்! சொல்லுகிறேன். அட கிடக்கட்டும். நீங்கள் ஜட்காவண்டிக்காரன்களைப் பார்த்திருக்கிறீர்களா?.

"ஏ, ஜட்கா, எழும்பூருக்கு வாரயா, அப்பேன்? ஏய், என்னபேசல்லே? வர்ரயா இல்லையா சொல்லு?"

"மூக்காரூபா குடுக்கிறயா சாமீ!"

"என்ன! திருவல்லிக்கேணியிலிருந்து எழும்பூருக்கா! எப்போதாவது, உன் ஜன்மாந்தரத்திலே பன்னிரண்டணா வாங்கியிருக்கிறயா? ஏதாவது சுமாராய் கேளப்பேன்"

"ஏன்சாமி! காங்கிரஸிலே மூணு ரூபாக்கி கூட போயிருக்குசாமி, அப்படி நினைச்சுடாதே சாமி, இஷ்டமிருந்தாக்க, பத்து அணா குடு."

"போ, போ, எனக்கு ஒன்றும் ரயிலவசரமில்லை, நான் மெள்ளபோனால், காரியம் ஒன்றும் கெட்டுப்போகாது. கொஞ்சநேரம் நின்னா, டிராம்வண்டி வருது, ஏறிக்கிண்டுபோறேன், நீஒன்றும் முறுக்கவேண்டாம், போ!"

"சாமி, சாமீ, எட்டணாதான் குடுப்பியா? ஏளணா? கடக்கட்டும் உனக்காக ஆறணா, இல்லாத போனால் போய்யா!"

"சாமி, சாமீ, அவன் கிடக்கிறான், எங்குதிரையைப்பார் சாமி; அடே கழுதே கிழுதே எல்லாங் கட்டிக்கிட்டுவந்துட்டு, நம்மய்யருக்கிட்டே ஆறணா கேக்கறயாடா; நம்ம வண்டியிலேறுங்கசாமி, அந்த ஆறணா இங்கே குடுங்கசாமி,—"

"போடா, போடா, மூணணா! சம்மதமானால் ஓட்டிக்கிண்டுவா, இல்லையானால் போ!"

"என்னசாமி, போறே? வாய்யா, நாலணா தான்."

"வாண்டாம், வாண்டாம்."

"வாசாமி, மூணணாதான்."

"சாமி. சாமீ நான் முதல்லே கேட்டேன், நான் அந்த மூணணாக்கு விடறேன் சாமி, அய்யரே; வா அய்யரே!"

அய்யருக்கு அவசரம்போலிருக்கிறது, நம்முடைய வண்டி ஒன்றுதானிருக்கிறது, இப்பொழுது என்னபணம் கேட்டபோதிலும் கொடுத்துத்தான் தீரவேண்டியது என்று எண்ணின ஜட்கா வண்டிக்காரனுக்கு முதல் முதல் பேசுவதுகூட கஷ்டமாயிருந்தது. பிறகு அவர் தனக்கொரு அவசரமுமில்லை என்று வெட்டென தெரிவித்ததும், சாரம் விட்டுப் போயிற்று, "முக்காரூபா" விலிருந்தவன் "ஆறணா" வுக்கு இறங்கிவிட்டான். பின்னும் மற்றொருவண்டி வந்துவிடவே மளமளவென்று மூன்றணாவுக்கு இறங்கிவிட்டது. அதுபோல, "ஐயோ, குழந்தை மீனாக்ஷிக்கு 10-வயதாகிறது, என்னசெய்யறது, தக்க வரன் ஆம்படல்லையே" என்று பல்லவிபாடும் தன் மனைவியின், தங்கை தமக்கைகளின், வார்த்தைகளைப் பிரதிதினம் கேட்டு பயந்திருக்கும், ஒருவர் "எப்படியாவது மேலை வருஷம் சித்திரைமீ குழந்தைக்குக் கலியாணம் பண்ணி மறுகாரியம்பார்க்க வேணும். இனி ஒரு க்ஷணம் சும்மாவிருக்கக்கூடாது" என்று நிச்சயித்து வரன் தேடப்போகிறார். இதுதான் சமயம், இவருக்கவசரம், அடுத்தவருஷம் கலியாணம் பண்ணியே தீரவேண்டும் என்றுஇருக்கிறபடியால், கேட்டதுகொடுத்துத் தானே தீரவேண்டும், பார்த்துக்கொள்வோம்" என்று துணிந்து, 1000, 2000 கொண்டுவா என்று கேட்கத் தலைப்படுகிறான் பிள்ளை வீட்டுக்காரன். அப்படியல்லாமல் "பெண்ணுக்கு வயது ஆறாகிறது, வரன் இப்போபிடிச்சு பார்க்கவேணும், என்கிறவனிடம் வரன் வீட்டுக்காரர்கள் பேசுவதேயில்லை. அப்படி பேசினாலும், "இப்போஎன்னஅவசரம்"—அவசரமில்லாவிட்டால் நிச்சயப் படுத்திக்கொள்ளக் கூடத் தடையுண்டோ தெரியவில்லை. கொட்டுவாயில் வைத்துக் கொண்டுதான் பேசவேண்டுமோ!—, "குழந்தைகள் பெரிசாகட்டும் பேசிக்குவோம்" என்று விடுகிறார்கள்.

அவசரம், அவசரமில்லை என்பதில் தான் இவ்வளவு கஷ்ட சௌகரியங்கள் இருக்கின்றன என்று நன்றாய்த் தெரிந்திருக்கையிலுங்கூட ஒரு தர்ம வியவஸ்தை செய்யத்துணிய நம்மவர்கட்கு முடியவில்லையே! சுமார் 485-வருஷங்களுக்கு முன்னமே விஜயநகரத்தரசனாகிய பிரதாபதேவராயமகாராயர் காலத்தில் படைவீட்டு ராஜ்யத்து அசேஷவித்துவத் ஜனங்கள்கூடி ஒருவியவஸ்தை செய்தார்கள். அது அடியில்வருமாறு காணப்படுகிறது:—



"சுபமஸ்து, ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா இராஜாதிராஜ பரமேசுவரான ஸ்ரீவீரபிரதாபதேவமஹாராஜர் பிருதிவீராஜ்யம் பண்ணியருளானின்ற சகாப்தம் 1347-ன்மேல் செல்லானின்ற விச்வாவஸு வருஷம் பங்குனிமாசம் ந-க்கு ஷஷ்டியும்; புதன்கிழமையும்பெற்ற அஸ்வத்துநாள்; படைவீட்டு இராஜ்யத்து அசேஷவித்வத் மஹா ஜனங்களும் அர்க்க புஷ்கரணிகோபிநாதன் ஸந்நிதியிலே தர்ம்ம ஸ்தாபந ஸமயபத்திரம் பண்ணிகுடுத்தபடி; இற்றைநாள் முதலாக இந்தப் படைவீட்டு ராஜ்யத்து ப்ராஹ்மணரில் கன்னடிகர், தமிழர், தெலிங்கர், லாடர்முதலான அசேஷ கோத்திரத்து அசேஷ சூத்திரத்தில், அசேஷ சாகையிலவர்களும் விவாஹம் பண்ணுமிடத்து கன்னியாதானமாக விவாகம் பண்ணக்கடவராகவும். கன்னியாதானமாக விவாகம் பண்ணாமல் பொருள் வாங்கிப் பெண்குடுத்தால். பொன்குடுத்து விவாகம் பண்ணினால் இராஜதண்டத்துக்கும் உட்பட்டு பிராம்மண்ணியத்துக்கும் புறம்பாகக் கடவரென்று பண்ணின தர்ம ஸ்தாபனசமய பத்திரம். இப்படிக்கு அசேஷவித்வத் மகா ஜனங்கள் எழுத்து" என்பதுசாஸனம்.

இது விரிஞ்சிபுரத்து கோயிலின்முன்கோபுரத்துசுவரில்வெட்டப்பட்டிருக்கிறது. இதனால் அக்காலத்தில்பெண்கள்கிடைப்பதுஅரிதாயிருந்ததென்றும்; அதற்காக, வெகுபணம் செலவிட்டு கலியாணம் செய்துவந்தார்களென்றும், அது வெகு கொடுமைகளைவிளைத்து வந்தது. ஆதலால் அக்கொடுமைகளை நீக்க தர்ம்மஸமயஸ்தாபனம் செய்யவேண்டுமென்று வித்வத் ஜனங்கள் ஒன்றுகூடி கன்னிகாதானமன்றி, பொன்னுக்குப் பெண் குடுக்கக்கூடாதென்று வியவஸ்தை செய்ததோடுகூட, அரசனிடத்திலும்தெரியப்படுத்தி, இதற்குவிரோதம்செய்தவனை ராஜதண்டனைக்குட்படுத்தி, தாங்களும் அன்னோனை ஜாதிபிரஷ்டம்செய்தார்கள். அவ்வாறு துணிவுடன் பொதுநன்மைக்கு உழைத்த வித்வத் மகாஜனங்கள் இப்பொழுது எங்கேபோனார்கள்? அவர்களுடைய சந்ததியர்களான நாம் இவ்வளவு இழிந்தஸ்திதிக்கு வந்துவிட்டோமே! நம்மில் நால்வர்சேர்ந்து ஒரு வியவஸ்தையாவது செய்யயோக்கியதையற்றவர்களாயிருக்கிறோமே! நமக்கே நம்மனிதர்களின் நடத்தை, நம் ஐக்கியத்தால் அடக்கமுடியாவிடின், அரசர்களை தர்ம்மஸ்தாபனஞ் செய் என்று எங்ஙனங்கேட்கலாம்? அதிலும் இக்காலத்தில் நம்மதவிஷயங்களில் எவ்விதமாயும் புகுந்து கெடுதிசெய்யமாட்டோமென்று உறுதிமொழிதந்திருக்கும் இங்கிலீஷ் ராஜாங்கத்தார், நம் பிரயத்தினத்தினாலல்லாமல், தாமே எங்ஙனம் நமக்காக தர்ம்மஸ்தாபனஞ் செய்யத்துணிவார்கள். "ஓ! அவன் மூன்றுதினம் கிருஸ்தவனாயிருந்து இப்பொழுது சாதியில்வந்து சேர்கிறேன் என்கிறான், அவனைச்சேர்த்துக்கொள்ளப்படாது; அப்படிசெய்வார்களை நாம் சாதிபிப்ரஷ்டம்செய்வோம்" என்னும் நம்மவர்கள், திருடி, கொலைசெய்து, தகாதகாரியங்களையெல்லாம் அமரச்செய்து, ஜெயிலுக்குப்போனவனை எவ்வாறு ஒருசிறிய பிராயச்சித்தம் செய்து சேர்த்துக்கொண்டு வருகிறார்களோ அறியோம். சாதிப்பிரஷ்டம் செய்வோம் என்பவர்கள் சத்விஷயத்தில் செய்யச்சமர்த்திலரோ? பிள்ளைவீட்டுக்காரன் பெண்வீட்டுக்காரனிடம் அநியாயமான சீர்வரிசைகளைக் கேட்பானானால் அவன் சாதிக்குப் புறம்பாவனென்ன ஏன் தைரியமெழவில்லை? மூன்றுமாதத்துச் சம்பளத்தைப் பாதக்காணிக்கையாக கொடுக்கமாட்டாத கிரகஸ்தனை பஹிஷ்காரம் போடுவேனென்னும் கருணாப்திகளான ஸ்வாமிகளின் பலம் இவ்விஷயங்களை சீர்படுத்துவதில் அபலமாகி விடுகிறதே? இம்மகான்களெல்லாம் எதுக்கு ஏற்பட்டார்கள்?

“இந்தவகையில்லாதமனிதரைக் காசினியிலேன் படைத்தாய், கருதுதாயுதரமும் பார்க்கின்றபேர்களிருகண்களும்செய்தவினையோ!” என்று கவிகதறுவதைப்போல இப்பெரியவர்களைக் கண்டு பரிதபிக்கவேண்டித்தானிருக்கிறது. சாஸ்திரவித்துக்கள் கூடி வியவஸ்தைகள் செய்யமுடியாவிட்டால், சாஸ்திரீகமான விஷயங்களையாவது ஒப்புக்கொள்ளலாமே. அதாவது பெண்களுக்கு கலியாணம் ஐச்சிகம், ருது ஆவதற்கு முந்தியே கலியாணம் கழிக்கவேண்டுமென்பது அசாஸ்திரியம். ருது ஆனபின்னும் விவாகம் செய்யலாம் என்று ஒப்புக்கொண்டுவிடின், அவசரம் என்பது நீங்கிவிடுகிறது. ஜட்காவண்டிக்காரன் மிடுக்கு ஒடுங்கினதுபோல பையனை வைத்துக்கொண்டிருக்கிறவர்களும் ஒருவாறு அடங்குவார்கள். அதையாவது செய்யின், நம்மவர்கட்கு க்ஷேமங்கிடைக்கும். க்ஷாமம், வியாதி முதலான பலவிதகஷ்டங்கட் குட்பட்ட நம்மவர்கள், ஜனசமூகத்தின் மௌட்டிகத்துக்கும் உள்பட்டுப் பாடுபடவும் வேண்டுமோ?

அன்றியும்மற்றொன்றையும்கவனிப்போம். ராமஸ்வாமிஅய்யர், கிருஷ்ணய்யர், கோபாலய்யர் என்று மூன்றுபெயர்களிருப்பதாகக் கொள்ளுவோம். இவர்கள் மூவர்களுக்கும் ஒவ்வொருவர்க்கும்ஒருபிள்ளையும் ஒருபெண்ணுமிருப்பதாகவும் வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது ராமஸ்வாமி அய்யர் தம்மகனுக்கு கிருஷ்ணய்யரிடம் 2000 ரூபா வாங்கிக்கொண்டு அவர்பெண்ணைக் கலியாணம் செய்துவைத்து பையனை கிருஷ்ணய்யர் வீட்டுக்கனுப்பிவிடுகிறார்; தம்மகளை கோபாலய்யர் மகனுக்குக் கொடுத்து 2000 ரூபாயுங் கொடுத்து, தன்னகத்தில் கொண்டுவைத்துக்கொள்கிறார்.

இதுபோலவே, கிருஷ்ணய்யர் தம் பிள்ளையைகோபாலய்யருக்குக்கொடுத்து, 2000ரூபாயைப் பெற்றுக்கொள்ளுகிறார். பையன் கோபாலய்யர் அகத்துக்குப் போய் விடுகிறான். அதாவது, மேற்சொன்னவைகள் அடியில் காண்பித் திருப்பதுபோல நடக்கிறது:—

இராமசாமிஅய்யர். கிருஷ்ணய்யர். கோபாலய்யர்.




கலியாணத்திற்குப்பின் இராமசாமிஅய்யரகத்தில் கோபாலய்யர் பிள்ளையும், கோபாலய்யரகத்தில் கிருஷ்ணய்யர் பிள்ளையும் வளர்க்கப்பட்டுவருகிறார்கள். கலியாண விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரேசெலவு; இராமசாமிஅய்யருக்கு பெண்கலியாணத்துக்காக கைவிட்டுப்போனது 2000ரூபா, பிள்ளைகலியாணத்தில் வந்தது ரூ. 2000; பாக்கி, தம்மகன் பிறர்வீட்டுக்குப் போய்விட்டு பிறர்மகன் தம் வீட்டில் வளர்கிறான்; இதேமாதிரியாகவே மற்றவர்கள் விஷயமும். இப்படி செய்யாமல் அவரவர்பணத்தை அவரவரேவைத்துக்கொண்டுதத் தம்மக்களைத்தத்தம்கிரகங்களிலேயே வளர்த்து, பெண்கள்பெரியவர்களானபின் அவரவர்கள் புக்ககத்துக்கனுப்பி சுகமேயிருக்கச் செய்யக்கூடாதோ? ஏன் வேதநாயகம் பிள்ளை பணத்தை யிகழ்ந்து கீர்த்தனை பாடமாட்டார், இவ்வளவுபெரிய கூத்தைவிளைக்குமாயின்? கலியாணவிஷயங்களில் சீர்திருந்தாத நாம் மற்றெவ்விஷயத்திலும் சீர்படநியாயமில்லை. ஆதலால் ஆன்றோர்கள் கூடிய சீக்கிரம் சீர்பாடு செய்ய முயல்வார்களாக.

கோ.

NEW BOOK BY
SWAMI VIVEKANANDA
**INSPIRED TALKS**
280 PAGES 2 ILLUSTRATIONS
**CLOTH BOUND Rs. 2**
PUBLISHED BY
THE RAMAKRISHNA MISSION,
*Mylapore, MADRAS.*



## PRACTICAL HINTS

### SESAMUM OIL—ITS USE AND CHARACTERISTICS

### எள் நெய்யும் அதன் குணகுணங்களும்.

எள்ளிலிருந்து எடுக்கப்படுவது எண்ணெய். எள்ளில் நாட்டுஎள், காட்டுஎள், பேயெள் எனமூன்றுவகையுண்டு. பேயெள் செடி ஒசூர் பங்களூர்முதலிய இடங்களில் அதிகம். அதின் பூ வட்டமாய்மஞ்சள் நிறமுள்ளதாயிருக்கும். தமிழ்நாட்டிலுண்டாகும் எள் பூ நமது மூக்கைப்போல் அடிவிரிந்து மேல் குறுகி இருக்கும்.

2. இங்கே நாம் பேசுவது நாட்டு எள்ளைப் பற்றியதேயாம். எள்ளின் சுபாவகுணம் சூடும் குளிர்ச்சியுமாம். உணவில் கொஞ்சம் சேர்ந்தால் நலமாம். சுத்தரக்தத்தை யுண்டாக்கிச் சுகத்தைக் கொடுக்கும். சொறி, சிரங்குகளின்மேல் பூசிக்கொண்டு வந்தால் தோல் மெருவாகும். படைகள் மாறும். நரையிரலைப்பற்றிய புண்களை ஆற்றும். சூட்டினாலுண்டாகும் இருமல் நீர்ச்சுருக்குகளை மாற்றும். மந்தத்தை உண்டாக்கும். மூளைக்கும் தீனிப்பைக்கும் உதவாது. வண்டலைப்பற்றியநோய்களை யுண்டாக்கும். நெருப்பில் சுடவைத்து எடுத்துக்கொள்ளவேணும். பழச்சாறு காடி இவைகளோடு சேர்த்தால் குணம்செய்யும்.

3. சரீரத்தில் சூட்டையுண்டாக்கி அதனால் அங்கங்கேயுள்ள நோய்களை மாற்றும் குணம் இதற்குண்டு. ஆனால் நோயற்றதேகத்தில் அடிக்கடி பூசுவதால் சரீரஸத்தும் நரம்பின் வலுவும் குறைந்து நேத்திரம் முதலிய அவயவங்களிலுள்ள ஒளியம்சங்களைக் கெடுத்துவிடுகின்றது. கண்ணில் நீரேற்றம் படலம் முதலிய நோய்களிருந்தால் அப்பொழுது சிரசில் எண்ணெய்தேய்த்துக்கொள்வதால் கேடொன்றும் உண்டாகாது. நோயற்ற கண்களுண்டானவர்கள் நல்லெண்ணெயை மட்டும் தேய்த்து முழுகுவதால் அதிக சூடுண்டாகி பிடரியிலிருந்து கண்ணில்வந்து கூடும் நரம்புகளுக்குத் துர்ப்பலத்தை யுண்டாக்கி கண்ணொளியைக் கெடுத்துவிடுவதால் வெள்ளெழுத்துண்டாகின்றது. சரீரத்தைச் சுகநிலையில் வைத்துக்கொண்டு நல்லெண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதை ஒருவர் அவருடைய முப்பதாவது வயதிலிருந்து நீக்கிவிடுவாரானால் நாளுண்டளவும் அவருக்கு வெள்ளெழுத்துண்டாகாது. இது நிச்சயம். மூலிகைரஸத்தோடு நல்லெண்ணெயைச் சேர்த்துத் தைலம் வடித்துவைத்துக் கொண்டு மூழ்கி வருவாரானால் அவர்களுக்கும் வெள்ளெழுத்து உண்டாகாது.

4. சரீரத்தைச் சிரசுமுதல் பாதமட்டும் அதிக சூட்டை யுண்டுபண்ணி நல்லெண்ணெய் சுத்தப்படுத்துகின்றது: மயிர்க்கால்களில் அதிக வேர்வையை உண்டுபண்ணுவதினால் நீங்கள் இதைப்பார்த்துக்கொள்ளலாம்! எண்ணெய் தேய்த்துக்கொண்ட நாள்களில் நமது நாக்கிலும் வாயிலுமுண்டாகும் வெள்ளைப் படலத்தைப் பார்த்துக் கொண்டால் சூட்டின் மிகுதி தெளிவாகும். சுரரோகமுள்ள நாள்களிலும் இந்த வெள்ளைமாசாகும் படலம் காணப்படும். அதிகச் சூடுண்டானபோது சரீரம் அதிகம் தளர்ச்சி யடைந்துவிடுகின்றது.

5. அப்பொழுது காமவிகார முண்டானாலும் அதைப் புத்திசாலிகளடக்கிக் கொள்ள வேணும். அடக்காது சம்போகம் நேர்ந்துவிட்டால் சுகஜன்னி யெனும் சடுதி நோயுண்டாகி மனிதரை நொடிப்போதில் மாய்த்துவிடுகின்றது. இதற்கும் நல்லெண்ணெயே காரணம். வெள்ளெழுத்தையும் சுகஜன்னியையும் தலைவலியையு முண்டாக்கும் துர்க்குணம் நல்லெண்ணெய்க் குண்டென்பதை ஓர் மகான் 40-வருஷங்களுக்குமுன் தெரிவித்தார். அதன்படியே நல்லெண்ணெயை 30 வயது முதல் நீக்கிவிட்டு ஒருகிழவர் 65-வயதாகியும் கண்ணில் யாதொரு நோயுமின்றி

விளங்குகின்றார். வெள்ளெழுத்தும் அவரைக் கிட்ட அஞ்சி விலகிவிட்டது.

6. உலகில் பெரியோர் மனிதர்களின் குணங்களைமட்டும் எடுத்துப்பேசித் துர்க்குணங்களை மறைத்து வைப்பதுபோல் பதார்த்த குண சிந்தாமணியெனும் நூலாசிரியரும் நல்லெண்ணெயின் குணத்தை மட்டும் கூறிவிட்டு துர்க்குணத்தைக் கூறாது விட்டு விட்டார்.

### பதார்த்த குண சிந்தாமணி.

### எள்ளின் நெய்க்குணம்.

வெண்பா.

புத்திநய னக்குளிர்ச்சி பூரிப்புமெய்ப்புளகம்
சத்துவங் காந்தி தனியிளமை—மெத்தவுண்டாம்
கண்ணோய் செவிநோய் கபாலஅழல் காசநோய்
புண்ணோய்போ மெண்ணெயாற் போற்று. (க)

### எண்ணெய் அன்னத்தின்குணம்.

வெண்பா.

எண்ணெயுஞ்சோறுமுண்ணி லென்றைக்குமாபலமா
பெண்ணுக் கிளையாத பீடுமுறும்—நண்ணுகின்ற [ம்
வாதகப மேகம்போ மாறுப்பசி யெழுப்பும்
பூதலத்துள் நாளும் புகல். (உ)

7. முடிபுரை.—நல்லெண்ணெயில் குணம் சில, அதனாலுண்டாகும்தீங்கு பல. நோயுள்ள சரீரத்திற்கு அது சில சமயங்களில் மருந்தாய் நலந்தரும். மற்ற சுகசரீரிகளுக்கு விஷமாய்த் தீமை விளைக்கும். நோயற்ற வாழ்வைக் கருதுவார் நல்லெண்ணெயின் குணாகுணங்களை நன்கு ஆராய்ந்து கொண்டு அதனைக் கையாடவேண்டும். நல்ல பாம்பு மந்திரத்திற் கட்டுப்படும். அதுபோல் நல்லெண்ணெய்விவேகிகளுக்குக் கட்டுப்பட்டுக் குணம் தரும். பாம்பின் விஷத்தை நொடிக்குள்பரவும்படிச்செய்வது நல்லெண்ணெயே. சரீரத்தளர்ச்சியாலேதான் விஷம் விரைவில் பரவுகின்றது.

## COCOANUT OIL—ITS USE AND CHARACTERISTICS

## தேங்காய் எண்ணெய்.

இங்கு தேங்காயெண்ணெயின் குணாகுணங்களைக் கூறுவதும் நம்மவர் சுகவாழ்க்கைக்குப் பயன்படும்.

குணம்:—சூடும். வரட்சியும்.

பிரயோசனம்:—உணவிற் கதிகம் சேர்க்கலாம்.

சௌக்கியம்:—சுத்த ரத்தமுண்டாம். தாதுவிளையும்; இடுப்புவலி, கீல்வாதம், பாரிசவாயுக்களைக் கண்டிக்கும். ஈரலுக்கு வலுவைக் கொடுக்கும். உள்புண்களையும், மூலத்தையும் மாற்றும். வாய்நாற்றத்தைநீக்கும். வழுக்கையிற்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடில் மூலச்சூடு நீங்கும். விந்துவிளையும். இளநீரில் கொத்துமல்லிவறுத்துப்பொடியை ஊறவைத்துக் குடிக்க நீர்த்தாரையிலொழுகும் உதிரம் நின்றுவிடும். முற்றின தேங்காய்ப்பால் சுக பேதியையுண்டாக்கும். கொப்பரையில் பசுந்தழைசேர்த்து அரைத்துமேலே பூசசொறி தினவு முதலியவை நீங்கும். நெல்லோடு சேர்த்து வேகவைத்து குழந்தைகளுக்குக் கொடுக்கில் வயிற்றிலுள்ளகிருமிகள் நீங்கும். இந்தத் தைலத்தினால் புத்தி அதிகரிக்கும். இடுப்புவலி மூலவலி இவைகள் நீங்கும்.

2. சூட்டுடம்பிற் காகாது. அதிகமானால் நெஞ்செரிப்பு, ஓக்காளம் உண்டாகும். எலுமிச்சம்பழரசம் முதலிய புளிப்புள்ள பதார்த்தங்களோடுசேரில் குணமாம்.

3. தேங்காய் எண்ணெயில் குணம் அதிகம் அகுணம்மட்டு. நல்லெண்ணெயிலோகுணக்கேடு அதிகம். குணம்கொஞ்சம்.

4. சரீரசுபாவம்.—நோயற்றநிலை, நோயுள்ளநிலை, சீதஉஷ்ணநிலை, நாட்டின்நிலை, காலநிலை, வயது, இவைகளைச் சோதித்தறிந்து கொண்டே ஒருபொருளின் குணாகுணங்களை நிதானித்தறிதல் வேண்டும்.

இங்ஙனம்.
தி. வேங்கடராம ஐயங்கார்.



## Agricultural Notes.

### TOBACCO CULTIVATION AROUND TANJORE.

### தஞ்சையின் சுற்றுப்பக்கங்களிலுள்ள புகையிலைச் சாகுபடிமுறை.

புகையிலையானது சிறுபோதையும் காரமும் உள்ள ஓர் இலை. இது பசுமையில் பல மருந்திற்கும், பாடஞ்செய்தபின் பச்சையாகவும் வாட்டியும், தகித்தும் பலவாறு உபயோகப்பட்டு அழிவதால் பயிரிடுவோர்க்குப் பலன் தருகிறது.

இது ஆதியில் குவீன் எலிஸெபெத் காலத்தில் (Queen Elzabeth) வர்ஜீனியாவிலிருந்து (Verginea) ஸர் வால்ட்டர் ராலி (Sir Walter Raleigh) என்பவரால் இங்கு கொண்டுவரப்பட்டது என்று சொல்லப்படுகிறதாயினும், இத்தஞ்சை ஜில்லாவில் வேதாரண்யம், சிவபுரி, பழூர், திருவையார், கபிஸ்தலம் முதலான இடங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

நிலத்தின் தகுதி:—பசுந்தாள் எருக்கட்டுள்ள உதிர்மணற்பாங்கு இதற்குரித்தானது. காசாந்தழைபோன்ற பசுந்தாள் எரு இலகுவாய்க் கிடைக்கக்கூடிய திருமுல்லைவாயிலை ஒத்த இடம் இதற்கு மெத்த நலம்.

நாற்றங்கால் பண்படுத்தல்:—தழை மடிசல் மரமடிசல் இவைகளால் உண்டாகும் "உறமண்" ஆட்டெரு இவைகளை ஆயத்தம் செய்துகொண்டு நாற்றங்காலைக் கொத்தி ஒத்தடிசெய்து ஒன்றரைமுழச் சதுரமுள்ள பாத்திகள்கட்டி உறமண்கலந்து ஒருமுறை கையால் உழுதுவிடவேண்டியது.

விதையிடல்:—விதையை மணல் அல்லது உறமண்ணுடன் கலந்து சீராகத்தெளித்து, பாத்திகளைத் தும்சுபோட்டு கெட்டிப்படுத்த வேண்டியது. பிறகு வைக்கோல் முதலானவற்றால், மூட்டம்போட்டுத் தண்ணீர் ஊற்றவும்.

மூட்டம் பிரித்தல்:—எட்டுநாள் சென்றபின் மூட்டம்பிரித்து,—

நிலத்தின்செய்கால்:—ஆட்டெரு பசுந்தாள் எருமுதலான எருவிட்டுப் பண்படுத்தப்பட்ட நிலத்தில் இரண்டு அடிச் சதுரத்திற்கு 4-கண்கள்வீதம் நடவேண்டும்.

கன்று நடும்விதம்:—நடுவதில் அரை அங்குல ஆழம் குழிசெய்து கன்றை நட்டு வேர் மூடும்படி மண் அமுக்கி தழை மூட்டம் சொருகி வைக்கவேண்டியது.

தண்ணீர் ஊற்றல்:—காலையில் ஒரு முறையும் 12-மணிக்கு ஒருமுறையுமாக சொம்புத் தண்ணீர் பனுக்கி வரவேண்டியது. இவ்விதமாக மூன்றுநாளைக்குப் பிறகு 15-நாளைக்கு காலைத்தண்ணீர் ஊற்றியும் மறு 15-நாளைக்கு மாலைத்தண்ணீர் ஊற்றவும் வேண்டும்.

மண் அணைத்தல்:—தண்ணீர் இறைக்க பாத்திகட்டியவுடன் மண்சுரண்டி கண்ணுக்கு மண் அணைத்து தண்ணீர் காய்க்காய இறைத்து வரவேண்டும்.

குழை எடுத்தல்:—கன்று நட்ட 5-ம்நாள் குழைமூட்டம் எடுத்துவிடவேண்டும்.

கொழுந்து கிள்ளல்:—எட்டு இலைகள் உண்டானவுடன் தலைக்கொழுந்து கிள்ளிவிடவேண்டியது. மூன்றுமுறைக்குக் குறையாமல் இலைகளுக் கிடையில் கிளைக்கொழுந்து கிளைக்காமல் கிள்ளி வரவேண்டியது.

மரம்வெட்டும்பக்குவம்:—தலைக்கொழுந்து கிள்ளிய சுமார் 42-நாளைக்குப்பிறகு வெயில் வேளையில் ஒரு பளபளப்பாகத் தைலப்பதமும் "வராகன் புள்ளி" என்றமுதிர்ச்சிஅடையாளமும் தோன்றும். இந்தப்பக்குவத்தில் அடியோடு வெட்டித் தலைகீழாகத் தரையில் கவிழ்த்துவிடவேண்டும்.

பிரித்தடுக்குதல், தலைகீழாக் கட்டல்:—மறுநாள் காலையில் எடுத்து அடுக்கி இவ்வாறு 4-நாள் மாலையில் பிரித்துவிட்டும் காலையில் எடுத்தடுக்கியும் ஆனபிறகு, 5-ம் நாள் மரத்திலிருக்கும் சத்து இலைக்கு ஏறும்படியாக தலைகீழாகத் தூக்கிக்கட்டி பாதிமரம்காயும் வரையில் பார்த்துவரவேண்டியது.

பாரம்போடல்,காம்பரிந்துகத்தைகட்டல்:—கட்டியிருப்பதை அவிழ்த்துக் காற்றடர்த்தியான இடத்தில் தலைமாற்றி அடுக்கிப் பாரம் போட்டு ஒருவாரத்திற்குப்பிறகு காம்பரிந்துகத்தை கட்டவேண்டியது.

குறிப்பு:—எட்டுநாளைக்கு ஒருமுறை பிரித்து அடைத்துவரவேண்டியது.

மூக்குத்தூள் புகையிலைக்குரிய சில பக்குவம்:—தலைகீழாகத் தூக்கிக்கட்டிய பதமானது கலகலக்கக் காய்ந்தபின் அவிழ்த்துக் காம்பரிந்து அடுக்கி ஒரு முறை பாரம்போட்டுப் பிறகு பாரம் போடாமல் அடைத்து 8 நாளைக் கொருமுறை பிரித்து அடுக்கவேண்டும்.

குறிப்பு:—இதற்குரியபசுந்தாள் எருகிடைக்கக்கூடிய காட்டின் சவுகரியமும் நிலப்பாங்கின் பொருத்தமும் அமைந்த திருமுல்லைவாயிலை ஒத்த பல இடங்களை உத்தேசித்து எனது ஸ்வயாநுபவத்தை 1908ஸு த்திய் தஞ்சை வித்தியா பொருட்காட்சி வெளியுலா மனோபிவிர்த்தி (Excursion Note) யில் குறிப்பிக்கப்பட்டபடி.

மு. முத்துக்குமாரசாமி பிள்ளை.

❋ ❋ ❋

## "BRIDEGROOM—HUNTING"

## OR, THE LOST IDEAL.

"God is the Bride or Bridegroom of the Soul. Heaven is not the pairing of two, but the communion of all souls. We meet and dwell an instant under the temple of one thought, and part as though we parted not, to join another thought in other fellowships of joy."—*Emerson.*

"Every thing that is good is fair, and the fair is not without measure, and the animal who is fair may be supposed to have measure. Now, we perceive lesser symmetries and comprehend them but about the highest and greatest we have no understanding, for there is no symmetry greater than that of the soul to the body. This, however we do not perceive, nor do we allow ourselves to reflect that when a weaker or lesser frame is the vehicle of a great and mighty soul, or, conversely, when a little soul is incased in a large body, then the whole animal be not fair, for it is defective in the most important of all symmetries: but the fair mind in the fair body will be the fairest and loveliest to him who has the seeing eye."—*Plato.*

ஓம் லலிதாம்பாயைநம:

## "மாப்பிள்ளை தேடல்".

அல்லது

## காணமற்போன கட்டழகன்.

(ஸ்ரீஸத்யானந்த சாந்த சர்மா எழுதியது.)

### I. மாப்பிள்ளை அழகு.

"அழகெனப்படுவது அருள்வெளித்தோற்றம்."

"மாப்பிள்ளை" என்றால் என்ன? சாதாரணமாக சாமான்யஜனங்கள் தம் கண்மணியாம் பெண்மணி வரித்த புருஷனை "மாப்பிள்ளை" யென்று சொல்கிறார்கள். "மா" என்பது மஹா என்னும் வடமொழியின் திரிபு. உதாரணம்: "மஹாமகம்" என்னும் வடமொழி "மாமகம்" என்று தமிழில் திரிந்து வழங்கும். மஹா என்கிற சப்தம் பெரிய என்னும் பொருளை யுணர்த்தும். மஹத் என்னும் தத்துவத்திற்குப் "பெரிய மனசு" என்று பொருள்படும். அதற்கு மாறுபெயர் புத்தி. பெரிய மனசுள்ளவர்களுக்குத்தான் புத்தியுண்டு. புத்தியுள்ளவர்கள் பெரியமனசுள்ளவர்களாவார்கள் என்பது வாஸ்தவம். புத்தி யென்றால் பகுத்தறிதலுக்கு மட்டும் சொல்வது வழக்கம். பகுத்தறிதல் புத்தியின் சின்னவேலைகளிலொன்று. பகுத்தறிதல் பேதபுத்தியாம்: அது விஷயஞானத்துக்கே யுரியது. "விஷயம்" என்பது புலனறிவுக்கு எட்டுவது. புலனறிவுக்கெட்டுவதாயுள்ள நாமரூபப் பிரபஞ்சமாம் இது, பஞ்சீகரண விதிப்படி பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டானதால், பஞ்சபூதங்களின் சேர்க்கையைப்பிரித்துப் (பகுத்து)அறியலாம். இதுதான் பகுத்தறிவு. ஆனால்அபஞ்சீகரணதத்துவங்களான தன்மாத்திரைகளைப் பிரித்தறிவதெப்படி? பொறி புலன்களெல்லாம், பூதபௌதிகங்களைப்போலவே இந்தப் பஞ்சதன்மாத்திரைகளின் குணவேறுபாட்டினால் உண்டானவையாக விருப்பதால், அவையெல்லாம் அவைக்குக் காரணமாகிய இவற்றுள் (இந்தப்பஞ்சதன்மாத்திரையுள்) ஒடு



ங்கி அடங்கி நிற்கும். தாய்க்குள் சிசுபோல், தன்மாத்திரைக்குள் ஒடுங்கி அடங்கி யிருக்கும் பொறிபுலன்கள், அவற்றிற்கு உற்பத்தி காரணமான தன்மாத்திரைகளைக் காண்பது எப்படி? கூடாமையேயாம். ஆனால் தாயறியாச் சூலில்லைபோல், காரணம்அறியாக் காரியமில்லை. தன்மாத்திரைகளுக்குள் ஐம்பொறிகளும் தொழிலின்றித் தம் குணமாத்திரமாகத் தனித்திருக்கும். தொழிலின்றி, அதாவது, இயக்கமின்றிக் கிரகிக்கும் சக்தி சூக்ஷ்மாதி சூக்ஷ்மமாய் இருப்பதால்தான் "கண்ணின்றிக் காண்பானவன்; காதின்றிக் கேட்பானவன்; ஒன்றுமின்றிஎல்லாம்செய்வான்" என்கிற சுருதிவாக்கியம் பிறக்கலாயிற்று. தன்மாத்திரைகளுள் சேதனாசேதனப்பிரபஞ்சங்களெல்லாம் எப்படி அடக்கமோ, அப்படியே இந்தத் தன்மாத்திரைகள் அகங்கார தத்துவத்துக்குள் அடங்கி யொடுங்கும். திரிவிதமான அகங்காரமும் ஒன்றுக்குள் ஒன்றாக அடங்கிக் கடைசியில் அது அதற்குக் காரணபூதமான "மஹத்" தத்துவத்தி லடங்கி யொடுங்கும். இந்த மஹத் தத்துவமும் அவ்யக்தத்தில் ஒடுங்கி மறையும். ஆகவே, வியக்த சிருஷ்டிக்கெல்லாம் காரணம் மஹத் என்னும் பேர்பெற்ற புத்தி தத்துவம் என்றேற்படுகிறதல்லவா? இந்த மஹத் என்னும் புத்தி வியக்தமான பிரபஞ்சத்துக் கெல்லாம் காரணமாயிருப்பதால், இது பஹிர்முகப் பார்வையால் வரும் பகுத்தறிவுள்ளதாயின்றி,அந்தர்முகப் பார்வைஅல்லதுஅஹமுகப்பார்வையால்வரும் புகுந்தறிவதாம் பூர்ணஅறிவுள்ளதாயிருக்கிறது. பகுத்தறியும் அறிவு பின்னமாயிருக்கும்; ஆதலினாலேயே அது பூர்ணப் பார்வையில்லை. ("We see in part dimly as through a glass)" என்றார் ஸெய்ன்ட் பால் என்னும் அருளாளரும். பகுத்தறிவு எப்போதும் அரைகுறைப்பார்வையே. இதற்குப் பேதபுத்தியென்றபெயர். பூர்ண அறிவாம் புத்தி அல்லது மஹத் தத்துவம் எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பதுபற்றி எதிலும் புகுந்து பார்க்கும் சக்தியுள்ளதாயிருப்பதால், அது விஷயங்களைத் தனக்கு அந்நியமாயறியாமல், தன்னிலும் வேறல்லாத தனது வியக்தாகாரவிகாரங்களாக அறிகின்றது. ஆதலால் அதற்கு அபேதபுத்தி யென்றுபேர். அபேதபுத்தி ஐக்கியத்தை யுண்டுபண்ணுவதால் மோக்ஷத்துக்குக் காரணம். பேதபுத்தி பிரிவினையையுண்டு பண்ணுவதால் பெந்தத்துக்குக் காரணமாயிருக்கிறது. நான், எனது என்னும் அகங்கார மமகார விர்த்திப்பிரவாகமாக விளங்குவது பெந்தத்தைத்தரும் பேதபுத்தி. "எவ்லாம் நீ, எல்லாம் உனது, நானும் நீயே" யென்று ஜீவேசுவரஐக்கியத்தைநாடுவது அபேதபுத்தி. மனிதன் சேதனாசேதனப் பிரபஞ்சங்களிரண்டுக்கும் எஜமானாயிருப்பதால்,அவன் பேதபுத்தியால் அசேதனமாம் வெளிப் பிரபஞ்சத்தை யாராய்ந்து, அதற்கு மூலமாய் சேதனரூபமாயிருக்கும் அதன் மூலப் பிரதீகபாவத்தை உட்பிரபஞ்சமாம் தனக்குள் அறிந்து கொள்கிறான். இந்தஅறிவு வளர வளர அவனுக்கு அபேதபுத்திஜனித்து பேதமாத்தோன்றும் பலவற்றையும் ஒன்றுபடுத்தி அவற்றிற்கெல்லாம் அபேதமான காரணத்தில் லயிக்கச்செய்து அவற்றின்ஒருமையை (ஒன்றும் தன்மையை) உள்ளத்தில் உணர்கிறான்.

இப்படி உணரஉணர, உணர்வுவிசாலித்து அறிவுபரந்து, அபேதபுத்தி ஜனித்து வளர்ந்து வடவிருக்ஷமாய்த் தழைக்க, அம்மரத்திற்கு மூலமாய் அதன் நீழலில் அறிவே யுருவாய்க்கொண்டு விளங்கும் குருமூர்த்த சுந்தரராம் தக்ஷிணாமூர்த்தியைத் தரிசிக்கும் பாக்கியம்பெறுகிறான். குருதரிசனம்சித்திக்கவும், அவர் மேல்வழி காட்டுவாராக, அவன் உலக வழக்கையும், மானிடர் மயக்கையும் விட்டொழித்து, விரக்தி வைராக்கியம் பூண்டவனாய், உண்மையை யறியவேண்டு மென்கிற அத்தியாத்மதாபம் மேலெழுந்து தஹிக்கத் தபித்து, ஹிருதயத்தில் பற்றிய ஆசாபாசங்களெல்லாம் உலர்ந்து காய்ந்து, தீர்ந்துபோக, சம்ஸாரவிருக்ஷத்திற் கறிகுறியான அசுவத்த

விருக்ஷத்தின் காய்ந்து விழுந்துபோன சுள்
ளிகளாம் ஸமித்தைப்பொறுக்கிக் கையில்வை
த்துக்கொண்டு, "ஸமித்பாணி"—ஸமித் ஏந்
திய கையனாய் குருவையடைந்து, தனது அத்
தியாத்ம தாபத்தின் தன்மையைத் தெரிவி
த்து, அறிவகலஅருள்சுரக்கக் கடாக்ஷவீக்ஷ
ணியம் செய்யவேண்டுமென்று குறையிரந்து
நிற்கிறான். குருவினுடைய கடாக்ஷவீக்ஷணி
யத்தால் குருவருள் பெற்ற சற்சீஷன் குரு
வழிப்பட்டு நடக்க ஆத்மதரிசனமுண்டாகி
அப்பியாசமுதிர்ச்சி விசேஷத்தால், ஆத்மத
ரிசனம் மறைபாமல் தானே மஹத்ரூபியாய்
எல்லாவற்றிலும் புகுந்துபார்க்கும் தன்மை
வாய்ந்ததன்றி, அவைக்கெல்லாம் ஆதாரபூத
மாயிருக்கும் சத்ரூப ஆத்மா தானே யென்
றுணர்ந்து உணர்ந்ததையுணர்ந்தபடிசித்விலா
ஸத்தாலறிந்து, அறிந்தநிலையில்அறிவுகெடா
து அறிவுருவாய் மிஞ்சி நிற்பவனாகிறான். அப்
படியானவன் யாரோ அவனே மஹாத்மா.
மஹத் தத்துவத்தையாசிரயித்துப் புத்திரூப
மாய், புத்திமயமாயிருந்து, எல்லாவற்றிலும்
புகுந்துள்ள அந்தர்யாமியாய் இருப்பவன்
யாரோ அவனே மஹாத்மா. "பிரம்மவித்து"
என்று சொல்வதுபோல், இந்த மஹத் ரூப
புத்தி சித்திக்கப்பெற்றவன் மஹான். "மனம்
என்னும் பேர்விட்டு மஹத் என்னும் பேர்
கொள்" என்றாள் என்தாய். பூர்வ வாசனை
யால் இதற்குவேண்டிய ஸம்ஸ்காரம் அமை
யப்பெற்று, சாதனாப்பியாசத்தால் அந்த ஸம்
ஸ்காரம் மொட்டில் வாசனைபோல் மூடியிரு
ப்பது, மலரின் மணம்போல் பிரத்தியக்ஷமாக
விளங்கச் செய்யக்கூடியவன் யாரோ அவன்
மஹாத்மாவாகக்கூடியபிள்ளை. அதைச் சுரு
ங்கச்சொல்லும் பொழுது மஹத்பிள்ளை
மஹாபிள்ளை, மாப்பிள்ளை, யென்று குறுகி
விகாரப்பட்டு விளங்கும்.

இப்படிப்பட்ட சத்குண சம்பன்னனான
சற்பாத்திரத்திற்கே, கன்னிகையைக் கொடு
ப்பதாம் கன்னிகாதானம் உரியது. இதரர்க
ளுக்குக்கன்னிகையைக் கொடுப்பவன் அபாத்
திரனுக்குக் கொடுத்த பாபத்தைக் கட்டிக்
கொண்டு, அவன் செய்யும் பாபகிருத்தியங்க
ளுக்கெல்லாம் பாத்திரனாகி, அதற்குக் கா
ரணபூதனா யிருக்குங் காரணத்தினால் அவ
னிலும் கொடிய பாபியாகிறான்.

உண்மையான விவாகஞ் செய்துகொண்டு
உள்ளன்பு நிறைந்து காதல் மனையாளோடு
கருத்தொருமித்துக் கலந்து இல்லறம்புரிந்து
புண்ணியகுமாரத்தியைப் பெற்ற ஒவ்வொரு
புமானும், இப்படிப்பட்ட "மஹாத்மாவாகக்
கூடிய பிள்ளை" யைத்தேடி, அவனை மஹாத்
மாவாகவே உள்ளத்துணர்வால் உணர்ந்து
பூஜித்துக் கால்கழுவி, அர்க்கியபாத்திய முத
லிய சோடசோபசாரங்களும் செய்து, தன்
கண்மணியொத்த அருமையான பெண்மணி
யை அவனுக்கு இல்லறக்கிழத்தியாக விருந்து
நல்லறஞ்செய்யத் துணைநிற்கும்படி, பெற்
றோரிருவரும் மனங்கலந்து குமாரத்தியைப்
பெற்றதுபோல், இப்பொழுது மனங்கலந்து
ஏகீபாவத்தி லீடுபட்ட எண்ணமுடையராய்,
கன்னிகையின் கைபிடித்து ஸ்வர்ண புஷ்ப
பல சகிதமாய் அவனுக்குத் தத்தம் செய்து
"பாணிக்கிரஹணம்" செய்துகொடுக்கவேண்
டும்...அதாவது, குழந்தையைத்தர்மபத்நியா
கக் கைப்பற்றச்செய்து கொடுக்கவேண்டும்.
இதுதான் பெற்றோர் புத்திரிக்குச் செய்கட
ன். கைப்பற்றின பெண்ணை உத்தமவரன் அக்
னிசாக்ஷியாகவும் பிராம்மணர்கள் (பிரஹ்மத்
தை யறிந்தவர்கள்) சாக்ஷியாகவும், ஆகமவிதி
ப்படி (அதாவது, யந்திரதந்திரமந்திரானுஷ்
டானங்களுடன்) "இல்லறமல்லது நல்லற
மல்ல" வென்றுகூறிய ஆப்தவாக்கியத்தை
யனுஷ்டித்தும் தனக்கு இல்லறக்கிழத்தியாக்
கிக்கொள்கிறான். இதுதான் விவாஹம். இது
உயர்குலத்திற் பிறந்தபெண்களுக்குரியதோர்
உத்தம ஸம்ஸ்காரம். ஆண்பிள்ளைகளுக்குப்
பிரம்மசரியம்எப்படியோ, அப்படியே பெண்
பிள்ளைகளுக்கு விவாஹம் இந்திரிய நிக்ரஹத்
துக்குரியதோர் பிரஹ்மசரியத்தை யொத்த
ஆத்ம ஸம்ஸ்காரமாம்.

(இன்னும் வரும்.)



## WHY ARE WE WANTING IN INFLUENCE?

## நமக்கேன் செல்வாக்கில்லை?

சாதாரணமாய் இந்தியர்கள் தற்போதுசெல்
வாக்கிழந்தவர்களா யிருக்கிறார்களென்பது
பிரத்தியக்ஷம். "செல்வாக்கு" என்றால்என்ன?
வாக்கு செல்வது;—வார்த்தையை யொட்டி
நடத்தையும் பொருந்தியிருந்தால், அதுசெல்
வாக்காகும். "அவன் வாயசைந்தால் நாட்டை
யும்" என்று செல்வாக்குள்ளவர்களைப் பற்
றிச் சொல்கிறார்களே, அப்படி யென்றால்
என்ன? வாய்க்கு வாக்கினாலன்றிச் சிறப்
பில்லை: வாக்குக்கு ஸத்யத்தினாலன்றிச் சிறப்
பில்லை. ஆகையால் ஸத்யவான் வாயசைந்தால்
மனதிலே ஒன்றை சங்கற்பித்துக்கொண்டு
வாக்கினால் அதை வெளியிடுவானாகில்,—நாட்
டையும். அஹம்புறமிரண்டு மொத்திருப்பவ
னாதலால், நாட்டார் எல்லாம் அவன் சொல்
லைச் சிரேஷ்டமாகக்கொண்டு அவனை ஆமோ
தித்து நடப்பார்கள். ஆகவே செல்வாக்குக்
குக் காரணம், ஸத்யவிருதமாமென்று ஏற்படு
கிறது. ஸத்யவிருத மிருப்பது லேசல்ல.
மனம் வாக்கு, நடத்தை இவை வேறுபடா
மல் பாதுகாப்பதே ஸத்யவிருதமாம்.

"மனஸ்யேக, வசஸ்யேக, கர்மண்யேகமஹாத்மனாம்
மன்ஸ்யந்யத், வசஸ்யந்யத்கர்மண்யந்யத் துராத்ம
[னாம்"

என்றுள்ள ஆப்தவாக்கியத்தின் உண்மை நித்
தியப்படி அனுபவத்தில் காணலாம். மனசு,
வாக்கு, நடத்தை யேகமாகப் பொருந்தி
யிருக்கப்பெறின் அதுவே மஹாத்மாவுக்கு
லக்ஷணமாம். மஹத் என்னும் தத்துவத்தோ
டொன்றுபட்டவனாதலால், அவன் வாயசைந்
தால், நாட்டையக் கேட்பானேன்?

மனஸினால் நினைப்பதொன்றும், வாக்கினால்
சொல்வதொன்றும், காரியத்தில் நடந்து
கொள்வதொன்றுமாக, இப்படி திரிகரண
மும் திரிவிதமாய் பேதப்பட்டு நிற்கும் துரா
த்மாவாகிய துஷ்டனுக்குச் செல்வாக்கு என்
னமாக உண்டாகும்? அறியாச்சனங்களை மரு
ட்டி யுருட்டி, அர்ப்தநட் வாசாமஹோசர
மாய்ப் பேசிவிட்டுக் கடைசியில் கழுநீர்ப்
பானையில் விழுந்த கவுளிபோல், மானமிழ
ந்து, மரியாதையிழந்து, ஊரிழந்து, பேரிழ
ந்து, பழிபாவத்துக்காளாகப் பழிச்சொல்லு
க்கிடமாய் நிற்பதே மனமொழிமெய் சுத்த
மின்றிப் பொய் பித்தலாட்டம்செய்து வயிறு
வளர்ப்பவன் கதியாம். இவனைப் பிழைத்தி
ருப்பவனாகச் சொல்வது சொல்லிழுக்கே
யாம். இவன் செய்யும் பொய் பித்தலாட்டங்
களைப் பிழைக்கும்வழி யென்று கருதுவதும்
பெருங் குற்றமேயாம். ப்ரோபெஸ்ஸர் லீஸ்
ஸ்மித் என்னும் வர்த்தகவியாபாரக்கைத்தொ
ழில் வித்யாவிற்பன்னர், பம்பாய் கவர்ன்மெ
ண்டாரின் வேண்டுகோளின்பேரில் இந்தியா
வுக்குப் பிழைக்கும்வழி காட்டிப் பிரசங்கங்
கள் செய்து வந்ததின்முடிவில் இந்தியர்களு
க்குஹிதபோதமானதோர் கட்டுரை கழன்று
சென்றார். அஃதென்னவெனில்:—

"இந்தியர்களுக்கு வேண்டியதா யிருக்கும்
குறை யென்னவெனில், தன்னில் நம்பிக்கை
யும், தமரில் நம்பிக்கையும். தன்னில் நம்பிக்
கையில்லாதவனுக்குத் தைரியமில்லை. தமரில்
நம்பிக்கை யில்லாதவன் நாகரிகவிருத்திக்
கருகனாகான். (தன்னம்பிக்கை ஆத்மபுத்தி
யாலும், தமர் நம்பிக்கை ஸ்வயநயம் பாராட்
டாப் பரசேவையாலுமே உதிக்கற்பாலதாம்:)
இந்தியாவின் ஜனங்களுடைய நாணயத்தில்
நம்பிக்கை குறையும்படி வியாபாரத்தில் தப்
புத்தவறான மார்க்கங்களை யனுசரித்துப் பித்
தலாட்டம் செய்பவன் தேச க்ஷேமத்துக்கு
விரோதியாம் சுத்தப் போக்கிரியாவான். இந்
தியர்கள் ஸ்வநம்பிக்கை யுள்ளவர்களாகி,
(ஸ்வகாரியப் புலிகளா யிருப்பதுபோய்) ஸத்
சங்கல்ப சாதனசித்தர்களாம் தீரர்களாயிருக்
கவேண்டும். பிரவிருத்தி மார்க்கத்தில் பிறர்
போன வழியைப் பற்றிச் செல்லாது தனி
வழிகண்டு துணிவுறநடக்கும் தூயசுத்தரும்
துணிந்த தீரருமாக விருக்கவேண்டும். இப்
படியிருந்தால் மேற்றிசை நாகரிகத்தில் போ

ட்டிபோட்டு அழிவழிபற்றி ஆர்ப்பாடஞ்செய்து அக்கிரமங்கள் மலிந்து அதனால் ஜனக்ஷேமம் நலிந்துபோகும் கண்போருவிதியாம் "கண்ருவி" க்கிடமின்றி உலகத்திலுள்ள ஜாதியாருக்கெல்லாம் உத்தம வழிகாட்டும் மேதாவிகளாக விருக்கும் பெருமையும் கீர்த்தியும் பெற்று பெருவாழ்வு வாழலாம்" என்று அவர் உண்மையைச் சொன்னார். *

நம்மவர்கள் ஆத்மபுத்தி யில்லாதவர்களாயிருப்பதால் படித்தும் பிரயோசன மின்றி ஸ்வயநலம் பாராட்டும் தன்மையும் ஸ்வகாரியப்புலித்துவமும் நிறைந்தவர்களாய், பரசேவையாம் "ஸ்வாமி காரியத்தில்" வழவழவென்று நழுவிவிழுவார்களாக விருக்கிறார்கள். "யதாராஜா ததாப்பிரஜா" என்னும் வாக்கியத்தைக்கொண்டு அரசனெவ்வழி குடிகளவ்வழியென்கிற தர்மத்தை யனுசரித்து நம்மவர்கள் ஸ்வதர்மத்தை யிழந்தவர்களானார்கள். ஆசானைப்போல் சீஷனும் என்று ஸ்வதர்மத்தை யிழந்து நெல்லிக்காய் மூட்டைகளான "கற்றுங்கயவராம்" ஆத்மபுத்தியில்லாப்போதகர் வழிப்பட்டுப் பிள்ளைகளும் அவருக்கு மிஞ்சியவர்களாய்ப் போகிறார்கள். இதற்குதாரணம் வேண்டு மாயின் உபாத்தியாயர்களின் குணவிசேஷத்தைப் பற்றி, உபாத்திமைத்தொழிலில் சிறந்தவரான ஒருவர்தாம் சொல்லும் வாக்கு நாம் சொல்வதற்கு அத்தாக்ஷியாம்.

சென்னை யூனிவர்ஸிடியில் எம். ஏ, எல். டி., பி. எல்., என்கிற மூன்று சாகைகளில் மிகவுயர்ந்த வித்யாபட்டம்பெற்று உபாத்திமைத்தொழிலையே சிறந்ததென்று கைக்கொண்டு உள்ளபடி கள்ளமின்றி அத்தொழிலினுழைத்துவரும் உண்மையாளரான ஸ்ரீ கே. பி. இராமநாதய்யரவர்கள் "உபாத்தியாயர்சங்கம்"என்னும்தலைப்பின்கீழ் எழுதியுள்ள வியாசமொன்றில்,உபாத்தியாயர்கள் சங்கங்களுக்கு அதிக செல்வாக்கில்லாததற்குண்டான"சிலகாரணங்களை"ச் சொல்கிறார் கேளுங்கள்:—

" உபாத்தியாயர் தொழில் வகித்தவர்களில் சிலர் கவர்ன்மெண்டு உபாத்தியாயர்கள்; சிலர் பாதிரிமார்கள், அல்லது பாதிரிமார்கள் ஏற்படுத்திய ஸ்கூல்களில் இருப்பவர்கள்; மற்றவர்கள் இந்தியர்கள் ஏற்படுத்திவரும் ஸ்கூல்களில் இருப்பவர்கள். இம்மூவகையாருள் சிலர் உயர்ந்த சம்பளக்காரர்கள், சிலர் தாழ்ந்த சம்பளக்காரர்கள். இத்தனைபேரும் ஏகோபித்து உபாத்திமார் சங்கத்தைச் சேர்கிறது அசாத்தியம். இத்தனைபெயருக்கும் உபாத்தியாயமார்கள் பொதுவிஷயங்களில் சிரத்தை இருக்க எதிர்பார்க்கத் தக்கதும் அல்ல."

ஏனென்று ஸ்வபாவமாகப் பிறக்கக்கூடிய கேள்விக்கு மறுமொழியாக அவர் கூறுவது என்னவெனில்:—

"(1) உயர்தரப் படிப்பு சொல்லிக்கொடுப்பவரும், உயர்ந்த சம்பளம் வாங்குகிறவர்களும் சீமையிலிருந்து மேதைகளென்று கியாதியோடு வந்தவர்களும் இந்த அற்பமான இந்திய உபாத்தியாயர்கள் கூட்டத்தைச் சேர்வதால் தங்களுக்கு என்னபிரயோஜனம் உண்டாகப்போகிறதென்று ஒதுங்கி நிற்கலாம்.

"(2) கவர்ன்மெண்டுவகுப்பைச்சேர்ந்தவர்கள் தங்கள் சம்பளமாவதுபென்ஷனாவது இச்சங்கங்களால் ஜாஸ்தியாகப் போகிறதா; சமயாசமயங்களில் தங்களில் உயர்ந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து அவர்களுக்குத் தக்க மரியாதையைப்பண்ணி தங்கள் ஸ்திதியை மேன்மைப்படுத்திக்கொள்ளலா மென்று ஒதுங்கி நிற்பார்கள்.

(3) பாதிரிமார் உபாத்தியாயர்களும் இப்படி எண்ணக்கூடும்."

*The actual words used by Professor Lees—Smith are:—"What you need is confidence, confidence in each other, confidence in yourselves. Confidence in each other because co-operation is the test of civilization and you must co-operate with mutual trust. The man who by shady transactions, by sharp practice in business diminishes the trust of the Indian nation, is not only a scoundrel, but is an enemy of the Indian people. You need confidence also in each other, you need to do things for yourselves, instead of always depending upon Britain and the Government. You need to strike out new paths and to pioneer new methods of progress. If you can do that, you will then I believe, be able to teach mankind a lesson, because you have it in your power, if you are careful of your own characters, by acquiring that in which Great Britain in strong. Her confidence and enterprise, to at the same time avoid the ferocity, the cruelty and the heartlessness of those who compete in the struggle which disfigures western civilization. If you can do that you will succeed in rising to be one of the proudest nations of the earth."



ஆகவே இப்படி அவர் மூவகையாகப்பிரித்த உபாத்திமார்கள் அனைவரும், உண்டுடுத்துப் பசிதாகந்தீரப் போந்த பிழைப்புள்ளவராயினும், ஊருக்குழைக்கும் பரசேவையைத் தள்ளித் தம் காரியத்திலே கண்ணாக, மனக்கண் பஞ்சடைந்து கிடக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆசான்களிடத்துப் படித்துத் தேறுகிற பிள்ளைகள், இக்குணத்தில் இவர்களிலும் மிஞ்சினவர்களாகவே யிருப்பார்கள் என்பதற்குக் கேட்பானேன்? இப்படிப்பட்ட ஸ்வயநயப்புஞ்சங்களுக்குச் "செல்வாக்கு" என்னமாக உண்டாகும்? "ஆகவே, பொது விஷயங்களில் சிரத்தை உடையவர்கள் கொஞ்சமாயிருப்பார்கள்" என்று இவர் சொல்லும் வார்த்தை உபாத்திமார் சங்கத்துக்குழைக்கும் துறையில்மட்டுமன்றி எல்லாத்துறையிலும் அப்படியே என்பதை யுணர்ந்துகொள்ளவேண்டும். "இவர்களை நிராகரிக்கக்கூடாது" என்று உபாத்திமைச் சங்கத்தார் மட்டுமல்ல, ஜனசமூகத்திலுள்ள ஒவ்வொருவரும், தனியாகவாகட்டும், சங்கத்தாராகவாகட்டும், "முயற்சியால் காட்டினால்," ஊருக்குழைப்பதே உத்தமமான ஜீவனவழியென்று "மற்றவர்களும் நாளாவிர்த்தியில் வந்து சேர்வார்கள்." அப்படிக்கின்றித்தான்தோன்றித்தம்பிரானாய், ஊருக்குழைத்தாரை உதாசினமாகத்தள்ளி தனக்குமிஞ்சிய தம்பிரானில்லையென்று கேவலம் ஜீவனார்த்தம் உழைப்பாருளிருக்குங்குற்றத்தையே ஊருக்குழைக்கும் உத்தமவழியிலும் கொணர்ந்து ஸ்தாபித்தால், எல்லாரும் கெட்டு நல்லாரும்பொல்லாரும் நயமில் வஞ்சகர் செய்யும் அஞ்சிடாக் கூத்துக்காளாகவேண்டியது தான். "தந்தலையாட்டம் தலைக்குமேலே" யென்றாடினால், செத்தவன் சாகிறான், பிழைத்தவன் பிழைக்கிறான் என்பதுண்மை. ஆனால் செத்தவன் பிழைத்திருப்பதும், பிழைத்தவன் செத்துக்கிடப்பதும் சநாதந தர்மவிதியென்பதை "யுணர்ந்தும் உணர்கிலார் ஊனரே" யென்றபடி, அறிந்து மறியாதவர் பிழைக்கும்வழி யறியாப் பேதைகளேயாவர். ஆகையால் யாவரும் மனமொழி மெய்களால் தன்வாக்கைக் காப்பாற்றிச் செல்வாக்குப்பெறல்வேண்டும். இதுவே பிழைக்கும்வழி.

## "FREE FROM BONDS"

### (THE AUTOBIOGRAPHY OF A TALUQ GUMASTAH)

### * அவிழ்த்துவிட்ட கழுதை.

ஒரு தாலூகா குமஸ்தாவின் சரித்திரம்.

நான் முதல்தடவை மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் போனபொழுது என் தகப்பனாருக்கு ஏதோ தேகத்தில் அசௌக்கிய முண்டாகிப் படுத்துக்கொண்டிருந்தார். கடைசிநாள் பரீக்ஷை எழுதிக்கொண் டிருக்கையிலேயே அவருக்கு ஆபத்தாயிருக்கிறதென்று என்னை அழைக்க ஆள்வந்துவிட்டான். நானும் அவசரமாய்ப் பரீக்ஷை எழுதிக்கொடுத்துவிட்டு சாப்பிடாமலே இரவில் தனித் தபால்வண்டி வைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டேன். பாதிவழியில் சூரியோதயமாயிற்று. பாலசூரியனுடைய பெருமையைக் கவனிக்க அவகாசமில்லை. என்தகப்பனாரைக்கண்டு அவருடைய கடைசி மனோரதத்தை நிறைவேற்றவேண்டியது என் கடமை யென்று அவரை உயிருடன் கண்டுபேச ஆவல்கொண் டிருந்தேன். குதிரை ஓட்ட அபேக்ஷை யில்லை. கிராமக்கிணறுகளில் பெண்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டுகுடமும்கையுமாய்ப் போய்க்கொண் டிருந்தார்கள். அவர்களைப் பட்டாணிக்கடலைகளினால் சுட்லாமென்கிற எண்ணமுண்டாகவில்லை. அஸ்தமனமாகிறவேளைக்குஊர்போய்ச் சேர்ந்தேன். வண்டியை விட்டிறங்கி வீட்டுக்குள் நுழைந்ததும் "அப்பா" என்றுபடுக்கையண்டை போனேன். நான் வரும்வழியை எதிர்பார்த்துக்கொண்டிருந்த என் தகப்பனார் என்னைக்கண்டதும் "வா" என்று என்னைக்கட்டியணைத்து முத்தமிட்டுச் "சாப்பிட்டாயோ" என்றார். "ஆய்விட்டது. நான் தங்களுக்கு என் செய்யப்பட்டும்" என்றேன். "எனக்குச் சந்நியாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்றார். "அப்படியே செய்கிறது" என்றேன். என் தாயார் வந்தாள். அவளிடத்தில் இந்தச் சமாசாரத்தைச் சொன்னேன். "அவரிஷ்டப்படி செய்யத் தடையென்ன?" என்றாள். ஆஸ்பத்திரி வைத்தியர் வந்

* தன்னையறிந்து தன்வழியில் பிரவேசிக்கும் மனோதர்மசக்தி தடையறியாது.

தார். அவரை "அப்பா பிழைப்பாரா" என்றேன். "அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. வியாதிமட்டும் சாதாரண வியாதியல்ல. பெரிய மனுஷியாளுக்கு வருகிற வியாதி. "மலேரியா" என்று பெயர். மருந்துமட்டும் சரியான மருந்து கொடுத்திருக்கிறேன்." என்றார். மறுநாள் தகப்பனாரை ஆற்றங்கரையில் இருந்த யதிகள் மடத்துக்குக் கொண்டுபோய் அங்குவந்திருந்த ஒரு யதிகளிடமிருந்து உபதேசம் செய்வித்துக் கிரமப்படி ஸந்நியாசாசிரமம் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு அவர் வீட்டுப்பேச்சை எடுக்கவேயில்லை. என் தாயாரும் அவர் உயிரிருக்கும் வரை அவரெதிரில் வரவில்லை. அதற்கு மறுநாள் சாயந்திரம் அவர் தேக வியோகமானார். எனக்குமட்டும் அவர் அவ்வாற்றங்கரையிலிருந்த கோவிலுக்குச் சுவாமிதரிசனத்துக்குப் போயிருப்பதாகத் தோற்றியதே ஒழிய இறந்துபோய்விட்டதாகத் தோற்றவில்லை. அவர் தேகத்தை ஆற்றங்கரையிலேயே கோவிலுக்குப் பின்புறத்தில் அடக்கம் செய்தோம். அதற்குப்பிறகு வீட்டுக்குப்போனதும் என் தாயார் என்னைக் கட்டிக்கொண்டு ஒருதரம் அழுதாள். அதற்குமுன் அவள் அழவேயில்லை. என் தம்பி விளையாட்டுக்குழந்தை. நாங்கள் அழுதால் அவனும் அழுவான். நாங்கள் நிறுத்திவிட்டால் அவனும் நின்றுவிடுவான். பத்துநாள் கழித்து ஜாதி ஆசாரப்படி என் தாயார் தன் தலைமுடியை வாங்கினாள். அப்பொழுதுதான் அவளுடைய மனோதைரியம் எனக்கு நன்கு விளங்கிற்று. அவளுக்கு அப்பொழுது வயது 35. "அம்மா இந்தக் கோலங்கொள்ள எப்படிஉனக்கு மனம்துணிந்தது" என்றேன். "நீ மாதம் இரண்டுமுறை க்ஷவரம் செய்துகொள்ளவில்லையா ? இன்றுமுதல் நான் ஸ்திரீஜன்மத்தைத் தொலைத்துப் புருஷஜன்மமெடுத்துவிட்டேன்" என்றாள்.

சிலநாள் கழித்து எனக்கு மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தவறிற்று என்று சமாசாரம் தெரிந்தது. மேலே என்ன செய்கிறதென்று என் தாயாரைக்கேட்டேன். "எனக்கு என்ன தெரியுமப்பா, நான் பெண்பிள்ளை. உனக்கு எது சரியென்று தோற்றுகிறதோ அதைச் செய். ஆனால் நீ மறுபடியும் படிக்க ஆரம்பித்தால் உன் தகப்பனார் அனுப்பியதுபோல் என்னால் உன் செலவுக்குப்பணம் அனுப்ப முடியாது" என்றாள். உடனே என் மாமனாருக்குக் கடிதம் எழுதினேன். அவர் "உனக்குப்படிக்க அபிப்பிராயமாயிருந்தால் நான் தடுக்கவில்லை. மாதம் ஏதாவது 8 அல்லது 10 ரூபாய்வரை உன்செலவுக்குக் கொடுத்தனுப்புகிறேனென்றுஎழுதினார். நான் ஊரிலிருந்தநிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு என் தாயாரையும் தம்பியையும் அழைத்துக்கொண்டு திருச்சினாப்பள்ளியிலேயே குடியிருந்துகொண்டு இன்னொரு வருஷம் படிக்கிறதென்று தீர்மானித்தேன். இவ்வருஷம்தான் நான் ஏழ்மையின் கொடுமையை நன்றாய் அறிந்தேன். இவ்வளவுநாள் விளையாட்டுப் பிள்ளையாய்க் காலம்கழித்துவந்த எனக்கு இப்பொழுதுதான் குடும்பபாரம் உறைத்தது. நானும் என் தம்பியும் பாதிரிகளுடைய தயவினால் சம்பளமில்லாமல் படித்தபோதிலும், சம்பாதிக்காமல் செலவுமட்டும் செய்துகொண்டு சாப்பிடவேண்டியிருந்தமையால், அநேக சௌகரியங்களை இழக்கவேண்டியிருந்தது. எனக்கும் மனதில் சந்தோஷமில்லை. என் தாய்க்கும் சந்தோஷமில்லை எங்களிருவருக்கும் இது நன்றாய்த்தெரியும். ஆனாலும் அடிக்கடி ஒருவரைஒருவர்தேற்றிச் சமாதானம் செய்துகொள்ள முயல்வோம். அப்படிச்செய்வது வீணென்றும் தெரியும். தனக்குள் சமாதானமில்லாமல் பிறருக்கு எப்படி சமாதானமுண்டாக்குகிறது? இருந்தாலும் வேறுவழியில்லை. என்னுடைய பழைய சிநேகிதர்களெல்லாம் போய் விட்டார்கள். மணியன், ராமுடு இருவருக்கும் பரீக்ஷை தவறிப்போயிற்று. மணியன் இன்னொருதரம் படிக்க இஷ்டமில்லாமல் நின்றுவிட்டான். ராமுடு இன்னொருதரம் படிக்க சக்தியில்லாமல் நின்றுவிட்டான். எனக்குக் கீழ்படித்த பிள்ளைகளெல்லாம் என்னுடன் படிக்கிறதையும்



என்னுடன் படித்தவர்களெல்லாம் எனக்கு மேலே படிக்கிறதையும் பார்க்க எனக்கு வெட்கமாயிருந்தது. தினம் சாயந்திரம் ஆற்றங்கரைக்குப் போய்த் தனிமையில் அழுவேன். மணியனுக்கும் கலியாணிக்கும் கடிதம் எழுதுவேன். அவர்கள் எழுதும் பதில்கடிதங்கள்தான் எனக்குக் கொஞ்சம் ஆறுதல் கொடுத்தன. கலியாணி "நீங்கள் எனக்குக் கடிதம் எழுதவேண்டாம். சித்திரங்கள் எழுதியனுப்புங்கள்" என்றாள். அவள் என்னை முதல் முதல் வேண்டிக்கொண்டபடி ஒருதாய் இறக்கும்தருணத்தில் தன்மகளை ஆசீர்வதிக்கும் சித்திரம் ஒன்று எழுதுகோலால் வரைந்தேன். அப்பொழுதிருந்த என்மனோநிலைமையில் அது எனக்கு சகஜமாயும் சுலபமாயும் எழுத வந்தது. மேலும் என் தகப்பனார் இறந்த சந்தர்ப்பம் என்மனதில் நன்றாய்ப் பதிந்திருந்தமையால் அச்சித்திரத்துக்குவேண்டியஉபகரணங்கள் என் மனதிலே இருந்தன. நான் அப்பொழுது எழுதிய சித்திரத்தைக் கலியாணி இன்னும்கண்ணாடிபோட்டுவைத்திருக்கிறாள். நான் இப்போது அதைப் பார்க்கும்பொழுது அதிலிருக்கும் உருவங்களில் அநேக திருத்தங்கள் செய்யலாமென்று தோன்றினாலும், அச்சித்திரத்தினால் நான் தெரிவிக்கவந்த உட்கருத்தை அதைக்காட்டிலும் நன்றாய் இப்பொழுது தெரிவிக்கமாட்டுவேனோ என்று சந்தேகிக்கிறேன். கலியாணி பின்வருமாறு எனக்குப் பதிலெழுதினாள்: "அநேக நமஸ்காரம். நீங்கள் அனுப்பின சித்திரம் வந்தது. அதைப்பார்க்கப் பார்க்க எனக்கு வெகுசந்தோஷமாயிருக்கிறது. அதை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வைத்துக்கொள்ளுகிறேன். அதிலுள்ள பெண்குழந்தை ஒற்றைக்கண்ணைக்கசக்கிக்கொண்டு மற்றொரு கடைக்கண்ணால் தன் தாய் முகத்தைப்பார்க்கிறது வெகு அழகாயிருக்கிறது. இறக்கிறதாயார் மட்டும் இன்னும் கொஞ்சம் இளைத்திருக்கலாம். இதைப் பார்க்கிற எனக்கே இவ்வளவுசந்தோஷமுண்டாகும்பொழுது இதை எழுதின உங்களுக்கு எவ்வளவு சந்தோஷமிருக்கவேண்டும். எனக்கு இவ்வளவு எழுத வந்துவிட்டால் தலைகீழாய் நடப்பேன். அடிக்கடி இன்னும் ஏதாவது எழுதுங்கள்." என்மனதில் சந்தோஷமாம்! சந்தோஷமாயிருந்த நாளிலெல்லாம் இது எழுதவரவில்லையே! துக்கப்படும்பொழுதல்லவோ எழுதவந்தது. என்னவோ அவளுக்குத் தோன்றியதை அவள் எழுதினாள் குழந்தை! நாள் கலியாணிக்குப் பதிலுக்கு எழுதின கடிதத்தைப் பின்னால் வரைகிறேன்.

(இன்னும் வரும்)

❋ ❋ ❋

## SITA—A TALE OF HINDU DOMESTIC LIFE.

## சீதா, அல்லது இல்லற வாழ்க்கை.

### 24-வது அதிகாரம்.

செல்லத்தின் புருஷன் பெயர் சாமிய்யர். இவர் செல்லத்தின் கல்லியாணத்திற்கென்று அப்படி பெயர்வைத்துக் கொண்டாரே அல்லாமல் யதார்த்தத்தில் அவருக்குப் பெயர் சாமிய்யங்கார். கல்லியாணமானதும் இவர் பெண்ஜாதியை ஊருக்குக்கூட்டிப் போகவேண்டுமென்றார். சொர்ணம் அவள் ருதுவாகிறதுக்குள் அனுப்பமாட்டேனென்று சொன்னாள். அவர் அதற்கு சம்மதியாததால் நாகம்மாள் செல்லம் இருவரையும்தெருளவைக்கிறதென்கிற வழக்கத்தை அனுசரித்து தெருண்டதுபோல் தனியாக வைத்து அதற்கு வேண்டிய செலவுகளெல்லாம் காமேசுவரய்யரிடம் வாங்கினாள். பிறகு சாந்தி முகூர்த்தம் என்ற பெயரை வைத்து அதையும்செய்துபெண்ணை சாமிய்யருடன் அனுப்பினாள். தாத்தா ஜாநகிராமய்யர் இதைப்பார்த்து நாகம்மாளையும் அனுப்பும்படி கேட்டார். சொர்ணத்துக்கு அது விஷயமாய் என்ன ஆக்ஷேபணை இருக்கப்போகிறது! வெகு சந்தோஷமாய் சம்மதித்தாள். நாகம்மாளுக்கு சொர்ணத்தினிடம் இருப்பதைவிட ஒருகாட்டில் இருப்பதுகூட நலமென்று தோன்றிற்று. அவளும் வெகு சந்தோஷத்துடன் ஜாநகிராமய்யரோடு புறப்பட்டுப் போய்விட்டாள். செல்லத்தைபுக்காத்துக்கு அதற்குள் அனுப்ப சொர்ணத்துக்கு கொஞ்சம்கூடப் பிரியமில்லை சாமிய்யர் ஓரே வீம்பாய்கூட்டிப்போகவேண்டும் என்றதால் அவளை அனுப்பும்படி நேரிட்டது. செல்லத்தை அனுப்பிவிட்டு சொர்ணம்மாள் இரண்டுநாள் அதேவிசாரமாக விருந்தாள்.

பிறகு காமேசுவரய்யர் அவளைத்தேற்றினார். செல்லம் புக்ககம் போகிறதைப்பற்றி வெகு

சந்தோஷப்பட்டுக்கொண்டு நல்லஇடம் அகப்பட்டது நமக்கு என்னகுறைவு என்றுமனக்கோட்டை கட்டிக்கொண்டேபோனாள். வீடுபோய் இறங்கினதுதான் தாமதம். இவள்புக்காத்து யோக்கியதையெல்லாம்புறப்பட்டது. செல்லத்தின் புருஷன் ஜாதியில் வைஷ்ணவன். அவன் செல்லத்தை ஏமாற்றி கல்லியாணம்செய்துகொள்வதற்காக சாமிய்யர்என்று பெயர் வைத்துக்கொண்டானே, அல்லாமல் அவன்பேர் சாமிஅய்யங்கார். சாமிஅய்யங்காருக்கு எப்போதும் பெண்டாட்டியின் அவசியம் இல்லை. அவர் லீலாமணியென்று ஒரு குறத்தியை வைத்திருந்தார். அவள் ஜாதியில் குறத்தியாயிருந்தபோதிலும் வெகு அழகாயிருப்பாள். சாமிய்யங்கார், பெண்டாட்டியை சமயல் முதலியவீட்டுக்காரியம்பார்ப்பதற்கு கல்லியாணம் செய்து கொள்ளுகிறதேயொழிய அவளுடன் போகத்திற்கு கல்லியாணம் செய்துகொள்வதில்லை. செல்லத்துக்குமுன் ஒருபெண் கல்லியாணம் ஆகி அப்பெண்ணை சாமிய்யங்கார் ஒரு பிள்ளை இருக்கும்போதே லீலாமணியின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு வெகு கொடுமையாய் நடத்திவந்தான். ஒரு தடவை அந்தப்பெண்ணை லீலாமணியும் சாமிய்யங்காரும் சேர்ந்து கம்பத்தில்வைத்து கட்டி வாயில் துணியை அடைத்து சூடுபோட்டுவிட்டார்கள். ஆ! ஆ! என்னகொடுமை! என்னகொடுமை! தாய் தகப்பனைவிட்டு புருஷனையே சரணம் என்று அடைந்த ஒருபெண்ணை இப்படி சூடுபோடுகிற மனிதனை சித்திரவதை செய்தால்தான் என்ன? அப்பெண் அது பொறுக்கமாட்டாமல் அதையே மனதில் வைத்திருந்து கொஞ்சநாளைக்குப் பிறகு ஓர் கிணற்றில் விழுந்து இறந்தாள். பிறகுசாமிய்யங்கார் அதை ஒளித்து போலீஸ்தார் ஊரார் எல்லாரையும் லெஞ்சம் கொடுத்து அடக்கிவிட்டார். தனக்கு பெண் ஒருவரும் கொடுக்கமாட்டார்களென்று கண்ட சாமிய்யங்கார் பணத்தைப்பாராமல் சொர்ணததுக்குக் கொடுத்து செல்லத்தை ஏமாற்றிக் கல்லியாணம் செய்து வந்து விட்டார். செல்லத்துக்கு இதை யெல்லாம் கேழ்க்கக் கேழ்க்க வெகுவருத்தம். கொஞ்சநாளைக்குப் பிறகு தன் தாயிடம் இதையெல்லாம் பூவரசநல்லூருக்குப்போன ஒருவர் மூலமாய் சொல்லி அனுப்பினாள். சொர்ணத்துக்குஇதையெல்லாம் கேழ்க்க இடிவிழுந்ததுபோல்இருந்தது. இந்த சமயத்துக்கு என்று நாகம்மாளிடமிருந்து தன் புருஷன் தனக்கு மூவாயிரம் ரூபாய்க்கு நகை செய்ததாகவும் தன்னை வெகுபிரியமாக வைத்திருப்பதாகவும் கடிதம் வந்தது. இதுவும் தெய்வச் செயலல்லவோ! சொர்ணத்துக்கு தன் பெண்கஷ்டப்படவும் நாகம்மாள் சுகப்படவும் இதுகளைகேழ்க்க நரக்கைப்பிடிங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடலாம் போலிருந்தது. கடைசியில் நேரில்போய் பெண்ணைப்பார்த்துவரலாமென்று புறப்பட்டும் போனாள். சாமிய்யங்கார்சொர்ணம்மாளைக்கண்டதும் இனி நமக்குபயமில்லை யென்று நினைத்து தன் வரலாறுகளை யெல்லாம் சொன்னார். சொர்ணம்மாள் அவனுடன் சண்டை போட்டாள். அவர் கடைசியாக சொர்ணம்மாளைப் பார்த்து நீசண்டை பிடிப்பதில் பிரயோசனமில்லை. உன் பெண் நல்லமாதிரியாய் இருந்தால் நான் அவளை நன்றாய் வைத்திருப்பேன். இல்லாவிட்டால் முன் பெண்ஜாதியின் கதிதான் கிடைக்கும் என்றான். சொர்ணம்மாள் பிறகு தன் பெண்ணுக்கு அவர் மனசுகோணாமல் நடக்கும்படிக்கும் லீலாமணியைப்பற்றி ஒன்றும்பேசாமல்இருக்கும்படிக்கும் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். செல்லத்துக்கு இப்பொழுது தகுந்த பாலியமாதலால் வெகு அழகாயிருந்தாள். எப்படி இருந்தும் சாமிய்யங்கார்இவளை லட்சியம்செய்கிறதில்லை. எப்போதாவது அதிசயமாக செல்லத்தினிடம் வந்துசுகித்திருப்பார். மற்றவேளைகளெல்லாம் லீலாமணியோடுதான்இருப்பார். இப்படி இருக்க அந்த ஊருக்கு சுந்தரராவ் என்று ஒருவர்வந்தார். அவர்கதைசொல்வதில்வெகு கெட்டிக்காரர். அவர்ஒரு தடவை லீலாமணி வீட்டுக்கு வந்து கதை சொன்னார். அதைக் கேட்டு லீலாமணி வெகு சந்தோஷப்பட்டு அவரை அடிக்கடி தன் வீட்டுக்கு வரச்சொன்னதும் தவிர அவரை தன் வீட்டிலேயே குடியாய் வைத்துக்கொள்ளும்படி சாமிய்யங்காருக்கு சிபார்சு செய்தாள். சாமிய்யங்கார் அப்படியே வைத்துக்கொண்டார். சுந்தரராவ் நல்ல அழகுள்ளவர். ஆனால்இவர் அந்த ஊரில் எங்கேயும் வெளியே போகமாட்டார்.

லீலாமணி வீட்டுக்குக்கூட ஒருநாள் ஒரு தடவை தான் போவார். மற்ற வேளைகளெல்லாம் சாமிய்யங்காருடையவீட்டிலேயேதான்



இருப்பார். சாமிய்யங்கார் எப்போதும் லீலாமணிவீட்டிலேயேதான்இருப்பார். சாமிய்யங்கார் வீட்டில் இருக்கும்போதெல்லாம் சுந்தரராவுடன் கதை கேட்பது தான் அவருக்கு வேலை. இவர் கதைகளைக்கேட்டுக்கேட்டுசெல்லத்துக்கும் சுந்தரராவு மீது ஒரு பிரியம் ஏற்பட்டது. சுந்தரராவ் தனியாக இருக்கும் காலத்தில் செல்லம் அவர் அறைப்பக்கத்தில் அடிக்கடிபோய் ஜன்னல் வழியாக எட்டிப்பார்ப்பாள். சுந்தரராவு அதைக்கண்டு ஜன்னலுக்கு நேரே வருவார், பிறகுஅவள் சங்கோஜப்பட்டுக்கொண்டுபோய்விடுவாள். இப்படி கொஞ்சநாள்நடந்துவந்தது. பிறகுசாமிய்யங்காரோடு சுந்தரராவ் இருக்கும்போது செல்லம் சாமிய்யங்கார் வேறுகவனமாயிருக்கும்போது சுந்தரராவ் முகத்தையே பார்ப்பாள். சுந்தரராவு அவளை நிமிர்ந்து பார்த்தால் தலையைக்குனிந்துகொள்வாள். சில சமயங்களில் சுந்தரராவு தனியாக தன் அறையில் பாடஆரம்பித்தால் செல்லம் தன் அறையில்பாட ஆரம்பிப்பாள். இப்படி கொஞ்சநாளிருக்க சுந்தரராவுக்கு செல்லத்தின்மீது ஆசை பொறுக்கக் கூடவில்லை. இதற்குஎன்னசெய்யலாமென்று யோசித்து ஓர் கடிதத்தை எடுத்து அடியில் வருமாறு எழுதினார். "செல்லம், என்மனத்தின் எண்ணம் எனக்கு தெரியவில்லை. மன்மதன் என்னை எரிக்கிற எரிப்பு, எனக்குபொறுக்கமுடியவில்லை. நீ எவ்விதமாக பொறுக்கிறாயோதெரியவில்லை. உன் பால்யம் எல்லாம் வீணாகப்போகிறது. சுவாமி இந்த பாலியத்தை அனுபவிப்பதற்குக் கொடுத்திருக்கிறாரே அல்லாமல் வீண்போக்கும்படி கொடுக்கவில்லை உன் ஜாடைகளெல்லாம்நிஜமானால்இந்தக்கடிதத்திற்குப்பதில்என் ஜன்னல்வழியாகஎனக்கு உடனே கிடைக்கவேண்டும். இப்படிக்கு உன் இஷ்டன்" என்று எழுதி அதை அவள் உள்ளில்போட்டுவிட்டார். சுந்தரராவுக்கு பின்னால் அதே நினைவாக இருந்ததேயொழியவேறு ஒன்றிலும் புத்தியோடவில்லை. என்ன பதில் எழுதுகிறாளோ என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். கடிதம் ஒன்றையும் காணோம். பிறகு இந்த விசாரத்தை ஒருவாறு மறக்கும் பொருட்டு லீலாமணி வீட்டுக்குப் போனார். அங்கே வெகுநேரம் பேசி இருந்துவிட்டு பிறகு திரும்பிவந்தார். திரும்பிவரும்போதும் செல்லத்தின்பேரிலேயே நினைவாய் வந்தார். வீட்டில்வந்துஅறையைத்திறந்ததும் ஓர் கடிதம் கிடந்தது. சுந்தரராவுக்கு அந்த கடிதத்தைப் படித்துப் பார்ப்பதற்குள்என்ன எழுதியிருக்கப்போகிறாளோஎன்றுதேகமெல்லாம் உதறிற்று. பிறகுகடிதத்தை உடைத்துப் பார்த்தார். அதில் அடியில்வருமாறு எழுதியிருந்தது: "என் கண்ணிற்குக் கண்ணான சுந்தரத்திற்கு நமஸ்காரம். க்ஷேமம். தங்களை மன்மதன் எரிக்கிறதாகச் சொல்லுகிறீர்கள், உங்கள் கதி என்னைவிட வெகு நன்றாய் இருக்கிறதே. உங்களைமன்மதன் எரித்துக்கொண்டு மட்டும் இருக்கிறான். என்னை எரித்துச்சாம்பலாகவே செய்துவிட்டானே, நான் என்னசெய்யட்டும். தங்களைக்காணாமல் ஒரு நிமிஷம் ஒரு யுகமாயிருக்கிறதே. தங்கள் மனது தெரியவில்லையே என்றுதங்களைவிட பத்துமடங்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறேன். இப்படிக்கு தங்கள் செல்லம்" இந்தக்கடிதத்தைப்பார்த்தவுடன் சுந்தரராவுக்கு வந்தசந்தோஷத்திற்கு அளவு இல்லை. அந்தக்கடிதத்தை கண்ணில்ஒத்திக்கொண்டார். அடிக்கடிமுத்தமிட்டுக்கொண்டார். பிறகு மெள்ள உள்ளில்போய் செல்லம் என்று கூப்பிட்டார். செல்லம் மெல்ல வந்து ஒரு ஓரத்தில் நின்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஏனென்றுகேட்டாள். சுந்தரராவு தாகமாயிருக்கிறதென்றார். செல்லம் தாகத்தைத் தணிக்க என்னவேண்டுமென்றாள். சுந்தரராவுமெள்ளசெல்லம்தான்வேணுமென்றார். பிறகு ஒருவருக்கொருவர் அதிகநேசமாய்விட்டது. சாமிய்யங்கார் வீட்டில் இருக்கும் நேரம் தவிர செல்லும் மற்றவேளைகளெல்லாம் சுந்தரராவினுடைய அறையில்தான் இருப்பாள். ராத்திரிவேளையில் சாமிய்யங்கார் வீட்டிலிருப்பதே கிடையாது. செல்லமும்சுந்தரராவுடைய படுக்கையைவிட்டு வேறேயெங்கேயும் இருக்கமாட்டாள். இப்படி இருவருக்கும் வெகு சினேகமாயிருந்தது. ஆனால் சந்தேகம் வந்துவிட்டால்என்னசெய்கிறதென்று செல்லம் எப்போதாவது தன் புருஷனையும் ஸ்தோத்திரம்செய்து தன்னுடன் சுகித்திருக்

கும்படி செய்துவந்தாள். இப்படிசெல்லமும் சுந்தரராவும் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கும் நாளில் ஒருநாள் வாசலில் ஒருவன் சித்திரம் வியாபாரம் செய்துகொண்டு வந்தான். செல்லம் அவனைக்கூப்பிட்டு சித்திரங்களையெல்லாம் காட்டச்சொன்னாள். அதில் ஓர் அழகிய சித்திரத்தை எடுத்து இது யாருடையது என்று கேட்டாள். சித்திரக்காரன் இது கொலைகேசில் தண்டனை அடைந்து தூக்கில் போடப்பட்ட கிருஷ்ணசாமிய்யனுடையது என்றான். செல்லத்துக்கு அதைப் பார்க்கத்திடுக்கிட்டது. உடம்பெல்லாம் நடுங்கிற்று. என்னஆச்சரியம்! அந்த சித்திரம்சுந்தரராவைப்போலவே இருந்தது. திரும்பி சுந்தரராவைப் பார்த்தாள். சுந்தரராவுடைய உடம்பும்நடுக்கம் கொடுத்தது. உடனேசெல்லம் அந்த சித்திரக்காரனைப் போகச்சொல்லிவிட்டு வீட்டிற்குள் வந்தாள். செல்லத்துக்கு அது முதல் ஓர்கொலையாளியிடம் நாம்சுகித்திருக்கிறதா என்றும் சர்க்காரில் தெரிந்தால் எல்லோருக்கும் தண்டனை கிடைக்குமமே என்றும் பயமுண்டாகி விட்டது. சாமிய்யங்கார் வந்ததும்செல்லம் அவருடன்இந்த சங்கதிகளைச்சொன்னாள். சாமிய்யங்காரும் சுந்தரராவைத்தனியாய் அழைத்து என்னவென்று கேட்டார். சுந்தரராவுக்கு மறைக்க முடியவில்லை. சாமிய்யங்காரிடம் தான் தூக்கில்போடப்பட்ட கிருஷ்ணசாமிய்யன்தான் என்றும் தனக்கு உயிர் இல்லையென்று எல்லோரும் நெருப்பு வைத்து விட்டதாகவும் ஒரு ரொஸேயோ பிரேதபரீக்ஷைக்குக்கொண்டுபோய் மருந்துகொடுக்கப் பிழைத்துக்கொண்டதாகவும், ரொஸேரியோ பயந்து தன்னைவெளியே கொண்டுபோய்போட்டுவிட்டதாகவும்,பிறகு தான் எழுந்திருந்து வெகுபசியாய் இருந்ததால் ஒரு ஹொட்டலுக்குப்போய்சாப்பிட்டுவிட்டுபிறகு அநேக விடங்களில் அலைந்துதிரிந்து இங்கே வந்து சேர்ந்ததாகவும் ஒப்புக்கொண்டார்.சாமிய்யங்கார் அவனை மறுபடி சர்க்காருக்குக் காட்டிக்கொடுக்க இஷ்டம் இல்லாமலும் அவனைத்தான் வைத்துகொள்ளவும் பயந்து அவனைக்கண்டித்து எங்கேயும் சொல்லாமல்அந்த ஊரைவிட்டு ஓடிப்போய்விடு என்று உத்தரவு கொடுத்தார். செல்லத்துக்கு வெகு வருத்தம் வந்துவிட்டது. தூக்கில் போடப்பட்டஒருவனிடம் நாம் சிநேகம் செய்தோமே என்று வருத்தம் ஒருபக்கத்திலும் பழகிய சிநேகத்தால் அவன் பிரிந்து போகிறானென்கிற வருத்தம்ஒருபக்கமுமாக இருந்தது.கிஷ்ணசாமிய்யன் பிறகு தன்தலைவிதியை நொந்துகொண்டு புறப்பட்டுப்போய் விட்டான். இவனுக்குத் தான்தண்டனை அடைந்ததைநினைக்க கிஷ்ணசாஸ்திரிகள்மீது கோபம் அதிகமாக உண்டானது. துஷ்டர்கள் சுபாவத்தைத்தான் பாருங்கள். தனக்குக்கெடுதல் செய்தநாராயணசாஸ்திரிகளை திட்டுவதை விட்டுவிட்டு,அவர் தூண்டினதினால் சகல கஷ்டங்களையும் கிஷ்ணசாமியன் அடைந்திருக்க கிஷ்ணசாஸ்திரிகள் மீது கோபப்படுவதும் காலக்கொடுமையல்லவா?

இரண்டு போக்கிரிகள் தெருவில் ஒருநாள் சண்டை போட்டுக்கொண்டார்கள். ஒருவனை ஒருவன் வாயில்வந்தபடியெல்லாம் வைது கொண்டிருந்தான். பிறகு தங்களை மட்டும் வைவதைவிட்டு அவரவர்கள் வீட்டுப்பெரியோர்களையும் வைய ஆரம்பித்தார்கள். பிறகு அவரவர் வீட்டுப்பெண்கள் விபசாரியென்று திட்ட ஆரம்பித்தார்கள். முதலில் வார்த்தையிலிருந்து பிறகு அடிக்க வந்துவிட்டார்கள். இதை யெல்லாம் பார்த்த ஓர் வித்துவான் இந்த சண்டையை விலக்கவேண்டுமென்று அவர் பக்கத்தில் போய் அடே என் வீணில் சண்டை போடுகிறீர்கள். நாம் மனித ஜன்மம் எடுத்ததேபாபத்தைச்செய்ததினால்தான். அதிலும்ஆயுள்100 வருஷத்துக்கு மேலில்லை. அதிலும் பாதி தூக்கத்தில்போய்விடுகிறது. மற்றப்பாதியில்பாதி பாலியத்திலும் விருத்தாப்பியத்திலும் போய்விடுகிறது. மிச்சம் இருக்கிறபாதி யௌவனத்திலும்காமத்திலும்போய் விடுகிறது. மிச்சம கொஞ்சம் இருக்கிறது: இதில்தர்மத்தைச்செய்து பிறருக்குநன்றுசெய்தால் எல்லாரும் நம்மைக் கொண்டாடுவார்கள். நமக்கு பகவான் கிருபைசெய்வார். இதை விட்டு ஏன் வீண் சண்டை போடுகிறீர்? என்றார். இதைக்கேட்ட அந்த போக்கிரி எதிர் போக்கிரியைப்பார்த்து "அடே மடயா அவர் புத்திசொல்வதைக் கேளடா! வீண்சண்டைபோடுகிறாயா, அவர்சொல்வதைப்பார்! அவர் ஜோட்டை தூக்கினால்கூட உனக்கு அந்த புத்திவருமோ" என்றான். எதிர்போக்கிலி "அவர்தான் என் ஜோட்டைத் தூக்கட்டுமே" என்றான். வித்துவான் துஷ்டர்களுக்கு நல்லவார்த்தைசொன்னதற்குப்பிரயோஜனம்



நமக்குக் கிடைத்ததென்று போய்விட்டார். அவன் துஷ்டனாதலால் தன்னை வைத துஷ்டனைத்திருப்பி வைவதைவிட்டு தனக்கு புத்தி சொன்ன வித்துவானை வைய ஆரம்பித்தான். அதுபோல கிருஷ்ணசாமிய்யனுக்கு கிஷ்ணசாஸ்திரிகளை நினைக்க நினைக்க ஆத்திரம்அதிகமாக அவருக்குமறுபடியும் ஏதாவது தீங்கு செய்யவேணுமென்று யோசித்தான்.

ஆனால் கிஷ்ணசாஸ்திரிகள், கிருஷ்ணசாமிய்யன் நாராயணசாஸ்திரிகளால் அவ்வளவு கஷ்டத்தை அடைந்து இருந்தும் அவர்பொறுமையாக எல்லாவற்றையும் சகித்து கேஸில் சாக்ஷிகூட அவர்களுக்கு விரோதமாக சொல்லவில்லை. வேறொருவராய் இருந்தால் வேணுமென்றே அவர்களைக்கொல்ல எண்ணி நேரில் பாராத சங்கதிகளைப்பார்த்ததாக சொல்லி தண்டிக்கப்பிரயத்தினம்செய்வார்கள். கிஷ்ணசாஸ்திரிகள் அப்படி ஒன்றும் செய்யாமலிருக்க கிருஷ்ணசாஸ்திரி அவருக்கே மறுபடி தீங்கு செய்யத் தீர்மானித்தான்.

கமலாவடியில் கிருஷ்ணசாஸ்திரிகளுக்குதன்பெண்இறந்த பிறகு குடியிருக்கமனமே இல்லை.வெகு தூரதேசங்களுக்கெல்லாம் அதை மறக்கும்பொருட்டு பயணம் போனார். வெகு நாள் இப்படி அலைந்து விட்டு கடைசியில் ஒருமாஸம் தன் ஊரில் இருக்கலாமென்று வந்து சேர்ந்தார். அனந்தலட்சுமி அம்மாளுக்கு அந்த வீட்டில் இருக்கக்கூட பிடிக்கவில்லை: பயமாயிருந்தது. அனந்தலட்சுமி அம்மாள் ஒருநாள் ராத்திரி எழுந்திருந்து ஒரு விளக்கு ஏற்றிக் கொண்டு கூடத்தில் போனாள். அப்போதுகூடத்தில் உருவம் நின்றது.யார் என்று உற்றுபார்க்க கிஷ்ணசாமிய்யர் முகமாய் இருக்கக்கண்டு, அய்யோ கிஷ்ணசாமிய்யரென்று கத்தினாள். கிஷ்ணசாஸ்திரிகள் வருவதற்குள் ஒருவரையும் காணோம். பிறகு அவர் அனந்த லட்சுமியைகண்டித்து உன் பயத்தால் உனக்கு அப்படிதோன்றியிருக்கிறது. இறந்துபோன கிஷ்ணசாமி எப்படி வரமுடியுமென்றார். அனந்தலட்சுமியம்மாள் அவன் கிஷ்ணசாமியே என்று சாதித்தாள். பிறகு கிஷ்ணசாஸ்திரிகள் அதைச் சோதிக்கும்பொருட்டு தன் ஆளை ரகசியமாய் கார்க்கும்படி சொன்னார். அவன் தூங்காமல் விழித்துப்பதுங்கிஇருக்க மெள்ள ஒரு ஆள் கூடத்தில் நுழைந்தான். கிஷ்ணசாஸ்திரிகள் ஆள், உடனே அவனைப் பிடித்துக் கொண்டு கிஷ்ணசாஸ்திரிகளைக் கூப்பிட்டான். பிறகு கிஷ்ணசாஸ்திரிகள் வந்துபார்க்க கிஷ்ணசாமிய்யனாக இருக்கக்கண்டார். அவன் அவர்காலில் விழுந்து அவன் வரலாறுகளையெல்லாம் சொல்லி தனக்கு பணம்இல்லாததினால்அவர் வீட்டில் திருடவந்ததாகவும் பணம் கொடுத்துவிட்டால் புதுச்சேரிக்கு ஓடிப்போய்விடுவதாகவும் சொன்னான். கிஷ்ணசாஸ்திரிகள் மனசுநல்லது. ஆதலால்அவனுக்குஎண்ணூறு ரூபாய் கொடுத்து அவன் உடனே புதுச்சேரிக்குப் போகவேண்டும்என்றும் ஒருநாள் தங்கினபோதிலும் சர்க்காருக்குத்தெரிவிப்பதாகவும் சொல்ல அவன் அப்படியே புதுச்சேரிக்குப்புறப்பட்டுப்போய்விட்டான்.

எஸ். இராமஸ்வாமி ஐயர்.

❋ ❋ ❋

## SANKARA PRYAN.

## சங்கரப்பிரியன்.

### XVII. அந்தரங்க அறை.

மனோரஞ்சினி, செட்டியின் அந்தரங்கமான தாதிகளால் பன்னீர் முகத்தில் தெளிக்கப்பட்டு மயில் விசிறிகொண்டு விசிறினதின்மேல் மூர்ச்சை தெளிந்து எழுந்து சுற்றிலும் பார்த்துத்திகைத்துப் பின்வருமாறு ஆலோசிக்கிறாள். "நான் விழித்திருக்கிறேனோ அல்லது தூங்குகிறேனோ நிச்சயப்படவில்லையே! எனது நண்பர் ஆகாரம் சேகரம் செய்துகொண்டுவருவதாகச்சொல்லிச் சென்றது நினைவிருக்கிறது. நான் ஆலமரத்தடியில், களைப்பால் சோர்ந்து எனது நாதனது உத்தரீயத்தை மேலே போர்த்துக்கொண்டு படுத்துக்கொண்டதும் ஞாபகத்துக்கு வருகிறது. நான் இப்பொழுது தூக்கத்தில் கனவுகாணுவிடில் இந்த அற்புதமான அறையில் எப்படிவந்திருக்கக்கூடும்? இவ்வறையைச்சுற்றிலும் விலையுயர்ந்த சோபாக்கள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வறையில் விரித்திருக்கும் கம்பளமோ, முழங்காலளவு பதியத்தக்கதாயிருக்கிறது. அவற்றில் மாட்டப்பட்டிருக்கும் படங்களும் நிலைக்கண்ணாடிகளும் இவ்வறை ஏதோ ஒரு பெரிய தனிகருடைய அந்தரங்க அறையாகக் காணப்படுகிறது. தவிர இதோ வலதிகைப்புறத்தில் ஒரு படுக்

கை அறையும் காணப்படுகிறது. ஜன்னல்களோ தந்தங்களால் செய்யப்பட்டு சித்திரவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜன்னலுக்கு முன்பாகத் தொங்கும் திரையோ உயர்ந்த பட்டுகளாலும் வெல்வெட்டுகளாலும் செய்யப்பட்டிருக்கிறது: தவிர இவற்றை ஒரு பெரிய உத்தியான வனத்தின், மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறதாகக் காண்கிறது. ஜன்னல்களின் வழியாகப் பார்க்கின் பச்சைப்பசேரென்று சோலைகள் கண்ணுக் கெட்டினமட்டும் தென்படுகின்றன. தவிர சுற்றிலுமுள்ள அனேகவிதமான புஷ்பங்களின் வாசனைகள் ஒருங்கு கூடி வீசுகின்றன. மரங்களின் கிளைகளின்மேல் மயிலினங்கள் சில கலாபங்களை விரித்தாடிக் கொண்டும், சில கிளைக்குக்கிளை தாவிக்கொண்டுமிருக்கின்றன. பஞ்சவர்ணக்கிளிகள் லக்ஷக்கணக்காய் பழங்களைக் கொத்திக் கொண்டிருக்கின்றன. லக்ஷக் கணக்கான பச்சைக் கிளிகள் மரங்களின் மீது உட்கார்ந்திருப்பது, இலைகளின் பசுமையால் தெளிவாய் காணப்படாவிட்டாலும் அவைகளின் சிவந்த மூக்குகள், பழமில்லாதமரங்களில், யதேஷ்டமான பழங்கள் பழுத்து நிறைந்திருப்பது போன்ற சோபையைத் தருகின்றன. தவிர உத்தியானவனத்தின்மத்தியில் காக்கையிறகுபோல் நதி ஒன்று ஓடுகிறது. அந்நதியில், ஹம்ஸங்கள்வாத்துக்கள்முதலிய நீர்ப்பறவைகள் யதேச்சையாய் நீந்திக்கொண்டிருக்கின்றன. தவிர அனேகவிடங்களில் அமைக்கப்பட்டுள்ள (Fountain) அருவிகளிருந்து நீர்த்துளிகள் சிதறி விழுந்துகொண்டிருப்பதும் அதில் பக்ஷிகள் ஸ்நானம் செய்து தண்ணீர் குடிப்பதும் எவ்வளவு அழகாயிருக்கிறது! ஒருபக்கத்தில் கண்ணுக்கெட்டின வரையில் ரோஜாச் செடிகளின் வனமும், மற்றொருபக்கத்தில் சூரியகாந்தப் புஷ்பத்தின் வனமும், இன்னொரு பக்கத்தில் வசந்தகாலத்தில்புஷ்பிக்கும்படியான புஷ்பச் செடிகளின் சேர்க்கையும், இன்னம்மற்ற விடங்களில், மல்லிகை முல்லை, இருவாக்ஷி சண்பகம், மரு மருக்கொழுந்து முதலிய கொடி,செடிகள் பந்தல்களும் பாத்திகளும் குருவேர், வெட்டிவேர் முதலிய வாசனை வேர்களின் பாத்திகளும் இவ்வனத்திற்கு எவ்வித சோபையைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இன்னம் மெல்லிய கம்பிகளால் பின்னப்பட்டுள்ள வலைகள் மரங்களின்மேல் கட்டப்பட்டு பக்ஷிகள் ஓடிப்போகாமலிருக்கும்படி தடுக்கின்றன. மத்தியில், நீலோத்பலம், அரவிந்தம் செங்கழுநீர் அல்லி, முதலான, ஸரோருகபுஷ்பங்களால் அலங்கரித்துள்ள தடாகங்களையும் காண்கிறேன். மேற்சொன்ன நதியிலும் தடாகங்களிலும், மத்ஸியங்கள் விளையாடுவது எவ்வளவு அழகாய்க் காண்கிறது! புஷ்பங்களிலிருந்து மதுவை யதேஷ்டமாகப் பானம் செய்து மதம்பிடித்து ரீங்காரம் செய்யும் வண்டுகளின் தொனியும் பக்ஷிகளின் பாட்டும், காதுக்கு இன்பத்தைத் தருகின்றன. இங்குமங்கும் கூட்டம் கூட்டமாக, புள்ளிமான், மான், கலைமான் முதலியவைகளையும் காண்கிறேன். மரங்களின் கிளைகளில், குரங்கினங்கள், பல்லிளித்து சேஷ்டைகள் செய்துகொண்டு,கிளைக்குக்கிளை வுதாவிக்கொண்டிருக்கின்றன. இவைகளெல்லாம் சுவப்பனத்தில் தோன்றப் படுவனவாகக் காணப்படவில்லை. ஆனால் ஜாக்கிரத்தில் தோன்றப் படுவன என்பதை எப்படி நிச்சயமாய் நம்பக்கூடும்? மரத்தடியில் படுத்திருந்தநான் இவ்விடம் எப்படி வந்திருக்கக்கூடும் என்று யோசித்து கண்ணைப்பிசைந்து கொண்டிருக்கும் சமயத்தில், அவ்விடமிருந்த சேடிகள் அவள் கிட்ட நெருங்கி பின்வருமாறு பேசலானார்கள்.

---

## CURRENT TOPICS AND NOTES.

## காலவிசேஷங்களும் குறிப்புகளும்.

### மாமகதீர்த்தமகிமை.

"உமையொரு பாகங்கொண்ட வுத்தமன் சொரூபமேயா, யமைதர நெடுந்தூரத்தே யமர்ந்துளத் தெண்ணினும், இமைநொடி யளவிற் பாவமெனைத்தையு மிருப்பதாயொண், கமைதரு மகதீர்த்தம்போற் புவனத்துக்காண்ப தின்றே."—குடந்தைப் புராணம்.

காசிவிசுவேசரரைக் குடந்தையில் கண்டு தரிசித்து விஷ்ணு அம்சமாம் ஸ்ரீஇராமர்தம் காயத்தில் ருத்ர அம்சம் கலந்திருக்கப் பெற்ற காயஆரோகண ஸ்தலமாதலால், அங்கே ஸிம்மராசியில் குரு இருக்கும் காலத்தில்வரும் மாசிமகம் விஷ்ணுவும் ருத்ரரும் சேருமோர் புண்யகாலமாம். அநாஹத ஸ்தானத்தில் பைந்தவ ஸ்தலமூர்த்தியை ஒக்கத் தரிசிக்கவல்லார் மஹாமகதீர்த்த புண்ணியத்தைப் பெற்றுய்வார். "அன்ன மிரண்டுள ஆற்றங் கரையினில், துன்னி யிரண்டு துணைபிரி யாதன்னம்" என்று சொல்லிய திருமந்திரோபதேசத்தினுண்மையை உள்ளாய்ந்துணர மஹாமகபுண்ணியகாலம்மிகவும் வசதிவாய்ந்ததாம்.



---

### கும்பகோணம் மஹாமகப் பொருட்காட்சி.

கும்பகோணத்தில் மஹாமக உத்ஸவம் 12-வருஷங்களுக்கு ஒருதரம்நேரிடுகிறது. குரு ஸிம்மராசியிலிருக்கும் பொழுதுவரும் மகத்துக்கு மஹாமகம் என்றுபேர். குரு அல்லது வியாழனென்கிற கிரஹம் ஒவ்வொரு ராசியிலும் ஒரு வருஷம், இருந்து சுற்றிவருவதால், ஸிம்மராசியிலிருந்து சுற்றி மறுபடியும் ஸிம்மராசிக்கு வர 12-வருஷங்கள் பிடிக்கும். இது மஹா புண்ணியகாலமாதலால், இந்தியாவெங்குமிருந்து ஜனங்கள் இந்த மஹாமக ஸ்நானத்துக்காக கும்பகோணம் வந்து கூடுவார்கள். இப்பேர்ப்பட்ட நல்லசமயத்தை மேற்கொண்டு கும்பகோணத்தில் வியவசாயப்பொருள்கள் கைத்தொழிற்பொருள்கள் நிறைந்த காட்சிசாலை யொன்று ஏற்படுத்த வேண்டுமென்று திவான்பஹதூர் ஆர். இரகுநாதராயர் அவர்கள் பிரேரேபணையின்பேரில் அவ்வூர்ப் பிரமுகர்கள் சேர்ந்து முயற்சித்து எல்லாப் பாகங்களிலுமிருந்து விளைபொருள்கள் (Agricultural products) செய்பொருள்கள் (Industrial products) இவைகளைச் சேகரித்து பொருட்காட்சி ஏற்பாடுசெய்ததை நாளது பிப்ரவரிமாசம் 25-ந்தேதியன்று திறந்தார்கள். அப்பொழுது அப்பொருட்காட்சி சபையின் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ லக்ஷ்மிவராஹய்யங்கார் அவர்களும், அதைத் திறந்தவரான திவான் பஹதூர் இரகுநாதராயர் அவர்களும் ரஸிகமான விவரங்களடங்கிய பிரசங்கஞ் செய்தார்கள்.

முன்னவர் வாசித்த ரிபோர்ட்டிலிருந்து அப்பொருட்காட்சியில், எல்லாவிதமான நெசவு துணிகள், சரக்குகளெல்லாம் சேகரிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது. உலோகத்தினல் செய்த சாமான்களில், நித்தியப்படி உபயோகிக்கும் வீட்டுசாமான்களன்றி நல்லவேலைப்பாடுகளமைந்த நேர்த்தியான சித்திர விசித்திரவேலைச் சாமான்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தந்தவேலை, கெட்டிவேலை சாமான்களில் தஞ்சாவூர்பேர்போனதாகையால்,அவையும்நன்ருகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புதிதாய் ஏற்படுத்திய கைத்தறிச்சாலைகளில் செய்யப்பட்ட துணிமணிகளும் பார்வைக்குவந்திருக்கின்றன. மதுரை,சேலம், கோயமுத்தூர், வேலூர் முதலிய இதரநெசவுஸ்தலங்களிலிருந்தும் சரக்குகள் வந்திருக்கின்றன. புதிதாய் வழக்கத்தில்வரும் (fly shuttle looms) என்னும் நூதனமான நெசவுதறிகளும் பார்வைக்குத் தயாராயிருந்தன. சோப்புகள்,மெழுகுவர்த்தி, லிகிததளவாடங்கள், மருந்துகள், வாசனைத்திரவியங்கள், இன்னும்மற்ற ரஸாயனசரக்குகள்,கண்ணுடிபீங்கான் சாமான்கள், இரும்புப்பெட்டிகள், ஸ்டீல்டிரங்குகள், கத்திமுதலான சாமான்கள், குடைகள் முதலிய இன்னும் அனேக ஸ்வதேசச்சரக்குகள்பார்வைக்குத் தயாராயிருந்தன. இதுவரையில் இதரதேசங்களிலிருந்து வந்த இந்தச்சரக்குகள் இப்பொழுது இங்கேயே தாயராகிவேலைசெய்யப்பட்டு வருவது சிலாக்கியமே. தோல்சாமான்கள், மைசூர்சித்திரவேலைகள் இவைகளும் பார்வைக்குவந்தன. திவான்பஹதூர் இரகுநாதராயர் அவர்கள் ஸ்வதேசகைத்தொழிலையும், ஸ்வதேசிவேலையாட்கள் க்ஷேமத்தையும் விர்த்திசெய்வதற்கனுகூலமான பல உபாயங்களையும் சீர்திருத்தங்களையும் பற்றிப்பேசினர்.

---

ப்ரோபெஸ்ஸர் லீஸ்-ஸ்மித் என்னும் வர்த்தக, வியாபார கைத்தொழில் வித்தியாவிற்பன்னர், பம்பாய் கவர்ன்மெண்டார் வேண்டுகோளுக்கிசைந்து பம்பாய் வந்து இந்தியாவின் ஐசுவரிய விருத்திக்கின்றியமையாததான பல விஷயங்களையும் பற்றிப் பிரசங்கங்கள் செய்து வர்த்தக-வியாபார-வித்தியா சம்பந்தமான விஷயங்களில் ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் உத்ஸாகமுண்டாகும்படியுழைத்து அவ்விஷயங்களில் சிரத்தை யுண்டுபண்ணிவிட்டுப் போயிருக்கிருர். அவர் வந்துபோனதின் பலனுக பம்பாய் யூனிவர்ஸிடி சம்பந்தமாக (Commercial Faculty) வியாபார வித்தியாகலை யொன்று ஏற்படுத்த உத்தேசித்து வருகிருர்கள். அவர் சொல்லிய ஆப்தவாக்கியமொன்றை 53-54-வது பக்கங்களில் தமிழ்ப்படுத்தியிருக்கக்காணலாம்.

---

மெடிகல் காங்ரேஸ்:—பம்பாய் கவர்னர் கனம் பொருந்திய ஸர் ஜியார்ஜ் கிளார்க் அவர்கள் முயற்சியால், பம்பாயில் பிரபலமான மெடிகல் காங்ரெஸ் ஒன்று கூடிற்று. அந்த காங்ரெஸ் சபைக்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், இங்கிலாந்து முதலான ஐரோப்பிய தேசங்களிலிருந்தும் பிரபலமான டாக்டர்கள் பிரதிநிதிகளாக வந்திருந்து உஷ்ணதேச சம்பந்தமான வியாதிகள் பலவற்றைப் பற்றி அவரவர்கள் ஆராய்ச்சிசெய்து வந்ததின்முடிவை வியாஸமாயெழுதித் தெரியப்படுத்தினர்கள்.

---

அநுபவத்துக்கு மிஞ்சின அருமருந்தும், விவேகத்துக்கு மிஞ்சின வைத்தியமும் இல்லை:—வைத்தியர்கள் கூடி வியாதியின் கூறுகளை யறிந்து பரிகாரம் தேடுவதுபோல், ஜனங்கள் கூடி தேகத்தின் கூறுபாடுகளையறிந்து சுகவாழ்வுக் கின்றியமையாத சில முக்கியமான தேகதர்மங்களையும், நித்தியப்படி அவர்கள் உபயோகிக்கும் சாமான்ய வஸ்துக்களின் குணகுணங்களையுமறிந்து விவேகத்தால் தேஹபக்குவம், மனேபக்குவம், பதார்த்தபக்குவமறிந்து பண்டங்களையுபயோகித்து தேஹமனேசௌக்கியத்தைப்பாதுகாத்துவந்தால், எவ்வளவோ சுகிர்தமுண்டு. "ஆயிரம்பேரைக்கொன்றவன் அரைவைத்தியன்"என்பது

பழமொழி. அதுபோல்‘பழம்புண்ணளிபாதிபரிஹாரி’ என்பதும் பழமொழியே. ஆயிரம்பேரைக் கொன்ற அரை வைத்தியனை நம்பி, வியாதிவந்த பிறகு பரிகாரம் தேடுவதிலும், “பழப் புண்ணளிபாதிபரிகாரி” யென்கிற அனுபவத்தினால் பட்டுத் தேர்ந்த புத்திசாலிகள் சொல்லும் அனுபவசித்தமான உண்மைகளைக்கேட்டு, தேஹத்தை வியாதிபற்ருது பாதுகாப்பது மேலல்லவா? உதாரணமாக, இந்த சஞ்சிகையில் நமது நண்பர் ஸ்ரீமான் பண்டித வெங்கடராமஐயங்கார் அவர்கள் எழுதியிருக்கும் குறிப்புகளை வாசித்துப் பாருங்கள். அவர் நல்லெண்ணெயின் குணகுணங்களைப்பற்றிச் சொல்வது அவ்வளவும் அக்ஷரலக்ஷம் பெறுமென்று நாம் உறுதியாய்ச் சொல்லுவோம். பரோபகாரமே பெரிதென்றுகருதி அவர் மனமுவந்து ஈசுவர கிருபையை முன்னிட்டுச்சொல்லும் வார்த்தைகள், வாயைத்திறந்து வார்த்தைசொல்லுமுன் கைமேல் காசுபோடவேண்டுமென்று படாடோபம் செய்யும் வைத்தியர் சொல்லுக்கு ஈடாகுமென்று “பணம்பெருத்து”ப் பேய்த்தேரேறித்திரியும் “பிரபுக்கள்” நினைக்கமாட்டார்கள். ஆனால் ஏழைகளான விவேகிகளுக்கு அவை பரமசாதகமாம். இற்றைக்குப் பத்துவருஷங்கள்முன் இவர் இப்பொழுது வெளியிட்டுள்ள உண்மை, இதையெழுதுபவருக்குத் தெரிந்திருந்தால், வைத்தியர்கையில் சிக்கிப் பட்ட வேதனைகளெல்லாம் சேதனமாகக் குவிந்திருக்கும்.இதைச்சொல்வாரின்றி,படாதபாடும் பட்டுப் பாழுமனம் புண்ணாகி, யோக ஸம்யமத்தில் தோன்றியதோர் திவ்யசாதனயுக்தியைநம்பி, எண்ணெய் தேய்த்துக்கொள்வதை இன்றைக்கு ஏழு வருஷங்கள் முன்விட்டொழித்தோம். அஃதோடு நம்மைப்பிடித்த பீடையும்விட்டது. இதனால் எண்ணெய் முழுக்கு கூடாதென்றருத்தமல்ல. எண்ணெய்முழுக்குஅனுகூலமாயிருக்குங்காலமுமுண்டு; பிரதிகூலமாயிருக்குங் காலமுமுண்டு. தேசகால வர்த்தமான விசேஷமும், தேஹமனோபக்குவாபக்குவ நிலையுமறிந்து விவேகத்தால் உசிதமுணர்ந்து உண்மையில் நம்பிக்கைவைத்துச் சாதனசாதகங்களைக்கையாடிவந்தால் தேகமனோசுகத்தைவிர்த்திசெய்துகொண்டு ஆத்மசுகத்தையும் தேடலாம். இதைப்பற்றி சமயம் வாய்ந்துழி நண்பரைக்கொண்டும் நாமும்மேலுமேலுமெழுதிவருவோம. விவேகத்தைக் கைவிட்டால் சாதகமெல்லாம் பாதகமாய் முடியுமென்பதைமட்டும் இதை வாசிப்போர் கவனிக்கவேண்டும்.

---

ப்ரொபெஃஸர்ஜகதீசசந்தர போஸ் அவர்கள் இப்பொழுது அமெரிக்காவிற்கு விஜயமாகச் சென்று, அங்கே, செடிகொடிபோன்ற மூலவர்க்கங்களுக்கு ஜீவசக்தி யிருக்கிற தென்பதைப்பற்றிப் பிரத்தியக்ஷ பூர்வமாகப் பரீக்ஷைகள் செய்துகாட்டி பிரசங்கம் செய்து வருகிறார். அவர் அமெரிக்காவிலிருந்தெழுதிய ஒரு கடிதத்தில், அத்தேசத்து ஐக்கியமாகாணங்களின் வியவசாய இலாகா சம்பந்தமாகமட்டும், ஆயிரம்பேர்கள் பயிர்த்தொழில் சம்பந்தமான சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்களென்றும், இத்தனைபேர்களும் சர்க்கார் செலவில், பயிர்த்தொழில் விர்த்தியின்பொருட்டுவேலைசெய்துவருகிறார்களென்றும்; இந்தியாவில் இவர்களில் பத்திலொருபங்கான நூறுபேர்கள்கூட சாஸ்திர ஆராய்ச்சி செய்வதற்கில்லையேயென்றும் எழுதியிருக்கிறார்.

---

“இந்தியா கௌன்சில் ஸ்மசோதா” என்றுஒருசட்டம் இந்தியாதுரைத்தன சீர் திருத்தங்களைச் செய்வதற்கின்றியமையாததாக, பார்லிமெந்து லார்ட்ஸ் சபையில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அது மார்ச்சுமீ 4வ-யன்று கமிட்டியில் ஆலோசிக்கப்படலாயிருந்தது.

---

புதிதான சட்ட நிரூபணசபைகளுக்குப் பிரதிநிதிகள் நியமனம் செய்வதில், மகம்மதியர்கள், தங்கள் ஜனத்தொகைக்கு மிஞ்சினதாய் அதிகப்படி பிரதிநிதிகளை தாங்கள் தாமே பிரத்தியேகமாக நியமிக்கவேண்டுமென்று இந்தியா மந்திரியவர்களைக் கேட்டுக்கொள்ள, அவர் அதற்கிணங்கியிருக்கிறார். மகம்மதியர் கோரிக்கை பலித்ததைப்பார்த்து இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களும், யூரேஷியர்களும் தங்களுக்குப் பிரத்தியேகமாக மூன்றில் ஒருபங்கு பிரதிநிதிகளை நியமிக்கச் சுதந்தரம் தரவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

---

இந்தியா “டிஸென்ட்ரலிஸேஷன் கமிஷன்” என்று இந்தியாதுரைத்தன அதிகாரத்தை க்ஷேத்திரவிபாகம் செய்து ஜனக்ஷேமவிர்த்தியை நாடவேண்டியதற்கான உபாயத்தைப்பற்றி விசாரணை செய்துவந்த ராயல்கமிஷன் சபையார் அவர்களுடைய ரிபோர்ட்டு வெளியாகி விட்டதாகத் தெரியவருகிறது.

---

இந்தியாவிலுள்ள ஹிந்து சமயங்களின் சம்பிரதாயங்கள் கொள்கைகளைப்பற்றிப் பிரஸ்தாபித்து அவ்வம்மதங்களின் உண்மைகளைவெளிப்படுத்தவேண்டி, கல்கத்தாவில் வருகிற எப்பிரல்மாசம் 9, 10, 11 ம் தேதிகளில் ஒரு ‘கன்வென்ஷன்’ சபை கூடப்படும். இச்சபைமுன், பற்பல மதத்தைச்சேர்ந்தவர்களும் இச்சபைக்குப் பிரதிநிதிகள் தெரிந்தனுப்புவார்கள். ஒவ்வொரு மதத்தின் கொள்கைகளையும் அனுஷ்டானங்களையும்பற்றி வியாஸ மெழுதிப் படிக்கப்படும். நேரே போக சாத்தியப்படாதவர்கள், அன்னியமத தூஷணையின்றி அவரவர்கள் மதத்தின் கொள்கைகளைப்பற்றி இங்கிலீஷில் வியாசமெழுதியனுப்பலா மென்றபடி பலர் அனுப்பியிருக்கிறார்கள். இச்சபை கூட்டும் கமிட்டிக்குத் தலைவராயிருப்பவர், ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்து சமீபகாலத்தில் பென்ஷன் பெற்றுக்கொண்டு நீங்கின ஸ்ரீ ஸாரதாசாரன் மிட்டர் அவர்களாம்.

“Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is,
but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith.”
“Seek Truth wherever you find it,” But “Make your choice and stick to it till you reach the End.”

ஸத்யம் வத,—Speak the Truth.

“Hitch Your Wagon to a Star.” “To Thine Own Self be True”




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்சத்.] [God is Love: Knowledge is Power. *Aum*

ஸத்யமே ஜெயம்—Satyameva Jayati.

புத்தகம் 17.] 1909-ஸு மார்ச்சுமீ [சஞ்சிகை 3.

## True Men and False, Or, Saintly Men and Hypocrites.

“A man's power to connect his thought with its proper symbol and so to utter it, depends on the simplicity of his character, that is upon his love of truth and his desire to communicate it without loss. The corruption of man is followed by the corruption of language. When simplicity of character and the sovereignty of ideas is broken up by the prevalence of secondary desires, of riches, of pleasure, of power, and of praise—and duplicity and falsehood take the place of simplicity and truth, the power over nature as an interpreter of the will, is in a degree lost; new imagery ceases to be created; and old words are perverted to stand for things which are not; a paper currency is employed, when there is no bullion in the vaults. In due time the fraud is manifest, and words lose the power to stimulate the understanding or the affections.”—*Emerson.*

“Words are like blank checks on the Bank of Thought, to be filled with meaning by the past & future earnings of the Intellect.”—*J. W. Powell.*

## நிஜமனிதர்களும் பொய்மனிதர்களும் அல்லது மஹாத்ம துராத்ம வித்தியாஸம்.

---

“மனஸ்யேக வசஸ்யேக கர்மண்யேக மஹாத்மனும்
மனஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் துராத்ம
[னாம்.”

ஆத்மா ஒன்றே. அது பலவிதமாகத் தோற்றுகிறதுதான் பிரபஞ்சமாயை யென்று சொல்கிறது. பிரபஞ்சம் என்றால் தோற்றப்படுவது; மாயை என்றால் மயக்கம். அறிவானும் அறிபொருளும் ஒன்றேயாகின் அறிவு என்னும் ஆத்மதரிசனம் உண்டாம். அறிவு ஒன்றாயின் அறிவானும் ஒன்றேயாக வேண்டும். ஆனால் அறிவு பேதமும் அறிவான் பேதமும் உலகத்திலிருக்கக்காண்கிறோம். இந்த பேதம் எப்படி உண்டாயிற்றெனின் உபாதி பேதத்தால் என்று சொல்வோம். கண்ணும், காண்பானும் ஒன்றே யானவிடத்தும், கண்ணில் போட்டுக்

கொண்டு பார்க்கும் கண்ணாடியின் வர்ணபேதத்துக்குத் தக்கபடி பலவர்ணங்களும் தோற்றப்படுவதுபோல, அறிவானும் அறிவும் ஒன்றேயானவிடத்தும் அறிவதற்குக் கருவியாயுள்ள பொறிபுலன்பேதங்களால் அறிவும் பல விதமாகப் பரிணமித்துத் தோன்றும். இப்படித் தோற்றும் பேதமே ஜீவகோடிகளின் உற்பத்திக்குக் காரணமாம்.

விசாலமான மனமுள்ளவர்களை மஹத் அறிவுள்ளவர்களென்றும், குறுகலும் புன்மையுமான அறிவுள்ளவர்களை புல்லறிவாளர் என்றும் சொல்கிறோம். மஹத் அறிவுள்ளவர்களை மஹாத்மாக்களென்றும், புல்லறிவுள்ளவர்களை துராத்மாக்களென்றும் சொல்லுகிறதுண்டு. இவர்களிருவருக்கும் வித்தியாஸமென்னவெனில், முதலவர் மெய்யைத் தழுவி ஸத்யத்தைக் கடைப்பிடித்து நிற்பதனால் ஸர்வசக்தியும் வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். இரண்டாவதவர், அற்ப புத்தியுள்ளவர்களாதலால், அற்பத்தில் சுகித்து, அற்பத்தை யனுசரித்து அற்பவாழ்வு வாழ்கிறார்கள். மஹாத்மா தோன்றும் ஜகத்தையெல்லாம் தானாகப் பார்ப்பன். துராத்மாவோ தோன்றுவதையெல்லாம் தன்னுடையதாகவேணுமென்று அபிமானித்து ஆசைவலைப்பட்டுழலுவன்.

மஹாத்மாவுக்கு செல்வாக்குண்டு. துராத்மாவுக்கு செல்வாக்கில்லை. ஏன் இந்த வித்தியாஸமென்றால், மஹாத்மா தன்னைப்பார்த்த அஹக்கண்ணால் எல்லாவற்றையும் தானாகப் பாவித்து தான் எல்லாவற்றிலுமிருக்கக்காண்கிறான். இவனை ஆசை என்பது பாதிக்காது. ஆசை பாதிக்காது என்றால் என்ன? இவன் ஆசைப்பட இவனுக்கு அன்னியமாக ஒன்றுமில்லையாதலால், ஆசைக்கு இடமில்லை. அப்படி ஒன்றில் ஆசைவைத்தால், அது தான் மாத்திரமாயிருப்பதால், தேஹத்தைத் தானென்று அபிமானிப்பவனுக்கு, தேஹாதி அவயவங்கள் சொன்னபடி கேட்பதுபோல், ஜகத்தைத் தானென்று அபிமானிக்கும் மஹத்துக்கு ஜகமெல்லாம் சொன்னபடி கேட்கும். இப்படி ஜகமெல்லாம் சொன்னபடி கேட்பதின் மர்மமென்ன? சொல் என்பது வைகரிவாக்குக்குமட்டும் பேராகாது. ஆனால் பரை, பச்யந்தி, மத்யமை யென்னும் மூன்றும் பொருந்த இருந்தது வாயினால் வார்த்தையாக வெளிவரும்பொழுது அது சொல் என்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட சொல் "சித்தர் சொல்" அல்லது சித்தர்வாக்கு என்று சொல்லப்படும். சித்தர்வாக்கு எப்போதும் பலிக்கும்.

ஏன் சித்தர்வாக்கு எப்போதும் பலிக்கவேண்டும்? அவர்கள் "வாகீச்வரீம் சாக்ஷாத்" என்ற ஆப்தவாக்கியப்படி, பரை முதலாகவுள்ள நாலுவகையிலும் வாக்கோடு வாக்காக ஈடுபட்டு பிரத்தியக்ஷமாகவே வாகீச்வரியாக விருக்கிறார்கள். அதாவது, வாகீச்வரிக்கும் அவருக்கும் பேதமில்லை. இவர்கள் மனமொழி மெய்கள் ஒன்றாகப் பொருந்த நடப்பார்கள், ஏனென்றால், பேதபாவனையென்பதே இவர்களிடம் கிடையாது; உதிக்க நிமித்தமுமில்லை. இந்த செல்வாக்கு இலகுவில் சித்திக்கத்தக்கதல்ல. "சித்தன்போக்கு சிவன் போக்கு" என்றபடி சிவனை அதாவது நித்யஸ்வரூபியாய் விளங்கும் உண்மையை வழிபட்டு நடப்பவர்களுக்கே இந்த வாக்கு சித்தியுண்டாகும். மற்றவர்களுக்கொருக்காலுமுண்டாகாது. வாச்சாஞானம் பயன்படமாட்டாது. வேஷம்போடச்செய்து துர்வழியில் செலுத்துமாதலால் அப்படிப்பட்டவர்களையெல்லாம் துராத்மாவென்று ஒரே வகுப்பாய் வகுத்துவிட்டார். மன, மொழி, மெய், மாறுபட்டிருப்பவரெல்லாம் "துராத்மனாம்." மஹாத்மனுக்குச் செல்வாக்கு (வாக்குசித்தி) என்னமாவுண்டாகிறதென்றும், அது தவறுவதற்குக் காரணமென்ன வென்பதையும் எமர்ஸன் என்னும் அமெரிக்காதேசத்து ஆத்மஞானி நன்றாகச் சொல்லியிருக்கிறார். அவருடைய ஆப்தவாக்கியத்தை இதன் தலைப்பில் எடுத்து



வரைந்திருக்கிறோம். அவர் சொல்வதின் கருத்து தத்துவார்த்தத்துக்கு முற்றும் ஒத்திருப்பதால் அது ஸத்யவாக்கே. ஒரு ஆத்மன் சங்கல்பரூபமான தன்மனத்தே யுதிக்கும் எண்ணத்தை அதன் சரியான அடையாளம் (அதாவது பிரதீகம்) வெளிப்பிரபஞ்சத்தில் என்னவுண்டோ அதோடு இசைத்து அதற்குச்சரியாக அதை உச்சரிக்க ஸாத்வீகம் அவசியம். ஸாத்வீகம் என்றால் ஸத்வகுணம். இது ஸத்யத்தைநேசித்து உண்மைக்குக்குறைவுவரக்கூடாதென்றும், எதையும் பூரணமாய் அனுபவித்துப் பூரணமாய்த் தெரியப்படுத்தவேண்டுமென்றும் அவனுக்கிருக்கும் ஆஸ்தையைப்பொறுத்ததாக விருக்கிறது. ஸத்யவிரதமில்லாதார்க்கு வாக்கு சித்தியுமில்லை, செல்வாக்குமில்லை. ஸத்யம் தவறினால் வாக்தவறிவிடும். மனிதன் பேதபாவனைக்கிடங்கொடுத்தால், வாக்கும் பேதப்பட்டுப்போம். ஸாத்வீகமும் லக்ஷியமும் குறைந்து, அவை பூரணமா யிருக்கவேண்டியவிடத்தில் ஆசை, காமம், அதிகாரம் முதலிய தாழ்ந்ததும் இரண்டாந்தரமுமான இச்சைகள் குடிபுகுந்தால், "இச்சாசக்தி உமாகுமாரி" யென்ற சிவசூத்திரத்தின் உண்மையை உணர அசாத்தியமாகிறது. பிரகிருதி தர்மத்துக்கு விரோதமாக இவன் நடந்துகொள்ளத் துணிந்துவிட்டதால், பிரகிருதியும் இவனுக்கு விரோதமாக நடக்கத் துணிந்துவிட்டது. மனம் பொருந்தாத் தம்பதிகள்போல் இவனுடைய இச்சையும் பிரகிருதியும் விரோதப்பட்டுத் தாறுமாறாக இயங்கத் தலைப்படுகின்றன. புருஷனும் பிரகிருதியும் க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞ சம்பந்தமுள்ளவர்களா யிருக்கவேண்டியிருக்க, அதற்கு மாறாகவுள்ள விரோதபாவம் லபித்து துன்புற்றுழலுகிறார்கள். மனம் பொருந்தாத் தம்பதிகளுக்குப் பிள்ளை பிறப்பது எப்படி துர்லபமோ அப்படிப்போல புருஷப்பிரகிருதிவேற்றுமை கண்டவிடத்து "யன்மனஸ் திரிஜகத் சிருஷ்டி ஸ்திதி கர்மகிருத்" என்னும் சுருதிவாக்கியப்படி திரிவிதமான (ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண) ஜகத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றி யழிக்கும் சக்திவாய்ந்த மனஸ், சிருஷ்டி சக்தியிழந்ததாய்விடுகிறது. யௌவன காலமெல்லாம் நாயும் பூனையும்போல் கூடிவாழ்ந்து புத்திரசௌபாக்கியம் பெறக் கொடுத்து வைக்காத தம்பதிகள், முதுமைப் பருவமடைந்தபொழுது பிறர்பெற்ற குழந்தையை அபிமானித்து அபிமானபுத்திரன் கொள்வதுபோல, வாக்கு தன் சக்தியிழந்து, "இல்லாததை யிருக்கிறதென்று" காட்டும் ஜோடிப்பு வார்த்தையாக ஆய்விடுகிறது. வார்த்தைக்கு லக்ஷியார்த்தம் குன்றிப்போகவே, வாக்கு வீரியம் குறைந்து, அதன் வாச்சியார்த்தமும், பதார்த்தமும் முற்றிலும் பேதப்பட்டுப்போக நேரிடுகிறது. நேரிடவே, "பேப்பர் கர்ரென்ஸி" என்று காகிதத்தில் 100-ரூபாய் என்று அச்சிட்டு வழங்குவதுபோல், லக்ஷியமில்லா வார்த்தை வழங்கப்படலாகிறது. பொக்கிஷத்திலே பொன்னிருந்து கர்ரென்ஸி நோட்டு வழங்கிவந்தால் சிலாக்கியமாயிருக்கும். பொக்கிஷத்திலே பொன்னில்லாதபோது கர்ரென்ஸி நோட்டுக்கு மதிப்புண்டாகுமா? உண்டாகாதுபோலவும் உண்மை தெரிந்தவிடத்து முழுமோசமாய் முடிவதுபோலவும், வார்த்தை மோசம் காலக்கிரமத்தில்தானே வெளியாகிவிடும். வெளியானால் பொக்கிஷத்தில் பணமுள்ளவரையில் செலாவணியான உண்டியல் பொக்கிஷத்தில் பணமில்லாதபோது செல்லாது போவதுபோலும், அர்பத்நட் செக்கு அவமதிப்படைந்ததுபோலவும், வார்த்தைக்கு அறிவையூட்டி மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணும் சக்தி குன்றி அவமே கழிய நேரிடுகிறது. பிரகிருதியினிடத்து வாக்குச் செல்லாதுபோகவும், செல்வாக்குப் போய்விடுகிறது. செல்வாக்குப்போனால் மனிதன் வாயிழந்தவனாகிறான். வாயிருந்துபேசியும் அவன் வாக்கு பறைமேளத்துக்கொப்பாய் அருவருப்பை யுண்டுபண்ணுமேயன்றி உள்ளத்திலூன்றி உண்மையை யுணர்த்தும் சக்தியுள்ளதாகாது. இப்படி வாயிழந்தவன்

யாரோ அவனே 'மானிடப்பதர்' என்றுசொல்லப்படுவான். பதர் நெல்லோடுசேர்ந்திருந்தும் நெல்லின் சேர்க்கையினால் மட்டுமன்றி ஸ்வயமாக மதிப்பிலதுபோல, மன, மொழி, மெய்கள் பொருந்தாத மானிடப்பதர்கள் ஜனசமூகத்தில் ஏதோ மானிடச்சேர்க்கையால் மதிப்புற்று விளங்கினாலும், ஸ்வயமாக மதிப்பற்றவர்களாகவே யிருப்பார்கள். இவர்களால் ஜனசமூகத்துக்கு மொத்தத்தில் மதிப்புக் குறைவேயன்றி மதிப்பேற்றம் சிறிதுமில்லை. எந்த ஜனசமூகம் இம்மானிடப் பதர்களைத் தன்னுள் வைக்காது தள்ளி வெளியேற்றி வருகிறதோ அதுவே, ஜாதிவீரியம் குன்றாது வளர்ந்து ஓஜஸும் தேஜஸும் பெற்றுப் பிரகாசிக்கும். "ஓஜஸும் தேஜஸும் பெற்றுப்பிரகாசிக்கும்" என்று நாம் சொன்னதையே உலக நடையில் "பேரும் கீர்த்தியும் பெற்றுவிளங்கும்" என்றுசொல்வர். சொல்லினும் ஓஜஸின்றி மனிதனுக்கு மனிதன் என்கிறபேர் பொருந்தாது. அப்படியே தேஜஸ் இன்றி கீர்த்தியுமில்லை. இது சத்யம். மனிதனுக்குச் சொன்னது ஜன சமூகத்துக்கும் பொருந்தும். ஏனெனில், இரண்டுக்கும் வியஷ்டி சமஷ்டி பாவங்களன்றி வேறு வேற்றுமைப்பாடில்லை.

❋ ❋ ❋

## THE HOLY CITY OF MUTTRA.

### வடமதுரை.

### I

இது டெல்லிக்கும் ஆக்ராவுக்கும் மத்தியில் ஜி. ஐ. பி. இருப்புப்பாதையின் பேரிலுள்ள ரயில்வே ஸ்டேஷன். மட்ரா ஜில்லாவுக்கும் அந்தப்பெயருள்ள தாலுக்காவிற்கும் பிரதானபட்டணம். ஜனத்தொகை 260,000. இது கலெக்டர் ஆபீஸ், ஜில்லாகோர்ட்டு, முனிசீப்கோர்ட், ரிவினியு ஆபீசுகள் முதலிய ஜில்லாவின் பிரதான பட்டணத்திற்கு அவசியமான ஒவ்வொரு அங்கங்களையுமுடையது. இது யமுனா என்ற புண்ணிய நதியின்மேல்பக்கத்துக்கரையோரத்திலுள்ள வெகு சிங்காரமும் செழிப்பும் ஒருங்கே பொருந்தி சுமார் பன்னிரண்டு சதுரமைல் விஸ்தீரணமுள்ளது.

இதின் பூர்வ சரித்திரத்தைக் கருதி இதை நேரிட்டுப்பார்க்க அவாக்கொண்டு சென்று, அவ்விடத்திலுள்ள ஒவ்வொன்றையும் கவனித்து குறித்துக்கொண்டவைகளிலிருந்து இதை வரையலானோம்.

அயோத்திமாநகரத்தில் ஸ்ரீராமபிரான் ஏகசக்ராதிபதியாய் அரசாண்டு வருங்காலத்தில், யமுனா நதிக்கரையிலிருந்த ஓர் பிரமாண்டமான வனத்தில் மது என்ற பெயருடன் ஒரு இராக்ஷசன் வசித்து வந்ததாகவும், இவனிருந்த வனத்திற்கு மதுவனமென்ற பெயர் வழங்கி வந்ததாகவும், இவனிறந்த பிறகு இலவணன் என்ற மதுவின் குமாரன் மிதமீறி அடாதகாரியங்களைச் செய்து வந்தபடியால், ஸ்ரீராமர் தமது சகோதரர் சத்ருக்கனை யனுப்பி அவனை ஹதம்செய்து, அந்த வனத்தை யழித்து ஒரு திவ்வியமான பட்டணத்தைக்கட்டி யதற்கு மதுபுரி என்ற நாமமிட்டு லவணன் தம்பியாகிய அரியஸ்வனுக்கு அப்பட்டணத்தை யாளும்படி திட்டம் செய்ததாகவும், அது முதற்கொண்டு இதற்கு மதுராபுரி என்ற நாமமே வழங்கி வருகிறதாகவும் தெரியவருகிறது. இந்த திரேதாயுக முதற்கொண்டு நாளதுவரை இப்பட்டணமடைந்த உன்னதச் சிறப்பையும் சீர்கேட்டையும் எழுதுவதென்றால் ஓர் பெரும்பாரதமாகும். ஆதலின் சுருங்கக்கூறி வருவோம்.

இந்த அரியஸ்வன் யாதவகுலத்திற்கு மூலபுருஷனென்று கருதவேண்டி யிருக்கிறது. இவன்சந்ததியில் சூரனென்ற அரசனுக்கு— வசுதேவன், தேவபாகன், தேவசிரவன், பிரதபாண்டு, ஆனகன், கிரஞ்சேயன், கங்கன், இஷதகன், வச்சகன், பகன் என்றபத்துப்பிள்ளைகளும், பிருதை சிரததேவா, சிரதகீர்த்தி, சிரதசவா, ராஜதேவி என்ற ஐந்து பெண்களும் பிறந்தார்கள். சூரன் என்ற இந்த ராஜன் பிருதை என்ற தன் பெண்ணை அபுத்திரனும் சகாவுமான குந்திராஜனுக்குக் கொடுக்க, அவள் பாண்டுராஜன் மனைவியாகி பஞ்சபாண்டவர்களைப் பெறுகிறாள்.



வசுதேவனுக்கு தேவகியினிடமாக ஸ்ரீ கிருஷ்ணரும், இவர்களுடைய தாயாதியும் சேதி ராஜனுமான தாமகோஷாவுக்கு சிதசரசி என்பவளிடம் சிசுபாலனும் பிறந்தார்கள்.

பிரகஸ்பதியின் மனைவியாகிய தரையானவள் சந்திரன்மேல் மோகப்பட்டுக் கூடி புதனைப் பெற்றதாகவும், புதன் இளை என்பவளிடமாக புரூரவனைப் பெற்றதாகவும், இவன் ஊர்வசியினிடமாக ஆயுரசனை யடைந்ததாகவும், ஆயுரசன் வம்சத்தில் நகுஷனும், யயாதியும், யாதவனும், விதர்ப்பனும், அகண்டனும், போஜனும் உதித்ததாகவும், இவனுக்கு தேவகன், உக்கிரசேனன் என்ற இரண்டு குமாரர்கள் பிறந்ததாகவும், தேவகனுடைய குமாரத்தியே தேவகி என்றும் தெரியவருகிறது.

இந்த தேவகியைத்தான் வசுதேவர் மணந்து அவதார புருஷராகிய ஸ்ரீ கிருஷ்ணரைப் பெற்றனர். இந்த கிருஷ்ணர் விதர்ப்பதேசத்து அரசனாகிய பீஷ்மகன் குமாரத்தி ருக்மணியென்ற மாதை விவாகம் செய்துகொண்ட வைபவத்தைப்பற்றி ருக்மணி கல்யாணமென்பதாக நமது பாகவதர்கள் நடத்த எவ்வளவோ தடவை கேட்டிருக்கிறோம்.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு ருக்மணி தேவியிடம் பிறந்த குமாரன் பிரத்யும்னன். இவனுக்கு ருக்மணிதேவியின் கூடப்பிறந்தவன் ருக்மனுடைய குமாரத்தி ருக்மவதியை விவாகம் செய்யப்பட்டது. இந்த பிரத்யும்னனை மன்மதனவதாரமென்றும் ருக்மவதியை இரதியின் அவதாரமென்றும் புராணம் கூறுகின்றது. இந்த பிரதியும்னனுக்கு அநிருத்திரன் என்பவன்பிறந்ததாகவும், அவன் உஷா என்னும் மாதை விவாகம்செய்து வஜ்ரதன் என்ற பலாட்டியனைப் பெற்றதாகவும், இவன் ஸ்ரீ கிருஷ்ணதேவருக்குப் பிறகு மதுராபுரியை வெகுகாலம் ஆண்டுவந்ததாகவும் தெரியவருகிறது.

ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய பிதாவாகிய வசுதேவர் தேவகியை விவாகம் செய்துகொள்ளுவதற்கு முன் ரோஹணி என்னும் மாதினிடமாக பலராமர் என்ற பலவானை பெற்றிருந்தார்.

போஜனுடைய மற்றொரு குமாரனாகிய உக்கிரசேனன் மதுராபுரிக்கு அரசனாகி யாண்டுவரும்பொழுது கம்சன் என்ற கொடியவனைப்பெற்றான். இவன் மகதநாட்டின் அரசனாகிய ஜராசந்தனுடைய புத்திரி இராஜீவலோசனியைமணந்து, தன்மாமனாராகிய ஜராசந்தனுடைய உதவியைப்பெற்று, தானே சிம்மாசனாதிபதியாய் மதுராவை யாண்டுவந்தான். இவனுடைய ஹிம்சையைப் பொறுக்கமுடியாமல் குடிகள் மிகவும் வருந்தினார்கள். பலவானாகிய இராஜன் கொடுங்கோலியற்றினால் குடிகள் செய்வதென்ன? கடவுளை முன்னிட்டு முறையிடுவதைவிட வேறுவழியு முண்டோ? ஆதலின் அவர்களுடைய முறைப்பாட்டுக்கு செவி சாய்த்த பகவான் "கம்சனுடைய கொட்டத்தையடக்க தேவகியினிடமாக எட்டாவது பிரசவமாய் தாம் உதிப்பதாக ஆகாயவாணியாய் கூறினர்.

இதையறிந்த கம்சன் வசுதேவரையும் தேவகியையும் வரவழைத்து சிறையிலிட்டு கடுங்காவலில் வைத்தனன். இப்படியிருக்கையில் தேவகிக்கு ஒவ்வொரு குழந்தையாக ஆறு குழந்தைகள் பிறந்தன. அவைகள் ஒவ்வொன்றையும் கொடியோனாகிய கம்சன் கொன்றுவிட்டான். தேவகி மறுபடியும் கர்ப்பமடைந்து, பூர்ணமாக, பகவான் கம்சனுடைய கடு

ரத்தன்மையைக் கருதி தேவகியின் கர்ப்பத்திலிருந்தசிசுவை யமுனாநதியின் அக்கரையிலிருந்த வசுதேவருடைய மற்றொரு மனைவி ரோஹணியின் வயிற்றுக்கு அற்புதமாக ஆகர்ஷித்துவிடவே, அவள் வயிற்றில் தான் பலராமன் என்ற வீரர் பிறந்தார்.

இவ்விதமாக தேவகி பெற்ற ஏழுபிள்ளைகளின் கதியும் நேர, தேவகி எட்டாந்தடவையும் கர்ப்பமடைந்து பரீதாபிவருஷம் ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதி, ரோகணி நக்ஷத்திரமும் கூடிய திவ்வியமான சுபதினத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தார். இத்தினத்தையே மகாவிசேஷமாகக்கொண்டு இந்த மதுராபுரியில் கோகுலாஷ்டமி உற்சவமென்பதாய், ஒவ்வொரு ஆலயத்திலும் தீபதூபாலங்காரங்களும், மெரவணைகளும் உரியடியுற்சவம், வழுக்குமரஉற்சவம், கோலாட்டம் முதலிய பலவிதமான உற்சவங்களை, ஆடல், பாடல், வாத்தியம், பாணவேடிக்கை முதலியவைகளுடன் நடத்தி ஜனங்கள் குதூகலமடைவதுடன், இப்பரதக்கண்டத்தின் ஒவ்வொரு பாகத்திலும் இந்த தினத்தை பெரிய விரததினமாகக்கொண்டு பட்னியிருந்து இரவில் அப்பகவானை விக்கிரகாரூபத்தில் அர்ச்சித்து, பூஜித்துப்போற்றி வணங்கி பண்டிகை கொண்டாடுகிறார்கள். கிருஷ்ணலீலைகளை பிச்சைக்காரர்களும் பலவித வர்ணமெட்டுகளுடன் பாடிக்கொண்டு வீடுவீடாக வருவதை நாம் இன்னும் பார்க்கிறோம்.

இக்குழந்தை அதிக அற்புத ரூபலாவண்ணியமுள்ளதாயிருந்தபடியால், கம்சன் இச்செய்தியை யறிவதற்குமுன் வசுதேவர், இரவிலேயே குழந்தையை பொன் தட்டில் எடுத்துக்கொண்டுவரவும், கோட்டையின் பலவாயில்களின் கதவுகள் தானே திறந்து வழிவிடவும், உருவியகத்தியுடன் நின்ற காவல்வீரர்கள் மாயாமயக்கத்தினால் மெய்மறந்து தூங்கவும், கண்டவசுதேவர் ஆநந்தங்கொண்டு யமுனைநதியைக் கடந்து அக்கரையிலுள்ள கோகுலத்திற்கு செல்லக்கருதி நதிக்கரையை யடையவே, அந்நதியானது பெருக்கெடுத்து இருகரைகளுந்தோன்றாமல் பிரவாகிப்பதைக் கண்டு, ஒரே தைரியமாய் பிரவாகத்திலிறங்க, அந்நதியின் நீர் பகவானாகிய குழந்தையின் பாதப்பரிசமானதும், வசுதேவர்நடந்துசெல்லத்தக்க பாதையைவிட்டு விலகிநிற்கவே, வசுதேவர் ஆநந்தங்கொண்டு நடந்து அக்கரை சேர்ந்து கோகுலம் என்ற இடையர் கிராமத்தில் சென்று பெரிய குடித்தனக்காரராகிய நந்தன்வீட்டைத்தேடிச்செல்ல, அங்கு அப்பொழுது தான் அவன்மனைவி பெற்ற பெண்ணையெடுத்துக்கொண்டு, ஸ்ரீ கிருஷ்ணரை யாருக்கும் தெரியாமல் அந்த எசோதையென்ற மாதினிடம் விட்டுத் திரும்பி மதுராபுரிசேர்ந்து, பெண்குழந்தையை தன்மனைவியினிடத்தில் விட்டார்.

அப்பெண்குழந்தை யுடனே வீரிட்டழ வீரசூரர்களான காவல்காரர்கள் திடுக்கிட்டெழுந்து பார்த்து பெண்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் கொடும்பாதகனாகிய கம்சனிடம் வைக்க, அவன் அதிக கோபாவேசத்துடன், தன்னைக்கொல்லவந்த பொல்லாத பிள்ளையிதுவே யென்றெடுத்து, பூமியில் ஓங்கியடித்து வாளால் வெட்டப்போகவே, அப்பெண்குழந்தை வீரிட்டழுது குமரிக்கொண்டு ஆகாயத்திலெழும்பி கீழேதரையில் நின்ற கம்சனை நோக்கி, “அடே கொலைபாதகா! உன்னைக்கொல்லப்பிறந்தகிருஷ்ணன் கோகுலத்தில் வளர்கிறான். என்னைக்கொல்ல உன்னாலியலாது” என்றுகூறி மறைந்தது.

இவ்வாக்கியங்களைக்கேட்ட கம்சன் கடுங்கோபமடைந்து கோகுலத்தில் மட்டுமல்ல, மற்ற சுற்றுப்புறங்களிலுள்ள ஒவ்வொரு இடத்திலும் நூதனமாய்ப்பிறந்த குழந்தைகளையெல்லாம் கொன்றுவிடும்படியாக உத்திரவு செய்ததன்றி வசுதேவரையும், தேவகியையும் சிறையிலிருந்து விட்டுவிடும்படி கட்டளையிட்டு மிகுந்த வியாகூலத்துடன் தனது அரண்மனைக் கேகினான்.



சிலநாள் கழிந்தபின் கோகுலநந்தன் தான் இராஜாங்கத்திற்கு கட்டவேண்டிய அரசிறையை எடுத்துக்கொண்டு மதுராவுக்கு வந்த சமயத்தில் வசுதேவர் நந்தனைப்பார்த்து, “நந்தகோபனே! உனக்கு கிருஷ்ணன் என்பதாக ஓர் ஆண்குழந்தை பிறந்த சங்கதி தெரிந்து அதிக சந்தோஷமடைந்தேன். எனக்கு ரோகணியிடமாகப் பிறந்து கோகுலத்தில் வளர்ந்து வருகிற பலராமனையும் உனக்குத் தருகிறேன்” என, நந்தன் அதிக ஆவலாய் அங்கீகரித்துக்கொண்டு கோகுலஞ்சென்று இச்சங்கதியை எசோதையிடம் கூறி பலராமனையும் மறைத்துக்கொண்டு வந்து அதிகஅன்புடன் இருகுழந்தைகளையும் வளர்த்து வந்தனன். இச்சமயத்தில்தான் கம்சன் பூதகி முதலானவர்களைக்கொண்டு கிருஷ்ணனைக்கொல்ல பலவித சதிமோசங்கள் செய்ததென்பதாகத் தெரியவருகிறது. இவனுடைய எண்ணம் எவ்விதத்திலும் கொஞ்சம்கூட நிறைவேறவில்லை. இச்சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் செய்த திருவிளையாடல்களை இப்பொழுதுதான் நடந்ததோவென்று எண்ணும்விதமாய் இம்மதுராபுரியிலுள்ள ஜனங்கள் தற்காலத்திலும் கூறுவதைக்கேட்க கல்நெஞ்சர்களான நாஸ்திகர்களும் ஆச்சரியமடைந்து ஆநந்தபரவசர்களாய் பக்திமேலிட்டு பகவானை துதிப்பார்களென்றால் மற்றவர்களுக்கு கேட்பானேன்.

கிருஷ்ணன் விளையாட்டுகளில் மிதமிஞ்சி அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும், வரவர கோகுலத்தாருக்கும் பலவித இடையூறுகள்செய்யத்தொடங்கவே, கிராமத்தார் நந்தகோபாலனிடம் இப்பாலகர்களுடைய வம்புகளைப்பற்றி முறையிட்டார்கள்.

ஸ்ரீபகவானே ஒரு குழந்தையாய் இந்த நந்தன் வீட்டில் வளரும்பொழுது அவனுக்கு எந்த விஷயத்தில்தான் குறைவிருக்கும்? ஒவ்வொன்றும் செழித்து கொழித்தன. கோவினங்கள் எதேஷ்டமாகப்பெருகி அவைகள் மேய்வதற்கு மகா செழிப்புள்ளதாகிய கோகுலத்திலுள்ள மேய்ச்சற்தரையேபோதாமல் போனபடியால் நந்தன் தன் மனைவிகளோடு பிருந்தாவனமென்ற எதேஷ்டமான மேய்ச்சற் காடுகளையுடைய கிராமத்திற்கு வந்து வசிக்க நேரிட்டதுமுண்டு.

இவ்விடத்திலும் ஸ்ரீகிருஷ்ணருடைய கபடலீலைகள் நின்றபாடில்லை. தன்னைப்போல் கோவினங்களை மேய்க்கும் பிள்ளைகளுடன் சேர்ந்து அவர்களுக்குத் தலைவனாகி, புன்னை, அசோகு, கதம்பம், மந்தாரை முதலிய மரங்களிலேறி விளையாடியும், யமுனா நதிக்கு ஸ்நானஞ்செய்யவரும் ஸ்திரீகளுடைய துகில்களை எடுத்துக்கொண்டுபோய் மரங்களில் கட்டிவைத்து, அவர்கள் ஆநந்தமாய் நீராடிக் கரையேறி துணிகளைக் காணாமல், அங்கு விளையாடுங் கிருஷ்ணனைக் கண்டுகேட்டால், உங்களுடைய துணிகளை நன்றாய் துவைத்து உலரும் பொருட்டு மரத்தில் கட்டியிருக்கிறேன், மரமேறி எடுத்துக்கொள்ள சக்தியில்லாதவர்கள் எனக்கு கைதூக்கிவணக்கஞ் செய்யுங்கள், குஞ்சம்போடுங்கள், கரணம் போடுங்களென்று கூறி வம்புகள் செய்தும், காளிங்கமடுவில் தண்ணீர் குடிக்கவரும் கோவினங்களைப்பிடித்து விழுங்கிவந்தகாளிங்கன் என்ற பெரியபாம்பின்மீது ஏறிக் குதித்து விளையாடி அதைக்கொன்றும், இப்படியே பல அசாத்தியமான செய்கைகளைச்செய்துவந்தனன்.

இவைகளைக்கேள்வியுற்ற கம்ஸன் பகாசூரன், அகாசூரன் முதலியவர்களை யேவி கிருஷ்ணனைக் கொல்லும்படி பலவித தந்திரங்களைச்செய்தான். அஜாதசத்துருவைக்கொல்ல முடியுமோ?

கிருஷ்ணனும் வாலிபதசையைக் கடந்து யவ்வனதசையை யடையவே, இவனுடைய வேணுகானத்திலும், அழகிலும், புஜபலபராக்கிரமத்திலும் ஈடுபட்டவர்களாகிய ராஜகுலத்து மாதர்கள் யாவரும் மோகித்து இப்போர்க்

கொத்த புருஷனை அடைதலே இகபரசுகங்களிரண்டுக்கும் மீறியதெனக் கருதி, கிருஷ்ணனோடு கூடி இரவென்றும், பகலென்றும் பாராமல் ராசக்கிரீடை, ஜலக்கிரீடை முதலிய விளையாட்டுகளில் காலங்கழிப்பாராயினர்.

பிருந்தாவனத்திலுள்ள இடையர்கள் வருஷத்திற்கொருதடவை தங்களூரை யடுத்த கோவர்த்தனத்தில் தேவராஜனாகிய இந்திரனை முன்னிட்டுப் பொங்கலிட்டுப் பூஜைசெய்வதுவழக்கமாதலால், அவர்கள் அவ்வருஷத்தில் அந்த பூஜையைத்தொடங்கவே, கிருஷ்ணன் அப்பூஜையைத் தனக்கே செய்யும்படி போதிக்க, அவர்களும் கிருஷ்ணனுடைய மகிமையைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டவர்களாதலால், அதற்கிணங்கி நடத்தவே, தேவேந்திரன்கோபங்கொண்டு அகோரமான மழைபொழியும்படிமேகங்களையேவ, ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தனம் என்ற மலையையே வேரோடு பிடுங்கியெடுத்து மேலேதூக்கிக் குடையாகப் பிடித்துத் தனது கூட்டத்தாரையும் கோவினங்களையும் ஆதரித்த சங்கதியை மதுராபுரிவாசிகள் அதி அற்புதமாகச்சொல்லுகிறார்கள். கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்துக் காத்த பாவனையாக எழுதப்பட்டபடம் ஒவ்வொருவீட்டிலும் பிரதான படமாகச் சுவரை அலங்கரிக்கிறது.

கம்சன் இந்தப் பலராமன் கிருஷ்ணன் இவர்களுடைய வரலாறுகளைக்கேள்விப்பட்டு பயந்து, இவர்களை வசுதேவன் குமாரர்களென்று தீர்மானித்து இவர்களைக் கொல்லப் பலவிதமாய் ஊகித்து, கடைசியில் தனது ராஜ்யசேவகத்திற்கு தகுந்த வீரர்கள்வேண்டு மென்பதாகவும் தனது வில்லைவளைத்தவர்களைச்சேனையில் சேர்த்துக்கொண்டு, தகுந்த சம்பளம் கொடுப்பதாகவும் விளம்பரப்படுத்தி மோசக் கருத்தாக அக்ரூரரைக் கொண்டு பலராமனையும் கிருஷ்ணனையும் மதுரைக்கு அழைத்துவந்து வில்லைவளைக்கும்படி யேவ, அவர்களும் வில்லைவளைத்து அருகில்நின்ற துஷ்டர்களைக்கொல்ல கம்சன் கோபங்கொண்டு பலராம கிருஷ்ணர்களின்பேரில் சேனைகளை யேவிப் போர் விளைவிக்க, ஸ்ரீகிருஷ்ணர் சேனைகளை யெல்லாம் அதம் செய்து சிங்காசனத்தின்மீதிருந்த கம்சனைப்பிடித்துக் கீழே தள்ளிக்கொன்று, யமுனைநதியில் பிரேதத்தைப் போட்டு, அவனது மனைவிகளைக்கொண்டு உத்திரகிரியைகளைச் செய்வித்து, சிறையிலிருந்த பழைய அரசனாகிய உக்கிர சேனனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து முடிசூட்டி வைத்தான்.

இந்த சங்கதிகளைக் கண்ட கம்சனுடைய மனைவிகள் தங்களுடைய தகப்பனாகிய மகததேசாதிபதியாகியஜராசந்தனிடம் முறையிட அவன் உடனே படையெடுத்து வந்து மதுராபுரியைத் தாக்கி உக்கிரசேனனையும் கிருஷ்ணனையும் சண்டைக் கழைக்க, கிருஷ்ணன் அவன் சேனைகளை முறியடித்து, ஜராசந்தனைப்பிடித்துச்சிறையிலடைத்துப் பின்பு கருணையால் விடுதலை செய்யவே, ஜராசந்தன் ஒரு தடவையல்ல இரண்டுதடவையன்று, பதினெட்டுத்தடவை மதுராபுரியைத்தாக்கி, ஒவ்வொருதடவையிலும் ஸ்ரீ கிருஷ்ணரால் தோற்கடிக்கப்பட்டான்.

கடைசியில் ஸ்ரீகிருஷ்ணர் இந்தஜராசந்தன் செய்யும் சளையாத சண்டையையும், அவனுக்கு தன்னால் மரணமுண்டாகக்கூடாதென்கிற எண்ணத்தினாலும் உச்சினி பட்டணத்திற்கு வந்துஉபநயனம் செய்துகொண்டு சாந்திபினி என்ற முனிவரிடம் வேதாகமங்களைக்கற்று கச்சு தேசத்திற் கடுத்த கடலோரத்திலிருக்கும் துவாரகை என்ற பாகத்தில் பட்டணத்தையுண்டாக்கி விதர்ப்பதேசத்து இராஜன் பீஷ்மனுடைய குமாரத்தி ருக்மணியையும் விவாகம் செய்துகொண்டு அனேக மனைவிகளுடனும், பல மக்களுடனும் வாழ்ந்துகொண்டிருந்தனர். இச்சமயத்தில் ஜராசந்தன் மதுரையையடைந்து உக்கிரசேனன் கட்டிவைத்திருக்கிற கூடகோபுரங்களையும் கோவில்களையும் இடித்து பட்டணத்தைப் பாழாக்கினான்.



இப்படியிருக்கையில் பாண்டவர்களுக்குதவியாக மகததேசம் சென்று பீமனால்ஜராசந்தனைக் கொன்று, பாரதயுத்தம் நேர—பூபாரத்தையே தீர்க்க எண்ணங்கொண்டு பலதுஷ்டாத்மாக்களை யொழித்து துவாரகையிலேயே யிருந்து விட்டார். பிறகு மதுராபுரிக்குத் திரும்பிவரவில்லை.

(இன்னும் வரும்.)

T. C. வெங்கடரமணய்யர்.

# A PLEA FOR THE STUDY OF OUR MOTHER-TONGUE.

## நமது தாய் பாஷையை நன்றாகக் கற்கவேண்டும்.

பாஷை மனிதன் எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கானதோர் இனிய வழியாம். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்பதற்குக் கணக்கும் பாஷையும் இருகண்களையொக்குமென்பர். ஆனால் மனத்திலுதிக்கும் எண்ணமும், அதைக் குறிப்பிக்கும் எழுத்தும், அஹமும் புறமும்போல் ஒத்திருக்கவேண்டியதால் இரண்டும் ஒரே நோக்கமுள்ளதுபற்றி, “கண்ணிரண்டும் ஒன்றையே நோக்கினான் காண்” என்றபடி, இரண்டும் ஒரு நோக்கங்கொண்டது என்னும் பொருள்படச் சொன்னதுமாகும். உள்ளத்திலுதிக்குமெண்ணத்தைக்கள்ளமின்றி வெளியிடுவார் உத்தமபுருஷராவர். மனோ வாக்கு காயம் என்கிற மூன்று கரணங்களில் மனமும் வாக்கும் பொருந்தினால், காயமும் கூடப்பொருந்தும் தன்மைவாய்ந்ததா யிருக்கிறது. இது தேஹமனோதர்மவிதி. ஆகையால் மனமும்வாக்கும் பொருந்தப்பழகவேண்டும். “கற்றதோர் கல்வியும் நாப்பழக்கம்” என்றார் ஔவையார். மனது சங்கல்பிப்பதற்கேற்க நா உரைக்கப் பழகுமாயின், அதுவே ஸத்யவிரதமிருத்தலாம். ஆதலால், குழந்தைமுதல் நாம் பழகி வரும் பாஷையைக் கற்பது யாவர்க்கும் அவசியம். தமிழின் பெருமை வேறெம்மொழியினும் குறைவுபட்டதில்லை. “மனம் ஒரு வழிப்பட்டது மந்திரம்.” ஒருவழிப்பட்ட மனத்தின் சங்கல்பத்தை யுள்ளபடி யுரைப்பது பரைவாக்கு. இந்தப்பரை வாக்கு அசரீரி வாக்காதலால், இஃதை அறிவால் மட்டுமறியலாமேயன்றி, பொறிபுலனால் புகுந்தறிவது கூடாது. இந்தப் பரைவாக்குப் பச்யந்தி யென்னும் பேதமுறுங்கால், ஊமையன் பேச்சுப்போல் உள்ளமுணருந்தன்மையதாம். இஃது பின்னும் பரிணமித்துவளர்ந்து மத்தியமையென்னும் மனநிறை வாக்காகுங்கால் அதை மனதால் அறியலாம். மேற்றிசையார் “Thought - Reading” என்றுசொல்லி நினைத்ததை யுரைப்பதும், நம்மவர்கள் குறி சொல்வதாகச் சொல்வதும் இந்த மத்தியமை வாக்கின் மஹிமைதான். இஃதும் விரிந்து வாக்கால் உச்சரிக்கப்பட்டு வெளிவருவது வைகரி வாக்காம். ஆத்மசங்கல்பம் படிப்படியாக மேலேறி வெளிவந்தால் அது கட்டாயம் பலிக்கும். ஏனென்றால் ஆத்மா இயல்பாகவே முச்சக்தி வாய்ந்துளது. இச்சாசக்தி சங்கல்ப மாத்திரத்தால் காரியத்தை முடிக்கும்; ஞானசக்தி தத்துவார்த்தத்தை யுணர்ந்து, தத்துவமாத்திரமாக நின்று காரியத்தைமுடிக்கும். கிரியாசக்தி காரணகாரியமறிந்து கிரியா மூலமாய்க் காரியத்தை முடிக்கும். இம்மூன்றும் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண தேகங்களை உபாதியாகக்கொண்டு தத்தம் சக்தியைக்காட்டும். இம்மூன்றும் ஒத்திருந்தால் அதுவே பூரணசக்தி, அவர்கள் வல்லமைக்கு அளவில்லை. அந்தவல்லமையுள்ள வாக்கு எதுவானாலும் அது பாஷையில் பூரணமானதென்றுசொல்லத்தகும். அப்படிப்பட்ட பூரணத்துவம் தமிழுக்குண்டு. ஆகையால் தான், அதுஎந்தப்பாஷைக்கும் இரண்டாவதானதல்லவென்று சொல்லப்படுகிறது.

“தொண்டர் நாதனைத் தூதிடவிட்டதும், முதலையுண்டபாலனை யழைத்ததும், எலும்பு

பெண்ணுருவாக் கண்டதும் (திருமயிலை 63-வர் உற்வச் சிறப்பின் ஐதிகம்இதுவே), மறைக்கதவினைத் திறந்ததும், தண்தமிழ்ச்சொலென்றால்,'' அதன்மஹிமைக்குக் குறைவுண்டோவென்று அதன் பெருமையைக் கொண்டாடுவோர் வீணரல்லர். தமிழின்சிறப்புஅபாரமானதே. மதுரையில் வீற்றிருந்த முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்ஆகியவித்வத்சங்கங்கள் நாவில் வழங்கிப்பெருமைபெற்றது தமிழ் என்றால் அதன் வித்வத்விசேஷத்துக்கும் குறைவில்லை: அப்பேர்ப்பட்டதமிழ்ப்பாஷையை இக்காலத்து யூனிவர்ஸிடிசங்கத்தார் மேற்பார்வையில் நடக்கும் வித்தையில் அலக்ஷியமாக விட்டு வருவது அழகாயில்லை. பரீக்ஷையில் நிறைய மார்க்கு வாங்கவேண்டுமென்று சொல்வதில் பிரயோசனமில்லை. தமிழில்நினைத்துத் தமிழிலுதிக்கும்எண்ணத்தை தமிழில் தெளியக்கூறும் சக்திவாய்ந்தாலன்றி தமிழ்ப் படிப்பு படிப்பாகமாட்டாது. இனி இத் தாய்பாஷையை நாம் நன்குபயிலவேண்டியதைப்பற்றித் தமிழபிமானியொருவர் நமக்கெழுதியுள்ளதின் கருத்தைக் கீழேவெளியிடுவோம்.

"நம்மை ஈன்றதுந்தமிழ், வளர்த்ததுந்தமிழ், தாலாட்டிச் சீராட்டி யுறங்கவைத்ததுந் தமிழ். நம் மழலைச் சொல்லால் நம்மைப்பெற்றோரையகமகிழச்செய்ததுந்தமிழ், இளமைப் பருவத்தில் பேசத்துவக்கும்போது முந்தியுச் சரித்ததுந் தமிழ். நம் தாயும் தந்தையும் நமக்குப் பாலோடும் புகட்டினதுந் தமிழ். அன்னை, பிதா, குரு முதலானவர்கள் முதலில் நமக்குபதேசித்ததுந் தமிழ். இப்போது நமது மாதாபிதாக்கள், பந்து ஜனங்கள் மித்திரர்கள்முதலிய யாவரும் பேசுகிற பாஷையுந் தமிழ். நம்வீட்டுப்பாஷையுந்தமிழ்.நம்நாட்டுப் பாஷையுந் தமிழ். இத்தகைய சிறப்புவாய்ந்த நந்தமிழ்ப்பாஷையை விட்டுவிட்டு ஏனைய பாஷைகளைக்கற்கிறவர்கள் உறவினர்களைக். கைநழுவவிட்டுவிட்டு அந்நியர்களிடம் நட்புக்கொள்ளுகிறவர்களுக்கொப்பாகிறார்கள். ஆபத்துக் காலத்திலுறவினர்கள் உதவுவார்களே யல்லாமல் அந்நியர்கள்எவ்வாறு உதவார்களோ அவ்வாறே நமது சொந்தபாஷை யுதவுமேயல்லாது ஏனைய பாஷைகளுதவா. சமஸ்கிருதமும் அதிக சிறப்பும், அழகும், அலங்காரமும் வாய்ந்த பாஷை யெனக் கூற ஐயமில்லை. காலமுள்ளவர்கள் சொந்தபாஷையுடன் ஏனைய பாஷைகளைக் கற்கின் அதிக நன்மைதான். சொந்த பாஷையை ஐயந்திரிபறக் கற்காமல் மற்றைய பாஷைகளிலே கண்ணுங்கருத்துமாயிருந்து காலத்தை யெல்லாம் போக்குவது பொருந்தா விஷயமென்றே கூறத்துணிவோம்.

"இங்கிலீஷ், பிரஞ்சு முதலிய ராஜபாஷைகளைக் கற்கவேண்டாமெனக் கூற நாம் முன்வரவில்லை. ஏனெனில், நாம் நடந்துகொள்ளவேண்டிய சட்டதிட்டங்களும் ஏனைய முறைமைகளும் ராஜபாஷைகளிலேயே இருக்கின்றமையான் அப்பாஷைகளை நாம் கற்காவிடின் அந்த ராஜாங்கத்திலிருந்து காலந்தள்ளுவது சாத்தியமானகாரியமல்ல. அல்லாமலும்அரிய பெரிய விஷயங்களடங்கிய அநேக கிரந்தங்கள் அப்பாஷைகளிலேயே இருக்கின்றன. நாம் அவைகளைக் கற்குந்தோறும் நம்மறிவு விசாலமாகுமென்பது திண்ணம். ஆயின் மாதா வயிறெறிய மகேசுவரபூஜை செய்வதையொப்பச் சொந்தபாஷையை முற்றிலுமே விட்டுவிட்டு அப்பாஷைகளைமட்டும் கற்பது தர்மமா? சொந்தபாஷைகளிற் கையெழுத்து கூடப்பிழையின்றிப்போட சக்தியற்றவர்களாயிருக்கின்றனர் அநேகர். சிலர் தமிழ்ப்பாஷையைக் கற்காமலிருப்பது கௌரவமென்றும், தமிழ் மொழியான் வார்த்தையாடின் அவமானமென்றும் கருதுகின்றனர். இவர்களை யாம் என்னென்றுரைப்பேம்? சுயபாஷாஞானம் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகவிருக்கிறதோ அவ்வளவக்கவ்வளவு ராஜபாஷைகளில் விற்பன்னர்களாயிருக்கிறார்களென ஜனங்கள் கருதுவார்களென்றே அலட்சியஞ்செய்கிறதாகக் கருதுகிறோம். அன்னோர் தமிழ்ப் புத்தகங்களைக் கையிலெடுப்பதென்றால் நல்ல பாம்பிருக்கும் புற்றுக்குள் கைவிடுவதுபோலவும், தமிழ்ப்பாஷையில் வார்த்தையாடுவதென்றால் வேப்பிலைக்கிஷாயமுண்பதுபோலவும், தமிழ் வார்த்தைகளைக்கேட்பதென்றால் அளிந்த புண்ணிலம்புருவியதுபோலவும், எண்ணுகின்றனர். தமிழ்ப்பாஷையிலேயே பேச சமயம் வாய்க்கின் முக்காற்பங்கு இங்கிலீஷுங்காற்பங்கு தமிழுமாகக் கலந்து மொழிகின்றனர். இத்தகையோருக்குத் தேசாபிமானமும் பாஷாபிமானமுமில்லையெனக்கூற ஆட்சேபனையுண்டோ? இங்கிலீஷ்காரர் முதலிய ஐரோப்பியர் தங்கள் தங்கள் சொந்தபாஷைகளில் எவ்வளவோ கவனஞ்செலுத்தி வருகிறார்களென்பது நமது வித்தியார்த்திகளே நன்குணர்வார்கள். கல்விச்சாலையில் கல்வி பயிலும் மாணுக்கர்களிலநேகர் தமிழ்ப் பாடத்திற்காக வரையறுக்கப் பட்ட நேரத்தில் அப்பாஷையை யோதாது அசட்டைசெய்து வெளியேபோய் உல்லாசமாக காலங்கழிக்கின்றனர்." ஸ்வபாஷாபிவிர்த்தியைப்பற்றி யூனிவர்ஸிடி சங்கத்தார் சிரத்தைக் கொள்ளவேண்டியது அவசியமே.



பின்னுந் தமிழின் மகிமையை யெடுத்துரைப்பான் நமது நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"இராஜசபையின் கண்ணே, சமஸ்தான வித்துவானின் செருக்கினால் காளமேகப்புலவருக்கு ஆசனங்கொடா திருப்பதைநோக்கிய விப்புலவர் நின்ற நிலையிலேயே சாரதையைத் தியானித்து அவள்பேரில் வெண்பாவினால் ஒரு சரஸ்வதிமாலை பாடினர். இருபத்தொன்பதாம் பாட்டுப்பாடி முடிக்கவே அரசன் வீற்றிருந்த சிங்காதனந் தெய்வாதீனமாக நீண்டு இடங்கொடுக்க வதிலே இவர் பலரும் அதிசயக்க வேறியமர்ந்தனர். உடனே,

"வெள்ளைக்கலையுடுத்தி வெள்ளைப்பணிபூண்டு
வெள்ளைக்கமலத்துவீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தி லரசனோ டென்னைச்
சரியா சனத்துவைத்த தாய்."

என்று முப்பதாஞ் செய்யுளைப் பாடி முடித்தனர். பண்டைக் காலத்தில் தமிழ்ப்புலவர்கள் அடைந்த கீர்த்திக்கும் புகழுக்கு மளவில் படிக்காசுத்தம்பிரான் பாடுஞ்செய்யுளுக்குச் சிவபெருமானே மகிழ்ந்து அவருக்கு வேண்டிய பொருள் கொடுத்துவந்தா ரென்றால் இவரின் பெருமையை இதை வாசிக்கும் வித்தியார்த்திகளும் கனவான்களும் அறிந்து கொள்ளட்டும். தமிழ் நூற்களையே ஏறெடுத்துப் பாராதவர்கள் அவைகளுக்கு எவ்வாறு குறைகூற வியலும்? சங்கப்பலகையே முழுமவளர்ந்து இடங்கொடுத்த திருவள்ளுவரின் திருக்குறளை யொப்ப நூல் எப்பாஷையினும் இல்லையென்றே கூறத்துணிவோம். இந்நூல் இக்காலத்தில் ஆங்கிலம் ப்ரெஞ்சு முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், தெலுங்கு முதலிய இந்திய பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இதன் அளவிடாப்புகழை அன்னோர் அறிவார்களா? கம்பசூத்திரமென ஜனங்கள் மெச்சிப் புகழ்கின்ற கம்பன் வாக்கைக் கனவிலுஞ் செவிமடுத் திருப்பார்களா? வைகையாற்றின் நீரோட்டத்தைபெதிர்த்துச் சென்ற ஏட்டிலுள்ள செய்யுளடங்கிய நாலடியாரைக் கண்ணாரக் கண்டிருப்பார்களா? ஔவை யாரின் நீதி நூலை நன்கு அறிவார்களா? சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி முதலிய பஞ்ச காவியங்களின் பெயரைத்தான் தெரிந்திருப்பார்களா? அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து முதலிய நூல்களிருக்கின்றன வென்றாகிலும் அறிந்திருப்பார்களா? அகத்தியத்தின் வழிநூலாகிய 'தொல்காப்பியம்' எனும் தமிழ் இலக்கணம் எனு நூலுண்டென் றுணாந்திருப்பார்களா?

இன்னும் எண்ணிலாத் தமிழ்ப் புலவர்களுடைய பிரபந்தங்களை இவர்கள் எக்காலத்திலும் கண்டிரார்கள்.

"ஆகையான் நம்நாட்டு வித்தியார்த்திகள் தமிழ் மொழியைச் சிறிதேனும் இகழாமல் ஒழுங்காயும் முறையாயுங் கற்றுவரல்வேண்டுமென்பதே நங்கொள்கை. தமிழ் எனும்பதத்திற்கு இனிமையெனப்பொருள் உள்ளதால், இனிமையென்னும் பதத்தைச் செவிமடுக்க நமக்கு இன்பமுண்டாகின்றமையான் இப்பொருளைத் தாங்கிய இப்பாஷையை நாம் பொன்னேபோல் போற்ற வேண்டாமா?"

❀ ❀ ❀

## "FREE FROM BONDS"

(THE AUTOBIOGRAPHY OF A TALUQGUMASTAH)

### * அவிழ்த்துவிட்டகழுதை.

(ஒரு தாலுக்கா குமஸ்தாவின் சரித்திரம்.)

நான்கலியாணிக்கு எழிதினகடிதம்இது:—"என் அருமைக்கலியாணிக்கு அநேக ஆசீர்வாதம். உன்கடிதம் எனக்குச் சந்தோஷம் கொடுத்ததேயொழிய என்னுடைய சித்திரம் எனக்குச் சந்தோஷம் கொடுக்கவில்லை. நான் இப்பொழுது எங்கிருந்து எழுதுகிறேன் தெரியுமா? ஆற்றங்கரையில் இருக்கிறேன். சுற்றியிருக்கும் மரங்களும் பக்ஷிகளும் இந்தப் பைத்தியகாரன் இந்த வேளையில் இந்த இடத்தில் என்னசெய்கிறான் என்று ஆச்சரியப்படுகின்றன. காற்றுங்கூட இவன் என்ன செய்கிறானென்று கவனித்துக்கொண்டு நிச்சப்தமாயிருக்கிறது. என் மனதிலிருக்கும் வருத்தத்தை உன்னிடத்திலும், உனக்குப்பிறகு இந்தக்காவேரியினிடத்திலும்தான் வாய்திறந்து சொல்லுகிறேன். இரவில் தூக்கம் வருகிறதில்லை. ஜனங்களுடைய கூட்டத்தில் போகப் பிரியமில்லை. எதைநினைத்தாலும் பயமும் ஏக்கமுமாயிருக்கிறது. உனக்குக் கலியாணம் வரப்போகிறதாயும் அதற்கு நான்க் வரவேண்டுமென்றும் மணியன் எழுதியிருகிறான். உனக்கு வரப்போகிற புருஷன் பி.ஏ. பரீக்ஷைதேறி இருக்கிறாராமே. நீ நல்ல அதிர்ஷ்டசாலி! நீ தீர்க்காயுசுடையவளாய் துக்கமேயறியாதவளாய் குழந்தைமனம் மாறாதவளாயிருக்கவேண்டுமென்று கடவுளைப்பிரார்த்திக்கிறேன். நான்இக்கடிதத்தில் ஏதாவது அசட்டுத்தனமாய் உளறியிருந்தால் இதைப் பார்த்தவுடன்கிழித்து விடுவாயானால் என் மனதுக்கு திருப்தியாயிருக்கும். உன்னைக்கலியாணத்தில் யதார்த்தத்தில்நித்திய கலியாணியாய் விளங்கப்பார்க்க விரும்புகிறேன்." என் வேண்டுகோளுக்கு விரோதமாகக் கலியாணி இக்கடிதத்தை மேற்சொன்ன படத்திற்குப் பின்புறத்தில் காப்பாற்றி வைத்திருக்கிறாள். இப்பொழுது என்னை எதற்காவது பரிஹாஸம் செய்யவேண்டுமானால் அக்கடிதத்தை எடுத்துக்காட்டுவாள். உடனேஎனக்குவெட்கமாகிவிடும். கலியாணியின்புருஷனைநேரில்பார்த்தபொழுது எனக்குஉண்டான திருப்தியால் என்துக்கம் கொஞ்சகாலம் தலையெடுக்காமல் ஒருவாறு மறைந்திருந்தது. கலியாணமான பிறகு கலியாணி எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டாள். அந்தக்கலியாணத்தில் மணியனைப் பார்த்தேன். குடித்தனத்துக்கேற்ற பிள்ளையாய் நிலங்கள் சாகுபடியைக் கவனித்துக்கொண்டு பெட்டி வண்டி ஒட்டிக்கொண்டும் உடர்ந்த ஜாதிமாடுகளை வண்டியில் பழக்கிக்கொண்டு மிருக்கிறான். வீட்டுவேலைக்காரர்களுக்கும் குடியானவர்களுக்கும் இவனைக்கண்டால் பயம். அவன் தகப்பனார்கூட அவனைக்கேளாமல் ஒரு காரியமும் செய்யமாட்டார். அவனைப்பார்த்து "அப்பா, உன்பாடு சௌக்கியம்" என்று சற்றுப் பொறாமைப் பட்டவன்போல் சொன்னேன். அதற்கவன் "இந்தத்தொழிலுக்கு ஒருநாளுங் குறைவில்லை. ஒருபாபமுமில்லை. மேழிச்செல்வங் கோழைபடாது. வேறென்ன செய்தாலும் செய்யாவிட்டாலும் மனிதனாய்ப்பிறந்தவன் சாப்பிட்டே தீரவேண்டும். அதற்கு வேண்டியதைச் செய்தேதீரவேண்டும். நான் என் ஆள்களை எப்படி வேலைவாங்குகிறேன் தெரியுமா? அவன் ஒருவட்டு வைக்கோலைத் தூக்க முடியாதென்று சொன்னால் உடனே நான் அதைத்தூக்கி அவனை அவமானப் படுத்துவேன். அப்புறம் அவன்நாய்போல் வேலைசெய்வான். நான் ஆள்களோடு கூட அரிவாள் பிடித்து அறுப்பேன். எனக்கு அது வேடிக்கையாயிருக்கும் அவர்கள் சாமிசாமி நீங்கள் ஏன் வெய்யிலில் கஷ்டப்படுகிறீர்கள்? எங்களுக்குத்தான் தலையெழுத்து. நீங்கள்கரையேறுங்கள்" என்று என்னை வேண்டிக்கொள்வார்கள், என்று முடித்தான்.

*தன்னையறிந்து தன்வழியில் பிரவேசிக்கும்மனோ தர்மசக்தி நடையறியாது.

❀ ❀ ❀

## "BRIDEGROOM—HUNTING" OR, THE LOST IDEAL.

### "மாப்பிள்ளை தேடல்"

அல்லது

### காணமற்போன கட்டழகன்.

(ஸ்ரீஸத்யானந்த சாந்த சர்மா எழுதியது)

### II. திருமண நோக்கம்.

"மணமெனப்படுவது மங்களாகாரமே."*

"விவாஹம்", ஆண்பிள்ளைகளுக்கு பிரஹ்மசரியம்போல் பெண்களுக்கு இந்திரிய நிக்ரஹத்துக்குரியதோர் பிரஹ்மசரியத்தையொத்த ஆத்மஸம்ஸ்காரமாம் என்று சொல்லி முதற்பாகத்தை முடித்தோம். பிரஹ்மசரியம் என்றால் என்ன? பிரஹ்மத்தை ஆச்ரயித்திருப்பது பிரஹ்மசரியம். இந்திரியநிக்ரகம் செய்யாமல் ஆத்மாவை யாச்ரயித்திருப்பது கூடாமையால் சாதனையின் சிறப்பு சாதகத்தின்மேலேற்றப்பெற்று பிரஹ்மசரியமென்பது இந்திரியநிக்ரத்திற்கே சொல்லப்படுவதாயிற்று. இந்திரியநிக்ரகம் செய்தவனெல்லாம் பிரஹ்மத்தை ஆச்ரயித்திருப்பானென்று அருத்தமல்ல. இந்திரியங்களைவிட்டு நின்றால் அறிவு அந்தகாரத்தில் ஒடுங்கும். அதுவும் கடந்து அருள்வெளிப்பட்டாரே ஆத்மானுசந்தானம் செய்யக்கூடியவராவர். பண்டாசுரனுடைய பலத்தை யார் அறியார். ஆயினும் அவன் அசுரனே. பத்மாசுரனுடைய தவத்தையார் அறியார். ஆயினும் அவன் அசுரனே. அசுரபாவம் இந்திரிய நிக்ரகத்தால் விட்டுப்போகாது. ஆத்மானுசந்தானத்தாலேயே அது நீங்கும். ஆத்மானுசந்தானம் அருள்வெளிப்பட்டார்க்கே அமையும். இது விஷயமாய் ஒருகதையுண்டு. முன்னொருகாலத்தில் ரிஷிகள் தபஸிகள் எல்லாரும்கூடி பிரஹ்மசரிய விரதத்தில் சிறந்தவர் யார் என்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். கலியாணமானவர் ஆகாதவர் எல்லாரும் தானே பிரஹ்மசரிய விருதத்திற் சிறந்தவனென்று சொல்லிக்கொள்ள, இவர்களெல்லாம் வாது செய்துக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் மத்தியஸ்தத்திற்குப் போனார்கள்.

கார்மேகவண்ணன்பார்த்தான். இத்தனை தபசிகள் ரிஷிகள் முனிகள் குழாத்தில் இவர்களோடு வாதாடிச் செயிப்பது கூடாதென்பதை ஒருநொடியில் கண்டான். "வாயாலொன்றுமாவதில்லை" யென்பதினுண்மையை யுணர்ந்த கண்ணன் ஒரு யுக்தி செய்தான். அது என்னவெனில்:—

இங்கே வந்துள்ள வாதுக்காரர்களெல்லாரும் ஒரு சபதம் செய்துகொள்ளவேண்டியது. அது என்னவெனில், "நான் ஸத்யமாகவே பிரஹ்மசரிய விருதம்பூண்டவன்: இந்த விருதபங்கம் எனக்குண்டாயிருக்குமேல்என் தலை யற்று விழக்கடவது" என்று சபதம் செய்துகொள்ளவேண்டுமென்று சொன்னார். ஒவ்வொருவரும் அப்படியே செய்துகொண்

* மங்களாகாரமாம் - சுபஸ்வரூபமாவதுவேமணமெனப்படுவது என்பது பொருள்.

டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் பார்த்தான். கையி
லுள்ள சக்ரத்தை ஏவி இவர்கள் செய்து
கொண்ட சபதப்படி யாருடைய வாக்குத்திரி
கரண சுத்தியாய்ப் பொருந்தி யிருக்கவில்லை
யோ அவர்கள் தலையை யறுத்து வீழ்த்துக
என்றுவிட்டார். சக்கரம் அங்கிருந்து சபதம்
செய்துகொண்டவர்கள் ஒவ்வொருவரையும்
விடாது துரத்திப்பிடிக்க அவர்கள் ஓடியொ
ளித்து இல்லாத சமர்த்தெல்லாம் பண்ணியும்
அதற்குத் தப்பமுடியாமல் ஓடோடியும் வந்து
ஸ்ரீகிருஷ்ணன் காலில் விழுந்து நான் உண்
மையான பிரமச்சரிய மனுஷ்டித்தவனல்ல
வென்று உண்மையை ஒப்புக்கொண்டு, சத்தி
யத்தைச் சொன்னேம் தலை தப்பவேண்டுமெ
ன்று கேட்டுக்கொண்டார்கள். சபதம் பொய்
யாகி வாக்கிழந்தவர்களை வீணர்களென்று
விட்டொழிக வென்னவும் சக்கரம் கரகரவெ
ன்று ஆகாசத்தில் சுழன்றுகொண்டு நின்றது.
சக்கரத்தின் வேகம் அடங்கவேண்டியதின்
பொருட்டும் உண்மை வெளியாகும்பொருட்
டும், அங்கிருந்த தபசிகள் குழாமெல்லாம்
ஸ்ரீ கிருஷ்ணனைப் பணிந்து பின் யார்தான்
உண்மையான பிரஹ்மசரியனே வென்று
வினவ, கிருஷ்ணன் பதினாயிரத்துச் சொச்
சம் பெண்டிர்களை யனுபவித்தவனா
யினும் அவன் "நானே உண்மையான பிரஹ்
மசரியன். இல்லையேல் என் தலையும் அற்று
விழுக" வென்று சபதம் கூறி நின்றான்.
உடனே ஆகாசத்தில் சுழன்றுகொண்டிருந்
த சக்கரம் அவனை நோக்கி அதிவேகமாய்ச்
சுழன்று வந்து அவன் காலடியில் அதன்
வேகமெல்லாம் ஒடுங்கி அடங்கி ஒய்ந்து
விழுந்தது. இதைப்பார்த்து எல்லாரும் ஆச்
சரியப் பட்டார்கள். ஆகையால் பிரஹ்ம
சரியமென்பது ஸர்வாந்தர்யாமியாயும் ஸர்வ
வியாபகராயுமிருக்கிற பிரஹ்மத்தை எக்
காலத்தும்எச்செய்கையிலும் இமைப்பொழு
தும் மறக்காதிருத்தற்கே சொல்லற்பாலதாம்.
"அறிவேபிரஹ்ம மென்றாதாது சங்கே" யெ
ன்றபடி அறிவேபிரஹ்மமாக, போகத்திலும்
கர்த்திருத்துவ போக்திருத்துவசிந்தை யற்று
நிற்க, அதனால் அறிவு மழுங்காதிருப்பதே
பிரஹ்மசரியமாம். அறிவு சுத்தவெளியானால்,
அருள் என்பது ஒளி; மாயை அல்லது இருள்
என்பது அறியாமை, மூடம். மருள் அல்லது
மயக்கம் என்பது ஜீவன். அருள்வெளியிலுள்
ளவனை இருளும் மருளும் நெருங்கிப்பீடிக்
காது. ஆகையால் அருட்பேறு பெறுதலே
பிரஹ்மசரிய விருதத்தின் பூரணமாம். பிரஹ்
மசரியம் நிலைத்து விட்டால் பிரஹ்மவித்தாய்
விடுகிறான். பிரஹ்மசரியம் நிலைக்காது நிலைதடு
மாறினால் அப்பொழுது அவ்விருதத்தைப்
பூர்த்தி செய்துகொள்ளுமாறு இல்லறம்நடத்
தக்கருதி விவாஹம்செய்கிறான். இல்லறத்துக்
கும் காமவிகாரத்துக்கும்வெகுதூரம். "Thou
shalt not look upan a woman with last"
என்று யேசுகிறிஸ்து சொன்னது பிரஹ்மசரி
யவிருதத்தின் உட்கருத்தை வெளியிட்ட
தன்றி வேறல்ல. புருஷன் தர்மபத்நியையும்
காமக்கண்ணால் பார்க்கலாகாது. மிருகப்பிரா
யமான மனிதனே காமாதுரனாகிறான். மனித
ப்பிராயமானவன் காமநுகர்வது காமவசப்
பட்டுக் காமாதுரனாகவில்லை. ஆனால் காமநு
கர்ச்சியால் காமத்தின் ஸ்வரூபத்தை யறிந்து
அதையறிந்த அறிவால் அக்காமத்தைச் செயி
த்து அதன் கட்டுங் கடந்தவனாகவேயாம்.
திருமூலர் திருமந்திரோபதேசத்தில்

> "அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
> அஞ்சு மடக்கு ம்மரரும் அங்கில்லை
> அஞ்சு மடக்கில் அசேதனமா மென்றிட்டு
> அஞ்சு மடக்கா அறிவறிந் தேனே."

யென்றுசொல்லியிருக்கிறார். "அஞ்சு மடக்கா
அறிவுஇல்லறத்திலிருந்தன்றி மற்றப்படி அறி
யக்கூடியதல்ல. ஆசாரிய மூர்த்தமான ஸ்ரீமத்
பகவத் பாத சங்கராசாரியரவர்களும் பரகா
யப் பிரவேசம் செய்து காமநுகர்ச்சி கண்ட
பின்னரே காமத்தின் இயல்பைக்கண்டறிந்து
பாரதீ தேவியை வாதில் வென்று காமகோடி
பீடமென்று சொல்லும் ஸாரதாபீடத்தை ஸ்



தாபிக்கலானார். அறிவு பூரணமாக சுருதி
யுக்தி, அனுபவமென மூன்று பிரமாணங்க
ளாலும் அதை யறியவேண்டும். சுருதிக்கு
ஒத்துவராத அனுபவம் ஆரோப அபவாத
குற்றங்களுக்கிலக்காகும். யுக்திக்கு ஒத்து
வராத அனுபவம் "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு
தவாது" என்று சொல்கிறபடி சமயத்தில்
மோசம் செய்யும். அப்படியே அனுபவமில்
லாத சுருதி யுக்தி ஞானம் காரியத்துக்குத
வாது கானற்சலம்போல் மயக்கத்தைக் கொ
டுக்கும். எதையும் அறிந்தனுபவித்துப்பார்
த்து அதன் உண்மையறிந்தாலன்றி விரக்தி
பற்றி யதை விட்டொழித்தல் கூடாது. "கள
வும் கற்று மற" என்று சொல்லிய ஆப்தவாக்
கியத்தின் உள்ளக் கருத்து இதுவேயாம்.
ஆகையால் விவாஹம் உயர்குலப் பெண்க
ளுக்கு இந்திரிய நிக்ரஹத்துக்குரியதோர்
ஆத்ம ஸம்ஸ்காரமாமென்றதில் முன்னுக்
குப் பின் முரணான அருத்தம் ஒன்று
மில்லையென்று இதைவாசிப்போர் இப்பொ
ழுது உணர்ந்து கொள்ளக்கூடும். இது நிற்க.

இனி திருமணம் என்றால் என்ன? அதன்
நோக்கம் என்ன? என்பதைப்பற்றி விசாரிக்
கப் புகுவாம். "மணமெனப்படுவது மங்களா
காரம்" என்றதையெடுத்துக்கொண்டு அதன்
அருத்தம் என்னவென்றுபார்க்கில், திருமண
த்தின்ஸ்வபாவம் விளங்கும். மணம் என்றால்
வாசனை, சுபவாசனைக்கே முக்கியமாகச் சொ
ல்கிறது. திருமணம் என்றால் சுபவாசனையை
யொட்டிவரும் புனிதஸம்ஸ்காரமாம் வாசனை
யைக்கிரஹித்தல் அல்லது சேர்ந்தனுபவித்
தல் என்பதுபொருளாம். ஆத்மாவுக்கு ஆண்
என்றும் பெண் என்றும் விகாரமில்லை. அது
நிர்விகாரமானது. ஆனால் அது தோன்றும்
பொழுது ஆண், பெண், அலியென திரிவிகார
மாகத்தோன்றுகிறது. ஆணும்பெண்ணுமற்ற
தாய் ஆண்பெண்ணிரண்டுக்கும் பொதுவாய்
இரண்டின் குணமுமற்று விளங்குவது அலி
யாதலால், அதைத்தள்ளி ஆண், பெண் என்
கிற இரண்டுபால் வேற்றுமையைமட்டும் எடு
த்துக்கொண்டு பார்த்தால், இவ்விரண்டும்
ஒன்றையொன்று ஆச்ரயித்திருப்பது விளங்
கும். ஆணில்லாமற் பெண்ணில்லை; பெண்ணி
ல்லாமல் ஆணில்லை. அப்படியிருக்க ஆணும்
பெண்ணும் உற்பத்தியானது எப்படி? பிரம்
மா சிருஷ்டிக்குங்காலத்தில் அவனுடையசிரு
ஷ்டிகளெல்லாம் பிரஜாவிருத்தியை யுண்டு
பண்ணாதிருக்கக்கண்டு, கோபத்தினால் ஆக்
ரோஷித்து மறுபடியும் சிருஷ்டி செய்ய யத்
தனித்தபொழுது அவன் புருவமத்தியிலிருந்
துண்டான கோபாக்னியிலிருந்து ஆண்பாதி
பெண்பாதியான உருவமைந்த நீலலோசன
னைப் பெற்றானென்று சொல்லப்பட்டிருக்கி
றது. ரஜதமோகுணங்கள் சேர்ந்துற்பவி
த்த இந்த நீலலோசனன், பரமேஷ்டியின்
ஆக்ஞைப்படி, ஆண், பெண் இரண்டு
ங்கூடிய தன்னுருவத்தை ஆண் வேறு பெ
ண் வேறாகப் பிரித்தான். ஆண் பாகத்
திலிருந்து ஏகாதசருத்திரரென்று சொல்
லும், தசேந்திரியங்களும் மனசும்சேர்ந்த 11
இந்திரியங்கள் வலுத்த ஆண் சிருஷ்டியும்;
வேறு பிரிக்கப்பட்ட பெண் பாகத்திலிருந்து
புவன போகாதி போக்கியாருகமான பெண்
ரூப பிராகிருத சிருஷ்டியும் உண்டாக, இவ்
விரண்டின் சேர்க்கையால்பிரஜாவிருத்தியுண்
டாகத்தலைப்பட்டது. ஆகையால் பெண்ரூப
சிருஷ்டியான போக்கியாருகமான வஸ்துவை
ப்பெற்றவன், அதைப் போகித்துய்வானான
புருஷனைத்தேடி அவனை உடைமைக்காரனாக
வெண்ணி அவன் வசம் கன்னிகையை ஒப்பு
விக்கவேண்டும். ஆகையால்திருமணநோக்கம்
ஜீவசிருஷ்டியின் மர்மமறிந்து, ஜீவ மயக்கம்
தீர்ந்து சிவயோகம்துய்க்கவென்பது சொல்
லாமே அமையும். சிவம்என்றால் சுபம். மங்க
ளம் என்பது பொருள். மங்களாகாரமாயிரு
ப்பது சிவஸ்வரூபம். தேஹோஹ பாவமுடை
யஜீவன் பிரஹ்மசரிய ஆச்ரமதீக்ஷையால் இந்
திரியநிக்ரஹம் செய்து பிரஜ்ஞானம் பிரஹ்
மம் என்னும் மஹாவாக்கியத்தின் உண்மை
யையுணர்ந்து, அறிவுமயமாயிருக்கும்இந்தப்

பிரபஞ்சத்தில் தான் யார்? எங்கிருந்து வந்தவன்? எங்குபோமவன்? என்று தன் வரத்துப்போக்கு ஸ்வபாவத்தைப்பற்றி விசாரிக்கும்பொழுது, ஆண்தேஹ மெடுத்த அவசரத்தில், தனது பெண்பாதியான தேஹத்தை மனோபாவ மாத்திரமானதாக விட்டுமுதிரவிடாத காரணத்தினால், அவன் தனது அர்த்த சரீரமான பெண் பாகத்தை முதிரச்செய்து, அஃதோடு பேதமறக்கலந்து இரண்டும் ஒன்றாயமர்வதை யுண்மையிலுணர்ந்து அதன் உள்மர்மத்தை விசாரித்து, விசாரஞானத்தால் அனுபவஞானம் முதிர்ந்து தெளிவுற,சுருதியுக்தியனுபவரீதியாகஆணும்பெண்ணும்அபேதமாய்க்கலந்துநின்றநான், "அஹம் பிரஹ்மாஸ்மி" என்கிற மஹாவாக்கியத்துக்கிலக்காயிருப்பதைகிரமக்கிரமேணஉள்ளபடியுணர்கிறான். உணர்ந்தவன் தான் கடைத்தேறினதுபோல் தனது அர்த்தபாகமாகிய தர்மபத்னியையும் ஸம்ஸாரஸாகரத்தினின்று கரையேற்றுவான் மறுபடியும் பெண்ணுருவாயிருந்து தத்துவ விசாரம்செய்து உண்மையுணர்ந்தபின், தன்னைப்போல், அவளையும் பிரஹ்ம ஸ்வரூபமாகவேயுணர்ந்து, தான் உள்ளத்துணர்ந்ததையுணர்த்தி அவளைக்கரையேற்றுமாறு "நீயும் அதுவாயிருக்கிறாய்" என்று "தத்துவமஸி" மஹாவாக்கிய உண்மையைப்போதிக்கவல்லவனான ப்ரபோதஸ்வரூபனாகிறான். இருவரும் கரையேறுமுன் பிரம்மா விட்ட கட்டளைப்படி பிரவிருத்திமார்க்கத்தையனுசரித்து வந்ததில் சந்ததிவிர்த்தியாகி உலகப்பற்றுமுற்றும் விட்டதாயிருக்கக்கண்டு, இக்குழந்தைகளும், பசுநிரைகளும்,தனதானியாதி குடும்பங்களும் எத்தன்மையதென்று விசாரிக்க அவையனைத்தும் பிரஹ்மமேயென்றுணர்ந்து "அயமாத்மா பிரஹ்மம்"—இந்த ஆத்மாவெல்லாம் பிரம்மமயமானதேயென்றுணர்ந்து அந்த உண்மையை பிரம்மசரிய தீக்ஷையினால் தன் புத்திரர்களுக்கும் விவாஹ ஸம்ஸ்காரவிதியினால் தன் புத்திரிகளுக்கும் உபதேசித்து அவர்களை தீக்ஷாயுக்தர்களாகச் செய்து சன்மார்க்கத்தில் ஸ்தாபித்து சிஷ்டாசாரத்தை யனுசரித்து அவர்களும் சிவசாம்பிராஜ்யத்தை யடையும்படியான மார்க்கத்தைக்காட்டித் தன் கடமையெல்லாம் செய்து தீர்ந்தபின், எஞ்சியுள்ள பிராரப்த கர்மங்களைப் புசித்து அவையும் அனுபவித்துத் தீர்ந்தபின் நைஷ்கர்மசித்தியுண்டாக,தேஹத்தோடிருந்தாலும், தேஹம் கழன்று போனாலும், பிரஹ்மத்தோடு ஒன்றாய்க் கலந்து விதேஹ கைவல்யனாய் விளங்குகிறான். ஆகையால் "மணமெனப்படுவதுமங்களாகாரமே" யென்ற மந்திரத்தின் பொருள் இல்லறத்தை யனுசரித்து நல்லறம் செய்து புருஷார்த்தங்களை யனுபவித்தபின் ஸ்வாத்மாராமனாய் ஆனந்த பூரிதனாய் விளங்குமங்களாகாரமாகத் தன்னையறிவதற்குச் சாதகமாயிருப்பதெதுவோ அது மணம் எனப்படுவது. "இல்லறமல்லது நல்லறமல்ல" என்று சொன்ன ஆப்த வாக்கியத்தின் உண்மைபற்றி அந்த மணத்தின் சிறப்பை யுணர்த்தவும் அது புநித ஸம்ஸ்காரமேயன்றி காமவிகாரமல்ல வென்று விளங்கவும் அஃதைத் "திருமணம்" எனச் சிறப்பித்துக் கூறினதாம். மாப்பிள்ளையழகும், மணத்தின் பெருமையும் இப்படியாக, "மாப்பிள்ளை தேடல்" என்னும் சாமான்யப் பெயரைக் கொண்டு விவாஹத்தின் அந்தர் லக்ஷியமாம் 'காணாமற்போன கட்டழகன்" இலக்ஷணங்களைக் கூறுவோம். சாமர்த்திய முள்ளவர்கள் அவனைக் கண்டுபிடித்துக்கொள்ளட்டும்.

---

NEW BOOK BY
SWAMI VIVEKANANDA
**INSPIRED TALKS**
280 PAGES 2 ILLUSTRATIONS
**CLOTH BOUND Rs. 2**
PUBLISHED BY
THE RAMAKRISHNA MISSION,
*Mylapore, MADRAS.*



## PRACTICAL HINTS ABOUT WATER.

### அனுபவமுறை.

### தண்ணீரைப்பற்றி.

தண்ணீர் சுத்தம்:—பம்பாயில் கூடிய மெடிகல் காங்கிரெஸ் சபையில் டாக்டர் கே. இ. தாதாகாஞ்சி என்னும் பார்ஸி டாக்டர் குடிதண்ணீரின் சுத்தத்தைப்பற்றி இரண்டுவியாஸம் எழுதி வாசித்தார். குடிதண்ணீரின் சுத்தத்தை யறியும்பொருட்டு ஜலபரீக்ஷை செய்யும் ரஸாயனபரிசோதகர், தண்ணீர் ரஸாயன பரீக்ஷையினால் மட்டும் சுத்தமாக விருக்கிறதென்று பார்த்தால்போதாது. அஃதோடு கூட,

(1) தண்ணீர்த்துறை அல்லது தண்ணீர்க்கேணியின் சுற்றுப்பக்கங்களின் நிலவளம், தரையின் சுத்தம் முதலான விஷயங்களைக் கவனிக்கவேண்டும். "தண்ணீர்நிலநலத்தால்" என்பதை மறக்கவொண்ணாது.

(2) தண்ணீர் ஆகாசத்திலிருந்து விழுந்து ஊற்றுக் கண்களாகச் சேரும் நிலத்தின் ஸ்வபாவத்தையும், மேல் தரையின் சுத்தத்தையும் கவனிக்கவேண்டும். "தீர்த்தக்கரைகளில் அசுத்தத்துக்கிருந்து அசுத்தஞ்செய்கிறவன் மஹாபாதகனாகிறான்" என்கிற ஸநாதனதர்ம விதியை இக்காலத்து நாஸ்திகமத நாகரிக புஞ்சங்கள் கவனிப்பதில்லை.

(3) குடிதண்ணீர், சிற்றாறு, வாய்க்கால் முதலியவைகளினின்றெடுத்துவரப்பட்டால்அதன்கரைகள் இருபக்கமும்சுத்தமாயிருக்கிறதா? அதைச் சுற்றியுள்ள ஜனங்கள் அதை அசுத்த விஷயத்துக் குபயோகப்படுத்திக் கெடுத்து வருகிறார்களாவென்று பார்க்கவேண்டும்.

* * *

இங்கிலாந்திலுள்ள லோகல்கவர்ன்மெண்ட் போர்டுக்கு சுகாதார இலாகாத் தலைவராயிருக்கும் டாக்டர், தாரன் என்பவர் இவைகளைக்கவனிக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றிப் பின்வருமாறு தமது அபிப்பிராயத்தைத் தீர்க்கமாய் தெரிவித்திருக்கிறார்:—

"ரஸாயன பரிசோதனையினாலும் வியாதி வித்துக்களான ஜீவ அணுக்கள் சம்பந்தமான பரிசோதனையினாலும்மட்டும் குடிதண்ணீரின் யோக்கியதையைப்பற்றி அபிப்பிராயம் கொடுப்பதில் பிரயோசனமில்லை. அந்தத் தண்ணீரின் உற்பத்தி ஸ்தானத்தின் நிலைமையைப் பற்றிச் சுகாதார வைத்தியர் நேரில்பார்த்துப் பரிசோதித்தறிந்தபின்னே அவர் அபிப்பிராயம் உபயோகப்படுவதாகும்."

(1.) இந்தியாவிலுள்ள குடி தண்ணீரின் குணாகுணங்களை, ஐரோப்பியதேசங்களிலுள்ள குடி தண்ணீரின் குணாகுண விசேஷங்களைக்கொண்டு நிர்ணயித்தல் கூடாமையாம்.

(2.) குடிதண்ணீரின் குணங்கள் இன்னவையென்று தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். இது பட்டண வாசங்களிலுள்ள ஜலாதாரங்களின் குணத்தைக்கண்டறியவேண்டிய வைத்தியர்களுக்கு வெகு சாதகமாம்.

(3.) ஜலபரிசோதனை செய்யுமவர்க்குக்குடிதண்ணீரின் மாதிரியனுப்புவதோடு, நீர்வாசி, நிலவாசி, அதைச் சுற்றியுள்ள ஜனங்களின் குணவாசி முதலிய இன்னும் அந்த ஜலத்தின் சுத்தாசுத்தத்தைப் பாதிக்கத்தக்க விவரங்களெல்லாம் பூர்ணமாய் தெரிவிக்கப்படல் வேண்டும்.

(4.) பரிசோதனைக்காகத் தண்ணீர் மாதிரிக்கு அனுப்புவதில், அனுப்புங்காலம் அதிகமாயிருக்கக்கூடாது. காலதாமதத்தால் தண்ணீரின்குணம் மாறிவிடலாம்.

* * *

அசுத்தத் தண்ணீரினால் விளையும் வியாதிகள்

அசுத்த நீரைப்பருகுவதனால்வரும் வியாதிகளில் 'கலரா' என்று சொல்லும் வாந்திபேதி முக்கியமானது. இது ஜனங்களை ஆயிரக்கணக்காக வாரிக்கொண்டுபோய்விடும். இந்தியா

தி முக்கியமாய் குடி தண்ணீரிலுள்ள தோஷத்தால் நேரிடுவதாயிருப்பதால், சிறு பட்டணங்கள் கிராமங்களில் இந்தக் கொள்ளைநோய் கண்டால், உடனே ஜலாதாரத்தைக்கவனித்து ஜனங்கள் குடி தண்ணீரெடுக்கும் கேணியில் "பெர்மாங்கனேட்ஆப் பொடாஷ்" என்னும் மருந்தை அதில்விசேஷமாகப் போட்டுக் காப்பாற்றவேண்டும். அந்த நீர் அசுத்தப்பட்டிருந்தால், அம்மருந்தின் நிறம் அதில் பற்றாது. அசுத்தம் நீங்கினால் தண்ணீர் சிவப்புக்கலந்த மஞ்சள் நிறமாகவிருக்கும். இந்த நிறம் காண்கிறவரையிலும், கண்டு 12-மணி நேரம் நிறம் மாறாதிருக்குமளவும் அந்தமருந்து சேர்க்கவேண்டும். ஜீவ அணுக்களான க்ருமிகள் நிறைந்திருந்தால் ஜலத்தின் நிறம் மாறுவதில்லை: அவை செத்துப் போனால் பிறகு தண்ணீர் நிறம் மாறும்.

***

நிலவளம், நீர்வளம்.

மனிதன் வாசஸ்தானம் தேடும் பொழுது நிலவளம், நீர்வளம் இரண்டும் பார்க்கவேண்டும். நிலத்தின் வளம் நீர்நிலையால் பாதிக்கப்படுகிறது. உஷ்ணபூமியென்றும், சீதள பூமியென்றும், சுக்கான் தரையென்றும், களிமண் தரையென்றும் சொல்கிறார்கள். தண்ணீர் நிலநலத்தால் சோபிப்பதுபோல, நிலத்தின் குணமும், அதாவது பூசாரமும் ஜலவிசேஷத்தால் பாதிக்கப்படுகிறது. பூமியின் கீழ் நீர்வளம் ஜாஸ்தியாயிருந்தால், தேகாரோக்கியம் அதிகமாகவும், குறைந்திருந்தால், வியாதிமரணம் அதிகமாகவும் இருக்கிறது. இஃதை வருஷாவருஷம் தரையின் கீழுள்ள தண்ணீர் நிலையைப் பரிசோதித்துப் பார்த்து, நீர்வளம் நிறைந்திருக்கும் பொழுது 5-வயதுக் குட்பட்ட குழந்தைகளின் மரண சங்கியை குறைந்தும், நீர்வளம் குன்றிய பொழுது அதிகப்பட்டும் நிற்கக் காணப்பட்டதிலிருந்தும், வேறு சாஸ்திர ஸம்மதமான ஊகங்களாலும் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு ஸ்தலத்துக்கு மூர்த்தி, தீர்த்தம், க்ஷேத்திரம் என மூன்று வித விசேஷங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. க்ஷேத்திரம் நிலத்தின் வாசயோக்கிய விசேஷத்தைக் குறிக்கும்; தீர்த்தம் என்பது ஜலத்தின் ஸ்நாந பானதி மஹத்துவத்தைக் குறிக்கும். மூர்த்தி யென்பது பஞ்சதன் மாத்திரைகளில் ஒன்று விளங்கப்பெறும் தியானருகமான யோக்கியதையைக் குறிக்கும். பாலைவனத்தில் பேய்த்தேரைக் காணலாமேயன்றி பௌமிய, ஸௌமிய, ஸுகேசி மூர்த்தங்களைக் காணலரிதாம். ஆகையால் பூமாதேவி தாய் ஸ்தானத்திலிருக்கிறாளென்பது மதசம்மதமான உண்மையாயிருப்பதுபோல், மேற்றிசையார் சாஸ்திரப்படிக்கும் அது உண்மையேயாம். தாய்க்கு வரட்சிகண்டால், பிள்ளைக்கு அரிஷ்டம்தானே. ஐந்துவயது வரையில் குழந்தைகள் பூசாரத்தை விசேஷமாக ஆச்ரயித்து வளர்கிறபடியால் அவர்களின் மரண சங்கியை வேறுபடுகிறது.

***

அம்மைநோய் அல்லது மஹமாரி (Zymotic diseases) பித்தவாதசுரம் (typhoid).

சவக்குழிகள், சமாதி நிலங்கள் வழியாகச் செல்லும் ஊற்றுக்கண்களிலிருந்து சுரக்கும் நீர் ஸ்படிகம்போல் பளபளப்பாகவும், பிரகாசமாகவும், பார்ப்பதற்கு ரம்மியமாகவும் இருப்பது வழக்கம். சவங்களிலிருந்து விடுபட்ட 'நிட்ரஜன்' கலந்த லோகங்கள் அதிகமாயிருப்பதால், இத்தண்ணீர் அப்படியிருக்கிறது. மோஹினி ரூபம் கண்ணுக்கு ரமணீயமாயிருந்து சுகம் தருவதுபோல் ஆளையெப்படி உறுஞ்சி விடுகிறதோ, அப்படி இந்தத்தண்ணீரும் முகக்கண்ணுக்குச் சுத்தமாயும் ரமணீயமாயும் தோன்றி மிகவும் பொல்லாத கொடிய வியாதிகளை யுண்டுபண்ணும். இத்தண்ணீரைப்பருகுவதனால் அம்மை, கலரா, பித்தவாதசுரம்போரன்றரக்தத்தை முறிக்கும் கொடிய



வியாதிகளுண்டாகின்றன. வித்தைப்போலிருக்கும் டிரமுமாதலால், தேகம் கட்டுவிட்டுக் கலகலத்து அழுகிப்போனதால் விடுவிக்கப்பட்ட ஜீவஅணுக்களும் அவையிருப்பதற்கிடமான சடசத்துக்களும்நிறைந்த இந்த ஜலம் தேஹத்திற் புகுந்ததும் உஷ்ணத்தைக்கொண்டு உயிரை யழுக்கிப் பின்பு ரக்தத்தை முறித்து, தேஹத்தின் உறுப்புகள் கட்டுவிட்டுக் கலகலத்து அழுகிப்போகச் செய்கிறது. சுத்தோதகம் பிராணசக்திக் கிருப்பிடமாயிருந்து அமிர்தசஞ்சீவியாய் உதவுவதுபோல, இந்த அசுத்தஜலமாம் ஆலகாலத்தை யொத்த விஷநீர் நஞ்சாயிருந்து நாடியோட்டத்தைச் சிதைத்துப் பிராணனைப்பஞ்சுபட்டபாடு படுத்தி, தேஹத்தைஉயிரோடிருக்கையிலே யழுகிப் போகச்செய்கிறது. ஸம்ஹாரசக்தியே உடலிற் புகுந்ததுபோலுள்ள இந்த வியாதிகள் வந்தால் இரக்தம் முறிபட்டுப்போகிறபடியால் ஔஷதப்பிரயோகம் அவ்வளவாகப் பலிக்கிறதில்லை. ஆகையால் மனோபலத்தாலும்ஆத்மசக்தியாலுமே இவற்றை வெல்லவேண்டும், இதற்காகவே மஹமாரியைத் தெய்வமாகக் கொண்டாடவேண்டுமென் றேற்படுத்தியது. இதில் ஓர் ஆத்மவைத்திய ரகசியமிருக்கிறது. அதை விவேகிகளுக்கன்றி சாமான்யர்க்குச் சொல்லுதல் அநர்த்தமாய் விளையும்.

❀ ❀ ❀

HEALTH OF BODY—EARTH'S INFLUENCE ON IT.

தேகசௌக்கியம்.

1. நிலம்.

ஜனவரி சஞ்சிகையில் தேகசுகத்திற்கான பதினொரு விஷயங்களில் இங்கு நிலத்தைப் பற்றி யெழுதுவோம். இந்நிலவுலகம் நமது கண்ணுக்குத் தட்டை வடிவமாகப் புலப்படினும், உண்மையில் ஒருபெரிய உருண்டை வடிவமென்று இப்பொழுது சாஸ்திரங்களால் நன்கு விளங்குகின்றது. பூமியின் மேற்புறத்தைப் பற்றிக் கூறுகிற சாஸ்திரத்திற்குப் பூகோள சாஸ்திரமென்னும் தமிழ்ப்பெயரே பூமி உருண்டை வடிவ மென்பதற்கு ஒரு சான்றாகும். கோளம் என்றால் உருண்டையென்பது பொருள். இப்பூகோளத்தின் உட்புறம் எவ்வாறிருக்குமென்று தெரிந்துகொள்ள முயலல் கூடாத விஷயமாகவிருக்கிறது. பூமியின் மேற்புறத்திலே இருக்கின்ற பொருள்களைப் பற்றிக்கூறும் சாஸ்திரத்திற்குப் பூமிகரண சாஸ்திரமென்று பெயர்; அஃதாவது மண், கல் முதலியவைகளைப் பரிசோதித்தறியும் சாஸ்திரமே.

இந்தப்பூமியின் குறுக்கே ஒரு புறமிருந்து மற்றொருபுறம் வரைக்கும் நேராகப் பெரிய சுரங்கமொன்று வெட்டி அதன் மூலமாக நாம் விஷயங்களை யறிந்துகொள்ளப் பிரயத்தனப்படல் வீணேயாம். இக்காலத்தில் புதுவை காரைக்கால் முதலிய பெரியநகரங்களில் ஆர்ட்டிசன் கிணறு (Artesian well) அமைக்கப்பட்டிருக்கிறது. அஃதாவது பூமியினின்றும் அந்தக்கிணற்றின் வாயின்வழியாக ஜலம் எப்பொழுதும் சிறிதும் இடைவிடாது வந்துகொண்டேயிருக்கும். இந்தக் கிணறு தோண்டுகிறது எவ்விதமெனின், பூமியில் இருப்புக்குழாய்வைத்து அதற்குள் இருக்கும் மணலைத் தோண்டத் தோண்ட அக்குழாய் உள்ளே இறங்கும். தண்ணீர் தடையின்றி அக்குழாயின் வாயிலாகவரும் வரையில் மண்ணைத்தோண்டிக் குழாயை யுள்ளே செலுத்தல் வேண்டும். இதன் மூலமாக நாம் சிலவிஷயங்களை யறிந்து கொள்ளலாம். இவ்வாறு தோண்டப்பட்டவற்றில், மணல், பருக்காங்கல், களிமண், கருங்கல், கரிமுதலிய பலவித உலோகங்கள் அகப்படுகின்றன. அல்லாமலும் பூமியின் ஐந்தாறு மயில் தூரம் வரையிலும் இவ்விதமான உலோகங்கள் அகப்படுகின்றனவென்றுந் தெரியவருகிறது. பூமியின் உட்பாகத்தில் ஓர் வகையான மெல்லிய பொ

ருள் 7000-மைல் தூரம் ஒரேவிதமாகப் பரந்திருப்பதாகவுந் தெரியவருகிறது. இந்தப்பூமியின் மேற்புரணியில் நாம் எல்லோரும் வசித்துக்கொண்டிருக்கிறோம். நாம் எந்தவிதமான பூமியின்பேரில்வசிக்கின்றோமோ அப்பூமியின் தன்மையும் குணங்களும் நம்முடைய தேகசௌக்கியத்துடன்சம்பந்தபட்டிருக்கின்றன. நிலத்தின் தன்மையை ஆராயுங்கால் நிலத்தினிடத்தே நானாவித உலோகங்களும் பிராணிவர்க்கங்களும், இவைகளின் கழிவுகளும், படிந்துகலந்திருக்கின்றன. இவ்வண்ணம் பலவிதமாய்க் கலப்புகள் சம்பந்தப்பட்ட நிலத்தினிடத்து சில பாகங்களில் வாயுவும் நீரும் தோன்றும். இவ்விதம் கலந்த வாயுவாலும் நீராலும் உண்டாகும் சுகதுக்கங்களைப்பற்றிக் கூறுவாம்.

சூரியனின் பிரகாசத்தினாலும், உஷ்ணத்தினாலும் மண்ணின் கீழிருக்கிற வாயு சலனமுற்றுக்கொண்டே யிருக்கிறது. இவண் சூரியனது குணாகுணங்களைப்பற்றிச்சற்று ஆலோசிப்பாம். சூரியன் பூமிக்கு என்றும் ஒரே தூரத்தில் இல்லாமல் கொஞ்சகாலம் சற்றுநெருங்கியும் கொஞ்சகாலம் சற்று அகன்றும் உள்ளது. ஜூலை மாதத்தில் பூமிக்குச் சமீபத்திலும் டிசம்பர் மாதத்தில் கொஞ்சம் தூரத்திலுமிருக்கிறது. அது நெடுந்தூரத்தில் இருப்பதால் நமது கண்ணுக்கு நன்றாகப் புலப்படவில்லை. அது பூமிக்குச் சற்று தூரமாக விருக்கிறகாலத்தில் 9,29,63,000 மயில் தூரத்திலும் சமீபத்தில் இருக்குங்காலத்தில் 8,98,97,000 மயில் தூரத்திலும் இருக்கிறது. அது சராசரி பூமிக்கு 9,14,30,000 மயில் தூரத்திலுள்ளது. அதன் ஒரு முனையினின்றும் மறுமுனைவரைக்கும் நடுவில் அளந்தால் அதன் அளவு சுமார் 8,52,900 மயில் நீளமுள்ளது. அதேமாதிரி பூமியையளந்தால் பூமியின் அளவு 79,265 மைல் நீள முள்ளது. ஆகையால் சூரியனின் அளவானது பூமியின் அளவைப் பார்க்கிலும் 107 மடங்குக்குமேல் கொஞ்சம் அதிகம்.

சூரியனின் கிரணங்களிலுள்ள பொருள்களைப் பகுத்தறியின், பிராணவாயு, காந்தம் முதலிய பல பொருள்களால் சூரியமண்டலம் அமைக்கப்பட்டிருக்கிறதென்று சிலர் கருதுகிறார்கள். ஏராளமான வெளிச்சமும் உஷ்ணமும் சூரியமண்டலத்தி லிருந்து ஓயாது அதைச்சுற்றி எங்கும் சென்றுகொண்டேயிருக்கிறது. நமக்கு வாசஸ்தானமாகிய இந்தப்பூமி சூரியனிலும் இருநூறு கோடியில் ஒரு பங்குக்குச் சற்றுக் குறைவாக விருப்பதனாலும், அதற்கு அநேக காதவழி தூரத்திற்கப்பாலிருப்பதனாலும் சூரிய வெளிச்சமும் உஷ்ணமும் அவ்வளவு அதிகமாகவின்றி அவற்றின் இருநூறு கோடியில் ஒருபங்கும் சற்றுக்குறைவாகவே பிரகாசம் மழுங்கி உஷ்ணங் குறைவுற்றுப்போகிறது. இவ்வாறு சூரியனின்வெளிச்சமும்உஷ்ணமும் குறைவுபடாது பூமிக்கு நேராகவருமாயின் பூமி தாங்கமாட்டாது. அதாவது பூமியிலிருக்கின்ற புல் பூண்டு பிராணிவர்க்கங்களுட்பட நாம் எல்லோரும் வாசஞ்செய்யமுடியா. இந்த வெளிச்சத்திற்கும் உஷ்ணத்திற்கும் ஏற்றவண்ணமே இந்த உலகத்திலுள்ள படைப்புகள் யாவும் படைக்கப்பட்டிருக்கின்றன. அல்லாமலும் சூரியனுக்குப் பூமி முதலிய கிரகங்களுக்குப் பிரகாசத்தையும் வெப்பத்தையும் கொடுக்குந் திறமிருப்பது மன்றி, அவற்றையெல்லாம் விழவொட்டாமல் இருக்குமாறு செய்கிற ஆகர்ஷண சக்தியுமுண்டு. ஒரு சிறு இரும்புத் துண்டைக் காந்தத்திற்கு எதிரே பிடித்தால், அவ்விரண்டிற்கும் மத்தியில் நமது கண்ணுக்குப் புலப்படக்கூடிய தடையொன்றும் இல்லாவிடினும், அந்த இரும்புத்துண்டை காந்தம் எவ்வாறு இழுத்துக்கொள்ளுகிறதோ அவ்வாறே பூமியை இழுத்துக்கொள்ளுகிற காந்தக்கவர்ச்சி சூரியனுக்குமுண்டு. இரும்புத்துண்டு காந்தத்திற்குச் செல்லுகிறகவர்ச்சிக்குக் காந்தக்கவர்ச்சியென்றும், காந்த மில்லாவிடத்து அந்த இரும்புத் துண்டு பூமியை நோக்கிச் செல்லுகிற கவர்ச்



சிக்கு*இழுப்புக்கவர்ச்சியென்றும் பெயர்பெறும். வட தென் துருவங்களைப் பார்க்கிலும் பூமியின் நடுவில் இழுப்புக் கவர்ச்சி அதிகம். நாம் ஒருபொருளை நிறுத்துப் பார்த்தால் அதன்எடை பூமத்தியில் அதிகமும், துருவங்களில் குறைந்தும், துருவங்களுக்கும் நிரட்சத்துக்கும் மத்தியிலுள்ள இடங்களில் அவ்வவற்றின் அக்ஷாம்சத்துக்குத் தக்கவாறு போகப்போகக் குறைவுற்றிருப்பதைப் பார்க்கலாம். லண்டன்மாநகரத்தில் ஒரு மணங்கு நிறைகொண்ட பொருள் ஒன்றை நிரக்ஷரேகையண்டை துலையில் நிறுத்திப்பார்த்தால் அதிகமாகவும் துருவங்களில் குறைந்துபோயுமிருக்கும். இழுப்புக்கவர்ச்சி யில்லாத இடமொன்றிருந்து அவண் அப்பொருளை நிறுக்கின் எடையும் இராது; பொருளும் அவ்வாறேதானிருக்கும். ஒளியும் உஷ்ணமும் உயிர்வாழ்க்கைக்குக் காரணமென்பது யாவரும் அறிந்தவிஷயமே. சூரியனிடத்தினின்று ஒளியும் உஷ்ணமும் வாராவிடில் பூமியிலொன்றும் பிழைத்திராது.

முன்கூறியபடி, மண்ணின்கீழ் இருக்கும் வாயு சலனப்பட்டுக்கொண்டிருப்பதுபோல இவ்வித சலனம் மழையாலும் உண்டாகுகிறது. அஃது எவ்வாறெனின், மழைபெய்து தண்ணீர் அதிகமாய்ப் பூமிக்குள்சென்றுபூமியைஊறச்செய்தவுடன் முன்தங்கியிருந்த வாயுஇருப்பதற்கு இடமின்றிவிரைவாகவெளிப்படுகின்றது. நாம் ஒரு பள்ளத்தை மண்ணினால் தூர்த்து அதன்மேலுள்ள ஆகாயத்தையும் முன் அதன்மேலிருந்த ஆகாயத்தையும் சீர்தூக்கிப்பார்க்கின், பள்ளத்தைத் தூர்ப்பதற்கு முன் அங்கேசுத்தமான ஆகாய மிருந்ததாகவும், தூர்த்தபிறகுசுத்தமில்லாதஆகாயம் இருப்பதாகவும் நாம் அறிந்து கொள்ளலாம். தரைகெட்டிப்படுகிறவரையில் அதில்பரிசுத்தமான ஆகாயம் இராது. தரைகெட்டிபபடுவதென்றால் அவ்விடத்தி னின்றும் காற்றுக் கொஞ்சம்கொஞ்சமாக அகன்று போவதே.

* Gravitation

மண்ணுடன்சம்பந்தப்பட்டு இருக்கும்ஜலம் ஈரம் என்றும் கசிவு என்றும் இரண்டு வேறுபாடுடையது. மண்ணினுடைய இடைவெளிகளில் கொஞ்சம் ஆகாயமும் கொஞ்சம் சலமும் கலந்திருந்தால் அது ஈரமென்றும், மண் காற்றின்றி ஜலத்தில் நெருங்கி மிதக்கின் அது கசிவு என்றும் பெயர் பெறுகின்றன.

நன்றாய்க் காய்ந்த மண்ணின்மேல் வாசஞ்செய்வது எப்பொழுதும் நம்முடைய தேகசௌக்கியத்தைக் காப்பாற்றும். ஈரத்தரையில்வசித்தால் அது நமது சுவாசாசயத்தைக் கெடுத்து காசம் முதலிய கொடியவியாதிகளுக்கு நம்மை உள்ளாக்கிவிடும். ஈரத்தரையில் வசிப்பதனால் உண்டாகும் வியாதிகள்:— விஷபேதி, வயிற்றில் கட்டி, விஷசுரம், கபரோகம் சிலேஷ்மரோகம், முறைச்சுரம், சந்திவாதநோய் இன்னும் பலவிதமான நோய்கள். கசிவுள்ள இடத்தில் வசிக்கின் மேற்கூறிய வியாதிகளுடன் சீதபேதி சின்னம்மைமுதலிய வியாதிகளும் உண்டாகின்றன.

அன்றியும், நாம்வசிக்கும் நிலம் மலைசார்ந்த இடமா, சமபூமியான இடமா? மலைப்பக்கமாகவிருந்தால் உயரம்வடிவம் என்ன? சமபூமியாயிருந்தால் மேடாபள்ளமா? அதற்குத்தண்ணீர் பாயும் கால்வாய்என்ன, தண்ணீர்வடியும்கால்வாய்என்னஎன்றுநாம்முற்றும் ஆலோசித்துப் பார்த்தல்வேண்டும். ஏனெனின் இவைகளில் ஒவ்வொன்றும் நம்முடைய தேகசவுக்கியத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. மலையின் சிகரம் நமக்கு வாசஸ்தானத்திற்குரித்தானது; தேகசௌக்கியத்தைக் கொடுப்பது. சமதரையிலே சற்று மேடான இடமும் நமக்குத் தேகசவுக்கியத்தைக் கொடுப்பது. ஈரமுள்ள இடம் இவைகளைப்போல சிறந்தது அல்ல. அதிலும்பலவிதவிருக்ஷங்களிருப்பின் இந்தமரங்கள்காற்றோட்டத்தையும் சூரியனின் உஷ்ணத்தையும் தடுப்பதனால் இந்த இடம் சிறிதும் சிறந்ததல்ல. இந்த இடங்களில் நாம் வசிக்க நேரின் மரங்களை நன்றாய்க் கழித்து

சூரியன் உஷ்ணமும் காற்றும் நன்றாகப்படும்படிச்செய்தல்முக்கியம். மலைகாடுகளிலும்தன்னைச்சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் சுவர்போல் மலையிருப்பின் இந்த இடங்களும்நமது வாசஸ்தானத்திற்குப் பொருந்தியதல்ல. இங்கும் காற்றோட்ட மிருக்காது. மலைகளிலுள்ள மரங்களின் இலை கிளை முதலியவைகள் கீழேவிழுந்து அழுகி துர்க்கந்தம் வீசும். காற்றின் சலனம் அங்கு இல்லாததனால் அது தேக சௌக்கியத்திற்கு ஒவ்வாது; பலவிதகெடுதிகளை விளைவிக்கின்றது. மலையடிவாரத்திலுள்ள இடங்களும் பூமியின்மட்டத்திற்குக் கீழ்பாலுள்ள இடங்களும் இத்தன்மைத்தே. அல்லாமலும் கருமணல் சூரியனின் உஷ்ணத்தை அதிகமாகக்கிரகிக்கும் தன்மையுள்ளது. பொதுவாகக் கருமையான பொருள்களுக்கு சூரிய உஷ்ணம்அதிகமாக வாங்கும்குணமுண்டு இக்காரணம் பற்றியே வெப்யில் காலங்களில் கருப்புத்துணி வாய்ந்த குடையை நாம் வெளியில் பிடித்துக்கொண்டுபோனால் அது சீக்கிரத்தில் நமக்கு அதிக சூடாகத் தோற்றுவதை நாம் இன்னும் பார்க்கலாம். ஆகையால் வெள்ளைத் துணிபோட்ட குடையே சிறந்தது. இதைப் போல நமதுவாசத்திற்கும் வெண்மணலுள்ள இடங்கள் சிறந்தன. கருமணலுள்ள இடங்களில் சூரியஉஷ்ணம் அதிகம் கிரகிப்பதனால் அவ்வளவு பொருத்தமுடையதன்று.

பு. அ. இரத்தினம் பிள்ளை.

## SANKARA PRYAN.

## சங்கரப்பிரியன்.

"எங்கள் எஜமான் இன்று காலையில் தனது உத்தியானவனத்தின் எல்லையில் பக்ஷிவேட்டையாடிக்கொண்டிருக்கையில், அவரது கையில்உட்கார்ந்திருந்தவேட்டைராஜாளி, ஜீவ்வென்றுமேலேகிளம்பி ஒரு மாடப்புறாவைத்தூரத்திக்கொண்டுபோயிற்று. அதன்பின்சென்றஎம் யஜமான், நீர் நித்திரை செய்துகொண்டிருந்த ஆலமரத்தடியில் வந்து மூர்ச்சைபோயிருந்த தங்களைப் பார்த்து, பரிதாபப்பட்டு உடனே ஒரு பல்லக்கைவரவழைத்து, அதில்தங்களைத் தூக்கிவைத்து இவ்விடம்கொண்டுவர ஏற்பாடு செய்தார்." என்றுசொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் நமது கோலாஹல செட்டியும் அவ்வறையில் வந்து, நமதுமனோரஞ்சனியின் எதிராகவுள்ள ஒரு சோபாவில் உட்காரப் பின் வரும் சம்பாஷணை நடந்தது.

கோலாஹலசெட்டி:—அம்மணி, இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது. மற்றவைகள் பிறகு பேசிக்கொள்ளலாம். தாங்கள் பட்டினியாயிருப்பதாய்க் காண்கிறது. ஏதாவது கொஞ்சம் ஆகாரம் பார்த்து களைதீர்த்துக்கொள்ளுங்களென்று சொல்லி, அநேக வகை சிற்றுண்டிகளும் பாலும்கொண்டுவந்து வைக்க ஏற்பாடுசெய்ய, நமது மனோரஞ்சனியும் கொஞ்சம் பழமும் பாலும்அருந்தி களை ஆறினவளாய்ப் பின் வருமாறு கோலாஹல செட்டியைப்பார்த்துச் சொல்லலாயினள்.

மனோரஞ்சனி:—ஐயா! தாங்கள் எனக்குச் செய்த உபகாரத்திற்கு நான் என்னபதில் செய்யப்போகிறேன். தங்களுடைய பெயர் முதலியனவைகளைச் சொல்லில் இரவும்பகலுமாகத் தங்களுக்குச் சகலபாக்கியங்களையும், ஐசுவரியங்களையும், சுகங்களையும்மேன்மேலும் விர்த்திசெய்விக்கும்படி கடவுளைப்பிரார்த்திப்பேன். தவிரஎனது கணவன் இவ்வூரில் எனக்காகக்கொஞ்சம் ஆகாரம்தேடிவருவதாக வந்தார். இன்னேரம், நான்படுத்துறங்கின ஆலமரத்தடி சேர்ந்து என்னைக்காணுமல் என்னமாய் தபிக்கிறாரோ தெரியாது. தங்கள் மனுஷியாள் யாரையாவது அனுப்பி அவரைவருவித்து என்னுடன்கூடி எங்கள் ஊருக்குப் போக உதவி செய்யின், நாங்கள் தங்களுக்கு எங்கள் வாழ்நாள் முழுதும் நன்றியறிவுள்ளவர்களாக விருப்போமென,

கோலாஹல செட்டி:—அம்மணி! விசாரப்படவேண்டாம். இப்பவே ஒரு ஆளை அனுப்பி, அவர் ஆலமரத்தடி வந்ததும் இவ்விடம்



அழைத்துக் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன். அவ்விடம் அவரைக் காணுவிடில், ஏதாவது அடையாளம் சொன்னால் இவ்வூரிலிருக்கும் பக்ஷத்தில் எவ்விடமிருந்தாலும் அழைத்துக்கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன். அவர் வந்ததும் நானே, தங்கள் ஊரில் தங்களிருவரையும் கொண்டுபோய் விட்டுவருகிறேன். ஆக்ஷேபம் இல்லாத பக்ஷத்தில் தாங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள். தங்களைப் பார்த்தால் ஒரு ராஜகன்னிகைபோலிருக்கிறதே: ஆலமரத்தடியில் மூர்ச்சித்திருக்கக் காரணமென்ன, தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மனோரஞ்சனி:—நான் மத்திய மாகாணத்தின் அரசன், நாகராஜனது சீமந்த புத்திரி. எனது நாயகர் தஞ்சைமாநகரின் அரசனது சீமந்த புத்திரர். எனது தகப்பனார் என்னைத் தனது சத்துரு அக்கிரமபுரத்தரசன் மகன்துஷ்டபுத்திக்குக் கலியாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். அக்கலியாணத்தினின்று தப்பித்துக்கொள்ளவும், எனது மாமனாரது சைனியங்களைக் கொண்டுவந்து துஷ்டபுத்திக்கு நற்புத்திபோதிக்கவும், எண்ணங்கொண்டு, நானும் எனது அன்பரும் எங்கள் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்தோம். வழியில் களைப்பினால் நான் மூர்ச்சித்துப்போக எனதுகணவர், ஆகாரம் தேடிக்கொண்டுவரவும், எனது புலாக்கைவிற்றுப் பணமாக்கிக்கொண்டுவரவும் புறப்பட்டுப்போனார். இதுதான் எனது விர்த்தாந்தம். மேற்சொன்ன அடையாளங்களினால் எனது கணவனைக்கண்டுபிடித்து என்னிடம் கொண்டுவந்துசேர்க்க ஏற்பாடுசெய்யவேண்டும். தவிர இவ்வளவு உபகாரங்களை எனக்குச்செய்த தங்களது பேர்முதலியவைகளைத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

கோலாஹலசெட்டி:--அம்மணி! நான்முன்ன சொன்னது போல், இவ்வூரிலிருக்கும் பக்ஷத்தில் உமது கணவரை உமதிடம்கொண்டு வந்து சேர்ப்பேன் நிச்சயம். என் பேர் கோலாஹல செட்டி. எனது தகப்பனார் எனக்கு யதேஷ்டமாய்ப் பொருளை வைத்து விட்டு தேக வியோகமானார். எனதுசொத்துக்களையும் பூஸ்திதிகளினின்று வரும் வரும்படிகளையும் செலவழிக்க வழிதெரியாமல் தபிக்கிறேன். போனமாதம் எப்படியாவது ஒருலக்ஷம் ரூபாயைச்செலவழிக்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருக்க சமாசாரப் பத்திரிகையில், கோரூர் என்னும் ரெயில் ஸ்டேஷனருகில் இரண்டு ரயில் வண்டிகள் முட்டிக்கொண்டதாயும்அதில் அநேக ஜனங்கள் சேதமானதாயும் போடப்பட்டிருந்ததைப்பார்த்தேன். பார்த்ததும்சரி! ஒருலக்ஷம்செலவுசெய்ய வழிகிடைத்தது சாவல்சண்டைபார்த்திருக்கிறேன். ஆட்டுக்கிடாச்சண்டை பார்த்திருக்கிறேன். ரயில் வண்டி சண்டை பார்த்ததில்லை. இந்தமாதம் அதையும் பார்த்துவிடவேண்டியது என்று தீர்மானம் செய்து ரயில்ரஸ்தா போடுவித்து ஒரே வேகமும், பலமுமுள்ள இரண்டுரயில் வண்டிகள் செய்து, ஒன்றைஒன்று முட்டவிட்டுப் பார்த்தேன். என்ன ஆச்சரியம். இரண்டு பெரிய மலைப்பாம்புகள் வாலினால் நின்றுகொண்டு, மார்போடு மார்பு சேர்த்துச் சண்டை செய்வதுபோல விருந்தது. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் என்மனதில் ஒரு குறை மாத்திர மிருக்கிறது. அதென்ன வென்றால், எனது சொத்துக்களை என்னுடன்கூடி அனுபவிக்க என்மனதிற்கிசைந்த ஒரு மனைவி இதுவரையிற்கிட்டாததுதான். அப்பேர்ப்பட்ட ஒருபெண்ரத்தினத்தை இன்றைக்குத்தான்தெரிந்தெடுத்தேன். அவ்விரத்தினம் புதிதாகையால்கொஞ்சம்மங்கலாகவிருக்கிறது. திடீரென்று சாணையில் கடைசல் பிடித்தால் ஒருக்கால்உடைந்து போமோ வென்னும் பயத்தால், கொஞ்சம்கொஞ்சமாய், சாணையில் கொடுத்து, நாளாவட்டத்தில்பட்டைதீர்ந்து அணிந்துகொள்ள எண்ணங் கொண்டிருக்கிறேன்.

மனோரஞ்சனி:—தனக்குள் இச்செட்டியின் வாயில் மது, ஹிருதயத்தில் விஷம் என்

பது இவனது சொற்களால் விளங்குகிறது. வெகு கபடமாயும், தந்திரமாயும், தனது சொத்துக்களின் பெருமையையும், என்மீதில் அவனுக்குள்ள இச்சையையும், சாதாரணமாய்ப் பேசுபவன்போலப் பேசி வெளியிட்டிருக்கிறான். புதிதாய் கண்டெடுத்த ரத்தினம் நான்தான். மங்கலாயிருப்பது நான்எனதுபுருஷனைவிட்டுப் பிரிந்து மனோவியாகூலத்தோடிருப்பது. உடனே சாணையில் கொடுக்காதது திடீரென்று தனது அபிப்பிராயத்தை வெளியிடாதது. நாளா வட்டத்தில் என்னைத்தன தெண்ணத்திற்குச் சரிப்படுத்திக் கொள்ளத் தீர்மானத்திருக்கிறான். வைரத்தை வைரம் வெட்டும். கபடத்தைக் கபடத்தால் வெல்ல வேண்டும். இப்பொழுது அவனது கெட்ட எண்ணத்தை நான் அறிந்து கொண்டதாகக் காட்டக்கூடாது. எனது நாதனை ஒருநாளும் மறக்கேன். ஆனால் இச்செட்டிப்பதரை ஏமாத்த, அவர் பேரில் அன்பில்லாதவள்போல நடிப்பேன். சமயம் வாய்த்ததும், இச்சண்டாளனது வீட்டினின்றும் தப்பித்துக்கொள்வேன். திண்ணம். செட்டியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு இப்பேர்ப்பட்ட பிரபுவினது மார்பை அலங்கரிக்கப்படும்பாக்கியத்தை எந்த ரத்தினம் பெறப்போகிறதோ. தங்கள் இஷ்டம்பூரணமாகட்டும். (மனத்துள்: பூரணமாய் வெள்ளரிப் பழம்போல் வெடிக்கட்டும்)

கோலாஹல செட்டி:—அம்மணி, தங்கள் வீடுபோல் இவ்வீட்டைப் பாவிக்கவேண்டும். எது வேண்டுமென்றாலும் சேடிகளை ஆஜ்ஞாபிக்கநடந்தேறும். இவ்வீட்டிற்கும்இன்னும் மற்ற என்சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் நீங்கள் எப்பொழுதும் யஜமானியாயிருக்க ஏற்பட்டால் எனது பாக்கியமே பாக்கியம்.

(செட்டி போகிறான்.)

மனோரஞ்சனி:—சேடிகளே, எனக்கு நித்திரைவருகிறது. படுத்துத்தூங்க ஒரு அறையைக்காட்டுங்கள்.

சேடிகள்:—அம்மணி, எங்கள் எஜமான், இந்தபங்களாவைத்தங்களதாகப்பாவிக்கும்படிக்குஆக்கியாபித்தார். இதோவலதுகைப்புறம் படுக்கை அறையிருக்கிறது. போகலாம் எழுந்திருங்களென, மனோரஞ்சனியும் எழுந்துபோய்ப் பவளக்கால்களாலும்தந்தங்களாலும் செய்யப்பட்டுள்ள ஒரு கட்டிலின்மேல், விரிக்கப்பட்டிருந்த ஐடர்வாத்தின் மெல்லிய இறகுகள் அடைக்கப்பட்டுள்ள மெத்தையின் மேல் படுத்துக் கொஞ்சம் கண்ணமர்ந்தாள். கண்ணமர்ந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம திடீரென்று விழித்துக்கொண்டு தனக்குள் பின் வருமாறு ஆலோசனை செய்யலாயினள். இப்பொழுது இரண்டுபேர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும் அதில் ஒருவனுடைய குரல் இவ்வீட்டு எஜமான் கோலாஹல செட்டியினது குரல்போலும் அவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயம் என்னையும் எனது நாதரையும் பற்றினதாயும் இருந்ததாகக் கனவு கண்டேன். நான் சுமார் எவ்வளவுநேரம் தூங்கியிருக்கலாம். இப்பொழுது தூங்கிப்போய் இப்பேர்ப்பட்ட கனவை மறுபடியும் கண்டு மனம்நிடுக்கிட்டு எழுந்திருக்க இடம்கொடுக்கக்கூடாது. தூக்கத்தைத்தவிர்க்க இவ்வறையையும் நன்கு சோதித்துப்பார்ப்பேன். இப்பெரிய அறை நான்கு சிற்றறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு அறையில்தான் இப்பொழுது நான் இருப்பது. மற்ற அறைகளையும் உட்புகுந்து பார்ப்பேன்என்று சொல்லிக்கொண்டு ஒன்றிறபுக, அவ்விடத்தில் சலவைக்கற்களாலிழைத்த ஒரு ஸ்நானத்தொட்டியும் சிங்கமுகம்போன்ற குழாயின் வாயினின்று முத்துப்போல் தண்ணீர் கீழேவிழும் காட்சியும் சுற்றிலும் இருக்கும் மேடைகளின் மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்நானத்துக்கு வேண்டிய வாஸனைத்தைலங்களும் இன்னம் இதரவஸ்துக்களும் சுற்றிலுமுள்ள கொடிகளின்மீதுபோடப்பட்டிருக்கும்விலையுயர்ந்த ஆம்கடளும்முகம் பார்க்க வைக்கபட்டிருக்கும்



நிலைக்கண்ணாடிகளும் காணப்பட்டன. அவ்விடம் விட்டு இன்னமொருகி அறை புக அவ்விடத்தில் வரிசையாய் வைக்கப்பட்டுள்ள அநேக பெட்டிகளில் சிலதில்உயர்ந்தகல்நகைகளும், இன்னும்சிலதில் தங்கநகைகளும்மற்றவைகளில் பொன், வெள்ளி செம்பு நாணயங்களும் வைக்கப்பட்டிருக்கக்கண்டாள். இவைகளைப்பார்த்ததும் மனிதப்பதராகிய இச்செட்டி இவ்விதப்பணப்பெருமையின் தோற்றத்தால் என் மனதைத்திருப்ப எண்ணினவன் போலும். எனது நாதன் இந்நேரம் ஆலமரத்தடிசேர்ந்துஎன்னைக்காணாமல் எப்படித்தத்தளிகிறாரோ! இந்த செட்டி ஆளனுப்பி அவரைக் கூட்டிக்கொண்டு வருவதாகச் செய்தவாக்குத் தத்தம் அணுவேனும் நம்பத்தக்கதல்ல. ஒருக்கால் தனது ஆட்களைக்கொண்டு அவருக்கு ஏதாகிலும் தீங்கிழைத்திருந்தாலு மிருக்கலாம். கூடிய சீக்கிரத்தில் இப்பாதகனதுவீட்டினின்றும் அகல முயற்சிசெய்யவேண்டுமென்றெண்ணிக்கொண்டு நான்காவதறையிற்புக, அவ்விடத்தில் சுவற்றுக்கப்பால் இரண்டுபேர்கள் பேசிக்கொள்ளும் அடுத்அதிகாரத்திற் குறித்திருக்கும் சம்பாஷணையைக் கேள்வியுற்றனள்.

---

## XVIII. செட்டியும் வேவுகனும்.

கோலாஹல செட்டி:—ஏண்டா குள்ள நான் சொன்னபடி செய்துமுடித்தனையா?"

குள்ளன்:—அப்படியே செய்தேன். நான் போய் ஆலமரத்துக்கு கொஞ்சதூரத்தில் விறகு வெட்டிக்கொண்டிருப்பவன் போல் பாசாங்கு செய்துக்கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பைத்தியக்காரன் போன்ற ஒருவன் அவ்விடம் வந்து மரத்தடியின் கீழ்விழுந்து புரண்டு புலம்பினான். நானும் அவனை நெருங்கி தாங்கள் சொன்னபடி நீங்கள் யாரையா இவ்விடம் இப்படிப் புரண்டு புலம்புவானேன்என்றுவினவினேன். அவனும் அப்பா நீ இவ்விடம் யாதாவதொரு பெண்பிள்ளையைக் கண்டதுண்டோவென்று வினவ, நானும், தாங்கள்சொல்லியனுப்பியபடி "ஐயா இப்பொழுது கொஞ்ச நேரத்துக்கு முன் நான்குபேர்கள் துரகாரூடராய் வந்து இவ்வாலமரத்தடியிருந்த ஒரு ஸ்திரீயை பலவந்தமாய் குதிரைமேலேற்றிக் கொஞ்சதூரத்துக்கப்பாலுள்ள காட்டைநோக்கிக்கொண்டு போகப்" பார்த்ததாகச் சொன்னேன். அவனும் பித்தம் பிடித்தவன்போல் காட்டைநோக்கி ஓடினான். இதற்குள் புலியோ சிங்கமோ ஏதாவதொன்று அவனைப்பிடுங்கித் தின்னிருக்கும். தங்களது எண்ணமும் நாளாவட்டத்தில் இனிகை கூடுமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

இச்சம்பாஷணையைக் கேட்டதும் எம் மனோரஞ்சனியும் தொப்பென்று கீழே விழுந்து மூர்ச்சையாயினாள். செட்டியும் வேவுகனுக்கு வெகுமதிகொடுத்தனுப்பிவிட்டு வீடுவந்துசேர்ந்தான்.

---

## XIX தப்பித்துக்கொள்ளல்.

மனோரஞ்சனி மூர்ச்சை தெளிந்தெழுந்தபொழுது சுமார் ராத்திரி 10 - மணியிருக்கலாம். எழுந்து தான்முன் படுத்திருந்த கட்டிலின்மீதுட்கார்ந்து பின்வருமாறு சிந்திக்கலாயினள். பாதகன் செட்டி-என்னமோசம்செய்தான்! ஐயோ! என் நாதரே காளியருள்பெற்ற தமது தலையில் துஷ்ட மிருகங்களுக்கிரையாக வேணுமென்று பிரமன் எழுதினனோ! நான் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் வீணாயினவே! நான் ஒன்றுநினைக்க தெய்வமொன்று நினைத்ததே. என் கதி இனிஎன்னமாகுமோ தெரிகிலேன். இப்பாதகனதுவீட்டில்அறைக்கணமேனுமிருக்க சகியேன். இவ்விடமிருந்து தப்பித்துக்கொண்டு எனதுகணவன்சென்றதாகச் சொன்னகாட்டிற்புகுந்துநானும்துஷ்டமிருகங்களுக்குஇரையாவேன். இப்பொழுதுகபடத்தால் இவ்விடம்விட்டு நீங்க முயலவேண்டும். ஆ, ஒரு உபாயம் இப்பொழுது என் மனதில் உதித்திருக்கிறது. சேடிகளைக் கூட்டிக்கொ

ண்டு அல்பசங்கைக்குப் போகிறவள்போல் வெளியில் கொஞ்சதூரம் சென்று தப்பித்துக்கொள்ள வழிதேடுவேன் என்று சொல்லி பக்கத்திலிருந்த மணியையடிக்க தாதிகளிருவரும் ஓடிவந்து அம்மணி என்ன ஆக்ஞை என்று கேட்டார்கள்.

மனோரஞ்சனி:—"எனக்கு உடம்பு என்னமோபோ லிருக்கிறது, கொஞ்சதூரம் வெளியே உலாத்தி விட்டு வருவோம் வாருங்கள்" என்று அவர்களையும் கூட்டிக்கொண்டு பேச்சுக் கொடுத்துக் கொண்டே வெகுதூரம் வந்து விட்டாள். சேடிகளும் பயந்து "அம்மணி நாம் வெகுதூரம்வந்து விட்டோம் திரும்புங்கள்: வீடுபோய்ச் சேரலாம்" என, மனோரஞ்சனியும் இதோ வந்து விட்டேன். சற்றுப்பொறுங்கள்" என்றுசொல்லி அல்பசங்கைக்குப் போகிறவள்போல ஒரு மரத்து நிழல் மறைவாய்ப்போய்ப் பக்கத்திலுள்ள காட்டிற் புகுந்து ஓடிவிட்டாள்.

எம். என். கணேசய்யர்.

## THE SOUTH INDIAN ASSOCIATION.

## "PLATO'S REPUBLIC"

## தென் இந்தியா சங்கம்.

### "சமஷ்டியில் வியஷ்டி"

"தென்னிந்தியா அஸ்ஸோஸியேஷன்" சங்கத்தின் நான்காவதுவருஷாந்தக்கூட்டம் மார்ச்சுமீ 27-28-ந்தேதிகளில் மைலாப்பூர் ப்ராடீஸ் ரோட்டிலுள்ள ரனடே ஹாலில் கூடியது. முதல்நாள் கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம் அவர்கள் அக்கிராசனம் வகித்துப்பிரசங்கம் செய்தார். பிறகு கிறிஸ்தியன் காலேஜ் ப்ரொபெஸ்ஸர் மிஸ்டர் எப். இ. கார்லியவர்கள் "ப்ளேடோ" என்னும் பூர்வீக தத்துவஞானியெழுதிய 'ரிபப்ளிக்' என்னும் 'சமஷ்டியில் வியஷ்டி' பாவபோதன கிரந்தத்தின் உட்கருத்தையெடுத்து இக்காலத்துக்கமையப்பொருத்தி ஒரு வியாஸம் வாசித்தார். சமஷ்டி-வியஷ்டி பாவமிரண்டும் ஒன்றுக்கொன்று பொருந்தாதென்றும், சமஷ்டி (ஜனசமூக) க்ஷேமத்திற்காக, வியஷ்டிபாவபுருஷர் (பிரத்தியேக நபர்) தம் சுதந்திரங்களை விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதும் இக்காலத்து இரா ஜதந்திரிகள் கொள்கை. ஆனால் இது கேவலம் இந்திரியங்கள் வசப்பட்டுழலும் பெத்தஜீவன்கள் விஷயத்திற் சொல்லப்பட்டது. மனிதர் உள்ளபடி தன்னைத்தானடக்கியாண்டு தன்னையறிந்த தலைவரானால் அவர்கள் தாம் ஒவ்வொருவரும் பிரத்தியக்ஷரூபிகளென்றும், அப்படியாக சூரியனுக்கும் அதன் கிரணங்களுக்குமுள்ள அத்வைதசம்பந்தமே பிரத்தியேக நபர்களான தங்களுக்கும் சமஷ்டியாம் ஜனசமூகத்திற்கும் பொருந்துமென்றும் அனுபவ பூர்த்தியாகவுணர்ந்து உணர்ந்தபடி நடப்பார்கள். அப்பொழுது சமஷ்டி வியஷ்டி பாவமிரண்டுக்குமுள்ள பேதபாவனையற்றுப் போம். இந்தபேதபாவனை யற்றுப்போனால் எல்லாரும்சேர்ந்து குடியரசுசெலுத்தத்தடையென்ன? இதைத்தான் ப்ளேடோ (Plato) தமது (Republic) ரிபப்ளிக்என்னும்தத்துவ நூலில் நன்றாக ஐயந்திரிபற எடுத்துக்காட்டி ஸ்தாபித்திருக்கிறார்.

ஒரு தேசப்பொதுவுக்கு இந்த வுண்மையையனுஷ்டித்து வந்தால், அத்தேசத்திலுள்ள ஜனங்களின் பொது க்ஷேமத்தைப் பாராட்டும் அரசு குடியரசாகவேயிருக்கும். இந்த வுண்மையை சேதனாசேதனமான ஜீவன்களுக்கெல்லாம் பொருந்த அனுஷ்டித்தால், அப்பொழுது ஜீவேசுவரபேதம் என்பது அற்றுப்போம்: எல்லாரும் ஜீவன் முக்தர்களாய் விடுவார்கள். ஜீவன்முக்தர்கள் நிறைந்த தேசம் எப்பொழுதும் குடியரசாகவேயிருக்கும். இதுதான் ஜீவன்முக்திஸ்வபாவம். மனித சுதந்திரம் பூரணமாய் ஸ்தாபிக்கப்படின் அவன் ஒவ்வொரு விதத்திலும் ஸ்வயேச்சையாய் நடக்கச் சுதந்திரமுள்ளவனாக விருப்



பான். அப்பேர்ப்பட்டவனுடைய "ஸ்வயேச்சை" இக்காலத்து இராஜதந்திரவாய்ப் பேச்சுப் பேசுகிறவர்கள் ஸ்வயேச்சையைப் போல் ஊரார்தலையில் கல்லைப்போட்டு விட்டுத் தான் வாழவேண்டுமென்றும், ஏழைகளையேமாற்றித் தான் பிழைக்கவேண்டு மென்றும் இல்லாமல், "இச்சாசக்தி உமாகுமாரி" யென்ற சிவசூத்திரப்படி ஈசுவரசங்கல்பமெதுவோ அதுவே தமதுசங்கல்பமுமாமென்று ஈசுவர சங்கல்பத்தின் மகிமையையுணர்ந்து அதற்குத் தாமாகக் கட்டுப்பட்டு நடப்பார்கள். இப்பொழுது ஜெயிலுக்கும் தண்டனைக்கும், ஜட்ஜிக்கும் மாஜிஸ்திரேட்டுக்கும்பயந்து நடப்பவர்கள் அப்பொழுது தர்மாதர்மத்துக்குக் கட்டுப்பட்டு, கர்மாகர்மமென்கிற கர்ம பெந்தத்துக்கு அஞ்சி நடப்பார்கள். அயலானை ஒறுத்தால் தனக்கு ஆபத்து நேரிடுமென்று ஸ்வகாரிய துரந்தரராயிருந்து நடப்பவர்கள், அயலான் உண்மையில் தனக்கு அந்நியமாயின்றி இருவர் உள்ளத்துமுள்ள ஆத்மா ஒன்றாகவிருப்பதால் அயலானை அயலானென்று நினைக்கும்பேதபாவனை தனக்கு பெந்தத்தைக்கொடுத்து எண்சாண் உடம்புக்குள் தன் அகண்டமான அறிவைக் கட்டி யடக்கிவிடுமென்று அஞ்சி, உண்மையான சுதந்திரத்தை நாடி தன்னைப்போல் பிறனை நினைத்தலே தன் அறிவுக்கழகென்று அன்புவழிப்பட்டு நடப்பார்கள். இப்படி நடத்தலில் அசாத்தியம் ஒன்றுமில்லை. சணப்பன்வீட்டுக்கோழி தானே விலங்கிட்டுக் கொண்டதுபோல, சங்கல்பாகார ஜீவன் தானே பெந்தத்தை யுண்டுபண்ணிக்கொண்டு அதன்வலையில் சிக்கி அவதிப்படுகிறான். இந்த அவதியினின்றும் நீங்கும்விதம் என்னவுண்டோ அதுவே மோக்ஷவழி. ஸ்வதந்தரத்துக்கு இன்றியமையாதது அதுவே. இந்த மேலான பரதத்துவம், அமெரிகாவில் அனேகரால் உணர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் அதையுணர்ந்தொழுகும் சக்திபவர்களுக்குப் பூர்வஸம்ஸ்கார தோஷத்தினால் எளிதில் அமைவதாயில்லை. இந்தியர்கள் இதுவிஷயத்தில் உண்மையை யுணர்ந்தொழுக பூர்வ ஸம்ஸ்கார விசேஷத்தினால் அதிகமான சாதக சாதனங்கள் வாய்த்தவர்களாகவிருக்கிறார்கள். இந்த சாதகசாதனங்களை யனுஷ்டித்து அவர்கள் ஒழுகினால் தாங்களும் மேன்மையடைந்து ஸ்வதந்திரபுருஷர்களாவதோடு தங்கள்தேசத்துக்குமேன்மையும் அதனால் இதரதேசத்தார்களுக்கு வழிகாட்டிகளாயிருக்கும் உத்தமவாழ்வும் கீர்த்தியும் பெற்றுவிளங்குவார்கள். இல்லாவிடில் தூங்கி வழிந்துகொண்டிருக்கவேண்டியதுதான். வாச்சாமஹோசரமாய்ப் பேசிவிட்டு காரியத்தில் வழவழவென்றிருப்பதில் பிரயோசனமில்லை. "கல்வியைக்கல்: கற்றபடிநில்" என்ற மூதுரையை யனுசரித்து மனசு, வாக்கு, ஒழுக்கம் அல்லது நடத்தை மூன்றும் ஏகமாய்ப் பொருந்த நடக்கவேண்டும். அப்படி நடந்துவந்தால், அவர்கள்,

"மனஸ்யேக வசஸ்யேக, கர்மண்யேகமஹாத்மனாம்"

என்னும் மூத்தோர்சொல் வாக்கியப்படி மஹாத்மாக்களாகப் பெருமைபெற்று உலகுய்யவும் வழிகாட்டிப் பெருவாழ்வு வாழ்வார்கள். அப்படிக்கில்லாது பணமே பெரிதென்று பொய்யும் பித்தலாட்டமும் புனைசுருட்டும் கற்று பொய்வாதம்செய்து பணஞ்சுமக்கும் கழுதைகளாகவே யிருப்பார்களாயின், மன மொழி மெய்களும் ஒன்றுக்கொன்று பொருந்தாது வேறுபட்டிருக்கும் இந்த துராத்மாக்கள் தாங்களுங்கெட்டு தங்களைச் சேர்ந்தாரையும் கெடுத்து ஊரையும் பேரையும் ஒருங்கக்கெடுத்து உத்தமமான தம் ஸ்வஜாதீய தர்மத்தை இழந்து ஜாதிமதப் பிரஷ்டர்களாகி 'குலத்தைக் கெடுத்தது கோடரிக்காம்பு' என்றதுபோல் தம்ஜாதியைக்கெடுத்த கடாமுனிகளாய் மரமட்டைகளில் தொத்திப் பிழைத்து எடுத்தஜன்மம் பாழாய் பழிபாவத்துக்காளாய் பூதப்பிரேத பைசாச உலகங்களில் வாழ்ந்துழலவேண்டியவர்களாயிருப்பார்

கள். இந்த இரண்டுவழியில்எந்தவழியைஅனுசரிப்பதென்பதை ஒவ்வொருவரும் தமக்குள் தாமே பரியாலோசித்துத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். ஊருக்கு ஒப்புக்கு நடந்துகொள்ளவேண்டிய காரியமல்ல இது. உயிருக்கு உடல் எப்படியோ அப்படிப்போல ஒரு ஜாதிக்குத் தேசம் க்ஷேத்திரம்: ஒரு ஜாதிக்குத்தேசம் எப்படியோ அப்படி உண்மையான மனிதனுக்கு உலகம் க்ஷேத்திரம்: உண்மையான மனிதனுக்கு உலகம் எப்படியோ அப்படிப்போல உண்மையான ஆத்மனுக்கு (ஆத்மசந்தான முதிர்ந்தபுருஷனுக்கு) விராட்ரூபியான பகவான் க்ஷேத்திரம். இந்த விராட்ரூபியின் உயிர்தான் சேதனுசேதனமான எல்லா ஜகத்திலுள்ள கல்மண் புல்பூண்டு பிராணிகளின்உயிர்களும். அப்படிப்பட்ட விராட்ரூபியின்வாக்கே "பொதுஜனவாக்கு"என்றுசொல்லும் தெய்வீகவாக்குக்குச் சமானமானவாக்கு. இந்த வாக்கின் மஹத்துவத்தை ரிஷிவம்சத்திற் பிறந்த நாம் அறிந்துணர்ந்து நடக்கக்கூடியதுபோல் பிறர்க்குஅது அவ்வளவு எளிதாகவிராது. ஆகையால் "விராட் உபாசனைக்கு" சமானமான (Public life) பொதுஜனக்ஷேமத்துக்குழைக்கும் உத்தமவாழ்வை, கேவலம் ஸ்வகாரியத்துக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஸ்வாமி காரியத்தைவழவழவென்றுவிட்டுவிடுகிறவர்களைப்போல் கொடிய துராத்மாகிராதகரினும் இல்லையென்பது திண்ணம். இதை நம்மவர் உணர்ந்தொழுகவேண்டும்.

மிஸ்டர் கார்லிக்குப்பின்பு, ஒருவர் இந்தியாவில் விலைவாசியதிகப்பட்டிருப்பதைப்பற்றியும், டாக்டர் டி. எஸ். இராமச்சந்திரராவ்அவர்கள் சாஸ்திரப் பயிற்சியும் ஜனசமூகத்துக்குழைத்தலும் என்பதைப்பற்றியும் வியாசமெழுதி வாசித்தார்கள். இஃதோடு முதல் நாள் கூட்டம் முடிவுக்குவந்தது.

மறுநாள் கூடிய கூட்டத்தில் காலையில் டாக்டர்ஷ்ராடர் என்பவர் இந்தியா முழுமைக்கும் பொதுவானபாஷையொன்று வேண்டியதைக்குறித்து ஒருவியாசம்வாசித்தார். அதில் ஸம்ஸ்கிருதத்தை இல்குவாக்கி உபயோகிக்கலாமென்று சொன்னார். சாயந்திரம் டாக்டர் டி. எம். நாயர் இந்தியாவிலுள்ள ஏழைகளை காப்பாற்றவேண்டியதின் அவசியத்தைப்பற்றி ஒருவியாசம் வாசித்தார்.

## CURRENT TOPICS AND NOTES.

## காலவிசேஷங்களும் குறிப்புகளும்.

### PLAGUE PREVENTION.

### பெருவாரிக் காய்ச்சலைத் தடுப்ப தெப்படி?

இந்தியாவில் உண்டாகும் கொள்ளை நோய்களில் ஜனங்களை அபரிமிதமாய்க் கொள்ளைகொள்ளும் நோய்கள் மூன்று. அவை: (1) வாந்திபேதி அல்லது 'கலரா' (2) அம்மைநோய், (3) பெருவாரிக்காய்ச்சல் என்று சொல்லும் 'ப்ளேக்'. இவைகளில் 'ப்ளேக்' என்னும் பெருவாரிக்காய்ச்சலின் கொடுமை இந்தியாவில் இப்பொழுது அதிகமா யிருந்துவருகிறது. இந்த நோயைத்தடுக்க வழியென்ன? இது பரவாது தடுக்க மார்க்கமென்ன? இதைப்பற்றி பெங்களூர் ஆனரெரி ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜியன் ஸ்ரீ பி. எஸ். இராமச்சந்திரஐயர் அவர்கள், மைலாப்பூர் ரனடேஹாலில் ஒரு பிரசங்கம் செய்தார். தென்னிந்தியா அஸோஸியேஷன் சங்கத்தார் வேண்டுகோளின்பேரில் ஸர்ஜியன் ஜெனரல் பி. எச். பென்ஸன் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தார்.

ஸ்ரீ இராமச்சந்திர ஐயர் 'ப்ளேக் கமிஷன்' மெம்பராய், பம்பாயில் 'பாரெல்' என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சாஸ்திரபரீக்ஷை சாலையில் பழகி ப்ளேக்மூலம் இன்னதென்று அறியச் சிறிதுகாலம் உழைத்துவந்தார். அவர் சொன்னதிலிருந்து 'ப்ளேக்'வியாதி மனுஷனைப் பற்றின தல்லவென்றும், ஆனால், எலியைப்பற்றிய அவ்வியாதி, ஈக்கள் மூலமாய் மனுஷனைப் பாதிக்கிறதென்றும் தெரியவந்தது. ப்ளேக்வியாதிபரவுவதற்கு மூன்றுவழியுண்டு என்று சொல்லலாம். (1) பூமியிலிருந்து புழுதிமூலமாகப்பரவலாம். (2) மனிதன் உட்கொள்ளும் ஆகாராதிமூலமாப்பரவலாம். (3) ஒரு மனிதனிடமிருந்துமற்



றொருவனுக்குத் தொத்திப்பரவலாம். இந்த மூன்று விதத்திலும் ப்ளேக் வியாதி பரவுவதாக எண்ணக் காரணமில்லையென்று காட்டினார்.

(1) பூமியிலிருந்து புழுதிமூலமாகப்பரவ, அந்த வியாதியின் ஜீவஅணு (Microbe) மண்ணில் புழுதியில் வசிப்பதில்லையென்று பரீக்ஷித்தறிந்திருக்கிறார்கள்.

(2) ஆகாரத்தின் மூலமாகவும் அது பரவுவதில்லை. ஏனென்றால், உணவுப் பொருள்களின் மூலமாகத் தொத்திப்பரவும் குணம் அந்த ஜீவஅணுவுக்கில்லை.

(3) மனிதனுக்கு மனிதன் தொத்திப்பரவலாமோவென்று பார்த்தால், அதுவும் காலற்ற கதையாகத் தான்சொல்லவேண்டும். ஏனென்றால், 'ப்ளேக் மைக்ரோப்' மனிதன் தேஹத்திலிருந்து தொத்திப்பரவும் குணமுள்ளதாகவுமில்லை.

பின்னை எப்படித்தான் இந்த வியாதி பரவி ஆயிரக்கணக்கான ஜனங்களைக் கொள்ளைகொள்கிறதென்று ஊன்றி விசாரிக்குமளவில், இது மனிதனைப்பற்றி மனிதனிலுதித்துப் பரவும் வியாதியல்லவென்று தெரிகிறது. ஆனால் இதன் ஸ்வபாவம்தான் என்னவெனில்: 'ப்ளேக்' முக்கியமாய் எலியைப்பற்றி எலியின் தேஹத்திலுதிக்கும் ஒரு வியாதி. இந்தவியாதி எலியினிடத்தே முதலில் உண்டாகிறது. எலியினிடத்திலுண்டானது ஈக்கள் எலியின்பேரிலும் மொய்த்து மனிதன்பேரிலும், அவன் உண்டுடுத்துப்புழங்கும் துணிமணிகளின்பேரிலும்மொய்ப்பதால், அந்த வியாதிவித்து ஈக்கள் மூலமாகப்பரவுகிறது. 'ப்ளேக் என்னும் பெருவாரிக்காய்ச்சலின் ஜீவஅணுக்கள்ஈக்களின் மூலமாகப் பரவுந்தன்மை வாய்ந்ததாயிருக்கிறது. அம்மைகுத்துகிறவன். சதையைக்குத்தி அம்மைப்பாலை இரக்தத்தில் கலக்கிறுப்போல், ஈக்கள், ப்ளேக்வியாதி கொண்ட எலிகளின்மேல் மொய்த்து அதன் சத்தைக்கிரகித்து மனிதன்மேல் மொய்த்து அதன் துதிக்கைபோன்ற கைகளின் நுனியிலுள்ள கூர்மைவாய்ந்த நுனிகளால், மனிதன் சதையைக் குத்தி ரக்தத்தில் கலக்கச் செய்கிறது. ஆகையால் ப்ளேக்வியாதிதொலைய, எலிகளைத் தொலைக்கவேண்டும். ஏனெனில் அந்தக் கொள்ளைநோய்க்கு மூலஸ்தானமாயிருப்பது எலிகளே. எலிகள் இருந்தால் அவைக்கு ஸ்வபாவமான அந்தவியாதி அவைகளைப் பீடிக்கும்தான். எலிகள் மனிதன் வீட்டிலிருப்பதாலும், ஈக்கள் எல்லாவற்றிலும் மொய்க்கும் ஸ்வபாவமுள்ளவைகளாக விருப்பதாலும், இந்த வியாதி ஈக்களின் மூலமாகப் பரவிவருவதற்குத் தடையில்லை. சுத்தமான இடத்தில் ஈக்கள் அதிகமாக இருப்பதில்லை. அழுக்கு கசுமாலம் உள்ள இடங்களில் ஈக்கள் அதிகமாய் மொய்க்கும். ஆகையால் ஈக்களைப்போக்க வீடுவாசல்களையும் சாக்கடைகளையும் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் சுதேசிகளில் சுத்தமாய் வசிப்பவர்களென்று பேர்பெற்ற பிராம்மணர்களும் ஊழலாயிருக்கிறார்கள். சமைக்கிற இடத்தைமட்டும் மெழுகிவிட்டு, கொல்லை, முற்றம், சாக்கடை முதலான இடங்களை அழுக்கு நிறைய வைத்திருக்கிறார்கள். இந்த அழுக்கு இருப்பதற்கு அடையாளம் ஈக்கள் அவர்கள் வீட்டில் நிறைய இருப்பதே. அன்றி வீடுகள் எலிகள் வாசத்துக்கு வசதியாக விருக்கிறது. எலிகளுக்கு இத்தேசத்தார் வீடுகளில் ஆகாரம் பூர்த்தியாகக்கிடைப்பதா யிருப்பதால் அவை, ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாகப் பல்கிப் பெருகுகின்றன. இதற்கு வியோசனமாகப் பூனைகளை வளர்க்கவேண்டுமென்றும் பூனைச்சந்தையேற்படுத்தி நன்றாக எலிபிடிக்கும் பூனைகளுக்கு வெகுமதி கொடுக்கவேண்டுமென்றும் ஸ்ரீ இராமச்சந்திரய்யர் சொன்னார். அதற்கு ஸர்ஜியன் ஜெனரல் பென்ஸன் நன்றாகப்பதில் சொன்னார். பூனையை வளர்த்துவந்தால், வளர்க்கும்பூனைக்கு வயிறுநிறைய ஆகாரம் கிடைப்பதாயிருப்பதால் அது எலிபிடிக்க முயலுவதில்லை. வீட்டில் பழகும் பூனைக்கு எலிபிடிப்பதைவிட, சமையலுள்ளிலிருக்கும் பாலை வீட்டுக்காரியை ஏமாற்றிக்குடிப்பது இலகுவாயிருக்கிறது. இந்தப் பரீக்ஷை நாம் செய்து பார்த்ததில், வளர்க்கும பூனை சாப்பாட்டு நேரமறிந்து எதிரேவந்துட்கார்ந்து கொண்டு வெகு செல்வமாய்க் கொஞ்சுவதுபோல மியூ, மியூ வென்று கத்தி 'என் பங்கு எனக்கில்லையா?' என்று கேட்பதுபோல சத்தம் போட்டு இலைக்கு முன்பால் உட்கார்ந்துகொண்டு பூனைத்தபஸ் செய்கிறது. அதைக் கவனிக்காதுவிட்டால், எழுந்து சுற்றிக்கொண்டுவந்து வாலைத்தூக்கிக்கொண்டும் முதுகை வளைத்துக்கொண்டும் மேலே விழுந்து அதன் மிருதுவான சர்மத்தால் எஜமானைத் தேய்க்கிறது. அதன் ஜாலத்துக்குவந்து சிறிது ஆகாரம் கொடுத்தால் தின்றுவிட்டுத் தூங்கப்போய் விடுகிறது. ஆகையால் வளர்க்கும்பூனை எலிபிடிப்பது, உலகப்பற்றுள்ளார் ஸ்வாமி காரியம் பார்ப்பதுபோல் "வழவழா"த்தான். ஆகையால் தேஹசுத்தம் வீடுவாசல் சுத்தத்தால் எலிக்கும் ஈக்களுக்கும் இடங்கொடுக் காமலிருந்து மனோசுத்தத்தால், தப்பித்தவறி அந்த வியாதியின் ஜீவஅணுபற்றினல்

அது நம்மைப் பாதிக்காதபடி திடகாத்திரம் பெறுவதே ப்ளேக் பரவாமலிருக்கப் பரமசாதகமானவழி. மனோசுத்தி யில்லாவிட்டால் மற்றதெல்லாம் முற்றும் பலிக்காது.

---

இந்தியா கௌன்ஸில்பில், லார்ட்ஸ் சபையில் பாஸாய் விட்டது. சென்னை, பம்பாயைத் தவிர மற்றஇராஜதானிகளுக்கு எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் கொடுப்பதற்கான மூன்றாவது பிரிவை லார்ட்ஸ் சபையார் அந்த மசோதாவினின்றும் நீக்கிவிட்டார்கள். அதைப்பற்றி இந்தியாவெங்கும் பொதுக்கூட்டங்கள்கூடி அந்தப்பிரிவில் கண்டவிஷயம் மசோதாவிலிருக்கவேண்டுமென்றும், அதைநீக்கினது தப்பென்று ஆக்ஷேபித்தும் விண்ணப்பங்கள் அனுப்பிவருகிறார்கள். அந்தமாதிரி சபையொன்று சென்னையிலும் கூடியது. சீமையிலுள்ள கவர்ன்மென்டாருக்கு லார்ட்ஸ்சபையில் அவர்கள் கக்ஷிபலம் அதிகமாயில்லை. ஆதலால் காமன்ஸ்சபையில் அந்தமசோதா ஆலோசனைக்குவரும்பொழுது மூன்றாவது பிரிவை மறுபடியும் சேர்த்துவிடுவார்கள். சேர்த்து பாஸ்செய்துவிட்டால் அந்தமசோதா மறுபடியும் லார்ட்ஸ் சபையார் சம்மதத்திற்குப்போகும் அப்பொழுதுஅவர்கள் சம்மதிக்காவிட்டால், இருசபையாருக்குமுள்ள இந்த வித்தியாசத்தினால் வில்லங்கம்நேரிடும். அப்பொழுது மசோதா தடைபட்டு நிற்கநேரிடும்.

---

அடுத்த எப்பிரல்மீ 17உ இராஜப்பிரதிநிதிசபையில் சட்ட நிருபணமந்திரியாகவிருக்கும் ஸர் எர்ல் ரிச்சர்ட்ஸ் அவர்களுடைய 5-வருஷநியமனம் முடிவுபெற அவர் சீமைக்குப்போகிறார். அவருடைய ஸ்தானத்தில் இப்பொழுது வங்காளத்தில் அட்வொகேட் ஜெனராலாயிருக்கும் மிஸ்டர் எஸ். பி. ஸிம்ஹா என்னும்பிரதாபபாரிஸ்டர்,சட்டநிருபணமந்திரியாக நியமிக்கப்பட்டிக்கிறார். இந்தியா மந்திரியின் சிபார்சின்பேரில் மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியவர்கள் இவரை அவ்வேலைக்கு நியமித்துவிட்டார். இவர் வங்காளதேச சுதேசியாதலால், லார்ட்மார்லியின் வாக்கு இவர் நியமனத்தால் நிறைவேறினதாகும். இவர் ஒரு பெரியஜமீன். ஒரு பெரியஜமீனை தார்வம்சத்திலுதித்தவர். இவருக்குமாசம் ஒன்றுக்கு 30 அல்லது 40 ஆயிரம் ரூபாய் வருமானம் உண்டாம். சட்டநிருண மந்திரியின் சம்பளம் மாசம் 1-க்கு ஆறாயிரத்துச்சொச்சம்தான்.

---

## திருமயிலை மஹோற்சவம்.

### 5-ம் திருவிழா, வ்ருஷபவாஹன சேர்வைச்சிறப்பு.

திருமயிலை கபாலீசுவரர் கோயிலில் பங்குனி உற்சவம் வெகு விமரிசையாக நடந்து வருகிறது. இவ்வுற்சவத்தின் ஐந்தாம் திருவிழாவாகிய ரிஷபவாஹன சேர்வை மார்ச்சுமீ 31உ புதன்கிழமையிரவு வெகு நன்றாக விருந்தது. அப்பொழுது கண்டகாட்சிகளை நினைக்கில் நாமிருப்பதுபூலோகம்தானோ அல்லது கைலாசமோவென்று இன்னமும் சந்தேகம் தோன்றுகிறது. இந்தத் திருவிழாக்கள் ஆகமவிதிப்படி மஹான்கள் யோகசமாதியில் அனுபவித்த ஸ்வானுபவ யோகமாம் தத்துவ ஞான தரிசனத்தை ஜீவகோடிகள் உய்யவென்று, எல்லாருக்கும் விளக்க இத்திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டன. சனிக்கிழமைதினம் காலமே கொடியேற்ற சடங்கு வெகு நன்றாயிருந்தது. அது குண்டலியிலிருந்து "சுத்த சர்வவியாபக பிரம்மஜ்ஞான அறிவாகாசமயமான" சிவலிங்கரூப கபாலீசுவரர் சந்திர சூரியாக்னி யென்னும் இடை பிங்கலை சுஷும்னை நாடிகளூடேசென்று கபாலமத்தியமாம் பிரம்மரந்திரத்திலேறி நிற்கும் அவஸ்தையில் தத்பராத்மக ஸ்தானமாம் மஸ்தகமத்திய ரந்திரம் வரையிலேறி அங்கே அறிவுமயமாய் நிற்பதைத் தெரிவிப்பதாயிருந்தது.

"சுத்த சர்வவியாயக பிரம்மஜ்ஞான அறிவாகாசமயமாய்" விளங்கும் கபாலீசுவரர் தாம் "அறிவாகாசமயமாத்திரமாய் நின்று" "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடி, எல்லாம் தம் சக்தியாம் அறிவுமயமேயன்றி வேறல்லவென்று போதிப்பான் திருவிழா நடத்துகிறார். இப்போதனை பலிக்குமாறு, இக்காலத்தில் "மாஜிக்லான்டர்ன்" ஜாலக்கண்ணாடி முதலிய சாதனங்களைக்கொண்டு பாமரஜனங்களுக்கு அறிவூட்டுவதுபோல, பெரியோர்கள் ஏற்படுத்திய ஆகமவிதிப்படி தந்திரமாய் தத்துவபோதம்செய்து வருகிறார். தினம் யாகசாலையில் ஹோமாக்னி குண்டத்தில் (சுத்தசர்வ வியாபக பிரம்மஜ்ஞான அறிவாகாசமயத்தின் அறிகுறியாயுள்ள) சுத்த முத்த நித்தியாக்னி வளர்ந்துவர, ஸ்வாமி தன்னைத்தானே யஜ்ஞம் செய்து தானே இப்பிரபஞ்சமெல்லா மாக யாகத்திலிருந்துற் பன்னமாய் விளங்குகிறா ரென்பதை நன்றாக விளக்குகிறார். இந்தக்கருத்தின்படி சுவாமியானவர் முதல்நாள் யாகாக்னியிலிருந்துதித்து பிரணவ ஸ்வரூபியாய் (எல்லாஉயிரும் தானாய்) விளங்குவதைக்குறிக்க் பச்சைநிறத்தை உபாதியாகக்கொண்டு, எப்பொழுதும் பசுமைநீங்காத புன்னைமரநிழலில் திருக்கோலங்கொண்டு எழுந்தருளி பக்த



கோடிகளுக்குச் சேர்வை சாதித்தருளினார். இது ஸர்வபூதங்களிலும் உயிர்க்குயிராய் வசிப்பவர் தாமேயென்று காட்டியதுபோலும். "ஓங்காரி யென்பாள் அவளொருபெண்பிள்ளை, நீங்காத பச்சை நிறத்தையுடையவள, ஆங்காரியாகியே ஐவரைப்பெற்றிட்டு, றீங்காரத்துள்ளே யினிதிருந்தாளே" என்பது இங்கே தியானிக்கத்தக்க திருமந்திரோபதேசமாம்.

இரண்டாம்நாள் ஸ்வாமி சந்திரப்பிரபையில் எழுந்தருள, அம்மன் பரைவாக்காம் கிளிவாஹனத்திலும், சுப்பிரமணியர் பிரத்தியகாத்மனும் ஹம்ஸவாகனத்திலும் எழுந்தருளிசேர்வை சாதித்தார்கள். பகவான் "சந்திரபிம்பம்" போல் தேஜோமயமாய் "விளங்கிய ஜோதி மத்தியில் "ஜோதிர்அந்தர்க்கதம்மன:" என்ற சுருதிவாக்குப்படி "திரிஜகத் சிருஷ்டிஸ்திதிவ்யஸனகர்ம கிருத்" என்றுள்ளவாறு ஜகன்நாதனாய்விளங்க, அம்பாள் சிருஷ்டிசைதன்னியமாம் பரைவாக்காகவும், சுப்ரமண்யர், ஹம்ஸனும் சுத்தாத்மனாகவும் விளங்கலுற்றனர்.

பகலுண்டானால் இருளும் அதைத் தொடர்ந்தேவரும்; உயிருண்டானால் உடலும் அதைத்தொடர்ந்தேவரும். அதுபோலவே அடுத்தநாள் தான் உயிரேயன்றி உடலும் தானேயென்று காட்டுவான் ஸ்வாமி குண்டோதரன் மீதிலும், அம்பாள் குண்டோதரிமீதிலும், சுப்ரமணியம் பத்மாசுரன்மீதும் ஆரோகணித்து சேர்வை தந்தருளினார்கள். வாஹனமெல்லாம் உபாதிலக்ஷணங்களாம். ஆத்மன் ஜீவனாகி, உடல்பெறவும் இராகத்துவேஷாதி அவஸ்தாத்மகனாகிறான். சந்திரன், கிளி, ஹம்ஸன் இவை இந்திரியாத்மகத்தை விளக்கும் இந்திரியாத்மக உபாதிகளாம்.

நான்காம்நாள், ஸ்வாமி ஆமையின்பேரிலுள்ள ஸர்ப்பவாகனத்தில் ஆரோகணிக்க, அம்பாள் காமதேனுவாகனத்திலும், சுப்பிரமண்யர் ஆட்டுக்கடா வாஹனத்திலும் ஆரோகணித்தருளினார்கள். இது சதுரந்தக்கரணாத்மகமாம் மனஸ் புத்தி சித்தம் அகங்காராதிகளோடு கூடியஜீவனைக்குறிக்கிறது. ஆமை இந்திரியாத்மகத்திற்கு அதிஷ்டானம். அதன் பேரிலுள்ள ஏழுதலை ஸர்ப்பம் சப்தலோக பயமாக விளங்கும் லோகயாத்ராலக்ஷண சதுரந்தக் கரணத்துக்கு அறிகுறியாம். காமதேனு ஜீவாத்மாவின் இச்சாசக்தி, ஆடு கிரியாசக்தி, ஸர்ப்பம் ஞானசக்தி.

ஐந்தாம்நாள் ரிஷபவாஹனம்: இது தமோரஜஸ் ஸத்வம் என்னும் முக்குணங்களுக்கும் ஆதாரமும் அதிஷ்டானமுமான திரிகுணாத்மகமாம். மனச்சாக்ஷிக்கு இருப்பிடமாயுள்ளது. சதுரந்தக்கரணங்களுக்கும் சாக்ஷியாயுள்ள உட்கரணம் இதுவாம். இதனுண்மையையுணர்ந்தார் இத்திருநாளின் விசேஷத்தை மதிப்பார். இது நாக்குமத்திய விசுத்திஸ்தானத்தில் அறிவாகாசமயம் மனச்சாக்ஷி ரூபமான திருகுணாத்மகமாய் விளங்குவதைக் குறிப்பதாம். மனச்சாக்ஷி ஜோதிர்மயமாய் விளங்குவது பற்றி வெள்ளிரிஷபம் இதற்கு அறிகுறியாயிற்று. நேற்றிரவு காட்டிய பாணவேடிக்கைகளில் ரிஷபவாஹன சேர்வையின் சூக்ஷ்மத்தை விளக்குவான் ஜோதிர்மயமான வ்ருஷபம் ஒன்றுசெய்து அதில் ஜோதிமயமான திருவாசியொன்று வைத்துஅதனூடே "சுத்தசர்வவியாபக அறிவாகாச மயமான" ஸ்வாமி ஆகாசலிங்கமாய் விளங்குவதைக்காட்டும்படியான பாணவேடிக்கை வெகு நன்றாயிருந்தது. அங்கே ஜோதிவிருக்ஷம், அக்னிக்கோட்டையின் நடுவே விளங்கும் ஆதிபராசக்தியாம் நீலப்பிரகாச பரஞ்சோதி வெளிச்சம், இடகலை, பிங்கலை, சுஷும்னை நாடிகளாம், சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரசக்திகள் நடமாடும் ஆகாசவீதியொத்தசூன்னியாகாரத்திரிபுடிஞானமயாகாசநாடிகள்(நடமாடும் ஆகாசவீதி 'நாடி') வாண வேடிக்கைகளாகக் காட்டப்பட்டன. கடைசியில் சொன்னமுக்கியநாடிகள் மூன்றும் ஒருபெரியசர்ப்பத்தின் இருபக்கங்களிலும் இடகலைபிங்கலைநாடிகள்ஜோதிர்மயமாக ஓடிநிற்க அவ்விரண்டிற்கும் நடுவே சுஷும்னா என்னும் சூன்னியநாடி சூன்னியாகாரமாய்விளங்கியது. இந்த இரகசியங்களெல்லாம் நாம்இட்டுக்கட்டினவையல்ல. ஆகமங்களையாராய்ந்தால் இவை வெகு நன்றாகவிளங்கும். திருநாளுக்குவரும் பக்தஜனங்களுக்கும்இவை தெரியாதவையல்ல. இங்கிலீஷ்படித்துவிட்டு ஸ்வபாஷை, ஸ்வமதம், ஸ்வசிந்தை, ஸ்வஞானம் இதையெல்லாம் பரிகொடுத்துவிட்டு "கானமயிலாடக்கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப்பாவித்து" நடித்ததுபோல் அரைகுறையாய் இங்கிலீஷ்படித்துவிட்டு தாம் "இங்கிலீஷ்காரர்" ஆய்விட்டதாக நடிக்கும் நவநாகரீகபுஞ்சங்களைத்தவிர மற்றவர்கள்இதையறிந்தேயிருக்கிறார்கள். உதாரணமாக ரிஷபவாஹன சேர்வையன்று ஆயிரக்கணக்காய் அச்சிட்டு "பாமனையேபாடுவார் பக்தஜனசபையார்களில் ஒருவரால் தரிசனத்துக்கு வந்த சிவநேசச் செல்வருக்கு இலவசமாய் வழங்கிவந்த பரமசிவஸ்தோத்திர பஞ்சரத்னகீர்த்தனம்"என்னும் சிறுபுஸ்தகத்திலிருந்துதெய்வவணக்கச் செய்யுளைமட்டும் கீழே பிரசுரிக்கிறோம் அதிலிருந்து ரிஷபவாஹன சேர்வைக்கு வந்த பக்தகோடிகளின் உள்ளக்கருத்து உணர்வதெளிதாகும்.

"வேதாந்த நிலையாகிச் சித்தாந்தத்தின் மெய்யாகி
[சமரசத்தின் விவேகமாகி
நாதாந்த வெளியாகி முத்தாந்தத்தின் நடுவாகி
[நவநிலைக்கும் நண்ணுதாகி,
மூதாண்ட கோடி யெல்லாந் தாங்கிநின்ற முதலா
[கிமனுநீத முத்தியாகி,
வாதாண்ட சமயநெறிக்கமை யாதென்று மௌன
[வியோமத்தினிடை வயங்குந் தேவே!"

என்று எடுத்து திருவருட்பிரகாசவள்ளலார் திருவடிவாழ்த்துக் கூறியிருக்கின்றனர்.

மேலும் முதல் கீர்த்தனத்தில் 'புகலருமயிலை வாழ் புண்ய கபாலீசனும், சுகஞான சுயஞ்சோதியே தோன்றுநீதியே!"

[நின்று
"நனைவிற் சுழுத்தியில் நாட்டங்கொண்டே தான்
தனையறிந்தவருடன் சார்ந்துணரச் செய்யின்று." (1)

"சருவகேவலாவஸ்த்தை சந்ததமடையாது
நிருவிகற்பஞானமாம்நிலைதருவாயிப்போது !" (2)
[மேவா
"சகஜ நிஷ்டையைக் கூடும் சான்றோரிடத்தின்
தகநிலைபாசண்முகனைம்புலனடக்கவா!" (3)

என்றுபாடியிருக்கிறார்கள். இதை எத்தனைஜனங்கள் பஜனைக்கோஷ்டியில் பக்தர்கள் செய்யும் உருக்கமான பஜனைமூலமாய்க் கேட்டு மனங்களித்து உள்ளனர்! கடைசிக்கீர்த்தனையில் "சங்கற்பம் விட்டிரு மனமே, தானுய்வரும் சாதனைதினமே" யென்று பல்லவி பாடியிருப்பதொன்றேபோதும் உண்மையாளர்க்கு உய்யவழிகாட்ட.

---

மைசூர் திவானாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ, வி. பி. மாத்வராவ், ஸி.ஐ. இ. அவர்கள் இந்த மார்ச்சுமீ 31உயோடு அவரது திவான் வேலையை விட்டு நீங்கிப்போக நேரிட்டுவிட்டது. அவருடைய ஸ்தானத்தில் அவருக்குப் பதிலாக ம-ா-ா-ஸ்ரீ, டி. அனந்தராவ் அவர்கள் திவானாக நியமிக்கப்பட்டு வேலைபார்த்துவருகிறார். ம-ா-ா-ஸ்ரீ, நஞ்சுண்டையா அவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, பட்டண்ண செட்டியவர்களும் கௌன்ஸில் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமாதவராவ் திவான்வேலை பார்த்துவந்தது அவ்வளவு மேலாகவில்லை அவர் துரைத்தனத்தில் அனேக ஊழல்கள் உண்டென்று சொல்கிறார்கள். மாதவராயர் வாயில்தேனொழுகப்பேசும் வல்லமையுள்ளவரென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் "கை கர்ணைக்கிழங்கு" என்று சொல்கிறார்கள். மன,மொழி, மெய்கள் ஒன்றுபடாது பேதப்பட்டு நிற்குங்கால், ஆத்மா துர்வழியில் நிற்பது நிச்சயமென்பதற்கு இது ஒரு உதாரணம்.

---

இந்தியா கௌன்ஸில்ஸ்பில், காமன்ஸ் சபையில், இரண்டாந்தட்வை வாசிக்கப்படலாயிற்று. அப்பொழுது எதிர்க்கக்ஷியைச் சேர்ந்த மிஸ்டர் பால்ஃபார் அவர்கள், இந்தியாசம்பந்தப்பட்ட விஷயத்தில், பார்லிமெந்துசபையார் கக்ஷிப்பிரதிகக்ஷி கட்டிக்கொண்டு இரண்டுபட்டு நிற்கிறார்கள் என்பதை உலகறியக்காட்ட இஷ்டமில்லாது அந்த மசோதாவுக்கு விரோதம் செய்யாமலிருக்கிறார்களேயன்றி, அவரைச்சேர்ந்த எதிர்க்கக்ஷியார், இந்தியா சீர்திருத்தங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் சிறிதும் அச்சீர்திருத்தங்கள் செய்ய இசைந்தவர்களாகவாவது, அவற்றின் பொறுப்பைவகிக்க இஷ்டமுள்ளவர்களாகவாவது இல்லையென்று நன்றாக வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன், என்று சொன்னார். இப்பொழுதுள்ள லிபரல்கக்ஷியாருக்குப் பின் எதிர்க்கக்ஷியார் அதிகாரத்துக்கு வரநேரிட்டால் அவர்கள்இந்தியா விஷயத்தில் எவ்வளவு அனுகூலமாக விருப்பார்களென்பதைக் காட்ட இவர் இப்படிப் பேசினார் போலும்!

---

இராஜப் பிரதிநியவர்கள் சட்ட நிரூபண சபையில், மிஸ்டர் கோக்லே முதல் எல்லாரும் இந்தியா சீர்திருத்த ஏற்பாட்டைப்பற்றி அவரவர் அபிப்பிராயத்தை வெளியிட்டுப்பேசினார். லார்ட்மார்லி கோக்லே பேச்சைக் கேட்டுக்கொண்டு இச்சீர்திருத்தங்கள் செய்யத்தலைப்பட்டுவிட்டார் என்று சிலர் கட்டும் பழிச்சொல் முற்றும் பொருந்தாதென்று, மிஸ்டர்கோக்லேமட்டுமல்ல, இராஜாப்பிரதிநிதியவர்களுங்கூட நன்றாயெடுத்துக் காட்டிப் பேசினார். இப்பொழுது லார்ட் மார்லி செய்யவிருக்கும் சீர்திருத்தங்களுக்குக் கெல்லாம் இந்தியாகவர்ன்மெண்டார் முந்தி உடன்பட்டே யிருக்கிறார்களென்று லார்ட் மின்டோ அவர்கள் நன்றாயெடுத்துச்சொன்னார்.

*"Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you find it," But "Make your choice and stick to it till you reach the End."*
ஸத்யம் வத,—**Speak the Truth.**

**"Hitch Your Wagon to a Star"** **"To Thine Own Self be True"**




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்சத்.] [Good is Love: Knowledge is Power. *Aum*
ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம் **17.**] **1909**-ஹு ஏப்ரல்மீ, ஸௌமியஹு சித்திரைமூ [சஞ்சிகை **4.**

## The Up-Building of a Nation's Happiness.

### "THE CHARACTER OF THE INDIVIDUAL IS THE CHARACTER OF THE NATION."

"You, I doubt not, hope to take part in the stir and movement and to share in the shaping of the nation, in promoting its unity and building its happiness. The up-building of nation's happiness is not the work of a day, nor of many a decade. It is a great work (so long as it be Heavenwards), and it is worthy of your best endeavour, but it can only be achieved by infinite labour, infinite sacrifice and subordination of self. And You?—Can you rise to the occasion? A Nation can only be strong if its component parts are strong. Its conditions of life can only be healthy, if its manhood be upright, virile, loyal and true; for the character of the individual is the character of the nation. Each individual citizen is one of the blood corpuscles of the nation, and just as in the human frame, if the blood corpuscles are unhealthy or diseased, the energy of the whole body will languish and its capacity for good work be reduced; So the failure on the part of each one of you to rise to the responsibilities of citizenship, will be a clog on your country's progress and a hindrance to the happiness of your fellow-men."—*The Chancellor's Address to the Graduates at the recent Convocation of the Madras University.*

## தேசசமஷ்டியின் யோகக்ஷேமம்.

---

"அப்ராப்த ப்ராபணம்யோக:
க்ஷேமோ லப்தஸ்ய பாலநம்."

பெறலரும் பேறுபெறல் யோகம்: பெற்றதைக் காப்பாற்றல் க்ஷேமம். ஆகவே யோக க்ஷேமம் என்னும் வார்த்தையில் சம்பத்து விர்த்தியெல்லாம் அடங்கிவிட்டது. வியஷ்டிபாவபிரத்தியேகாத்மாவைப் போல் சமஷ்டிபாவ ஈசுவராத்மா ஒன்று உண்டு என்று சொல்லியிருக்கிறோம். அப்படியே தேஹமாகிய க்ஷேத்திரத்தை யொட்டியுள்ள க்ஷேத்திரஜ்ஞ ஆத்மாவைப்போல தேசமாகிய க்ஷேத்திரத்தை யொட்டியுள்ள க்ஷேத்திரஜ்ஞ சமஷ்டியாத்மா ஒன்றுண்டு. இந்த தேசசமஷ்டியாத்

மர்வைத்தான் இங்கிலீஷில் "நேஷன்" என்று சொல்லும் பதத்திற்கு லக்ஷியார்த்தமாகக் கொள்ளவேண்டும். இந்தியாவில் "நேஷன்" என்று சொல்லப்படும் வார்த்தைக்குப் பொருந்திய இலக்ஷணமுள்ள சமஷ்டிபாவமூர்த்தி இல்லையென்பது மேற்றிசையார் சித்தாந்தம். அஃதையே அவர்கள் வழிபற்றி அவர்கள் எண்ணங்களையும் வார்த்தைகளையும் கேட்டு மயங்கியுள்ள இங்கிலீஷ் படித்த இந்தியர்களும் சொல்வதுண்டு. இந்தியா எக்காலத்திலும் சமஷ்டிபாவ ஐக்கியம் கொண்டு அதில் வசிக்கும் கோடானுகோடி ஜனங்களும் ஏகீபாவத்தால் ஒரு தேசஸ்தாராக விளங்கினதில்லையென்று விதேச விற்பன்னர்கள் சொல்கிறார்கள். இதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை. ஏனெனில் "நேஷன்" என்று சொல்லும் ஒருதேச சமஷ்டியின் ஜீவகாலம் அற்பமனுஷன் ஜீவகாலத்தைப்போல் அவ்வளவு குறுகினதில்லை. அதுவும் இந்தியாவைப்போல் பூர்வந்தொட்டு நாகரிகத்தில் பேர்பெற்று விளங்கிய ஒரு மஹாதேசத்தின் ஆயுட்காலம் குறைந்தது பல்லாயிரம் வருஷங்கள் கொண்டதாயிருக்கவேண்டும். அப்படியிருந்தால் அத்தேசம் ஸதா உன்னத நிலையிலேயே யிருப்பது கூடாமை. பகலுண்டானால் இரவுண்டு. விழிப்புண்டானால் தூக்கமுண்டு. பிரம்மாகூட மானுட வருஷங்களில் அனேக லக்ஷம் வருஷங்கொண்ட அவருடைய காலம் கழிந்தபின் பிரளயத்தில் தூங்கிவிடுகிறார். ஆகவே, எத்தேசமும் ஆயிரம் காலம் உயர்ந்து வாழ்ந்தால், ஆயிரம் காலம் தாழ்ந்து உறங்கும். இது பிரகிருதிதர்மம்: இதில் குற்றநற்றமிரண்டுமில்லை. ஆகவே இந்தியா இப்பொழுது உறங்கிக்கொண்டிருந்தால், அதனால் இந்தியாவின் சமஷ்டிபாவமூர்த்தியே இல்லையென்று சாதிப்பது ஒப்புக்கொள்ளத் தக்கதாயில்லை. பரதசக்ரவர்த்தி ஆண்டகாலமுதற்கொண்டு இந்தியா பாரதவருஷத்தில் பரதக்கண்டம் என்றுபேர்பெற்றுவிளங்கிவருகிறது. பரதக்கண்டத்தின்கீர்த்தி மங்கியிருந்தாலும் அதன்பேர் மறையவில்லை. கோடானுகோடி ஜனங்கள் வருஷந்தோறும் நேரும் புண்ணியகாலங்களிலெல்லாம் "பாரதவருஷத்திலே பரதக்கண்டத்திலே, இன்னபாரிசத்தில் இன்ன க்ஷேத்திரத்திலிருந்து இந்த சங்கல்பத்தைச் செய்துகொண்டு இக்காரியத்தைத் துவக்குகிறேன்' என்று மனமொருவழிப்பட்டு மந்திரோச்சாரணமாக வாக்மனோ சங்கல்பம் செய்து வருகிறார்களே! இதுகளெல்லாம் பொய்யாகிவிடுமா? இங்கிலீஷ் படித்தவர்கள் ஜாதிமதப்பிரஷ்டர்களாய் மந்திரசக்தியிழந்தவர்களானால், மந்திரத்துக்கே சக்தியில்லையென்று சாதித்துவிடலாமா? பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்தமித்துப்போய்விடுமா? ஆனாலும் பூனைக்குமட்டும்எண்ணம் அப்படித்தான். அந்தஉபமானத்தை நீர் ஸ்தாபிக்கப்போகும் கக்ஷிக்கு ஏன் சொல்லக்கூடாதென்றால், நாம் இங்கே கக்ஷிகட்டிப் பேச வரவில்லை. உண்மையை உள்ளபடிவிளக்க தர்மத்தைபிரத்தியக்ஷஉதாரணங்களால் எடுத்து விளக்குகிறோம். நாம் சொல்லும் உண்மை யாருக்குப் பொருத்தமாயிருந்தாலும் சரி, அவர்கள் அதையேற்றுக்கொண்டாலும் சரி, தள்ளினாலும் சரி, அதனால் நமக்கு பாதகசாதகமொன்றுமில்லை.

இந்தியர் பூர்வீகந்தொட்டு க்ஷேத்திரக்ஷேத்திரஜ்ஞ பாவயோகத்தால் சமஷ்டிபாவமூர்த்தி பிராணப் பிரதிஷ்டை செய்யப்பெற்று விளங்குவதன்றி அனேகம் ஆயிரம் வருஷகாலங்களாக அந்த சமஷ்பாவமூர்த்தி இந்தியாவிலுள்ள பிரஜைகளால் பக்திசிரத்தையோடு பூஜித்தும் வரப்படுகிறது. ஆகையால் இந்தியாவில் "நாஷனலிடி" என்றுசொல்லும் "சம்ஷ்டிபாவ மூர்த்திப்பிரதிஷ்டை" இனிமேல்தான் புதிதாய்செய்யப்படவேண்டுமென்றும் இற்குமுன் அநதபாவமே இத்தேசத்தில் கிடையாது என்றும் சொன்னால், அந்த்வார்த்தை உண்மைக்கு ஒவ்வாததாகையால் வீண்வார்த்தையென்று தள்ளத்தக்கதேயாகும். ஆனால் இக்காலத்து நவநாகரிகபுஞ்சங்களான சிலர், இடையே தம் நிலையை மறந்து துறந்திருந்த தோஷத்தால், அந்நிய பாவங்கள் பற்றி ஆத்மபுத்தியிழந்தவர்களாயிருப்பதால், அவர்கள் மனதைத்திருத்த அழுக்கைக் கொண்டு அழுக்கைப்போக்குவதைப்போல, நவநாகரிக மோகத்தால் அவர்கள் இழந்த அறிவை நவநாகரிக சிரேஷ்டர்கள் போதனையால்தானே அவர்கள் திரும்பப்பெறுவதுமிகவும் சிலாக்கியமும் சகஜமுமானதென்றே சொல்வோம் ஆகையால் ஆத்மார்த்தமான உண்மைகளை யார் சொன்னாலும் நாம் அங்கீகரித்தேற்க வேண்டியதே. இங்கே சொன்னவர்களைப் பற்றி விசாரணையில்லை. சொல்லின் திறமே நாம் கொள்ளத்தக்கது. சொல்லுக்குத் திறம் எதனாலுண்டாகும்? "சொல்வன்மையினால்" சொல்லுக்குத் திறமுண்டாகாது. சொல்வன்மையினால் மெய்யைப் பொய் போலவும் பொய்யை மெய்போலவும் மாற்றலாம் என்று நாம் ஒப்புக்கொண்டாலும், "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளியாகும்" என்றதோர் வாக்கை நாம் மறக்க காலம் முந்தவில்லை. ஆதலால் சொல்லுக்குத் திறம் உண்மையினாலன்றி வார்த்தை ஜோடிப்பினாலல்ல. வார்த்தை ஜோடிப்பினால் அறிவு கெட்டவரை. மயங்கவடிக்கலாமானாலும் உண்மையை வெகு காலம் ஒளிக்கமுடியாது. ஆகையால் உண்மை எந்த வாக்கில் உறைந்து விளங்குகிறதோ அது நமக்கு சத்தியவாக்காம். அதைச் சொன்னவன் தன்மை நமக்குப் பெரிதல்ல. சொல்லின் குணமறிந்தார்க்கு, சொல்வான் ஓர் ஸ்வப்பன புருஷன் ஒத்தவன். இப்படியாக நாம் இந்தியாவில் சமஷ்டிபாவ மூர்த்தியை விடாது பூஜைசெய்து வரல்வேண்டும். இப்பொழுது இங்கிலீஷ் படித்தவர்களும் இந்த பூஜை துவக்கியிருக்கிறார்கள், அல்லது துவக்கவேண்டியவர்களாயிருக்கிறார்களென்பதைக் கேட்கவும் பார்க்கவும் பாரதமாதாவின் மனம் பொங்கிப் பூரிக்காதிருக்குமா? இருக்காது. ஆகையால் இந்தியாவின் சமஷ்டிபாவ யோக க்ஷேமம் வரவர விர்த்தியாய் வருவதைப்பார்க்க நாம் சந்தோஷப்படுகிறோம். நாம் யார்? இந்தியாவென்னும் பாரதீமாதாவின் வயிற்றிலுள்ள சிசு. அதாவது "இந்தியன் நாஷனலிடி" என்றுசொல்லும் "சமஷ்டி பாவமூர்த்தியின் கரு உரு." இக்கருவுருக்குள் உயிர்புகுந்தாட்டுங்கால் அது துள்ளிக்குதிக்கும். இதையே கருவிற் சிசுவுற்பன்னம் என்று சொல்றகிது. இந்தியா இப்பொழுது சமஷ்டிபாவமூர்த்தியைப்பெறக்கருத்தரித்து நிற்கின்றது. பெறலரும் இப் பேற்றைப் பெறவிருப்பது பாரதயோகமாம். நேற்றிராத்திரி திருமயிலையில் 9-ம் திருவிழாவன்று கபாலீசுவரர் யோகவேஷத்தோடு பிக்ஷாடன மூர்த்தியாக வீதிவலம் வந்தார். அப்பொழுது ஸ்வாமியையே பர்த்தாவாகப் பெறவேண்டுமென்று யோகம் செய்துகொண்டிருந்த அம்மன் அவர் பிக்ஷாடனராய்ச் சுற்றுவதைக்கண்டு அவரைப் பிரதக்ஷணம் பண்ணி நமஸ்கரித்து மங்கள ஆரத்தியினால் அவரோடும் மனோலயஐக்கியம்பெற்று நின்றாள். நேற்று இராத்திரி ஸ்வாமி, அம்மன் இருவரும் யோகத்தினால் பெற்ற பேற்றை இன்றுகலியாணம் செய்து கொண்டுஅப்பேறு நிலைத்திருக்கும்படி காப்பாற்றிக் கொள்வார்கள். இதுதான்க்ஷேமம். க்ஷேத்திரமூர்த்திக்குக்ஷேமமானால் அது க்ஷேத்திரத்துக்கும்க்ஷேமமே.

தேசசமஷ்டிபாவத்தில் இந்த யோக க்ஷேமத்தை நாம் அடையும் வழியின்னதென்று நமது இராஜதானி கவர்னர் கனம்பொருந்திய ஸர் ஆர்தர் லாலியவர்களும் இந்த வருஷம் கான்வொகேஷனில் வித்தியாபட்டம் பெற்றவர்களுக்குச் செய்த உபதேசத்தில் நன்றாக வெடித்துப்போதித்திருக்கிறார். அவர் சொல்லியவுண்மை உபதேசம் இது:—

"இந்தியாவில் சமஷ்டிபாவம் விர்த்தியாய் வருவதற்கான ஆரவாரங்களில் நீங்களும்சேர்ந்து அதன் யோகக்ஷேமத்துக்காகப் பாடுபடவேண்டுமென்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்

கள். என்பதிற்சந்தேகமில்லை. ஒருதேசத்தின் சமஷ்டிபாவம் மூர்த்திகரித்து நிற்க அதன் யோக க்ஷேமத்துக்காக உழைப்பதென்றால் அது ஒரு நாள் இரண்டுநாள் வேலையல்ல; 10 20, 30, வருஷங்களில் முடிவதுமல்ல. யோக க்ஷேமம் ஊர்த்தமுகமாயுள்ள வரையில் அது 'மாகர்த்தாக்கள்' என்று சொல்லப்படும் பிரஹ்மஜ்ஞானிகள் செய்யத்தக்கவேலை. அதில் நீங்கள் பிரயாசைப்பட்டுழைப்பது சிலாக்கியமே: ஆனால் அந்தவேலைமட்டும் கால, தேச வரையறை கடந்து, தன்னைக்கொடுத்துஉழைத்தாலன்றி அது சித்திபெறாது. நீங்கள் அப்படி யுழைக்கக்கூடியவர்களாவீர்களா? இந்த சமயத்துக்குத்தக்கபடி ஊர்த்துவமுகமாகி ஆத்மோத்தாரணம் செய்து மேலெழவல்லவர்களாவீர்களா? சமஷ்டியின் பலம் வியஷ்டியின் பலத்தைப் பொறுத்ததாம். ஓதிபெருத்தால் உத்திரமாகாதுபோல் செடியடர்ந்தால் காடாகாது. தேவதாருபோன்ற மஹா விருக்ஷங்கள் அடர்ந்தால் அது வனமாகுமேயன்றி மற்றப்படி புல்லும் பூண்டும்சேர்ந்தால் வனமாகாது. அது புதராகும்.

"வியஷ்டிபாவம் எப்படியோ அப்படியே சமஷ்டிபாவமுமாதலால், பிரத்தியேக நபர்களுடைய குணமும் மனமும் சிறந்திருக்காவிட்டால் சமஷ்டிபாவமும் சிறந்திருக்காது. ஒவ்வொரு கிரஹஸ்தனும் சமஷ்டிபாவ மூர்த்தியின் இரத்தநாடியிலோடும் இரத்தத்திலுள்ள ஜீவஅணுத்திரளாம் ஒரு 'கார்பஸ்லுக்கு' சமானம். தேகத்தில் ரத்தம் கெட்டுப்போனால் எப்படிதேகம் வலியிழந்து சோர்ந்து போகிறதோ அப்படிப்போலவே, பிரத்தியேக நபர் குணக்கேடராயின், சமஷ்டி பாவமூர்த்தி வலியிழந்து சோர்ந்து சோபிக்காதுபோம். ஆகையால் உங்களில் தூராத்மாவாகவுள்ள ஒவ்வொருவரும், உங்கள் உடன்பிறந்த மனிதர்களின் க்ஷேமலாபத்துக்கு இடையூறான துரோகியாவீர்கள் என்பதை உணர்ந்தொழுகவேண்டும்." என்றார்.

இந்த உண்மையைச்சொல்லி வற்புருத்திய வாய்க்குக் கற்கண்டு போடல்வேண்டும்.

## THE DIVINITY OF CHASTITY.

## பத்தினிக்கடவுள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழு
பெய்யெனப் பெய்யு மழை." [வாள்

என்பது தெய்வப்புலமைபூண்ட திருவள்ளுவநாயனார் திருவாக்கு. தன்னைக்கொண்ட கணவனை யொருத்தி தெய்வமாய்க் கொண்டாடுவாளெனின் ஜடமானபிருகிருதியும் இவளைப் பணிந்தொழுகும் என்பது இதன்கருத்து. இதனையே

"கொண்டான்குறிப்பறிவாள்பெண்டாட்டி,
(இவள்) பெய் யெனப்பெய்யுமழை" என்றும்
"கொண்டானிற்றுன்னிய கேளிர் பிறரில்லை"

என்றும் பிற்காலத்திய கவிசிரேஷ்டர்களும் புகழ்ந்துள்ளார். அன்புடைய மனைவியின் குணங்கள் யாவையோவெனில், 'சாவிற் சாதல்,' 'புணர்வு நனிவேட்டல்,' 'நோவில் நோதல்,' 'நன்கினிது மொழிதல்,' 'பிரிவுநனி இரங்கல், என்பனபோன்றவை என்றுமற்றும் மேலோர் கூறுவர். இக்குணங்களையுடைய மனைவியையே பத்தினியென்றும், ஸதியென்றும், ஸஹதர்ம்மசாரிணி' யென்றும் பேர்கூறுவது வழக்கம். பத்தினியென்பாள் தங்கணவன் சம்பாதித்துக்கொணரும் பொருள்களைக் கொண்டு அதனாலே அவன் இஃபுற சுபோச்சியமான ஆகாராதிகள் செய்தூட்டிஅவன் இன்பமடைவதினால் தானும் இன்புற்று இருவரும் மகிழ்ந்து வாழ்ந்திருப்பள். "ஆஹா! நீர் கூறுவது பக்ஷபாதமன்றோ? மனைவி தன்கணவன் மனதிற்கிணங்க இருக்கவேண்டுமென்பதை வற்புறுத்தினீரே யொழிய, இவள் விஷயமொன்றையும் எடுத்துக்கொண்டு மன்றாடவில்லையே" எனவும் கூடும். அவ்வாறன்று. கணவனென்பவன், தனக்கு மாத்திரமேயன்றி,



தன் குடும்பத்துக்கு வேண்டும்பொருள், உத்தியோகமுதலியவைகளிலமர்ந்து பாடுபட்டு, சம்பாதித்துக் கொணர்ந்து தன் அகத்துக்காரியிடம் ஒப்புவிக்கிறான். அதாவது, தனார் ஜனம் முதலிய, வெளியில் பாடுபடும்படியான விஷயங்கட்கு கணவன் உடம்பட்டிருக்கிறான்; இக்கஷ்டமொன்றே இவன் பாகத்துக்குப்போதுமானது. சம்பாதித்து கிரககிருத்தியத்துக்கென்று சமர்ப்பித்தபொருள் அகத்தில்கொடுத்து விடுவானேல், இவன்கடமையும் இவன் பாரமும் இவனைவிட்டு நீங்கின. அகத்துக்குடையாள் அல்லது அகத்துக்காரி என்பவள், அகத்துக்குள்பட்ட சம்சாரத்துக்கு வேண்டிய கருமங்கள் செய்யக்கடமைப்பட்டவளாதலின், இப்பொருளைக்கொண்டு, தன்வீட்டுக்காரியங்களை சரிவரப்பார்த்துத்தேர்ந்து நேரான விநியோகஞ்செய்து கணவனையும் குடும்பத்தையும் மகிழ்விப்பள்: அதாவது, அதிகமாய்ச் செலவுசெய்து கணவனை கடனிலாழ்த்தி, அதனால் அவன் ஜன்மத்தை வெறுக்கச்செய்யாமலும், கொடுத்த பொருளை தனக்கென்று முடிபோட்டு, வீட்டுக்காரியங்களை கவனியாமலும் அதனால் கணவனுக்குசாப்பாடுமுதலிய சௌகரியங்கட்குஅபாவ நேரும்படிசெய்து அவன் மனமழுங்கச்செய்யாது, அவனுக்கு ஹிதகரமானவற்றைச்செய்தலாகிய கருமம்பூண்டு நடப்பள். இவ்விதமாய்,

"இருவரும் பூண்டீர்ப்பினல்லால், செல்லாது வான்சகடம்" என்று கற்று வல்லோரும் கனிமொழியால் கூறியுள்ளார். சம்சாரமாகிய ரதத்தில் பூட்டிய இருகுதிரைகளும் மனமொத்து, தம்மாலியன்ற மட்டும் ஒரே வழி இழுத்துச் சென்றாலன்றி அது நேரே அவ்வழி போக ஒண்ணுமோ?

"மனைமாட்சி யில்லாள்கணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித்தாயினுமில்."

இல்லறத்துக்குத்தகுந்த குணங்களில்லா மனையாளோடு எவ்வகையானமற்றசிறப்புகளிருப்பினும், வாழ்வு சுகமற்றது.; இது திண்ணம்.

இல்லறத்துக்கு அத்தியாவசியமாய் வேண்டியன அன்பும், கடமைப்பாடுமே. பரஸ்பரம் அன்புடைய கிரகஸ்தனும் [illegible] மனைவியும் தத்தமக்கேற்பட்ட கடமை[illegible] சாவகித்து, சம்சாரத்தைச்செலுத்திச் செல்வதோடுங்கூட, தம்முடல், பொருள், ஆவியென்பதனை தம்முள்பேதமின்றி கொடுத்துக் கொண்டும்வாழ்வார்கள் ஆயின் இவ்வாறுகொடுத்துக்கொள்ளுதலேஇவ்வன்பிற்குசான்றல்ல. இது பலகாரணங்களால் நேரும் என்பதை வெகு அழகான நடையில் ஓர் புராதன தமிழ்வித்துவான் அடியில் வருமாறு வர்ணித்துள்ளார். *"சாவிற்சாதல்' என்பது அன்பினானே நிகழ்வதன்று; பிணியுடையளாய்வாழ்க்கையைமுனிந்து இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும்பெறும்; இனிக் 'கண்டீரே! குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையுமிருந்து, சோறுதின்று வாழ்கின்றாள்! ஓ!கொடியளேகாண்! என்றுநித்தலும் பழிதூற்றப் பட்டிருந்து, பின்னுமேஒருநாட்சாவன், அதனான் இன்றேசாவனெனச்சாவவும் பெறும்; அதுவன்றிப்புகழ்வேண்டிச் சாவவும்பெறும்; கணவனுடன் செத்தார்சுவர்க்கம்புகுவரென்னும் உரைகேட்டு. அதுவேட்கையானும் சாம் ; அப்பரிசன்றி அன்பினானும் சாம் ; இவ்வாறு தன்னுடைய இனிய உயிரையே ஒருத்தி விட்டு நீங்கத் துணிவாளானால் பொருள் முதலியன அவட்கு லக்ஷியமாமா?

* [இதற்கு அர்த்தம்:—ஒருத்திதன்கணவனிறந்ததும் தானும் அவனுடன் இறப்பேனென்று நிச்சயித்துக் கொள்வாளானால், அதற்கு அடியில் வரும் பலவும் காரணமாகலாம். முதலாவது, அவள் தன்கணவன் வாழ்ந்திருந்த காலத்திலேயே ஒரு ஆறு வியாதியால் வெகு காலம் வாதைப்பட்டிருக்கலாம். இவன் இறந்ததும், இனியாகிலும்

161180
Rm 2-11, M92
M12-19-18

இவ்வியாதியினின்றும் தப்பும்படி இவனுடன் சககமனம் செய்துவிடுகிறேன் என்று துணியலாம். இத்துணிவு கணவனிறந்த துக்கத்துக்காகவன்று, தன்னோய் தீரவென்பது காரணமாக வுடையது. இனி, ஊரார் இவளைக் குறித்து "பார்த்தீர்களா, அந்தப்பெண், அகமுடையான் செத்தும், கொஞ்சமேனும் துக்கமில்லாமல், தலைமயிரை திவசம்பிரதி வாசனை எண்ணெய்களை யெல்லாம் தடவி வாரிக்கொண்டு, புருஷன் காலத்துக்குப் பின்னையும் சௌக்கியமாயிருந்து கொண்டு, நன்றாய் சாப்பிட்டுக்கொண்டு வாழ்கிறாளே! அப்பா மகா துஷ்டப்பெண்ணம்மா அவள்!" என்று பழிதூற்றுவார்களே! என்றைக்காயினும் ஒருநாள் நான் சாகத்தானே வேண்டும், ஆதலால் அதை இப்பொழுதே ஏற்றுக்கொண்டு செத்தகணவனுடன் சஹகமனஞ்செய்து விடுவோமென்று சாவிற்சாதலென்னும் குணத்தைக் காட்டலாம். அப்படி அவள் செய்யினும், அது ஊராருக்குப் பயந்து செய்தது என்னப்படுமேயன்றி, கணவனிட மிருந்த அன்புக்கு என்னலாகாது. இவ்வாறு துணிந்தது ஊரார்க்குப் பயந்து என்பதுதான்.

இதுவன்றி, "நாம் இன்று சஹகமனஞ் செய்தால் லோகத்தார் அடா! இவளன்றோ மகாபத்தினி யாவாள்! இவளுக்குக் கோயில் முதலியன எடுப்போம். இவள் விஷயமாக ஒருபுராணமெழுதுவோம்" என்று தன்னைப் புகழ்வார்கள் என்னும் காரணத்தாலும் ஒருத்தி சாகவும் கூடும். இது தனக்கு பிரதாபம்வேண்டிச் செய்தது. அன்றியும், தம் கணவருடனிறந்தார் சுவர்க்கத்திற்கு நேரே செல்வார் என்னும் சாஸ்திரங்கேட்டு, சாவாரும் உளர். இது சுவர்க்காபேக்ஷைபால் செத்ததேயன்றி கணவன் பிரிவிற்கு அனுராகப்பட்டு இந்த உடலை யொழிப்பேனென்று செத்ததன்று. இவையெல்லாமில்லாமல் வாஸ்தவமாய், கணவனும் தானும் ஒருயிராயிருந்து வாழ்ந்துவந்தபிறகு அவன் உயிர் போகவே, தன்னுயிரும் போனதாகவும், அவனின்றித் தான் பிழைக்கமுடியாமலும் ஒருத்தி உடனே உயிர் துறக்கவும் கூடும். இது அன்பினால் செய்த சஹகமனமெனப்படும்.]

இம்மகாபத்தினியை வேட்கப் புண்ணியஞ் செய்திருந்த பரமபாக்கியவான், எத்தனை ஏழையாயினும், நித்தியோபவாசம் செய்கிற காலத்தும், எப்பொழுதும் மனம் மகிழ்வெய்தியவனாயிருப்பான். "ஒருவனுக்கில்லாள் நற்குண நற்செய்கையளாயினக்கால் இல்லாதது யாது? அவள் அன்னளல்லாக்கால் உள்ளது யாது?" நற்குண சம்பன்னை யானதினால் கணவன் மனமகிழ்ந்து தன்மனையாளோடு வாழ்ந்திருத்தற்கும் அழியா அன்புடையனாகவுமிருத்தற்கும் இயலுகின்றது.

அன்பு பழுத்து ஒழுகும் பத்தினியர்க்கு பஞ்சபூதங்களும் பணிசெய்யு மென்று முன்னரே சொன்னோம். அங்ஙனம் நடந்த திருஷ்டாந்தங்கள் புராணப் பிரசித்தமன்றோ! மகாஸதியாகிய சீதாபிராட்டியார்க்கு வாயுபுத்திரனான அனுமார் செய்த தொண்டுகள் சிலவேயோ? ஜமதக்கினி ரிஷியின் பத்தினி பிரதிதினம் ஆற்றுக்குச்சென்று ஸ்நானஞ் செய்தபிறகு, பதிவிரதா தர்மத்தின் பலத்தால் ஆற்றுமணலை யெடுத்துக் குடமாகச்செய்து அதில் நீரை மொண்டு வீடுவந்துசேர்வள். இவள் கையில் மணலும் குடமாகவில்லையோ? காவிரிப்பட்டணத்தில் மகாதனிகனான வர்த்தகனுக்குப் பிறந்து, தன் தந்தைக்குச் சமானஸ்தனான வணிகன் மகனாகிய கோவலனென்னும் புருஷனை மணந்து, அவன் துச்சரிதை செய்து வந்தானாகிலும்,

"கண்டாரிகழ்வனவேகாதலன்றான்செய்திடினும்
கொண்டானையல்லாலறியாக்குலமகள்போல"

தான் அதை ஒருக்காலும் கவனியாமல், அவனுக்கு ஹிதந்தேடிவந்த கண்ணகி என்பாளொரு மகாபத்தினியின் சரித்திரம் அநேகமாய்எல்லாரும்அறிவர். ஆயினும்இம்மகாசதி



யின்சரித்திரத்தை இஃதை அறியாதவர்க்காக இவ்விடத்தில் சுருக்கி எழுதுவோம்.

மாதவியென்னும் கூத்தஸ்திரீயிடம் மனம் பற்றினவனாய்,

"வம்புலாம்கூந்தல்மனைவியைத்துறந்து
பிற......தாரத்தைநம்பி"

அவளோடே காலங்கழித்துவந்த கோவலன், ஒருநாள் மாதவி இனியபுரமேலாங் பிறனிடம் தன்கருத்துடையஸ்திரீ பாடிய பாட்டொன்றைப்பாடவே, மாதவியே பிறனிடம் மனப்பற்றுடையளானாள் என்று தவறாய்த் துணிந்து அவளை சடக்கென்றுநீத்து, தன் ஸ்திரீயாகிய கண்ணகியிடம் துக்காக்கிராந்தனாய்த் திரும்பினான். அப்பொழுது,

"அடுத்ததுகாட்டும் பளிங்கேபோல்நெஞ்சம்
கடுத்ததுகாட்டும் முகம்"

என்பதற்கேற்ப, மனத் துயரத்தைக்கண்டு, கண்ணகி, கைப்பொருளிழந்து இனி தன்கூத்தியர்க்குக் கொடுக்கத் தனமில்லையென்று வருத்தப்படுகிறார் தன்பர்த்தாவென்று, நினைத்துத், தன்காலிலணிந்த இருசதங்கைகளையும் எடுத்து கோவலன் முன்வைத்து இவற்றை மாதவிக்குக் கொடுக்கலாமே, கொடுக்கப் பொருளில்லையென்று, என்னிடம்இவை போன்ற ஆபரணங்களிருக்கிறமட்டும், தாங்கள் மனம் வருந்தலாமோவென்று, கன்னெஞ்சுமுருகும்வண்ணம், விநயத்துடனும், அன்புமிக்கீட்டினாலும் செப்ப, கோவலன், இதுகாறும், இம்மகாபத்னிவிஷயம் தான் பட்ட அபசாரத்துக்கு இரங்கி,

"அரும்பெறற்பாவாய்! ஆருயிர்மருந்தே!
பெருங்குடிவாணிகன் பெருமடமகளே!
அலையிடைப்பிறவா அமிழ்தேயென்கோ
மலையிடைப்பிறவா மருந்தேயென்கோ
யாழிடைப்பிறவா இசையேயென்கோ"

என்ன என்றுன்னைப் புகழ்வேன்! என்று அவளையிறுகத்தழுவி இவ்விருசிலம்பையும் முதலாகக்கொண்டு நேரே வியாபாரஞ்செய்து, தனார்ச்சனம்பண்ணி, இனியாயினும் நாமிருவரும் இன்புறக்கூடிவாழ்வோமென்றும், நாம் தனிகராய்வாழ்ந்த இவ்வூரிலிருப்பது நமக்கு இழுக்கு, ஆதலால் பாண்டிநாட்டு ராஜதானியாகிய மதுராபுரிக்குப் போய்விடுவோம் என்று, என்றும் நடந்தறியாது, கொடிபோலும் நுண்ணிய இடையையுடையவள், மாந்தளிரையொத்த அடியளைக் கூட்டிச்சென்று மதுரையில் ஒரு இடைச்சி வீட்டில் மிக இளைத்த தன் பத்தினியை விட்டுவைத்துத் தான் ஒருசதங்கையைவிற்றுவர கடைத்தெருவழிச்சென்றான். அப்பொழுது ஒரு பெருத்த தட்டான் நேர்பட்டான். அவனுக்கு இதைக்காண்பித்து இதைவிற்றுக் கொடுக்க வேண்டுமென்று கோறிக்கொண்டான். அப்பொழுது தட்டான், "இது ராஜபத்தினிகளுக்கே தகுமன்றி சாமான்னியர் வாங்க இயலாது ஆதலால் அரசனுக்குக்காட்டி விலை செய்துகொடுப்பேன். நான் அரமனையிலிருந்து திரும்புமளவும்நீ இவ்விடத்திலிரு" வென்று சொல்லி அரமனையில் புகுந்தான்.

இதற்குச் சொற்பகாலத்துக்குமுந்திதான், இத்தட்டான், இராஜபத்தினியின் சதங்கையொன்றைத் திருடிவிட்டான். அத்திருட்டு இன்னம் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுதான் சமயம், இச்சதங்கை ராஜபத்னியது என்று கோவலன்பேரில் பழிசாற்றிவிடலாம், தன் குற்றம் தன்னைவிட்டுநீங்குமென்று துணிந்து அரசனிடம்சென்று, ராஜபத்தினியின் சதங்கையைத் திருடினவன் கையும் களவுமாயகப்பட்டானென்று கூறவே, அரசனுக்கு "வினைவிளைகாலமாதலின்" "கள்வனைக் கொல்லக் கொணர்மின்" என்றுசொல்ல நினைத்து வாய் தவறி "கள்வனைக்கொல்லுமின்" என்று கட்டளையிட்டுவிட்டான். தூதரும் உடனே கோவலன் தலையை வெட்டித் துணித்தார்கள்.

இதே சமயத்து இடைச்சி வீட்டிலிருந்த மகாபத்தினியாகிய கண்ணகிக்கு பற்பல துற்சகுனங்கள் நேரத்தலைப்பட்டன. இவைகளை நோக்குற்ற இவள் மகாஸதியாகையால், தன்

கணவனுக்கு ஏதோ துன்பம் நேர்ந்திருக்க வேண்டும் என்று உணர்ந்து, "இரும்பைக் காந்தமிழுக்கின்றவாறு" கணவனிறந்து கிடந்த இடத்துக்குச் சென்றாள். கணவனிறந்துபட்டிருக்கின்றதைக் கண்டுமனம்பொறாளாய் நியாயமென்பதைப் பகுத்தறியச் சமர்த்திலனான பாண்டியன்நாடு பாழாகட்டும் என்று அக்கினி பகவானுக்குக்கட்டளையிட்டனள். நடுங்கி இவள் பின்னின்ற அக்னிபகவான் உடனே மதுராபுரியைச் சுட்டுப்பாழாக்கினன்.

குருடனான தன்பர்த்தா திருதிராஷ்டிரன் இனிய காட்சிகளைப் பார்க்கக்கொடுத்து வைக்கவில்லையே என இரங்கி, அவன்பத்தினி சிரோமணி, தன் கணவனுக்கில்லாத அதிகப்படி சௌகரியமாகிய காட்சி தனக்கும் வேண்டாம் என்று, அன்றுதொட்டு தன்னிரு கண்களையும், ஒரு சிறியவஸ்திரத்துண்டைக் கொண்டு, புதைத்துக்கட்டி, அந்தியகாலம் வரை அவைகளை யுபயோகிக்காது வாழ்ந்து வந்தாள். இதுவன்றோ 'நோவில்நோதல்' என்பது.

மேற்கூறிய கண்ணகி, தன் கணவனிறந்தலோடு தானும் அக்கினிப் பிரவேசம்செய்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டாள். இவ்வாறு அக்கினிப்பிரவேசம் செய்தோர் எண்ணிறந்தவர்கள். இன்றைக்குக் கொஞ்சம்காலத்துக்கு முந்திகூட இவ்வாறு சககமனஞ் செய்வது நடப்பிலிருந்தது. கணவனுடன்வாழாவாழ்க்கைபாழ் என்றுதிரிகரணசுத்தியாய் சககமனஞ்செய்வதில் கெடுதி யொன்றுமில்லை. முதன்முதல் இவ்வித வாடிக்கை பிரிவாற்றா மனைவியரால் நாட்டப்பட்டது. பிற்காலங்களில் இது ஒரு கட்டாயம்போல ஏற்பட்டுவிட்டது. இஷ்டமிருப்பினும் இல்லாதிருப்பினும், கணவனையிழக்கப்பெற்றாளையும் கணவனுடன் கட்டையிலேற்றிக்கொளுத்திவிடுவதுதான் வழக்கம் என்று பழக்கமுண்டாயிற்று. இக்கொடுமையான வாடிக்கையை நம் ஆங்கில துரைத்தனத்தார் கருணைகூர்ந்து நிறுத்திவிட்டனர். 'சாவிற்சாதல்'என்னலாம்படியான அவ்வளவு பலத்த அன்பில்லாத மனைவியர்கட்கு இது சௌகரியத்தை விளைத்தது. கொண்டானிறந்ததும்ஒருகணமேனும் அவனைவிட்டுப் பிரிய இணங்காத் தன்மையுடைய வலிய அன்பையுடைய மனைவியர்கள் விஷயத்தில் துரைத்தனத்தார் சட்டமும், மற்றெப்பேர்ப்பட்ட இடையூறுகளும் ஒரு பயனும்படாது. மனம் வெறுத்தவர்களை எத்தனையும் நாம் பாதுகாத்து வந்தபோதிலும், என்றேனும் ஒருதினம் அவர்கள் தம்மெண்ணத்தை நிறைவேற்றியே தீர்வார்கள். இங்ஙனம் சாவிற்சாதலுக்கு ஒன்றிரண்டு உதாரணம் காட்டுவோம்.

நீலகிரியில் மைசூர் மகாராஜாவின் அரண்மனை விசாரிப்புக்காக ஒரு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டு, அவரும் அவர் பத்தினியாரும் மட்டுமே, அக்கட்டிடத்தில் வாழ்ந்து வருநாளில் ஏதோ சிலநாள் அசௌக்கியத்தால் கணவனார் இறந்துபோனார். முதல்நாள் கிருத்தியங்கள் முடித்துவிட்டுவந்த மனைவியார், தம் கணவனின்றும் பிரிந்த சங்கடம் ஆற்றாராய், ஒரு கொடுவாளைக்கொண்டு தம் கழுத்தை யரிந்துகொண்டு மாய்ந்தார்.

செஞ்சிக்கோட்டைக்குகவர்னராயிருந்த ராஜாதேசிங்கு என்பவர் பெயரைக்கேளாதவர் தமிழ்நாட்டில் ஒருவருமிரார். இவருக்கு நேர்ந்தசாவும்பலர் "தேசிங்குராஜன்கதையால்" அறிந்தவிஷயம். இவரைப் போர்க்களத்தில் கொன்று வெற்றியடைந்த துருஷ்க அதிபதி, இவர் மனையாள், தன் கணவனிறந்ததுபற்றி அக்கினிப்பிரவேசம் செய்யப்போவதைக் கேள்வியுற்று, அந்தப் பெண்மணியிடம், பலவாற்றானும் அங்ஙனம் செய்வதைத் தவிர்க்கவேண்டுமென்று மன்றாடியும், உயிரில்லாது உடம்பு தரிக்காது, என்பதைப்போல, தன் மன்னனையிழந்த இந்தமாது, அன்றே



தீப்புகுந்து மாய்ந்தாள். இம்மகாஸதி பேரால் துருஷ்க அதிபதி செஞ்சியில் "தீப்பாய்ந்தாள் கோயில்" என்றோர் கோயில்கட்டுவித்து பூஜைமுதலியவற்றிற்கும் ஏற்பாடு செய்தான். இவ்விராணிபெயரால் ஒரு பட்டணமும் பிரதிஷ்டிப்பித்து அதற்கு "இராணிப்பேட்டை" என்றுபெயரும் இடுவித்தான்.

"இவையெல்லாம் புராணகதைகள்: ஒருண்மையை வெளியிடக்கருதி கட்டினகதைகளாம்: இக்காலத்தில் யாமறிய தன் நடத்தை குணம் முதலியவற்றால் தன் கணவன் அன்பைக்கவர்ந்தகாதலியர் கதையைச்சொல்லின் அன்றோ உண்மைவிளங்கும்" என்பார்க்கு, எமக்குத்தெரிந்த ஒன்றிரண்டு உண்மைக் கதைகளைச் சொல்வோம்.

(இன்னும் வரும்.)

தி. அ. கோபிநாதராவ்.

## "BRIDEGROOM—HUNTING" OR, THE LOST IDEAL.

## "மாப்பிள்ளைதேடல்"

அல்லது

## காணாமற்போன கட்டழகன்.

(ஸ்ரீஸத்யானந்த சாந்தசர்மா எழுதியது.)

### III. கட்டழகன் குணம்.

"கண்ணுட்பாவைபோல் கருத்துட்கலந்து நிற்பான் கட்டழகன்."

"கருக்கலந்தபோதே கண்டிருந்தகாரணா, உருக்கலந்தபோதலோ உன்னை யானறிந்ததனன்" என்றார், "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா" என்ற கற்புக்கரசியின் கட்டழகனும் கணவர். சாவித்திரிமுதலான பதிவிருதா சிரோமணிகள் தத்தமக்குரிய கட்டழகனைக் கண்டுபிடித்தவிதமும் அதுவே. "உஷாஸ்வப்னம்" என்ற ரவிவர்மா தீட்டிய படத்தை இதை வாசிப்போர் பெரும்பாலாரும் பார்த்திருப்பாரென்றேயெண்ணுகிறோம். பாராதவர்களும் பாணாசுரன்மகளான உஷை தன் கணவனைக்கண்டுபிடித்துக் கூடிய கதையைப் படித்திருப்பார்களென்பது நிச்சயம். உஷாகுமாரத்தி பக்குவம் வந்தபின் தன்னை மணக்கும் கண்ணாளனும் கட்டழகன் எங்கேயிருக்கிறான்? அவன் எப்போ வருவான்? அவனை யான் எப்படித்தேடிப்பிடிப்பேன்? அவனாகவல்லவோ என்னைத்தேடிவரல்வேண்டும்! எப்போ வருவாரோ என்நாதர்? என்று அல்லும் பகலும் அதே எண்ணமாகவிருந்து அந்த எண்ணத்தில் ஈடுபட்டவளாய் உறங்கிப்போக, அவள் மனக்கண்முன் பூர்வஜன்மஸம்ஸ்காரத்தால் அவளை மணக்கப்பிறந்த புருஷன் பிரத்தியக்ஷமாகி அவள் சிந்தையுட் புகுந்து யாருமறியாது அவள் உள்ளத்தே குடிப்புகுந்தான். உள்ளம் புகுந்தானையுவகையுடன் தானேற்றுக், கள்ளம் கபடின்றிக் கண்ணகத்தே யவன் உருப்படிய, உள்ளம் புழுங்கி யவன் இருப்பிடத்தைத்தேடலுற்றாள். கண்ணுட்பாவைபோல்கருத்துட்கலந்து நின்ற கட்டழகன் திருவுருவத்தை மனத்திலிருந்து படத்திலெழுதி அதைப்போலுருவமைந்தான் உலகத்தே யெங்குள்ளான் என்று தேடலுற்றாள். அவன் உருவத்தைப்போல் உருவேற்கவல்லார் உலகத்தே பலரிருப்பினும், அவனுள்ளத்தைப்போலுள்ளத்தார்உலகில்அவனையன்றி வேறில்லையாவர். "உலகில்" என்றால் திரிலோகத்திலும் என்று பொருள் கொள்ளல்வேண்டும். ஏனெனில் தமயந்தி ஸ்வயம்வரகாலத்தில், இந்திரன் முதலான தேவதைகளும் அவள் கரம்பற்றக் காதலுற்று நளனைப்போலுருவந்தரித்து நளனோடு நளனாக ஸ்வயம்வரமண்டபத்தில் வீற்றிருப்பினும், அவளை ஏமாற்ற முடியாமற்போயிற்றல்லவோ! ஏன்? பொறிபுலனறிவை மட்டும் அவள் நம்பியிருந்தால் கட்டாயம் மோசம் போயிருப்பள். "கருக்கலந்தபோதே"

யுருக்கலந்து நிற்பதற்குக்காரணம் அன்பொ
ன்றல்லாமல் வேறொன்று காரணமில்லை. அன்பு
காரணமாய் " கண்ணுட்பாவைபோல் கருத்
துட்கலந்து நிற்பான் கட்டழகு" காமுகர்க்கு
வாய்ப்பது துர்லபம். காமுகர் தேஹேந்திரிய
ங்களைத் துளைத்துக்கொண்டு புகுந்துவிட்டா
லும் விடலாம். ஆனால் ஹிருதயத்துட் புகு
ந்து கருத்துட் கலக்க உள்ளன்பன்றி யுண்
மையில் வேறோர் வழியின்மையால் அவர்கள்
அழகெல்லாம் அன்பு நிறைந்து அயல்நினை
வற்ற பதிவிரதாசிகாமணியின் உள்ளம் புகு
ந்து கள்ளம் கபடற்றுநின்றான் கட்டழ
குக்கு ஈடாகாது. ஆகையால்தான் அவனைக்
"கட்டழகன்" என்று கூறியது. "இலக்கியங்
கண்டதற் கிலக்கணங்கூறுதல்" அமையுமே
யன்றி இலக்ஷியத்திற் சாக்ஷாத்கரிக்கப்படாத
ஒன்றுக்கு இலக்ஷணங் கூறுதல் சிறிதும் அ
மையாது. ஆகையால்தான் ஸ்திரீகளுக்கு
ஸ்வயம்வரம் ஏற்பட்டது. புருஷன் போகம்
புசிப்பானதலால் காமவசத்தனான பொழுது
கண்ணுக்கிசைந்த கன்னிகைகளை பலாத்கார
மாய்க் கொண்டுபோய் அனுபவிப்பானானான்.
ஆனால் உத்தமகுலத்திற் பிறந்த கன்னிகை
களை அவர்கள்உள்ளம் புகுந்தானன்றி மற்ற
வர்கள் துய்க்கப் பெறாதவர்களானதால், அவர்
களுக்கு ஸ்வயம்வரம் ஏற்பட்டது. "கருக்க
லந்தபோதே கண்டிருந்தகாரணனை" "உருக்
கலந்தபோது" கண்டுபிடித்தலே ஸ்வயம்வர
த்தின் நோக்கமாம். அதற்கு வழிவகைகள்
அனந்தம். "உளக்கண்பெற்றார்க்கு முகக்கண்
காணாது" என்பதுபழமொழி. அப்படியென்
றால், உலகத்திலே அகக்கண் பார்வைபெற்ற
வர்கள் முகக்கண்ணால் பார்க்காது அகக்கண்
ணாலேயேபார்த்துணர்வார் என்பதுபொருள்.

> "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்றமூடர்காள்
> அகத்திற்கண்கொண்டு பார்ப்பதேயானந்தம்"

என்றார் திருமந்திரம் ஓதிய திருமூலதேவ
ரும். ஆகையால் அகக்கண்பார்வை பெற்ற
(என்றால், ஆத்மவுணர்ச்சியுண்டாய், ஆத்மா
னந்தத்தில் லக்ஷியம் பதிந்துள்ள—என்பது
பொருள்) உத்தமகன்னியர்களுக்கு முகக்கண்
பார்வை மோகம் விளைக்காததலால், அவர்
கள் "கண்ணுட்பாவைபோல் கருத்துட்கலந்
துநிற்பான் கட்டழகனும்" தம்கணவரைத்
தாமே தெரிந்தெடுத்துக்கொள்ளத் தகைமை
யும் உரிமையும் பெற்றவர்கள் என்பதுபற்றி
அவர்களுககு ஸ்வயம்வரம்ஏற்பட்டது. அவர்
கள் காமம், கேவலம்பொறிபுலனறிவால்தூண்
டப் பெற்றதாயின்றி, சுத்த சத்துவமான
உள்ளறிவாம் ஆத்ம புத்தியால் தூண்டப்
பெற்றதா யிருப்பதால் அது காமவிகா
ரமாயின்றி உள்ளன்பென்னும் உயர் காம
மா யிருக்கிறது. நிர்விகாரமான காமமே
உண்மையான உள்ளன்பு. உள்ளன்பின் மலி
னவிகாரத்தோற்றமே அசுத்தமான 'ஆசை
நோய்' என்னும் காமவிகாரம். இதற்கும்
அதற்கும் வெகுதூரம். ஆனால் இரண்டும்
ஒன்றின் பரிணாமமாய்ப்பிரிந்து வளர்ந்தன
வன்றி உண்மையாக வேறுவேறல்ல. உள்ளன்
பான உயர்காமம் மோக்ஷவழியைக்காட்டுவ
தாய்மேன்மேலும்ஊர்த்துவமுகமாகச் செல்ல
ச்செய்யும். கள்ளப்புலன்களின் கலவியால்வரு
ம்களவியற்காமம்பெந்தவழியிற்செலுத்திமே
ன்மேலும்அதோமுகமாக(கீழ்நோக்கிச்)செல்
லச்செய்யும். ஆகையால் விவாகத்தை ஆத்ம
ஸம்ஸ்காரமாக அனுஷ்டிப்பவர்கள் பூர்வஜன்
மஸம்ஸ்கார விசேஷத்தால் "பிரிந்தவர்கூடி
னாற் பேசல்வேண்டுமோ !" என்றபடி, உள்ள
ன்பின் வசப்பட்டவராய் ஊசியைக்காந்தமி
ழுக்கின்றவாறு உள்ளன்பு வசப்பட்ட மனத்
தினராய், மனக்கண் கண்டதற்கிசைந்து நடக்
கும் தேஹத்தினராய் (இந்திரியக்கூட்டமே
தேஹம்), அடக்கமும் ஒடுக்கமும் சாந்தமு
முள்ளவர்களா யிருப்பார்கள். அவர்களை பல
வந்தப்படுத்த யாராலும் முடியாது. உண்மை
வழிப்பட் டொழுகுகிறவர்களுக்கு நேரிடுந்
துன்பங்களெல்லாம் அவர்களை அவ்வழியில்
ஸ்திரப்படுத்துமேயன்றி அவர்கள் நல்வழி
யென்றுநம்பியதினின்றும்பிறழ்ந்து நடக்கும்



படி அவர்களைச் செய்யவல்லனவாகாது.
அரிச்சந்திரன், சந்திரமதி, தமயந்தி, சீதை,
சாவித்திரி யிவர்கள்சரித்திரமெல்லாம் இதற்
குச்சான்றாம். வாய்மையாலறம் தூய்மைப்
பட்டு அறவழிநடப்பான் ஒருவழிப்பட்டாரை
யாவராலும் திருப்பமுடியாது. ஏனென்றால்
"சித்தன்போக்கு சிவன்போக்கு" என்றபடி
அவர்கள் ஈசுவரனை வழிபட்டு நடப்பவர்கள்.
"ஸத்யம்வத, தர்மம்சர" என்ற வேத வாக்
கியத்துக்கிணங்க மனிதன் உண்மையுரைத்து
வாய்மையால் அறம்தூய்மையாகவும், அற
ஞ்செய மறம் தீரவும் தன் ஸ்வஸ்வரூபத்தைக்
காணவல்லவனாக விருக்கிறான். தர்மம் தழை
த்தாலன்றிக் கர்மம் தொலையாது. தரும விரு
க்ஷம் எப்படிப்பட்டதென்றால் அது கருத்
தரித்தார்க்கு (மனதையடக்கினார்க்கு) க்கற்ப
கவிருக்ஷம்போல், உருத்தரித்தார்க்கு உண்
மைச்சம்பத்தை யளிப்பதாம். அது வியா
ஸதாஸரான க்ஷேமேந்திரர் சொல்வது
போல், " கருணையாகிய அமிருதத்தால் நனை
ந்து வளர்க்கப்படுவதாயும், நற்புத்தியாகிய
கொடியால் அலங்காரம் பெறுவதாயும் இருக்
கிறது. " அந்த " தருமமாகிய விருக்ஷத்தின்
அடிமரம் உண்மையுடைமை, நிழல் பொறு
மை, வேர் நன்னடக்கை, பூவரும்புள்ளதளிர்
மனமொழிமெய்களில்சுத்தமுடைமை(இதுதா
ன் பிரஹ்மசரியமும்), புஷ்பம்க்ஷேமம், பழம்
சம்பத்து, இப்படியுள்ள தருமவிருக்ஷம் சாது
க்களுக்கு மங்களத்தையுண்டாக்குக." என்று
க்ஷேமேந்திர யோகீந்திரர் ஆசீர்வதித்திருக்
கிறார்.

தர்மவிருக்ஷத்திற்குக் கொடி யெப்படியோ
அப்படி தர்மசிந்தையுள்ள தீரனுக்கு நற்
புத்தியுடைய பெண்கொடிபாரியாளாகஅமை
வது. தருமவிருக்ஷம் கருணையாகிய அமிர்
தத்தால் நனைந்து வளர்க்கப்படுவதுபோல,
புருஷனுடைய ஸ்திரபுத்தியினுதிக்கும் தர்ம
சிந்தையும் மனையாளின் அன்பு என்கிற கரு
ணாரஸம் கசிந்து பொழிய அதில் நனைந்து
செழிப்பாய் வளரும். மரத்துக்கு மூலம்
உண்மையுடைமையாக இருப்பது போல்,
புருஷனுடைய தீரத்துக்கும் ஸ்திரபுத்திக்கும்
மூலம் அவனுடைய ஸத்ய விருதமாம். அப்
படிப்பட்ட மரத்துக்கு நிழல் பொறுமைஸ்வ
ரூபமாக விருப்பதுபோல், ஸத்யவிருதனான
தீரபுருஷனுக்கு நிழலைப்போல் அவனைவிட்டுப்
பிரியாத தர்மபத்நி சாந்தஸ்வரூபமாயிரு
ந்து அவனுடைய ஸத்யவிருதத்தினால் அவ
னுக்குவரும் இடையூறுகளை யெல்லாம் சாவி
த்திரியைப்போல் சாந்தப்படுத்தி விதியையும்
வெல்லுவள். "பொறுத்தார் பூமியாள்வார்:"
ஆதலால் பொறுமையின் சக்திக்குக் குறைவு
ஒருநாளுமில்லை. அப்படியே ஸத்யத்தின்
ஒளி மங்குவதுமில்லை. புருஷன் ஸத்யவானாக
விருந்தால் அவனுக்குப்பாரியையாக வந்து
லபிப்பவள் சாவித்திரியாகவே யிருப்பாள்.
இதில் சந்தேகமில்லை. தம்பதிகள் பூர்வஜன்
மத்தில் தருமவழியிலிருந்துழைத்திருந்தா
லன்றி புனர்ஜன்மத்தில் பொருந்திவாழார்
கள். பூர்வஜன்ம புண்யமுண்டேல் அனுகூல
தாம்பத்தியம் தானாகவே வந்து சித்திக்கும்.

> "இன்சொல்விளைநிலனாவீதலேவித்தாக
> வன்சொற்களைகட்டுவாய்மையொருவட்டி
> அன்புநீர்ப்பாய்ச்சியறக்கதிரீனவோர்
> பைங்கூழ்சிறுகாலைச்செய்."

என்ற அறநெறிச்சாரத்துக்கிணங்க, முக
மலர்ச்சியோடு கூடிய இனிமையான சொல்
லை விளைநிலமாக்கவேண்டும். முகமலர்ச்சி
யேனென்றால் "அடுத்தது காட்டும் பளிங்கே
போல் நெஞ்சம், கடுத்ததுகாட்டும் முகம்" ஆ
தலால் வாய்நயம்போல் அகத்திலும் நயமி
ருக்கவேண்டும். வாயிலொன்றும் வயிற்றி
லொன்றுமாகப் பேசுகிறவர்கள் மோசக்காரர்
களாதலால் அவர்களால் அறப்பயிர் சிறை
வுறுமன்றிச் செழிக்காது.

> "மனஸ்யேகம், வசஸ்யேகம், கர்மண்யேகம் மஹா
> த்மனாம்; மனஸ்யந்யத், வசஸ்யந்யத், கர்மண்யந்யத்
> துராத்மனாம்."

மனமொழி மெய்களில் அதாவது மனஸ், வாக்கு, காரியம் இவைகளில் ஒரே மாதிரியாக விருப்பவர் மஹாத்மனுவர். இவற்றில் ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்டு நிற்பவர் சந்தேகமின்றி துராத்மனேயாம். துராத்மாவால் தர்மம் தழைக்காது. பாபமே விர்த்தியாகும்.

"ஈதலேவித்தாக" வென்றால்தன்னைக்கொடுத்தலேவித்தாம். அதாவது "நான்" "எனது" என்னும் எண்ணம்அறவற்று புறப்பற்றுகளை விடுதலே தர்மவித்தாம். ஆகையால்தான்"ஈதல் அறம்" என்றார் ஔவையாரும்.

"வன்சொற்களைகட்டு"—கடுமையான சொல்கள் அன்பிலா உள்ளத்தைக் காட்டுவதால் அதைக் களையவேண்டும். அப்படியென்றால், அன்பிலா வார்த்தை அறப்பயிர் அழிக்கும். அன்பிலாவுள்ளம் அமிர்தத்தையும் விஷமாக்கும். அன்பிலாளிட்ட அமுதமும் நஞ்சேயாகும்.

"ஒப்போடுமுகமலர்ந்தேயுபசரித் துண்மைபேசி
உப்பிலாக்கூழிட்டாலுமுண்பதேயமிர்தமாகும்
முப்பழமோடுபாலன்னம்முகங்கடுத்திடுவோராகிற்
கப்பியபசியும்போக்கிக்கடும்பசியாகுந்தானே."

என்பது விவேகசிந்தாமணி வாக்கு. ஆகையால் "வன்சொல்," வாயில்மட்டுமல்ல, அஹத்திலும் முகத்திலும் இல்லா திருக்கவேண்டும். வாயிலொன்று வயிற்றி லொன்றாகவிருக்கின், வாய் தேனொழுகப் பேசினும் அந்தவார்த்தைகளின் சப்தமும் அதனுள்ளிருக்கும் நாதமும் காதில் நாராச மூற்றியதுபோல் கர்ணகடூரத்தை யுண்டுபண்ணும் சாதுக்களுக்கு. ஆகையால்அன்பிலாமையே கூடாது: அதைக்களை பிடுங்குவதுபோல் பிடுங்கி யெறிந்து விடவேண்டும்.

"வாய்மை பெருவட்டி"—ஸத்யத்துக்கு மிஞ்சின சாதனமில்லையால், ஸத்யவிருதமே எல்லாவற்றிலும் மேல்.

ஆயிரம் அஸ்வமேதயாகத்திலும் ஸத்யமே மேலானது என்று மஹாபாரதத்தில் சொல்லியிருக்கிறது. ஸ்ரீ இராமாயணத்திலும் ஸத்யமே எல்லாவற்றிற்கும் மூலாதாரமா யிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது.

'ஸத்யமேவேச்வரோலோகேஸத்யம்பத்மாஸ்ரிதா ஸதா
ஸத்யமூலானிஸர்வாணிஸத்யான்னாஸ்திபரம்பதம்.'

இந்த உலகத்தில் ஸத்யமே (ஈஸ்வர:) தெய்வம்; சம்பத்துக்கெல்லாம் இருப்பிடமாயிருப்பது ஸத்யமே. எல்லாம் ஸத்யத்தை மூலாதாரமாகக் கொண்டிருக்கிறது. ஸத்யத்தைவிட மேலான பதம் கிடையாது. ஆகையால் தர்மம் தழைக்க வேண்டுமானால் "வாய்மையெரு" அடிக்கவேண்டும். நீரில்லாமரம் வாடுமாதலால், "அன்புநீர்பாய்ச்சி"—என்றார். நீர் மரத்துக்கு எப்படி ஆதாரபூதமாக விருக்கிறதோ அப்படி அன்பு அறத்துக்கு ஆதாரமாயிருக்கிறது. அன்பில்லாவிடத்து அறமும் இல்லை. ஆதலால் தன்னைக் கொடுத்துச்செய்யும் சதிபதி தர்மங்களால் "அறக்கதிர்" எனும் தர்மமாகிய பலன்கிடைக்கும். இந்த தருமவிபவசாயத்தை இளவயதிலே செய்யத் தொடங்கல் வேண்டும்.

" யுவைவதர்ம சீலஸ்யாத் அநித்யம்கலு ஜீவதம். "

ஆயுஸ்அநித்யமாகையால் இளம்பருவத்திலே தர்ம சீலத்தைப் பெறமுயலவேண்டும் என்று ஐந்தாம் வேதமாம் மஹாபாரதம் ஓதுகின்றது.

ஆதலால் தர்மசீலத்தையடைய இளவயதில் முயலவேண்டும். இந்த தருமவிபவசாயம் ஒரு ஜன்மத்தில் செய்தாவதில்லை. ஜன்மஜன்மமாகச்செய்துவந்தால் பலஜன்மங்களில் முதிர்ந்து முக்தியென்னும் பலனைத்தரும்.

நன்னெறிபற்றி நடக்க உயிர்த்துணையாக அமையும் தம்பதிகள் கருத்தொத்து நடக்க வேண்டியிருத்தலால் கன்னிகையின் கரம்பற்றி நல்லறமாம் இல்லறம் நடத்தப்புகும் புருஷன் ஸம்ஸாரத்துக் கின்றியமையாத ஸுக துக்கங்களைத் தன்னலங் கொடாது அனுபவிக்கும் ஆற்றலுடைய உத்தமகுணமுள்ளவனாயிருக்கவேண்டும் என்னவே, இல்லறம் புகுவான் இயற்கையில் நற்குணம் வாய்ந்தவனாகவிருக்கவேண்டும். அப்பொழுது தான் அவனிடத்தில் உத்தமர்க்குரிய லக்ஷணமாம் " நலிந்தாலும் நற்குணமே தோன்றும் நயந்து " என்கிற நற்குணம் விளங்கும்.

"பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம்பட வருத்தஞ்செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து."

[பொன்னையும் கரும்பையும் பாலையும் சந்தனத்தையும் பொடிப்பொடியாகச் சிதைவு செய்தாலும் அவற்றின் ஸ்வபாவம் சிறிதேனும் குறையாது ; அதுபோல, உத்தமர்கள் எவ்விதமான துன்பம் வந்தகாலத்திலும் தங்களுடைய ஒழுக்கத்திலிருந்து அணுவளவாயினும் தவரமாட்டார்கள்.]

உத்தமர்கள் (ஸ்வபாவமாக நற்குணம் வாய்ந்தவர்கள்) ஸம்ஸாரத்தில் தாபத்திரயங்களால் வருந்தினவிடத்தும் தீயிலிட்ட ஸ்வர்ணம்போல் தம் நற்குணமே மேலாகப் பிரகாசிக்க விளங்குவர். ஆகையால் இவன் வாய்மை, பொறுமை, ஈகை, தருமம் முதலிய நற்குணங்கள் வாய்ந்தவனாக விருப்பதன்றி பழிபாவங்களுக்கெல்லாம் காரணமான காமத்தை நஞ்சென வெறுத்து ஏகபத்நீ விருதம் பூண்டவனாயிருப்பான்.

"அறம்புகழ்கேண்மை பெருமை யிந்நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச்சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும்பகை பழிபாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்".

இல்லறஞானியாம் திருவள்ளுவரும்,

"பகைபாவ மச்சம் பழியென நான்கும்,
இகவாவா மில்லறப்பான் கண்."

என்று சொல்லியிருக்கிறார். பொய், களவு, காமம் என்கிற அஹத்துள் தீமையையும், கள், காமம், கொலையென்கிற புறத்துள் தீமையையும் ஒழித்து ஸத்தியசந்தனாக ஒழுகுபவன் எவனோ அவனே சுத்த சத்துவனாந்தன்மைபொருந்தி விளங்குவதால் "கட்டழகன்", ஆவான். தூயமனமுடைத்தூல்லிய கன்னியர் தம் காதல்நிறை யுள்ளத்தைக் கவரும் "கள்வன்" அவனே யாவான். இந்தக்கள்வனைத் தடுக்கக் கபாடமும், காவலும்கட்டும் பிரயோஜனப்படாவாம். இவன் வரும்வழியடைக்கத் தாப்பாளுமில்லை. அறவழிப்பட்டு அன்புடையோனாதலால் மறவழிநுழைந்து மாச்சரியம் பூணான். இழிகாமம் இவனைக்கண்டால் எடுத்துவிடும் ஓட்டம். ஏனெனில் இவன் விவேக புருஷனாதலால்,

காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்க [வந்தகளம்
காமமே தரித்திரங்களனைத்தினையும் புகட்டிவைக் [குங்கடாரம்
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்கும் [கபாடம்
காமமே யனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியும் [கத்தியாம்,

என்ற விவேகசிந்தாமணிவாக்கிய உண்மையை இவன் நன்கறிவான். காமம் என்றாலும் துராசை யென்றாலும் ஒன்றே- "துராசைக்கிடங்கொடாதான் நிராசைவழியில் நிற்பன்" என்பது அனுபவவாக்கு. ஆசையனுபவிக்கத்தீரும். துராசையோ அனுபவிக்க அனுபவிக்க அதிகமாய்வளரும். ஆகையால் துராசையை நீக்கி நல்லாசைவைத்துநயந்துணரத்தக்காரே "இல்லறமல்லது நல்லறமன்று" என்றிருப்பதால் அறவழிப்பட்டுஆசையை யனுபவித்துத் தீர்க்க இல்லறம் நடாத்தப் புகுவார். அவரைச்சாதுக்களும் சத்புருஷரும் வழிநோக்கி யெதிர்பார்த்தவண்ணமிருப்பர். அவர்வரவையுன்னி அமர்ந்திருக்கப் பொறுக்காதார் அவர் இருப்பிடந் தேடியலைந்தும் திரிவார். ஏனெனில் அவர்கள் தர்மந் தழைக்கவென்று தனைத்தேடிவந்தாரை ஒருக்காலும் உதாசீனம் செய்துஉதறியெறியார். பிறவிஞானியாம்திருவள்ளுவரும் இல்லறம்புக இதனால்தானே இசைந்தாரல்லவோ.

---

## THE HOLY CITY OF MUTTRA.

### வடமதுரை.

### II

பவுத்தமதம்:—பிறகு ஜராசந்தனுடைய வம்சத்திலுதித்த சஹாதேவன் புத்தமதத்தை தழுவி இம்மதுரையில் அம்மதகோவில்களையும் மடங்களையும்கட்டி பௌத்தமதஸ்தர்களுக்கு பிரதான பட்டணமாக்கினான்.

இக்காலத்தில் இவ்விடத்தில் இருபது பிர்மாண்டமான புத்த ஆச்ரமங்களும் மூவாயிரம் பவுத்த சந்நியாசிகளும், ஆறு உயர்ந்த கோபுரத்தோடுகூடிய கட்டடங்களு மிருந்ததாக சரித்திரக்காரர்கள் எழுதியிருக்கிறார்கள்.

பிறகு கோவர்த்தனன் என்றகாஸ்மீரதேசத்து ராஜனும் அவன் குமாரனும் இந்த பவுத்த மதத்தைத் தொலைக்கப் பல பாடுபட்டதாகவும், ஜெயபிதாமகராஜன் என்பவன் கடைசியாக இம்மதுராபுரியில் ஜெயப்பூர் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஓர் மகாதேவர் கோவிலைக்கட்டினானென்பதாகவும் தெரியவருகிறது.

மகமதியரால் பாழாக்கப்பட்டது:—இதன்பிறகுதான் கஜநி மகமதென்பவனும் இம்மதுரையைத்தாக்கிஜனங்களைக்கொன்றுபொருளைகொள்ளையடிக்க, குலசந்திரன் என்றராஜன் துருக்கருடையபழிபாவங்களுக்கஞ்சாத செய்கைகளைக் கண்டு வெறுப்படைந்து தன் மனைவிகளைக்கொன்று தானும்குத்திக்கொண்டிறந்துபோக மகமது கஜ்நி ஆயிரக்கணக்கான இந்துக்களுடைய கோவில்களையிடித்து, விக்கிரகங்களையுடைத்து, கோடிக்கணக்கான திரவியத்தைக் கொள்ளைகொண்டு போனான். பிறகு ஆக்பர் ஆளுகைக்கு இம்மதுராபுரிவருகிறவரையில் இது பலமகமதியர்களுடைய ஆளுகைக்குட்பட்டு குரங்கின் கையிலகப்பட்ட பூமாலைபோல் அல்லோல கல்லோலப்பட்டுவந்தது.

சுல்தான் சிகந்தர்லோடி என்றமகமேதிய அரசன் ஒரு தடவை மதுராபுரியிலிருந்த கோயில்களையிடித்தான். இவன் தான் இந்துக்கள்க்ஷவரம்செய்துகொள்ளக்கூடாதென்றும் தாடிகளை வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்த தர்மப்பிரபு.

அப்கன் அன்னபி என்ற சிற்றரசன் மதுராபுரியை யாண்டபொழுது கம்சனுடைய கோட்டைக்குள் ஸ்ரீ கிருஷ்ணர் ஜனித்தவிடத்திலிருந்த அரண்மனையையிடித்து ஒரு மஜீதைக்கட்டி அடுத்தவிடங்களை கசாப்புக்கடைகளாக்கினான் ஆக்பருக்குப்பிறகு சக்ரவர்த்தியாக விருந்த ஷாஜிஹானுக்கும் ஒரு தடவை மதுராபுரியிலிருந்தஇந்துதேவாலயங்களையிடிக்கும்படி கட்டளையிட்டு இஸ்லாமாபாத்து என்று பெயரிட்டான்.

1658-ம் வருஷத்தில் அவுரங்கசீப் காலத்தில் ஆப்துல் அன்னபி என்ற சிற்றரசன் இப்பொழுது நகரமத்தியில் விளங்கும் ஜிம்மாமசீதை கட்டினதாகத் தெரியவருகிறது. இவன் காலத்தில் யாதவகுலத்தவனான கோகுலராஜன் ஒருவன் தோன்றி மகமதியர்களையெதிர்த்து சண்டைசெய்து பலரைக்கொன்றபடியால் ஆப்துல் அன்னபியைக் கொன்றதற்குக்காரணம் இவனேயென்று சந்தேகங்கொண்டு இவனைப்பிடித்துக் கொண்டுபோய் ஆக்ராவில் கொன்றுவிட்டார்கள்.

அடுத்த வருஷம் ரமேஜான் பண்டிகையில் அவுரங்கசீப் நேராக மதுராபுரிக்குவந்து பந்தலாதேசத்து பிர்சிங்குதேவர், ஜியாங்கிர் காலத்தில் 40 லக்ஷம் ரூபாய் செலவிட்டு கட்டியகேசவதேவர் கோவிலையிடித்து பாழாக்கி அங்கிருந்த விக்கிரகங்களை ஆக்ராவிற்கு கொண்டுபோய் ஒரு மஜீதுக்கு படிக்கட்டுகளாக போட்டதாக தெரியவருகிறது. இவன் இறந்துபோக மறுபடியும் யாதவர் வசமாயிற்று இந்த மதுரை.



1712-ம்வருஷத்தில் மதனசிங்தாகூர் என்ற அரசன் இம்மதுரையில் பலபெரிய மாளிகைகளையும் ஆலயங்களையும் கட்டிவைத்துகுளங்களையும் வெட்டியதாகத தெரியவருகிறது. இவன் கட்டியமாளிகை யொன்றில் இப்பொழுதும் தாசில்தார் கச்சேரி வைக்கப்படுகிறது.

இதன்பிறகு இம்மதுரை ஒருதடவை சிந்திய அரசர்கள் வசப்பட்டு மிருந்ததாகத் தெரியவருகிறது. கடைசியாக 1803-ம் வருஷம் இது அங்கிலேயர் வசப்பட்டு சேனைகள் தங்க ஒரு கன்டோன்மெண்டு கட்டப்பட்டது.

1858-ம் வருஷத்தில் நடந்த கலகத்திலும் இம்மதுராபுரியில் சில சல்லியங்கள் நேரிட்டதுண்டு.

இப்பொழுது இது வடமேற்கு மாகாணத்தைச் சார்ந்த ஆக்ராபிரிவில் ஒரு ஜில்லாவாகவிருக்கிறது. இதற்கு ஆறு தாலுக்காக்கள் உண்டு. மூன்று யமுனையாற்றின் வலது புறத்திலும் மூன்று இடது புறத்திலு மிருக்கின்றன.

இப்பட்டணத்தின் கிழக்குபாகம் அதிக சௌக்கிய முள்ளதாயிருப்பதால் அதிக செழிப்புள்ளதாகக் காணப்படுகிறது. மேற்கு பாகம் அவ்வளவு செழிப்புள்ளதாகக்காணப்படவில்லை. ஆனாலும் புராதனமான பல கட்டடங்களையுடையதா யிருக்கிறபடியால் பார்க்கத்தகுந்ததே. கோதுமை, எவம், துவரை, கடலை, பருத்திமுதலியவைகள் ஏராளமாய் சாகுபடி செய்யப்படுகின்றன. அன்றியும் வெள்ளரி, புடலை, அவரை, பாவக்காய் முதலிய காய்களும், கொய்யா, மா, எலந்தைமுதலிய பழங்களும் மிகவும் சகாயமாய் விற்கின்றன.

ஜனங்கள் கூடியவரையில் சாந்தகுணமுள்ளவர்களாயும், விஷ்ணுபக்தி யுள்ளவர்களாயும், அதிக புஷ்டியும் காத்திரமுமான வலுத்த தேகமுடையவர்களாயும் காணப்படுகிறார்கள். என்ன காரணத்தினாலோ-குஷ்டம், யானைக்கால் முதலிய பெருவியாதியினால் வருந்துகின்றவர்கள் பலர்தோற்றப் படுகிறார்கள். இவ்விடத்தில் ஹிந்தி என்ற பாஷை பேசப்படுகிறது. பிராமணர்கள், பனியர்கள், தாகூர்கள், யாதவர்கள், சவுபிஸ்என்ற பண்டாக்கள் என்ற ஜாதிகளே அதிகமானவர்கள். இந்த பண்டாக்கள் தான் ரயில்ஸ்டேஷனிலேயே யாத்திரைக்காரர்களை சந்தித்து அழைத்துக் கொண்டு ஸ்னான சங்கல்பம் முதலிய வைதீக கர்மங்களைச் செய்துவைத்து பட்டணத்திலுள்ள விநோத கட்டடம் தேவாலய முதலியவைகளைக் காட்டி பணம் சம்பாதிக்கிறார்கள். இவர்களில் மிகுந்த தனிகர்க ளிருப்பதாகவும் தெரியவருகிறது. பனியர்களில் ஒரு பிரிவார் சேட் என்றழைக்கப்பட்டு வர்த்தகம் செய்துவருகிறார்கள். மகமதியர்களும் 10 - ஆயிரக்கணக்காயிருக்கிறார்கள். இவர்களும் பலவித தொழில்செய்து ஜீவிக்கின்றார்கள்.

மதுராபுரிக்கு மேற்கே ஆக்ரா வாய்க்கால் என்ற ஒருகால்வாய் 1875-ம்வருஷத்தில் 140 மைல் தூரம் வெட்டப்பட்டு யமுனாநதியின் ஜலம்கொண்டு போகப்படுகிறது. இதனால் அனேக ஏகராபூமிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் படகுகளின் மூலமாக பல சாமான்கள் கொண்டுபோகப் படுகின்றன. இது வியாபார வசதிக்கு அனுகூலமாயிருக்கிறது.

காசி, காஞ்சி, அரித்துவாரம், அயோத்தி, துவாரகை, மதுரா, உஜ்ஜினி என்ற நகரங்கள் மோக்ஷத்தைக் கொடுக்கும் ஞானபக்திகளை விருத்திசெய்யும் ஸ்தலங்களென்று இதிகாச புராண வாக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பதால், இம்மதுராபுரிக்கு இப்பரத கண்டத்தின் பலபாகத்திலிருந்தும் பல புண்யவான்கள் சதாவந்துகொண்டிருப்பதாலும், பலரிவ்விடத்தில் திவ்வியமான தேவாலயங்களையும்

மண்டபங்களையும், தடாகங்களையும், தீர்த்த கட்டடங்களையும், சிங்காரவனங்களையும் கட்டியும், புதுப்பித்தும் வருகின்றார்கள். ஆங்கிலேய கவர்ண்மென்டின் நடுநிலைமையான செங்கோலின்கீழ்இந்நகரத்தில்திருடர், கொள்ளைக்காரர் முதலியவர்களுடைய பயமின்றி ஒவ்வொருவரும் சுதந்திரம் பெற்றிருப்பதால் ஆதியில் கொடுங்கோலோச்சிய மகமதியர்கள்காலத்தில் இடிக்கப்பட்டு போனதுபோக தப்பித் தவறியிருந்த தேவாலயங்களும் பிந்தி கட்டப்பட்டவைகளுமாக பலதேவாலயங்களிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவைகள்:—

கேசவதேவர் ஆலயம்:— இது முன்னிருந்த பட்டணத்தின் மத்தியில் கம்சனுடைய கோட்டைக்குள் கட்டப்பட்டிருக்கிறது. இது ஒரு அகலத்திற்கு 6-மடங்கு நீளமுள்ள விஸ்தீரணமுள்ள கட்டடம். மத்தியில் 58-கஜம் நீளமும் 29-கஜம் அகலமுமுள்ள ஒரு மேடையின்மேல் 50-கஜ உயரமுள்ள சோபுரங்களோடு கட்டப்பட்ட கோவில். இது சுமார் 10-மைல் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கும் தோற்றும்படியாக 'யிருப்பதால் அவுரங்கசீப் இதைக் கொள்ளையடிக்க கருதவே யதையறிந்த மீவார் தேசத்து அதிபதியாகிய இராணாராஜசிங்கர் அதிலிருந்த கேசவதேவர், நவநீதநாதர், மதுராநாதர் பாலகிருஷ்ணர் முதலிய சுவர்ணவிக்ரகங்களை எடுத்துக்கொண்டுபோய் உதயப்பூருக்கு அடுத்த பன்ஞசு என்னும் கிராமத்தில் மறைத்து வைத்ததாகவும், கோகுலநந்தர், துவாரகநந்தர், மோஹனநந்தர் முதலிய விக்கிரகங்களை ஜெயப்பூர் அரசர்கொண்டு தமதுவசத்தில் வெகுகாலம் வைத்திருந்து கலகங்களடங்கிய பிறகு மதுராவுக்கு கொண்டுவந்து ஸ்தாபித்ததாகவும், பிறகு அவுரங்கசீப் பட்டணத்தைக் கொள்ளையடித்து கோவில்களையிடித்து கேசவதேவர் ஆலயமேடையின்பேரில் ஒரு மஜீதை கட்டியதாகவும் கூறுகிறார்கள்.

இப்பொழுது கோட்டை மதிலுக்குப்பின்புறத்தில் இந்த கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இது பட்டணத்திற்கு சற்று தூரத்திலிருப்பதால் ஜனங்கள் அதிகமாக போய்வருவதாகத் தோற்றப்படவில்லை. இந்த ஆலயத்திற்கு சமீபத்தில் போத்ரகுண்டமென்று ஒரு தெப்பக்குளமிருக்கிறது. இதைச்சுற்றி பல விருக்ஷங்கள் வைத்து பயிர்செய்திருப்பதால் அலங்காரமாகக் காணப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் ஜனிக்கும் காலத்தில் தேவகியணிந்திருந்த சேலைகளை துவைத்து சுத்திசெய்த தீர்த்தமிதுவென்று கருதி சங்கடநிவாரணம் செய்யத்தகுந்த தீர்த்தமாக கொண்டு ஸ்னானம் முதலியவைகளை செய்கிறார்கள். குவாலியர் அரசர் இதற்கு வேண்டிய அளவு செலவு செய்து செப்பனிட்டிருக்கிறார், இப்போழுது இதில் மழைகாலத்தில் மட்டுமே ஜலமிருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணர் ஜனனஸ்தானம்:—இதுமேற்படி தெப்பக்குளத்திற்குமேல் புறத்தில் ஒரு புராதனமும் உறுதியுமானகட்டடம். பலகணிகளாவது பெரிய வாயில்களாவது இல்லாததால் இருள் நிறைந்திருக்கிறது. இதில் தான் வசுதேவரையும் தேவகியையும் சிறையிலிட்டிருந்ததாகவும், ஸ்ரீ கிருஷ்ணர் இவ்விடத்தில் தான் ஜனித்தாரென்றும் சொல்லுகிறார்கள். இவ்விடத்தில் குழந்தை வடிவமான ஒருகிருஷ்ண விக்ரகத்தை வைத்துக்கொண்டு யாத்திரைகாரர்களுக்குக் காட்டுகிறார்கள்.

புத்தீஸ்வரர் ஆலயம்:—இது மல்லர்புரம் என்ற கிராமத்தையடுத்திருக்கிறது. அதற்கு சமீபத்தில் பலபத்ரகுண்டமென்கிற ஒரு குளமும், பலராமர், நரசிங்கர், கணேசர் ஆலயங்களுமிருக்கின்றன. இவைகளெல்லாம்நல்ல விசாரணையற்ற ஆலயங்களாகவே காணப்படுகின்றன.

மகாதேவர் ஆலயம்:—இது வொருபெரிய கட்டடம். அயோத்திப்பிரசார் அவர்கள் கட்டியதென்றுகூறுகிறார்கள். அதற்கடுத்து கைலாசமென்ற ஒரு சிறு குளமும் அடிவாரத்தில் விகார ரூபமுடைய ஒரு உருவாரமும் காணப்படுவதுடன், சீரில் வைக்கப்பட்டவொரு சிங்காரவனமுமிருக்கின்றது. இதற்கு சமீபத்தில் கவுதமருடைய சமாதி எனப்படுகிறவொருஉயர்ந்த மேடை கருங்கல்லினால் கட்டப்பட்டுஒவ்வொரு யாத்திரைக்காரர்களாலும் வணங்கப்படுகிறது.



துருவமந்திரம்:—1870-வருஷம் மேல்பாகத்தில் பெரிய கடியார யந்திரம்வைக்கப்பட்டு கட்டப்பட்ட ஹார்டிஞ்கேட்என்றபெரியவில்வளைவான வாயிலின் வழியாகச்சென்றால்இந்த துருவமந்திரத்தைக்காணலாம். இது விநோதமான பெரியகட்டடம். இதில் ஸ்ரீகிருஷ்ணவிக்கிரகம் வைக்கப்பட்டு பூஜை, நைவேத்தியம், தீபாராதனை முதலியவைகள் அதிக சிரத்தையுடன் நடத்தப்பட்டு வருகிறது. இராக்காலத்தில் பஜனையும்பக்கவாத்தியங்களுடன் நடத்தப்படுகிறது.

அன்னபூர்ணி ஆலயம்:—இது கடைத்தெருவில் சுணர்க் கற்களால் கட்டப்பட்ட அலங்காரமான கட்டடம். இதில் அன்னபூர்ணியம்மன் ஒரு அலங்காரமான மேடையில் ஸ்தாபிக்கப்பட்டு பூஜைகள் கிரமமாக நடந்துவருகிறது.

கோவிந்தஜீமந்திரம்.—இதுவும் கடைத்தெருவிலுள்ள பிர்மாண்டமான கட்டடம். உள்பக்கத்தில் ஸ்ரீகிருஷ்ணவிக்கிரகம்அமைக்கப்பட்ட ஒரு பெரிய அறையும் முன்புறத்தில் விஸ்தாரமான ஒரு மண்டபமும் காணப்படுகிறது. இவ்விடத்தில் ஜனங்கள் சதா வந்து சுவாமிதர்சனஞ்செய்து திரும்பிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இப்படியே இம்மதுராபட்டணத்தில் மந்திரங்கள் என்பதாக சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்டவைக ளிருக்கின்றதுடன் ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீகிருஷ்ணவிக்கிரகத்தை தங்கள் சக்திக்கு தக்கின விதமாய் செய்து ஒரு பரிசுத்தமானவிடத்தில் ஸ்தாபித்து பட்டாடைகளாலும் பொன்னாபரணங்களாலும் சிங்காரித்து பூஜித்துப் போற்றிவருகிறார்கள். இப்பட்டணத்தில் ஜனங்கள் சதாகாலமும் கிருஷ்ணா! என்ற கர்ணாமிர்தமான திவ்விய நாமத்தை ஒவ்வொரு சமயத்திலும் உச்சரிப்பதைப்பார்த்தால், ஒவ்வொரு தினத்திலும் அந்த கிருஷ்ணருடைய நாமத்தை குறைந்தது ஆயிரம் தடவையாவது உச்சரியாத வாயையுடையவனும், சிரவணம் செய்யாத செவிகளையுடையவனு மிரானென்று உறுதியாகக் கூறலாம்.



இப்பட்டணமானது யமுனாநதியோரத்தில் சுமார் மூன்றுமைல்தூரம் பரவி பலகோவில்களையும், சிங்கராமண்டபங்களையும், மகமதியர்களுடைய விநோதமான கோரிகளையும், மூன்றுநான்குஅடுக்குகளோடுகூடியவீடுகளையும் ஏராளமாய் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிறபடியால் சற்று உயரமான கட்டடங்களில் ஏறிப்பார்ப்பவர்களுக்கு வெகு கம்பீரமானகாட்சியையும் வியப்பையுமுண்டாக்குகின்றது.

யமுனாநதியோரத்தில் விஸ்ராந்திகட்டம், கணேசகட்டம், மானசகட்டம், தசாஸ்வமேதகட்டம், கிருஷ்ணகங்காகட்டம், வசுதேவசட்டம், பிர்மலோககட்டம், கங்கதீர்த்த கட்டம், நவதீர்த்தகட்டம், ஹரிகுண்ட கட்டம் அவிமுககட்டம், யோககட்டம், பிரயாககட்டம், சூரியகட்டம், சிந்தாமணிகட்டம் துருவகட்டம், ரிஷிகட்டம், கோடிகட்டம், புத்தகட்டம் என்பதாக பல கட்டங்களிருக்கின்றன. இந்த கட்டங்களிலெல்லாம் பலமும் உறுதியுமான கற்களால் தளவரிசைகள் போட்டு பாவி, விசாலமான படிக்கட்டுகள் கட்டியிருக்கிறார்கள். கணேசகட்டத்தில்ஸநானஞ் செய்தபிறகு தான் மற்ற கட்டங்களில் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள்.

விஸ்ராந்தி கட்டத்தின் மேற்புறத்தில் பக்ஷ ஆலயங்களும் மண்டபங்களும், ஸ்ரீ கிருதுணர் கம்சனைக்கொன்ற பிறகு வந்து படுத்லாஇளைப்பாறிய இடமென்பதாக ஸ்ரீ கிருஷ்ணருடைய அழகான கோவிலும் காணப்படுவ்துடன், சதா ஜனங்கள் ஸ்நானம், ஜபம் பூஜை முதலிய சத்காரியங்களை செய்துக்கொண்டேயிருக்கிறார்கள். இந்தகட்டத்தில் கேசவ பட்டர் என்ற வித்வான் பல கிரந்தங்களை இயற்றி அரங்கேற்றியதாகவும், அநேகவித்வான்களிடம் தர்க்கஞ்செய்து ஜயித்ததாகவும், ஏழுவயதுடைய சைதன்னியரை ஜயிருகமாட்டாமல் இந்த கட்டத்திலேயே வெத காலம் யோகத்திலிருந்து வந்ததாகவும், அக்சமயத்தில் மகமதியர்கள் இந்த கட்டத்டச், இடித்து பாழாக்கும்பொழுது தன்னுடைய சில சிஷர்களுடன் போர்செய்து மகமதித்ர்களுடைய பெருஞ்சேனையைத் துரத்தியடிததாகவும் கூறுகிறார்கள்.

இந்த கட்டத்திற்கு சமீபத்தில் கம்சசாகர் என்ற ஒரு கால்வாயிருக்கின்றது. இந்த கால்வாயில்தான் கம்சனுடைய தேகத்தை இழுத்து வந்து யமுனா நதிக்கரையில் தகனஞ் செய்தார்களாம். இந்த விஸ்ராந்தி கட்டமே ஒவ்வொரு பக்கத்திலும் பன்னிரண்டு கட்டங்களைப்பெற்று மத்தியில் மிகப் பெரியதாயிருக்கிறபடியால் முக்கியமானதாயும் சிரேஷ்டமானதாயும் கருதப்படுகிறது.

யோக கட்டத்தண்டை கம்சன் எசோதையின் பெண்சிசுவைக் கொல்ல எண்ணி தன் கத்திக்குமேல் எறிய அக்குழந்தை துர்க்கையாக மாறி கம்சனை ஏசிச் சென்றவிடமென்பதாக ஒரு காளிகோவில் கட்டியிருக்கிறார்கள். இதற்கு அடுத்த கட்டங்களில் இராமேஸ்வரர், மஹாதேவர், பக்தநாதர், கபாலேஸ்வரர், முதலிய ஆலயங்களிருக்கின்றன. கங்கா கட்டத்தில் பலதேவரென்ற அழகும் அந்தமுமான ஒரு சிவங்கோவில் காணப்படுகின்றது.

தாராகட்டம் என்ற கட்டத்தில் ஒருகாலத்தில் ஸ்ரீ காசிராஜன்புத்திரியாக அவதரித்த யமுனாதேவிக்கு விவாகம் நடத்தப்பட்டதென்றும், அக்காரணத்தினால் இந்த கட்டத்தில் ஸ்நானஞ் செய்தால் தாரா பலனுண்டென்றும் கருதப்படுகிறது.

கண்டாபரண கட்டத்திலுள்ள ஓர் மண்டபத்தில் ஒரு பெரிய மணி கட்டியிருக்கின்றார்கள். கார்த்திகைமாதத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் தூங்குவதை மார்கழி பிறந்துவிட்டதென்று அவருக்கு தோற்றி எழுந்திருக்கும்படி கட்டப்பட்டதென்று கூறுகிறார்கள்.

துருவ கட்டத்தில் துருவர் சப்தரிஷிகளின் உத்திரவுப்படி இம்மதுராபுரியை தரிசித்து யமுனாநதியில் ஸ்நானஞ்செய்து நிஷ்டைகூடிய சமயத்தில் மகாவிஷ்ணு பிரத்தியக்ஷமாகி அழியாத பதவியைக் கொடுத்விடமென்று சொல்லுகிறார்கள்.

சதிபுருஷ்கட்டத்தை யடுத்து ஜெயப்பூரிலாண்ட அரசர்களுடைய சமாதிகளும் மற்ற பல சமாதிகளுமிருக்கின்றன. ஒரு சமாதியின்மேல் நான்கு அடுக்குள்ள ஒரு சிங்கார மண்டபம் கட்டியிருக்கிறார்கள். அதற்கு சமீபத்தில் சில சத்திரங்களிருக்கின்றன. யாத்திரைக்காரர்களுக்கு தங்குவதற்கு தகுந்தவைகளாயிருக்கின்றன.

இதற்கு அடுத்தவிடமே ஷஹர் என்று கூறப்படும் ஜனநெருக்கமான (கடைகளோடு கூடியபாகம் இதற்கு அடுத்த பாகம் ஜம்னா பார்க் என்ற சிங்காரவனம். இதன் மத்தியில் ஒரு அலங்காரமும் கம்பீரதோற்றமுமுடைய ஒரு மண்டபமுமிருக்கிறது. இதையடுத்து மற்றுமொரு சிங்காரவனமும் ஒரு அழகிய மண்டபமும் காணப்படுகிறது. இது மகாராஜா டவுலத்ராவ் சிந்தியா அவர்களிடத்தில் சேனைத்தலைவராயிருந்த ராபர்ட் சதர்லாண்டு என்பவரின் ஞாபகசின்னம் என்பதாகத் தெரியவருகிறது.



ஜிம்மா மசீது என்பது சுமார் 500 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்ட பழயகட்டடம். நான்கு பக்கத்திலுமுள்ள ஸ்தூபிகளோடு வெகு விநோதமாயும் அலங்காரமாகவும் காணப்படுகிறது.

இவைகளைத்தவிர, பலபாதைகள் செகப்பு நிறமுள்ள பலகைகற்களால் பாவப்பட்டும், அக்கற்களின் பேரில் நடப்பவர்களுக்கு மழைகாலத்தில் சறுக்காமலிருக்கும் பொருட்டு பல சித்திர அலங்காரமாகக்கொத்தியும், ஒவ்வொரு தெருவின் இரு பக்கத்திலும்கோவில்களும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் விசித்திர விநோதமான சித்திர அலங்காரங்களோடுகூடிய மெத்தை வீடுகளும் கடைத்தெருவுகளும் பட்டணத்தையலங்கரிக்கின்றன. நதியானது சில கட்டடங்களில்கற்கட்டிக்கட்டுகளை யடுத்தும் சில விட்டுங்களில் சற்று அப்புறத்திலும் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நதியில் 4-5 அடிநீளமும் அதற்குத்தக்க பருமனுமுள்ள ஆமைகள் ஏராளமாயிருக்கின்றன. யாத்திரைக்காரர்கள் இவற்றிற்கு கடலை, பழம்முலலியவைகளை வாங்கி வேண்டியவரையில்போடுகிறார்கள். இவைகள் மனிதருக்கு யாதொரு தீங்கும் செய்பவைகளாகக் காணப்படாதபோதிலும் பயங்கரமானவைகளாகவே தோற்றப்படுகின்றன,

இந்த மதுராபுரியைச் சுற்றிலும் ஒரு பெரியமதில்கட்டப்பட்டுயிருந்ததாகத்தெரியவருகிறது. இது பலவிடங்களில் இடிந்து போய் விட்டாலும் சில கேட்டுகள்மட்டும் வெகு அழகாயும் ஆச்சரியமாகவும் காணப்படுகிறது. இவைகளில் முதல்தரமானது ஹோலிகேட். இந்த வழியாகத்தான் பட்டணத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். இது வெகு அலங்காரமான ஸ்தூபிகளுடன் கட்டப்பட்டு பார்வைக்கு அதிககம்பீரமாகக் காணப்படுகிறது.

இவற்றைத்தவிர 1870-ம் வருஷம் சர்வில்லியம்மூர் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட பாடசாலைகட்டடமும், அதற்குப்பின் கட்டப்பட்ட தர்மவைத்தியசாலையும், ஐரோப்பிய பட்டாளம் தங்கட்டப்பட்டிருக்கிற 'பாரக்ஸ், களும், கலெக்டராபீஸ், ஜட்ஜ்கோர்ட் கட்டங்களும் கிலெஸ்து கோயிலும் பார்க்கக் கூடியவைகளே. ஜட்ஜ் கோர்ட்க்குப் பக்கத்தில் கண் காக்ஷிசாலை கட்டட மொன்றுண்டு இதில் பலவிதவிநோதப்பொருள்களையும், பல புராதன விக்கிரகங்களையும் வைத்து பரிபாலித்து வருகிறார்கள்.

அன்றியும் ஹார்டிஞ் ஆர்ச் என்ற வாசல்படியுங், தேவசந்து என்பவரால் 50 ஆயிரம் செலவிட்டு கட்டப்பட்ட இராதாகிருஷ்ணர்மந்திரமும், விஜயராம் என்பவரால் கட்டடப்பட்ட சத்கரமஹால் என்ற விஜயகோபிநாதர் மந்திரமும் லக்ஷ்மிசந்துசேட் அவர்களால் இலக்ஷம் ரூபாய் செலவிட்டு கட்டப்பட்டமந்திரமும், அந்தராம் சவுரி மந்திரமும் சக்கிலால் கனியலால் சேட் அவர்கள் கட்டிய கிஹார்ஜிகோவிலும். ஜகநாத்சேட் அவர்கள் கட்டியிருக்கிற கோபிநாதர்கோவிலும், பாலா மந்திரமென்ற ஆலயமும்பார்க்கத்தக்க விசித்திரஅலங்காரமான கட்டடங்கள். ஒன்றுக்கொன்று அழகாயிருக்கின்றன இந்தஒவ்வொருஆலயத்திலும் வருஷத்தின் பலதினங்களில் உற்சவங்களும் பூஜைகளும் அதிகஆடம்பரமாயும் விநோத வேடிக்கைகளுடனும், பயபக்தியுடனும் கொண்டாடப்படுகிறது.

இப்படி பட்டணமானது பிர்மாண்டமான சிகரங்களோடும், கோபுரங்களோடும் கலசங்களோடும்கூடிய ஆலயங்களாலும் மந்திரங்களாலும், மாடகூடகோபுரங்களாலும் மஜீதுகளாலும் நதியின் ஓரமாக நெருங்கி காணப்படுகிற கெம்பீரத்லைதயும், பட்டணத்தைச் சுற்றிமஹாவனம், காமியவனம், தபோவனம், குமுதவனம், பிர்ம்மவனம், இந்திரவனம் என்பனவாகிய பலதிவ்வியமான வனங்களால் சூழ்ந்தும், கோகுலம், பிருந்தாவனம், நந்திக்கிராமம், லலிதாகிராமம், பலதேவம், விஷ்ணுபுரம், முதலிய ஸ்தலங்களை எல்லையாகவமைந்

திருக்கிற தோற்றத்தையும், இவ்வனங்களிலும், ஸ்தலங்களிலும் விளங்கும் ஆலயங்களின் அழகையும், யமுனாநதியின் ஜலத்தினால் கண்களுக்குளட்டியதூரம்பூமியானது அடைந்திருக்கும் செழிப்பையும் அதனால் சகலபதார்த்தங்களும் யதேஷ்டமாக விற்கப்படுகிற நயத்தையும், பசுக்கள் யானைகள் போல்உயர்ந்து பருத்து கூட்டங்கூட்டமாய் மேய்வதின் லக்ஷ்மிகரத்தையும், பார்த்த விடமெங்கும் நான்கு ஐந்து அடுக்குகளுள்ள மெத்தைவீடுகளும், அவைகளின்பேரில் கிருஷ்ணலீலா விநோதங்களை பாடியாடிக்கொண்டிருக்கிற பெண்மணிகளின் அலங்காரத்தையும், கொஞ்சிக்குலாவிக்கொண்டுதிரிகிறபஞ்சவர்ணக்கிளி மாடப்புறா முதலிய பக்ஷிஜாதிகளின் ஒய்யாரத்தையும் வர்ணிக்க யாரால் முடியும்! இவைகளைவிட்டு ஒவ்வொருவீட்டின் பின்புரத்திலும் ஒருபெரும்பாகத்தை ஸ்ரீ கிருஷ்ணருடைய ஆலயமாகச் செய்து அலங்கரித்து மத்தியில் நவரத்னமயமான மேடையில் ஸ்ரீ கிருஷ்ணவிக்கிரகத்தை வெகு சுந்திரமாகவமைத்து பலஆபரணங்களாலும் ஆடைகளாலும் அலங்கரித்து தினப்படிபூஜை நைவேத்தியம் முதலியவைகளை செய்துக்கொண்டு வருகிறார்கள்.

இவ்விடத்திலிருந்து பிருந்தாவனம் என்ற திவ்விய க்ஷேத்திரம் நான்கு மைலில் தூரமிருக்கிறது. அந்த ஸ்தலத்தின் மகிமையைப் பற்றியடுத்தமுறை எழுதுவோம்.

டி. ஸி. வெங்கடரமணய்யர்.

NEW BOOK BY
SWAMI VIVEKANANDA
**INSPIRED TALKS**
280 PAGES 2 ILLUSTRATIONS
**CLOTH BOUND Rs. 2**
PUBLISHED BY
THE RAMAKRISHNA MISSION,
*Mylapore, MADRAS.*

## KANNAKI—ASCOIAL DRAMA.

## கண்ணகி.

### முதல் அங்கம்.

காதற்சிறப்பு—கலியாணப்பேச்சு.
இடம்—காவிரிப்பூம்பட்டினம்.

நாடக பாத்திரர்கள்.

மாசாத்துவன்—அந்நகரத்து வணிகன்
பெருமனைக்கிழத்தி—மாசாத்துவன் மனைவி
நந்தன்—கைஊழியக்காரன்
கோவலன்—மாசாத்துவன் புதல்வன்
நீலமேகன்—கோவலனின் தோழன்
விநோதன்—கோவலனின் சேவகன், விகடமாகப் [பேசுபவன்

விசாலாட்சி, மரகதம் —கண்ணகியின் சேடிகள்
மாநாய்கன்—அந்நகரத்து மற்றோர்வணிகன்.
கண்ணகி—மாநாய்கனின் புத்திரி

உ

## கண்ணகி.

அங்கம்—1] [காட்சி—1

இடம்— மாசாத்துவனின் சயனக்கிருகம்.
காலம்— இரவு.

மாசா:— (கட்டிலிற் சாய்ந்தவண்ணமாகவே தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறான்) ஆஹா! என்னே இறைவனின் திருவிளையாடல்! மனிதர்களுக்குச் சுகமுந்துக்கமும் மாறி மாறி வரும்படிச் செய்துகொண்டிருக்கிறார். ஓர்புத்திரனில்லையென்பதாக நான்கொண்ட துக்கமுந் துயரமும் யாரேஅறிவார் வருந்திய எனக்கு முப்பத்திரண்டு இலட்சணங்களும் பொருந்தி பாலசந்திரனைப்போல் விளங்கும். ஓர் அருந்தவப்புதல்வனை அருளிச் செய்தார். நான் அப்போது கொண்ட ஆனந்தத்திற்கு இம்மண்டலத்திருக்கும் அலைகடற் பரப்பும் அளவில் ஒப்பாகாது! மைந்தனுக்கு குழவிப்பருவம் நீங்கிவிட்டது! இப்போதுசகுந்த வாலிபனாகிவிட்டான்! தக்க இடத்தில் அவனுக்குவதுவைசெய்துவைக்க வேண்டுமே என்னும் கவலை என்மனதை இடையறாது வருத்திக்கொண்டிருக்கிறது! பெருமனைக்கிழத்தியோ இடைவிடாதுஎன்னைவிவாகவிஷயமாகத்தொந்தரவு செய்கிறாள்! அவளைச்



சமாதானப்படுத்த விவாகத்தைச்சீக்கிரம் முடிப்பதைவிட வேறுவழியில்லை! (பெருமூச்சுடன்) காவலியை இன்றுங்காணேனே! என்வரவில்லை! (உரத்தி) நந்தா! நந்தா! (என்று கூப்பிடுகிறான்.)

நந்த:— ஏன்! ஏன்! இதோ வருகிறேன். (விரைவாகவருகிறான்) என்னை அழைத்தகாரணம்யாது?

மாசா:— உன் எஜமானி எங்கே? விரைவிற்சென்று யான் வரச்சொன்னதாகத்தெரிவி! சீக்கிரம்செல்!

நந்த:— அப்படியே! [விரைவாய் வெளியே செல்லுகிறான்.]

பெரும்:— (கூடத்தில் உட்கார்ந்துகொண்டு)என்ன பாவம் செய்து இப்பெண் ஜென்மமெடுத்தேனோ! ஸ்திரீகள்என்றால் புருஷர்களுக்கு என்ன அலட்சியம்! மிருகமுஞ்சரி ஸ்திரீகளும் சரி என்றல்லவோ நினைத்திருக்கிறார்கள்! நான் சொன்னால் "நீ பெண்பிள்ளை! உனக்கு ஒன்றும் தெரியாது! விவாகம் செய்யவேண்டியகாலம் எனக்குத் தெரியும்! உன் வேலையைப் பார்!" என்று கடிந்து பேசுகிறார். எப்போது விவாகம்செய்யஎத்தனப் படப்போகிறாரோ! (என்று தானாகவே உரத்துப் பேசுகிறாள்.)

நந்த:— அம்மணி! எஜமான் தங்களை அழைக்கிறார்கள்!

பெரும்:— எனக்கு "அழைப்பு" என்னவேண்டியிருக்கிறது! ஒன்றுந் தெரியாதவளுக்கு! அங்கென்னவேலை! போடாபோ!

நந்த:— இல்லை அம்மணி! ஏதோ அவசரகாரியம் போல் இருக்கிறது! விரைவாகவரும்படிச் சொன்னார்;

பெரும்:— சரி; நான் போகிறேன்; நீ உன்வேலையைப்பார்! [நந்தன் போய்விடுகிறான்.]

பெரும்:— (சயனக்கிருகத்துள் சென்று கட்டிலினருகில் நிற்கிறாள்).

மாசா:— (சற்றுநேரங்கழித்து) வாயிலென்ன கொழுக்கட்டையா இருக்கிறது? ஸ்தம்பம்போலிருக்கிறாயே;

பெரும்:— என்னுடைய வாயில்தான் கொழுக்கட்டை யிருந்தது; தங்கள்வாயில் இன்னேரமென்ன இருந்ததோ?

மாசா:— அம்மணி; தெரியாமற் கேட்டுவிட்டேன்; கோபித்துக்கொள்ளாதே!

பெரும்— எனக்குக் கோபமென்ன வந்தது; நான்தான் ஒன்றுந் தெரியாதவளாயிற்றே! ஏதாவது தெரிந்தாலல்லவோ கோபம் இன்னதென்று தெரியும்; என்னை அழைத்தகாணம் யாது?

மாசா:— ஒன்றுந் தெரியாதென நான் ஒன்றுந் தெரியாமற் சொல்லிவிட்டேன்! அதையே கெட்டியாகப் பிடித்துக்கொண்டாயே; தயைசெய்து மன்னித்துவிடு; நீ எல்லாம் தெரிந்தவள்; [சிரிக்கிறான்]

பெரும்:— நீங்கள்தான் எல்லாம் தெரிந்தவர்கள்; என்னை அழைத்தது யாதுகாரணம்பற்றி; அதைத் தெரிவியுங்கள்.

மாசா:— என்ன வருத்தமாக விருக்கிறாயே; அருகில் உட்காரு; சொல்லுகிறேன்.

பெரும்:— உட்காருவது பின்பாகட்டும்; அழைத்த காரியமென்ன?

மாசா:— நமது புதல்வன் கோவலனுக்கு விவாகம் செய்வதைக்குறித்துஉன்னுடன்யோசனை செய்யலாமென அழைத்தேன்!

பெரும்:— (ஆனந்த பரவசத்துடன்)பிராணநாதா! தங்களுக்கு அந்த எண்ணம் இப்போதாவதுஉண்டாயிற்றே! நான் செய்தபாக்கியமே பாக்கியம்! (அருகில் உட்காருகிறாள்).

மாசா:— எந்தவநிதையைநமதுகுமாரனுக்கு மணம் புரிவிக்கலாம்?

பெரும்:— குலமும்தக்ககுலமாகநமதுமரபிலுதித்த பெண்ணாக விருக்கவேண்டும்! இல்லாவிடில் நமது உற்றார் உறவினர் குறை கூறுவார்கள்!

மாசா:— பெண் நற்குண நற்செய்கை உடையவளாக இருக்கவேண்டும். இல்லாவிடில் பிறந்த குலம்புகுந்தகுலம்இரண்டிற்கும்இழிவுண்டாகும். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும்பொருந்தி, கணவன், மாமன், மாமி, முதலானவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவளா யிருக்கவேண்டும்!

பெரும்:— இவைகளோடு நல்ல ரூபவதியாகவும் இருக்கவேண்டும்! அப்போதுதான்நமதுகுழந்தை திருப்திஅடைவான்! அவன் மனதிற்குப்பிடிக்காதிருந்தால்நாம்செய்யும்விவாகத்தால்என்னபலன்!

மாசா:— எந்தப்பெண் நமது குழந்தைக்கு மணமகளாக யோக்கியமுடையவள்?

பெரும்:— மாநாய்கன் வீட்டுப்பெண்களைக் கேட்கலாம்!

மாசா:— அவர் வீட்டில் பெண் எது?

பெரு:— கண்ணகி இருக்கின்றாளே?

மாசா:— ஆம்! ஆம்!

பெரும்:— அவள் அவருடைய அருந்தவப்புதல்வியல்லவா!

மாசா:— ஆஹா! அப்படியா! கண்ணகியை நான் இரண்டொரு முறைபார்த்திருக்கிறேன்! என்ன குணம்! என்னரூபம்! என்ன அடக்கம்! என்ன பொறுமை! அவளே நமதுகுமாரனுக்குத்தகுந்த மணமகள்! ஆனால்,—

பெரும்:— ஆனால்...என்ன?

மாசா:— அவர்கள்சம்மதிக்கவேண்டுமே! அம்மாது சிரோமணியை அவர்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக எவ்வளவோ செல்வமாக வளர்த்துவருகிறார்கள்! தக்க இடத்தில் விவாகம் செய்து கொடுப்பார்களேயன்றி நாம் கேட்டால் கொடுப்பார்களோ? அதுதான் சந்தேகமாயிருக்கிறது!

பெரு:— கொடுப்பார்களென்றே நினைக்கிறேன்! ஏனெனில் நமது குமாரனைப்பற்றிஅடிக்கடிஅவர்கள் விசாரிக்கிறார்கள்!

மாசா:— விசாரித்தால்—கொடுப்பார்களென்று அருத்தமா என்ன?

பெரும்:— எனக்குஅப்படித்தான் தோன்றுகிறது! எல்லாவற்றிற்கும் நீங்கள் அவளுடையபிதாவை நேரில் கண்டு சங்கதியைச்சொல்லுங்கள்! என்ன சொல்லுகிறார் பார்ப்போம்!

மாசா:— கொடுக்கிறாரென வைத்துக்கொள்.

பெரும்:— கொடுத்தால்விவாகம் செய்துவிடுகிறது

மாசா:— என்ன கிள்ளுக்கீரையாகச் சொல்லுகிறாயே! நமது—

பெரும்:... நமது குலத்திற்கென்ன! நமது செல்வத்திற்கென்ன! என்நாம் கொள்ளக்கூடாது?

மாசா:— அவையெல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன! நமதுபுத்திரன் சம்மதப்படவேண்டுமே

பெரு:—ஆமாம்! அதுயோசிக்க வேண்டிய விஷயமே!

மாசா:— நீயாக அவனைத் தனியாகக்கேட்டு அவன் அபிப்பிராயத்தை தெரிந்துசொல்லு!

பெரும்:— நாளையதினம் அவனைக் கேட்கிறேன்! என்ன சொல்லுகிறானே பார்ப்போம்! [உறங்கி விடுகிறார்கள்]

---

அங்கம்—1] [காட்சி—2

இடம்:— காவிரியாற்றின் கரை

காலம்:— மாலைக்காலம்.

கோவலன்:— அன்பன் நீலமேகன் என் இன்னும் வரவில்லை? நான்வந்து இரண்டு நாழிகைக்கு மேலாகிறதே! அதோ ஓர் உருத்தோன்றுகிறதே! நண்பனாய்த் தானிருக்கவேண்டும்! நாம் உறங்குவதுபோல் பாசாங்கு செய்வோம்!

[ஆற்றங்கரை மணல்மீது சயனித்துக் கொள்ளுகிறான்]

நீல:— (கோவலனருகில்வந்து) கோவல! என்ன உறக்கமோ? இந்த மாலைக்காலத்தில் நித்திரையென்ன? எழுந்திரு! (தட்டியெழுப்புகிறான்)

கோவல:— (நித்திரை நீங்கிவிழிப்பவன்போல்விழித்து) நீலமேகா! என் இவ்வளவு தாமதம்! தனியாகவிருந்தது என்னமோ ஓர் மாதிரியாக விருந்தது! அதனால் சற்றுப்படுத்தேன்!

நீல:— எவ்வளவு ஆநந்தமான இடமாயிருக்கிறது பார்! ஆற்றின் நீர் தங்கத்தை உருக்கிவார்த்தாப்போல் பொன்மயமாகவிருக்கின்றது! பார்வைக்கு எவ்வளவு அற்புதமாயிருக்கிறது! மந்தமாருதம் வீசுவதும், புஷ்பவகைகள் மலர்ந்து தம் கண் வியாபித்திருக்கும் சுகந்தத்தை எங்கும் பரவச்செய்வதும், பட்சியினங்கள் தம் தம்கூட்டை நாடிச்செல்லும் சந்தோஷத்தால்கோஷமிடுவதும் என்ன ஆனந்தத்தை அளிக்கின்றன! இவ்விடத்திலிருந்தால் பசியெடுக்காது! கவலையிராது ஆஹா! எவ்வளவு ரமணீயமான இடம்!

கோவல:—நீ சொல்வனவெல்லாம் எனக்குச்செவிடன் காதிற் சங்க மூதுவதுபோலிருக்கின்றன! என் கவலையை மாற்ற—

நீலமே:— நண்பா! உனக்கு என்னவியாகூலமேற்பட்டது! இரண்டு மூன்று தினங்களாகமுகவாட்டத்துட னிருக்கிறாயே! கேட்டால் ஒன்றுமில்லையென்கிறாய்! என்னுடன் சொல்லக்கூடாதா?

கோவல:— ஆப்த! உன்னிடம்சொல்லக்கூடாதென்னும் எண்ணம் இல்லை! சொல்லி உனக்கும் என் நிமித்தம்வருத்தத்தைக் கொடுப்பதில்எனக்குஇஷ்டமில்லை!



நீலமே:— நீவருந்தும்போது நான் வருந்துவது தானே கூடாது? வருத்தமென்ன?

கோவல:— ஒன்றுந் தெரியாதவனைப்போலக் கேட்கிறாயே, நண்பா! அன்றுமாலையில் என்னபார்த்தோம்!

நீலமே:— உப்பரிகையின்மேல்—

கோவல:— உப்பரிகையின்மேல் பார்த்தோமன்றோ? அவ்வஸ்துதான் என்னுடைய கவலைக்குக் காரணம்.

நீலமே:— கவலைநீங்க என்னசெய்யவேண்டுமென்கிறாய்?

கோவல:— கவலைக்குக்காரணம் எதுவோ அதுவேதான் என்கவலை ஒழித்தற்குங் காரணமாகவேண்டும்!

நீலமே:— நண்பா! நீ சொல்வது ஆச்சரியமாகவிருக்கிறதே! என்னென்றால் தணிக்கமுடியாத கேவலம் ஓர் பெண்பிள்ளையால் தீர்ந்துவிடுமென்கிறாயே!

கோவல:— கவலைக்குக் காரணம் யார்?

நீலமே:— அம்மாதரசி தானே?

கோவல:— அதற்குச் சந்தேகமா!

நீலமே:—ஆதலால்—!

கோவல:— ஆதலால்யார்கவலையை உண்டாக்கினார்களோ அவர்களே கவலையை நீக்கவேண்டும்!

நீலமே:— சரி! சரி! பெண்வசப்பட்டுக் காமாந்தகாரனாய் வருந்துகிறாய் போலும்! நண்பா! சகலமுமுணர்ந்த உனக்கிது அழகா!

கோவல:— நண்பா! என்னவார்த்தை சொன்னாய்! காமாந்தகாரனாய் வருந்துபவன் யான் அல்லன்! நான் கொண்டிருப்பது உண்மைக்காதல்! காமத்திற்கும் காதலுக்கும்உள்ள வேறுபாடு தெரிந்தால் நீ அவ்விதம் கூறத்துணியாய்!

நீலமே:— என்னவேறுபாடு எனக்குச் சொல்!

கோவல:— சொல்லுகிறேன் கேள்; காமம் உடலைப் பற்றியது! காதல் உயிரைப் பற்றியது! உடல் எப்படி இன்று தோன்றி நாளை யழிந்து போகிறதோ அம்மாதிரியாகக் காமம் சரீரதி—முள்ளவரையில் அரை நிமிஷ இன்பத்தைப்பற்றியிருந்து பின் உடல் அழிவதுபோல் அழிந்து போம் தன்மையுடையது! உயிர் எக்காலத்தும் அழியாதிருப்பதுபோலக் காதல் எக்காலத்தும் அழியாமல் இப்பிறப்பிலும், இனிவரும் பிறப்பிலும், இவ்வுலகத்தும் இனிவரும் உலகத்தும் நிலையாக நிற்கும் உள்ளன்பாம்! அதாவது உருவுந் திருவும், பருவமும் குலனும், குணனும் அன்பும், ஆகிய இவைகளில் ஒப்புமை பெற்றவர்களாய்க் காதற்கிழவனுங் கிழத்தியும் ஓராவிற்கு இருகோடு தோன்றினாற்போல ஒருயிர்க்கு இரு உடல் தோன்றியதென உயிர் ஒன்று, உடல் இரண்டு என்னும்படி ஒருவருக்கொருவர் அன்புபூண்டொழுகலே காதல் எனப்படும்! கேவலம் காமம் சாதாரண மிருகங்களிடத்து மிருக்கிறது! நான் கொண்டிருப்பது காமமல்ல! ஆனால் காதல்! காதல் என்பதுதான் அன்பு! அதுவே ஐசுவரியம்! அதுவே மோட்சம்! அதுவே கடவுள்! அதுதான் எல்லாம். காதலின்னதென்றும், இப்படிப்பட்டதென்றும், நான் கொண்டிருக்கும் காதல் இத்தன்மையதென்றும், தெரிந்தால் நீயென்னைப் பரிகாசம் செய்யமாட்டாய்! காதலின் சக்தியையும், மகிமையையும் யாரே சொல்லமுடியும்! ஈசன் என்ன நினைத்திருக்கிறானே! (பெருமூச்சுவிடுகிறான்.)

நீலமே:— நண்பா! பெரிய பிரசங்கம்செய்ய ஆரம்பித்துவிட்டாயே! அதிபால்யனான நீ இவ்வளவும் எங்கே கற்றாய்? எப்போது கற்றாய்?

கோவல:— காதல் என்னும் அன்புதான் ஆன்மாவிற்குள்ள இயற்கைக் குணமாயிற்றே! அதைக் கற்றுக்கொள்வதற்கு அது வேறு குணமாயிருந்தாலன்றோ! உயிர் என்றிருந்தால் அந்த இடத்தில் காதல் இருக்கும்! காதலிருந்தால் அங்கு உயிர் இருக்கும். கண்ணகியை அடைந்தாலன்றி என் ஜன்மம் சாபல்யமடையாது! இது நிசசயம்!

நீலமே:— நீ கண்ணகிபால் காதல்கொண்டிருப்பது வாஸ்தவமே! அவள் உன்மீது காதல்கொண்டிருக்கிறாளென்பது என்ன நிச்சயம்

கோவல:— நான் கொண்டிருப்பது உண்மைக் காதலானால் அவள் என்னைக் காதலித்திருக்கிறாள் என்பதிற் சந்தேகமேயில்லை!

நீலமே:— அஸ்தமன சமயத்திற் கீழ்த்திசையில் சூரியனுதிக்குமா?

கோவல:— (கீழ்த்திசையாகத் திரும்பி) ஆம்! எதே ஓர் உரு கோடி சூரியப்பிரகாசம் போல் ஒளிவீசித் திகழ்கின்றதே! யாதாயிருக்கலாம்?

நீலமே:— ஓர் பெண்மணியின் உருவத்தைப்போலத்தோன்றுகின்றது!

கோவல:— (உற்றுநோக்கி) அவ்வுருவைத் துரத்திக்கொண்டே ஆகாயமார்க்கச்சந்திரன் வருகின்றனே! என்ன விசேஷம்?

நீலமே:— (நிதானித்து) நண்பா முன்புதோன்றுவது ஓரிளங்குமரி! உணர்ந்தேன்உணர்ந்தேன்! இன்று பௌரணமியானதால் சந்திரன் முழுக்கலையுடன் கீழ்திசையில் உதயமாகிறான்! அந்நங்கை முன்பாகவருவதும் சந்திரன் பின்பாக மேகத்தில் தவழ்வதும் பார்த்தால் அவளை அவன் துரத்திவருவது போற்றோன்றுகின்றது!

கோவல:— (சற்று ஊன்றிப்பார்த்து) நண்பா! சந்திரன் நங்கையைத் துரத்திவருகின்றானென்றாயே! எனக்கு அப்படித்தோன்றவில்லை! அவன் மேருமலையையல்லவோ வலம்வருகிறான்!

நீலமே:— எதற்காக?

கோவல:— இதுதெரியாதா!

நீலமே:— எனக்குத்தெரியவில்லை! நீதான் சொல்லேன்!

கோவல:— நீலமேகா! சந்திரன் இவளுடைய முகவழகைக்கண்டு, தன்னிடத்து "முயல்" என்று சொல்லப்படுகிற களங்கமிருப்பதால் இவளுடைய முகத்திற்குத் தான் ஒவ்வாமல், குறைந்திருக்கும் உண்மைகண்டு நாணி, அம்மறுவைத் தீர்த்துக் கொள்வதற்கு ஓர் மருந்தைநாடி வடமேருகிரியை வலம் வருகின்றான்!

நீலமே:— நீ சொன்னது தான் உண்மை! என்ன காந்தி! என்னதேஜஸ்! நாமிருக்குந் திசையை நாடியன்றோ வருகிறாள்! அவளைப்பின் தொடர்ந்து இரண்டு கன்னிகைகள் வருகிறார்கள்! பார்த்தாயா?

கோவல:— ஆஹா! இவளே நான் காதல்கொண்டிருக்கும் கண்ணகி! அதிற்சிறிதும் ஐயமில்லை!

நீலமே:— நீ காதல்கொண்டது மிகவும் பொருத்தமானதே! இந்நங்கையைக் கண்ணுறும் யாவர்தான் காதல்கொள்ளார்?

கோவல:— நண்பா! நான் கொண்டிருக்கும் எண்ணத்தைச் சொல்வதற்கு வேறுவார்த்தை இல்லையே! "காதல்" என்றுசொல்லுவது போதுமானதல்ல!

நீலமே:— (சிரித்துக்கொண்டு) காதல் என்று சொல்லலாம்! காதலுக்கு மேலும் சொல்லலாம்!

விநோதன்:— (பின்புறமாக வந்துநின்று) காதல்! காதல்காதல், காதல், காதல் காதல், காதல், காதல், காதல் காதல்! எல்லாவற்றையும் ஒன்றாகப் பெருக்கிச் சொல்லுங்கள்! அப்போது சரியாகப் போய்விடுகிறது!

கோவல:— (திரும்பிப்பார்த்து) அடடே! நீ எங்கடாவந்தாய்! நாங்கள் இங்கிருப்பது உனக்கெப்படித்தெரிந்தது?

நீலமே:— ஆரூடம் பார்த்தானோவென்னமோ!

விநோ:— ஆரூடம் பார்க்கவில்லை! ஆறிடம் பார்த்தேன்! வந்தேன்! காதல் மறந்துபோகப் போகிறது! பெருக்கிச் சொல்லுங்களேன்!

கோவல:— எதிலடா பெருக்குகிறது!

விநோ:— கற்பலகை கொண்டுவரட்டுமா!

நீலமே:— எண்டா! காதலைப்பெருக்க முடியுமா!

கோவல:— சிரித்துக்கொண்டு அவனுடைய புத்தி அவ்வளவுபிரகாசம்! உலக்கைக்கொழுந்து!

விநோ:— காதலைத்தான் பெருக்கமுடியாதே! ஓர் நங்கைபால் கொண்ட காதலைப்பெருக்க முடியாதென்னும் கொள்கையுடையவர்களானால், அந்நங்கையிடம் அவர்களுக்கு உண்மை அன்பு கிடையாதென்றே சொல்லவேண்டும்! உண்மைக்காதலானால் பெருகாதிருக்குமோ?

நீலமே:— என்னடா! இவனிடம் அகப்பட்டுக்கொண்டோமே! எப்படி பதில்சொல்வது!

விநோ:— உலக்கைக் கொழுந்தும், முற்றியிலையாகி விட்டதே! அதை யோசிக்கின்றீரோ? என்காணும், குந்தாணிவேரே!

கோவல:— அடே! வாய் அதிகமாய் விட்டதா என்ன? (கோபமாய்ப் பார்க்கிறான்)

விநோ:— இல்லை பிரபு! ஒருவாய்தான்! அந்த ஒரு வாய்க்கே வருவாயில்லையே! (வருவாய்-வரும்படி.)

கோவல:— என்னடா இவன்! சிவபூஜையில் கரடியை விட்டு ஓட்ட வந்துவிட்டான்!



விநோ:— ஓஹோ! சிவபூஜையா நடக்கிறது! நல்ல பூஜை! உங்கள் பூஜைக்குப் பரமசிவன் உடனே காட்சிதந்துவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பார்!

நீலமே:— சிவ பூஜையினும் மேலான பூஜையடா!

விநோ:— உணர்ந்தேன்! சக்தி பூஜையா?

நீலமே:— ஆம்!

விநோ:— அதாவது கண்ணகி பூஜை! அப்படித்தானே!

கோவல:— என்னடா உளறுகிறாய்!

விநோ:— உளறவில்லை! கண்ணகி பூஜைசெய்ததால் தான் கண்ணகி தங்களுக்குக் காட்சி கொடுக்க அதோ வருகிறாள்!

கோவல:—(சந்தோஷத்தோடு) உன் வாக்கு முகூர்த்தமாவது பலிக்கட்டுமே!

விநோ:—பலித்தால் என்னதருகிறீர்கள்!

கோவல:—ஆயிரம்பொன் உனக்கு இனாம்!

விநோ:—பை?

கோவல:—(சிரித்துக்கொண்டு) என்னடா! பொன் தரும்போது அதைப்போடுவதற்குரிய பைதர மாட்டார்களா?

விநோ:—சந்தேகம்! அதற்காகக் கேட்டேன்!

நீலமே:— என்னடா சந்தேகம்?

விநோ:—இல்லை; தேகம்!

கோவல:—பயித்தியம் பிடித்து விட்டதோடா? என்னடா தேகம்?

விநோ:—இல்லை; தேகம்! — சந்தேகம்.

நீலமே:(கோவலன் காதிற்குள் ரகசியமாகச்சொல்லுகிறான்) இவனைக்கொண்டே நாம் காரியத்தை ஒருவாறு முடித்துக்கொள்ளலாம். அவனைப்போய் அவர்களோடு கலந்து மெதுவாக நாமிருக்கும் இடத்திற்கு அழைத்துவரச் சொல்லும். நாம் அந்த நந்தவனத்தில் போயிருப்போம்

கோவல:—அப்படியே செய்வோம்!

விநோ:—(நிலமேகனைப்பார்த்து) என்காணும் என் எஜமான் காதைக்கடிக்கிறீர்?

கோவல:—நீ அவரைக்கடித்துவிடாதே!

விநோத:—நான் அவர்தானோ! நாயல்லவோ கடிக்கும்.

கோவல:—இருக்கட்டும்! அதோ வருகின்ற நங்கைமார்கள் மூவரும் தனித்து இருக்கிறார்கள். அஸ்தமனமாகிவிட்டது! நீபோய் அவர்களுக்குத் துணையாயிருந்து நந்தவனம் முதலான விடங்களுக்கு அவர்கள் செல்லுவார்களானால் கூடச்சென்று, அவர்கள் திருமபி வீடுபோய்ச்சேரும் வரையில் பாதுகாத்துக் கொண்டிரு! செல் சீக்கிரம்!

விநோ:— என்ன கருணை! என்ன அன்பு! ஆகா அப்படியே செல்லுகிறேன். (விநோதன் செல்கிறான்)

நீலமே: — ஒருவாறு—

விநோத:—(திரும்பிவந்து) ஒருசந்தேகம்! நந்தவனத்திற்கு அவர்கள் செல்லுவார்களா! அல்லது அவர்களைச் செல்லும்படிச் செய்யவேண்டுமோ!

கோவல:—உனதிஷ்டப்படி செய்! போ! (போகிறான்.)

நீலமே:—கோவல! நாம் நந்தவனத்திற்குச்சென்று அங்கு மேடைமீது இருப்போம், வா! (இருவரும் நந்தவனத்திற்குச் செல்கிறார்கள்.)

"Free from Bonds"

(THE AUTOBIOGRAPHY OF A TALUQ GUMASTAH)

## * அவிழ்த்துவிட்ட கழுதை.

2-வது பாகம்.

### பாலியம். (விவாகம்.)

இரண்டாவதுதரம் எனக்கு மெட்ரிகுலேஷன் தவறிப்போயிற்று. பிறகு என்னசெய்கிறதென்று தெரியவில்லை. என்தாயார் என்னை "நீ வீட்டோடு இருந்துகொண்டு மிகுதி இருக்கும் சொற்பநிலத்தை சாகுபடிசெய்துகொண்டும் குத்தகைக்கு வேறுநிலங்களைப் பயிர்செய்துகொண்டும் இருந்தாற்போதும்" என்றாள். அது என் மாமனாருக்கு சம்மதமாகவில்லை. அவர் ஒரு தாலூகா குமாஸ்தா. தாசீல்தாருக்கு வேண்டியவர். அவருடைய சிபார்சின்பேரில் எனக்கு அதேதாலூகாவில் "நஸ்திரபந்து" வேலை செய்வித்தார். மாதசம்பளம் 7-ரூபா; மேல்வரும்படி நாம் தேடாமலே மாதம் 8-ரூபா கிடைக்கும். என் தாயார் நூதன விதந்துவானதால் ஊரை விட்டுவர சம்மதிக்கவில்லை. நான் ஒருவரு

* தன்னையறிந்துதன்வழியில் பிரவேசிக்கும்மனோ தர்மசக்தி தடையறியாது.

ஷம் மாமனார் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு வேலைபார்த்துவந்தேன். என் தம்பிக்கு வேண்டிய படிப்பு எங்கள் ஊருக்குப்பக்கத்திலேயே இருந்தது. நான்பிரதிமாதம் என் சம்பளத்தைஎன் தாயாருக்கு அனுப்பிவிடுவேன். மேல்வரும்படியைக் கொண்டு எனக்குவேஷ்டிகள் புஸ்தகங்கள் வாங்கிக்கொள்வேன். இந்த ஒருவருஷம்மட்டும் யாதொரு கவலையுமின்றி உத்ஸாஹமாயிருந்தேன்.

அடுத்த வருஷம் என்மனைவி பெரியவளானாள். இரண்டுமூன்று மாதத்திற்கெல்லாம் சாந்தி செய்ய வேண்டுமென்று என் தாயார் சொன்னாள். நான் இங்கிலீஷ் படித்தவனானதினாலே அடுத்தவருஷமாகட்டும் என்றேன். அப்படியே அடுத்தவருஷம் எனக்குசாந்தி முகூர்த்தமாயிற்று. அதற்கு ராமுடுவந்திருந்தான். மணியனுடைய தமையனாகிய நடராஜன் இறந்துவிட்டமையால் மணியன் வரசரிப்படவில்லை என்று தெரியவந்தது. இதைக்கேட்க எனக்கு இடி விழுந்தது போலிருந்தது. நான் நடராஜனை முதல் முதல் சந்தித்ததையும் அவன் என்னிடத்தில் நிஷ்காரணமாய்க் காண்பித்த அன்பையும் அவன் எனக்குச் செய்திருக்கும் உபகாரங்களையும் ஒன்றொன்றாய் எண்ணிப்பார்க்க என்விசனம் அதிகரித்தது. இப்படியிருக்கையில் உறவினர் ஒரே கச்சேரியில் வேலைபார்க்கக்கூடாதென்று உத்தரவுவந்தது. ஆகையால்என்னை வேறொரு தாலூக்காவுக்கு மாற்றிவிட்டார்கள். என் தாயார் இதைக் கேள்விப்பட்டதும் "நீங்கள் என்ன நெல்லுக் குத்துகிறவர்களா? நீங்கள் வேலை செய்யுமிடத்தில் உங்கள் உறவினர் வரக்கூடாதென்று காவல்வைக்க?" என்று கேட்டான். "அதிலும்கேடுதான்நாங்கள்; நெல்லுக் குத்துகிறவர்கள்தங்களுக்கு இஷ்டப்பட்டால் ஒரு வீட்டுவேலையைவிட்டு இன்னொரு வீட்டுக்கு வேலைக்குப்போக இடமிருக்கிறது. எங்களுக்கு இந்த உத்தியோகத்தை விட்டால் வேறுபிழைப்பில்லை" என்றேன்.

அப்படியே வேறொரு தாலூகாவுக்குப்போய் வேலை ஒப்புக்கொண்டு, என்தாயார், மனைவி, தம்பி இவர்களுடன் குடித்தனம் செய்தல் என்னும் கிரஹஸ்தாசிரமசித்தியைப் பெற்றேன்.

என்மனைவி என்னைத்தவிர மற்றெல்லார்க்கும்நல்லவள். நான்என்மனைவியைத்தவிர மற்றெல்லார்க்கும் நல்லவன். எங்கள் இருவருக்குமுள்ள பொருத்தமின்மை எங்களிருவருக்குத்தான் தெரியும். என்தாயாருக்குக்கூடத் தெரியாது. ஊரிலெல்லாரும் என்னை "வெகுபுத்திசாலி,வெகு நல்லவர்" என்பார்கள். என்மனைவியை "வெகு நல்லபெண், வெகுசாது, அடங்கின சரக்கு" என்பார்கள். நான் வெளியில் போகும்போதெல்லாம் வெயில், பனி, படாதபடி தலையை முக்காடிட்டுக் கொண்டுபோவேன். இதைக்கண்டால் என்மனைவி "இதென்ன அறுத்த முட்டாக்கு" என்பாள். எனக்குத் தலை முடிந்துகொள்ளத் தெரியாது. என்தலை முடிச்சு தீக்ஷிதர்கள் முடிபோல் ஒருபக்கம் சாய்ந்திருக்கும். இந்த முடிச்சோடு வீட்டுக்குள் வந்தால் என்மனைவி என் தலையை அவிழ்த்துத் தானே தன்னிஷ்டப்படி முடிந்து விடுவாள். நான் மாதந்தோறும் சம்பளத்தை என் தாயாரிடத்தில் கொடுப்பேன். "மேல்வரும்படி எங்கே?" என்று என்மனைவி தினம் என்னைக்கேட்பாள். "என் செலவுக்கு வைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றால் அவளுக்குக் கோபம் வந்துவிடும். "உங்கள் அம்மாவினிடத்திலிருக்கிற நம்பிக்கை என்னிடத்திலில்லையா? நான் உங்களுக்கு வேண்டும்போது கொடுக்கமாட்டேனா? எங்கள் வீட்டில் எங்கள்அப்பா சம்பளம்முழுவதும் என்கையில் தான்கொடுத்து வைப்பார்." என்பாள். இவளுக்குப்பயந்து வரும்படியில்லையென்று பொய்சொல்ல என்நாவிற்கு அப்பியாசமுண்டாவதில்லை. மேல்வரும்படி கிடைக்காத தினத்தில் "இன்றைக்கு வரும்படியில்லை" என்றால், "சாமர்த்தியம்போதாது



என் தகப்பனார் தினம் கால்ரூபாயாவதுகொண்டு வராமல் வீட்டுக்கு வரமாட்டார்" என்பாள். இவளுடையதொந்திரவுபொறுக்கமாட்டாமல் ஒருதடவை ஐந்துரூபாயை அவளிடத்தில் கொடுத்தேன். கொஞ்சநாள் கழித்து ராமயணபுஸ்தகம் ஒன்று எனக்குத்தபாலில் வந்தது கையில் அப்பொழுது பணமில்லாமையால் என்மனைவியிடம்போய் "இரண்டு ரூபாய்கொடு, புஸ்தகம் வாங்கவேண்டும்" என்றேன். அதற்கவள் "அந்தப்புஸ்தகத்தினால் யாருக்கென்னலாபம்? இப்பொழுது விறகிலே இரண்டுரூபாய் உண்டானால் ஆறு மாதத்திற்குவிறகாகும் குடித்தனத்துச் செலவுக்குக்கண்டு மிருந்தாலல்லவோ நீங்கள் புஸ்தகம் வாங்கலாம்". என்றாள். சிலநாட் சென்று ஒருசாயந்திரம் நான்கச்சேரியிலிருந்து வீட்டுக்குவந்ததும், "நான் ஒரு சங்கதி உங்களைக்கேட்காமல் செய்துவிட்டேன் ,நீங்கள் கோபித்துக்கொள்ளாவிட்டால் நான் சொல்லுகிறேன்". என்றாள் அதற்கு நான் "என் கோபம் உன்னை என்னசெய்யமுடியும்? சொல்லு" என்றேன். "என் அட்டிகையின்னல் பெயர்ந்தும் திருகு ஒடிந்துமிருந்தது. அன்றைக்கு நீங்கள் கொடுத்த 5 ரூபாயில் விறகு 1 ரூபாபோக 4 ரூபாகொடுத்து அடுத்தவீட்டில் கலியாணத்துக்கு வேலைசெய்யும் தட்டானிடம்அட்டிகையைப் புதுப்பித்தேன்பாருங்கள்"என்றுநகைகளைக் காட்டினாள். நான்சிரித்துக்கொண்டு இதினாலென்ன எப்படியாவதுகுடித்தனச் செலவில் பணமுபயோகப்படவேண்டியது."என்றேன். நீங்கள்சிரிக்கிறது எனக்குத்தெரியும்! நான் அன்றைக்கு ராமாயணத்துக்குப் பணம்கொடுக்கமாட்டேனென்றதற்காகச்சிரிக்கிறீர்கள். ராமாயணத்தை எதற்காக விலைகொடுத்து வாங்கவேண்டும்? தினம் அடுத்ததெருவில் சாஸ்திரிகள்வாசித்துஅர்த்தம்சொல்லுகிறார், கேட்டாலும்போதும்" என்றாள். அதுமுதல் நான் என் மேல்வரும்படியில் பாதி அவளுக்குக் கொடுத்துவிடுகிறதென்றும் மற்ற என் பாதியின் செலவைபற்றி அவள் கேட்ககூடாதென்றும் உடன்படிக்கையாயிற்று.

## THE SONS AND DAUGHTERS OF INDIA.

## இந்தியபுத்திரர் புத்திரிகளின் சங்கம்.

(பிரம்மஸ்ரீ, ப. நாராயணய்யரவர்கள் பி. ஏ. பி. எல். எழுதியது.)

1. இப்பெயருள்ள சங்கம் புண்ணியக்ஷேத்திரமாகிய காசிநகரத்தில் மாது ஸ்ரீ அந்நிபிசெண்ட் அம்மாளால் 1908ஞு அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. அதன் முக்கியக்கருத்துக்கள் என்னவென்றால்:—

(1) இந்தியாவின் கண்ணுள்ள பலஜாதியாருக்குள்ளும், பல மதஸ்தர்களுக்குள்ளும் ஐக்கியபாவத்தையும், சிநேகபாவத்தையும், அபிவிர்த்தி செய்தல்.

(2) ஜனசமூகவாழ்க்கைக்கு இன்றியமையாத லோகோபகாரங்களை அறிந்துசெய்தல்,

(3) நன்மையுள்ள எந்தக் காரியத்தை செய்தாலும், தர்மமுறைபற்றியும், சட்டநீதி முன்றிலகாமலும் செய்யவேண்டுமென்பதுவாம்.

2. சிறுபிராயமுதற்கொண்டு, மேற்கண்ட தர்மங்களில் நம்முடைய ஜனங்கள் பழகுவாராகில், இந்தியாவின் வருங்கால நிலைமை மேன்மையுள்ளதாகவும், நேர்மையுள்ளதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நம்முடைய தேகத்தில் உள்ள சிறுவர்களும் சிறுமிகளும் மேற்கண்ட தர்மமுறைகள் பற்றி ஒழுகும்படியாக செய்வித்தல், பெரியோருடைய கடமை. ஒவ்வொரு தகுந்த வயதுள்ளவரும் தாம் நல்வழியில் நடக்கிறதுமல்லாமல், தம்முடைய புத்திரன் புத்திரிகள் நல்வழியில் நடக்கும்படி செய்வித்தலும் வேண்டும்.

3. ஜனங்களுக்குள் துவேஷபாவத்திற்கு காரணங்களில், முக்கியமானது சமயவேற்றுமையாம். அதற்குக்காரணம் அவரவர் பிறந்

திருக்கும் சமயத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் அறியாமையாம். ஆராயுங்கால் ஆகாசத்தில் தோன்றி பூமியில் விழும் மழைத்துளிகள் பலஜலதாரைகளாகவும் வாரிகளாகவும் உண்டாகிப்பிறகு, மென்மேலேபெருகி சேர்ந்து நதிகளாகஅமைந்து கடைமுறையில் சமுத்திரம் சேருமாறுபோல ஜனங்களுடைய ஹிருதய ஆகாசத்தில் தோன்றும் பல பாவனைகளின் காரியமாக பலநாமங்கள் ஏற்பட்டு அதனால் பலவாறாக வழிபாடுகளும் ஆராதனைகளும் ஏற்பட்டாலும் கடைமுறையில் ஒரே ஈசுவரன் பாதத்தையே அடைகின்றன. எல்லாமதங்களும் ஈசுவரனிடத்தில் சேர்ப்பிக்கும் பல வழிகளாம். மார்க்கங்களில் வித்தியாசங்களிருப்பினும் அடையப்பெறும்பொருளில் வித்தியாசம் இல்லை. அது ஒன்றே.

"வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து
பார்க்கின் மாறுபடும் கருத்தில்லை" என்றார்.
(தாயுமானவர்.)

உற்றுநோக்கிப்பார்க்கின் சமயங்கள் உண்மையாக ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகிறதில்லை. அதனால் என் சமயம் உயர்வு உன் சமயம் தாழ்வுஎன்ற செருக்கைத்தவிர்த்து அவரவர் பிறந்திருக்கும் சமயத்தின் உண்மையை அறிந்து அறிந்தபடி ஒழுகுவாராகில் ஜனசமூகத்தில் க்ஷேமமும் சமாதானமும் பிறக்கும். இக்கருத்தைக்கொண்டே அடியிற்கண்ட திருமந்திரமுமாம்.

"ஆனசமயம் அது இது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம், அது ஒழி
கானங்கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த உருவது ஆமே."

4. நந்தேசத்தில் அறிவுள்ளார் அறிவுடைமையின் உத்திரவாதத்தை உணர்ந்தாரில்லை. செல்வமுடையார் அதன் கடமையை கவனித்தாரில்லை. மேல்ஜாதியில் பிறந்தோமென்றும், உத்தமகுலத்தில் உதித்தோமென்றும் இறுமாப்புள்ளார் அவ்வவ் நிலைமைக்குரிய தர்மத்தை கைக்கொண்டாரில்லை. இந்தியா ஜனசமூகம் என்ற ஒரு விராட் புருஷனுக்கு ஒவ்வொருஜாதியாரும் ஒவ்வொரு அங்கமாகவும் அவயமாகவுமிருக்கிறார்கள். தலை, தோள், கை, இடுப்பு, கால்கள்போன்றும் இருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கமும் அவயமும் ஒவ்வொரு கைங்கரியம் அதாவது வேலைசெய்ய காத்தியப்பட்டுள்ளது. எல்லா அவயவங்களும் அததன் வேலையை, நேர்மையாயும், தவறாமலும் செய்யுமாகில் அப்புருஷன் சுகமாகவும் நேர்மையாகவும், நடைபெறுவான். அதனால் இந்தியா ஜனசமூகத்திற்கு க்ஷேமமுண்டு, சுகமுண்டு. அப்படிநிகழாமல் அந்தந்த அவயவங்கள் தன்தன் தொழிலைமறந்து, அல்லது அலக்ஷியம் செய்து, தான் மேலானவன் மற்றவன் கீழானவன் இருவருக்கும் சம்பந்தமில்லை என்றவிபரீத பாவனைகொண்டு நடக்குமாகில், சீர்குலைந்து, நேர்மைகுன்றி போர்மேவிட்டு, ஐக்கிய பத்தியும் அற்று, அவ்விராட் புருஷன் சரீரக்கட்டும் குலைந்தும், உலைந்தும் போய், சிதைந்த நிலைமையும் வந்துவிடும். நம்முடைய தேசத்தில் இப்போது இருக்கின்ற நிலைமை இதுவாம். மனுவால் குணகர்ம விபாகத்தினால் ஏற்பட்டுள்ள நான்கு வர்ணத்தாரும் அவரவர்கள் செய்யவேண்டும் தர்மங்களைக்கைவிட்டார்கள். சாஸ்திரவிரோதமானவும், நீதிக்குப் புறம்பானவுமான பலஉட்பிரிவான ஜாதிவகுப்புகளை அகங்காரத்தினால் உண்டு பண்ணிக் கொண்டார்கள். அவைகளால் ஜனசமூகத்தில் வேற்றுமைபாவங்கள் மேலிட்டன. ஜன சமூகவாழ்விற்குரிய பொதுநன்மைகளைச்செய்யாமல் ஒழித்தனர். "ஒப்புரவறிதல்" என்றதர்மத்தை நம்மவர்முற்றும் மறந்தனர். லோக உபகாரமான செய்கை செய்யும் வழியே ஒப்புரவறிதல் என்றார் நாயனார்.

"ஊருணி நீர் நிறைந்த உலகவாம்
பேரறிவாளன் திரு" (குறள்

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருவரிடமிருக்குமாயின் அவை பிரருக்குபயோகப்படவேண்டும். அன்றேல், அவர் செல்வம் இருந்தென்ன போயென்ன?



"ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்." (குறள்)

ஒப்புரவு (Patriotism) என்ற உயர்வான தர்மத்தை எப்பொழுது நம்மவர் திரும்பவும் அனுஷ்டிக்கப்போகின்றார்?

அப்பொழுது தான் நம் தேசத்திற்கு நற்காலம் விடியும்.

"ஒப்புரவொழுகு" என்றார் ஔவையார்.

5. ஆகையால் மதவேற்றுமையால் ஏற்படும் துவேஷபுத்தியை நீக்கவேண்டும் என்பதும், அவரவர் தம்மாலியன்றமட்டும் பொருட்செல்வம் கல்விச்செல்வத்தினுதவியால் ஜனசமூகத்தின் க்ஷேமத்திற்குரிய நற்காரியங்களைச் செய்துமுடித்தல்வேண்டும் என்பதும், இச்சபையின் கருத்து.

6. இச்சபையின் (இந்தியா முழுவதும்) தலைவர் :—மாது ஸ்ரீ அந்நி பிஸண்டம்மையார் (Mrs. Annie Besant)

இச்சபையின்காரியங்களைக் கொண்டுசெலுத்த உட்சபை (Council) ஒன்றுளது. அவ்வுட்சபையில் சென்னைராஜதானியின் பிரதிநிதியாக ம-ா-ா-ஸ்ரீ ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் (மாஜிஹைகோர்ட்ஜட்ஜ்) அங்கத்தினராகவிருக்கிறார். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒன்றுக்குக்குறையாமல் இச்சபையின் காரியங்களை நடத்த சாப்டர் (Chapter) என்று பெயருள்ள ஒரு ஏஜெண்டிருக்கிறார். அவருக்குக்கீழாக தாலுக்கா, கிராமங்கள்தோறும் வார்டன (Warden) என்னும்பெயருள்ள ஜனங்களின் க்ஷேமத்தை பாதுகாப்பவரான ஒரு உத்தியோகஸ்தர் இருக்கிறார். அவராலும் அவருக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களாலும் ஷை சங்கத்தினர்கள் சபையில் சேர தகுதியுள்ளவர்களென்று தெரிந்தெடுக்கப்பட்டு சேர்க்கப்படுகிறார்கள். இச்சங்கத்தில் அங்கத்தினராக சேரவிருப்பமுள்ளவர்கள் ஷை உத்தியோகஸ்தர்களால் தெரிந்தெடுக்கப்படுவதுமன்றி ஜனசமூகத்தின் க்ஷேமத்தை சரியாகவும் நேர்மையாகவும் கொண்டு செலுத்திவருவோமென்று கொடுக்கப்படும் உறுதிமொழி காகிதத்தில் விலாசசகிதமாய் தங்களுடைய கைபெழுத்துப் போடவேண்டும். தவிரவும், சபையின் உத்தியோகஸ்தர் முன்பாக சிரத்தையுடனே அவ்வுறுதிமொழி பத்திரத்தைவாசித்து உறுதிசொல்லவும் வேண்டும்.

குறிப்பு — இச்சபையின் அபிவிருத்தியிலும், க்ஷேமத்திலும், மகாகனம்தங்கிய இந்தியா கவர்னர் ஜனரல் (Lord Minto) லார்டு மிண்டோ அவர்களும், மகாகனம் தங்கிய சென்னை கவர்னர் (Sir Arther Lawley) ஸர் ஜிர்தர் லாலி அவர்களும் அபிமானமுள்ளார்கள்.

## THERE IS NO ASSET GREATER THAN A CULTIVATED WILL.

## மனோதைரியத்துக்கு மிஞ்சின ஆஸ்தியில்லை.

செல்வம் சகடக்கால்போல் சுழன்றுவரும் தன்மையது என்பது எல்லாருக்கும் தெரியும். "ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்" என்றார் கவிசிரேஷ்டரும் "30-வருஷம் வாழ்ந்தவனுமில்லை; 30-வருஷம் கெட்டவனுமில்லை" யென்கிற பழமொழியும் இதையே குறிக்கிறது. செல்வம் நிலையாத்தன்மையது என்று ஏற்பட்டுவிட்டால், 'பணமேபெரிது என்று கொண்டாடும் இக்காலத்தில் நிலையில்லாச் செல்வத்தை நம்பி என்ன தான் செய்யலாம். "அறிவுக்கு மிஞ்சின ஆஸ்தியில்லை" யென்பது நமது மூத்தோர் கொள்கை. அறிவுடையார் எல்லாமுடையார்" என்றார் எம்பெருமான் திருவள்ளுவநாயனாரும். அறிவை யடைந்தவனுக்கு அதுவே ஆஸ்தியன்றி வேறொன்று ஆஸ்தியில்லை. அவன் ஜனகர் கோமானைப்போல் சிம்மாஸனாதிபதியாயிருந்தாலும் ஸரி, சுகப்பிரஹ்மம், ஸதாசிவப்பிரஹ்மம் இவைகளைப்போல் ஒன்றுமில்லாதவனாயிருந்தாலும் சரி, அறிவொன்றே அழியாச்செல்வமன்றிமற்றதெல்

லாம் அவர்களுக்கு லக்ஷியமில்லை. அந்த அறிவு பெறுதற்கு சாதனம்வேண்டுமே: அதுபெறும் வரையிலாவது செல்வம் வேண்டாமா? என்றால், அப்பொழுதும் செல்வத்தை நம்பினால் மோசம்தான். பின்னை? மனோதைரியத்தைக் கைவிடாதுகொள்ளும் விவேகமே சாதகனுக்கு அழியாத ஆஸ்தியாம். அறிவுசாத்தியமானமஹான்கள்போக, அறிவுபெறமுயலும்சாதகனுக்குமனோதைரியத்துக்கு மிஞ்சினஆஸ்தி இல்லையெனபதேதுணிபு. மனோதைரியம்இல்லாவிட்டால்மனிதன் காற்றினால் தூற்றப்படும் பதருக்கு ஒப்பாவான். அதற்கு என்னமஹிமை யுண்டோ அதுதான் மனோதைரியமிழந்த அவனுக்கும். மனோதைரியம் விவேகத்தினாலன்றி வேறுவிதமாக சித்திக்கவழியில்லை. அரிச்சந்திரன், நளனைப் போன்ற மஹா ராஜாக்களுக்கு வந்த ஆபத்துக்களில் அவர்கள் நித்தியாநித்தியவஸ்து விவேகத்தினால் மனோதைரியம் பெற்றதன்றி வேறு சாதகம்அவர்களுக்குண்டா? இதுபூர்வீகத்தில்மட்டுந்தான் பொருத்தமானதென்றுநினைப்பது பிசகு. உண்மையான தத்துவங்கள் எக்காலத்துக்கும்பொருந்தும் தன்மையவாம், இக்காலத்திலும் அது உண்மையே. உதாரணமாக மிஸ்டர் ஜெ. என் டாடாஎன்னும்செல்வவான் சரித்திரத்தைப் பார்ப்போமாயின் அவர்ஏழைக்குடும்பத்தில் பிறந்து தன்முயற்சியால்கோடீசுவரன் ஆகிஇந்தியா முழுமைக்கும்பரோபகாரமான "டாடா இன்ஸ்டிடியூட் "டாடாஸ்டீல்வர்க்ஸ்" முதலிய ஸ்தாபனங்களை நியமித்தமேதாவி. அப்படிப்பட்ட அவருக்குதிடீரென்று ஆபத்துவந்துவிட்டது. அவர்சீமையிலிருந்தபொழுது அவருடையதகப்பனார் செய்து வந்த வியாபாரம் படுத்துக்கொண்டது. அப்பொழுது அவர் மனோதைரியத்தை விட்டு மனம்கலங்கியிருந்தாரானால் அவருடைய பேரையே நாம் கேள்விப்பட்டிருக்கமாட்டோம். ஆனால் அவர் என்னசெய்தார்?—

"வியாபாரத்தில்நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தியைக்கேட்டதும் (சீமையிலிருந்தஅவர்) மனங்கலங்கிப்போகாமல் சமயத்துக்குத்தக்க நடவடிக்கைகளை நடத்தி அங்கே தொடங்கினதும் தொடங்காததுமாயிருந்த வேலைகளையெல்லாம் ஒதுங்கவைத்துக்கொண்டும், அந்நாட்டிலே தம்மிடத்தில் யாருக்கும் ஒருவித மதிப்பு உண்டாகும்படி செய்துவிட்டும் பம்பாய் வந்துசேர்ந்தார். இங்கே வந்துபார்த்தாலோ அவர் குடும்பமிருந்த கேவலஸ்திதியைச் சொல்லிமுடியாது. அது மிகவும் சீர்கெட்டுப் போயிருந்தது இருந்த ஐவேஜியெல்லாம் போய்விட்டது. அப்போதுகூட அவர் கவலைமேலிட்டு அதைரியப்பட்டுப்போகவில்லை. சில கண்டிராக்ட்டுகள் எடுத்து லாபம் சம்பாதித்து தத்தளித்துக் கொண்டிருந்த தமது குடும்பத்தை மறுபடியும் நிலை நிறுத்தினார். அதுமுதல் மிஸ்டர் டாடாவுக்கு அதிர்ஷ்டகாலம் திரும்பிவிட்டதாய் சொல்லவேண்டும். அவர் கையால்தொட்டமண்ணும் பொன்னாகத்தலைப்பட்டது."

இப்படிப்பட்ட பரிசவேதி அவருக்குக் கிடைத்ததற்குக் காரணமென்ன? அவரது மனோதைரியமும் விடாமுயற்சியுமே. செல்வம் ஜடபதார்த்தம். மனிதனோ சித்ரூபி. ஜடம் சித்தை வெல்லுமா? அவரிடத்திலுள்ள இரகசியத்தைச் சுருங்கச்சொல்லவேண்டுமானால், அது இது:"ஒருதொழிலைச்செய்யஆரம்பித்தால் அதனைக்கடைசிவரையும்செய்துநிறைவேற்றிநிலைநிறுத்துவதற்குவேண்டியஊக்கம், உழைப்பு, மனந்தளராதவிடாமுயற்சி, புத்திகூர்மை, சமயத்துக்குத் தக்க யோசனைபோன்றசிறந்தகுணங்கள் அவரிடம்விசேஷமாயிருந்தன. அவர்எந்தத் தொழிலைச்செய்தாலும் அதைப்பிறர்செய்கிறமாதிரிதானும்செய்கிறதில்லை. புதுமாதிரி முறைகளைக் கண்டுபிடிப்பதிலேயே அவர்கண்ணும் கருத்துமாயிருந்து ஏதாவது ஒருபுதுமாதிரியைக்கண்டுபிடித்தே தீர்வார்,,

உண்மைத்திரமும் உள்யோசனையுமுள்ள மனிதனுக்கும் அவையில்லாத ஆடுகளாம் மனிதர்களுக்கும் உள்ளவித்தியாசம் இதுவே.

---

## THE MAGNETIC RELATION BETWEEN WATER AND AIR.

## அப்புவுக்கும் வாயுவுக்குமுள்ள ஆகர்ஷண சக்தி.

"பத்மநாபசகோதரியை நம:"

ஓர் நூதனயந்திரம் :— நிலத்தின்கீழ் தண்ணீர் இருக்கிறதா இல்லையாவென்று நிலத்தைவெட்டிப் பார்க்காமல் தானே கண்டுபிடிக்கத்தக்க நூதனயந்திரம் ஒன்று இங்கிலாண்ட் லிவர்பூல் பட்டணத்தில் ப்ரன்ஸ்விக் தெருவிலுள்ள மான்ஸ்பீல்ட் கம்பெனியாரால் செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அது ஒருவகை காந்தஊசி. அதன் உதவியால் நீர் ஊற்றுச் சுரக்கும் இடங்களைத் தாமேயறிந்து கொள்ளலாம். இந்தக்காந்த ஊசியின் மர்மம் என்னவென்றால் அப்புவுக்கும் வாயுவுக்குமுள்ள ஆகர்ஷண சக்தியே. இந்தமர்மத்தை "பத்மநாபசகோதரி"யென்னும் இரகஸியநாமத்தின் லக்ஷியார்த்தத்தில் காணலாம். தண்ணீர் ஆவியாக வெழும்பி வாயுமண்டலஞ்சென்று கார்மேகமாகி கருணைஜலம் பொழிவதை நாம் பார்த்திருக்கிறோம். தத்துவசிருஷ்டிக்கிரமத்தை யாராய்ந்துபார்த்தால், வாயுவிலிருந்து தேயு தத்துவமும், தேயுவிலிருந்து ஆப்தத்துவமும் உண்டாகிறது. இந்த ஆப்தத்துவம் சூரியோஷ்ணத்தால் ஒரு பங்கு கடினமான உப்பாகிப் பிருதிவியம்சமாகவும் மற்றொன்று லோசன ஆவியாகி உயிரம்சமுமாகிறது. ஆகவே, பிருதிவிதத்துவமும் பிராணவாயுவும் ஆப்தத்துவத்திலிருந்து அக்னியின் சேர்க்கையால் உண்டாகிறது. ஆகையால் பிரிதிவியும் வாயுவும் மின்சாரத்தின் இருமுனைகள்போல் மிதுனசக்தியால் சேர்க்கப்பட்டு விளங்குகிறது. இந்த இருமுனையிலிருந்துமுண்டாகும் மின்சக்தி ஒன்றையொன்று நெருங்கும்பொழுது ஆணும்பெண்ணும் ஆலிங்கனம் செய்து கூடுவதுபோல ஆண்முனை பெண்முனையான இவ்விரண்டும் சேர்ந்துகூடி மின்னலும் இடியுமுண்டாகிறது. இந்த மின்னலிலிருந்து மழைரூப ஜலமுண்டாகிறது."மின்னுக்கெல்லாம்பின்னுக்குமழை"யென்றது பொய்யல்ல. அதோமுகப்பிரவிருத்தியில் மழையாக மாறுவது ஊர்த்துவமுகப் பிரவேசமாயின் ஆகாயமாகமாறும். இதைப்போலவே நிசுவாஸக்காற்றான ஸ்தூலவாயு என்னும் ஆண்சக்தியும், உசுவாஸக்காற்றாகிய சூக்ஷ்மவாயுவாம் பெண்சக்தியும், நாசிகாமத்தியரந்தரத்தில் ஒன்றோடொன்று சேர்ந்து ஐக்கியப்பட்டுப்போக இரண்டிலும்வேறான காரணவாயு அவ்விடத்தில் ஜனிக்கிறது. இதுவே ஹடயோகிகளின் சக்திக்கு மூலாதாரமானவாயு. இது அதோரேதஸைமாற்றி ஊர்த்தரேதஸையுண்டு பண்ணத்தக்க சக்திவாய்ந்தது. உசுவாஸ நிசுவாஸ வாயுவுக்கும் அவற்றின் ஐக்கியத்தினால் அவையிரண்டும் செத்தவிடத்திலுண்டான இந்தக் காரணவாயுவுக்கும்உள்ளவித்தியாஸம்என்னவென்றால், (Electricity) மின்சாரத்துக்கும், காந்தசக்திக்கும் உள்ளவித்தியாஸமே. மின்சாரசக்தி பஹிர்முகமாய்ப் பாயும் சக்திவாய்ந்துள்ளது. காந்தசக்தி அந்தர்முகமாகத் திரும்பியுள்ளது. பஹிர்முகசக்தி அந்தர்முகமாகத் திரும்பினால் அதற்கு காந்தசக்தியென்னும் ஆகர்ஷணசக்தியுண்டாகிறது. இந்தக்காந்தசக்தி மனிதனுக்குண்டாயிருக்குமாயின் அவன் ஊர்த்தரேதஸ் உள்ளவனாகி ஜலத்தைப்போல் சலனஸ்வரூபமான சஞ்சலமனத்தையுடையவர்களை ஆகர்ஷிக்கும் காந்தசக்தியுடையவனாகிறான். ஊர்த்தரேதஸான மனிதனுக்கு ஊசியைக்காந்த மிழுக்கின்றவாறுள்ள இந்தக் காந்தசக்தி இயல்பாயுண்டு. இதை வசிய சக்தியென்பார்கள். யேசுகிறிஸ்து இதையே குறித்து " And I, if ibe lifted up from the earth, shall draw all men unto me" என்று சொன்னார். அதாவது "நான் ஊர்த்தரேதஸான ஆத்மனானால், அதோரேதஸான ஜீவன்களை என்பால் இழுக்கும் சக்தியுடையவனாவேன்' என்றபடியாம். மனோசஞ்சலமுள்ளவர்கள் மகத்துக்கள்முன்சென்று அவர்கள் அருளுக்கிரங்கிநிற்குங்கால்அவர்களுக்குண்டாகும் சுகித்தத்துக்குக்காரணம் இதுவே. இந்தமர்மம் இயற்கை இரகசியங்களிலொன்று. பிராகிருததர்மத்தையுணர்ந்தாரே இதை நன்றாக உணரவல்லார். யோகிகள் மஹான்கள், ஹிருதயத்தில் பசையுள்ளவர்களை இம்மர்மத்தைக்கொண்டே யறிகிறார்கள். மண்ணை மனிதன் ஹிருதயத்தில் பசை (பச்சாதாபம் அல்லது ஜீவகாருண்யம் என்னும் ஈரம்) இருப்பதை மஹான்கள் அறிவதுபோல, யந்திர தந்திர சாஸ்திரங்களில் தேர்ந்தவர்கள், பூமியின் அடியில் ஜலம் இருக்கிறதா இல்லையாவென்று கண்டுபிடிக்க இந்த மர்மத்தைக்கொண்டு அவர்கள் யுக்தியால் ஒரு காந்தஊசி யந்திரம் செய்திருக்கிறார்களென்றுதெரியவருகிறது. இதைப்பற்றிப்பத்திரிகைகளில் கண்டதோர் விவரத்தை யப்படியே கீழே பிரசுரிக்கிறோம்:—

" நிலத்திலிருந்து வாயுமண்டலத்திற்கு எப்போதும் காந்த ஓட்டம் ஒன்று இருக்கிறது. எந்த இடத்தில் கீழே நீர்ச்சுரப்பு இருக்கிறதோ அங்கே அந்த காந்த ஓட்டம் அதிகமாயிருக்கிறதென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, மேற்சொன்ன காந்த ஊசியைக் கீழே நட்டுவைத்த மாத்திரத்தில் கீழே நீர்ச்சுரப்பு இருந்தால் அது அசையும்; சுரப்பு இல்லாவிட்டால் அசையாமல் நிற்கும். பூமிக்குக்கீழே ஆயிரம் அடிவரையில்உள்ள சுரப்பை இது சுலபமாய்த்தெரிவிக்குமாம். மரம் அடர்ந்த இடமாயிருந்தாலாவது இரும்புக்கட்டிடங்கள் சமீபத்திலிருந்தாலாவது அந்தக்காந்த ஊசி செவ்வையாய் வேலைசெய்வதில்லையாம். காற்று மழையில் வேலை செய்

யாது. சாதாரணமான மற்ற தினங்களில் காலை 8-மணிக்குமேல் 12 மணி வரையிலும், மாலை 2 மணிக்குமேல் 5 மணி வரையிலும், இது நீர்ச்சுரப்பை நன்றாய்த் தெரிவிக்குமென்று சொல்லுகிறார்கள்.'

---

"இந்தியன்ஸாண்டோ' என தொழில்நாமம் புனைந்த ப்ரொபெஸ்ஸர் இராமமூர்த்தியென்னும் பலாட்டியர், பீமனைப்போல் சாகஸகாரியங்கள் செய்துவருகிறார். முழுவேகத்தோடும் ஓடும் மோடார்கார் ஒன்றைத்தன் புஜபலத்தால் பின்னாலிருந்து இழுத்து நிறுத்திவிட்டார். சமீபகாலத்தில் மூன்று டன் பாரமுள்ள ஒரு யானையை அவருடைய மார்பில் தாங்கினார். இப்படிப்பட்ட அருமையான செய்கைகளைச் செய்யுமவர் நமது ராஜதானியின் வடபாகத்தைச் சேர்ந்தவர்.

---

## அலிப்பூர் வெடிகுண்டு கேஸ்.

சென்ற ஒரு வருஷகாலமாய் ஓயாமல் விசாரனை நடந்துகொண்டு வந்தமாணிக்தோலா வெடிகுண்டுக் கேஸ் என்று பிரசித்தி பெற்ற கேஸ், அலிப்பூர் ஸெஷன் ஜட்ஜ்மிஸ்டர் பீச்க்ராப்ட் முன்னிலையில் விசாரணையாகி வந்தது ஏப்ரல் மாசத்தோடு விசாரணை முடிந்தது. அம்பொழுது அஸ்ஸெஸ்ஸர்கள் அபிப்பிராயம்மட்டும் கொடுக்கப்பெற்று, ஜட்ஜ்தமது தீர்ப்பைச் சொல்ல அவகாசம் எடுத்துக்கொண்டார். மே மீ 6 உ வியாழக்கிழமை யன்று மிஸ்டர் பீச்க்ராப்ட் அவர்கள் இந்த மஹா பிரசித்தியான கேஸில் தமது தீர்ப்பைத்தெரிவித்தார்: இக்கேஸில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் 36 - பேர்கள். இவர்கள் இராஜத்துரோகம், இராஜநிந்தனை, இராஜ விரோதமான போர் செய்ய யத்தனித்தல் முதலிய குற்றஞ் சாட்டப் பெற்று நின்றார்கள்.

பாபு அரவிந்தகோஸ் அவர்களும் இன்னும் 17 - பேர்களும் குற்றவாளிகளல்லவென்று அஸ்ஸெஸ்ஸர்கள் அபிப்பிராயத்தை யொட்டி ஜட்ஜியும் தீர்ப்பு சொல்லி அவர்களை விடுதலை செய்துவிட்டார். இது எல்லாருக்கும் சந்தோஷத்தைக்கொடுக்கும்

அரவிந்த கோஸ் தம்பியான வரேந்திர குமாரகோஸும் உலாஸ்கர்டட் என்பவரும் தூக்கில் போடப்பட தண்டனை விதிக்கப்பெற்றார்கள். (இ. பி. கோட் 121, 121. A, 122-வது பிரிவுகள் படிதண்டனை.)

பின்வருகிற குற்றவாளிகள் ஆயுள்பரியந்திரம் தீபாந்தர தண்டனையும் அவர்கள் ஆஸ்தியை யெல்லாம் ஸர்க்காருக்கிழக்கவும் தண்டனை விதிக்கப் பெற்றார்கள்:—

"உபேந்திர பானரஜி, விபூதிபூஷணராய், ரிஷீகேச் குஞ்சாலால், வரேந்திர சந்திரசேன், ஸுதீர் குமாரகோஸ், இந்திரநாத் நந்தி, அவிநாஷ்பட்டசரியா, இந்து பூஷணராய், சைலேந்திரபோஸ், ஹேமசந்திரதாஸ்."

பின்வரும் மூவரும் 10 - வருஷதீபாந்தர தண்டனையுடன் ஆஸ்தியை யிழக்கவும் தண்டிக்கப் பெற்றார்கள்:— பரேஷ்முல்லிக் நிராபாதராய், சுசீர்கோஸ்.

அசோக நந்தி, பாலகிருஷ்ணஹரிகோன், சுசீல குமார சேன் என்னும் மூவரும் 7-வருஷம் தீபாந்திர தண்டனை பெற்றார்கள்.

கிருஷ்ணஜி ஸங்யாலுக்குமட்டும் ஒரு வருஷம் காவல் தண்டனை கிடைத்தது.

ஸெஷன் ஜட்ஜ் மிஸ்டர் பீச்க்ராப்ட் அவர்கள் இந்தக்கேஸில் வெகுபொறுமையாகவும் சாந்தயாகவுமிருந்து உண்மைக்கு வொப்பவொழுகி எதற்கும் அஞ்சாமலும், மனசுபேதப்படாமலும், நடுவுநிலையாயிருந்து நியாயம் அளித்தது இங்கிலீஷ் நியாயாபதிபத்தியத்தின் கீர்த்தியை மிகவிளங்கச் செய்தது. இப்படிப்பட்டதீரர்களால் தான் ஆங்கிலேயர்பெரும் புகழும் விளங்குகிறது. அவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் இத்தகையவர் நடுவு நிலைமையினாலேயே நிலைத்துநிற்கும் பான்மையதாகிறது. தர்மம் தலையெடுக்கும். அதர்மம் அழிவுறும்என்பது நித்தியமான ஸத்தியவாக்கு.

---

## தேவநாதசதகம்.

இந்நூல் மஞ்சக்குப்பத்திற்கு அடுத்த திருவகீந்புரமென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவநாதப்பெருமாள்மீது சென்னப்பட்டணம் ரிவினியூபோர்ட் முதலாவது அஸிஸ்டெண்ட் உத்தியோகம் வகித்த ஸ்ரீமான்சருக்கைகிருஷ்ணமாச்சாரியார் பி. ஏ. அவர்களால் இயற்றி அச்சிட்டுச்சென்ற மாதத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இது மிகுந்த பக்தியினால் சைவவைஷ்ணவ மதவிததியாசமின்றிப் பொதுவாய்ப் பாடப்பட்டதாயிருக்கிறது. எல்லோரும் படிக்கும்படி சுலபமானநடையில் சந்திகளின்றி ஆழ்ந்த கருத்தமைத்தும் பாடப்பட்தாயிருக்கிறது. இந்நூலாசிரியர் தாந்தியானிக்குங் காலத்தில் ஸேவித்த அநேக அரியவிஷயங்களை இந்நூலில் குறிப்பித்திருக்கிறார். தமைப்போல் மற்றையரும் அடைந்தின்புறவேண்டுமென்னும் கருத்தினால்நூலாசிரியர் இந்நூல் செய்தனர். இந்நூல் பாடசாலைகளிலுள்ள சிறு குழந்தைகளுக்குப் போதிப்பதற்குத் தகுந்ததாயிருக்கிறது.

இந்நூல் வேண்டுவோர் சென்னை, திருவல்லிக்கேணி தேரடிவீதி 12 வது இலக்கமுள்ள வீட்டில் நூலாசிரியருக்கு எழுதி அரையணு தபால்கூலியனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

*"Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is,*
*but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you find it," But "Make your choice and stick to it till you reach the End."*
ஸத்யம் வத,—**Speak the Truth.**

REGISTERED 25 OCT 1909 OFFICE OF THE ... MADRAS.

**"Hitch Your Wagon to a Star"** **"To Thine Own Self be True"**



அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்சத்.] [Good is Love: Knowledge is Power. *Aum*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு. 17.] 1909-ஹு மே ஜூன், மீ ஸௌமியஹு வைகாசி ஆனிமூ [ச. 5-6.

## The Working of the New Spirit, And The Theory of "Living Crystals."

Truth is in ourselves; It takes no rise
From outward things whatever you may believe.
... .. ... and to know,
"Rather consists in opening out a way,
Whence the imprisoned splendour may escape
Than effecting entry for a light
Supposed to be without."

"Extraordinary interest is being shown by German Scientific men in the discoveries of Professor Otto Lehmann, of Karsruhe, in the domains of crystallisation and biogenesis between which the Professor finds strongly marked bonds, going even so far as to imply that in crystallisation, under certain conditions, may be found the origin of spontaneously generated life. . . . . Fluid crystals are the basis of the whole new theory. Their discovery Dr. Lehmann ascribes to his own now thirty-seven years old invention the "crystallisation microscope," which he says made possible thousands of observations which otherwise would have occupied whole lives. In addition to merely technical difficulties met with in establishing the existence of these fluid crystals, Dr. Lehmann points out that he had to overcome "the suggestive power of erroneous ideas", for the newly discovered phenomenon violated every axiom that he had been taught."—Summary of his article in the "*Berliner Tegeplatt.*"

## பிராணசக்தியின் இயக்கமும் ஸ்படிக யந்திரத்தின் மயக்கமும்.

"ஏகைவசக்தி: பரமேச்வரஸ்யப் பிரயோஜனார்த்தாய [சதுர்விதாபூத்
போகேபவானி, புருஷேஷு-விஷ்ணு, க்ரோதேச [காளிஸ,மரேசதுர்க்கா,"

தெய்வம்ஒன்றே. ஒன்றாயுள்ள தெய்வத்தின் சக்தியும் ஒன்றே. இந்த ஒரேசக்தியானது பிரயோஜனத்தை யளிக்கும்பொருட்டு நாலுவிதமாக பரிணமித்து விளங்குகிறது. அதாவது, போகத்தின் பொருட்டு பவானி ஸ்வரூப (Fluid crystals) சுத்தோதகஸ்படிகலிங்கமாகவும், புருஷப் பிரயோஜனார்த்

தம் (ஜீவரக்ஷணார்த்தம்) விஷ்ணுஸ்வரூப வியாபக சக்தியாகவும், சிக்ஷாப்ரயோஜனார்த்தம் உக்கிரமான காளிஸ்வரூப சண்டனசக்தியாகவும், துஷ்ட நிக்ரஹார்த்தம் ஸம்ஹாரஸ்வரூப துர்க்கா சக்தியாகவும் பரிணமித்து விளங்குகிறது. இப்படி நாலுவிதமாய்ப் பின்னப்பட்டு விளங்கும் சக்திகள் மூன்றுபட்ட காலத்தில் உள்ள சமஷ்டி சக்தியே அபின்னமான ஏகசக்தி. இந்த ஏகமான சக்திக்கும் சக்திமானாகிய கடவுளுக்கும் அபேதபாவமுண்டு. அதனால் சக்திக்கும் சக்திமானுக்குமுள்ள உண்மையான உறவு என்னவுண்டோ, அதை உணர்வது அத்வைதமதம் என்று சொல்லப்படுகிறது.

இந்த அத்வைத உண்மையே சிவம்-சக்தி எனப் பேதப்பட்டு த்வைதபாவமாகவும், குணபேதத்தால் திரிகுணாத்மகனாகித் திரிபுடிபாவ ஞானமாகவும், பரிணாம விசேஷத்தால் பஞ்ச தன்மாத்திரைகளாகி ஸப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் என்கிற ஐவகை உணர்வாகவும் உணர்ச்சியாகவும், உணர்பொருளாகவும் விளங்கி, சூக்ஷ்மப் பிரபஞ்சரூபமாய் அகமும் புறமும் நிறைந்து விளங்குகிறது. இப்படி நிறைந்துள்ள சக்திமயசலனஸ்வரூப சூக்ஷ்மப் பிரபஞ்சமே போக போக்கியங்களுக்குப் பிரதானமான இடமாகவும், யோகக்ஷேமத்துக்கு இன்றியமையாச் சாதனமாகவுமிருக்கிறது. இந்த சூக்ஷ்மப்பிரபஞ்சமானது பஞ்சீகரண விதியினால் ஸ்தூலமாய்ப் பரிணமித்த ஐம்பூதங்களின் சேர்க்கையினால் பொறிபுலன்களுக்கு இலக்ஷியமாம் ஸ்தூலப் பிரபஞ்சமாக விளங்கி கர்மபூமியில் விதைத்த வினைப்பயன் விளைவை யறுத்து அனுபவிப்பதற்கான பிராப்த களத்துமேடாகவிருக்கிறது. களத்துமேடு என்றது தனுகரணபுவன போகாதி யனுபவங்களுங்களுக்கு இன்றியமையா இடமாக அமைந்த ஸ்தூலப்பிரபஞ்சம் ஸ்தூலசரீரம் ஆகிய இவைகளேயாம்.

ஸ்தூலபாவமனிதன் ஜடமாகிய தேகத்தை "நான்தேகம்" என்றுசொல்லி அதோடு அபேதபாவம் பாராட்டி அன்னமயனாகிறான். ஆசாபாசங்களுக்கு இருப்பிடமாகிய தேகத்தைத் தான் என்று அபிமானிப்பதால் ஆசாபாசவலையில் சிக்கி வேடன்வலையில் சிக்குண்டபக்ஷிபோல கர்மவலையில் சிக்கித் தப்பவறியாது உழல்கிறான். இவனுக்கு ஸ்தூலப் பிராணனும் உஸ்வாஸ நிஸ்வாஸமே பிராணாதாரமாயிருக்கிறது.

சூக்ஷ்மபாவயோகி யோவெனில் சூஸ்திரத்திற் பாவைபோல்ஆடும் இந்த தேஹத்தை ஆய்ந்து களைந்து "நான் தேஹம் அல்ல" என்று துணிந்து, துணிந்தபடி தேஹத்தை விட்டு (தேஹபாவனையை நீக்கி) இந்தேஹத்தையாட்டும் சூஸ்திரங்களான சங்கற்பவிகற்பரூபமனோமய பிராணசக்திகளைப்பற்றி அவற்றின் அசைவால் ஆடும்தேஹத்தை யாட்டியாட்டியனுத்து, அந்த சூஸ்திரக்கயிறுகளைப் பிடித்து ஆட்டுவான் தன்னையறியத்துணிந்த தீரனாய் யோகவித்தாய்விளங்குகிறான். இவன் மனதைக் கொண்டு சரீரத்தை யாட்டும் வித்தைபயின்றவனாய் தன் தேஹத்தைமட்டுமன்று, தேஹபாவம் தடித்து மூடம் தலைக்கேறியுள்ள தேஹங்கள் எல்லாவற்றையும் ஆட்டும்சக்தி வாய்ந்தவனாக விளங்குகிறான். இவன் உஸ்வாஸம் நிஸ்வாஸம் இரண்டையும் தன் வசப்படுத்தி இவையிரண்டும் பேதமறச் சேர்வதனாலுண்டாகும் "காரணவாயு" என்று சொல்லும் பிராணவாயுவையாதாரமாகக்கொண்டு தன் ஆயுளை இஷ்டம்போல் வளர்த்து வரும் சக்திவாய்ந்தவனாகிறான். இந்தப்பிராணவாயுவில் (காரணசக்தி புகுந்திருப்பதால், "காரணவாயு" என்னும் நாமம் இதற்குப் பொருந்திற்று.)

புகுந்துநிற்கும் காரணசக்தியை இவன் அந்தர்லக்ஷியமாகக்கொண்டு, இந்த வாயுவின் மூடத்தை (அதாவது சலனத்தை) நீக்கி அக்



REGISTERED 25 OCT 1909 MADRAS.

காரணசக்தி ஒடுக்கியப்பட்டு நிற்க முயல்கிறவனாதலால் இவன் அனுசந்தானம் செய்து வரும் ஐக்யபாவ யோகத்துக்குப் "பிராணயோகம்" என்று பேர், "வாசிவசம்" என்னும் சொல்வதுண்டு. தேஹத்தைப்பற்றி அதனால் தேஹத்திலுள்ள தேஹியை வசப்படுத்திவிட்டதாக ஸ்தூலபாவமனிதர்கள் நினைப்பதுபோல பிராணனைப்பற்றி நின்று (பிராணன் என்றாலும் வாசியென்றாலும் காரணவாயு என்றாலும் ஒன்றே. உஸ்வாஸ நிஸ்வாஸ ரூபமாயிருக்கும் வாயு காரணவாயுவின் காரியமாம்.) பிராணனுக்குள்ளிருக்கும் நிச்சலனமான (சலனகாரண) சக்தியைப் பிடித்துவிட்டதாக இவன் நினைக்கிறான். இவன் சித்தம் "தேவிபாதம்" என்றுசொல்லும் காரணசக்தியில் பற்றினபற்றுக் கலையாது நிற்பதால் எம்பெருமான் மாணிக்கவாசகரும் "சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த, வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே" என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். யோகத்தின்முடிவு தேவியின்பாதசாம்பிராஜ்யம். தேவிபாதத்தில் "சித்தமெனும் திண்கயிற்றால்" கட்டுண்ட பக்தர்களை யீடேற்றல் தேவி கடமையாதலால், யோகிக்கு அவள் பாதத்தை விட்டு நீங்காதிருத்தலே க்ஷேமம். தேவிபாதத்தை யடைதல் பெறலரும் பேறுபெறுதலாம் யோகம்-"அப்ராப்தப்ராபணம் யோக:" என்பது ஆப்தவாக்கியம். "க்ஷேமௌ லப்தஸ்ய பாலனம்" என்ற ஆப்தவாக்கியத்துக்கிணங்க தேவிபாதம் பெற்ற பாக்கியவானும் யோகி அதைவிட்டுப் பிரியாமலிருக்கப்பார்ப்பது க்ஷேமம். ஆகையினாலேயே, தாயுமானவர் போன்ற தவப்பேறுபெற்ற தன்யரும் தேவிபாதத்தைவிட்டு நீங்காதிருக்க அவளைச்சதா துதித்துக்கொண்டிருந்தனர். இகம், பரம் இரண்டிற்கும் சாதகமாய் இகபரஸௌக்கியங்கள் இரண்டையும் ஒன்றாய் அளிப்பது ஸ்ரீதேவியுபாசனையொன்றே.

"பூதமுதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றெ
[னைக்காட்டியென்
போதத்துள்நடுவாக அடியீறுமில்லாத போதபூரண
[வெளிக்குள்
ஏதுமற நில்லென்றுபாயமாய் வைத்து நீனெவெல்
[லாஞ் செய்வல்லசித்தாம்
இன்பஉருவைத்தந்த அன்னையே நின்னையே எளி
[யேன் மறந்துய்வனோ!'

என்று கல்லுமுருக் கரைந்துபாடி யுள்ளதை யுள்ளத்தோர்ந்துணர்க. இந்தநிலையில் "குருசொல் ஒருசொல்" என்று மேலோர் சொல்கிறபடி அம்பிகையருளால் ஏவப்பட்டுச் சொல்லும் "ஒருசொல்"தானே "குருசொல்லாகவிருந்து" நல்லபரிபக்குவ சற்சிஷனைக் கரையேற்றுவிக்கும். குருசிஷ்யபாவனையில் உள்ளபடியிருந்து சொற்றசொல் (யோகானுபவப்படிபார்க்கில்) "அங்ஙனேயிருந்து (குருவாய்ப் பிறப்பாயிருந்து) அசரீரியாய்த் தோன்றி இங்ஙனே யுரைத்து (யோகியின் ஹிருதயகமலத்திலிருந்து பேசி) இதனுண்மையானுணர (உபதேசத்தின் உண்மைப்பொருளை யோகதற்பரனும் சிஷனுமாரா)" "மெய்யனேயென்னுரு உன்னுருவிரண்டும் இரண்டறக்கலந்து மன்னுமோர்சின்னம் மனத்திற்பதிய மாண்புடனளிப்பன் "என்று ஊர்த்துவ-லிங்கத்தைத் உத்தாரணம் செய்து (ஆத்மோத்தாரணம் செய்து) "பார்த்தவர் கண்கூசும் பரும்பெருஞ்சோதியை ஊர்த்துவரேதஸாயுன்னுளே வைப்பன்" என்று அந்தர்லக்ஷியமான திவ்யஸ்வரூப சித்சக்தி மின்னுருக்கொண்டு என்னுடன் கலந்து மன்னுமக்கோலத்தை மனத்திலேயிருத்தி "முஷ்டிநிலை(நனவிலும் ஞாபகமிருத்தல்) யனுபவம்முதிர்வுறவதிலிரு" என்றுமே செப்பி, என்னுளேயிருந்தவள் என்னுளேதோன்றி என்னுளேமறைந்து,என்னுருவழித்துத்தன்னுருத்தந்து,மன்னுமவளுருத் தன்னையுமொழித்து சொரூபம், அருபம் இரண்டையு முணர்த்தி "சொரூப அரூபமிது! அரூபசொரூபமிது!" வென்று சொரூபஅரூபத்தில் அரூபசொரூபங் காட்

டி,—அரூப-சொரூபமும், .சொரூப-அரூப
மும் "அமா" "உமா" எனுமெழுத்தால் உண
ர்த்தியென்றவள் உருவோடருவாயிருந்துளே
யோதினள். ஓதினவுண்மையை உருவழித்த
ருவாயிருந்துமே யுணர்ந்தனன்.

இந்த மேலான உள்ளனுபவத்தை உள்ள
படியுணர்ந்து அதில்சலிக்காது நின்ருல்அஹ
மும் புறமும் நிறைந்த சின்மயம் விளங்கும்.
எல்லாம் அறிவுமயமாளுல், அறிவிலே அறி
யாமை தோன்றி "அறிவு - அறியாமை"
யெனப் பேதம் விளைத்துப் பிரபஞ்சத்தை
யுண்டு பண்ணின உள்ரகசியம் தானய் விள
ங்கும். "அன்பேஅவன்"—கடவுள். "அறிவே
சக்தி"—அபின்னமாம்சித்சக்தி. "அறியாமை
யே மாயை"—பின்னமாம் அபரசக்தி. இந்த
வுண்மையை "வித்தை-அவித்தை" அதாவது
"அறிவு-அறியாமை" யென்னுமிரண்டையும்
தேஹமாய்க்கொண்டு அறிவறியாமை யிரண்
டுக்கும்அப்பாலாய்பரப்பிரம்மத்தோடு அபின்
னமாய் அத்வைதமாய்நிற்கும் "ஏகை வசக்தி"
ஒரேசக்தியான சிற்சொரூப சுககனமான சக்
தியை ஆராதித்து அவளோடு ஐக்கியப்பட்
டவர் நன்ருயறிவர். இந்தவுண்மையில் ஒருபா
கத்தை (Living crystals) என்று மேற்றிசை
யார்நூதனமாய்க்கண்டு பிடித்திருக்கும் உயி
ருடல் ஒன்ரும் "ஸ்படிகலிங்கம்" என்று சொ
ல்லும் சுத்தோதக ஸ்படிகமய ஸ்வரூபத்தில்
காணலாம். இந்த திரவமயமான ஸ்படிகஸ்
வரூபத்தைக் கொண்டான தேகம் எதுவோ
அதுவே "வித்தியாதேகம்" என்று சொல்
வது. இந்த உண்மையையே "அன்னமயத்தை
அஸ்திமயமாக்கவேண்டு" மென்று சூக்ஷ்ம
மாய்த்தெரிவித்தார் ஒரு சித்தயோகி. இதை
ச்செய்யும்முறைக்கு "சித்தர்முறை" யென்று
பேர். வித்தியாதேகம் பெற்றவர் சித்தர்களா
யிருந்து முக்திக் குழைத்து மூவுலகையும்
ஆட்டி வருவார்கள். இவர்கள் பெருமையை
யுணர்ந்துய்வார் பெறலரும் பேறு பெற்ற
யோகிகளே யாவார்.

---

## A FEW THOUGHTS O[N] EDUCATION OF GIRLS- FOR THE EFFICIENCY O[F] EDUCATION.

(*Communicated by an Earnest T*...

### பெண்கல்வி-அதன் பக்குவாபக்[குவம்]

முதன்முதல் ஸ்ரீ விவேகாநந்தசுவாமிகள்
சென்னப்பட்டணத்தில் திருவல்லிக்கேணி
யில் விடரெரிஸொஸயடியில் ஒருவாறு பிர
சங்கித்து வரும்போது அங்கிருந்தோரில்
ஒருவர் "ஸ்திரீகளுக்கு கல்வி அவசியமாஅல்
லவா? நம்பெண்மணிகளுக்கு கல்வி கற்றுக்
கொடுப்பதில் ஏதேனும் தடைகளுளவோ?"
என்று சுவாமிகளை நோக்கி வினவினர். அக்
காலத்தில் சிறுவனயிருந்த எனக்கு, இக்கே
ள்வியும் கேட்கவேண்டிய தவசியமோ, அது
சுவதசித்தமன்ருே, பெண்களுக்கும் எழுதப்
படிக்கத்தெரிந்திருத்தல் நலமன்ருே, என்
னும் பல சங்கைகள் தோன்றின. இச்சமயம்
கழிந்து பலவருஷங்க ளாய்விடினும், இடை
யிடையே "பெண்கல்வி யத்தியாவசியமல்ல
வோ, அதை கவனியாமல் நாம் விட்டுவிடுகி
ருேமே" என்னும் மனக்கலக்கம் எனக்கடிக்கடி
வந்துவிடுகிறது. இம்முதன்மையானபிரசினத்
துக்கு விடையளிக்க இயலுமா என்பதை
கவனிப்போம்.

மேனுட்டார் பெண்பிள்ளைகளும் நம்மைப்
போல கல்வி கேள்விகளில் விருத்தியடைந்
திருப்பதால் நமக்கு சமானஸ்தர்களே, ஆத
லால், ஆண்களைப்போல "ஓட்" கொடுக்கும்
கௌரவம் சித்திக்கவேணுமென்று பெருத்த
ச்சரவுகள் செய்யுமிக்காலத்து பெண்களுக்
குக் கல்வியனவசியம் என்று ஒருவன் தான்
மனப்பூர்த்தியாய்எண்ணினனும்அவ்வெண்
ணத்தை வெளியிடச் சாத்தியமோ? அவன்
அவ்வாறு எண்ணுவதற்கு பல்லாயிரம் தகுந்
தகாரணங்களிருப்பினும் அவைகளையெல்லாம்
பொறுமையுடன்கேட்டு இவன் சொல்லும்
விஷயங்கள் சரி என்று அங்கீகரித்து இவன்



...லைநிறுத்த ஒருவரும் ஒருப்
...ல், காலதேசவர்த்தமானங்கட்
... ஒருவனெண்ணங் கொண்டிருப்
...கேளாதேயோடுக ஊரோடுமொறு"
...ஆன்ருேர் வாக்கை மனத்திலூன்றி
...ணங்க நடந்துய்வது நலம். இக்கார
ணத்துக்காகவாயினும் பெண்கல்வி வெகுஅவ
சியமென்று சொல்லவேண்டியதே. நிற்க.

"கல்வி" என்னும் பதத்துக்குப்பொருள்
முதல் விசதப்படுத்திக்கொள்ளாது பேசத்து
வக்கின் பரஸ்பரம் அர்த்தம் விளங்காமல் ஒரு
சித்தாந்தத்திற்கும்வர நமக்கியலாமற்போம்.
ஆதலால் "கல்வி" என்னும் பதத்தின் அர்த்
தத்தை முந்தி கவனிக்கற்பாலது. கல்வியெ
னின் வாசித்தல், எழுதல், சிற்சிறு கணக்குகள்
போடுதல், சங்கீதசாஸ்திரத்தில் பயிற்சி, வர்
ண நூல்களைக் கொண்டு பற்பல தையல்வேலை,
பின்னல் தொழில்களைச் செய்தல் முதலியன
வோ, அன்றி மற்றேதேனுமோ? நாம் இவ்
வாறு சிலவற்றைமட்டும் வரைந்து எடுத்துக்
கொண்டு இவைதாமோ, மற்றுமுளவோ வெ
ன்பானேன் எனில், எமக்குத்தெரிந்த அளவு
இவைகளைத்தவிர்த்து இக்காலத்துப் பள்ளிக்
கூடங்களில் நம்பெண்சிறுவர்கட்கு சொல்லிக்
கொடுப்பது யாதொன்றுமில. ஆதலால் மேற்
கூறியவைதாமோ கல்வியின் அங்கங்கள்என்று
சோதிக்கவேண்டியதாயிற்று. இவைகளேயா
யின், நம் சின்னஞ் சிறு பெண்களுக்கு இக்
கல்வியென்னும்வீண்காலப்போக்குசர்வதேவ
வேண்டாமென நம்மையறியாது நம் மனமே
குதிக்கின்றது. "ஒன்றுமில்லாமல் நம்மகங்க
ளில் விருதாகாலஹரணஞ்செய்யும் குட்டிப்ப
டைகள் பள்ளிக் கூடத்துக்குப் போனல் கொ
ஞ்சம் நேரமாவது வீடு "ஹாய்" என்று
இருக்கும்; அங்கேகற்றமட்டில், லாபந்தானே"
என்பவர்களோடு நமக்கிணக்கம் ஒரு நாளும்
கிடைத்தலரிது. இவ்வாறு பள்ளிக்கூடங்கட்
கனுப்பிவைப்பதில் உண்டாகும்கெடுதிகள்பல
வென்றும், அவ்வாறே இன்னமும் நாம்செய்

துவருவோ மாயில் நம்மவர்க்கொருங்கே நே
ரும் விபத்துகள்எண்ணிறந்தனவாம்என்பதற்
கு ஐயமில்லை. தன் ஆருவதுபிராயமுதல்பிரதி
தினம் ஒருகுழந்தை பள்ளிக்குப் போய்வருவா
ளேயாயில், அவள் வீட்டினின்றும், அவசிய
மாய் இருக்கவேண்டிய காலத்தில் முழு ஆறு
மணிகாலம்—அதாவது பெரும்பான்மையும்
அப்பள்ளியில் கழிந்துபோகின்றது. இவ்வாறு
சாதாரணமாய் 10, 12, பிராயம்வரை கழிந்த
பிறகு இவட்கு கலியாணமாகிறது நம் நாட்
டியல்பு. கலியாணங்கழிந்தபிறகு பள்ளிக்குப்
போவதுசாதாரணமாய் வழக்கமில்லை. ஆகவே
இக்குழந்தையின் படிப்பு முற்றுமவள், அக
த்திலேயேஇருந்திருப்பின்அங்கேயறியக்கூடி
யவைகளைக் கற்றுத் தேறக்கூடாமல்போனது
தான் மிச்சம். இக்குழந்தை பெரியவளாய்
தன்னைக்கொண்டானேடு சேர்ந்து ஒழுகுங்
காலம் கிட்டவே, புக்ககத்துக்குச் சென்று
தன் பர்த்தாவுக்குவேண்டிய காரியங்களைப்
பார்க்கசக்தியும், ஞானமுமற்றவளாய், ஐயோ
பள்ளிக்குப்போய்வந்த நாட்களை நம் தாயா
ரோடு கழித்திருப்பின் சமையல், வீட்டுகிருத்
தியங்கள் முதலிய, அம்மாள் செய்வதை நோ
க்குவதினுலும், அவளால் சொல்லிக்கொடுக்
கப் படுவதினுலும், நம்மில்லானுக்கு இதகர
மானசெய்கைகளைச்செய்யவியன்றிருக்குமே!
படிப்பு என்னும் வியாஜம்வைத்து அதுவு
மின்றி இதுவுமின்றி திரிசங்குவைப்போல
வருத்தப்படுகிருேமே!" என்று தவிப்பாள்.
"அப்பா! அவள் மாமியார் வெகுபொல்லாத
வள். ஒன்றுந்தெரியாத அந்தநாட்டுபபெண்
ணை எவ்வளவு படுத்துகிருள்! சிவ, சிவ, நா
னுல் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து செத்
தாவதுபோவேனேயொழிய, இவ்வளவு துஷ்
டமாமியாரோடு காலக்ஷேபம்செய்யச் சரிப்ப
டாது அம்மா!" என்னும் ஸ்திரீகளின் கூற்
றும் ஒருவிதம் மெய்தான். ஒன்றுந்தெரியத
பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு தள்
ளாத வயதினளான மாமியார் கிருசகிருத்தி

யங்களைச் செய்வதோடுங்கூட மாட்டுப்பெண்
ணின் சிஷ்ருஷை செய்யவும் வேணுமென்
ருல், அவளுக்குத்தான் அடுக்குமோ? "படுத்
தத்தான்செய்வள்." இக்கொடியவள்என்னும்
பெயரைச்சுலபமா யடைந்த மாமியார்பாக்கி
யமே பாக்கியம்; இவள், ஒன்றும் தெரியாத
பெண்ணுக்கு வீட்டுக்காரியங்களை படிப்பித்
தால் அது 'படுத்துதல்' என்னும் பெயர்கொ
ண்டு விடுகிறது. சுகமாய் புஷ்பம்போல, காலை
9 மணிக்கு சாப்பிட்டுப் பள்ளிக்குப் போய்
வந்து, சீக்கிரம் சாப்பிட்டு இராத்திரி 8 மணி
க்குள் உறங்கப்போகும் குழந்தையானவள்
உடனே சம்ஸாரபாரம் வகிப்பதென்ருல்.
ஸ்ரீமானுப்ப்பிறந்தோன்சர்வஸ்வமும் இழந்து
கூலிவேலைசெய்யும்படி நேர்ந்தால் அப்பொ
ழுதுபடும் வேதனைக்கு ஈடாய்இப்பெண்ணின்
கஷ்டத்தைஉபமானிக்கலாம்.பாடுபட்டறியாத
சிறுபெண்ணுக்கு மாமியார், "அம்மா, அத்
தைச்செய், இத்தைச்செய்" என்ருல், 'படுத்
துவது' போலத்தோன்றுவதியல்பே! ஆனுல்,
மேலே ஒருபெண் கிணற்றில் வீழ்வது நல
மென்றதும் சரியென்றீர்களேயெனின்: சரி
யே; அவள் கூடியமட்டும்வீட்டுக்காரியங்களை
க்கற்று, கணவனகத்துக்கு வரும்போது அ
வைகளைச்செய்யசக்தியுள்ளவளாயிருந்ததால்
அவள் மாமியார் அவளைப் படுத்தினதாகத்
தோன்றவில்லை, அவள்மாமியாருக்கும் படுத்த
(அதாவது, படிப்பிக்க)வேண்டியதவசியமிருக்
கவில்லை. ஆதலால், அவள்அனுபோகத்துக்கும்
நாம் உதகரித்த பெண்ணின் அநுபோகத்து
க்கும் நிரம்ப வித்திபாசமிருப்பதால் இவர்
கள் இருவர்க்கும் இரண்டுமாதிரியான உண
ர்ச்சி ஜெனித்தது நியாயமே. கிணற்றில்விழு
ந்து சாவேன் என்னும் கடைப்பாடுடையவள்
அதற்குத் தக்கபடி கற்றுவல்லளாயிருப்பதி
ஞல், விழவேண்டிய அவசியம் அவளுக்குநே
ராது. அவ்வாறு சுரணையிருப்பவள் தேர்ச்சி
யடையக் கேட்பானேன். இது கிடக்க.

வீட்டுக்காரியங்களையாராய்...
கைமுதலிய குழந்தைகளை வைத்...
தல், அவைகளின் தேவைகளைய...
களுக்குக் கொடுக்கவேண்டியன செ...
செய்யவேண்டியன செய்தும் அவை...
மல் சமாளித்தல், உக்கிராணம் சீராய்...
கத் தெரிந்துகொள்ளுதல், இன்ன ச... ள்
இன்னவிடத் திருக்கின்றன, இவை இவை
இன்னின்ன காரியங்களுக் குபயோகப்படுவன
வென்பதை கற்றுக்கொள்ளல், நாளடைவி
லேயேசமையல் சிறுகச்சிறுகச்செய்து கற்றுக்
கொள்ளல், இவைகளெல்லாவற்ருேடும், ஆசா
ரவியவகாரங்களையும் நம்மத சித்தாந்தங்களை
யும், அவைகளைப்பற்றின இனியபாட்டுக்களை
யும் கற்றுக்கொள்ளுதல், அன்றிக்கே தம்சுய
பாஷையில் எழுதப்படிக்கத் தேர்ச்சியடை
தல், சிற்சிறு கணக்குகளைப் போடவறிதல்,
இவைமுதலாய் தெரிந்திருட்பின், இவைகளை
கல்வி யென்னலாகாதோ. நம்முடைய புத்தி
யையும், அநுபோகத்தையும், பிற்காலத்துக்
குத் தேவையான விஷயங்களினுபயோகப்
படும்படி செய்வதுதான் கல்வி, என்பது எம்
துணிவு. சித்திரவேலையால் தான் பிழைக்கப்
போவதில்லை என்று தீர்மானித்துள்ள ஒரு
வன் சித்திரவேலையையே கற்றல் வீண்காலப்
போக்கன்ருே? புஸ்தகங்களைப் படித்து சால
திரவித்துக்களாவது தான் நம்முடைய பெண்
பிள்ளைகளின் நோக்கமன்று. தம்முடையகண
வர்களைச் சேர்ந்து அவர்கள் மனதிற்கிணங்கி,
அவனுடைய கஷ்ட நிஷ்டூரங்களை ஏற்கவும்,
அவன் சௌகரியங்களைப் பார்க்கவுமன்ருே
நம் பெண்களின் முதன்மையான கருத்து. அ
தற்கு பூகோள சாத்திரமும், ரயில்வண்டிக்
கணக்குமோ பயன்படும். சிரமப்பட்டு நாளெ
ல்லாம் ஆபீஸ்வேலை செய்துவந்த புருஷனிட
த்தில் லாலனையாய்ப்பேசி, அவனுக்குத்தக்ஷ
ணம்வேண்டும் உபசாந்திகளைச்செய்து, மது
ரமான உணவுகளை ஊட்டி அவனைக் களிப்பிப்
பரேல், கொண்டானுக்கு அதிலும் என்னசுக



ந்தான் வேண்டியது! இந்தவகையாய் நடக்க
விரும்பு மவட்குப் பள்ளியில் கற்கும் வித்தை
எவ்வளவு உபயோகப்படும். மேலே நாம் எடு
த்துக் காட்டியவற்றை கற்பாளானுல் எவ்வ
ளவு உபயோகப்படும் என்பது இப்பொழுது
விசதமாகும்.

ஒரு பெண் சிறுபிராயத்தில் வீட்டிலேயே
இருப்பாளானுல் சதா சர்வகாலமும் தாயா
ருடைய பார்வையிலேயே இருக்கிறதோடும்
கூட, முதன்முதல் குழந்தைகளைச் சமாளிக்
கத் தெரிந்துகொள்ளுகிருள். அதாவது "எந்
டி, வயசாகல்லையோ, அழுரானே அம்பி, அவ
னை வைச்சுகொண்டு, அத்தை இத்தைக்கா
ண்பிச்சு அழாதே பாத்துக்க முடியாதோ,
நன்னுயிருக்கு! நீ சமத்தாம், அழாதே பார்த்
துக்கோ, அம்மா அண்ணு நீ?" என்று நல்
லதும் பொல்லாதுமாய்ச் சொல்லி இச்சிறு
பெண்ணுக்கு முக்கியமாய் பிற்காலத்துக்கு
வேண்டிய வித்தையொன்றைச் சொல்லிக்
கொடுக்கிருள் அவள்தாயார். தனக்கே பிறக்
கும் குழந்தைகளைவைத்து சமாளிக்கும்காலம்
வரும்போது இந்தவிஷயம் இவளுக்கு கடின
மாய்த் தோன்ருது. முன்னமேயே குழந்தை
களை வைத்துக்கொள்ளவேண்டிய பொறுமை
யை வேர் ஊன்றச் செய்திருப்பதனுல், இப்
பொறுமைக்கு இவளிடம் அபாவமில்லை.

இங்ஙனம் தம்பி தங்கைமார்களோடு சதா
இணங்கிவாழ்ந்ததினுல், இளமையில்விளைந்த
அபிமானம் சாமளவும் நீடித்துநிற்கும். இக்
காலத்திய வித்திபாப்பியாசம், அபிமானமுத
லியவிளைவதற்கு ஏற்றவையல்ல.புஸ்தகத்தின்
வாயிலாய் கற்பன, அன்புமுதலிய வல்ல. அன்
புபாராட்டவேண்டியவரோடு நீடித்து பழகு
வதுதான் அதற்குத்தகுந்த மார்க்கம். நம்மிந்
துக்கள் வழிமையைஉத்தேசிக்கின் இவ்வன்புமுத
லிய அவசியம் என்பது விளங்கும்.

பிறகு, உக்கிராணம் பார்த்துக்கொள்ளுதல்
என்று ஏற்பட்டவுடன், "அடி, குட்டி இப்
படியா சாமானை யெல்லாம் மேலுங் கீழுமாய்
இறைத்து, பாழாக்கிறது? இதுதானுடி உக்கி
ராணத்தில் சாமான் எடுத்துக்குடுக்கிறமாதிரி?
இதோபார் இப்படியாக்கும் செய்யவேணும்;
இப்படிசெய்தால் உக்கிராணம் எவ்வளவு சுத்
தமாயிருக்கு பார். இப்படி வைச்சா அன்று
உன்னையெல்லாரும் சமத்துப் பொண்ணு எம்
பா. இல்லையென்னுஅசடு எம்பாளே" என்று
"என்ருளின்மேல் என்ன கடவுருமில்"! என்னு
ப்படியான தாயாரிடம்கற்பள். "குட்டி, லக்ஷ்
மீ,கொஞ்சம்வெந்தயத்தைகொண்டாடி, கொ
ழம்புக்கு வறுத்துச்சேர்க்கவேணும்" என்று
தாயார்அழைத்ததும், ஓட்டமாய் ஓடி அதை
யெடுத்துவந்து"அம்மா இந்தா; ஏண்டியம்மா,
வெந்தயத்தை என்னமாய்ச்சேர்க்கிறது. நேக்
குசொல்லேன் !" என்றுசிலசமயங்கேட்கவும்
செய்வள், அன்றி அவ்வாறு வறுத்துச்சேர்ப்
பதையும் பார்ப்பள். இங்ஙனம் சிறுகச்சிறுக
"கற்றலிற் கேட்டலே நன்று" என்ருற்போல
வும், "கற்றலிற் காண்டலே நன்று"என்பதை
யனுசரித்து, தனக்கு பிற்காலத்து வேண்டும்
விஷயங்களெவ்வளவெல்லாம்தெரிந்துகொள்
ள்விடமாகிறது!

இதற்குள் தம்பி தமயன்மார்கள்சிறுபிராய
த்தினராய், பள்ளிக்கூடங்களுக்குப் போகத்த
லைப்பட்டதும், "அம்மா, நான்எங்களுக்கெல்
லாம்காலைச்சமயலாக சமைக்கட்டுமாடி? அம்
மா நீபக்கத்திலே இருந்துசொல்லிக்கொடு,நா
ன்செய்துபார்க்கிறேண்டி, அடியேஅம்மாநே
க்கு ஆசையாயிருக்குடி' என்று சுவதாவாக
கேட்க தலைப்படுவாள். இப்படி வேடிக்கையா
கற்கவாரம்பித்த நல்லமுகூர்த்தத்தில் இவளு
க்குப் பாகசாஸ்திரத்தில் பாண்டித்தியம்
அதிசீக்கிரத்தில் வந்துவிடு மென்பதற்குச்
சந்தேகமேயில்லை. இதற்கெல்லாம் காரண
பூதம், தானும் தன் தாயாரைப்போல கெட்
டிக்காரியாகவேண்டும். எல்லாரும்தன் கிருஹ
கிருத்திய லக்ஷணங்களை மெச்சவேண்டும்,

தன் கணவன் மனது குளிர்ந்திருக்கவேண்டுமென்னும் ஆற்ருெணு ஆசை. இதுதான் இவளுக்கு தியேயம் (Ideal). கிரஹ கிருத்தியம் என்னும் பஞ்சாக்ஷரம் மனதிலூன்றித் தித்திக்க வாரம்பிக்குமாயின் அதினும் பெருமை பொருந்திய கல்வி பெண்மணிகளுக்கு மற்றுயாதுளது?

இங்ஙனம் குழந்தைமுதல் தேகசிரமப்பட்டு வேலைசெய்யும்குணம் ஏற்பட்டுவிட்டால், இளம்பிராயத்தில் படிந்த ஒழுக்கம் பிற்காலத்துமாருது. இவ்வாறு கைகால்கட்கு வேலைகொடுப்பதினுலும் ஜலத்தில், நெருப்பின் பக்கத்தில் முதலான இடங்களில் வேலைசெய்வதினுலும் உடம்பும் கெட்டிப்பட்டு வியாதி முதலான அதிகமாய் கொள்ளுவதில்லை. திருஷ்டாந்தமாக பெரியமனுஷியாள் அகத்துப்பெண்களையும், அவர்கள் வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரியையும் ஒத்திட்டுப்பார்த்தால்தேகதாட்டியம், பெண்கட்குரிய தேகலக்ஷணம் வேலைக்காரியிடம் பார்க்கலாமேயொழிய அவள் எஜமானியிடம் காணவொண்ணுது. அம்மாள், தினம் தினம்ஒத்தைத்தலைவலி, ஜலதோஷம்,மாதாந்திரவயிற்றுவலி,வலிப்புரோகம்(Hysteria)முதலான வியாதிகளுக்கு, அம்மாளாயிருக்கிருள். அம்மாளுக்கு ஜலம்பட்டால்ஜலதோஷம், வெயில் தாக்கினுல் தலைவலி வந்துவிடும். காலைக்காபிநின்ருல் மாலையில் அய்யர் வைத்தியரையழைக்கவேண்டியது தான். நித்தியப்படியே இப்படியென்ருல் பிரசவம் என்னும் மகா சந்தியில், "எப்படி முடியுமோ தெரியவில்லையே. இவளுக்கு என்னத்துக்கு கர்ப்பம். இவள் இந்த கண்டத்துக்குத் தப்பினுல் பெரியகாரியம்" என்று அய்யர் விஞவிஞத்து விடுவார். எளியவர்களென்போர் வீடுகளில் இந்த வகையானகஷ்டங்களும், விசாரங்களும்இருந்ததாக யாரேனும் கேட்டதுண்டா? வைத்தியசாஸ்திரமே, பெண்கள் கூடியமட்டும் வேலைசெய்தால்தான் அவர்களுக்குச் சுகங்கொடுப்பதோடு கூட பிரசவத்தைச் சுலபப்படுத்தும், என்று முறையிடவில்லையோ?

சிற்சில விஷயங்களில் ஆசாரியோபதேசம் வெகு ஆவசிகம் என்பதிற்கு தடையேயில்லை. மற்றுஞ் சிலவற்றில் பார்த்துத் தெரிந்துகொள்வதுதான் விசேஷம். இவ்வகையானவற்றில் கிருஹகிருத்தியம் என்பது முக்கியமானது. பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்து "வாத்தியாரம்மா" "இரண்டாம்பாட புஸ்தகத்தில் ஆ—வா—இன், அவன்" என்பதையும் "அஞ்சு பேருக்குப் பதினஞ்சு வாழைக்காயானுல் மூணுபேருக்கு எத்தனை?" என்பதையும், "கிணற்றுச் சலத்தையெடுத்து நன்ருய் கொதிக்கவிட்டு அதை குளிர ஆற்றிக்குடித்தால் வியாதிகள் வாராது" என்பனபோன்ற சிறுமனதிற்குப் பொருள் நன்கு விளங்கா வாக்கியங்களுக்கு அர்த்தத்தை மாத்திரம் சொல்லுவாளேயன்றி, அவள் மற்றும் ஏதேனும் சொல்லிக்கொடுக்க இயலுமோ? அவள் சொல்லிக் கொடுக்க முயன்ருலும், நம்மாசார வியவஹாரங்களுக்கு ஒத்துக் கற்பிக்க யோக்கியதையுடையவளாகவேண்டுமே? இங்ஙனம் இல்லையெனில் அவள் சொல்லிக் கொடுப்பது நமக்கு உதவாதே? ஆதலால், ஒப்புயர்வில்லா அரிய பந்துவாகிய, நம் கிரகதேவதையாகிய தாய் வாயிற்கேட்டு பயன்படுவது மிக்க நலமென்பது மேன்மேலும் வற்புறுத்தற்பாலது.

தகப்பனுருக்கு ஒழிந்த வேளைகளிலும் தாயாருக்கு ஒழிந்த வேளைகளிலும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் படிக்க எழுத, சிற்சிறு கணக்குகளைப் போடக் கற்றுக்கொள்ளுவது வெகு சுலபம். இப்படி படிக்கத் தெரிந்தவுடனே, தந்தையானவர், "ராமாயணவசனம்," "பாரதவசனம்," "பெரியபுராணவசனம்" என்பன போன்ற நம் பெரியோர்களால் மதிக்கப்படும் கிரந்தங்களின், சுலபமாய் வசனநடையிலெழுதிய புஸ்தகங்களை வாங்கிக்கொடுத்தால், நம் முன்னேர்களில் தியேயம் (தியானத்துக்கு லக்ஷியமானது தியேயம்) எவ்வாறிருந்தது என்றும், நமக்கும் இதுவே நல்லது என்பதும் இளம்பிராய முதல் படியும். சீதாபிராட்டி, அருந்ததி, சாவித்திரி, சந்திரமதி, தமயந்தி முதலான ஸ்திரீ ரத்னங்களினும் மேன்மைப்பட்டதும் உளவோ? இவைகளை தியேயமாகக் கொண்டால் பெண்கட்கு காவலும் துணையும் பின்னும் வேண்டுமோ? அவர்கள் புத்தியும், பதியினிடத்து பத்தியும் மாறுமோ?

இவ்வாறு சுலபமாய்க் கற்ற எழுத்துக்களும் கணக்குகளும் தன் உற்றுருறவினர்களுக்குக் கடிதமெழுதவும், வண்ணுன் கணக்கு, தயிர்க்காரிகணக்கு, என்பனபோன்ற எழுதவும், மாதாந்தரத்தில் இந்தக் கணக்குகளைக் கூட்டி இத்தனைதுகையாயிற்று என்று தெரிந்துகொள்ளவும் போதுமே? இதினும், இவர்கட்கு, வெகு அதிகமான வித்தை என்னத்திற்கு என்பது விளங்கவில்லை.

மேற்கூறியவையேயன்றி வீட்டோடிருப்பாளேல், ஒருபெண், தன்னுடையதாயார்தன் தம்பிக்கு மாந்தம் வந்தபோது என்னமருந்து எப்படி செய்துகொடுத்தாள், அது எப்படி சட்டென்று அதை மாற்றிப், 'பேசாதே, சத்தியில்லாமல் கிடந்த அம்பியை சொஸ்தப் படுத்திற்று' என்பது மனதிற் பதிந்து வைத்துக் கொள்வள். தன் குழந்தைக்கும் அவ்வாறு கெடுதிகள் எக்காலத்தாவது வருமானுல், "எங்கம்மா வேப்பெண்ணெயிலே ஒரு வேரைக்காச்சி அம்பிக்குக் குடிக்கக்குடுத்தா, ஒருமணிநேரத்திலே உடம்பு நன்ருயிட்டது" என்று ஒர்மையுடன், குழந்தைக்கு நோயதிகரிக்காமுன் வைத்தியனை யழைத்து வருவதற்குமுன் வீட்டு சிகிச்சையாலேயே மாற்றிவிடுவள். அந்தோ! இக்காலத்துஇம்மாதிரியான அனுபவத்தையுடைய ஒரு கிழப்பாட்டியையும், அவளிடம் உபதேசம் பெற்ற பெண்களையும் காணேமே! பாட்டிகள்காலத்திலேயே இக்காலத்திய பள்ளிப்படிப்பு வந்துவிட்டதோ அறிகிலேம். வீடுகள் தோறும் வழங்கி வந்த குழந்தைவைத்தியம் ஓடி ஒளித்தவாறும், அதைத் திரும்ப அறியும் வண்ணமும் ஒருங்கே மாய்ந்தனவே! இப்பொழுது, ஒரு சிறு குழந்தைக்கு ஏதேனும் ஜாட்டியம் வருமாயின் உடனே டாக்டரை வரவழைக்கவேணும். பகவானுல் கிருபை செய்யப்பட்ட தனவந்தனுக்கு டாக்டரை வரவழைத்தல் கூடும். ஏழைகளும் மேற்கூறிய அஞ்ஞானத்தையடைவார்களாகில் எங்ஙனம் பிழைக்கமுடியும்? ஒருதடவை டாக்டர் வீட்டுக்குவந்தால் இரண்டுமூன்று ரூபாய்கைவிட்டுபோகுமே?பிறகும்மருந்துக்கு ரூபாய் ரூபாயாகச்செலவுசெய்யவேண்டுமே!இதுபோன்ற விஷயங்களையுத்தேசித்தால், நம்நாட்டுக்குவேண்டிய பெண்கல்வி, நாம் மேலேகுறித்தது தான் என்பது நன்கு விளங்கும்.

ஆசாரம் என்னும் பதத்துக்கு பண்டைக் காலத்தார் அர்த்தமில்லா நிபந்தனைகள் செய்ததை அனுசரித்தல், என்று பொருள்கொள்வார் இக்காலத்தார் பலர். அப்படியே யிருப்பினுமென்ன. பண்டைக்காலத்தார் சாப்பாட்டுக்கு முன்னர் ஸ்நானஞ் செய்தல் நலம் என்ருல், அது நாகரீகம் முற்ருப்பண்டைக்காலத்தார் நிபந்தனையென்று தள்ளலாமோ? தொட்டால் பற்றிக்கொள்ளும் பதார்த்தத்தை பற்று என்றும், பற்று பட்டால் அவ்விடம் சுத்த ஜலம்விட்டுக்கழுவவேண்டுமென்றுமுன்னேர் 'சாஸ்திரம்' சொல்லிப்போந்தால் அது இக்காலத்துக்கு ஏலாதோ? முன்னுள் உடுத்த வஸ்திரத்தை இன்று களைந்து சுத்தமாய்தோய்த்துலர்த்திய வஸ்திரந் தரித்து சாப்பிடுவது நலம் எனின் அதுவுமோர் பொருளில்லாநிபந்தனையோ? இதுபோன்றவைதாமே பண்டைக் காலத்தார் ஆசாரமென்றது. இவைகளை அனுசரித்தல் சுத்தத்துக்கு எத்தனையோ நலமாயிற்றே. இதனையே மேல்நாட்டார் சுகாதாரக்கொள்கைகள் (Hygenic principles) என்

கிருர்கள். அவர்களெழுதியிருப்பதும், அவர்
கள்வாயால் வருவதும் இக்காலத்தில்நம்மவர்
க்கு வேதவாக்கியமாயிருக்கிறதே யொழிய,
நம்முன்னோர்கள் வாக்கு இனிக்கவில்லை. ஆம்
அது சஹஜம்தான்; பழகப்பழகப் பாலும்
புளிக்கவேண்டுமே! அதுபோல பழையனகழி
தலும் புதியனபுகுதலும் காலவியற்கை யன்
ஞே? ஆயின், எமக்கு புதியதின்பேரில் வெறு
ப்பும், பழையவழிகளில் விருப்புமென்றுகொ
ள்ளன்மின்; அங்ஙனம் எம்மனதில் விகல்ப
முண்டாவதுஅநாவசியம்; ஏனெனில்புராதன
நவீன ஆசாரங்கள் வெவ்வேறு என்றுகொள்
ளினன்ஞே ஒன்றிலும் மற்ருென்று விசேஷ
மென்றற்கு? இரண்டும் ஒரேவழியைக் காட்
டுகின்றனவென்னில் இரண்டு மார்க்கமும் சம்
மதமென்பது கூருமற் பெறப்படும்.

சுத்தாசுத்தம் என்பன குழந்தைப் பருவ
முதலே பழகத்தொடங்கின், இதனுல் தன்
சரீரத்துக்கும் பிறர் சௌகரியங்களுக்கும்
பயன்படுமன்றே! ஆதலால்தான் ஆசாரவியவ
காரங்களிலும் நம்பெண்கட்கு பரிச்சயம் வே
ண்டுமென்று வற்புறுத்துவது. வெறும்கணித
சாஸ்திரம் கற்பதிலுண்டாகும் ஆனந்தத்தி
லும் அதனை சோதிஷம், பௌதீகமுதலிய சா
ஸ்திரங்களில் பிரயோகித்து அடையும் ஆனந்
தம் பன்மடங்கு அதிகம்என்பதனுண்மை, இ
வைகளை முறையே அனுபவித்தோர்க்குநன்கு
விளங்கும். அதுபோல சுகாதாரவிளக்கத்தை
ஏட்டில் படிப்பதிலும், அதனை பிரதிதினம்
ஆசரணையில் கொண்டுவரக்கற்பது வெகுசிலா
க்கியம். இவ்வாறு கற்றல் அகங்களில் பெரிய
வர்களிடந்தான் முடியும். ஆதலால், பள்ளியில்
கற்க்கருதுவதிலும் அகங்களில் கேட்டறிவ
தே நலம் என்று தோன்றுகின்றது.

மேற்கூறியவாறெல்லாம் ஒரு பெண் கல்வி
கற்றிருப்பாளேல் தன் பர்த்தாவின் மனையிலே
போய்ச் சேர்ந்தகாலமுதல் அவனுடைய தே
வைகளை யறியவும், சோம்பலின்றி அவைக
ளைத்தந்துதவவும், அதனுல் தனக்கும் தன்
பர்த்தாவுக்கும் ஆனந்தம் விளைக்கவும் கூடும்.
இவை யிப்படியிருக்க,

நாம் இக்காலத்திய மாதிரி புஸ்தகஞான
மூட்டியும், அனுபவஞான மின்றியும், பெண்
களை வளர்த்தலின் அசௌகரியங்களை கவ
னிப்போம். ஒருபெண் மேன்மேலும் கல்வி
கற்று பன்னிரண்டு வயதில் மிடில்ஸ்கூல் பரி
க்ஷை பாஸ்செய்கிருள்; சங்கீதத்தில் ஒரு
பிரைஸ் கிட்டியது; கையெழுத்துத்தரத்துக்
காக மற்ருெருபிரைஸ். அடுத்த இரண்டு வரு
ஷங்களில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப்
பணம் கட்டியாய்விட்டது; அதுதான் கலியா
ணமான வருஷத்தில் ஏழாவது மாதம் தகப்ப
ஞர் அகத்தில் 'பிரைவேட்' வைத்து பாடம்
சொல்லிக்கொடுக்கிருர். இவள்விஷய மிப்படி
யிருக்க லோகாபவாதம் பலிக்கத் தொடங்கி
விட்டது. "என்ன! இந்த மனிதன் தன்பெ
ண்ணை கன்னியாமடத்தில் சேர்க்கப் போகி
ருஞ? பெரியவளாகிறநாள் வரவில்லையோ
பெண்ணுக்கு, அது எதாகிலும் லக்ஷியமுண்
டா பாருங்களேன்" என்பதா நாலாபக்கம்
கேட்கத்துவக்குகிறது. இதற்காக பரபரப்
புடன் பிள்ளை விசாரிக்கத் தொடங்குகிருன்
பிராமணன். இந்தசந்தியில் ஒருவைதீகவாத்
தியார்,—(இத்தொழிலாளிகளுடைய கிருத்
திருமங்களைத்தான்சொல்லவும்வேண்டுமோ!)
—,வந்து சேர்கிருர். இவர் நம் பிராமணருக்-
குப் புரோஹிதர். அவரை ஆசிரயித்தவர்.
அவர் அன்னமுமுண்டு வளர்ந்தவர். "என்ன
சாஸ்திரிகளே! ஒருநல்ல பிள்ளையைப் பார்த்
துக் கொடுக்க முடியவில்லையே! எங்களுக்கு
இந்தமாதிரி சமயங்களிலே நீர் அன்றே சகல
ஏற்பாடும் செய்யவேண்டியது!" என்னவே,
சாஸ்திரிகளுக்கு சந்தோஷம் உச்சிமேல்
ஏறிவிடுகிறது. அங்கே யிங்கே ரயில்செல
வு எஜமான்கைவிட்டு செலவு செய்வித்துத்
திரும்புகிருன். "தரமான இரண்டு வரன்
பார்த்து வந்திருக்கிறேன். ஓங்களதிர்ஷ்டத்



துக்கு என்னகுறைவு, ஓங்கமனசு போலவே
பகவான் கிருபை செய்வாரென்று அப்பவே
நான்சொன்னேனே. அதுபோல்கிடைத்தது.
ஒருபுள்ளே ஏதோபத்துரூபா பரீக்ஷைக்குப்
படிக்கிருஞம். கண்ணுக்கு லக்ஷணமாயிருக்கி
ருன். வயசும் 15 தான் ஆகிறது.புத்திசாலியா
யிருக்கிருன். அவன் தோப்பஞருக்கு 25-
ஆயிரம் ரூபா சொத்து உண்டு என்று அந்த
பிராந்தியங்களில்வதந்தி. இதுநல்லஇடம். தப்
பிஞல், மற்றஇடம் சித்தம். அந்த பையன்
கொஞ்சம் ஏழையானுலும் ரொம்ப பாடுபட்டு
படிக்கத் தக்கவன். அவனுக்குக் கொஞ்சம்
திரவியசகாயஞ் செய்தால் அவன்முன்னுக்கு
வந்துவிடுவான். எப். ஏ பரீக்ஷைக்கு வாசிக்கி
ருன். மாநிறம், கண்ணுக்கு நன்ருயிருக்கான்.
பையன்: 18, 19, வயசுதானிருக்கும்" என்ருர்
வாத்தியார். "சரி, முதல்வரந்தான்தேவல்லே;
அன்ன வஸ்திரத்துக்கு இருக்கு; பையனும்
வாசிக்கிருன். எப்படியாவது தேறிப்போ
வான், பயமில்லை. பொருத்தங்கள் சரியாயிரு
க்கோயில்லையோ" "ஓ! பொருத்தம் நன்ஞ
யில்லாட்டா நான் இவ்விடத்திலே சமாசார
த்தை வெளியிடுவேஞே!"

* * *

ப்பிரவரிமாதம் பிறந்தது. "மெட்ரிகுலே
ஷன் ரிஸல்டு வந்துவிட்டதாமே. என்னுச்சு,
மாப்பிள்ளை சமாசாரம்? "குழந்தை பியாஸ்
செய்தாள் என்று கேள்விப்பட்டேன். ரொம்
பசந்தோஷ மாச்சு. சாயங்காலம் வயல்லே
யிருந்துவந்தேன். அவளிருக்காளே, 'இந்தா
ங்கோ அவாத்துலே கல்கண்டுகுடுத்தா, இது
ரண்டை சாப்பிடுங்கோ' என்ஞள். என்ன
விசேஷமென்னேன். குழந்தை விசாலுக்குப்
பரீக்ஷை தேறித்தாம். ரொம்ப புத்திசாலி, எங்
கேயாவது தீர்க்காயுசா யிருக்கட்டுமென்ருள்.
சாப்பிட்டு கையலம்பினதும் ஈரக்கையுமது
வுமா ஓடிவந்தேன்" "ரொம்ப சந்தோஷம்
மாப்பிள்ளை சமாசாரம் தெரியல்லே; இண்
ணைக்குத்தானே ரிஸல்டு வந்திருக்கு, அவ
னுக்கெட்டி, பிற்பாடன்ஞ எழுதணம்." பிற்
பாடு ஏது, எழுதுகிறது ஏது. "ப்ளக்" ஆய்
விட்டதே, எப்படி எழுதுவான் அவன்தான்.
நாளடைவிலேயே பையன் ஸ்திதி மதிகளை
விசாரிக்கும்போது 10 ஆயிரம் ரூபாய் சொ
த்து உண்டென்றும் அதன் பேரில் 3 ஆயி
ரம் ரூபாய் கடனுண்டென்றும் தெரிய வந்
தது. "என்னசெய்யலாம். அந்த வாத்தி
யாரை நம்பி ஒருகாரியஞ் செய்யலாமா. அவா
த்திலே கொடுத்த ஒருஜோடி சோமனில்
மகிழ்ந்துபோய் விட்டாப்பலே யிருக்கு. அவ
ரையெல்லாம் சொல்லிப் பிரயோசன மெ
ன்ன? நம்மபிராப்தம் அவ்வளவுதான். பூர்
வத்திலே பூஜாபலம் பண்ணியிருந்தான்ஞ
அதுக்குத் தகுந்தபடி கிடைக்கும். அது
கிடக்கட்டும்; புள்ளையை ஆருமாஸத்துக்கு
அழைக்கவேணுமே கலியாணத்தில் பார்த்
ததுதான். அவன் வந்தாலென்ன நல்லவார்த்
தை சொல்லி தேற்றிவைக்கலாம். மேலைக்கா
வது பியாஸ் பண்ணுவானேயில்லையே பார்ப்
போம்!! பெண்டாட்டி பியாஸ்செய்த பரீ
க்ஷையில் தான் தேறவில்லையென்ருல் சுலபத்
தில் வேட்டகத்திற்குப் போவஞே மாப்பிள்
ளை? பகீரதப்பிரயத்தினத்தால் அழைத்துக்
கொண்டுவந்தார்கள்.! இனிஎன்ன! "சம்சாரத்
துக்குப் படிப்பு நிறுத்திவிடுகிருேம் என்ரு
லொழிய நான்அவ்விடம்வருதற்கு சங்கோச
மாய்த் தானிருக்கும்" என்றதற்கு, 'சரி" என்
னவேண்டியதாயிற்று. ஆருமாஸ கல்யாணத்
திலே பெண் பிடில்வைத்துக்கொண்டு தனக்கு
வெகு நன்ருய் வரும்பாட்டுகளைப் பாடினுள்:
தன் அகமுடையானுக்கு திருப்தி உண்டாகிற
தா. என்றுபார்த்தாள். கல்லுப்பிள்ளையார் கா
தில் சங்கீதம்ஏறினுலும்ஏறும், நம்மாப்பிள்ளை
யார் காதில் சங்கீதம் ஏறவேஏருது. முடிகிற
தற்குள் மூன்றுதரம் கொட்டாவி விட்டாயி
ற்று. ஆனுல்இருந்தஇடம்விட்டசையவேயில்லை.
பெங்களூர் புளிமூட்டை மாதிரி உட்காரந்
திருந்தார். இன்னங்கொஞ்சங்கூட பாட்டுக்கச்

சேரி நடந்திருக்குமானால், அவர் சுஷுப்தியவஸ்தையிலிறங்கிவிட்டிருப்பார்; அதற்குள் சங்கீதம் முடிந்தது.

பெண் பெரியவளானாள். சாந்திமுகூர்த்தமும் நடந்தது. கணவன்வீட்டுக்குப்போனாள். அகத்தில் சிப்பந்திகள் ஒருவருமில்லை. தானே சுயம்பாகம், தானே பரிசாரகம், முதலிய ஒவ்வொரு கிரககிருத்தியமும் பார்ப்பதில் சலித்துப்போகிறாள். ஆதலால் இன்னதன்மையான புருஷன் நம்முடைய குழந்தைக்குக் கிடைப்பான் என்பது நிச்சயிக்கமுடியாத நம்முடைய இப்போதைய நிலையில் பெண்களுக்குக்கொடுக்கும் வித்தை சில சமயங்களில் வினையை விளைக்கின்றது. இவர்களுக்கு கலியாணம்செய்யவேண்டியதுபெரியவர்களாகாததற்குமுன் என்னும் நியதியிருக்கிற வரையிலும், சாவதானமாய் வரனை சம்பாதிக்கலாமென்பது ஏற்படுமட்டும், இவர்கள் வித்தையை அபிமானிக்கிற கணவன் கிடைப்பான், அன்னோனுக்குத்தான் கொடுப்போம் என்று தைரியஞ்செய்து வெகுகாலம் கலியாணஞ்செய்யாது வைத்திருக்க நமக்கு சக்திகிட்டுமட்டும், அப்படித்தானிருக்கும் அநேகமாய் மனதுக்குச் சமாதானமுடையவரன் கிடைப்பது நூற்றில்பத்துஅல்லது பதினைந்துதான். மற்ற தொண்ணூறுஅல்லது எண்பத்தைந்து கேஸ்களில்நிகழும்கலியாணத்தில்அந்நியோந்நியம் எப்படிஏற்படுகிறதென்றால், (i) கலியாணமோ முடிந்துவிட்டது, இனி ஒன்றும் செய்வதற்கில்லை. பகவத் சங்கல்பம், இப்படியே காலத்தைத் தள்ளுவோம் என்பது கணவன் சமாதானம்; (2) நல்லவனோ பொல்லாதவனோ, நம்மை அபிமானிக்கிறானோ இல்லையோ, எப்படியிருந்தாலும் நம்கணவன் நமக்குக் கடவுளென்று நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் நாம் அருந்ததி, சீதாதேவி, தமயந்தி முதலான பேர்களைப்போல இருந்து, ஊரார் நல்லவளென்னும்படி காலத்தைக் கழிக்கவேணுமென்பது மனைவியின் சமாதானம். இந்த இரண்டு வேதாந்த முடிவைக்கொண்டே நம் நாட்டு ஆணும்பெண்ணும் சுகமாய்வாழ்ந்து மனக்குறையின்றி இறக்கிறார்கள். மிக்க கல்வி கேள்விகளுள்ள ஐரோப்பிய தேசங்களில் எங்கும் இந்தமாதிரியாய் மனமொத்துவாழும் ஆண்பெண்கள் சிலரே யாவர் என பல நூன்முகங்களாலும், கேள்வியாலும் எமக்குத்தெரியும். இவ்வாறு மகாநன்மையை விளைக்கும் மார்க்கம் நம் வீட்டில் பெண்கள் பழகி தொன்று தொட்டுவந்த இதிகாசபுராணங்களைக் கேட்டல், தர்ம சாஸ்திரக்கொள்கைகளை பெரியோர்களிடம் தெரிந்து கொள்ளல் முதலான மார்க்கங்களால் விருத்தியாக்கப்படுகின்றது. ஆதலாலும், மற்ற நாட்டார் நடக்கும்வழியில் கிருககிருத்தியம் சீராய்நடக்காததையும், வேதாந்தமார்க்கத்தில் பழகின நம்கிருஹஸ்தர்கள் மனச்சாந்தியோடு மிருப்பதை ஊடுருவிக்காண்போர் யாம் மன்றாடும் பெண்கல்வியே நம்முடைய நாட்டுக்கும், மற்றெந்த நாட்டுக்கும் தகுமென்பதற்குஐயுறார். மேனாட்டார் வழியைத் தழுவி, பெண்களுக்கு புஸ்தக ஞானமே பெரிது என்னும் எண்ணங்கொண்டிருக்கிற நண்பர்கள், எமக்கு நல்லது என்று தோன்றின சிலவற்றை இதுகாறும் கூறிப் போந்ததற்கு எம்மைச் சால இகழாராக.

கோ.

## THE DIVINITY OF CHASTITY.

## பத்தினிக் கடவுள்

(105-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பரொருவர் யாரிடத்திலோ உண்டான கோபத்தால் தன் சிறு மனைவி பெரியவளாய் சொல்பகாலமாயிருந்தும், கவனியாமல் இரண்டாம் விவாகம் செய்து கொண்டார். எப்பொழுதும் துவிதிய விவாகத்துச் சமுசாரத்தினிடத்து புருஷர்கட்கு அதிக பிரீதி யென்பது உலகப் பிரசித்தம். அப்படி யிருக்கவும்



தன் முதல்பத்தினியின் நற்குண நற்செய்கைகளை யெல்லாம் கேள்வி யுற்று, அவளையும் ஸ்வீகரித்தார். அவ்வம்மாளின் ஒரு பெருந்தகையாலும், கணவன் மனதறிந்து, அவன் நினைத்தவற்றை அவன் வாய் விட்டுச் சொல்லுமுன் செய்து வந்து தம்மணவாளனை உகப்பித்துவந்ததனால் அவர் உலக வழக்கமாகிய, இரண்டாம் பெண்டாட்டி யிடத்து அதிகாபிமானத்தையும் இழந்து இருவரையும், சாம்மியமாக நடத்தி வந்தார். ஆயினும், இவருக்கு தம்மனதுக்கிணங்கின முதல் சமுசாரத்திடை விசுவாசம் அதிக மென்பது அவரறியாமலே வந்து விட்டது. இருவரும் இவ்வன்பை வளர்த்து தம்வாணாள்களை இன்புற்று வாழக் கொடுத்து வைக்க வில்லை. அம்மாள் கருப்ப முற்று, குழந்தையைப் பெற்று மூன்றாநாள் இறந்தாள். அந்நாள் முதல் நண்பர் மனம் பித்தேறி புத்திமான்களுக்குத்தகும் காரியங்களைச் செய்யாது, தன்னியற்கை செயற்கை பெருமை யெல்லாமிழந்து, இரண்டாம் தாரத்தினிடத்திலும் அபிமான மற்றவராய், சீரழிந்து விட்டார். லக்ஷ்மீ போன்ற முதல் சமுசாரம் போன நாள் முதல் அவருக்கு கஷ்டமே நேர்ந்தது.

இன்னமொரு நண்பர் மேற்சொன்ன காரணத்தாலேயே புனர்விவாகம் செய்து, முற்கூறியவாறு கேள்வியாற்தம் முதல்மனைவியார் நற்குண நற்செய்கைகளையறிந்து, இவ்வம்மையையும்சேர்த்துக்கொண்டு வாழத்துவக்கினார். அன்றுமுதல் அவர் குடும்பத்தில் ஐசுவரியம் மேன்மேலும் அதிகரித்தது. புத்திசாலியாயிருந்தபடியால், மனைவியார் தன்சக்களத்தியாரையும் வரித்து அவளன்பையும் தனக்கேயுண்டாகும்படி செய்துகொண்டு, கணவரும் இருபெண்டாட்டிகளும் வாழ்ந்துவருநாளில், ஒவ்வொருத்திக்கும் ஒரு பெண்ணும் ஒரு ஆணுமாய்க் குழந்தைகளும் உண்டாயின. பகவத்பரீக்ஷை இப்படியிருக்கும் சந்தோஷகாலத்தேதான் வந்துசேரும், இரண்டாம் பெண்டாட்டியிடம் கொஞ்ச அதிக வாஞ்சை வைத்திருந்தநண்பர், இரண்டாம் விசை பிள்ளைப் பெற்றபோது, இவளை யிழக்கப்பெற்றார். முதற்பத்தினியார் சிசுவைத்தானெடுத்துப் பால் கொடுத்து தன்கணவன் துக்கங்களையெல்லா மாற்றி, ஒருநாளில் நான்கு குழந்தைக்குத் தாயாரானார்; இவ்வம்மை நடத்தையால் சமுசாரம் வருத்தமென்பதறியாமல் ஓங்கி, சம்பத்துக்களோடும் கூடி வளர்ந்து வருகின்றது. இவர் கணவருக்கிப்பொழுது 600-ரூபாய் சம்பளமும் படிச்செலவு முதலியவுமுள. இவர் தம் இரண்டாம் தாரத்துக் குழந்தைகளின் கலியாணமுதலியவற்றுள் தாம்பிரவர்த்திப்பதில்லை. தம் முதல்சமுசாரம் எங்ஙனஞ்செய்வாரோ அதுதான் தமக்கும் சம்மதமென்றும், அவள் குழந்தைகளின் விஷயம் அவளன்றோ நன்கறிவள், நாம் இவள் மனதுக்கு விரோதமாய் நடக்கப்படாது என்பர். இவைகளால் சாந்தம், அடக்கம், பொறுமை முதலிய குணங்கள் என்றென்றைக்கும் பெண்மணிகளிடம் குடிகொண்டிருக்க வேண்டுமென்பது நன்குவிளங்கும். இஃதில்லாத பிசாசுகளால் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பங்களொன்றிரண்டு காட்டுவோம்.

மற்றொருநண்பர் ஏகபத்தினி விரதரென்று நல்லாரால் புகழப்பட்டும், பொல்லாரால் துச்சரிதைசெய்ய சக்தியற்றவனென்று இகழப்பட்டும் வாழ்ந்துவருநாளில் பலவாறாய்த் தன்னை துன்புறுத்திய மனைவியுடன் வாழத் துணியாராய்,

"கூற்றமே யில்லிற்கிசைந் தொழுகாப்பெண்" என்று துணிந்து,

"ஏதேனும் தாறுமாறாகவிருப்பாளேயாமாகில், கூறாமற் சன்னியாசங்கொள்"

என்னும் உபதேசம் மனதிற்தைக்க, ஒரு விதத்துறவுபூண்டு தம்மகத்தே பலநாளும்பித்தேறினவர்போல இருந்தார். ஆயினும், இவர் மனதிற் பின்னை ஒருமணம்புரிந்து இரண்டாம் பெண்டாட்டியுடனாகிலும் சுகித்துவாழ்வோம் என்னும் எண்ணம் ஒருக்காலும் புகவில்லை.

இங்ஙனம் பலநாள்கள் கழிந்தபின்னர், ஏசுநாதர் சொல்லியவாறு சமாதானஞ் செய்து சாந்தியுண்டாக்குபவர் நற்கதிக்கேற்றவர்கள் என்பதற்கிலக்கான ஒருவர் இவ்வடங்காப்பிடாரியை அழைத்துவந்து, இனி உன்மனைவியடங்கிஇருப்பள் நீதயவுசெய்துமுன்னடந்தவற்றையெல்லாம் மறந்து இவளை இன்று எனக்குவேண்டி சுவீகரிக்கவேண்டுமென்று மன்றடவே, இயற்கையிலேயே பச்சாத்தாபமுடைய நண்பர் மனமிரங்கி அவளை அங்கீகரித்தார். "கட்டையில் விளைந்தது முட்டையோடேயே போகும்" என்பதற்கேற்ப, பழைய வழிசள் மறுபடி தழைக்கத் தலைப்பட்டன. நண்பரவர்கள், பணங்காசால் குறைவற்றிருப்பினும், செல்வாக்கு நிறைந்தவராயினும், மனதிற் சந்தோஷமென்பதே யில்லாதிருந்தார். வீடென்றால் அவர்க்கு விஷமாயும், அதற்குப்புறமானவிடமெல்லாம்அவர்க்குச் சுவர்க்கமாகவும்தோன்றின. இவர் சிறுவயதுக்குப்பின் அன்பு என்பதைத் தம் மனையகத்துக் காணுராய், க்ஷாமகாலத்தில் சோற்றுக் காவலாய் திரியும் பசியாளனைப்போல, உத்தியோக நிமித்தமாய் அங்குமிங்கும் திரிந்து, தம் கஷ்டங்களை யொருவாறு மறக்க எத்தனித்தார்.

இப்படி நிகழுநாளில் ஊழ்வினை முற்றி இவருக்கும் மற்றோர் பொதுஸ்திரீக்கும் காலப்பொல்லாங்கு நிமித்தமாக, நட்புண்டாயிற்று. சும்மாவிருக்குங் காலத்திலேயே கொண்டகணவனைப் பருந்தாட்ட மாட்டுவிக்கும் நீலியாகிய இவர் மனைவியார், இச்சங்கதி கேள்வியுற்றதும் சகலவேலைகளையும் விட்டு ஓட்டமாய் அவள் வீட்டுக்கு ஓடிப்போய், அவள் மயிரைப் பிடித்திழுத்து, இழிசாதியார் போடுவதுபோல நடுவீதியில் சண்டைபோட்டு, கைகளால் மண்ணைவாரி, தன் கணவன் அழிந்து பாழ்படவேண்டும் என்று இறைத்து மனமாற ஆசீர்வதித்து தன்கணவருக்கு மேலாகவிருந்த அதிகாரியின் வீட்டுக்குச் சரேரென்றுபோய், அவன் மனைவியிடம், ஐந்து குழந்தையைப் பெற்ற என்னைவிட்டு என் கணவன் ஒரு பரஸ்திரீயை வைத்துக்கொண்டிருக்கிறான். பெண்ணாய்பிறந்த உனக்கு இவ்வனியாயம் கண்டு மனம் பொறுக்குமா? நீயும் பெண்ணாயின், உன்னையொத்த எனக்குநேர்ந்த கஷ்டத்துக்கு, என்கணவன் உத்தியோகம் போகும்படி செய்து வைப்பாயாக" வென்று பிரலாபித்து, அவள் மனதை உருக்கி, தன் புருஷனகத்துக்குத் திரும்பாமல் ரயிலேறி தன்தமக்கைவீட்டுக்குச்சென்று, பணம் காசு சேர்த்துக்கொண்டுவந்து ஜீவனுமிசத்துக்கு வியாச்சியம் செய்து தோற்றாள்.

இவள் செய்த சாகசத்தில் மயங்கிப்போன உத்தியோகஸ்தன் பெண்டாட்டி தன் பர்த்தாவை தொந்திரவு செய்து நண்பரை வேலையிலிருந்து நீக்கும்படி செய்து வைத்தாள். வேலை நீங்கியும்நீலியின் மனம் சந்தோஷமடையவில்லை. "அவன் கொழுக்கட்டை போலிருக்கானே. அவன்செத்தா, நன்னா, வெள்ளையுடுத்திக்கிண்டு சந்தோஷமா யிருப்பேனே. அவனுக்கொருபேதி வால்லெயே" என்று நித்தம் மங்களம் பாடக்கேட்டுள்ளேன்.

இம்மகாதேவி,—அல்ல! அல்ல!-மூதேவியைப்போல பெண்களிருப்பாரேல், தனக்கும் சுகமின்றி, தன்கணவன் வாணாட்களைவீணாட்களாக்கி, குழந்தைகளையும் வறுமைக்காளாக்குவார்களென்பது நிச்சயம், நிச்சயம், முக்காலும் நிச்சயம்.

இதே மாதிரிய இராக்ஷஸி ஒருத்தி ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்கு வாய்த்திருந்தாள். அவர், பாவம்! தன் குழந்தைகட்கும், மனைவிக்கும், தம்முடைய யோக்கியதைக்குத் தக்கவண்ணம் பொருள் சேர்த்து வைத்துத தானிறக்க வேண்டும் என்று எண்ணங் கொண்டிருக்கும் நாளில், தம் பெண்டாட்டியின் பைசாச குணத்தைப் பொறாராய், தம் கஷ்டங்களையெல்லாம் மதுபானத்தில் முழுகுவிக்கத்தலைப்பட்டார். குடிவெறி மேலிட மேலிட அவர் ஆயுஷ்குறையத்தலைப்பட்டது. அந்திமகாலத்தில் வைத்தியர்கள் இது குடியால்வந்த கேடு, இனி நிறுத்தினாலும், சுபாவத்தானு மிறப்பர் ஆதலால், இவர் சாகும் வரை மனக்குறை யின்றி குடிக்கக் கொடுங்கள் என்று சொல்லிப் போனார்கள். மரணம் நேரும் தருணத்துக்குக் கொஞ்ச முன்னமே தன் மக்களையழைத்தார். மனைவியும் அவர்களுடன் வந்து எதிரே நின்றாள். அப்பொழுது அவர் இப்பதினிக்கடவுளைச் சுட்டி, அப்பா, இப்பிசாசினால் நான் அல்பாயுசானதோடுங்கூட வந்த திரவிய மெல்லாம் என் மனத்துயரத்தை மூழ்கச் செய்யும் எண்ணத்தோடு குடியில் செலவழித்து, உங்களுக்கு அதிக திரவியம் வைக்கவேண்டு மென்று பூரண எண்ணமுடையனாயினும் அங்ஙனம் செய்யமுடியாது உங்களை வறுமையிலாழ்த்திச் செல்கிறேன். என்னை வெறுக்காதேயுங்கள். இத்துன்பத்துக்கெல்லாம் மாதருஸ்தானமான உங்கள் மாதாவை வெறுவுங்கள் என்று பல்லைக் கடித்துத் தன் மனைவியின் முகத்தை நோக்கிச் சீறிக்கொண்டே பிராணனை விட்டார்.

'உடையவர்,' 'பாஷியகாரர்என்று'பிரசித்திபெற்ற மகானான ஸ்ரீஇராமானுஜாசாரியருக்கு வாய்த்த மனையாளும் இவ்வாறு குணமுடையவளே. ஆசாரியருடைய வாக்மதுரத்தாலும், வித்தியபாவத்தாலும்உலகமுழுதும் தம்மடிப்படுத்திய இவர்களுக்கு இவ்வடங்கா சாஹஸியை பலவிதமாய் பிரயத்தனித்தும் திருத்த முடியாமற்போயிற்று. அந்தோ, இவள்மௌடீகம் எவ்வளவு வலிமைபொருந்தியது! அம்ம! அளவிடமுடியா ஜடத்தனத்தையுடைய மனைவியின் துர்க்குணத்தை ஆசாரியர் மூன்றுதடவை மன்னித்து, தம் நன்மொழிகளாலாவது சீரடைவாளோவென்று, பொறுமையுடனிருந்தும் அவர் எண்ணம் விருதாவாய்விட்டது. ஒருநாள் இவளுடைய இராக்ஷஸத்தனம் பொறாராய், நடுமாத்தியான்ன காலத்தில் தம்சிறு வீட்டைவிட்டு, பெருவீடளிக்கும் பரமனும், பரமதாதாவுமாகிய வரதராஜனிடம் சரண்புக்கு, சம்சாரமாகிய உவர்க்கடலை நீத்து, துறவுபூண்டு மகாவிஷ்ணுவின் கருணாசாகரத்தில் நீந்தி இன்புற்றிருந்து வைகுண்டபதமெய்தினர். எனவே, துச்சரிதையும் சில சமயங்களில் நன்மையை விளைக்கின்றன வென்பதற்கு இதுஒருதிருஷ்டாந்தம். இப்பிசாசை விட்டு நீங்காமலிருந்தால் இம்மகானுடைய பிற்காலமெங்ஙனமாயிருக்குமோ, யாமறியக்கூடவில்லை.

மேற்சொன்ன நடத்தைகள் பெண்மைவழிக்குத்தக்கனவல்ல. தன் கணவன் செய்யக்கூடாத காரியஞ்செய்யினும், அவன் புத்திக்கேட்டைமாற்ற, தன் நன்டைத்தையால் அவன்மனதில் அனுராகமுண்டாக்குவளானால், இவளால் திருத்தப்பட்ட இவனுடைய அன்பு இயற்கையன்பினும் பதின்மடங்கு பலமுடையதாகும். "பொறுத்தார் பூமியாள்வார்.' க்ஷமைப்பெருங் கடவுளையண்டினோர் என்றைக்கும் துன்பமடையார்.

புருஷனுக்கும் தன் சஹதர்ம்மசாரிணியினிடம் அன்பும், கௌரவமு மில்லையெனின் நற்கதிகிடைத்தலரிதாய்ப்போம். இவன் விஷயத்தைப் பிற்பாடு விஸ்தரிப்போம்.

மேற்கூறியவாறு அன்புடனும், கடமைப்பாட்டுடனும் கணவனும் இல்லாளும் வாழ்ந்து வருவார்களானால் இகத்தில், நல்லோர், சற்ஜனர், பூதேவதைகளென்னப் படுதலோடும், பரத்தில் வீடு பேற்றுக்குமுதன்மையானவர்களாவார். இதனையே தெய்வப்புலவர்

"அன்புமறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

என்று சுருங்கச்சொன்னார்.

தி. அ. கோபிநாதராவ்.

## KANNAKI—A SOCIAL DRAMA.

## கண்ணகி.

### முதல் அங்கம்.

காதற்சிறப்பு—கலியாணப்பேச்சு.
இடம்—காவிரிப்பூம்பட்டணம்.
நாடகபாத்திரர்கள்.

மாசாத்துவன்—அந்நகரத்து வணிகன்.
பெருமனைக்கிழத்தி—மாசத்துவன் மனைவி.
நந்தன்—ஷை ஊழியக்காரன்.
கோவலன்—மாசத்துவன் புதல்வன்
நீலமேகன்—கோவலனின் தோழன்
விநோதன்—கோவலனின் சேவகன், விகடமாகப் [பேசுபவன்

| | |
|---|---|
| விசாலாட்சி<br>மரகதம் | கண்ணகியின் சேடிகள் |

மாநாய்கன்...அந்நகரத்து மற்றோர்வணிகன்.
கண்ணகி...மாநாய்கனின் புத்திரி.

உ

## கண்ணகி,

அங்கம்—1] [காட்சி—3.

இடம்—நந்தவனம்.
காலம்—அஸ்தமனசமயம்.

கண்ணகி:—அடியே தோழி! இக்காவிரியாற்றில் ஜலம் மொழுமொழுவென ஓடிக்கொண்டிருப்பதும், சந்திரன் தகதகவென்று கீழ்த்திசையில் தோன்றுவதும்தென்றற்காற்று சில்லென்று வீசுவதும் நறுமலர் மணங்கள் அக்காற்றுடன் கலந்து சுகந்தம் வீசுவதும், மனதிற்கு எவ்வளவு ஆநந்தத்தை விளைவிக்கின்றன!

விசாலாட்சி:—தேவலோகமும் இதற்குச் சமானமாகாது! எவ்வளவு அற்புதமான காட்சி!

மரகதம்:—இவ்விடத்திலேயே இருந்து விட்டால் நன்றாகவிருக்கும்.

விநோத:—(விசாலாட்சியை நோக்கி) அங்கே என்னுடைய தகப்பனாரைப் பார்த்தாயோ?

விசாலா:—எங்கே?

விநோத;—தேவலோகத்தில்! இது தெரிந்தால் ஒரு கடிதமெழுதிக் கொடுத்திருப்பேனே!

விசாலா:—உனக்குப்பயித்தியம்பிடித்துவிட்டதோ?

விநோ:—இல்லையம்மா! தேவலோகமும் இதற்குச் சமானமாகாதென்றாயே! ஒருசமயம்அங்கேபோய் விட்டு வந்தாயோ என்று நினைத்தேன்!

கண்ண:—உனக்குச் சமாதானம் சொல்ல எங்களாலாகாது! (மரகதத்தைநோக்கி) மரகதம்! விசாலாட்சியுடன் நாம் நந்தவனத்திற்கு உட்சென்று பார்த்துவருவோம்! வா போகலாம்! [நந்தவனத்திற்குள் இருவரும்போகிறார்கள்.]

நீலமே:—(நந்தவனத்தின் வேறொரு பக்கமாகவெளியே வந்து விநோதனைநோக்கி) ஸ்திரீகளிருக்கும் இடத்தில் நாமிருக்கக்கூடாது! நாம் அதோ தெரிகிற மாமரச்சோலையைப் போய்ப்பார்த்துவருவோம்! வா சீக்கிரம்!

விநோ:—எனது எஜமான்மட்டு மிருக்கலாமோ?

நீலமே:—அவர் அயர்ந்து நித்திரை செய்கிறார். அவரை நித்திரைபங்கஞ்செய்ய எனக்குப்பிரியமில்லை. நாமிருவரும் போவோம்!

விநோ:—என்ன நித்திரை?

நீலமே:—சொல்லுகிறேன் வா! (விநோதனை அழைத்துக்கொண்டு வேறொருசோலையை நாடிச் செல்கிறான்)

கண்ண:—தோழிகாள்! புஷ்பஜாதிகள் மலர் நறுமணம்வீசுகின்றன! அதோபார், மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம், முதலிய புஷ்பவர்க்கங்களின் நிறங்கள் கண்ணைக்கவரும் காட்சியைத்தருகின்றன!

விசா:—மாதுளம்பழம், நாரத்தம்பழம், மாம்பழம், எலுமிச்சம்பழம், முதலியவற்றைச் சுமந்துநிற்கும் மரங்களின் அடர்த்தியைப் பார்த்தீர்களா? அம்மணி!

மரக:—சந்திரனின் கதிர்கள் உள் நுழையாதபடி அவ்வளவு அடர்த்தியாகவன்றோ இருக்கிறது!

கண்:—பாங்கிகளே! என்னுடைய மனம் ஏதோ ஒருவாறாய் இருக்கிறது! இன்னதென்பதாகப் புலப்படுத்தக் கூடவில்லை! தனியாக இவ்வனத்தைச் சுற்றிப்பார்த்துவர வேண்டுமென நினைக்கிறேன்!

மரக:—அப்படியே செய்யுங்கள்!

விசா:—மரகதம்! நாம் அதோ தெரிகிற தாமரைத் தடாகத்தைப்போய்ப் பார்த்துவருவோம்!

மரக:—வா! போகலாம்! அம்மணி சாக்கிரதை! (தோழியர் போய்விடுகிறார்கள்)



கண்ணகி:—(நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு மேடையண்டைவந்து அதில்அமர்ந்து நித்திரைசெய்யும்கோவலனைப்பார்த்து) ஆஹா! என்ன ஆச்சரியம்! இச்சுந்தரபுருஷன் தனித்து இங்கு உறங்குவதற்குக் காரணம் யாதோ! அருகிற்சென்று பார்க்கலாம்! (கோவலன் சமீபத்திற் செல்லுகிறாள்) ஆஹா! என்ன அழகு! என்ன வடிவு! ஆற்றறல்போன்றகரிய கூந்தலையும், பிறைபோல் அழகினையுடைய நெற்றியினையும், கொலைத்தொழிலையுடைய விற்போலும் புருவத்தினையும், அழகிய கடையினையுடைய குளிர்ந்த கண்ணினையும், இலவிதழ்ச்சொல்லும், இன்மொழித்துவர்வாயும். முத்தனைய வெண்பல்லும், கத்தரிகை எனும்படியானகாதும், வலம்புரிச்சங்கனைய கழுத்தும், அகன்றமார்பும், நீண்டகரமும்,* இன்னும் என்னால் வருணிக்கமுடியாத சகல எழிலும் பொருந்திக், கண்டபாவையர் கருத்தினையழிக்கும் வண்ணம் இங்கு துயில்கொள்ளும் இச்சுந்தராங்கன்யாவனோ? இவனை ஈன்றெடுத்த பாக்கியசாலிகளின்னாரெனத்தெரியவில்லையே! இவரையடைந்த உத்தமியின் பாக்கியமே பாக்கியம்! இவரைக்கண்டவுடன் என்மனம் காந்தங்கண்ட இரும்பென இழுக்கப்படுகிறதே! சற்று கண்விழித்து என்னுடன் ஒரு வார்த்தையாவது பேசமாட்டாரா! பேசினால் நான் எடுத்தபிறவி சாபல்யமாகிவிட்டது! ஹே! இளஞ்ஞரேறே! சுந்தரத்தேவனே! காதலர்க்கரசே! என்மீது இவ்வளவு வர்மம் தமக்கெதற்காக? அடியாள் செய்தபிழை ஒன்றுமில்லையே! சற்று கடைக்கணித்தருளுமே! அருளே உருவெனத்தோன்றும் தாம் கேவலம் பெண்பாலாகிய என்னை அம்மதன்கையில் விட்டுவிட்டால் அது தம்முடைய அருட்குணத்திற்கு இழுக்காகாதா! அவனைவென்று என்னை இரட்சித்தாலன்றோ தமக்கு வீரமாகும்! இன்னமும் எழுந்திருக்கலாகாதா? (மதிமயங்கி அம்மண்டபத்திலே ஓர்புறம் படுத்துறங்கிவிடுகிறாள்.)

கோவல:—(நித்திரையினின்றும் விழித்துப் பக்கத்தில் ஒருவருமில்லாததையும், அகாலமானதையும் கண்டு பிரமித்து மண்டபத்தைச் சுற்றிப்பார்க்கும்போது அங்கு ஓர் நங்கை நித்திரை செய்வது கண்டு நெருங்கி.) ஆஹா! என்ன ஆச்சரியம், இம்மாதுசிரோமணி யாரோ? தெய்வப்பெண்ணோ வரையரையன்மகளோ! நீரணங்கோ! அல்லது இப்புவியில் வாழும் மானிடப் பெண்ணோ! ஒன்றுந் தெரியவில்லையே! என்னரூபம்! என்ன காந்தி! இவளைத் தாமரைக்கு ஒப்பிடுவோமென்றால், தாமரை, மலராயிருக்கும்போது இவளுடைய முகத்திற்கு ஒப்பாகாது! முகையாயிருக்கும் போது இவள் தனத்திற்கொப்பாகாது! இவள் வதனம் சந்திரவிம்பமென்றால், சந்திரனுக்குக்களங்கமுண்டே! இவள்கண் கயலாமெனிற் கயல்மீன் கள்ளங் கொள்ளாதே! இவள் அளகம்புயலாமெனில் மேகம் மலர்சூடாதே! அகிலேந்துங் கூந்தலைத் தன் கையிலேந்திக்கொண்டு, மேகநிறம்போன்ற துகிலையுடுத்திப்படுத்துறங்கும் இவளைக்கண்டார் மனம் வசமழியாதிருக்குமா? இவளையடைந்தாற்றான் யான் எடுத்த ஜென்மம் பயன்பட்டதாகும்! மெதுவாக எழுப்பிப் பார்க்கலாம்! (கண்ணகியைத் தட்டியெழுப்புகிறான்.)

கண்ணகி:—(திடுக்கிட்டு எழுந்துநின்று) தாம்யார்?

கோவல:—பாவாய்! நீயார்? இங்குவரக்காரணமென்ன?

கண்:—நான் மாநாய்கன் மகள்! என் பெயர் கண்ணகி. நிலவுக்காலமாயிருப்பதால் நந்தவனத்தைப் பார்த்துப் போகலாமென வந்ததேயன்றி வேறில்லை! தாம் வந்த காரணம் யாதோ?

கோவல:—உன்னை நாடித்தான் நான் வந்தேன்!

கண்:—எதற்காக?

கோவ:—உன்னிடம் கொண்டிருக்கும் காதல் தான் காரணம்

கண்:—(புன்சிரிப்புடன்) ஐயா! என்ன வார்த்தை சொன்னீர்! அந்நியஸ்திரீகளை யிச்சித்தல் புருஷர்களுக்கு அழகாகுமா? இனி யொரு முறை அவ்விதம் கூறாதீர்கள்!

கோவ:—எனக்கு வேறுஸ்திரீ இருந்தாலன்றோ நீ அந்நியமாவாய்!

கண்:—எனக்குரியகணவன் இருக்கக்கூடாதாஎன்ன?

கோவ:—அப்படி உனக்கு விவாகமாகி ஏற்கனவே கணவனிருந்தால் என் மனம் உன்னைப்பற்ற மாட்டாதே! விவாகமாய் விட்டதோ?

கண்:—இன்னும் ஆகவில்லை (சிரிக்கிறாள்)

கோவல:—அப்படியாயின் நான் காதலிப்பதற்கு என்னதடை?

கண்:—என்னமகராஜ்! தாங்கள் சொல்வது மிக நன்றாயிருக்கிறதே! விவாகமாகாமல் ஓர் ஸ்திரீ இருந்தால் அவளை நீர் காதலிக்கவேண்டு மென்னும்

நியதியா என்ன? அவளுக்கு ஒருக்கால் உம்மிடம் மனமில்லாமலிருக்கலாம்!

கோவல:—உனக்கு என்னை மணம்புரிந்து கொள்ள இஷ்டமாஇல்லையா? அதைச்சொல்! வீண்வார்த்தையாட நேரமில்லை! மணி ஏழாகிறது!

கண்:—இஷ்டமில்லையென்றுசொன்னால்,—

கோவல:—இவ்வுலகவாழ்க்கை இன்றோடுசரி!

கண்:—இஷ்டமில்லை.

கோவல:—(உடைவாளையுருவித் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்து) ஹா! ஹா!

கண்ண:—(விரைவில் அவனைநெருங்கி) பிராணகாந்தா! என்னவேலைசெய்யத் துணிந்தீர்கள்! அடியாள்பொருட்டா தாங்கள் உயிர்துறக்கவேண்டும்! நாதா தங்களிடம் நான் கொண்டிருந்தகாதல் இத்தன்மையது எனச்சொல்ல முடியாது! நான் தாங்கள் நித்திரைசெய்யும்போது எவ்வளவு மன்றாடியும் என்னைக் கவனியாதுறங்கினீர்கள்! இனித் தங்களையன்றி எனக்குயார் துணை! ஒருவருமில்லை!

கோவல:—எனக்கு உன்னையன்றி வேறு யார் துணை (முத்தமிடுகிறான்.)

கண்ண:—(சிறிது நாணினவளாய்) நாதா! எனக்கு நாணமாயிருக்கின்றது! சற்று எட்டியிருங்களேன்!

கோவல:—(கண்ணகியை மார்போடணைத்து) கண்ணே! இங்கு யாரிருக்கிறார்கள்! ஒருவருமில்லையே! நாணப்படுவானேன்?

கண்ண:—பிராணகாந்தா! என்னுடைய தோழியர்கள் அதோ வருகிறார்கள்! இனி நாம் இவ்விதமிருப்பது நியாயமல்ல! இன்னொரு சமயம் இவ்விடம் வரலாம்! நான் ஓர்வரம்கேட்கிறேன். அதைமட்டும் தரவேண்டும்!

கோவல:—என்னவரம்?

கண்ண:—என்னை மணம்புரிந்து கொள்வதாக வாக்களிக்கவேண்டும்!

கோவல:—அப்படியே செய்தேன்!

கண்ண:—நாதா! தோழிமார் வருகிறார்கள்! நான் போய்வருகிறேன்! (கோவலனுக்கு முத்தம்கொடுத்துவிட்டு எதிர்கொண்டு தோழியரை அழைத்து கிருகத்துக்குச் செல்லுகிறாள். கோவலன் நீலமேகனையும், விநோதனையும் அவர்களிருந்த தோப்பில் போய் அழைத்து வீட்டுக்குபோகிறான்.)

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.

# PEPPER.

## மிளகு.

மிளகு ஒருவிதமான கொடியில் உண்டாகின்றது. இதன்கொடியும் இலையும் பார்வைக்கு வெற்றிலைக்கொடியும் இலையும்போலிருக்கும். இக்கொடி மரங்களில் படர்ந்துகதிர்கதிராகக் காய்க்கும். காய் பார்வைக்கு மணிமணியாக மணித்தக்காளிக்காய்போலப் பசுமையாயிருக்கும். ஒருகதிரில் இருபது இருபத்தைந்து காய்கள் பிடித்துச் சரட்டில்மணிகள் நெருங்கக்கோத்தது போல நெருக்கமாயிருக்கும். காய்முதிர்ந்து பழுத்தபின் பசுமை நீங்கிச் செவப்பாகமாறும். பழங்களைக் கொடியில்தானே உலரவிட்டால் செவப்புநீங்கிக் கறுப்பாகமாறும்.

காய்களைச் செடியில் பழுக்கவிடுவதில்லை. முக்கால்வாசி முற்றியபோதே பறித்துமூன்று, நான்குநாள் வெய்யிலில் உலர்த்திவைக்க மேற்றோல் சுருக்கங்கொண்டுப் பசுமை நீங்கிக் கருமைவாய்ந்து கடைகளில் விற்கப்படும் மிளகுபோலாகும். காய்களைப்பறித்து உடனே உலர்த்தாமல் சுத்த ஜலத்தில் தோல் நையும் வரையில் ஊறவைத்துப்பின்பு அத்தோலைக்கையால் பிசைந்து நீக்கி உலர்த்தினால் அது சுருக்கம் கொள்ளாமல் வெண்ணிறமாயிருக்கும். இதுதான் வெள்ளைமிளகு. இதற்குக்கறுப்புமிளகுபோல அவ்வளவு காரமில்லை.

மிளகு முக்கியமாய் நமது தேசத்தில் மலையாளஜில்லாவில் பயிர்செய்யப்படுகிறது. இது மலையாளிக்கு நெடுங் காலமாய் அதிக வரும்படிக்கு மூலமாயிருந்துவருவதலினாலே இதை மலையாளப்பணமென்று சொல்லுவார்கள். முற்காலத்தில் மிளகு வியாபாரம் மலையாளத்துக்கும் ஐரோப்பாவில் உள்ளவெனிஸ், ஜிநோவா, போர்த்துகல், ஹாலந்து முதலான அநேக தேசங்களுக்கும் ஏராளமாய் நடந்துவந்து, அத்தேசத்தார்களுடைய செல்வத்துக்கும் சிறப்புக்கும் காரணமாயிருந்தது. தற்காலத்திலும் இச்சரக்கு நமது தேசத்தில்



மிகுதியாக ஆளப்படுவதேயன்றி, இங்கிலாந்து, ஜர்மனி, இடாலி, ஐக்கிய மாகாணங்கள் (United states) ஒளஸ்த்ரியா, பெல்ஜியம், பிரான்சு, ஹாலந்து முதலான அநேக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது ஆசியாகண்டத்தில் மலேயாவைச்சார்ந்த தீவாந்தரங்களில் பயிர்செய்யப்பட்டாலும் அந்நாட்டு மிளகு மலையாள மிளகைப் போல் அவ்வளவு சிலாக்கியமாகக் கொள்ளப்படுகிறதில்லை. ஆகையினாலே இதைநமது தேசத்தில் மலையாளத்திலும் இன்னம் பயிர்செய்தற்கேற்ற பிறவிடங்களிலும் தக்கபடி பயிர்செய்து அபிவிர்த்திசெய்யக்கூடுமானால் நமது தேசத்தாருக்கு மிகுந்த லாபத்துக்கும் செல்வத்துக்கும் காரணமாகுமென்பதில் தடையில்லை.

இது பயிர்செய்வதற்கு செழிப்பும் நீர்க்கசிவுமுள்ள நல்லநிலம் வேண்டும். ஆயினும் அதிகமாக நீர்தங்கி நின்றாலும் இளங்கொடிகள் வேரழுகி அழிந்துபோகும். மழை விசேஷமாகப்பெய்யாத இடங்களில் ஜலத்தட்டில்லாமலிருக்கும்படி ஆற்றோரங்களில் பயிர் செய்யலாம். இவ்விடங்களில் புல்பூண்டுகள் மிகுதியாக வளர்ந்து மடிந்து நிலம் செழிப்படைந்திருக்குமாகையினாலே இப்பயிர் கறு கறுவென்று நன்றாக வளரநியாயமுண்டு. ஆனால் வெள்ளம்வந்து முழுகிப் போகாமல்மட்டும் இருக்கவேண்டும். அதிகவாட்டமான சாரல்களில் போட்டால்ஒருமழையில் கரைந்தோடிப் போமாதலின் பயிர் செய்வது உசிதமன்று. முக்கியமாய் ஜலத்தட்டில்லாமல் மழை நன்றாகப் பெய்யுமிடமாயிருக்கவேண்டும்.

கொடிகளை நட்டாவது விரைபோட்டாவது பயிர்செய்யலாம். கொடிப்பயிரைக்காட்டிலும் விரைப்பயிர் அதிகநாள் நீடித்துக்காய்க்கும். ஆனால் கொடிப்பயிரில், காய்கள் பருமனாகவும் காய்ப்பு அதிகமாகவும்இருக்கும். மொத்தத்தில் கொடிப்பயிரைவிட விரைப்பயிரே சிலாக்கியமாகக்கொள்ளப்படுகிறது. நிலத்தை நன்றாகக் கொத்திவெட்டிச் சீர்படுத்திக்கொண்டு மழைக்குச்சற்று முன்னோடு வைகாசி ஆனிமாசத்தில் மலையாளத்தில் கொடிகள் நடப்படும். கொடிகள் சொற சொறப்பான பட்டைகளுடைய மா, பலா முதலானமரங்களில் நன்றாக ஏறிப்படரும். தோட்டங்களில் அல்லாமல் தனியாகப்பயிர் செய்யும்போது கொடி ஏறிப்படருவதற்குத் தக்கப்படி முள்முருங்கைக் கொம்புகளை முன்னமே கொழுகொம்பாகவளர்த்து அவற்றின் அடியில் கொடிகளைநட்டுப் பயிர்செய்வார்கள். பூர்த்தியாக வளரும்படிவிட்டால் கொடிகள் இருபதுமுப்பது அடி உயரம் ஓங்கிப்படரும். ஆயினும்காய்கள் பறிப்பதற்கு அநுகூலமாகும்படி அவ்வளவுஉயரம் ஏறிப்படரவிடுவதில்லை. மழைக்காலத்தில் கொடிகளுக்கு வேறுஜலம் பாய்ச்ச வேண்டியதில்லை. மழை யில்லாதபோது கொடிநட்ட மூன்றுவருஷத்துக்கு இரண்டு நாளைக் கொருதரமாயினும் மூன்றுநாளைக் கொருதரமாயினும் ஜலம் சமர்த்தியாகக் கொட்டவேண்டும். களைகள்பிடுங்கிப்புழுப்பூச்சிகள் சாராமல் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றிவந்தால் மூன்று வருஷத்துக்கெல்லாம் காய்க்க ஆரம்பிக்கும். பதினைந்து இருப வருஷம் காலம் நின்றுகாய்க்கும். பின்பு காய்ப்பு ஓய்ந்து கொடிகள் அழிந்துபோகும். ஒருகொடியில் சராசரி இரண்டு அல்லது மூன்று பவுண்டுகாய் அகப்படும். காய்கள் பங்குனி சித்திரை மாசங்களில் பறிக்கப்படும்.

ஒரு ஏகரா நிலத்தில் 2500 கொடிகள் நடலாம். கோடைகாலத்தில் தண்ணீர் விடுவதைவிட வேறேவிசேஷமாக பாடுபடவேண்டியதில்லை. ஒருஏகராநிலத்தில் இப்பயிர்செய்யரூபா 60-க்கு மேல் வேண்டிவராது. கொடியொன்றுக்கு அதமபக்ஷம் இரண்டுபவுண்டு காய்வீதம் வைத்துக்கொண்டாலும்கூட, அந்நிலத்தில் காய்க்கும் காய்கள் ரூபா 1200 வரையில் விலையாகும். ஆகையினாலே இப்பயிர் மிகவும் லாபகரமான தென்பது தானே விளங்கும்.

எஸ்-முத்து ஐயர்.

# HEALTH OF BODY—AIR

## தேக சௌக்கியம்

### காற்று.

சென்றமுறை நிலத்தைப் பற்றி விவரித்தோம். இப்பொழுது தேக சௌக்கியத்திற்காகக் கவனிக்கவேண்டிய பதினொரு விஷயங்களில் இரண்டாவதாகிய காற்றைப் பற்றிக் கூறுவோம்.

நாம் இப் பூலோகத்தின்கண் உயிரோடு சுகமாய் வாழ்ந்திருப்பதற்கு இன்றியமையாத பொருள்கள் மூன்றுள. அவை உணவு, தண்ணீர்,காற்று முதலியன. ஆனால் இம்மூன்றும் பரிசுத்தமாக விருந்தால் அன்றி நமது சுகவாழ்வுக்குப் பொருந்தாது. நோய் அற்று சுகமுடன் வாழவிரும்பின் இம் மூன்று பொருள்களையும் பரிசுத்தமாய் இருக்குமாறு நாம் நன்கு கவனித்து வரல் வேண்டும். அசுத்தமான தண்ணீரைப் பருகினாலும், விஷப்பொருள் கலப்புண்ட உணவை உண்டாலும் விஷக்காற்றை சுவாசித்தாலும் நாம் அசௌக்கியம் அடைவது நிச்சயம். உணவு, நீர் முதலிய இரண்டுமின்றி நாம் இரண்டொரு நாள் ஜீவித்திருக்கலாம். ஆனால் காற்றின்றி சிலநிமிஷங்கள் கூட உயிருடனிருப்பது கூடாதவிஷயம். ஆகையினால் அதனைப்பற்றி ஆராய்வோம்.

நம்மையும் பூமியையும் சூழ்ந்து கொண்டு நமதுகண்களுக்குப்புலப்படமல்இருக்கிறதே காற்று எனப்பெயர் பெறும். அன்றியும் ஆகாயத்தின் சலனமே காற்று; ஸ்பரிசவுணர்ச்சியால் காற்றை அறிந்துகொள்ளுகிறோம். காற்றுக்கு வாசனையும் ருசியும் கிடையா; ஆனால் பளுவுண்டு. சமுத்திரமட்டத்திற்குஒவ்வொரு சதுர அங்குலபிரமாணத்தில் இருபத்தைந்து சேர் பளுவுள்ள காற்றிருக்கிறதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. சுமார்ஆயிரத்துமுன்னூற்றேழு மணங்குள்ள பாரத்தை நமது தேகம் சுமந்துகொண்டிருக்கின்றது. காற்றுபூமியினின்றும் சுமார் நாற்பத்தைந்து மயில் பரவியிருக்கிறதென்றும், சிலர் நூறுமயில் வரையில் பரவியிருக்கிறதென்றும் கூறுகின்றனர் காற்றானது மேலே செல்லச்செல்ல கனத்தில் குறைந்து இலேசாகி இருக்கின்றது.

காற்றில் முக்கியமாய் பிராணவாயு, உப்புவாயு, கரியமலவாயு,ஜலவாயு, கந்தகஜலவாயு, நமச்சாரவாயு முதலியவைகள் சேர்ந்திருக்கின்றன. இவைகளுள் அதில் அதிகமாகவிருப்பதுபிராணவாயு (Oxygen,) உப்புவாயு(Nitrogen) முதலிய இரண்டுமே நாம் ஜீவித்திருப்பதற்குக் காரணமாய் இருப்பது பிராணவாயு, உப்புவாயு ஜலவாயு முதலிய் மூன்றுமே. மற்றைய வாயுக்களெல்லாம் விஷவாயுக்களே.

நாம் கொஞ்சநேரம் மூச்சுவிடாமல் இருப்போமாயின் இறக்கவேண்டுவதுதான். சுவாசம் விடும்போதெல்லாம் இரண்டுகாரியத்தைச் செய்கிறோம். அவையாவன நாம் நூதனமாகச் சிலவற்றை உட்கொள்ளவும், சிலவற்றை வெளியே்தள்ளவும் செய்கிறோம். நாம் உட்கொள்ளுகிறதற்கு உச்சுவாஸம் என்றும் வெளியே விடுகிறதற்கு நிச்சுவாசம் என்றும் பெயர்.

வெளியிலிருக்கும் சுத்தமான காற்றைநாம் உட்கொண்டு அதிககாலம் நமது தேகத்தில் உபயோகப்பட்டு விஷத்தன்மை உற்ற உதிரங்களின் பாகங்களைக் கெட்டகாற்றாகவும் பசைகளாகவும் மூக்கின்வழியாகவும் வாயின் வழியாகவும்வெளியேகொண்டுதள்ளுகிறோம். நாம் உண்ணும் உணவானது முதலில் அன்னப்பாலாகி இருதயத்திற் கலந்தவுடன், அதைச்சுத்தமான நல்ல உதிரமாகமாற்ற அதனுடன் ஒருவஸ்து சேரவேண்டியிருக்கிறது. அந்தவஸ்துவே வாயுமண்டலத்தின் ஓர் பகுதியே. நாம் உள்ளே மூச்சை இழுக்கின்ற காற்றிலிருக்கிற பிராணவாயுவே அந்த வஸ்து. நமது தேகத்திலுள்ள இரத்தமெல்லாம் சுத்தப்படுவதற்சாக நன்றாய் காற்றடிக்கொண்டிருக்கவேண்டும். தேகத்தின் அமைப்பு, இரத்தம் நமதுதேகத்தில் பரவுதல் முதலியவை



களை உணவு என்ற தலைப்பின்கீழ் பின்னால் வரைவோம். நாம் உட்கொள்ளும் வாயுவானது, இரத்தத்திலுள்ள அழுக்குக்களைக் கரியமிலவாயுவாகமாற்றி நாம் விடுகிற சுவாஸத்தின் வழியாக வெளியே கொண்டு தள்ளுகிறது. நாம் அடிக்கடி வாயுவை உட்கொள்ளாவிட்டால்தேகத்தில் உள்ள இரத்தமெல்லாம் ஓர்வித விஷப்பொருளாக மாறி சீக்கிரத்தில் நம்மைக்கொன்று விடும். ஆகையால் நாம் அடிக்கடி நல்லகாற்றை உட்கொள்ளவேண்டியிருககிறது. தண்ணீர்குள் மூழ்கினவன் சாகிறதற்கு இதுவே காரணம். தண்ணீர்க்குள் காற்றுசென்று அவன் சுவாசிப்பதற்குக்கூடாமையால் வாயுஇரத்தத்தண்டைபோய் சேருவதற்கு இல்லை. அவ்வாறு சுத்தப்படாத இரத்தம் தேகமெங்கும் பரவி மூளையையும் மனதையும் வேலைசெய்யவொண்ணாமல் அடக்கி அரை நிமிஷத்தில் கொன்றுவிடுகிறது. இஃதன்றி இன்னும் மற்றைய காரணங்களால் மூச்சடைப்படும்போதுசாவதும்இவ்வாறே. விளக்கு எரிவதற்கு காற்று இன்றியமையாதபொருள். நெருப்பை உண்டாக்குவதற்குங்காற்று முக்கியமான பொருள்.

சற்றேறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்குமுன்னர் ஒருகொடுங்கோலரசன் இரண்டு சாளரமுள்ள ஒருசிறிய அரையில் நூற்றுநாற்பத்தாறு மனிதர்களைச் சிறைசெய்ய மறுநாள் காலையில் இருபத்துமூன்றுபேர்கள் மாத்திரம் உயிருடனிருந்தார்கள்.மற்றவர்கள் இறந்தார்கள். சில மாதங்களுக்குப் பின் தூத்துக்குடியில் இரண்டு சிறு பையன்கள் ஒருபெரிய பெட்டிக்குள் விளையாட தற்செயலாய் அதன் மூடிசாத்துண்டு பிறகுதிறக்கப்படாமல்போககொஞ்நேரத்திற்கெல்லாம் இவ்விருவரும் மாண்டார்கள். இதற்குக் காரணம் அப்பெட்டியில் நல்ல காற்றுள்ளவரையில் அவர்கள் உயிருடனிருந்து பிறகு அவர்கள் சுவாசம்விடப்பட்ட காற்றால் அந்தக் காற்று அசுத்தப்படுத்தப்பட்டு உட் கொள்கிறதற்கு நல்லகாற்று இன்மையால்உயிர் துறக்க நேரிட்டது.

இப்பொழுது வாயுமண்டலம் எவ்வாறு விஷத்தன்மை அடைகிறதென்பதை ஆலோசிப்போம். வாயுவிஷத்தன்மை அடைவதற்கு மூன்றுவழிகளுண்டு. அவையாவன்:—மூச்சுவிடுதல், நெருப்பெரிதல்,பண்டங்கள் அழுகுதல். நாம் மூச்சுவிடுவதினால் வாயுவிஷத்தன்மை அடைவதுபோலவே, இதர பிராணிகள் மூச்சுவிடுவதினாலும் ஆகாயம் கெட்டுப்போகின்றன. ஆகையால் நாம்படுத்து உறங்கும் வீடுகளில் ஆடுமாடுகளைக்கட்டிவைத்துக்கொள்ளக்கூடாது. வீட்டுக்குப் பக்கங்களிலும் அவைகளை கட்டிவைக்கலகாது.

ஓர் அறையில் விளக்கு எரிவதினாலாவது அல்லது நெருப்பு எரிவதினாலாவது ஆகாயம் விஷத்தன்மையடைகிறது. சிலர்மாரிகாலத்தில் படுக்கும் அறைகளில தீயைமூட்டி கணப்பு போட்டுவிட்டு கதவுகளை அடைத்து உறங்குகின்றனர். இதுவும் கூடாதகாரியம். சிலர்விடிவிளக்குவைத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வழக்கத்தை யனுசரிப்பவர்கள் உட்காற்று வெளியேபோகும்படியும் வெளிக் காற்று நன்றாய் உள்ளே வரும்படியும் சாளரங்களை நன்றாய் திறந்துவைக்கல்வேண்டும். பின்னர்கடைசியாகக்கூறியதாகிய அழுகியபொருள்களும் பிணங்களும் கிடக்கும் இடங்களில் காற்று உலாவி வருவதினாலுமே பிராணிகள் இறந்துபோனாலுஞ்சரி அல்லது மரம் புல்பூண்டு முதலியவைகள் தண்ணீரில் சம்பந்தப்படுவதினாலுஞ்சரி அவைகள் அழுக ஆரம்பிக்கின்றன. இது அவ்வளவும் விஷமே. மாட்டுச்சாணி ஆட்டுப்புழுக்கை முதலியவைகளை வீட்டுக்குச் சற்று தூரத்திலே போடும்படி செய்தல்வேண்டும். இல்லாவிடில் இத்துர்க்கந்தத்தினால் ஆகாயம் கெட்டுப்போகிறது.இக்காரணைப்பற்றியேதான் மலஜலம் முதலிய தேகபாதையைக் கழிக்க வீட்டுக்குச் சற்றுதூரமாகச்செல்லவேண்டும் இவ்வாறு வாயுவிஷத்தன்மையானல்நாளடை

வில் மனிதர்பிராணிகள் எல்லாம் இறக்கும்படிநேரிடுமே. அதுஏன் அவ்வாறுஆகவில்லை. என்னும்வினநீகழக்கூடும்? அதைப்பற்றி இப்பொழுது ஆலோசிப்போம் மனிதர்களாகிய நமக்குக்காற்று எவ்வாறு அத்தியாவசியமோ அவ்வாறே செடிகொடி புல்பூண்டு விருக்ஷம் முதலியவைகளுக்கும் காற்று இன்றியமையாதது. மனிதர்கள் காற்றை உட்கொள்கிறது போலமேற்கூறியவைகளும் உட்கொள்ளுகின்றன. நாம்விடும் விஷக்காற்றையே அவைகள உட்கொள்வதினால்ஆகாயம் அப்போதைக்கப்போது சுத்தமாக்கப்படுகின்றது. அவைகள் பகற்காலத்தில்காற்றைஉட்கொள்ளுகின்றன. இக்காரணம் பற்றியே வீட்டுக்குப்பக்கத்தில் தோட்டங்களும் பூஞ்செடிகளும் வைப்பது. காற்று நன்றாய் வீசிபலமாக அடிக்குமானால் அதனால் ஆகாயமும் சுத்தப்படுகிறது. மழை பெய்வதினாலும் ஆகாயமண்டலம் சுத்தமாக்கப்படுகிறது. விஷவாயுக்கள் இருக்கும் இடத்தில் புதியஅடுப்புகரிகளை சிறுதுண்டுகளாக்கிப்போட்டுவைக்கவேண்டும். காய்ந்தகளிமண்தூளை அக்கூசுகளிலுள்ள அசுத்தங்களின்பேரில்போடல்வேண்டும். அசுத்தமான இடங்களில் ஒரு பாத்திரத்தில் நெருப்பை வளர்த்து அதில் கொஞ்சம் உப்பைபோட்டு புகைக்கவேண்டும், கந்தத்தை அக்னியில் போட்டு புகைக்கவேண்டும். இவைகள் எல்லாம் ஆகாயம் பரிசுத்த மாகிறதற்கு வழிகளாம்.

பு. து. இரத்தினம் பிள்ளை

## Free from Bonds.

(THE AUTOBIOGRAPHY OF ATALUQ GUMASTAH)

## * அவிழ்த்துவிட்ட கழுதை.

[ஒருதாலுகா குமஸ்தாவின் சரித்திரம்]

பாதி நாளைக்குக் கச்சேரிக்கு நான் நேரங்கழித்துப் போகநேரிடும். கச்சேரி நேரத்துக்குக்கால்மணி முந்திதான் சாப்பிட இலைபோடுவாள். சமையல் பாதிவெந்ததும் வேகாததுமாய் இருக்கும். எனக்கு அவசரமாய் சாப்பிடத்தெரியாது. சாப்பிட்டதும் வேகமாய் நடந்தால் வயிறு வலிக்கும். "உங்களுக்குக் கொஞ்சமேனும் சுறுசுறுப்புக் கிடையாது. எங்கள் அப்பா ஐந்துநிமிஷத்தில் சாப்பிட்டுவிடுவார்" என்பாள். "நான்தான் மெதுவாய் சாப்பிடுகிறவன் என்று தெரியுமே! நீயாவது சீக்கிரம் சமைத்து வைத்து இலைபோடக்கூடாதா?" என்று கேட்டால், "இந்த வீட்டுக்காரியத்தை நீங்கள் ஒரு நாளைக்குச் செய்துபார்த்தால் அப்பொழுது தெரியும், வீடுகூட்ட ஒருவேலைக்காரிகூடக் கிடையாது. நான் தனியாய்த் திண்டாடுகிறேன். பிறர்வருத்தமறியாத மனிதர்களோடுபேசி என்னலாபம்?" என்பாள். எனக்கு இலை சுத்தமாகசாப்பிடத் தெரியாது. இதென்ன நாய்தின்ற இலைமாதிரியிருக்கிறதே?" என்பாள். "மகாவிஷ்ணுபன்றியவதாரம் எடுத்தார். உன் புருஷன் நாய்க்கோலம் கொண்டார்" என்பேன். என்வேஷ்டி விசேஷமாய்க் கணுக்காலுக்கு மேலேயே நின்றுவிடும். "இதென்ன காட்டுப்புறத்தான் மாதிரிவேஷ்டி காட்டுகிறீர்கள்," என்று என் வேஷ்டியைத் தழைத்துக்கால் மறையும்படி இழுத்துவிடுவாள். நான் அப்படியே தெருவில் வேகமாய் நடக்கும்போது வேஷ்டியின் ஓரத்திலெல்லாம் செம்மண் படிந்துவிடும். வேஷ்டியின் நுனி தரையிற் புரண்டுவரும் இரண்டுநாளில் வேஷ்டி அழுக்காகிவிடும். இதை அவள்பார்த்து நீங்கள்"என்னபச்சைக்குழந்தையா? நல்லவேஷ்டியை இரண்டுநாளில் குட்டிச்சுவராக்கி விட்டீர்களே" என்பாள். இதற்காக நான் உயர்ந்த வேஷ்டிகளைக் கட்டாமல் சற்று மட்டமான வேஷ்டிகளைக் கட்டினால் "இதென்ன பாட்டி பழம்புடவை! யாராவது சிரிக்கப்போகிறார்கள்" என்பாள். நல்லவேஷ்டியெல்லாம் உடுத்துக் கிழித்தாகிவிட்டது" என்றால், "உங்கள் கலியாணத்துக்கு வாங்கின வேஷ்டிகளெல்லாம் எங்கே?" என்பாள். கலியாணமாகிப் பத்துவருஷமாகிறதே இன்னும் அவைகளிருக்குமா?" என்றால் "எங்கள் அப்பா அவர் கலியாணத்துக்கு வந்தவேஷ்டியெல்லாம் இன்னும் வைத்திருக்கிறார்! உங்களுக்குஒன்றும் உருப்பட்டுநிற்காது"என்பாள். "உங்களப்பா வேஷ்டிகளையெல்லாம் பெட்டிக்குள்வைத்து பூட்டிவிட்டு தீபாவளிக்குத் தீபாவளி எடுத்து தூபதீபம்காட்டி ஷோடசோபசாரங்கள் செய்கிறார். அந்தமாதிரி என்னால் முடியாது" என்பேன். கலியாணவேஷ்டிகளை நான் பார்க்காத நாட்களில் உடுத்துக் கிழித்துவிட்டீர்கள். நான் உங்கள் வீட்டுக்கு வந்தபிறகு நீங்கள் நல்லவேஷ்டிகட்டி நான் பார்த்ததில்லை வேஷ்டி நன்றாயிருந்தாலல்லவோ நாலுபேருக்கு கண்ணியமாயிருக்கும். இப்பொழுதாவது நாலு ஜரிகைவேஷ்டி வாங்கிக்கொள்ளுங்கள்" என்பாள். "இதற்கெல்லாம் நான் பணத்துக்கு எங்கே போகிறது" என்றால், "கதைப்புஸ்தகம் வாங்கப்பணம் அகப்படும், வேஷ்டிவாங்கிக்கொள்ள அகப்படாது. என் தகப்பனாரைப்பணம் அனுப்பச்சொல்லவா? வேஷ்டி வாங்கி அனுப்பச் சொல்லவா?" என்பாள். "எனக்கு இப்பொழுது இருக்கிற கண்ணியமும் வேஷ்டியும்போதும். என் உத்தியோகத்திற்கு இன்னும் அதிக கௌரவம் வேண்டுமானால் நான் இன்னாருடைய மாப்பிள்ளை இன்னாருடைய புருஷன் என்றால் தானே எல்லா கௌரவமும் என்னைத்தேடி வாராதா?" என்பேன். நான் வெளியில் போகும்போது என்னவெயிலாயிருந்தாலும் புழுக்கமாயிருந்தாலும் சரி, ஒரு சட்டையும் ஜரிகை அங்கவஸ்திரமுமில்லாமல் வெளியே புறப்படக்கூடாது என்று கட்டாயப்படுத்துவாள். ஜட்காவண்டிக்காரனெல்லாம் சரிகை அங்கவஸ்திரம் போடுகிறான். அது எனக்குவேண்டாமென்று அந்த ஆக்ஞையை மீறிநடந்தால், அன்றுவீட்டுக்கு நான்திரும்பிவந்ததும் பெரியகலகமாகிவிடும். இதற்குப்பயந்து நான் என்தாயார், தம்பி இன்னும் யாரோடாவது பேசிக்கொண்டே சாப்பிட உட்காருவேன். எனக்குச் சாதம் போடும்போதெல்லாம் என்னைச்சுட்டுவிடுவது போல் பார்ப்பாள்.

நான் கச்சேரி சேவகர்களோடு அதிகாரத்துடன் பேசமாட்டேன். அவர்களில் யாரையாவது கடைக்குப்போகச் சொல்லுகிறதாயிருந்தால் "நீ சற்றுக்கடைக்குப்போய் வர முடியுமா?" என்பேன். இதை என்மனைவி கேட்டுக்கொண்டிருந்தால் "அந்த சேவகனுக்கு ஒருகும்பிடு போட்டாலல்லவோ கடைக்குப் போவான். தைரியமாய்ப் பேசத்தெரியவில்லை. எங்கள் அப்பாவினிடத்தில் சேவகர்களெல்லாம் ஸிம்ஹஸ்வப்னமாய் நடுங்குவார்கள். பெண்பிள்ளையாய்ப் பிறந்திருக்க வேண்டும் தவறிப்போய் ஆணாய்ப்பிறந்து அவஸ்தைப்படுகிறது." என்பாள். "நீ ஆணாய்ப்பிறக்க வேண்டியவள் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாயல்லவோ இரண்டுக்கும் சரியாய்ப்போய்விட்டது" என்பேன். இந்தஅழகுக்கு என் தாயார் எதிரில்தான் என்னுடன் பேசுவதாகத் தெரியக்கூடாது என்பது அவள்கோட்பாடு. அதற்காக, நான் எவ்வளவு முக்கியமான அல்லது அவசரமான சங்கதிகளைப்பற்றிக் கேட்டபோதிலும் என் தாயார் எதிரில் அவள் பதில் சொல்லமாட்டாள். கச்சேரிக்கு அவசரமாய்ப் போகவேண்டியபொழுது "பெட்டிக்குள்ளிருந்து சட்டை எடுத்துக்கொள்ளவேண்டும் சாவி எங்கே?" என்றால், கால்மணிஒன்றும் பேசாமலிருப்பாள். பக்கத்திலிருக்கும் என்தாயார் "என்னடீ, சாவிஎங்கே என்று கேட்கிறானே பதில்சொல்லேன்என்றுகோபித்துக்கொண்ட பிறகுதான் "ஆணியில்மாட்டியிருக்கிறது" என்று உரத்தகுரலில் ரகஸியமாய் என் தாயாரிடத்தில் சொல்லுவாள். "எங்கேயோஆணியில் மாட்டியிருக்கிறதாமேயடா" என்பாள் என் தாயார். "எல்லாம் காதவழிக்குக் காதுகேட்கிறது" என்று சொல்லிவிட்டுக் கச்சேரிக்குப் போவேன். நான் கச்சேரியில் தாசில்தாருக்காக சட்டை போட்டுக்கொண்டாலும் இல்

* தன்னையறிந்துதன்வழியில் பிரவேசிக்கும்மனோ தர்மசக்தி தடையறியாது.

லாவிட்டாலும் என் மனைவிக்காக நான் வீட்டில்போட்டு அவளுக்குகாட்டி அவள் "சரி" என்று சொன்னபிறகு தான் கச்சேரிக்குப் போகவேண்டும். வீட்டைவிட்டு அவள்கண் காணாமல் போனபிறகு நான் என்சட்டைகளைக்கழற்றி மூட்டையாய்க் கட்டிக் கையில் தூக்கிக்கொண்டு போவேன். என்தாயாரைப் புதுவேஷ்டி வாங்கமாட்டேனென்று அழஅடித்த எனக்கு இம்மாதிரி மனைவி வாய்த்தபிறகு வேலைக்குக் கூலிகொடுக்கும் தெய்வம் உண்டென்று நம்பத் தடையுமுண்டோ? "நாம் ஒத்துமையாயிருப்பதாக மாமியாருக்குத் தெரியக்கூடாது" என்பாள். "ஒத்துமையாயிருந்தாலல்லவோ தெரியப்போகிறது. என்பேன். வண்ணானுக்குப்போட்ட வேஷ்டிகளை நனைக்காமல் வண்ணான்கஞ்சியோடு எனக்கு உடுக்கமனம்வராது. அப்படி நனைத்தால் வண்ணான் மடிப்புக்கசங்கிப்போகிறதென்று கோபிப்பாள். அதற்காகநான் வேஷ்டிகளை அவளுக்குத் தெரியாமல் ஆற்றில்நனைத்து அங்கேயே உலர்த்தி வண்ணான் மடித்ததுபோலவே மடித்து வீட்டுக்குக்கொண்டுவருவேன்.

என்மனைவி ஆற்றங்கரைக்குப்போனால் கையில்குடம் கொண்டுபோகாமல் கூஜாவைத்தான் கொண்டுபோவாள். என்தாயார் குடம் கொண்டுபோவாள். மணிக்கட்டு, கணுக்கால் மறைய புடவையைத்தழைத்து விட்டுக்கொண்டு தலைகுனிந்தபடியே நடப்பாள். நான் ஆற்றங்கரைக்குப் போனால் கையில் தாமிரச்செம்பும் ஊற்றுப்போடும் பித்தளைத்தட்டும் கொண்டுபோவேன். நான் அவள் குளிக்கும் துறைக்குப் போகக்கூடாது. அவளோடு சாலையில் அவள் பார்வையில்வரக்கூடாது. அவள் வீட்டுக்குள் வரும்போது நான் வாசலில் நிற்கக்கூடரது. நான் தெருத்திண்ணையில் யாரோடாவது பேசுகையில் அவள்ரேழியில்வந்தால் நானும் பேசுகிறவர்களும காலைத்தொங்கவிடாமல் மடக்கிக்கொள்ளவேண்டும்.

இவைகளெல்லாம் எனக்களிக்கப்பட்ட ரகஸியமான தாக்கீதுகள். இந்த உத்திரவுகளைமீறி நான் என்றைக்காவது அவள்குளிக்கும்துறைக்குப்போய்விட்டாலும் அல்லது அவள் பார்வையில் சாலையில் நடந்தாலும், அன்றைக்கு வீட்டுக்குள்வந்து "நீங்கள் கோவணத்தைக் கட்டிக்கொண்டு இரண்டுகால்களையும் பரப்பிக்கொண்டு ஊற்றுஇறைக்கிற அழகை எல்லோரும் பார்த்து ஆநந்திக்கவேண்டுமென்று ஆசையாயிருந்ததோ? காலை 6 மணிக்குப் போனவர் எப்படியாவது 9-மணிக்குவந்து சேர்ந்தீர்களே, ஆற்றோடு மிதந்துபோகாமல்; அதுதான் பெரியகாரியம். வழியில் நீங்கள் தலையைப் பிரித்துக்கொண்டு பாழ்நெற்றியுடன் செம்பைத்தூக்கிக்கொண்டு தத்துக்கிளிபோல் நடந்து வந்ததைப்பார்த்துக் கைகொட்டிச் சிரிக்காதவர்கள் பாவம்! நாளைமுதல் நீங்கள் வீட்டுக்குள்ளேயே முழுகித்தலையுங்கள் கிணற்றிலிருந்து நான் தண்ணீர் இழுத்துக்கொட்டுகிறேன்" என்பாள். மறுநாள் சாப்பிட இலைபோடுகிற சமயம் வரையில் காத்திருந்து பிறகு நான் "குளிக்கப் போகிறேன் குடம்வேண்டு" மென்பேன். "இதோ நான் ஜலம்கொண்டுவந்து விடுகிறேன் சற்றுப்பொறுங்கள்" என்பாள். அப்படியே ஒரே ஒரு குடம் ஜலத்தைக்கொண்டுவந்து குடம் நசுங்கும்படி 'தொப்'பென்று கீழேவைத்துவிட்டு "போதுமா? இரண்டு செம்புகிணற்றில் இழுத்துவிட்டுக் கொள்ளமாட்டவில்லை" என்று முணுமுணுப்பாள். அதற்கு மறுநாள் நானே அவளைக்கேளாமல் குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றில் முழுகிவந்தால் "வரும்பொழுது ஒருகுடம் தண்ணீர் கொண்டுவந்தால் தேய்ந்துபோய்விடுவீர்களா? வெறுங்குடத்தைக்கொண்டுவந்து வைக்கிறீர்களே!" என்பாள். இதுபோலவே "நீங்கள் ஆற்றில் வேஷ்டிதுவைத்த அழகுபோதும். இனிமேல் நான் கிணற்றடியிலேயே துவைத்து விடுகிறேன்.' என்பாள். மறுநாள் ஸ்நானம் செய்துவிட்டு



"வேஷ்டி எங்கே?" என்றால் "இன்றுகாலையில் தான் எனக்குத்துவைக்க ஒழிந்தது, சற்று ஈரமாயிருக்கும்போலிருக்கிறது. பாதகமில்லையானால் கட்டிக்கொள்ளுங்கள்" என்பாள். அதற்கு மறுநாள் "இன்றைக்குத்துவைக்க ஒழியவில்லை நேற்றையவேஷ்டி வெளுப்பாகத்தானிருக்கிறது: அதையே இன்றைக்கும் கட்டிக்கொண்டுபோங்கள். நாளைக்கு நான் கட்டாயம் துவைத்துவிடுகிறேன்" என்பாள். "நேற்று சாயந்திரம் துவைக்கக்கூடாதா?" என்றால், "நேற்று யோகாம்பாள் பெண்ணுக்கு நலங்கு, நீதான் அவசியம் பாட வரவேண்டுமென்று நூறுதடவை கூப்பிட்டாள். அங்கே போன பிறகு ராத்திரி 7-மணிக்குத்தான் நலங்குஓய்ந்து வெற்றிலைசீவல் கொடுத்தாள். என்னசெய்கிறது? நீங்கள் காலையில் குளிக்கும்பொழுது கையோடுகாவலாய் வேஷ்டியைக் கசக்கிக் கொள்ள எவ்வளவு நேரம் செல்லும்?" என்பாள்.

என்மனைவி ரயிலில் எப்பொழுதாவது என்னுடன்கூட வரவேண்டியிருந்தால் இதரஜனங்கள் யாராவது வண்டியிலிருந்தால் உட்காரமாட்டாள். வண்டியிலிருப்பவர்களெல்லாரும் "பாதகமில்லை சும்மா உட்காருங்களம்மா" என்று தலைக்குத்தலை நூறுதடவை சொன்னபிறகு என்னைப்பாராதபடி அப்புறம் திரும்பிக்கொண்டு பிரயாணமுழுவதும் அப்படியே உட்கார்ந்துவருவாள். நான் அவள்முகத்தை பார்க்கக் கூடாதென்பது கண்டிப்பான அவளுடைய ரகஸிய உத்திரவுகளிலொன்று. அப்படிப் பார்த்துவிட்டாலோ முகத்தில் எள்ளும் கொள்ளும்கலந்து வறுக்கலாமெனவிருக்கும். கூஜாவில்லாமல் ரயிலில் வரமாட்டாள். இறங்கும்பொழுது தான் கூஜாவைமட்டும் கையிலெடுத்துக்கொள்ளுவாள். நான் ஒன்றுமெடுத்துக்கொள்ளாமல் அங்கவஸ்திரத்தையோக வேஷ்டியாக போட்டுக்கொண்டு முன்னால் நாடகத்து ராஜாபோல் நடக்கவேண்டும். சாமான்கள் எவ்வளவு கொஞ்சமாயிருந்தாலும் அவைகளை நானும் எடுக்கக்கூடாது. தானும் எடுக்கமாட்டாள். "ரயில்வே போர்ட்டர்" என்னும் கூலியாள்தான் எடுக்கவேண்டும். அவனுடன் முன்னதாகக் கூலிபேசிக்கொண்டு தகரார் செய்யக்கூடாது. பின்னிட்டு காலணா கொடுக்கவேண்டிய வேலைக்கு இரண்டணா கேட்டாலும் பேசாமல் கொடுத்துவிடவேண்டும்.

இந்தவீண்செலவுகளைமிகுப்பதற்காகநான் தனிமையில் பிரயாணம் செய்யும்பொழுதெல்லாம் எவ்வளவு மூட்டையிருந்தாலும் நானே தூக்கிக்கொண்டு விடுவேன். யாராவது கூலியாள் என்னை அடையாளங் கண்டுபிடித்து "சாமி, நான்எடுக்கிறேன். நீங்கள் ஏன் எடுக்கிறீர்கள் என்றால் "உன்னை எனக்குத் தெரியாதுபோ" என்று முன்பின் தெரியாதவன் போல் பேசுவேன். "அன்றைக்கு நான் உங்கள் சாமான்களை எடுத்துவந்தேனே" என்றானால் "அவைகள் என்சாமான்களல்ல, அம்மாளுடைய சாமான்கள்: அந்தஅம்மாள் இன்றைக்கு வரவில்லை." என்பேன்.

நான் என்மனைவியைக் கேளாமல் என் உறவினர் சிநேகிதர் யாரையும் சாப்பிடச்சொல்லக்கூடாது. தன்னுடைய உறவினர் யாராவது வந்துவிட்டால் அவளுக்குத் தலைகால் தெரியாத உத்ஸாக முண்டாகிவிடும். அவர்களுக்கு ராஜோபசாரங்கள் செய்து விருந்தளிப்பாள், நான்எங்கேயாவது ஒருமூலையில்உட்கார்ந்திருக்கவேண்டும். எனக்குமட்டும்வேண்டியவர்களாக யாராவது வந்துவிட்டால் அன்றைக்குத்தான் என்மேல் அவள் அதிகாரம் முழுவதும் செலுத்துவாள். ஆறுமாதத்திய சாமான்களுக்கு உடனே ஜாப்தாகொடுத்து வாங்கிவரச்சொல்லுவாள். "இத்தனை சாமான்கள் எதற்கு? தினம் சமைக்கிறபடி சமை" என்றால், "நம்முடைய தரித்திரம் நம்மட்டோடிருக்கட்டும். ஊர் முழுவதும் தம்பட்டமறையவேண்டாம். வாங்கிப்போடக் கையாலாகா

வர்கள் மனுஷியாளை அழைத்துவரக்கூடாது" என்று ஒரு கர்ச்சனைசெய்வாள். நான் அப்படியே கடைக்குப்போய் சாமான் வாங்கிவந்தால் "அந்தசாமான் நன்றாயில்லை, இந்த சாமான் நன்றாயில்லை. தனக்காக கடைக்குப்போய் சாமான்வாங்கத் தெரியவில்லை, வாங்கிவரச்சொல்ல சேவகனும் கிடையாது. இதென்னவாழ்வு? வெட்கங்கெட்ட பிழைப்பு! இவைகளைத் திருப்பிக்கொடுத்துவிடுங்கள். வாங்கும்பொழுதே ஒரு கடைக்கு நாலுகடையாய்ப் பார்த்து வாங்கச்சொன்னேனே? என்று முணுமுணுத்துவிட்டு என்னை இரண்டுமூன்றுதரம் கடைக்கு அலையவைப்பாள். "எனக்கு இரண்டுகுடம் ஜலம்வேண்டும். யாருக்குந்தெரியாமல் கொண்டுவந்து கொடுங்கள்" என்பாள். இவ்வளவும் செய்தபிறகு தனக்குத்தெரிந்த முதல்தரமான சமையல் செய்துபோடுவாள். யாருமில்லாதசமயத்தில் நான் ஏதாவது ருசியானபதார்த்தம் செய்யச்சொன்னால் "இன்றைக்கு நேரமாகிவிட்டது. இன்றைக்கு எனக்குத்தலைவலிக்கிறது" என்றுசொல்லுவாள். சிலநாட்களில் இன்றைக்குக் கைகால் ஓய்ச்சலாயிருக்கிறது. மத்தியானத்துசாதத்தை தீர்த்தம்விட்டுவைத்திருக்கிறேன். எடுத்துப்போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிடுங்கள்" என்று படுத்துவிடுவாள். இதற்காக எனக்கு நல்ல சாப்பாடு வேண்டுமென்கிற நாட்களிலெல்லாம் வந்துவரட்டுமென்று தைரியமாய் ஒருவிருந்தாடியை அழைத்துவருவேன். அவள் என்னை ரஹஸியததில் எவ்வளவு வைதபோதிலும் பிறர்பார்வையில், தான் எனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகத் தோற்றவேண்டும் என்கிற ஆவல் அவளுக்குண்டு. இதையறிந்த நான் அவள் என்னைரஹஸியமாய் அதட்டும்பொழுதெல்லாம் "இனி அப்படிசெய்யவில்லை" என்று உரத்து மன்னிப்பு கேட்டுக்கொள்வேன். அது அவள்கோபத்தை இன்னும் அதிகரிக்கும். ஆனால் ஏதாவது பதில்சொன்னால் இன்னும் உரத்துப்பேசுவேன் என்கிறபயத்தினால் திருடனுக்குத் தேள்கொட்டினதுபோல் சும்மா இருப்பாள். சிலசமயம் "யாருக்காவது காதில்பட்டால் பெண்டாட்டிகாலில் விழுகிறபுருஷன் என்று நினைக்கப்போகிறார்களே! போதும் இரைய வேண்டாம்! நான் உங்களோடு வாக்குக்கொடுக்கவில்லை. 'சீ நாயே! நீ என்னகேட்கிறது!' என்று சொல்லாதபடிக்கு 'இனி அப்படிச் செய்யவில்லை' என்று ஒருபுருஷன் கெஞ்சுவான!" என்று ஒதுங்கிவிடுவாள்.

இம்மாதிரியாக என் கிரஹஸ்தாசிரமத்தின் முதல் நாலைந்துவருஷங்களாக அடித்த தென்னல் பிறகு பெரும்காற்றாக முற்றிற்று.

❀ ❀ ❀

## "LEARN BY DEEDS, NOT WORDS."

## வீட்டைக்கட்டிப்பார் கலியாணத்தைச்செய்துபார்.

"பட்டால்தெரியும் பார்ப்பானுக்கு" என்பது அர்த்தபுஷ்டியுள்ள ஒரு பழமொழி. பழமொழிகளெல்லாம் அனுபவஞானம் என்னும் சாகரத்தில் கடைந்தெடுத்த அமிர்தமாம். ஆயிரம்தான் கற்றுக்கேட்டாலும் அனுபவஞானம் ஸ்வானுபவத்தால் மட்டும் சித்திக்கத்தக்கதேயன்றி மற்றப்படி சித்திக்கத்தக்கதில்லை. கல்வியினாலானபயன் கடவுளின் பாதத்தையறிந்து பணிதலாமென்று திருவள்ளுவநாயனார்சொல்லியிருக்கிறார். அப்படி உண்மையான தெய்வபக்தி யில்லாவிட்டால் கற்றதனாலானபயன் ஒன்றுமில்லை. வயிற்றை வளர்க்கமட்டும் உபயோகப்படும் கல்வி உண்மையில் மஹான்கள் கொண்டாடும் கல்வியில் சேர்ந்ததில்லை.

> "உடம்பினைப் பெற்றபயனாவதெல்லாம்
> உடம்பினில் உத்தமனைக்காண்" என்றார்
> ஔவையார்.

"கற்றதனாலான பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அரெனின்"— என்றார்
திருவள்ளுவநாயனார்.



இப்படியாக உடம்பெடுத்ததற்கும், கல்வி கற்றதற்கும் பயன் கடவுளை யறிந்து வழிபடுதலா மென்றேற்படுகையில், வெறும் வாச்சாஞானம் என்ன பயனைக்கொடுக்கும்? சாசுவதமான பயன் ஒன்று மில்லை என்றபடி. வயிறுவளர்ப்பது ஒன்றுமட்டுமே பெரிதல்ல. நாயும் வயிறுவளர்க்கிறது. காக்கையும் வயிறுவளர்க்கிறது. வயிற்றைவளர்ப்பது உயிரை வளர்ப்பதற்காக; உயிரைவளர்ப்பது உண்மையை உள்ளபடியறிவதற்காக; உண்மையுணர்வது ஜன்மசாபல்யத்துக்காக: இப்படியாக அனுபவஞானத்தின் முடிவு கடவுளையறிந்து வழிபடுதலா மென்றேற்படுகிறது. அனுபவஞானத்தின் முடிவு இன்னதென்று சொன்னால், அதன் ஆரம்பம் எங்கே? உலகஞானமின்றி கடவுள்ஞானம் சித்திக்காது. குடத்தின் ஞானமின்றி அதை வனையும் குயவன் ஞானம் சித்திக்காது. காரியமறிந்தவன் காரணமறிவானே யன்றி, காரியமறியாதவன் காரணமறியான். ஆகையால் உலகஞானம் எங்கே துவங்குகிறது? சிறுபிள்ளைகள் மணல் வீடுகட்டி விளையாடுகிறார்கள். பிறகு குடியிருப்புவீடு கட்டுகிறார்கள். அந்த வீட்டிலிருந்து கிரகஸ்தாச்சிரமதர்மத்தையனுசரித்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களைப் பெறமுயலுகிறார்கள்.

"ஈவதறம்" என்றார் ஔவையார். தன்னைக் கொடுப்பதுண்டே அதுதான் தர்மம். தன்னைக்கொடுக்கச் சக்தியற்றார் தாம் தேடிய பொருளைக்கொடுப்பார். அதையும் பூரணமனசோடு கொடுக்கவேண்டும். இந்தஉலகத்திலுள்ளனதுவும், பார்க்கப்போனால்இந்த உலகமும் கூட, சங்கற்பமாத்திரமே யாதலால், பூரணமனசு வைத்துச் செய்யும் காரியம் எதுவும் இஷ்டத்தைப் பொறுத்ததாகப் போய்விடுகிறது. இஷ்டம் அறிவினுடைய சக்தி. "இச்சாசக்தி உமாகுமாரி" என்பது சிவசூத்திரம். ஆகையால் இஷ்டத்தைப் பொறுத்ததாய் இச்சாவிசேஷமாய்ச்செய்யப்படுவதெல்லாம் தன்னைக்கொடுப்பதாம். "கருமமேகண்ணாயினார்"- செய்கருமத்தில் பூரணமனசு செலுத்தினவர்கள், "கண்துஞ்சார், பசிநோக்கார், செவ்வியருமையும் பாரார், அவமதிப்பும்கொள்ளார்." ஆகையால் தர்மவழியில் நிற்பார் தன்னைக்கொடுக்கப் பின்வாங்கார்.

இரண்டாவது புருஷார்த்தமான "பொருள்" என்பது என்னவெனிலோ, "தீவினைவிட்டீட்டல் பொருள்" என்பது ஔவையார் அருள்வாக்கு. தன்னைமட்டும் தனிப்படுத்திப் பிறருக்கு அன்னியமாய்த் தன்னைநினைப்பதே "தீவினை." பேதபாவனையெப்பொழுதுண்டாயிற்றோ அப்பொழுது தீவினையும் முளைத்ததாகும். ஆகையால் எல்லாமாய் அகண்டமாயுள்ள தன்னைச் சின்னபின்னமாக்கிச் சிறுமைப்படுத்தும் பேதபாவனையை விட்டு மன்னுயிரைத் தன்னுயிர் போலெண்ணிச் செய்யும் தர்மவழியில் தேடும் தேட்டாமையே "பொருள்"-இகபரமிரண்டுக்கும்சாதனமான கைப்பொருளாகும். அறம், பொருள் இரண்டையும் அனுபவிக்கப்பெற்றார் மனத்தில் பின்னுமொரு குறையுண்டு. அது என்னவெனில், "இன்பம்."

இன்பம் என்றாலென்ன? "காதலிருவர் கருத்தொத்தாதரவுப் பட்டதே இன்பம்" என்றார் ஔவையார். போகபோக்கியங்கள் என்னதானிருந்தாலும், மனத்தோடு மனம் சேர்ந்து இரண்டும் லயித்து ஒன்றான ஏகீபாவம் அமையவேண்டும். இந்த ஏகீபாவமும் "காதல்"- அன்புகாரணமாகவுண்டாகவேண்டும். ஆகையால் உள்ளன்புடையவரிருவர் கருத்து ஒருமித்து ஒருவருக் கொருவர் ஆதரவாய் ஐக்கியபத்தியமமையப் பெற்றால், அப்பொழுது பேதபாவனை செய்யும் மனம் நசித்துப்போக, அதுநசித்த இடத்திலுண்டாகுமோர் உவகை யுண்டே அதுதான் இன்பம். இன்பமென்பது உள்ளப்பூரிப்பு பேதமனம் நசித்தாலன்றி அபேதபாவனை புரியும்

ஆனந்த மனம் பூரிக்காது. சின்னஞ் சிறியார் "இந்தமட்டும் இந்தமட்டும் என்கோடு" என்றுசொல்லி, தான் நின்று கொண்டிருக்குமிடத்திலிருந்து தன்கையெட்டின தூரத்துக்குக் கோடுகீறி அதற்குள்பட்ட இடத்தைத்தன்னதென்று ஸ்வீகரித்து, அதற்குப் புறம்பாயுள்ள விசாலமான பரப்பையுடைய பூமியையெல்லாம் தனக்குரிமையில்லாத தாக்கிக்கொள்வதுபோல,பேதபாவனைசெய்யும்ஜீவன் 'கண்டதேகாட்சி' யென்று, அதன் குருட்டுக் கண்ணால்கண்டதேயன்றி வேறுகாட்சியுலகத்தில் இல்லையென்றுவீணே சங்கற்பித்துக்கொண்டு, அச்சங்கற்பத்தின்சக்தியால்தானேகண் பஞ்சடைந்து, மனக்கண்மூடி, மதிமயங்கித்தவிக்குகின்றது. இப்படித்தவிக்கும் மனத்தின் தாபமே நீங்கா மனக்குறையாகவுள்ள ஒரு ஜீவனுக்கு போகபோக்கியங்கள் என்னதானிருப்பினும் அவைகளை யனுபவித்தலால்அகங்கார, மமகாரவிர்த்தியே யன்றி வேறுபயனில்லையால், அந்த ஜீவன் மனங்குன்றி உற்சாகமிழந்து நிற்க நேரிடுகிறது. அப்படிக்குறைப்பட்ட மனம் கங்கையோடு யமுனைசேர்ந்தாற்போல் காதல் காரணமாகக் கருத்தொருமித்துத் தனக்கன்னியமென்று தான் மௌட்டியத்தால் நம்பியவேறொரு மனத்தோடு ஆதரவுப்பட்டுச் சேரும்போது ஐக்கியபத்தியம் முதிர முதிர, இருமனமும் ஒருமனப்பட்டு "மனத்துக்கு மனம்சாக்ஷி" யென்னும் உண்மையையுணர்ந்து அவ்வுணர்வுவிர்த்திப்பிரவாகமாகப் பெருக அவ்வுள்ளப் பெருக்கத்தில் அது மூழ்கிப் பின்னர் பூரித்தெழுகின்றது. ஆனந்த பூரிதமான இந்த மனோ நிலையே "இன்பம்." இந்தஇன்பத்தை நுகர்ந்து அனுபவமுதிருங்கால், பால் ஆறாகவோடினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேண்டுமென்கிற பழமொழியாக ஆனந்தம் எங்கும் நிறைந்திருக்க இத்தேகத்தைப்பற்றி நின்று அதனால் வருவதானதோர் சிற்றின்ப நுகர்ச்சியே பெரிதாக நினைத்தநினைவு மாறிப்போய், அது அற்ப நுகர்ச்சியென்றுணரும் உண்மையான உள்ளத்துணர்வு புண்ணியவாஸனாபலத்தால் மேலெழவாரம்பிக்கிறது. அப்பொழுது நாயைப்போல் நக்கிக் குடிக்கும்படியான அவசியத்துக்குக்காரணமான அகங்காரத்தைவிட்டு அதற்குக்காரணமான அஹம் தத்துவத்தைப் பற்றி நிற்கும்படியான பாக்கியம் நேரிடுகிறது. அஹங்காரத்தை விட்டு அஹம்தத்துவத்தை மட்டும் பற்றி நின்றால் அஹத்தின்மஹிமை மஹத்தாய் விளங்கக் காணலாம். அஹத்தை மஹத்தாய்க் கண்டு மஹத் தத்துவமாத்திரமாய் நிற்கும் "பெரியமனசு" சித்தித்தால், அது எல்லாவற்றிலும் தானிருக்கவும், எல்லாம்தானாக விளங்கவும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து தனக்கு இடையில் நேர்ந்த பெந்தங்களையெல்லாம் மறந்து தான் நிர்த்துவந்துவனாய் நிற்கக்காண்கிறது. இந்த அவசரத்தில், எல்லாம் தானாகவும், தன்மயமாகவு மிருக்கக் கண்டு இப்படித்தோற்று மெல்லாமாய் விளங்கும் தான் யார்? என்று விசாரிக்கத் துவக்குகின்றது.'மாமியாருக்குமொருசாமியாருண்டு என்கிறபெண்டீர் வசனத்தினுண்மைக்கு ஒத்தவண்ணமாய், தோற்றப்படும் எல்லாம்தானாயும் தன்மயமாயும் விளங்கும் மஹாபெரிய தனக்கும் பெரியதாய், மாமியை யொத்த தனக்கும் சாமியாராகவிளங்கும்அதிமலான பரவஸ்து வொன்று வுண்டு என்று தெரிந்துகொள்ளநேரிடுகிறது. எல்லாருக்கும் பெரிய மாமியாரும் தனக்குப்பெரிய சாமியாரைக் கண்டு ஒடுங்குவதைப்போல பிரகிருதியையெல்லாம் தன்னுள் அடக்கிய மஹத்தான புருஷனும் தனக்கும் பெரியவனாய் தன்னையும் ஒடுக்கவல்ல பரனை நினைந்து மற்றப்புருஷார்த்தங்களெல்லாம் அற்பானுபவ மென்றும் துச்சமென்றும் கண்டு சின்னத்தைவிட்டுப் பெரியதைப்பற்றும் "பேராசை" யென்னும் பூரண அன்புதூண்டப்பெற்று அதனால் சின்னதான மூன்றையும் விட்டு "பேரிதான"



ஸ்வதந்திரம் ஒன்றையே நாடி, நாடின, நாட்டத்தில் தன்னையும் மறந்து பின் நாட்டமும் நழுவிப்போக, தியேயாகாரமாய்த் தான் நினைத்ததொன்றேதானாய் இரண்டற்று நிற்றல்நித்தியானந்தமளிக்கும்பேரின்ப வீடு. இந்த வீடு பெறுதலே ஜீவன்தேகமெடுத்ததற்குப்பலன். ஜன்மசாபல்யமென்று சொல்வதும் இதுவே. இஃதையே ஔவையார் "பரனை நினைந்திம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு"என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்.

இப்படியாகமணல்வீடு கட்டிவிளையாடும்குழந்தை பேரின்பமளிக்கும் பெருவீடு கட்டிமுடிக்கும்வரையில், வீடு கட்டுவதே வேலையாயிருக்க நேரிடுவதால், பொரியோர் அனுபவஞானத்தைப் பெரிதாகத் தூக்கிவைத்து அதுசொல்லிக் கொடுத்துக் கேட்டறியக்கூடியதல்ல: செய்துபார்த்தனுபவித்து அறியக்கூடியதென்பதை வற்புறுத்துவான், "வீட்டைக்கட்டிப்பார்: கலியாணத்தைச் செய்துபார்!" என்று ஆதியோடந்தமாய் அர்த்தபுஷ்டியமையப் பொருத்தி உபதேச முறையில் உண்மையை உரைத்தார்கள். "குருசொல் ஒருசொல்" என்றிருப்பதால், நல்ல புத்திசாலிக்கு இஃதொன்றேபோதுமானது. கிரகஸ்தாச்சிரமதர்மத்துக்கு இருப்பிடம் வீடு ஆதலால், அதைக் கட்டிப்பார் என்று சொன்னார். வீடுகட்டியானால் கலியாணம் செய்தாகவேண்டும். கலியாணமின்றி கிரஹஸ்தாச்சிரமதர்மமில்லையாதலால், "கலியாணத்தைசெய்துபார்!"என்று பொதுபடச்சொல்லியருளினர். வீடுகட்டுவதிலுள்ள தொல்லை வீட்டைக்கட்டிப்பார்த்தால் தான் தெரியும். கலியாணம் செய்வதிலுள்ள கஷ்டநஷ்டங்களும் சுகதுக்கங்களும், படவேண்டியசிறுமை பெருமைகளும் கலியாணத்தைச்செய்துபார்த்தால்தான் தெரியும்.ஆகையால் "வீட்டைக்கட்டிப்பார்!" என்றால் வீடுகட்டுவதற்காக வேண்டிய சாதகசாதனசாமர்த்தியாதிவைபவங்களை அனுபவரீதியாக அறிந்துணர் என்று அருத்தம். அப்படியே கிரகஸ்தாச்சிரமதர்மத்திலுள்ள சுகதுக்கர்தி வைபோகங்களையும் கலியாணத்தைச்செய்து பார்த்து அனுபவரீதியாக அறிந்துகொள் என்பது கருத்து. அனுபவ ஞானத்துக்கு பதிலாக வாச்சாஞானமும் பரோக்ஷமான கேள்விஞானமும் பயன்படாது. ஸ்வானுபவச் செல்வமான பரோக்ஷானுபூதியே அடையத் தக்கது என்பது சித்தாந்தம்

## SANKARAPRIYAN.—XX.

## சங்கரப்பிரியன்.

## XX.

### தீவட்டிக்கொள்ளைக்காரர்கள்

கட்டைக்குட்டு என்ற திருடர்தலைவன், கூடாரம் போன்ற ஒரு ஆலமரத்தடியில் ஒரு பாறையின்மேல் வீற்றிருக்க, அவனுக்குமிகவும் அந்தரங்கமான நான்குபேர்கள் மாத்திரம் அவனுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறார்கள். மற்றத்திருடர்கள் சிலர் கொஞ்சம் தூரமாக நின்றுகொண்டும், சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டு மிருக்கிறார்கள்.

கட்டைக்குட்டு:—நண்பர்களே! இப்பொழுது பொழுதுவிடிய சுமார் சாமப்போதிருக்கிறது. நாம் இன்றையதினம் கொள்ளையடித்துக்கொண்டு வந்தவைகளை பத்திரப்படுத்தியாயிற்று. நாம் தூங்கவேண்டுவது பகற் காலமன்றோ? பாக்கியிருக்கும் ராக்காலத்தைக் கழிக்க ஒரு உபாயம் சொல்லுங்கோள் பார்க்கலாம்.

சப்பைமூக்கன் :— என்க்குத் தோன்றுவதென்னவென்றால், அடுத்த தென்னந்தோப்பில் புகுந்து மரத்தின்மேலுள்ள சார் சட்டிகளை இறக்கிப் பொழுதுவிடியும் வரை குடித்துக்கொண்டிருந்தால் நலம் என்பது.

கோணவாயன் :— சப்பைமூக்கன் சொல்வது எனக்குக் கொஞ்சம்கூடப்பிடிக்கவில்லை. தாங்கள் ஒரு ராஜா அல்லவா? மற்றவர்கள்

நாட்டுக்கு ராஜாவானால் தாங்கள் காட்டுராஜா. நாட்டு ராஜாக்கள் ஜனங்களது பொருள்களையும், உயிரையும் ரக்ஷிக்கிறார்கள், தாங்கள் பக்ஷிக்கிறீர்கள். அவர்கள் பகற்காலத்தில் அதிகாரம் செலுத்துகிறார்கள். தாங்கள் ராக்காலத்தில் ஆக்ஷிநடத்துகிறீர்கள். நாட்டு ராஜாக்கள் தங்கள் ராச்சியத்தில் குற்றம் செய்பவர்களை தண்டிக்கிறார்கள்; தாங்களும் தங்கள் ராஜ்யத்தில் அடிவைப்பவரது சொத்துக்களைப் பறிசெய்கிறீர்கள். இப்படியிருக்க, நாட்டுராஜாக்களது தர்மம் வேட்டையாடுவதென்று சொல்லப்பட்டிருக்க, காட்டுராஜாவாகிய தாங்களும் ஏன் அதையே தர்மமாகக் கொள்ளக்கூடாது?

பொக்கைப்பல்லன்:—சப்பைமூக்கன் கோணவாயன் இருவர்களும் தங்களது குணங்களுக்கேற்றபடி தான் சொன்னார்கள். சப்பைமூக்கனுக்குக் கள்ளென்றால்போதும். கோணவாயனுக்கோ கறி என்றால் போதும். வாய்கிழிய அடைத்துக் கொள்வான். எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், ஒவ்வொருவரும் ஒருகதைசெல்லுகிறது;நல்லகதையாய்ச்சொல்லுகிறவனுக்கு, நாளை 4-மணி வண்டியில் வரப்போகிறதாக நாம் கேள்விப் பட்ட ஜமீன்தாரது நகைப்பெட்டியைத்திருடும் படியான கௌரதையைத் தருகிறது.

கட்டைக்குட்டு:—பேஷ், நீங்கள்மூன்றுபேரும் நல்லயோசனை தான் சொன்னீர்கள். சப்பைமூக்கன் யோசனையும்நல்லதுதான். புதுக்கள்சாப்பிடுவதால் உண்டாகும் ஆனந்தத்திற்கு சகாயமானது ஒன்றும் இல்லைத்தான். கோணவாயன் சொன்னவேட்டை விஷயமும் நல்லது தான். காளிதாசகவிகூட சகுந்தல நாடகத்தில் வேட்டையின் மஹாத்மியத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

"மேதச்சேத,கிரசோதரம் லகுபவத்துயித்தானயோக்யம்வபுகு,

ஸத்துவானுமபிலக்ஷிய தேவிகிருதி மத்சித்தம் பயக்கு ரோதையோஹோ,

உத்கஷ்ஷஸ்ஸசதன் விஞய்ப்திஷவஸ்வஹித்தியந்தி லக்ஷியேசலே,

மித்தியாஹிவ்யஸனம் வதந்தி மிருகயாமீதிருக்விநோதஹ்குதஹ!"—என்று வேட்டையாடுவதினால் சதைகரைந்து உடம்பு ஓடியாடித்திரிய சாதகமாகிறது. பிராணிகள் பயப்படுத்தவாவது, அல்லது கோபமூட்டப்படவாவது செய்யப்படின் அவைகளின் சேஷ்டை பார்த்தானந்திக்கத்தக்கதே. ஓடிக்கொண்டிருக்கும் மிருகங்களின் மேல் அம்பைத் தொடுத்துவிட்டு வதம் செய்வது வேட்டைக்காரர்களுக்கு உத்ஸாகத்தைத் தரத்தக்கதே. வேட்டைக்குச் சமானமுண்டா? வேட்டை விசனத்தைத் தரத்தக்கதென்பது சுத்தப்பொய். ஆயினும் நாம் எல்லாம் இப்பொழுது களைத்திருப்பதாலும், நாளைக்கு 4-மணி ரயிலுக்கு அனுப்ப ஒரு பேர்வழி தெரிந்தெடுக்கவேண்டியிருப்பதாலும். பொக்கைப்பல்லனுடைய யோசனையை அனுசரிக்கத் தீர்மானித்தேன். இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஐரோப்பியர்கள் நடை உடை பாவனைகள் அனுசரிக்கப்பட்டு வருவதால் அவர்கள் சம்பிரதாயப்படி, முதல் மரியாதை நமது ஆண்வேஷதாரி அம்மணிக்கு நடத்தப்பட வேண்டியது.

ஆண்வேஷதாரி:—இப்பவும் நமது ராஜனது வார்த்தைகளினின்று, முதல்கதை சொல்லவேண்டியது நான் என்று தோன்றுகின்றது. எனது சரித்திரத்தைவிட அற்புதமான கதை ஏதுண்டு. அதைச்சொல்கிறேன் கேளுங்கள்.

## ஆண்வேஷதாரிகதை.

ஆண்வேஷதாரி:—நான் பிறந்தது கோமளாபுரம். என் தாய்தந்தையர்கள் என் சிறுவயதிலேயே இறந்துபோய்விட்டார்கள். யாரோ சில கனவான்கள் சேர்ந்து அனாதைக்



குழந்தைகளின் ஆதரவுச்சாலை (Orphan Asylum) என்னுமிடத்திற்கு என்னை அனுப்பினதாகவும், நான் அதில் காப்பாற்றப்பட்டதாகவும், எனக்கு வயது வந்து விவரம்தெரிந்ததும்சொல்லக்கேள்விப்பட்டேன். ஆதரவுச்சாலையில் வேளைக்குச் சரியான சாப்பாடு கிடைத்தும் எனக்குஅங்கிருக்க இஷ்டமில்லை. ஒருநாள் சமயம்பார்த்து அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டேன். கொஞ்சநேரமானதும் பசி வயிற்றைப்பிடுங்க ஆரம்பித்தது. இரண்டொருபேர்களை யாசகம்கேட்டேன். அதற்கு 'தேஹி' என்று கேட்பதுகஷ்டம் 'இல்லை' எனபது அதிலும் கஷ்டம் என்றுசொல்லி, அனுதாபப்பட்டார் ஒருவர். இன்னொருவர் எங்கேயாவது வேலைசெய்து பிழைக்கிறது தானே! இப்படி மானங்கெட்டு திரியுவானேன் என்றார். இப்படி நாலிடங்களிலும் நிந்திக்கப்பட்டு கடைசியாய் ஒரு மரத்தினிழலில் உட்கார்ந்து "உப்பானாலும், அவன்கொடுப்பனிதி நான்நப்பாசையால் செப்பினேன்;

அப்பா ஆர் இவள் உன்றனக்கெதிர் நிருபன் தப்பாமலே செப்பினேன்,

துப்பாமல் திரணமாகி எண்ணி அவனும் அப்பால் விரஜேத்தியப்பிரவீக்

அப்பா வாமனனே மஹாபலிமகே
எப்பாடு நீ பட்டையோ"

என்னும் சுலோகம் ஞாபகத்திற்கு வர, நான் ஒரு காலணா யாசிக்கப்போய் இவ்வளவு நிந்தனையை அடைந்தேனே! மூன்று லோகங்களையும் யாசித்த வாமனன், எப்பாடுபட்டிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தபடியே நித்திரை போய் விட்டேன். நான் எழுந்தபோது சூரியன் தலைக்குமேல் வந்து விட்டான். பசியோ தாங்கமுடியவில்லை. இப்படி இருக்கும் சமயத்தில் அவ்விடமிருக்கும் பாதை ஓரமாகவிருக்கும் பள்ளத்தில் அல்பசங்கைக்கு உட்கார்ந்திருந்த ஒரு பிரயாணியினது தலையின் மேல் ஒரு கல்லை எறிந்து அவனை மூர்ச்சிக்கச்செய்து அவன் மூட்டையை அபகரித்துக்கொள்ளலாமென்ற எண்ணமுண்டாய், அப்படியேசெய்து அவன் மூட்டையை தூக்கிக்கொண்டு போய் அவிழ்த்துப்பார்க்க அதில் ஒருபை பணமிருந்தது. சுமார் 1000 ரூபாயிருக்கலாம். அந்தப்பணத்தைவைத்துக் கொண்டு ஒரு வீடு வாடகைக்கமர்த்திக்கொண்டு சிலநாளிருந்தேன். கொஞ்சநாளில் பணமெல்லாம் செலவழிந்து விட்டது. முதல் தடவையிலேயே ஒருவன் தலையில் கல்லைப்போட்டு, அவன் சொத்தை அபகரித்த எனக்கு இரண்டாவது குற்றம் செய்வதா ஒருபெரிது! உடனே, எனது புடவையில், ஒன்றை பழய உடப்புவாங்கும் ஒருகடையில் (Pawn Broker's Shop) அடமானம்வைத்து வந்த பணத்தைக் கொண்டு எனக்குச் சரியாயிருக்கும் படியான ஒரு நிசார், சட்டை, குல்லா, ஒருகைத்துப்பாக்கி இவைகளை வாங்கிக்கொண்டு வீடுவந்துசேர்ந்தேன். தவிர எனது முகம் ஒருவருக்கும் தெரியாமலிருக்கும்படி செய்துகொள்ள ஒருகாகிதத்தினால் செய்யப்பட்டுள்ள பொய் முகமும் சேகரம் செய்து கொண்டேன். இரவு பதினொருமணி ஆனதும் புருஷவேஷம் தரித்து, பொய் முகத்தால்முகத்தை நன்றாய் மறைத்துக் கொண்டு, வழிப்போக்கனது பணத்தினின்றும் வாங்கி சவாரிக்கு உபயோகப்படுத்தி வந்த குதிரையின் மேலேறி பிரயாணிகள் வரும் ரஸ்தாவில் ஜனப்பழக்கமில்லாத ஒரு இடத்தில் நின்று காத்துக்கொண்டிருந்தேன்.—

கட்டைக்குட்டு:— நடுவில் தடுப்பதற்கு மன்னிக்கவேண்டும். ஒரு சந்தேகம். நீ எப்பொழுது குதிரைசவாரி செய்யப்பழகினது? நீ சொன்னவைகளினின்று நீ பிரயாணியைக் கொள்ளை அடித்து அந்தப் பணத்தினால் குதிரை வாங்கினதற்கு முன்னதாகவே அந்தப்பழக்க மிருக்கவேண்டுமென்று ஊகிக்கிறேன்.

ஆண்வேஷதாரி:—நீர் ஊகித்ததுசரிதான். நான் குதிரை சவாரிசெய்யப்பழகினது, நான் ஆதரவுச் சாலையிலிருந்தபொழுது. அச்சாலையிலிருக்கும்பொழுது, பக்கத்துவீட்டில் புருவளர்த்தி என்று ஒரு பெண்ணிருந்தாள். அவளுக்குப் புருவளர்த்தி என்று ஏன் பெயரென்ருல், அவளுக்குப் புருக்களின்மேல் மிகவும் இஷ்டம். உயர்ந்த ஜாதிப்புருக்கள் அனேகம் லளர்த்தி வந்தாள். அந்தப் புருக்களைக்கொண்டு அவள் வேண்டிய இடங்களுக்கு சமாசாரம் அனுப்புவது வழக்கம்.

கட்டைக்குட்டு:—பேஷ்! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும். இந்த அபாண்டமான பொய்யை ஆர் நம்புவார்கள். எங்கேயாவது புருக்கள் தூதுபோவதுண்டா! அவைகளாவது சமாசாரம் கொண்டு போகிறதாவது, இது நீலம் கட்டுப்படும்பேச்சு.

ஆண்வேஷதாரி:—நான் சொல்வது மெய்யோ பொய்யோ என்பது எனது சரித்திரத்தை முற்றிலும் கேட்ட பிறகல்லவோ நிச்சயித்தல்வேண்டும். தவிர இப்பவும் என்னிடத்தில் அவளது புருக்களில் ஒரு ஜதை இருக்கின்றன. நான் அதுகளின் மூலமாய்த்தான் இப்பொழுது ஏதாவது சமாசாரமிருந்தால் அவளுக்குத் தெரிவிப்பது. தவிர அவள் தமையனிடத்திலும் சில புருக்களிருக்கின்றன. அவனிருப்பது களிங்கப்பட்டணம். புருவளர்த்தி இருப்பது என் ஊருக்கும் களிங்கப்பட்டணத்திற்கும் மத்தியிலிருக்கும் தோப்பனும்பாளையம். கோமளா புரத்திலிருந்து தோப்பனும்பாளையம் 30-மைல். தோப்பனும்பாளையத்திலிருந்து களிங்கப்பட்டணம் 30-மைல். நல்லகுதிரையாயிருந்து புறப்பட்டால் கோமளாபுரத்திலிருந்து 3-மணியில் தோப்பனும்பாளையம் போய்ச்சேரலாம். அங்கிருந்து ஒரு நல்ல குதிரையின்மேல் ஏறினால், களிங்கபட்டணம் போய்ச்சேர 3-மணி இருந்தால் போதும். நான்முன்னமே சொன்னபடி ராத்திரி 10-மணிக்கு ஜனபழக்கமில்லாத ரஸ்தாவின்னடுவில் நின்றுக்கொண்டு பிரயாணிகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்க கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒருவண்டி அவ்வழியே வரக் கண்டேன். வண்டி கிட்ட வந்ததும் வண்டிக்காரனை, வண்டியை நிறுத்தக் கட்டளையிட்டேன். அவனும்கைத்துப்பாக்கியையும் என்னையும் பார்த்ததும் நடு நடுங்கிப் போய்விட்டான். உடனேவண்டிக்குப்பின்புறம்போய்ப் பார்த்தேன். வண்டியில்இருவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். உடனே அவர்களுடையபணப்பை, கடிகாரம் முதலிவைகளை எடுத்துக்கொடுக்கும்படி அதட்டிக்கேட்க அவர்களும் துப்பாக்கியைக் கண்டுபயந்து, எடுத்துக்கொடுத்துவிட்டார்கள். நான் அவைகளை எடுத்துக்கொண்டு, குதிரையின்மேல் பாய்ந்தேறும்சமயத்தில்கால்தவறி தொப்பென்று கீழேவிழுந்தேன். விழுந்ததும், வண்டியிலிருந்த இருவரும் பொத்தென்று கீழே குதித்து என்னை வந்து பிடித்துக்கொண்டார்கள். எனதுவேஷத்தையும் என்னையும் ஒருநொடியில் அடையாளம் கண்டு பிடித்துவிட்டார்கள். ஏனெனில்அவர்கள் எனது வீட்டுக்குச் சமீபத்தில்வசிக்கும் இரண்டு வைக்கீல்கள். என்னைப்பலதடவைகளில் அவர்கள் பார்த்திருந்தார்கள். நானும் அவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களும் என்னைவண்டியில் தள்ளி, எனது குதிரையையும் பிடித்துக்கொண்டு போலீஸ்தார் வசம் ஒப்புவிக்க வந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களைப்பார்த்து நான் "நீங்கள் எப்படியும் என்னை சிக்ஷைக்குக் கொண்டுவரப் போகிறீர்கள். நான் கேட்பதெல்லாம் எனதுதகப்பனுக்கு ஒருகடிதம் எழுதஅவகாசம். இதோ என்வீடு பக்கத்திலிருக்கிறது, ஒருகால்மணிநேரம்உத்திரவுகொடுங்கள்என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டேன். அவர்களும் சம்மதிக்க நானும் எனது வீட்டிற்புகுந்து. எனது புருக்கூட்டிலிருந்து ஒரு புருவைஎடுத்து, அதற்குத் தினைசோறு ஊட்டுவித்து தண்ணீர் வைத்த பிறகு, ஒருமெல்லிய காகிதத்தில் சில வார்த்தைகளை எழுதி அதை அதின்கழுத்தில்கட்டி, அறைக்கூரையின்மேல் வைக்கப்பட்டிருந்த கதவைத்திறந்து வெளியே விட்டுவிட்டேன். பிறகு ஜன்னலைத்திறந்து. அதன் வழியாய் வெளியில்குதித்து தயாராய் நின்றுகொண்டிருந்த எனது குதிரையின்மேல் ஏறி களிங்கபட்டணத்து ரஸ்தாவில் ஓடிவிட்டேன். வக்கீல்களும் என்னைக் கொஞ்சதூரம் துரத்திவந்தார்கள். பிடிக்கமுடியாததால் ரயில் வழியாய்களிங்கபட்டணம் வர ஸ்டேஷனுக்குப் போனார்கள். ரயில் களிங்கபட்டணம் விடிந்து7 மணிக்குத் தான் வரும் என்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகவே அவர்களுக்குமுன்னமே அவ்விடம் போய்ச் சேரவேண்டுமென்பது என் கருத்து. நான் கோமளாபுரத்தை விட்டபொழுது 12 மணி. சரியாய் 3 மணிக்குதோப்பனும்பாளையம் போய்ச்சேர்ந்தேன். புருவளர்த்தி எனக்காக காத்துக்கொண்டிருந்தாள். ஒரு குதிரையும் சேணம் போட்டு சவாரிக்குத் தயாராயிருந்தது. பிறகு எனக்கும், அவளுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

புருவளர்த்தி:— சகோதரி உனது கடிதம் சரியாய் ஒரு மணிக்குக் கிடைத்தது. நான் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது கூரைமேலுள்ள வில்கதவின்மேல் புருவந்து உட்கார்ந்ததும், கதவு கீழாய் அழுத்தப்பட்டு மணி அடிக்கலாயிற்று. உடனே உன்னிடமிருந்து தான் அவசரமான சமாசாரம் வந்திருக்கவேண்டுமென்று நினைத்து விளக்கேற்றி, புருவுக்கு கம்பும் தண்ணீரும்வைத்து அது தின்றபிறகு கூட்டில் அடைத்துவிட்டு, அதின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். அக்கடிதம்கூட இதோ இருக்கிறது. இதில் எழுதியிருப்பது பரிபாஷையிலிருந்தாலும் எனக்கு அது சாதாரணமாய்தானிருக்கிறது. இதோ 1,3,5,8,9. இதிலிருந்து நாம் முன்னமே ஒத்துக்கொண்டிருக்கிற புத்தகத்தில் முதல்பக்கத்தில் 3, 5, 8-9-வது வார்த்தைகள், அதாவது சவாரிக் குதிரை, தயாராய் இருக்கட்டும். மறுபடி 9, 2-4,5-6-7,9, அதாவது 9-வது பக்கத்தில் 2, 4, 5-6-7-9 வார்த்தைகள், அதாவது, நான் களிங்கபட்டணத்தில், நாலுமணிக்கு இருந்ததாக சாக்ஷி ஏற்படுத்தவும்.

உடனே என் தமயனுக்கு எனது புருக்களில் ஒன்றின்வழியாய்ச் சமாசாரம் அனுப்பிவிட்டேன். குதிரையைவிட்டிறங்கி கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொள்ளேன்! என்ன தலை அசைக்கிறாய்? உடனே மறுபடி பிரயாணமா?

ஆண்வேஷதாரி:—சகோதரி! நான் அவசரமாய்ப் போகவேண்டும். அப்புறம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம் என்றுசொல்லி குதிரைமேல் ஏறிகாற்றாய்ப்பறந்து, பொழுது விடிவதற்கு முன்னமே களிங்கபட்டணத்தில் புருவளர்த்தியின் சகோதரன்வீடுவந்துசேர்ந்தேன். அவனும் புருவந்து அதன்கழுத்தில் கட்டப்பட்டிருந்த கடிதப்படி, ஒரு டாக்டர் வீட்டிற்குப் போய் என்பெயரைச்சொல்லி மருந்துகேட்க அவனும் என்பேரைஎழுதிக்கொண்டு காலமே 6-மணிக்குவந்துபார்ப்பதாகச்சொல்லி மருந்து கொடுத்தனுப்பிவிட்டான். அவனும் சொன்னபடி 6-மணிக்குவர நான் தலையில் பலமாய்ப்பற்றுப்போட்டுக்கொண்டு அலட்டிக்கொண்டு படுத்திருக்கக்கண்டு, கஞ்சிஆகாரம்கொடுக்கச்சொல்லிப்போனதும், எழுந்து வடாபோளிஆமவடையுடன் 'ஆடா சோற்றுமறைவில் என, நான் தான் நோயாளி பத்தியம் பண்ணுகிறேன்,' என்பதற்கிணங்கப் புசித்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். சரியாய் 7-மணிக்கு ரயில் வந்ததும் வக்கீல்களிருவரும் இறங்கி எங்கும் தேடிவந்து கடைசியாய் என்னைப் பிடித்துக்கொண்டு போய்ப் பிராது கொடுத்தார்கள். நான்மாஜிஸ்திரேட் முன்னதாக நேற்றிரவு நான் களிங்கபட்டணமிருந்ததாக டாக்டர் ரிஜிஸ்தரைக்கொண்டு (Alibi) ருசுக் கொடுத்தேன். மாஜிஸ்திரே

ட்டும், அதை ஒப்புக்கொண்டு, வக்கீல்களைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னார். நீங்கள் இவ்வளவு படித்திருந்தும் பாபத்துக்கு முற்றிலும் அஞ்சாதவர்கள். அபாண்டமானபொய்ப்பிராது கொண்டுவந்தீர்கள். வழிப்பறிநடந்தது சுமார் 11மணிக்கென்றும், திருடி ஓடினது சரியாய் 12 மணிக்கென்றும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறீர்கள். நடுவில் குதிரை தயாராயிருந்து வந்தாலும் இவ்வூர் வந்துசேர சுமார் காலை 7 அல்லது 8 மணிசெல்லும். அப்படியிருக்க 4 மணிக்கு மருந்து வாங்கி சாப்பிட்டிருப்பது முற்றிலும் முடியாதது. தவிர, காலை 6 மணிக்கு டாக்டர் நேராய்ப் பார்த்தபொழுது, இப்பெண்பால்மிக்க பலஹீனமாயும் அசவுக்கியமாயுமிருக்கக்கண்டதாகசாக்ஷிசொல்லியிருக்கிறார். தவிரஅவள் தங்கியிருந்த வீட்டுக்காரர்களும் நேற்றைய காலை முதல் அவள் இவ்வூரைவிட்டு அகலவில்லை என்றுசொல்லி யிருக்கிறார்கள். ஆகையால் உங்கள் கேசு தள்ளப்பட்டது.

வக்கீல்கள்:—வழிப்பறி செய்தது இவள் தான் என்பதற்கு எங்கள் மனதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், 4 மணிக்கு இவள் இங்கிருந்ததாக தக்கசாக்ஷிகளால் ஏற்படுவதால் இனிமேல் நாங்கள் கண்ணால்கண்டவைகளைக்கூட நம்பக் கூடாதவர்களா யிருக்கிறோம்.

பிறகு நானும் ஊர்வந்துசேர்ந்து சில நாள் சென்றபிறகு, தங்களது கூட்டத்தோடு சேர்ந்து கொண்டேன். இதுதான் என்சரித்திரம்.

கட்டைக் குட்டு:—பேஷ்! இக்கதையை விடச்சிலாக்கியமானகதை யாராவது சொல்ல முடியுமா? என்று மற்றவர்களைக் கேட்க, ஒருவராலும் முடியாதென்று ஏற்பட்டது. ஆகையால்முன்தீர்மானித்தபடி, ராத்திரிவண்டியில் வரும்ஜமீன்தாரரதுநகைப்பெட்டியைப்பறித்துக்கொண்டுவரவேண்டியது ஆண்வேஷதாரி என்பது நிச்சயிக்கப்பட்டது. கட்டைக்குட்டும் அவளது சாமர்த்தியத்தை மெச்சி, நீ எப்படி இந்நகைப்பெட்டியைப் பறித்துக் கொண்டு வருவாய் என்றுவினவ, அவளும் இதெனக்கொருலக்ஷியமா! இதேமாதிரிவேலை இதற்குமுந்தியே ஒருதரம் நான் செய்திருக்கிறேன்; எப்படி என்றால்,—

ஒருதரம் நான் சன்னியாசிவேடம் பூண்டு ஒருவண்டியில் பிரயாணம்செய்துகொண்டிருந்தேன். அவ்வண்டியில்என்னுடன்கூட இன்னொரு ஸ்திரீயும் வந்துக்கொண்டிருந்தாள். நான் என்பேச்சு சாதுரியத்தால் அவளை ஸ்நேகம் செய்துகொள்ள அவளும் கபடமில்லாமல் தனதுநகைப்பெட்டியைத் திறந்து காட்டின உடனே அதைத் தட்டிக்கொண்டு போய்விடவேண்டுமென்றஎண்ணமுண்டாயிற்று. அதற்காக அவளுடன் வேதாந்தமாய்ப் பேச ஆரம்பித்தேன். நான்துறவி, எல்லாவற்றையும்வெறுத்தவன்! தவிர,ஜனங்கள் தங்களுக்குநேரிடும் கஷ்டங்களையெல்லாம்பொறுமையோடு சகித்துக் கொள்ளவேண்டும். கடவுளுக்கு நாம் கஷ்டப்பட வேண்டுமென்ற எண்ணமிருக்கும்பக்ஷத்தில், நாம் அதற்குக் கீழ்ப்படியவேண்டியதுதான் தவிர நான் ஒரு சங்கதி கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நாம்போய்க்கொண்டிருக்கிற ரஸ்தாவில் திருடர்களின் பயமுண்டென்பர்: அந்நகைப்பெட்டியை நான் மறைத்துவைத்துக்கொள்கிறேன்: ஒருக்கால் திருடர்கள் வந்தாலும் நான் ஆண்டியாகையால் என்னிடம் ஒன்றுமிராதென்றெண்ணி சும்மா போய்விடுவார்கள்-என்றேன். அவளும் சம்மதித்துக்கொடுக்க வாங்கி மறைத்துவைத்துக்கொண்டிருந்து வண்டி ஜனப்பழக்கமில்லாத இடம் வந்ததும் நான் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியின் அடியால் வண்டிக்காரனை ஒரு பலத்த அடி அடிக்க அவனும் மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். நானும் வண்டிக்கதவைத்திறந்து கீழே



குதிக்க கூடவிருந்த ஸ்திரீ, உலகத்தை வெறுத்த ஆண்டியாரே இப்படிச் செய்யலாமா? என, நான்:"அம்மணி,நான் முன்னமேசொல்லவில்லையா எல்லாம் கடவுள் செயலென்று. கடவுளுக்குத் தங்கள் நகைபறிகொடுக்கப்பட வேண்டுமென்று இஷ்டமிருப்பதால் தாங்கள் கீழ்ப்படிய வேண்டியதுதானே" என்று சொல்லி ஓடிவிட்டேன்.

அப்படியிருக்க இன்றையவேலையா ஒருபெரிது என்று சொல்லி உத்திரவு பெற்றுக்கொண்டு போய் விட்டாள்.

எம். என். கணேசய்யர்.

## SITA—A TALE OF HINDU DOMESTIC LIFE.

## சீதா, அல்லது, இல்லறவாழ்க்கை.

### 25-வது அதிகாரம்.

நாகம்மாள் விஷயமாக சொர்ணம் என்ன கெட்ட எண்ணம் எண்ணியும் கடவுள் அவளை காப்பாற்றிவந்தார். அவளுக்கு ஜானகிராமய்யரால் ஒரு பிள்ளையும் பெண்ணும் பிறந்தது. நாகம்மாள் ஜானகிராமய்யருடைய விருத்தாப்பியத்தைக் கண்டு அவர் சொத்து முழுவதும் பிள்ளைபேருக்கேஉயில் எழுதிவைக்கச்சொன்னாள். ஜானகிராமய்யர் அப்படியே எழுதி வைத்தார். ஜானகிராமய்யர் கொஞ்சகாலத்திற்குப்பிறகு இறந்து போய்விட்டார். நாகம்மாளுடைய மூத்தாள் பிள்ளை சப்மேஜிஸ்திரேட்டாயிருந்தபோதிலும் முழு சொத்தை நாகம்மாளுக்கே கொடுக்க மனம் வாராமல் உயில் செல்லாது என்று ஆக்ஷேபித்தார். நாகம்மாளுக்கு எப்போதும் கடவுளிடத்தில் பக்தி அதிகம். ஆகிலும்அவள்கணவர் இறந்தபிறகு தனக்கு விதவை ஜன்மம் வந்துவிட்டபடியால் இனி பகவான்தான் நமக்குத்துணை என்று அதிக சுகங்கள் வைத்துக் கொள்ளாமல் தன் குழந்தைகளை மட்டும் வெகு போஷணையாகப் பார்த்துக் கொண்டு பகவானுக்கு அடிக்கடி ஏதாவது உத்ஸவங்கள் செய்து வைப்பதும் தர்மத்தில் தன் சொத்துக்குத் தகுந்தபடி செலவு செய்வதுமாயிருந்தாள். தன் மூத்தாள் பிள்ளை உயிலைப்பற்றி ஆக்ஷேபிக்கவும் நாகம்மாள் அவரை கோர்ட்டுக்குப் போக வேண்டாமென்றும்சொத்துக்கள் முழுவதையும்பெருமையாக அவரே வைத்துதன் பிள்ளைகளையும் காப்பாற்றும்படி சொன்னாள். அவர் நாகம்மாள் சொன்னதைக்கேளாமல் கெட்ட எண்ணம் எண்ணி அவளிடம் இருந்த சொத்தை அபகரிக்க வேணுமென்று எண்ணி கோர்ட்டில் உயில் செல்லாதென்றும் ஜானகிராமய்யருக்கு உயில் எழுதும்போது நல்ல புத்தி இல்லை யென்றும் வாதம் செய்தார். கோர்ட்டில் உயில் ஸ்திரமாகிவிட்டது. ஹைகோர்ட்டுவரையில் போய்ப்பார்த்தார்: பலிக்கவில்லை. நாகம்மாள் பக்ஷம் பகவான் ஒத்தாசை செய்து வந்தார். நாகம்மாள் பிள்ளை வெகுபுத்திசாலியாய்ப்படித்துவந்தான். சொர்ணம்மாளுக்கு நாகம்மாளுடைய நல்லஸ்திதியைப்பார்க்கப் பார்க்க சகிக்க முடியவில்லை. இப்படியிருக்க (அவள்புருஷன்) மூட்டை சுப்பிரமணியய்யருக்குவாயுவியாதி வரவர அதிகமாகி அவர் கொஞ்ச காலத்திற் கெல்லாம் இறந்து போய்விட்டார். அவர் இறந்துபோனதற்கு சாமிய்யங்காரும் செல்லமும் போயிருந்தார்கள். நாகம்மாளுக்கு சொல்லி அனுப்பக் கூட இல்லை. ஆகிலும் நாகம்மாள் தகப்பன் சாவானதால் நாம் போகாமல் இருப்பது சரியல்லவென்று போய் ஒரு நாள் இருந்துவிட்டு திரும்பிவிட்டாள். செல்லமும் அவள் புருஷனும் பூவரசநல்லூரியே இருந்தார்கள். சொர்ணத்துக்குதன்புருஷன்போய்விட்டானே என்கிற வருத்தம் அதிகமாக இல்லை. அவளுக்கு எப்படி வருத்தம் இருக்கமுடியும்! புருஷன் இறந்து பத்து நாளைக் கெல்லாம் சாமிய்

யங்கார் அவளுக்குபுருஷனுனர். அது எப்படி என்றால்: சாமிய்யங்கார் ஒருநாள் அஸ்தமித்தவுடன் அவர் மாமியார்வீட்டு அவரைப் பந்தலின்கீழ் கைஅலம்பப்போனர். போனதும், அந்த அவரைப்பந்தலின் கீழ் ஓர் உருவம் நிற்கக்கண்டார். சாமிய்யங்கார் நிரம்பப்பயங்காளி. இதைக் கண்டதும் உடம்பெல்லாம் நிரம்பநடுக்கம்எடுத்தது. ஓஹோ! திருடன்வந்துவிட்டான் போலிருக்கிறதே, நாம்என்னசெய்வோமென்று யோசித்துக்கொண்டு நின்றார். உள்ளே ஓடுகிறதென்றால் திருடன் பின்புறமாகவந்து பிடித்துக் கொண்டால் என்ன செய்கிறது! அப்படி ஓடவும் முடிய வில்லை! திருடன் தலையில் ஓர் வெள்ளை தலைப்பாவை வைத்து நின்றான். சாமிய்யங்கார் ஆஹோ இவன் நிரம்ப நாகரீகமுள்ள திருடன் போல் இருக்கிறது. திருட்டாபிஸுக்கு தலைப்பாகையில்லாமல்வரலாமா! எனயோசித்தார்! என்ன செய்வார்? அப்படி மாமியாரைக் கூப்பிடலாமென்றால் கூப்பிடுவதற்காக திருடன் அடித்தால் என்னசெய்கிறது! கூப்பிட்டபோதிலும் மாமியார் தன்னை பயங்காளி என்றுகேலிசெய்வாளே! இப்படி சாமிய்யங்கார் பலவிதமாக யோசித்துக் கொண்டு இருக்கையில் திருடன் தலைப்பாகை மெள்ள அசைந்தது. ஹோ! திருடன் நகர்ந்து பக்கத்துக்கு வருகிறானே அல்லது வேறு தன் கூட்டாளிகளைக்கூப்பிடுகிறானே தெரியவில்லையே! என்று மறுபடியும் சாமிய்யங்கார் சற்றேயோசித்தார். திருடன்தலைப்பாகை மறுபடியும் அசைந்து பக்கத்தில் வருவதுபோலிருந்தது. சாமிய்யங்கார் வந்தது வரட்டும் என்று பிறவடைக்கதவைத் திறந்து உள்ளே போகலாமென்று தீர்மானித்தார். சொர்ணம் இதற்குள்மாப்பிள்ளைபோய் வெகுநேரம்ஆய்விட்டதே காணேமேன் பிறவடைபோய்ப்பார்க்கலாமா என்றுயோசித்தாள். ஆனல் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ, நாம் போகலாமா என்று தயங்கினள். மறுபடி போயிருந்தால் என்ன நாம் தனியாய் போய் நிற்போமே என்ன செய்கிறார் பார்ப்போமென்றுமெள்ள கதவைத் திறந்து வந்தாள். உடனே மாப்பிள்ளை ஓடிவந்து மாமியாரைக்கட்டிக்கொண்டுஅம்மாமி அம்மாமி பயப்படாதேயுங்கள் திருடனை நான் பிடித்துவிடுகிறேன், இவன் தலைப்பாகை வைத்து வந்தால் இவனை நான் விட்டுவிடுவேனு என்றார். சொர்ணம் மாப்பிள்ளையை இருகக்கட்டிக்கொண்டு மாப்பிள்ளே எங்கே திருடனென்றாள்! சாமிய்யங்கார் பந்தலுக்குள் கை காட்டினர். சொர்ணம் சிரித்துக்கொண்டு மாப்பிள்ளே இந்தத் திருடனை எப்படி கண்டுபிடித்தீர்கள்! பாவம், ரொம்பவும் பயந்து போயிருப்பீர்கள்! உங்களுக்கு கூழ்மோர்காய்ச்சி கொடுக்கவேணும்! பந்தலுக்குள் இருக்கும் திருடன் முப்பந்தலைக்கார்க்கும்சுண்ணும்புபூசப்பட்டசட்டியேஅல்லாமல்வேறில்லை. அசைந்தது அதில்போட்டிருக்கும் வெள்ளைக் கொடி கிடக்கிறது! அந்ததிருடனையே சாட்சியாக வைத்து நாம் திருடன் திருடியாக அங்கேயே இன்பம் கண்டுகொண்டிருப்போம்வாருங்கள் என்றாள். சாமிய்யங்கார், அம்மாமி திருடன்நல்லதிருடன்; எனக்கு உங்களைக் கூட சிநேகம் செய்து விட்டானே என்றார். சொர்ணம் நானும் அதைத்தானே எதிர்பார்த்தேன் என்று சொல்லி, சாமிய்யங்காருடன் அங்கேயே சுகித்திருப்பதை வழக்கமாகவைத்துக் கொண்டாள். காமேசுவரய்யருக்குசொர்ணத்தின்இடத்தில்சலிப்பு வந்து விட்டது. மேலும்அவளைக் காப்பாற்றஅவருக்கு சொத்துபோதவில்லை. மேலும்காமேசுவரய்யர் சொர்ணம் விதவையாய்ப் போய்விட்டபடியால் அவளைவைத்துக் கொண்டுவருவதுசரியல்ல வென்றுவிட்டுவிட்டார். காமேசுவரய்யர் இப்படி விடவும் சாமிய்யங்காருக்கு ஊர்ஜிதமாகிவிட்டது. முட்டைசுப்பிரமணியய்யர் இறந்து இரண்டு மாஸம் ஆவதற்குள் சொர்ணம் கர்ப்பவதியாகி ஒரு மாஸம் ஆய்விட்டது.



சொர்ணமும் இதைப் மறைப்பதற்கு அநேகம் மருந்துகளை வாங்கி சாப்பிட்டுப்பார்த்தாள். நாள்நோறும்கருப்பம் விருத்தியானதேயொழியகுறைந்தபாட்டைக்காணேம். கடைசியில் ஊரார் எல்லாரும் சொர்ணத்தை ஊரைவிட்டு வெருட்டினர்கள்.

சொர்ணம் சாமியங்காரிடமாவது போயிருக்கலாமென்று போனள். சாமியங்கார்தன் ஊர் போனதும் லீலாமணியின் சுகத்தில் சொர்ணத்தை மறந்துவிட்டபடியால், சொர்ணத்தை தன் வீட்டில் கூட இருக்க முடியாதென்று துரத்திவிட்டார்! பரபுருஷனுடன் அனுபவிக்கும் சுகம் இதுதான் என்று சொர்ணம் நன்றாய்க் கண்டு கொண்டாள். தனக்கு கர்ப்பம் கொடுத்தவனே இப்போது அற்பமாய் நடக்கும் போது, மற்றவாள்தன்னை இகழக் கேட்பானேன்! கடைசியில் சொர்ணம் ஊர் ஊராய் அலைந்து ஒரு வழிப்பாதையில் பிரஸவித்து, குழந்தையை கொஞ்சமாவது ஈவு இரக்கமில்லாமல் ஓர் சப்பாத்தியில் கழுத்தைத் திருகி எறிந்து விட்டு ஓர் குளத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு போய்விட்டாள். என்ன ஆச்சரியம்! வீட்டில் சிறுபெண்கள் பிரஸவித்து கொஞ்சம் காற்றுப் பட்டு விட்டால் அது உடனே கெடுதலாகி மரணத்தைக் கூட கொண்டு வந்து விடுகிறது! இப்படிப்பட்ட விதவைகள் என்ன செய்த போதிலும் பச்சைத் தண்ணீரிலேயே முழுகி இருந்த போதிலும் அவர்களை ஒன்றும் செய்கிறதில்லை! சொர்ணம் மறுபடியும் ஊர் ஊராக அலைந்து கடைசியில் நாகம்மாளிடம் வந்துசேர்ந்தாள். நாகம்மாளுக்கு மனசு கேட்கவில்லை. ஆகிலும் சொர்ணத்துக்கு நல்லபுத்தி சொல்லி அவள்இனியாவதுபரிகாரம் செய்து கொண்டு தெய்வபக்தியுடன் இருந்தால்தன்னிடம் இருக்கலாமென்றாள். சொர்ணம்அப்படியே சம்மதித்து உடனே மொட்டையடித்துக்கொண்டு வெள்ளைப்புடவைஉடுத்தி தன் கெட்டகாரியங்களுக்கெல்லாம்வேண்டியபரிகாரம்செய்துகொண்டு நாகம்மாளிடம் சுகமாயிருந்தாள். நாகம்மாளை இவள் வெகுகொடுமையாய் நடத்தியிருந்த போதிலும் அவள் அது ஒன்றையும் பாராட்டாமல்சொர்ணத்தினிடத்திருந்த மேலானதயையைப்பார்த்ததும்சொர்ணத்துக்கு தான் செய்த காரியங்களை நினைத்துப் பார்க்க தனக்கே அவமானமாயிருந்தது.

இப்படி இருக்க, சாமிய்யங்காருக்கு லீலாமணியினால் ஓர் கெட்ட வியாதிபிடித்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். செல்லத்துக்கு மூத்தாளுக்கு ஒருபையன் இருந்தான். அவன் குணம் வெகு நல்லகுணம். அவன் வயதுக்கு அவன் வெகுபுத்திசாலி. தன் தகப்பன் தன்தாய் விஷயமாய் வெகு கொடுமையாய் நடந்திருந்தும் அவனுக்கு தன் தகப்பன் மீது வெகு பிரியம். செல்லத்துக்கு சுந்தரராவைப் பிரிந்தபிறகு ஒன்றும் ஓடவில்லை. எப்போது பார்த்தாலும் சுந்தரராவு ஞாபகமாகவே யிருந்தாள். இப்படி யிருக்க கொஞ்சநாளைக்குப் பிறகு அந்த ஊரில்வெகு பணக்காரனை சுப்புரத்தினமய்ய ரென்பவர் செல்லத்தின் மீது அதிக பிரியம் வைக்கத் தொடங்கினர். சாமிய்யங்கார்சொத்து லீலாமணியின் சுகத்தில் அநேகமாக தீர்ந்துவிட்டது. சாமிய்யங்காருக்கு வியாதியும் வந்துவிட்டது. தாசிகள்வழக்கம்போல் லீலாமணியும் சாமிய்யங்காரை கவனிக்கவில்லை. செல்லத்துக்கு சுப்புரத்தினமய்யர் சிநேகம் அதிகமாகவும் சாமிய்யங்கார் அதற்கு இடைஞ்சலாயிருந்ததாகத் தோன்றிற்று. சாமிய்யங்கார் குமாரன் துரைசாமி சிலநாள் தன் மாமனைப்பார்க்க போயிருந்தான். இதுதான் சமயம் என்று கண்டு செல்லமும் சுப்புரத்தினமும் சேர்ந்து சாமிய்யங்காருக்கு மருந்து கொடுப்பதுபோல் விஷத்தைக்கலந்து கொடுத்தார்கள். சாமிய்யங்கார் மறுநாளே இறந்துபோய்விட்டார். உடனே துரைசாமிக்கு அவன் தகப்பன் ஓர்

சர்ப்பம் கடித்து இறந்துவிட்டதாக தந்தி கொடுக்கப்பட்டது. துரைசாமி உடனேவந்து சேர்ந்தான். துரைசாமிக்கு சாமிய்யங்கார்மீது வெகுபிரியம். சாமிய்யங்கார் இறந்ததில் அவன் பட்டவிசனம் சொல்லிமுடியாது. அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை. பூலோகமே இருண்டு போனதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. துசைாமி இப்படி விசனத்தோடு இருக்க, சாமிய்யங்கார் இறந்த பதினைந்து நாளைக்கெல்லாம் சுப்புரத்தினமய்யரை செல்லம் கல்லியாணம் செய்துகொண்டாள். துரைசாமிக்கு இதையெல்லாம் பார்க்க பூலோகமே பிடிக்கவில்லை. அவன் அடிக்கடி அய்யோ கெட்ட உலகமே! புருஷன்பெண்ஜாதி என்ற விசுவாசம்கூட போய்விட்டதே! இப்படியும்உண்டா! என்று அடிக்கடி நினைத்து வருத்தப்பட்டான். தன்தகப்பன் நினைவாகவே இவன் இருந்தபடியால் அடிக்கடி தன் தகப்பன் வருவதுபோல் சொப்பனம் கண்டான். ஒருநாள் இராத்திரி நிலவில் துரைசாமி அந்த ஊர் வாய்க்கால்பக்கம் போய்கைகால்களை அலம்பிக்கொண்டுநல்ல நிலவாயிருந்ததால்சற்று உட்கார்ந்திருந்தான். ஓர் உருவம் சாமிய்யங்கார் போலவே இவனிடம் வந்தது. அது வேறொன்று மில்லை. சுப்புரத்தினமய்யருடைய அக்கிரமத்தைப் பொறுக்க கூடாத அவர்விரோதியான ஒருவன்; தனக்குஅவரைக்கொல்லசக்தியில்லாமல் துரைசாமியைத் தூண்டிவிடும்படி இப்படி மாறுவேஷம் போட்டுக் கொண்டுவந்தான். துரைசாமி அந்த உருவத்தைக் கண்டவுடன்நடுங்கிப்போய்விட்டான். அந்த உருவம் துரைசாமியைப் பார்த்து 'துரைசாமி!' என் மகனேநீஒன்றுக்கும்பயப்படாதே! நான் உன்னை ஒன்றும்செய்யமாட்டேன், நீஅடிக்கடி கனவில் என்னைக்காணுகிறாய் அல்லவா! அதற்காக நான் உன்னைப் பார்க்கவந்தேன். நீ மட்டும் எதார்த்தத்தில் என் மீது பிரியம் வைத்திருக்கும் பக்ஷத்தில் நான் சொல்லுகிறபடி கேழ்க்கவேணும் என்றது. துரைசாமி நீ எப்படி சொன்ன போதிலும் கேழ்க்கிறேனென்றான். அவ்வுருவம்: ஆகா இப்போது தான் நீ என்பிள்ளை யென்று நன்றாய் தெரிகிறது! நான் சொல்வதைக்கேள்: இனி நீ அஜாக்கிரதையாய் இருக்கக் கூடாது! நீ இப்படியே விசனம் பிடித்திருந்தால் உன்னையும் கொலை செய்துவிடுவாளென்றது. துரைசாமி, அய்யோ ஆனால் உன்னையும் கொலைசெய்து விட்டாளா? என்றான். அந்த உருவம்:—'துரைசாமி நான்றுதான் உன்னைக் கேட்டுக் கொள்வது! என் கொலைக்குமறுகொலை நீ வாங்காமல்போனால் எனக்கு முக்தியேகிடைக்கமாட்டாது. என்னை ஏதோ பாம்பு கடித்துவிட்டதாக செல்லம் சொல்லுகிறாளல்லவா, அது சுத்தப்பொய். என்னைக்கடித்த பாம்பு இப்போது செல்லத்தைகல்லியாணம் பண்ணிக்கொண்டு சுகப்படுகிறது.

துரைசாமி:— கெட்டலையட்டுமே, என்ன அக்கிரமம்! நான் இப்போதேபோய் அவர்கள் இருவரையும் ஒரே வெட்டாய் வெட்டிவிடுகிறேனென்றான். உருவம், 'ஆகா அது கூடாது! நீ இப்படி ஆத்திரப்பட்டால் உன்னால் ஒன்றும் செய்யமுடியாது! அவர்கள் உன் எண்ணத்தைக்கண்டு கொள்வார்கள். நீ அவர்களிடத்தில் வணக்கமாயிருக்கிறது போல் இருந்துஅவர்களைகொல்லவேண்டும். மேலும் மனிதர்களைக்கொன்றுவிடுவது அவர்களுக்கு சுகம். அவர்கள் உயிரைவைத்துக்கொண்டே துக்கத்தால்கஷ்டப்படவேண்டும்! அப்போது தான் அவர்கள் செய்த தீங்கை அவர்கள் அறிவார்கள். நீ உன்தாயைக்கொல்ல வேண்டாம். அதுமகாபாபம். அவளுக்கு உன்னால்கூடியவரையில் புத்திசொல்லிப்பார். கேளாமல் போனால் அப்புறம் பார்த்துக்கெள்ளலாம்! என்னைக்கடித்த ஸர்ப்பத்தைமட்டும் நீ உன் தாயைக்கொண்டு கொல்லச்சொல்!' என்றது.



துரைசாமி அப்படிசெய்வதாக ஒப்புக்கொண்டு வீடுவந்துசேர்ந்தான். மறுநாள் தன் தாயைக்கூப்பிட்டு அவளுக்கு புத்திசொன்னான். அவள் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "துரைசாமி! நான் என்ன செய்கிறது! நான் அப்பாமீது இருந்த பிரியத்தைவிட வேறே யார் இருக்கப்போகிறார்கள்! கிடக்கிறது! அவரை மறந்துவிடு! போனபிறகு இனி என்ன செய்கிற"தென்றாள்.

துசைாமி—:எங்கப்பா மீது பிரியம் இருந்ததாலல்லவா, நீ அவர் இறந்ததற்கு விட்ட மாமாலக்கண்ணீர் உலருவதிற்குள் வேறு புருஷனைக் கலியாணம் செய்துக்கொண்டாய்! ஒரு மிருகம்கூட கொஞ்சநாளாவது புருஷன் இறந்ததற்கு துக்கத்தைக் காண்பிக்குமே! நீ அதுகூட காண்பிக்கவில்லையே! அப்படி உனக்கென்ன சிறுவயதா! எவ்வளவோ அனுபவித்தாய்விட்டது! என் தகப்பனென்ன அழகில் குறைந்தவனா? இந்த சுப்புரத்தினமய்யரைவிட எவ்வளவோ அழகு உடையவரே! பேரீச்சம்பழம் தின்றவர்கள் எங்கேயாவது அதற்கு பதிலாக புளியை தின்பதற்கு ஆசைப்படுவார்களா? உனக்கு இந்த காமத்தின் ஆசைக்கு எல்லையே இல்லைபோல் இருக்கிறதே! என்று இன்னும் அநேக விதமாக செல்லத்துக்கு புத்திசொன்னான். செல்லம் இதைஎல்லாம் கேட்டுவிட்டு தான் செய்ததைப்பற்றி நிரம்பவும் வருத்தப்பட்டுக்கொண்டு துரைசாமியை இனிஎன்னசெய்யலாமென்று கேட்டாள். பிறகு இருவரும் சேர்ந்து சுப்புரத்தினமய்யர்பணத்தைகொள்ளையிட என்னவழி என்று பார்த்தார்கள். உடனே ஒருவிதயோஜனை செய்து கொண்டு சுப்புரத்தினமய்யர் தன் சொத்து முழுவதும் தன் மீது எழுதிவைக்கவேண்டுமென்றாள். பாவம்! ஒன்றும் அறியாதசுப்புரத்தினமய்யர் இவளை நம்பி அப்படியே எழுதிவைத்தார். கொஞ்சகாலத்திற்கெல்லாம்சாமிய்யங்காரைக் கடித்த ஸர்ப்பத்தைசெல்லமென்கிறஸர்ப்பம்கடித்துவிட்டது. சுப்புரத்தினமய்யர்விஷத்தால்மாண்டார். பிறகு கொஞ்சநாளைக்கெல்லாம் செல்லம்துரைசாமியையேகைவசப்படுத்திக்கொள்ளப்பார்த்தாள். இதுகளை யெல்லாம் கேட்ட சொர்ணம் ஊர்முழுவதும் செல்லத்தின்நடத்தையைதூஷிப்பது கண்டு பொறுக்கமாட்டாமல் அவளைக்கண்டித்தாள். செல்லம்தாயைப் பார்த்து நீ பலபேருடன் ரகசியமாகப்போனதைவிட நான் பப்ளிகாக ஒரு புருஷனோடு இருப்பது கெட்டுப்போய் விட்டதா? என்று சொல்லிசொர்ணத்தின்வார்த்தையைக்கேளாமல் நாராயணசாமி என்றதனவானைவைத்துக் கொண்டாள். துரைசாமி இந்த வெட்கக்கேட்டைப்பார்க்கப்பிரியம் இல்லாமல் யாத்திரை புறப்பட்டுப்போய் விட்டான். சொர்ணமும் அவமானம் பொறுக்கமாட்டாமல் ஏரி குளத்தில் விழுந்து பிராணனை விட்டுவிட்டாள்.

---

## அதிகாரம் 26.

இராமச்சந்திரயயர்தன்சொத்தைப்பிரித்துகொண்டதும் பூவரசநல்லூரில் தன் பந்துக்களுண்டாய அயோக்கியத் தனங்களைப் பார்த்து விட்டு அங்கே இருக்க மனமில்லாமல் தன் தாயைக்கூட்டிக்கொண்டு பட்டணத்தில் பி. எல். பரிக்ஷைக்குப் படிக்கப்புறப்பட்டார். இராமச்சந்திர அய்யர் சம்சாரம் பாகவியாஜ்ஜியகாலத்தில் பூர்ண கர்ப்பமாயிருந்தாள். இராமச்சந்திரய்யர் பாகம் பிரித்துக்கொள்வதற்குள் அவருடைய ஜய சமாசாரத்தைமுன் கொண்டுவரும் தூதன் போல் ஓர் பிள்ளைக் குழந்தை பிறந்தது. அதற்கு இராஜகோபாலென்று பேர்வைத்தார்கள். வியாஜ்ஜியம் செயித்ததும் எல்லோரும் அப்பிள்ளையின் அதிஷ்டத்தைக் கொண்டாடினார்கள். இராமசந்திரய்யர் தன் பெண்சாதியை பிரசவித்த சமயமென்று கூட்டிக் கொண்டு போகாமல் தாயாருடன் மட்டும் பட்டணத்துக்குப்போனார்.

ஊரில் தன்நிலங்கள் முழுமையையும் ஒருவரி
டத்தில் குத்தகைக்குக் கொடுத்து விட்டுப்
போனபடியால், அவர் ஊர் விஷயமானகவலை
யை வைத்துக்கொள்ளவில்லை. இராமச்சந்தி
ரய்யருக்கு காமேசுவரய்யர், வெங்கடராம
சாஸ்திரிகள், நாராயணசாஸ்திரிகள் இவர்கள்
மீது கோபம் இருந்தும் அவர்களுக்கு தீங்கு
செய்ய மனம் வரவில்லை. அவர்கள் இவர்மீது
பொய்ச்சாக்ஷிசொல்லி பொய்தஸ்தாவேஜிகள்
தயார் செய்தும், நல்லவர்கள் சுபாவம் கெடு
தல் செய்தவனுக்கு பிரதி கெடுதல் செய்வ
தில்லை. ஆதலால் இராமச்சந்திரய்யர் அவர்
களை தண்டிக்க நம்மால் ஆகுமா! நாம் ஒன்
றும் செய்யவேண்டாம்: அவர்களின் கெடுத
லின்பலன்களை அவர்களே அனுபவியாமல்போ
கப்போகிறதில்லைஎன்றுநினைத்து கவனியாமல்
விட்டுவிட்டார். மேலும் ஒருவன் நமது வலது
கன்னத்தில் அறைந்தால் நாம் உடனே அவனு
க்கு நமது இடதுகன்னத்தில் அறையும்படி
காட்டினால், அவனேதனதுநடத்தையைப்பற்
றிவருத்தபடுவான். அப்படி செய்யாமல்பதில்
ஒரு அடி அடித்தால்அவனுங்கு கோபம் இன்
னும் அதிகமாகும். ஆகையால் பொறுமைக்கு
சமானம்ஒன்றுமில்லை. இராமச்சந்திரய்யர்போ
க்கிலிகளை தண்டியாமல் இப்படிவிடவே, அவர்
களை தண்டிக்கும்தொழிலைக்கடவுள் தானேஏற்
றுக்கொண்டார். எப்படியென்றால், விசாரணை
முடிந்த பதினைந்துநாளைக்கெல்லாம் காமேசுவ
ரய்யருக்கும்அவருக்குசாக்ஷி சொன்னவர்கள்
எல்லோருக்கும் பொய்சொன்னதற்காக குற்ற
ஞ்சாட்டப்பட ஏன்சாங்ஷன் கொடுக்கக்கூடா
தென்றுஜட்ஜியிடமிருந்து நோட்டீஸ்வந்தது.
உடனே இந்தபோக்கிலிகள் எல்லாரும்நடுங்கி
பட்டணத்திலிருந்து காட்டன்துரைக்கு இர
ண்டாயிரம் ரூபாய்பேசி கூட்டி வந்தார்கள்.
துரைவெகுநேரம்வரையில் குற்றவாளிபக்ஷம்
பேசினர். கடைசியில் ஜட்ஜி ஒன்றையும் கவ
னியாமல் சாங்ஷன் கொடுத்துவிட்டார். விசா

ரணை அந்த ஜில்லா டிப்டிகலெக்டர் நரசிம்
மலு நாயடுவிடம் நடக்க வேண்டியதா யிருந்
தது. நாராயணசாஸ்திரிகள் ஸம்சாரம்வெங்க
லட்சுமி அம்மாள் நாராயண சாஸ்திரிகளைவா
யில் வந்தபடியெல்லாம் வைதாள் வெங்கட
ராம சாஸ்திரிகளையும் ஊரில் வையாதவர்
கிடையாது. அவர்க்கு வக்கில் வைக்கவும்
பணம் இல்லை. எல்லோரும் காமேசுவரய்ய
ரிடம்போய் உம்மாலேதான் நாங்கள்கெட்டுப்
போகிறோம், எங்களுக்கும் நீர்தான் செலவு
செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்
கள். காமேசுவரய்யர்நல்லவராதலால், அவர்க
ளெல்லாரும் தன்னால் கெட்டுப்போனவர்கள்
போல் நினைத்து, அவர் மற்றவர்களால் கெட்
டுப்போனதை மறந்து அப்படியே ஒத்தாசை
செய்வதாக வாக்களித்தார். ஸ்ரீநிவாஸசாஸ்
திரிகள்மட்டும் சாங்ஷன் கொடுக்கப்படாமல்
தப்பித்துக்கொண்டார். ஏனென்றால்ஜட்ஜிக்கு
அவர் சாட்சியத்தில் வேண்டுமென்றே பொய்
சொன்னதாக ஏற்படவில்லை. காமேசுவரய்யர்
நரசிம்மலு நாயடுமுன் விசாரணைக்காக காட்
டன்துரையை ஐயாயிரம் ரூபாய் கொடுத்து
கூட்டிவந்தார். நரசிம்மலு நாயுடு என்பவர்
சர்க்கார் அதிகாரத்தில் வெகு நாள் இருந்து
இப்போது அறுநூறு ரூபாய் சம்பளம்வாங்கு
கிறார். இவரை வேலையில் வெகு கெட்டிக்கா
ரர் என்றுவந்த கலெக்டர் எல்லாரும் மெச்சு
வார்கள். எந்தகலெக்டரையும்இவர் அரைநிமி
ஷத்தில் வசியம்செய்துவிடுவார். கலெக்டருக்
குவேண்டிய சமயல்களையெல்லாம் செய்து
கலெக்டர்பெண்ஜாதியின் தயவை முன்னால்
சம்பாதித்துவிடுவார். இவர் இரண்டு லட்சம்
ரூபாய் உத்தியோகம்செய்தே சம்பாதித்திருந்
தும்லஞ்சம்வாங்கும் குணமட்டும் இவருக்குப்
போகவில்லை. ஆனால் அல்பமானலஞ்சம்இவர்
வாங்கமாட்டார். ஆயிரத்துக்குக் குறைந்து
வாங்கினதேஇல்லை. ஆனால் வெளிப்பார்வையில்
இவர் லஞ்சம் வாங்கப்பட்டவரென்று ஒருவ



ராலும் சொல்லமுடியாது. கலெக்டர்க்கெல்
லாம் இவரைப்போல் யோக்யனான மனிதன்
கிடையாது என்கிற அபிப்பிராயம். இப்படி
அநேகர் லஞ்சம் வாங்குவதில் கைதேர்ந்திருக்
க, கலெக்டர்கள் அவர்களை சந்தேகிக்காமல்
லஞ்சமென்பதற்கே ஆசைப்படாமலிருக்கிற
வர்களைப் பார்த்து சந்தேகிக்கிறார்கள். இது
வும் காலக்கொடுமைதான். காமேசுவரய்யர்
ஒருவருக்கும் தெரியாமல் நரசிம்மலு நாயுடு
வுக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுப்பிவிட்
டார். பிறகு காட்டன்துரை காமேசுவரய்யரை
தப்புவிக்கக்கேட்டகேள்விகளையெல்லாம் நரசிம்
மலு நாயுடு எழுதிக்கொண்டார். மற்றவர்கள்
விஷயமாக காட்டன்துரைமுக்கியமாககேட்ட
தெல்லாம் நரசிம்மலுநாயுடு எழுதாமல் விட்டு
விட்டார். காட்டன்துரைதன்னால்கூடியமட்டி
லும் உழைத்துப்பார்த்தார். கடைசியில் நரசிம்
மலுநாயுடு காமேசுவரய்யரை மட்டும் விடு
தலை செய்து வெங்கட்டராம சாஸ்திரிகள்
நாராயண சாஸ்திரிகள் காவாலி சுப்பய்யன்
எல்லோரையும்செஷனுக்குக்கமிட்செய்துவிட்
டார். செஷன் விசாரணைக்கு இவர்களால் வக்
கீல் வைக்க முடியவில்லை. கடைசியாய் காமே
சுவரய்யர் மனம் கேளாமல் உள்ளூர் வக்கீல்
ஒருவரை வைத்துக்கொடுத்தார். கடைசியில்
குற்றம் ருசுவாகி வெங்கடராம சாஸ்திரிகள்
நாராயணசாஸ்திரி இவர்களுக்கு ஐந்து வரு
ஷமும், சுப்பய்யன் புதுக்குற்றவாளிஆதலால்
இரண்டு வருஷமும் கடுங்காவல் விதிக்கப்பட்
டது. சுப்பய்யன் அங்கேயே ஹோ! என்று
அலறிவிட்டான். வெங்கடராம சாஸ்திரிகள்
நாராயணசாஸ்திரிகள் ஜயில் பார்த்தவர்களா
தலால் அதிகமாக வருத்தபடவில்லை. ஜயிலுக்
குப்போகும் போதே நாராயண சாஸ்திரிகள்
வெங்கடாராம சாஸ்திரிகள் சுப்பய்யன் இரு
வருக்கும் காதோடுரகசியமாய்ப் பத்துநாள்
ராத்திரிக்கு ராத்திரிவேலைசெய்துஜயிலிலிருந்
துதப்பித்துஓடிபோகவேணுமென்றுயோசனை
சொன்னார். ஜயில்போய் சேர்ந்ததும் ஜயில்

காவல் காரனுக்கு அன்பதுரூபாய்இனும் கொ
டுத்து நராயண சாஸ்திரிகள் அவர் குடையும்
ஆயுதம் மூன்று வாங்கி வரச் சொல்லிமற்றவர்
க்கும் கொடுக்கும்படிசெய்தார். அந்தஜயிலில்
ஒவ்வொரு அறையிலும் உயரத்தில் ஓர் ஜன்
னல் இருந்தது. அந்தஜன்னல்கள் பின்புறம்
இருந்த ஓர் மைதானத்தை நோக்கி நின்றது.
ஒவ்வொரு ராத்திரியிலும் மூன்று கைதிக
ளுக்கும் மெள்ள ஜன்னல்களைக் குடைவதும்
சந்து செய்வதும்தான் வேலையாயிருந்தது.
ஆனால் ஒருவரும் சந்தேகிக்காமல் இருக்கும்
பொருட்டு முன்புறம் வெள்ளைக்கல்களை சந்து
தெரியாமல்இருக்கும்படிவைத்துவிடுவார்கள்.
அப்படிஒன்பதுநாள்வேலைசெய்ததில்ஜன்னல்
கம்பிகள் மூன்றுகம்பிகள் எடுக்கக்கூடியதாக
செய்யப்பட்டு அந்த இடங்களில் பார்ப்பவர்க
ளுக்கு வித்தியாசம்தெரியாமல் இருக்கும்படி
வைக்கபட்டிருந்தன. ஒன்பதாநாள் ஜயில்கா
ரனால் வெகு நீளமான கயிறுகள் மூன்று வாங்
கிக்கொடுக்கப்பட்டன. அன்று ராத்திரியான
தும்நாராயணசாஸ்திரிகள்முன்னால்ஜன்னலில்
கயிறைக்கட்டி மெல்ல பின்புறமாகக் கீழே
இறங்கினார் மற்றவர்களுக்கு சாவகாச மாய்
இரங்கும்படிதிட்டம்செய்திருந்தார்அதற்குள்
நாராயணசாஸ்திரிகள்போய்ஒருகுதிரைவண்டி
தயார் செய்துகொண்டு வந்து அதை ஒரு
பர்லாங்குபின் நிறுத்தி கையிகளுக்கு ஜா
டை காண்பித்தார். உடனே அவர்களும் கயி
றை ஜன்னலில்கட்டிக்கொண்டு மெள்ளஇறங்
கினார்கள். சற்றுநேரத்துக்கெல்லாம் மூவரும்
வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டுப்போய்
விட்டார்கள். நாராயண சாஸ்திரிகள் முதலிய
வர்கள்வெகு தூரம்போய்விட்டார்கள். பிறகு
வெடியிற்காலம் ஒருவன் ஜயிலை சுற்றிவரும்
போது ஜன்னல் களிலிருந்து கயிறு தொங்கு
வதைப் பார்த்தான். உடனே அவன்உள்ளே
போய் அறைகளைப்பார்க்க கைதிகளைக் கா
ணோம். அவன் ஜயில்மணியை உடனே வெகு
பலமாய் அடித்தான். அரை நிமிஷத்தில் சிப்

பாய்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்தார்கள். பிறகு சங்கதிகளைத் தெரிந்து கொண்டு சிப்பாய்கள் கைதிகளைத் துரத்த ஆரம் பித்தார்கள். வெகு தூரம் இவர்கள் துரத்தி ஓர் ரோட்டு திரும்பினவுடனே கொஞ் சதூரத்தில் மூணு குதிரைகள்மீது மூணு பேர்கள் சவாரிசெய்துகொண்டு போனார்கள். உடனே சிப்பாய்கள் வெகு சந்தோஷத்துடன் கைதிகள் அகப்பட்டு கொண்டார்கள் என்று கத்திகொண்டு அவர்களை வெகு வேகமாகத் துரத்த ஆறம்பித்தார்கள். அந்த மூவரும் இதைக்கண்டதும் இவர்கள் யாரோ என்று பயந்து இன்னும் வேகமாக சவாரிசெய்துகொண்டு ஓடஆரம்பித்தார்கள், இப்படி வெகு தூரம் துரத்தப்பட்டு கடையிசில் முன்சென்றமூணுபெயர்களும்களைத்துபோய் மேலேஓட சக்தி இல்லாமல் இவர்கள் செய்கிறதை செய்யட்டும் என்று தங்கினார்கள். சிப்பாய்கள் அவர்பக்கத்துக்குப்போகவும் அவர்கள் ஆச்சரியத்தைஎன்னவென்றுசொல்வது. அவர்க ள் பக்கத்திலே போகவும் அவர்கள் மூன்று பெயர்களும் கலெக்டர், சூபிருண்டாண்டு, ஜட்ஜி என்று தெரிந்து கொண்டு அவர்களுக்குசலாம்செய்தார்கள். சூபிரண்டாண்டென் நீங்கள்எங்களை துரத்தினீர்கள். யார் திருடர்கள்சேர்ந்து இப்படி நம்மை கொள்ளையிட வருகிறார்களோ என்றல்லவா நாங்கள் பயந்து ஓடினோ மென்றார். சிப்பாய்கள் நடந்த சங்கதியைச்சொல்லவே அவர் கோபித்துக்கொண்டு நீங்கள் கலெக்டர் சூப்ரண்டண்டையும் துரத்துவதில் வெகு கெட்டிக்காரர்கள். திருடர்களைக் கண்டுபிடிக்க மட்டும் உங்களால் ஆகாது. ஜயிலில் இவ்வளவு அஜாக்கிரதையாயிருந்த வார்டரை சூரியோதயத்திற்குள் கைதிகள் வந்து சேராத பக்ஷத்தில் நான் டிஸ்மிஸ் செய்துவிடுவேனென்று சொல்லுங்களென்று சொல்லி குதிரையை வெகுவேகமாய்விட்டுக்கொண்டுபோய்விட்டார்கள். மறுநாள் வார்டரை விசாரணை செய்தார்கள். அவன் என்ன சமாதானம் சொல்லியும் கேளாமல் சர்க்கார் நம்பிக்கையைக்கெடுத்ததற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்டான். இதற்குள் தப்பிப்போன கைதிகள் வெகுதூரம்போய் மாறுவேஷம் போட்டுக் கொண்டு ஓர் ரெயில் ஸ்டேஷனுக்கு போய் புதுசசேரிக்கு டிக்கட்டு வாங்கிக்கொண்டு புறப்பட்டுப்போய்விட்டார்கள். பிறகு போலீஸார்எங்கே தேடியும் அவர்கள் மாறுவேஷம் போட்டுக் கொண்டபடியால் ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் புதுச்சேரி போய் அங்கேயும் ஒருவர் கண்ணிலும் தென்படாமல் பகலில்உத்தியோகஸ்தர்போல் ஹோட்டலில் போய் சாப்பிடுவதும் இரவில் திருடர்களோடு கொள்ளை அடிப்பது மாக காலங்கழித்து வந்தார்கள். இப்படி கொஞ்ச நாள் இருந்ததில் நாராயண சாஸ்திரிகள் திருடர்களுக்கெல்லாம் தலைவரானார். கொஞ்ச காலத்திற்குப் பிறகு திருடர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஓர் படகு சம்பாதித்தார்கள். அதில் ஏறிக்கொண்டுசமுத்ததிரத்தில்போகிற தும்நதியில்போகிறதும் அங்கேயாராவது வந்தால் அவர்களைக் கொள்ளை அடிப்பதுமாய் இருந்தார்கள். இப்படி ஒரு நாள் நதியில் போகும் போது ஓர் படகு எதிரில் வெகு வேகமாய் வந்தது. அதில் ஒரு பெண் கண்ணும்கண்ணீருமாக நின்றாள். நாராயணசாஸ்திரிகளுக்கு அப்பெண்ணையும் அப்படகையும பார்க்க அதைக்கொள்ளையிடாமல் விட்டு போக மனம் வரவில்லை. உடனே யாரடா படகை நிறுத்து என்று கத்தினார். அவள் யாரடா என்னை கேழ்க்க என்றாள். உடனே நாராயண சாஸ்திரிகள் அப்படகைத் துரத்த ஆரம்பித்தார். வந்த மனிதனும் படகை வெகு வேகமாய் விட்டுக்கொண்டு போனான். நாராயண சாஸ்திரிகளுக்கு அநேகர் ஒத்தாசை செய்ததால் சற்று நேரத்திற்கெல்லாம், படகைப்பிடித்து விட்டார். உடனே இருவரும் கலகம் செய்ய ஆரம்பிக்கவும் இடையில் நின்றவர்கள் புதுமனிதன் மீது பாய்ந்து அவன் தலைப்பாகையை வெளியில் கிழித்தெறிந்தார்கள். என்ன ஆச்சரியம் நாராணசாஸ்திரிகள் உடனே அவனை கிஷ்ணசாமிய்ய னென்று கண்டு கொண்டு அடேகிஷ்ணசாமி நீ இன்னும்உயிரொடு இருக்கிறாயா? உன்னை தூக்கில் போட்டது பொய்யா? இது என்ன ஆச்சரியமென்றார். கிஷ்ணசாமிப்யன் உடனே நாராயணசாஸ்திரிகள் மற்றஎல்லாரையும்தெரிந்து கொண்டான் கிஷ்ணசாமிய்யன் தன்வரலாறு எல்லா வற்றையும் ஆதியோடு அந்தமாய் சொன்னான். நாராயணசாஸ்திரியும் தன்வரலாறுகளையெல்லாம்சொன்னான். கடைசியில் எல்லோரும் ஒன்று சேர்ந்துபழயபடி ஊருக்குப் போகிறதென்றும் இராமச்சந்திரனுக்கு ஒரு பெரிய தீங்கைச்செய்கிறதென்றும் தீர்மானித்து, அப்பெண்ணை அவள் இருப்பிடம்கொண்டுபோய் விட்டு பூவரச நல்லூருக்கு மாறுவேஷம் போட்டுக்கொண்டு போனார்கள்.



## LORD RIPON, THE FATHER OF LOCAL SELF GOVERNMENT.

### "அப்பன் ரிப்பன்."

இந்தியாவில் 1880 முதல் 1884 வரையில் இராஜப்பிரதிநிதியாயிருந்து இந்தியர்களுடைய யோகக்ஷேமங்களுக்காகப் பாடுபட்டுழைத்து அவருடைய பிரீதியைச் சம்பாதித்துக்கொண்டவரான லார்ட் ரிப்பன் அவருடைய முதிர்ந்தவயதில் பரலோகப் பிராப்தியடைந்தார். அவர் இராஜப்பிரதிநிதியாகவிருந்தகாலத்தில் இந்தியாவுக்குச்செய்த பல நன்மைகளில் இந்தியா ஜனங்கள் அவரை "அப்பன் ரிப்பன்" என்று அருமையாகப் பெயரிட்டுக்கொண்டாடினார்கள். அவர்சுதேச பாஷா பத்திரிகைகளுக்கு லார்ட்லிட்டன் காலத்தில் இடப்பட்ட வாய்ப்பூட்டைத் தரித்துவிட்டார். ஸ்தானிக சுய ஆக்ஷிவிஷயமாய் இந்தியர்களுக்கு இராஜாங்கத்தில் துரைத்தனகாரியங்களைப்பார்க்கிற சக்தியுண்டாகவேண்டி ஒரு முக்கியமான ஏற்பாடு செய்து அதை அமுலுக்குக்கொண்டுவந்தார். உப்புவரியைக் குறைத்தார். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள பேதபாவத்தை ஒழிக்கயத்தனித்தார். இதற்காக அவர்செய்த முயற்சி பலிக்காமல் ஆங்கிலோ இந்தியர்களுடைய பகையும் போராட்டமும் அதிகமாக அவருக்குக் கிடைத்தபோதிலும், அதையெல்லாம் அவர் பாராட்டாது இந்தியாவின் க்ஷேமத்தையே நாடியுழைத்துவந்தார். பிரதமவித்தையைப் பரவச்செய்து கைத்தொழில்வித்தையை விர்த்திசெய்வதற்கான வழிகளெடுத்துக்கொண்டார்.

இவர் இராணுவச் செலவைக் குறைக்கப் பார்த்தார். எல்லைப்புறத்தில் வீண்சண்டை சச்சரவுகளில் புகுந்து வரிப்பணத்தை வாரியிறைக்காமல், சாவதானமாய்நடந்துகொண்டு வரும்படியான ஏற்பாட்டைச் செய்தார். இப்படி பலவாற்றானும் இந்தியர்களின் யோகக்ஷேமத்தையே நாடி யுழைத்துவந்தார். இதனால் இவருக்கு இத்தேசத்திலுள்ள அவருடைய சுதேசத்தாருடைய பொல்லாப்பும் பகையும் அதிகமாகவுண்டாயிற்று. அவர்கள் இவரைப் பலவாறாகத்தூற்றி நிந்தித்தார்கள். அதை யெல்லாம் அவர் ஒருபொருட்டாக எண்ணவில்லை. "தர்மமே ஜயம்" என்கிற கொள்கையை மேலாகக் கொண்டொழுகும் திராணமுள்ளவராதலால், தர்மம் தழைத்தால் எல்லாம் தழைக்குமென்ற உறுதியான நம்பிக்கையின் பேரில் தர்மத்துக்காகப் பாடுபட்டுழைத்தார். "குடியுயரக் கோனுயரும்" என்னும் ஆப்தவாகியத்தில் பூர்ண நம்பிக்கை யுள்ளவர். இப்படிப்பட்ட மஹான் இந்தியாவைவிட்டுப்போய் 25-வருஷங்களாகியும் ஜனங்கள் அவரை மறந்து போகாமல்

"அப்பன் ரிப்பன்" எனிறு அவர்களிட்ட பேருக்கு ஒகக்க அவர் செய்தநன்மையையும் அவருடைய நல்லெண்ணத்தையும் பெரிதாகக் கொண்டாடி அவரை ஹிருதயத்தில் வைத்து வாழ்த்தி வந்தார்கள். இப்படிஜனங்கள் ஹிருதயத்தில் குடிகொண்ட மஹான் ஜூலைமாசமத்தியில்பரமபதமடைந்ததைக்குறித்து, இந்தியாவிலுள்ள எல்லாரும் அவர் புகழுடம்பைப்போற்றி, பொய்யுடம்பை விட்டதற்காகவிசனித்தவர்களாகக் காட்டிவருகிறார்கள். இவர் இந்தியாவை விட்டுப்போன காலத்தில் இவர் பேரால் ஞாபகசின்னமேற்படுத்த வேண்டுமென்று எங்கும் கூட்டம்கூடிப் பேசித்தீர்மானம்செய்தார்கள். ஆனால் அதனால் காரியத்தில் ஒன்றும் நடக்கவில்லை, சாமான்ய ஜனங்களோ இவர்பேரில் தங்களுக்குண்டான பிரீதியைக் காண்பிக்க, இவர் பேரைப்பட்லவிதத்திலும் விளங்கச் செய்தார்கள். "ரிப்பன் பிட்டாய்" என்று "ரிப்பன்மாத்திரை" யென்றும் "ரிப்பன் ஸிரப்" என்றும் பலவிதமாக இவர் பேரால் பண்டம் பணியாரங்களைச் செய்து இவருடைய பெயர் விளங்க வைத்தார்கள். ஸ்வானுபவச் செல்வராகிய ஸ்ரீமான் சைவ இரத்தின செட்டியாரவர்கள் இவர் பேரால் ஏற்படுத்திய ரிப்பன் ப்ரெஸ், இன்னும் இருந்து வேலைசெய்துவருகிறது. அவர்ஸ்தாபித்த ரிப்பன் பாக்கெட் பஞ்சாங்கமும் இன்னம் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இப்படியாக இந்த மஹானுடைய பெயர் இத்தேசத்தில் எங்கும் வழங்கி வருகிறது. இவர் பேரும் புகழும் இந்தியாவில் என்றென்றைக்கும் நிலைத்தோங்கிவளருவதாக.

## SANKARAPRYAN
## சங்கரப்பிரியன்.

### XXI. மனோரஞ்சினியும் திருடர்களும்.

காலமே சுமார் 7-மணிக்கு, சென்ற அதிகாரத்தில் சொன்ன, கட்டைக்குட்டு. சப்பைமூக்கன், கோணவாயன், பொக்கப்பல்லன், முதலியவர்கள் காட்டில் வந்து கொண்டிருக்கையில் கொஞ்சதூரத்தில் வந்து கொண்டிருந்த,! மனோரஞ்சினியைப் பார்த்து பின்வருமாறு பேசித் தீர்மானிக்கலாயினார்கள்.

கட்டைக்குட்டு:—அதோ ஒரு ஸ்திரீவருகிறாள். துணையில்லாமல் வருவதைப்பார்த்தால், வழிதப்பிப்போனாற்போல் காண்கிறது. நமது சங்கல்பம் இத்தியாதி விஷயங்களில், பக்ஷபாதமில்லாமல் நடந்து கொள்ளவேண்டுமென்பதால், இவளை நம்மில் யாரைக்கலியாணம் செய்து கொள்ள இஷ்டமென்று கேட்டு அவள் சம்மதப்படி செய்துவிடலாம், என்பது என் அபிப்பிராயம். உங்கள் மூவரது அபிப்பிராயமும் என்ன?

மற்றமூவரும்:—தாங்கள் எங்கள் மூவரையும் சிநேகிதர்களைப்போல நடத்திவருகிறீர்களே ஒழிய, தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாப்பாவிப்பதே இல்லை. இதற்கு திருஷ்டாந்தம், இப்பொழுது தாங்கள் இஸ்திரீயைப் பற்றிச் செய்த தீர்மானமே. தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

அதற்குள் நம் மனோரஞ்சினியும்அவ்விடம் வர பின்வருமாறு சம்பாஷணைநடந்தது.

கட்டைக்குட்டு:—அம்மணி! தாங்கள்யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?

மனோரஞ்சினி:—(மனத்துள்) இவர்களைப் பார்த்தால் நல்லவர்களாகத்தோன்ற வில்லை. என்னை மோசம்செய்ய எண்ணங்கொண்டார்கள் போலும்! இவர்களை எனதுசாமர்த்தியத்தினால் ஏமாத்தித் தப்பிக்கொள்ள வேண்டும். [பிறகு கட்டைக்குட்டைப் பார்த்து] ஐயா! நானிருப்பது பக்கத்திலிருக்கும் கோமளாபுரம். எனது தந்தை, என் மனதுக்குப் பிடிக்காத ஒருவர்க்கு என்னைக்கட்டிக் கொடுக்கத் தீர்மானித்ததால், அக்கலியாணத் தினின்று தப்பிக்கொள்ளும் நிமித்தம்ஊரைவிட்டு ஓடி வந்து விட்டேன். வருகையில் வழி தவறிப் போய்விட்டேன். ஏதாவதொரு நகரத்துக்கு வழி காண்பித்தீர்களானால், தங்களுக்கு மெத்தப் புண்ணியமுண்டு.



கட்டைக்குட்டு:—அம்மணி, நீங்கள் சொல்வது நன்றாயில்லையே. ஊரைவிட்டு வந்துவிட்டது நல்லதுதான். பிடிக்காத இடத்தில் கலியாணம் ஒருநாளும் செய்துகொள்ளக் கூடாது. ஆனால் இப்பொழுது எங்கும்போக வேண்டாம். எங்கள் நால்வரில் எவரையாவது கலியாணம் செய்துகொண்டு விடுங்கள். மிக்க சவுக்கியமாய்க் காலத்தைக்கழிக்கலாம்.

மஞோஞ்சனி:— எனக்குப் பிரியமானது வேறொன்றுமிராது. உங்களைப்பார்க்கில், யாரைத்தள்ளி யாரைத்தெரிந்தெடுக்கிறதுஎன்று தோன்றவில்லையே. ஆனால் எனக்கொரு யுக்தி தோன்றுகிறது. என்னை ஏதாவதொரு பத்திரமான இடத்தில் வைத்துவிட்டுப்போய் நான் வரும்போது வழியில் பார்த்த மாமரத்தின் கனிகளில் 10-கனிகளை சீக்கிரம் எவர்கொண்டு வருகிறீர்களோ அவருக்கு நான் மனைவியாவேன் என, அவர்களும் நான் முந்தி, நீ முந்தி யென்று ஓட, இவளும், அவர்கள் தன்னை இருக்கும்படிச் சொன்ன இடத்தினின்றும் கம்பி நீட்டிவிட்டாள். பிறகு திருடர்களில் கட்டைக்குட்டு முதல்முதலும் மற்றமூவரும் பிறகுமாக வந்துசேர்ந்து வைத்துப்போனவிடத்தில் மனோரஞ்சினியைக் காணாததால் அவர்களுள் பின்வரும் சம்பாஷணைநடந்தது.

கட்டைக்குட்டு:—ஹா ஹா ஹா ஹா ஹா ஹா! பேஷ். நமது வேஷதாரி எம்மாத்திரம்? நன்றாய் ஏமாத்தினாள்.

மற்றமூவரும்:— நன்றாய் ஏமாந்தோம்! கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை. நாம் அவ்வளவாகக் கவலைப்பட வேஷியமில்லை. ஏனெனில் நாம் ஜயிக்கவில்லையே. ஜெயித்ததோ நம் யஜமான். அவரே மனக்கவலைகொள்ளாதிருக்க நமக்கேன் விசாரம். போகலாம் குகைக்கு. பகலில் தூங்கினால் தானே ராத்திரி வேலைக்குத் தயாராகலாம். நாம் நிசாசராள் அல்லவா! என, எல்லோரும் போகிறார்கள்.

### XXII. பைரம்கானும் மனோரஞ்சினியும்.

திருடர்களைஏமாற்றித்தப்பித்தக்கொண்ட எம்மனோரஞ்சினியும், காட்டில் வந்துகொண்டிருக்க, "நபாப்தர்பார்" என்னும் அத்தியாயத்தில் சொன்ன சேனைத்தலைவன் பைரம்கானும் பூரா,மில்டெரி யூனிபாரத்தோடு, துரகாரூடராய் வந்துகொண்டிருந்தவன் அவளைப்பார்த்து "பிஸ்மில்லா! பொம்பளேக்கித் தனியாவாரா: அல்லாவு ஆக்பர்! குல்கும்பீபீ! உன்கொட்டம் அடக்கிப்போறேன். இப்பொம் பிள்ளைகி நிக்காகு முடித்துக்கொள்ளரான். அப்பறம் நிம்பிள்கு தனியாயிருக்கான். நிம் பள்கி திட்டுக்கேக்கிறானில்லை. அடி படுறனில்லை. அச்சா. (இதற்குள் பக்கத்தில் வந்த மனோரஞ்சினியைப் பார்த்து) ஓ பொம்பிளே எங்கேபொறு, நீ ஆர் சொல்ரே? மனோரஞ்சினி (மனத்துள்)ஒரு ஸ்திரீ தனியாய் வெளிக்கிளம்புவது எவ்வளவு தப்பிதமும் அபாயகாமுமானது. செட்டியைஏமாற்றினேன். துஷ்டர்கள் நால்வரையும் ஏமாற்றினேன். இப்பொழுது இத்துலுக்கனிடத்தினின்றும் தப்பித்துக் கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில் சபடத்துக்குச்சமானம் ஒன்றுமில்லை. "ஸதிரீணும் அசிக்ஷதபடுத்துவம் அமானுஷீஷுஸம்ஸ்திரிச்யதே" பிகமும், காக்கையின் கூட்டில் முட்டையிட்டுத்தனது குஞ்சுகளை ஆதரிப்பதின் சிரமத்தைக்காக்கையின் தலையில் சுமத்திவிடுகிறதில்லையா? அப்படியிருக்க, மானுஷ

ஸ்திரீயாகிய நான் என் கபடமற்றிருத்தல்வேண்டும்! (பைரம்கானைப்பார்த்தது). சாயபு! நானிருப்பது கோமளாபுரம்; என்புருஷன் அடித்தான், தாய்வீட்டுக்குப்போறேன்.

பைரம்கான் :—பொம்பிளே! தாய்வீட்டுக்குப்போறே இல்லை. புருசன் இன்னேக்கி அடிக்கிறான். தாய்வூடுபோறே, நாளை கூப்படறான். புருசன் வூட்டுக்குப்போறே அப்பறம் அடிக்கறான். என்னசேறே. நான்சேனைத்தலைவன். வேலையிருக்கான். நிம்பிள்கி நிக்காகு முடிச்சுக்கோ. நாம்ப அச்சா இருக்கலாம்.

மனோரஞ்சனி:—"அப்படியேசாயபு! எனக்கும் தாய்வீடுபோக இஷ்டமேயில்லை. நாளைக்கே என்கணவன் என்னைக்கூப்பிடவந்துவிடுவான். என்தாயாரும் அவனுடன் கட்டாயப்படுத்தி அனுப்பிவிடுவாள். நான் அவனிடம் போகமாட்டேன். உன்னோடுவந்துவிடுகிறேன். சாயபு! தாகம்நாக்குவறண்டுபோகிறது. அதோ தெரிகிறதே அக்கிணத்தில் இறங்கிகொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்துகொடு. குதிரையை இம்மரத்தில் கட்டு. உனது சட்டையையும், நிசார்முதலானவைகளையும்கழட்டிவைத்துவிட்டு, உனது கைக்குட்டையை கௌபீனமாகக் கட்டிக்கொண்டு இறங்கு. ஏனெனில் பாத்திரத்திற்காக, கிணற்று மத்தியில் நீந்திப்போய் தாமர இலை பறித்து, தொன்னையாய்த் தைத்து நீர்கொண்டு வரவேண்டுமல்லவா!" என; பைரம்கானும அப்படியே செய்து கௌபீனதாரியாக கிணற்றுக்குள் இறங்குகிறான். மனோரஞ்சினியும் சடுதியில் அவனுடைய சொக்காய் நிஜார் முதலியவைகளை மாட்டிக்கொண்டு குதிரைமேல் ஏறி 'சாயபு நீபாக்கியவான் "கௌபீனவந்தஹ, கலு பாக்கியவந்தஹ" என்றுசொல்லிச் சிரித்துக்கொண்டு காற்றாய்ப் பறந்துவிட்டாள். பைரம்கானும், பாவம்! மேலேறிவந்ததும், நிக்காகு செய்துகொள்ளத் தயாராயிருந்த ஸ்திரீ தனது குதிரை உடுப்புக்களுடன் ஓடிப்போய்விட்டதைக்கண்டு, ஓ ஹுச்சாபொம்புளே! நீ போனதுபோனே என் குதிரைகொண்டுபோனே. எம் பொண்டாட்டி குல்கும்பீபீ வூட்டுக்குப் போனதும் இரண்டுபங்குசீமாறு சாணித்தண்ணு கொண்டுவருவாளே! என்று புலம்பிக் கொண்டு குண்டியும் கோவணமுமாய் வீடு போகிறான். குதிரைமேல் ஏறி, பைரம்கானிடமிருந்து தப்பித்துக் கொண்ட எம் மனோரஞ்சினியும், கொஞ்சநேரத்திற்கெல்லாம் சரியானபாதையைக் கண்டு பிடித்து, அதிர்ஷ்டபுரி என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தாள். அவ்வூர் அரசன் மிக்க கொடியனாயிருந்ததால் ஜனங்கள் அவனுக்கு விரோதமாகக் கிளம்பி அவனைக்கொன்று விட்டார்கள். சில நாளாக அரசனில்லாமையால் ராஜ்ஜியமும், பிரஜைகளும், நீதி செலுத்தப்படாமல் தாமரை இலைமேல் ஜலம்போல் தத்தளித்துக் கொண்டிருக்க நேர்ந்தது. நம்மனோரஞ்சினி வந்து சேர்ந்த தினத்துக்கு முந்திய தினம்தான் ராச்சியத்து நாட்டாமைக்காரர்கள் ஒருங்கு கூடி, புதிதாக அடுத்த நாள் காலையில்அவ்வூருக்குள்வரும்,அன்னியதேயத்தனை அரசனாகச் செய்துவிடத் தீர்மானித்தார்கள். தீர்மானித்ததும், ஊரின் நான்கு கோட்டை வாசலிலும் நாட்டாமைக்காரர்கள் இதற்காக நியமிக்கப் பட்டிருந்தார்கள். மனோரஞ்சினி, ஆண்வேஷம்தரித்திருந்ததாலும். அவள்தான் அன்று முதல்முதல் அவ்வூருக்கு வந்த அன்னிய தேசியாக நேர்ந்ததாலும், நாட்டாமைக்காரர்களால் உடனே கொண்டு போகப்பட்டு அரசனாக நியமிக்கப்பட்டாள். தகப்பனார் அரசுசெலுத்தும் போதெல்லாம்கூடவே இருந்து ராச்சிய தந்திரங்களில்முற்றிலும் தேர்ந்திருந்ததால், யாவரும் கொண்டாடும்படி புருஷவேஷத்தோடு சிலநாள்நீதிசெலுத்திவந்தாள். இப்படியிருக்க, ஒருநாள் அவ்வூரிலுள்ள பைத்தியக்காரர் கொட்டடி (Lunatic asylum) யைப்பார்க்கப்போனாள். அக்கொட்டடியின் முக்கியஉத்தியோகஸ்தரும் மஹாராஜாவைக்



கூட்டிப்போய் ஒவ்வொரு இடமாகக் காட்டிக் கொண்டுவருகையில் பின்வரும் சம்பாஷணை நடந்தது :—

மஹாராஜா :—இப்பொழுது இக்கொட்டடியில் எவ்வளவுபேர் பைத்தியக்காரர்களிருக்கிறார்கள் ?

உத்தியோகஸ்தர் :—ஒரு 50-பேர்களிருக்கிறார்கள்.

மஹாராஜா :—இங்கிருக்கும் பைத்தியக்காரர்களில் யாராகிலும், பைத்தியம்தெளிந்து இங்கிருந்து போனதுண்டா?

உத்தியோகஸ்தர் :—அனேகம்பேர்கள்.

மஹாராஜா :—அவர்களை சௌக்கியப்படுத்த நீங்கள் அனுஷ்டிக்கும் வழி எது?

உத்தியோகஸ்தர் :— பைத்தியக்காரர்களை அடித்துத்தொந்திரவு செய்வதாலும், அவர்கள் எண்ணத்துக்கு விரோதமாய் நடப்பதாலும், அவர்கள் பைத்தியம் அதிகரிக்குமே ஒழிய, தெளியாதென்பது நான் இருபது வருஷத்திய அனுபவத்தால் கண்டறிந்தது. பைத்தியம் தெளியவேண்டுமானால் அவர்களை அவர்கள் வழியேவிட்டுத் திருப்பவேண்டும். அவர்களை பக்ஷமாய் நடத்தினால், அவர்கள் நம்மை நேசிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் தகாதசெய்கைகள் செய்தால், அப்படி அவர்கள் செய்வது எனக்கு இஷ்டமில்லை என்று தெரிவித்தால்அக்காரியத்தைச்செய்கிறதில்லை இப்படியாக நாளாவட்டத்தில் வழிக்குவந்து அனேகர் சொஸ்த மடைந்திருக்கிறார்கள். ஆனால் சிலவேளைகளில் மிக்க ஜாக்கிரதையாக இருக்கவும் வேண்டியிருக்கிறது. ஒருதரம், ஒரு வைத்தியர், இப்பைத்தியங்களால் கொல்லப்பட கொஞ்சம் தப்பினார்.

மஹாராஜா:—அதெப்படி ?

உத்தியோகஸ்தர்:—அது முற்றிலும் அவரது தயாளகுணத்தால் நேர்ந்தது. அடிக்கடி அவ்வைத்தியர் தனது ஜேப்பியினின்றும் மருந்தெடுத்துக்கொடுப்பதை அவரதுசரீரத்தினின்றும் எடுத்துக்கொடுப்பதாகப் பாவித்து பைத்தியங்களெல்லாம் ஒருங்குகூடி, அவரைக் கஞ்சிக்கொப்பரையில் தள்ளி கஞ்சி காய்ச்சிக்குடித்துவிடத் தீர்மானித்துவிட்டதுகள். மறுநாள் காலையில் வைத்தியர் வழக்கம் போல் காலையில் வந்ததும், பைத்தியங்களெல்லாம் ஒருங்குகூடி அவரிடம்போய், கஞ்சி காய்ச்சும் கொப்பரை மிக்க அசுத்தமாயிருக்கிறது பார்க்கவேண்டுமென்று கூட்டிப் போய் அதற்குள் தூக்கிப்போட்டுவிட்டதுகள். கொப்பரையின்ஜலம் நன்றாகக் காயாததால் வைத்தியருக்குக் கெடுதியொன்றும் நேரவில்லை. இல்லாவிடில் ஆபத்தாகமுடிந்திருக்கும் என்றுசொல்லி ஒருஅறையண்டை கூட்டிப்போனார்.

மஹாராஜா:—இந்த அறையிலிருக்கும் பைத்தியக்காரனின் சரித்திரமென்ன?

உத்தியோகஸ்தர்:-இப்பொழுது இவனது பைத்தியம் முற்றிலும் நீங்கிவிட்டது. இவன் யாரோ அன்னியதேசத்தான். ஒருநாட் காலை சுமார் 8-மணிக்கு இவ்விடம்கொண்டுவரப்பட்டான். வந்ததும், அவன் நிலைமை மிகவும் பரிதாபமாகவிருந்தது. அவனது பினத்தலினின்றும் தான் யாரையோ விட்டுப்பிரிந்து போனதாகவும், தன்னிடமிருந்த நகையை யாரோ அபகரித்துக் கொண்டதாகவுமான எண்ணம் மனதில் உதித்துவிட்டதாகக் காண்கிறது. இப்பைத்தியங்களுக்கு ஏதாவது எண்ணம் மனத்தில் ஊன்றிவிட்டால், அவ்வெண்ணம் மனத்தை விட்டகலுவது மிக்க கஷ்டம் என்று சொல்லிக்கொண்டு வருகையில் மஹாராஜாவும் உள்ளேவந்ததும், ஒருநாற்காலியில் கையில் தலையைச்சார்த்தி உட்கார்ந்திருந்த பைத்தியத்தைக் கண்ணுற்று, தொப்பென்று கீழேவிழுந்து மூர்ச்சைஆயினாள். உத்தியோகஸ்தரால்,உபசரிக்கப்பட்டு,பிரஜ்ஞை தெளிந்தெழுந்ததும், அப்பைத்தியக்காரனை அரண்மனைக்குக் கொண்டுவர ஆக்ஞாபித்துவிட்டு, வண்டி ஏறி அரண்மனைக்கு வந்துவிட்டார்.

எம். என். கணேசய்யர்.

## TO OUR READERS & SUBSCRIBERS.

ஓர் எச்சரிக்கை:—ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பேரைச் சொல்லிக் கொண்டு தான் அதைச்சேர்ந்தவரென்று ஒருவர் மோசம் செய்துபணம்வசூல்செய்து கொண்டு போனதாகத் தெரியவந்ததின் பேரில், அந்த மிஷன் சபையார் தங்கள் ப்ரெஸிடெண்டின் கையெழுத்திட்டு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன்முத்திரையும் போட்டுள்ள அதிகாரப்பத்திரம் காட்டினலொழிய வேறுயாரையும் நம்பி மிஷன் உதவிக்கென்று பணம் கொடுக்கவேண்டாமென்று எச்சரிக்கவேண்டி நம்மைக் கேட்டுக் கொண்டபடி அதைத் தெரிவிக்கலாயினோம்.

நமது கையோப்பநேசர்களுக்கு:—நாம் ஏகாங்கியாயிருந்துழைப்பதோடு, மனுஷஸகாயம் விசேஷமாகவின்றி தெய்வசகாயத்தையே நம்பிக் காரியம் நடத்த வேண்டி யிருப்பதால், "அல்லன போல் ஆவனவும்", "ஆவனபோல் தாழ்வனவுமாக" க்காரியங்கள் தலைதடுமாறி விடுகின்றன. இதனால் சங்கல்பச்சிதைவு ஒன்றும் ஏற்பட்டதாகச் சொல்லுவதற்கில்லை. விவேகசிந்தாமணியை ஜூன்மீ 15உக்குள் மே-ஜூன் மாசத்து சஞ்சிகைகள் இரண்டையும் வெளியிடவேண்டு மென்று நாம் பிரயத்தனம் செய்தும் அச்சாபீஸிலுண்டான இடையூறுமாறுதல்களினால் அது சாத்தியமின்றிப்போய்விட்டது. பிறகு நமது குழந்தையின் விவாகத்தி னிமித்தம் ஒரு மாசத்திற்கு ஓய்வொழிவில்லாதபடி தொல்லைகள் ஏற்படவும், அதில் ஈடுபட்டு நின்றுழைத்ததினால் தேஹத்துக் குண்டான அசதிகாரணமாகப்பத்திரிகையை உடனே வெளிப்படுத்துவதற்கான வசதிகுறைந்து போயிற்று. "வீட்டைக்கட்டிப்பார் கலியாணத்தைச் செய்துபார்" என்னும் பழமொழியினுண்மை பட்டுப்பார்த்தால் தான் தெரியும். காசுபணமிருந்தால் கலியாணம் செய்துவிடலாமென்று பாமர ஜனங்கள் சொல்வதுண்டு. ஆனால் மானமாக விருந்து மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேணுமென்கிற ஆவல் நிறைந்த யோக்கியமான கிரகஸ்தனுக்கு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்து மானம் கெடாமல் தன்னைக்காப்பாற்றிக் கொள்வதைப்போல் கஷ்டசாத்தியமான காரியம் வேறில்லை யென்றும், பெண்ணைப்பெற்றவன் படும் துயரத்துக்குச் சமானமானதுயரம் வேறு இல்லையென்றும் பரமஞானியான சனகமஹாராஜா சொல்லியிருப்பதே உண்மை யென்று அனுபவத்தால் தெரியவருகின்றது. இப்பொழுது மே-ஜூன் மாசத்துச் சஞ்சிகைகள் இரண்டையும்சேர்த்து வெளியிட்டிருக்கிறோம். இனி ஜூலை மாசத்து சஞ்சிகையையும் தொடர்பிடியாய்த் தொட்டு நடத்தி சீக்கிரத்தில் வெளியிட்டு விடுவோம். சந்தாதாரர்கள் சந்தா பாக்கியை உடனே யனுப்பினால் பத்திரிகை வெளியிடுவதற்கு அனுகூலமாயிருக்கும். நாம் கைப்பணம் போட்டாவது, கடன்பட்டாவது பத்திரிகை வெளியிடுவதற்குச் சாத்தியமாயில்லாமையால், பத்திரிகாபிமானிகள் எல்லோரும் சந்தாபாக்கியை உடனே யனுப்பிவைப்பதை முக்கியமாய் கவனிக்க வேண்டுமெனக்கேட்டுக்கொள்கிறோம். பத்திரிகை தவக்கப்பட்டதற்கு விவரம் கேட்டெழுதிய நண்பர்களுக்கெல்லாம் தேக அசதியினால் பதிலெழுத முடியாமற் போனதை மன்னிக்கக்கோருகிறோம்.—பத்திராதிபர்.

### விவேகசுந்தரியின் விண்ணப்பத்துக்கு விடை.

"விவேகசிந்தாமணிக்கும்மி" எழுதிய உலகசகோதரியும், தமிழ்ப்பாஷாபிமானியுமான விவேகசுந்தரியாம் அம்மணிபொருவர் "நமதருமையிருந்த விவேகசிந்தாமணி வெளிவராத காரணம்யாதோ அறிகிலேம்" என்று கற்றோரும் கண்கலங்கும்படி அதியுருக்கமான கடிதமொன்றெழுதியிருக்கிறார். அதில் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றின் பேரையும் சொல்லி ஒன்று "இருப்பிடம் தெரியவில்லை" மற்றொன்றும் "அப்படியே":"சொந்தப்ரெஸ்வைத்துவேலைசெய்யும் ——————பத்திரிகையும் மேற்சொன்னமாதிரியேதான்" என்று தமிழ்ப்பத்திரிகைகளின் சீர் கேட்டைப்பற்றி மிகவும் மனமுருக மறுகிநின்று "நம்தேசபாஷையாகிய தமிழை கைவிடும் காலமும் இதுவேதான்" என்று புலம்புகிறார். இச்சமயம் தமிழைக் கைவிடாது, "தமிழில் வேதாந்தம், சித்தாந்தம், புராணம்,நாவல், நாடகம், இகலோக பரலோகார்த்தமான ஸர்வமும் அடங்கிய மாதப்பத்திரிகையொன்று போட்டுவர" விடாமுயற்சியாய்நாமுழைக்கவேண்டுமென்றும், அதற்கு வருஷம் ரூ 10-சந்தா ஆனாலும் வேண்டியபேர்கள் கற்றுத்தேறிய விவேகஸ்திரீகள்தாமே, கொடுப்பார்களென்றும் எழுதியிருக்கிறார்கள். விவேகசிந்தாமணிக்குச் சந்தாசரிவரக்கட்டிவந்தால், இப்பொழுதுள்ள சந்தாவுக்கே அதைவிடாது பிரசுரித்துவரத்தயாராயிருக்கிறோம். நமக்கு வேதனம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், விவேகசிந்தாமணியே நமக்கு ஞானசாதனமாக உதவியதால் அதைவிடாது பிரசுரித்துவர ஆவல்கொண்டிருக்கிறோம். பண்டு சேர்க்கும் வேலையைமட்டும் நாம் ஏற்றுக்கொள்ளப் பிரியப்படவில்லை. உழைக்கவேண்டியது நம்கடமை. உழைத்தவனுக்குக்கூலி கொடுத்துப்படியளக்கவேண்டியது ஈசுவரன் கடமை. பத்திரிகையைவாங்கிவாசிப்போர் தம் கடமையைச் செலுத்தாவிடில் அந்தப் பாபம் அவர்களோடேபோகிறது. பணத்துக்கடிமைப் பட்டுப்பாரிலிருக்கவேண்டாம். பணம் செய்யும் கூத்தைப்பார்த்துப் பார்த்து அலுத்தோம்.

"உண்பது நாழி, உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந்தெண்ணுவன" வாயுள்ள

கண்புதைந்த மாந்தரைக் கலிசெய்யும் கூத்துச்சொல்லிமுடியாது. 'கலிகல்மிஷநாசினி'யாம் தேவியைப் பூஜைசெய்யக்காலமுந்தியதால்கையொப்பநேயர்கள் எம்மீது கிருபைசாதித்து நாம் காரியத்தைவிட்டுக் காரணத்தில் மனமூன்றி நிற்க விடைகொடுத்தருள்வார்களென்றுவினயபூர்வமாய்ப் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்கிறோம்.

6—8—09. பத்திராசிரியர்,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
21 FEB 1910
MADRAS.

"Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is,
but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you find it," But "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத,—**Speak the Truth.**

"Hitch your Wagon to a Star" "To Thine Own Self be True"




அன்பேயவன் : அறிவேசக்தி :ஓம் தத்சத்.] [God is Love: Knowledge is Power. Aum.

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு. 17.] 1909-ஸு அக்டோபர்-நவம்பர், மீ ஸௌமியஸு அற்பிசி, கார்த்திகைமீ [ச. 7-8.

## To Our Readers and Subscribers.

We are again obliged to change our Printers. In these days of valuable promises but rare fulfilment, we have tried for once, the effect of 'Swadeshi Enterprise' on our constitution, with results better imagined than described. Let us now revert to our old hum drum life of "doing our duty" leaving the result in the hand of One, who in the Field of Battle at **Kurukshetra,** taught to the Hero of the Fight, the secret of Karma saying,

**"To work you have the right, but not to the fruits thereof."**

We trust our readers and Subscribers will not interpret this as meaning that they have no duty to perform. We expect them to do their duty and remit their arrears of subscription due **at once! This is in Continuation of Nos. 5-6 for may-June 1909.**

## SOCIAL CANKERS.

"The New Spirit and the Swadeshi Enterprise are bringing into prominence many social pests who, for want of opportunities, were pining in solitude preying like wolves on individual members of Society, who happened to be caught within their toils. These now are entering the field as enterpresing "Swadeshis"! and in the name of 'Social Service' are plundering the people right and left. They **Violate** the Confidence of the public. The unwary public often fall victims to their mischievous machinations, and when too late wake up to the fact and ever after fight shy of Swadeshi enterprises. I know of many a noble endeavour in the cause of true Swadeshi having been spoiled by the mischievous intervention of these irresponsible busy bodies." *The Indian Patriot*

## ஜனசமூகப் புல்லுருவிகள்.

"நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல்" ஆதிகாலம் தொட்டு நீடித்துள்ளதும் நல்ல வைரம்பாய்ந்துள்ளதுமான நமதுஇந்து ஜனசமூகமான விருக்ஷப், புல்லுருவி போலும் புல்லறிவாளர் சேர்க்கை மிகுதியால் புன்மையதிகரித்து நன்மை குறைந்து நலங்குலைந்து போகின்றது. ஏனென்றால் "நல்லமரத்தில் புல்லுருவிபாய்ந்தது போலாம்" என்றேபதில் சொல்லவேண்டியதாயிருக்கிறது. எப்படியெனில்:—

உயிருக்கு உறப்கோடுப்பது உண்மை. உண்மை யென்றால் உள்ளபடி சாசுவதமாயிருக்குந்தன்மை. இதை வேதாந்திகள் "சத்" என்பார்கள். எதுவொன்று காலதேச வர்த்தமானங்களால் மாறுபடாதாகி உள்ளபடி உறுதியாயிருக்கிறதோ அதுவே உண்மைப் பொருளாம். உலகம் க்ஷணத்துக்கு க்ஷணம் மாறிக்கொண்டிருக்கிறதே யென்றால், ஆம்! ஆனால் இந்த மாறுதல்களெல்லாம் எதை ஆசிரயித்து இருக்கின்றன? இம்மாறுதல்களுக்கு ஆதாரபூதமாயிருப்பது என்ன? பணிகள் (ஆபரணங்கள்) பலவிதமாயினும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பது பொன் ஒன்றே. பாண்டங்கள் பலவகையாயினும் அவைக்கெல்லாம் ஆதாரபூதமாயிருப்பது மண் ஒன்றே. பொன்னின் தோற்றம் பணிக்குத்தகுந்தபடி வெவ்வேறாயினும், அதன் இருப்பு மட்டும் மாறாமல் இருக்கிறது. அதுபோல் சாசுவதமாயுள்ள "சத்" பொருளையறிந்து அதில் உறுதிபற்றி நிற்பவர்கள் சத்துக்கள் ஆவார்கள். சத்துக்கள்கூட்டம் அசத்துக்களின் கூட்டுறவால் கெடும். சத்தில் உறுதியான பற்றுள்ளோர் சதா நிஷ்டர்களாவார்கள். இவ்வுறுதியில்லா அசத்துக்கள் அநிஷ்டர்களாவார்கள். சதா நிஷ்டையினால் அறிவு விளங்கினால் புத்தி தெளியும். புத்தி தெளிந்தால் அது மனதில் பளிங்குபோல் சோபித்துநிற்கும் இதைத்தேஜோமனஸென்பார்கள். இம்மனசுடையவர்கள் அருள்பெற்றவராவர். மற்றவர்கள் இருளில் மயங்குகிறவர்களாவார்.

இப்படி இருளில் மயங்குகிறவர்களிலும் தராதரம் உண்டு. உதாரணமாக, இருளில் புழங்கும் ஜந்துக்களில் மார்ஜாலி (பூனை) பகல் இருள் இரண்டிலும் பார்க்குந் தன்மையுள்ளது. பெருச்சாளி இருளில் நன்றாய் பார்ப்பது; ஆனால் வெளிச்சத்தில் பார்க்கும் சக்திகுறைந்தது. ஆந்தைக்கு இருளிலேயே நன்றாகப்பார்வையுண்டு. பகலில் அதற்கு பார்வை கிடையாது. அஃதேபோல மன இருள்கொண்டு மயங்குகிறவர்களிலும் வித்தியாசமுண்டு. சாமான்ய மூடர்கள் குருடர்களுக்கொப்பாவார். அவர்களிலும் தீக்ஷண்ய புத்தியுள்ளோர் அதர்பவழியில் பிரவேசித்து அறிவுவிர்த்தியடைந்தோர். அவர்களிலும் மேலானோர் ஈசுவர பக்தியின்றி தத்துவ விசாரம் செய்துள்ளோர். இவர்கள் பிரகிருதி இரகஸியங்களில் சிலவற்றை யறிந்துகொண்டு அவைகளால் உலகத்தாரை மயக்கும் ஜாலக்காரர்கள். இவர்களிலும் மேலானோர் தத்துவ விசாரம் செய்து தேகமே சதமென்னும் தப்புத் தீர்மானத்துக்கு வந்த அசுரசுபாவர்கள்.

ஸ்தூலபாவத்தில் இப்படியுள்ள பேதாபேதங்களைப்போல, சூக்ஷ்ம பாவத்திலும் பேதாபேதங்கள் உண்டு. அஃதை சூக்ஷ்மமாகமட்டும் சூசிப்பித்துச் சொல்லலாமேயன்றி ஸ்தூலமாய்ச் சொல்வதுகூடாது. "மனசுக்கு மனம்சாக்ஷி." மனத்தைமனத்தால் அறியலாமேயன்றி வேறுவிதமாக அறிவதுகூடாது. மனத்திலும் தாழ்ந்த ஜடதேகத்தால் மனத்தை யறிய முடியாது. மனத்திலும் மேலான தான ஞானதிருஷ்டியால் பார்த்தால், மனமானது "மன்மததஹனம்" போல் சாம்பலாய்ப் போய்விடும். ஆகையால் மனத்தை மனத்தால்தான் அறியலாம்.



இந்த மனம் சமஷ்டிமனம், வியஷ்டிமனம் என இருவகைப்படும். சமஷ்டியில் வியஷ்டியும், வியஷ்டியில் சமஷ்டியும், மரமும் கிளையும்போல் இணைபிரிக்கக்கூடாது கலந்து நிற்கும். இஃதை "அவயவ-அவயவி" உபமனத்தாலும் எடுத்துச்சொல்வர். அவயவங்களின்றி அவயவியில்லை. அவயவியில்லாவிட்டால் அவயவங்கள் இபக்கமற்றுப் போவதால், அப்பேரிழந்து ஜட பதார்த்தங்களாகப் போவதுபற்றி, அவயவங்கள் இல்லை, இப்படி இரண்டிற்குமுள்ள சம்பந்தத்துக்கு "தாதாத்மியசம்பந்தம்" என்றுபேர். அஃதையே "அத்வைதம்" என்றும் சொல்வார்கள்.

"மனத்தைமனத்தாலறியலாம்" என்று சொன்னால், எந்த மனத்தை எந்த மனத்தால் அறியலாம்? என்கிற கேள்விபிறக்கும். இஃதை வாசிக்கும் சாமான்ய சபல புத்தியுள்ளோர் "என்மனது" "உன்மனது" என்று விபாகித்து அருத்தம் கூறுவர். இது அறியாமையினால் சொல்வது. உண்மைக்கொவ்வாதது. ஆகையினால் அபத்தம் என்று விசாரபுருஷர் தள்ளத்தக்கது. ஆனால், "மனத்தை மனத்தாலறியலாம்" என்னும் வாக்கியத்திலுள்ள "மன" சப்தங்கள் இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? நன்றாக ஊன்றி விசாரித்துப்பார்க்கில், அவை இரண்டும் 'சமஷ்டிமனம்' 'வியஷ்டிமனம்' என்னும் அத்வைத சம்பந்தமுள்ள இருதரமனத்தையே குறிக்கிறது. 'சமஷ்டிமனம்' என்று நாம்சொன்னதை விராட் என்றும் வைசுவானரன் என்றும் சொல்வார்கள். "வியஷ்டிமனம்" என்றதே ஜீவகோடிகளாக விளங்குவன. ஜீவன் அற்ப ஸ்வபாவமுள்ளவன்: "பால் ஆறாகவோடினாலும் நாய் நக்கித்தான் குடிக்கவேண்டும்" என்பதுபோல், அவன் அற்பமாயுள்ள சிற்றின்பங்களையே நுகரத்தக்கவன். பேரின்பம், பொதுநன்மை, பொதுக்ஷேமம் போன்ற வார்த்தைகளை அவன் காதால் கேட்டு வாயால் உரையாடினாலும், அவன்மனத்திற்கொள்வது அற்பமான அருத்தமுடையதாகவேயிருக்கும். நாய் நக்கி நக்கி வயிறுநிறையக்குடித்தாலும் உருஞ்சிக்குடிப்பதிலுள்ள சுகம் அதற்குத் தெரியவே தெரியாது. அஃதே போல, அற்பனாயிருக்கும் ஜீவனுக்கும் சிற்றின்பமொன்றையே விட்டுவிட்டுப் பற்றி நுகரலாகுமன்றி பேரின்பமென்பது இன்னதென்று மறியான். அப்படியே அவன் "தன்னயம்" ஒன்றையே பலவாறாக அறிவானன்றி, பொதுநலமென்பதைச் சொப்பனத்திலும் உணரான்.

"உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ?" என்பது பழமொழி. ஆகையால், அற்பமான ஜீவ கோடித்தனமுடையவனாலும் அவன் தன்னயம் ஒன்றையே பாராட்டுவானன்றி பொதுநலம் பாராட்ட அறியான். பொதுநலம் புரிவான்போல் பாசாங்கு செய்வான். ஆனால் தன்னலம் ஒன்றிலேயே அவனுக்கு முழுதிருஷ்டியுமிருக்கும். இது அவனுடைய ஸ்வபாவம். இதற்காக அவனைக்கடிந்து கொள்வதில் பிரயோசனமில்லை. நாய்க்கு நக்கிக் குடிப்பது ஸ்வபாவம் போல, அவனுக்கு எக்காலத்திலும் தன்

நலத்தையே திருப்பித்திருப்பிப் பார்ப்பது ஸ்வபாவம். அவன் குடும்பியாக விருந்தால், குடும்பத்தைச் சம்ரக்ஷிப்பான். ஆனால் அவர்களையெல்லாம் "நான் ரக்ஷிக்கிறேன்" என்கிற அகங்கார விர்த்தியில் ரக்ஷிப்பானே யன்றி, 'என்கடமையை நான் செய்கிறேன்' என்கிற ஸாத்வீக விர்த்தியிலிருந்து ரக்ஷிக்க மாட்டான். காசுபணம் கையிலுள்ள தனவானாயிருந்தால் தானதர்மங்கள் செய்வான். ஆனால் தன் புகழ்விளங்க ஆடம்பரமாகச் செய்வானே யன்றி பரங்கருணையினால் தர்மவிருத்தியின் பொருட்டுச்செய்யான். அவன் வர்த்தகம் வியாபாரம்செய்பவனாயின், தன்பெயர்விளங்க வேண்டும் என்று வர்த்தகம் செய்வானே யன்றி வர்த்தகவியாபார விருத்தியால் வைசிய தருமம் வளர வேண்டு மென்று செய்யான். "கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையார்க்குடைக்குமவனைப்போல" ஊரார்தலையில் கையைவைத்து, பலபேரைமோசம் செய்து சில்பேரை யாதரித்து, தான் வியாபாரத்தில் விளங்குபவன்போல் வேஷம்போடுவான். உண்மையில் அவன் செய்வதெல்லாம் வியாபாரத்துக்கு விருத்தமாகவும் (விரோதமாகவும்) வைசியதர்மத்துக்குஹானியாகவும், சொந்தபயம், சொந்தலாபம், ஸ்வகீர்த்தி, சொந்தமதம், தன்னழிம்பு இவைகளை விர்த்தி செய்வதாகவும் தானிருக்கும்.

துரைத்தன காரியங்களில் சம்பந்தப்பட்டவனாக விருக்கில், அங்கும் அப்படியே செய்வன். ஸ்வக்ஷேமம் ஒன்றையே பெரிதாகக்கருதி, துரைத்தன க்ஷேமம், பொது க்ஷேமம், தேசக்ஷேமம் எல்லாவற்றையும் அந்த ஸ்வக்ஷேமம் என்கிற அகங்காரத்தீயை வளர்க்கிற தற்கான காஷ்டங்களாகவே (எரிமுட்டை, கட்டையாக) உபயோகிப்பான். இப்படியாக அவன் பொதுநலத்தைக் காஷ்டமாக உபயோகித்து ஸ்வநலமென்கிற தாபாக்னியை வளர்த்து ராவணாதி அசுரவீரர்களைப்போல் தானிருக்கு மூரையழித்துத் தானுமழிவான். "கெடுவான்கேடுநினைப்பான்" என்பது தப்பிலா ஒப்புமை கொண்டதோர் உண்மைவாக்கியம். இவன் நினைப்பதெல்லாம் தனக்கு நன்மையும் பிறருக்குக்கேடுமாதலால், இவன் நினைத்த கேடெல்லாம் சூழ்வினையாக வந்து இவனைச் சூழ்ந்துகொண்டு கெடுபுத்தியை யுண்டு பண்ணி, இவனை வேரோடும் கெடுக்கும்.

இப்படிப்பட்ட அற்பத்தன்மையுள்ளவர்களைப் பொதுவாக "ஜீவன்" என்று சொல்லும் பசுவர்க்கத்தில் சேர்த்து பொதுப்படச் சொன்னோம். விவிதமாகத்தோன்றும் மனுஷ ஜீவன்களில், காக்கை கழுகுமுதலாகக் கரடி புலியீறாக எண்ணித்தொலையாத எத்தனையோ ஜன்மங்கள் இருக்கின்றன. இவர்கள் பிறவிக்குணத்தை மாற்ற யாராலும் ஆகாது. ஜனசமஷ்டியிலிருந்து அவர்களுண்டானார்கள். அஃதை யொட்டியே அவர்கள் ஜீவிக்கவேண்டும். இந்த அதமர்களைப் பொதுவாகச் சொல்லலாம்; பிரத்தியேகமாக எடுத்துச் சொன்னால் "பண்டமொருபக்கம், பழியொருபக்கம். என்னும் பழமொழி போல் குற்றம் ஒரு பக்கத்திலிருக்க, குறையொருபக்கத்தில்வரும். ஆகையால், அற்பர் சகவாசம் ஜனக்ஷேமத்துக்குஎப்போதும் தீங்கேயாம். அது எப்படிப் போலென்றால், "நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல்!'

நல்லமரம் என்பது நிரந்தரமாய் நித்தியமாயுள்ள ஸாத்வீக ஆத்மா. புல்லுருவி என்பது



பொய், புனைசுருட்டுகளில் பழகித்தேர்ந்த புன்மை யறிவாளராம் துராத்மா.

"மனஸ்யேக, வசஸ்யேக, கர்மண்யேக மஹாத்மனாம். மனஸ்யந்யத், வசஸ்யந்யத், கர்மண்யந்யத் துராத்மனாம்." "நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல" என்பது ஸத்ஜனர் கூட்டத்தில் துர்ஜ்ஜனர் சகவாஸம் படிந்தாற்போலவுமாம்.

இப்படிப்பட்ட சகவாஸ தோஷத்தால் இந்தியர் தேசமானது இப்பொழுது நிலைகுலைந்து நிர்க்கதியாய்த் தவிக்கின்றது. பெற்ற தாயைப் பீடித்தரோகம் பிள்ளையைபாதிக்காது விடுமா? நல்லமரத்தில் புல்லுருவிபாய்ந்தால், மரம் போரைவிழுந்து வலுவிழந்து தான் போகும். மரத்தின் ஜாதி நல்லதாயிருந்தாலும் சேர்க்கையின் தோஷத்தால் அது கெட்டுப்போகும்.

அப்படிப்போல, இக்காலத்தில் ஸ்வதேசிய சிந்தை சமஷ்டிமனத்திலுதித்து எல்லாரையும் ஆட்டினாலும், நல்லமன முடையவர்கள் நற்சிந்தையோடு உடல், பொருள், ஆவிகளையும் தத்தம் செய்துழைத்து வந்தாலும், புல்லுருவிபோலும் புன்மையாளர் சிலர் கள்ளத்தபஸ் செய்து ஊருக்குள் ளிருந்து ஒன்றுமறியா உன்மத்தர் பலரைத் தூண்டி விட்டு "இந்தப்பூனையும் பால்குடிக்குமா!" வென்று பதுங்கியிருந்து பார்த்து வருவதால், ஸ்வதேசியகாரியம் மிகப்பங்கப்பட்டு, தேசத்துக்கும் துரைத்தனத்துக்கும் ஹானிவிளைந்து வருகிறது. இவர்கள் கொடுமையை நீக்க வேண்டு மென்று மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி யவர்கள் அவருடைய 85-வது ஆப்தபூர்த்தியன்று அதிக உருக்கத்தோடு எல்லாரையும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்ததென்று மரத்தையெல்லாம் அடியோடு வெட்டியழித்து "காண்டாவன மழித்தது போல்" அழித்துவிடலாமா? புல்லுருவியைப்பிடுங்கி யெறிந்து அதன் வேர் மரத்தில் பற்றாதபடி பாதுகாப்பதே பலரும் ஒப்பத்தக்கதோர் உத்தம சிகிச்சையாம். இஃதை ஜனசமூகத்தார் தாமே செய்யல் வேண்டும்.

இப்படிப்பட்ட துர்ஜ்ஜனர் சகவாஸத்தாலேயே இவ்விவேகசிந்தாமணியும் வில்லங்கத்துககாளாகி வருந்துகின்றது. எழுதிக்கொடுத்த விஷபத்தை விலையுங்கொடுத்துக் காலந்தாழ்த்தாமல் அச்சிட்டுவாங்குவது அருமையிலும் அருமையாயிருக்கிறது! இதுவும் காலத்தின் கொடுமையேயென்று கர்த்தாவைத்தொழுது காரியத்தை நடத்திக்கொண்டு போகிறோம். சமஷ்டிமனம் தேறினால் வியஷ்டிமனம் ஏறும். சமஷ்டிமனம்பொங்கினால் வியஷ்டிமனம் கூத்தாடும். குரங்கு சேஷ்டை செய்து கூத்தாடும் வியஷ்டிமனத்தை அடக்கியாள்வாரில்லையே யென்று அங்கலாய்க்கிறோம்.

---

## SANDHYA SERVICE, OR, SALVATION THROUGH THE WORSHIP OF GOD IN TIME.

### "ஸந்தியா வந்தனம்" என்னும் காலவந்தனம்.

"ஸந்தியா வந்தனம்" என்றால பகலும் இரவும் ஸந்திக்கும் காலத்தில் அக்காலத்தைபேதேவதையாகப்பாவித்துச்செய்யும் வந்தனம். இதுபிராஹ்மணர்களுக்குமட்டுமன்றி க்ஷத்திரிய வைசியர்களுக்குமுண்டு. பிராஹ்மணர்கள் வைதீக மார்க்கமாகச் செய்வார்கள்,

மற்ற இருவருணத்தாரும் தாந்திரீக மார்க்கத்தையனுசரித்துச் செய்வார்கள். வேதத்துக்கும், தந்திரம் அல்லது ஆகமத்துக்குமுள்ள வித்தியாசமென்ன? வேதம் பொது : ஆகமம் சிறப்பு. வேதமந்திரங்கள்பொதுவாய் எல்லா அவஸ்தைக்கும் பொருந்தும், ஆகம விதிகளோ சங்கல்பித்துக்கொண்ட அளவுக்குப் பொருந்தும். உதாரணமாக, "அஹம் அஸ்மி' என்கிற சுருதி வாக்கு பாரமார்த்திகம், வியவஹாரார்த்தம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும். "நான் தேவனாயிருக்கிறேன்" "நான் மனிதனாயிருக்கிறேன்," "நான் சிவனாயிருக்கிறேன்" என்பது சிறப்பு. சுருதி வாக்கு தத்துவாதீதமாயிருந்து தத்துவார்த்தத்துக்கும் இடங்கொடுக்கும். ஆகமம் அல்லது தந்திரமோ உபாஸனா நிமித்தம் ஒரு தேவதையை சங்கல்பித்துக்கொண்டு, அந்த தேவதையோடு இரண்டறக்கலக்கும் வழியைப்போதிப்பதாம். இப்படி ஒன்றொன்றாக "நான் நீ", "நான் நீ" யென்று அபேதமாகப் பார்த்துக்கொண்டே போனால், "நினைத்ததெல்லாம் நான்" என்கிற பொது இலக்ஷணம் ஏற்படும். அப்பொழுது நினைப்பவன், நினைவு, நினைபொருள் ஆகிய மூன்றும் ஒன்றாகத் திரிபுடி ரஹிதமான அத்வைதஞானம் சித்திக்கும். "நான் நீ" யென்று திரிபுடி ஸஹிதமாக அறிவது சிறப்பு ஞானமாம். வைதீகத்துக்கும் தாந்திரீகத்துக்குமுள்ள வித்தியாஸம் இதுவேயாம். இது நிற்க, "ஸந்திய" சப்தத்துக்கு அர்த்தமென்னவென்று விசாரிப்போம். ஸந்திப்பதினாலுண்டாவது ஸந்திய. இப்படிப்பட்ட ஸந்தி காலை, மாலை யாகிய இரண்டு ஸந்திகள் தானென்றும், மத்தியாஹ்நமும் (உச்சிநேரமும்) ஒரு சந்தியே ஆதலால் முச்சந்தி யுண்டென்றும் சொல்வர். பகலும் இருளும் சந்திப்பது ஸந்தி. இவ்விரண்டும் ஸந்திப்பதினால் இருளும் ஒளியும் கலந்துண்டாகும் ஓர் இலக்ஷியத்துக்கு தேவதை யென்றுபேர். இந்த ஸந்தியா தேவதை ஸ்வயம்பிரகாசமான பிரஹ்மதேஜஸும், இருட் பிழம்பான மாயையும் சேர்வதுமுதல், சூரியனும் சாயாதேவியும் அல்லது விளக்கின் ஒளியும் அதன்சாயையும் சேர்வதுவரையில் எல்லாவற்றிற்கும் பொருந்தச்சொல்வது பொது. சூரியன் சாயாதேவியின் சந்திப்புக்கு மாத்திரம் பொருந்தச்சொல்வதுசிறப்பு.

காலையின் சந்தியும், மாலையின் சந்தியும் கிழக்கிலும் மேற்கிலும் நமக்குக் கட்புலனாகத் தெரிகிறது. அப்படியே மத்தியாஹ்ந காலத்திலும் உச்சியிலுள்ள சூரியனும் அதன்நேர் கீழே பாதாளத்திலுள்ள சாயையும் சந்திக்கிறது. இவ்விரண்டின் சந்திப்பு பூமியைச்சுற்றிலும் வளையாகாரமாய்ச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பகல் நேரத்தில் சூரியப்பிரகாசத்தின் கானல் விசேஷத்தால் இது ஸ்தூலக் கண்பார்வைக்குப் புலப்படவில்லையானாலும், சூரியக்கிரஹணத்தின்போது சந்திரனுடைய சாயை பூமியில் படுவதைக்கொண்டும், சந்திரகிரஹணத்தின் பொழுது பூமியினுடைய சாயை சந்திரனில் படுவதைக்கொண்டும் புத்திமான்கள் ஊகித்தறியலாம். "கிரஹணஸ்பரிசகாலம்" என்று சொல்வது இந்த சாயை விழுங்காலமே. இப்படி முச்சந்தியுண்டாக, இந்த மத்தியாஹ்நத்தைப்போலவே நடுநிசி காலமும் ஒரு சந்தியாகிறது. ஆகசந்தி நாலு ஏற்படுகிறது. இந்த நாலு சந்திக்கும் தனித்தனியுருவுமுண்டுபோல், இந்நாலின் சமஷ்டியுருவமொன்றுண்டு. அது தான் காயத்ரீ தேவி. இந்த காயத்ரீ தேவிக்குரிய மந்திரம் காயத்ரீ. "காயத்ரீ" என்றாலே, அதனை ஜபிப்பவர்களை இரக்ஷிப்பதுஎன்று பொருள்படும்.



ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி, துரியம் என்கிற நான்கவஸ்தைகளுக்கு சரியாக இந்த நாலுசந்தியா தேவதைகளும் ஏற்பட்டுள்ளன. அண்டத்திற்போல் பிண்டமுமாதலால், இரண்டிற்கும் சமத்துவமுண்டு. காலைசந்தி ஜாக்ரதாவஸ்தை மத்தியாஹ்நம் ஸ்வப்நாவஸ்தை: கானற்சலமென்பது சொப்பன திருஷ்டியேயன்றி வேறல்ல. சாயஸ்ஸந்தி சுஷுப்தியவஸ்தையாம். நடுநிசியில் இருட்பிழம்பைக் கிழித்துகொண்டு அதிலுள்ளவெளிச்சத்தைக்காணும் சக்தியொன்றுண்டு. அது துரியாவஸ்தையாம். இருளின் ஸ்வபாவ மறிந்தால் அதுஒளியாக விளங்கும். "இருளில் ஒளி" யென்பது உண்மையாகஉள்ளதே. இருளடைந்தமனத்தால் அவ்விருளொளியைக் காணலாகாது. ஆனால் இருள்கடிந்த மனம் அதைப் பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாகக்கண்டு தரிசிக்கும். இந்தத்தரிசனமே துரியதரிசனமாம். இவை யெல்லாம் தியானயோகத்தில் தேர்ந்தவர்களுக்கு விளங்கலாம், சிறு பிராயமான பிள்ளைகளுக்கு என்ன தெரியும்? பொய்யும் வினையும் பொதிந்து மனக்கண் பஞ்சடைந்த உலகஞானிகள் குழந்தைகளுக்குஎன்னதெரியுமென்று வெகு பெரிய நனமாகச் சொல்கிறார்கள். ஆனால் குழந்தைகளுக்கு தெய்வம் விளங்குவதாயிருப்பதுபோல், வினைமுதிர்ந்த வயதிற்பெரியோருக்கு விளங்குவதாயிருந்தால் இந்தக் காலத்துக்குக் கலிகாலம் என்கிற பெயர் வந்திராது. குழந்தைகள் மனம் மஹா துல்லியமானது. ஆசாபாசங்களால் இருளடையாதது. உலக வழியில் சிக்கிப்பின்னலுறாதது. பந்தத்தினால் இன்னும் கட்டுப்படாதது. அறிவே ஸ்வரூபமாயுள்ள தேவியின் இரகஸிய நாமங்கள் ஆயிரத்தில் அதிமுக்கியமானது "ஆபாலகோபவிதிதா:" எனின், ஏழைக்கெளியவள்என்பதுபோல் குழந்தைகள் அறிவுக்கெட்டும்படியானவள் ஸ்ரீதேவி. ஆதலால் தான் ஏழுவயதானவுடனே பிராஹ்மணச் சிறுவர்களுக்கு பிரம்மோபதேசம் செய்யவேண்டுமென்பது. இந்த முக்கியமான ஸம்ஸ்காரத்தைப்பெரும்பாலாரும் "பூணூல் போடுகிறது" என்னும் வெறும் ஸம்பிரதாயத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

மந்திரங்கள் சொல்லிவைக்கும்வாத்தியாரை குழந்தைகளுக்கு மந்திரங்களின் கருத்தும், செய்சடங்கின் அருத்தமும் விளங்கச் சொல்லுமென்றால், "இதென்ன சங்கடமாயிருக்கிறது!" என்கிறார். காசுவாங்கமட்டும் ஜாதககர்மம் முதல் தொடங்குகிறார். இப்படி காசின்மேல் கருத்தைச் செலுத்திவிட்டு கர்மலோபம் செய்து தான் கலிமுதிர்ந்துவிட்டது! "கலிஸாது, ஸ்திரீஸாது, சூத்திரஸாது" என்ற ரிஷிவாக்கியப்படி கலிமுதிர்ந்தாலும், 'கலிஸாது" என்கிற குணமொன்று அதனிடமிருக்கிறது. காலம் முதிர முதிர அந்தியம் கிட்டுகிறது சகஜம் தானே. ஆகையால் கலிமுதிர்ந்தகாலத்தில் ஸாதுக்குணம் இலகுவில் சித்திக்கும். ஏனென்றால் அனுபவமுதிர்ச்சியால் நேரிடும் விரக்தியைப்போல், சங்கல்பசிக்ஷா பூர்வமாய் அப்பியாசம் அவ்வளவு நன்றாகப் பலிக்காது. ஆகவே, இக்காலத்தில் "வைதீகப்பூதஞ்சி" செய்யும் வாத்தியார்களைவிட லோகானந்தத்தை யனுபவிக்க உண்மையாக வுழைத்த லௌகீகர்கள் ஸ்வானுபவத்துக் கருகமாம் மனோபக்குவமுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனதுபற்றி ஹிருதய சுத்திக்கின்றியமையாத ஸந்தியா வந்தனம் லௌகீகர்களால் பக்தி சிரத்தையோடும் அனுஷ்டிக்கத் தக்கதாயிருக்கிறது.

ஸந்தியா வந்தன மந்திரங்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டுமென்பது நமது கருத்தல்ல.

அர்த்தம் போட்ட புஸ்தகங்கள் சில அச்சிட்டுவெளியாகியிருந்தாலும், "பிரஹ்மோபதேச" லக்ஷணங்கள் பொருந்திய ஸந்தியா வந்தனம் குருமுகமாகவே கேட்டு அனுஷ்டிக்கற்பாலதாம். இங்கே செய்யவேண்டியதன் அவசியத்தைமட்டும் வற்புறுத்த விரும்புகிறோம். ஸந்தியா வந்தனம் அர்க்கியம், தியானம்,உபஸ்தானம் அல்லது ஸ்தோத்திரமென திரிகண்டமாய் விளங்கும். அர்க்கியம் என்பது பூஜார்த்தமாகவிடும் ஜலரூப தர்ப்பணம். "ஆபோவா இதம் ஸர்வம்" என்னு மந்திரத்தினால் இந்த எல்லாம் ஜலமயமாக (அதாவது, ரஸமாத்திரமாக) இருக்கிறது. இதை இக்காலத்தார் ("Liquid Crystal') திரவமயமானஸ்படிகஸ்வரூபம் என்று அர்த்தங்கொள்ளும் "பிரணவஆப:" ரூபமாய்க்கண்டு அதிசயித்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஸ்படிகலிங்கமென்று கொண்டாடிப்பூஜிப்பது இந்த உண்மையையும் இதற்கு மேலுள்ள தத்துவத்தின் தரிசனத்தையும் தன்னை உபாஸிக்கும் உண்மையாளனுக்கு அளிப்பதாயிருக்கிறது.

ஆகையால் ஜலமயமாயிருக்கும் எல்லாவற்றையும் மந்திரத்தினால் ஆவாஹனம் செய்து ஆகர்ஷித்துக்கொள்வது பிரதம காரியமாம். மனம் ஒரு வழிப்பட்டது மந்திர மாதலால், மனதை இயம, நியம, ஆஸன, பிராணாயாம, பிரத்தியாஹாரங்களால், ஒரு வழிப்படுத்தி(அந்தர் முகப்படுத்தி), தாரணைத் தியான ஸமாதியென்னும் தியான பூரணத்தினால் பூரிக்கச்செய்து, அப்படி பூரித்தமனதில், இந்த உள்-வெளிப் பிரபஞ்சங்களெல்லாம், பிரளயகாலத்தில் தோன்றும் பிரபஞ்சம்போல், எல்லாம் ரஸமயமாய் (சத்து மாத்திரமாய்) விளங்கப்பார்க்க வேண்டும். பிறகு இந்த சுத்தோதக புண்ணிய தீர்த்தத்தால், உபாஸகன் தன்னை யுள்ளும்புறமும் மார்ஜந்நிய ஆசமன மந்திரங்களால் புநிதப்படுத்திக்கொண்டு, புநர் மார்ஜந மந்திரத்தில் "புநர் ஸ்நானம்" செய்து, வாய்மையால் அஹத்தூய்மையும், மந்திர ஸ்நான ஆசமனங்களினால் புறத்தூய்மையும் (தேஹபரிசுத்தமும்) எய்தி, பரிசுத்த மாத்திரனாயிருந்து ஜகத்காரணனான ஸ்ரீமந்நாராயணனுக்கு (சூரியனுக்கு) அர்க்கியம் விடவேண்டும். (அதாவது பரிசுத்தமான தன்னைக்கொடுத்து அவரை ஆதரிக்கவேண்டும்.) பிறகு வியவஹார திசையில் தனக்கு இன்றியமையாச் சாதகர்களாயிருக்க கிரகதேவதைகள், மாஸ்தேவதைகளுக்கு (வாரங்கள், மாஸங்கள் ரூபமாயுள்ள காலதேவதைக்கு) அர்க்கியம் விட்டு ஸந்தியா கர்மத்தை முடித்து ஜபம் செய்ய உட்காருகிறான்.

ஜபத்தில் முக்கியமாய் பிராணாயாம அப்பியாசத்தினால் பிராண சுத்தி மனசுத்தி செய்துகொண்டு, நமது புத்தியைப் பிரகாசிக்கச் செய்கின்ற ஆத்ம தேஜஸ்ஸை, சூக்ஷ்ம திருஷ்டியால் கண்டுகொள்ளவேண்டி காயத்ரீ ஜபம் என்னும் "அந்தர்த்தியானம்" செய்கிறான். தியானம் பலித்து தியேயாகார மானபின், காயத்ரீ தேவியை இருப்பிடத்துக் கனுப்பிவிட்டு அவளுடைய அனுக்கிரகம் பெற்றவனாய் காலையில் மித்திரனையும், மத்தியாஹ்நம் ஆதித்தியனையும், சந்தியாகாலம் வருணனையும் துதிக்கிறான். இம்மூவரும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார மூர்த்திகளான மும்மூர்த்திகளைப்போல் தொழில்பற்றி நாம வேறுபாடன்றி வஸ்து பேதமில்லை. இந்த உபஸ்தான (ஸ்தோத்திர) மந்திரங்கள் அர்த்தத்தோடும் ஸ்வரத்தோடும் சொல்லப்பட்டால் இகபரமிரண்டுக்கும் சாதகமான உத்கிருஷ்ட சக்தியுள்ள மந்திரங்களாம். 7-வயது பாலன் முதல் 70 வயது விருத்தன் வரையிலுள்ள ஒவ்வொருவருக்கும் இவை அவரவர்கள் மனோபீஷ்டத்தைக் கொடுக்கும்படியான மந்திரசக்தி பொருந்தினவையாக விருக்கின்றன.



பிறகு திக்கு நமஸ்காரம் செய்து தான் செய்த கர்மங்களின் பலனை ஸ்ரீமந்நாராயணனுக்குப் பிரீதியாக அர்ப்பணம் செய்கிறான்.

பிறகு "மந்திரஹீனம்," "கிரியாஹீனம்", "பக்திஹீனம்," "உதாசினம்" முதலிய குற்றங்குறைகளை நீக்கிக்கொள்ள வேண்டி ஸர்வ பாபவிமோசனார்த்தம் ஸ்ரீகிருஷ்ண நாமத்தை ஸ்மரித்து எழுந்து தன் லௌகிக காரியங்களைப் பார்க்கிறான்.

இப்படிப்பட்ட ஸந்தியா வந்தனத்தை நியமனத்தோடு திரிகாலமும் செய்து வருகிறவன் இல்லறத்திலிருந்தே நல்லறஞ்செய்து துறவறத்தின் பலனும் மோக்ஷத்தை இல்லறத்திலிருந்தபடியே அடைகிறான்.

இது காலத்தை வந்தனம் செய்து (அதாவது, அநுசரணையோடு ஆதரித்துப்) பிழைக்கும் வழி. மிகவும் இகபர ஸாதனபோக்கியமானதாயிருக்கிறது.

ஜீவன் பிழைத்துக் கரையேற இன்னொரு வழியுமுண்டு. அதற்குக் "காலவஞ்சனம்" என்றுபேர். அது தீராதிதீரர்கள் யோகசாமர்த்தியத்தினாலும் தபோமஹிமையாலும் காலத்தை வென்று காலாந்த மனுநீதராய் (அத்தேஹத்திலிருக்கும்போதே) விளங்குமோர் உத்தமவழி. அது யோகிகள், தபஸிகளுக்கே ஸாத்தியமாம். மற்றவர்களுக்கு அதில் பிரவேசிக்க அதிகாரமில்லை.

---

# Sri Madura-Meenakshi Sobhanam.

## ஸ்ரீ மதுர-மீனாக்ஷீ சோபனம்.

"ஸ்மரேத் ப்ரதமபுஷ்பிணீம் ருதிரபிந்து நீலாம்பராம்
க்ரஹீத மதுபாத்ரிகாம் மாதவிபூர்ண நேத்ராஞ்சலாம்
கநஸ்தநபரோந்நதாம் கலிதசூலிகாம் ஸியாமளாம்
த்ரிலோசன குடும்பிநீம் த்ரிபுரசுந்தரி மாச்ரயே.—" ஸ்ரீமச்சங்கராசாரியார் அருளிச் செய்த
[த்ரிபுரசுந்தரீ ஸ்தோத்திரம்]

I

சோபனமடி பெண்காள் சோபனம்!
சுருதிமுடிந்திடம் சோபனம்!
கருதியஎண்ணம் கருத்திற்றரித்துப்
பருகியபானம் பிரேரணமாகவும்,
கருகியமனம் களைதீர்ந்தெழுந்து
உருகியமோஹம் உண்மையதாகவும்
விரகறியாத வேதாந்தப்பெண்ணுக்கு
மரகதமாணிக்கச் சோதியிலுதித்தாட்டுப்
பரகதிவேண்டிப் பாரினைவிட்டும்பின்
சுரகதியாநிற்கும் சுந்தரிபெண்ணுக்குச்
சோபனமடிபெண்காள் சோபனம்!
சுகரூபிஸ்ரீலோக-நாயகிசுதைக்குச் சோபனம்!

II

சோபனமடி பெண்காள் சோபனம்!
ஸௌந்தர்யலஹரி-ஸாத்வீகலக்ஷ்மிக்கு சோபனம்
பஞ்சேந்திரியங்களும் பறக்கத்துடிக்க
நெஞ்சேந்திரியத்தை நிலைக்கநிறுத்தி,—
கஞ்சிகாமாக்ஷி! கற்பகவல்லிநீ!
காமக்கிழத்தி! கார்முகில்வண்ணத்தி!
காரணகாரணி! காமத்திற்பூரணி!
என்றுமேயேத்தி யெந்நாளுந்தொழுது
கன்றுதன்தாய்பாற் குதித்தோடும்போல்
என்றுமென்மனத்தை யவள்பாலிருத்தக்—
கள்ளத்தைப்போக்கிக் காமத்தைவளர்த்த
காமேசுவரிதந்த பெண்ணுக்குச்சோபனம்!

III

சோபனமடி பெண்காள் சோபனம்!
ஸ்ரீபுரந்தரித்த சுந்தரிசுதைக்குச் சோபனம்!
திரிபுரநாயகி தீர்க்கஸுமங்கிலி
ஹரிபுராதவி ஐசுவரியநாயகி
எரிபுரமூன்று மெரித்தபுன்னகையினள்
திரிபுரமூன்றுந் தரித்ததோர்கையினள்
கிரிபுரமீன்றவள் கீர்த்திக்கிலக்கவள்
திரிபுரசுந்தரி தேன்மொழிநாயகி
திருவொற்றியூருறை திவ்யதேஜோவதி
ஸ்ரீகண்டிமுத்திரையள் ஸ்ரீகண்டர்பாங்கி
ஹரிசகோதரி ஆநந்தவல்லீஇ
அற்புதசுதைக்குச் சோபனம் சோபனம்

IV

சோபனமடி பெண்காள் சோபனம்!
செருவாட்சியூருறைச் செல்விமா புத்திரிக்கு சோபனம்!
அருவாயிருந்து உருவாயமர்ந்த அம்பிகைசுதைக்குச் சோபனம்!
உருவாயிருந்துபின் கருவாய்ப்புகுந்த உத்தமிசுதைக்குச் சோபனம்!
கருவாயிருந்துபின் உருவாயமர்ந்த காரணிசுதைக்குச் சோபனம்!
கருவாயும் உருவாயும் கருவுருவாயும்பின் மருவேயுருவாந்
திருவாயமர்ந்த திவ்யசொரூபிக்குச் சோபனம்!
திருவாயமர்ந்தபின் கருவாயிருந்து காலத்தே யுதித்த
கண்மணிபோலும் கருமணிப் பெண்ணுக்குச் சோபனம்!



சோபனமடிபெண்காள் சோபனம்! சுத்தமனத்தட்குச் சோபனம்!
நித்தியசுந்தரி நிர்மலதேஹி-அற்புதலோக-நாயகிபெற்ற
ஸௌபாக்கியலக்ஷ்மி மதுர-மீனாக்ஷிக்குச் சோபனமடிபெண்காள் சோபனம்!

# NAVARATRI PUJAH.

## நவராத்திரி பூஜை.

## போற்றி.

சிந்தாமணியதன்மேல் சிந்தைவைத்தேயுருகுகின்ற
எந்தாயவளீன்றஏகீபாவ புத்திரியாம்
நந்தாமணிவிளக்கின் நயவொளியாலுளங்கனிந்த
சிந்தாகுலசிதைச் சநகபிதா பொற்பாதம் போற்றிபோற்றி.

### 1902-ல் "ஆத்மார்ப்பணம்."

"பராபரன் செய்தீர்ப்பைப்பாரிலுள்ளோரறிய வெண்ணி
என்னென்னமாயமியற்றுவையோ நானறியேன்
என்னென்ன செய்கினுநீ ஏதேதியற்றிடினும்
உன்பிள்ளை யுன்னடிமை யுனக்கேநா னர்ப்பணங்காண்."

### 1905-ம் வருஷம்-வாலைதரிசனம்.

"துர்க்காலக்ஷ்மீஸரஸ்வதீதேவி
மஹிஷாஸுரமர்த்தநீ ஜய!
வித்தியாலக்ஷ்மீ ப்ரஹஸ்பதீம் வந்தே
அத்தியாத்மிக சாந்த நீதுபவ!
வித்தியாரம்பதினே விஜயதசமியாம்
ஹே அமிர்ததே! துவாம் வந்தேதுஸர்வதா."

### 1909-ம் வருஷம்-தேவிதரிசனம்.

ஆறாறுமாகியே ஐம்மூன்றாந்தானாகி
முன்னான்கு மூன்றோடு மூவாறுமாகிநின்றாள்
மும்மூன்று மொன்றுபத்தாய் மண்டலங்கள்மூன்றுருவாய்
நாலேசிவபுரமாய் நன்மதில்கள் மூன்றுஞ்சூழ்
வாசல்கள்நான்கோடு வாலைவித்தையம்பிகையாய்
தேவியவள்தான்திகழும் திவ்யபுரம்தான்கண்டு
ஆவிநெக்கு நெக்குருக ஆனந்தம்மேற்கொண்டு

பாவனாபூஜையதால் பண்டையதாம் வாசனைகள்
விருத்தியதேயாமென்று விட்டொழித்து வாசனையை
கிருதகிருத்திய பூசனையால் திருவருட்பாலுண்டேனே!

# தேவி ஸ்தோத்திரம்.

ஓம் மதுரமீனாக்ஷியை நம:

**"Evolution is the Law of Life."**
**"Number is the Law of the Universe."**
**"Unity is the Law of God."—Pythagoras.**

1 ஆறாறுமாகியே அமைந்துள்ள தத்துவங்கள்
அத்தனையு மொன்றான புவனமாகி இ இ இ ஈ.
3 ஐம்மூன்றுந் தானாகி யாதியாய் விளங்குமொரு
அக்ஷரங்கள் தன்னிலுறை யதிஷ்டான தெய்வமாகி
5 மூந்நான்கு படிகளால் மூர்த்தி கரித்தொளிரும்
அருவுருவி லுருவருவ மருவிலா அருக்கனாகி இ இ இ
7 மூன்றோடு தான்றோன்றி குணமென்ன புரமென்ன!
மூர்த்தமொ டமூர்த்தமாம் முத்திரையென்ன
9 மூவ்வாறு மாகிநின்றாள் வித்தையொடவித்தையாம்
கலைகளென்ன! காம்ய மென்ன!
11 மும்மூன்றும் ஒன்றாகி ஒன்றேயொன் பதுவாகும்
உன்னருமை நிருத்தமென்ன அ! அ! அ!
13 ஒன்றுபத்தாய் உற்பவித்த வுன்நாதர் கால்தூக்கி
யாடினதோர் ஆட்டமென்ன! அ! அ! அ!
15 மண்டலங்கள் மூன்றுசூழ மாதேவர் கூத்தடங்க
அம்மேயுன் மாயைசெய்த ஜாலமென்ன அ! அ! அ!
17 நாலே சிவபுரமாய் நல்லவஸ்தைக் கிலக்ஷியமாய்
நாதருடல் கொண்டோடி நான்மறையி லொளித்ததென்ன!
19 நன்மதில்கள் மூன்றுஞ்சூழ் த்ரைலோக்கிய நாதராக
ஆண்வேடம் பூண்டுநீ அகிலமெல்லாம் ஆண்டதென்ன!
21 வாசல்கள் நான்கோடு வாழ்மதுரைக் கோட்டைகட்டி
ஈசல்கள் பிறந்தவகை யெங்களையும் சிருஷ்டித்து
23 வாலைவித்தை யம்பிகையாய் வாழ்வரசு நடத்திவந்து
வீரக்கழல் கட்டியம்மே வெற்றியெல்லாம் பெற்றபின்னர்
25 தேவியவள் புரம்விட்டு திக்கற்ற நாதன்போல்
ஆவிதனை யொடுக்கிக்கொண்டு அருந்தவங்கள் செய்துகொண்டு
27 தான்திகழும் சாம்பவரைக் கூடிவாழ வேண்டுமென்று
தற்பரமாத் தானெழுந்து கைலாஸம் தானுழைந்து



29 திவ்யபுரம் தான்கண்டு தேஜோமய மாய்விளங்கும்
ஆனந்த பைரவரை ஆத்திரமாய்த் தான்கூடி
31 ஆவிநேக்கு நெக்குருக ஆனந்தம் மேற்கொண்டு
ஆனந்த பைரவரை அற்புதமாய்த் தான்கூடி
33 பாவனா பூஜையதால் பண்டையதாம் வாசனைகள்
பற்பலவாய்த் தானெழுந்து பிரிவுதன்னை யுண்டுபண்ண
35 விருத்தியதே யாமென்று விட்டொழித்து வாசனையை
வேதாந்த முடியேறி சித்தாந்த வூரடைந்து
37 கிருதகிருத்திய பூசனையால் சிந்தா மணிக்ரஹத்தில்
சிவனவனும் தேவியுமாச் சிறப்பாக் குடிபுகுந்து
39 திருவருட்பால் தான்சுரக்க தேவிசுந்த ரேசுவரரைக்
கூடிக் கலந்து குதூஹலம் தானிறைய
41 உண்டேனே உண்டேனே யவளுண்ணா முலையொழுகும்
மீனாக்ஷி சுந்தரேசர் மெய்யமுதப் பாலம்மே!
43 ஓம் மதுர-மீனாக்ஷியை நம: தத்தாத்ரேயரிஷி:
ஸத்யாநந்த: சாந்த அவதூதாத் மாநம்பஜே!

## SHORT STORY.
## "VIRAT RUPA" A TALE OF RIGHTEOUSNESS.

# விராட் ரூபா.

## 1. மகேந்திரபுரம்

விராட் என்னும் பதம் விராஜ் என்னும் தாதுவிலிருந்து வந்தது. விராஜ் என்றால் பிரகாசித்தல். விராட் என்றால் எங்கும் விளங்குந்தன்மையுடையவரான விசுவரூபிக்குச்சொல்லுகிறது. "ஓம் விசுவ ரூபாயைநம:" என்பது தேவியின் இரகஸ்ய நாமங்களில் ஒன்றுக்குச்செய்யும் வந்தனம். பிரணவஸ்வ ரூபியாயிருந்துகொண்டு எல்லாரூபங்களும் தானேயாக விளங்கும் தேவிக்கு நமஸ்கரிக்கிறேன் என்று அருத்தம். "விராட்ரூபா" என்பதும் தேவியின் இரகஸ்ய நாமங்களில் ஒன்றாயிருக்கிறது. "விராட்" என்றால் வியக்தமாய் விளங்கும் வஸ்துவுக்குச் சொல்கிறது. அவ்யக்தபிரஹ்மம் வியக்தமாய்ப் பிரபஞ்ச மாத்திரமாய் விளங்கும்போது அதற்கு "விராட்" என்றுபேர். "ஞேயப்பிரஹ்மம்" என்று சொல்வதுமுண்டு. "ஞேயப்பிரஹ்மம்" என்றால் அறியக்கூடிய பிரஹ்மம் என்று அருத்தம். 'சத்' மாத்திரமாயிருக்கும் பிரஹ்மத்தை சின்மாத்திரமாயிருக்கும் தேவியாலன்றி வேறுவிதமாய் அறிய முடியாது. சத்தும் சித்தும் இணைபிரியாச் சம்போகத்திலிருப்பதால், அவையிரண்டின் தாதாத்மியசம்பந்தத்திலுதிக்கும் ஆனந்தத்தையும் பிரிக்க முடியாமலிருக்கிறது. ஆகையால்தான் கடவுளுக்கு "சச்சிதானந்தம்" என்கிறபேர் பொருந்துவதாயிருக்கிறது. இந்த சச்சிதானந்தப்பரம்பொருளைக் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்." வாசாமகோசரமாய், மனாதீதமாயுள்ள இந்த பிரஹ்மத்தை யறிந்தவரில்லை யானால், அதை யவலம்பிப்பதெப்படி யென்றால், "அதுவானால் அதுவே சொல்லும்" ஸ்வபாவம் வாய்ந்த அப்பிரஹ்மத்தை ஸ்வானுபவத்தாலே யறிந்தனுபவிக்கலாமன்றி வேறு விதத்தால் முடியாது. சாணளப்பான் பூச்சிபோலும், நக்கிக்குடிக்கும் நாய்போலுமுள்ள ஜீவன், அகண்ட பரிபூரணமான சச்சிதானந்தப்பிரஹ்மத்தை யறிந்தனுபவிப்பது எப்படியென்றால், "மனத்தால் மனத்தை யறியலாம்" போல, அறிவால் அறிவை அறியலாம். சிற்றறிவைக்கொண்டு அது இருந்தவிடத்தில் அதை யறியும் உள்ளறிவை அறியலாம். உள்ளுணர்வு முதிர்ந்த விடத்து அவ்வுள்ளறிவுதானே எங்கும் கொடிபோல் ஓடிப்படர்

ந்து நிறைந்து நிற்க, உள்ளும் புறமும் நிறைந்த அவ்வுள்ளுணர்வில் "பரைஞானம்" என்னும் மேலறிவை அறியலாம். மேலறிவால் பேரறிவையும், பேரறிவால் பரப்பிரஹ்மத்தையும் அறியலாம். இப்படி ஞாதுர் ஞேய ஞானஸ்வரூபமான அறிவையறிந்து அவ்வறிவு அழிந்தவிடத்து திரிபுடீ ரஹிதமான ஞானத்தைப் பெறலாம். இதையே யோகமுறைபற்றிச் சொல்ல வேண்டுமாயின் "யோகஸம்யமம்" என்னும் யோக ஸாதனம் பெற்றவன் "தாரணத்தியான ஸமாதி" யென்னும் ஐக்கியபலசாமர்த்தியத்தால், விஷயங்கள் ஒவ்வொன்றிலும் புகுந்து பார்த்து, தனக்குப் புகலிடமாயிருக்கும் அவைகளை யெல்லாம் பூதங்களென்றறிந்து, பூதங்களிற் புகுந்துள்ள தன்னையே திரும்பிப் பார்ப்பான் அகமுகப்பட்டு நிற்பன்.

அகமுகப்பட்ட யோகி விஷயங்களை விட்டு (புலனறிவை யாராய்ந்தறிந்து புல்லறிவென்றுநீக்கி,) அவற்றை யறிவதற்குக் கருவியும் காரணமுமாயிருக்கும் கருவி கரணங்களில் தன் திருஷ்டியைச் செலுத்துவான். கருவி (இந்திரியம்) இருவகைப்படும். ஞானேந்திரியம், கர்மேந்திரியம் என்பவையாம். ஞானேந்திரியம் என்பவை, சப்த. ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களை யறிவதற்குதவியாயிருக்கும், காது, துவக்கு (தோல்), கண், நாக்கு, மூக்கு என்னும் இவ்வைந்துமாம். இவைகருவியாயின் இவற்றைக் கையாடுபவர் வேண்டும். அப்படிக் கையாடும் சக்திக்கு ஞானசக்தி யென்று பேர். அப்படியே கர்மேந்திரியங்கள் (வாக்கு, கை, கால், குதம், குய்யம் என) ஐந்தும், அவற்றை இயக்கும் (கையாடும்) சக்தி யாம் கிரியா சக்தியும் உண்டு.

விஷயங்களை விட்டு அகமுகப்பட்ட யோகி, "பொறி" யென்று சொல்லும் இந்திரியங்களின் தன்மையை (அவற்றுட்புகுந்தறிந்து) உணர்ந்து, அவையும் ஒரு சக்தியால் இயக்கப்பெறுதல் கண்டு, அந்த சக்தியின் செயலாலன்றி அவை விளங்காமை கண்டு, அக்கருவிகளும் ஜடமேயெனத்தள்ளி அவற்றை இயக்கும் (ஆட்டுவிக்கும்) சக்தியை ஆராய விரும்புகிறான். மேலே ஞானசக்தி, கிரியாசக்தி யென இரண்டுளவெனக் கூறினோம். இவை யிரண்டிலும் புகுந்து பார்த்தால், இவை இயங்குவது தன் ஸ்வபாவத்தாலில்லை யென்றும் ஆனால் இவை யிரண்டையும் ஆட்டுவிக்கும் மனோசக்தி யொன்று இருக்கிறதென்றும் விளங்கும். இது புகுந்து பார்க்கும் சக்திபெற்ற யோகிக்கு நிதரிசனமாக விளங்கும். கிரியாசக்தி, ஞானசக்திகளிலும் தன்னியக்கம் (தானாக இயங்குந்தன்மை) இல்லையென்று கண்டயோகி அவற்றின் சலனகாரணத்தை ஆராயும்போது மனோ சக்தியென்னும் வேறொருசக்தியுண்டென்பதை யுணர்கிறானென்றும் சொன்னோம்.

மனோசக்தி யென்னவென்று ஆராயப்புகுங்கால் அது ஐந்து வாசலுள்ள தோர் ஆகாயக்கோட்டையென்று உணர்கிறான். இந்த ஆகாயக்கோட்டைக்குள் புகுந்து பார்க்க யத்தனிக்கையில் ஒரு அதிசயம் காண்கிறான். அஃதென்ன வெனில், ஞானசக்தி யென்று தான் இதற்குமுன் நினைத்தது, இந்த ஆகாயக் கோட்டையிலிருந்து செல்லும் ஒரு சூக்ஷ்மநாடி (சக்திநடக்கும் மார்க்கம் "நாடி") யன்றி வேறல்ல வென்று காண்கிறான். இஃதையே பௌராணிகவசனமாகச் சொல்லவேண்டின்:—இந்த ஆகாயக்கோட்டைக்கும், ஞானேந்திரிய மென்று சொன்ன கருவிகளிந்திருக்கு மிடத்துக்கும் ஒரு சுரங்கவழி யிருக்கிறதென்று கண்டானெனச் சொல்லவேண்டும். அதிரகஸியமான அந்தச் சுரங்கவழியே சென்று பார்க்க, அங்கே ஒவ்வொரு பிலத்துவாரத்துக்கும் ஒரு வாசலிருக்கக்கண்டான். அஃது ஒவ்வொன்றையும் ஒரு மாயாவி காத்து வந்தான். அந்த மாயாவி யாரையும் உள்ளே விடுகிறதில்லை. உள்ளேவிட்டால் பின்னர் வெளியே விடுகிறதில்லை. தன்னை யறிந்த தத்துவஞானிகளன்றி மற்றவர்களுக்கு அந்த பிலத்துவாரக்கதவுகளைத்திறக்க மூட சாத்தியமில்லை. அந்த ஆகாசக் கோட்டையில் ஸப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்னும் ஐந்து பிலத்துவாரங்களுண்டு.

(1) கந்தம் என்கிற கதவைத்திறந்துஉட்சென்றால் பிறகு ஸகலவித கந்த பரிமளவஸ்துக்களையும இச்சாமாத்திரத்தால் அனுபவிக்கலாம்.

(2) ரஸம் என்கிற மற்றொருகதவைத்திறந்து உட்புகுந்தால், ஷட்ரஸபேதங்களையும்,



ஸகல்மான மதுவர்க்கங்கள், பழங்கள், உண்டிகள் முதலான வற்றின் உருசியையும் ரஸ மாத்திரையினால் இச்சித்தவாறு உருசி கண்டுணரலாம்.

(3) ரூபம் என்னும் பேர் வெட்டியுள்ள கதவைத் திறந்து கொண்டு உட்புகுந்தால் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை முதலிய அப்ஸரஸ்திரீகளின் அழகையும் மற்றப்படியுள்ள ஸகலவிதமான சுந்தர ரூபங்களையும் கோரரூபங்களையுங்கூட இச்சித்தவாறு கண்டு அனுபவிக்கலாம்.

(4) ஸ்பர்சம் என்கிற கதவைத்திறந்து சென்றால் ஸர்வபோகங்களையும் இச்சித்தவாறு அனுபவிக்கலாம்.

இந்த ஆகாசக்கோட்டை யில் "ஆபோவா இதம் ஸர்வம்" என்று சொல்லப்பட்ட மந்திரதீர்த்தம் ஒன்று இருக்கிறது. பூர்வத்தில் அராபிக்கதைகளில் சொல்லப்பட்ட மந்திரவாதிகளும், சூனியக்காரர்களும் இந்திரஜால மஹேந்திரஜாலக்காரர்களும், இவ்வித ஆகாசக்கோட்டையினுள் புகுந்து இம்மந்திர தீர்த்தத்தில் மூழ்கி, அந்த ஜலத்தைக்கைக்கொண்டு திரும்பி வரும் சக்திபெற்றவர்கள். "அலாடின்" கதையில் சொன்ன மந்திரவாதி (Magician) கூட இப்படிப் பட்டவன் தான்.

இந்த ஆகாசக்கோட்டையில் புகுந்து அதனுள்ளிருக்கும் சுரங்கத்திலுள்ள அதிரகஸியமான மந்திர தீர்த்தத்தில் முழுகி அந்த தீர்த்தத்தை யெடுத்துக் கொண்டு வெளிவரக்கூடிய சாமர்த்தியம் பெற்றவர்களுக்கு இவ்வுலகத்தில் சித்திக்காத காரியம் இல்லை. தன, தானியம், ஐசுவரியம், சம்பத்து, இகபோகம், செல்வாக்கு, சாய்கால் எல்லாம் அவர்களுக்கு இச்சித்த மாத்திரையில் உண்டாகும். ஆனால் ஒரு ஆபத்து! உள்ளே போனவர்கள் பூர்வத்திலிருந்தது போலவே உருமாறாமல் வெளிவருவது முடியாதகாரியம். உருமாறுவது மட்டுமல்ல. பலர் உள்ளேபோய் பின்வெளியேவர வழிதெரியாமல் தயங்கித்தவித்துத் திண்டாடிவிடுகிறார்கள். வழிதெரிந்த சிலருக்கும் பிலத்துவாரக்கதவு உள்ளேபோகவழிவிட்டதுபோல், வெளியே போகவழிவிடாமல் தடுத்துவிடுகிறது. இவர்கள் உலகத்தாரோடு உறவிழந்து உன்மத்தர்களாய்க் குதிக்கிறவர்க ளாய்விடுகிறார்கள்.

இந்த ஆகாசக்கோட்டைக்குள்ள நாலு கதவுகளையும் பற்றித்தான் சொன்னோம். ஐந்தாம்வாசல் ஒன்று இதற்கு உண்டு. அதற்கு "மேலைவாசல்" என்று சித்தர்கள் பேர்வைத்துப் போற்றியிருக்கிறார்கள். அந்த வாசல் காமிகளுக்கும், உலகவாசனையுள்ளவர்களுக்கும், உட்பற்று (அகப்பற்று) நீங்காத 'உப்பிலியப்பன்' களுக்கும் (அப்படியென்றால், புறப்பற்று நீங்கி ஆகாசக்கோட்டை புகுந்து புறப்படக்கற்றமாயாவிகளுக்குங்கூட என்று அருத்தம்) திறக்காது. மற்றவர்களுக்கு இருப்பதும் கூடத் தெரியாது. இதற்கு நேர் எதிராக "அதோமுகவாசல்" என்று ஒன்றிருக்கிறது. அது "அதோகதி" யென்னும் பிலத்துவாரத்தின் வழியாக நேரே ரௌரவாதி நரகங்களிருக்குமிடத்துக்குக் கொண்டுவிடும். இந்த ஆகாசக்கோட்டையின் உள்ளே சென்று வெளிவரமுடியாமல் சிக்கியவர்களை யெல்லாம் அவரவர்கள் காலாந்தியத்தில், யமதூதர்கள் தர்மராஜாவின் பட்டோலையும் கையுமாக வந்து, "அதோமுகவாசல்" வழியாக வெளியே அழைத்துப்போவார்கள். புண்ணியவான்களை அவரவர்கள் பண்ணின புண்ணியபலனுக்குத் தக்கபடி மற்ற நான்குவாசல்கள் வழியாக போகலோகங்களுக்கு அழைத்துச் செல்வார்கள்.

இகபோக இச்சைதீர்ந்த முமுக்ஷுக்களான மஹாயோகிகள் இந்த ஆகாசக்கோட்டையில் புகுந்து வரத் தாராளமாய் ஸ்வாதீனம் பெற்றவர்களாயினும், அவர்கள் தங்களுடைய தபஸ் முடியும் பொருட்டு இவ்வாகாசக்கோட்டையுள் புகுந்து "மேலைவாசல்" திறக்கும் காலத்தை யெதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பார்கள். அந்த வாசல் தானாக வருஷத்துக்கொருமுறை தெய்விக சின்னதயர்க்குத் திறப்பதைத்தான் "ஸ்வர்க்கவாசல்" திறப்பதென்று கோயில்களில் திருவிழாக்கொண்டாடுகிறார்கள். அதுதிறக்கும் காலத்தை "வைகுண்ட ஏகாதசி" யென்று சொல்வார்கள்.

"மூலாதார முக்கட்டலகுச்சியில்
நாலுவாசல் நடுவிலிருப்பீர்காள்
மேலைவாசல் வெளியுறக்கண்டபின்
சாலன்வார்த்தை களவிலுமில்லையே!"

என்பது எம்பென்திருமூலதேவர் அருளிச்செய்ததோர் திவ்வியசக்திவாய்ந்த திருமந்திரம். இந்த ஆகாயக்கோட்டையில் வசிப்பவன் யார்? இங்கேபோய்வர ஸ்வதாவாக ஸ்வாதீனம் பெற்றவன் யார்? இந்த ஆகாசக்கோட்டைக்கு மஹேந்திரபுரம் என்றுபேர். இங்கே உலகத்திலிருந்தும் இக்கோட்டைக்குள்போய்வர ஸந்தது பெற்றவர்கள் உபேந்திரனைப்போல் உலகத்தில் வாழ்வு பெற்றுத் தாழ்வொன்றும் வாராமல் வசிப்பார்கள்.

---

## SHORT STORY.

## "VIRAT RUPA"

## விராட் ரூபா.

### II உபேந்திரன்

"மஹேந்திரபுரம்" என்னும் ஆகாசகோட்டையில் புகுந்து புறப்படும் சக்திவாய்ந்த உபேந்திரன் என்னும் உத்தமபுருஷன் ஒருவனிருந்தான். அவனுக்கு மஹேந்திரபுரத்தின் கோட்டைவாசல்கள் நாலும் வழிவிடும் என்றால் அவனுக்கு போகபோக்கியங்களுக்குங் குறைவென்ன? அவனிடத்துள்ள வாஸனைத்திரவியங்களுக்கு அளவில்லை. அவன் உண்டுருசியறியாத ரஸிகவஸ்து உலகில் ஒன்றில்லை. அவனிடத்திலுள்ள சித்திர விசித்திரமான படங்களுக்கும் அழகான மண்டபங்களுக்கும் கணக்கில்லை. அவன் அனுபவித்த ஸ்பரிசசுகங்களுக்கும் குறைவில்லை. அவனுடைய பஞ்சணை மெத்தையின் ஸ்பரிசம் பட்டாலும் ருத்துயரத்திலாழ்ந்தவர்கள் துயராறித்தூங்குவார்கள். தீரா வியாதியஸ்தர்களும் வியாதி தீர்ந்து சுகமடைவார்கள். இப்படி தேஹத்தாலனுபவிக்கக்கூடிய சுகங்களெல்லாம் அவனிடம் குறைவின்றி யிருந்தும், அவனுக்கிருந்த மனக்குறை அவனை நிர்பாக்கியனாக்கிவிட்டது. உண்டு உறங்குவதற்கான வஸ்துக்களில் குறைவொன்றுமில்லாவிட்டாலும் அவனுக்கு அவையெல்லாம் மனத்திருப்தியை யுண்டுபண்ணவில்லை. அலாடினைப் போல் அவன் இவைகளில் நினைத்ததையெல்லாம் பெறத்தக்க பாக்கியம் பெற்றவனாயுமிருந்தான். நல்ல விவேகியாதலால் இவையெல்லாம் அழியும் வஸ்துவென்றுணர்ந்து அவற்றில் பற்று வைத்திலன். அவன் தனக்கு அன்னியமாயுள்ள இந்தஐசுவரியங்களால் வரும் சுகம் கனவிற்கண்ட சுகம்போல் நொடியில் அழியத்தக்கதென்று கண்டான். அவனுள்ளவரையில் இந்த போக்கியங்களுக்கு ஒரு குறையுமில்லையாயினும், தனு கரணபுவன போகங்களெல்லாம் பொருந்திய தன்னை நிர்ப்பாக்கியனாக நினைத்து வருந்தினான். தேஹம், இந்திரியங்கள், உலகங்கள் எல்லாம், அவைகளை யறிவானில்லாவிடத்து புருஷனில்லாப் பெண்ணின் அழகுபோல் வியர்த்தமாமென்று நன்றாய் அறிந்துகொண்டான். தன்தேஹமோ மின்னலைப்போல் தோன்றி மறைவதென்று நன்றாயுணர்ந்தான். தனது இந்திரியங்களோ ஜாக்கிர, ஸ்வப்ன, சுஷுப்திகளில் தோன்றி மறைந்து விகாரப்பட்டுக்கொண்டிருப்பதை நிதரிசனமாய்க்கண்டான். தேஹம் அழிவுள்ளதென்று எப்போது உணர்ந்தானோ அப்பொழுது உலகமும் அப்படியேயென்று நினைத்தான். இப்படி தனக்குள்ளவற்றிலெல்லாம் அநித்தியப்பொருள்களென்று பற்றுவிட்டுப்போக, எதையும் எனது என்றுசொல்லி மோஹிக்கும் விகாரமும் அவனை விட்டொழிந்தது. "எனது" என்னும் மமகாரம் நீங்கிய இந்த உத்தமபுருஷன் வேறு என்னத்தை நினைத்து துக்கிப்பான்? அவன் எதையோ நினைத்து சதா விசாரத்தில் மூழ்கி துக்காக்கிராந்தனானான்.

அஃதென்ன? காசுபணம், பசுநிறைந்த கூடகோபுரங்கள், மாடமாளிகைகள், ஸ்திதிமதிகள் எல்லாமிருக்க ஒருவன் அநாதைப்பிள்ளையைப்போல இப்படி ஏக்கம்பிடித்து நின்றால் அவனை யென்னென்று சொல்கிறது? உலகத்திலுள்ள சிற்றின்பங்களில் அவன் கைக்கெட்டாதது ஒன்றுமில்லை. அப்ஸரஸ்திரீகளெல்லாம் அவன் சொன்னபடி நடப்பார்கள். அவன் கைபட்டால் உவர் நிலத்திலும் பயிர்வளரும். ஸ்பரிசவேதியைப்போல், அவனுக்கிஷ்டமிருந்தால் தான் தொட்டதையெல்லாம் பொன்னாகச் செய்யும் சக்தி யவனிடமுண்டு. அவன்மட்டும் இஷ்டப்பட்டுத் தொட்டால் பட்டமரம் பாலொழுகும்! இப்படிப்பட்ட புருஷன் இவை யெல்லாவற்றையும் திருணமாக வெண்ணி சிந்தாக்கிராந்தனா யிருக்கிறானென்றால், உலகத்தாருக்கு அது அதிசயமில்லையா? உப்புப் புளி தேடி வயிறு வளர்த்துப் பிழைக்க அவனவன் உலகத்தில்படும்பாடு அவனவனுக்குத் தெரியும். இந்த உபேந்திரன் குறையை உலகத்தார் எப்படி அறிவார்கள்!



உலகத்தார் தன்குறையை யறிந்து நிவர்த்திக்கவேண்டுமென்று அவன் சிந்தாக்கிராந்தனாயில்லை. உலகம் அவனுக்கு துச்சமாகப் போய் விட்டது! உலகத்தின் பேரில் அவனுக்கு வெறுப்பொன்றுமில்லை; ஆனால் விருப்புமில்லை! தன்னில் விருப்புவெறுப்பற்றவனை உலகம் என்ன செய்யமுடியும்! உலகம் வலியிழந்தவிடத்தும் உலகமாயை அவனை விட்டதில்லை. ஆசையால் அவன் தியங்கித்தவித்தான். உலகமாயையை அறிவதெப்படி? பிடாரன் மகுடிவளையிலிருக்கும் பாம்பை வலிய வெளியிலிழுத்து ஆட்டுவதுபோல், இந்திரிய சுகங்களென்னும் கானரஸத்தால் தன்னை யாட்டுவிக்கும் மாயையைக்கண்டு மயக்கந்தீரவேண்டுமென்று அவன் அளவிலா ஆவல்கொண்டான். ஆவல்கொள்ளவும் சிந்தாக்கிராந்தனாய் போகபோக்கியங்களில் விருப்புவெறுப்பற்று அதேநினைவாக விருந்தான்.

ஒரு நாள் உபேந்திரன் ஆகாயக்கோட்டையில் புகுந்து மாயாவி ரூபங்களை யெல்லாம் வெளியே தள்ளி நாலு வாசலையும் மூடி நன்றாகத்தாளிட்டுக் கொண்டு, மாயை மயக்கம் இப்பொழுது எப்படிப்பற்றுமென்று மனதை ஒருநிலைப்படுத்திப் பார்த்திருந்தான். அலையோய்ந்த சமுத்திரம் போலுள்ள தன்மனத்தில் சமுத்திரசப்தம்போல் பிரணவமயமான சப்தமொன்று உதித்தெழுந்து "மோனகானம்" செய்வதைக்கேட்டு அதிசயித்து நின்றான். இந்த "மோனகானம்" எங்கேயிருந்து வருகிறதென்று சுற்றுமுற்றும்பார்த்தான். நாலுவாசல்களும் தாளிட்டுமூடினபடி பந்தோபஸ்தாயிருக்கக்கண்டான். இந்த ஆகாயக்கோட்டையில் ஒருநாளும் தான்கவனித்திராத இந்தஅதிசயமான "மோனகானம்" எங்கேயிருந்துவருகிறதென்று மேன்மேலுமூன்றி விசாரிக்கலானான். அந்த மோனகானத்தை கவனிக்க கவனிக்க அவன் சிந்தையிற்புகுந்து அவனையெரித்த தாபாக்னிதணிந்து அவனுள்ளத்திலொருநாளுமில்லாத ஒரு குளிர்ச்சியுண்டாகக்கண்டான். இந்த உள்ளக் குளிர்ச்சி அவனுக்கு அளவற்ற இன்பத்தையுண்டுபண்ணும் ஒருசாந்தத்தைக் கொடுத்தது. தனக்குள் சாந்தா, சாந்தா வென்று அந்த நாமத்தையே குறியாகக்கொண்டு தியானம் செய்துகொண்டிருந்தான். சாந்தா என்னும் நாமதாரணையில் மூழ்கி, "தாரணத்தியான ஸமாதி" என்னும் யோகஸம்யத்தில் சாந்தா சப்தத்தோடு தான் ஒன்றுபட்டு விளங்க, சாந்தாவின் ஸ்வரூபத்தில் தான் ஈடுபட்டிருக்கக் கண்டான். சிற்றின்பங்களையெல்லாம் நுகர்ந்தலுத்த இவனுக்கு இது ஓர் பேரின்பம்போல் தோன்றியது.

---

## "விராட்டு ரூபா."

### III. மஹேந்திர ஜாலம்.

சமுத்திர ஒலிபோலுமுண்டான பிரணவசப்தத்திலிருந்துண்டான "மோனகானம்" யோக ஸம்யமத்தில் ஸ்வரூப லக்ஷணத்தோடமைந்து தன்னைக் கலந்து தன்மயமாய் நிற்க அந்த சாந்தஸ்வரூபத்தை பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமா யறியவேண்டுமென்கிற ஆசையுண்டாகி அடங்காமற் பெருகவும், அந்த ஆசையுமோர் பாசமாய் மாறி யோகஸம்யமத்தில் தன்னோடுகூடிக்கலந்து சொல்லரும் சுகந்தரும் "சாந்தா" என்னும் ஸ்வரூபலக்ஷியம், துரியமில்லாத ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்தியவஸ்தைகளில் தன்னை விட்டுப் பிரிந்து மாய்மாய் ஒளித்து மயக்கத்தைக் கொடுக்கக்கண்டான். "இதென்ன மாயை!" கண்ணைமூடினால் சுகம்! கண்ணைத்திறந்தால் மாயைமயக்கமா! இருந்திருந்தும் இந்த அவதியிலா போய்ச் சிக்கிக்கொள்ளவேண்டும்! என்று தனக்குள் நினைத்துக் கிலேசப்பட்டுக்கொண்டான்.

"மனமாயை மாயை" என்ற திருமந்திரப்படி இவன் மனமே மாயையாக விருந்து இவனை மயக்கலாயிற்று. ஒவ்வொன்றாய்ப் புகுந்து பார்த்துவந்த உபேந்திரன் தன் மனதுக்குள் புகுந்துகொள்ள அது மாயையாக விளங்க அந்த உண்மை தெரியாமல் மயங்கினான். சாந்தா, சாந்தா, சாந்தாவென்று சாந்தாவையே நினைத்துத்தவித்தான். முதலிலிருந்த சாந்தமும்போய் சாந்தாபாசம் இவனைப் பிடித்துக்கட்டிவிடக்கண்டான்.

சாந்தா நாமம் என்கிற தும்பினால் (பாசத்தால்)கட்டப்பட்ட பசுவாயிருந்து தவித்தான். யோகஸம்யமத்தில் சாந்தா சுகத்தைக்கொடுத்தாலும் மற்ற மூன்றவஸ்தைகளிலும் துக்கத்தையேகொடுத்துவந்தாள்.

சாந்தா, சாந்தா, சாந்தாவென்று சாந்தாவையே ஸ்மரித்துக்கொண்டிருந்தானாயினும், மனம் விச்ராந்தியடையவில்லை. யோகஸம்யமத்தில் அடையும் சுகமும் மனதுக்கு விச்ராந்தியைக் கொடுக்காமல் தாபாக்னியை விர்த்தி செய்வதால் அதுவும் அற்பசுகமே யென்று கண்டுகொண்டான்.

இலக்ஷியம் கண்டதற்கு இலக்ஷணம் கூற வகையறியாது விழித்தான். இப்படி துக்கப்படவா ஜன்மமெடுத்தோமென்று தன்னைத் தானே நொந்துகொண்டான்! "ஜன்மமெடுத்தோம்" என்கிற வார்த்தை தன்னையன்றிப்பிறக்கவும், "ஜன்மம்" என்றால் என்னவென்கிற கேள்வி தானாகப்பிறந்தது. பிறந்ததார்? எங்கேயிருந்து பிறந்தோம்? மாதா பிதா உதிரத்தில் உதிக்குமுன் என்னமாயிருந்தோம்? மாதா பிதா உதிரத்தில் உதிக்குமுன்னேயிருந்ததுண்டானால் அப்பொழுது பிறந்தது யார்? என்கிற கேள்விகள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றின.

சாந்தாநாம தாரணை செய்துகொண்டே இந்த விசாரம் செய்ய தாரணைமுதிர்ச்சியில் தியானம்பிறந்து, தியானமுதிர்ச்சியில் தியேயாகாரமாக, பேதமனம் தானாக நழுவிப்போய்விட்டது.

சாந்தாகாரமான மனம் விச்ராந்தியடையவும் புத்திதெளிந்தது. அப்பொழுது இத்தனைவிசாரமும் செய்துகொண்டு சுகதுக்கங்களையனுபவித்துக்களைத்த "நான் யார்?" என்கிற கேள்வி பிறந்தது. நான் சாந்தா வென்று சொல்வதா, அல்லது உபேந்திரன் என்று சொல்வதாவென்று தெரியாமல் சந்தேகம் பிறந்தது. சங்கை பிறக்கவும் மனம் சலித்தது. இப்பொழுது உண்மை விளங்கிற்று. விச்ராந்தியடைந்த மனம் சாந்தா வென்றும், சலிக்கும் மனம் உபேந்திரன் என்றும் தெரிந்துகொண்டான்.

சாந்தாவுக்கும் உபேந்திரனுக்கும் வித்தியாஸமென்ன? அவன் கண்டது கனவில்லையாதலால், சாந்தாவுக்கும் உபேந்திரனுக்கும் மனதினுடைய சாந்தநிலையும், சலிக்கும் நிலையுமே பேதத்தை யுண்டுபண்ணுவதென்றுணர்ந்துகொண்டான். அதாவது, சாந்தாவுக்கும் உபேந்திரனுக்கும் உபாதி பேதமின்றி உண்மைப்பேதமில்லை யென்று கண்டுகொண்டான்.

முன்னே ஜடமென்று கண்டுதள்ளியதே இப்பொழுது சூக்ஷ்மத்தில் "உபாதிபேதமாக"த்தென்பட்டது உபாதிபேதம் எதினாலுண்டாவதென்று பார்க்கும்பொழுது "யோகஸம்யமம்" என்று சொல்லும் தாதாத்மியசம்பந்தசக்தியால், "நான்" என்னும் அகங்காரபுருஷனான ஆத்மா தான் கண்டதோடெல்லாம உறவுகொண்டாடுவதால் உபாதிபேதம் உண்டாகிறது என்று கண்டான்.

"நான் தேஹம்" என்கிற தேஹோஹம்பாவனைமுதிர்ந்து தேஹமாய்விடுகிறான். "நான் இந்திரியம்" என்றால் பிராணமயகோசத்தில் புகுந்து இந்திரியங்களாக இலங்குகிறான். இவை யிரண்டையும் விட்டு "நான் மனம்" என்றால், ஆகாயக்கோட்டையில் புகுந்து மஹேந்திரபுரத்தில் மனோராஜ்யம் செய்யும் உபேந்திரனாய்விடுகிறான். "நான் சாந்தா" வென்றால் ஆகாயக்கோட்டை அம்பரத்தில் கரைந்துபோக: மனோராஜ்யம் செய்ய ராஜ்யமற்று மனவிச்ராந்தியடைந்து நிற்கிறான். அந்த அவஸ்தையில் உபேந்திரனும் அம்பரத்தில் கரைந்துபோக, விஜ்ஞானகலாரூபமாய் மிஞ்சிய அறிவு தன்னை சாந்தாவாக அறிகிறது. அறிவானும் அறிபொருளும் ஒன்றாகும் ஓர் உத்தமாவஸ்தையில் சுகம்பிறக்க, அந்த சுகத்தை, சிற்றின்பம்நுகர்ஜீவன் க்ஷணிக சுகமனுபவித்து அதை நினைத்து ஏங்குவதுபோல், விஜ்ஞானகலாரூபனான ஆத்மா, தான் வேறு சாந்தாவேறு என்னும் பேதத்தைக் கற்பித்து "நான் சாந்தாவோடு யோகஸம்யமத்தில் சுகித்தேன்.—" "வெளிப்பட்டகாலத்தில் அவளைக் காணாது மயங்குகிறேன்" என்று தபிக்கிறான்.



இந்தத் தாபம் தான் தாபஸாக்னி. தாபாக்னி போலவே தாபஸாக்னியும் தஹிக்கும் சக்தியுள்ளது. விறகுள்ளமட்டுமே அக்னி எரியுமாப்போல், உபாதியுள்ளமட்டும் தஹிப்பும் தாஹமுமிருக்கவேயிருக்கும். விறகு பூரணமாய் தஹிக்கப்பட்டால் அக்னி குளிர்ந்துபோவதுபோல, உபாதிரஹிதமானால் தாஹ, தாபங்களும் அடங்கும். உபாதியுள்ள வரையில் "தாஹதாப உபசமனார்த்தம்" தர்ப்பணம் செய்யவேண்டியது அவசியமே. ஆகையால் மந்திரம் ஜபிப்பவர்களும், தபஸ்செய்கிறவர்களும், ஜபதபாக்னியின் வேகத்தைத் தணிக்க தர்ப்பணம் செய்யும் ரகஸியமறிந்தவர்களாகவிருக்கவேண்டும்.

(இன்னும் வரும்)

---

## CHARITY.

### அறஞ் செய்தல்.

1. எல்லாரும் தன்மம் இயற்றுவரேல் இவ்வுலகம்
நல்லாய்விண் போல நலம்பெறுமே—அல்லாதும்
பொல்லாத வெந்நிரயம் பொய்க்கதையா யஞ்ஞான்றே
இல்லா தொழிந்திடுமே ஈங்கு.

[விண்-சுவர்க்கம்; நிரயம்-நரகம்; அஞ்ஞான்றே-அன்றைக்கே.]

2. வலக்கையினா லுகந்து மாசறநீ செய்யும்
நலத்தை யிடக்கைதனக்கும் நன்கு—புலப்படுதல்
இல்லாமற் செய்திடலே ஏதமிலா நல்லறமாம்
அல்லாத வெல்லாம்வீண் ஆம்.

[உகந்து-விரும்பி; நலத்தை-உபகாரத்தை; புலப்படுதல்-தெரிதல்; ஏதமிலா-குற்றமில்லாத.

3. பற்றும் தமர்க்குப் பயன்படவே இல்லகத்தில்
உற்றுத் தொடங்குகினும் ஓதுமறம்—சுற்றத்தோ
டாங்கொழிந்து போகா தனைவர்க்கும் அன்போடு
நீங்கறவே செய்யப் படும்.

[தமர்-பந்துக்கள்; அறம்-தர்மம்; சுற்றம்-பந்துக்கள்]

4. தண்ணீரை மொள்தோறு மசற்றுங் குறைந்தொழியா
தொண்ணீர் சுரந்துநிறை யூற்றேபோல்—உண்ணீடும்
அன்போடு நல்கும்கைக் கார்நிதியம் ஓங்கிடுமே
இன்போடு நல்கு தொறும் ஈண்டு.

[சுரந்து-ஊறி; உண்ணீடும்-மனத்தில் பெருகும்; நல்கும்-கொடுக்கும்.]

5. கொடையின்வரு மின்பம் குறித்தறிய வேண்டின்
அடையு மொரு நல்குரவாலன்றி—மிடையுமுயர்
செல்வத்தா லாகாதே தேருமிவ் வுண்மையினை
வில்வைத்த மென்னுதலா யீங்கு.

[கொடை-கொடுத்தல்; நல்குரவு-தரித்திரம்.]

6. அகமுவந்தே யன்போட ளிக்கும் பொருளும்
தகைமையுற வேதருணத் தாங்கு—முகமலர்ந்தீர்
ஒண்பொருளும் ஓராய் இருமடங்கின் ஓங்கிடுமே
புன்கணுற வேற்பார்க்கும் போந்து.

[தருணம்-தக்கசமயம்; புன்கண் அற-துன்பந்தீர; ஏற்பார்-யாசிப்போர்.]

7. கையிலுள்ள போதே களிவாற் கொடுத்திடுக
நையவே போமினின்று நாளைக்குப்—பைய
வருவீர் கொடுப்பனென வல்லுரை சொல்லாமல்
தருவீர் இரப்போர்க்குச் சார்ந்து.

[‘நையவே சொல்லாமல்’ என்று கூட்டுக.]

8. நேசனுக்கு நன்றி நிலைபாவந் நேசத்தை
ஆசகல வேநிறுத்தற் காக்கிடுக—ஏசும்
பகைவனுக்கும் அன்னான் பகையொழியச்செய்க
அகமுவந்து நன்மையினை ஆங்கு.

[நிறுத்தற்கு-நிலைக்கச் செய்தற்கு.]

9. பிறரறியக் காட்டாது பேரறத்தை யென்றும்
மறைபடவே செய்கவது மற்று—முறைமையினில்
நற்புகழாத் தோன்றி நலந்தருமேல் அன்னதுகண்
டற்பமிலா நாணுறுக ஆங்கு.

[மறைபட-ரகஸ்யமாக; நாணுறுக-வெட்கமடைக.]

எஸ். முத்துஐயர் பி. ஏ.



## Free from Bonds.

(THE AUTOBIOGRAPHY OF A TALUQ GUMASTAH)

## * அவிழ்த்துவிட்ட கழுதை.

### ஒரு தாலூகா குமஸ்தாவின் சரித்திரம்.

(154-வது பக்கத்தொடர்ச்சி.)

இந்தமாதிரி ஐந்தாறு வருஷம் வாழ்ந்தபின் என் மனது ஏக்கம் பிடித்து தேகம் இளைக்க ஆரம்பித்தது. நாம் செய்யக்கூடிய முயற்சியெல்லாம் செய்தும் கடைசியில் குடும்பத்தில் ஸ்திரீ புருஷர்களுக்கு மனதொற்றுமை யில்லாவிட்டால் என்ன பிரயோஜனம் என்று தோன்றிற்று. சம்சாரவாழ்க்கை அலுக்க ஆரம்பித்தது. என் தாயார்மட்டும் உயிரோடில்லாவிட்டால் நான் எங்கேயாவது சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்போயிருப்பேன் என்பது நிச்சயம். காலை எழுமணிக்குக் கச்சேரிக்குப்போவேன். 12 மணிக்கு வீட்டுக்குவந்து சாப்பிடுவேன். இரண்டு மணிக்கு மறுபடி கச்சேரிக்குப்போவேன். இராத்திரி 8 மணிக்குமேல் வீட்டுக்கு வருவேன். இது அநேகவிஷயத்துக்கு சௌகரியமாகவே யிருந்தது. வீட்டிலிருப்பதைவிட கச்சேரியிலிருப்பதே அதிக சந்தோஷமாயிருந்தது. கச்சேரிவேலை எப்பொழுதும் இருக்கவே இருக்கும் ஆதலால் இதர குமாஸ்தாக்கள் சேவகர்களோடு தினம் கொஞ்சநேரமாவது வேடிக்கையாகவாவது உலகப்பொதுவிஷயங்களைப் பற்றியாவது பேசாமல் பொழுது போகாது. கச்சேரி தஸ்தாவேஜுகள் வைத்திருக்கும் அறை என்வசத்திலிருந்தமையால் அதில் எப்பொழுதும் எனக்கு வேண்டிய புஸ்தகம் ஏதாவது ஒன்று போட்டுவைத்திருப்பேன். ஒழிந்த வேளைகளில் யாருக்குந்தெரியாமல் அந்த அறையில் ஒரு மூலையில் தஸ்திரமூட்டைகள் மறைவில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்பேன். இருந்தாலும் இந்தக்கஷ்டந்தான் நமக்கேன்? யாருக்காக இப்படி உழைக்கவேண்டும்? யதேச்சையாயிருந்தால் நாம் படித்துக்கொண்டோ சித்திரம் எழுதிக்கொண்டோ காலம் கழிக்கலாமே என்று தோன்றும். நான் இவ்வளவு கஷ்டத்திலும் சித்திரம் எழுதும் அப்பியாசத்தை விட்டு விடவில்லை. வர்ணங்கள் வரவழைத்து வர்ணந்தீட்டிய படங்கள் எழுத அப்பியசித்தேன். நடுவில் நாலைந்து வருஷம் அப்பியாசம் விட்டிருந்தும் என் கைவிரல்கள் பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தை மறக்கவில்லை என்று தெரிய வந்தது. என்வேலை போனபோதிலும் சித்திரம் எழுதும் ஜீவனத்தினால் இந்தப் பத்துப்பதினைந்து ரூபாயாவது சம்பாதிக்க முடியாதா என்று தோன்றிற்று. இந்த எண்ணம் மனதுக்கு கொஞ்சம் தைரியமும் ஆறுதலும் கொடுத்தது. இந்த ரஹஸியத்தை அறியாதவர்கள் நான் ஜில்லாகலெக்டரிடத்தில் கூட தைரியமாய் பதில் பேசுவதைக்கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் சீக்கிரத்தில் இவ்வளவு கவலையற்ற சாவகாசமுள்ள உத்தியோகத்திலிருந்து மாற்றப்பட்டேன். சர்க்கார் நாணயங்களை தினம் எண்ணி ஒப்புவிக்கிற “ஷராப்” உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டேன். இதற்கு சம்பளம் பத்து ரூபா. என் மாமனார் என் வேலைக்கு வேண்டிய ஜாமீன் 500ரூக்கு உத்தரவாதமாக ஒப்புக்கொண்டார். இதில் எனக்கு மேல்வரும்படி கிடையாது, ஏனெனில் எனக்கு மேற்பட்ட 15ரூ சம்பளமுள்ள ‘ஷராப்’ ஒருவர் இருந்தமையால் அந்த உத்தியோகத்தைச் சேர்ந்த வரும்படியையெல்லாம் அவரே வாங்கிக்கொண்டுவிடுவார். நானும் மேல்வரும்படியைத் தேடாதவனாதலால் என்பங்கு எனக்கு சித்திக்கவேண்டிய முயற்சிகளைச் செய்தவனில்லை. என் உத்தியோகம் உயர்ந்தது முதலில் எனக்கே தெரியாது. திடீரென்று ஒருநாட்காலையில் என் சிநேகிதர்களான குமாஸ்தாக்கள் என்னை சர்க்கரை கற்கண்டு கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு முதல்நாள்தான் என் மனைவி பிரசவித்ததாகக் கடிதம் வந்தமையால் அந்த விஷயம் நான் சொல்லாமல் இவர்களுக்கு எப்படி தெரிந்ததென்று ஆச்சரியபட்டுக்கொண்டே “இல்லை ஐயா. பெண்பிள்ளைதான், ஆண்பிள்ளையல்ல” என்றேன். “ஆனால் இரட்டைப்படி கொடுக்கவேண்டும்” என்றார்கள். அப்புறம் என்னவென்று விசாரித்ததில் உத்தியோகம் உய

* தன்னை யறிந்து தன்வழியில் பிரவேசிக்கும் மனோதர்மசக்தி தடையறியாது.

ர்ந்ததாகத் தெரியவந்தது. என் மாமனார் என்னைக் கேளாமலே சிபார்சுசெய்து எனக்கு உத்தியோகம் செய்வித்தார் என்று அறிந்துகொண்டேன்.

ஆனால் உத்தியோகம்மட்டும் தலைபோகிற உத்தியோகம். கஜானாப்பணத்தில் ஒருபைசா குறையாமல் ஒருபைசா அதிகமாயிருந்தாலும் சிறைச்சாலைக்குப் போகவேண்டியதுதான். ஆனால் வீட்டிலிருப்பதைவிட அங்கொன்றும் அதிக கஷ்டமாயிராதென்று எண்ணி ஒருவாறு தைரியமடைவேன். "இதில் எனக்கு வரும்படி குறைவு. லாபமில்லை, சுகமுமில்லை; பழையவேலைக்கே போய்விடுகிறேன்" என்று என் மாமனாருக்கு எழுதினேன். அதற்கவர் "நீ இந்த சமயத்தைவிட்டால் வேறுசமயம் நேராது, உத்தியோகம் உயர்வதைத் தடுக்காதே, கூடிய சீக்கிரத்தில் உனக்கு முதல் "ஷராப்" 15-ரூ உத்தியோகம் கிடைக்கும்படி செய்கிறேனென்று எழுதினார்.

என் மனைவி பிரசவித்துத் திரும்பி என் வீட்டுக்கு வரும்பொழுது நான் வீட்டிலில்லை, கச்சேரியிலிருந்தேன். நான் வீட்டுக்கு வந்ததும் என் தாயார் குழந்தையை எடுத்துக்கொண்டுவந்து என்னிடத்தில் கொடுத்தாள். நான் அதை வாங்கிக்கொள்ளவில்லை. "என்னடா பெண்ணென்று யோசிக்கிறாயா? பயப்படாதே; அவள் நல்ல அதிர்ஷ்டசாலியாயிருப்பாள். தகப்பனார் வம்சத்தின் ஜாடை முகத்திலிருக்கிறது" என்றாள். நான் என் உத்தியோகம் உயர்ந்ததை அவளிடத்தில் சொன்னதுமில்லை அவள் என்னைக் கேட்டதுமில்லை. நானும் என் தாயாரும் கச்சேரிவிஷயங்களைப் பற்றிப் பேசிக்கொள்வதேயில்லை. "அதெல்லாம் புருஷர்கள் சமாசாரம் எனக்குத் தெரியா" தென்று விடுவாள். "கொண்டுவந்து போட்டதை வீணாக்காமல் கிரமமாய்ச் செலவு செய்யவேண்டியது எங்கள்வேலை" என்பாள்.

அன்றிரவு என்மனைவி தான் வீட்டிலில்லாத காலத்தில் குடும்பத்திய வரவுசெலவு கணக்குகளைப்பற்றி என்னைக் கேட்க ஆரம்பித்தாள். "நான் வரவு செலவு கணக்குகள் எழுதிவைக்கவில்லை, எல்லாம் கிரமமாகத்தான் செலவழிந்திருக்கும்" என்றேன். "புதிதாய் சில வர்ணப்படங்கள் வீட்டிலிருக்கிறதே அது ஏது?" என்றாள்.

"அவைகள் நான் எழுதினேன்" என்றேன்.

"எல்லாம் உங்கள் முகத்தைப்போலவே சப்பை மூக்காக எழுதியிருக்கிறீர்களே" என்றாள்.

"நீ சமீபத்தில் இல்லாமையால் உன்னைப்போல் எழுத சரிப்படவில்லை" என்றேன்.

"அவை எழுத வர்ணம் ஏது?

"விலைகொடுத்து வாங்கினேன்."

"என்னவிலை?" "15-ரூ"

"பணம் ஏது?"

"நான் சம்பாதித்தேன்"

"நான் இரண்டுநாள் ஊரிலில்லாவிட்டால் காசைக்கரியாக்க எது சமயம் என்று காத்துக்கொண்டிருக்கிறீர்கள். வீட்டில் கேள்விமுறையில்லை. இந்தமாதிரி செலவழித்தால் எந்தக் குடித்தனம் கட்டிவரும்? 10-ரூ சம்பளத்தில் 15-ரூபாய்க்கு வர்ணம் வாங்கினேன் என்று யாரிடத்திலாவது சொல்லுங்கள் சிரிக்கிறார்களா அழுகிறார்களா பார்ப்போம். இப்பொழுது நான் இரண்டாம் புடவை யில்லாமலிருக்கிறேனென்று வரும்பொழுது அப்பா ஒரு புடவை வாங்கிக்கொடுத்தார். அவருக்கு இன்னும் நாலு பெண்கள் இல்லையா? அவர் ஏன் வாங்கிக்கொடுக்க வேண்டும்? "நான் சம்பாதித்தேன்" என்கிறீர்களே? எங்கள் அப்பா சிபார்சுசெய்து வேலைசெய்திராவிட்டால் நீங்கள் சம்பாதிக்கிறது அப்பொழுது தெரியும். உங்களுக்கு இப்பொழுதுதான் "சுக்லாம் பாதம்" குட்டியிருக்கிறது பெண்களுக்கு. ஒரு பெண் பெற்றாகிவிட்டது. என்றைக்குப் பாரபுத்தியும் குடித்தனப்பொறுப்பும் வருமோ தெரியவில்லை. 15-ரூ. இருந்தால் புடவைக்கு ஒருவர் காலின்கீழ் நிற்பானேன்? நான் வீட்டிலிருக்கும்பொழுது வர்ணம் வாங்கியிருந்தால் தெரியும் செய்தி." இதற்குமேல் என்ன சொன்னாளோ எனக்குத் தெரியாது. இந்தப் பிரசங்கம் முடிவதற்குள் நான் தூங்கிவிட்டேன். ஆதலால் பொழுதுவிடிந்தபிறகு "உன் தகப்பனாரை எனக்கு உத்தியோகம் செய்துவைக்கச்சொல்லி நான் கேட்டுக்கொள்ளவில்லை. நீ என்னைப் புடவைவேண்டுமென்றுகேட்டு நான் வாங்கிக்கொடுக்கமாட்டேனென்று சொன்னதுமில்லை" என்று அவளுக்குப் பதில் சொல்லிவிட்டு வெளியேபோனேன்.

இன்னொருநாள் இரவு, நான் இராமாயணம் படித்துக்கொண்டிருந்தேன். என் மனைவிவந்து "என்ன படிக்கிறீர்கள்?" என்று கேட்டாள். "ராமாயணம்" என்றேன்,' "இதனால் என்ன பிரயோஜனம்?" "எனக்கு சந்தோஷத்தைத்தவிர வேறு பிரயோஜனமில்லை" என்றேன்.

"இப்படி வீணாய்க் காலம்கழிப்பதைவிட ஏதாவது உத்தியோகத்துக்குபயோகமான சட்டங்களைப் படித்துப் பரீக்ஷைசெய்தால் சீக்கிரத்தில் 30, 40-ரூ. என்று சம்பளம் உயர்ந்து கடைசியில் சிரஸ்ததார் வேலைகூடக் கிடைக்கும் என்று அப்பா சொல்லுகிறார். அப்படியெல்லாம் செய்யக்கூடாதா?"

"சிரஸ்ததார் உத்தியோகம் எதற்காக?"

"சம்பாதிப்பதற்காக." "எதற்காக சம்பாதிக்க வேண்டும்?"

"சாப்பிட்டு சந்தோஷமாயிருக்க."

"அந்த சந்தோஷத்தைத்தான் நான் இப்பொழுது ராமாயணம் வாசிப்பதனால் அடைகிறேன்."

"நீங்கள் அடைந்தால் நான் போகிறவழி என்ன?"

"நீயும் அதேமாதிரி இருப்பதை நான் தடுக்கவில்லை. அர்த்தம் சொல்லுகிறேன் உட்கார்ந்துகேள்."

"எனக்கு இந்த அத்தைப்பாட்டிக்கதை ஒன்றும் வேண்டாம். எல்லாம் கேட்டுக்கேட்டுக்கிடக்கிறது."

"உனக்கு வேறென்னவேண்டும்?"

"நிறைய சம்பாதிக்கவேண்டும்."

"சம்பாதித்துக்கொள்."

"நான் எப்படி சம்பாதிப்பேன்? நீங்கள்தான் சம்பாதித்துப்போடவேண்டும்."

"நான் இப்பொழுது சம்பாதிக்கவில்லையா? நீ சாப்பிடாமல் பட்டினியாய்க் கிடக்கிறாயா?'

"நாய்கூடத்தான் சாப்பிடுகிறது." "உனக்கு வேறென்னவேண்டும்?"

"நாலுபேருக்குப் கண்ணியமாயிருக்கவேண்டும். உலகத்தாரைப்போல் நிறைய ஆபரணங்கள் வேண்டும். கோவிலுக்குக் குளத்துக்குப்போக வண்டிவேண்டும். குழந்தையை வைத்துக்கொண்டிருக்க சேவகன்வேண்டும்."

"உலகத்தாரெல்லாரும் எல்லா ஆபரணங்களும் போட்டுக்கொண்டிருக்கிறார்களா? எவ்வளவுபேர் பிச்சைக்காரர்கள் அன்றன்று சாப்பாட்டுக்குக் கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். உனக்கு இப்பொழுது இருக்கிற நகை போதாதா? அடுத்த ஊரில் தீவட்டிக்கொள்ளைக்காரன் வந்து காதையும் கழுத்தையும் அறுத்து நகைகளைத் திருடிக்கொண்டு போனதைக் கேள்விப்படவில்லையா? நீ எங்கேயாவது வெளியே போகவேண்டியிருந்து உன்னால் நடக்கமுடியாவிட்டால் நான் வாடகைவண்டி கொண்டுவரவில்லையா? அம்மா குழந்தையை வைத்துக்கொள்ள மாட்டேனென்கிறாளா? இப்பொழுது உன்னை யார் கண்ணியக்குறைவாய் மதித்தார்கள்? ரயிலில் போனால் சேவகர்கள் உன்னைக்கண்டு கைகட்டி நிற்கிறார்கள். நான் தனியாய்ப்போனால் யாரும் என்னைக் கவனிக்கிறதில்லை."

"நீங்கள் அப்படி யிருக்கக்கூடாதென்று தான் நான் சொல்லுகிறேன். பெரிய உத்தியோகத்திலிருந்து முன்னால் சேவகர்களும் பின்னால் சேவகர்களுமாகப் போனால் எல்லாரும் கட்டாயம் கவனிப்பார்கள்."

"ஒருவன் சிறைச்சாலைக்குப் போனால் அப்பொழுதும் பின்னால் நாலு சேவகனும் முன்னால் நாலு சேவகனுமாகப் போகிறான். லக்ஷக்கணக்கான ஜனங்கள் அவனைக் கவனிக்கிறார்கள்.—

"என்னை யாரும் கவனிக்காமலிருக்கவேண்டுமென்று என்னிஷ்டம். நான் சட்டை உடுப்புகள் போட்டுக்கொண்டால் நான்தான் சேவகனைத் தோற்றுவேன். சேவகன்தான் உத்தியோகஸ்தனைத் தோற்றுவான். அப்படிப்பட்ட கோமாளிவேஷத்தை விட சாதாரணமாய் நான் இப்பொழுதிருக்கிறபடி யிருப்பதே மேல்."

"நமக்குக் கீழ்ப்பட்டவர்களைப் பார்க்கவேண்டாமே, நமக்கு மேற்பட்டவர்களைப் பார்த்து அம்மாதிரியாக யத்தனிப்போமே."

"நான் கீழிருப்பவர்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்லவில்லை. நீ மேலிருப்பவர்களையே பார்

த்துப்பைத்தியம் கொண்டமையால் கீழிருப்பவர்களையும் பார் என்றுசொல்ல நேர்ந்தது. ஒருவரையும்பாராது-நம்மைநாமேபார்த்துத் திருப்தியடையவேண்டுமென்பது என்கருத்து."

"உங்களோடு சரியாக எனக்குப் பேசத்தெரியாது."

"நான்பேசச் சொல்லவில்லை."

"நீங்கள் உத்திபோகம் உயருவதற்கு வேண்டிய சட்ட பரீக்ஷைகொடுக்கப் போகிறீர்களா இல்லையா?"

"இல்லை." "ஏன்"? "சட்டங்கள் என் மூளையில் நுழையாது.?" "ஏன்?" "அங்கே ஏற்கனவே வேறு சட்டங்கள் குடிகொண்டு முன்பாத்தியம் கொண்டாடுகின்றன."

"வேறு என்ன சட்டங்கள்?"

"பரீக்ஷைக்குவேண்டிய சட்டங்கள் எல்லாம் ஒரு மனிதன் மூளையிலிருந்துண்டானவை. அதாவது அவனுடைய உச்சிஷ்டத்துக்குச்சமானம். அந்த உச்சிஷ்டத்தை என் மூளைக்குள் புகவிடுவானேன்? நான் இன்றிரவு உட்கார்ந்தால் பொழுதுவிடியுமுன் அவைகளைப்போல் ஐம்பதினாயிரம் சட்டங்கள் உண்டாக்குவேன். நானுண்டாக்கிய சட்டங்களை வேறு யாராவது படிப்பார்களா? வேறொருவர் உண்டாக்கிய சட்டத்தை நான்மட்டும் ஏன் படிக்கவேண்டும்? கடவுளிட்ட சட்டங்கள் எல்லா சட்டங்களுக்கும் முந்தியவைகளாக உலகத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றன. அவைகளுக்குத்தான் என்மனது இடங்கொடுக்கிறது."

"உத்தியோகம் உயரவேண்டாமா?"

"அது உயருவதை நான் வேண்டாமென்று தடுக்கவில்லை."

"பரீக்ஷை கொடுக்காவிட்டால் எப்படி உயரும்?"

"உயராவிட்டால் வேண்டாம்."

"அப்பொழுது உங்கள் இஷ்டமும் என்னிஷ்டமும் முற்றிலும் மாறாயிருக்கின்றன."

"அதை அறிந்துதான் நீ உன்னிஷ்டம்போலிருப்பதை நான் தடுக்கவில்லை என்கிறேன். நானுன்னை உன்னிஷ்டப்படி விட்டுவிடுவதுபோல் நீயும் என்னை என்னிஷ்டப்படி விட்டுவிடவேண்டியதுதான்."

"நீங்கள் கலியாணத்தில் அம்மிமிதித்து அருந்ததி பார்த்து என்னிஷ்டப்படியிருப்பதாக வாக்குக்கொடுக்கவில்லையா?"

"அப்படியே நீயும் கொடுக்கவில்லையா?"

"நான் அந்த வாக்ப்படி உங்களிஷ்டத்துக்கு என்ன விரோதம் செய்தேன்?"

"நான் என்ன உன்னிஷ்டத்துக்கு விரோதம் செய்தேன்."

"நீங்கள் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டுமென்பது என்னிஷ்டம்."

"உத்தியோக விஷயங்களில் நீ தலையிட்டுக்கொண்டு என்னை நீ இந்தமாதிரி தொந்திரவுசெய்யக்கூடாதென்பது என்னிஷ்டம்."

"இருவரிஷ்டமும் வேறாயிருந்தால் ஏன் என்னைக் கலியாணம் செய்துகொண்டீர்கள்?"

"நீ ஏன் என்னைக் கலியாணம் செய்துகொண்டாய்?

"நீங்கள் இப்படிக் காட்டுவாதம் பேசுவீர்களென்று தெரிந்தால் கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கமாட்டேன்."

"நீ இப்படி அதிகப்பிரசங்கியாகவும் பேராசைக்காரியாகவுமிருப்பாயென்று தெரிந்தால் நானும் உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கமாட்டேன்."

"நீங்கள் சன்னியாசியாக விருப்பதற்குத்தான் யோக்கியதை, குடித்தனத்துக்கு யோக்கியமில்லை."

"சரி, நீ உத்திரவுகொடுத்தால் அப்படியே போய் விடுகிறேன்."

"அந்தக் காட்டுவேதாந்தத்துக்கு என்னுத்தரவு என்னவாழ்கிறது. எங்கே வேண்டுமோ அங்கே போங்கள், எப்படிவேண்டுமோ அப்படியிருங்கள், அநிதாயமாய் ஒரு பெண்பாவத்தை கொட்டிக்கொள்ள வேண்டாம். என்னைக் குடியைக்கெடுத்த வேதாந்தம் ஒருநாளும் உருப்படாது."

---



## KANNAKI—A SOCIAL DRAMA.

## கண்ணகி.

### முதல் அங்கம்.

காதற்சிறப்பு—கலியாணப்பேச்சு.

இடம்—காவிரிப்பூம்பட்டணம்.

நாடகபாத்திரர்கள்.

மாசாத்துவன்—அந்நகரத்து வணிகன்.

பெருமனைக்கிழத்தி—மாசாத்துவன் மனைவி.

நந்தன்—ஷை ஊழியக்காரன்.

கோவலன்—மாசாத்துவன் புதல்வன்.

நீலமேகன்—கோவலனின் தோழன்.

விநோதன்—கோவலனின் சேவகன், விகடமாகப் [பேசுபவன்.

விசாலாட்சி } கண்ணகியின் தோழிகள்.
மரகதம் }

மாநாய்கன்—அந்நகரத்து மற்றோர்வணிகன்.

கண்ணகி—மாநாய்கனின் புத்திரி.

---

உ

## கண்ணகி.

அங்கம்—1] [காட்சி—4.

இடம்—மாநாய்கன் மாளிகை.

காலம்—பகற்காலம்.

காவற்சேவகன்:—பிரபு! தங்களைப்பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்!

மாநா:—யாரென்று விசாரி!

காவற்:—நீர் யாரையா?

விநோ:—நான் ஆர்—!

காவ:—என்ன யோசிக்கின்றீர்! விரைவிற் சொல்லும்!

விநோ:—இல்லை! மறந்துவிட்டேன்! பாட்டு ஞாபகத்திற்கு வரவில்லை! உம்—! வருகிறது! வந்தது!

காவ:—என்ன ஐயா! பாட்டாவது! ஞாபகமாவது! உளறுகிறீர்! சடுதியிற்சொல்லும்.

4

விநோ:—இதோ சொல்லுகிறேன்!

"நானுமென்னுள்ளமார் ஞானிகளோ ரனையறிவார்
வானோர்பிரானென்னையாண்டிலனேல் மதிமயங்கி
ஊனாருடையதலையிலுண்பலிதேரம்பலவன்
தேனார்கமலமேசென்றூதாய்கோத்தும்பீ."

[இசையுடன் பாடுகிறான்.]

காவ:—இதற்குப் பெயரென்ன? (சிரிக்கிறான்.)

விநோ:—இதற்குத் திருச்செய்யுள் என்று பெயர்! வாசகத்திற்கும், செய்யுளுக்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ளாதவர்கள் இதைத் திருவாசகமென்று சொல்லுவார்கள்! பாட்டு இலட்சணத்துடனிருக்கும் இதை வாசகமென்று சொல்லுவது எவ்வளவு மதியீனம்!

காவ:—நீர் மகா புத்திசாலி!

விநோ:—என்னங் காணும் அவ்வளவு அலட்சியமாக நினைத்தீர்! இலையைப்போட்டு என்னை உட்காரவைத்துப் பாருமே! என் புத்திசாலித்தனம் தெரிகிறது!

காவ:—அதிருக்கட்டும்; எதற்காகவந்தீர்?

விநோ:—என்னுடைய எஜமான் மாசாத்துவர் பின் பாகவருகிறார்; அதை முன்னதாக உங்கள் எஜமானுக்குத் தெரிவிக்கவந்தேன்.

காவல:—(மாநாய்கரை நோக்கி) பிரபு! மாசாத்துவர் தங்களைக் காண்பதற்காக வருகிறாராம்!

மாசா:—(மாளிகைக்கு சமீபமாக வந்து) என்னடா விநோதா மாநாய்கரிருக்கின்றாரா?

காவல:—இருக்கிறார் சுவாமி! தாங்கள் வருகிறீர்கள் என்பதை இப்போதுதான் தெரிவித்தேன்! உள்ளே செல்லுங்கள்! (வழிகாட்டுகிறான்).

மாநா:—(மாசாத்வனைக் கண்டதும் எழுந்து) வாருங்கள்! வாருங்கள்! ஏது இவ்வளவு தூரம்! உட்காருங்கள்! (அருகில் கிடக்கும் இருக்கையைக் காண்பிக்கிறான்)

மாசா:—ஆகா! அப்படியே. (உட்காருகிறார்)

மாநா:—என்னையும் ஒருபொருட்டடுத்தி வந்த விசேஷமென்ன?

மாசா:—ஒன்றுமில்லை. பார்த்து நாளாகிவிட்டதே பார்த்துப்போகலாமென வந்தேன்! சௌக்கியந்தானே! குழந்தை கண்ணகி க்ஷேமந்தானே!

மாநா:—தங்களுடைய ஆசீர்வாதத்தால் எல்லோரும் சௌக்கியமாக விருக்கின்றோம்! குழந்தை கண்ணகிக்குத் தான் உடம்பு கொஞ்சம் சௌக்கியக் குறைவாயிருக்கிறது! வியாதியென்றும் சொல்லமுடியவில்லை! மனோவியாகூல மெனத்தெரிகிறது! கேட்டால் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறாள்!

மாசா—நமது குமாரன் கோவலனுக்கும் உடம்பு அசௌக்கியமாயிருக்கிறது. மனோ வியாதிதான் கொண்டிருக்கிறதென வைத்தியர் சொல்லுகிறார்கள்! சரியான ஆகாரமில்லை! அறையைவிட்டுவெளியேவருகிறதில்லை! நாலைந்துநாளாக அவ்விதமிருக்கிறான்!

மாநா:—கண்ணகிக்கும் நாலைந்துநகளாகத்தானே அவ்விதமிருக்கிறது! அவள் பருவவதியாய்இருப்பதால் தக்க இடத்தில் விவாகம் செய்துகொடுக்கவேண்டுமேயென்னும் கவலை அதிகமாகிறது!

மாசா:—அவளுடைய விவாகத்தைப்பற்றி யோசிக்கதான் தங்களுடைய கிருகத்திற்கு நான்வந்தது.

மாநா:—சந்தோஷம்! ஏது அவ்வளவு கவலை தாங்கள் எடுத்துக்கொண்டது!

மாசா:—இல்லை; எனக்கும் எனது இல்லாளுக்கும் கண்ணகியைக் கோவலனுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்னும் ஆசையிருக்கிறது! தங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து போகலாமென வந்தேன்.

மாநா:—சரி! பழம் நழுவி பாலில் விழுந்தாற்போலாயிற்று!

விநோ:—பால் நழுவி வாயில் விழுந்தாற்போல!

மாநா:—ஐயா; தங்களுடைய குமாரனுக்கு எனது புத்திரியை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்பதே என்னுடைய கருத்து! எனதுமனைவிக்கும் அதுவேசம்மதம்!

விநோ:—எனக்குமதுவேகருத்து! ஆனால்—

மாசா:—என்னடா "ஆனல்"

விநோ:—பொழிப்புரை, பதவுரை தெரிந்துகொள்ளாமல் கருத்தக்குவந்துவிட்டீர்களே!

மாநா:—என்ன நீ பேசுவது ஒன்றும் விளங்கவில்லையே!

மாசா:—என்னடா சொல்லுகிறாய்!

விநோ:—இல்லை பிரபு! ஒருபாட்டை எடுத்துக்கொண்டால் பதவுரைதெரிந்து, பின் பொழிப்புரைதெரிந்து, கடைசியிலன்றோ கருத்துரை தெரிந்துகொள்வது வழக்கம்! நீங்கள் எடுத்தவுடனேயே "இது என்கருத்து," "இது என்கருத்து" என்றால், அக்கருத்து பிசகானாலும் ஆகலாமே!

மாசா:—மூடா! கல்யாணவிஷயமாய், நாங்கள்பேசினால் இங்கு பாட்டு எங்கடா வந்தது!

விநோ.—பிரபு! கல்யாணந்தான் பாட்டு! உங்கள் புத்திரர் கோவலன் அறையில் தனியாக இருந்துகொண்டு கண்ணகியின் அழகைப்பற்றி உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரையில் தனித்தனியாக ஒவ்வொரு அவயவங்களையும் வருணித்துக்கொண்டிருக்கிறாரே அது பதவுரை! கண்ணகியம்மாள் 'அழகிற் சிறந்த கோவலரை மணம்புரியும்படியானபாக்கியத்தை எனக்கு அருளும்" என்று சதா இறைவனைப் பிரார்த்தித்து வருகிறார்களே அதுதான் பொழிப்பு! அவ்விருவர் எண்ணமும் தெரிந்து நாம் நடக்கவேண்டுவதே கருத்து!

மாசா:—இவன் சொல்வதால் என்மகன் தங்கள் புத்திரியின்மேல் காதல் கொண்டிருப்பதாகவும் அவள் இவன்மேல் காதல் கொண்டிருப்பதாகவுமல்லோ தெரிகிறது!

மாநா:— அப்படித்தான் தெரிகிறது! இப்போது இவர்களிருவருடைய மனோவியாதி இன்னதென்பதாகத் தெரிகிறது! தங்கள் புத்திரனை இவ்விடம் வரவழையுங்கள்; நாம் நேரிலே அவனைக்கேட்டு அவன்கருத்தைத் தெரிந்து சொள்ளலாம்;

மாசா:— ஆஹா அப்படியே!

விநோ:— நான்போய் ஒரு நொடிக்குள் அழைத்து வருகிறேன்.



மாசா:—சீக்கிரம்சென்று கோவலனை இங்கு அழைத்துவா! (கோவலன் போகிறான்.)

விநோ:—[மாசாத்துவன் கிருகத்திற்குச் சென்று கோவலனிருக்கும் அறைக்குச்சமீபமாகப் போய் நிற்கின்றான்].

கோவ:—[கட்டிலிற்சாய்ந்து கொண்டு தானாகவே பேசிக்கொள்ளுகிறான்] ஐயோ! எனக்கு ஒருநாள் ஒருயுகம் போலத்தோன்றுகிறதே! கண்ணகி! என்மீது அளவற்ற காதல் கொண்டிருப்பதாகத் தெரிவித்தாயே! அப்படிப்பட்ட நீ என்னை இவ்விதம் வருத்தலாகுமா! அமிழ்தினுமினிய உன்னுடைய வார்த்தைகளை எப்பொழுது கேட்பேன்! ஸ்திரீகளுடைய சரீரமும், மனமும் மிகவும் மென்மை என்பதாகச் சொல்லுகிறார்களே! காதலி! உன் துவரிதழ்வாய் என்னுயிரைக் கவருகின்றதே! நீ கொள்ளும் முறுவல் என் கருத்தையழிக்கின்றதே! நினது கயல்விழி என் நெஞ்சத்தைக் கிழிக்கின்றதே! இவ்வளவு கொடுஞ்செயல்கள் செய்யும் உன்னை மென்மையுடையவள் என எவ்விதம் சொல்லுவேன்! வெண்ணிலவு கலாவியிருக்கும் பவளத்தினாற் செய்த சிவந்த நிறம் பொருந்திய கிண்ணத்தில் வைத்திருக்கும் அமிழ்தத்தைக் கொடுத்து என்னைப்பிழைப்பிக்காயா! வில்லனைய நின் நன்னுதலும், வேலனைய வாட்கண்ணும் என்னை வருத்துகின்றனவே! என்னுடைய வேட்கையைச் சற்றுவது அறிய மாட்டாயா! ஏ! கண்ணகி! கனவினும் நனவினும் நீயே என்னுள்ளத்தாமரையில் வசிக்கின்றாய்! அவ்விதமிருந்தும் என் மன நிலைமையை நீ அறிந்து கொள்ள வில்லையே! உன்னுடைய கரும்புயலளமும், மயிலனைய இயலும் மான்விழியும் மதிமுகமும், என் கண்முன் இடைவிடாது தோன்றுகின்றனவே! அத்தோற்றம் உண்மையாக விருந்தால் நான் பெற்றபாக்கியம் பெரும்பாக்கியமே! ஆனால் பொய்த்தோற்றமாகவன்றோ விருக்கிறது! நேற்றிரவு நித்திரையில் வந்து என்னுடன் சரச சல்லாபமாக விருந்தாயே! இப்போது விழித்திருக்கின்றேனே! இப்போது வரமாட்டாயா? அலை கடலிலகப்பட்டதுரும்பு போல காதலென்னும் பெருங்கடலி லகப்பட்டுத்தத்தளிக்கும் எனக்கு நீயே கதி! நீயே என்னுயிர்! என்னுடலும் நீயே! எல்லாம் நீயே! என்னே காதலின் மகிமை! சிறகிருந்தால் பறந்து உன்னிடம் வருவேன்! துணையிருந்தால் தூதனுப்புவேன்! இரண்டு மில்லையே! ஈசா! (சோர்ந்துவிழுகிறான்)

விநோ:—(அறைக்குள் சென்று) துணை நானிருக்கின்? தூது அனுப்புகிறது தானே!

கோவ:— (திடுக்கிட்டு) விநோதா! நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு என்னவேலையிங்கே? என்னடா சுத்த அதிகப்பிரசங்கியாக விருக்கிறாய்! (கோபத்துடன் சொல்லுகிறான்)

விநோ:— நான் அதிகப்பிரசங்கியென்பதும, அல்லது தாங்கள் என்பதும், சற்றுமுன் தாங்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்டவர்களுக் கல்லவோ தெரியும்! (சிரிக்கிறான்)

கோவ:— போதும்; உன் பிரசங்கத்தை நிறுத்து! வந்த காரியமென்ன?

விநோ:— பிதா தங்களை அழைத்துவரச் சொல்லுகிறார்?

கோவ:— எங்கிருக்கிறார்? ஏன் அழைக்கிறார்?

விநோ:— மாநாய்கர் வீட்டிலிருக்கின்றார்! தங்களுடைய—! எதற்காக அழைக்கிறாரோ எனக்குத் தெரியாது!

கோவ:— என்னடா! என்னமோ சொன்னாய்! அதற்குள் மறைக்கிறாயே!

விநோ:— விவாக விஷயமாய் இருக்கும் போலத் தோன்றுகிறது! எதுவாயிருந்தால் என்ன! பிதாகூப்பிட்டால் போகவேண்டியது தானே!

கோவல்:—ஆம்! தந்தைசொல் மிக்க மந்திரமில்லை யாதலால் அவர் ஆக்கினைப்படி நடந்து. கொள்ளவேண்டியது அவசியந்தான்! நான்வருகிறேன்! என்னவிஷயமாக இருக்கலாம்! உனக்குத் தெரியாதா?

விநோ:— முக்கியமான விஷயமாக விருக்கலாம்!

கோவ:— இவ்வளவாவது தெரிந்து கொண்டாயே! நிரம்ப புத்திசாலி! அங்கு என்ன பேச்சுநடந்தது?

விநோ:— விவாகப் பேச்சுநடந்தது!

கோவ: —யாருடைய விவாகத்தைப்பற்றி?

விநோ:— ஒரு மனிதனுக்கும் ஒரு ஸ்திரிக்கும் நடக்கவேண்டிய விவாவகத்தைப் பற்றி!

கோவ:— மனிதனுக்கும் மிருகத்திற்கும் கூட விவாகம் நடப்பதுண்டோ? (சிரிக்கிறான்.)

விநோ:— நடக்காமலென்ன! எத்தனை புருஷர்கள் மிருகத்தினும் கேடுகெட்ட ஸ்திரீகளை மணந்து துன்பப்படுகிறார்கள்! எத்தனை ஸ்திரீகள் விலங்குகளினும் கொடிய புருஷர்களை விவாகம் செய்துகொண்டு வருந்துகிறார்கள்!

கோவ:— உன்னோடு பேச என்னால் முடியாது! வா; நாம் பிதாவிடம் செல்லுவோம். (கோவலன் நல்லுடை உடுத்திக் கொண்டு விநோதனுடன் மாநாய்கர் கிருகத்திற்கு செல்கிறான்)

மாநா:— (மாசாத்துவரைநோக்கி) கோவலனை அழைக்கச்சென்றவன் இன்னும் வரவில்லையே! என்ன தாமதமோ!

மாசா:— கூடிய சீக்கிரம் வந்துவிடுவான்! அதற்குள் தங்கள் புத்திரியை அழைத்தால் அவளுடைய அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ளலாமென்று நினைக்கிறேன்! தங்களுடைய கருத்தென்ன!

மாநா:— தங்களுக்குக் கருத்து எதுவோ அதுவே எனக்கு மாகும்! யாரடா அங்கே!

மாவ:— ஏன் பிரபு!

மாநா:— தோழி விசாலாட்சியைக்கூப்பிடு!

காவல்:— ஆகா! அப்படியே! (உள் செல்லுகிறான்)

விசா:— எங்கேமிகவும் அவசரத்துடன் வருகிறாயே!

காவ:— எஜமான் உன்னை உடனே அழைத்து வரச்சொல்லுகிறார்!

விசா:— என்ன சங்கதி!

காவ:— அதெல்லாம் எனக்குத்தெரியாது! அங்கேவந்து கேட்டுக்கொள்!

விசா:— (வெளியேவந்து மாநாய்கரை நோக்கி) என்னை அழைத்தீர்களாமே! எதற்காக?

மாநா:— கண்ணகி என்ன செய்துகொண்டிருக்கிறாள்? நான் அழைத்துவரச்சொன்னதாக இங்கு அழைத்துவா.

விசா:— படுத்திருக்கிறாள்; இதோ அழைத்து வருகிறேன்; (செல்லுகிறாள்)



விசா:— (கண்ணகியின் அந்தப்புரத்திற்குச் சென்று அங்கு அவளுடைய குரலோசை கேட்டுப் பதிவிருக்கிறாள்).

கண்:—(இருக்கையிற் சாய்ந்தபடியே தானாகப் பேசிக்கொள்ளுகிறாள்) எங்குபார்த்தாலும் கோவலரின் திருவுருவமே காணப்படுகிறதே; இது என் கண்ணின் குற்றமோ; நீர் நிலையின் அடிவாரத்தில் தோன்றும் கரியமணல் போன்ற கூந்தல் இடையிடையே சரிந்து நீண்டு கடைகுழன்று இருந்ததை அன்று நான் கண்டது இன்று நினைத்தாலும் என் கண்ணொளியைக் கவருகின்றதே; கோவலா; உனது அங்க அமைப்பின் அழகை யான் எவ்வாறு வருணிப்பேன்; புருவக்கொடி படர்ந்த உன் விரிநுதலும், அந்நுதல் கிளர்ந்த செவ்விழியும், என் கண்ணை விட்டு அரைக்கணமும் அகலவில்லையே! கொவ்வைக்கனியுங் கொழுவிய பவளமுஞ் செவ்விய அல்ல என்று சொல்லுவதுபோல் தோற்றும் நின் இதழும், ஆம்பல் நன் முகைநெகிழ்ந்து அலர்ந்த தன்மைத்தென்ன ஒளியுடன் திகழும் நின் பல் வரிசையும், என் மனதிற் படும் போதெல்லாம் உன் செய்ய வாயிதழமுதம் எஞ்ஞான்று கிடைக்குமோ என்னும் வேட்கையே மிகுகின்றது; வலம்புரியன்ன நின் கழுத்தும், அகன்ற மார்பும், பருத்ததோளும், தாள்தொடுங் கரமும், கண்ட எந்நங்கையர்தாம் தம் கருத்தழியா திருப்பர்? ஏ பிராண காந்தா நான் தங்கள் மீது கொண்டிருக்கும் காதலின் பெருக்கம் இன்ன தன்மையது என்பதை அறியவில்லையா! கேவலம் பெண்பாலாகிய என்னை இவ்வித வருத்தத்திற்குள்ளாக்கலாமா; இது தங்களுடைய அருட்குணத்திற்கு அழகாகுமா; (திடுக்கிட்டு), ஹே மதனா! என்னடா உன்னுடைய வீரம்; உன் போன்ற ஆண்மக்களிடம் உன்னுடைய வீரத்தனத்தைக் காட்டாமல் அற்பப்பெண்ணாகிய என்னிடத்திலா காட்டவேண்டும்; இது ஒரு பெருமையா; சீ; தூர்த்தா; என்னிடம் உனது வலிமையைச் செலுத்தாதே; நீ ஆணுடன் பெண்ணுடன் பிறந்ததில்லையா! பெண் என்றால் பேயு மிரங்கும் என்பார்களே; உனக்கு கொஞ்சமும் இரக்க மென்பது கிடையாதா; ஆ; எனது காதலரல்லவோ இங்கு இல்லை; இருந்தால் உனக்குத் தக்க தண்டனை விதிப்பேனே; ஆ; என் கண் ஏன் சுழல்கிறது; தனம் விம்முகின்றதே! இடை துவளுகின்றதே; ஒன்றும் தோன்றவில்லையே! எத்தனை நாளைக்குத்தான் உறக்கமில்லாதிருக்கிறது; ஏ! பிராணகாந்தா; எனதாருயிர்த்தலைவா; அருமைக்கோவலா; என்னை எப்போது நான் படும் துன்பத்தினின்றும் விடுவிப்பீர்; உமது திருமுகத்தைக் கண்டால் நான் படும் துயரமெல்லாம் கதிரவன் முன் பனியெனத் தொலைந்து விடுமே; நான் படும் அவஸ்தையை நீர் அறியவில்லையோ; ஆ; என்ன செய்வேன்; எங்கு செல்வேன்; யாருடனுரைப்பேன்; துணையும் ஒரு வரில்லை; ஹே! ஜகதீசா; (மூர்ச்சையாகிறாள்).

விசா:—(ஓடிவந்து கண்ணகியைத் தூக்கித் தன்மீது சாய்த்துக்கொண்டு) தோழீ; என்ன சமாச்சாரம்; மூர்ச்சையாகி விழுதற்குக் காரணமென்ன? (விசிறிகொண்டு விசுறுகிறாள்)

கண்ண:—(சற்று கண்விழித்து) சகீ; ஒன்றுமில்லை; என்னமோ ஒரு மாதிரியா யிருந்

தது; வேறொன்று மில்லை; நீ வந்தகாரணம் யாது?

விசா:— உன்னுடைய பிதா உன்னை உடனே அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார்.

கண்:— என்னை அங்கு அழைக்கும்படியான காரணமென்ன? அங்கு இன்னும் யாரிருக்கிறார்கள்? எதைக்குறித்திருக்கலாம்?

விசா:— என்ன காரணமோ; எதைக்குறித்தோ; எனக்குத்தெரியது; உன்னுடைய மாமனார் வந்துட்கார்ந்திருக்கிறார்; அவ்வளவுதான் எனக்குத்தெரியும்; (சிரிக்கிறாள்.)

கண்ணகி:— (புன்னகையுடன்) சகி; என்னடி பரிகாசம் செய்கிறாய்; எனக்கு இன்னும் விவாகமே யாகவில்லை; அப்படியிருக்க மாமனாரெங்கிருந்து வந்தார்.

விசா:— நான் சொல்வது உண்மையென்பதும் அல்ல வென்பதும் சற்றுநேரத்திற்குள் தெரியும்; விரைவாகவா; (இருவரும் மாநாய்கனிருப்பிடம் சென்று அங்கு கோவலன் பேசுங்குரல் கேட்டு மறைந்து நிற்கிறார்கள்.)

கோவல:— (மாசாத்துவனை நோக்கி) பிதா, என்னை அழைத்துவரச் சொன்னீர்களாமே; என்னகாரணம் பற்றியோ?

மாநாய்க:— (அருகிற்கிடந்த ஓர் ஆசனத்தைக் காட்டி) உட்காருங்கள்; அழைத்த காரணம் சொல்லுவார்கள்; (கோவலன் உட்காராமல் பூமியைப்பார்த்த வண்ணமாய் நிற்கிறான்.)

மாசா:— பாதகமில்லை; உட்காரு! (உட்காருகிறான்).

விநோ:— உட்காருவதற்கு இவ்வளவு பிரார்த்தனை; பால்ய முறுக்கல்லவோ;

மாசா:— சென்ற நாலைந்துநாளாக முகவாட்டமாகவிருக்கின்றாயே என்னகாரணம்? சரீர அசௌக்கியமா;

மாநா:— பிதாவினிடம் மனதில் உள்ளதை வெளியிட்டுச் சொல்லுகிறதனால் பாதகமில்லை; சொல்லுங்கள்!

விநோ:— அவருக்குச்சரியான ஊட்டமில்லை! அதனால் தான் முகவாட்டம்!

கோவ:— வாட்ட மொன்று மில்லை! எப்போதும் போலத்தானிருக்கிறேன்! தந்தாய்! என்னை எதற்காக அழைத்தீர்கள்; அதைச் சொல்லுங்கள்!

மாசா:— உனக்கு விவாகம் செய்துவைக்க வேண்டு மென்பது என தபிப்பிராயம்! உன் கருத்தென்ன வென்று கேட்க அழைத்தேன்!

விநோ:— சபாஷ்! அ. வ. பா.! சபாஷ்!

மாசா:— அதென்னடா! அ. வ. பா! யாருடைய விலாசம்!

விநோ:— அரிச்சந்திரவிலாசத்தை நினைத்துக் கொண்டீர்களோ! அ. என்றால் அப்பளம்! வ. என்றால் வடை! பா. என்றால் பாயசம்! அ. வ. பா. அப்பளம், வடை, பாயசம்! சபாஷ்! (சிரிக்கிறான்)

மாசா:— போதும்! போதும்! உனது வியாக்கியானத்தை நிறுத்து! (கோவலனைப்பார்த்து) உனது கருத்தென்ன?

கோவ:— பிதா! தங்களுடைய கருத்திற்கு விரோதமாக நடக்கப்போகின்றேனா என்ன! தங்கள் சித்தம் எப்படியோ அப்படியே செய்யுங்கள்! ஆனால்!

விநோ:— அந்த "ஆனால்" தானே கூடாது.



கோவ:— ஆனால் நானோ மிகச் சிறுவன்! குடும்பத்தை வகிக்கும் நிர்வாகமில்லாதவன்! ஊர்க்குருவியின் தலையில் பனங்காயை வைப்பதுபோல் பால்யனான என்மீது குடும்பத்தைச் சுமத்துவது அவ்வளவு உசிதமாகாது! தங்களுடைய வாக்கியத்தைப்பரிபாலனஞ் செய்யக்கூடியவளும், என்னுடைய மாதாவின் கருத்திற்கு இணங்கி நடப்பவளுமாகிய சன்னிகையாயிருந்தாலன்றி நான் மணம் புரியேன்! புத்திரனுக்கு விவாகம் செய்வதால் அப்பெற்றோர்கள் அடையவேண்டியது சுக மன்றோ? மருமகள் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்துகொண்டிருப்பதன்றோ முறை! அவ்வித குணமுள்ள பெண் கிடைத்தால் நான் விவாகஞ்செய்து கொள்ளுகிறேன்!

மாசா:— அப்படிப்பட்ட குணங்கள் வாய்ந்த பெண்ணிருந்தால் விவாகஞ் செய்துகொள்ளத் தடையில்லையே!

கோவ:— தடையில்லை!

மாசா:— (மாநாய்கரைச் சுட்டி) இவர்களுடைய புத்திரி கண்ணகியை விவாகஞ் செய்து வைக்கலா மென்று உத்தேசம்! உனது அபிப்பிராயமென்ன!

கோவ:— (அடங்காத மனக்களிப்புடன்) தங்களுக்கு இஷ்டமானால் எனக்கும் இஷ்டமே! ஆனால் அப்பெண்மணியின் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம்! ஏனெனில் மணமகன் மணமகள் இருவருடைய உள்ளமும் ஒன்றையொன்றுபற்றி யிராவிட்டால் அவ்விவாகத்தால் துன்பமேயொழிய இன்பம் இல்லை!

விநோ:— வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போலன்றோ விருக்கிறது இவர் சொல்வது!

மாசா:— சரி நான் தெரிந்தே செய்கிறேன்! நீ போ!

மாநா:— (சேவகனை நோக்கி) எங்கடா கண்ணகி! கூப்பிடு சீக்கிரம்.

கோவ:— (இவ்வார்த்தைகள் காதில் விழுந்தவுடன்) கண்ணகி வருகிறாள்போலிருக்கிறது! அவளுடைய அபிப்பிராயத்தையும் அறிவோம்! (மறைவான இடத்தில் நிற்கிறான்.)

விசா:— பிரபு! கண்ணகி இதோ வருகிறாள்!

கண்:— (தன் பிதாவிடம் வந்து, நாணத்தோடு நிற்கின்றாள்)

மாநா:— கண்மணி! உன்னை எதற்காக அழைத்தேன் தெரியுமா!

கண்:— (இனியகுரலுடன்) தெரியாது! தோழிவந்து அழைத்தாள்! வந்தேன்!

மாநா:— சென்ற நாலைந்து நாளாக உன் சரீரம் மெலிந்து, மனம் சோர்வடைந்திருக்கக் காரணமென்ன?

கண்:— பிதா! ஒன்றுமில்லை! மனிதர்களுக்குச் சுகமுந் துக்கமும் மாறி மாறி வருவதியல்புதானே! ஒரு சமயம் மன உற்சாகத்துடனே இருக்கிறோம்! மற்றொரு சமயம் மனச் சோர்வுடனிருக்கின்றோம்!

மாநா:— உனக்கு ஏற்பட்டிருக்கும் மனோவியாகூலமென்ன?

கண்:— தந்தையே தங்களுக்குத் தெரியாதா என்ன! எனக்கு சொல்வதற்கு சங்கோசமாயிருக்கிறது.

மாநா:— பிதாவிடம் சொல்வதில் சங்கோசமென்ன! பாதகமில்லை சொல்!

கண்:— பிதா! தங்கள் ஆக்கினையை மீறி நடத்தற்கு எனக்கு என்ன சுதந்தரமிரு

க்கிறது! நான் சொல்வதைச் சற்று கவனத்துடன் செவி கொடுங்கள்! பெற்ரோர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதன்ரோ உத்தம புத்திரியின் இலக்கணம்! நான் குழந்தையா யிருக்கும்போது எனக்கு வியாதி, சுரம், முதலான நோய் வராதிருக்க வேண்டுமே யென்று தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமமும், கவலையும் இவ்வளவெனச் சொல்ல முடியுமோ! பால்யத்தில் எனக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பொருட்டும், ஒழுக்கத்தைச் சீர்திருத்தும் பொருட்டும் தாங்கள் கொண்ட கவலைக்கு அளவுமுண்டோ! பருவவதியாகி யிருக்கும் இப்போதும் தங்களுக்குக் கவலையையே கொடுத்து வருகிறேன்! "புத்திரி பருவமடைந்துவிட்டாளே! அவளுகருத் தக்க நாயகனை மணப்புரிவிக்க வேண்டுமே!" என்று தாங்கள் படும் கவலையே என்னுடைய கவலையை அதிகரிக்கச் செய்கிறது! என்னை யேன் அழைத்தீர்கள்

விஞே:—ஆடு நகைகிறதென்று ஒநாய் அழுகிறதாம்!

மாநா:— உனக்கு விவாகஞ் செய்துவைக்க வேண்டுமென்று உத்தேசம்; உனது எண்ணம் என்ன ?

கண்:—தங்கள் அபிப்பிராயப்படியே செய்யுங்கள்; ஆனல் நான் ஒன்று சொல்லுகிறேன்; அது விஷயமாய் என்னை மன்னிக்கக் கோருகிறேன்;

மாநா:—என்ன சொல்லுகிருய் ?

சண்:—ஏற்கனவே விவாகமான ஒரு பெண்ணுக்கு மறுபடியும் விவாகம் செய்வதுண்டோ?

மாநா:—செய்யும் வழக்கமில்லை;

கண்:—எனக்கு ஏற்கணவே வதுவையாகி விட்டது:

மாநா:—என்ன நீ சொல்வது ஆச்சரியமாயிருக்கிறது; விபரமாகத் தெரிவி.

மாசாத்து:—பிதா விடம் சொல்லுவதிற்குச் சங்கோச மென்ன? மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்லுகிறதுதானே!

கண்:—பிதா; ஆச்சரியமென்ன; நான், சொல்லும் விஷயம் தங்கட்குக் கோபத்தை யுண்டாக்கக் கூடுமேனும் தயை கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்; சில தினங்கட்கு முன் நான் நந்தவனத்திற்குச் சென்றபோது அங்குள்ள மேடையில் துயில்கொண்டிருந்த ஓர் சுந்தராங்கனை கண்டேன்; காணவும் காந்தங் கண்ட இரும்பென எனது மனம் அவனைப் பற்றியது; அக்கணத்திலேயே அவனே எனது உயிர்க்காதலன் என உறுதிசெய்துவிட்டேன்; அப்பூமானும் நித்திரை தெளிந்து எழுந்து என் மனக்குறிப் பறிந்து பரஸ்பரம் என்னையே காதலியாகக் கொண்டிருக்கிருர்; இங்ஙனம் எங்களுடைய ஈருயிரும் ஒரு யிராகி இருக்க அந்தச் சுந்தரனைத் தவிர்த்து வேறு புருஷர்களை யான் கனவிலும் நினைக்கலாமோ; அப்பெருமானை என்றண்டேவோமென்றும் வியாகூலமே என்னை இந்நிலைமையில் வைத்திருக்கிறது; என் மனதிலுள்ளதைக் கூறினேன்; இனி தங்கள் இஷ்டம்; நான் செய்த இக்குற்றத்திற்காக என்னை மன்னிக்கவும்! (நமஸ்கரிக்கிருள்.)

மாநா:—(திடுக்கிட்டு) அவனுடைய பேர் என்ன ?



கண்:—கோவலன் என்பதாகத் தெரிவித்தார்; வேறு ஒன்றும் அவர்வரலாறு தெரியவில்லை;

கோவல:—(தனக்குள்) ஆஹா; நான் அடைந்த பாக்கியமே பாக்கியம்; இவளன்ரோ கற்பிற்கரிசி; உத்தமபத்தினி; காதற்கிழத்தி என்ன அன்பு; என்ன விசுவாசம்;

மாநா:—(கண்ணகியை நோக்கி) சரி; நீ ஒன்றும் தகாதகாரியம் செய்யவில்லை; பயப்படவேண்டாம்; உன்னுடைய இஷ்டப்படி நீ காதலித்த கணவனையே இன்னும் ஒருவாரத்திற்குள் அடைவாய்; நீ உன் அந்தப்புரத்திற்குப்போ.

கண்:— (தலைவணங்கி) அப்படியே; (போகிருள்.)

கோவ:— (அவன் செல்லுவதுகண்டு) என்ன நடை! என்ன ஒயில்; அன்னமும் இவள் நடைகண்டு நாணுமே; நான் நமது கிருகத்திற்குச் செல்லலாம்! (செல்லுகிருன்)

மாநா:— (மாசாத்துவனைநோக்கி) தங்களுடைய கருத்துப்படியே எல்லாம் நடக்கும்! அந்தக் கோவலனை மருமகனுக அடையவேண்டு மென்பதே எனது கருத்து! மேலும் ஈஸ்வர அனுக்கிரகத்தால் அவர்களிருவரும் நேரில்கண்டு ஒரு வருக்கொருவர் மனமொருமித்து விட்டார்கள்!

மாசா:— எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதம் தான்!

மாநா:— அதேன்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! பெரியோர்களுடைய ஆசீர்வாதம்!

விஞே:— (அவர்களிருவரையும் நோக்கி) என்ன ஐயா! நீங்களிருவரும் ஆசீர்வாதத்தைக் குறித்தேவாதம் நிகழ்த்திக் கொண்டிருந்தால் மற்றதெல்லாம் எப்படிப் போகிறது!

மாசா:— மற்ற தென்னடா?

விஞே:— பித்தம் சிலேஷ்மம்! இவையிரண்டும் பாக்கி யிருக்கின்றனவே!

மாநா:— உன்னுடன் பேசிக்கொண்டிருப்பதற்குச் சமயம் இதல்ல! (மாசாத்து வனைநோக்கி) விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்கிறதுதானே!

மாசா:— விவாகத்தை என்றைக்கு வைத்துக் கொள்ளலாம்?

மாநா:- அடுத்த குருவாரம் நல்லநாள்! அன்று இரண்டு மூன்று முகூர்த்தங்களிருக்கின்றன! காலை முகூர்த்தத்தில் வைத்துக் கொண்டால் நமக்குச் சௌகரியமாயிருக்கும்!

மாசா:— அதற்கென்ன அப்படியே செய்கிறது!

விஞே:— ஞாயிற்றுக்கிழமையில் வைத்துக் கொண்டால் மிகவும் நலமாயிருக்கும்! பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு அன்று ரஜா நாளானபடியால் அவர்களெல்லோரும் வரச் சௌகரியமாயிருக்கும்! சாயந்திரம் நாலரைமணிக்கு மேல் ஆறுமணிக்குள் வைத்துக்கொள்ளலாம்!

மாசா:— பஞ்சாங்க பிராமணனுய் உன்னைத் தாண்டாவைக்கவேண்டும்! (சிரிக்கிருன்)

விஞே:— பிரபு! ஒரு விண்ணப்பம்!

மாசா:— என்னடா?

விஞே:— என்னுடைய வீட்டில் ஒரு கல்யாணம் வருகிறது! செலவிற்கு ஏதாவது கொடுத்தால் உபகாரமாயிருக்கும்

மாசா:— யாருக்குவிவாகம்?

விநோ:— பாதம் ஹல்வாவுக்கும், மைசூர்ப்பாகிற்கும் விவாகம்! முன்னதாகக் கொஞ்சம் பணமாவது கொடுத்தால் நான் போய் கத்தரிக்காய் பச்சியும், வாழைக்காய் பச்சியும் வாங்கி வரலாம்;

மாசா:— அவைகளெதற்காக?

விநோ:— கல்யாணத்திற்குப் பந்தல் போட வேண்டாமா? வாழைக்காய் பச்சியைப் பந்தல் காலாக நட்டு, கத்தரிக்காய் பச்சியைக் கீத்தாகப் பரப்பிவிடலாமென்று நினைக்கிறேன்!

மாசா:— உன்னோடு பேசநம்மாலாகாது! (மாநாய்கரைநோக்கி) நீங்களும் விவாகத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்யுங்கள்? நானும் செய்கிறேன்! நான்போய் வருகிறேன்? உத்திரவு கொடுங்கள்!

மாநா:— ஆஹா! அப்படியே!

[மாசாத்துவன் விநோதன் சகிதம் தனது கிருகத்திற்குச் செல்கிறான்]

---

## SANKARAPRYAN.

## சங்கரப்பிரியன்.

*(Concluded.)*

மனோரஞ்சினி:—நாதா! நாமிருவரும் பிரிந்தபிறகு சந்தித்து ஒருயாதமாகிறது. இத்தேசத்து ஜனங்களும் நான் ஸ்திரீஜாதியென்றும், தாங்கள் எனது கணவரென்றும் என்னைவிட்டுப் பிரிந்து புத்திமாறுடி கொஞ்சநாள் பைத்தியக்காரர்கள் கொட்டடியிலிருந்ததாயும் தெரிந்தபிறகு, தங்களை அரசனாகத் தெரிந்தெடுத்தார்கள். தவிர, எனது தகப்பனாரும் தாங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்ததும் வந்து நமது கலியாணத்தை முடித்துவிட்டுச் சென்றனர். தவிர நமது சைனியத்தைக்கொண்டு அக்கிரமபுரத்தரசனைத் தோற்கடித்து கப்பங்கட்டச் செய்தோம். கடவுள் நமது எண்ணத்தை முற்றிலும் நிறைவேற்றியிருக்கிறார்.

சங்கரப்பிரியன்:—கண்மணி, நாம் இவ்வளவு அனுக்கிரகத்தைப் பெற்றும் என்மனம் முற்றிலும் சந்துஷ்டியுள்ளதாயிருக்கவில்லை. ஏனெனில், உன் பிதா தனது ராச்சியத்தையும் எனக்குப்பட்டம் கட்டிவைத்துவிட்டு தன்மனைவியோடு காட்டிற்கு தவம் செய்யப்போய்விட்டாரே! நம்மோடு கூடவிருக்கும்படியான பாக்கியத்தை நாம் பெறவில்லையே! தவிர இவ்விடம் நமது கலியாணத்தை முடித்து வைத்துவிட்டுப் போன எனது தாய்தந்தையரும் உனது தாய்தந்தையர் போயிருக்கும் வனத்திற்கே தவம்செய்யப்போய்விட்டதாய்க் கேள்விப்பட்டேன், இதுவும் எனது மனத்தின் அசந்துஷ்டியை அதிகப்படுத்துகிறது.

மனோரஞ்சினி:—நாதா! இது தங்களுக்கு ஏற்றதே. நமது தாய்தந்தையர்கள் வனத்தில் தவம் செய்யப்போனது நாம் சந்தோஷிக்கத்தக்கதன்றோ? மனக்கவலையை விட்டிருங்கள். நமது தாய்தந்தையர்கள் தவத்தினால் மேலான பதவியைப் பெறட்டும். இவ்விராச்சியத்திலிருந்தால் முக்தி பெற முடியாது. "நிஸ்ஸங்கத்துவெ நிர்மோஹத்துவம், நிர் மொஹத்வே நிச்சல சித்தஹ, நிச்சல சித்தே ஜீவன்முக்திஹி" என்னும் வாக்கியம் பிரமாணமன்றோ நமக்கு.

சங்கரப்பிரியன்:— நீ சொல்வது வாஸ்தவந்தான். வா, நியாயஸ்தலம் போவோம்! என்று சொல்லி மனோரஞ்சினியை அழைத்துக் கொண்டுபோகிறான்.

---



### முடிவுரை.

நமது கதாபுருஷர்களில் சிற்சிலரதுமுடிவு கூறுவோம். நம் சங்கரப்பிரியன் தம்பியும் தனதுதேசத்தில் நெடுங்காலம் அரசு செலுத்தினபிறகு, ராச்சியத்தைத் தனது மகனுக்குப்பட்டம் கட்டிவித்து காலம் சென்றான். நமது கோலாஹல செட்டியும் மறுநாட்காலையில் எழுந்து, மனோரஞ்சினி ஓடிப்போய்விட்டதை அறிந்து வண்டிக்காரனைக் கூப்பிட்டு வண்டி பூட்டச் சொல்ல வண்டி வாயிலில் வந்து நின்றதும், இராத்திரிக்குள் எவ்வளவு தூரம் அவள் காலால் ஓடியிருக்கக்கூடும். கூடிய சீக்கிரத்தில் அவளை துரத்திப் பிடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு வாயிலில் வந்து, எந்ததிக்கில் துரத்திக்கொண்டுபோகிறதென்பது தெரியாததால் பிரயாணத்தை நிறுத்திவிட நேர்ந்தது. அவனது வேலைக்காரிகளிருவருமோ மனோரஞ்சினி காட்டில் ஓடிவிட்டதும் கோலாஹல செட்டியின் கோபத்திற்கு பயந்து வேறே ஊருக்கு ஓடிப்போய் வேறொரு செட்டியிடம் வேலைக்கமர்ந்தார்கள். திருடர்களும் ஆண்வேஷதாரியும் செந்தலைப்புலிகளால் பிடிக்கப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டு ஆயுசு வரையில் தண்ணீர்மேல் ஏற்றப்பட்டார்கள். நமது பைரம்கான் மனைவி குல்கல்பீபி வைசூரி நோயால் இறந்துபோக பைரம்கானும் வேறு நிக்காகு முடித்துக்கொண்டு சௌக்கியமாயிருக்கிறதாகக் கேள்வி.

இந்திரபாத்துநபாபும் முன்போலவே இப்பொழுதும் தர்பார் நடத்திவருகிறார்.

வயோதிகர்களான நமது சங்கரப்பிரியன், மனோரஞ்சினி இவர்களது தாய் தந்தையர்களது சமாசாரம் பின்வரும் சம்பாஷணையால் விளங்கும்.

ஒரு ஆசனத்தில் துத்தநாகமஹரிஷி வீற்றிருக்க, அவருக்கெதிராக சங்கரப்பிரியன் தாய்தந்தையர்கள், நீதிமானும் பத்மினியும், மனோரஞ்சினி தாய்தந்தையர்களும் உட்கார்ந்திருக்கப் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

நீதிமான்:—மஹரிஷிகளே, தங்கள் உபதேசத்தால் கிருதார்த்தர்களானோம். சாவு என்றால் என்ன? செத்தபிறகு நமக்கு நேரிடுவது எது? உபதேசித்தருளவேண்டும். ஏனென்றால் எங்களுக்கோ வயதாய்விட்டது. சாவுநெருங்கிவிட்டது. ஆகையால் தெரிந்து கொள்ள அபிப்பிராயப்பட்டு வேண்டிக்கொள்கிறோம்.

துத்தநாகமஹரிஷி:—கேளுங்கள் உபதேசிக்கிறேன். சாவு என்பது என்ன என்று அறிவதற்குமுன் மனுஷியனைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டியது கொஞ்சம் உண்டு. மனிதனென்றால் ஆத்துமாவும் அந்த ஆத்துமா நினைத்தவிடம் போக இரண்டு வண்டியும் சேர்ந்தானதுதான்.

பத்மினி:—தாங்கள் சொல்வது எனக்குப் புலப்படவில்லையே. ஆத்துமாவும், அவன் இரண்டு வண்டியும் சேர்ந்தானது மனிதன் என்பது நன்றாக விளங்கவில்லை. உப்பு, புளி, மிளகாய்ப்பொடி இவைகள் சேர்ந்து ஆனது ரசம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது சங்கதியோ விசித்திரமாயிருக்கிறது. தவிர, ஆத்துமாவுக்கு இரண்டு வண்டிகள் என்னத்திற்கு?

துத்தநாகரிஷி:—விரித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். இப்பொழுது துவிசக்கிர வண்டியிருக்கிறதே (bicycle), பார்த்திருக்கிறீர்களா?

எல்லாரும்:—பார்த்திருக்கிறோம்.

துத்தநாகரிஷி:—அவ்வண்டிக்கும் கட்டை வண்டிக்கும் என்ன வித்தியாசம்?

எல்லாரும்:—துவிச்சக்கிரவண்டியில் ஏறினால் ஒரு இடமிருந்து மற்றொரு இடத்திற்கு அதி சீக்கிரமாய்ப் போகலாம். கட்டை வண்டி ஏறினால் ஒரு இடமிருந்து இன்னொரு இடம் போய்ச்சேர அதிக நாழிகை செல்லும்.

துத்தநாகரிஷி:—சரிதான். அதுபோல், ஆத்துமா வண்டிக்காரன். அவன் துவிச்சக்கிர வண்டியில் ஏறிக்கொண்டு அத்துடன் கட்டை வண்டியில் ஏறிக்கொண்டிருக்கிறான். கட்டைவண்டியாவது இத்தேகம். இத்தேகத்துள் கொஞ்சம் உள்புரமாயும் கொஞ்சம் வெளிப்புரமாயும் நமது கண்ணுக்குத் தெரியாத இன்னொருதேகமிருக்கிறது. அதுதான் ஆத்துமாவின் துவிசக்கிரவண்டி. ஆத்துமாவுக்கு அவசரமாய் எங்கேயாவது போக வேண்டியிருந்தால் துவிசக்கிரவண்டியில் (பைஸிகிலில்) ஏறிப் போவான். இல்லாவிட்டால், துவிச்சக்கிர வண்டியைக் கட்டைவண்டியில் போட்டு கட்டை வண்டியை ஓட்டிக்கொண்டு திரிவான்.

எல்லாரும்:—இதைப் பிரத்தியக்ஷத்தில் உதாரண பூர்வமாகத் தெரிவிக்க வேண்டிக்கொள்கிறோம். ஆத்துமா அவசரமாய்ப் போக வேண்டியது எதற்கு? மெதுவாய்ப் போக வேண்டியது எதற்கு? ஜட்காவண்டிக்காரர்கள்தான் அதி அவசரமாய்ப் போகவேண்டியது அவசியம். சில சமயங்களில் குழந்தைகள் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தால் அவர்கள் மேலும் வண்டியை ஏற்றிச் செல்லுவார்கள். வேகமாய்ப் போனால் தானே இரண்டு மூன்று தரம் போகலாம். அல்லது பிரபுக்களது வண்டியும் அவசரமாய்ப் போகவேண்டியது அவசியம். ஏனெனில், வண்டிக்குள் உட்கார்ந்திருப்பது யார்? சாதாரணமனுஷனா? பிரபுவல்லவா? பிரபுக்கள் உட்கார்ந்து போகும் வண்டியும் சாதாரணமனிதர்கள் உட்கார்ந்து போகும் வண்டியும் ஒரே வேகமாய்ப் போனால் பிரபுக்கள் வண்டிக்கு என்ன கௌரதை இருக்கிறது?

எல்லாரும்:—ஆத்துமா வண்டி இவ்விரண்டில் எதில் சேர்ந்தது? ஆத்துமா அவசரமாய்ப் போவது எப்பொழுது? தெரிவிக்கவும்.

துத்தநாகரிஷி:— ஆத்துமா கட்டை வண்டியாகிய இத்தேகத்தை காலைமுதல் ராத்திரி வரையில், அதாவது, பகற்காலமெல்லாம் உபயோகிக்கிறான். பிறகு இராக்காலங்களில் கட்டை வண்டியாகிய இத்தேகத்தை ஒரு இடத்தில் விட்டுவிட்டு, துவிச்சக்கிர வண்டியாகிய சூக்ஷ்ம சரீரத்தில் புகுந்துகொண்டு யதேச்சையாய்த் திரிவான். இதுதான் ஆத்துமாவின் செய்கை.

எல்லாரும்:—ஆத்துமாவின் இவ்வித செயலுக்கும் சாவுக்கும் என்ன சம்பந்தம், விளங்கச் சொல்லவேண்டும்.

துத்தநாகரிஷி:—சொல்லுகிறேன் கேளுங்கள். சாவைப்பற்றி ஜனங்கள் பயப்படுவது சுத்த மூடத்தனம். நாம் ஒவ்வொருநாளும் தூங்கும் பொழுது செத்துதான் போகிறோம். ஆனால் சாவுக்கும் தூக்கத்திற்கும் பேதமென்னவென்றால். செத்தால் சூக்ஷ்மதேகத்தோடு திரிகிறான். தூங்கும் பொழுதோ அவனுக்கு தேகத்தில் பற்று அற்றுப்போகிறதில்லை. மறுபடி அதை உபயோகித்துக் கொள்கிறான்.



மற்றோர்கள்:— மேற்சொன்னதற்கு பிரத்தியக்ஷ உதாரணம் உண்டாகில் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறோம். தவிர, செத்துப் போன பிறகு ஆத்துமா சூக்ஷ்மதேகத்தை எவ்விதம் உபயோகிக்கிறான்? எத்தனைகாலம் சூக்ஷ்மதேகத்தோடிருப்பான்? இத்தூல தேகத்தைப் போல் சூக்ஷ்ம தேகத்திலும அவனுக்கு பற்று அற்றுப் போவதில்லையோ?

துத்தநாகரிஷி:—கேளுங்கள். செத்துப்போன பிறகு சூக்ஷ்ம தேகத்தோடிருக்கும் ஆத்துமா தான் செத்ததைக்கூட வெகுசாய் உணர்வதில்லை. ஆத்துமாவுக்கு இத்தூல தேகத்தில் உள்ள அதிகமான அபிமானத்தால் செத்தபிறகுகூட தேகம் பொசுக்கப்பட்டிருந்த போதிலும் தேகத்தோடு மற்ற மனிதர்களுக்குத் தென்படுவது சகஜம். உதாரணமாக, ஒரு ஊரில் ஒருவன்புதிதாய்த் தான் சந்தித்த கிழவனை நீர்யார், எங்கிருந்து வந்தீர் என்று வினவ, அவன் சுமார் 200 வருஷங்களுக்கு முன் இறந்து போன ஒருவன் பெயரைச் சொல்லி, அவன்தான் தானென்றும், 200 வருஷகாலமாய்த் தான் அவ்வூரிலேயே வசிப்பதாயும், தான் வேறொரு ஊரிலிருந்து அங்கு வரவில்லையென்றும் பதிலளித்தான். வாஸ்தவத்தில் தான் செத்ததை உணராத சூக்ஷ்மதேகத்தோடு கூடின ஆத்துமாக்களில் ஒருவன்தான் இவன். தவிர, உலகத்தில் எவ்வளவுக்கெவ்வளவுபற்றற்று ஒருவன் இறந்துபோகிறானோ அவன் சூக்ஷ்மதேக லோகத்தில் நெடுநாள் வாழ்வதில்லை. சீக்கிரம் அதற்கு மேலான உலகத்துக்குப் போய்விடுகிறான்.

எல்லோரும்:— இதென்ன விசித்திரமாயிருக்கின்றது! இவ்வுலகத்தைத் தவிர வேறு உலகங்களும் உண்டா என்ன? தயவுசெய்து விளங்கச் சொல்லவேண்டும்.

துத்தநாகரிஷி:—ஆஹா! அனேகஉலகங்கள் உண்டு. ஆனால், ஏழு உலகங்களென்று நீங்கள் இப்பொழுது வைத்துக் கொள்ளுங்கள். அதில் மூன்று உலகங்களைப் பற்றித் தெரிவிக்கிறேன். நாம் இப்பொழுது பார்க்கும் உலகம் ஸ்தூலசரீர உலகம்; செத்துப் போனபிறகு சூக்ஷ்ம தேகத்தோடு வசிக்கும் ஆத்துமாக்களின் உலகம் சூக்ஷ்மதேக உலகம் இவ்விரண்டிற்கிடையில் மற்றொரு உலகமுண்டு. அதாவது எண்ணங்களால் உண்டாகும் பிம்பங்களின் உலகம். நமது நண்பர்கள் இறந்துபோகிறார்கள்: அப்படி என்றால் என்ன? அவர்கள் உடம்பு மாத்திரம் போனதே ஒழிய, அவர்கள் போகவில்லை. அவர்கள் சூக்ஷ்ம தேகத்தோடு நமது பக்கத்திலேயே யிருக்கிறார்கள். ஆனால் நமது கண்ணுக்குப் புலப்படுகிறதில்லை. சூக்ஷ்மலோகத்தவர்கள் தேகத்தின் வழியாய் நாம் செல்லுகிறோம். நம் தேகத்தின் வழியாய் அவர்கள் செல்கிறார்கள். நாம் பக்கத்திலிருந்து கொண்டிருந்தும் ஒருவரை ஒருவர் கண்டு சம்பாஷித்தல் கூடாததாயிருக்கிறது.

எல்லோரும்:— அதிவிசித்திரமாயிருக்கிறது. எண்ண பிம்ப உலகத்தைப்பற்றிக் கொஞ்சம் தெரிவிக்கக்கேட்டுக்கொள்கிறோம்.

துத்தநாகரிஷி:— கேளுங்கள். நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும், பேசும் ஒவ்வொரு பேச்சும் வீண்போவதில்லை. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிம்பத்தை உண்டாக்குகின்றன. இப்பிம்பங்களின் உலகம்தான் பிம்ப உலகம்; உண்டான பேச்சு அல்

லது எண்ணத்தின் பலத்துக்குத் தக்கபடி இப்பிம்பங்கள் நாள்பட்டாவது, சீக்கிரத்திலாவது அழிந்து போகின்றன.

எல்லோரும்:— மேற்சொன்னதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டும்.

துத்தநாகரிஷி:— கேளுங்கள்; ஒருக்கால் ஒரு ஸ்திரீ இருந்தாள். அவளை 6-7 பேர்கள் கலியாணம் பண்ணிக் கொள்ளும்படிகேட்டார்கள். அவள் மாட்டேன் என்று விட்டாள். அவ்வாறேழுபேர்களும் அவள் மீது பழி வாங்கவேண்டுமென்று கொண்ட பலமான எண்ணங்களால் உண்டான பிம்பங்களின் சேர்க்கையான கோரரூபமான பிம்பம் அவள் இறந்தபிறகு சூக்ஷ்மதேக உலகத்தில் அவளைத் துரத்தி வாதித்ததாகக்கூறப்பட்டிருக்கிறது. தவிர ஒருவன் தனது சத்துரு ஒருவன் இறந்துபோகவேண்டுமென்று வைராக்கியமான பலத்த எண்ணத்தால் நினைத்தால் அவனிறப்பது நிச்சயம். தவிர, இன்னொரு உதாரணம்: ஒரு ஊரில் ஒரு வர்த்தகனிருந்தான். ஒரு நாள் அவன் குமஸ்தாக்களில் ஒருவன் நேரம் சென்று வந்தவன் திரும்ப வீடு போய் வருவதாக சொல்லிப் போனான். அவன் வீடுபோய்த்திரும்பி வர அரைமணி செல்லும். அவன் சென்ற 10-15 நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பிவந்து அலமாரியிலிருக்கும் ஒரு புத்தகத்தை எடுப்பதைப் பார்த்த வர்த்தகன், நீ ஏன் இன்னம் வீடு போய் வரவில்லை யென்று கண்டித்ததும் புத்தகம் தொப்பென்று கீழேவிழ, பிம்பம் மறைந்து விட்டது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் குமாஸ்தாவும் வர, விசாரித்ததில் தான் திரும்பி வந்ததில்லை யென்றும் வழியில் ஒரு சிநேகிதனைச் சந்தித்ததாகவும், அவனோடு தர்க்கம் செய்ததாகவும், தனது யஜமான் வீட்டு அலமாரியிலிருக்கும் புத்தகம் மாத்திரம் தன் கையிலிருக்கும் பக்ஷத்தில் அப்பொழுதே நிரூபிப்பதாகவும் தர்க்கித்ததாச் சொன்னான். இங்கு நேர்ந்ததென்னவெனில், அவனது எண்ணத்தினால் உண்டான பிம்பம் வீட்டு அலமாரியினிடம் போய் புத்தகத்தை எடுக்க மாத்திரம் சக்தி உள்ளதாயிருந்தது. எண்ணம் இன்னம் பலமானதாயிருந்தால் புத்தகத்தைத் தர்க்கம் நடந்த விடம் கொண்டு போயிருக்கும். தவிர, ஒருவன் ஒருநாள் வந்து கொண்டிருக்கையில், மழையும் காற்றும் வந்துவிட்டது. வழியில் ஒரு பாழ்வீட்டில் தங்கினவன், வீட்டில் எனது அறையில் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தால் இப்பொழுது எவ்வளவு சுகமாயிருக்குமென்று நினைத்தான். நினைத்ததால் உண்டான பிம்பமானது அவன் வீடு சென்று நாற்காலியில் படுத்துக்கொண்டது. யஜமானும் வீடு சென்றதும் நாற்காலியில் தன்னைப்போன்ற மனிதன் படுத்திருக்கக்கண்டு திகைத்து தைரியசாலியாகையால் அவன் மேல் போய் உட்கார அது மறைந்து விட்டது.

பத்மினி:— மஹரிஷிகளே, இவ்வளவு உபந்நியாசம் இன்றைக்கு எங்கள் நிமித்தம் செய்ததற்கு வந்தனம். சிரமபரிகாரபக்ஷத்தில் எனது இரண்டு சந்தேகத்தைத் தீர்க்கப் பிரார்த்திக்கின்றேன்.

துத்தநாகரிஷி:— செப்பின் தீர்க்கின்றேன்.

பத்மினி:— நாம் தூங்கும் பொழுது ஆத்துமா சூக்ஷ்மதேகத்தோடு வெளியில் சஞ்சரிப்பதாகச் சொன்னீர்களே, சஞ்சரிக்கும் பொழுது என்னசெய்கிறதென்று விளக்கிக்காட்ட ஒரு உதாரணம் கொடுப்பது ஒன்று. இரண்டாவது, சூக்ஷ்மதேகத்தோடு கூடின ஆத்துமா சிலவேளைகளில் தனது பந்துக்கள்; குழந்தைகள் முதலானவர்களுக்கும் தூலதேகத்தோடு காணப்படுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு திர்ஷடாந்தங்களிருந்தால் தெரிவிப்பது.



துத்தநாகரிஷி:— கேள். சொல்கின்றேன் ஆத்துமா தேகத்தை மாத்திரம் விட்டுவிட்டதே ஒழிய தேகத்துக்குச் சம்பந்தப்பட்ட வாசனைகளை விட்டதில்லை. செத்துப்போன பிறகுகூட தேகத்திலும் இன்னம் தேகசம்பந்தமான சிற்றின்பங்களிலும் உள்ள பற்றினால் சூக்ஷ்மதேகத்துடன் கூடின ஆத்துமா சில வேளைகளில் ஸ்தூலதேகத்தோடு தென்படுகிறான். இது மேற்சொன்ன கிழவனது திர்ஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும். தூங்கும்பொழுது ஆத்துமா சூக்ஷ்மதேகத்தோடு வெளிக்கிளம்பி சஞ்சரிக்கையில், ஸ்தூலதேகத்தோடு இருக்கும் பொழுது கொண்ட எண்ணங்களையும் சிலவேளைகளில் நிறைவேற்றுகிறான். திஷ்டாந்தமாக, ஒரு தரம் ஒரு கப்பல் தலைவன் தனது அறைக்குள்போக அவ்விடம் தனது சோபாவில் ஒரு வேற்று மனிதன் உட்கார்ந் திருக்கக் கண்டு திகைத்தான். ஏனெனில், நடு சமுத்திரத்தில் ஒரு புதியமனிதன் கப்பலில் எப்படி வந்திருக்கக் கூடும்? பிறகு பயத்தினால் வெளியேவந்து தன் சிநேகிதன் ஒருவனைக் கூட்டிக் கொண்டு போய்ப்பார்க்கையில் முன்னிருந்தவனைக் காணோம். ஆனால், அவ்விடம் வைக்கப்பட்டிருந்த சிலேட்டில், 'உனது கப்பலை வடது புறமாக தயவுசெய்து கொண்டுவா' என்று எழுதப்பட்டிருந்தது. அவ்வெழுத்து அக்கப்பலிலுள்ள ஒருவருடைய எழுத்தாகவுமிருக்கவில்லை. கப்பல் தலைவனும் அச்சிலேட்டில் கேட்டுக் கொள்ளப்பட்டபடி வடக்குப்பக்கம் போக அவ்விடத்தில் ஆபத்திலிருந்த ஒரு கப்பலைக்கண்டான். அக்கப்பலில் ஏறிப்பார்த்ததும் வெகுநாளாய் சரியான ஆகாராதிகளில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களுள் தான் தனது அறையில் கண்டமனிதனையும் கண்டான். ஆனால் அம்மதனினுக்கோ அக்கப்பல் தலைவனைப்பார்த்ததாக ஞாபகமேயில்லை. அக்கப்பல் தலைவனும் அவனிடம் தான் கொண்டு வந்திருந்த ஸ்லேட்டின் எழுதாதபுறத்தைத் திருப்பிக்கொடுத்து அதில் எழுதச்சொல்லிக்கேட்க அவனும் என்ன எழுதட்டும் என்று கேட்டான். எதுவானாலும் சரி, "உனது கப்பலை வடது புறமாக தயவு செய்து கொண்டுவா" என்று எழுதுமே என்று சொல்ல, அவனும் அப்படியே எழுதி அவன் கையில் கொடுக்கவும் அக்கப்பற்றலைவனும் முதல் தடவை எழுதப்பட்டிருந்த பக்கத்தைத் திருப்பி அவன் கையில் கொடுத்து இது உமது எழுத்துத் தானே என்று வினவ, அவனும் 'சந்தேகமென்ன! உமக்கெதிராகத்தானே எழுதினே' னென்றான். கப்பல் தலைவனும் மற்றப் பக்கத்தையும் திருப்பிப்பார்க்கச் சொல்ல அம்மனிதன் தன்னெழுத்து இருபக்கத்திலு மிருக்கக்கண்டு திகைத்தான். இங்கு நடந்த தென்ன வெனில், அம்மனிதன் கொஞ்சநேரம் தூங்கினான், அச்சமயத்தில் ஆத்துமாவும் தனது துவிசக்கிரவண்டியாகிய சூக்ஷ்மதேகத்தில் ஏறிக்கொண்டு சுற்றி வருகையில், தானும் இன்னம் மற்றவர்களுமிருந்த ஆபத்தான நிலைமையால் எப்படியாவது உதவி பெறவேண்டு மென்ற பலமான எண்ணம் புதிய ஒரு கப்பலைக்கண்டதும் உண்டாய், ஸ்தூலதேக உருவமையப்

பெற்று, கப்பல் தலைவன் அறையிற் சென்று அவன் சிலேட்டை எடுத்து அவ்வாறு எழுதிவைத்து மறைந்தது. நீகேட்ட இரண்டாவது கேள்வியின் பதிலையும் கேட்பாயாக. ஒருவன் தனது பந்துக்கள் முதலானோர்களிடம் அதிகபற்றுள்ள வனாயிருந்து இறந்து போனாலும் சரி, அல்லது, தான் செய்து முடிக்கவேண்டு மென்றிருந்த காரியத்தைச் செய்து முடிக்காமல் இறந்துபோனாலும் சரி. தனது பலமான மனோசங்கல்பத்தினால் ஸ்தூல வுரு அமையப்பெற்று. இத்தூல உலகில் காணப்படுவது வழக்கம், அப்பொழுது யாராகிலும் அத்துடன் வார்த்தையாடி அக்காரியத்தைச் செய்து முடித்தால், அது பிற்பாடு தூல உரு அமையப்பெறுவதில்லை. அதுவே என் அக்காரியத்தைச் செய்து முடிக்கக்கூடாதெனின், சங்கல்பம் பலமாயிருந்தால் செய்து முடிக்கும்: இல்லாவிடில் அது தூலதேகத்தோடிருப்பது சொல்பகாலந் தான். உதாரணமாக, ஒரு ஸ்தீரீ தனது குழந்தைகளிடமிருந்து பிரிந்துபோய் ஒரு ஊரிலிருக்கையில் வியாதிப்பட்டு மரணவஸ்தையிலிருக்கையில் தான் தனது குழந்தைகளைப்பார்த்து விட்டுச் சாகவேண்டு மென்ற பலமான சங்கல்பத்தோடிறந்தாள். அச்சங்கல்பத்தால் உண்டான பிம்பமும் தூல உரு எடுத்து குழந்தைகளிருக்குமிடம் வந்து கொஞ்ச நேரமிருந்து மறைந்துபோனதை அநேகர்பார்த்திருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர ஒரு தாயாருக்கு ஒரு பையனிருந்து இறந்துவிட்டான். ஒரு நாள் அவள் தனியாயிருக்கையில் ஒரு திருடன் அவ்வீட்டைக்கொள்ளையிடவர அப்பிள்ளை தூலதேகத்தோடு வந்து அத்திருடனை வெருட்டிவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொன்று: தாயார் இல்லாத சில குழந்தைகள் ஒரு இடத்தில் விளையாடிக் கொண்டிருக்க ஒரு குழந்தை ஒரு மேல்கட்டில்லாத கிணற்றை நோக்கிப்போய்க் கொண்டிருந்தது. கொஞ்சநேரம் சென்றிருந்தால் அக்குழந்தை கிணற்றில் விழுந்து மரித்திருக்கும். ஆனால் அக்குழந்தைகளின் மேலுள்ள பற்றினால், அவைகளின் தாய் தூலவுரு எடுத்து வந்து அக்குழந்தையை, சென்று கொண்டிருந்த வழியை விட்டுத்திருப்பிக்காப்பாற்றினதாக கூறப்பட்டிருக்கிறது; தவிர, ஒரு மனிதன் தான் ஒருவனிடம் வாங்கியிருந்த கடனைத்திருப்பிக்கொடாமலிறந்து போனதால், தான் வழக்கமாய்ப் பத்துவரவு செய்து வந்த ஒரு சாவகார் வீட்டில் அடிக்கடி தூல உருவோடு சஞ்சரித்து வந்தான். ஒரு நாள் அச்சாவகாரியும் தைரியம் கொண்டு, நீ என் இப்படி என்னைப்பாதிக்கிறாய் என்று வினவ, அதுவும் வாயைத்திறந்து உனது கணக்குப்புஸ்தகப்படி உன்னிடமிருந்து எனக்குச் சேரவேண்டிய தொகையிலிருந்து, 100-ரூ தான் முன் கடன்பட்டிருந்தவனுக்குக் கொடு என்று சொல்லி மறைந்து அவனும் அப்படியே செய்து விட்டதும், அதுவும் அவன் வீட்டில் சஞ்சரிப்பதை விட்டுவிட்டது.

**பத்மினி:—** கடைசியாய் ஒரு கேள்வி: இச்சூக்ஷ்மதேக ஆத்துமா ஒரு இடமிருந்து அதிக தூரமான மற்றொரு இடத்திற்கு நொடியிற் செல்வதெப்படி?

**துத்தனுகரிஷி:—** செப்புகிறேன் கேண்மின்; நமக்கு இப்பொழுது தெரிந்திருப்பது நீளம், அகலம், உயரம் என்ற மூன்று அளவுகள்தான். ஆனால் இம்மூன்றுக்கு மேலான நான்காவது அளவு ஒன்றுண்டு. ஒரு பிரம்பு உன்னிடமிருப்பதாக வைத்துக்கொள். உயரமென்பதே தெரியாத ஒரு ஜந்து பிரம்பின் ஒரு கோடியினின்றும் மற்றகோடிக்கு வரவேண்டுமென்றால், அது அப்பிரம்பு முடிய நடந்தே தீரவேண்டுமல்லவா? ஆனால் உயரம் உண்டென்று உணர்ந்தவன் அப்பிரம்பை வளைப்பதினால் இரண்டு முனைகளையும் பக்கத்தில் கொண்டு வருவதால், அச்செந்து ஒருமுனையிலிருந்து மற்றதற்குச் சுலபமாய்த் தொத்திக்கொள்ளலாமல்லவா? அதுபோல நாலாவது பரிமாணத்தை உணர்ந்த சூட்சுமதேக ஆன்மாவுக்கு ஒரு இடமிருந்து வேறொரு இடம்போவது லக்ஷியமில்லாததாக விருக்கிறது.

**எல்லோரும்:—** எங்கள் நிமித்தம் இவ்வளவு பிரயாசை எடுத்துக் கொண்டதற்கு வந்தனம்.

முற்றிற்று.



## EXTRACTS.

# நெல்.*

**போது:—**இவ்வுலகை ரக்ஷிப்பது தான்யவகைகளே. தான்யவகைகளில் மிகச்சிறந்ததும் தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு மிகுதியாக விளைவதும் சரீரபோஷணைக்கு மிகவும் ஏற்றதும் இந்த நெல்லேயாம்.

ஆதியில் நெல்விளைவது இந்தியாவுக்கு மட்டுமே உரிமையாயிருந்தது. இந்தியாவிலிருந்துதான் ஜப்பான், அமரிக்கா, ஆஸ்திரேலியா இங்கிலாண்டுமுதலிய அந்நியநாடுகட்குப் பரவுவதாயிற்று. ஆயினும் தற்காலம் நம் இந்தியரைப் பார்க்கிலும் அவ் அந்நிய நாட்டார் இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாக உழைத்து மிகத்தேர்ச்சியடைந்துள்ளார்கள். நம் நாட்டாரோ ஊன்றிக்கவனியாமல்மேற்போக்காகவே நெல்சாகுபடி செய்கின்றனர். உழுவதும், விதைப்பதும் களையெடுப்பதும் தண்ணீர்கட்டுவதும் காப்பதுமாகிய இவ்வைந்து வகைத் தொழில்களும் சாதாரணமாகச் செய்து வருகின்றார்களன்றி நன்கு கவனித்துச் செய்வதில்லை.

> "ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
> னீரினு நன்றதன் காப்பு"

என்ற திருக்குறளுரையில் பரிமேலழகரும் இவ்வைந்துவகைத் தொழிலைக்கூறினர். தமிழ்ப்புராணங்களில் நாட்டுவளங்கூறுமிடத்து மருதநிலவருணனையில் நெல்விளைவின் பெருக்கமும் விளைவிக்குந்தன்மையும் பலவாறாக எடுத்துக்கூறக்காண்கிறோம்.

பண்டைக்காலத்தில் கால இயல்பாலும் நிலவளத்தாலும் உழைப்புவகையாலும் இத்தானியம் மிக வியக்கத்தக்கவாறு நம் நாட்டில் விளைந்து வந்தது. புராணங்களில் நெல் கரும்பைப்போலிருந்ததென்பர். "நெற்கரும் பெனக் கரும்பெலா நெடுங்கமுகென்ன" எனவும், "கரும்பல்ல நெல்லென்ன" எனவும் வருவனவாம். இதுமட்டோ! சங்கநூல்களில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியில் (247) "களிறுமாய்க்குங்கதிர்க் கழனி" என்று கூறுவர். யானைகள் நடுவேவந்தால் அவை மறையும்படி யானையுயரத்தினும் மிக்குயர்ந்துள்ள நெற்பயிரையுடைய வயல் என்பது இதன்பொருள். இவ்வாறு சிறப்புறப் பரிபாலிக்கப்பட்டு வந்த இந்தத்தானியத்தின் பெருமையோ கடவுளோடொக்கக் கூறத்தக்கது. புறநானூறு (186)-வது கவியில், "நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே" என்றவிடத்து, "உயிரையாக்குவன நெல்லும் நீரும்" என்பர் நச்சினார்க்கினியர். இவ்வாறு நம்முன்னோர்களாற் புகழ்ந்து போற்றப்பட்ட நெல்விவசாயத்தைப் பற்றி நன்றாக ஆராய்ந்து நாளுக்குநாள் அபிவிர்த்தியாகச் செய்வது தேசக்ஷேமத்திற்கு இன்றியமையாததென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயமேயாம்.

**நெல்வகை:—**நம் நாடே நெல்விளைவில் பிரசித்திபெற்றதாயினும் வகைகள் அதிகப்பட்டிருக்கவில்லை. இவ்வுலகத்தில் தற்போது 1400-வகை நெல் இருப்பதாக விவசாயமுறை நூல்களிற்றேர்ந்த பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இலங்கைத்தீவில் 160-வகையும் ஜப்பானில் 580-வகையும் இருக்கின்றனவாம். நம் இராஜதானியில் எங்காவது ஓரிடத்தில் எல்

* இவ்வியாசம், மதுரை டிஸ்திரிக்கட்டு அக்கரிக்கல்ஜ்ஜரல் சபையாரால் திறக்கப்பட்ட கால் நடைக்காட்சி வருஷோற்சவக்கூட்டத்தில், மேற்படி வியவசாய சபைகமிட்டி மெம்பர் எம். கே. எம். அப்தல்காதிறுராவுத்தர் அவர்களால் எழுதி, டிஸ்டிரிக்கட்டு மாஜிஸ்டிரேட் கனம்-பிரையன்ட், எம், எ., ஐ. சி. எஸ்., துரையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வாசிக்கப்பெற்றது.

லாவகை நெல்களையும் சேர்த்துவைத்து அந்தந்த நெல்லினையும் முறைகளையும் எழுதி வெளியிட்டால் மிகவும் அனுகூலமாயிருக்கும். தஞ்சைஜில்லா விவசாயசங்கத்தார் நம் சென்னை ராஜதானியிற் கிடைத்த 163 வகை நெல் சேர்த்து வைத்திருப்பதாகத் தெரிகிறது. ரோமபுரிப் பொருட்காட்சிச் சாலையில் பல தேயங்களிலிருந்து தருவித்த 347-வகைநெல் இருப்பதாக அறிகிறோம்.

பெயர்வகை:—இதன் பெயர் பெரும்பாலும் காரணம்பற்றிவந்தனவேயாம், சிறுபான்மை இடுகுறியாகவுமிருக்கின்றன. பெயர்கள் சிலவருமாறு.

குறுவை.

அறுபதாங்குறுவை
கருங்குறுவை
செங்குறுவை
வாற்குறுவை
கோணக்குறுவை
மொட்டைக்குறுவை
அன்னதானக்குறு [வை

கார்.

செங்கார்
கருங்கார்
மணற்கார்
கருத்தக்கார்
சண்டிக்கார்
சிறுமணியன்
மிளகி
பெருநெல்
செம்பாளை
குத்தாளை
காட்டுக்குத்தாளை

சம்பா.

வெற்றிலைச்சம்பா
பக்கிரிச்சம்பா
சிவப்புச்சம்பா
கம்பன்சம்பா
வாசனைச்சம்பா
மல்லிச்சம்பா
சின்னச்சம்பா
கிச்சிலிச்சம்பா
ஈர்க்கஞ்சம்பா
சீரகச்சம்பா
கட்டைச்சம்பா
முத்துச்சம்பா
பனிக்காட்டுச்சம்பா
கொத்துமல்லிச்சம் [பா
பொன்கம்பிச்சம்பா
கருடன்சம்பா
மிளகுசம்பா
சடைச்சம்பா
கைவிரிச்சம்பா
தங்கச்சம்பா
பாடஞ்சம்பா

முதலிய பலபெயருண்டு.

நிலம்:—நெல்விளைவுக்குரிய நிலம் நீர்வளமிக்க மருதநிலமேயென்பது நம் முன்னோர்கொள்கை. தற்கால அனுபவத்திலே இன்ன நிலந்தான் நெற்பயிருக்கு ஏற்றதென்று ஒரு வரையறை செய்யக்கூடாததாயிருக்கிறது. எல்லா நிலங்களிலும் நெல் சாகுபடியாகின்றது. ஜலமும் உரமும் இருந்தாற் போதும். களரிலும் விளைவிக்கலாம். கல்நிறைந்த தரையிலும் விளைவிக்கலாம். நெற்பயிரின்வேர் வெகுநுட்பமானது. ஆதலால் அவ்வேர் மண்ணுக்குள் தாராளமாகப்படரும்படி மண் நயமாயிருக்கவேண்டும். அஃதாவது இளக்கமுள்ளதாகவேண்டும். கடினப்பட்டிருந்தால் வேர் அதனையூடுருவிச் செல்லாதாகையால் வளர்ச்சியும் பலனுங்குறையும். குறுவை சண்டிக்கார் சடைச்சம்பா முதலியன முத்துப்பேட்டை வகையராவிடங்களில் களரான நிலத்தில் நன்றாகவிளைகின்றன. நம் மதுரை ஜில்லாவின் பலபாகங்களில் களரானநிலத்தில் வெள்ளைக்கட்டை, உவருண்டான் முதலியவகை நெல்விளைகின்றன. "உவருண்டான்"என்றபெயரே அது உவர் நிலத்தில் விளைவதென்பதைக் காட்டுகின்றதல்லவா? "எந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளை வெய்திடாது" என்பார் வில்லிபுத்தூரர். இவர் விளைவெய்திடாதென்றது சம்பாமுதலிய விலையுயர்ந்த நெல்லைக்குறிப்பிடுங்காற் பொருந்துமேயன்றி உவருண்டான் முதலிய நெல்லைக்குறிப்பிட்டால் பொருத்தமுறாது.

மழை:—"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றபடி நெற்பயிருக்கு மழையின் உதவியே முக்கிய ஆதாரம். மற்றப்பயிர்கள் எல்லாவற்றினும் நெற்பயிருக்கு ஜலம்



அதிகம்வேண்டும். ஆனதுபற்றியே கிணற்றிறைவைப்புன்செய்களில் பெரும்பாலும் நெல் சாகுபடி செய்யப்படுவதில்லை. காவிரி தாமிரபர்ணிபோன்ற ஜீவநதிப் பாய்ச்சலுள்ளவிடங்களில் தான் நெல்விளைவு அதிகம். பல இடங்களில் மழைகாலத்து வரும் ஜலத்தைக் குளங்களிற்கட்டிவைத்து நீர்பாய்ச்சி விளைவிக்கப்படுகிறது. மழை அதிகமாகப்பெய்கிற மலைப்புற நாடுகளிலோ புன்செய்ப்பயிராகவே நெல்விளைகிறது. மலையாளம் இலாகா பாலக்காடு முதலிய இடங்களிலும் இமய மலைச்சாரற் பிரதேசங்களிலும் நெல்லை விதைத்துவிட்டால் பின்பு நீர்பாய்ச்சவேண்டுமென்ற சங்கடமில்லாமல் மழையின் உதவியால் தானே விளைந்து விடுகிறது. இவ்விடங்களில் உழவர்கட்குச் சங்கடமேயில்லை. நெல்விளைவுக்கு ஆதாரமாகிய மழையே இதன்கெடுதிக்கும் ஆதாரமாகும். விதைத்தவுடன் மழை பெய்தால் விதை நன்றாய்முளையாது. பூவுண்டாகும் சமயம் மழைபெய்தால் தாது ஜலத்திற்போய்விடும். நெல்மணி திரட்சியின்றிப் பதரேயதிகப்படும். கதிரறுக்கும் போது மழைபெய்தால் நெல் உதிர்ந்துபோகும். அறுவடைக்கு ஆளுங் கிடையாது; களம் சேர்க்கக் கஷ்டமதிகம். ஆகவேவேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் மலையாளம் இமயமலை இப்பக்கங்களில் மழையே நெற்பயிரை ரக்ஷிக்கவேண்டியிருக்கிறது. இதனாலன்றோ, "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே-யெடுப்பதூஉ மெல்லா மழை"என்றருளினார் செந்நாப்போதார். இக்குறளில், "கெடுப்பதூஉம்" என்பதற்குப் பரிமேலழகர், "பூமியின்கண்வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்" எனப்பொருள் கூறியுள்ளார். ஆனால் வேண்டும்போது பெய்தும் வேண்டாக்கால் பெய்யாமலும் நின்றுஉலகைரட்சிக்கவேண்டியிருக்கிறது மழையேயாதலின்,"கெடுப்பதூஉம்" எனற்கு"பெய்யாது நின்றும், அதிகமாகப் பெய்தும் கெடுப்பதூஉம்" எனப்பொருள் கூறுதலே சிறப்புடைத்தாம்.

பட்டம்:—ஒவ்வொருமாகாணங்களிலும் மழைபெய்யும் பருவகாலத்துக்கேற்ப இன்னகாலந்தான் நெல்விதைப்புக்கு ஏற்றதென்று கொள்வார்கள். நம் நாடுகளில் ஆனி, ஆடி மாதங்களே முதற்றரமான பட்டமாம். ஆவணிமாதம் இரண்டாந்தரமே. ஆனி, ஆடி, மாதங்களில் நன்றாக உழுது புழுதியாக்கி விதைத்துவிட்டால் ஒரு மாதம்வரை மழையில்லாதிருந்து பிந்திப்பெய்தாலும் முன்விதைத்த நெல் நனைந்து முளைத்துவிடும். காலம் தவறியவிதைப்புப் பயன்படாது. இதனாற்றான், "பட்டம் தப்பினால் நட்டம்" என்று பழமொழி வழங்குவதாயிற்று. பயிருக்கு உழவு, உரம், நீர் இவைகளைப்போலவே பட்டமும் அவசியம் வேண்டியதொன்றேயாம். இதன் அருமையுணர்ந்த ஔவையார் என்ற மூதாட்டியார் "பருவத்தே பயிர்செய்" என்றருளினர்.

உழவு:— கிருஷித்தொழிலில் முதன்மையானது உழவு தொழிலேயாம். சரியானபடி உழவுசெய்துள்ள நிலம் அதிகப்பலனைக் கொடுக்கும். அநேக இடங்களில் 4-அங்குல ஆழம் உழுதால் போதுமென்று நினைக்கிறார்கள். இது பிசகு. கடப்பை, கர்நூல், பல்லாரி, மைசூர் முதலிய நாடுகளில் குறைந்தது ஆறு அங்குலம்வரை உழுகிறார்கள். இத்தலிதேயத்திலோ 12-அங்குலம் வரை உழுகிறார்கள். நம்முன்னோர்கள் ஆழமாக உழவேண்டுமென்று நன்கு தெரிந்திருப்பதை "அகல உழுவதை ஆழ உழு" என்ற பழமொழியால் நன்கு தெரியலாம். ஆழமாக உழு

தால் மண் குழம்பாயிளகியிருக்கும். இத்துடன் எருமுதலிய உரமும் கலந்திருக்குமாணுல் மிகவும் சிலாக்கியமே. கடினமான மண் ஆயினும் வருஷாவருஷம் தழையும் உழவும் அதிகப்பட்டால் மிருதுவாகும். மண்மிருதுவாணுல் செற்பயிரின் வேர் தாராளமாகச் செல்லும். நீர்வற்றிக்காய்ந்த காலத்தும் காய்ச்சலைத் தாங்கும்படி அடியிலுள்ள ஈரம் பயிருக்கு உணவாகும். ஆழமாக உழாதநிலத்தில் அடிமண் கடினமாயிருப்பதால் பயிரின் வேர் அதிக ஆழத்திற்போகாது. அப்போது கொஞ்சம் நீர் குறைந்து காய்ச்சல் ஏற்பட்டால் சீக்கிரத்திற் பயிர்கருகிப்போகும். நன்செய் நிலத்திற்கு 8-உழவுவேண்டுமென்கிருர்கள். நன்செய்நிலம் சேருகியிருப்பதால் உழவுக்கு எருமைக்கடாக்களே ஏற்றனவென்பார்கள். எருதுகள் பலமுள்ளவையாணுல் மட்டுமே இவ்வுழவு செவ்வையாக நடக்கும். தாங்கலான மாடுகளைக்கொண்டு உழுவது பயன்படாது. வியவசாயிகட்கு உழவுகாலத்திற்ருன் சிரத்தையதிகம் வேண்டும். இதுபற்றியல்லவா, "உழுகிறகாலத்தில் ஊர்வழிபோனவன் அறுக்கிற காலத்தில் ஆள் தேடிப் பயனில்லை" என்று பழமொழி வழங்குவதாயிற்று. நம்மை ஆதரித்துவரும் காருண்யகவர்ன்மெண்டாரவர்கள் ஏற்படுத்திய அக்கரிக்கல்ஜ்ஜரல் (Agricultural) முறையை நன்ருய் அறிந்து ஆங்கிலேயர் கண்டுபிடித்த புதிய ஏர்களால் உழுவது அதிக சிரமமின்றிப் பயனுதவும்.

உரம்:—நிலத்தின் சத்திணுலேயே நெல் விளைகின்றதால் ஒரு தரம் விளைந்தபின்பு அந்நிலத்தின்சத்து குறைகின்றது. ஆனதால் மறுதரம் விளைவதற்கு அந்நிலத்திற் சத்துண்டாகும்படி உரம்போட வேண்டியது மிகஅவசியம். நம் நாட்டிற் சாதாரணமாக ஆட்டெரு மாட்டெரு கொழிஞ்சி ஆவிரை முதலிய தழைகள் சாம்பல் முதலியவற்றையுபயோகப்படுத்துகிருேம். இவைகளிலெல்லாம் எருவே மிகச்சிறந்த உரமாகும். மாட்டுத்தொழுவங்களினருகே நாலைந்து அடி பள்ளந்தோண்டித் தினமும் விழுகிற சாணி குப்பை கூளம் சாம்பல் முதலிய கழிவுபதார்த்தங்களை அப்பள்ளத்தில்போட்டுவர வேண்டும். இவ்வாறு பலமாதவரை சேர்ந்தபின் வேண்டும்போது நன்செய்க்கு உரமாகப்போட அதனுற் சத்து அதிகமுண்டு. ஆடு கிடைமறிப்பது அதன் மூத்திரத்தின் உபயோகத்தைக்கருதியே. ஆட்டு எருவைவிட அதன் மூத்திரமே உபயோகமதிகம். மழை வருவதற்கு முந்தியே ஆடு கிடைமறிக்கவேண்டும். மழை வந்துவிட்டால் தரை சேருகிவிடும். அப்போது கிடைமறித்தால் முடியாது. உழவுக்குப்பின் கொழிஞ்சிமுதலிய பலவகைத் தழைகளையும் வயலில்போட்டு மிதித்துவைக்கவேண்டும். இவைகளெல்லாம் மண்ணின் கடினத்தை நீக்கி இளகச்செய்கின்றதுடன் மண்ணுக்குச்சத்தும் கொடுக்கின்றன. எலும்புத்தூள் பிண்ணுக்கு முதலியனவும் சிரேஷ்டமே.

ஜப்பானியர் சுண்ணும்பை உரமாக உபயோகிப்பதுண்டு. இதுமிகவும் கெடுதியைத் தரும். நாளடைவில் மண்ணையிறுகச்செய்து விளைவைக்குறைத்துவிடும். நம் நாட்டிலிந்த வழக்கமில்லாததுடன் தழை எருமுதலியவைகளையே உபயோகப்படுத்துவது ஆதிமுதல் வழக்கம். மாங்கனீஸ் சத்து நெல்விளைவை ஜப்பானியர் மிகவிருத்திசெய்கின்ருர்கள். சீமையில் வண்ணுன் சலவைசெய்த கழிவுபதார்த்தங்களை இந்தச்சத்து நெல்லுக்குஉரமாகப் போடுகிருர்கள். இந்த நூதன உரம் மாங்கனீஸ் ஸல்பேட், மாங்கனீஸ் குளோரைட் இருவிதமாகும். இன்னும் அவித்த எலும்பு, எலும்புப்பொடி, எலும்புச்சாம்பல் போடாசீயம் பாஸ்பரேட் முதலியபலவும் அவர்கள் உபயோகிக்கிருர்கள்.



பர்மா ஜப்பான் இடங்களில் உரம்போடுகிறமுறையை நாம் கையாளுவதேயில்லை. அவர்கள் போடும் உரத்தின் பலத்தாற்ருன் புட்டரிசி நெல் என்னும் மிகச்சத்துள்ள நெல் அவ்விடங்களில் விளைகின்றது. அந்த நெல்லரிசி மிகுந்த சத்தைக்கொடுக்கிறது. சென்னையில் ருதுவானபெண்களுக்கு இதையேசமைத்துக்கொடுத்தால் தேகபலம் அதிகப்படும் என்று பெரும்பாலும் உபயோகிக்கிருர்கள். நம் நாட்டில் உளுந்தைத்திரித்து மாவாக்கிக் களிகிண்டிப்போடுவார்கள். உரம் போடுவதின் நன்மையறிந்தல்லவா திருவள்ளுவர் "ஏரினும் நன்ருல் எருவிடுதல்" என்று கூறியருளினுர்.

விதையும் விதைப்பும்:—"விரையொன்றுபோடச் சுரையொன்றுமுளைக்குமா?" என்பது பழமொழி. இதனுல் விதை எவ்வளவு சிறந்ததாக இருக்கிறதோ, அதற்குத்தக்கபடியே பலனுண்டு. நம் நாட்டில் முதலில் வரும் தலையடி நெல்லையே விதைக்கு எடுத்துக்காயவைப்பது சகசம். ஆயினும் இவ்விஷயமாகக் கவனிக்கவேண்டியன பலவிஷயமுண்டு. நல்லநெல்லுடன் மட்டைநெல் கலந்துவருவது நிதர்சனமே. இதனுல் விலைகுறைந்து நஷ்டமுண்டாகும். இதற்குக் காரணம் நெல்லடிக்குங் களங்கள் விசாலமில்லாததால் பலவகைநெல் ஒன்ருேடொன்று கலந்துவிடும். அவ்விதையை விதைப்பதால் கலந்தேவளர்கின்றது. தவிரவும் நல்லநெல் ஆறு மாதத்தில் விளையும். மட்டைநெல்களோ மூன்றுமாதமுதல் கதிராகும். இப்படியான கதிர்கள் உதிர்ந்து பூமியில் தங்கி அடுத்த வருஷம் நல்ல நெல்லுடன் கூடமுளைக்கும். இக்கெடுதியை நீக்கவே முந்திமுதிர்ந்த கதிர்களைப்பிடுங்கிவிடுவதுண்டு. இதற்கு மட்டைபொறுக்கல் என்றுபெயர். சில ஜில்லாக்களில் நல்ல நெற்கதிரை விதைக்காகத் தனியே பிடுங்கியெடுத்து வேண்டுமளவு சேர்த்துவைத்து விதைக்கு உபயோகப்படுத்துவார்கள். இப்படிச் சிலவருஷம் செய்தால் மட்டைகலப்பது தொலையும். இவ்வாறுசெய்வது முதலிரண்டு மூன்று வருஷங்கட்குச் சிரமமேயாயினும் பின்பு இதனுல் லாபம் அதிகமாம். விலையதிகமாக விற்கலாம். உணவிற்கும் பொருத்தமாம். இவ்வாறு மட்டை நீக்கினும் விதைநெல் மிகமுற்ருமல் கொஞ்சம் பசுங்காயாயிருக்கும்போதே அறுத்து இரண்டு மூன்று காய்ச்சல்போட்டுப் பதமாக எடுத்துவைக்கவேண்டும். காய்ச்சல் போடுவதில் கவனம் அதிகம்வேண்டும். உமியைப்பிரித்துப் பார்த்தால் அரிசியின் ஒருபக்கம் பால் சுருங்கியிருக்கவேண்டும். இதற்குப்பால் ஒதுங்கும் பக்குவமென்றுபெயர். அதிகமாய்க் காய்ந்தால்அரிசி வெடிப்பாகி முளைக்கும் சத்தியைப் பெருது. ஈரமாயிருந்தால் மடித்துப்போம். இவ்வாறு மிகக்காயாமலும் ஈரமில்லாமலும் பக்குவம்பார்த்துக் காற்ருேட்டமுள்ள இடத்தில் அந்துவிழாதபடி பந்தோபஸ்துச் செய்யவேண்டும்

"ஆயிரநெல்லுக்கோரந்து":--என்றபடி அந்து விழுமேயாணுல் நெல் ஒன்றுக்குமுதவாது போகும். நெல்லுடன் வேப்பிலையையும் புங்கஇலையையும் கலந்துவைத்தால் அந்துவராது. நெல்விதைக் கோட்டையின்மேல் ஒரு கலயத்தில் ஜலம்விட்டுவைத்தால் அந்துமுழுதும் அந்த ஜலத்தில்விழுந்து மடியும். இவ்வாறு பாதுகாத்துவர வேண்டும். அதிகக்

கொழுமையான நிலத்திலும் கொழுமையற்ற நிலத்திலும் விளையும் நெல் விதைக்குதவாதென்றும் நடுத்தரமான நிலத்தில் விளையும் நெல்லே விதைக்குபயோகமாளதென்றும் ஜப்பானியர் கருதுகின்றனர்.

விதையைக் கவனிப்பதுபோலவே விதைப்பைப்பற்றிக்கவனிக்க வேண்டியனவும் பலவுண்டு. மிகநெருக்கமில்லாமலும் மிக இடைவெளியின்றியும் விதைக்கவேண்டும். விதையை நனைத்து முளைகிளம்பச்செய்து விதைப்பதுமுண்டு. முளைதோன்றியவுடன் விதைத்துவிடவேண்டும். முளைசற்று அதிகம் வெளிப்பட்டால் எடுப்பதிலும் விதைப்பதிலும் முனைமுறிவுபடும். நம் நாடுகளில் கையினாலே விதைப்பதைத்தவிர வேறுகருவிகளால் விதைக்கும் வழக்கத்தைக்காணவில்லை. பெரும்பாலும் நெருக்கமாகவே விதைக்கின்றார்கள். சந்தியால், கர்நூல் முதலியவிடங்களில் "கோர்று" என்னுமொருவித கலப்பையால் சால்சாலாக விதைக்கிறார்கள். ஒரு ஏக்கராவுக்கு 20-படி விதையே போதுமானதாகவிருக்கிறது. கர்நூலில் 6-அங்குலம் சந்துவிட்டு விதைக்கிறார்கள். சீனாவிலோ செடி 1-க்கு 6-அங்குலதூரமும் வரிசை 1-க்கு 13-முதல் 18-அங்குல தூரமுமிருக்கும். செங்கற்பட்டில் இக்கலப்பையால் 4-அங்குலதூரத்தில் விதையிடும்படி செய்துவைத்திருக்கிறார்கள். நிலத்தை மிகவும் கொழுமைப்படுத்தும் அமெரிக்காவிலோ செடி 1-க்கு 5-அங்குலதூரமும் வரிசை 1-க்கு 18-அங்குல தூரமுமிருக்கும்படி விதைக்கிறார்கள், நிலத்தின் கொழுமைக்குத்தக்கபடி செடிகள் தூரமாக இருப்பதைக் கவனிக்கவேண்டும். சீனா, ஜப்பான்தேசங்களில் விதையை உப்பு ஜலத்திற் கொட்டி மிதக்கிறவைகளை யெடுத்துவிட்டு அமிழ்ந்த நெல்லையே விதைப்பது எப்போதும் வழக்கம். ஒரு பக்காப்படி ஜலத்துக்கு 10-பலம் உப்பு வீதங்கலந்து வேண்டிய அளவு விதையைப்போட்டு மிதப்பதைத் தள்ளவேண்டுமென்று ரசாயன சாஸ்திர மூலமாகக் கண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் இவ்வாறு செய்யாமல் விதைப்பதேயில்லை. மேலும் தாய்ச்செடியில் விளைந்தநெல் விதை 1-க்கு 17-கதிர்கள் தோன்றும்படி கிளைத்ததென்றும், கிளைக்கதிரில்வந்த நடுராசி நெல் விதை 1-க்கு 21-கதிர் தோன்றும்படி கிளைத்ததாகவும், கணுக்களில் தோன்றியநெல் விதைக்கு உதவாதென்றும் பதினாறுவருஷம் பரீட்சைசெய்து கண்டிருப்பதாக ஜப்பானியர் கூறுகின்றனர். நம் நாட்டிலோ இவ்வாறான பரீட்சையாராய்ச்சியே கிடையாது. நாமும் நம்நாட்டின் சீதோஷ்ணமுதலியவற்றைக் கவனித்து வியவசாய விஷயமான ஆராய்ச்சியும் பரீட்சையும் செய்யவேண்டியது மிகமுக்கியம். எந்த வர்த்தகமும் வியவசாயத்துக்கு ஈடாகாது. வர்த்தகத்தில் ஒன்றுக்குக்கால் அரை யதிகம் கிடைப்பது துர்லபம். அதிகமாகக்கண்டால் ஒன்றுக்கு இரண்டு பங்குகூடக் கிடையாது. "ஒன்றி ரண்டாம் வாணிகமில்" என்பது நம்மவர் கொள்கை. நெல் வியவசாயத்திலோ இவ்விஷயம் மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அமெரிக்காவில் ஒரு நெற்கதிரில் 160 நெல் இருக்கின்றன. எந்தத் தொழிலும் ஒன்றுக்கு 160-பங்கு இலாபம் காண்பது அரிதேயென்று சொல்லவும் வேண்டுமோ?

**நாற்றும் நடுகையும்:**—கைவிதைப்பாக விதைத்துப் பயிராக்குவதிலும் நாற்றுவளர்த்து நடுவதே சிலாக்கியமென்பது எல்லாருக்குந்தெரியும். 10-ஏக்கர் நிலம் நடுகைபோடுவதற்கு ஒரு ஏக்கர்நிலம் நாற்றுப்பாவுவது கோதாவரி முதலிய வடதேசவழக்கம். மதுரை திருநெல்வேலி முதலிய இடங்களில் 15-ஏக்கர் வரையில் நட ஒருவக்கரே நாற்றுப் பாவுகிறார்கள். நாற்றங்கால்வயலை நன்றாக உழுது கருஞ்சேறாக்கியே நெல்லைநனைத்து வைத்த தொண்ணூறுநாழிகைக்கு மேல் முளையதிகம் தோன்றுமுன் விதைக்கவேண்டும். நாற்றங்கால் பகலில் நீர்வடிந்து காய்ந்து இரவில் நீர் நிறைந்து இருத்தல் நலம். ஆஸ்திரேலியாவில் ஏக்கராவுக்கு 3-படிவிதையும் சீனதேசத்தில் 4-படிவிதையும் அமெரிக்காவில் 10-படிவிதையும் விதைக்கிறார்கள். திருநெல்வேலி முதலிய தென்பாகங்களில் ஒரு ஏக்கருக்கு அறுபதுபடி விதைவரை விதைக்கிறார்கள். ஆனால் நன்றாகத்தான் விளைகிறது. ஆயினும் சாஸ்திநிலம் வைத்திருப்பவர்கள் ஒரு ஏக்கர் நிலமாவது ஒவ்வொருபோகத்திலும் பரீட்சைக்காக வைத்து விதைகுறைவாகவும் மற்றும் பலவகையாகவும் பரீட்சித்துப்பார்க்கவேண்டும். நாற்றங்காலில் அடர்த்தியாகாமல் கலக்கமாகவே விதைக்கவேண்டும். அப்போதுதான் நாற்றுப் பலமாயிருக்கும். நெருங்கிவந்தால் ஊசிபோலாகும். நெல்வகைக்குத் தக்கபடி விதைத்த நாற்பது நாள் முதல் அறுபது நாளைக்குள் நாற்றைப் பிடுங்கி நடவேண்டும். நம் நாட்டில் பலநெற்பயிரை ஒன்றாகச்சேர்த்து நடுகிறார்கள். இப்படி நடுவதின் காரணம் ஒரு செடிபோனாலும் ஒருசெடி முளைக்குமென்பதே. இது தக்கதன்று. பலசெடிகள் சேர்ந்து வளர்வதில் வேர் நெருங்கி ஊசிபோல வருவதால் பலன் குறையும். தனித்தனி நாற்றைநடுவதே சிலாக்கியம். இப்படிச்செய்தால் பயிர்விரலளவுபருமனாகும். கிளைகள் அதிகமாகும். கதிர் நன்றாயிருக்கும். நெல்லும் திரட்சியாகும். இப்படி நடுமுன்னமே பரம்படிப்பதுமிக நல்லது. பரம்படிப்பதால் நிலம் சமதளப்பட்டு எங்கும் ஒரே அளவாக நீர்நிற்கும். இதனாற்றான் "பரம்படியாதநெல் வெள்ளாமை பாழ் வெள்ளாமை" என்பார்கள்.

**நீர்பாய்ச்சல்:**-நடுகை போட்டபின்பு பகலில் காயவிட்டு இரவில் நீர் நிரப்பிவரவேண்டும் களை பிடுங்கியபின்பு நமது நாடுகளில் இரண்டு அங்குல அளவு நீர் கட்டிவரவேண்டியது. அமெரிக்கர்கள் 6 அங்குலம் ஜலம்நிறைப்பர். நமக்கு அவ்வளவு வேண்டியதில்லை யாயினும் இரண்டு அங்குலத்துக்காவது எப்போதும் நீர் இருந்துவரவேண்டும். கதிர்தோன்றிப் பால்பிடிக்கும்போது கட்டாயம் நீர் கட்டவேண்டும். அப்போது காய்ந்தால் சாவியாகும் பால் பிடித்தபின்பு காய்ச்சல் வந்தாலும் தோஷமில்லை. மற்றப்பயிர்களைவிட நெல்லுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்பதே நம்மவர் கொள்கை. ஔவையார் அரசனை வாழ்த்தவேண்டியபோது "வரம்புயர" என்று வாழ்த்தி "வரம்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும் கோலுயரக் கோமான் உயர்வான்." ஆதலால் வரம்புயர என்றதே ராஜவாழ்த்தாகும் என்றுபொருள்கூறினராம். இதனால் வரம்பு செவ்வையாகப்போட்டு நீர் கட்டிவரவேண்டுமென்பது தொன்றுதொட்டு நமதுகொள்கை. கால்வாய், குளம் முதலிய பாசானங்களில் இரண்டு அங்குலநீர் போதுமானதாயினும் கிணற்றிறவைகளில் சற்று அதிகமாகவே நீர்கட்டவேண்டும். கிணற்றுநீர்ப் பாசனங்களில் உரம் அதிகமாகப்போடவேண்டும். ஆற்றுநீர்ப் பாசனங்களில்புதுவெள்ளத்தில்வண்டல் கலந்துவரும். காவிரிப்பாசனத்தில் புதுவெள்ளம் வந்தபோது வயல் நிறையக்கட்டிவைத்து வடித்துவிட்டால் வயலில் வண்டல்படிந்துறை

வது தெரியும். இஃதென்ன ஆச்சரியம்! நீர்கலங்கி மண்கலந்துவருவதே நிதர்சனமாகும். கதிரறுப்புக்கு இரண்டுவாரத்துக்குமுன் முதல் அறுப்புவரை நீர்கட்டாமல் நிலத்தை காயவைக்கவேண்டும். காய்ந்தால்தான் ஜனங்கள்நின்று அறுவடை வேலைநடத்த அனுகூலப்படும்.

களையெடுப்பு:—"களை பிடுங்காதபயிர் காற்பயிர்" என்பது பழமொழி. நாற்றுநட்டு 15-நாளைக்குமேல் முதற்றரம் களையெடுக்கவேண்டும். அதன்பின் 30-நாளைக்குமேல் மறுபடி இரண்டாந்தரம் களையெடுக்கவேண்டும் சிலவிடங்களில் மூன்றாந்தரமும் களையெடுப்பதுண்டு. வயலிற்பாயும் நீருடன் களைக்குரிய வித்துக்கள் வந்து சேர்ந்தும், பட்சிகளாலும் மற்றும் பலகாரணங்களாலும் களைச்செடிகள் முளைக்கின்றன. களையைப்பிடுங்கா விட்டால் நெற்பயிருக்குரிய நீரையும் உரத்தையும், களைப்பயிர் சாப்பிடுவதால், நெல்லுக்குவேண்டிய நீரும் உரமுங்குறையும் ஒருவனுக்குப்போட்ட உணவை வேறு ஒருவனுஞ்சேர்ந்து சாப்பிட்டால் ஆகாரபோஷணை குறைவது இயல்புதானே. இதுமட்டுமல்ல: நெல்வேர் தாராளமாக செல்லத்தக்க இடங்களில் களைவேர் ஊடுருவிப்போவதால் நெல்வேர் தாராளமாகச் செல்ல இடமில்லாது போகும். இவ்வகைக் காரணங்களால் களைவளர வளரக் களைவதே சிலாக்கியமாகும். நமக்குணவாகும் நெல் முதலிய தானியப் பயிர்கட்குச் சனியன்போலவரும் இச்செடிகட்கு நம் முதியோர்கள் களையென்று பெயரிட்டது மிக அருமையாயிருக்கிறது. களையென்றால் நீக்கிவிடு, பிடுங்கு என்றுபொருளாம். பிடுங்கியெறியவேண்டிய இச்செடிகட்கு இப்பெயர்வைத்த நம்மவர் புத்திகூர்மை வியக்கத்தக்கதொன்றல்லவா? தமிழ்ப் புராணங்களில் களையெடுப்பைப்பற்றி மிக விஸ்தாரமாகவும் வேடிக்கையாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவ்விடங்களில் படிக்கப் படிக்க மிக இனிமை தோன்றும். கோட்டைக்கிராந்தி, நீர்முள்ளி, பிரமதண்டி, ஆரை நாய்க்கடுகு, கோரை, நீர்மேல் நெருப்பு, கொடிப்பாசி, வேப்பம்பாசி, துளிர்ப்பாசி முதலியன வயல்களிற்றோன்றுங் களைகளாம்.

கதிரறுப்பு:—கதிர் நெல்லில் பால்பிடித்து முற்ற பயிர் நிலை கொள்ளாது சாயும். அறுக்கும்படியான காலத்தில் மிகவும் சாக்கிரதை வேண்டும் தாமதப்பட்டால் நஷ்டமாம். அமெரிக்கரும் ஐரோப்பியரும் யந்திரங்களைக்கொண்டே அறுவடைசெய்கிறார்கள். அவ்வாறு நாம் இங்கே செய்யமுடியாது. அந்நாடுகளில் ஒருவயல் சுமார் 5-ஏக்கர் முதல் 20-ஏக்கர் வரையிருக்கும். இதனாலும் புழுதியாகவே அவர்கள் விதைப்பதாலும் அவர்கட்கு அவ்வாறு செய்ய இயலும். சிறுவயலும் சேற்றுப்பயிருமாகவிருக்கும் நமது நாடுகளில் ஜனங்களே அறுவடை செய்யவேண்டும். இப்படி அறுக்கும் அரிவாளுக்குப் பன்னவாள் என்று பெயர். இப்பக்கங்களில் இந்த அரிவாள் ஒரு அடி நீளம் வளைவாயிருக்கிறது. அநேகவிடங்களில் இரண்டு அடிநீளமுண்டு. நீளம் அதிகப்பட்டிருப்பதே நல்லது. மிகவும் கூர்மையாக இருக்கவேண்டும். வடதேசங்களில் கதிரறுப்பவர்கள் அரிவாளுடன் அதைக் கூர்மைப்படுத்தும்படி தீட்டத்தக்க சாணைக்கல்லும் எப்போதும்கொண்டுபோய் அப்போதப்போது தீட்டிக்கொள்கிறார்களாம் இப்பக்கங்களில், அப்பழக்கமில்லை. கூர்மையாக விருப்பதற்கேற்ப அறுவடை சீக்கிரமாகும். ஆள்மானம் அதிகமாகாது. நம் நாட்டார்கள் அரிவாள் கூர்மையாகவும் நீளம்



அதிகமாகவுமிருக்கும்படி சீர்திருத்தவேண்டியது முதன்மையானது.

களமும் நெல் சேர்ப்பதும்:—கதிர்களைக் கொண்டுவந்து சேர்த்து நெல் சேர்க்க இடம் விசாலமாக அமைக்கவேண்டும். நம்நாடுகளில் போதுமான இடம் களமாகவில்லை. கொஞ்ச இடத்தில் பலர் பலவகைநெற்கதிரைக் கொண்டுவந்துசேர்த்து வேலைநடத்துவதால் ஒரு சாதி நெல்லுடன் வேறுசாதி நெல் கலந்துவிடவும், பதர்போகும்படி தூற்றுதற்குப் போதுமான இடம்வாய்க்காமையால் ஒருவர் பொலி தூற்றுவதில் வரும் குப்பையும் பதரும் மற்றவர் பொலிநெல்லுடன் சேரும்படியாகவும் நேரிடுகிறது. பலஜாதிநெல் கலக்காமல் பாதுகாப்பது குடித்தனத்தாருக்கு மிக நல்லது விதைநெல்லில் இதுமிக அவசியம் கவனிக்கவேண்டும். மற்றநெல்லிலும் ஒரேஜாதியாயிருந்தால் விலைபேறும். பலஜாதிகலந்தால் விலை குறையும். ஒவ்வொரு கிராமங்களிலும், போதுமானபடி நெல்லடிக்குங்களம் அமைத்துத்தரும்படி நமதுகருணைதங்கிய கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். நாமும் அவர்களிடம் பிரார்த்திக்கவேண்டும். ஜமீந்தார்கள் பிரபுக்கள் தாங்களே தங்கள் நிலங்களில் களத்துக்குப்போதுமான இடம் விட்டு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும்வேண்டிய வகைகளிலெல்லாம் ஊன்றி யோசித்து வியவசாய முறைநூல்களை யங்கங்கே மாணாக்கர்கள் கற்கும்படி நாமே ஏற்பாடு செய்யவேண்டும். நிலம் அதிக முடையவர்கள் மிகவும் இந்த முறைகளையனுசரித்து வருவது அவசியம். நாம்வியவசாய விதிகளைக்கவனியாமலே வீட்டிலிருந்துகொண்டு பண்ணையாளர்கள் வேலைசெய்துகொடுப்பதைப் பெற்றுவந்தால் தக்கபடி லாபங்கிட்டுவதரிதாகும்.

## முடிவுரை.

இன்னும் ஆராய்ச்சிவகையாலும் அனுபவவகையாலும் பலவகையில் நெல் சாகுபடியை விருத்திபடுத்தவேண்டும். நிலம் அதிகமுள்ள மிராசுதார்களே இவ்விஷயத்தில் கவலையெடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் குடியானவர்களுக்குங் கற்பித்துவருவது உத்தமம். திருநெல்வேலிஜில்லா சிவகிரிஜமீனில் சூப்ரின்டெண்டு வேலைபார்த்த மகா-௱-௱-ஸ்ரீ அ. ராமராவ் அவர்கள் இவ்விஷயத்தில் ஆய்ந்து உழைத்து வியவசாயம் நடத்தியதில் 376-ஏக்கர் நிலத்தில் 1306-ம் பசலியில் 1694 கோட்டைநெல் விளைந்தது. (ஒரு கோட்டையென்பது பட்டணம் பக்காவுக்கு 126-படி) 1313-ம் பசலியில் 2222-கோட்டை விளைந்தது. 306-ம் பசலிமுதல் 313-ம் பசலிவரை விளைவு அதிகரித்தே வந்தது. 8-வருஷத்துக்குள் 528-கோட்டை அதிகம் விளைந்தது இக்காட்சி நம்வியவசாயிகட்கு ஒருபிரத்தியக்ஷ பாடசாலைபோலிருக்கின்றதல்லவா? ஜப்பான் தேசத்து நெற்பயிரில் சரிபாதி எடைவைக்கோலும் சரிபாதி எடை நெல்லுமிருக்கிறதாகவும், அமெரிக்காவில் இரண்டுபங்கு எடை வைக்கோலும் ஒரு பங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், கடப்பை திருநெல்வேலி, முதலிய சில இடங்களில் 4-பங்கு எடை வைக்கோலும், ஒருபங்கு எடை நெல்லுமிருப்பதாகவும், தஞ்சைஜில்லாவில் எட்டுப்பங்கு வைக்கோலும், ஒருபங்கு நெல்லுமிருப்பதாகவும் மற்றும்பல அரியவிஷயங்களும் அக்கிரிகல்ச்சரல் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமத்-ஜி. இராஜகோபாலநாயடு அவர்கள் இவ்விஷயத்தில்மிகப்பாடுபட்டுந் தேர்ச்சிபெற்றுள்ளார்கள். நாமும்இவ்வாறே முயற்சிசெய்தால் மேன்மை அடைவது நிச்சயம். நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை. எல்லாம் வல்ல இறைவன் திருவருளைக்கொண்டு நமது டிஸ்டிரிகட்டு (Agricultural Association என்னும்) வியவசாயசங்கமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து நம் நாடே எல்லா நாடுகளிலும் சிறந்த ஒப்பற்ற பலவளங்களும் ஒருங்கே நிறையப்பெற்ற ஒரு நாடாகுக—செந்தமிழ்.

முற்றிற்று.

## பூலோகத்தில் நெல் விளையும் தேசங்கள்.

உற்பத்தி ராத்தல்.

| வட அமெரிக்கா | 1903 | 1907 |
|---|---|---|
| ஐக்கிய மாகாணம் | 594,200,000 | 553,4[illegible]0,000 |
| மத்திய அமெரிக்கா | 652,000,000, | 617,951,000 |
| தென் அமெரிக்கா | 87,50[illegible],000 | 137,119,000 |
| ஐரோப்பா | 1,189,500,000 | 1,307,305,900 |
| ஆசியா | 10,8,91,1,800,000 | 102,391,625,000 |
| ஆபிரிக்கா | 22,200,000 | 21,400,000 |
| ஓஷியானியா | 3,000,000 | 3,800,000 |
| மொத்தம்... | 110,865,000,000 | 103,479,200,000 |

வடஅமெரிக்காவில் ஆவி தீவும்,

தென் அமெரிக்காவில் கௌடிமாலா, ஆண்டூராஸ், மெக்ஸிகோ தேசங்களும், தென் அமெரிக்காவில் ஆர்ஜென்டைன் பிரிடிஷ் கையனு, டச்கையானு, பெரு தேசங்களும், ஐரோப்பாவில் பல்கேரி, ஆஸ்திரியா, இதாலி, ஸ்பெயின் தேசங்களும், ஆசியாவில் இந்தியா, ஸிலோன், பெரெஞ்சு இண்டோ சைனு, ஜபான், பார்மோசா, ஜாவா மதூரா, கொரியா, பிலிபைன், தீவுகள், சயாம் ஸ்டேரிபிட் ஸ் செடில்மென்ட் தேசங்களும், ஆபிரிக்காவில் பிரிடிஷ் சென்ட்ரல் ஆபிரிக்கா, ஈஜிப்த்தேசங்களும், ஓஷியானியாவில் பிஜி தேசமும் நெல் விளைகின்றன.

## கிருஷிப்பழக்கங்களை மாற்றல்.

## NECESSITY FOR CHANGE IN AGRICULTURAL PRACTICES.

தேவாரமெட்டு.

1. கேட்டீரோ கிருஷிகரே! கேடுறுநுங் காலகதி.
மாட்டீரோ நம்முறைகள் மாற்றுதற்கே மனமிசைய.
2. நிலவளமும் நீர்வளமும் நிறைந்திருக்கும் நீள்தேசம்
மலைவளமும் குடிவளமும் மலிந்ததென மகிழ்வுறுவார்.
3. சித்திரைதை மாசியுமே சிறந்தபட்டம் தனித்தனியே
வைத்ததிரு வைகாசி வாய்த்தாக்கால் நலமென்பார்.
4. ஆடியிலே தேடிவிதை அதில்நன்மை அதிகமெனக்
கோடிதரம் கூறிமிகக் கொண்டாடும் பலருமுளர்.
5. பொன்னுருக வெயில்காயும் புண்ணியசீர் புரட்டாசி
மின்னலுடன் மண்ணுருக மேலான மழைபொழியும்.
6. ஆர்த்தாரத்தங் கைப்பசியில் அழுகைத்தூறல்பெய்யும
கார்த்திகையில் கல்லுருகக் கனமழைகள் பொழியுமென்பர்.
7. காலமழை கோடைமழை சாரல்மழை கடும்பனிமுன்
ஞாலமதில் மாதமும் மாரிபெயுமெனநவில்வர்.
8. இக்காலங் கலிகாலம் இயல்பான மழைபெய்வ
தெக்காலம் என்றறியா தேங்கினம் வாடுகிறோம்.
9. ஒருசமயம் முன்கூட்டி ஓயாமல் வருஷிக்கும்
தருணமது தக்கதென்று தாவிவிதைத் திடுவார்கள்.



10. காலத்தில் பின்மழைகள் கடுகளவும் பெய்யாமல்
ஞாலத்தில் பயிர்வாடி கஷ்டமுண்டாக் குவதுண்டு.
11. தென்னாட்டில் கன்னலுடன் செந்நெல்லும் விளைவடைய
முன்னாட்டி நிலமுழவே முடிவதில்லை முன்போல.
12. வைகாசிப் பருவத்தில் வயலில்நெல் விதைப்பதற்கும்
செய்காலில் நாற்றுவிடச் செய்வதற்கும் பெய்வதில்லை
13. ஆற்றுக்கால் ஏரிகுளம், அவற்றில்நீர் நிறைந்தபின்னே
சேற்றுக்கால் நாற்றுவிட்டு செழுந்தொழிலில் நடுவார்கள்.
14. அதனாலே கதிரோனும் அத்தருணம் நீர்குறைந்து
பதமன்றியும் பெய்யாமல் பரிதவிப்பர் பாரினிலே.
15. வாடியுமே வயல்களில்நீர் வறண்டுபயிர் வருந்திமிகப்
பாடுகண்டு தீவடைந்து பலனற்றுப் போமையோ!
16. தாமதித்தும் தரங்குறைந்தும் தங்குமழை சற்றுமின்றிப்
போமதுவே காரணமாம் பொதுவாக இக்குறைக்கே.
17. விசும்பினின்று மழைத்துளிகள் வீழினல்லால் வியனுலகில்
பசும்புல்லும் பயிர்முளையும் பார்க்கரிதென் றேபகர்வர்.
18. தண்ணீர்தான் தண்பயிர்க்குத் தகுஜீவ தாரகமாம்
எண்ணியிட்ட எருவும்நீர் இல்லையெனில் என்னாகும்?
19. ஆகையினால் நீர்செய்ய அவசியமானதுகேளும்
ஊக்கமுடன் கிணறுகளை உமதுநிலங் களில்தோண்டும்.
20. வாடுங்கால் அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதிலும்
பாடுபட்டு நீரிறைத்துப் பயிரைநீர் காத்திடலாம்.
21. அறுவடைக்கிங் கறுமாதம் ஆகும் ஆனைக்கொம்பன்
சிறுமணியன் சம்பாவாம் செந்நெல்லைச் சிதறுமல்
22. மூன்றும் அல்லது நான்காம் மாதத்தில் முற்றிவிடும்
சான்றமணல் வாரி கார் சம்பாவாம் இளம்வித்தை
23. பயிரிட்டு விளைவித்துப் பாங்குடனே பயனடைவீர்
துயருற வல்வித்தைத் தூற்றுகின்ற துரைமாரே!
24. தாமதித்து நிரம்பினும் தங்கும்நீர் குறைந்திடினும்
சாமிசெயல் இதுவென்றே தரிசிடுவீர்நிலமெல்லாம்.
25. நன்செய்நிலத் தெந்நாளும் நடுவீர்நெல் லதுதவறில்
புன்செய்வகைப் பயிரொருக்கால் போடவுநீர்மனங்கொள்வீர்
29. மண்மூமாரிக் குளங்களிலே மறுபோகம்இருசோளம்
தண்மையாகும் கம்பம்புல் தாழ்வில்லாக்கேழ்வரகு
27. மக்காச்சோளம்குதிரை வாலிமணி லாக்கடலை,
எக்காலத் துந்தாங்கும் எய்துந்தண் ணீர்த்தட்டை.
28. ஆற்றுக்கால் போக்குகளில் அதிமேடாம் நிலங்களிலே
ஊற்றுகளைத் தோண்டியபின் உன்னதமோ ரீஸ்கரும்பு
29. சுகமான வயல்வாழை ஜவுட்முதலாம் நாற்பயிர்கள்
வகையான காய்கறியால் மிகலாபம் வரக்கூடும்.
30. முன்னோர்கள் நடத்தியது முறைபிசகாய்த் தெரியவந்தால்
அன்னோர்கள் செய்தபடி ஆற்றுதல்நங் கடனல்ல!
31. மாற்றுவது பிசகென்னும் மனக்கோணல் சீர்திருத்தி
சாற்றுமிந்த நன்மொழியை சத்தியமாய்க் கைக்கொள்வீர்.
32. கிணறுவெட்டக் கைமுதலுங் கிருஷிகரே இல்லையென்பீர்
பணவுதவி சர்க்காரில் பரிவுடனே புரிகின்றார்.

33. அரைவட்டி கூட்டியுமே அறுநான்கோ டொருவருஷம்
திரமொடதைத் தீர்வையுடன் தீர்த்திடலாம் குறைகுறையாய்
34. முனிசீபு கணக்கனோடு முதல்கும்ஸ்தா கஜனுதார்
தினிசாகக் கைக்கூலி தீண்டார்கள் முன்போல.
35 சர்க்காரில் கடன்வாங்கிச் சரிவழியில் செலவிட்டால்
நற்காலம் உங்களுக்கு நாளடைவில் சுகமுறுவீர்.
36 வியாபாரி யிடம் பெற்றால் வியன்வட்டி சேர்த்திடுவான்
தயாவின்றிப் பணம்பறிக்கச்சமன்விடுவான் வெகுவிரைவாய்!
37 குடிவீடுங் குளநிலமும் கூபமுறுங் கொல்லைகளும்
அடியோடு தொலைவதற்கிங் கானவழி யாகுமந்தோ!
38 ஆதலினால் தாசில்தார் அருமையுடன் தருங்கடனே
சாதனமாம் அதைப்பெற்று சதாசுகமாய் வாழ்ந்திருப்பீர்.

ஜெ. தர்மரங்கராஜா (டிப்டி கலெக்டர்)

## BOOK RENIEWS

### ஸ்ரீவேங்கடாசல யாத்திரை.

ஞானபூமியான இப்பரதக்கண்டத்தில் திருக்கோயில் கொண்டிராநின்ற தெய்வங்கள் எல்லாவற்றிலும் பிரத்தியக்ஷானுபவமாய் விளங்கும் தெய்வம் ஸ்ரீவேங்கடாசலபதியே யென்பதிற் சந்தேகமில்லை. இமாலயம் முதல் கன்னியாகுமரிவரையிலுள்ள எல்லா தேவாலயங்களிலும், ஸ்ரீவேங்கடாசலபதி தம் திருப்பதியிலிருந்து, நாட்டாமைசெலுத்துவது போல் வேறு எந்த தெய்வத்தின் நாட்டாமையும் செல்லக்காணோம். ஆகையால் ஸ்ரீவேங்கடாசல யாத்திரையெனும் கிரந்தத்தை தமிழில் மொழிபெயர்த்து லோகோபாகாரமாய்ப் பிரசுரித்துள்ள தேஸாநபல்லி செங்கய்யா, பி. எ. அவர்கள் திருப்பதி யாத்திரைக்காரர்களுக்குச் செய்த உபகாரம் மிகவும் மதிக்கற்பாலதே.

முதலத்தியாயத்தில் ஸ்ரீவேங்கடேசுவரர் சரித்திரம் மிகவும் ரமணீயமாக விருக்கிறது. நாரதர் செய்த கலகத்தால், பிருகுமஹாரிஷி சாயுஜ்ய சாம்ராஜ்யமளிக்கத்தக்க மஹிமை யாரிடமிருக்கிறதென்று பரிசோதிக்கவேண்டி அஹங்காரமற்றவிடம் எது வென்று காண, பிர்மா, ருத்திர மஹேசுவரர்களை யெல்லாம் பரீக்ஷிக்க அவர்கள் அகங்காரிகளாயிருப்பது கண்டு, விஷ்ணுவிடம் சென்று அவரை மாரில் உதைத்தார். ஸ்ரீவிஷ்ணுவானவர் கோபம் கொள்ளாமல் மஹாபாக்கிய மென்று அவரை ஆசீர்வதித்தழைக்க அவரே முக்தியளிக்கவல்லவரென்று தீர்மானித்தார்.

விஷ்ணுகோபியாவிட்டாலும் அவர் மாரிலுள்ள ஸ்ரீலக்ஷ்மிதேவியானவள், பிருகு தன்னை அவமதிக்க விஷ்ணுபார்த்திருந்ததால் அவரை விட்டு நீங்கிப் போய்த் தனிமையாக வாசஞ்செய்யத் தீர்மானித்தாள்.

மஹாவிஷ்ணுவிடமிருந்து லக்ஷ்மி நீங்கவும், அவர் பரதேசியாகி ஒரு புற்றில் போய் வசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது கலிபிறந்தது. லக்ஷ்மிதேவிக்கு வருத்தம் உண்டாகி, நமது பிணக்கினால் அல்லவா இவர் இந்தக்கதியானார் என்று சிந்தித்து அவருக்கு உதவி புரியவேண்டி தான் ஒரு இடைச்சிவேஷம் தரித்து நிற்க, இவள் கருத்தையறிந்த பிரஹ்மா ஒரு பசுவாகவும், ருத்திரர் அதன் கன்றாகவும் வந்து நின்றார்கள். இடைச்சி வேஷம் பூண்ட இலக்ஷ்மிதேவி நான் இந்தப்பசுவையும் கன்றையும் விற்பேனென்று ஜனங்களுக்குத் தெரிவிக்க, சோழமஹாராஜன் மனைவி அம்மாயப் பசுவைவாங்கி பசுக்காப்போனிடம் ஒப்புவித்து அதை ஆதரித்து வரும்படி செய்தாள். அப்பசு வயிறுநிறைய மேய்ந்து மடிநிறையப் பால் சுரக்கவும் அப்புற்றினிடம் போய் அதிலுள்ள விஷ்ணுவுக்கு ஆகாரமாகப் பாலைச்சொரிந்து வந்தது. அதனால் அது அரண்மனைக்குத் திரும்பும்போதெல்லாம் மடியில் பாலில்லாமலிருந்தது. ராணி பசுக்காப்போனைக்கோபிக்க அவன் அப்பசுவின்மேலே கண்ணாயிருந்துபார்த்து வந்தான் அப்பொழுது அது செய்த அதிர்சயச்செயலைக்கண்டு உன்னாலல்லவா எனக்கு



ஹானி வந்தது என்று அதைக் கொல்லயத்தனித்தான். அப்பொழுது புத்திலிருந்து விஷ்ணுதோன்றி அவனைத்தடுக்க, அவன் ஓங்கின கோடாரி விஷ்ணு தலையில் பட்டு காயம் உண்டாக ரக்தம் சொரிந்தது அந்தப் பசுமேய்ப்பவன் செத்தான். அம்மாயப் பசு இது சங்கதியைப்போய் அரசனிடம் தெரிவிக்க அவன் வந்து பார்க்க, விஷ்ணு காயப்பட்டு கோபாவேசத்தோடு நிற்கக்கண்டான். விஷ்ணுவானவர் அவ்வரசனைக்கண்டதும் அவன் பிசாசாகப் போகும்படி சபித்தார். விஷ்ணுமாயை யென்றுணர்ந்து வணங்கி சாபவிமோசனம் கேட்க, விஷ்ணுவானவர் நான் ஆகாசராஜன் புத்திரியான பத்மாவதியை விவாகம் செய்து கொள்வேன். அப்பொழுது ஆகாசராஜன் ரத்னகசிதமான கிரீட மொன்று அளிப்பான் அதை நான் சுக்கிரவாரந் தோறும் அணிந்து கொள்ளும் பொழுது ஆறுநாழிகை ஆனந்தபாஷ்ப முண்டாகும். அப்பொழுது மட்டும் நீ ராஜவடிவத்தோடிருந்து என்னை தரிசிக்கக் கடவை யென்று சாபசாந்தியளித்து அனுப்பினார்.

பிறகு பிரஹஸ்பதியை ஸ்மரிக்க அவர் வந்து காயத்துக்கு எருக்கம்பஞ்சைப்பாலில் நனைத்துப் போடும்படி வைத்தியஞ் சொல்லிப்போக, அப்படியே செய்ய இசைந்தார். ஒரு நாள் ஆரணியத்தில் மருந்து களையப் போய்க்கொண்டிருக்கையில் வராகமூர்த்தியைக்கண்டு தான் க்ஷீண தசையுற்றிருப்பதைத் தெரிவித்து, லக்ஷ்மிவிலகினதினால் புற்றில்போய் வாசம் செய்யத்தனக்கு சேர்ந்த வில்லங்கத்தைக் காட்டி, தானிருக்க நூறடி சதுரம் இடங்கொடுக்கும்படி கேட்டார். பலவானுக்கிடங் கொடுக்க இஷ்டமில்லாமலிருந்தும், அதற்குள்ள கிரயங்கொடுத்தால் கொடுப்பதாகச் சொன்னார். விஷ்ணுவுக்கு லக்ஷ்மி பிரிந்ததினால் ஐவேஜியின்றி வறுமை மேலிட்டிருந்ததால், கிரயங்கொடுத்து வாங்க சக்தியின்றி, வராஹமூர்த்திக்கு முன்னதாக பூஜை நைவேத்தியம் செய்து அப்புறம் தனக்குச் செய்யும்படியாக நியமிக்கிறேனென்று வாக்குறுதி செய்து கொடுத்து நூறடி மண் வாங்கி அதிலிருக்கலானார். அவர் அதுமுதல் வராஹமூர்த்தியோடு சிநேகமாயிருந்து வந்தார். இப்படியிருக்கையில் நாராயண வனத்தை யாசாண்டு வந்த ஆகாசராஜனுக்குப் புத்திரனில்லாமையால் புத்திரகாமேஷ்டியாகம் செய்ய, யாகக்கலப்பையினால் பூமியை உழுதபோது ஆயிரமிதழ்களோடு கூடிய ஸ்வர்ண காந்தியுள்ள கமலம் ஒன்றும் அதில் திவ்விய ரூபமான பெண்குழந்தை யொன்று மிருக்கக்கண்டு, அதை ஸ்ரீலக்ஷ்மியின் அம்சமென்று பெரியோர்களாலுணர்ந்து மிகச்செல்வமாய் வளர்த்து வந்தான். பிறகு அவனுக்குப் புத்திரனும் பிறந்தான்.

விஷ்ணுவானவர் பத்மாவதியை மணம் புரியும் காலம் கிட்டவும், அவர் வேடனை உருத்தரித்து வேட்டையாடுகையில் அவளைக்கண்டு மோஹித்து நிற்க, அவள் சினந்து கல்லாலெறிந்து துறத்த, கல்லெறி தாளமாட்டாமல் ஓடிப்போய், விஷ்ணு பத்மாவதியின் ஞாபகமே யதிகரிக்க விரகதாபத்தில் வீழ்ந்து தபித்துக்கொண்டிருந்தார்.

ஸ்ரீவராஹமூர்த்தியின் சமையல்காரியான வகுளமாலினிதேவி விஷ்ணுவின் பரிதாபநிலையை யறிந்து பத்மாவதியை மணம்புரியத் தான் போய் விஷ்ணுவுக்காகப் பெண்கேட்டு வருவதாகச் சென்றாள். அதற்குள் விஷ்ணுவானவர் குறத்தி வேஷம் பூண்டு ஆகாசராஜன் மனைவியிடம் பெண்ணை விஷ்ணுவுக்காக மணம்பேச வகுளமாலிகாதேவி சீக்கிரத்தில் தானே வருவளென்று குறிசொல்லிவர, நாரதபகவானும் பத்மாவதிக்குப் பிரஸந்நராகி விஷ்ணு உனக்குப் புருஷனாகவாய்ப்பா ரென்று சொல்லிப் போந்தார். இப்படியாக சீக்கிரத்தில் தானே கலியாணம் நிச்சயமாய் விட்டது.

கலியாணத்துக்குப் பணம் வேணுமே! என்ன செய்கிறது! லக்ஷ்மியோ கோபித்துக்கொண்டுபோய் விட்டாள்! விஷ்ணுவோ அதனால் ஐசுவரியஹீனனாய் விட்டார். ஆனாலும் அவர் அதைரியப்படவில்லை. வராஹமூர்த்தியை கலியாணத்துக்காகப் பணம் கடன் கொடுக்கும்படி கேட்டார். அவர் சம்மதிக்கவில்லை. ஆனாலும் இருக்கட்டு மென்று விஷ்ணுவானவர் கருடனைக்கொண்டு பிரமாவுக்கும் சேஷனைக்கொண்டு சிவனுக்கும் மணவோலை யெழுதி யனுப்பினார். அவர்கள் பரிவாரங்களோடும் திக்பாலகர்களோடும் விவாகத்துக்கு வந்தார்கள். எல்லாரும் வந்து கூடினபின், விஷ்ணுவானவர் குபேரனையும் சிவன் பிர்மா இவர்களையும் தனியாக அரசமரத்தடிக்கு அழைத்துப்போய் தனது இருப்பைச் சொல்லி,

இரகஸியமாய் கலியாணச் செலவுக்கு பணம் வேண்டுமென்று குபேரனை கடன் கேட்டார். குபோன் வேண்டிய பணம் அவ்வளவும் இனமாகத்தருவதாகச் சொல்ல, பெண்டாட்டி பிணங்கிக்கொண்டு போகவிட்டவனுக்கு இதரர்களை ஆசிரயித்தல் கௌரவமில்லையாதலால் கலியாணச் செலவுக்கு வேண்டிய பணத்தை கடனாகவே கொடுக்கும்படி கேட்டார். குபேரன் ஆக்ஷேபித்தும் கேளாமல் வட்டிக் கடனாகவே வேண்டிய திரவியத்தை ஏராளமாக வாங்கிக்கொண்டு வருஷந்தோறும் வட்டியை மட்டும் செலுத்தி கலியுகமுடிவில் முதலைச் செலுத்திவிடுவதாகக் கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து அதற்கு பிர்மாவையும், சிவனையும் அரசமரத்தையும் சாக்ஷிபோடச் செய்தார்.

இக்காலத்து மாப்பிள்ளைகளைப் போல் பெண்ணைப் பெற்றவனிடத்திலிருந்தே காசுபறித்துக்கல்யாணம் செய்து கொள்ளலாமென்கிற குயுக்தி அவருக்குத் தோன்றவில்லையென்று சொல்லக்கூடாது. பெண்டாட்டியோடு பணமெல்லாம் போனாலும் தனது ஆண்தன்மைக்குப் பங்கம் வரப்பார்த்திருக்கக்கூடாதென்று விஷ்ணுவானவர் இலவசமாகத் தருகிறேனென்ற குபேரன் சொன்னதை யங்கீகரிக்காமலும், பெண்ணைப் பெற்றவனுக்கு நாம் தோற்றுப் போகக்கூடாதென்று தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு கோடிக்கணக்கான திரவியத்தை குபேரனிடம் வட்டிக்குக்கடன் வாங்கி, ருணபாதகனா யிருந்தாலும் இருப்பேன் குணபாதகம் வரக்கூடாதென்று கடன் வாங்கிக் கலியாணம் செய்து கொண்டார்.

பிறகு கலியாணம் செய்து கொண்டு பத்மாவதி சமேதரான பிற்பாடும், மாமனார் சோற்றைத் தின்ன உடன்படவில்லை. வராஹமூர்த்தியினிடம் தன் அந்தஸ்தை விற்று வாங்கின நூறடிநிலத்திலே வாசம் செய்யலாமென்று புறப்பட்டு வந்தார். கலியாணம் செய்த ஆறுமாசங்களில் மலையேறக் கூடாதென்று அத்திரி ரிஷி ஆக்ஷேபிக்க அவருடைய ஆசிரமத்திலேயே முதலாறுமாசத்தையும் கழிக்கத்தீர்மானித்தார்.

பிறகு தனக்கு ப்பேரும் கீர்த்தியும் லபித்த போதும், லக்ஷ்மியைப் பிரிந்த சோகம் தீர, லக்ஷ்மீகாந்தனாய் தபஸ் செய்து, லக்ஷ்மியை மறுபடியும் தன் ஹிருதயத்தில் வஹித்தபோதும் கூட, லக்ஷ்மிதேவியானவள் குபேரனிடம் பட்ட ருணத்தைத் தீர்ப்பதாகச் சொல்ல, அதையங்கீகரிக்காமல், தன்னை வணங்கும் பக்தர்களுக்கு அவள் வேண்டிய திரவியத்தையளித்துக்காக்க வேண்டுமென்றுமட்டும் கேட்டுக்கொண்டு, தான் பட்டகடனை, வருஷந்தோறும் ஜனங்களுடைய பயத்தைப் போக்கி அவர்களுடைய மனோபீஷ்டங்களை நிறைவேற்றுவதினால் அவர் கொண்டுவரும் முடிப்புகளைக் கொண்டு தான் சிக்கனமாய்ச் செலவுசெய்து மிகுதியை வட்டியாகக் கட்டி வருவேனென்று சொன்னார். இது வல்லவோ புருஷத்தனம்! இதனாலல்லவோ அவருக்குப் புருஷோத்தமன் என்கிற பேர் நிலைத்தது! புலிபசித்தால் புல்லைத்தின்னுமா? புருஷனுக்குச் சங்கடம் வந்தால் அவன் புருஷத்துவத்தை யிழப்பானா? பேடியாய் பிச்சையெடுப்பானா? ஒருக்காலும் செய்ய மாட்டான் பெண்ணைக்கொண்டு ஸ்ரீதனத்தால் பிழைக்க வழி பார்க்கும் இக்காலத்துப் பிள்ளைகளெல்லாம் மாப்பிள்ளை, மாப்பிள்ளைகளேயன்றி ஆண்பிள்ளைகளல்லார்! புருஷத்துவத்தை விற்றுப் பெண்ணைக் கொள்கிறார்கள். பேடிகளான இவர்கள் ஸ்ரீதேவியின் அம்சமான பெண்ணைக் கொண்டு சுகிப்பதெப்படி? இவர்கள் தாங்கள் கொண்ட பெண்ணுக்குப் பணிசெய்யும் பேடிகளான தாஸர்களே யன்றிப் புருஷர்களல்லர். இவர்களையும் லக்ஷ்மீநாராயணனென்று பாத ஜலம் விட்டுக் காலலம்பிப்பூசிக்கிறார்களே, அவர்களைச் சொல்லவேண்டும்! பேடிகளான இவர்களைச் சொல்வதில் பயனில்லை! தன் பௌருஷத்தை யிழக்காத புருஷோத்தமனும்ஸ்ரீநிவாஸன் செய்யும் குடித்தனச் சிறப்பை யறியவேண்டின் அவனிருப்பிடமாம் திருப்பதிக்கு நேரில் போய் அவன் மஹிமையைக்கண்டு தரிசிக்கவேண்டும், அவ்வளவுக்கு ஆற்றாதவர் அவனுடைய மஹிமையைச் சொல்லும் ஸ்ரீவேங்கடாசல யாத்திரை யென்னும் கிரந்தத்தை வாங்கியாவது வாசிக்க வேண்டும். ஸ்ரீவேங்கடாசலபதியாம் ஸ்ரீநிவாஸ மூர்த்தியின் மஹிமையை மாண்புடையோர் அனுபவித்தறியலாமன்றி சொல்லாலெழுத்தால் அவனுண்மை யுணர்த்த சாத்தியமில்லை. ஓம் ஸ்ரீவேங்கடாசலபதியைநமஃ

---



## கோமளம் காஞ்சியாத்திரை.

இது ஒருபெண்பால் எழுதியது. சோமளம் என்னும் கதாநாயகி ஒருவிவேகசாலியானமாது. உத்தியோகஸ்தனுக்கு வாழ்க்கைப்பட்டு பிள்ளைகுட்டிகளைப்பெற்று சீரும்சிறப்புமாய்க்குடித்தனம் செய்து வாழ்ந்தவள். அவளுடையபிள்ளைகள் இருவரில்ஒருவர் தஞ்சாவூர் டிப்டிகலெக்டர் மற்றொருவர் தாசில்தார் வேலையிலிருக்கிறவர். மாமியார்மெச்சினமருமகளுண்டானாலும் மருமகள் மெச்சிய மாமியார்கிடையாது என்பது உலகவழக்கம். அதுவும் இக்காலத்தில் மாட்டுப் பெண்களிடத்தில் நல்ல பேர்வாங்குவது மிகவும் துர்லபம். ஏனென்றால் பழையன கழிந்து புதியன புகுந்துவரும் காலஇயற்கையுள்ள இக்காலத்தில் மாமிமருமகள் இருவரும் மனமொத்துவாழ்தல்மிகவும் கஷ்டம். இப்படிப்பட்ட கஷ்டசாத்தியமானநல்லபேர் பெற்றவள் உலகத்திலிருப்பாளோ இல்லையோ கிரந்தத்தில் இருக்கக்கண்டு மிகச்சந்தோஷப்படலானோம், வானையிலில்லாமல் அகப்பையில் வராது என்றொரு பழமொழியுண்டு. அதுபோலவே மனத்திலில்லாதது எழுத்தில்வராது. அறிவிலுதித்ததே மனத்தில் பிரதிபலிக்கு மாதலால் எவ்விதத்திலோ ஒருவித ஸ்வானுபவமின்றி ஸ்வதாவாக சிருஷ்டிக்க முடியாது. ஆகையால் மருமகள் மெச்சிய மாமியார், உண்டென்றே திடப்படுகிறது.

இந்தக் கோமளம்மாளுக்கு இரண்டு பிள்ளைகளென்று சொன்னோம். டிப்டிகலெக்டரும் தாசில்தாருமான அவ்விருபிள்ளைகளின் மனைவிமார்கள்தான் மஹாசுந்தரியான இந்தப்பாக்கியவதியின் மருமக்கள்மாராவர்.

இந்த அம்மாள் தம்முடையபிள்ளைகள் நாட்டுப்பெண்கள் ஸகிதம் குஞ்சுகுழந்தைகளை அழைத்துக்கொண்டு ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீதேவாதிராஜன் சேர்வைக்குப் போய்வந்த வைபவத்தைச் சொல்வது இக்கிரந்தத்தின்கருத்தாம். ஹிந்துகுடும்பங்களின் உள்நிலையை உள்ளபடியறிய வேண்டுமானால் ஒருபெரிய திருவிழா அல்லது மஹோத்ஸவகாலங்களில் தான் அக்குடும்பத்தில் புகுந்து பார்க்கவேண்டும். அப்பொழுது தான் அவரவர்களுடையகுணகுணங்களும் நன்றாக எடுத்துக் காட்டிவிளங்கும். கர்வம், டம்பம், அஹங்காரம், மமதை, மாச்சரியம், லோபம்போன்ற தீக்குணங்களும் பக்தி சிரத்தை விநயம் நற்சித்தம் பொறுமை நலம் பாராட்டல் தர்மகுணம் தயாளத்துவம் முதலிய நற்குணங்களும் அச்சமயத்தில் தான் குன்றின்மேலேற்றிய விளக்குப்போல் பலருமறியப்பிரகாசித்து விளங்கும்.

அதுவும் பலபேர்சேர்ந்து ஸ்வாமிசேவிக்கவென்று க்ஷேத்திரயாத்திரை புறப்பட்டு விட்டால் அவர்களுக்குளிருக்கும் குணகுணங்களெல்லாம் ஒன்றுவிடாமல் தூபம் போட்டாற்போல கிளம்பிவிடும். கிழம் கட்டைகள் குஞ்சுகுழந்தைகள், ஸ்திரீ புருஷர்கள் எல்லாருடைய மனோசேஷ்டையையும் அப்பொழுது தான் நன்றாகப் பார்க்கலாம், மனிதனைப் பதுமை யென்றும் ஈசுவரனை சூத்திரதாரியென்றும் சொல்வதுண்டு. ஈசுவரன் சூத்திரதாரியாக விருப்பதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் மனிதன்பொம்மைதான் என்றும் மானுடவாழ்க்கை ஒருபொம்மலாட்டமே என்றும் இச்சமயங்களில் நன்றாக அறிந்து கொள்ளலாம்.

இக்கிரந்தத்தில் கோமளம் நல்ல மாமியாகவிளங்குவது மட்டுமல்ல. அவள் நல்ல மனைவியாகவும்நல்லதாயாகவும் இருந்திருக்கவேண்டுமென்பது நன்றாகவிளங்குகின்றது பிறந்தவிடத்தில் நல்லபெண்ணாக இல்லாதவள் நல்லமனைவியாகமாறுவது கஷ்டம். புருஷனுக்குகந்த பதிவிரதையாகவில்லாவிடின் அவள் நல்லதாயாராகமாட்டாள். நல்லபெண்ணும் நல்லமனைவியும் நல்ல தாயுமாயிருந்தாலன்றி நல்லமாமியாக மாட்டாள். ரெவினியு இனிஸ்பெக்டர் தாசில்தார் மாஜிஸ்திரேட்டு டிப்டிகலெக்டர் என்று அந்தஸ்து உயருவது போல குடித்தனப்பாங்கில் நல்ல மாமியாராக விளங்கும் உந்த பதவி அதற்கு முன்னுள்ள அந்தஸ்துகளி லெல்லாம் பொறுப்பிருப்பாயிருந்து உழைத்தால் தான் வரும். பூர்வஜன்ம புண்யத்தாலுண்டானசுபவாசனையால் சிலருக்கு இஃதெல்லாம் பூவுக்கு மணம்போல் இயல்பாகவரும். அவர்கள் பூதேவிஸ்ரீதேவியின் அம்சங்களென்று சொல்லவேண்டும். செய்கடனைச்செவ்வனே செய்வாருக்கு இக்குணம் நன்றாகப்பழக்கவாசனையால் அமையும். பழக்கவாசனையால் வந்தாலும் இயற்கைவாசனையால் வந்தாலும் நல்லது நல்லதே. கெட்டது கெட்டதே. இந்த ஜன்மத்தில் பழக்கவாசனையாலமைவது மறுஜன்மத்தில் பூர்வவாசனையா யமைவதாகிறது. ஆகையால்தான் கர்மம் ஜீவ

லைத்தொடர்ந்தே செல்லுமென்பது உண்மை யென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருகிறது.

மனிதஜன்மமெடுத்தவன் குணமாத்திரத்தால் விளங்குபவன், கேவலம் உண்டுடுத்துறங்குவதேகாரியமாயிருப்பவன் மனுஷஜன்மத்தில் சேர்ந்தவனல்ல; மிருகப்பிராயமான இரண்டு கால்பிராணியாவன்.

கோமளம்தன்குமாரன் டிப்டிகலெக்டர் கிருஷ்ணய்யங்கார் முதலானவரோடு, தஞ்சாவூர் ஸ்மார்த்தப்பிரபு நீலகண்டய்யர், தமது பூர்வஜன்மப்ராரப்தத்தால் இரண்டாந்தாமாய்ப் பெண்டு கொண்ட பேயர்ட்டப் பெண்டாட்டியோடும் சுத்தஸாத்வீகர்களும் மஹாவிவேகிகளுமான ஸதாசிவன் நீலாயதாக்ஷி யென்னும் ஸத்புத்திரன் ஸாத்விகநாட்டுப் பெண் இவர்களோடும் காஞ்சிக்கு க்ஷேத்திரயாத்திரை போன வைபவம் மிகவும் நன்ருக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

நல்மாமி நல்லநாட்டுப்பெண்களோடு துஷ்டமாமி தூர்த்த நாத்தனர், வம்புக்காரத் தொம்பைகள், வேதவித்துக்களான உத்தமரத்தினமாம் வித்வத்கன்னிகைகள் இவர்களை இக்கிரந்தில் கண்டு கொள்ளலாம். பத்தியைப் பற்றியபிரசிங்கமும் கர்மகாண்டம் உபாசன காண்டம் இவைகளை அவமதித்துத் தள்ளி விட்டு ஞானகாண்டத்தைமட்டும் அங்கீகரித்னுஷ்டிப்பதாக நடிக்கும். இக்காலத்து நாகரிகப்புருசங்களின்புல்லறிவைப் பற்றி ஸ்ரீநிவாஸயதீந்திரர் பொழிந்த சம்பாஷணமிர்தமும் அமிர்தவல்லியின் குணமனவி சேஷங்களும் அவள் செய்த பிரசங்கத்தின் மேல் கோமளம் அவளுக்குக்காட்டிய நன்குமதிப்புமிகுந்த பிரீதிவசனங்களும், கடைசியாகக் குழந்தை காணமற்போய் அகப்பட்ட கட்டமும் அதிரவிகமாகவிருக்கின்றன. இக்கிரந்தம் எழுதிய தாமரைப்பெண் தாமரை மொட்டுக்குள் வசிக்கும் வநிதையாக விருப்பதிலிருந்து அலர்மேல்மங்கையளாகிச் சோபித்து விளங்க ஸ்ரீநிவாஸன் கிருபை சாதிப்பாராகப் பிரார்த்திக்கிருேம்.

## "மனம் போல வாழ்வு"

இது ஸ்ரீவ உ. வே. சிதம்பரம் பிள்ளையவர்களால் அவர்ஜெயிலில் ஒழிவுற்றிருந்த காலத்தில் எழுதப்பட்டு ஸ்வாமி வள்ளிநாயகம் அவர்களால் வெளிப்பட்டது.

இதை ஆக்கியவர் இந்நூலை நமது பாரதமாதா உன்னதநிலையை அடையுமாறு நமது தேசதத்வர்களாகிய சகோதரர்கள் அறிவு ஒழுக்கம் செல்வம் ஐக்கியம் இவற்றில் மேம்பாடு அடைதற்கு தம்மால் இயன்றவரை யுழைத்தவர் உழைக்கிறவர் உழைப்பவர் ஆகிய சுதேச பரதேச சகோதரர்களின் திவ்விய பாதாரவிந்தங்களிலே இந்நூலை ஸமர்ப்பிக்கின்றனன் என்று ஸமர்ப்பணம் செய்திருக்கிருர்

இந்நூல் மொழியெயர்க்கப் பெற்றதின் ஸந்தர்ப்பம் மனத்தை யுருக்குவதாயிருக்கிறது. ஆயினும் அதுவே இதை ஆக்கியவர் குணத்தையும் காட்டுவதாயிருகக்றது. "இந்நூலை மொழிபெர்க்கவேண்டுமென்னும் விருப்பம் என்மனத்தில் வெகுநாளாக விருந்துள தேனும் அது நிறைவேற வாய்த்த சமயத்தை நோக்குங்கால் எல்லாம் வல்ல ஜகதீசன் அருளை நினைத்து உருகும்படி இருக்கின்றது" என்று அவரே கூறுகிருர்.

இவருடைய கேஸ் அப்பீலில் இருந்தபொழுது இவரை வெறுங்காவலில் வைத்திருக்க செய்தகாலத்தில் ஜெம்ஸ்எலன் (James Allen) அவர்கள் மனிதன்தான் எண்ணுமாறு ஆகின்றுன் என்னும் தத்துவ உண்மையை எடுத்து விளக்க எழுதியதோர் புஸ்தகத்தைத் தமிழ்ப் படுத்தியிருக்கிருர். திருக்குறள் அறத்துப்பாலையும் இங்லீஷ்படுத்தியிருக்கிருர். "யத்பாவம் தத்பவதி" என்பதின் உண்மையை நம்மவர்கள் உள்ளபடி யறிந்தார்களாயின் அவர்கள் இப்போ தைப்போல் அவ்வளவு குணக்கேடுற்றவர்களாயிருக்கமாட்டார்கள். மனம் போலிருக்கும் மங்கிலியம் ஆதலால் நாம் முதலில் மனத்தை த்திருத்திக்கொள்ளவேண்டும். அதற்கு இப்புஸ்தகம் மிக்க சாதகமாம். இதன்விலை அணா 8. இநூலின் கருத்து முழுமையும் பின்வருமிக்ஷதில் அங்குவதாகும்.

ஆக்கல் திருத்தல் அமைப்பவன் மனனே.
மனிதன் மனனே; மற்றவன் நினைப்பாங்
கருவியையெடுத்துக் கருதியதிருத்தி
யாயிரமின்பதுன்பாக்கிக் கொள்ளுவன்;
சனித்து நினைப்பான் சாருமஃதுடனே;
சந்தர்ப்பமுமவன்றனைக்காட்டாடியே

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 19 MAR 1910 MADRAS

*"Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is;*
*but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you find it," But "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**Speak the Truth**

"Hitch your wagon to a Star" "To Thine Own Self be True."




அன்பேயவன் : அறிவேசக்தி: ஓம் தத்சத்.] [God is Love: Knowledge is Power. *Aum.*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு 17.] 1909-10ஞு டிஸம்பர்-ஜனவரிமீ ஸௌமியஞு மார்கழி-தைமீ [ச. 9-10.

## To Our Readers and Subscribers.

We owe an apology to our Readers for the blunders committed by the Printer who was an untried hand. But better to deal with an ignoramus than get into the clutches of clever man without principle or scruples of conscience. In these days of voluble promises but rare fulfilment, we have, as we said, tried for once, the effect of 'Swadeshi Enterprise' on our constitution, with results, alas! better imagined than described. We are reverting, therefore, to our old hum drum life of "doing our duty" leaving the result in the hand of One, who in the Field of Battle at **Kurukshetra**, taught to the Hero of the Fight, Arjuna, the Great Secret of Karma, saying,—
**"To work you have the right, but not to the fruits thereof."**

We once again express our trust that our readers and Subscribers will not interpret this as meaning that they have no duty to perform; and we repeat that we expect them to do *their* duty and remit their arrears of subscription due **at once**.

## "TACT"—REAL AND UNREAL

"Tact means thinking about others. It means considering what others will t... only what we think ourselves. It means acting in concert with others, instead of act... ation tact may be insincere and selfish in its purposes. But real tact is unselfish in s... so much and wins so many hearts."

## "ஸமயோசித ஸாமர்த்தியம்".

ப்ரஹ்மதேஜஸும் ப்ரஹ்மரக்ஷஸும்.

"ஸமயோசித ஸாமர்த்தியம்" என்றால் என்ன? ஸமயத்துக்கேற்றது எதுவோ அதை உசிதமுறைபற்றித் தெரிந்துகொண்டு தருணம் நழுவாதபடி உபயோகிப்பதற்கான ஸாமர்த்திய சக்தி "ஸமயோசித ஸாமர்த்தியம்" என்னப்படும். இதுதான் அதன் உண்மையான அருத்தம். இதைவிட்டு "காலத்துக்குத் தக்க கோலம்போட்டுக் காரியத்தை முடித்துக்கொள்வதே" "ஸமயோசித ஸாமர்த்தியம்" என்று சொல்லித்திரிவாரும் உளர். இத்தகைபோரே உலகில் அபரிமிதமாயுள்ளார். இவர்கள் உசிதம் அநுசிதம் என்கிற பேதம்பாராமல், காரியத்தை சாய்த்துக்கொள்வதே கெட்டிக்காரத்தனம் என்று சொல்கிறார்கள். காரணத்தை விட்டுக் காரியத்திலே தானே லக்ஷியம் வைப்பவர்கள் காரண காரியதோரணையறியாமல், தத்ஸமயத்துக்கு காரிய ஸாதனை யெப்படியாகு மென்று அவர்கள் புல்லறிவுக்குத் தோன்றுகிறதோ அதையே ஸாதனமாகக் கொண்டு "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்னும் கர்மதர்ம விதியையுணராமல் வினையை வளர்த்து வில்லங்கம் விளைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் கெட்டிக்காரத்தனமெல்லாம் எட்டுநாளில் வெளியாகிவிடும். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும்" என்னும் பழமொழி இவர்கள் சமர்த்தை, அவலச்சமர்த்து என்று காட்டவே யுண்டானது. எட்டுநாள் தவணை குறித்தது ஏனென்றால், ஸப்தம விதியையனுசரித்து ஸங்கல்பத்தின் பயன் விளங்க "ஸப்தபதி" என்று சொல்லும் எழுவகைப் பதமும் முதிர்ந்தபின்தான் அதன் காலச்சக்ரம் முடிந்து வித்தாக விதைத்து முளைத்துப் பலனைத்தரும். தன்மனத்தைத் தானே யடக்கியாளாமல் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி கிரகசாரரீதியாக நடந்துகொள்ளும் மனிதன், பசு ரூபியாதலால், அவனுடைய ஸங்கல்பத்துக்கு ஸப்தக்ரஹங்களின் சாரமும் கழிய ஏழுநாள் செல்லும்.

ஜீவபுருஷனுக்கு ஸப்ததாதுக்களாம், தோல், இரத்தம், மாம்ஸம், மேதை, எலும்பு, மஜ்ஜை, சுக்கிலம் என்கிற ஏழும் சேர்ந்து மூர்த்தீகரித்து எப்படி "தேஹம்" என்னும் காலவரையறையுள்ள (தநு) வில்லொத்த ஆயுதம் அமைகிறதோ, அப்படியே காலபுருஷனுக்கு சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி யென்னும் ஸப்தகிரஹங்களும் சேர்ந்தமைந்து உருக்கொண்ட "தேஹம்" என்னும் காலவரையறையுண்டாகிறது. ஜீவன் உட்கொண்ட ஆகாரம் உடம்பிலொட்ட அது ஸப்த தாதுக்களாகவும் மாறி அவற்றின் சமஷ்டியுருக்கொள்ளல் வேண்டும். அப்பொழுது தான் உண்டசோறு உடம்பில் ஒட்டினதாகச் சொல்லப்படும். உண்ட சோறு உடம்பிலொட்டினால் தான் அது பலனைக்கொடுக்கும்.

அதுபோல ஒரு எண்ணத்தை யெண்ணிச் செய்தால் அது காலபுருஷனின் ஸப்த தாதுக்களாக விளங்கும், ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி யென்னும் ஏழு கிரகங்களின் சாரமுமாகி அவையெல்லாம் சேர்ந்ததோர் உருவாகவேண்டும். அப்பொழுதுதான் அவ்வெண்ணம் பழுத்ததாகும். எண்ணம் பழுத்தால் தான் பலனைத் தரும் வித்தாகும். ஆதலால் கெட்டிக்காரன் புளுகு பழுத்துப் பலனைத் தரும் வித்தாக எட்டு நாள் தவணை வேண்டும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 19 MAR 1910 MADRAS

"சாதனையின்றிச் சாதிப்பாரில்லை." இது ஸத்தியம். ஸமயத்துக்குத் தக்கபடி ஏற்ற ஸாதனங்களை உபயோகித்தால் தான், உலகில் காரிய சாத்தியமாகும். காரியத்தைச் சாதித்துக்கொள்கிறவன் எப்படியும் கெட்டிக்காரனே! ஆனால் அவன் சமர்த்து, அசட்டுச் சமர்த்தா, நிஜமான சமர்த்தா? என்று எப்படிக் கண்டு பிடிக்கிறது? காரணகாரியதோரணையைக் கொண்டே கண்டு பிடிக்க வேண்டும். எள்ளுப்போட்டால் கொள்ளு முளைக்குமா? முளைக்காது போல, கர்மவிதியும் மாறாத்தன்மையுடையது. "நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்தால் தீமை விளையும்." ஸமயத்துக்குத் தக்கப்படி காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமென்று தீமைவிளைக்கும் சாதனங்களை யுபயோகித்தால் அது பின்னுக்கு ஒன்று பத்தாய்த் தீமையை விளைக்குமே யன்றி நன்மையை விளைக்காது. இது கர்மவிதிக்கும் காலநியதிக்கும் ஒத்ததோர் தர்மம். இந்த தர்மவிதியை யறிந்து "தர்மவழி பற்றி நின்று" எவனொருவன் ஸமயத்துக்கு ஏற்றபடி உசிதமான (தர்மவழி பிறழாமல் ஸாதனைக் கிடங்கொடுக்கும் மேலான) ஸாதனங்களை யனுசரித்து தருணம் தவறாமல் உபயோகித்துக் காரியஸித்தி பெறுகிறானோ அவனே ஸித்தபுருஷன்—ஸமயோசித ஸாமர்த்தியத்தில் பூரணமான தேர்ச்சி யடைந்தவன். அப்பியாஸமின்றி தேர்ச்சியில்லையால், உண்மையறிந்து விவேகத்தோடு விசாரம் செய்கிற அப்பியாஸம் எவனுக்கு ஸித்திக்கிறதோ, அல்லது எவன் பிரயத்தன பூர்வமாய் அந்த அப்பியாஸத்தை மேற்கொண்டு பழகுகிறானோ, அவன் சீக்கிரத்தில் தேர்ச்சி அடைகிறான். இங்கே உசிதம் எது? அநுசிதம் எது? என்று சற்று விசாரிப்போம். மனிதன் ஸ்வதந்திரத்தைத் தானாகவே யிச்சிக்கிறான். ஆனால் அதைப் பெறும் மார்க்கம் தெரியாமல் தப்பு வழிகளில் பிரவேசித்துத் திண்டாடுகிறான். ஆகையால் இவனுக்கு ஸ்வதந்திர ஸித்தியைக் கொடுக்கத் தக்கது எதுவோ அந்த ஸாதனங்களெல்லாம் உசிதமாம்.

அப்படிக்கின்றி இவனுக்கு சமயத்துக்கு வெற்றியைக் கொடுத்து இவன் ஸ்வதந்திரத்துக் கிடையூறு விளைத்து இவனைப் பிறதந்திரனாக்கி, பெந்தத்துக்குள்படுத்தும்படியான ஸாதனங்களெல்லாம், தத்ஸமயத்துக்கு வெற்றியைக் கொடுத்தாலும் கடைசியில் இவனை பெந்தத்துக்காளாக்குவதால், அநுசிதமாம்.

நித்தியாநித்தியவஸ்துவிவேகம் பெற்ற விசார சீலனுக்கு இந்தப்படி உசிதாநுசிதமான ஸாதனங்கள் இன்ன இன்ன வென்று விவேக சைதந்நியத்தில் தானே விளங்கும். ஸ்வகாரிய சிந்தனை எப்போதும் ஜீவனை பெந்தத்துக்காளாக்கும். பரகாரிய சிந்தனையோ, பரோபகார சேவைத்துவாரா, ஜீவனை முமூக்ஷுவாக்கி முக்திக்கு வழிகாட்டும்.

ஆகையால், ஸ்வகாரிய சிந்தனையோடு அநுஷ்டிக்கப்படும் ஸமயோசித ஸாமர்த்தியம் போலித்தன்மையதேயாம். உண்மையில் அது உசித மில்லை: அநுசிதமானதே யாதலால் போலியென்றது.

உண்மையில் உள்ளபடி "ஸமயோசித ஸாமர்த்தியம்" என்கிற சக்திவாய்ந்துள்ளவர்கள், ஸ்வகாரிய சிந்தனை யற்றவர்களாகவே யிருப்பார்கள். இது நிச்சயம். ஏனெனில், ஸ்வகாரிய சிந்தனை விவேக சைதந்நியத்தை விளங்கவொட்டாமல் செய்து விடுகிறது.

விவேக சைதந்நியம் விளங்காது மங்கனுற்ருல், உசிதாநுசிதம் விளங்காமற்போய்விடும். அப்பொழுது ஸமயத்துக்கேற்றதாகவும் அநுசிதமின்றி உசிதமாகவும் உள்ள ஸாதனங்கள் இன்ன வென்று தெளிந்து தெரிந்து உடனே அதை உபயோகித்துக் காரிய ஸாதனம் செய்து கொள்ளும் சக்தி குறையும்.

ஸமயோசித ஸ்ாமர்த்திய சக்தி குறையுமானுல், அப்பியாஸத்துக்குப் பங்கம் வரும். அப்பியாஸ பங்கத்திஞல் ஸத்விருத்தி குறையும். ஸத்விருத்தி குறைந்தால் ஸாத்வீகத் தேர்ச்சி குறையும்.

ஸாத்வீக விருத்தி குறையவே ராஜஸம் தாமஸத்தோடு சேர்ந்து விருத்தியடையும். பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிகிறதின் மர்மமெல்லாம் இதுவே.

"ஸமயோசித ஸாமர்த்தியம்" என்கிற பேரை வைத்துக் கொண்டு உலகஞானிகள் ஸமயாநுசித ஸாமர்த்தியத்திற் பழகி மமதை விர்த்தியினுல் முமுக்ஷுத்துவத்தையுமிழந்து, அகால மிருத்தியுவினுல் "ப்ரஹ்மரக்ஷஸ்," "ஜடாமுனி" முதலிய அகோர பதவிபெற்றுப் படாதபாடும் பட்டுத் தவிக்கிறுர்கள்.

ப்ரஹ்மதேஜஸை மறைப்பதெதுவோ அது ப்ரஹ்மரக்ஷஸ் எனப்படும்.

கைக்கெட்டினது வாய்க் கெட்டாமற் போனது மன்றி, வாய்க்குக்கை வழிதெரியாமற் போனவனுடைய கதி எவ்வளவு பரிதாபமானது பாருங்கள்! 'ப்ரஹ்மரக்ஷஸ்' பதவி பெற்றவர்கள் படும் அவதிக்கு இவனுடைய அவதி விளையாட்டெனச் சொல்லலாம். ஏனென்ருல், தத்துவவிசாரணை செய்து தேர்ந்து தத்துவதரிசனம் பெற்றவனுதலால் அவனுடைய உணர்வும் உணர்ச்சியும் அபாரதீக்ஷண்யம் பெற்று விளங்கும். அப்படிப்பட்டவன் பூத, பௌதிக தத்துவங்களையெல்லாம் வென்றும் அந்த தத்துவங்களுக்குள்ளெல்லாம்புகுந்துவிளங்கும் அஹம்தத்துவ மொன்றையடக்கியாளாமல் "ஸமயோசித ஸ்ாமர்த்தியம்" என்கிற பேரைவைத்துக் கொண்டு ஸமயாநுசித ஸாமர்த்தியம் பழகி வந்ததால், விவேகசைதந்நியம் பாழ்த்துப்போய், அகாலமிருத்தியு வந்து பிடித்ததும், "திரிசங்கு ஸ்வர்க்கம்" போல், முன்னும் போகமாட்டாமல் பின்னும் போகமாட்டாமல், அநுசித ஸாதனங்களை யனுஷ்டித்துப் பழகிவந்ததனுல் விளைந்த வில்லங்கத்தை அதிதீக்ஷ்ண்ய புத்தி யுக்தியோடு கூடியிருந்து அனுபவிக்கிருன்.

பராநந்தத்துக் காசைப்பட்டுழைத்து இகாநந்தத்தையும் இக சுகத்தையும் துச்சமென்று தள்ளி யொறுத்தபின், 'பிரஹ்மாநந்தம்' என்கிற பேரைச் சொல்லிக்கொண்டு தத்துவாநந்தமாம் ஸித்தி விளையாட்டில், காலத்தைக் கழித்தவர, கர்மம் முற்றி, காலமிருத்தியுவும் தீண்ட, அகாலத்தில் தேஹத்தை யிழந்து, "உடம்பினைப் பெற்ற பயனுவதெல்லாம்" ஒருங்கவிழந்து, "உடம்பினில் உத்தமனைக்காண்" சக்தியின்றிப் பரிதபிக்கிருன்.

ஸ்தூல சூக்ஷ்மதேஹங்களி ரண்டையுமாராய்ந்து பார்த்து ஸ்வாரஸ்யமில்லை யென்று ஸ்வதாவாக நீக்கினவனுதலால், மறுபடியும் தேஹமெடுக்க அவனுடைய பூர்வசங்கல்பமே தடையாக விருக்கிறது. தேஹமெடுக்கத் தன்னுடைய சங்கல்பம் தடைசெய்கிறது! முக்தி பெறுவதற்கோ அவன் செய்த கர்மம் தடை செய்கிறது! என்ன செய்வான் பாபம்! ஜீவராசிகளை யெல்லாம் வெறுத்து



"நீங்காத பச்சை நிறமுடைய" மரங்களில் வசித்து கதிமோக்ஷமின்றி வருந்துகிருன். சென்ற கார்த்திகை மாசம் நடந்த சூரஸம்ஹார உத்ஸவத்தில் சூரபத்மன் ஸ்ரீ சுப்ரஹ்மண்யரால் ஸம்ஹரிக்கப்படுந் தோறும் வேறு தேஹத்தோடு பல ஜன்மங்களெடுத்துக் கடைசியில் மனுஷ ரூபத்தோடு சண்டை செய்ய அந்தத் தலையையும் வாங்கின பின், பச்சை விருக்ஷமாக ஜன்மமெடுத்து வேலவனை வேண்டி யெதிர்க்க, அவர் கருணைமிகுதியினுல், அவனுக்கு முக்தி கொடுப்பதஸாத்தியமாகையால், மயில் ஜன்ம மளித்து அவனைத் தனக்கு வாஹனமாக்கிக்கொண்டார்.

இப்படியாக கர்மத்தின் மர்மத்தை யறிவது மஹா கஷ்டம். ஆணவமலம், கர்மமலம் இரண்டுங் கழியாதவர்களுக்கு மாயா மலம் எப்படித் தீரப்போகிறது! அவர்கள் என்றென்றைக்கும் மாயாவிகளேயாவர். இந்த "மாயாவிகளை" "மஹாத்மாக்கள்" என்று கர்மவாசனை படிந்த மாயாவாத மௌட்டியர்கள் பிரம்மையினுல் மேற்கொண்டு 'ஹிப்நாடிஸ்ம்,' 'மெஸ்மெரிஸ்ம்' முதலான மாயாஜால மந்திர தந்திரங்களைக் கற்று மதியற்ற ஜனங்களை மயக்கி மமதை யகங்காரங்களை விர்த்தி செய்து வருகிருர்கள். இஃதை ஆரியமதமென்றும், வேதாந்தமென்றும் சொல்லி வழக்கத்துக்குக் கொண்டுவந்து, மார்க்கந் தெரியாமல் பலரை மாயாவிகளாகச் செய்து வாதனை விளைக்கிருர்கள்.

"மர்மமப்பா சொல்வதைக்கேள், தர்மவழி [பற்றி நில்லாய்;
"கர்மமப்பா சொல்வதுன்னைக் கனமோ [கம் கெடுப்பதுங்காண்!"

என்ற தேவிவாக்கின் உண்மை தெரியாமல் இவர்கள் வீணே கர்மத்தை வளர்த்து அகால மிருத்தியுவுக்குஆளாகிருர்கள்.

பிரஹ்மதேஜஸுக்கும் பிரஹ்மரக்ஷஸுக்கு முள்ள வித்தியாஸத்தை உள்ளபடியுணரவேண்டின், சூரிய தேஜஸுக்கும் சூரிய கிரஹணத்துக்கு முள்ள வித்தியாஸத்தைக் கொண்டு அதை அநந்தமாக்கி யறிந்து கொள்ளவேண்டியது. சாசுவதமாய் சூரிய கிரஹணம் பிடித்து விட்டால் நம் கதியென்னுமென்பதை புத்திமான்கள் ஊகித்தறிந்து கொள்ள வேண்டும்.

ஸமய்ம், உசிதம், ஸாமர்த்தியம்,— இந்த மூன்றின்ஞான மில்லாமல் ஸமயோசித ஸாமர்த்திய முதித்துப் பூரணமாகாது. பூரணமாயின் ஸமயம் காலதத்துவமாய் விளங்கும். உசிதம் நியதி தத்துவமாய் விளங்கும்.

ஸாமர்த்தியம் காரிய காரணதோரணை ஸ்வரூபமாக விளங்கும். இம்மூன்றின் ஸ்வரூபத்தை யறிந்தவர்கள் யாரோ அவர்களே கால தேச வர்த்தமான மறிந்து நடக்க வல்லவர்.

காலத்தை வந்தித்து விநயமாய் வெல்லலாம். திரமுண்டேல் காலத்தை வஞ்சித்து வீரமாய் வெல்லலாம். அப்பொழுது ஸமயமெல்லாம் கைகட்டிக் காத்திருக்கும்.

நியதியை விவேகசைதந்நியத்தால் வெல்லலாம். வென்ருல் பரிசவேதியைப் போல் தான் கைப்பற்றிய சாதன மெல்லாம் உசிதமாகும்.

ஸாமர்த்தியம் அப்பியாஸ முதிர்ச்சியால் வருவது.

வாஸனை யற்ருல் "ஸ்ாமர்த்தியம்" தாஸனைப்போல் உடனிருந்து ஊழியம் செய்யும். 'வாஸனை' யென்ருல் "காரியகாரண வாஸனைப்பற்று" என்று திருமந்திரத்தில் கூறியதேயாம்.

"காரியமேழும் கரைந்திடும் மாயையுள்
காரணமேழும் கரக்கும் கடுவெளி
காரியகாரண வாசனைப் பற்றற
பாரணவுமுப சாந்தப்பரிசிதே."—திருமந்திரம்.

---

## The Law of Life, or The Evolutionary Principle at Work.

**"Evolution is the Law of Life" —Pythagoras.**

## திருக்கூத்துதரிசனம்.

---

"நன்றிதுஆட்டம் நன்றிதுகூத்து நன்று நன்றிது
[நடனம்!
அங்குமிங்குமெங்குங் கண்டிலே னிதுவொருவ
[திசயங் காண்மினே!
ஒன்றிநின்றன் றுணர்வழிந் துள்ளொளி யானபின்
அங்குமிங்குமெங்குமிதுவலால் மற்றொரு அதிசயங்
[காண்கிலேனே."

அநாஹதக்ஷேத்திரத்திலே தில்லைஸ்தலமென்றொரு புநிதபூமியுண்டு. அந்தஸ்தலத்திலே தில்லைவநத்திலே எம்பெருமான் நடராஜமூர்த்தி ஜீவகோடிகளுய்யத்திரு நடனம் செய்து திருக்கூத்துத்தரிசனமளித்தார். அந்தத்தரிசனங்கண்ட எம்பெருமான் திருமூலதேவர் "பொற்றில்லைக்கூத்து" என்று பின்வருமாறு திருமந்திரம் ஓதியுள்ளார்:

(அற்புதக்கூத்து)—(பொன்னம்பலக்கூத்து)

நாதத்திலேயாடி நாற்பதத்தேயாடி
வேதத்திலேயாடித்தழலந்தமீதாடி
போதத்திலேயாடிப்புவனமுழுதாடுந்
நீதற்றதேவாதிதேவர்பிரானே"

அவனருளால் அக்கூத்துப்பார்க்கக்கொடுத்துவைத்தயாரும் நாத, வேத, போதங்கடந்து, நாதாந்த, வேதாந்த, போதாந்தத்திலே யவன் திருக்கூத்தைப்பார்த்துத்திவ்யாநந்தமடையலாம். "நாதமுடிவிலே நல்லாளிருப்பது" என்பது திருமந்திரமாதலால் அம்மந்திரஸித்திபெற்று மந்திரதிஷ்டாவானவர்களுக்கு அக்கூத்துக்காக்ஷியின் குதூஹலம் விளங்குமேயன்றி மற்றவர்க்கு அது ருசிக்காது. இங்கே யொரு பரமரகசியம் சொல்லாமற்சொல்லத்தக்கது. "நாதமுடிவிலே நல்லாளிருப்பது" போல், "வேதமுடிவிலேவிளங்குவது மோனம்." நாதாந்தரூபியைக்கண்டு வேதாந்தமோனத்திலிருந்தால் அப்பாக்கியம் பெற்றோர் "மந்திரதிருஷ்டா" ஆவர். அவருடைய போதமுடிவிலே புவனமெலாந்தானொடுங்கும். அருட்கண்பெற்றோர்க்கு ஐயன் கூத்து ஆனந்தக்கூத்தாய் விளங்கும். அருளில்லார்க்கங்கே புகலிடமில்லையால், அவர் நாதாந்த, வேதாந்த, போதாந்தம் தான் போயும் காணவேண்டிய பொருளைக்காணாமல், முப்பாழையும் கண்டு மூர்ச்சித்துத்தான் வீழ்வர்.

முப்பாழுக்கப்பாலாம் அப்பாலே தானுள்ளான் "அருள் பெற்றவர்" தரிசிக்க ஆனந்தக்கூத்து ஆடுவான் ஆட்டத்தைக்கண்டு களித்தோர் விண்டுரை செய்ய வாயிலாது பண்டுரைகொண்டு பாடுவாராயினர். "உரையற்றதொன்றை உரைசெய்யும் ஊமர்காள்" என்றபடி, மோனமந்திரத்தால் அவர் உரைசெய்ததொன்றைப் பின்னால் வரைகிறோம்:

(ஆனந்தக்கூத்து)-(வெள்ளியம்பலக்கூத்து)

"நாதத்திலேயாடி நாதாந்தமீதாடி
வேதத்திலேயாடி வேதாந்தமீதாடி
போதத்திலேயாடி போதாந்தமீதாடுந்
நீதற்றதேவாதி தேவர்பிரானே."



ஆனந்தக்கூத்துப் பார்த்தோர் ஆரண்யக்கூத்து தரிசனம் செய்தவகையிதுவாம்:— நாதாந்த, வேதாந்த, போதாந்தமீதுள்ள ஆநந்தநிருத்தசபையிலாடும் "நீதற்றதேவாதிதேவர் பிரான்" தானே, விசுத்திக்ஷேத்திரத்திலேயுள்ள விஜ்ஞானகளாரூப வேதாரண்யத்திலே, நாதாரண்யரூபியாய்த்தோன்றிய "நல்லாளிற்பொல்லாளாம்" பத்ரகாளியோடு போட்டி போட்டு நிருத்தம்செய்ய, வெகுகாலம் நாதன் கூத்துக்குப் பின்வாங்காது நடித்தநாயகியின் கர்வமடங்க, "ஊர்த்துவ தாண்டவமாய்" எம்பிரான் கால்தூக்கியாடிப் போதாரண்யமெல்லாம் பொடிபடக் குதித்துக் குதித்துக் கூத்தாடிக்கெலித்தும், அம்மைசெய்த மாயாஜாலத்துக் காற்றாதவராய் "நல்லவஸ்தைக்கிலக்ஷியமாய் நாதரூடல் கொண்டோடி நான்மறையிலொளித்த"தோர் அதிசயக்கூத்தைக் கண்டோர், அஃதை ஆரண்யக்கூத்தென்று கொண்டாடித் தரிசிப்பர். ஆனந்தக்கூத்தை ஸம்ஹாரக்கூத்தென்றும் ஆரண்ணியக்கூத்தை சிருஷ்டிக் கூத்தென்றும் சொல்லுவர் "வேதாந்த சித்தாந்த ஸமரஸநிலைபெற்ற" பெரியோர். நாதாரண்யம் "நல்லாளிற் பொல்லாளாம்" பத்திரகாளி. வேதாரண்யம்="வித்மஹீ" சரண்யனும் விமல நாதன். (அப்படியென்றால், தன்னையறியத்தபஸியற்றுவாருக்குத் தன்னைக் கொடுத்திரக்ஷிக்கும் தயாநிதியாம் நிர்மலஸ்வரூபி என்றபடி.). போதாரண்யம் = புவனபோகங்களாம்.

(ஆரண்யக்கூத்து)--(செம்பொனம்பலக்கூத்து)

"நாதத்திலேயாடி நாதாரண்யத்தாடி
வேதத்திலேயாடி வேதாரண்யத்தாடி
போதத்திலேயாடி போதாரண்யத்தாடுந்
நீதற்றதேவாதி தேவர்பிரானே."

அற்புதகூத்தாடி "நாற்பதத்தே";—ஆனந்தக்கூத்தாடி "நாதாந்தத்தே";—ஆரண்யக்கூத்தாடி "வேதாரண்யத்தே";—அநந்நியக்கூத்தாடி "அவனிவனற்ற விடத்தே."—என்பது மந்திரதிருஷ்டாவின்மத்தியமவாக்கு. இஃதை வைகரிவாக்கிலுரைக்க வேண்டின், "வாயில்லாநாயனார்". என்னைத் தாயில்லாப்பிள்ளையென்று தரையில் விட்டுப் போய்விடுவார். ஆகையால் கேட்டதைக் கேட்டபடி மத்தியமவாக்கில்தானே யுரைத்தேன். பரை, பச்யந்தியில் இதனுண்மையறிந்தோர்க்கு "அநந்நியக்கூத்துக் காட்சி" தானே பொருள்படும். அது இஃதாம்:—

(அநந்நியக்கூத்து)-(கரும்பொன்னம்பலக்கூத்து)

"நாதத்திலேயாடி நாநாராயணனாகி*
வேதத்திலேயாடி வாதராயணனாகி†
போதத்திலேயாடி பூதபௌதிகனாகுந்‡
நீதற்றதேவாதி தேவர்பிரானே."

"அநந்நியாச்சிந்தயந்தோமாம் ஹேஜனாப்பர்யுபாஸிதே- தேஷாம் நித்தியாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்." என்று பகவான் தன்னையே அநந்நியமாய் (பிறசிந்தையின்றி)சிந்தையில் வைத்துப்பூஜை செய்வாருடைய யோகக்ஷேமத்தைத் தானே வஹிப்பதாகச்சொல்லியுள்ளார். எம் பெருமான் திருமூலதேவரும்,

"ஈசனறியுமிராப்பகலுந்தன்னைப்
பாசத்துள்வைத்துப் பரிசுசெய்வார்களை
நேசுற்றறிந்து செயலற்றிருந்திடில்
ஈசன் வந்தெம்மிடையீட்டிநின்றானே."

என்று திருமந்திரோபதேசம் செய்திருக்கிறாரல்லவா! ஆகையால் ஈசனை வழிபட்டார்க்கு எவ்விதக்குறைவும் வராது. உலகவழிப்பட்டோர்

---

* நாநாராயணன்— கீதோபதேசம் பெற்ற நரனும் அவ்வுபதேசம் செய்தருளிய பகவானுமாம்.

† வேதவியாஸரின் மறுபெயர். பிரஹ்மசூத்திரம் தொகுத்தவர்.

‡ Cf. "A perfect Man is a Glorious Physicist."

'போதபூரணவெளியில்' ஸகலகலைகளும் ஸ்பஷ்டமாம்.

ருய்யும் பொருட்டு எம்பெருமான் அவர்களை அம்பரத்தேயணைந்து உலகில் ஆண்டிகளாயிருந்து ஆடச்செய்வார். ஆண்டியாவது யாரென்றால்,—

(1) "ஆண்டி யாவது ஆண்டி
ஆணவம் போக்குவன் ஆண்டி
அருள் தருபவன் ஆண்டி
மருளும் போக்குவ னாண்டி."

(2) "ஆண்டி யாவது ஆண்டி
ஆடு மேய்ப்பவன் ஆண்டி
விட்டால் பிடிப்பவ னாண்டி
வீடு மளிப்பவ னாண்டி."

(3) "ஆண்டி யாவது ஆண்டி
மாண்டு மடிந்தா லாண்டி,
மாண்டு விழுந்தால் தோண்டி-
மாயவ னுமவ னாண்டி."

(4) "மாயவ னுமவ னாண்டி
மாக்ஷிமை பெற்றனை வேண்டி
மாயை மயக்கந் தாண்டி
மனதையுஞ் சுட்டேன் காண்'டி."

இன்னுமிதில் சிரத்தையுள்ளோர் மாயாண்டிச்சித்தன் பாடிய மார்கழி மாசத்து ஆண்டிப்ப்பாட்டைப் பூரணமாய்ப்பார்க்க. (ஆனந்தத்தாய்மொழியில் இதைக் காணலாம்- விலை ரூபா. 1.) ஆண்டிப்பிச்சையெடுப்போர் "ஊனமில்லாஉணர்வு" ஒன்றே வண்டி, "உயிர்ப்பிச்சை"க்கிரந்துநிற்பரன்றி "ஊனுணர்வு" வேண்டார்.

அவர் பேரிரைச்சலிட்டுப்பிக்ஷையிரத்தலைக் கீழேவரைகிறோம். "சந்தையிரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே"யென்றபடி, "சந்தையிற்கூட்டமாம்" ஈஷ்ணாத்திரியங்களின் நடுவே கருவிகரணங்கள் செய்யும் சந்தையிரைச்சலுக்கு மேலே அவரது இனியகுரல் கேட்கவேண்டுமென்று "பேரிரைச்சல்" இட்டாராயினும் ஊனர்கள் காதிருந்தும் கேளாச்செவிடராகவேயிருக்கிறார்கள்.

"அம்மாஆ! பிக்ஷையாண்டி-உயிர்போகுது!
அம்மா! ஊனமில்லாஉணர்வு- ஒருநொடிதா [யேன்!
உயிர்பிச்சையம்மா! ஊனுணர்வுவேண்டேன் [தாயே.
ஆண்டிப்பிச்சையம்மா! அம்மணமாக் கொடுக் [கணும், தாயே!!

அவலமாய் ஆண்டிவேடம் போட்டலேவோர் திரிமூர்த்திகளும் பட்டபாடுபடுவர். திரிமூர்த்திகளும் அநசூயாதேவியிடம் போய் அவலமாய் நிர்வாணபிக்ஷை கேட்கக் குழந்தைகளாகிப், பின்னர் அத்தேவியார் வயிற்றில் பிறந்து தத்தாத்திரேயரான கதையெல்லாருக்கும் தெரிந்ததே. தாருகாவனத்து ரிஷிகள் கர்வத்தையும் பகவான் பிக்ஷாடன மூர்த்தியாகவும் ஸ்ரீ விஷ்ணு மோஹினியாகவும் வந்து நாசம் செய்தாரென்பது பிரசித்தம்.

"மோகினி ராகம் பாடத்
திரிபுடி தாளம் போடத்
தவவேட ராட்ட பாட்டம்
தாணியி லொடுங் கிற்றையே!

என்பது ஆகாசவாணியின் அசரீரிவர்க்கு அவர்கள் கர்வபங்கம் செய்து கர்வத்தை யடக்கியபின் அவர்களுக்குத் திருவருள் சாதிப்பான் தில்லைத் தலத்திலாடிய நிருத்தமே "பொன்னம்பலக் கூத்து" என்று புகழ்பெற்று விளங்குவது. மார்கழிமாசம்தோறும் ஆருத்ரா தரிசனத்தன்று இக்கூத்து தில்லைத்தலமாம் சிதம்பரத்திலே ஐதீகமார்க்கமாய் இன்னும் கொண்டாடப்பட்டு வருகிறது.



# THE HOLY MYSTERIES.

# திருமந்திரம்.

ஓம் மதுராமீனாக்ஷியை நம:
தத்தாத்திரேய ரிஷி:
ஸத்யாநந்த:
சாந்த அவதூதாத்மாநம்பஜே.

திருமந்திரம் என்பது திருவே மந்திரமாயமைந்துள தென்று பொருள்படும்.

"அருவேயுருவும் உருவேயருவுமாய் அமைந்துள தொன்றெது-அதுவே திருவாம் உருவாம் அருவாம்."

"திரு" என்பது அழகே யுருவாயமர்ந்துள பரதேவியின் ஸ்வயம் ப்ரகாசத்திலிருந்துண்டான விமர்ச ரூபமாம். தேவியின் சொரூப அழகே அழகு அவ்வழகைப் பார்க்கக் கொடுத்துவைத்தவர் ஆநந்தமே "ஸௌந்தர்யலஹரி." திரிபுடிரஹிதமானது "ஆனந்த லஹரி." திரிபுடிஸஹிதமானது "ஸௌந்தர்யலஹரி."

"மந்திரம்".—"மனம் ஒரு வழிப்பட்டது மந்திரம்." "ஒருவழி" யாவது ஒப்பற்ற சுஷும்னா மார்க்கமாம் பிராணன் சுஷும்னா நாடியிற் புகுந்தால் அது பட்டு நாதவடிவாய் விடுகிறது. நாதவடிவாகியும் தடித்துள்ளதாதலால் "சித்தம்" என்று விளங்குகிறது. சித்தமாயுள்ள மனம் சுழுமுனையில் பிரவேசித்து மேல்வாயின் வழியாக வெளிப்படுங்கால் அது பட்டுப்போகிறது; அதாவது, "விழுந்துபோகிறது." மனம் (சித்தம்) சுஷும்னா நாடியில் பிரவேசித்து "மேலைவாசல வெளியுறக்கண்டபின்" அது விழுந்துபோகிறதாதலால், "மனம் ஒருவழிப்பட்டது" என்பதால் "நாதாந்த வெட்டவெளி" யோகதர்சன முறையால் குறிக்கப்பட்டதென்று கொள்ளல்வேண்டும். அப்படியாகில் "நாதாந்த வெட்டவெளி"யை அந்தமாகவும் "மனவெளி"யை ஆதியாகவும் உடையதோர் சாதன மார்க்கம் "மந்திரம்" எனப்படும் என்பது தன்னாலே விளங்குவதாயிற்று.

"நாதவடிவாகிய மஹாமந்திராதி ரூபியே, நாதாந்த வெட்டவெளியே!' என்றதனால் அறிவுருவாம் தேவி "நாதவடிவாகவும்," அதாவது "தேஜோமன" யாகவும் "நாதாந்த வெட்டவெளி"யாவுகம் விளங்குகிறாள் என்பது பெறப்பட்டது.

"நாதாந்தவெட்ட்வெளி" அருவமானாலும், தீர்க்கதரிசன சித்தி பெற்றவர்களுக்கு அது திரிபுடிஸ்வரூபமாய் விளங்குவதால், அதற்கும் ஒரு உருவுண்டு: இதைத்தான் "அருவே உருவாயமைதல்" என்று சொல்கிறது. யோகதர்சனத்தில் இது தேவியின் விமர்ச ரூபமாய் விளங்கும். "உத்யத்பானு ஸஹஸ்ரகோடிஸத்ரசாம்" என்று அவ்வருவுருவைக் கண்டவர் கூறியிருக்கின்றனர். (ஸ்ரீ ஆதிசங்கராசாரியர் அருளிச்செய்த 'மீனாக்ஷீ பஞ்சரத்நம்' பார்க்க).

இப்படி யமைந்த "அருவுரு" தானே ஸ்வயம் பிரகாச மாத்திரமாய் நிற்குங்கால் திரிபுடியை விழுங்கி, "தெரிவானும் தெரிபொருளும் ஒன்றாகி" நிற்பதால், அத்திரிபுடி யுருவுமிழந்து அருவாய் விளங்குகிறது. இவ்வனுபவத்தையே ஸ்வானுபவச் செல்வர்கள் "நாதாந்த ரூபியே, வேதாந்த மோனமே, நானெனுமகந்தை தீர்த்தென் பதியுண்டபதியான மதிவதனவல்லியே" யென்று ஞானித்துத் தொழுதிருக்கிறார்கள்.

"அருவேயுருவும் உருவேயருவுமாய் அமைந்துள தொன்றெது" என்றுரைசெய்தது

யோகதரிசநத்தில் கண்ட தேவியையே குறித்துச் சொன்னதென்று இப்பொழுது நன்ருக விளங்கும். "உரையற்றதொன்றை உரைசெய்யும் ஊமர்காள்" என்று எம்பெருமான் திருமூல தேவரே விளித்துரைத்த வாயில்லாநாயனர்கள் வார்த்தையாடும் விமரிசையிதுவாமென்று சொல்லாலே சொல்லிக் கல்லாது, எம்பெருமான் தன்னை யடுத்து வழிபட்டாரைத் தடுத்தாளும் "காட்டுக்குறி" யால் காட்டினம் சுட்டி.

"அருவேயுருவும் உருவேயருவுமாய் அமைந்துள தொன்றெது - அதுவே திருவாம் உருவாம் அருவாம்."

சகுணத்தில் "தேவி" யென்று தொழும் அகண்ட பரிபூரண சச்சிதானந்தமான அறிவே, "திருவாம்"—(சிவம் சக்தியென்று பேதித்துக் கூறவும் அறியவும் முடியாத அத்வைதஞானவெழிலாம்) அகண்டானந்தலக்ஷ்மியாக விளங்குவதாகும். அதுவே பின்னும் "உருவாம்"—("இச்சா சக்தி உமாகுமாரி" யென்ற சிவ சூத்திரப்படி) உமையவளாம் உருவாம். அதுவே அந்த உமையவளுக்குள் விளங்கும் சிவ ஸ்வரூப சாக்ஷாத்கார அருவாம்.

"அறிவார் பராசக்தியானந்த மென்பார்
அறிவார் அறிவுருவாமவளென்பார்
அறிவார் கருமமவளிச்சை யென்பார்
அறிவார் பானுமவளிடந்தானே"—திருமந்திரம்

அத்வைத ஞான வெழிலாய் விளங்கும் அகண்டானந்தலக்ஷ்மியாம் திருவே, சுழிமுனைத்துவாரம் திறந்தது முதலுண்டாகும் சுழிமுனைப் பிரவேசமான "நாதவடிவு" முதல், சுழிமுனைந்தங்கடந்து விளங்கும் "நாதாந்தவெட்டவெளி" யாகிய "வேதாந்தமோனம்" வரையிலுள்ள சாதனமார்க்கத்தை சற்சிஷர்களுக்கு விளக்கும் பொருட்டு மந்திரவடிவெடுத்து விளங்கியதாகும் இத் திருமந்திரம். தேவி வாக் ரூபியாகவும் சிவன் அவ்வாக்கின் கண் மறைந்துறையும் பொருளாகவும் இருப்பதாக தேவி பாகவதத்தில் உபதேசித்திருப்பதால், மூலமாய் ஏற்பட்ட மந்திரத்தைப் பின்னப் படுத்திப் பேதபுத்தியால் உரைசெய்துளறுவோர் மந்திர வீரியத்தைத் தந்திரமறிந்து தானும் கிரகிக்கத் தெரியாது பிறருக்கு முதவாது கெடுப்பதால் அவர்கள் ஜீவனைத் தூக்கிலிட்டுக்கொல்வார் பாதகத்திலும் மேலான மஹா பாதகத்துக்காளாகிருர்கள். "மந்திரம்" 'கூறியவாள்' ஒக்கும். அம்மந்திரவாளை மந்திர திருஷ்டாக்கள் கையாள வேண்டுமேயன்றி அறிவிலாக் குழந்தைகள் கையாடின் ஆபத்து விளையும்.

திருமூல நாயனர் ஓதிய திருமந்திரம் மூவாயிரம். இம் மூவாயிர மந்திரத்தையும் ஒவ்வோர் வருஷம் ஸமாதியிலிருந்து அனுபவித்த சுகத்தை ஒரு மந்திரமாக ஓதி, இப்படி ஒரு மந்திரத்திற்கு ஒரு வருஷமாக மூவாயிரம் மந்திரத்துக்கும் மூவாயிரம் வருஷம் ஸமாதியிலிருந்து இவ்வருமையான மந்திரத்தை உண்டுபண்ணினர் என்பது ஐதிகம்.

மந்திர ஸித்தி, அருள்ஸித்தி, தரிசன ஸித்தியெல்லாம் பெற்றபின் "ஒப்பிலெழுகோடி யுகமிருந்தேனே" யென்று "திருமூலர்வரலாறு" கூறும் திருமந்திர மொன்றிற் செப்பியிருக்கிருர். அவ்வளவு காலமிருந்ததற்குக் காரணம் என்ன வெனிலோ, கேண்மின்:—

"இருந்தவக்காரணங்கேளிந்திரனே
பொருந்திய செல்வப்புவனதிபதியை
யருந்தவச் செல்வியைச் சேவித்தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியினலே."



ஏழுகோடி யுகமிருந்து "சிவசக்தியைக்கிய ஸ்வரூபிணி"யைச் சேவித்து வந்தவர், பின்னுமுடல் தரித்திங்குவந்ததற்குக் காரணம் என்ன? அவருக்கு என்ன,—ஆசையா? பாசமா? கர்மமா? மாயையா? ஒன்றுமில்லை. பின்னை யேன் இங்கு வரவேண்டும்? அதற்குக் காரணம் அவரே சொல்கிருர் கேண்மின்:—

"மாலாங்கனே யிங்கு யான்வந்த காரணம்
நீலாங்கமேனி நேரிழையாளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே."

"நீலாங்கமேனி நேரிழையாள்" என்றது யாரை யெனின், சொல்கிருர் கேண்மின்:—

"நேரிழையாவாள் நிரதிசயானந்தப்
பேருடையாளென் பிறப்பறுத்தாண்டவள்
சீருடையாள் சிவனவடு தண்துறை
சீருடையாள் பதஞ் சேர்ந்திருந்தேனே."

"சேர்ந்திருந்த" லாவது யோகசமாதியிலிருத்தலாம். இவர்யோகசமாதிசெய்த வைபவத்தைக் கேளுங்கள்:—

"சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன்பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவனாவடுதண்துறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின்நீழலிற்
சேர்ந்திருந்தேன் சிவன்நாமங்களோதியே."

க்ஷேத்திரக்ஷேத்திராஜ்ஞனுய்(ஸதேஹியாய்) அவர் தபஸிருந்த வைபவத்தை அண்டத்தைக் குறித்துச் சொன்னதுபோல், பின்னுல் பிண்டத்தைக் குறித்துச் சொல்கிருர்.

திருவாவடுதுறையிலே ஆற்றங்கரையிலே போதிமரத்தடியிலே சிவன் நாமங்களோதி சிவயோக சமாதியிலிருந்தவர் தானே பிண்டத்திலிருந்த விடத்தை. (தலத்தை=தத்துவஸ்தானத்தை)த்தெரிவிக்கிருர். அதைக்கேண்மின்:—

"இருந்தேனிக்காயத்தே யெண்ணிலிகோடி
யிருந்தேனி ராப்பகலற்ற விடத்தே
யிருந்தேனிமையவரேற்றும் பதத்தே
யிருந்தேனென் னந்தியிணையடிக்கீழே."

இக்காயத்தே எண்ணிலிகோடி காலம் இருந்தேன் என்றது உள்ளுடம்பினைக்குறித்து.

"சென்றுண்டு வந்துதிரிதருமுள்ளுடம்
பென்றுங்கெடாததிது."
"அல்லற்பிறப்பையகற்றுவிக்கு மாய்ந்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு."

என்ற ஔவைகுறள்களால் உள்ளுடம்பு என்று மழியாது ஊழூழி காலமாயிருக்கத் தக்கதென்றும், அவ்வுடம்பின் பழமையான தொடர்பை ஆய்ந்தாய (தீரவிசாரித்துணர) (அது) துன்பத்துக்குக்காரணமாயிருக்கும் "(அல்லற்) பிறப்பை அகற்றுவிக்கும்," அதாவது பிறவிநோய் நீக்கி மோக்ஷ சுகமளிக்கும் என்றும் தெரியவரும். இவ்வளவு காலமிருந்து இவ்வளவு தவம் செய்து முத்தி யெய்தாது சித்தி விளையாட்டில் காலத்தைக் கழித்து ட்டீராதலால் பின்னும் பிறவியெடுக்கநேரிடது; முத்தி சித்தியளிக்கும்: சித்தி முத்தியளிக்காது: ஆதலால் நின்தவமெலாம் மாயிற்றென்பீரேல், அப்படியல்ல! "இறைவன் தன்னை நன்ருகத் தமிழ்ச் செய்யுமாறே" "என்னை நன்ருக (சித்தபுருஷனுக)ப் படைத்தனன்" என்கிருர்.

"இறைவன்தன்னை நன்ருகத் தமிழ்ச் செய்யுமாறு" சித்தமுத்த புருஷனுய் அவதரித்த திருமூலர் அஞ்ஞானந்தகார வனத்தில் புகாது "ஞானத்தலைவிதன் நந்திநகர் புக்கு"— அதால் மனேன்மனியின் அதிஷ்டான ஸ்தானமாகிய மஹாபிந்துவுக்குக் கீழேயுள்ள "உன்மநாபீடம் முதல் பிந்து பீடம் வரையிலு

ள்ள" நவசக்ரரூப ஸ்ரீசக்கர க்ஷேத்திரத்தில் ஒவ்வொரு பீடத்திலும் ஒருகோடி யுகமாக, தேஹவாஸனை யென்பது அறவற்றுள்ள "ஊனமில் ஒன்பதுகோடி யுகந்தனுள்" "ஞானப்பால்" கொண்டு அபிஷேகஞ் செய்து; "என்னுதனையர்ச்சித்து" ஞானஸ்வரூபமாம் "நற்போதியின் கீழ்" அத்தியாத்மயோகஞ் செய்து சமாதியிலிருந்தேன் என்பதைத் தெரிவிக்க "நானுமிருந்தேன்" என்று கூறுகிறார்.

இப்படி அத்தியாத்மயோகஞ் செய்து திடஞானம் பெற்றபின், ஞானாகாசத்திலிருந்தபடியே அதைவிட்டுப் பிரியாமல் மனாகாசத்திற் புகுந்து, மனாகாசத்திலிருந்து, யஜ்ஞமேயுருக் கொண்டதுபோல் வராஹமூர்த்தி யவதரித்தவாறு, வேதத்தையொத்தவுடலையும் பெற்றார். எப்படிப்பெற்றாரெனில், "உற்பத்தி, க்ஷய, லயமுறை"யில் உற்பத்தி ரூபமாய் விளங்கிய "உள் நின்ற அத்தன்" "எனக்கிங்கு அருளாலளித்த"தாகச் சொல்லுகிறார்.

இப்படி திரிபுரத்துக்கும் சமமான ஸ்தூல சூக்ஷ்ம காரண தேஹங்களைப்பெற்றபின் இம்மூன்று உபாதிகளோடிருந்தும், அவ்வுபாதிரஹிதனாகவே யிருந்தனுபவித்ததோர் அழிவிலா இன்பத்தை, அற்ப சுகத்தை நாடிச் சிற்றின்பநுகர்ந்து சீரழியும் வையகத்தார் (உலக வாசனை பற்றியுள்ளோர்) பெற்றுய்யுமாறு "வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்குவன்" என்கிறார்; பராகாசத்தையே ஆச்ரயித்து நிற்கும் பரம இரகஸியமாயுள்ள உண்மைப் பொருளை உலகோர் உய்யுமாறு பரங்கருணை மிகுதியால், திருவாய்மலர்ந்தருள விசைந்தனர். அவரது திருவாய்ப் பிறப்பாய் வருவனவாம் "ஊன்பற்றி நின்ற"-அதாவது, பரை, பச்யந்தி, மத்யமையாயிருந்து மறைந்து போகாமல் வைகரிவாக்கால் வெளிவந்த "உணர்வுறுமந்திரம்"—அறிவோடுங் கூடிய, அல்லது, அறிவோர்தயமாகும்படி மனதில் உறுத்தும் சக்திவாய்ந்த மந்திரத்தை; "தான் பற்றப் பற்ற"—அதாவது "ஆத்மானு சந்தானாயிருந்து" பற்றப் பற்ற (ஜபமாகவும் அஜபமாகவும் மனதிற் பதியுமாறு நாதானுசந்தானத்தால் இடையறாது பற்றி நிற்க) அது "தானே"யாகி—"தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு" ஆதலால், "அது அதுவேயாகி"—அப்படியென்றால், அந்த மந்திரம்தானே, நாதானுசந்தானம் ஆத்மானுசந்தானம் முதலான சாதனமுறைகளால் ஆத்மாவாகிய (அறிவுமயமாகி) "தலைப்படும்"—இரண்டற்ற "அத்வைதஞானமாம்" "அறிவழிந்த அறிவாகும்"—என்றால், தற்போதமழிந்து ப்ரபோத சந்திரோதயமாகி, ஸ்வயம் ப்ரகாச ஞான சூரியனாகத் தலையெடுத்துப் பிரகாசிக்குமென்பார்.

"நான்பெற்றவின்பம் பெறுகவிவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்கு[வன்
ஊன்பற்றி நின்ற உணர்வுறுமந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே."

என்று திருவாய் மலர்ந்தருளி யுள்ளார். இதனால் மந்திர வீரியம் திருமந்திரத்திற் பூரணமா யமைந்துள்ளதால் அது "தானே தலைப்படும்" சக்திவாய்ந்துள தென்பதைத் தெரிவித்து, அவ்வளவு வீரியம் வாய்ந்த மந்திரத்தை ஆத்மானுசந்தாயிருந்து ஜபமாகவும் அஜபமாகவும் இடையறாது பற்றிப் பற்றி யனுஷ்டிக்கப்போந்த பூரணபக்குவம் வாய்ந்திலா மாந்தர், சோபான முறையாகின்று,

(1) நாத்தழும் பெடுக்க உருவேற்றுதல்; பின்னர்,

(2) மனனத்தால் மறப்பிலா மனத்திற் பதித்தல்;



பிறகு, (3) மந்திரத்தின் அதிஷ்டான தேவதைகளை யர்ச்சித்துத் தரிசித்தல்; அதன் பின்,

(4) அவ்வதிஷ்டான தேவதைகள் துவாரா "குருதரிசனம்" என்னும் "நந்தி தன்னைச் சிறப்பொடுவானவர் சென்று கைகூப்பி" நிற்பதைக் காண்டல்;

பிறகு, (5) அந்த குருவிலும் வேறு அல்லாத "பிறப்பிலி நாதனை" குருவோடு அத்வைதமாக பாவித்து குருவருளால் அவன் திருவடி சேர்தல்;

ஆகிய "பஞ்சாக்ஷரப்படி யேறி" "ஓதலும் ஆமே" (மந்திரசித்தியைக் கொடுக்குமே) என்று கூறுவான் பின்வரும் மந்திரத்தை ஓதி யுள்ளார்.

"பிறப்பிலிநாதனைப்பேர்நந்திதன்னைச்
சிறப்பொடுவானவர் சென்று கைகூப்பி
மறப்பிலா நெஞ்சினால் மந்திரமாலை
யுறைப்பொடுங் கூடி நின்றோதலுமாமே."

மந்திர சித்தி பெற்றோர், மாயை மயக்கில் வீழ்ந்து மோசம் போகாதபடி, மந்திர திருஷ்டாவுக் கடையாளமென்ன வெனில், அடிமுடியில்லா அனந்தனைக் கண்டு அத்வைதமாகத் தரிசித்தனுபவித்தலாம் என்றோதுவார், பிரமனும் விஷ்ணுவும் அடிமுடி காண்போமென்று வராகமாகவும் ஹம்ஸமாகவும் தேடித்தேடியலுத்துக் கடைசியில் "பார்மிசைக் கூடி,"—

"அடிகண்டிலேனென்று அச்சுதன் சொல்ல
முடிகண்டனனென்றயன்பொய்மொழிந்தா[னே"

இப்படி அனந்தமாய் அத்வைதமாயுள்ள பரசிவத்தைவிளக்குவான் திருமந்திரமோதிய எம்பெருமான் திருமூலதேவர் "அவையடக்கம்" கூறும் அழகைக் கண்ணுள்ளோர் கண்டுபார்த்துக் களிக்க.

"அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்" ஆதலால், "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்" இலக்ஷிய மறியாது இலக்கணத்தைமட்டு மோதி "டுக்ருங்கரணே" பென்று நெட்டுருப் போட்டுக்கொண்டிருந்த மூடமதியைப்போல், வார்த்தையை மட்டும் உச்சரிக்கக் கற்றுக்கொண்டுவரன் முறையறியாது வழக்குரைத்து விதண்டாவாதம் செய்து வல்லமை காட்டி "யானும் அவ்வழகைக் கண்டேன்" என்று உங்களைப் படைத்த பிரமனைப்போல் "பொய் மொழி" பகராதீர்.

"மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெ[ங்ஙனே!"

முகத்திற் கண்கொண்டு பார்க்கும் மூடர்க்கு அத்வைத ஞானோபதேசம் செய்வதென்றால் அது எப்படியாகும்? முடியாததே! ஆகையால் அவரை நீக்கி அகத்திற் கண்கொண்டு பார்ப்பார்க்கே இம்மொழி பகர்ந்ததாகக் கொள்ளவேண்டியது.

'ஆரறிவாரெங்களண்ணல் பெருமையை
யாரறிவாரிந்தவகலமு நீளமும்
பேரறியாத பெருஞ்சுடரொன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே."

இப்படி நூற்பொருள் கூறி "அவை யடக்கம்" சொல்கிறார் கேண்மின்:—

"பாடவல்லார் நெறிபாடவறிகிலேன்
ஆடவல்லார் நெறியாட வறிகிலேன்
நாடவல்லார் நெறிஞான மறிகிலேன்
தேடவல்லார் நெறிதேட கில்லேனே."

இப்படி நால்வகையிலும் "அறிகிலேன்" என்றதால் இவன் என்னத்தையறிந்து சொல்லப்போகிருனென்று ஈனமா யெண்ணிவிடாதீர்கள். எம்பெருமான் இதையெல்லாம் அறியாமலே அத்வைத பரசிவத்தை "உணரலுமாமே" யென்று ஸ்தாபிப்பான் வந்துளார். அவர் வாய்மொழியைக் கேண்மின்:—

"மன்னிய வாய்மொழியாலு மதித்தவர்
இன்னிசையுள்ளே யெழுநின்ற வீசனைப்
பின்னையுலகம்படைத்த பிரமனும்
உன்னுமவனை யுணரலுமாமே."

தந்தனப்பாட்டினாலும் ரஞ்சனக் கூத்தினாலும் இது சாத்தியமாமென்று நினையாதீர்கள். வீண்பகட்டாலும் வெளிவார்த்தைகளாலும் நாப்பழக்க மாத்திரத்தால் "கற்றதோர் கல்வியாலும்" இது ஆகுமென்று நம்பி மோசம் போகவேண்டாம். மனத்தை ஒப்பற்ற சுழிமுனையி லடக்கி "அலையுமனத்தை யடக்கும்" யோக சாதனையால் அது பட்டு நிறைபாழ் வெளியும் கடந்துள்ள தூய்வெளிக் கண்ணே துரீயமனத்தால் "உணர்வுறு மந்திரந், தான் பற்றப்பற்றத் தலைப்படுந்தானே" யென்று சொன்னதை மறந்து விடாதீர்கள்.

வேதபாடத்தினாலும், அத்தியயனத்தாலும், ஸ்தோத்திரபாடங்களாலும் கற்றுக்குட்டிகள் செய்யும் கல்மஷம் நீங்காப் பத்திமையால் இப்பயன் சித்திக்காது என்று எம்பெருமான் கூறுவதை உள்ளத்திருத்தி உண்மை வழிப்பட்டுய்யுங்கள் சொன்னேன்! சொன்னேன்!!

"தத்துவஞான முரைத்துத் தாழ்வரை
முத்திக்கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறுயிருந்து துதிசெயும்
பத்திமையாலிப் பயனறியாரே."

"மூலனுரைசெய்த மூவாயிரந் தமிழ்
ஞாலமறியவே நந்தியருளது
காலையறிந்து கருத்தறிந்தோதிடின்
ஞாலத்தலைவனை நண்ணுவரன்றே."

## Free from Bonds.
## (The Autobiography of aTaluq Gumastah)

## *அவிழ்ந்துவிட்ட கழுதை.
### (ஒரு தாலூகா குமஸ்தா சரித்திரம்)

இன்னொரு நாளிரவு எனக்குப் பசியாமையால், நான் சாப்பிடாமல் படுத்துகொண்டுவிட்டேன். என்தாயார் எனக்கு ஏதோமருந்து செய்துகொடுத்துவிட்டு, அவளும் படுத்துவிட்டாள். என் மனைவி "நீங்கள் என் சாப்பிடவில்லை? என்ன உடம்புக்கு?" என்றாள். "எல்லாம் முன்காலையில் சரியாய்ப்போய்விடும்." என்றேன். "நீங்கள் எல்லாம் போல் சரியாய்ச் சாப்பிடவில்லை. உடம்பும் வரவா இளைத்திருக்கிறது. உடம்பில் ஏதோ கெடுதல் இருக்கிறது" என்றாள்.

"ஆம், அதற் கென்ன செய்கிறது?" என்றேன். "வைத்தியம் செய்து கொள்ளவேண்டும்., நல்ல மருந்துகள் வாங்கி சாப்பிடவேண்டும்." என்றாள்.

"பணமேது?" என்றேன்.

"எங்களப்பாவுக்கெழுதி வேண்டியபணம் அனுப்பச்சொல்லுகிறேன், மருந்துகளே வேண்டுமானாலும் வாங்கி அனுப்பச்சொல்லுகிறேன்" என்றாள்.

"பிறர் பணத்தைச் செலவிட்டு வைத்தியம் செய்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை. பொதுவாய் மருந்துகளில் எனக்கு நம்பிக்கையுமில்லை" என்றேன்.

"பிறர் பணத்தை வாங்கிக்கொள்ள இஷ்டமில்லை தானகசம்பாதிக்கவும் இஷ்டமில்லை, அல்லது சாமர்த்தியமில்லை.

* தன்னையறிந்து தன் வழியில் பிரவேசிக்கும் மனோதர்ம சக்தி தடையறியாது.



'பிறர்கொடுக்கும் மருந்தை சாப்பிட இஷ்டமில்லை; மருந்தில்நம்பிக்கையுமில்லை; தானக மருந்து செய்து கொள்ளவோ, வாங்கிக்கொள்ளவோ சக்தியுமில்லை, தனக்காவும் தெரிகிறதில்லை, பிறர் சொன்னால் கேட்கிறதுமில்லை. இப்படிப்பட்ட புருஷனைக் கட்டிக்கொண்டு மாரடிக்கவேண்டியிருக்கிறது எனக்கு!" என்று பெருமூச்செறிந்தாள்.

நான் ஒன்றும் பதில் பேசவில்லை.

"நீங்கள் மட்டும் என்ன மற்றெல்லாரையும் காட்டிலும் தெய்வப்பிறவியாக ஆகாசத்திலிருந்து குதித்துவிட்டது? இப்பொழுதுஎங்களப்பா இல்லையோ? உடம்பொன்று மில்லாவிட்டால்கூட மாதம் ஏதாவது ஒரு சீசா, அல்லது ஒருடப்பி புது மருந்து வாங்காமல் இருக்க மாட்டார். தினம் "பேபர்களைப்" பார்த்து இன்ன இன்ன புதுமருந்துகள் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன வென்று "டைரி" புஸ்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வார். அவ்வளவு பெரிய சம்சாரத்தில் அதுவும் வேண்டித்தானிருக்கிறது" என்றாள்.

"எனக்கின்னும் அவ்வளவு பெரிய சம்சாரம் வந்துவிடவில்லை. அதுவரையிலும் நான் எனக்குத் தெரிந்தபடியிருக்கிறேன்." என்றேன்.

"உங்களுக்குத் தெரிந்தது தான் வெட்டவெளிச்சமாய் விளங்குகிறதே. என்னையும் இந்தப் பச்சைக் குழந்தையையும் திண்டாடவிட்டு நீங்கள் சௌக்கியமாய்க் கண்மூடிவிடுவீர்கள். எங்களூரில் ஒரு தாலுக்கா குமாஸ்தா சுப்பையர் என்று ஒருவர் இப்படித் தான் நிஷ்காரணமாய் வரவர இளைத்துப் போய் திடீரென்று செத்தார். அவர் பெண்சாதி, சாணிதட்டியும் அவலிடித்தும் அப்பளம் விற்றும் ஐந்து குழந்தைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறாள்.

"நீயும் அந்தமாதிரிவேலைகளை சீக்கிரத்தில் கற்றுக்கொள். இனிமேல் குழந்தைகளைப் பெருமல் சமர்த்தாயிரு."

"சத்திரத்துச் சோற்றுக்குத்தாத்தனையங்கார் உத்தரவென்ன? பயப்படாதே காப்பாற்றுகிறேன்! என்று சொல்ல வாயில்லை. எனக்காக இல்லாவிட்டாலும் இந்தப் பச்சைக்குழந்தைக்காகவாவது இரங்கி மருந்து சாப்பிடக்கூடாதா?"

"என்ன மருந்துசாப்பிட்டாலும் நீஉன்குணத்தை மாற்றுதபக்ஷத்தில் நான் இன்னும் ஒருவருஷத்திலோ இரண்டு வருஷத்திலோ க்ஷயம் பிடித்தோ பைத்தியம் பிடித்தோ சாகவேண்டியதுதான். நீ என்னைக் கரையான் அரிப்பது போல் பிடுங்கித்தின்பதினால் தான் இந்தஸ்திதிக்கு என்னுடம்பு வந்துவிட்டது!"

"எல்லாம் அங்கங்கே போய்ப் பார்த்தால்தெரியும். இதற்குமேல்தான் இருக்கும். நான் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் எனக்கு தெரியாமல் சாப்பாட்டில் விஷங்கொடுத்தாவது தூங்கும் பொழுது தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டாவது என்னைக் கொன்றுவிடுங்கள்! பிறகு நீங்கள் இறந்தாலும் சரி, வேறுநல்ல பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தாலும் சரி எனக்குக் கவலையில்லை. இப்பொழுது இருக்கிற பைத்தியம் போதாதா உங்களுக்கு? இதற்கு மேலும் வேறே இருக்கிறதா? உள்ளத்தை நல்லதைச் சொன்னால் மூக்கிற்கு மேல் ரோஷம் வருகிறது. ஒருவர் ஒரு சொல் சொல்லாதபடி வைத்துக் கொள்ளுகிறதுதானே அப்படி ரோஷமுள்ளவர்கள்!"

"எனக்குத்தூக்கம் வருகிறது, இப்பொழுது என்ன செய்யவேண்டுமென்கிறாய்!" என்று முடிவாய்க்கேட்டேன்.

"நீங்கள் மருந்து சாப்பிட்டு உடம்பைக்கவனித்துக் கொண்டு நிறையசம்பாதித்து விட்டு எனக்குப் பிறகு சாகவேண்டும்."

"கடைசியில் சொன்னது என்கைவசப்பட்ட விஷயமல்ல. ஒருக்கால் உன்கைவசப்படலாம். எனக்குயாதொரு மருந்திலும் நம்பிக்கையில்லை-எல்லாமருந்தும் காசு பறிக்கிறவழி. பணத்தைக் கொடுத்து வாங்கின பிறகு நம்மைக் கண்டவர் யார்? மருந்துக் காரனைக்கண்டவர்யார்? என் தேகசௌக்கியம் உன்னைப்போல் 12 பெண்டாட்டிகளைக் காட்டிலும் மேலாகக் கவனிக்கத்தக்கது-நீ ஒரு மாஸத்துக்கு உன் வாயை அடைத்துக்கொண்டிரு, என் உடம்பு எப்படி யிருக்கிறது பார். இல்லாவிட்டாலும் பாதகமில்லை. குட்டுப்பட்ட பிறகு இனித் தேறிவிடுவேன். எரியின் பேரில் கோபித்துக்கொண்டு காலலம்பாமல் போவது போல் உன்னைப் போன்ற அற்ப ஜந்துக்களுடைய

வாய்க்குப் பயந்து அதற்காக ஏங்கி உடம்பைக் கெடுத்துக் கொள்ளுதல் முழுமுட்டாள்தனமென்று நன்றாயறிந்து கொண்டேன். இனி ஜாக்கிரதையாயிருப்பேன்."

"நானும் அதைத் தான் வேண்டுகிறேன். இப்படி என்னை ஒஹோ லக்ஷ்மணா," என்று விட்டுப்போகாதேயுங்கள். புருஷன் இருக்கிறவரையில் தகப்பனாரும் கவனிப்பார். அப்புறம் பத்துக் குழந்தைகளுக்கு நடுவில் அவர் காலின் கீழ் நானும் நின்றால் அவர் என்னசெய்வார்? அவரைத்தான் என்ன கல்லால் கட்டி சாந்தால் பூசியிருக்கிறது!"—

மேல் என்ன பேசினாளோ எனக்குத் தெரியாது, நான் தூங்கி விட்டேன். அன்றிரவு நான் இறந்துவிட்டது போலும் என் மனைவி என் பிரேதத்தைக் கட்டிக்கொண்டு அழுவதுபோலும் கனாக்கண்டேன்.

எனக்குப் பத்து ரூபாய் சம்பளமாகி இரண்டு வருஷம் கழித்து எனக்கு மேற்பட்ட வயது சென்ற 15 ரூபா 'ஷராப்' இறந்துபோனார், நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது மட்டும் கணக்குப் பார்க்கத் தெரியாதவனாயிருந்தேனேயொழிய உத்தியோகத்திற்கு வந்த பிறகு (அதிலும் ஷராப் உத்தியோகத்திற்கு வந்த பிறகு) கணக்கு வழக்கு கூட்டல் கழித்தல் எல்லாம் ஜலப்பிரளயமாகி விட்டது. பணத்தைக் கண்டாலும் கேட்டாலும் நடுங்கிக்கொண்டிருந்த எனக்கு இப்பொழுது பணத்தைக்கண்டால் ஒட்டுச் சல்லியைக் காண்பது போலிருந்தது. என்கணக்குப் புஸ்தகங்கள் வெகு சுத்தமாயிருக்கின்றனவென்று சஜானா டிப்டி கலெக்டர் அவர்களே பரிசோதனை காலங்களில் மெச்சியிருந்தார், ஆதலால் பெரிய ஷராப் வேலை எனக்கே கிடைக்கவேண்டுமென்று தாசீல்தார் சிபார்சு செய்து எழுதினார். அப்படியே 10 ரூபா யிலிருந்து 15 ரூபா உத்தியோகம் கிடைத்தது. இவ்வளவு சீக்கிரம் வந்த இந்த அதிர்ஷ்டத்தை என்னென்று சொல்லமுடியும், யாரால் தாங்கமுடியும்? என்மனைவி கூட அதற்காக தன் தோழிகளுக்கு சந்தனம் தாம்பூலம், மஞ்சள் குங்குமம் எல்லாம் வழங்கினாள், என் சிநேகிதர்களான உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் 'நிலா சாப்பாடு' போடும்படி நேர்ந்த பொழுது என் மனைவி முகங்கோணாமல் முதல் தரமாய் சமைத்திருந்தாள். எனக்கும் இளைத்திருந்த உடம்பு கொஞ்சம் பருக்க ஆரம்பித்தது. "இளந்தொந்தி" கூட விழ ஆரம்பிக்கிறதென்று சிலர் சொன்னார்கள்.

எனக்குப் பதினைந்து ரூபா சம்பளமாகி இரண்டு வருஷத்துக்கெல்லாம் என் தம்பி மெட்றிகுலேஷன் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறினான். அவனுக்கு அப்பொழுது வயது 15 நிறைந்திருந்தது சுமார் 50 அல்லது 60 பெண் ஜாதகங்கள் பரீக்ஷை சமாசாரம் தெரிந்த ஒரு வாரத்துக்குள் என் விலாசத்துக்கு வந்தன. விவாகமாகாத பெண்களையுடைய தகப்பன்மார்கள் இதற்கு முன் என்னோடு பேசாதிருந்தும் இப்பொழுது என்னைக் கண்டால் "ஐயரவாள் வரவேண்டும்"— என்றார்கள். நான் வெற்றிலையே போடாதவனென்று தெரிந்திருந்தும் சிலர் "கொஞ்சம் தாம்பூலம் போட்டுக்கொள்ளலாமே" என்று வெற்றிலைத் தாம்பாளத்தை நீட்டிக் கூப்பிட்டார்கள். நல்ல காலம் வந்தால் எல்லாம் இப்படித்தான் சேர்ந்து வருமோ என்று எனக்குள் நானே புன்சிரிப்புக் கொண்டேன்.

சித்திரைமீ ஒரு நாளிரவு சாப்பிட்டான பிறகு நான் குடியிருந்த வீட்டு முற்றத்தில் நிலவில் ஒரு கோரைப் பாயில் சாய்ந்து கொண்டு பாரதத்தில் பாண்டவர்கள் விவாகத்தைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தேன். என் தாயார் தாழ்வாரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்தாள். "அந்த நாட்களில் ஏக காலத்தில் ஒருஸ்திரீ ஐந்து புருஷர்களைக் கலியாணம் பண்ணிக் கொண்டாள். இந்தக் காலத்தில் ஒரு புருஷனிறந்த பிறகு மறு விவாகம் செய்தால் வியபிசார தோஷம் வந்து விடுகிறதென்று சாஸ்திரம் உண்டாக்கிவிட்டார்கள்; என்ன அநியாயம்" என்றேன். என் தாயார் சிரித்தாள். "என்ன சிரிக்கிறாய்?" என்றேன்.

"சாஸ்திரத்தை யார் உண்டாக்கினார்களோ? என்று சிரித்தேன்" என்றாள்.

"எல்லாம் சுவயநயம் பாராட்டும் புருஷர்கள் தான்" என்றேன். "சாஸ்திரத்தை ஒருவர் உண்டாக்க முடியுமா? ஜலத்தைப் பள்ளத்தில் போய் விழும்படி யார் சட்டம் ஏற்படுத்தினார்கள்? ஜலமுண்டான பொழுதே அந்த சட்டமுண்டானது போல் சரீரமுண்டான பொழுதே சாஸ்திரமுண்டாயிற்று—இந்த எண்சாணுடம்புக்குள்ளில்லாதது வேறெங்குமில்லை. இதை ஆள்வதற்கு சாஸ்திரம் ஏற்படுத்திய அதிகாரி இதற்குள்ளேயே இருக்கிறான்." என்றாள்.



"அப்படியானால் இப்பொழுது என் கைம்பெண்களுக்கு விவாகம் செய்யக் கூடாது?" என்றேன்.

"செய்கிறவர்களை யார் தடுக்க முடியும்?" என்றாள்.
"ஏன் இப்பொழுது செய்ய யோசிக்கிறார்கள்?" என்றேன்.

"ஸத்தியத்தைக் காப்பாற்றிக் கொண்டு செய்யக் கூடிய யோக்கியதையும் தைரியமுமில்லாமையால்" என்றாள்.

"ஸத்தியமாவது என்ன?

"லோகப்பிரவிருத்தி தர்மத்தைக் காப்பாற்றுவதற்காவது, ஆத்ம ஸம்ரக்ஷணத்துக்கு வேறு மார்க்கமில்லாததினாலாவது முதல் பாணிக்கிரஹணம் செய்த பர்த்தாவின் ஞாபகத்துக்கும் அவனுக்குச் செய்த சத்தியத்திற்கும் ஹானியன்றியில் புனர் விவாகம் செய்து கொள்வதற்கும் செய்து வைப்பதற்கும் வேண்டிய சூக்ஷ்ம புத்தி பெண்களுக்கும் பெற்றோர்களுக்கும் இக்காலத்தில் இல்லை. அல்லது போகானுபவங்களில் மனப் பற்று விடாமையால் விவாகம் செய்ய வேண்டியிருந்தால், அந்தமாதிரியாக ஒப்புக்கொண்டு அதற்குக் கொடுக்கவேண்டிய வரியைச் செலுத்தி விட்டு விவாகம் செய்து கொள்வதற்கும், அதிக சூக்ஷ்ம புத்தி யில்லாவிட்டாலும் குண்டு தைரியம் வேண்டும்." என்றாள்.

"அப்படியானால் ஒரு புருஷனுக்கு மேற்பட்ட சம்மந்தமிருந்தும், ஒரு ஸ்திரீ பதிவிரதையாயிருக்க முடியும் என்கிறாயா?" என்றேன்

"பர புருஷனைப்பாராமலும் நினையாமலும் வியபிசாரியாயிருக்க முடியாதா?" என்று சிரித்தாள்.

"'நினையாமலும்' என்கிறாயே? அதெப்படி?

"இன்னும் தெரியவில்லையா? பர புருஷனையும் நினையாமல் தன்புருஷனையும் நினையாமல் எப்பொழுதும் தன்னைத்தானே நினைத்துக் கொண்டிருந்தாலோ? அதாவது தன்னழகையும், தன் செல்வத்தையும், தன்படிப்பையும், சமையல் முதலிய வேலைகளில் தன் சாமர்த்தியத்தையும், தன் குழந்தைகளையும்—"

"தன் குழந்தைகளைக் கூட நினைக்கக் கூடாதா?" என்றேன்.

"இவைகளை 'நினைக்கக் கூடாதென்று சொல்லவில்லை. நினைக்கவேண்டியதே. ஆனால் தன் புருஷனுக்காகவும் அவனைத் திருப்தி செய்வதற்காகவும், அவனுடைய சௌக்கியத்தை உத்தேசித்தும், அவன் இவ்விஷயங்களைக் கவனிக்கிறபடியால், தானும் கவனித்தும், அவன் இவைகளை வெறுத்தால் தானும் வெறுத்தும் நடந்து வருபவளே பதிவிரதை. பிரஹ்லாதன் தாயார் பிரஹ்லாதனுக்கு ஏன் விஷம் கொடுத்தாள்? குழந்தையென்றால் அது புருஷனுக்கும் குழந்தை தானே? அவனல்லாமல் அது உண்டானதல்லவே? குழந்தையினிடத்தில் புருஷனுக்கு இல்லாத பாத்தியதையைத் தான் கொண்டாடினால் அது வியபிசாரமே- உண்மை யிதுவே; வியபிசாரமென்பது தேகத்தைப் பொறுத்ததல்ல. "அன்பின்மை"யே வியபிசாரம்- 'குடிலஹிருதயம்' வியபிசாரம். இதற்குமேல் தன் புருஷனை நினையாமல் சும்மா விட்டால் போதாதென்று அவனைக் கண்டபொழுதெல்லாம் தான் வேறொருவனை (எவனையோ தெரியாதாகையால் பர புருஷனை நினைத்த வியபிசாரமிங்கில்லை)க்கலியாணம் செய்து கொண்டு அடையக் கூடிய மேலான சுகத்தைக் கெடுத்த பாவி என்றெண்ணி அவனைக் கடுகடுவென்று கண்ணாலும் முகத்தாலும் வாயாலும் சுடுபவள் பேயேயொழிய பெண்ணல்ல." என்றாள்.

"இவ்வளவு தூரம் யாரையாவது மனதில் உத்தேசித்துச் சொல்கிறாளா என்ன?" என்று எனக்கே சந்தேகமுண்டாகி விட்டது.

கொஞ்சநேரம் பொறுத்து பீஷ்மருடைய மரணத்தைப் பற்றிப் படிக்கச் சொன்னாள். அங்கே யுதிஷ்டிரர் முதலிய பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்

மாவும் சரதல்பத்தில் சயனித்திருக்கும் பீஷ்மரைச் சூழ்ந்து அவருக்கு சிசுருஷை செய்கையில், அவருடைய முதிர்ந்த அனுபவத்தையும் அதன் உதவியையும் இழக்கப்போகிறோமே என்று வருந்தி தனக்குக் கடைசியாக எதாவது உபதேசம் செய்ய வேண்டிக் கொண்ட யுதிஷ்டிரருக்கு பீஷ்மர் சொல்லிய நரி, கழுகு இவ்விரண்டின் கதையையும் படிக்கச் சொன்னாள்.

"இந்தக் கதையின் தாத்பரியம் தெரிந்ததா?" என்றாள்.

"உலகத்தில் அரசர்களை (அதிலும் நல்லவர்களை) வெகுபேர்கள் தங்கள் காரியார்த்தமாக ஏமாற்றத் தலைப்படுவார்கள். அவர்கள் புத்தியைக்கேட்டுப் பிசகிப் போகாமல் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளவேண்டும்" என்றேன்.

"இதற்கு மேற்பட்ட அர்த்தம் ஒன்றுந் தெரியவில்லையா உனக்கு?" என்றாள். 'இல்லை" என்றேன்.

"உலகம் என்பதே இது தான்: அதாவது அவனவன் தன் தன் லாப நஷ்டத்தையே கவனித்துக் கொள்ளுதல். தன் லாபத்தைப் பிறர் லாபம் போல் எடுத்துக் காட்டுபவன் தான் உலகத்தில் தீர்ந்த அனுபவசாலி. ஆனால் இதில் ஒரு கூடார்த்த மிருக்கிறது: அதாவது அன்பு என்பது வேறு, அது உலகத்துக்கு மேற்பட்டது; லாப நஷ்டங்களால் கட்டுப்பட்டதல்ல. தன் லாபம் பிறர் லாபமென்று பேதிக்காமல், எல்லாவற்றையும் ஒரே லாபமாகப் பாவித்தல். இது உலகத்தை விட்டுக் கரை யேறின தம்பதிகளுக்கு சுலபமாய் சித்திக்கும் உலகத்திலேயே உழன்று கொண்டிருப்பவர்களுக்கு ஆயிரம் தாலி கட்டிக் கொண்டாலும் சித்திக்காது. இதுதான் மேற்படி கதையின் ரஹஸியார்த்தம். இது பீஷ்மருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கும் தெரியும். யுதிஷ்டிரரும் ஒருக்கால் அறிந்து கொண்டிருக்கலாம். மற்றவர்கள் அறிந்தாரில்லை" என்றாள்.

---

## KANNAKI—A SOCIAL DRAMA.

### கண்ணகி.

நாடகபாத்திரர்கள்.

மாசாத்துவன்—அந்நகரத்து வணிகன்.
பெருமனைக்கிழத்தி—மாசாத்துவன் மனைவி.
நந்தன்—ஷை ஊழியக்காரன்.
கோவலன்—மாசாத்துவன் புதல்வன்.
நீலமேகன்—கோவலனின் தோழன்.
விநோதன்—கோவலனின் சேவகன், விகடமாகப் [பேசுபவன்

விசாலாட்சி }
பரகதம் } கண்ணகியின் தோழிகள்.

மாநாய்கன்—அந்நகரத்து மற்றோர் வணிகன்.
கண்ணகி—மாநாய்கனின் புத்திரி.

அங்கம் II] [காட்சி I

இடம்—கண்ணகியின் அந்தப்புரம்.
காலம்—மாலைக்காலம்.

பாத்திரர் { தேவந்தி—கண்ணகியின் தோழி
கண்ணகி.
மரகதம்—கண்ணகியின் தோழி.

தேவந்தி:— (அந்தப்புரத்தில் பிரவேசித்து). கண்ணகி! நீ யென்ன எப்போது பார்த்தாலும் மனவாட்டத்துடனிருக்கின்றாயே! சற்று நேரமாவது சந்தோஷமாக விருக்கக் கூடாதா?

கண்:—தோழி! எனக்கு மனவாட்டம் ஒன்று மில்லை! எனக்கு என்னகுறை! எதற்காக நான் விசனப் படவேண்டும்!

தேவ:—நீ என்னதான் மறைத்துப் பேசின போதிலும்—சகி—உனது முகம் சொல்லுகின்றதே! "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டு முகம்" என்று சொன்னவர் சாமானியமானவரா? என்னிடத்தில் கூடவா நீ உண்மையைச் சொல்ல அஞ்சுகின்றாய்! (கண்ணகியின் மோவாயைப் பிடிக்கின்றாள்.)

கண்:—தோழி! எதாவது இரகசிய மிருந்தாலன்றோ நான் உண்மையைச் சொல்ல அஞ்சவேண்டும்!

தேவ.—உன்னையும் உனது நாதரையும் தனியாக வேறு கிரகத்தில் உனது மாமனார் வைத்து விட்டாரே என்று வருந்துகிறாயா?

கண்:—(சிரித்துக்கொண்டு) தேவந்தி! என்னபுத்திசாலித்தனமாகப்பேசுகிறாய்! அடியே! தனியாகத் தன் பர்த்தாவுடன் வேறுகிரகத்தில் வைத்திருக்கிறார்களேயென்று எவளாவது வருத்தப்படுவாளா. எதற்காகத்தனியாகவைத்திருக்கிறார்கள் என்பதை நீ கொஞ்சமும் ஆலோசித்திருந்தால் இவ்விதம் கேட்கமாட்டாய்.!

தேவ:—எதற்காக வைத்திருக்கிறார்கள்? இன்பமனுபவிக்க.

கண்:—தோழி! சொல்லுகிறேன் கேள்; விவாகமென்பது கேவலம் ஐம்பொறியினால் இன்பம்நுகர்வது கருதிச்செய்யப் படுவதன்று! ஒர்குலம் வாழையடிவாழையாகச் செழித்து நிலைபெறுதல் வேண்டியும், அதற்கு இன்றியமையாத வேண்டப்படுவதாகிய சந்தான விருத்தியைக் கருதியும் செய்யப் படுவதாகும்! மேலும், சகியே! நெடுங்காலமாக இல்லற தருமம் நடத்திவருவதால் பெற்றோர்களுக்கு உள்ள ஆயாசமும், பாரமும், இவ்வளவெனச் சொல்ல முடியாது! குடும்பம் என்னும் பெரிய சாகரத்தில் அகப்பட்டு உழல்கின்ற அவர்களுக்குப் பின்வாச்சக விருக்கும் அவர் தம் புத்திரர்களே பெரும்புணையாகவிருக்கின்றார்கள்! சம்சாரசாகரத்தில் மூழ்கிக் கரைதெரியாமல் தத்தளிக்கும் எத்தனையோ பெயர்களுக்கு "புத்திரர்" என்னும் மரக்கலன் கிடைக்காமல் அவர்கள் இரவும் பகலும் ஓவாது இறைவனைத் துதித்தவண்ணமாக விருக்கின்றார்கள்! மக்கட் பேறில்லையென யாத்திரை போவோர் எத்தனை பேர்! விரதமிருப்போர் எத்தனை பேர்! தவஞ்செய்வோர் எத்தனை பேர்! புத்திரப் பேறு அத்தனைச் சிறப்புடையது! என்ன செல்வமிருந்தாலும், புத்திரச் செல்வமில்லையாயின் என்ன பயனுடைத்து! இது பற்றியே ஆன்றோரும்;

"படைப்புப்பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டும் கௌவியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்படத் திமிர்ந்தும்
மயக் குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே"—

என்றுகூறியிருக்கின்றார்கள்! "யாம் மெய்யாக்கண்டவற்றுளில்லை யறிவறிந்த—மக்கட் பேறல்ல பிற" என்றாரன்றோ திருவள்ளுவரும்! ஆகவே தோழி! இப்படிப்பட்ட புத்திர பாக்கியத்தை யடைந்தவர்கள் பிற்காலத்தில் அவர்களால் சுகமடைய வேண்டுமல்லவா! அப்புத்திரர்கள் குடும்பபாரத்தை ஏற்றுக்கொண்டு வரவிற்குத்தக்க செலவு செய்து இல்லறத்தை நெறிப்பட நடாத்தி வரவேண்டும்! அப்போது தான் பெற்றோர்களுக்கு ஆறுதலும், சந்தோஷமும் உண்டாகும்! அவர்கள் தங்கள் புத்திரர்கள் செய்யும் குடித்தன நேர்மையைக் கண்டு மகிழ்வதற்கு ஏது வுண்டாகும்! ஒரே குடும்பத்திலிருந்தால் பிதா விருக்கின்றாரே அவர் குடும்பத்தைக் கட்டிப் பாதுகாப்பாரென்னு அலட்சியத்தினால் புத்திரர்களுக்குக் குடும்பக் கவலையுண்டாகாது! இல்லறம் செவ்விதாக நடத்தும் முறையைச் சரிவரக் கற்றுக் கொள்ளவேண்டுமெனக் கருதி என்னுடைய மாமனாரும் மாமியாரும் என்னையும் என் பர்த்தாவையும் தனியாக வைத்திருக்கிறார்கள்! அது நலந்தானே!

தேவ:— நலந்தான்! ஆனால் நீ வருத்தத்தோடிருப்பதற்கு வேறு காரண மிருக்கவேண்டுமே; அதைச் சொல்!

கண்:— வருத்த மிருந்தாலன்றோ காரண முமிருக்கும்! தோழி! எனக்கு வருத்த மில்லை! காரண மில்லை!

தேவ:— கண்ணகி! உன் மனமென்ன கல்லா, இரும்பா? நான் எவ்வளவு மன்றாடிக் கேட்ட போதிலும் சொல்ல மாட்டேனென்கிறாயே!

கண்:— ஒருவருக்குள்ள வருத்தத்தைப் பிறரிடஞ் சொல்லி அவரையும் வருத்தத்திற்குள்ளாக்குவதிலென்ன பயன்? வருத்தத்தைத்தீர்த்து வைப்பதற்குப் போதுமான வல்லமையுடையவர்களிடம் முறையிட்டால் நலம்! உன்னிடம் சொல்லி உன்னையும் கவலைக்குட்படுத்த எனக்கிஷ்டமில்லை!

மர:—(இந்த சமயத்தில் உட்பிரவேசித்து) என்னடி தேவந்தி! நீ இங்காயிருக்கின்றாய்! உன்னை மாளிகை யெல்லாம் தேடினேனே! இருவரும் வெகு நேரமாகப் பேசிக் கொண்டிருக்கின்றீர்களே! என்னிடம் சொல்லக் கூடாதா? இரகசியமோ!

தேவ:—தோழி! ஒருவரறிந்தால் ரகசியம் இருவரறிந்தால் அம்பலம் என்கின்றார்களன்றோ? அதனால் நம்து தலைவி கண்ணகி, நான் எவ்வளவு கெஞ்சிக் கேட்டுக் கொண்ட போதிலும் மனதிலுள்ளதை வெளிப்படுத்தேனென்கிறாள்! வருத்தமாகஇருக்கின்றாயே, என்ன காரணம் என்று கேட்டால் சொல்லக் கூடாதா! நம்மிடம் சொல்லாமல் வேறு யாரிடம் தான் சொல்லப் போகிறாள்!

மரக:—என்னடி தேவந்தி! இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்டால் பதிவிரதைகள் பதில் சொல்லுவார்களோ? நாம் குறிப்பினால் தெரிந்து கொள்ள வேண்டியது தான்! கண்ணகியின் மனக்கவலைக்குக் காரணம் எனக்குத் தெரியும்!

தேவந்:—இப்படிப்பட்ட விஷயம் என்றாயே எப்படிப்பட்ட விஷயம்! தெரியுமென்றாயே என்னிடம் சொல்லேன்!

கண்:—சேடிகள்! என் வீணாக உங்களுக்குச் சிரமத்தையும் கவலையையும் வருவித்துக் கொள்ளுகின்றீர்கள்!

தேவந்:—அம்மா! நீசொல்லாவிட்டாலும் நான் மரகதத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளுகிறேன்! மரகதம்! எதற்காகடி இவள் வருத்தப்படுகிறாள்?

மரக:—உன்னுடைய கணவன் உன்னைவிடுத்து வேறொருத்தியுடன் வாழ்ந்தால் உனக்கு வருத்த மிருக்காதா? கண்ணகியும் பெண்தானே! ஒன்றும் தெரியாதவள் போலப் பேசுகின்றாயே!

தேவ:—எனக்கு ஒன்றும் தெரியாதடி! கோவலன் வேறொருத்தியுடன் வாழ்கின்றானா என்ன!

மரக:—நல்ல அதிசயம்! மாதவியென்னும் கணிகையன்றோ அவருடை காதலியாக விருக்கின்றாள்! ஊர்முழுவதும் இதே பேச்சாக விருக்கிறது! நீ தெரியாதென்கின்றாயே! அவர்களிருவரும் உடலிரண்டு உயிரொன்று என்றல்லவோ இருக்கிறார்கள்!

தேவந்:—அப்படியா! எனக்கு இதுவரையில் தெரியாது!

கண்:—அவ்வித மிருப்பார்களானால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்குமே! தோழிகாள்! என்னுடைய பர்த்தா என்னைப் புறக்கணித்து விட்டாரே, என்னை நேசிக்க வில்லையே, என்னை மதிக்கவில்லையே என்கின்ற வருத்தம் எனக்கு எள்ளளவு மில்லை, மற்று—!

தேவ:— மற்றென்ன?

கண்:—நங்கையரே! பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு என்பதாகச் சொல்லுகிறார்களே! எனது காதலரின் தயாளமும், மன அமைதியும், கருணையும், அன்பும் எவ்வளவோ சிறந்தவைகளா யிருக்கின்றன! அவர் கொண்டிருக்கும் உண்மைக் காதல் கேவலம் என்னால் சொல்லக்கூடியதல்ல அவர் மாதவியை மாதவியின் பொருட்டே காதலித்தார்! அவளோ!--

மரக:—அவள் நேசிக்கவில்லையோ!

கண்:—அவள் எனது மணாளனை அவர் பொருட்டு நேசிக்கவில்லை! நேசிப்பதாகவும், காதலிப்பதாகவும் மட்டும் காட்டிக் கொள்ளுகிறாளே தவிர உண்மையில் அப்படி யில்லை! என்னுடைய பர்த்தாவின் சொத்திற்கும், பொருளிற்கும், ஆசைப்பட்டு எனது நாதனை விரும்புகிறாள்! இவருடைய உண்மைக் காதல் அவ்வளவும் விழலுக்கிறைத்த நீராகிறதே என்று நான் வருந்துகிறேனே தவிர வேறில்லை!



தேவ:—அவள் உன் கணவனிடம் உண்மை விசுவாசம் கொள்ளவில்லையா?

கண்:—(சிரித்துக்கொண்டு) தேவந்தி! பரத்தையருக்கு உண்மை விசுவாசம், காதல், அன்பு, இவைகளெல்லாம் எப்படியிருக்கும்! தங்கள் மேனிப்பகட்டினால் பொருள் பறிக்கும் குறியொன்று தான் அவர்கள் மனதில் குடிகொண்டிருக்கும். இவர்கள் வலையிற் சிக்காமற் பிழைப்பதே புருஷர்களுக்குப் பெரும்பாக்கியம்! தெரியாமலா,

"குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச் செறுத்துக்—கனசாலக்
குலத்தைக்குமைத்துப் பகட்டிச்செருக்கிக்
குருத்தத்துவத் துற்—றவர் சோரப்
புடைத்துப் பிணைத்துப் பெருக்கக் கதித்துப்
புறப்பட்ட கச்சுத்—தனமாதர்
புணர்ச்சிச் சமுத்ரத் தினைப்பற்றிருக்கப்
புரிந்துப் பதத்தைத்—தருவாயே"

என்று பெரியோர்கள் பாடியிருக்கிறார்கள்! விலைமாதருக்கு நீதியேது நியாயமேது! பொருள்கொடுப்பவர்களெல்லாரும் அவர்களுக்குக் காதலர்தான்! அவர்களுடைய கருங்கூந்தலே புருஷர்களின் தூய்மையான மனத்தைக் கவரும் மேகம்! சேலெனப் பிறழும் பெருமதர் விழியே புருஷர்களின் உயிரைக் கவரும் கூற்றம்! அவர்களுடைய இன்சொல்லே புருஷரை வீழ்த்துவதற்குரிய வலை! அவர் தம் புன்னகை மனிதர்களின் மனத்தை அழிக்கும் மாயக்கண்ணி! கணிகையரின் பெருந்தன பாரம் ஆடவர்களின் மனத்தை மேலெழவொட்டாமல் அமிழ்த்திக் கொண்டிருக்கும் பெருங்குன்றம்! அவர் தம் காளரவல்குலே மக்களை உள்ளிழுத்துக் கொண்டு போகும் தடாகச் சுழல்! இவ்விதமே அவாளுடைய ஒவ்வொரு அங்க அமைப்பும் புருஷர்களைக் கவருவதற்குச் சாதக மாக விருக்கின்றது! கனி யென நினைத்துச் சுடர் தனில் வீழ்ந்து மாயும் விட்டிற் பூச்சிகளைப்போல அந்தோ! எண்ணிறந்த புருஷர்கள் இவர்களுடைய மாய வலையில் அகப்பட்டு உய்வதற்கு வழியின்றித் தியங்குகிறார்களே! அன்பில்லாமல் கேவலம் பொருள் விழைவால் கூடும்பரத்தைய ரின்பமும் ஓர் இன்பமா! அவருடைய சரீரத்திற்கும் பிணத்திற்கும் என்ன வித்தியாசம்! பிணத்திற்கும் உயிரில்லை! அவர்களுக்கும் உயிரில்லை! உயிரிருந்தால் அன்பு, காதல், விசுவாசம் இல்லாமல் இருப்பார்களா! இறந்த சரீரத்தினும் கேடு கெட்ட விலைமகளிரின் இன்பம் துன்ப மாகுமென்பதையும். அதனால் வரும் இழிவையும். பற்றித் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் என்ன கூறியிருக்கின்றார் தெரியுமா?

"பொருட் பெண்டிர் பொய்மை முயக்க
மிருட்டறையி— லேதில் பிணந்தழீ இயற்று."

என்று கூறியிருக்கின்றார்! சகி! இன்னும் சொல்கிறேன் கேள்! விலைமகளிர்க்கு நன்றி என்பது எள்ளளவும் கிடையாது! கோடிக் கணக்கான ஆஸ்தியைக் கொடுத்த போதிலும், அந்த ஆஸ்தியைக் கைப்பற்றிக் கொண்டு பின்பு இளைத்த காலத்தில் திரும்பியும் பாரார்கள்! ஆஸ்திவந்தனை வேறொருவனை நாடுவார்கள்! இது தானா உண்மைக்காதல்! உண்மையன்பு! உண்மைக்காதலானால் ஓர் இடத்தில் பற்றுமேயன்றிப் பலவிடத்தை நோக்காது! காதலுக்கு உயர்வென்றும் தாழ்வென்றும் இல்லை!

மரக:—காதல் மிகவும் சக்தியுடைய தென்றாயே! அப்படியானால் என் பல விடத்தில் அதன் சக்தியைக் காட்டமுடிய வில்லை!

கண்:—(சிரித்துக் கொண்டு) சகி! என்ன கேள்வி கேட்கின்றாய்! காந்தக் கல்லின் சக்தி எவ்வளவு வலியுடையது! ஆனால் அதற்கு இரும்பு ஒன்றனை மட்டும் தன்னகத்திழுத்துக் கொள்ளும் சக்தியிருக்கின்றதே யன்றி மற்ற உலோகங்களை இழுக்கும் சக்தியிருக்கின்றதோ! இரும்பினும் உயர்ந்த வெள்ளி, தங்கம், முதலான எத்தனை லோகங்களிருக்கின்றன! என் அவைகளிடத்தில் அதற்குப் பற்றுண்டாக வில்லை! ஏனெனில் இரும்பிற்கு அதனிடம் விழைவும் அதற்கு இரும்பினிடம் விழை

வும் இருக்கிறபடியால் தான்! ஆகவே இரண்டு பொருள்களின் பரஸ்பர விழைவுவேண்டுமென ஏற்படுகிற தன்றோ? கேவலம் உயிரல்லாத உலோகங்களுக்கும் இந்நியதியிருந்தால் உயிருடனும், பகுத்தறிவுடனும் கூடிய நமக்கு எவ்வளவு நியதியிருக்கவேண்டும்! இந்நியதி சிறிதுமில்லாத கணிகையிடம் என்பர்த்தா தமது உண்மைக் காதலைச் செலுத்தி யிடர்ப்படுகின்றாரே! அதை நினைக்கத்தான் எனக்கு வருத்த மதிகரிக்கிறது! அவருடைய காதலின் பெருக்கைஉள்ளளவாவது அந்த மாதவி அறிவாளா! இறைவன் எப்போது இவருடைய மனத்தை நல் வழியில் திருப்புவாரோ!

தேவ:—நீ தான் பெரிய பிரசங்கம் செய்கிறாயே! இவ்விதமெல்லாம் உன் பர்த்தாவிடம் எடுத்துச் சொல்லி அவரை நல்வழியில் திருப்புகிறது தானே! (சிரிக்கிறாள்)

கண்:—இந்தப் பிரசங்கத்தை அவரிடம் செய்ய நினைப்பது அதிகப்பிரசங்கமாகும்!

மர:—ஏன்? தவறிய இடத்தில் அத்தவறு தலையெடுத்துக் காட்டிக் கணவனைத் திருத்தவேண்டியது மனைவியின் வேலையன்றோ?

கண்:—மரகதம்! நீ சொல்வது உண்மையே! ஆனாலும் கணவர் மனம் வருந்தாமல் நடந்துகொள்ளவேண்டியது பதிவிரதைகளின் இலட்சணம் என்கு நான் புத்தி சொல்ல ஆரம்பித்தால் வருந்துவாரோ எனக் கிலேசப் படுகிறேன்! அதைப் பற்றி இன்னொரு சமயம் யோசிக்கலாம்! நேரமாயிற்று!போய் வாருங்கள்! (இருவரும் போய்விடுரைர்கள்.)

---

அங்கம் II] [காட்சி 2

இடம்—மாதவியின் மாளிகை, கடற்கரை.

காலம்—இரவு—காலை.

பாத்திரர்: மாதவி—கணிகைமாது; செல்லம்—தாய்க்கிழவி; கோவலன்—வினோதன்

கோவலன் (மாதவியின் கிருகத்திற்குச் சமீபமாய் வரும்போது அவள் உப்பரிகையில் நின்றுலாவும் ஒய்யாரத்தை நிலவு வெளிச்சத்தால் கண்டு தனக்குள்).

ஆகா! என்ன அழகு! என்ன சௌந்தர்யம்! இவள் அன்னப்பேடையோ! வன்னக்குயிலோ! பசுங்கிளியோ! மடமயிலோ! வான்மதியோ! மின்னற்கொடியோ! மேனகையோ; இவளை யடைந்த என்பாக்கியம் எவ்வளவு சிலாக்கியமாக விருக்கவேண்டும்! என்னை எதிர்பார்த்த வண்ணமாக உப்பரிகையில் உலாவிக்கொண்டிருக்கின்றாள்! இவள் முகத்தையும் நோக்கி சந்திரனையும் நோக்கினால் ஓரிரவில் இரண்டு மதியங்கள் உதித்தன வென்றே நினைக்கவேண்டியிருக்கும்! இவள் தன் ஆடல் பாடல்களைக்கண்டு கேட்டிருந்தாலே சுவர்க்கப் பிராப்தியானது போலிருக்கும்! என்மனம் எவ்வளவு வேகமாகப் போகவேண்டுமென நினைக்கிறதோ அவ்வளவு வேகமாக என்கால் நடக்கவில்லையே! (கோவலன் வருவதைக்கண்டதும் மாதவி யுள்ளே போகிறாள்)

செல்:—(கோவலன் உள்ளே சென்றதும்) வாருங்கள்! உட்காருங்கள், (ஆசனமளிக்கின்றாள்.)

கோவ:—(உட்கார்ந்து) மாதவி என்ன செய்து கொண்டிருக்கிறாள்! எங்கே காணும்!

செல்:—உள்ளே படுத்திருக்கிறாள்! உடம்பு அசௌக்கியமென்கிறாள்! மனக்கவலையோ அல்லது வருத்தமோ அவளை நாளுக்கு நாள் உருக்கிவருகிறது!

கோவ:—என்னகவலை! யார்மீது வருத்தம்?

செல்:—உங்கள் பேரில்தான் வருத்தம் போலிருக்கிறது! இந்திரன் விழாவரப்போகிறது! இதெப்பிற்கு



நல்ல துணி கிடையாதாம்! நகை யொன்று மில்லையாம்! உங்களிடம் சொன்னாளாம்! ஆகட்டு மாகட்டுமெனச் சொல்லுகிறீர்களாம்! அதுதான் வருத்தமாக விருக்கிறாள்!

கோவ:—இதற்குத்தானா வருத்தப்படுகிறாள்! நாளைக்கே வேண்டிய வஸ்திரங்களையும், நகைகளையும் வாங்கிவிடலாம்! என்ன புடவை வேண்டும்! என்ன நகை வேண்டும்!

செல்:—நீல நிறத்தில் அருகில் சரிகை போட்டதாக ஓர் பட்டும், காசி புள்ளிப்புடைவை ஒன்றும், எடுத்தால் போதுமானது! இரண்டும் ஐந்நூறு ரூபாய்க்கு மேல் போகாது! கழுத்திற்கு ஓர் காசுமாலை, கல்லிழைத்த அட்டிகை, இரண்டுமிருக்கவேண்டும். மற்றபடி சில்லறை நகைகள் ஏதாவது வாங்குங்கள்! உங்களைத்தானே அவள் சதமென நம்பி யிருக்கிறாள்! அரை நிமிஷம் நீங்களில்லாவிட்டால் அரையுகமாகத் தோன்றுகிறதாம்.

கோவ:—ஆமாம்! அவ்வளவு அன்பு! அவ்வளவு விசுவாசம்! எங்கேயிருக்கின்றாள்? போய்ப் பார்க்கலாமா?

செல்:—ஆஹா! சயனக்கிரகத்திலிருக்கின்றாள்! போங்கள்!

கோவ:—(எழுந்து சயனக்கிரகத்திற்குள் சென்று மாதவி தூங்குவது கண்டு) மாதவி; கண்மணி; காதலி; (தட்டி யெழுப்புகின்றான்).

மாத:—(நித்திரையிலிருந்து விழிப்பவள் போல் விழித்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு) வாருங்கள்! ;ஏன் இவ்வளவு நாழிகை; இதுவரை விழித்துக்கொண்டிருந்தேன்; இப்போது தான் சற்று கண்ணயர்ந்தேன்.

கோவ:—நான் முன்னமேயே வந்து விட்டேன்; செல்லத்தினிடம் பேசிக்கொண்டிருந்தேன்; நீ என்னமோ என் மீது குறையெல்லாம் சொன்னாயாம், அவைகளை யெல்லாம் கேட்டேன்!

மாத:—நான் என்ன குறை தங்கள் பேரில் சொல்லப் போகிறேன்; நகையில்லை வஸ்திரமில்லை யென்பதாகச் சொல்லிக்கொண்டிருந்தேன்; இந்திரன் விழாவருகிறதே; கடற்கரைக்குப் போவதற்கு ஒரு நல்ல துணி வேண்டாமா? காது கழுத்திற்கு ஏதாவது வேண்டாமா?

கோவ:—அதற்குள் வாங்கித் தந்தால் சரிதானே;

மாத:—நாளையதினமன்றோ திருவிழாமுடிவு! ஊராரெல்லாரும் தத்தம் பரிவாரத்துடன் கடற்கரைக்கு நீராடச் செல்லுவார்களே! நாம் செல்ல வேண்டாமா?

கோவ:— இவ்வளவு நெருக்கத்தில் தெரிவித்தால் நான் என்ன செய்கிறது; காலையில் கடற்கரைக்குப் போகவேண்டும்; இப்போதோ அகாலமாகி விட்டது; என்ன செய்கிறது;

மாத:—நான் எங்காவது இரவலாக நகை கேட்டு வாங்கிக் கொள்ளுகிறேன்! இருக்கிற வஸ்திரத்தில் நல்லதாக ஒன்று எடுத்து உடுத்திக்கொள்ளுகிறேன்! பின்பு அவசியம் வாங்கித்தருகிறீர்களா?

கோவ:—ஆகா! கட்டாயம் நாளை மறுதினமே வாங்கித் தருகிறேன்;

மாத:—சந்தோஷம்; தாங்கள் என்னுயிர்க் காதலரன்றோ; (முத்தமிடுகின்றாள்).

கோவ:—மாதவி; உன்னுடைய குரலைக் கண்டு கோகில பட்சியும் நாணுமன்றோ; அப்படிப்பட்ட இனிய குரலினால் ஒரு பாட்டுப்பாடு; கேட்போம்!

மாத:—அப்படியே ஆகட்டும் (பாடுகிறாள்)

"அம்மையேயப்பா வொப்பிலா மணியே யன்பினில் விளைந்தவாரமுதே—பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்றனக்குஞ், செம்மையேயாய் சிவபுர மளித்த செல்வமே சிவபெருமானே, இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே."

கோவல:—சபாஷ்! நேர்த்தியான பாட்டு! பாட்டுக்கு ஏற்ற குரல்! பிர்மானந்தம்!

மாத:—தாங்கள் புகழாமல் வேறு யார்தான் என்னைப் புகழப் போகிறார்கள்!

கோவல:—இருக்கட்டும்! மாதவி! நீ வீணை வாசிப்பாயோ?

மாதவி:—ஏதோ கொஞ்சம் தெரியும்?

கோவ:—சற்று நேரம் வாசி; கேட்கலாம்!

மாத:—அப்படியே! (வீணையை எடுத்து வாசிக்கவே கோவலன் சயனத்திற் சாய்ந்த வண்ணமாக நித்திரைபோய் விடுகிறான்) நித்திரை வந்து விட்டது போலிருக்கிறது! நாமும் துயில் கொள்ளலாம்! (வீணையை வைத்துவிட்டு நித்திரை புரிகிறாள்).

மாத:—(காலையில் ஊரார் கடற்கரைக்குச் செல்லும் சப்தம் கேட்டு விழித்து) கோவல! கோவல! (எழுப்புகின்றாள்).

கோவ;—(கண்விழித்து) ஏன்?

மாதவி:—பொழுது விடிந்து விட்டதே! காகம் கரைகின்ற சத்தம் கேட்கவில்லையா! கோழி கூவுகின்றதே! எல்லோரும் கடற்கரைக்குச் செல்லுகின்றார்களே! நாம் செல்ல வேண்டாமா?

கோவ:—நல்ல சமயத்தில் எழுப்பினாய்! ஸ்நானபானஞ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்!

மாதவி:—வெந்நீர் முன்னமே போட்டிருக்கிறேன், எழுந்து ஸ்நானத்திற்குச் செல்லுங்கள்! நானும் ஸ்நானம் செய்யப்போகிறேன்!

கோவல:—நீபோ! நான் இதோ வருகிறேன்! (இருவரும் ஸ்நானத்திற்குப் போகிறார்கள்)

கோவல:—(ஸ்நானம் செய்த பிறகு) நல்லுடை யணிந்து கொண்டு சீக்கிரம்வா? நான் வெளியே நிற்கின்றேன்! (தெருவாசற்படியில் நிற்கின்றான்.)

விநோ:—(கடற்கரைக்கு அர்தவழியாகச் சென்றவன் கோவலன் நிற்பதைக் கண்டவுடன்) என்ன பிரபு! இந்த க்ஷேத்திரத்தில் தங்கியிருக்கிறீர்கள்!

கோவ:—(நாணத்தால் சிரித்து) க்ஷேத்திரமென்று இந்தக் கிரகத்தைச் சொல்லத் தகாதோ?

விநோ:—தரும்! தரும்! அம்மாள் கிரகம் தருந்த க்ஷேத்திரந்தான்! தாங்களும் அதற்கேற்ற பாத்திரந்தான்! இன்று இந்திரன் விழாவாயிற்றே கடற்கரைக்கு வருகின்றீர்களோ?

கோவ:—நீ போ! நான பின்பு வருகின்றேன்!

விநோ:—தனித்தோ? சோடுடனோ?

கோவ:—எனக்குத் துணை சோடுதானோ?

விநோ:—இல்லை பிரபு! ஒண்டியாகவோ! அல்லது அம்மாள் சகிதமாகவோ?

கோவ:—உனக்கு அந்த விசாரணை யெதற்காக? நீ போவென்றால் போ! நில்லாதே இவ்விடத்தில்!

விநோ:—நான் என் ஐயா உங்களுடைய வழியில் குறுக்காக நிற்கவேண்டும்! நான் போகிறேன்! அம்மாளுடன் போனால் புண்ணியம் சாஸ்தியாகி விடுமே!

கோவ:—ஆனால் நலந்தானே!

விநோ:—நலந்தான் பிரபு! சூடு சாஸ்தியானால் குளிர்ச்சியாக மாறுமென்கிறார்களே! அது போல புண்ணிய மதிகமாகிப் பாவமாக மாறிவிட்டா லென்ன செய்கிறது!

கோவ:—சரி நீ போ! நான் இங்கிருப்பதாக ஒருவருடனும் சொல்லவேண்டாம்!

விநோ:—எனக்கு இதுதான் வேலையோ! நானாகப் போய் ஒருத்தரிடமும் சொல்ல வில்லை! யாராவது கேட்டாலும் அவர் மாதவி வீட்டில் இல்லையென்றுசொல்லி விடுகிறேன்!

கோவ:—நீ மிகவும் புத்திசாலி! போய்வா!

விநோ:—எனக்குப் புத்தி மட்டானதால் நான் கட்டின பெண்டாட்டியைத் தவிர வேறு பெண்டாட்டி யில்லாமலிருக்கிறேன்! என் புத்தியை விட உங்களுக்கு இரட்டிப்பு மடங்கான புத்தியிருக்கிறபடியால் தான் உங்களுக்கு. இரண்டு பெண்டு கிடைத்தது! கட்டினது ஒன்று! கட்டாதது ஒன்று! புத்தி



வளர வளர ஒருவனுக்குப் பெண்டும் வளர்ந்து கொண்டே யிருக்கும்போலிருக்கிறது! ஈச்வரா! என் புத்தி வளராமலிருக்கும்படிச் செய்யவேண்டும்! உம்மைப்போல் நானிருந்தால் என்னுடைய வீட்டுக் காரி எடுத்துக் கொள்வாள் அலங்காரத்தை! உம்மைப் பிடித்த அதிர்ஷ்டம் கண்ணகியம்மாள் சாதுவாக இருக்கிறார்கள்!

கோவல:—சீ! போ! நில்லாதே இங்கு! (போய்விடுகிறான்.)

மாதவி:—(திவ்யாலங்கிருதம் செய்து கொண்டு வெளியே வந்து) போகலாமே! வாருங்களேன்!

கோவல:—ஆகா! வீணையெடுத்துக் கொண்டாயா?

மாதவி:—மறந்து விட்டேன்! இதோ எடுத்து வருகிறேன்! (உட்சென்று எடுத்துவருகிறாள்)

கோவ;—சரி! போகலாம் வா! (போகிறார்கள்)

மாதவி:—காதலரே! இவ்வீதி எவ்வளவு விசித்திரமாக இருக்கிறது பார்த்தீர்களா! மாட மாளிகைகள் எவ்வளவு உன்னதமாகக் கட்டப்பட்டிருக்கின்றன!

லே.—நமது அரசன் பெருமையும், கீர்த்தியும் உலக முழுவதும் தெரிந்தது தானே! அவனுடைய இராச்சியத்தில் இப்படிப்பட்ட கட்டடங்கள் காணப்படுகின்ற தென்பதாக யாராவது வியப்பார்களா!

மாதவி.—கோவல! கடற்கரைக்குச் செல்லுபவர்கள் தங்கள் தங்கள் பெண்டு பிள்ளை சுற்றத்தாருடன் கும்புகும்பாய்ச் செல்வது எவ்வளவு ரமணீயமாகவிருக்கின்றது பார்த்தீர்களா!

கோவ.—ஆம்! நிரம்ப அழகான காட்சிதான்! நாமும் கடற்கரையைச் சமீபித்து வந்து விட்டோமே!

மாதவி;—கடலில் அலை வீசுவதும், இளஞ் சூரியனின் மெல்லிய கதிர்கள் அந்த நீர்ப்பரப்பில் பொன்மயமாகத் தோற்றுவதும் என்ன அற்புதக் காட்சி!



கோவல.—கடலில் இறங்கி நீராடுவோம்! (இருவரும் ஸ்நானம் செய்கிறார்கள்)

கோவல;—(நீராடிக் கரை சேர்ந்ததும்) மாதவி! அதோ இருக்கின்ற மணல் மேட்டிற் சற்று உட்கார்ந்து இளைப்பாறுவோம்! வருகிறாயா?

மாதவி;—போவோம்! வாருங்கள்! (போய் உட்காருகிறார்கள்.)

கோவ:—மாதவி! வீணையை எடுத்து மீட்டி ஓர் பாட்டுப் பாடு பார்க்கலாம்.

மாதவி.—கோவல! தாங்கள் தான் வீணை திவ்வியமாக வாசிப்பீர்களே! ஒரு கீர்த்தனை பாடுங்கள் நான் கேட்கிறேன்! இந்தாருங்கள்! (வீணையைக் கொடுக்கிறாள்.)

கோவ.—அப்படியே பாடுகிறேன்! நான்பாடிய பின்பு நீயும் பாடவேண்டும்! (பாடுகிறான்.)

இராகம்-கல்யாணி, தாளம்-ஆதி

பல்லவி.

தையலே யுன்னை நினைந்து நினைந்துருகி

தயங்குரேனடி மானே!

அனுபல்லவி.

வையகம் புகழ்ந்தோங்கும்-வேலூர்தனில் மருவு-

மையன் முத்துக்குமார-னுய்யாமையலினின்று (தை)

சரணங்கள்.

மேட்டி சரச கண்ணுட்டி மதன்வாழிடங்
காட்டிச் சுகங்கொடுத்துப் போட்டி செய்யலாமடி
தாட்டிகக் காரிமலர் சூட்டி யலங்கரித்து
வீட்டுக் கிந்த க்ஷணமே கூட்டிவரச்சொல்லடி (தை)

வஞ்சிமிக வுன்னத மிகு ரஞ்சிதகாரியென்று
கெஞ்சி முத்தந்தாவென்று கொஞ்சித்துஞ் சரனடி
பஞ்சவர்னக் கிளியே தஞ்சமென்று முனது
நெஞ்ச மிரங்கலையே கொஞ்சமாகிலு மிளந் (தை)

மாதவி.—(தனக்குள்) இதென்ன ஆச்சரியமாக விருக்கிறது! இவர் பாடிய பாட்டு அசப் பொருட்சுவை நிரம்பி யிருக்கிறதே! மேலும் இவர் வேறு மகளிர் பால் விருப்புடையவரா யிருக்கிறாரென இப்பாட்டினால் தெரிகிறது! என்னையன்றி வேறு ஸ்திரியினிடம் காதல் கொண்டிருக்கும் இவருக்குத் தக்க புத்தி வருவிக்கிறேன் எனக்கு இவரை யன்றி வேறு புருஷர் மீதில் நாட்டமில்லையேனும் இருப்பது போல் நடிக்கிறேன்! நான் சில பாட்டுகளைப் பாடி அக்குறிப்பை வெளிப்படுத்துகிறேன்!

கோவ.—மாதவி! நான்பாடி விட்டேன்! நீபாடு பார்க்கலாம்! (வீணையை அவள் கையில் கொடுக்கிறான்)

மாதவி.—தாங்கள் பாடிய பாட்டு மிகவும் நேர்த்தியாயிருந்தது. இதுவரையில் இப்படிப்பட்ட பாட்டை நான் கேட்டதே இல்லை!

கோவ.—என்னைப் பரிகாசம் செய்யவேண்டாம்!

மாதவி.—உள்ளத்தைச் சொன்னால் பரிகாசமாகுமா?.

கோவ.—நீ பாடு! நான் கேட்டு ஆனந்திக்கிறேன்!

மாதவி.—ஆனால் சரி! இதோ பாடுகிறேன்! (வீணையையெடுத்து மீட்டிப் பாடுகிறாள்.)

இராகம்-கேதார கௌளம்-தாளம், சாபு

பல்லவி.

அஞ்சுகமே யென்றனைக் கண்ணாளனை
யழைத்துவாடி மானே        கண்ணாளனை
யழைத்துவாடி மானே!

அநுபல்லவி.

கஞ்சமலர்த்தடஞ் சூழ்        கச்சிநகரில் வாழுங்
கருணைகடாட்சனெங்கள்        கரிகிரிவரதனை (அ)

சரணங்கள்.

மாங்குயில் கூவுது        மருகத்தாவுது
பாங்கியே மன்மதப்        பயல்கணை மீறுது
திங்கள் சுடுகையாலென்        னங்கமெல்லா நோகுது
தேமற்படர்ந்த கொங்கை        விம்மிமையல் மீறுது (அ)

சிந்தையிற்றுயர் மிக        மிகுந்துவருகுது
சித்தசன் கணையாற் காம        லாகிரி பெருகுது
எந்த விதத்திலேனு மிங்        கழைத்துவருவது
யேந்திழையேயுன் கட        னிசையாவிடிற்றுளாது(அ)

அச்சுதனை மெங்கள்        கச்சிநகர்வாசனை
யன்பாகக் கமலத்        துறையுமதி நேசனை
இச்சையுள்ளோர்கள் பா        லிருக்குஞ் செகதீசனை
யிங்குவரச் செய்தாலுனக்        கிகத்திற் செய்வேன்
[பூசனை (அ)

கோவலன்.—(தனக்குள்) ஆஹா! நாமென்னமோ இவள் நம்மிடம் உண்மைக்காதல் கொண்டிருக்கிறாளென்றிருந்தோமே! இப்போதிவள் பாடியதைப் பார்த்தால் இவள் வேறொரு புருஷனிடம் காதல் கொண்டிருக் கிறாளென்பது நன்றாகப் புலப்படுகிறது! விலைமாதரை நம்பக்கூடாதெனத் தெரியாமலா ஆன்றோர்கள் கூறுகிறார்கள்! இப்படிப்பட்ட துர்க்குண முடையவளுடன் இனி நாம் ஒருக் கணமும் சகவாசம் செய்யக்கூடாது! இந்த நிமிஷத்தோடு இவளுக்கும் நமக்குமுள்ள சம்பந்தம் நீங்கிவிட்டது.! இவளுடைய முகத்திலும் இனி விழிக்கலாகாது! ஆஹா! மாதவி! மனதிலொன்று வைத்துக்கொண்டு வெளியில் ஓர்விதம் நடிக்கும் பாத்தையரை இன்றுதான் கண்டேன். என்னிடத்தில் அளவற்ற காதல் பூண்டவள்போல் நடித்து வந்தாயன்றோ! உன்னுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம்! மாதவி! நீ வஞ்சகத்திற்குறைவிடம்! நன்றியின்மைக்குச் செவிலித்தாய்! ஆடவரைப்படுகுழியில் தள்ளுவதற்கு எற்பட்ட கொடுநீலி! இன்றுதான் அறிந்தேன் உன்னுடைய மனத்தை! மாதவியை நோக்கி உரத்தகுரலுடன்) மாதவி! பொய்யை மெய்யாகக் காட்டி யொழுகும் பாதத்தையாகிய உன்னுடன் கூடி வாழ்ந்த என் மதியீனத் திற்காக நான் வருந்து கின்றேன்! உன் பொருட்டு ஏராளமான பொருட்களைச் செலவு செய்தது குறித்து வருந்து வேனு! எனதுபத்தினி கண்ணகிக்குத் துயரமிழைத்தது குறித்து வருந்துவேனு! உன்னுடைய மனநிலையை இது வரையில் அறியக்கூடாத மூழுமூடனாக விருந்தேனே; அது குறித்து வருந்து வேனு! அடியே! இன்றோடு உன



க்கும் எனக்கும் இருந்த பற்றுஅறவே ஒழிந்தது. இனி நீ உன் காதலனோடு சுகமாக வாழ்! நான் என்றைக்கும் உன்னோடு விடை பெற்றுச் செல்லுகிறேன்! (அவ்விடம் விட்டு நீங்குகிறான்)

மாதவி.—(மிகவருத்தத்துடன்) ஐயோ! நாம் விளையாட்டாகச்செய்தது வினையாகவன்றோ முடிந்தது! பாதகியாகிய எனக்கு இவ்விதமான புத்தியேன் வந்ததோ! நம்மிடம் எவ்வளவோ அன்புடனிருந்த இவர் இவ்விதமாக நிராகரித்துச் செல்வாரெனக் கனவிலும் நினைக்கவில்லையே! இது யார் செய்தசூதோ! இறைவனுக்கே சம்மதமில்லையோ! ஊழ்வினைப்பயனுக்கு நாமென்ன செய்யலாம்,

(அவ்விடம்விட்டுத்தன் கிருகத்திற்குச் செல்கிறாள்)

(கோவலன் தனக்குள் சொல்லிக் கொண்டே தன் கிருகம் நோக்கிச் செல்லுகிறான்). என் மதியீனத்தை என்னென்று சொல்வது! அன்பு என்பது தினைத்துணையும் கிடையாத விலைமகளை மிகவும் அன்புடையவள் என நினைத்திருந்தேனே! என்னைப் போல் மதிகேடாராயினு மிருப்பார்களா? இந்த மாதவியின் புல்லொழுக்கம் இன்றன்றோ வெளிப்பட்டது! இவ்வேசை மீது நான் கொண்ட காதலினால் எத்தனை பெயருடைய விரோதத்தை யடைந்தேன்! இந்நாரியர் இயல்புணர்ந்தன்றோ,

"கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயனெருங்கி யுண்மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்துபுடை பரந்
தீர்க்கிடைபோகா விளமுலை மாதர் தம்
கூர்த்தநயனக் கொள்ளையிற் பிழைத்தும்"

என்று பெருமான் ஸ்ரீமாணிக்கவாசகரும் கூறினர். இருக்கட்டும்; அதோ நிற்கிறது விநோதன்போலத் தோன்றுகிறது! அவனைக் கூப்பிட்டு நம்முடைய பத்தினி எவ்வாறிருக்கின்றாள், நமது தகாத ஒழுக்கத்திற்காக வருந்துகிறாளா, கோபமாயிருக்கிறாளா, என்பதை விசாரிக்கலாம்! (விநோதனை நெருங்கி வந்தவுடன் அவனைக் கூப்பிடுகிறான்).

விநோ.—(கோவலனைப் பார்த்து) வாருணும்! ஸ்தானமாயிற்றோ? ஜோடியாகப் போன நீங்கள் தனியாக வருகிறீர்களே! மாதவித் தெய்வம் எங்கே? (சிரிக்கிறான்)

கோவ.—அதெல்லாம் பிறகு பேசலாம்! எனது நாயகி கண்ணகி யென்ன செய்து கொண்டிருக்கிறாள்!

விநோ.—தாங்கள் மாதவி சகிதமிருக்கும் போது எனதம்மை கண்ணகியைக் குறித்துத் தாங்கள் கவிப்பானேன்?

கோவ.—கேட்பதற்கு பதில் சொல்!

விநோ.—அந்தப்புறத்தில் இருக்கிறார்கள்!

கோவ.—இன்னும் யாராவதிருக்கின்றார்களோ?

விநோ.—தோழி தேவந்திகூட விருக்கின்றாள்!

கோவ.—சரி! நீ போ!

விநோ.—அப்படியே! (போய்விடுகிறான்)

கோவ.—(தனக்குள்) கண்ணகி தனியாகத் தானிருக்கின்றாள்! நாம் சென்று அவளுடைய வருத்தத்தை தீர்க்கலாம்! சாஸ்தியான பிணக்கு செய்தால் தோழி தேவந்தியைக் கொண்டு சமாதானம் செய்யலாம்! மாதவியின் பொய்யொழுக்கத்தைப் பற்றிக் கூறுகிறேன்! என்னுடைய குற்றத்தையும் ஒப்புக்கொண்டு கண்ணகியின் மன்னிப்பை அடைகிறேன்! இதோ செல்லுகிறேன் கண்ணகியிடத்திற்கு.

## SHORT STORY.

# "VIRAT RUPA"

### A Tale of Righteousness.

# "விராட் ரூபா"

## IV. மாயாபுரி

மஹேந்திரஜாலத்தைக்கண்ட உபேந்திரன் சாந்தாமோஹிதனாகி, போகலம்பமத்தில் சாந்தாவேயாகி, அதனால் உபேந்திரனாகிய தனக்கும் சாந்தாவுக்கும், உபாதி பேதத்தால் த்வைதத்துவமேயன்றி, மற்றப்படி இருவரும் ஏகத்துவம் பொருந்தி யிருப்பதை யுணர்ந்து கொண்டான் என்பதோடு மூன்றாவது அதிகாரத்தை முடித்தோம். சந்தையிறைச்சலிலே குடியிருந்து கெட்டேனே!" யென்று பாடிய சித்தனைப்போல இந்திரியங்களின் வியவகாரத்தில் தலையிட்டுக்கொண்டு களைப்பிளைப்பின்றி யுழைத்த உபேந்திரன் சாந்தா ஸம்யோகத்தால் மன விச்ராந்திபடைந்து சாந்தோபசாந்தனாகவும் தன்னை மயக்கினது முற்றும் சாந்தா வென்னும் மாயையல்ல, தன்னை யடுத்துக் கெடுத்த தன் மனமே யதற்கு உடந்தையாயிருந்த தென்று கண்டான்.

ஆகாயக் கோட்டைக்கு ஒரே கட்டுண்டென்று தான் நம்பியிருந்தது பொய்யாக, அதற்கு மூன்று கட்டுண்டென்று இப்பொழுது கண்டு கொண்டான். முதற் கட்டில் தனு கரண புவன போகங்களை யெல்லாம் இந்திரியத்துவரா அனுபவிக்க லானான். இரண்டாங்கட்டில் "மோனகான"த்திலிருந்துண்டான சாந்தா ஸம்யோகத்தால், இந்திரியங்களை யெல்லாம் விட்டு மனவிசிராந்தியடையும் †யோகமொன்றுள தென்று ஸ்வானுபவத்தினால் கண்டு கொண்டான். மனவிசிராந்தி யடைந்து அதில் பழகி சாந்தோபசாந்தனாகவும் இந்திரியங்களை யெல்லாம் விட்டும் கருவியின்றிக்கரணங்கள் மட்டில் வேலை செய்வதை நேரில் கண்டான்.

† "அப்ராப் தப்ராபணம் யோகஃ" என்பது மேற்கோள்.

கரணங்கள் இரண்டுவகை: புறக்கரணங்கள் என்றும் அஹக்கரணம் என்றும் சொல்வர். புறக்கரணங்கள் நான்கும் ஆகாயக்கோட்டையில் நாலு பிலத்துவாரக் கதவுகளினிடத்தும் காவலாயிருக்கும். அவற்றிற்கு மனசு, புத்தி, சித்தம், அஹங்காரம் என்று பேர்.

(1) மனசு போக போக்கியங்களான ஸ்பரிச சுகத்தைக் கொடுத்து கர்த்தாவைக் களிக்கச் செய்யும்.

(2) புத்தி ரூபா ரூபங்களைச் சிருஷ்டித்துக் காட்டி தரிசன சுகத்தைக் கொடுக்கும்.

(3) சித்தம் ரஸதன்மாத்திரையினாலே "பள்ளத்தில் நீர் தங்கும் பான்மை போல்" இஷ்ட பூர்த்தியினால் அமிர்த பானத்தைக் கொடுத்து மிருத்யு பயத்தைப் போக்கி நித்திய சுகத்தைக் கொடுக்கும்.

(4) அஹங்காரம், பூர்வஸம்ஸ்காரம் என்னும் வாசனா தேஹத்தைக் கொண்டு எதையும் தன் மயமாக்கி ஸ்வீகரித்துக் கொள்ளும் சக்தியைக் கொடுக்கும்.

இந்த நான்கு கரணங்களும் மனோ விசிராந்தி யடைந்தகாலத்து ஒன்றினுள் ஒன்றாக வொடுங்கி, அழகு பொருந்திய மோஹினி ரூபங்கொண்டு மோனகானஞ் செய்து மூன்றாங்கட்டில் ஏகாந்தமாய் ஆனந்த நித்திரை செய்யும் அந்தராத்மாவை யெழுப்பத் "திருப்பள்ளி



யெழுச்சி' பாடும். இந்த அந்தராத்மாவுக்கு ஒரே கரணமுண்டு. அந்த ஒரு கரணத்தால் அந்த மஹா புருஷன் எல்லாவற்றையும் இச்சா மாத்திரத்தினால் சிருஷ்டித்து அனுபவித்து அந்தர்த்தானம் ஆகச் செய்வான். அந்த ஒரு கரணத்துக்கு "அந்தக்கரணம்" என்றுபேர். இது மனம் செய்யும் சேஷ்டைகளுக் கெல்லாம் சாக்ஷி மாத்திரமாயிருப்பதால் "மனச்சாக்ஷி" யென்று சிலர் இதை யழைப்பதுண்டு. அந்தக்கரணம் மற்றக்கரணங்கள் நான்கின் வேலையையும் தானே, அததற்குரிய கருவிகரணங்களினுதவியின்றித் தன்மாத்திரையால் செய்யும். இந்த அந்தக் கரணத்துக்குள்ளிருக்கும், சக்திக்கு இச்சாசக்தி யென்று பேர். "மோனகானம்" செய்யும் சதுஷ்கரணங்களின் சமஷ்டி ரூப மோஹினி யுருவத்தைக் கொண்டு உள்ளே யானந்த நித்திரை செய்யும் மஹா புருஷனைக் காட்டிக் கொடுப்பதும், அவரை ரக்ஷிக்குமாறு மோஹினியையும் மோஹிக்கும்படி செய்யும் தன்னுருவத்தைக் காட்டி அவளை விழுங்கி விடுவதும் இந்த இச்சா சக்தியே. இவள் மஹா பதிவிரதையானபடியால், தன்னிச்சை யென்பது அற்றவள். புருஷனிச்சையைத் தவிர வேறொன்று அறியாள், நளாயினியைப் போல், தன் புருஷன் மோஹினி காந்தனாய் அவளை யனுபவிக்க வேண்டு மென்றாலும் கூட்டி வைப்பாள். ஸ்வபத்நீ விரதனாய் அவளை யன்றி யாரையும் நினைப்பதில்லை யென்றிருந்தால் அந்த மோஹினியை விழுங்கி அவனிடத்துள்ள மோஹம் என்னும் விஷத்தைத் தனது பதிவிரதாக்னியினால் தஹித்து அழகே யுரு வெடுத்தது போலும் ஆனந்தமே வடி வெடுத்தது போலும் சுககனமாயுள்ள தன் ஸ்வரூபத்தைக் காட்டி நிற்பாள். இச்சா சக்தி இந்த ஸ்வரூப மெடுத்து விளங்குவதைத் தான் "சாந்தா" வென்றும் "சாந்திப்பத்நி" யென்றும் சொல்கிறது!

மனவிசிராந்தி யடைந்தாலன்றி இவள் ஸ்வரூப தரிசனம் காணக் கிடைத்தலரிது!

மனம் மோஹத்தை விட்டாலன்றி அதற்கு விசிராந்தி கிடையாது!

ஆகையால்தான் "ஆசையறுமின், ஆசையறுமின்! ஈசனோடாகிலும் ஆசையறுமின்!" என்றார் உண்மைவழிப்பட்டு உளந்தேறிய பெரியோர்.

ஆசையறுபட்டால், மனம், அலையோய்ந்த சமுத்திரம் போல், சலனம் விட்டு, நிற்கும்.

அப்படி நின்ற நிலையில் சாந்தாவின் ஸ்வரூபதரிசனம் விளங்கும்.

ஆனால் அப்படி நிற்பது க்ஷணிகமாத்திரமே யாதலால், தூங்கி விழித்த புருஷன் சுகானுபவமொன்றை மட்டு மறிந்து அது வந்த வழி போனவழி தெரியாமல் தவிப்பது போல, மனம் நின்றநிலையில் கண்டகாட்சி, அடுத்த நிமிஷத்தில் மனம் சலிக்கும் பொழுது நிழலாடினது போல் ஞாபக மாத்திரமாக விருந்து மோஹ விகாரத்தை யுண்டு பண்ணுகிறது. உபேந்திரன் சாந்தா, சாந்தா வென்று தபித்ததற்குக் காரணம் இப்பொழுது விளங்குகிறதா?

உபேந்திரன் சாந்தா மோஹிதனாகி, நித்தியா நித்திய வஸ்து விவேகத்தால் மோஹம் தீர்ந்து சாந்தாகாந்தனாகவும், சாந்தாவுக்கும் தனக்கு முள்ள ஏகத்துவத்தையும், த்வைதத்துவத்துக்குக் காரணமான உபாதி பேதத்தையும் அனுபவ விசேஷத்தால்

நன்றாக வறிந்தான். பேதமற்ற விடத்தில் பேதத்தை விளைத்த தன் உபாதி யென்ன வென்று ஆராய்ந்து பார்க்க சதுஷ்கரணங்களின் சமஷ்டி ரூபமான மோஹினிரூப மோஹ மாத்திரையான மனசு தனக்கு உபாதி யென்று கண்டான்.

இந்த மனசு எங்கிருந்துண்டாயிற்றென்று விசாரித்தான். நடுவே வந்த மாப்பிள்ளைத் தோழன் ஒரு புறமாய் விசாரித்த மட்டும் சாமார்த்தியமாயிருந்து விட்டு இருபுறத்திலும் மனதொத்து விசாரிக்கப் புகுந்த விடத்து மாயமாய் மறைந்தோடியது போல, மனம் என்னும் மாப்பிள்ளைத் தோழனும், அந்தராத்மாவாகிய புருஷனும் மனைவியான சாந்தாவும் ஒன்று பட்டு விசாரித்த விடத்து இருந்த இடந் தெரியாது மறைந்தோடி விட்டது.

> "மனமாயை மாயை, மாயைமயக்க
> மனமாயை தான் மாளும் மற்றொன்றுமில்லை:
> பிணமாய்வதில்லை பிதற்றவும் வேண்டாம்!
> தனையாய்ந் திருப்பது தசதுவந்தானே."

என்றார் எம்பெருமான் திருமூல தேவர். இத்திரு மந்திரத்தின் உண்மையை யறிந்த உபேந்திரன் சாந்தா ஸஹிதனாய் ஒன்றுஞ் சொல்லாது தன்னை விட்டோடின மனதைத் துரத்திக் கொண்டு செல்ல அவன் தன் பள்ளியறையாம் அந்தக்கரணம் விட்டு மாயாபுரி யென்னும் மஹா கோட்டையின் வாசல் வந்தெய்தினான். வாசற்புறத்தில் மஹாகாளி காவலிருந்தாள். அவள் கோர ரூபத்தைக்கண்டு உபேந்திரன் பயந்தான். புருஷன் பயப்படவும் அவனுடன் வந்த சாந்தா அவனுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொண்டாள்.

உபேந்திரன் சாந்தா ஸஹிதமாக விருப்பதால் பயமில்லை யென்றிருந்தான். மஹாகாளியின் கோரரூபத்தைக் கண்டு இவன் பயப்படவும் சாந்தா இவனுக்குப்பின்போய்ப் பற்றக் கண்டான். எப்படியும் அவள் பெண்பால் தானே, அவள் பேரில் குற்றம் சொல்வதற்கில்லை யென்று தனக்குட் தானே சமாதானம் செய்து கொண்டு தான் சாந்தோபசாந்தனைதை நினைத்து மறுபடியும் தைரியங் கொண்டு கோட்டை வாசலை யணுகினான். அணுகி அங்கே கட்டியிருந்த மணியை அடித்தான். உடனே பூதகணங்கள் வந்து அவனைப் பயமுறுத்தின. அவன் பயப்படாதவனாய் வாசற்படி தாண்டயத்தனிக்கவும், மஹாகாளிதானே நேரில் வந்து "யாரடா அவன்? நில்அப்படியே!" என்றாள்.

உபேந்திரன் வாசற்படிக்கு அந்தண்டையொரு காலும் இந்தண்டை யொரு காலுமாக வைத்தபடி அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றான்.

மஹாகாளி உதிர மொழுகும் சிரமொன்றை இடது கையில் ஏந்திய வண்ணம் இன்னொரு கையில் மந்திரவாளை யோங்கிக் கொண்டு "யார் நீ? உடனே பதில் சொல்! இல்லாவிட்டால் இந்தவாளுக்கிரையாவாய்!" என்றதட்டினாள்.

உபேந்திரன் பின்னால் ஒளித்திருந்த சாந்தாவுக்கு இச்சப்தம் காதில் பட்டதும் அவள் நிமிர்ந்து பார்க்க, அவள் கண்ணுக்கு மந்திரவாளேந்திய கை உபேந்திரன் தலையினால் மறைக்கப்பட்டு நிற்க, அதற்கும் மேலே அழகாய்க் குவிந்த அங்குலியினால் அபயப்பிரதானம் செய்து கொண்டிருந்த வலது கையே அவள் கண்ணுக்குப் பட அவள் அச்சம் நீங்கி அசலமாயிருந்தாள்.



"யார் நீ?" யென்ற சப்தம் உபேந்திரனுக்குள் புகுந்து எதிரொலி கிளம்ப ஒலிக்கவும், அவன் ஒரு க்ஷணம் திப்பிரமை கொண்டு நின்றான். அடுத்த வசனமும் ஓங்கின வாளும் அவனை நிர்ப்பயனாக்கிவிட்டன. இவளிடத்திலிருந்து தப்புவது சாத்தியமாயில்லையால், இவளுக்கு உள்ளதைச் சொல்லி விடுவோம், வந்தது வரட்டு மென்று தீர்மானித்துக் கொண்டு "நான்தான் சாந்தா காந்தனான உபேந்திரன்!" என்றான்.

மஹாகாளி களகள வென்று சிரித்தாள்.

"உபேந்திரா உனக்கு ஆகவேண்டிய தென்ன?"

"நான் இக்கோட்டைக்குள்ளே போகவேண்டும் !"

"அப்படியா! சரி! உன் தலையை அடகு வைத்து விட்டு நீ உள்ளே போகலாம்!"

"தலையை யாவது அடகு வைக்கவாவது! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது!"

"ஆச்சரியம் தான்! தலையை யடகுவைத்து இந்த வாசலில் நுழைந்தால் நுழையலாம்! இல்லாவிட்டால் உன் தலையை பலி கொடுத்துவிட்டுத் திரும்பிப் போகலாமானாலும் போகலாம்! இதோ! என் கழுத்திலிருக்கிற மாலையைப் பார்த்தாயா? எத்தனை தலைகளிருக்கின்றன! எண்ணிப்பார்!" என்றாள்.

உபேந்திரன் "இதென்னடா தர்மசங்கடம்!" என்று சாந்தாவை நினைந்தான். பின்னாலிருந்தபடி சாந்தா "பயப்படாதே, பயந்தால் மோசம் வந்தது!" என்று வற்புறுத்தக்கேட்டுப் பின்னும் தைரியம் கொண்டான். மஹாகாளியைப் பார்த்து, "இந்த வரி தண்ட நீ யார்? உனக்கென்ன அதிகாரம்? சொல்!" என்றான்.

"நானு யார்? என்று கேட்கிறாய்! உனக்கு இன்னும் தெரியவில்லையா! புதுமாப்பிள்ளை பாவம்!" என்று தன் கோரப் பற்களைக் காட்டிக் கொண்டு சிரித்தாள்.

அவள் கோரப்பற்களைப் பார்க்கவும் உபேந்திரனுக்கு வயிற்றில் 'பஹீர்' என்றது! அவன் தைரியமெல்லாம் ஒழுகிப் போய்விடும் போலிருந்தது! பின்னாலிருந்து சாந்தா "பயப்படாதே! பயப்பட்டால் மோசம் வரும்" என்று பின்னும் வற்புறுத்தினாள். பின்னும் தைரியங்கொண்டு, "ஆளறியாமல் நான் வரி செலுத்துவதில்லை! கேட்ட கேள்விக்கு பதில் சொல்!" என்றான்.

"நான் தான் மஹாகாளி! மாயாபுரியின் நகர்க்காவல் என்னுடையது! அத்துமீறி நடந்தால் ஆக்கினை நடக்கும்! உஷார்" என்றாள்.

"உன் அத்து எந்த மட்டும் செல்லும்?"

'நானும் நீயும் உள்ள மட்டும்! செல்லும்!"

"'நான்' தான் இல்லையே! அதைத்தேடிக் கொண்டுதானே புறப்பட்டு வந்தேன்!"

"நானற்றநின்' தேடல் என்ன வந்தது?"

"அந்த "நான்" ஓடிப் போயிற்றென்று தானே தேடிக் கொண்டு புறப்பட்டேன்!"

"அப்படி யானால் தலையை யெடுத்துக் கீழே வைத்து விட்டு உள்ளே போ!"

"தலையறுந்த முண்டம் எப்படித் தேடும்?"

"நானற்றபிண்டம் எப்படித் தேடுமோ அப்படித் தான்!" என்று சொல்லிப் பின்னும் தன்

கோரப் பற்களைக் காட்டிக் கொண்டுசிரித்தாள் மஹாகாளி.

"நான் அற்ற பிண்டம்!" என்று சொல்லவும் 'நான் யார்'என்கிற கேள்வி பின்னும் பிறந்து வாதிக்கக் கண்டான் உபேந்திரன்.

"நான்யார்? நான் யார்?" என்று உபேந்திரன் தனக்குள் தானே பன்முறை கேட்டுக் கொண்டான். உபேந்திரன் தான் மனமொளித்ததோடு ஆள்மாருட்டமாகப் போய் விட்டானென்றே, மஹாகாளிக்கு நான் "சாந்தா காந்தனான உபேந்திரன்" என்று பதில் சொன்னான். "உபேந்திரன்" ஒழிந்தும் அவன் நாமதாரணையிலிருந்துண்டான நாமவாசனை விடவில்லை. அந்த வாசனாவித்திலிருந்து உபேந்திரன் மறுபடியும் முளைத்தெழுந்து விட்டான் போலும் அவனுக்குத் தோன்றிற்று.

"நான்யார்? நான் உபேந்திரனா?" என்று தனக்குள் தானே விசாரித்துக் கொண்டான். "உபேந்திரன் மனோபாதி யுள்ளவன். சலனஸ்வரூபன், நானோ நிச்சலமடைந்தவன். சாந்தாகாந்தன். மனவிசிராந்தி யென்னிடத்தில் குடிகொண்டு விட்டது. என்னை மயங்கச் செய்த மனமாயையை நான் பிடித்து மயக்க, அது ஒடிவிட்டது! அப்படியிருக்க, நான் 'உபாதியற்றவன்' அல்லவா? நான் செத்துப் போய்விட்டேன் என்பது மெய்யா, பொய்யா? என்று பின்னும் விசாரிக்கத் தொடங்கினான். மஹாகாளி ஹூங்காரம் போட்டது அவன் காதில் விழுந்தது! உடனே அவளை ஏற இறங்கப்பார்த்தான். அவள் பின்னும் களகளவென்று சிரித்தாள்.

சிரிக்கவும் இவன் அவளிடம் சந்தேகம் கொண்டான். நீ யார்? உன்பூர்வோத்திரம் என்ன? சொல்! சொன்னாலொழிய நான் உன்னை லக்ஷியம் செய்யேன்" என்று தைரியமாகச் சொன்னான்.

"நான் தான் உன்னைப் பெற்ற ஆத்தாள்!" என்றாள் மஹாகாளி.

"பாம்பு தானிட்ட முட்டைகளையே தின்பது போல் நீ என்னைப் பெற்று விட்டு என்னையே தின்ன உருசி மேலிட்டு நிற்கிறாயே! நீ என்னைப் பெற்றதிருக்கட்டும்! உன்னைப்பெற்றது யார், உன் பூர்வோத்திரத்தைச் சொல்?" என்றான்.

"நான் அனாதியாயுள்ளவள்" என்றாள் மஹாகாளி. "அப்படியானால் உனக்குப் புகலிடம் போக்கிடம் இல்லையா?" என்று கேட்க,

"நானே யெனக்குப் புகலிடமும் போக்கிடமும் என்றாள்."

"அப்படி யென்றால், நீ மாயை யென்றாயிற்று! அப்படித்தானே! உள்ளதைச் சொல்! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடும் சாமர்த்திய முள்ளவளல்லவா நீ!" என்று கர்ச்சித்தான்.

"நீ யார்? சொல்கிறாயா? உன் தலையை வாங்கிவிடட்டுமா?" என்று கர்ச்சித்தாள் மஹாகாளி.

அவள் கர்ச்சிக்கவும் அந்த கர்ச்சனையிலிருந்து ஒரு மஹா பயங்கரமான ஸிம்ஹம் உண்டாக, அவள் ஸிம்ஹவாஹனாருடையாய் அஷ்டபுஜங்களும் ஆயுதம் தரித்து விளங்க யுத்தஸந்நத்தளாய் விளங்கக் கண்டான்.

சாந்தா சொல்லிய "பயப்படாதே! மோசம் வரும்!' என்ற சப்தம் இப்பொழுது அவன் பின் பக்கத்திலிருந்து கிளம்பாமல், ஹிருதயகமல மத்தியிலிருந்து கிளம்பி கர்ணாமிர்தமாய் அமிர்த வருஷம் பொழியக் கண்டு அவன், யுத்த ஸந்நத்தளான மஹாகாளியைப்பார்த்து "ஹே சண்டி! நான் சாந்தோபசாந்தனானேன், ஆகையால் உனக்குக் கொடுக்கத் தலையில்லை! இருந்தால், மஹராசியாக வெட்டி யெடுத்துக் கொள்!" என்றான்.

உடனே சண்டி ஞானவாளை வீசினாள்! அது அவன் கழுத்தில் பூமாலையாக விழுந்தது! வாள் வீச்சின் ஒளியினால் கண்கூச, க்ஷணநேரத்துக்குக் கண்ணை மூடினவன், கழுத்தில் கத்தி பாய்வதற்குப் பதிலாகப் பூமாலை கிடந்து புரளக்கண்டு இஃதென்ன அதிசயமென்று பார்த்தான். தன் னெதிரே சாந்தா தன் ஸ்வஸ்வரூபத்தோடு விளங்கக் கண்டான்.

"என் கண்ணே!" யென்று, அவளை யோடிக் கட்டிக்கொண்டான். இவனுக்குள் அவளும் அவளுக்குள் இவனுமாக இருவரும் இரண்டறக் கலந்து விளங்கக்கண்டான். 'அத்வைதம்' என்பதினர்த்தம் இன்னதென்று அவனுக்கு இப்பொழுது தான் விளங்கலாயிற்று.

கண்ணுக் கெதிரே தோன்றிச் சண்டை புரிந்த சண்டியையும் காணோம்! காளியையும் காணோம்! தன்னிரு காலுக்கு மத்தியிலிருந்த மாயாபுரி கோட்டையின் வாசல்படியையும் காணோம்! மாயாபுரியையும் காணோம்! சாந்தோபசாந்தன் ஆனந்த பூரிதனாய் ஆச்சரியப்பட்டு நின்றான். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். ஆகாசவாணி எல்லாரும் கேட்கப் பின்னும் எம்பெருமான் ஓதிய திருமந்திரத்தையே ஜபித்துக் கொண்டிருந்தாள். சாந்தோபசாந்தன் அம்மந்திரத்தை அஜபகாயத்ரியாக ஓதினான்:—

'மனமாயை மாயை, மாயை மயக்க
மனமாயைதான் மாளும், மற்றொன்றமில்லை
பினைமாய்வதில்லை, பிறந்நவும் வேண்டாம்!
தனையாய்ந் திருப்பது சத்துவந்தானே!"—
[திருமந்திரம்.





---

## "VIRAT RUPA"

## "விராட் ரூபா."

V. சாந்தோபசாந்தன்

"மூலநாடி முக்கட்டலகுச்சியுள்
நாலு வாசல் நடுவிலிருப்பீர்காள்
மேலைவாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலுமில்லையே."

சாந்தோபசாந்தன் ஆனந்த பூரிதனாய் ஆச்சரியப்பட்டு தன் மனமாயை யானது தன்னுள்ளே மாள, அது மாய்ந்த தறியாமல், அஃதைத் தேடிக்கொண்டு அந்தக்கரணம் விட்டு சாந்தாலமேதனாய் ஆகாச மார்க்கத்தில் புறப்பட்டு வெளிவர, அங்கே மாயாபுரிக் கோட்டையிருக்கக்கண்டு அஃதில்போய் தன்னை விட்டோடொளித்தோடிய மனமாயையைக்கண்டு பிடிக்கலாமென்று அக்கோட்டை வாசலினுட்புகப் பத்தனிக்க, அங்கே மஹாகாளியைக் கண்டு வாதிட்டு நிற்க, தன் மனமாயை மாளவும்தான் "நானற்றபிண்டமானதை" மஹாகாளியின் எச்சுப் பேச்சினாலுணர்ந்து, அஃதைத்தன் உள்ள முறைக்க உண்மையாக்க் கொள்ளவும், அஃதோடு தான் "தலையில்லாத் தம்பிரான் ஆனதை" யுணர்ந்து, காளியைப் பூர்வோத்திரம் விசாரிக்க, அவள் மஹாமாயை யென்பதை அவள் சொல்லாமலுணர்ந்தோர்ந்து, அ

வனுக்குத்தான் "தலையில்லாத் தம்பிரானுனதை"ச் சொல்லி, எனக்குத் தலையுண்டேல் அதை நீ வாங்கிக்கொள்ளலா மென்று சொல்ல, மஹாகாளி மஹிஷாஸுரமர்த்தனிஸ்வரூபங்கொண்டு, ஞானவாளால் அவன் அஜ்ஞானத்தைப் போக்குவான் வீச, அஃது அஜ்ஞானம் நீங்கிய அவன் கழுத்தில் பூமாலையாக விழவும் மஹாமாயையும் உடனே மறைந்து சாந்த மூர்த்தியாய் அவளது ஸ்வஸ்வரூபம் காட்டி நிற்க, அந்த ஸ்திதியில் அஜபகாயத்ரியால் திருமந்திரம் ஓதிக்கொண்டிருக்கக் கண்டோம்.

சாந்தோபசாந்தனை "உபேந்திரன்" இப்பொழுது பூர்வஸம்ஸ்காரங்களாலுண்டான அசுபவாசனைகளெல்லாம் அஜபகாயத்ரி துவாரா திருமந்திரத்தின் தேஜோமயமான திவ்யாமிர்தத்தை யுண்டதினுல் நீங்கி சுபவாசனைகள் மாத்திரமாய் நின்று சாந்தாவோடு ரமித்துக்கொண்டிருக்கும் பாக்கியம் பெற்று விளங்குகிருன். சாந்தாவைக் கூடிக்களிக்கும் பொழுது அவன் அவளை அபேதமாய் "நிர்வாணசுகதாயினி"யாக மாத்திரம் அறிந்து, தான் மனுதீதனுயிருந்து அவளை மாயாதீத குணுதீதையாக அனுபவித்து ஆனந்த சாகரத்தில் மூழ்கி நிற்கிருன். ஆனந்த மென்றால் என்னவென்றால், அவன் இப்பொழுது "ஆகாசவாணியைக் கேள்! சொல்வாள்!" என்கிருன்.

"ஆகாசவாணியையாவது கேட்கவாவது!" என்றால்,

"உனக்குக் கேட்கக்காதிருக்கிறதா? அடைத்துபோய்விட்டதா?" என்கிருன்.

"கடவுள் கிருபையால் காது கேட்கிறது! இன்னம் அடைத்துப்போகவில்லை!" யென்றால்,

"காதுதானே கேட்கிறது! காதுக்குள்ளிருந்து கேட்கிறவனுக்குக் கேட்கவில்லையே! இன்னுமவன் 'சந்தை யிரைச்சலிலே குடியிருந்து கெட்டேனே!' யென்று குரல் பாய்ச்சி யழுகிற ஓலம் கேட்கிறதே! ஐயோ! பாவம்!' என்று அங்கலாய்த்துப் பரிதபிக்கிருன்.

"என்ன உளறுகிறீர்! ஒன்றும் விளங்கவில்லையே" என்றால்,

"நான் உளறுகிறேன்! நீர்குளறும் பார்க்கலாம்!" என்று சொல்லி,

"வேதமுதலானநல் லாகமத்தன்மையை விளக்குமுட் கண்ணிலார்க்கும், மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும், வீறுவாதம் புகலுவாய், வாதநோவாளர்க்கு மெட்டாத முக்கணுடை மாமருந்துக் கமிர்தமே!" யென்று சாந்தாகாந்தனுய்ப் பிதற்ற ஆரம்பிக்கிருர்.

"ஆனந்தம்" என்றுலென்ன? ஆகாச வாணியைக் கேட்டு நீர்தான் சொல்லுமே யென்றால்;

'அன்பே யானந்தம் அருளுமோ ரானந்தம்
'இன்பே யானந்தம் இன்னுயி ரானந்தமென்பர்;[தேப
என்பேயுருக்கி யின்னுயி ருண்ணன்பன்றி வேறுள
என்பே யுருக்கியன்பா லெனையாண்ட ஆனந்தநாயகி
[யே!

என்று அறிவிலாய்ந் தமர்ந்தோர் பாடும் அகண்டானந்தப் பாட்டுப்பாடுகிருர்.

"ஐயோ! பாவம்! பித்தேறிப் போய்விட்டது!" என்று அவ்வகண்டானந்த சுகத்தை யறியாதோர் அங்கலாய்த்துப் பரிதபித்தால், உபேக்ஷயாயிருக்கிருர். ஒருசமயம் உன் மத்தனைப்போல்,



"கண்டேன் கண்டதைக் கண்டபடி நானுரைத்தால்
காணுதைக் கட்டியழும் கண்கெட்ட குருடரெல்லாம்
பேயென்றும் பித்தென்றும் பரிகாசம் செய்கிருர்கள்;
பேயென்றுலென்ன, பித்தென்றுலென்ன!
பரம்பொருளெல்லாம் ஒன்றுதானே!' —

என்று ஆனந்தத்தாய்மொழியிலிருந்து அபேதபாவ லக்ஷணம் எடுத்துரைக்கிருர்!

இவர் கூத்தை யென்னென்றுரைக்கிறது! ஏதென்றெழுதுகிறது! ஒரு நாள் அவர்முன், தேஹத்தில் "தன்னைப் பெற்ற ஆத்தாள்" வந்து ஸ்வாமிமலையாண்டி போல் உன்மனியவஸ்தையில் உன்மத்த சாந்தனு யுட்கார்ந்திருப்பதைக்கண்டு பரிதபித்து, "ஐயோ! இப்படி ஆண்டியாப் போகவா நான் வேண்டிப் பெற்றேன்!" என்று தன் குறையைச் சொல்லிக்கொள்ள, "உலகமாயை நீ! உன்ஜபம் பலிக்காதென்று" சொன்னுற்போலும் கண்ணுல் மட்டும் பார்த்தும் பாராத பார்வையால் சுட்டிக்காட்டிச், "சும்மாவிருக்கச் சுகம் சுகமென்றோதும் மறையெல்லாம்" என்றபடி சும்மாவிருக்க, அந்தத் தாயாரும் மஹாகாளியைப்போல் மருள மருள விழித்து வெறித்து மாயமாய் மறைந்து போயினள்.

"சாந்தோபசாந்தன்" காந்தோபகாந்தனுய் அன்புள்ள இடத்திலெல்லாம் ஆகர்ஷணசக்தியூக்க ஸ்ரீகாந்தசாந்தனுய் விளங்குகிருன். அவன் உள்ளத்தை யாழம்பார்க்க முடியவில்லை.

மஹேந்திரபுரி, மாயாபுரி, இரண்டையும் விட்டுத்தள்ளி "ஸ்ரீபுரம்" என்னும் காந்தமலை யுச்சியிலுள்ளதோர் அந்தப்புரத்தில் ஸ்ரீகாந்தனுகி ஸ்ரீங்காரபுருஷனுய் வசித்துக்கொண்டிருக்கிருன். "மோஹினி மோஹந"னை மூத்தபிள்ளையார் உச்சிஷ்ட மந்திரம் உபதேசிக்க மந்திரராஜாவான அவரையறிந்து மஹாமந்திராதிரூபியான "ஷண்முகவிக்நராஜஜந்நி"யை, நாதாந்த வெட்ட வெளியில் அவள் இட்டதோர் சட்டமாய்த் திட்டமுடன் பூஜித்துப் பூஜித்துப் பூஜ்யதையான அவள், "நிர்வாணசுகதாயினி"யாயிருந்து நிர்வாண தசையில் சாந்திப்பத்நியாய் வந்தாண்டு அடிமை பூண்டது போல், வியவகார தசையிலும் விராட்ரூபியாயிருந்து தன்னை விட்டுப் பிரியாது அத்வைதமாய் ஆண்டு அடிமை கொள்ளவேண்டுமென்று சதா நிஷ்டையிலிருந்து ததா பூஜை செய்து வருகிருர். அசுவமுகர் அகஸ்திய மஹாரிஷிக்குப் போதித்த கலி தோஷ நிவாரண பூஜையை நித்தியோபாஸனையாகச் செய்து வரும்யார்தான் கலியிலிருந்தும் கிலியை வென்று புலியைக் கொன்று "போதபூரண வெளிக்குள்" "ஏது மறநில்" என்று சொன்ன அவள் ஆஜ்ஞைக்குட்பட்டு, உபாயமறிந்து அபாயமழிய, ஆனந்தம் நிறைந்து அன்புருவேயாகி, கல்கி யவதாரத்தைக் கண்டுய்ய மாட்டார்கள்!

---

## விராட் ரூபா.

## VI. விரஜானந்தன்

சாந்தோபசாந்தன் சதா நிஷ்டையிலிருந்து ததாபூஜை செய்து வரவும், தத்பத லக்ஷியார்த்தமாம் "ஏகைவசக்தியும்" துவம்பதலக்ஷியார்த்தமாம் "பிரயோசனர்த்தாய" அபரசக்தியும் அபேதமாய் விளங்கக் கண்டான். இல

விரண்டும் சேர்ந்த "தத்துவம்" பரமாயும் அபரமாயும் விளங்குவதை ஸ்பஷ்டமாய்க் கண்ட சாந்தோபசாந்தன் பராபரலங்கிரமணத்தின் மர்மத்தை யுணர்ந்தான். "தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு" என்னும் திருமந்திரத்தின் உண்மையை உள்ளபடி தீர்க்கதரிசனையால் உணர்ந்த திருஷ்டாவானான்.

"தத்துவம்" எதுவோ "ஸத்தியம்" அதுவே: 'தத்துவம்' க்ஷேத்திரம், 'தத்துவன்' க்ஷேத்திரஜ்ஞன், தத்துவத்தின் தன்மையுணரவும் தத்துவனையே தத்துவத்தில் கண்டு மயங்காதிருந்தனன். தத்துவமபக்கந் தன்னை விலக்கவும் தற்பரமாய் நின்றுணருமோர் உத்தம ரகஸியந்தனை யறிந்தான். உபாதிரஹிதமாயிருந்துணர்ந்த தோர் உந்த உணர்வே, உபாதிஸஹிதமா யிருந்துணர் உணர்விற்குச் சாக்ஷியாய் நிற்றலைக்கண்டான். ஆகவே, உபாதிஸஹிதமாயிருந்தும் உபாதி மயக்கம் பற்றாது தாமரை யிலையிற்றண்ணீர் போல் ஒட்டாதுடனிருக்கும் உள்மர்மத்தை யுணர்ந்தான். உணரவும், ஸ்ரீபுரம் விடாது, ஸ்ரீபுரத்திருந்தபடி திரிபுரம் புக்கான். ஸ்ரீபுரம் திரிபுர மூன்றையு மூடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்ததாயிருப்பதை, இப்பொழுது அவன் நிதரிசனமாகக் கண்டான்:——"அன்பது வாதல்' அறிந்தமர்ந்து,—அன்பது வாகவும், அதுதான் ஆகவும், "அன்பதுவது நீ" யென்றதோர் அற்புத ரஹஸியந் தன்னை அறிந்து அதில் ரமிக்கவும் சாந்தாகாந்தன், தானே ஸத்தியாநந்தனுக ஆயினன். ஸத்தியாநந்தன் திரிபுரவாஸியாகவும், அத்திரிபுரங்களுக்கும் அதிஷ்டானமான தெய்வத்தைக்கண்டு மகிழ்ந்தான். தான் என்றும், திரிபுர மென்றும், திரிபுராதிஷ்டானமென்றும் பேர் பல வாயினும எல்லாம் தன் உள்ளுன் பின்கண்ணே உள்ளபடி யிருக்கக் கண்டான். இருக்கக்கண்டு பின்வரும் திருமந்திரத்தை அஜபமாகவும், ஜபமாகவும் ஜபிக்கலுற்றான்.

"கண்டேன் கழ்தரு கொன்றையினனடி
கண்டேன் கரியுரியான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறைவானடி
கண்டேன் கழல தென் அன்பினுள்யானே."

இப்படியாக "அபேததரிசனம்" செய்து கொண்டு அத்துவித மாகியும், தத்துவ வழிப்பட்டுத் தானே பிழிந்தனன்.

"ஈசனறியுமிராப் பகலுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிசு செய்வார்களை"

யென்றிருப்பதால் சாந்தோபசாந்தனை "சாந்தாகாந்தன்" தத்துவந்தானறிந்து தத்துவ வழியிற் பிரகாசிக்கவும், சாந்திபபத்தி, தத்துவத்துட் புகுந்து கொண்டு சாந்தாகாந்தனைப் பின்பற்றி உடன் நிகழ்பவளாயினள். சந்தா தத்துவத்திற் புகுந்து மாயை மயக்கொழிந்து நிற்கவும் "விரஜா" வாகவிளங்கினள். அவளைக் காணவும் ஸத்தியானந்தனை சாந்தாகாந்தன் "விரஜாநந்தன்" ஆகச் சொரூபமுற்று விளங்கினன். சாந்தோபசாந்தன், சாந்தாகாந்தனுகி, சாந்தாகாந்தன் தானே ஸத்தியாநந்தனுகி, ஸத்தியாநந்தன் விரஜாநந்தனுக விளங்கவும், மாயாபுரி மஹேந்திரபுரி யெல்லாம் அவன் இச்சா மாத்திரையிலிருந்துண்டானவை போல உண்டாயின. ஆனல் அவை முன்போல் அவனை மயக்கவில்லை.

இப்பொழுது தான்மாயை மயக்கொழிந்து அருள்வெளிதன்னில் அமர்ந்திருக்கவும், அந்த அருள்வெளிச் சாயையிலிருந்து மாயாபுரி, மஹேந்திரபுரியெல்லாம் உண்டாகி தன் இச்சா மாத்திரையால் தோற்றவும் மறையவும், தான் அவையெல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லவும் அவையால் சுககனமான தன் சித்ரூப சாக்ஷாத்காரத்துக்கு யாதொரு அங்கபங்கமும் நேரிடாமலிருக்கவும் கண்டான்.

"விரஜா" வைக்காணவும் சாந்தாவைப்போல் அவளும் தன் ஸ்வயம்ப்ரகாச ஸச்சிதானந்த ஸ்வரூபத்திலிருந்துண்டான சாயாதேவியென்றுண்மையா யறிந்து லீலா விநோதமாய் அவளை யங்கீகரித்தான். விரஜாவும் உடன்பட்டு உள்ளம் ஒன்றி நின்றாள்.

"தவம்வேண்டு ஞானந்தலைப்பட வேண்டில்
தவம்வேண்டா ஞானஸமாதி கைகூடில்
தவம்வேண்டா மச்சகச மார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந்தனை யறியாரே."

எனும் திருமந்திரத்துக்கிலக்காய் சதாநிஷ்டையிலிருந்து சகஜசமாதி யெய்திய சாந்தோபசாந்தனுக்கு தவம் வேண்டாமாதலில் அவன் லீலா விநோதமாய் விரஜாவோடும் கிரீடித்துக் கொண்டிருந்தும் கிருதார்த்தனுகவே யிருந்தான். ரஜோ குணத்தை முற்றும் வென்று கோபதாபங்களற்று விளங்கிய ஞானசக்தியாம் "விரஜா"வோடு விளையாட்டுப் புரிந்து கர்மத்துக்கும் கர்த்தாவுக்கும் சாக்ஷியாயிருந்ததால் அவன் "விரஜாநந்தன்" என மூவுலகிலும் பிரக்கியாதி பெற்று விளங்கினன்.

விரஜாநந்தனே, விசுவநாதனுகி விளங்க, விரஜாவான சாந்தா தானே, விராட்ரூபா வாக வந்தவதரித்தாள்.

தைஜஸாத்மகனான விரஜாநந்தன் கலியிற் புகுந்து கர்மவிலங்கிட்டுக் கொண்டு, "பக்தி வலையிற் படுவோன்" தானே, கர்மவலையிற் பட்டோனுகக் காட்சி கொடுத்து காண்பானும் காட்சியும் ஒன்றாகத் தானே யிருந்து விளங்க, கிரியாசக்தியான அவன் தேவியும் "விராட்ரூபா" வாகி வேட்கைவலையிற் பட்டாள்போலும் காமக்கணையோன் கடிந்தான் போலும், வேற்றுமை செய்யும் வாதனைக்குட்பட்டு, விரஜாநந்தனை, விவிதாநந்தனுய்க் கண்டு, காமகேளிதனுய் பாவனுமாத்திரையால் பவஸாகரத்தை யுண்டுபண்ணி, கதம்பவனத்தில் ககநமாத்திரமாய், பவாரண்யத்தில் பாவனுமாத்திரமாயிருந்து கூடி ரமிப்பாளானள். இவளோடு ரமித்தும் ரமியாதவனுய் அனைத்துக்கும் சாக்ஷியாயுள்ள ஆத்மநாதனும் விரஜாநந்தனே, விசுவநாதனுகி யோகாம்பாளாம் விராட் ரூபாவைச் சேர்ந்தும் தன் அத்வைத நிலைகுலையாது நித்தியானந்தத்திலிருந்து நிர்மல, நிராமய, நிராலம்ப, நித்திய முக்தனுய் விளங்கிக்கொண்டிருந்தான்.

"ஒடுங்கு நிலைபெற்ற உத்தமருள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங்கில்லை
யிடுக்கையுமில்லை யிராப்பகலங்கில்லை
படுப்பயனில்லை பற்றுவிட்டோர்க்கே."

"விசுவநாதன்" பழையபடியே உபேந்திரனுகி, உபேந்திரன் நரேந்திரனுகி, நரேந்திரன் நாராயணனுகி விளங்கிக் கொண்டிருக்கிறான். நாராயணனிடத்திலே நரன் ஒடுக்கமாதலால் நாராயணன்தானே நரனும் விளங்குகிறுனென்று சொல்லாமே யமையப் பெறுமென விடுத்தனம்.

"நாதத்திலேயாடி நாநாராயணனுகி
வேதத்திலேயாடி வாதராயணனுகி
போதத்திலேயாடிப் பூதபௌதிகனுகு
தீதற்ற தேவாதி தேவர்பிரானே!"

தேவாதி தேவர்பிரானே "போதத்திலேயாடிப்பூதபௌதிகனா"கவும், அறிவுருவாம்தேவியவள் தானே மதுர-மீனாக்ஷியாகத் தோன்றி, விசாலாக்ஷியாகஅவதரித்து விசுவநாதரை வரித்தது போலும் பார்வதியாகிச் சங்கரரை வரித்தது போலும் மதுர-மீனாக்ஷியாகத் தோன்றி மீனாக்ஷிசுந்தரரை வரிக்கத் தவமியற்றித் தோத்திரம் செய்து துதிப்பாளாய் நிற்கிறாள்.

### மதுர-மீனாக்ஷி விடுதூது.

(1) மீனாக்ஷி சுந்தர மின்னொளி மாதவ
காமாக்ஷி காந்த காதல் நிறைந்தவ
எனையாட்சி கொண்டரு ளீசனுக்கீச
மனையாட்சி கொள்கவுன் மதுர-மீனாக்ஷி
[யை.

(2) தேவிதந்தருளிய திவ்யதேஜோத்பவ
தேவியருள்புரி திவ்யநாமோத்பவ
தேவியருள்தரு திவ்யரூபோத்பவ
தேவியருள்பெற வெனைவந்தாள்பவ.

(3) பவபவ ஜய ஜய பர்த்தா ஜய ஜய
தவபவ ஜய ஜய திவ்யா ஜய ஜய
பவயுவ ஜய ஜய பக்தா ஜயஜய
சிவபவ ஜய ஜய சிஷ்டா ஜய ஜய!

(4) ஜய ஜய மாதவ் ஜய ஜய கோவிந்த!
மூலத்துதித்த முக்தா ஜய ஜய!
காலத்துதித்த கிருஷ்ணா ஜய ஜய!
தேசத்துதித்த திவ்யா ஜய ஜய!

5) ஜய ஜய அன்ப! ஜய ஜய அருள!
தெருளா திருந்தெனை யாள்பவ ஜய ஜய!
மருளாத்திருவுளத் துருவாயமர்பவ ஜய
[ஜய
இருளா திடத்தெனை மருளாதணைபவ
[ஜய ஜய!

ஓம் மதுர-மீனாக்ஷியை நமஃ

# TWENTY SACRED SONGS IN THE SPIRITUAL WORSHIP OF KUNDALINI.

## திருப்பா இருபஃது—குண்டலிநியோக முதிர்வு.

(மாயாண்டிச் சித்தன் ஞானப் பாட்டு.)

"ஓம் பண்ட புத்ர வதோத்யுக்த பாலா விக்ரம நந்திதாயை நமஃ"

ஸ்ரீ ஸாவித்ரியா ரிஷிஃ

(இராகம்-ஆநந்த பைரவி)

1. திருப்புலம்பல்-சிவாநந்த முதிர்வு.

கண்ணேயென் கார்முகிலே கருணைமழை பொழியமுதே
விண்ணேயென் வினைப்பயனே விண்ணவர்க்கா மின்னமுதே
பண்ணேனுனக்கான பூசையெனப் பார்மீ தெனைவிட்டு
விண்ணேநீ போதியோ வினைப்பயன்யா னுண்கவென்றே.



2. திருக்குலா-அனுபவமிடையீடு படாமை.

எண்ணாத எண்ணமெல்லாம் மெண்ணியிறு மாந்திருந்தேன்
பண்ணாத பூசையெல்லாம் பண்ணியுனைப் பெற்றேனென்று
நண்ணாதே யிப்புவியில் நாயேனையிருக்கவிட்டு நாணாதேபோயினையே
விண்ணா டதுதேடி விபூதியின்மே லிச்சைவைத்தே!

3. அற்புத மறியாமை-அன்பவமாற்றாமை.

இச்சைவைத்தே யேகினைநீ யின்பதுன்ப மிவையொழித்து
லச்சைகெட்டே யிருந்தின்னும் உழலுகிறேன் துவந்துவத்தில்
பச்சைமுகில் வண்ணன் தங்கை பச்சையுமை பார்வதிபோல்
இச்சைவைத்தே நீயுரித்த பச்சைவர்ணத்துயில்காணப் பதறுதேயென்மனந்தான்.

4. சென்னிவந்நி-சிவ விளைவு.

பதறுதுகாண் என்மனமும் பாழ்வினையும் விட்டதில்லை
சிதறுதுகாண் என்சிந்தை சின்மயமு மானேனில்லை
கதறுகிறேன் கற்றாபோல் கசிந்துருகி மனம்புண்ணாய்ப்
பதறுகிறேன் நற்றாயே! பரிந்தெனைவந் தாற்றாயோ!

5. திருவார்த்தை-அறிவித்தன்புறுதல்.

ஆற்றாத் துயரத்தில் ஆழ்ந்துள்ளேன் காண்தாயே!
ஆற்றாத் துயரமெல்லா மாற்றவல்லாய் நீயன்றே!
மாற்றாந்தாய் போலிருந்து மாயையைக்கொண் டாட்டுவித்தாற்
காற்றாடி போலுமுள்ளேன் கரைந்துருகா தென்செய்வேன்.

6. எண்ணாவெண்ணம்-ஒழியாவின்பத்துவகை.

என்செய்வேன்! ஏதுசொல்வேன்! என்மீதோ கருணையில்லை!
வன்செய்கை செய்யவல்லேன் வாய்விட்டும் பிதற்றறியேன்
நின்செய்கையொன்றன்றி யென்செய்கை யென்றெதையும் காணாதகாட்சிதரிம்.
நின்செய்கையென்செய்கை யெனுபேத மெனைவந்து வதைசெய்யாதே!

7. ஸ்வாதிஷ்டானாம்புஜாரூட காக்கிநியம்பாஸ்வரூபிண்யை நமஃ—துரியமுதிர்வு.

செய்யாதேவதை - செயலற்றிருக்க நான்
வெய்யாதேயுடல் - வேற்றுமைதானற்றக்கால்
நையாதேமனம் - நானவனெனும் பேரற்றால்
பையாதேயுளம் - பழவினை தானற்றக்கால்.

8. தவாதசக்ஷேத்ர யாத்திரை—அனுபவாதீத முரைத்தல்.

அற்றிலேன் காயவாழ்க்கை யாதலா லுழலுகின்றேன்
செற்றிலேன் மாயந்தாண்டிச் சேயிலுங் கடையனானேன்
மற்றிலேன் மஹத்துக்கள்வாழ் மனப்பாழறுதாவெளியில்
கற்றிலேன் கனகவித்தை கர்மத்தைச்சுட் டெரிக்கத்தானே.

9. திருப்படையெழுச்சி—பிரபஞ்சப் போர்.

1 கர்மத்தைச்சுட் டெரிக்கானாயேன் காயத்தைச்சுட் டெரிதீகண்டேன்
2 காயத்தைச்சுட் டெரிதீகண்டும் காமத்தைச்சுட் டெரிதீகாணேன்
3 காமத்தைச்சு டெரிதீகண்டால் கர்மத்தைச்சுட் டெரிதீகாண்பேன்
4 கர்மத்தைச்சுட் டெரிதீகண்டால் காயத்தைச்சுட் டெரித்தேனுவேன்.

10 திருவெண்ணீற்றுப்பா—அணிந்தோர் தன்மை.

காயத்தைச்சுட் டெரித்தேனுல் காமத்தைச்சுட் டெரிதீயாவேன்
காமத்தைச்சுட் டெரித்தேனுல் கர்மத்தைச்சுட் டெரிதீயாவேன்
கர்மத்தைச்சுட் டெரித்தேனுல் காயத்தைச்சுட் டெரிதீக்கஞ்சேன்
கர்மத்தைச்சுட் டெரித்தனாளே காயகல்ப விபூதியாவேன்.

11. பண்டாய நான்மறை—அனுபவத்துக்கையமின்மை யுரைத்தல்.

காயகல்ப விபூதியாக்கும் வகையறியாது விதிக்காளானேன்
காயகல்ப விபூதியேற்கும் வகையறியாது விதிக்காளானேன்.
காயகல்ப விபூதிகேட்கும் கருத்தறியாது விதிக்காளானேன்.
காயகல்ப விபூதிகொடுக்கும் குட்டறியாது விதிக்காளானேன்.

12. மூலாதாராம்புஜாரூட ஸாக்கிநியம்பாஸ்வரூபிணியை நமஃ

அக்கிப்பிரவேசம்—துரியாதீதம்—தேஹோபாதி யொழிதல்.

விதிக்காளாகியே வெந்துநொந்துளேன் வேகுதுபா ரென்னுடலம்
சதிக்காளாகியே வெந்துநொந்திலேன் வேட்கைத்தீப்பட் டலறுகின்றேன்
பதிக்காளாகியே வெந்துநொந்துசெத்திலேன் பழிக்காளாகித் தவிக்கின்றேன்காண்
சதிக்காளாகியே வெந்துநொந்தும்யான் விதிக்காளாகி வருந்துகின்றேனே.

13. திருப்படையாட்சி—ஜீவோபாதி யொழிதல்.

வருந்துகின்றேனுன் வருத்தமதாற்றும் வகையறியா துள்ளே
வருந்துகின்றேனுன் குருந்தமரத்தடி மிசைவந்தருளிய குருபரனடியார் பதம் பற்
றிருந்திருந்தோம் புகின்றேனு னிக்காயவெண் ணீறதாம் வகையறியாதே [ருதே
குருந்தமரத்தடி மிசைவந் தருளியகோனவன் திருநீற்றுண்மை யுணர்கிலேனே.

14. ஆநந்தமாலை—சிவாநந்த விருப்பம்.

உணர்கிலேன் உள்கிலேன் உள்ளமறிந்துண்மை யோதுகில்லேன்
புணர்கிலேன் புக்கிலேன் புந்கையாற்றிரி புரமெரித் தாள்பதம்
உணர்கிலேன் உள்கிலேன் உண்மையிற்றிருநீற் றுண்மைதன்னைப்
புணர்கிலேன் பூசுகில்லேனென் புன்மைபோகத் திருநீறுதானே!

15. 'அச்சோ!'க்குறி—அனுபவ வழியறியாமை.
திருநீறு தானே திருவருள் பயக்கும்!
திருநீறு தானே கருவிருள் போக்கும்!
திருநீறு தானே பவமவம் நீக்கும்!
திருநீறு தானே யாதிவியாதிக்குமோர் அருமையாம்மருந்தே!

1 சித்தன். 2 யோகி. 3 பக்தன். 4 தொண்டன்.



16. ஹாக்கிநீயம்பாஸ்வரூபிண்யை நமஃ—சாந்திப்பத்நீ க்ஷமாபுத்ரா-ஹம், ளம், க்ஷம்,

மருந்தே யாமது மாயம்படச்சுட்ட வெம்மையினுல்
விருந்தே யாமது வினைகெடப்பேரருள் தந்தமையால்
பருந்தே யாமது பகலவனொளிபடப் பார்க்குந் தன்மையினுல்
இருந்தே யாவது மிருவினைநேரொப்பச் செய்கவன்றே!

17. யாகிநீயம்பாஸ்வரூப ஸ்ரீகுருவே நமஃ—'ஸ்ரீகுருஃ ஸர்வகாரண பூதாசக்திஃ'—(சுருதிவாக்.)

"இருவினை நேரொப்பி லின்னருட் சக்தி
குருவென வந்து குணம் பலநீக்கித்
தருமென் ஞானத்தாற்றன்செயலற்றுற்
றிரிமலந்தீர்ந்து சிவனவனுமே."—திருமந்திரம்.

18. பராபரையோக சித்தி.

"இரவும் பகலுமிலாத விடத்தே
குரவஞ்செய்கின்ற குழலியையுன்னி
யரவஞ் செய்யாமலவளுடன் சேரப்
பரிவொன்றிலாளும் பராபரைதானே."—திருமந்திரம்.

19. மந்திர ஸித்தி.

"மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
யந்திரமாவதும் தூவெளியாவதும்
எந்தைபிரான்தன் இணையடிதானே."—திருமந்திரம்.

20. கைவல்லியச் சிறப்பு—சிவச்சுடர் விளக்கம்.

"மலைமகள் துணைவன் முக்கணன் நீல மணிமிடற்றவ னென்வானோர்
திலகனேயுன்னைத்தகரமாங்குகையுட் டியானஞ் செய்திடு முறைசெப்பி
யலரவன் முகுந்த னீசனேடேவை யுமையநின் விபூதியென்றுரைக்கு
மலவிருள் திமித்துச் சிவச்சுடர் விளக்க வந்தகைவல்யமிறையே!"

## "DARE TO BE IN THE RIGHT."

## "தர்மம் சர"

### உண்மைச் சாதனை திண்மை யளிக்கும்.

"உண்மையைச் சாதிப்பான்
* ஒண்திறல் யோகி."

"They are slaves who dare not be
In the right with one or two."— *Tennyson*

ஸத்திய மெதுவதைச் சாதிப் போர்தாம்
பத்தியமாக வீரோருவ ரோடாயினும்
நித்தியமாமதில் நிலை நின்றொழுகுவர்:
பத்தியஸத்திய மில்லா மானிடர் பதரேயாவர்.

*ஒளி வீசும் திறமை நிறைந்த யோகி; யசஸ்உள்ள கீர்த்திப் பிரதாபனும் யோகி.

## BOOK REVIEWS AND NOTICES.

### புஸ்தகவரவு-பார்வைக்குறிப்பு,

### (1) "சந்திரகாந்தா."

இது ஜெ. ஆர். ரங்கராஜா இயற்றியதோர் இனிமைவாய்ந்த துப்பறியும் கதை. இவர் இதற்கு முன்னியற்றதோர் "இராஜாம்பாள்" கதையை விவேகசிந்தாமணியில் சாங்கோபாங்கமாய்ப் பார்வையிட்டெழுதியுள்ளோமாதலால், இக்கதை யெழுதியவர் சாமர்த்தியத்தைப்பற்றி இங்கு விவரித்தெழுத வேண்டியதில்லை. ஆனால் கதையின் விவரத்தையாவது எழுதலாமோவென்றால் அதுவும் உசிதமென்று தோன்றவில்லை. ஏனெனில் கதையின் ரஸம்அதன் அமைப்பிலிருக்கிறது. மிகவும் சாதாரணமான நித்தியப்படி ஸம்பவங்களில் எவ்வளவோ அருமையான தத்துவங்களெல்லாம் வெளியாகின்றன. பார்க்கக் கண்ணுள்ளவர்கள் நித்தியானந்தமாய்ப் பார்த்தனுபவிக்கிறார்கள். கண்ணில்லாக்குருடர்களோ என்றும் கபோதிகளாகவேயிருந்து செக்கில் கட்டியமாடுபோல் உழலுகிறார்கள். உலகதர்மத்தையறிந்து உண்மையையுணர 30-வயது போதுமானது. இந்த 30-வயதில் மூன்றுமற்ற வுண்மைதனை யுணராத மானிடஜன்மம் எல்லா அழகும் அங்க அமைப்பும் யௌவனமும் பொருந்தியிருந்தும்பிள்ளைப் பேறில்லாத பெண்ஜன்மத்துக் கொப்பாமென்று ஔவை பாடியிருக்கிறாளென்று ஒரு யோகி அப்பாட்டைச் சொல்லி யருத்தம் கேட்டார். "முப்பதாமாண்டளவில் மூன்றுமற்றவொன்றதனை" யென்று அடிதுவக்கினதாக ஞாபகம். இவ்வுலகம் ஓர் நடர்க்களம். இதில் ஆடும் வேஷதாரி ஜீவன். இந்த ஜீவநாடகத்தை மூன்றங்கமாகப் பிரித்து, அறியாமையே ஸ்வபாவமாக அமைந்த அறியாப்பருவமென்னும் குழந்தைப் பருவம் ஆதி முதல் 10-வயது வரையிலும், பிறகு அறிவோதயமாகி வளர்பிறைச் சந்திரன் போல வித்தியாபிவிர்த்தியாகும் காலம் 10-வருஷமாகி 20-வயது



வரையிலும்,வாலைவித்தையென்னும் இருவித உபாஸனையில் ஆயுஸ் கழிவதாக, 21-ம் ஆண்டில் அறிவறியாமை யிரண்டுங் கலந்த உலக வாழ்க்கையில் ஜீவன் பிரவேசிக்கிறான்.

இந்தக்காலத்தில் அவன் அறிவறியாமை யிரண்டும் கலந்த உலகமாயையை உள்ளபடி யறிந்துணர்வான் "இல்லறமல்லது நல்லறமல்ல" வென்னும் ஆன்றோர் வசனத்தில் இலக்குவைத்தவனாய், கடிமணம் புரிந்து கற்பகத் தருவாம் கன்னிகையின் கைபிடித்து அக்னி வலம் வந்து அம்மி மிதித்து அருந்ததி பார்த்து இல்வாழ்க்கை நடத்த வாரம்பிக்கிறான். இவன் செய்யு மில்லறம் நல்லறமாயின் 30-வயதாகுமுன் குழந்தை பிறந்து பிதிர்க்கடன் கழித்து, ரிஷிகடன் தீர்த்து, அக்னி ஹோத்திர, ஔபாஸனாதி அக்னிவித்தைகளில் தேர்ச்சி யடைந்தவனாய், அக்னியினாலேயே உண்மை உபதேசிக்கப் பெற்று, உபதேச வழியிலிருந்து, உத்தமோத்தமனாய் உண்மையை யுணர்ந்தனுபவிக்கும் கிருதகிருத்தியனாகிறான். செய்யவேண்டியதைச் செய்முறை யறிந்து செய்யுமவன் சீக்கிரத்தில் தானே கர்த்தா போக்தா இரண்டும் தானல்லவென்று கர்மஸ்வபாவத்தை யுள்ளபடி யறிந்து, சாக்ஷி மாத்திரமாயுள்ள சைதந்நிய ஸ்வரூபத்தில் லயித்து சின்மாத்திரமாய் விளங்குகிறான். செய்வான் செய்கை யிரண்டும் தாண்டிச் சாக்ஷிமாத்திரமான தானே செயலற்றும் பிரகிருதி தர்மத்தால் செயலுற்று விளங்குவதை யுணர்ந்தவன் "கிருத கிருத்தியன்" என்று சொல்லப்படுகிறான். திருகையிலேற்றப்பட்டமண் செயலற்றிருந்தும் திருகை சுற்றுவதினாலுண்டாகும் வேகத்தாலும் குயவன் வனைவதாலுண்டாகும் வேற்றுமையாலும் "குடம்" முதலான நாமரூப பேதங்களையுற்று விளங்குவது போல், ஸத்மாத்திரமான தத்பதலக்ஷியம் பக்குவம் செய்யப்பட்ட மண் போல் சின்மாத்திரமாகிச் செயலற்று நிற்க, மாயையின் மயக்கத்தாலும் (திருகைசுழல்வதற்கு உவமேயம் இது), ஈசுவர சங்கற்பத்தாலும் (குயவன் வனைவதற் குவமேயம் இது), நாமரூபப் பிரபஞ்சமாகப் பேதமுற்று விளங்குகிறது. இதை யுணர்ந்தவன் எவனோ அவன் கிருதகிருத்தியனாகிறான். செய்யவேண்டியதைச் செய்துமுடித்த "கிருதார்த்தன்" தானே சகஜநிலையில் கிருதகிருத்தியனாக விளங்குகிறான். ஜீவன் இப்படியாக சின்மாத்திரனே யாதலால், அவனுக்கு "சிதாபஸன்" என்கிற பேருண்டாயிற்று. சித்தினுடைய பிரதிபிம்பமான ஜீவன் மாயையிற் பிரவர்த்தித்து மாயைமயக்கி லகப்பட்டுழலுகிற கூத்தைச் சொல்லும் கதையை "துப்பறியும் கதை" யென்று ஏன் சொல்லக்கூடாது?

சந்திரகாந்தாவென்னும் கதையெழுதியவர் இவ்வளவு தூரம் தத்துவவிசாரம் செய்து அத்துவித பாவனையிலிருந்து தான் இக்கதையை" யெழுதினாரோ அல்லது மனோராஜ்யம் செய்து கற்பனைகட்டி யெழுதினாரோ, வேறெவ்விதமா யெழுதினாரோ அஃதையறிய வழியில்லை. சமைத்தவன் பாகசாஸ்திரம் பயின்று சமைத்தாலும் அல்லது பயிலாது பழக்கமாத்திரத்தால் சமைத்தாலும், உண்டு ருசிபார்ப்போன் உண்மையிற் பாகசாஸ்திரத்திற் றேர்ந்தவனானால், பதார்த்த குணங்கள் சேர்ந்துஅமையும் சூக்ஷ்ம தர்மங்களை யறிந்துள்ள தன் புத்தியைக்கொண்டு, சமைத்த பண்டத்தின் உருசியை ஆய்ந்தறிந்து அவைகளைப் பிரித்துக் கூட்டி அவ்வவற்றின் அமைப்பு சமைப்புகளை ஆழ்ந்துணர்ந்து ஆனந்திக்கா திரான். அம்மாதிரியாக, இக்கதையில் விளங்கும் ஐந்து ஜாதி ஸ்திரீ

களையும் அந்தப்புரத்தில் சேர்த்துக் கள்ளத்தனமாய்க் களவியல் நடத்தும் பண்டாரசந்நிதியும் அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் பார்ப்பினியாதும், மாம்ஸபிண்டங்களாயிருந்து மஹாபாதகம் செய்தவர்களான துராத்மாக்களோ, அல்லது பொன்னம்பலவாணன் பொறுக்குத்து நடம் புரியும் புனிதாத்மாக்களோ வென்று ஐயுற்று விசாரிக்கும் வேதனை நமக்கு வேண்டாம். ஏனெனில் வாசிப்போர் அவரவர் ஸ்வபாவம் போல் விஷயத்தை கிரகிப்பர். தண்ணீரும், மண்ணும், வெயிலும், காற்றும், ஒன்றேயாயினும் வேப்பமரமும் எட்டிமரமும் அவற்றைக் கைப்பு மிகுந்த தன் ரஸமாகச் செய்ய, தென்னையவற்றை இளநீராகவும் தேங்காயாகவும் கொப்பரையாகவும் செய்யும். வேம்பும் எட்டியும் கைத்தாலும் கல்பமாக உபயோகிப்பாருமுளர். தென்னைமரம் புனிதமான இளநீரையும் தேங்காயையும் தருவதாயினும், அதிலிருந்து கள்ளிறக்கிக் குடித்து மயங்குவாருமுளர். ஆகையால் "எமர்ஸன்" என்னும் அமெரிக்கா தேசத்து தீர்க்கதரிசி சொல்லுவதுபோல், மனிதன் தன்னுள்ளேயிருப்பதையே வெளியில் காண்கிறான். உட்பிரபஞ்சத்துக்கும் வெளிப் பிரபஞ்சத்துக்குமுள்ள சம்பந்தத்தை யுள்ளபடி யாய்ந்தறிந்த உத்தமர்களுக்கு உலகத்தில் நடப்பதெல்லாம் துப்பறியும் கதையாம். சாந்திரகாந்தா என்னும் பேரே அத்வைத சம்பந்தமானதாயிருக்கிறது. ஆனால் இதன் மர்மத்தைக் கதையைப் படித்தபின் அவரவர்கள் தங்கள் உள்ளத்தை யாராய்ந்து பார்த்துக்கொண்டு தெரிந்துக்கொள்ள வேண்டியது. மனதுக்கும் மாயைக்கும் அதிஷ்டானமான சந்திரனைக் காந்தசக்தியால் இழுக்க வல்லது எதுவோ அதை உள்ளுணர்ந்து உண்மையாய்த் தரிசித்தால், சந்திரகாந்தாவின் மர்மம் விளங்கும். அக்காள் தங்கை யிருவர் பேர்களும் சேர்ந்து சந்திரகாந்தாவென்னும் கிரந்தத்தின் பேரமைந்தது போல், பரம் அபரம் என்னுமிரண்டும் சேர்ந்த பராபர சக்தியும் பின்னமாயும் அபின்னமாயும் விளங்குவதை யுணர்ந்துய்வார் உத்தமராவோர்.

---

## (2) சந்நியாசி கீதமும் பாரதஜாதீய கீதமும்.

இது ஸ்ரீமத்விவேகாநந்தஸ்வாமிகளும், ஸ்ரீமத் பாபா பிரேமாநந்த பாரதி யவர்களின் அமெரிக்கா நாட்டுச்சிஷ்யைகளுள் ஒருவராகிய ஆந்தன் அம்மை அவர்களும் முறையேசெய்த ஆங்கிலகீதங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு. இவற்றையியற்றியவர் மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் கோபால கிஷ்ணையரவர்கள். இவர் நம் விவேகசிந்தாமணிக்குச் சில கீதங்கள் மொழிபெயர்த்திருக்கிறாராதலின் இவருடைய வாக்கு வல்லபமும் ஹிருதயதூல்லியமும் விவேகசிந்தாமணியை விடாது வாசிப்போர் அறிந்ததேயாமென்று எண்ணுகிறோம். ஸந்நியாசி கீதம் பதின்மூன்றும் இங்கிலீஷிலும் தமிழிலும் பாலர் விருத்தர் எல்லாராலும் மனப்பாடம் செய்து மனனம் செய்துவரத்தக்கது. இவற்றின் சொன்னயத்தோடு பொருள்நயமும் பொருந்தி விளங்குவதைக்காட்ட மூன்று நான்காவது கீதங்களை மட்டும் இங்கெடுத்து வரைகிறோம்:—

அஜ்ஞான அந்தகாரம் போக்கல்.

எத்றகும் அஞ்சா இயல்புடைத் துறவீ!
இடுக்கண் மேன்மேல் அடுக்கும் பொருட்டுச்
சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றொளி காட்டி
இட்டுச் செல்லும் துட்டத் தீப்பேய்
அந்த காரம் அடியொடு தொலைத்தி.—
வாணாள் ஆசையைப் பேணு தொழிச,—



ஆ! ஆ!! அதுவே ஜீவாத் மாவைப்
'புநரபி ஜநநம் புநரபி மரணம்'
என்னும் இவற்றிற் கீர்த்துச் செல்லும்.
தான்அடங் கொருவன் தான்அடக் குவன்எலாம்
ஈதறிந் தென்னும் இடம்கொடா திருத்தி.
ஓதுகநீ "ஓம் தத் ஸத் ஓம்!" என.

கர்மவிதிக்கப்பாலுளாது ஆத்மா.

அஞ்சுதல் அறியா நெஞ்சநற் றுறவீ!
"எவன் விதைப் பவனோ அவன்அறுப் பவனே.
காரணம் உளவேல் காரிய மும்உள.
நன்மை விதைத்தவன் நன்மை அறுப்பன்.
தீமை விதைப்பவன் தீமை அறுப்பன். இவ்
விதியி னின்றும் விலக்காவார்இலர். [டெனப்
உருப்பெற் றோர்க்கெலாம் உறுதளை உண்"
புகல்வர். இதினிற் பொய்இலை. ஆயினும்,
நாம ரூபம் ஆம்இவற் றப்பால்
என்னும் தடையற நின்றுள தான்பா,
அதுதான் நீஎன் றறியக் கடவை.'

ஓதுக நீ "ஓம் தத் ஸத் ஓம்!" என.

மிஸ் ஆந்தன் இயற்றிய "India's National Anthem" என்னும் பாரதஜாதீய கீதம் முற்றும் இங்கிலிஷில் விவேகசிந்தாமணியிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பாரதஜாதிய கீதம் எட்டும் நெட்டுருப் போட்டு பாரத வருஷத்திலுள்ள ஒவ்வொரு வராலும் சிரவணமனன நிதித்தியாஸனமுறை பற்றித் தியானித்துத் தியேயாகாரமாகும் வரையில் பஜிக்கத்தக்க அவ்வளவு முக்கியமானதாம்.

---

## (3) ரத்நாவளி.

இது ம-ா-ா-ஸ்ரீ ப. சம்பந்த முதலியார், பி-ஏ-பி-எல், அவர்கள் இயற்றியதோர் தமிழ் நாடகம்; ஸம்ஸ்கிருதத்திலுள்ள ரத்நாவளி கிரந்தத்திலிருந்து எடுத்தமைத்து எழுதப்பட்டது. இது 1898-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இவர் நாடகத்திற்சிறந்தவரெனப் பெயர் பெற்றிருப்பதால், இவரது நாடகத் தமிழ்வல்லமையை நாடகத்தில் வல்லோர்தாமே மெய்ச்சத்தக்கது. நாடகவமைப்புபூர்வகிரந்தத்திலுள்ளதேயாதலால், அஃதைத் தமிழிலமைத்ததொன்றே இவர் செய்கை. இது மிகவும் சரஸமான நடையில் எழுதப்பட்டிருப்பதால் எல்லாரும் இனிமையுடன், வாசிக்கத்தக்கதாயிருக்கிறது.

---

## (4) "கர்மயோகி.'

இப்பெயர் கொண்டதமிழ் மாதாந்தப்பத்திரிகையொன்று புதுச்சேரியிலிருந்து 1910-ம் ளூ ஜனவரிமீ முதற்கொண்டு வெளியாகி முதல் சஞ்சிகையொன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இது ஸ்ரீமான் அரவிந்தகோஸ் இங்கிலீஷில் பதிப்பித்துவரும் "கர்மயோகின்" என்னும் பத்திரிகையின் கொள்கையை அனுசரித்துத் தமிழில் பிரசுரமாய் வருகிறதாகத் தோற்றுகிறது. ஸ்ரீமான் அரவிந்தகோஸ் பேரைச்சொன்னாலும் போலீஸார் மோப்பம் பிடித்துவந்தாலும், கர்மயோகத்தில் குற்றம் எதையும் காணோம். இப்பத்திரிகையின் கொள்கை முதற்பக்கத்தில் "ஸ்ரீகிருஷ்ணாய நம:" என்று குருவணக்கம் சொல்லியிருக்கும் இவ்விருபாக்களால் நன்கு விளங்கும்.

I

"கரும யோக மெவ னறிந்தான்
கருமயோக மெவன் புரிந்தான்
கரும நிலமாங் குருநிலத்தே,
கலங்கி யிடர்கொள் பார்த்தனுக்குக்
கருமயோக மெவன் புகன்று
காத்தல் செய்தான் யாமந்தக்
கருமயோகி தனது மலர்க்
கழலே துணையென் றிறைஞ்சுவமே,"

II

"பெருமை சிறுமை யென்பவைதாம்
பேணுந் தொழிலிற் சிறிதுமில
அருமையுடைய தொழிலேனும்
அன்றி யெளிதே யாயிடினும்
தருமம் எனவே யதுபுரிக
சாரும் பயனை விரும்பலை காண்
கருமயோக மிது வெனவே
காட்டும் பெருமான் கழல் பணிவாம்."

இதற்கு ஆக்ஷேபனை சொல்வது அஸாத்தியமே. அப்படியே ஆக்ஷேபித்தாலும், பிரகிருதி தர்மத்தினால் அது செல்லாது போகும். பிரகிருதி தர்மத்தை விகிருதி தர்மம் ஒருக்காலும் வெல்லாது. பிரகிருதி என்பது இயற்கைவிதி. விகிருதியென்பது செயற்கைவிதி.

## Agricultural Notes and Extracts.

வியவசாயக் குறிப்புகளும் விஷயத்திரட்டுகளும்.

சென்னை வியவசாய இலாகாதார் பிரசுரித்த வருஷபஞ்சாங்கம் இரண்டணா விலிருந்து ஒரு அணாவாக விலை குறைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதுகவர்ன் மெண்ட் பரெஸ் சுபரின்டெண்டிடமும் வியவசாய இலாகா டைரெக்டர் ஆபீஸிலும், டிப்டி டைரெக்டர்கள் ஆபீஸிலும் அகப்படு மென்று தெரிவிக்கக் கேட்டுக்கொண்டபடி அறிக்கையிடலானோம். அப்பஞ்சாங்கம் நமது பார்வைக்கு வரவில்லையால் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்வது சாத்தியமாயில்லை.

வியவசாய சம்பந்தமான விஷயங்களிலும் விதைவிதைத்தல், நாற்றுநடுதல் முதலிய விஷயங்களிலும் புதியமார்க்கங்களை யனுசரித்து வியவசாய விருத்தியை நாடியுழைக்கும் பயிரிடுங்குடிகள் வியவசாய இலாகா டிப்டி டைரெக்டர்கள் ஆபீசுக்கு எழுதி விவரம் கேட்டுக்கொண்டால், பதில்அனுப்ப ஸ்டாம்பு வேண்டாமலே, வேண்டிய விவரங்கள் தெரிவிக்கப்படு மென்று வியவசாயஇலாகா டைரெக்டர் விளம்பரப்படுத்தி யிருக்கிறார்.

வெள்ளைப்பூண்டு விபாதிக்குக் கைகண்ட ஔஷதம். இது உஷ்ணதிக்கத்தையுண்டு பண்ணும் சக்தியுள்ளது. வாயுவைக்கண்டிக்கும் சக்தி மிகுதி. சிலேஷ்ம சம்பந்தமானதும் சீதள சம்பந்தமானதுமானவியாதிகளைக் கண்டிக்கும். ஸ்திரீகளுக்கு விசேஷ நன்மையையுண்டுபண்ணத்தக்கது. பிரஸவகாலங்களிலும் அதற்கு முன்னும் பின்னும் சீதளம், வாயுக்கொள்ளாதபடி தேகத்தைக்காத்துவர இது கைகண்ட ஔஷதமாய் ஒவ்வொருவீட்டிலும் கையாடப்பட்டு வருகிறது. இதன் சூடு மஜ்ஜைவரையில் பற்றத்தக்கதால் இது பூதமுதல் நாதபரியந்தமான பூதசேஷ்டைகளைச் சரிப்படுத்தி தேஜஸ்ஸைக் கொடுக்கும். பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் கூட இது மிகவும் கையாடப்பட்டுவருகிறது.

### Extracts.

### A SUGGESTION TO RYOTS GROWING IRRIGATED CHOLUM OR RAGI.

இறவைச்சோளம் அல்லது கேழ்வரகு சாகுபடி செய்பவர்களுக்கு ஒரு அறிக்கை.

ஆடி ஆவணி, மாதங்களில், சரியான மழை பெய்கிற சில ஜில்லாக்களில் துவரையைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்கிறார்கள். அப்படி சரியான மழைகள் பெய்யாத திருநெல்வேலி முதலான சில ஜில்லாக்களில் இறவைச் சோளம் அல்லது கேழ்வரகுப் பயிருடன் கலப்புப்பயிராகத் துவரையை சாகுபடி செய்கிறார்கள். துவரை விதைப்பான இரண்டு மூன்று மாதங்களுக்கு அதிகமாக வளருவதில்லை. பின்னால் வளர்ந்து விரிந்து நிலத்தை மூடும். அதுவரையில் துவரைப்பயிருக்கு இடையிலுள்ள நிலம் யாதொரு பிரயோஜனமில்லாமல் இருக்கும். ஆகையால், அந்தக் காலிநிலத்தை உபயோகப்படுத்துவதற்காக துவரைப்பயிருக்கு இடையில் கேழ்வரகாவது சோளமாவது சாகுபடிசெய்கிறார்கள். இத்தக்கதிர் தானியப் பயிர்களுக்குப் பாய்ச்சும் தண்ணீர் துவரை இளம்பயிராயிருக்கும்போது அதற்கும் உபயோகப்படும். இப்படி ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் இறவைத் தண்ணீரின் உதவியால் துவரை வளர்ந்துவருகிறது. அற்பசி மாதத்தில் கதிர்த்தானியப் பயிர் அறுவடையாகும். உடனே அறுவடையான இடத்தை உழுவார்கள். அதன்பின் மழைகாலமாதலால், மழையின் உதவியால் துவரை பூத்துக் காய்த்து தை, மாசி மாதங்களில் பலன்கொடுக்கும். உடனே மறுபடியும் நிலத்தை உழுது பருவம் செய்வார்கள். இப்படிச்செய்யும் கலப்புப் பயிரால் இரண்டுவகையான பிரயோஜனத்தை கிருஷிகர் அடைகிறார்கள். என்றாலும் துவரைமாசூல் அதிகமாகக் கிடைப்பதில்லை. அதிக மேன்மையான பயிராயிருந்தாலுங்கூட எக்கர் ஒன்றுக்கு துவரைமாசூல் 300. பக்காவுக்கு அதிகம் ஆவதில்லை. அதுவன்றி, மாசிமாதம் கடைசிவரையிலும் நிலம் காலியாவதுமில்லை. அடுத்த பயிருக்குச் செய்யும் பருவம் தாமதமாகிறது.

இப்படி இறவைச்சோளம் அல்லது கேழ்வரகுப் பயிருடன் துவரையை விதைப்பதைவிட மணிலாக்கொட்டையை விதைத்தால் கிருஷிகர் அதிகப்பயன் அடையலாம். தானியப்பயிர் சாகுபடிசெய்து ஒரு மாதமானவுடன் அந்தப்பயிரின் ஊடே களை வெட்டுவார்கள். சாகுபடி செய்யுமுன் நிலத்தை உழுது தக்கபடி எருவிட்டு ஆவணிமாதத்தில் கேழ்வரகு நடவேண்டும்; புரட்டாசி மாதத்தில் பயிருக்கு ஊடேகளை வெட்டும்போது, நிலத்தில் உண்டாகும் சிறு குழிகளில் மணிலாக்கொட்டை விதைகளைப்போட்டு மண்ணை மூடி, எப்போதும் பாய்ச்சுவதுபோல் தண்ணீர் பாய்ச்சவேண்டும். மணிலாக்கொட்டைப்பயிர் கேழ்வரகுப் பயிருக்கு ஊடே முளைத்துப் படர்ந்துவரும். கேழ்வரகு கார்த்திகை மாதத்திற்குமுன் அறுவடையாகும். தைமாதத்துக்குமுன் மணிலாக்கொட்டை மாசூல் எடுத்துக்கொள்ளலாம். உடனே நிலத்தை உழுது பருவம்செய்து மாசிப்பட்டத்தில் சோளம் விதைத்து வைகாசிமாதத்துக்குமுன் அறுவடைசெய்யலாம். மணிலாக்கொட்டை எடுப்பதற்காக நிலத்தை வெட்டிக் கொத்தவேண்டியதாயிருக்கும். அப்படி கொத்துவதானது அதிகச் செலவில்லாமல் அடுத்துச் செய்யும் தானியப்பயிருக்கு நிலத்தை நன்றாய்ப் பண்படுத்துவதுபோலாகும்.

இவ்விதமாய் கலப்புப்பயிராக இறவையில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்ததில் சிலவிடங்களில் எக்கர் ஒன்றுக்கு மாசூல் 2,000 இராத்தல் முதல் 3,000 இராத்தல்வரை கிடைத்திருக்கிறது. இதன் விலை ரூ. 80-முதல் ரூ. 120 வரையாகும். தானியப் பயிரின் மாசூலும் கைக்குவருகிறது மணிலாக்கொட்டைப் பயிருக்சென்று நிலம் பருவம் செய்யப்படுவதில்லை யாகையால் அதற்கு விதையின்கிரயமும், விதைப்புக்கூலியும் அறுவடைச்செலவும் தவிரவேறு செலவு கிடையாது. நிலத்திலுள்ள பயிருணவுக்கும் அதிக நஷ்டமில்லை. பயிர் மாற்றலின் பிரயோஜனமும் உண்டாகிறது. இறவையில் பயிரிடும் கேள்வரகின் தாள் புன்செயில் பயிரிடும் கேள்வரகுத்தாளைப்போல் அவ்வளவு சத்துள்ளதல்ல. ஆகையால் கால்நடைகள் அதைப் பிரியத்துடன் தின்கிறதில்லை. அத்துடன் மணிலாக்கொட்டைச் சண்டும் கலந்து போட்டால் கால்நடைகள் வெகு பிரியத்துடன் தின்னும். மணிலாக்கொட்டைப் பயிரின் இலைகள் கய்ந்து நிலத்தில் உதிர்ந்து மண்ணுடன் கலந்து அதற்கு கொழுமை உண்டாக்குகிறது. அடுத்த பயிருக்கு அது நல்ல உரமாகிறது.

தென் ஆற்காடு ஜில்லாவில் கிருஷிகர் புன்செய்களில் மானவாரிப்பயிராக் மணிலாக்கொட்டை சாகுபடிசெய்து அதிக இலாபம் அடைகிறார்கள் என்பதை உத்தேசித்து மற்ற ஜில்லாக்களில் அநேக இடங்களில் சில வருஷங்களாக அதை மழையின் உதவியால் பயிரிட முயன்றுவருகிறார்கள். தென் ஆற்காடு ஜில்லாவில் இது புன்செய்ப் பயிர்களில் முக்கியமா

னது. அந்த ஜில்லாவில் சாகுபடியாகும் மொத்தவிஸ்தீர்ணத்தில் ($\frac{1}{5}$) ஐந்தில் ஒரு பாகத்தில் மணிலாக் கொட்டை சாகுபடியாகிறது. அதிகமாக திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர், கூடலூர் தாலுகாக்களிலுள்ள சாம்பல் நிறமான மணற்பாங்கு நிலங்களில் இது சாகுபடி செய்யப்படுகிறது. இப்போது வரவர கிருஷிகர் செம்மணல் நிலங்களிலும் மணிலாக்கொட்டைபயிரிடத் தொடங்கிவிட்டார்கள். அந்த நிலங்களுக்குச் சரியானபடி எருவிடுகிறார்கள். முன் காலத்தில் நாலைந்து வருஷத்துக்கு ஒருமுறை வரகு அல்லது சாமை பயிராகி, மற்ற வருஷங்களில் தரிசாய்க்கிடந்து வந்த விருத்தாசலத்துக்கும் கேப்பர் மலைக்கும் இடையிலுள்ள தாழ்ந்த தரமான செவ்வல் மணல் புன்செய்களிலும் இப்போது மணிலாக்கொட்டை சாகுபடி செய்கிறார்கள்.

அதிலும் கொஞ்சம் மாசூல் அவர்களுக்குக் கிடைக்கிறது. என்றாலும், தென் ஆற்காடு ஜில்லாவில் எப்படி மழைகள் பெய்கின்றன என்பதை ஒருவரும் கவனிக்கிறதில்லை. மற்ற ஜில்லாக்களிலிருந்து அங்கு போய் மணிலாக்கொட்டைப் பயிரையும் அதில் கிடைக்கும் இலாபத்தையும் பார்த்து வாய் ஊறி "நம்மூரில் இதை ஏன் பயிரிடக்கூடாது? அடுத்தவருஷமே பயிரிடவேண்டும்" என்று எண்ணிக் கொஞ்சம் விதையை உடனே வாங்கிக்கொண்டுபோய் விதைக்கிறார்களேயொழிய, தங்கள் ஊரின் மழையளவு எவ்வளவு என்று கவனிக்கிறதில்லை. அதைத் தென் ஆற்காடு ஜில்லாவின் மழையளவுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுமில்லை. தென் ஆற்காடு ஜில்லாவில் அநேக இடங்களில் ஜனவரி மீ முதல் மார்ச்சு மீ கடைசிவரையுள்ள வரண்டகாலத்தில் சுமார் 1.75-அங்குல மழையும், ஏப்ரல் மே மாதங்களாகிய கோடைகாலத்தில் சுமார் 2 அங்குல மழையும், ஜூன் மீ முதல் செப்டம்பர் மீ கடைசி வரையுள்ள சாரல் காலத்தில் சுமார் 15-அங்குல மழையும், அக்டோபர் மீ முதல் டிசம்பர் மீ முடியும் வரையுள்ள மழைகாலத்தில் சுமார் 30-அங்குல மழையும் பெய்கிறது. திருநெல்வேலி, மதுரை, திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் முதலான ஜில்லாக்களில் அநேக பாகங்களில் வருஷம் முழுவதுக்கும் சராசரி 30-அங்குல மழைக்கு அதிகம் பெய்வதில்லை. அப்படி மொத்த அளவு மழை ஒருவேளை அதிகமாய் இருந்தாலுங்கூட மணிலாக்கொட்டைப் பயிருக்கு முக்கியமாய் மழையின் உதவி வேண்டிய காலங்களில் போதுமான அளவுக்கு மழைபெய்வது அரிது. ஆகையால் கிருஷிகர் மணிலாக்கொட்டைப் பயிரை எல்லா இடங்களிலும் மழையின் உதவியால் மட்டும் சாகுபடிசெய்து பயன் பெறலாம் என்னும் அபிப்பிராயத்தை ஒழித்துவிட வேண்டும்.

தண்ணீர் பாயக்கூடிய சாதனங்கள் அமையப்பெற்ற இடங்களில் மணிலாக் கொட்டையைத் தடையில்லாமல் சாகுபடிசெய்து இலாபம் அடையலாம். அப்படிச் செய்வதில் தனிப்பயிராய் சாகுபடி செய்வதைப் பார்க்கிலும் மேலே சொல்லியிருக்கும்விதமாய் ஒரு தானியப்பயிருடன் கலப்புப் பயிராய்ச் சாகுபடி செய்தால் குறைந்த செலவில் அதிகமான இலாபம் கிடைக்ககூடியதாயிருக்கிறது.

"கிருஷிகன்." J. Dharmaranga Raju.

## THE AGRICULTURAL COLLEGE, COIMBATORE.

## கோயமுத்தூர் விவசாயக்காலேஜும் பண்ணையும்.

சென்னைக்குச் சமீபத்தில் சைதாபேட்டையிலிருந்த இந்த காலேஜை கோயமுத்தூருக்கு மாற்றவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து 1906-ம் வருஷம் செப்டம்பர் மீ 24 உ ஆஸ்திவாரக்கல் நாட்டினார்கள். இந்த காலேஜ் கட்டடத்திற்குமட்டும் ரூபாய் 4,47,000 செலவாயிருக்கிறது. சோதனைப்பண்ணைக்காக இக்கட்டடத்தையடுத்து நஞ்சைபயிர்கள் விளையத்தக்கதும், தண்ணீர் இறைத்துத் தோட்டபயிர்கள் விளைவிக்கக்கூடியதும், மழையடித்து பயிராக்கக்கூடியதுமான பூமிகள் 457½-ஏகரா வாங்கப்பட்டிருக்கிறது. காலேஜும் சோதனைப்பண்ணையும், உபாத்தியாயர்களும், மற்ற சிப்பந்திகளும் வசிக்கக் கட்டடங்களும், மாணாக்கர்கள் வசிக்கத் தகுந்த கட்டடங்களும் சேர்ந்து செலவு எட்டுலக்ஷத்திற்கு அதிகமாகிறதென்று தெரியவருகிறது. இன்னும் முழுவேலையும் முடிவதற்குள் செலவு பத்து லக்ஷமாகலாம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 27 APR 1910 MADRAS.

*"Give me not, O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you find it," But "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**Speak the Truth**

"Hitch your wagon to a Star" "To Thine Own Self be True."



அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்சத்.] [God is Love: Knowledge is Power. Aum.

ஸத்யமே ஜெயம்—Satyameva Jayati.

பு. 17.] 1910ளு பிப்ரவரி-மார்ச்சு மீ, ஸௌமிய ளு மாசி-பங்குனி மீ [ச. 11-12.

## To Our Readers and Subscribers.

We owe an apology to our Readers for the blunders committed by the Printer who was an untried hand. But better to deal with an ignoramus than get into the clutches of clever men without principle or scruples of conscience. In these days of voluble promises but rare fulfilment, we have, as we said, tried for once, the effect of 'Swadeshi Enterprise' on our constitution, with results, alas! better imagined [illegible]d. We are reverting, therefore, to our old humdrum life of "doing our duty" leaving the result in the hand of One, who in the Field of Battle at **Kurukshetra**, taught to the Hero of the Fight, Arjuna, the Great Secret of Karma, saying,—

**"To work you have the right, but not to the fruits thereof."**

We trust that our readers and Subscribers will not interpret this as meaning that they have no duty to perform, and we repeat that we expect them to do *their* duty and remit their arrears of subscription due **at once**.

We complete the 17th Volume with this number and we expect all arrears to be cleared before year comes round, with which the **18th Volume** will begin.

## FREEDOM—TRUE AND FALS

"A certain magnificent orator, who was going to Rome on a law suit
The philosopher threw cold water on his visit, because he did not believe

get no more from me," he said "than you would get from any cobbler or greengrocer, for you have only come because it happened to be convenient and you will only criticise my style, not really wishing to learn *principles*." "Well, but," answered the orator, "if I attend to that sort of thing, I shall be a mere pauper like you, with no plate or equipage or land." "I don't want such things," replied Epictetus; "and besides, you are poorer than I am, after all." "Why, how so?" "You have no constancy, no unanimity with nature, no freedom from perturbations. Patron or no patron, what care I? You do care. I am richer than you. I don't care what Cæsar thinks of me. I flatter no one. This is what I have instead of your silver and gold plate You have silver vessels, but earthenware reasons, principles, and appetites. My mind to me a kingdom is, and it furnishes me abundant and happy occupation in lieu of your restless idleness. All your possessions seem small to you, mine seem great to me. your desire is insatiate, mine is satisfied."

Does not Jesus Christ say the same thing in simple deep words? "What does it a man profit, if he gains the whole world and loses his own soul?"

## ஹிதோபதேசம்.

"செல்லுமளவின் செலுத்துமின் சிந்தையை
வல்லபரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லையெனினும் பெரிதுளனெம்மிறை
நல்லவரன்நெறிநாடுமின் நீரே:"—திருமூலர்.

"இச்காயம்நீக்கி யினியொருகாயத்திற்
புக்குப்பிறவாமற் போம்வழிதேடுமின்
எக்காலத்திவ்வுடல் வந்தெமக்கானதென்ற்'
அக்காலம் உன்ன அருள்பெறலாமே."—திருமூலர்.

---

## முக்தி அல்லது ஸ்வதந்திரம் என்றால் என்ன?

"மோகமடங்கவேணும் மெய்யுருவங்காணவேணும்
"மெய்யுருவங்கண்டு அன்பு நிலையறியவேண்டும்
"அன்பு நிலையறிந்து அந்தரங்கமாகவேண்டும்
"அந்தரங்கமாய்விட்டால் அனுபவமே சித்திக்கும்;
"சித்திக்குமெய்சொன்னேனென்சித்தங்கலங்காதே"
[யென்றாள்.
—ஆனந்தராய்மொழி
(மத்திமப்பருவம்—சித்திப்படலம்)

முக்தியென்றால் என்ன? அது வேதாந்த பேச்சு அல்ல. தனக்குள்ளே ஒன் யெண்ணி மனம் புண்ணாகி, ருந்து ஒழுகும் சீயைப் ன்று எண்ணிக்களிக்கும் ல்ல நாய் எலும்பைக் போக, தன் பல்லி னின்றொழுகும் இரத்தத்தை எலும்பிலிருந்து வந்த ரஸமாக வெண்ணிக்களிப்பது ஒக்கும் முக்தியை பாவனாமாத்திரமானதாக எண்ணிக்களிக்கும் மூடனுடைய களிப்பு. முக்தி அல்லது ஸ்வானுபவத்தை "வேதாந்த பாவனம்" என்று சொல்வது உண்மைக்கு விருத்தமாகும். அபக்குவர்களுக்கும் அநதிகாரிகளுக்கும் உண்மையுபதேசம் செய்யப் புகுந்தால், அவர்கள் மனமாயையின் மயக்கம் நீங்காதவராய் பாவனாதீதமான உண்மையை பாவனைப் படுத்தி, பாவனத்தை கவனம்பண்ணி, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தகதை போல், பாவனாதீதமான உண்மையை பாவனாமாத்திரமாக வெண்ணித் தாம் படுகுழியில் விழுவதன்றி வீண் அட்டஹாஸம் செய்துப்



பல்லரையும் அவ்வழியிலிழுத்துச் செல்லப் பார்ப்பார்கள். "குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குழிவிழுந்தற்றே" யென்னும் திருமந்திரோபதேசத்துக்கு இவர்கள் இலக்கானவர்களாகிறார்கள். ஆனால் உண்மையை உள்ளபடி யுணர்வது தான் எப்படியோ? எனின், "உண்மையை உள்ளபடி யுணர ஒரே வழியுண்டு." அஃதென்ன வெனில், "ஸ்வானுபவமாம்"—அப்படி யென்றால், சொந்தத்தில் அனுபவித்தறிதலாம்.

"சொந்தத்தில் அனுபவித்தறிதல்" என்று சொன்னீரே, ஒருவனுக்கு சொந்தமானது எது? என்று கேட்பீரேல், அது தான் விசாரணை முகத்தால் அறியவேண்டியது. அந்த விசாரணையைச் செய்யும் வழி யென்னவெனில், அது குருமுகமாக அறியவேண்டியது. குருவைக் கண்டுபிடிப்பதெப்படி யென்றால், எம்பெருமான் திருமூலதேவர் சொல்கிறார் கேண்மின்:—

"இருவினைநேரொப்பிலின்னருட் சக்தி
குருவெனவந்து குணம்பல நீக்கித்
தருமென ஞானத்தால் தன்செயலற்றால்
திரிமலம் தீர்ந்து சிவனவனாமே."

"கம்பளிச்சட்டைக்கலாயசித்தர்" என்றொரு மஹான் இருந்தார். அவர் திருமந்திரத்துக்கு ஏதோ உரைசெய்திருக்கிறாரென்று கேள்வியுற்று அதைக் காணவேண்டி அவாவுற்றிருந்தோம். அவரைப்பற்றி நமக்குத் தெரிந்தது இவ்வளவே. மற்றப்படி அவரைப் பற்றிய கால, தேச, வர்த்தமானங்கள் ஒன்றுந் தெரியாது. எப்பொழுதோ தேஹவாசியாயிருந்து பூரணமெய்திப்போன ஒருவர் வாயுரையாகச் சொல்ல அதைக்கேட்டவர் ஏட்டுப்பிரதியாக எழுதிவைத்துக் கொண்டதை நாம் காணவேண்டுமென்று ஆசைப்பட்டால், அஃது நிறைவேறுவதெப்படி? ஆசைப்பட்டதென்னவோ உண்மை! உண்மையாசை யொருக்காலும் வீண் போகாது என்பது ஸத்தியமானதோர் தத்துவம். ஸத்தியமானதோர் தத்துவத்தைப் பற்றினின்றால் அது ஏன் பலிக்காது போகும்! "ஆசையறுமின், ஆசையறுமின், ஈசனோடாயினும் ஆசையறுமின்" என்பதுபெரியோர் அனுசரித்துத் தேறினதோர் உச்சிதமான குருவாக்கு. "குருவாக்கு" என்றால் என்ன?

குருவாக்கு என்றாலும் பரவாக்கு என்றாலும் ஒன்றே. அசரீரிவாக்கு என்று சொல்வது அஃதையே. சரீரமில்லாமல் வாக்கு என்னமாப் பிறக்கும்? பிறக்கும்! அது தான் ஸத்திய வாக்கு. அந்த வாக்குப் பொய்க்காது. மற்றதெல்லாம் பொய் வாக்குமூலத்தை யொக்கும். புளுகுண்ணிக்கோட்டையானுக்குப் பித்தலாட்டக்காரன் வக்கீல். இவர்களிருவரும் கக்ஷி கட்டினதற்கு செப்படிவித்தைக்காரன் சாக்ஷி. இவர்களைக் கொண்டு நியாயாதிபதி நியாயம் செலுத்த வேண்டும். சாத்தியமா, சாத்தியமில்லையா?

நியாயாதிபதி சரீரமாத்திரமா யிருந்தால் சாத்தியமில்லை. அசரீரியாயிருந்தால் சாத்தியம்.

அப்படியென்றால் என்ன?

ஸ்தூலப் பார்வைமட்டுமுள்ளவரானால் நியாயத்தைக் கண்டுபிடிக்க முடியாது! சூக்ஷ்மப்பார்வை யுள்ளவரானால் செப்படிவித்தைக்காரன் "கிகு! கிகு!"—"பார், பார்," என்னும் போது, அவன் முகத்தைப்பார்க்காமல் முகத்தில் விளங்கும் அகத்தைப் பார்க்கும்

சக்திவாய்ந்தவராயிருப்பார். அவர் இலகுவில் உண்மையைக் கண்டு பிடித்து நியாயம் செலுத்தத் தக்கவராவார். இப்படியே உண்மைத் தத்துவங்களைக் கண்டறிய வழியுண்டு. திருமூலதேவர்,—

"முகத்திற் கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண் கொண்டு பார்ப்பதே யானந்தம்"

என்று சொல்லி, சரீரி, அசரீரியைக்கண்டு பிடிப்பது எப்படி யென்று நீவிர் கேட்டது போல் "ஸ்வானுபவத்தைச் சொல்" என்ற மூடனை நோக்கி, மறுகேள்வி யொன்று கேட்கிறார். அது இது:—

"மகட்குத்தாய்தன் மணாளனோடாடிய
சுகத்தைச்சொல்லென்றாற சொல்லுமாறெங்ஙனே?"

அதுபோல சற்சீஷனாயிருந்து பக்குவமுதிர்ந்த காலத்தில் சற்குருவை யடைந்து, உண்மையுபதேசம் பெற்று, உபதேசநெறி நின்றொழுகிய காலத்து, உச்சமான உந்நத தசையில் குருவோடைக்கியமாகி, குரு-சீஷன் என்கிற பேதமற்று நின்ற நிலையிலுதிக்கும் "ஸ்வானுபவத்தை"ச் சொல் என்றால், "சொல்லுமாறெங்ஙனே?" ஆயினும் பரைவாக்கால் ஸ்வானுபவச் செல்வர்கள் சொல்லியதோர் உண்மையைச் சொல்கிறோம் கேண்மின்: தி

"முக்தியென்னப்படு மங்கையைச்சேரமுயல்பவருஞ்
சத்தியென்னப்படுமீசனருளன்றிச்சார்தலுண்டோ!"

"சத்தி யென்னப் படுமீசனருள்" இல்லாவிட்டால் "முக்தி யென்னப்படும் மங்கையைச் சேரமுயல்பவர்" மூர்க்கரேயாவர். மூர்க்கருக்குண்டோ சக்தியும் முக்தியும்? "நாய் முச்சந்திப்பானை யறியுமா?" இப்படிப்பட்ட மூர்க்கர் சமயநெறிப்பட்டு முக்தியைச் சேரச் சக்தியை வேண்டிச் செய்யும் பூஜையும், முக்தியை "வேதாந்த எண்ணம்" என்று சொல்லிப் போதிப்போர் உபதேசமும் ஒருவகைப்பட்டதாகும்.

"சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தியழிந்தது தன்னை மறந்ததால்
சத்தி சிவஞானம்தன்னிற் தலைப்பட்டு
சத்தியஞானானந்தத்திற் சேர்தலே."-திருமூலர்.

இதெல்லாம் பரைவாக்கிலிருந்து பிறந்ததோர் ஒப்பிலா அசரீரிவாக்காம். சரீர பெந்தம்நீங்காதவர் என் வாக்கும் "அசரீரிவாக்கே" யென்று சொல்லிக்கொண்டு கிளம்புவது 'பொய்க்கூடையுட் புகுந்த மனிதன்" பூதமென்று அதையாட்ட, தொம்பைபோலும் அக்கூடையைப் பூதம் என்று நம்பி யொழுகுவார் புல்லறிவை யொக்கும். இது நிற்க.

கைலாய சித்தர் உரை எனக்குக் கிடைத்த அதிர்சயத்ததை யுன்னில் அவர் உண்மையிற் சித்தரேயென்று விளங்குகிறது. நான் அவர் செய்த உரையை வாசித்தறிய வேண்டினேன். வேண்டின வேட்கை தீர்த்து ஆண்டவனடிமையாயிருந்து விளங்கின அவனைக், கயிலாயஸித்தர் என்று அறிந்து கொண்டேன். அவரில் நான் காணுதொழிந்த பாகம் "கம்பளிச் சட்டை"யென்று அவருடைய பெயருக்கு அடைமொழியாகக் கொடுத்திருக்கும் அத்திருவார்த்தையின் இலக்ஷியமே அது விளங்காமைக் தக் காரணம், பின்வரும் திருமந்திரத்தினுண்மை யுணர்ந்தோருக்குச் சொல்லாமல் தானே விளங்கும்.

"உற்று நின்றாரொடுமத்தகு சோதியை
சித்தர்களென்றும் தெரிந்தறிவாரில்லை."

"உணர்ச்சியுளாங்கே யொடுங்கவல்லார்க்குக், குணர்ச்சியில்லாது குலாவியுலாவி, அனைத்தனைத்தின்பம் அது விதுவாமே" யென்றோதிய திருமந்திரத்தின் திருஷ்டா நின்ற நிலைபெற்று அதில், "உற்று நின்றாரொடும்" ஒன்றாகி அபேதமாய் விளங்கும் "அத்தகு சோதியை"—செய்வது செய்யத் தகும் தகைமை வாய்ந்த அந்த சோதியாம் "இன்னருட் சக்தி"யைச் "சித்தர்களென்றும் தெரிந்தறிவாரில்லை. தெரிந்தறியும சக்திவாய்ந்த பின்,

"பத்திமையாலே பணிந்தடியார் தொழ
முத்திகொடுத்தவர் முன்பு நின்றானே."

உண்மைப் பக்தியின்றி "சக்தியென்னப்படும் ஈசனருள்" இல்லை. "சக்தி யென்னப்படும் ஈசனருளின்றி" "முக்தி யென்னப்படும் மங்கையைச் சேர முயல்பவரும்" இல்லை. வாச்சாவேதாந்தம் காய்ச்சுப் பழுக்காது. சிரத்தையின்றிப் பக்தி யில்லை: பக்தியின்றிச் சக்தி யில்லை: சக்தியின்றி நல்யோக மில்லை: யோகமின்றி ஞான மில்லை: ஞானமின்றி யோகஸித்தி யில்லை: யோகஸித்தியின்றி ஞானஸித்தி யில்லை- ஞானஸித்தியின்றி முக்தி யில்லை. முக்தியின்றி ஸ்வதந்திர மில்லை. கைலாயஸித்தர் உரைமுடிவில் "முடிவுரை" வரைந்திருப்பதில் இவ்வளவும் விளங்கப் * பரைவாக்கால் கூறப்பட்டிருக்கிறது. அதில்,

"திருமூலர் திருவுளம் பற்றின திருமந்திரத்துக்குப் பயனுள்ளபடியே கம்பிளிச்சட்டைக் கயிலாயச் சித்தர், சாதகரறிந்து ஆன்மலாபம் பெறும்படிக்கு, இட்ட திருமந்திரவுரை" என்று அவர் கூறிய வுரைக்கு விவரம் கூறுயிருக்கிறது.

திருவே மூலமாயுதித்தவர், திருமூலர். இது எப்படி யென்றால், மூலன் என்னும் "மூலபுருஷன்" மாயா ஸம்பந்தத்தால் இடையனாகிப் பசுநிறைகளைமேய்த்து வருங்கால், அவன் தேஹவியோகமாக, அப்பசுநிறைகளாம் ஜீவகோடிகள் அவன் தேஹத்தை மூகர்ந்து மூகர்ந்து தேஹவாசனையில் ஜீவரக்ஷகனான அவனுடைய(கோபாலனுடைய) வாசனையின்றித் தவித்து நிற்க, ஜீவகாருண்யமே உருக்கொண்டது போலும்விளங்காநின்ற, சக்திவழிப்பட்ட "திருமூலர்" அவன் தேஹத்துட் புகுந்து பசுக்களின் துயரை யாற்றுவான் சங்கல்பிக்க,சங்கல்பமாத்திரத்தினாலே தேஹ வாஸியாகி, தனது திவ்யதேஹம் மறைந்து போகக்காணாற்றார். பிறகு தான் புகுந்த சரீரத்திலிருந்தபடி அசரீரியாவான் தவமியற்றி,சரீரம் நழுவி அசரீரியான ஒவ்வொரு பொழுதும் அவர் திருவுளம் பற்றியதோர் உண்மையனுபவத்தைப் பரைவாக்கால் "திருமந்திரமாக" வெளியிட்டார். இந்த மந்திரத்துக்குப் பயன் சிதாகாசத்திலிருந்து வெளிவந்த பரைவாக்கு, மனாகாசத்திற் புகுந்து அங்கே, "சிருஷ்டி ஸ்திதி வியஸன கர்மகிருத்' என்ற சுருதிவாக்குப்படி முத்தொழிலியற்றித் திருக்கூத்து விளைப்பதாம். இத்திருக்கூத்துத் தரிசனத்தைச் "சாதகர்" உளவறிந்து காண்பதே அவர்கள் "அறிந்து ஆன்மலாபம் பெறுவதாம்". மந்திர திருஷ்டாவான "கம்பிளிச் சட்டைக் கயிலாயஸித்தர்" மந்திரத்தின் பயனும் திருக்கூத்து விளங்க, அதைச் "சாதகர் அறிந்து ஆத்மலாபம் பெறும்படிக்கு"(1) பரைவாக்கான சுத்த சப்தபிரம்மத்திலும்வேறலாத திருமந்திரத்துக்கு,(2) பச்யந்தி, (3) மத்திமை யென்னும் வாக்குகளால் "இட்ட உரை"யாம் "திருக்கூத்தாட்டம்" முற்றுப் பெற்றது என்பது அம்முடிவுரையின் இலக்ஷியார்த்தமாம்.

*(1) "பரை யென்னும் சூக்குமைவாக்கது சூன்யசம்பாஷணை."

(2) "பச்யந்தி வாக்கதுவோ அந்தி சந்தி மஞ்சள் வெயில்."

(3) "மத்திமை வாக்கதுவும் மனக் குரங்கு கட்டுடித்து மழலை பேசல். காலாவதான "வைகரி வாக்கு" "விகாரமே" யெப்போதும்." என்பது சித்தர்வாக்கு.

இதற்கு "அறிவானந்த குரு" சாக்ஷி யாதலால், "சாக்ஷிக்காரன் காலில் விழுவதிலும் சண்டைக்காரன் காலில் விழலாம்' என்கிற உலகவழக்கமான பழமொழிக்கு நேர்விருத்தமாய், "சண்டைக்காரன்" கொட்டமடங்க, "சாக்ஷிக்காரன்"காலில் விழுந்து "அறிவானந்தகுருபாதமேகதி"யென்ற சாதகன்சொல்லுக்கிலக்காய், "அறிவழிந்த அறிவே" ஆனந்தமாய் விளங்கும் "சுககன"மான "குரு"வாம் "ஆனந்தத்தாயின்" "பாதமே கெதி" யாய்ப் பசுபாச மொழித்துப் பதியை யடைந்து சதியைப் பூஜித்து நிற்கிறோம்: இப்படிப் பதியை யடைந்து பின் சதிபூஜைசெய்யும் அவஸரம் எதுவோ அதுவே "ஸ்வதந்திரம்."

எல்லாத்தந்திரங்கள், ஆகமங்களிலும் "ஸ்வதந்திரமாம்" இதுவே தலையாய் விளங்குவதால், இந்தத்தந்திரத்தில் அடங்கிய ஆகமவுண்மைகளை ஸ்வானுபவத்தால் அனுஷ்டித்து வருவதற்கான சாதகசாதனங்களெதுவோ அதுவே "ஸ்வாதந்தரீயம்."

இப்படியாக உண்மை முக்தி யின்னதென்றும், உண்மைச் சுதந்திரம் இன்னதென்றும் விளக்கியபின், பொய் முக்தியையும் பொய்ச் சுதந்திரத்யையும் பற்றி அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் சாதகர் அறிந்துய்யும் பொருட்டு என்தாய் உபதேசித்ததோர் உண்மையை, விளக்குவான் "உள்ளதை உள்ளபடி சொன்னால் கொள்ளக்கண்ணிக்கு நோப்பாளம்" என்கிற உலக வசனப்படி, உலகத்தார் மனம் நோகாதிருக்க, பூர்வம் "எபிக்டேடஸ்"என்னும் மஹாஞானியார், "வாயால்வல்லவர்" என்றுபேரும் பெருமையும்பெற்றஒரு உலகஞானிக்குச் சொன்னவார்த்தைகளை இதன்முகட்டில் இங்கிலீஷில் பதிப்பித்திருக்கிறபடி அவ்விருவருக்கும் நடந்த சம்வாதத்தை இங்கு இதிஹாஸமாக எடுத்துரைக்கிறோம்.

எபிக்டேடஸ் என்பவர் தத்துவதரிசனம் கண்ட ஒரு மஹாஞானி. பூர்வத்தில் இக்காலத்து வக்கீல்களைப்போல் வாயால்வல்லவரான ஒரு கனதனவான், ஏதோ தனக்கிருந்த ஒரு கோர்ட்டு வியவகாரார்த்தம் ரோமபுரிக்குப் போக நேரிட்ட பொழுது, அந்த சமயத்தை முன்னிட்டு "காரியத்தொடு காரியமாக" எபிக்டேடஸ் என்னும் மஹாஞானியைப் பார்த்துவரச் சென்றார்: வந்தவர் வாயால் வல்லவரென உலகப்பிரஸித்தியாகப் பேர்பெற்றிருந்தும், அவர் உள்ளத்தில் உண்மைக் குணம் இல்லையென்று கண்டஞானியார் அவர் தன்னைப் பார்க்க வந்ததில் பிரயோசன மொன்றுமில்லை யென்று அவர் மனம் புளிக்கப் பேசினார். "உம்முடைய ஸௌகரியத்துக் கொத்திருந்ததென்று வந்தீராதலால், என்னிடத்திலிருந்து நீர் என்னத்தை கிரஹிக்கப் போகிறீர்! சக்கிலிகடை சாமான்கடைக்குப் போனால் அங்கே யென்ன கிரஹிப்பீரோ அதைவிட என்னிடத்தில் நீரொன்றும் கிரஹிக்கப் போகிறதில்லை!" யென்றார்.

"ஏன்?"என்று கேட்டதற்கு, "உம்முடைய ஸௌகரியமே உமக்குப் பெரிதானதால், என்னுடையவார்த்தையினுட்பொதிந்துகிடக்கும் உண்மைத் தத்துவங்கள் ஒன்றையும் கிரஹிக்காது என் பேச்சில் சொத்தை சொள்ளை கண்டுபிடித்துக்கொண்டு வாச்சாவாதம் செய்வீரேயன்றி உண்மையுள்ளத்தில் ஏறாது!" என்று பதில் சொன்னார்.

"வீறுவாதம்புகலுவாய் வாதநோவாளர்க்கு
மெட்டாத முக்கணுடைமாமருந்தக்கமிர்தமே!"

என்று கூறியிருக்கிறார் தாயுமானவரும் அல்லவா!

அதற்கு வாக்குச்சாதுர்யரான அந்தவக்கீல் சொன்னதாவது:—"உம்மைப்போல் வார்த்



OFFICE OF THE REGISTERED 27 APR 1910 MADRAS.

தையினுட்புகுந்து தத்துவவிசாரம் செய்துகொண்டிருந்தேனானால், நானும்உம்மைப்போல் "பாப்பராக," அதாவது பரமஏழையாகவிருப்பேன்: காசு, பணம், பேர், ஊர், அந்தஸ்து, வாஹனம், ஐசுவரியம், பூஸ்திதி, இவை யொன்று மில்லாத ஏழைவாயனாக உம்மைப் போலிருக்க எனக்குப் பிடிக்கவில்லை."

"சரி! நல்லதாயிற்று! ஆனால் ஒன்று: நீர் அடுக்கடுக்காய் அடுக்கிச் சொன்னதொன்றும் எனக்கு வேண்டியதாயில்லை யாதலால், அவைகளில்லாமை யென்னைப் பாதிக்கவில்லை! அன்றியும் உமக்கு என்ன தான் ஆஸ்தியிருந்தும் கடைசியில் நீர்என்னிலும்ஏழையாகவே யிருக்கிறீரென்பதிற் சந்தேகமில்லை!" என்று எபிக்டேடஸ் அவருக்குப் பதிலுரைத்தார்.

"ஏன்அப்படிச்சொல்கிறீர்! அதுஎப்படி?" என்று வாயால் வல்லவரான அந்தவக்கீல் கேட்க, அவருக்கு அந்த ஞானியார் பின் வருமாறு பதிலுரைக்கலானார்:—

"உம்மிடத்தில் உண்மைக் குணம் இல்லை: ஆதலால் சமதமமில்லை. பிரகிருதிதர்மத்துக்கிசைந் தொழுகும் வகையறியீர். மனோசஞ்சலத்தினின்றும உமக்கு விடுதலையில்லை. போஷகன் என்றும் பாதகன் என்றும் எனக்குக் கவலையில்லை. நீரோ அதைப் பற்றி ஸதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர். உம்மிலும் நான் பாக்கியவான்: எப்படியென்றால், "துறவிக்கரசன் துரும்பு"என்றதுபோல், ரோமராஜ்யத்தலைவர் (ஸீசர்) என்னைப் பற்றி என்ன நினைக்கிறாரென்கிற கவலை எனக்கு லவலேசமும் கிடையாது. நான் யாரையும் முகஸ்துதி செய்து பேசுவதில்லை. உம்மிடத்திலிருக்கும் பொன் வெள்ளி சாமான்களுக்கு பதிலாக என்னிடத்திலிருப்பது இதுவே. உம்மிடத்திலுள்ள பாத்திரங்கள் வெள்ளி: ஆனால் உமதுள்ளத்திலிருக்கும் நியாயமோ மண்ணாங்கட்டி நியாயமாயிருக்கிறது! உம்முள்ளத்துண்மையும் மண்ணாங்கட்டியே! உள்ளந்தான் இப்படியிருக்கிறதே, தேஹஸௌக்கியத்தைப்பார்ப்போமென்றால், உமது பசிதாஹமும் ஜீரணசக்தியும் அப்படியே மண்ணாங்கட்டிக் கொப்பாயிருக்கிறது! என் மனது எனக்கு ஒரு மஹாராஜ்யம்! அங்கே நான் ஏகபோகமாய்த் தனியரசு செலுத்துகிறேன்: அதனால் எனக்கு எப்போதும் நல்ல வேலையும் சுகபோகமும் இருந்து கொண்டிருக்கிறது! நீரோ எப்போதும் சஞ்சலப்பட்டுக்கொண்டுபொழுதுபோக்குவழியின்றி அவதிப்படுகிறீர். உம்மிடத்திலிருக்கும் ஏராளமான ஆஸ்தி பாஸ்தி உடைமை யெல்லா உமக்கு அற்பமாகத் தோற்றுகிறது: ஏனெனில் உமக்கு அவற்றில் திர்ப்தியில்லை. என்னுடைமை எனக்குப் பெரிதாகத் தோற்றுகிறது. ஏனெனில்நான்ஸதா திருப்தியுற்றிருக்கிறேன். உமக்கும் எனக்குமுள்ள வித்தியாசம் இவ்வகையானதாகவிருப்பதால், நான்பரம ஏழையாகவிருந்தாலும் ஐசுவரியவானே. நீர் உலகைசுவரியமெல்லாம் படைத்திருந்தும் தரித்திரனே! ஏனெனில் ஐசுவரியத்துக்கும் தரித்திரத்துக்குமுள்ள வித்தியாஸம் உடைமைகளில் இல்லை; ஆனால் மனத்திலிருக்கிறது. போதுமென்னுமருந்தே பொன்செய்யும் மருந்து!" என்று சொல்லி முடித்தார்.

வாயால்வல்ல வக்கீலும் பதில்சொல்ல மாட்டாமல் வாயிழந்து தன் வலியுமிழந்து வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போனார். இந்த மாதிரி வாயால்வல்லவர்கள் இக்காலத்தில் வெகு பேர்களிருக்கிறார்கள். இவர்கள் தேடும் ஆஸ்தியெல்லாம் உப்புப் புளி யரிசிக்கே போதுமானதாகி வயிறு வளர்ப்பதிலே இவர்கள் காலமெல்லாம் போய்விடுகிறது. இவர்கள்

பேர் ஊர் அந்தஸ்து, வாஹனம் இவைகளுக்கு ஆசைப்பட்டு வயிற்றை வளர்ப்பதே முக்கியமாகக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் வயிற்றை வளர்க்க, வயிறு வளர்ந்து பருத்து ஹிருதயத்தை மூடிக்கொண்டு வியாதியை வளர்க்கிறது. சோற்றுப்படிப்பும்வயிற்றுவளர்ப்பும் அன்றி வேறொரு பயனறியாப் புல்லியர் கற்றறிமூடராய்க் கர்மத்தை வளர்த்துக் கொண்டு தத்துவ ஆராய்ச்சியின்றிக் "கண்டதே காட்சி கொண்டதே கோலமென" த் தம் வாழ்நாளை வீண்நாளாகக் கழித்து வாதனைப் பட்டு நீர் ரோகத்துக் காளாகி மாளுகிறார்கள். ஐயோ பாவம்; இவர்கள் விதிக்கு யார் என் செய்யலாம்! இவர்கள் கொண்டாடும் சுதந்திரம் பொய்ச்சுதந்திரமென்று சொல்லவும் வேண்டுமோ!

---

# "SANKARA REDIVIVIUS."

## The Prathishta at Kalady.

### காலடியில் ஆதிசங்கரர்

### ஸாரதாம்பாள் பிராணப் பிரதிஷ்டை.

"At that time the external forms of religious worship had crystallised into lifeless actions, and all their inner meaning had been enshrouded by the scrupulous observance of mere mechanic ritualities. Naturally enough these soul-less practices could not satisfy the religious aspirations of the common people and there was in their hearts a yearning for something truly religious, for that touch of nature which makes the whole world kin, and for some reality in the place of the existing shams."

"There was all confusion as Tukaram forcibly puts it; peace and good-will seemed to have vanished away from the world. Selfishness was the rule of life; hero-worship had entirely disappeared; selfrespect and consciousness of the past had degenerated into a readiness to serve every master who would pay; drunkenness was prevalent, and the religious teachers had degenerated into mere gramophones. To create order out of this chaos was the task on which the saint-poets laboured hard. They indeed brought on a revival of the spirit of self-respect, dignity, heroism, religious fervour among the masses. They set before the common people the ideal of *Svadharma* based on highest love and dignity of truth. Among this assemblage of poets who uplifted the masses stands prominently the figure of Tukaram, who is reckoned as the Prince of modern Bhaktas."

"Tukaram was pre-eminently a poet of the people. He sang his lays to an illiterate and uncultured audience, and succeeded in the extremely difficult task of awakening in them the spark of Divinity which had so long lain dormant. His poems do not abound in long-drawn and elaborate feats of art and are not replete even with the common ratiocinations so familiar to us in works on Theology. He takes hold of the most ordinary and the most simple aspects of life; and after moralising on them draws from them truths of deep meaning. He attacked the failings of the times with a vigour that made them quail before the severe and straight lashes of his words. His onset upon the foibles of the people were so very fierce that it goes home straight. He places his finger right on the point and being very familiar with the ins and outs of human nature his blow scarcely fails. His *Abhankas* which give advice to the people are full of homely and moral teachings enriched by the width and depth of his observations. He picks up the ordinary games and pastimes, of children and grown-up men, and touches and re-touches them with his imaginative faculty, and after endowing with the power of a spiritual dynamo sends them among the masses on their mission of religious awakening. A man without an ideal and doing no daily effort to realise it, is, says Tukaram, a veritable being of the animal world, a bull, only in human form. He is a useless burden to the earth and a disgrace to his ancestors."— *Gleanings from the Study of Saints.*



"ஓம் ப்ரதிஷ்டாயை நம:"

"ஆள்வாரற்றமாடாய்த் திரிந்த அறிவிலியை
மாள்வார் வலையிற்சிக்காதுகாக்க மருட்டிவிட்டு
ஆள்வான் தனிநினைந் தன்பாலழைப்பித்துக்
கேள்வியிலாத வள்ளுவன்கோயிலிற் கட்டினள் வல்லவளே."—திருவூடல்*

"வாயுண்டு வாழ்த்த; மவுனஞ்செய் போது மவுனவருட்
தாயுண்டு; சேயன்ன வென்னைப் புரக்கச் சதானந்தமா
நீயுண்டு; நின்னைச்சரண்புக நானுண்டென் னெஞ்சம் ஐயா!
தீயுண்டிருந்த மெழுகலவோ கதிசேர்வதற்கே."—தாயுமானவர்.

**"They say, Let them say!"**

"தன்மயமான சுபாவத்தின் மெள்ளத்தலைப் படுங்கால்
மின்மயமான ஜகம்யாதுரைத்தென்! வெளியிலுய்த்த
சின்மய முத்திரைக் கையேமெய்யாகத் தெளிந்தநெஞ்சே
நின்மய மென்மய மெல்லா நிறைந்த நிராமயமே."—தாயுமானவர்.

ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கராசாரியர் அவர்களுக்கும் ஸ்ரீசாரதாம்பாளுக்கும், பகவான் சங்கரர் திருவவதாரமான காலடிகிராமத்திலே, திவ்யாலயம் ஒன்று கட்டிக் கும்பாபிஷேகம் செய்து அவர்கள் திவ்யவிக்ரஹத்துக்குப் பிராணப்ரதிஷ்டையும் செய்தாகி, எம்பெருமான் ஸ்ரீசாரதாம்பாள் சமேதராய் இப்பரதக்கண்டம் உய்ய திருவுருக்கொண்டு, அவர் திருவவதாரமான விடத்தில்தானே திருக்கோயில் கொண்டருளியிருக்கலாயினார். இந்த பிராணப் பிரதிஷ்டைச் சடங்கு நாளது பிப்ரவரி மீ 21 உ திங்கட்கிழமையன்று ஆசாரிய ஸ்வாமிகள் ஏற்படுத்திய ஸாரதாபீடத்தில் தற்காலம் எழுந்தருளி ஜகத்ரக்ஷகராய் விளங்கும் ஸ்ரீ சிவாபிநவ நரசிம்ஹ பாரதியென்னும் திருநாமம் பெற்றுவிளங்கும் ஸ்ரீமத்சங்கராச்சாரிய ஸ்வாமிகளவார்களால் இந்தியாமுழுமையிலுமிருந்துவந்துள்ள சிஷ்டர்கள்திருக்கூட்டமத்தியில் விமரிசையாய் நிறைவேறப் பெற்றது.

வேதமோதுமுண்மையை விசாரித்துணர்ந்து ஆகமவழியாய் அத்வைத சித்தாந்தப்படுத்துவோர்தாமே "ஸ்வானுபவச்செல்வர்" என்னும் பேருக்குரியவர். ஏனெனில் ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாதென்றபடி, வெறும் வேதாந்தம்மட்டும் அத்வைதசித்தியைக் கொடுக்காது. "வேதாந்தசித்தாந்த ஸமரஸநன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே" என்னும் தாயுமானவரால் துதிக்கப்பெற்ற சித்தர் கூட்டம், அருவாயும், உருவாயும், அருவுருவாயும், திருவாயும் இருந்து சாதகர்களை வழிப்படுத்தி அவர்களுக்கு ஆன்மலாபத்தையும் தேசத்துக்கு க்ஷேமலாபத்தையும் அளிக்கும் அதிஷ்டானதேவதைகளாயிருந்து விளங்குகிறார்கள்.

---

* *Vide* Godward Ho! A Symposium, Second Series, "The Mystic Dalliance"

ஸ்ரீமத்பகவத்பாத ஆதி சங்கராசாரியஸ்வாமிகள் உபநயனமானவுடனேயே ஸந்நியாசம் பெற இச்சைவைத்தும் அதற்கு அவர் அன்னை அனுமதிகொடுக்காமையால் நம்புத்ரிப்ராமணர்குலத்துதித்து 3-வயதில் பிதாவையிழக்க நேரிட்ட அவர், உபநயநமாய் 13-வயதாசாப் பாலனாயிருக்கும்பொழுது ஆற்றில் முதலை வாயில் அகப்பட்டுக்கதற, அப்பொழுது அவர்தாய் ஓடிவந்தும் அவரை மீட்கச்சக்தியற்றவராய் நிற்க, சங்கரர் தன்தாயை நோக்கி, "அம்மா, இந்த ஆபத்திலேனும் நான் ஸந்நியாசம் பெற இணங்காயோ!" வென, அவ்வம்மையும், இஹத்திலும்பரமே மேலென்று எண்ணி அவரைப்பெற்ற அவளுடைய தாயன்புதாண்ட இஹபரமிரண்டையும் ஏகமாய் உணர்ந்து அவர்கேட்டபடியே அனுமதி கொடுத்தாள். ஸ்ரீசங்கரர் உலகப்பற்றை யுள்ளத்தொழிக்கவும், அவதாரபுருஷராதலால, பற்றுவிட்டதை யெண்ணினமாத்திரத்தில் ஆத்மலாபம்பெற்றவராய், தாபத்திரயங்களும் நீங்கிவிளங்கலானார். தாபத்திரயங்களும்தணியவே, ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்கிற பௌதிகதெய்விகவாதனைகள் அவரைஅறவே விட்டொழிந்தன. விட்டொழியவும், ஆதிபௌதிகத்துக்கு அந்நியமாயில்லாத முதலையும் வர்ப்பைத்திறந்துகொண்டு அவர்காலைவிட்டுவிட்டு நீரில்முழ்கிப் போய்விட்டது.

இப்படி முதலைவாய்ப்பட்டு அவர் விடுதிபெற்ற அந்தக்ஷணமே இந்த பாரதவருஷத்தின் சமஷ்டிபாவமூர்த்தியாம் பாரதஜாதீயம் என்னும் ஸ்வஜாதியுணர்ச்சிபிறந்தது. சமஷ்டிவியஷ்டி பாவங்களில் நன்றாகப்பழகிச் சாதனமுறைபற்றிச் சாதிக்காதவர்களுக்கு ஸ்வஜாதீயவுணர்ச்சி யென்றால்,"என்னவோ!"வென்று வித்தியாஸமாகத் தோன்றும். க்ஷேத்திரக்ஷேத்திரஜ்ஞ விபாகயோகத்தில் சித்திபெற்றவர்கள் தேஹம், தேஹி யென்றுள்ளது போல், க்ஷேத்திரம்-ஜாதி யென்கிற க்ஷேத்திரக்ஷேத்திஜ்ஞ விபாகம் தானேயேற்படுவதை யுள்ளூற்றுணர்வார்கள்.

குடும்பத்தில் தந்தை தாய்மகன் என்று திரிபுடிபாவம் ஏற்பட்டு விளங்குவது போல, இப்பாரதவருஷத்தின் புனிதபூமியாம் இப்பரதக்கண்ட க்ஷேத்திரத்தில் க்ஷேத்திரம், ஜாதி, ஸ்வதந்திரம் என்கிற திரிபுடிபாவம் தோன்றி விளங்குவது அஹக்கண்பெற்றோருக்கு நிதரிசனமாம். க்ஷேத்திரம் சக்தியானால், க்ஷேத்ரஜ்ஞனான ஜாதி சக்திமான்; சக்திக்கும் சக்திமானுக்கும் அத்வைதபாவம்தானேயேற்படும்; பாலில்நெய்பரவியிருந்தாற்போலவே க்ஷேத்திரமாகிய இத்தேசத்தில் க்ஷேத்திரஜ்ஞனான க்ஷேத்திராத்மா (இதைத்தான் ஸ்வதேசி யென்னும் பதத்திற்கு இலக்ஷியார்த்தமாகக் கொள்ளவேண்டும்) வியாபகமாயிருக்கிறான். பாலினின்றும் நெய்பிறந்தாற்போலவே, க்ஷேத்திரத்தினின்றும் க்ஷேத்ராத்மா பிரிவுபட்டு உருப்படுங்காலையில் சமஷ்டிமனம் மத்தடிபட்ட தயிர்போல் கலங்கிநிற்கும். இதனால் ப்ரமாதம் ஒன்றுமில்லை. ஏனென்றால், அது "ஸ்வதர்மம்". க்ஷீராப்தியை, மந்திரமலையை மத்தாகக்கொண்டு, வாசுகியைக்கயிறாகச் சுற்றித் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபொழுது சமுத்திரத்தின் அடித்தரை மந்திரமலையின் சுழற்சியைத்தாங்கப்போதாதுபோக, ஸ்ரீவிஷ்ணு(ஸ்திதிகர்த்தாவாதலால்) ஆமையாக அவதரித்து மந்திரமலையைத்தன்முதுகில் தாங்கினாரென்று புராணத்தில் சொல்லியிருப்பது தத்துவமாயுள்ள உண்மையை பௌராணிகமாகச் சொன்னதன்றிவேறல்ல. துல்லியமனதைப் பாற்கடலாகவும், திட்பப்பட்டஏகாக்ரசிந்தையை மந்தரமலையாகவும், உசுவாஸ நிசுவாஸமாம் இருவினைப்பயனை வாசுகியாகவும், நல்வினைதீவினை யென்னும் இருவினையாளரைத்தேவர்கள் அசுரர்களாகவும் பாவநம் செய்து சமஷ்டிவியஷ்டி பாவங்களால் சாதனைபுரிந்தால் உண்மையான தத்துவம் உள்ளபடி வெளியாகும். தத்துவத்தையுணர்ந்து தத்துவதரிசனம் செய்துகொண்டால் "தத்துவமெங்குண்டு, தத்துவனங்குண்டு" என்னும் திருமந்திரோபதேசப்படி தத்துவமுள்ள விடத்தில் தத்துவனைத்தேடியறிந்து தரிசிக்கலாம்.



இப்படி தத்துவ தரிசனமும் தத்துவன் தரிசனமும் கிடைக்கப் பெற்றால், திருவாங்கூருக்கும் கொச்சிக்குமிடையே யுள்ள எல்லைப்பிரதேசத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருக்கும் காலடி யென்னும் சிறியதோர்கிராமத்தில் தற்போது நடந்து வரும் வாலைசக்ராகிருதியாகக்கட்டப்பட்ட கோயில் கும்பாபிஷேகம், திவ்ய விக்ரஹப் பிரதிஷ்டைகளின் உண்மை யுள்ளபடி விளங்கும்.

இப்பொழுது ஸ்ரீங்கேரி ஸாரதாபீடத்தில் வீற்றிருந்து விளங்காநின்ற ஸ்ரீஜகத்குரு ஆச்சாரிய ஸ்வாமிகள் உண்மையை உள்ளபடியுணர்ந்து யோகசக்தியும் யோகஸித்தியும் பெற்று விளங்குபவராயிருத்தலால், அவர் முன்னின்று செய்விக்கும் பிராணப் பிரதிஷ்டை அவரது மந்திர சக்தியால் இந்தியா முழுவதுமுள்ள உத்தமருள்ளத்தில், அவரவர் பக்குவ முதிர்ச்சிக்குத்தக்கபடி, பரை, பச்யந்தி, மத்திமைவாக்குகளால் பற்பல விதமாய்த் திருக்கூத்து விளைப்பதாயிருக்கிறது.

பரை யென்று சொல்லும் "சூக்குமை வாக்கது சூந்யசம்பாஷணை" யென்பது ஸித்தர் வாக்கியம். "பச்யந்தி வாக்குதுவோ அந்தி சந்தி மாலைவெயில்." "மத்திமை வாக்கதுவும் மனக்கு ரங்கு கட்குடித்து மழலை பேசல்". இந்தமூன்று வகையிலும் நடக்கும் கூத்து மானஸீகமாத்திரமானதால் அதை வாயில் புறப்படும் வைகரி வாக்கினில் சொல்வது தெய்வீகதர்மத்துக்கு ஒவ்வாததாம். ஏனெனில் "வைகரிவாக்கு விகாரமே எப்போதும்" என்பது சித்தர்வாக்கு. இப்படித்திரிவிதமாய் நடக்கும் கூத்தைத் தாமே காணப் பெற்றோர்க்கு அத்தாக்ஷி வேண்டியதில்லை. காணப் பெறாவிடினும் பெரியோர் வாக்கில் பக்தி சிரத்தையுள்ளவர்களுக்குத் தாயுமானவரது பின்வரும் திருவார்த்தை நல்லதோர் சான்றாம்.

> காட்டியவந்தக் கரணமுமாயையிக் காயமென்று
> சூட்டிய கோலமுநானு வியங்கத்துரையிதனுள்
> நாட்டிய நான் எனக்கோரறிவற்ற நான் இவற் [றைக்
> கூட்டிநின்றாட்டினையேபரமே நல்ல கூத்திது [வே!"

அந்தக்கரணமும் மாயை; நானா விதமாக இயங்கும் புரியஷ்டக சூக்ஷ்மகாயம் போட்ட கோல மெல்லாம் கானற் சலம் போல மாயையிற்றோற்றமாய் முடிந்தது; இப்படியாக ஆத்மா இழிந்து வந்த படித்துறைபோலும் தத்துவத்துறையினுள், இவை யெல்லாம் ஸ்திரப்பட நாட்டிய "நான்'என்னும் அகங்கார தத்துவமும் தனக்கென்றோர் அறிவற்ற அவித்தியாரூபமானது. இப்படி அஸத்தாயுள்ளவற்றை யெல்லாம் கூட்டிச் சேர்த்து அவை யெல்லாம் நிலைபெற்ற அவற்றுள் ஸத் உருவாய் நின்று ஜீவநாடகம் ஆட்டினையே, பரமே! (பராசக்திஸ்வரூபமே!) இது நல்ல கூத்து!—என்ற படி.

யோகதீக்ஷை, ஞானதீக்ஷை பெற்றுள்ளோரும், கேவலம் ஏகீபாவ முதிர்ச்சி பெற்றுள்ள

ரும் கண்டதோர் கனவுகளையும், காட்சிகளையும், உள்ளதுள்ளபடி வரையச் சொல்லி, அவற்றைத் திரட்டி யொருபுத்தகமாகப் பிரசுரித்தால், "ப்ரொபெஸ்ஸர் ஸ்டார்பக்" என்பவர் அமெரிக்காவில் பிரசுரித்திருக்கும் இங்கிலீஷ் புஸ்தகத்தைப் போல் ஆத்மதத்துவ மனோதத்துவங்களை விளக்க அஃதோர் அருமை வாய்ந்த அத்தாக்ஷியாக வேற்படும். ஆனால் அது சாத்தியமில்லை. சாத்தியமானாலும் இத்தேசத்தில் அதற்கு சாதகம் சிறிது மில்லை.

சமஷ்டிமனம் "மத்தடிபட்டாற் போலும்" அலைவுறுங்காலத்தில் எத்தனையோ சாதகபாதகங்கள் நேரிடக்கூடும். இவற்றை யெல்லாம் ஸ்தூலப்பார்வையுள்ளவர்கள் பார்த்து விலக்குதல் கூடாமையாம். ஆதலால் ஜகத்குருவாய் விளங்கும் ஸ்ரீமத்சங்கராசாரியஸ்வாமிகள், இது விஷயத்தில் முன்னின்று, ஸாரதாம்பாள் சமேதராய் ஆதிசங்கரபகவானை பிரதிஷ்டைசெய்து திருக்கோயில் கொள்ளச் செய்தது மிகவும் சிலாக்கியமே.

கலிமிகுந்த இக்காலத்தில் இலக்ஷியார்த்தமான தத்துவங்களெல்லாம் தந்திர மந்திர யந்திராதி யுபகரணங்களால் இலக்ஷணப் படுத்தப்படவேண்டியது அவசியமாயிருப்பதால், இலக்ஷியமின்றி இலக்ஷணத்தைமட்டும் மூடமாய்க் கட்டியழும் ஜனங்கள் மனம்புளகாங்கிக்க, ஸர்வசாதகரும் ஸத்லக்ஷியருமாய் விளங்கும் ஆதிசங்கரரை ஸாரதாம்பாள் ஸமேதராய் அவர் அவதாரம் செய்தவிடத்தில்தானே பிராணப்பிரதிஷ்டைசெய்து வைக்கவேண்டியது அவசியமேயாம்.

ஸாமான்யஜநங்கள் மனம் மூடமாயிருந்தாலும் பக்திசிரத்தை நிறைந்தது. அவர்கள் மனத்துளே ஆத்மவுணர்ச்சியுதிக்கச்செய்வது மந்திர திருஷ்டாக்களாகவிளங்குமவர்களுக்கு மிகவும் இலகுவாம். துக்காராம் ஸ்வாமிகள் எல்லாருக்கும் அரிதாமிக்காரியத்தை முன்னொருகால் வெகுசுலபமாகச் செய்து முடித்தார்.

ஸாமான்ய ஜனங்கள்மனது குழந்தைமனம் போல்உபதேசார்ஹமானதன்று. ஆனால் உதாரணத்தினால் மிகவும்பாதிக்கப் படத்தக்கதாம். நல்லுதாரணமாக விளங்க நல்ல உத்தமர் ஒருவர் அவருள்ளிருந்தாலும் போதும். அவருடைய உதாரணம் காட்டுத்தீபோல் எங்கும் பரவி காடாந்தகாரமாய் விளங்கும் அவர்கள் மூடத்தை ஒருநொடியிற்போக்கும்.

இப்பொழுதிருக்கும் சமஷ்டிமனநிலை துக்காராம் ஸ்வாமிகள் காலத்திலிருந்ததற்குச் சரியாக விருப்பதால் அவருடைய காலத்தில் ஜனங்களின் மனோநிலையிருந்த இருப்பையும், அவர் சாமான்ய ஜனங்கள் மனதில் ஆத்மவெளிச்சம் பிரகாசித்து விளங்கச்செய்த பெருமிதமானதோர் பொதுவேலையையும், அதற்காக அவர் கையாடிய சாதனங்களையும் இங்கிலீஷில் காட்டும் குறிப்பை முகட்டில் சேர்த்திருக்கிறோம். இக்காலத்தைப் போல் அக்காலத்திலும், அந்தர்லக்ஷியம் அழிந்து மந்தர தந்திர யந்திர பூஜைகள் மட்டும் வீணேயனுஷ்டிக்கப்பட்டு வந்தன. சாமான்ய ஜனங்களோ, நடக்கும் அக்கிரமங்களைக் கண்டு மனம்புழுங்கி உயிரில்லாச்சவமெனவே அந்தர்லக்ஷிய மில்லா மந்திர தந்திர யந்திரோபாயங்களை வெறுத்தார்கள். துக்காராம்ஸ்வாமிகள் சொல்கிறபடி எல்லாம் குழப்பமாயிருந்தது. தர்மம் தலைகவிழ்ந்து நின்றது. சத்குணமும் சமாதானமும் நாட்டை விட்டு ஓட்டமெடுத்தது. எல்லாரும் சுயநயம் பாராட்டுகிறவர்களா யிருந்தார்கள். பணமே பெரிதாய் அவர்களுக்குத் தோற்றியது. தீரமும்



வீரமும் பூஜிப்பாரின்றிப் பூஜ்யமாயிருந்தது. மதபோதகர்கள் கிளிப்பிள்ளைகளைப் போலும் 'கிராமபோன்' யந்திரங்களைப் போலவும் கற்றுக்குட்டிகளாயிருந்து கேட்டதைச் சொல்லி வந்தார்கள். இப்படி சமஷ்டிமனம் கலைவரப்பட்டுக் குழம்பிக் கிடந்ததைத் தெளியவைத்து ஒழுங்குபடுத்துவது மிகவும் கஷ்டமான வேலையாக விருந்தது. இராஜாங்கத்தாராலும் வித்தியா இலாகாதாராலும் ஆவதற் கரிதாய்ப்படும் இவ்வேலை அக்காலத்திற்றோன்றிய புனிதாத்மாக்கள் சிலரால் வெகு நன்றாகச் செய்து முடிக்கப் பெற்றது. அப்படி பொதுஜன க்ஷேமத்துக் குழைத்தவர்களில் பிரதமஸ்தராயிருந்தவர் பக்த சிகாமணியாம் துக்காராம் ஸ்வாமிகள்.

இவர் தனவந்தர்களைத்தேடி அவர்கள் உதவியை நாடவில்லை. ஸர்க்காரையணுகி அவர்கள் சாதகத்தை விரும்பவில்லை. பின் என்ன செய்தாரென்றால், பரையோகத்திலிருந்து தான் கண்டனுபவித்த உண்மைகளைப், பராபரையோகத்திலிருந்து பரை,பச்யந்தி, மத்திமை வாக்குகளால், வெளியிட்டு. அவருடைய வாக்சக்தியினாலேயே துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்து வந்தார். ஜனங்களுடைய நித்தியப்படிக் கருமங்களை யுற்று நோக்கி கவனித்து, அவைகளின் தத்துவங்களை வெளிப்படுத்தி எல்லாருக்கும் ஸ்வதர்மோபதேசம் செய்து வந்தார். அவருடைய பாட்டுகளினால் அவர் "வேமன்னபத்தியம்' போல், சத்குணத்தை பலப்படுத்தி துர்க்குணத்தைக்கண்டித்து வந்தார். குழந்தை விளையாட்டுகளை யெடுத்துக் கொண்டு அவைகளில் மறைந்து கிடக்கும் தத்துவங்களை வெளிப்படுத்தி, தத்துவமூலமாய் தத்துவனைக்காட்டி எல்லார்சிந்தையிலும் ஈச்வரபக்தியுதிக்கச் செய்தார். அக்காலத்தில் நடந்தஅக்கிரமங்களைச் சிறிதும் தாக்ஷிண்யமின்றித் தமது சக்திவாய்ந்த வாக்கண்டத்தால், கண்ட துண்டமாய்விழக் கண்டித்து வந்தார், அந்தர்லக்ஷியமின்றி மனமிருளடைந்த ஜனங்களுக்கு ஈசுவரபக்தி யுண்டாகச் செய்து அது மூலமாய் தேசபக்தி விளைத்து வந்தார். அந்தர்லக்ஷியமின்றியும், அந்தர்லக்ஷியத்தைச் சாதிக்க நித்தியானுசந்தானம் செய்வதின்றியும் இருக்கும் மனிதன் மிருகப் பிராயனாகிறான் என்று அந்த உண்மையை எல்லார் உள்ளத்திலும் உறுத்தப் போதித்து வந்தார். அந்தர்லக்ஷியமில்லாத மனிதன் பூமிக்குப் பாரமென்றும் ஜாதிக்கு ஈனம் என்றும் வற்புறுத்திவந்தார்.

இந்தியாவில் அந்தர்லக்ஷியமும் அந்தர்த்தியானமும் ஒழிந்ததினால் தான் எல்லாக் கேடுகளும் வந்துற்றன. ஜீவகாருண்யமே எல்லாவற்றிலும் சிரேஷ்ட மென்றும், அஹிம்ஸையே மேலான தர்மமென்றும் கொண்டாடப்பட்டு வந்த இப்புண்ணிய பூமியில் ஜீவவதையும் துரோக சிந்தையும் உதித்து வளர்ந்து எல்லாருக்கும் வில்லங்கத்தை யுண்டுபண்ணுவானேன்? ஸ்வதர்மம் அழிந்ததினாலேயே எல்லா வில்லங்கங்களும் வந்து சேர்ந்தன. திரிகாலமும் சந்தியாவந்தனமும், காயித்ரீ த்தியானமும்விடாது செய்துவரவேண்டிய பிராஹ்மணர்கள் ஜாதிமுறை கெட்டு, அந்தர்லக்ஷியமென்பதே யொன்று மின்றி, அந்தர்த்தியானமும் இல்லாமல், சும்மா சோற்றுப்படிப்பு மட்டும் படித்து மிருகப்பிராயமாய் வயிறு வளர்த்து வருகிறார்கள். அந்தர்லக்ஷியமும் அந்தர்த்தியானமும் தங்கள் ஸ்வதர்மமாக வேற்பட்டுள்ள பிராமணர்களே வருணாசிரம தர்மம் மீறி அந்தர்லக்ஷியத்தை யிழந்து அந்தர்த்தியானத்தை மறந்து, கூழுக்குத் தன்னை

விற்கும் குருடர்களாகி, மற்றவர்களையும் தங்கள் வழியில் நடக்கப் பழக்குகிறவர்களாயிருந்தால், இவர்களைப் பார்த்து மற்றவர்கள் கெட்டுப்போகக் கேட்பானேன்! பிராம்மண தர்மத்தைப் போலவே, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர தர்மமும் தலைகவிழ்ந்து போயிருக்கிறது.

வருணாசிரமதர்மமென்றால் பிராமணனுக்குப் பிறந்தவனெல்லாம் சோம்பேறியாய் வயிறு வளர்த்துக் கொண்டுதிரியவேணுமென்கிறார்கள். அது வருணாசிரம தர்மம் அல்ல. பிரஹ்மதத்தையறிந்தவன்பிராம்மணன், இரக்ஷிக்கும் வேலையை ஸ்வதர்மமாகப் பூண்டவன் க்ஷத்திரியன். வியாபார விர்த்தியை ஸ்வதர்மமாக அனுசரித் துழைக்கிறவன் வைசியன். ஊழியஞ் செய்வதொன்றை உத்தம தர்மமாகக் கொண்டு நந்தனைப் போலுழைக்கிறவன் சூத்திரன். இவனைக் கர்மயோகி யென்றும் சொல்லலாம். வைசிய தர்மத்தை யுள்ளபடி யனுஷ்டிப்பான் சித்தயோகி யாவான். க்ஷத்திரிய தர்மத்தை ஸ்வதர்மமாகக் கொண்டவன் இராஜயோகி யாவான். பிராம்மண தர்மத்தை ஸ்வதர்மமாக வுடையவன் ஞானயோகியாம். பக்தியோகம் எல்லாருக்கும் பொது. ஏனெனில் பக்தியின்றிச் செய்யும் யோகம் பலிக்காது. பலிக்கின் சூந்யவித்தையாய் முடியும். அதினும் கேடு வேறு வேண்டாம். அந்தர்லக்ஷியம் அழிந்ததினால்தான் சூந்நிய வித்தை தலை யெடுக்கலாயிற்று.

ஆதிசங்கரர் திக்விஜயம் செய்துவந்த பொழுது, தக்ஷிண தேசத்தில் சூந்நியவித்தையனுஷ்டிக்கும் ஒருவன் அவரிடம் வந்து அவரை மஹா ஸாது வென்றும் பரமதாதா வென்றும தொழுது வரம்வேண்டுவான் வேண்டி, அவர் தலையைத் தன் இஷ்டதேவதைக்குப் பலியாகக் கொடுக்கத் தனக்கு அளிக்க வேண்டுமென்று யாசித்தான். வாக்குத் தவறாமல் பகவானும் அப்படியே ஆகுகவென்று சம்மதித்து, "அப்பா, நான் சமாதியுறும் வரையில் பொறுத்து, சமாதியிலிருக்கையில் 'தலையை வெட்டி யெடுத்துக்கொள்" என்று சொன்னார். அந்த சூந்நிய வித்தைக் காரனும் அப்படியே செய்வதாகச் சொல்லி நிற்க, ஆதிசங்கரர் சமாதியுற்றார். அப்பொழுது சூந்நிய வித்யோபாஸகன் அவர் தலையை வெட்டக் கத்தியை ஓங்கினபோது அவர் கிட்ட விருந்த சிஷ்யர்பேரில் நரஸிஹ்மமூர்த்தி அவசமாய் வந்து ஓங்கின கத்தியால் தானே அந்த சூந்நியக்காரன் தலையை வாங்கிச் சென்றாரென்று சங்கரவிஜயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் அந்தர்லக்ஷியமும் அந்தர்த்தியானமும் ஒரு பொழுதும் கெடாதபடி காப்பாற்றிவரவேண்டியது ஆச்சாரிய ஸ்தானத்திலிருக்கும் குருமூர்த்தங்களான உத்தம புருஷர்கள் கடமையாம்.

இக்கடமையை நிறைவேற்ற தற்காலம் நமது ஆச்சாரிய மூர்த்தமாகவிளங்கும் ஸ்ரீஜகத்குரு ஸ்ரீமத்ஸ்ருங்கேரி சங்கராசாரிய ஸ்வாமிகள் முன்வந்ததைப்பற்றி நாம் ஆனந்த பூரிதராகித்திருவருளைச் சிந்தித்தவண்ணமாயிருக்கிறோம்.

ஓம்தத் ஸத்

"முத்திக்குவித்து முதல்வன்றன் ஞானமே
பத்திக்குவித்துப் பணிந்துற்றுப்பற்றலே
சித்திக்குவித்துச் சிவபரந்தானதல்
சத்திக்குவித்துத் தனதுபசாந்தியே"—திருமந்திரம்.

---



# A First Lesson in Sociology.
## "Varnashrama Dharma"
## ஜனசமஷ்டி வித்தையில் ஓர் முதற் பாடம்.

---

### வர்ணாச்ரம தர்மம்.

"வித்தை" என்பது "வித்" என்னும் தாதுவிலிருந்துண்டான வார்த்தை. வித் என்றால் அறிதல். அறிவைத்தருவது அல்லது அறியும்வழி வித்தை. இது பரவித்தை யென்றும் அபரவித்தை யென்றும் இருவகைப்படும். பரவித்தையென்பது சித் விலாஸத்தை விளக்கும் வித்தையாம். அபரவித்தை அசேதனமாயுள்ள பிரபஞ்ச சம்பந்தமான ஜடதத்துவங்களை விளக்கும் வித்தையாம். பகவத்கீதையில், பகவான், பரா, அபரா என்று தனக்கு இரண்டு சக்திகள் இருக்கின்றன வென்று அர்ச்சுனனுக்கு உபதேசித்திருக்கிறார். இவையிரண்டும் விபாகித்துணரக்கூடியதாயினும் உண்மையில் இவையிரண்டாகப்பிரிவுபட்டிருக்கவில்லை இவ்விரண்டு முக்கியசக்திகளும் பதினெண்வித்தைகளாக விளங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பதினெட்டுவித்தைகளும் பரிபூரண அறிவாம் தேவிஸ்தோத்திரத்தில் "மூவாறுமாகின்றாள் வித்தையொடவித்தையாம் கலைகளென்ன, காம்யமென்ன!' வென்று குறிக்கப்பட்டிருக்கிறது. பரை, அபரை யென்பதையே வித்தை, யென்று சொல்கிறதுமுண்டு இவைகளையே அறிவு அறியாமை யென்றும் சொல்வதுண்டு.

அறிவுஎப்படி ஓர்அந்தக்கரணசக்தியாயிருக்கிறதோ அப்படியே அறியாமையும் ஓர் அந்தக்கரணசக்தியாகவிருக்கிறது. "காட்டிய அந்தக்கரணமும் மாயை" என்றதனால் அந்தக்கரணசக்தியாகிய இவ்விரண்டும்மாயாவிலாஸத்துக்குட்பட்டதே. இந்தமாயை சுத்தமாயை யென்றும், அசுத்தமாயையென்றும் இருவகைப்படும், இதையே "நிருபாதிகம்" என்றும், "ஸஉபாதிகம்"—"ஸோபாதிகம்" அல்லது "உபாதிஸஹிதம்" என்றும் சொல்வதுண்டு. இப்படியாகவுள்ள அறிவு, அறியாமை யென்னும் வித்தைகளை அம்மணமாய் நிறுத்திப்பார்த்தால், (அதாவது உபாதிஸம்பந்தம் நீக்கி ஆராய்ந்தால்,) அவை நினைப்பும், மறப்புமாய் விளங்கக் காணலாம். இந்த நினைப்பு மறப்புத் தானே காலதத்துவத்தைக்கொண்டு அண்டத்திற்பார்க்கில், பிறப்பும் இறப்புமாய்த் தோன்றும். நினைப்பு, மறப்பு என்று தமிழில் சொல்வதை சங்கல்ப, விகல்பமென்று ஸம்ஸ்கிருதத்திற் சொல்வர்.

இந்த ஸங்கல்பம் உதயமாவதையும், லயமாவதையும் அறிந்தவன் எவனோ அவனே யோகி. இந்த சங்கல்ப விகல்பந்தானே சித்தவிருத்திக் குக்காரண மாயிருத்தலால், சமுத்திர ஜலத்திலிருந்தெழும்பும் அலைகளைப்போல் மனாகாசமாம், சித்த வெளியிலிருந்து கிளம்பும் அலைகளாம் சங்கல்ப விகல்பரூப சித்தவிருத்தியை "நிரோதனம்" செய்தவனே, அலைகளைநீக்கிப்பார்ப்பவன். அசைவற்று விளங்கும் சமுத்திர ஜலத்தைக்காண்பதுபோல, சங்கல்விகற்பரூப சித்தவிருத்தியை நீக்கிப் பார்ப்பவன் தானே சலனமற்று விளங்கும் மனாகாசத்தை யோகதரிசனத்தால் உணர்கிறான்.

யோகதரிசனம் என்றால் என்ன?

கர்ப்பூரமும் ஜோதியும் கலந்தாற்போல ஐக்கியபதம் பெற்று நின்றவிடத்தில், கர்ப்பூரமாகியஉபாதியையும் நீக்கி, சோதியாகிய நிருபாதியையும் நீக்கி, இரண்டுக்குமுண்டான ஸம்பந்தத்தைமட்டும் உள்ளபடியுணர்வான் உணர்வு "யோகதரிசனம்" என்னும் சப்தத்துக்கு இலக்ஷியமாம்.

"மற்றொன்று மற்றொன்று மனோபவம்" என்றபடி ஒன்றைவிட்டொன்று பற்றி நிற்பதே தொழிலாயமர்ந்துள்ளது மனோதர்மமாதலால், அம்மனோதர்மத்தையோர்ந்துணர்ந்து "சித்தவிருத்திநிரோதனமாம்" யோகசக்தியால் மனாகாசத்துட்புகுந்து நிச்சலமான அந்த மனாகாசத்தினுள்ளிருந்து பார்த்தால் அம்மனாகாசம் தன்னறிவுக்குத் "தரிசியமாய்"-"காணப்பட்டதாய்" நிற்கும். மனாகாசம் "காணப்பட்டதோர் பொருளாம்" தரிசியமாக, அதைக்காணும் தான் திருஷ்டா (காண்பான்)ஆக, காண்பானும் காணப்படுபொருளும் சம்பந்தப்பட்ட விடத்தில் பிறக்கும் காட்சியை நிதானித்தறிவான் யோகி. காண்பானும் காண்பொருளும் ஒன்றானவிடத்து, கர்ப்பூரமும் சோதியும் கலந்தவிட

த்துண்டாகும் பிரகாசத்தைப்போல, காட்சி தன்மாத்திரையாய்விளங்குவதைக்கண்டறிந்தவன் திரிபுடிஞானம் பெற்றவனுவான். இந்தத்திரிபுடிஞான மில்லாமல் செய்யும் யோகம் பயன்படாதாகையால் இந்தத் திரிபுடி ஞானமே யோகிக்குக் கண்ணய் விளங்கும். ஆகவே யோகதரிசனம் என்றலும் திரிபுடிஞானம் என்றலும் ஒன்று என்று ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட "திரிபுடி ஞானம்" என்னும் "யோகத்ரிசனம்" பெற்ற சாதகர் தாமே உபதேசாருகாராவார். அவர்களுக்குச் சொன்னதே பின் வரும் ஹிதோபதேசம்.

"இக்காயம் நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்!
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்ற்
அக்காலம் உன்ன அருள் பெறலாமே."—
[திருமந்திரம்.

இக்காயம் நீங்கினல் மனம் இன்னெரு காயத்தைப் பற்றும். அது அதின் ஸ்வதர்மம். இனியொரு காயத்திற் பிறவாமல்' இருக்க, "தேஹோஹம்" என்கிற தேஹபாவனைமனத்தில் ஒழியவேண்டும். தேஹபாவனையொழிந்தால், தேஹோபாதி நீங்கியமனம் எஞ்சி நிற்கும். எஞ்சி நின்ற மனமும்தன்தேஹமாம் பற்றுவிட்டொழிய, எஞ்சி நின்றபாவன மாத்திரமாம்" அஹம்" பாவத்தைப்பற்றி நின்று "பாவோஹம்"எனச் சங்கல்பித்து நிற்கும் இந்த பாவனயோகத்தில் பாவனமாம் உபாதியை யொழிக்க, அலை யோய்ந்த சமுத்திரம் போல், சங்கல்பம் நழுவிப்போக அஃதோடு சித்தவிருத்தியும் நசித்து, மனம்தேஜோமயமாய் நிற்கும். அநாஹதசப்தத்திற்குள்ளேயிருக்கும்சங்கல்பத் நுவனி நீங்கிய விடத்து அதற்குள்ளே யிருக்கும் ஜோதி ஒளிவிட்டுப் பிரகாசித்து நிற்கும். இந்தஜோதிரூப தேஜோமனமும் தனது உபாதியொழிந்த விடத்து "திரிஜகத் சிருஷ்டி, ஸ்திதி, வ்யஸன கர்மகிருத்" என்ற சுருதிவாக்கியத்துக்கு இலக்ஷியமாய் சிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரரூபமான மூன்றுசக்திகளும் பொருந்திய ஜீவாத்மாவாக விளங்கும். இஃதையே "இச்சா சக்தி ஞானசக்தி கிரியாசக்தி ஸ்வரூபிண்யை நமஃ" என்னும் இரஹஸியநாமத்தால் அர்ச்சித்து அபேததரிசனம் பெற்று தற்போத மொழிந்த ஒழிவில் நிற்பர் தபோதனர். எல்லா தபஸ்களுக்கும் பலன் இதுவே. இதுவேதிரிகால ஞானமளிப்பது.இந்தத்திரிகாலஞானமுற்ற பின் "எக்காலத்தில் இவ்வுடல் வந்து எமக்கு (சித்திக்கல்) ஆனதென்று" விசாரித்து, "அக்காலத்தை உன்ன"க் காலம் மூலமழிந்துகலையிலொடுங்கி நிற்கும். காலத்தின் மூலத்தைஉன்னுவதால்(தியானிப்பதால்)கலாதத்துவ தரிசனம்சித்திக்கும்.இந்தக் "கலாதத்துவதரிசனம்" பெறுதலே"அருள்பெறலாம்." ஏனெனில் சூரியனின் ஒரு கிரணத்தையறியப்பெற்றவன் அதுவழியே சூரியவெளிச்சத்தைப் பெற்றவனுவது போலவும், பிறகு சூரியதரிசனம் பெறலாம் போலவும், கலாதத்துவத்தை யோகதரிசனத்தால் அறியப்பெற்றவன் "அருள்பெறல்" ஆவன்.

"தேஹோஹம்" என்றதிலிருந்துதித்த வியஷ்டி ஞானம் "கலாதரிசனம்" வரையிற் சென்று, தான் விஜ்ஞானகலரான அந்த அவசரத்தில் வியஷ்டி ஞானத்திலிருந்து உண்மையான சமஷ்டிஞானம் பெற அருகனுகிறன். இப்படி படிப்படியே உயர்ந்து செல்லும் சமஷ்டி வியஷ்டி பாவங்களில் அறிவை "யோக ஸம்யம" சக்தியால் இருத்தி ஸ்வானுபவம் பெற்றவர் பாவசமாதி சித்திபெறுவதற்கான யோக்கியதையுள்ளவராகிறர்.

சூரியனுடைய ஒரு கிரணத்தையறிந்து அதனுல் வெளிச்சத்தைப் பெற்று விளையாடுவது வியஷ்டி வித்தை. அந்த ஒரு கிரணத்தோடும் யோகஸம்யமத்தால் கர்ப்பூரமும் தீபமுங்கலந்தாற்போல ஐக்கியபதம் பெற்று" பருந்தேபோலும்அதன்வழியேசென்று சூரிய தரிசனம் பூரணமாய்ப்பெறுவது சமஷ்டிவித்தையாம்,

இப்படிச் சோபான முறையே சிரமப்பட்டு அரிய தவமியற்றி அடையப் பெற்ற சமஷ்டிவித்தையானது சமஷ்டி யுபாதியின்சேர்க்கையால், பலவிதமாகப்பரிணமித்து விளங்கும். இதைத்தான் 64-கலைகளாகப் பிரித்து கலா சாஸ்திரம் செய்திருக்கிறர்கள்.

இப்படி சமஷ்டி ஞானம் பெற்ற தீர்க்கதரிசிகள் ஜனசமஷ்டியின் இருப்பறிந்து அதைச் சீர்திருத்



திச் செம்மைப் படுத்தி நற்கதி சேரச் செய்ய லாயக்குடையவர்களாகிறர்கள். வியஷ்டி வித்தையின் பூரணத்தில் சமஷ்டிவித்தை உதயமாகிறபடியால், ஜீவன்முக்தர்களாய் விளங்குவோரே சமஷ்டி வித்தைசாதகம் பயில அருகரானவர்களாம். ஜீவன்முக்தி திசையிலிருந்து சமஷ்டிவித்தையுபாஸனைதொடங்கி விதேஹகைவல்யம் பெறமுயலுவோர், ஆதியில் பிண்டத்தைக் கொண்டுழைத்து பரதத்துவத்தை யுணர்ந்துய்ந்தது போலவே, பின்னர் (அதாவது, ஜீவன்முக்தி பெற்ற பின்னர்) அண்டத்தைக் கொண்டுழைத்து அவதாரதர்களாக விதேஹகைவல்யம் பெற்று சித்தமுத்த புருஷர்களா விளங்குகிறர்கள். இவர்களுக்குத் திருமூலர் சொல்லியபடி,—

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதியில்லை நுஞ்சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்துய் மினே."

என்பது ஸர்வஸாதக மானதோர் ஹிதோபதேசமாம்.

இவர்களுக்குக் "குலம் ஒன்றே!"அது எது வென்றல் "மனுகுலம்" (Human Race).

"தேவனும் ஒருவனே!"—அவர்கள் வழிப்படும் கடவுளும் ஸச்சிதாநந்தஸ்வரூபியாம் இரண்டற்றுவிளங்கும் வஸ்து தானே.

அவர்களுக்குப் பிறப்புபயமில்லையால், சங்கல்பதோஷமும், வினைப்பயனும் (கர்மபலனும்) அவர்களைப் பற்றது. ஆகையால் "நன்றே நினைமின் நாணுமே" யென்றர். அவர்கள் நினைக்கும் நினைப்பு அவற்களைப் பற்ற தாயினும், உலகத்துக்கு உள்ளபடியே பலனைத் தரும். ஆகையால் தான்,—

"அருவாயிருந்து அவர் உலகையும் ஆட்டி வைப்பாரே" என்று சொன்னது. பின்னும் ஆராய்ந்து பார்க்கில் அவர்களுக்கு,—

(1) "நமன் இல்லை."
(2) "சென்றே புகும்கதியில்லை."
(3) "அவர் சித்தத்துக்கு அந்நியமாய் அண்ட பிண்ட சராசரங்கள் எதுவுமில்லை, எல்லாம் அவர்கள் சித்த விருத்திமாத்திரையிலேயுண்டானதால் "ஆயினவனைத்தும் ஆனதவனருளாலே"யென்பது அவருக்குப் பொருந்தும். ஆதலால்அவர்களை,—"நுஞ்சித்தத்துநின்றே நீர் நிலை பெறநினைந்து உய்மின்" என்றர்.

இப்படிப்பட்ட மஹான்களில் ஒருவர் ஆதி சங்கராசாரியஸ்வாமிகள். அவர் உலகுய்வான் கருணை பூரித்து ஸாரதாம்பாளை உபாஸித்து வசப்படுத்திக் கொண்டு, அத்தேவியின் சக்தி விசேஷத்தால், தன்வலியிழந்த பௌத்த ஸமயக் கொள்கைகளால், கெட்டுக்கிடந்த வர்ணாசிரமதர்மத்தை மறுபடியும் உய்ப்பித்து ஷண்மத ஸ்தாபனம் செய்து அத்வைத மதத்தை யாவரும் அநந்நியமாய்க் கொண்டாடி ஆசிரயிக்கும் படி ஸ்திரமாய் ஸ்தாபித்தார்.

அப்படியாப் பட்ட மஹானுடைய கொள்கைகள் இப்பொழுதுள்ள நவ நாகரிக மினுக்கினுலுண்டான மயக்கில் அந்தர் லக்ஷியமும் அந்தாத்தியானமுமழிந்த நம்மவர் மனத்தில் நிலைபெறுது வழுவிப் போகலாயின. ஸநாதனமான அக்கொள் கைகளை உலகைசுவரியமும் சோற்றுப்படிப்புப் படித்து வாச்சா ஞானமும் பெற்ற புல்லியர் மனத்தினின்றும் நழுவிப் போனதால், அந்த ஸநாதன தர்மத்துக்கு ஒரு குறைவும் வாராது. ஆனல் அதை யிழந்த மனிதர்கள், பால் வற்றிய பதரே போலும் நற்கதி மார்க்கம் (Progressive path) சேராது துர்க்திக்ககாளாவர். அவர்களைப் பற்றி நமக்கு விசாரமில்லை. ஆனல்,காலடியில் நடந்த திருவாலய கும்பாபிஷேக திவ்ய விக்ரஹ பிராணப் பிரதிஷ்டைகளால்,அந்த ஸநாதனதர்மமானது மறுபடியும்.தலையெடுக்கத் துவங்கினதுபோதுமாயிற்று. அப்பொழுது ஸ்ரீ ஸ்ரீங்கேரி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவுபதேச மந்திரமொழிகளில் யாவரும் தத்தநிலைமையிலிருந்து நழுவாமல் ஸ்வதர்மத்தைக் கைநழுவவிடாது ஆசிரயித்து வரவேண்டுமென்று வற்புறுத்தியருளினர். அந்த மஹான் ஸ்ரீமத் ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் இந்தஞானபூமியில்ஸ்தாபித்துள்ளஸநாதனதர்மத்தையே ஸ்திரப்படுத்தவேண்டி அப்போதனை செய்தாராதலால் அவர் திருவடியைத்தலையில்

சமைந்து அவர் ஆக்கினைக்குட் பட்டு நடக்க நாமெல்லாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

வாயால்வல்லவரென்று பேரெடுத்த வியபசார வாக்கினர் போடும் மாயா ஜால வீண் வேஷத்தைக் கண்டு நாம் மயங்கவேண்டாம். நல்லொழுக்க மில்லாதோர் நாயினுங்கடைப்பராவர். திரிகரண சுத்தியாய் நடந்து கொள்ளாதவர் நடைப் பிணமாவர். வாயால் வல்லவரான வீண்வேஷதாரிகள்பேச்சிலும், வாயில்லா நாயனாராய் விளங்கும் மௌன தேசிகர் திருவாக்கே மதிக்கற்பால தென்றும், அதுவே பயன் படுவாக்கா மென்றும் நாம் இப்பாதக் கண்ட வாசிகளுக்கு வற்புறுத்திக் கூறத்தேவையில்லை.

ஆகையால், சூரியஜோதியானது ஸ்படிகத்தினாலே பலவர்ணமாகப் பிரிந்து இந்திர தனுசுபோலும் அழகு பொருந்தி விளங்குவது போலே, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற ஸ்வயம் பிரகாசமான "ஏகமேவாத்விதீயமான" "ஸத்தியம்" மந்திர திருஷ்டா, ஞான திருஷ்டா, யோகதிருஷ்டாக்களின் ஸ்படிகம் போன்ற மனதினால் பார்க்கும்பொழுது வர்ணாசிரம தர்மத்துக்குட்பட்டதாக விளங்கும். உபாதியொழிந்தால் எல்லாம் ஏகமாய் விளங்கும். இந்த வுண்மையை ஜனசமஷ்டி வித்தையில் நாம் முதலாவதாகக் கற்கவேண்டிய முதற்பாடமென்று கொண்டு நாமெல்லோரும் உள்ளத்தில் உன்னி மனத்திற் பதியவைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் ஸ்வார்யம் வழுவாது நடக்க நமக்கு குருவருள் சித்திக்கும். குருவருள் தானே திருவருள் பயக்கும். ஓம் தத்ஸத்

---

## Free from Bonds.
## The Autobiography of a Taluq Gumastha.

## *அவிழ்த்து விட்டகழுதை

### யௌவனம்—விவாகம் (தொடர்ச்சி)

சோக ரஸம் என்பதுநியாயமும் அநியாயமும் எதிர்த்து நிற்பதாலுண்டாவதல்ல—(ஒரு) நியாயமும் (மற்றொரு) நியாயமும் எதிர்த்து நின்றால்தான் உண்மையான சோகரஸமாகும். இதிலொருகாலும் அதிலொருகாலுமாகவைத்துப் பொதுவான நியாயத்தை எட்டிப்பிடிப்பதே தப்பிக்கும் வழி.

ஒரு நாள் ஏகாதசியன்று சாயந்திரம் என் தாயார் ஜபம் செய்து கொண்டிருக்கும் பொழுது அவசரமாய் என்னைக் கூப்பிட்டாள். "எனக்கு மயக்கமாயிருக்கிறது, கைகால் ஓய்வாயிருக்கிறது. நான் காலைவரையில் இருக்க மாட்டேன். என்னை எங்கேயோ தூக்கிக்கொண்டுபோவது போலிருக்கிறது. பிராயச்சித்தம் செய்து விடு. நான் வேண்டியபடி கிடைத்துவிட்டது. யாருக்கும் என்னால் இருக்கும் பொழுதும் இறக்கும்பொழுதும் ஹிம்சையேயிருக்கக் கூடாதென்பது என் பிரார்த்தனை" என்றாள்.

அம்மா நீ எனக்கும் பிறருக்கும் செய்திருக்கும் உபகாரங்களைக் கணக்கில் சேர்த்தாயில்லையோ.?" என்றேன்.

"என்னால் யாராவது உபகாரம் அடைந்தால் அது அவர்கள் அதிர்ஷ்டமேயொழிய என் பிரயத்தனம் ஒன்றுமில்லை." என்றாள்.

இதற்குள் வாத்தியாரை வரவழைத்தேன். அவர் வந்ததும் என் தாயார் தலையை என்மடிமீது வைத்து கர்ணமந்திரத்தை ஸ்வரத்துடன் நிறுத்திச் சொன்னேன். சந்தோஷமாய்க் கேட்டாள். என் தம்பியும் என் மனைவியும் அழுதார்கள். அவர்களைக் கூப்பிட்டு "நான் உள்ள நாளெல்லாம், உழைத்தது போதாதா.? இப்பொழுது கொஞ்சம் இளைப்பாற உத்தேசிக்கிறேன். அழாமல் உத்தரவுகொடு. உள்ளங்காலில் வெள்ளெலும்பாட ஓடி உழைத்தேன். நீங்கள் இருவரும் பரஸ்பரம் விசுவாசமாயிருந்தால் உங்கள் வீட்டை விட்டு நான் அகன்று போகமாட்டேன்: நான் ஏற்றிவைத்தவிளக்கு எரியுமளவும் நான் சமீபத்திலிருப்பேன் என்றாள்.

"அம்மா நீ எனக்கென்ன ஞாபகமாகக்கொடுக்கிறாய்" என்றேன்.

"உனக்குத் தெரியாததென்ன நான் சொல்லப் போகிறேன்! உன் தேகத்தை செவ்வையாய்க் கவனித்துக்கொள். தேகம்வேறு ஆத்மாவேறு என்றும் அதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை, ஒன்றில்லாமல் இன்னொன்று கடைத்தேறக் கூடும் என்றும் சொல்பவர்களை நம்பாதே. பெண்டாட்டி யில்லாமல் புருஷன் கடைத்தேறுவான், புருஷனில்லாமல் பெண்டாட்டி கடைத்தேறுவாள் என்பதைக் கனவிலும் நம்பாதே. சிருஷ்டியில் இல்லாத பிரிவினையை நீ கற்பிக்காதே. இவ்வுலகில் ஒருவரை வஞ்சித்து ஒருவர் வாழ இன்னும் இடம் ஏற்படவில்லை. "சர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்பதை அனுஷ்டானத்தில் கண்டுகொள். உன் பத்நியை தேவி ரூபமாக பாவித்து நடந்துகொள்." என்றாள். பிறகு என் தம்பியைக் கூப்பிட்டு முத்தமிட்டு "நீ அண்ணா சொல்லைத் தட்டாமல் நடந்துவா" என்று கண்ணை மூடினாள். இரவு 10 மணிக்கெல்லாம் சுவாசம் நின்றது. மறுநாள் தகனம் முதலிய கிரியைகளெல்லாம் செய்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்ததும் தனியான காட்டுக்குள் பிரவேசிப்பது போலிருந்தது.

இதன் பிறகு என் தம்பி பட்டணத்தில் சட்டப்பரீக்ஷைக்குப் படிக்கப்போய்விட்டான். அவன் மாமனார் அவனுடைய செலவுக்கு வேண்டிய பணம் கொடுக்கத்தயாராயிருந்தபோதிலும்அவன் ஒழிந்தவேளைகளில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டும் அவர்களுடனேயே குடியிருந்து கொண்டும் காலக்ஷேபம் செய்து வந்தான். போதாவிட்டால் என்னைக் கேட்டுப் பணம் வாங்கிக் கொள்வானே யொழிய மாமனாரைக் கேட்கமாட்டான்.

நான் வெகுநாளாய் எங்கேயாவது ஓடிப் போக வேண்டுமென்று கொண்டிருந்த எண்ணம் என் தாயார் இறந்த பிறகு என்குழந்தையினிடத்திலிருந்த அபிமானத்தினால் அதை நிறைவேற்ற மனம் வராமல் கொஞ்சம்கொஞ்சமாய்க் குறைந்தது. பெண்டாட்டியின்பேரில் கோபித்துக் கொண்டு அறியாக் குழந்தையைக் கஷ்டத்துக் குட்படுத்துகிறதா என்று தோற்றிற்று. ஆனால் அடுத்த வருஷம் ஒரு விஷயம் நேர்ந்தது. என்னுடன் பள்ளிக்கூடத்தில்படித்த ஒரு சிநேகிதனே எங்கள் ஆபீஸில் தாசில்தாராக வந்தார். அவர் மதத்தில் கிறிஸ்தவர். அவர் எல்லா சட்டப்பரீக்ஷைகளிலும் தேறியிருந்தார். அடுத்தாற்போல் 17½ ரூபாய் குமாஸ்தா வேலை ஒன்று காலியாயிற்று. பழைய சிநேகிதனுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்று அந்தத் தாசில்தார் அந்த வேலையை எனக்கு சிபார்சுசெய்து கொடுத்தார்.

கஜானாக்கணக்குகளில் நான் நன்றாய்ப் பழகியிருந்தபடியால் அந்த வேலையே எனக்குக் கொடுக்கப்பட்டது. அதாவது எனக்கு "நகதி குமாஸ்தா"என்றுபெயர். இரண்டொரு குமாஸ்தாக்களுக்கு இந்தவேலைதங்களுக்குக்கிடைத்திருக்கவேண்டியதுஎன்று மனவருத்தமுண்டு. என்சம்பளம் உயர்ந்ததை என் மனைவி கேட்டு சந்தோஷமடையட்டும் என்று அவளிடத்தில் சொன்னேன். "எங்கள் அப்பா சிபார்சி

* தன்னையறிந்து தன்தொழிலிற்பிரவேசிக்குமனம் தடையறியாது.



161180
Rm211, M52
M52·17-18

னால் உயர்ந்த சம்பளம் கிடைத்ததோ" என்றாள்.

"இல்லை. இப்பொழுது வந்திருக்கும் தாசில்தார் என்னுடன் படித்த சிநேகிதர். அவர் சிபார்சு செய்தார்" என்றேன்.

"அவர் உங்களுடன் படித்தவர்தானே அவருக்கு மட்டும் எப்படி தாசில்தார் வேலைகிடைத்தது?" என்றாள்.

"முதலாவது அவர் கிறிஸ்தவர். இரண்டாவது, அவர் எல்லா பரீக்ஷைகளும் தேறியிருக்கிறார்."

"எப்படியிருந்தாலென்ன? உங்களுடன் படித்தவர்களெல்லாம் பெரியவேலையில் தானிருக்கிறார்கள். ஆச்சுது, நாளைக்குத்தம்பி ஹைகோர்ட்வக்கீலாகப் போகிறார். அவர்பெண்டாட்டிக்கு நான் புடவை துவைத்துப்போடவேண்டும். உம்!" என்று பெருமூச்சு விட்டாள்.

"நீங்களும் அவரைப்போல் படித்துப் பரீக்ஷை கொடுத்திருந்தால் இத்தனை நாள் அவரைப்போல் வந்திருக்கலாமே? ஏன் வேண்டுமென்று இப்படி அழிம்பு செய்கிறீர்கள்? நமக்கு 15ரூபாயிலிருந்து 17½ரூபாயானால் மோக்ஷத்தை எட்டிப் பிடித்துவிட்டது போலிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் 100ரூபாய்க்கடுத்தது 200 ரூபாய், அதற்கடுத்தது 300ரூ என்று நூற்றுக்கணக்கில் சம்பளம் உயர்கிறது. அவர்களுடைய ஒரு சம்பளத்துக்கும் அடுத்த சம்பளத்துக்கும் உள்ள வித்தியாசத்தையே நமக்கு ஆயுசுமுழுவதும் கொடுத்தாலும் போதுமென்று தோற்றுகிறது" என்று போய்விட்டாள்.

ஒட்டகத்தின் முதுகின் மேல் ஒவ்வொரு வைக்கோலாய் சுமத்திக்கொண்டே வந்தால் கடைசியில் அதன் முதுகும் ஒடிந்து போய்விடுமென்று ஒரு வசனமுண்டு. ஒட்டகம் போன்ற தாலுக்கா குமஸ்தாவாகிய என் முதுகில் சுமத்தப்பட்ட வைக்கோல்களில் கடைசி வைக்கோல் மேற் கூறிய வார்த்தைகளே. அன்று சாயந்திரமே ஒரு மாசத்துக்கு ரஜாவுக்கு உத்தரவு கேட்டேன். "இப்பொழுதுதான் உத்தியோகம் உயர்ந்திருக்கிறது அதற்குள் ஏன் ரஜா?" என்று தாசில்தார் ஆச்சரியப்பட்டார். "பட்டணத்தில் என் தம்பிக்கு உடம்பு சரியில்லை. நான் போய்ப் பார்க்கவேண்டும்" என்று பொய்சொன்னேன். வீட்டில் என் மனைவியிடத்திலுமப்படியே சொல்லிவிட்டு. மறுநாளிரவுபுறப்பட்டுப் பட்டணம் போனேன். அங்கே என் தம்பியை நான் பார்க்கப்போகவில்லை. அங்கிருந்தபடிமறுநாள் முதல் கால்நடையாய் தேச சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தேன் கையில் பணமிருந்தால் கப்பல் ஏறி வேறுதேசம் போயிருப்பேன். தினம் பத்து மயிலுக்குக் குறையாமல் நடப்பேன். கையில் 50ரூபாய் பணமும் தீபாவளிக்கு மாமனார் செய்துகொடுத்த மோதிரமும் எடுத்துக்கொண்டுபோனேன். நான் புறப்பட்டுப்போகும்போது என் மனைவி ஆறுமாதம்கர்ப்பமாயிருந்தபடியால், ஒருகுழந்தையை விட்டுப் பிரிவதற்கே மனம் வராதிருக்க இன்னொரு குழந்தையும் பிறந்து விட்டால் அப்புறம் நாம் வெளிப்புறப்படவே முடியாது; தொழுவத்தில் கட்டப்பட்ட கழுதையாய் நிற்க வேண்டியதுதான் என்று பயமுண்டானதனால்தான், அவ்வளவு அவசரமாய்ப் புறப்பட்டேன். புறப்பட்டுஎல்லாவித தேசங்களையும் ஜனங்களையும் பார்த்துக் கொண்டு போனேன்.



வெகுநாளாய்க் கண்ணுக்குப்புலப்படாத ஒரு பாறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த என் வாழ்நாளென்னும் கப்பல் இன்று அப்பாறையில் தாக்கிவிட்டது. கொந்தளித்துக்கொண்டிருக்கும் சிருஷ்டி சாகரத்தில் ஒரு திவலையாகிய எனக்கு (என் தத்தளிக்கும் ஸ்திதியைக்காணக்) கண்கள் தவிர வேறொன்றும் பகவான்கொடுக்கவில்லை ஜனசமூகங்களின் மத்தியில் காட்டில் சஞ்சரிக்கும் புலிபோல் தனியனாய்த்திரிந்தேன். என் ஹிருதயத்தையே நான் தின்றுகொண்டிருந்தபடியால் என்னை மாம்சபக்ஷணியென்று சொல்வதற்கில்லாமலிருந்தது யாரோடாவது சம்பாஷணை நேர்ந்தால், பத்திரிகைகளில் என்ன சமாசாரம்என்றும் மழையெங்கே பெய்ததுயெங்கே பெய்யவில்லைஎன்றும் கேட்பதைத்தவிர மற்ற விஷயங்களில் என் வாயைப் பூட்டிக்கொண்டேன். என்ன உத்தேசத்துடன் இவ்வளவு தூரம் அலைந்தேன் என்று கேட்டால், பதில் சொல்ல முடியாது. நான்அப்பொழுது குடியிருந்த சூனியப்பிரதேசத்தில் உத்தேசம் என்னும் நக்ஷத்திரம் உதித்ததில்லை. வேட்டையாடப்பட்ட மிருகங்கள் தங்கள் மேல் விழுந்த பாணத்தின் வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்ள உத்தேசித்தவைபோல் இன்ன இடம் போகிறோமென்று தெரியாமல் ஓடுமாம். வேதனை தங்கள் சரீரத்திலேயே ஐக்கியப்பட்டிருப்பதை அறியாதனபோலும் அந்தஇனத்தில் நானொருவனானேன். என் காலின்கீழிருக்கும் நிலம் நெருப்பானது போற்றவித்தேன். என் எண்ணங்களும் மனத்தோற்றங்களும் என்னைப் போ போ என்று தூண்டின. சுற்றிலுமுள்ள மரஞ்செடிகள் புற்பூண்டுகள் கூட என்னைப் போ போ என்று துரத்தின. கால சக்ரம் சுழலும்போது அதிலொட்டிய தூசியாகிய நான் மட்டும் எப்படிச் சுழலாமலிருக்கமுடியும்.?

வழியில் சாப்பாட்டுக்கு என்ன செய்தேனென்று கேட்கவேண்டாம். சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்மட்டு ஜலம் என்பதுபோல் எந்த வேலையும் செய்யத்துணிந்த ஒருவன் ஒரு சுண்டுவிரலினால் வேலை செய்து தனக்குப் போதுமான அளவு சம்பாதித்துக் கொள்ளக்கூடும். ஆனால் இடையே இரண்டு கைகளினாலும் தனக்கு உபத்திரவங்களை சம்பாதித்துக் கொள்ளாமலிருக்கவேண்டும்.

ஒருமாதத்திய என்ரஜாமுடிந்தவுடன் இன்னும் 6 மாதத்துக்கு ரஜாவுக்கு எழுதிவிட்டு மறுநாளே அவ்வூரைவிட்டுப்புறப்பட்டேன் இப்படி யெல்லாம் அலைந்தால் நம்மை மாமனார்வீட்டிலிருந்து யாராவது தேடிப் பிடித்து அழைக்க வருவார்கள் என்று எண்ணினேன். மூன்று நான்கு மாதங்களாயின: யாரையுங்காணோம். பாவம்! அவர்கள் என்னை எந்த விலாஸத்தில் தேடுவார்கள்! வலுவிலே கடிதம் எழுதவும் அவமானம்! வீட்டிலிருந்தால் சண்டையும் மனஸ்தாபமுமாகவாவது காலத்தைத் தள்ளலாம். இப்பொழுதோ என்னிடத்தில் சிநேகம் பாராட்டாவிட்டாலும் விரோதம் பாராட்டுமளவுகூட நம்மைக் கவனிப்பாரில்லை. எல்லாரும் அவரவர்கள் வேலையையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதாவது ஏற்கனவே தங்களுக்குக் கிடைத்திருந்த சண்டைச்சச்சரவுகளை விட்டு விலகுதல் என்னும் முட்டாள்தனமான காரியத்தை அவர்கள் செய்யவில்லை. எனக்குப்பொழுதுபோவது ஒரு பெரிய பாரமாயிருந்தது. தினம் வழக்கமாய்ப்பட்டுக் கொண்டிருந்த கஷ்ட, நிஷ்டூரங்கள் தேவாமிருதம்போல், மறுபடி கிடைத்தால் போதுமென்று ஆசையாய் விட்டது. இவ்வுலகத்தில் வேலையில்லாதவனை

ப்போல் துர்ப்பாக்கியன் யாருமில்லை. உலக முழுவதும ஒரு பெரிய நீராவியந்திரம்போலும் நான் அதனால் நொறுக்கித் தூளாக்கப் படுவதற்கு தயாராய் அதற்குள்போடப்பட்டுக்காத்துகொண்டிருந்த தானிய விதைபோலுமிருந்தது. வெகு நாளாய்ப் புகைந்து கொண்டிருந்த என் ஹிருதயம் எரிந்து சாம்பலாய்ப் போங்காலம் நெருங்கியது போலிருந்தது.

என் உயிரைக் கொண்டுபோகிறதற்காக வந்தாலும் சரி, யமதர்மராஜனே சாவித்திரிக்குதோற்றினதுபோல் என்னெதிரில் தோன்றினால் அவனிடத்திலாவது என்மனதைச் சொல்லி இரண்டொரு கேள்விகள் கேட்கலாமென்று உத்தேசித்தேன். அந்தக்கடைசித் தோழன் நம்மை ஒரு நாளும் கைவிடமாட்டானென்பதில் எனக்கொருதிருப்தி யிருந்தது.

ஒரு நாள் காசி க்ஷேத்திரத்தில் விசுவநாத சுவாமி கோவில் சந்நிதித் தெருவில் நடுப்பகலில்போய்க் கொண்டிருக்கும் பொழுது ஒரு எண்ணமுண்டாயிற்று. அப்படியே அந்தக் கோபுரத்து நிழலில் உட்கார்ந்தேன். என் வாழ்நாள் முழுவதும் பிறந்தது முதல் அன்றையதினம் வரையில் நடந்த ஒவ்வொரு விஷயமும மரணவஸ்தையில் தோற்றுவதுபோல் ஒவ்வொன்றாய் என் மனக்கண்முன் ஊர்வலம் வந்தது. சிறுபிள்ளையா யிருக்கும்பொழுது சிரித்து விளையாடியதும். அழும்பொழுது தாயார் செய்யும் சமாதானமும், பள்ளிக்கூடத்துப் பிள்ளையாய்க் கவலையில்லாக்காலங்கழித்தும், தகப்பனார் இறந்து குடும்பத்துக்கு யஜமானனானதும், கலியாணம் பண்ணி கிரஹஸ்தனாய் வாழ்ந்ததும், உத்தியோகஸ்தனாகி அதிகாரம் வகித்ததும், பிறர் அதிகாரத்துக்குப் பயந்து நடந்ததும், தாயார் க்கு ம் பொழுது சொன்ன கடைசி வார்த்தையும் ஒவ்வொன்றாய் சுவற்றில் எழுதிய சித்திரம்போல் பிரத்தியக்ஷமாய் வந்து கொண்டிருந்தது. பிறகு இதெல்லாம் நான் செய்த காரியங்கள் என்னும் எண்ணமும் நழுவியது. இவ்வளவு நாளாய் ஒரு நீடித்த நாடகம் நடந்தது போலும் அதை நான் பார்த்துக்கொண்டிருந்தவன் போலுமிருந்தது. அப்பொழுது அக்கம்பக்கத்தில் தெருவில் போய்க்கொண்டிருந்தவர்களுங்கூட எழுதிய படம்போல் தோற்றினார்கள். அவர்களும் நம்மைப்போல் உயிர்உள்ளவர்கள் தாம் என்பதை மறந்தேன். அவர்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகளெல்லாம் கனவில் கேட்ட சங்கீதம்போல் அமுங்கிபோயிற்று.

அப்பொழுது என்மனதில் ஒரு குரல் கேட்டது "என்னடா பயப்படுகிறாய்? சாவுக்கா? வாழ்வின் கஷ்டங்களுக்கா? குடும்பத்தின் கொடுமைகளுக்கா? பயங்காளி! உனக்கு ஒரு ஹிருதயமில்லையா? எதாயிருந்தாலும் பொறுத்துக் கொள்ள தைரியமில்லையா? இப்பொழுது தற்காலம் தெருவில் அடித்துத் துரத்தப்பட்டிருந்தபோதிலும் பிறப்பில் சுவதந்திரனாய்ப் பிறந்தவனுக் குரியபடி உன்னைப்பக்ஷிக்கும் யமனை நீ பக்ஷிக்க சாமர்த்தியமில்லையா?'' என்றது. அப்பொழுது இவ்வளவு நாளாய் என்னைச்சுற்றிக்கொண்டிருந்த சனியன் "ஏன்வீண் யோசனையெல்லாம் உனக்கு? இந்தஉலகமெல்லாம் எனக்குட்பட்டதுதான். நீயும்எனக்குட்பட்டவன்தான்: நீமட்டும் எப்படிதப்பித்துக் கொள்ளமுடியும்?உனக்கு உற்றார்உறவினர்யாருமில்லை:ஆதரிப்பாருமில்லை'' என்றது. அதற்குநான் "எனக்குநானேதுணை-நான் உன்னை இனி லக்ஷியம் செய்யவும் மாட்டேன், உனக்குக்கீழ்ப்படியவுமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தேன்.



அங்கிருந்து ஹிமயமலைக்குச் சென்றேன். அவ்விடத்தில் ஜனங்களின் துணைகொண்டு ஏறக்கூடிய சிற்சில இடங்களை ஏறிப்பார்த்தேன். ஒரு நாள் சாயந்திரம் ஒரு மலைச்சாரில் உட்கார்ந்து கொண்டு என்காலின் கீழிருக்கும் நகரங்களையும் கிராமங்களையும் கவனித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சாயந்திரவெயில் தங்கநிறமாய் மரங்களினுச்சியில் படிந்திருந்தது. கீழிருக்கும் வீடுகளிலிருந்து அவைகளின் சுவாசம் போல் புகை கிளம்பிக் கொண்டிருந்தது. இயற்கை சிருஷ்டிமுழுவதும் அம்பிகையின் உச்சுவாஸ நிச்சுவாஸத்தினால் மந்தமாய் அசைந்தாடிக்கொண்டிருக்கும் ஒரு விசித்திர வஸ்திரம் என்று அப்பொழுது தெளிவாய் விளங்கிற்று. ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் நம்மைப்போல் சுகதுக்கங்களில் அடிபடும் ஹிருதயத்தோடு கூடிய ஒரு ஆத்மாவுக்குக் குறைபாடிருக்கிறதென்று யோசிக்கையில் மயிர்க்கூச்செடுத்து, அப்பொழுது என் தாயார் என் மனைவியை தேவிரூபமாக பாவித்துக்கொள் என்று சொல்லிய கடைசி வார்த்தை ஞாபகத்துக்கு வந்தது. அப்பொழுது என் மனைவியின் உருவம் என்னெதிரில் நின்றாற் போலிருந்தது. அவள்மேல் எனக்கிருந்த கோபமெல்லாம் பறந்துபோயிற்று. அதற்குப் பதிலாக அவள்மேல் எனக்கிரக்கமுண்டாயிற்று. ஐயோ பாவம்! அவளும் நம்மைப் போல் சுகப்படவழி தெரியாமற்றவிக்கும் ஆத்மாக்களில் ஒன்றே. நம்முடையதுக்கங்களுக்கு ஓய்வு சாவுதான். அப்படியிருக்க ஒருவர் துக்கத்தை ஒருவர் அதிகரித்தல் எவ்வளவு முட்டாள் தனம்! அதற்குப் பதிலாக ஏன் ஒருவர் கண்ணீரை ஒருவர் துடைக்கயத்தனம் செய்யக்கூடாது? நான் உட்கார்ந்திருந்தஉயரத்திலே கூட என்முன் காதில் கேட்கும் உலகித்தின் சந்தைக்கூச்சலெல்லாம் மனதுக்கு விரஸமாயிராமல்தங்கள் கஷ்டத்தைச் தெரியாது திணறிக்கொண்டிருக்கும் வாயில்லா ஜந்துக்களுடைய அபயக்குரல் போல் எனக்கே உருக்கத்தைக் கொடுத்தது என்றால், பகவானுடைய காதில் இந்த சப்தமெல்லாம் தங்களை ரக்ஷிக்கக்கோரும் பிரார்த்தனைகளாகக்கேட்கும் என்பதற்கு சந்தேகமென்ன? மனிதனுடைய அளவற்றஆசைகளையும், அவன் இடறிவிழுந்துகொண்டு செய்யும் அற்பப்பிரயத்தனங்களையும், அவைகளையும் நிறைவேறாது தடுக்கும் பிரதிபந்தங்களையும் நோக்கும் பொழுது எல்லாரும் ஒரே மண்ணினால் செய்யப்பட்டு தேவலோகத்திலிருந்து பூலோகத்துக்கு சாபத்தினால் தள்ளப்பட்ட தெய்வீக சகோதரர்களே என்று தெளிவாய் விளங்கிற்று. உலகத்தில் யாரோடு நமக்கென்ன சண்டை? இருக்கிறதெல்லாம் ஒரு கொட்டங்கச்சிக் குடுக்கை. உள்தேங்காயையெல்லாம் எறும்பு தின்று விட்டது. இதை உனக்கு எனக்கென்று மண்டையை உடைத்துக் கொண்டால் அது கீழே விழுந்து உடைந்து கொஞ்சம் உள்ளதும் சிதறிப்போகிறது! அப்படிக்கில்லாமல் நம் எதிரியைப் பார்த்து "அப்பா அந்தக்குடுக்கையை நீயே எடுத்துக் கொள். இன்னும் உனக்கு வேண்டிய அளவுகொடுத்து திருப்தி செய்ய என் கையில் இல்லையே என்று வருத்தப்படுகிறேன்" என்று சொல்லிவிட்டு நாம் விலகிவிடுவோமே! என்று யோசிக்கையில் அங்கிருந்து நேராக ஊருக்குப் போய் என்மனைவியை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறதென்று தீர்மானித்தேன். கையில் பணம் 10 ரூபாய்க்குக்குறைவாகத்தானிருந்தது. உடனே என் கையிலிருந்த மோதிரத்தை விற்று 25 ரூபாய் சம்பாதித்துக்கொண்டு ரயில் மார்க்மாய்ப் புறப்பட்டு இரண்டு மாதத்துக்குள் ஊர் வந்து சேர்ந்தேன்,

நான் ஊர்வந்து சேர்ந்த பொழுது இரவு 9மணிஇருக்கும். நிலவு இருந்தது. என் வீட்டு வாசலில் என் தம்பியின் குரல் ஹீனஸ்வரமாய்க் கேட்டது. வீட்டுக்குள் வெகுபேர்கள் ஸ்திரீகளும் புருஷர்களும் வந்து கொண்டும்போய்க் கொண்டுமிருந்தார்கள். நான் தலையை முக்காடிட்டுக் கொண்டு தெருவில் திரும்பித் திரும்பி உலாவிக்கொண்டே அவர்கள் சம்பாஷணையைக் கவனித்தேன்.

ஒருவர் "உனக்குக்கூட ஒருகடிதம் எழுதக் கூடாதா? இன்னஊரில் இருக்கிறான் என்று தெரிந்தாலும் ஒருதந்தியாவது கொடுக்கலாமே?" என்றார்.

மற்றொருவர்: "தந்திஏன்? இருக்கிற இடம் தெரிந்தால் நான் போய் அழைத்து வரமாட்டேனா?" என்றார். இது என்மாமனார் குரல் என்றறிந்தேன்.

இதற்குள் ஒரு குதிரை வண்டி வாசலில் வந்து நின்றது அதிலிருந்து சட்டை தலைப் பாகை, கைப்பிரம்பு ஸகிதமாய் ஒருவர் இறங்கி உள்நோக்கிச்சென்றார். அவர் ஆஸ்பத்திரிவைதியர். திண்ணையில் இருந்தவர்கள் அவரைவாருங்கள் என்று உபசரித்து உள்ளே அழைத்துப் போனார்கள். நான் அவர்கள் பின்னால் உள்ளே போனேன்.

அங்கே ஒரு படுக்கையில் என் மனைவிபடுத்திருந்தாள். பக்கத்தில் என்மாமியார் ஒரு அழும் குழந்தையை வைத்துக் கொண்டு சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள். அக்குழந்தை இரண்டு மாதத்துக்குழந்தை யாயிருக்கலாம். நான் என் தம்பியைத் தனியே அழைத்து என்ன சமாசாரம் என்று கேட்க விம்மி விம்மி அழுதான். அவனிடமிருந்து என் மனைவி பிரசவித்து ஒரு மாதத்திற் கெல்லாம் குளிர் காச்சல் கண்டு, முற்றி முறை ஜ்வரமாகி விட்டதென்றும் இப்பொழுது வைத்தியருக்கே இன்னது செய்கிறதென்று தெரியவில்லை யென்றும், என் மனைவி அடிக்கடி என்னைப் பற்றி "அவர் எப்போவருவார், ஒரு தந்தி கொடுங்கள்" என்று புலம்பிக் கொண்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டேன் பிறகு என் வரவை எல்லாரும் அறிந்து கொண்டார்கள். நான் படுக்கையண்டைபோய் உட்கார்ந்தேன். என் மனைவியைப் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டேன். (இதுவரையில் நான் அவளை அப்படிக் கூப்பிட்டதில்லை.) என் குரல் கேட்டதும் அவள் பிரமித்துக் கண்ணை விழித்துச் சுற்று முற்றும் பார்த்தாள். என் முகத்தைப் பார்த்ததும் அவள்கண்களில் நீர் ததும்பிற்று. எழுந்திருக்க முயன்றாள். மற்றவர்கள் "சிரமப்படாதே சும்மாயிரு" என்றார்கள் பிறகு அவள் மெதுவாய் "நான் கொடுத்து வைக்காத பாவியானேன்." என்றாள்.

"என்னை மன்னிக்கிறாயோ?' என்றேன்.

"உங்கள் பெருமையை அறியத்திறமையில்லை அற்பபுத்தி. எவ்வளவோ அபசாரம் செய்தேன். எல்லாவற்றையும் பொறுத்துரக்ஷிக்க வேண்டும்." என்றாள். அவள் கண்களில் ஜலம் பெருகியது.

"நானும் முரட்டுப் புத்திக்காரன். தாயின் புத்தியைக்கேளாத பிள்ளை. என்னை நீ முற்றும் மன்னிக்கவேண்டும்.' என்றேன்,

"அந்த வார்த்தை சொல்லாதேயுங்கள். நான் உங்களுக்குத் தகுதியானவளல்ல. அதனால் தான் பகவானே இருவரையும் பிரித்துவிட்டார்."என்றாள்.



"அப்படியானால் பிழைக்கமாட்டாயோ;" என்றேன்.

"அவ்வளவு அதிர்ஷ்டமிங்கில்லை" என்றாள்.

பிறகு குழந்தையை என் கையில் ஒப்புவித்து"இதை என்னைப் போல் பாவித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

"இன்னும் ஏதாவது வேண்டுமானால் தெரிவித்துக்கொள்" என்றேன்.

"என் மனதுக்கு இனி ஒன்றும் குறைவில்லை. உங்களை இனிக் காண்பேனோ என்று ஏங்கியிருந்தேன்;கண்டுவிட்டேன்: நீங்கள் இருக்கும்போதே நான் கண்மூடவேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்தேன். அப்படியே கிடைத்து விட்டது. இது என்பாக்கியமே" என்றாள்.

பிறகு வைத்தியரை விசாரித்தேன். "இந்த ஜ்வரத்தை நம்பக்கூடாது. 20 நாளாய் இப்படியே இருக்கிறது. இன்று வேறு மருந்து கொடுத்திருக்கிறேன், இதன் குணம் காலையில் தெரியும்" என்றார்.அன்றிரவு விடியற்காலத்தில் சுவாசம் நின்று விட்டது.

என்மாமனார், குழந்தைக்குப்பால்காரி வைத்துப் பால் கொடுத்து வளர்க்கக்கூடாதென்றும் தன்சமீப பந்துக்களில் பால் நிறைந்துள்ள ஒரு தாயினிடத்தில் கொடுத்து வளர்க்க ஏற்பாடு செய்வதாகவும் சொல்லி என் பெண்ணையும் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

இதன் பிறகு என் ரஜாமுடிவில் நான் கச்சேரிக்குப் போய் வேலை ஒப்புக்கொண்டேன். தினம் காலையில் எழுந்து ஸ்நானம் செய்து சமைத்து சாப்பிட்டுவிட்டு மிகுதி சாதத்தை ராத்திரி சாப்பிட்டுக்கொண்டு இரண்டு மூன்று வருஷம் காலந்தள்ளினேன். பிறகு என் பெண்ணை எனக்குச்சமையல் வேலைகளில் உதவி செய்யும் பொருட்டு வரவழைத்தேன். அவள் ஏழெட்டு வயதுக் குழந்தையாதலால் பெருக்கி மெழுகிப் பாத்திரம் தேய்க்கும்வேலைகளை மட்டும் அவளைச் செய்யச் சொல்லி சமைக்கிறவேலையை நானே செய்து வந்தேன்.

அநேக தடவைகளில் என் மாமனார் "குழந்தைகளைப்பற்றி நீ கவலைப்படவேண்டியதில்லை. நீ மறுகலியாணம் செய்துகொள்" என்றார். "தங்கள் பெண்ணைப்போல், கள்ளங்கபடமில்லாதஸ்திரீ இனி கிடைக்கமாட்டாள். எனக்கும் இனிப்பார்க்கவேண்டிய அநுபவமொன்றுமில்லை. ஆகலால் அவளுடைய ஞாபகத்துக்குக்குறைவொன்றும் வராதபடி என் காலத்தைக் கழித்துவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டேன். மெட்றிகுலேஷன் பரீக்ஷைதேறின உடன் என்தாயார் இருக்கும் பொழுதே என்தம்பிக்குக்கலியாணம் ஆனதைப்பற்றி நான் உங்களுக்கு முன்னமேயே சொல்லியிருக்கவேண்டியது.

என்மனைவி இறந்த ஆறுமாதத்திற்கெல்லாம் என்தம்பி சட்டப்பரீக்ஷையில் முதல்வகுப்பில் தேறினான். பிறகு அவனுக்கு சாந்திகலியாணம் நடந்து அவனும் பட்டணத்திலேயே ஹைகோர்ட்வக்கீல் ஒருவரிடத்தில் ஒருவருஷம் வேலை கற்றுக்கொண்டு அங்கேயே குடித்தனம் செய்துகொண்டிருந்தான். அவனைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் சொல்வோம்.

(இரண்டாம் பாகம் முற்றிற்று.)

# "FOUR DIMENSIONED BODIES."

"No power on earth could resist a throughly detached soul; it might almost be said to participate in God's omnipotence. Here lies the secret of the marvellous deeds of so many Saints."—Benedict Zimmerman on St. John of the Cross.

## "துரியகனவடிவு"

அமெரிக்காதேசத்திலுள்ள ஐக்கிய மாஹாணங்களில் ஹார்வார்ட் யூனிவர்ஸிடியில், 11-வயதுள்ள பையனொருவன், மஹாபண்டிதர்களும் வித்யாவிற்பன்னர்களும் காலேஜ்ப்ரொபெஸ்ஸர்களும் நிறைந்தசபையில் "துரியகனவடிவு"என்னும் விஷயமாய் ஓர்அற்புதப்பிரசங்கம் செய்ததாகவும் அந்த அற்புதசக்திவாய்ந்த பையன், வெகுநன்றாகவும்,தெளிவாகவும்,உண்மை விளங்க பிரசங்கம் செய்தபோதிலும்; அவன் எடுத்து விவரித்த தத்துவங்கள் அங்கே கூடியிருந்த கணிதசாஸ்திரபண்டிதர்களுக்கும் மற்ற வித்யாவிற்பன்னர்களுக்கும் விளங்குவதரிதாயிருந்ததென்றும் பத்திரிகைகள் மூலமாய்த் தெரியவருகிறது. "துரியநிலைபெற்றோர்க் கரியதொன்றில்லை" யாதலால் இதில் அதிசயம் ஒன்றும் இல்லையே! இதுநிற்க.

"துரியமாய்" என்றால் என்ன? திருஞான ஸம்பந்தர் சரித்திரத்தைப்படித்தவர்களுக்கு இப்பையன் செய்த அற்புதச்செய்கை அசாத்தியமானதென்று தோன்றாது. ஏனெனில் மனம், ஜாக்ரஸ்வப்ன சுஷுப்தி யவஸ்தைகளைவிட்டுத் துரியநிலை பெற்றால், அதற்கு விளங்காத தத்துவம் இல்லை. மாயைவலை தானே நழுவி விழுந்துபோகிறது. ஆகாசத்தில், ஸ்தூலாகாசம் என்றும், சூக்ஷ்மாகாசமென்றும், மஹாகாசமென்றும், பராகாசமென்றும், பரமாகாசமென்றும், ஐந்துவகையுண்டு. ஸ்தூலாகாசமென்பது ஜாக்ரத்தில் காண்கிறவிஷயங்களுக்கு இடம் கொடுக்கும் வெளி. இது நீளம் அகலம் உயரம் என்னும் மூன்று அளவையுள்ளது இதற்குகனமுண்டு அந்தகனம்தான் பிருதிவியின் குணமாகியகடினம். கடினவஸ்துக்களுக்கு இடங்கொடுக்கும் இடவெளி ஸ்தூலாகாசம் எனப்படும். இது ஜாக்ராவஸ்தையில் புலனறிவுக்கு லக்ஷியமாய்த் தோற்றுவது.

சூக்ஷ்மாகாசமென்பது அகலம் நீளம் என்னும்இரண்டளவையுள்ளது. இதற்குப் பரப்புகுணம் ஒன்றுமட்டும் உண்டு. படத்திலெழுதிய சித்திரம்போல் எல்லாவிஷயங்களுட மனவெளியில்காணப்படும். இந்தவெளியைத்தான் சோபனம் என்றும் சொல்கிறது. நீளத்துக்கும் அகலத்துக்கும் இடையேயுள்ள பரப்பு வெளி கோணம் என்கிறசப்தத்துக்கு லக்ஷியமாய் விளங்கும். இந்தமனவெளியைத் தான்சொப்பனத்தில் நிகழும்சம்பவங்களெல்லாம் நேர்கின்றன. இதற்கு கந்தர்வலோக மென்றும் பேர். ஸ்தூலாகாசத்திக்கு பூலோகமேன்று சொல்வதுண்டு. அதை யொட்டி யிதற்கு புவர்லோகம்என்றும் சொல்வார்கள். இதுவேஒரு விதத்தில் பிதிர் லோகமென்று சொல்வதுமாம். மூன்றாவது, நான்காவதான மஹாகாசமும் பராகாசமும், பிண்டத்தில் ஸ்தூலசூக்ஷ்மம் என்று சொல்லியதற்குச் சரியான அண்டத்தின் பகுதிகளாம்.

பரமாகாசம் என்று சொல்வது சுகவடிவான சுஷுப்தியாகாசமாம். கருவிகரணங்களெல்லாம் ஓய்ந்து விழுந்து போனவிடத்தில், அஹம்தத்துவம் தானேதானாயிருந்து இளைப்பாறிச்சுகம் நுகரும் இடம் பரமாகாசம் என்று சொல்லப்படும். இதற்கு பிண்டத்தில் சுஷுப்தி நிலை யென்றும் அண்டத்தில் ஸ்வர்க்கலோகம் என்றும்சொல்லப்படுகிறது. இதற்கு ஸுவர்லோகம் என்றும் சொல்லப்படும். இதற்கு ஒரே அளவை தானுண்டு. அது நீளமாம். இதற்கு கதி யென்று சொல்கிறது. நற்கதி யென்றும் துர்க்கதி யென்றும் சொல்வது, நல்வினை தீவினைப்பயன் கொண்டு செல்வதாம். இங்கே கர்மவிதி யொன்று மட்டு முண்டு. முற்பகல் விதைத்தது பிற்பகல் விளையுமானால், பிற்பகல் விளைந்ததை அறுவடைசெய்து கண்டுமுதல் காணும் களத்துமேடு இதுவாம்.

மனம் ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்தியென்கிற மூன்றவஸ்தைகளும் கடந்து நனவிற்சுழுத்தி யென்னும் நாலாவதுவஸ்தையையடையும் பொழுது அது துரிய



வெளி தரிசனம் கண்டு தன்னை மறக்காது ஆத்மசக்தியோடும் அந்தர்முகமாயிருந்து வியவகரிக்கும். அந்தர்முகத்திலிருந்து அறிவுக்கண்ணால் பார்த்து பஞ்சதன்மாத்திரைகளளவாய் விளங்கும் காரணப்பிரபஞ்சத்தில் தன் வாசனாதேகத்தோடு சஞ்சரிப்பது துரியாவஸ்தையாம். இந்தத் துரியவெளியில் காணும் காட்சிகளுக்கு'துரியக்காட்சி' யென்று பேர். இங்கே காண் பொருள்களுக்கு இடங்கொடுக்கும் வெளி நான்களவை யுள்ளதாயிருக்கும். அதாவது அகல, நீள,உயரம் இவைகளோடு வியாபகத்துவம் என்கிற ஒரு அதிசயகுணமும் விசேஷமாயுண்டு. இந்த வியாபகத்துவ குணத்தினால், ஸ்தூலசூக்ஷ்ம காரணப்பிரபஞ்சங்கள், மனதிற்கு இடையூறுகளாக வின்றி அவைகளெல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லும் சக்தி யொன்றிருப்பதினால், நூலிற் கோர்த்த மணிவடம் போல் அவைகளெல்லாம் துரியமனத்தில் ஐக்கியப்பட்டு விளங்குவனமாத்திரமாயிருக்கின்றன.

சிறைச்சாலையின் சுவர்களும் கதவுகளும், சிறைப்பட்டவனைத்தடுக்கச் சக்தியற்றபோது அதற்கு காராக்ரஹம்என்கிறபேர் பொருந்தாததாகி அது அஃதிற்கிடங்கொடுத்தஆகாசவெளியில் கரைந்து போனால்எப்படியோ, அப்படி ஆய்விடுகிறது. அப்படியே ஸ்வப்னங்களும் ஸ்வப்னமாத்திரமாயின்றி சூக்ஷ்மாகாச வெளியில் கரைந்துபோய் விளங்குகின்றன. காரணதேஹமான காரிருட்சுத்தமும் அதற்கு இடம்கொடுத்த பிரஜ்ஞானவெளியாம் (தற்போத) அறிவாகாசத்தில் கரைந்துபோய் விளங்குகிறது. இப்படியாக மூன்றவஸ்தைகளிலும் காணப்படுகிற ஸ்தூல, சூக்ஷ்ம, காரணப்பிரபஞ்சங்கள் அததன் ஆகாசத்தில், (உப்பினாலான பொம்மை சமுத்திரத்தில் கரைந்ததுபோல) கரைந்துநிற்க, இம்மூன்று ஆகாசங்களும் விளங்கும் திரிலோகங்களையும் ஊடுருவிச்செல்லும், துரியாகாசமென்னும் தற்போதமழிந்த பிரபோதசந்திர வெளிச்சம் இவைகளையெல்லாம் தத்துவார்த்தமாக விளக்கிக் காட்டுவதாய் நிற்கின்றது,

நிலா வெளிச்சத்தில் அஜ்ஞானசம்பந்தமாத்திரத்தால் பழுதை பாம்பாகவும், மரக்கட்டை கள்வனாகவும் தோன்றுவது போல, இந்தத் துரிய வெளிச்சத்தில் மாயா சம்பந்தமாத்திரத்தால் (அப்படி யென்றால், மனோசங்கற்ப மாத்திரத்தினால்) "த்ரிஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி வ்யஸனகர்மகிருத்" என்னும் சுருதிவாக்கியத்திற் கிலக்காக திரிலோகங்களும் நீரிற் குமிழி போலவும், சமுத்திரத்தில் அலைகள் போலவும் தோன்றி மறைவதாய் விளங்குகின்றன. உண்மையாய்ப் பார்த்தால் இதுவும் முடிவான அவஸ்தையில்லை. ஏனெனில், திரிலோகங்களையும் சிருஷ்டித்துக் காத்து அழித்து அவற்றின் தன்மையை அறிந்து கொள்வதற்கானதோர் கொசப்பேட்டைக்குச் சமானமானதோர் இடமாம் இது. குயவன் தன்னையறிந்தபோதல்லவோ அவன்கிருதார்த்தனாவான். தன்னையறியாமல் திரிலோகங்களை சிருஷ்டித்தழித்துக் காக்கும் சக்தியிருந்தும் அவன் கர்மவலைக்குட்பட்டவனே யாவான்.

ஆனால் இந்த துரிய நிலை சித்திக்கப் பெற்றவர்களுக்கு பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்கிற மூன்று லோகங்களிலும் அவர்கள் அறிவுக்கெட்டாத வஸ்துக்களும் தத்துவங்களுமில்லை! ஆதிசங்கரரைப்போல் மஹான்களாக அவதரித்த மஹாபுருஷர்கள் இந்தத்துரிய நிலையிலிருந்தே லோகரக்ஷணார்த்தமான எல்லா வேலைகளையும் செய்து வந்தார்கள். அவர்கள் எடுத்த தேகம் பிராரப்ததேகம் அல்ல. பிராரப்ததேகம் என்றால், முன் செய்த கர்மபலத்தால் உற்பவித்த தேகம் என்றுபொருள் படும். பிராரப்ததேகம் எடுத்தவர்கள் தாங்கள் புசிக்கவேண்டியுள்ள கர்மபலனைப் புசித்தேதீரவேண்டும். ஆனால் பிரஹ்ம வித்துக்களாகி வரியன. வாரியன் விராட் என்னும் பதவிகளிலிருக்கும் யோக சாதனங்களால் சித்தி முத்தி பெற்ற சித்தபுருஷர்கள் தங்கள் இச்சாமாத்திரத்தினால் கல்பகாலத்தில் தங்களுக்கு இஷ்டமான வரையில் அல்லது கல்பகால முழுவதும் கூட விதேஹகைவல்யம் பெற்றும் ஸதேஹிகளாயிருந்து லோகபரிபாலனார்த்தம், ஸத்துக்களுக்கும் சாதுக்களுக்கும் மட்டும் தரிசனமளித்து அவர்களை நல்வழிப்படுத்தி நற்கெதியடையச்செய்து, அவர்கள் மூலமாய் மனுகுலத்துக்குக்ஷேமத்தையும் நற்கெதிக்கு வேண்டிய சாதனங்களையுமளித்து உதவி புரிவார்கள்.

இப்படி கர்மதேஹத்தோடுபிறந்தும் கர்மபந்தத்தை அத்வைதஞானத்தீயால் எரித்துச் சாம்பலாக்கிச் சுட்டபடம்போல், கர்மபெந்தம் நீங்கிய தேஹத்தோடு கூ

டியமஹாபுருஷர்கள் அவர்களுடைய பிராரப்தகர்மம முடிந்ததும், கர்மதேஹம்கழன்றுபோக அதைவிட்டொழித்துத், தோலுரித்த பாம்புபோல், அவர்களுடைய திவ்ய தேஹத்தோடு மாத்திரமிருந்து ஈசுவர சங்கல்பத்தை முடித்துவைப்பவர்களாய் விளங்குவார்கள். இவர்களுக்கு சித்தர்குழாம் என்றும், சித்தர் கணம் என்றும் பேர். இவர்களுக்கு வியஷ்டி பாவமென்பது சற்றுமில்லையால் சமஷ்டி பாவத்திலிருந்துழைப்பவர்களுக்கு மாத்திரமே. இவர்கள் அந்தந்த சமஷ்டிபாவனு விஷயங்களிலுறையும் அதிஷ்டான தேவதைகளின் அம்சங்களாகவும், அந்த அதிஷ்டானத்துக்கும் அதிஷ்டானமான ஸ்வயம்பிரகாசமாகவுமிருந்து பக்தியினால் பர்சேவை செய்வார்களை யாதரித்து ஈடேற்றுவார்கள் இது விஷயமாய் ஒரு உதாரணம்:—

"தற்பொழுது ஸ்ரீ ஸ்ருங்கேரி ஜகத்குருவாக விளங்கும் மாஹாபுருஷரான ஸ்ரீமத் சங்கராச்சாரிய ஸ்வாமிகள், ஸ்ரீமத் ஆதிசங்கராசாரியரவர்களுக்கும் ஸ்ரீ ஸாரதாம்பாளுக்கும் அவர் அவதரித்த காலடி கிராமத்தில் திவ்யாலயம் கட்டி அவர்கள் விகரஹங்களைவைத்து பிராணப்பிரதிஷ்டை செய்யவேண்டிய ஏற்பாட்டுக்கு அவர் உடனிருந்துதவவேண்டுமென்று, அதில் முன்னின்றுழைத்த மைசூர் சீப் கோர்ட் சீப் ஜட்ஜாயிருந்து தற்காலம் குருபக்தகேசரியென்னும் பட்டப்பேர் பெற்றுவிளங்கும். ஸ்ரீ வ. இராமச்சந்திரய்யரவர்கள், ஜகத்குரு அவர்களை மன்றாடிக் கேட்டுகொண்டபோது, அம்மஹா பெரிய காரியத்திலும் தான் கர்த்திருத்துவம் பாராட்டி நுழைபக்கூடாதென்று, அதற்கும் எனக்கும் ஒருசம்பந்தமுமில்லை ஆனால் நீர்மேற்போட்டுக் கொண்டுழைக்கும் அந்த சத்காரியம் இனிதுமுடியவேண்டுமென்று நான் பிரார்த்திப்பேன், என்று சொன்னார். இதிலே யிருக்கிறது கர்மத்தின் இரகசியம்.

நம்மவர்கள் சாணளப்பான் பூச்சிபோல இந்த எண்சாணுடலைக்கொண்டு எல்லாக்காரியமும் சாதித்துவிடவேண்டுமென்கிறார்கள். மஹான்களுக்கு இந்த எண்சாணுடலைக்கொண்டு சாதிக்கவேண்டிய காரியம் வேறு. அவர்களுக்கு.—

"உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக்காண்."

என்னும் ஔவை வாக்கே உத்தமோத்தமமானது. ஆகையால் அழிந்துபோகும் இந்த எண்சாணுடலைக் கொண்டு அதிலுள்ள புரியஷ்டக சூக்ஷ்மசரீரத்தைப் பிரித்துபிறகு அதிலுள்ள காரணதேஹத்தைப்பிரித்து அதிலிருந்த துரியவடிவோடு விளங்கும் திவ்ய தேஹத்தைப்பெற்று, ஸ்தூல, சூக்ஷ்ம, காரணதேஹங்கள் மூன்றிலும் ஒட்டியும் ஒட்டாமல் விளங்கப் பிரயத்தனப்படும் அவர்கள் இந்த அற்பகாரியங்களில் மனதைச் செலுத்தி அந்த மஹாகாரியத்துக்குக் குந்தகம் விளைத்துக்கொள்ளார்கள். பத்திரிகைக்கெழுதும் நிரூபர் ஒருவர், தற்காலத்திருக்கும் ஜகத்குருவுக்கு முன்னிருந்த மஹான் ஜனக்ஷேமத்துக்கு என்று ஒன்றும் செய்யாது வாளாவிருந்தாரென்று அபசாரம் பேசியிருக்கிறார். ஐயோ! அந்த மஹாபுருஷர் சித்தவடிவோடு இன்னும் விளங்குவதையறிந்தவர் யார்தான், இவர் புன்சொல்லைப் போற்றி யங்கீகரிப்பர். அந்தமஹாத்மா இடைவிடாது ஸமாதியிலிருந்து விளங்குவர், இந்த ஏழை விரகறியாத வாலிபனாயிருந்தபொழுது அந்த மஹாபுருஷருக்குத் தேஹபணிவிடை செய்துவரும் பாக்கியம் பெற்ற தனது ஜநக பிதாவின்பேரில் அவர் கொண்ட கிருபையினால், இந்த ஏழையைச்சமாதியிலிருந்து விழித்ததும் பார்த்து, "வெங்கடரமணைய ஹொடேக்கா!" என்று அறிவிக்க கருணைபூரித்தப் பார்த்ததோர் பார்வை, பசுமரத்தாணிபோல் இவனுள்ளத்துப்பதிந்துகிடக்க, உபதேச குருவையிழந்து தவித்த காலத்தில், அம்மஹான் சித்தகுருவாகவந்து ஆசீர்வதித்து அபயப்பிரதானம் கொடுத்து, மூடமாய் பக்திமாத்திரம் மிகுந்துள்ள அவரது ஊழியனுக்குத் திவ்ய தரிசனமும் கொடுத்து பூர்ணானுக்ரகமும் செய்து விளங்கிய உண்மையையும், அந்தப்படியே பின்னால் பலித்ததையும் நினைக்கில், அச்சோ! அம்மஹாபுருஷனை வீணே காலம் தள்ளினவரென்று சொல்லும் வார்த்தையைக்கேட்கவும். கர்ணகடோரமாயிருக்கிறதே! ஆயினும் அறியாமையினாற் சொன்னதை அதிகமாய்ப் பாராட்டத்தக்கதல்ல! ஆதலால்,

"உற்று நின்றாரோடு மத்தகுசோதியைச்
சித்தர்களென்றும் தெரிந்தறிவாரில்லை
பத்திமையாலே பணிந்தடியார் தொழ
முத்திகொடுத்தவர் முன்பு நின்றானே!"

என்னும் திருமந்திரத்திற்கு இலக்காய் விளங்கிய அம்மஹாத்மாவின் பொன்னடிகளைப் பூஜித்து உள்ளத்திருத்தும் பாக்கியம் பெற்றநாம் அத்திருவடிகளையே பின்னும் தொழுது இதனை இங்கு முடிப்போமாக. ஓம் தத்ஸத்.

---



# The Cause of Righteousness.

## "தர்மம் சர".

### முற்கால தற்கால நிலைமை.

### ஸ்வதர்ம லக்ஷணம்.

* (By A. S. Visvanatha Iyer Sub-Registrar.)

மானிடரின் விருத்திக்காகக் கருணைக்கடவுள் பல காலங்களில் செய்தருளி யிருக்கும் லீலைகள் வியக்கத்தக்கன. குருக்ஷேத்திர யுத்தகாலத்தில் ராஜாங்க முறைமைகளும் குடிகளின் காரியங்களும் தாழ்வடைந்திருந்தன. பாரதயுத்தவியாஜமாகச்சீர்கேடடைந்த குடிகளையும் மன்னவர்களையும் மரிக்கச்செய்து மீதியுள்ள நல்லவர்களுக்குப் பாண்டவர்களை ராஜாவாக்கி உலகத்துக்கு நன்மைபுரிய ஸ்ரீ கிருஷ்ணபிரான் அருள் புரிந்தார். அதற்காகத்தான் பன்னிரண்டு வருஷ வனவாஸமும் ஒருவருஷ அக்ஞாதவாஸமும் பாண்டவர்களுக்கும் பாஞ்சாலிக்கும் ஸம்பவிக்கச்செய்தார். பன்னிரண்டு வருஷகாலம் வனவாஸத்தில் ஈச்வர சிருஷ்டியின் இயற்கை அமைப்பையும் அவ்வமைப்பின் அழகுமஹிமையையும் அவைகளின் தத்துவங்களையும் கஷ்டவாஸம் செய்வதினாலும் அதினாலுண்டாகும் தீர்க்காலோசனையினாலும் பஞ்சபாண்டவர்களும்பாஞ்சாலியும் ஸ்வானுபவத்தில் செவ்வையாயுணர்ந்து அனுஷ்டானத்தில் அப்பியஸித்துப் பிறகு ராஜ்யமுறைமைகளில் அவைகளைத் திடனாக்கத்தோடமைத்து நீதிராஜ்யம்புரிந்து உலகினர்களை ஸுகிகளாக்கவேண்டிய பக்குவத்தை ஸ்ரீகண்ணபிரானின் கிருபையால் அடையப்பெற்றார்கள். அப்படியான வனவாஸத்தில் கடைசிச்சருக்கத்துக்கு முந்தியது "பழம் பொருந்து சருக்கம்" என்பதே. அதின் கதையாவது:—

பாண்டவர்களும் பாஞ்சாலியும் அவர்களின் பிரயாணத்தில் ஒருரமணீயமான இடத்தில் ஒருஅற்புத நெல்லிமரத்தையும் அதில் ஒரு மனோகர நெல்லிக்கனியையும் பார்த்தார்கள். துரோபதை அப்பழத்தை இச்சிக்கவும் அர்ச்சுனன் அதை உடனே அவளுக்குக்கொய்து கொடுத்துவிட்டான். பிறகு அவர்கள் சிறிது தூரம்போனதும் ஒரு ரிஷி தபசுசெய்துகொண்டிருப்பதையும் அருகாமையில் சில குடிசைகளில் வேடர்கள் அழுதுகொண்டிருப்பதையும் கண்ணுற்றுக் காரணம் கேட்கவும், அவ்வேடர்கள் அந்நெல்லிமரம் வருஷத்திற்கு ஒருதரம் பழுத்து அம்முனிக்கு, தானேவிழுந்து ஆகாரமாகும் என்றும், அதைவாயில் அண்ணாந்து வாங்கிப் புசித்து ஜீவித்து அந்த ரிஷி தபசுசெய்கிறார் என்றும், அப்பழமுண்ணும் முறை அன்றுஇன்னும் சில நாழிகைக்குள் என்றும், தங்களுக்கு அரசன் அளித்திருக்கும் மான்னியத்துக்காக அதை அந்தரிஷிக்குப் பாதுகாத்துக்கொடுக்கும் பணிவிடையாட்கள் தாங்கள் என்றும், அதை யாருடைய அம்போ பறித்துப் போனமையால் தாங்கள் பரிதபிக்கிறதாகவும் சொல்லவே, பாண்டவர்கள் நடுநடுங்கினார்கள். துரோபதை, தன்பெண்புத்தியினால் அப்பழத்தைக்கேட்டதை நினைத்துக் கண்ணீர் சொரிந்தாள். அருச்சுனன் அகமுடையாள் கேட்டதும், அது யாருடையது, அதைத் தான் கைக்கொள்ளலாமா என்பதைக்கூட விசாரிக்காமல் அதை உடனே பறித்துக்கொடுத்த தன் மதியீனத்தை உணர்ந்து வெட்கமும் வியாகூலமும் அடைந்தான். அவனுடைய மற்ற சகோதரர்களும் வியஸனத்திலாழ்ந்தார்கள். கடைசியில் இக்காரிய ஸம்பவத்தின் உண்மையைத்தெரிந்தசாஸ்திரக்யனாகிய சகாதேவன், துவாரகாபுரிவாஸனாகிய தங்கள்நேயன் கிருஷ்ணனைத்துதித்து அவரைக்கூப்பிட்டால் அவர்வந்து யோஜனையும் ஒத்தாசையும் புரிவர் என்று மற்றவர்களுக்குச்சொல்லவும், எல்லோரும் அப்படியே கண்ணனைக் கரைந்துருகி நினைத்து ஸ்துதித்துக்கூப்பிட்டார்கள். உடனே அக்கிருபாநிதி அவ்விடம் தோன்றினார். நிகழ்ந்த காரியத்தின் நிமித்தம் தங்களுக்கு ஒருதீங்கும்வாராதவண்ணம் தங்களைக்காக்க, பாண்டவர்களும்பாஞ்சாலியும் அவரைவேண்டினார்கள். கபடநாடகதாரியாகிய எம்பிரான் அவர்களைப்பார்த்து அவர்கள்மனதில் உள்ள உண்மையை அவ்வாறுபேர்களும் உள்ளபடிசொன்னால் அற்றுப்போன அந்த நெல்லிக்கனி ஒவ்வொருவர் உற்றது உள்ளபடிசொல்லுதலுக்கும் ஆறிலொருபங்கு உயரம் எழும்புமென்றும், கடைசியில் 6வது துரோபதையினுள்ளம் வெளியானதும் அக்கனி அம்மரத்தில் முன்போலவே ஒட்டிவிடுமென்றும் திருவாய்மலர்ந்தருளினார். உடனே எல்லோரும் சந்தோஷமடைய, தருமர் சொல்லலானார்:—

*Read before the T. S. Conference hold at Tiruvalur.

"ஸத்யம் மாதா, பிதாக்ஞானம், தர்மோப்ராதா, தயாசகா, சந்தி பத்நீ, க்ஷமாபுத்ர: ஷடைதேமம பாந்தவா:"—"அதாவது, ஹேகிருஷ்ண! உமதுகருணையால் நாங்கள் இனிராச்சியம்திரும்பப்பெற்று அதைநாங்கள் ஆளப்பாக்கியம் கிடைத்தால் அப்பொழுது எங்கள் ராஜ்யத்தில் தாய்மார்கள் அவர்களின் குழந்தைகளுக்கு ஸத்தியத்தை புகட்டும்படியான மஹிமையுடைய யவர்களாக ஆகவேண்டியது என்றும், பிதாமார்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஓம் ஹரிః ஓம் நமோ நாராயணாயவலித்தம் என்று தொடங்கி ஈஸ்வரக்யானம் பொருந்திய படிப்பைப் புகட்டவேண்டியது என்றும், சகோதரர்கள் ஒற்றுமைப் பட்டுப் பிரியத்தோடு கூட்டுறவாடித் தர்ம காரியங்களைச் செய்யஹேதுவாகவேண்டியது என்றும், ஸ்நேகிதர்கள் அவர்களின் எவ்வித நிலைமையிலும் தொழிலிலும் ஒருவருக்கொருவர் தயையோடுகூடி ஒத்தாசை புரிந்து கொண்டிருக்கவேண்டியது என்றும், பத்நிமார்கள் வீட்டுவேலையோடுகூட வெளிவேலைகளிலும் பிரவர்த்தித்திருக்கிற தங்கள் கணவன்மார்களுக்கு இல்லறத்தைச் சாந்தமயமாகப் பண்ணிக்கொண்டிருக்க வேண்டியது என்றும், புத்திரர்கள் அவர்கள் செய்யும் காரியங்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் கிழவயதினாலும் நவநாகரீக அறியாமையினாலும் வேறுபட்டுப் பேசினும் செய்யினும் அம்முதியோர்களிடத்தில் பொறுமையோடு கூடியவர்களாய் இருக்கவேண்டியது என்றும் நான்பறையடிப்பித்துச் சட்டம்செய்வேன். அவைகளுக்குக்கீழ்ப்படிந்து நடப்பவர்களைத்தான் பந்துவாக நான் எண்ணுவேன். அப்படிக்கல்லாமல் எனது ராஜ்யத்தில் ஜனங்கள் மேல்குறித்த ஆறுவிதநிலைமைகளிலும் வேறுவிதமாக நடப்பார்களானால் அவர்களை எனது பகைவர்களாக எண்ணி அவர்களுக்குத் தெண்டனைபுரிவேன். இதுதான் நான்செய்ய இருக்கும் ராஜாங்கத்துவமர்மம் என்றார் பழம் ஆறிலொரு உயரம் கிளம்பிவிட்டது.

பிறகு பீமன் யாசகார்த்தமன்னியிலும் ரணமன்னியிலும், எல்லோரும் ராஜ்யத்தில் மானத்தோடு ஜீவனம் நடத்தவேண்டியது என்பது தனதுண்மை என்றான்.

அர்ச்சுனன் அதர்மத்தைக்காணும் சந்தர்ப்பங்களிலெல்லாம் தர்மயுத்தஞ்செய்து நியாயஸ்தாபனஞ் செய்யவேண்டியது என்பது தனது கோரிக்கை என்றான்.

நகுலன் தர்மசங்க்ரஹமே செய்யவேண்டிய காரியம் என்பது தனது கொள்கை என்றான்.

பழமும் மொத்தம் மூணில் இரண்டுபங்கு உயர எழும்பிவிட்டது.

பிறகு சாஸ்திரக்யானியாகிய ஸகாதேவன்: மாத்ருவத் பரதாராம்ச்ச பரத்ரவ்யாணிலோஷ்டவத் ஆத்மவத் ஸர்வ பூதானி, யః பச்யதிஸ பச்யதி:—"பிறனுடைய பத்நீமார்களை தாய் அல்லது ஸகோதரிகள் போலப் பாவிப்பதும், சட்டப்படிதனக்கு இல்லாத சொத்துக்களை எட்டிக்காய்போலச் திரஸ்கரிப்பதும், தன்னைப்போல எல்லா மன்னுயிர்களையும் எண்ணுவதும் ஆகிய இம்மூன்று காரியங்களையும் எவன் ஸ்வானுபாவத்தில் உணர்ந்து அனுஷ்டிக்கிறானோ அவன் மோட்சத்தைப் பார்க்கிறான் என்பதே தனது அந்தரங்கம் என்றான். ஸகாதேவ பிரும்மக்யானி அதுசொல்லலுமே அப்பழம் குதூஹலித்து ஒரு பங்கு உயரம் கிளம்பிவிட்டது

இன்னும் ஆறிலொருபாக உயரம் பாக்கியிருக்க, பகவான் துரோபதையைப் பார்த்தார். உனது மனோரஹஸ்யத்தை வெளியிடு என்று ஆக்ஞாபித்தார். அப்பொழுது அருந்ததியனைகளாகிய துரோபதை சொல்வாள்:—"ஐம்புலன்களும்போல் ஐவரும்பதிகளாகவும் இன்னும் வேறொருவன் என்பெருங் கொழுனனாவதற்கு உருகிற்று இறைவனே எனது பேர்ஹிருதயம். அம்புவிதனிர் பெண்பிறந்தவர் எவர்க்கும் ஆடவரிலாமையின், நம்புதற்குளது" அதாவது:—ஹே? ஹிருதயவாஸா! எனதுகல்யாணகாலத்தில் ஸ்வயம்வர மண்டபத்தில் எனக்கு பஞ்ச இந்திரியங்களைப்போல ஐந்து புருஷர்கள் பதிகளாக பிராமண வேஷம்பூண்டு வந்திருக்க, க்ஷத்திரியவர்க்கலத்தில் கல்யாணமண்டபத்தில் நாட்டப்பட்டிருந்த மத்ஸ்யக்குறியை அடித்துத்தள்ள அநேகமாய் எல்லாரும் அசக்தர்களாகித்தோற்றுப்போனார்கள். அப்போதுகர்ணன்கடைசியாக க்ஷத்திரியவர்க்கத்தில் கிளம்பிக் கீழேசுற்றிக் கொண்டிருந்த யந்திரத்தின் வழியாய் வில்லை நாணேற்றித் திடமாய்விட்டுக் கம்பீரமாய் அக்கல்யாண சபையில் நின்றான். அது கண்ட நான் ஸ்திரிகளுக்கு இயற்கையாய் உள்ள பேதமைப் புத்தியினாலும் தீர்க்காலோசனையின்மையினாலும், க்ஷத்திரியகூட்டத்தில் கடைசியாக எழுந்தவன் கர்ணன் ஆனபடியாலும், பிராம்மணர் கூட்டத்தில் மத்ஸ்யயந்திரத்தை அடிக்கும் தீரன் இரான் என்கிற எண்ணத்தாலும் கர்ணன் விட்ட அம்பு, நாணேற்றிவிடப்பட்டமாத்திரியிலிருந்து மத்ஸ்யக்குறியை ஆகாயத்தில் நிச்சயமாய் அடித்துவிடும். அது திண்ணம் என்று உடனே பெண்பாலாகிய நான் நிச்சயித்துஉடனேமனதினால்அவனைப்பர்த்தாவாகஸ்மரித்து அவனைக்காதலித்துப் பார்த்து நான் குதூஹலிப்படைந்தேன், என்னுடைய அனுபவமே இப்படியிருக்கும்போது ஸ்திரீகள் ஆண்பிள்ளைகளுக்கு ஸமானமாக மூளைப்ரவிருத்திலும் புத்தியிலும் பாவிக்கப்பட்டு நல்லவர்களும் கெட்டவர்களும் அமைந்த புருஷர்கள் நடுவில் ஸ்வேச்சையாக விடப்படக்கூடாது என்பது தனதுகொள்கை என்றும், அப்படி விடப்பட்டால், மானஸீகத்திலகூடக் கற்பமையவேண்டிய ஸ்திரீகளின் பதிவிருதாதருமத்தில் தனக்கு நம்பிக்கை வாராது என்றும், அவ்வுத்தமி துரோபதை கூறி மேலும் கிருஷ்ணனை நோக்கி "அன்று துயிலுரிந்தகாலத்தில் என் மானங்காத்தரக்ஷகா, எனது பர்த்தாக்கள் ராஜ்யம் திரும்ப வஹிக்க உமதுகடாக்ஷம்பெற்றால், ராஜ்யத்திலுள்ள ஸ்திரீகள் உயர்ந்த இல்லற தருமத்துக்குப் பாக்கியவந்தர்களாகப்பால்யத்தில் பெற்றோர் முதலியவர்களின் மேன்பார்வையிலும், பிறகு பர்த்தாவின் ஆக்கியத்திலும், பிறகுமுதிர்ந்த வயதில்கூடப்பிள்ளைமார்கள் போன்றவர்களின் ஆதீனத்திலும் இருக்கவேண்டியது என்று ராஜ்யத்தில் நிபந்தனை ஏற்படுத்த என்பர்த்தாக்களை வற்புறுத்துவேன்" என்று அவளின் மனோரஹஸ்யத்தை எடுத்துக்கூறலும் பழமும் அதினிடத்தைச்சேர்ந்துமுன்போல ஒட்டிற்று.



பாண்டவர்களும் பாஞ்சாலியும் கண்ணன் அனுக்ரஹத்துக்கு நன்றிபாராட்டிப் பரவசமடைந்தார்கள். அப்பொழுது கண்ணனும் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களில் உற்றதைச் சொன்னபடியால் அற்ற அக்கனி முறையே உயரக்கிளம்பி மரத்தில் முன்னிருந்தபடி ஒட்டிற்று என்று சொல்லி அவர்களிடம் விடைபெற்றுத் திரும்பினார். அது பாண்டவர்களுக்கு அவர்களில் ஒவ்வொருவரும் ராஜாங்க தத்துவங்கள் என்று அவர்கள் உள்ளத்தில் உள்ளபடி வெளியிட்டவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து, அவர்களுக்கு அக்காலம் அற்றுப்போய்ச் சீக்கிரம் திரும்பக் கிடைக்க இருக்கிறராஜ்யத்தில் அக்கால அத்தேச அக்குடிகளுக்கு ஏற்றபடி ஊர்ஜிதமாய்க் கையாண்டு ராஜ்யபரிபாலனம் செய்தால் அதின் பலனாகிய ஜனசமூக க்ஷேமகாமாகிய பழம் நிச்சயமாய்ப் பாண்டவர்களுக்குப் ப்ராப்தலப்தமாகப் போகிறது என்பதைக் கிருஷ்ணபகவான் சூசிப்பித்துக் காட்டினதுபோலப்பட்டது.

பிறகு "நச்சுப்பொய்கை" வனவாஸத்தின் கடைசிச்சருக்கம். அதில் உயர்தர ராஜாக்கள் ராஜ்ய லெட்சுமியால் மதியீனர்களாகாமலிருக்க வேண்டுமென்றும், ராஜ்யஸம்பத்து அநித்தியமென்றும், அது ஆளுபவரின் சௌகரியத்துக்காக அமைந்தல்லவென்றும், ஆகையால் அரசர்கள் நடுவு நிலைமையில் எப்பொழுதும் திடமுள்ளவர்களாய் இருக்கவேண்டியது என்றும் வற்புறுத்துகிறது. பிறகு அக்ஞாதவாஸ ஒரு வருஷத்தில் பாண்டவர்கள் அக்காலவர்த்தமானத்தைச் செவ்வையாய் ஸ்வானுபவத்தில் அறியவேண்டி அவர்களின் ரூபத்தை மறைத்துச் சாதாரண ஜெனங்களைப் போலக்கஷ்டப்பட்டு ராஜ்ய காரியங்களுக்குத்தயாரானார்கள்.

விராடதேசத்தில் தருமன் அக்கால ராஜாங்க மர்மங்களை அறியக் கோர்ட்டு மந்திரியாகவும், பீமன் அக்காலவிளைவு திட்டத்தையும், போஜன பக்குவத்தையும் அவைகளினால் மனிதர்களுக்குள்ள விருத்தியையும் தெரிந்துகொள்ள பாகசாலை எஜமானனாகவும் இல்லற தர்மத்திற்கேற்றபடி பெண்குழந்தைகள் எப்படிப் பழக்கப்படுகிறார்கள்என்பதை உணர ராஜபுத்ரி உத்தரைக்கு அருச்சுனன் நபும்ஸகவாத்தியாராகவும், அக்காலயுத்தநிலைமையையும் அதின் விபரத்தையும் சட்டத்தையும் நிர்ணயிக்க நகுலன் குதிரைப்படைத்தளகர்த்தனாகவும், மனிதனின்பக்குவத்துக்கு இன்றியமையாததாயிருக்கிற பசுக்கள் முதலியவைகளினுண்மையை அறியச் சகாதேவன் இடையர்களுக்குத் தலைவனாகவும், அக்கால அந்தப்புர ரஹஸ்யங்களை அறியத்துரோபதை விராடராணியின் தோழியாகவும் அமர்ந்தார்கள். அப்படி ஒருவருஷம் அந்நிலைமைகளில் கஷ்டப்பட்டு ராஜ்யபாரம் வசிக்கத்தயாரானார்கள். பாரதயுத்தம் முடிந்தப்பிறகு தங்களுக்குக் கிடைத்த

ராஜ்யத்தை மேற்சொன்ன முறைமைப்படி அரசாண்டார்கள். அவ்வரசு ஓங்கிப் பிரகாசித்தது. அவ்வரசில் குடியும் ஓங்கிச்செழித்தது.

### தற்கால லக்ஷணம்.

இந்த ஆரிய சகோதரர்களே! தற்காலத்திய ராஜாங்கத்தில் உயர்ந்த பதவிக்குத் தூக்கிவிடப்பட முறையிடும் நாம் எப்படியிருக்கிறோம் பார்ப்போம். நம்முடைய மாதாக்கள் குழந்தைகளுக்கு ஸத்தியம் புகட்டும் நிலைமயில் இருக்கிறார்களா? குசேலரின் ஸம்ஸாரம் கணவனால் ஞானம் போதிக்கப்பட்ட அவர்களின் குழந்தைகளுக்குஉயர்ந்த ஸத்தியமாகிய கிருஷ்ணனை அடையும்படி செய்யக் குசேலரைக் குழந்தைகளின் பூணூல் நிமித்தம் கிருஷ்ணனிடம் போய் வாரும் என்று மன்றாடினாள். அவளுடைய மஹிமை பொருந்திய கருத்தை அறியாத கணவன் தன்னைத் தன் பத்தினி யாசகத்துக்குக் கிருஷ்ணனிடம் ஏவினதாகவே எண்ணிக் கிருஷ்ணனிடம் சென்றான். அவ்வித மஹிமை வாய்த்த ஸ்திரீகள் இப்போது ஏன் நம்மவர்களில் இல்லை; அவர்களை அக்ஞானத்தில் அமிழ்த்திவிட்ட நாமே அதற்குக் காரணம்.

பிறகு தற்காலப் பிதாமார்களைக் கவனிப்போம். தான் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு ஈசுவரஞானம் பதிந்தபடிப்பைப் புகட்டுவது தன் கடமை என்று கூட எண்ணாமல் அவர்களின் படிப்பைப் பிறர்கையிலும் அன்னிய மதஸ்தர்கள் பள்ளியிலும் ஒப்பிவித்துவிட்டார்கள். அதனால்மூளைப்பிரவிருத்தியின் புத்திகூர்மைமாத்திரம் விசாலிக்கப்பெற்ற நம்மவர்கள் ஸன்மார்க்கமும், தர்ம்மமும், நீதியுமுள்ள காரியங்களை அவமதித்துத் தங்கள் தங்களின் லௌகீகச் செல்வாபிவிருத்தியிலே மாத்திரந்தான் நோக்கமாயிருக்கிறார்கள் என்பது தற்காலப் படிப்பின் பலனாக ஆகிவிட்டது.

தற்கால சகோதரர்களைக் கெவனிப்போம். ஒற்றுமை விழுந்து தர்ம சிந்தையற்று அதினால் சச்சரவு மேலிட்டு காப்பிக்கிளப்புகளுக்கும் சிவில் கோர்ட்டுகளுக்கும் சொத்தின் பெரும் பாகத்தைப்பகிர்ந்து அவர்கள் ஏழமைப்பட்டுப் போகிறார்கள். உண்மையில், உதாரணமாக, இத்தஞ்சைஜில்லாவில் திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து தஞ்சை மாயூரம் வழியாய் இவ்விடம் சேரும் ரயில்பாதைக்கு இருபுறத்திலும்மூன்று மைல் தூரத்துக்குள்ளிருக்கும் கிராமங்களை எடுத்துக்கொள்ளுவோம். மெட்ரிகியுலேஷனுக்கு அநேக வருஷங்கள் போய்ப் பரீட்சையில் தவறி ஜோடு, குடை யன்னியில் வெளியில் புறப்படத் தெரியாதவர்களாகி இவர்கள் ஐஸ்வரியத்தில் கோட்டை கட்டுவார்கள் என்கிற தப்பெண்ணத்தினால் இவர்களின் தகப்பன் அண்ணன்மார்கள் அவர்களின் அற்ப சொத்தின் பெரும்பாகத்தை இவ்விழவு படிப்புக்கு வாரி யிறைத்து வீணுக்குச் செலவழித்த அதின்பலனாக இவர்கள் வயல் என்றால் என்ன; கண்ணி என்றால்என்ன; என்றுகூடத் தெரியாதவர்களாகி வீட்டில் மன்னிமார்களோடு சண்டையிட்டு எங்கேயாவது ரூ 7½ சம்பளத்துக்குக்கூட வழியற்றவர்களாகிப் பரிதபிக்கிறார்கள். இம்மட்டோ? இவர்கள் பரிதாப நிலைமை; படிக்குங்காரணத்தால் இவர்கள் பால்யத்திலேயே பெண் வீட்டுக்காரர்களால் விலை கொடுத்து வாங்கப்பட்டு இவர்களுக்குக் கலியாணமாகி இவர்களின் பத்தினிமார்கள் ஏற்கனவே புஷ்பவதிகளாகி இப்பெண்களின் புக்ஹத்துப்போர்கள் இப்பெண்கள் இத்தனை பணம், இத்தனை நகை, இத்தனைப் பாத்திரங்களோடு கொணர்ந்துவிடப்படவேண்டும் என்று அதிகரித்துக் கேட்டுக்கொண்டிருக்கவும் இப்பையன்களின் வேட்டகத்துக்காரர்கள் இவர்களைப் பாகத்தைப் பிரித்துக்கொண்டு பாகப்பத்திரம் ரிஜிஸ்தர்செய்துகொண்டு விலகிவந்துவிடுங்கள், அப்பொழுது பெண்ணைக் கொணர்ந்து விடுவோம் என்று எழுதும் கார்டுகளைப் பெற்றுக்கொண்டும் இவ்வித கண்ணராவியான நிலைமையில் சுமார் எண்ணூறு வாலிபர்களுக்குக்குறையாமல் இருக்கிறார்கள். ஐயோ! இவர்களின்நிற்கதி எதில் வந்து முடியுமோ தெரியவில்லை. இவர்கள் கிடக்கட்டும்.

தற்கால ஸ்நேகிதர்களின் பாந்தவ்யம் என்னவென்று பார்ப்போம். சேர்ந்து படித்த ஸ்னேகிதர்களில் பலர் பலவிதத்தொழில்களிலும், சந்தர்ப்பங்களிலும், இருக்க நேரிடும்போது ஒருவருக்கொருவர் தயையோடுகூட ஒத்தாசை செய்துக்கொள்ளாமல் ஒருவர்பேரில் ஒருவர் கோட்சொல்லியும் அவதூறுபேசியும் பொறுமையுற்றும் ஒற்றுமையற்றும் இருக்கிறார்கள். இருக்



இவர்களால் தேசத்துக்கு என்ன க்ஷேமம் கிடைக்கப்போகிறது! அதுபோகட்டும். தற்கால இல்லறதருமத்தை ஆலோசிப்போம் என்றாலோ அதுவும் நமது சீர்கெட்ட நிலைமையைக் காட்டுகிறது.

### விவாகச்சீர்கேடு.

ஸ்ரீரங்கச்சந்தையில் மாடுவாங்கும்போதுகூட அதின் பல்லைப்பிடித்துப்பார்த்து அது உயர்ந்ததுதானா என்று தெரிந்துக்கொண்டு வாங்குகிறோம். நமது பெண்ணுக்குமாப்பிள்ளைவாங்கும்போது அதுகூடஇல்லை. இத்தனை படிப்புக்கு இத்தனை ரூபாய், ஆரம்மாஸச் சீருக்கு இத்தனை ரூபாய். திரட்சிக்கு இத்தனைரூபாய், என்கிற கேவலத்துக்கு வந்துவிட்டது. நமது கல்யாணவைபவம் அதின் உயர்வாவமற்று வியாபாரச்சரக்காயினபின் நமது வீடு எப்படிச் சாந்தமயமாயிருக்கும்! மிருகத்தன்மை பொருந்திய ஸ்திதிக்குத் தாழ்வடைந்துவிட்ட தற்காலக் கல்லியாணக் கோலத்தில் பலஹீனமான ஸந்ததிகளும் அவைகளுக்கும் தாய்களுக்கும் புதிசுபுதிசு தினுஸாதினுஸான வியாதிகளும் அவர்களினிமித்தம் டாக்டராய்யாமார்களிடம் ஓடுதலுமே அதிகரித்துவிட்டன. இவ்வித நிலைமையில் இல்லறபத்நியின் பிரயத்தனங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் அவைகள் நமக்கு இல்லறத்தில் எப்படிச்சாந்தத்தைக்கு கொடுக்கும். இதுவும்போகட்டும்!

### சிறுவர்கள் நடத்தை.

நமது தற்காலச்சிறுவர்கள் அவர்களின் பெற்றோர்களிடத்தில் எப்படி நடக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். அவர்கள் மேற்கத்திய நாகரிகப் பழக்கத்தால் சில கெடுதல்களை மாத்திரம் கிரஹித்துக், கீழ்ப்படிதலும், மரியாதையும், வணக்கமும் குறைந்தவர்களாகி வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட புத்திரர்கள் விருத்தாப்பிய பெற்றோர்களின் காரியங்களில் எப்படி சுஷ்மையோடு கூடியிருப்பார்கள். அக்ஞானியான ஆத்துக்காரியினால் பாதிக்கப்பட்டு தங்களைப் பெற்றுவளர்த்த அம்முதியவர்களுக்கு அவர்களின் ஜீவிதகாலத்தில் பிரியத்தோடு ஒருசேர்பால் கிட்ட உட்கார்ந்து ஆதரவா யளிக்க மனமில்லாமல் அவர்கள் செத்தபிறகு ஊருக்கொப்புவிக்கக், குங்குமப் பொட்டலத்துகுப்பிள்ளைப் பொட்டலம்போல் ஆறணாவுக்குக் காலணாவுஞ்சேர்த்து ஐம்பது காவேரிஸ்தானம் தாங்கள் நம்பிக்கையற்று, அபாத்திரர்களுக்குத் தானஞ்செய்கிறார்கள்.



### நமது கேவல ஸ்திதி.

இப்படிக்கெல்லாம் கேவல ஸ்திதிக்கு வந்துவிட்ட நாம் ராஜாங்கத்தில் உயர்ந்த பதவிக்குக் கதறினால் அது கிட்டுமா? கிட்டினாலும் நமது தற்கால நிலைமையில் அது நமக்கு தக்குமா. அது தற்கால நிலைமையில் சகாதேவவாக்கியமாகிய பிறர்மனையர் பெற்றதாய், பிறர்பொருள் எட்டிக்காய், பிறர்நிலைமை தன்னிலைமை என்னும் பாவனம் நமது ஸ்வானுபவத்தில் உலாரக்கூடுமா? சகோதரர்களே! நான் நமதுதற்கால நிலைமையைப் பழிக்கிறேன். என்று எண்ணக்கூடாது. நமது கேவல ஸ்திதிக்குப் பரிதாபப்படுகிறேன். ஆனால் சில வருஷங்களுக்கு முந்தி இருந்த நிலைமைகளைவிட இப்போது பல மார்க்கங்களிலும் சீர்திருத்தமான உணர்வுகள் உண்டாகிப் பரவிவருகின்றன. படித்தவர்களின் மனது நல்லவழிகளில் பிரவர்த்திக்கச்சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் பேச்சிலும் நல்லஅடையாளங்களும், குறிகளுந்தோன்றுகின்றன. நமது ஒற்றுமைக்கும் ஐக்கிய அபிமானத்துக்கும் ஏற்றவைகளை இனிநாம் நமது காரியங்களில் திட்டமாய்க்காட்டவேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகையால் இப்பேர்ப்பட்ட தற்கால சந்தர்ப்பத்தில், நாம் எல்லோரும் நல்ல நடத்தையோடு கூடினவர்களாக ஆகவேண்டியது என்று நான் பிரார்த்திக்கிறேன்.

### "தர்மய்சர"

ஸ்வதர்மானுஷ்டானமே நன்னடத்தைக்குக்காரணம். நடத்தை என்றால், குணம்-"character." ஹிதம் என்று எண்ணியபடிபேசி, பேசியபடி செய்யும் ஐக்கிய பாவத்தில் திடமாய்நிற்கிறவர்களுக்கே நடத்தையோடுகூடியவர்கள் என்று பெயர். நடத்தையில்லாதவர்களாய் இருப்பதைவிட கெட்ட நடத்தைக்காரர்களாய் இருப்பதுகூட அதாவது மனதில் உள்ள கெட்ட எண்ணத்தைப்பேசி அதின்படி நடத்தலில் ஐக்கியம் ஏற்பட்டிருப்பது மற்றவர்களுக்கு நலம் எனலாம். தற்காலத்தில் நாம்பொதுவாக வெகுவாச நடத்தையு

ற்றவர்களாய் இருக்கின்ற வெகு பேர்களைப் பார்க்கின்றோம். கெட்ட நடத்தை காரர்களைவிடக் கேவலமாகிவிட்டார்கள். எண்ணியபடி பேசாமலும், பேசுகிறபடி காரியங்களைச் செய்யாமலும் நடந்து வருகின்றார்கள். ஆகையால் இந்து சகோதரர்களே! இனியாவது கண்ணை விழியுங்கள். நல்லதென்றெண்ணியவைகளைப் பேசவும், நல்லதென்று பேசியவைகளைக் காரியங்களில் அநுஷ்டித்துக் காட்டிச்செய்யவும் திடமான தைரியமுடையவர்களாக ஆகுங்கள். அப்பொழுது தான் நமது தேசத்துக்கு மேன்மையும் நம்மவர்களினிடத்தில் மதிப்பும் ஏற்படும். — "துப்யம் த்ரேதஸ்தித ஆத்மனே" என்ற மஹாவாக்கியத்துக்கு சிருஷ்டிரக்ஷணஸம்ஹாரமென்னும் மூன்றிலும் வியாபித்திருக்கும் ஈசனுக்கு நமஸ்காரம் என்று அருத்தஞ்சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் எண்ணுதல், பேசுதல், அவைகளைக் காரியங்களில் வானுஸ் பவமாய்ச்செய்து காட்டுதல் என்னும் இம்மூன்றிலும் ஐக்கியமாய் நிற்கும் என்னின் பொருட்டு நமஸ்காரம் என்பதே அதின் தத்துவம். அப்படியான ஐக்கிய ஒற்றுமையை நம்மில் நாம் காணத் திடவைராக்கிய புத்தியோடு கூடியவர்களாக நாமாகி அதினால் நமதானந்தமும் ஸௌக்கியமும் சந்துஷ்டியுமுடையவர்களாக ஆக நாம் எல்லோரும் பாடுபடும்படி நான் மிக வணக்கமாய் வேண்டுகிறேன். ஜெகதீசன் அதற்கு அருள்புரிவாராக என்று பிரார்த்திக்கிறேன்.

"மனஸ்யேக வசஸ்யேக கர்மண்யேக மஹாத்மநாம்
மனஸ்யந்யத், வசஸ்யந்யத் கர்மண்யந்யத்துராத்மநாம்

மங்களானி பவந்து
ஓம் தத்ஸத்

---

## LINES IN PRAISE OF SRI KRISHNA, THE GOD OF TRUTH.

"What is Truth?"
"Look Within and Find It Out".

வெண்ணெய்திருடிக் கண்ணனை நீர் கண்டதுண்டோ சொல்லுமின்!

"உண்மையாவதுயாது?"
"உள்ளேபார்த்துணருண்மையை!"

---

[மாயாண்டிச்சித்தன் ஞானப்பாட்டு]

ஓங்காரி–The Ruling Principle of Life.

"ஓங்காரி யவள்தானே ஆங்காரி யாயினள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றெடுத்தாள்
ஆங்காரிய மெல்லாம் ஐவர்தந் தொழிலாம்
ஆங்கார மழிந்தாலது ஓங்கார மாமே."

1. ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ஐம்

(1) ஓங்கார மாமே யுள்ளொளி விளக்கது
ஹ்ரீங்கார மாமே யின்னருட் சக்தியும்
ஸ்ரீங்கார மாமே ஷட்விம ஜகத்பாவம்
ஐங்கார மாவதும் ஆத்மதத் துவமே.



2. தத்துவ சத்துவ நித்திய தத்புருஷாத்மகன்.

(2) தத்துவ மதனுள் தத்துவ னிருப்பன்
தத்துவ மதனால் சத்துவ முண்டு
தத்துவ சத்துவ நித்திய மாமவன்
தத்புரு ஷாத்மக ஸ்வரூபி யானான்.

3. ஆத்மகம், சக்தி, தத்துவம், ஸ்வரூபம்.

(3) ஸ்வரூபி யானவன் தத்புரு ஷாத்மகன்
ஸ்வரூபி சக்தியும் ஆநந்த ரூபம்
ஸ்வரூபி தத்துவம் வாயு வதாமே.
ஸ்வரூபி தானும் சின்மயா நந்தனே.

4. ஸ்ரீகோபால கிருஷ்ணவதாரம்.

(4) சின்மயா நந்த ஜகதீசன் தானே
மின்மயா நந்த தேவகி வயிற்றில்
தன்மய சுந்தர கோபால கிருஷ்ணனாய்
மின்மய மேக வர்ணமோ டுதித்தான்.

5. அவதார நோக்கம்.

(5) உதித்தானே யண்ணலு முண்மை யுணர்த்துவான்
கதித்தவம் மாமன் கொட்டத்தை யடக்குவான்
பசித்தவர் தாபத் திரியங்களைப் போக்குவான்
நசித்தஸ நாதந தர்மத்தை நாட்டுவான்.

6. அவதார மஹிமை.

(6) நாட்டுவான் அண்ணலும் நாடெங்கும் புரப்பான்
காட்டுவான் உண்மையைக் காடெல்லா மெரிப்பான்
தீட்டுவான் புத்யைஸ்தல யாத்திரை வ்யாஜத்தால்
மூட்டுவான் போரையும் மூர்க்கர்க ளழியவே!

7. அவதார தரிசனம்.

(7) அழியவே செய்குவான் ஆங்காரம் போக்குவிப்பான்
பழியெலாம் ஏற்றுத்தானே பரிகாரம் செய்துவைப்பான்
இழிவெலாம் அகத்தில்நீக்கி யின்னருள்சா தித்துவைப்பான்
கழிவெலாம் கழித்தபின்னர் கருமுகில்போ லெதிரேநிற்பான்.

8. திரோபவ அனுக்ரஹ சக்தி.

(8) நிற்பா னவனெதிரே நின்மல சித்தனானால்;
நிற்பா னவன்மறைவே நிமிஷாங் காரந்தோன்றில்;
கற்பா னவன்களவு கள்ளமனந் தனைத்திருத்த;
நற்பாம் பதைப்பிடித்துப் பிடாரனா யாட்டுவானே!

9. அனுக்ரஹோபாயம்.

(9) ஆட்டுவான் பாம்பு தன்னை யாட்டுவிப்பான் மனத்தையெல்லாம்
காட்டுவான் உண்மைதன்னைக் காயம்விட் டவனைப்பற்றில்,
ஊட்டுவான் கலகத்தியை மும்மலமு மெரித்துவைப்பான்
ஓட்டுவா னுலகத்தோரைக் கூட்டமாய்ப் பசுநிரைபோல்!

10. நிக்ரஹானுக்ரஹசக்தி.

(10) பசுநிரைபோல் ஆடவரை யாட்டுவிப்பான் மாயக்கோலால்,
கொசுநிரைபோல் குறும்பினரைக் குலமறுப்பான் மாயத்தீயால்
கசுமலநீங்கக் கயவர்களைக் கட்டுவிப்பான் கர்மத்தாலே,
பசுபாசநீங்கப் பெற்றால், பக்தியுமளித் தாள்வானே!

11. ஆளும்சக்தி-ஆள்வான் மஹிமை.

(11) அளித்தாள்வான் பக்தியினால் அஹமழிந் துளங்கனிந்தால்
களித்தாள்வான் கர்மத்தாலும் நைஷ்கர்ம சித்திபெற்றால்
விளித்தாள்வான் வேதத்தாலே வித்வத்மனம் சுத்திபெற்றால்
புளித்தாள்வான் †போதத்தாலே புல்லறிவு நீங்காதாகில்.

12. "ஒழிவில் ஒடுக்கம்" இல்லார்தன்மை.

(12) புல்லறிவு நீங்காதாகில் பொறிபுலன்க ளொடுங்காதையே!
நல்லறிவு தானுதிக்கப் பொறிபுலன்க ளொடுங்கவேண்டும்!
புல்லறிவு நீங்காத புல்லியருக் கருள்பாலித்தால்,
நல்லறிவு தான்பெற்றுய்யார்! தரணியை யழிப்பாரையே!

13. "ஒழிவிலொடுக்கம்" இல்லார் செய்கை.

(13) தரணியை யழிப்பாரையே தாரகா சுரனைப்போலே!
அரணியைக் கடைந்துதானே அக்னியைப் பூஜைசெய்யார்!
பரணியைப்போ லுமையே மரணத்தீதன்னில் வீழ்வார்!
தரணியைக் காக்கவேண்டித் தயாநிதி யவனேவந்தான்.

† தற்போதத்தினால்,



14. "தயாநிதி" லக்ஷணம்

(14) தயாநிதி யவனேவந்தான் தரணியைக் காக்கவேண்டி;
தயாநிதி யவனேவந்து தரணியிற் கோபாலனானான்;
தயாநிதி யவனேவந்து தர்மத்தைத்தலை யெடுக்கச்செய்தான்;
தயாநிதி யவனேதரணி மன்னர்க்குப்பய அபயமானான்.

15. "அடிக்கு மொருகை அணைக்கு மொருகை."

(15) பயாபய மிரண்டுமானான் பாபபுண்யச் சிந்தைபோலே
பயாபய மிரண்டுமானான் தர்மாதர்ம நெறியைப்பற்றி
பயாபய மிரண்டுமாகித் துஷ்டரைக் கண்டிக்கலானான்
பயாபய மிரண்டினாலே சிஷ்டபரிபா லனமுஞ்செய்தான்.

16. அவதாரலீலை.

(16) சிஷ்டபரிபா லனமுஞ்செய்தான் துஷ்டநிக் கிரகமேசெய்தான்
இஷ்டபூர்த்தி யெல்லாம்செய்து சிஷ்டரைத்தன் னிஷ்டராகக்
கஷ்டபூர்த்தி யால்திருத்தி நஷ்டமெல்லா மீட்டேற்றி
துஷ்டர்களைச் சிந்தைகெட்டுப் போகவிட்டு லீலைசெய்தான்.

17. ஆத்மநிஷ்டர்க்கன்றிகாணற்கரியவன்.

(17) லீலைசெய்தான் வேலையற்றுப்-பாலையுண்டான் லீலைசெய்து
லீலைசெய்து பாலையுண்டு- வேலையற்றுத் தான்திரிந்த
வெண்ணெய்திருடிக் கண்ணனைநீர் கண்டதுண்டோ சொல்லுமின்!
கண்ணாற்கண்டதுண்டோ சொல்லுமின்! கண்டதுண்டேல்சொல்லுமின்!

18. கண்டதண்டர் அவனைக்காணார்.

(18) கண்டதுண்ட மானசொல்லைக் கண்டதுண்டமாகப்பேசி
கண்டதுண்ட மானவார்த்தைக் கண்டபிண்டமொவ்வாதே
கண்டதுண்ட மாகவாயில் வந்தவற்றைச் சொல்லிக்கொண்டு
சண்டப்ர சண்டமாகக் கண்டதுண்டப் பேச்சுப்பேசும்

சண்டப்ர சண்டரே! நந்தர்குலத் தொண்டரே!
வெண்ணெய்திருடிக் கண்ணனைநீர் கண்டதுண்டோசொல்லுமின்!

ஓம் ஹ்ரீம் ஆபாலகோபவிதிதாயைநமஃ
ஓம், ஸ்ரீகிருஷ்ணாயநமஃ

# உபநிஷதார்த்ததீபிகை.

## I. *அமிருதபிந்து உபநிஷத்.

* சங்கரானந்தர் இதற்கு அமிருதபிந்து என்றும் நாராயணர் பிரஹ்மபிந்து என்றும்பெயர் சொல்லுகிறார்கள்.

ஓம் ஸ்ரீசாவித்திரியைநம:

மனம் சுத்தமசுத்தமென இருவகையாகச்சொல்லப்படும். அசுத்தமனம் காமங்களை சங்கல்பிக்கும். சுத்தமனம் காமமற்றது. (1)

மனமே மனிதர்களின் பந்த மோக்ஷங்களுக்குக் காரணமாகும். விஷயப்பற்றுள்ள மனம் பந்தத்திற்கும் நிர்விஷயமான மனம் முக்திக்கும் காரணமாகும். (2)

நிர்விஷயமான மனதால் மோக்ஷம் ஏற்படும் என்னும் காரணத்தால் முமுக்ஷுவானவன் எப்பொழுதும் மனதை நிர்விஷயமாகச் செய்ய வேண்டும். (3)

எக்காலம் மனம் சகல விஷயப்பற்றுக்களும் நீங்கி ஹிருதயத்தில் நிரோதிக்கப்பட்டு (a) உன்மனீபாவத்தை அடைகிறதோ அப்பொழுதே அது பரமபதமாகும். (4)

(a) "ஆத்ம பாவத்தை" என்றும்பாடமுண்டு.

ஹிருதயத்தில் க்ஷயத்தை (நாசத்தை, லயத்தை) அடைகிற வரையில் தான் மனதை நிரோதனம் செய்யவேண்டியது. இதுவே ஞானமும் தியானமுமாகும். மற்றனவெல்லாம் கிரந்தவிஸ்தாரமே. (5)

(அப்பிரஹ்மமானது) சிந்திக்கத்தக்கதுமல்ல (மனிதிற் கெட்டாதபடியால்); சிந்திக்கத்தகாததுமல்ல. சிந்திக்கத்தக்கதல்ல, ஆனாலும் சிந்திக்கதகுந்ததே. (மனம்) அப்பொழுது பக்ஷபாதங்களற்ற பிரஹ்மத்தை அடையும். (6)

ஸ்வரத்தினால் (பிரணவத்தினால்) யோகத்தை (சித்தவிருத்திநிரோதத்தை) அப்பியசித்து, பிறகு ஸ்வரமற்றதை பாவிக்கவேணும். இதனால் பாவமே (சத்தே) அடையப்படுகிறது. அபாவமில்லை. (7)

குறிப்பு.—[நாராயணரின் வியாக்கியானபடி ஸ்வரம் என்பது பிரணவத்தின் அகாரஉகார மாத்திரைகள். அஸ்வரம் என்பது ஸ்வரமற்ற மகாரம் (அதாவது பிந்துவாகிய "ம்") என்னும்பொருள். அவித்தியாநாசத்தால் அபாவத்தை (அதாவது சூன்யமாகிற சுழுத்தியை) அடையக்கூடாது என்றும், பூர்ணமாகிய பாவத்தையே (அதாவது ஸத்ரூபமாகிற துரீயத்தையே) அடையவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்.

சங்கரானந்தர் பாடவித்தியாசத்தின்பேரில் பின் வருமாறு சொல்லுகிறார்:—ஸ்வரம் என்பது பிரணவத்தின் மாத்திரைகள் என்றும், அஸ்வரம் என்பது பிரணவத்தின் உட்பொருளென்றும், அஸ்வரத்தின் தியானத்தால் அபாவமாகிற (அதாவது அவித்தையின் நாசரூபமான) பாவம் அதாவது பிரஹ்மபாவம்) உண்டாகும் என்றும் கூறுகிறார்.]

அதுவே நிஷ்களமானதும் நிர்விகல்பமானதும், நிரஞ்சனமானதுமாகிய பிரஹ்மம். அப்பிரஹ்மமே நான் என்று அறிந்து சீக்கிரத்தில் பிரஹ்மத்தையே அடைகிறான். (8)

எது நிர்விகல்பமாயும். அழிவற்றதாயும், ஹேது திருஷ்டாந்த மில்லாததாயும், அப்பிரமேயமாயும், அநாதியாயும் உள்ளதோ அதை அறிந்து அறிஞன் மோக்ஷத்தையடைகிறான். (9)

அழிவுமில்லை உத்பத்தியுமில்லை, பந்தப்பட்டவனுமில்லை அப்பியாசியுமில்லை, முமுக்ஷுவுமில்லை முக்தனுமில்லை என்பதே "பரமார்த்ததை" (பரமார்த்தஸ்வபாவம், அதாவது, உண்மை.) (10)

ஜாக்கிரத், சுவப்ந, சுழுத்திகளிலும் ஆத்மா, ஏகமென்றே அறியவேண்டும். இம்மூன்று இடங்களையும் கடந்தவனுக்கு மறுபிறப்பு இல்லை. (11)



பூதாத்மாவானவன் ஒருவனாகவே இருக்க ஒவ்வொரு பூதங்களிலும் இருந்து கொண்டு நீரில் சந்திரனைப்போல் ஒன்றாகவும் பலவாகவும் காணப்படுகிறான். (12)

ஓர் கடத்தால் (பானையால்) சூழப்பட்ட ஆகாயமானது கடம் கொண்டுபோகப்பட்டபோது கடமாத்திரம் கொண்டுபோகப் படுமேயல்லாமல் ஆகாயம்எப்படி கொண்டுபோகப் படமாட்டாதோ, அப்படியே ஜீவனும் ஆகாயத்துக் கொப்பாவான். (13)

கடத்தைப் போல் (தேகமானது) மறுபடியும் மறுபடியும் நாசமடையும். அப்படி நாசமடைந்ததை அது (தேகம்) அறிவதில்லை; அவன் (ஆத்மா) எப்பொழுதும் அறிகிறான். (14)

(a) சப்தமாயையால் சூழப்பட்டு எது வரையில் இருக்கிறானோ அதுவரையில் (ஹிருதய) புண்டரீகத்தில் இருக்கிறான். அஞ்ஞானநிவர்த்திஅகப்பட்டதும் ஏகத்துவத்தையே பார்க்கிறான். (15)

(a) சப்தமாயை என்றால்சப்தமாத்திரமான அதாவது வாச்சாமாத்திரமான, வஸ்துசூன்யமான மாயை என்று பொருள்.—இந்த சுலோகத்துக்கு நாராயணர் பாடத்தின்படி பொருள் சொன்னோம், புஷ்கரம் என்னும் பதத்திற்கு ஹிருதய புண்டரீகம் என்று நாராயணர் அர்த்தம்செய்கிறார். சங்கரானந்தர் பாடப்படி பின்வருமாறு பொருளாகும்:—

வஸ்து சூன்யமான (அல்லது சப்தாதி பிரபஞ்சமான) மாயையால் சூழப்பட்ட ஆத்மாவானது, எப்படி இருளால் சூழப்பட்ட புருஷன் புஷ்கரத்தை உத்தேசித்த இடத்தை) அடையமாட்டானோ, அப்படியே ஆத்மாவும் அஞ்ஞானாந்தகாரத்தால் சூழப்பட்டவனாய் புஷ்கரத்தை (அதாவது புண்யரூப ஆத்மஸ்வரூபத்தை) அடைகிறதில்லை. "புஷ்கரம்" என்னும் பாடத்திற்கு ஆகாயம் என்றும்பொருள். அப்பொழுது ஆகாயத்தைப் போல் சர்வவியாபியான (ஆத்மஸ்வரூபத்தை) அடைகிறதில்லையென்று பொருட்படும்.

சப்தாக்ஷரம் பரப்பிரம்மம் (என இரண்டு) அந்த (சப்தாக்ஷரம்) க்ஷயமடைந்ததும் எது அக்ஷரமாக (நாசமற்றதாக) மிஞ்சுகிறதோ அந்த அக்ஷரத்தை (நாசமற்றபொருளை), அதை (சப்தாக்ஷரத்தை) அறிந்தவன் ஆத்மாவுக்கு சாந்தியை இச்சித்து தியானிக்கவேண்டும். (a) (16)

(a) "சப்தாக்ஷரம்" என்பதற்கு பிரணவாக்ஷரமென்று சங்கரானந்தர் சொல்லுகிறார். நாராயணர் சப்தப்பிரம்மமென்று பொருள் சொல்லுகிறார். சப்த மென்றால் வேதம்—வேதம் அல்லது வேதத்தின் சாரமான பிரணவம் இவை இரண்டாலும் வாச்சியமான பிரம்மம் எனப் பொருள் கொள்ளவே "சப்தாக்ஷரமென்பது" பரோக்ஷஞான மாகும். "பரப்பிரம்மம்" என்பது அபரோக்ஷஞான மாகும்.

இரண்டு வித்தைகள் அறியத்தக்கது. அதாவது சப்தப்பிரம்மம், பரப்பிரம்மம். சப்தபிரம்மத்தில் தேர்ந்தவன் பரப்பிரம்மத்தை அடைகிறான். (17)

புத்திமானானவன் கிரந்தங்களை (சப்தபிரம்மரூபமான வேதசாஸ்திரங்களை) அப்பியாசம் செய்து ஞானம் (த்ரிபுடியற்ற அனுபவம்), விஞ்ஞானம் (த்ரிபுடியுள்ள அறிவு) இவைகளில் தத்பரனாய், எப்படி தான்யம் வேண்டுவோன் வைக்கோலைத் தள்ளிவிடுவானோ அவ்விதம், சகலகிரந்தங்களையும் தள்ளி விடவேண்டும். (18)

(b) ஞானம் என்பதற்கு சப்தஞானமென்றும் விஞ்ஞானம் என்பதற்கு சாக்ஷாத்காரமென்றும் பொருள் சொல்லுகிறார்கள். பின் வரும் 20வதுஸ்லோகத்தால் இதுதான் சரியான அருத்தம் என்று வெளியாகும்.

பசுக்கள் பலவர்ண மாயிருந்தாலும் பால் ஒரேவர்ணமாய்த்தான் இருக்கும். பாலைப்போல் ஞானமானது அறியப்படும், லிங்கிகள் பசுக்களைப் போல். (a) (19)

(a). "லிங்கி" என்பதற்கு அநேகம் சாகைகளை உடைய வேதங்கள் என்றும், இவ்விதம் நானாபேதமான சாகைகளால் பிரதிபாதிக்கப்பட்ட பொருள் பாலைப்போல் ஒன்றேஎன்றும் சங்கரானந்தர் பொருள்சொல்கிறார்.

நாராயணர் 'லிங்கி' யென்பதற்கு லிங்கத்தோடு (அதாவது தடியாகிற அடையாளத்தோடு கூடிய) பசுமேய்க்கிறவர்கள் என்று அர்த்தம் சொல்லி, வாக்கியத்திற்கு "பசுமேய்க்கிறவர்கள் பசுக்கள் பலவர்ணமாயிருந்த போதிலும் எப்படி ஒரே வர்ணமான பாலையே கிரகிக்கிறார்களோ அவ்விதம் பாலைப்போல் ஞானம் கிரகிக்கப்படவேண்டுமென்று பொருள் சொல்லுகிறார்.

(a) நெய் எப்படி பாலில் மறைந்திருக்கிறதோ அப்படியே விஞ்ஞானம் (விஞ்ஞாப்தி ரூபமான ஆத்ம ஸ்வரூபம்) ஒவ்வொரு பூதங்களிலும் வசிக்கின்றது. மாறு ரூபமான மனத்தால் (b) ஞானநேத்திரத்தை (கயிறை) அடைந்து, எப்பொழுதும் கடையவேண்டும். அதன் பிறகு அக்நியைப்போல் பரத்தை (பரப்பிரம்மாகாரஸ்வானுபவத்தை) எழுப்பவேண்டும். (20)

(a) நாராயணர் பாடப்படி அக்நியை (அதாவது சகலதுவந்துவங்களையும் கொளுத்திவிடும் அனுபவத்தை) எழுப்பவேண்டும் என்று பொருளாகும். சங்கரானந்தர் தன்பாடப்படி மேல் எழுதியபடி பொருள் சொல்லுகிறார். ஆனால் இன்னொரு விதமும் சொல்லலாம். (b) "அக்நியைப்போல் ஞானக்கண்ணைப் பெற்று நெய்யைப் போலிருக்கும் பரத்தை ஆசமதத்துவத்தை (சாய்ச்சி, எடுக்கவேணும்." பிந்தியசாஸ்திரங்களில் இவ்விதம் தான் பொருட் கொள்ளப்பட்டிருக்கிறது.

(a) நிஷ்களமாயும் நிர்மலமாயும் சாந்தமாயும் சர்வபூதங்களில் வசிப்பதாயும் சர்வபூதங்களும் தன்னிடம் வசிப்பதாயும்இருக்கும் பிரம்மமே நான் என்று அறியப்படும். (21)

(a) நிச்சலமாயும் என்றும் பாடமுண்டு.

(b) சர்வத்திற்கும் அனுக்கிரகம் செய்யும் காரணத்தால் நான் வாசுதேவனாக இருக்கிறேன். (22)

(b) அனுக்கிரகத்துவம் முன் 21.வது ஸ்லோகப்பட்டி ஆதாராதேய பாவம் இரண்டும் தன்னிடம் பொருந்தியிருப்பதால் எற்படும். "வாசுதேவன்" என்பதற்கு சகலத்தில் "வசி"க்கிறவரும், ஸ்வப்பிரகாச (திவ்ய பிரகாசித்தல்) ரூபரும், என்று சங்கரானந்தர் அர்த்தம் சொல்லுகிறார்.

மு. கோ. நாராயணஸ்வாமிஐயர்.

## "பிந்துவென்றால் என்ன?"

(மாயாண்டிச் சித்தன் ஞானப்பாட்டு.)

"கண்ணோடு கண்கலந்து கண்பான்காண் பொருளற்றால்
எண்ணோ டெண்கலந்து ஏகமாய் விளங்குமொன்று!
விண்ணோடு விண்கலந்து விண்ணுமண்ணு மொன்றானால்
கண்ணோடு கண்கலந்த காட்சியது பிந்துவாமே."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 5 - APR 1911

# THE VIVEKA CHINTAMANI

## A Monthly Tamil Magazine and High Thought Review

Devoted to the Diffusion of Practical Truth and Knowledge.

**Dealing with the Principles of Education, Psychology, Soul-Culture, and Ethics.**

**Adapted for Use in Homes and Schools.**

God is Love: Knowledge is Power: AUM.

"Live and Learn"—"ஓதுவதொழியேல்."

SATYAMEVAJAYATI.

**Vol. XVIII.**

*(For the Tamil year Sâdhârana.)*

***April 1910-March 1911.***

# விவேக சிந்தாமணி.

அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனு மிலர்.—திருக்குறள்.
கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.

18-ம் புத்தகம்.

(சாதாரண ஞு.)

1910-ஞு எப்ரல்மீ முதல் 1911-ஞு மார்ச்சுமீ வரை.

PUBLISHED BY
THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,
Lalitalaya, Mylapore, Madras, S.
For The Viveka Chintamani Publishing Committee.
1910-1911.

Bound Vol. Rs. 5.] Copyright Registered. [Unbound Vol. Rs. 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS. REGISTERED 5 - APR 1911 MADRAS.

# TABLE OF CONTENTS.

## Vol. XVIII (April 1910-March 1911.)

### Nos. 1-2. For APRIL & MAY, 1910.


1. The New year and the Old—A Tale of Self-Experience. (The Singing Heart and the Testing Rod) ... 1
2. The Function of Journalism ... 6
3. They only Live Who Dare ... 10
4. The Recognition of the Eternally Feminine, or Central Will,—The Marriage of Uma at Tirumayilai (A Sequel to the Study of Temple Traditions.) ... 13-14
5. Kannaki—A Social Drama. (Act II Scene 3.) ... 17
6. Sita—A Tale of Hindu Domestic Life (Chap. 27.) ... 22
7. 'Man is Man and Master of his Fate and Fortune.' (A Critical study of the Temple Tradition in a recent festival.) ... 26
8. The Coming of the Theosophical "Millennium." ... 31
9. "The King is Dead, Long Live the King." (Reminescences and Recollections) ... 34
10. In Memorium Verses to the Citizen King and Emperor ... 39
11. His Majesty's Message to India ... 40
12. To Sri Krishna the God of Love ... 41
13. The Study of Comparative Religions (A Text-Book by Sri Vidyaranya.) ... 42
14. Upanishadhartha Dipika: II Mandala Brahmanopanishad, by M. K. Narayanaswamy Aiyar, B.A., B.L. ... 47


### 1910-ம்ஞு ஏப்ரல்-மேமா, 1-2-வது சஞ்சிகைகள்.


1. புதுவருஷப்பிறப்பு : மோன்சான கிருஷ்ணனும், தீனமான சனியனும். ... 1
2. பத்திரிகாதர்மம்—"ஆசிரியர் விருது." ... 6
3. அஞ்சா நெஞ்சுடையவரே வாழ்பவர். ... 10
4. திருமயிலையில் உமாமஹேசுவரர் திருக்கல்யாண மஹோத்சவக்காட்சி. (பிந்துவென்றால் என்ன?) 14
5. கண்ணகி (அங்கம் - II, காட்சி - 3.) ... 17
6. சீதா அல்லது இல்லறவாழ்க்கை. (27-ம் அதிகாரம்.) ... 22
7. "சலனசக்தியை வெல்லவேண்டில், கரபாத்திரம்சாமியாகவேண்டும்." 'பந்தம்பறி' யுற்சவக்காக்ஷி. 26
8. "அவதாரபுருஷர் தோன்றும் கிரஹசாரமிலே." ... 31
9. "வாழையடி வாழையாய் வாழ்கவே யரசு." (நமது அரசரின் ஞாபகமான சில குறிப்புகள்) ... 34
10. காலஞ்சென்ற இந்திய சக்ரவர்த்தியவர்கள்பால் எழுதிய சரமகவிகள் ... 39
11. மா. சக்ரவர்த்தியவர்கள் நமக்கனுப்பியிருக்கும் சமாசாரம் ... 40
12. பரமானந்த பாலகிருஷ்ணப்ரேமை. ... 41
13. "ஸர்வதரிசன சங்கிரகம்."—"எம்மதமும் சம்மதமே." ... 42
14. உபநிஷதார்த்த தீபிகை: II - மண்டலப்ராஹ்மணோபநிஷத். மு. கோ. நாராயண ஸ்வாமி

## No. 3. For JUNE, 1910.


1. The King's Sympathy and India's Ideal ... ... ... ... ... ... 57-8
2. Sri Mangalambikai Pancharatnamala ... ... ... ... ... ... ... 62
3. The Science and Conduct of Life ... ... ... ... ... ... ... 63-4
4. Easy Lessons in Economics—Lesson, 2 ... ... ... ... ... ... 66
5. Yogachandrika—The Allegory of Tara and Chandra ... ... ... ... 68
6. The Benificent Light of Yoga—Foreword ... ... ... ... ... 72
7. Siva-Yoga Deepika, By Sri Sadasiva Yogindra ... ... ... ... ... 74
8. Sita—A Tale of Hindu Domestic Life ... ... ... ... ... ... 78
9. Mantra-Yoga: Father and Mother Glorified in the Son, or "Shadakshari Stuti" ... ... ... 82
10. Children's Page:—The Daughter's Ideal and Her Woes as Wife—An Indian Mrriage-Ballad ... ... 83
11. Kannaki—A Social Drama ... ... ... ... ... ... ... 87


### 1910-ம் ஜூன்மீ, 3-வது சஞ்சிகை.


1. அரசர் அனுதாபமும் இந்தியாவின் இலக்ஷியமும். ... ... ... ... 57-8
2. ஸ்ரீ மங்களாம்பிகை பஞ்சரத்ந மாலை. ... ... ... ... ... ... 62
3. ஸ்ரீ வித்தையும் ஸன்மார்க்கமும். ... ... ... ... ... ... 64
4. குடிவாழ்க்கை - 2-ம் பாடம். ... ... ... ... ... ... ... 66
5. யோகசந்திரிகை-"தாரை சந்திரனோடு போனாள்." என்பதன் தத்துவார்த்தம் (வசந்த பௌர்ணமி விசேஷம்).... ... ... ... ... ... ... 68
6. சிவயோக தீபிகை—முகவுரை. ... ... ... ... ... ... 72
7. ஸ்ரீ ஸதாசிவ யோகீந்திரர் அருளிய சிவயோக தீபிகை. ... ... ... ... 74
8. சீதா அல்லது இல்லறவாழ்க்கை. ... ... ... ... ... ... 78
9. மந்திரயோகம் - ஷடாக்ஷரீஸ்துதி ... ... ... ... ... ... 82
10. 'சிறுவர்க்கானபக்கம்.' கல்யாணப்பாட்டு:பெண்ணின் லக்ஷியமும், தலைவியின் பிரலாபமும், ... 83
11. கண்ணகி. ... ... ... ... ... ... ... ... 87


## No. 4. For JULY, 1910.


1. The Religious Feeling—Its Use and Abuse ... ... ... ... ... ... 89
2. Easy Lessons in Economics—III ... ... ... ... ... ... 93
3. "My Property"—A Tell-Tale Tantram ... ... ... ... ... 94
4. Root-Cure: The Sixteen-fold Remedy for the Sorrows of Life ... ... ... 104
5. An appeal to Agriculturists—I ... ... ... ... ... ... 107
6. Sivayoga Deepika—II ... ... ... ... ... ... ... ... 111
7. Sita—A Tale of Hindu Domestic Life ... ... ... ... ... 116
8. Upanishadhartha Deepika:—III. Bikshukopanishad ... ... ... ... 119-120


### 1910-ம் ஜூலைமீ, 4-வது சஞ்சிகை,


1. ஆஸ்திக சித்தம் - அதனால் விளையும் குணமும் கேடும். ... ... ... ... 89
2. குடிவாழ்க்கை - பாடம். 3. தொழில். ... ... ... ... ... ... 93
3. "என் சரக்கு"—ஓர் உளவறி தந்திரம். ... ... ... ... ... 94
4. ஆதிவைத்தியம்.: "சோதி நிவாரண சோடசீ" யாத்திரை. ... ... ... ... 104
5. வியவசாயிகளுக்கோர் அறிக்கை. ... ... ... ... ... ... 107
6. சிவயோகதீபிகை - 2-வது படலம். ... ... ... ... ... ... 111
7. சீதா - அல்லது-இல்லறவாழ்க்கை-29-வது அதிகாரம். ... ... ... ... 116
8. உபநிஷதர்த்த தீபிகை—3-வது. பிக்ஷுகோபநிஷத். ... ... ... 119-120




## No. 5. For AUGUST, 1910.


1. The Ideal and Its Characteristics ... ... ... ... ... ... ... 121
2. "What is Truth?" or "Sri Guru?" ... ... ... ... ... ... ... 125
3. Upanishadhartha Deepika: IV. Hamsopanished By M. K. Narayanaswami Aiyer, B.A., B.L. ... 129
4. "The Sins of Parents Visited on their Daughters." ... ... ... ... ... 133
5. Kannaki: A Social Drama, Act III, Sc. 1—2. By N. C. Gopalakrishnan ... ... ... 135
6. "Nature Study" And How to Do it—A Review ... ... ... ... ... ... 140
7. An Appeal to Agriculturists—II By M. N. Ganesa Iyer ... ... ... ... ... 146
8. Sita—A Tale of Hindu Domestic Life. Chap-30. By. S. Ramaswami Aiyer, B. A. ... ... 148


### 1910-ம் ஆகஸ்டுமீ, 5-வது சஞ்சிகை.


1. லக்ஷியலக்ஷணம். ... ... ... ... ... ... ... ... 122
2. "ஸ்ரீ குரு" என்றால் என்ன? ... ... ... ... ... ... ... 125
3. உபநிஷதர்த்த தீபிகை:—4-ஹம்ஸோபநிஷத்-(மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி.எ., பி.எல்.) 129
4. "மாதா பிதாக்கள் செய்த கர்மம் மக்களைக்காக்கும்." ... ... ... ... ... 133
5. கண்ணகி—அங்கம் III, காட்சி, 1, 2. (நா. ஸி. கோபாலகிருஷ்ணன்.) ... ... ... 135
6. "இயற்கை அறிவு:" "இளமையிற்கல் "முயற்சி திருவினையாக்கும்." ... ... ... 140
7. வியவசாயிகளுக்கோர் அறிக்கை—II. (எம். என். கணேசய்யர்). ... ... ... 146
8. சீதா அல்லது இல்லறவாழ்க்கை, அதி-30. (எஸ். இராமஸ்வாமி ஐயர், பி. எ.) ... ... 148


## No. 6. For SEPTEMBER, 1910.


1. Tirukkural-The Essence of Truth.—The "Valluvanar's Bequest." ... ... ... ... 153
2. "Mystic Dalliance" at Tiruvalluvar's ... ... ... ... ... ... ... 160
3. Easy Lessons in Economics—IV. By T. C. Venkataramana Iyer ... ... ... ... 161
4. Some Milestones in the Path of Yoga, Or The Negapatam Yogi and the Yoga-Bhumikas ... ... 163
5. Sivayoga-Deepika. Chapter III. First Part, Ashtavadhana Siddhi—By Sri Sadasiva Yogindra ... 169
6. Kannaki—A Social Drama—By N. C. Gopalakrishnan ... ... ... ... ... 172
7. Upanishadartha Deepika: V. Adhvayadhara kopanishad—By M. K. Narayanasawmy Iyer ... ... 175
8. On the necessity of Mental Training even for Physical Culture ... ... ... ... 179
9. On Disease or Sickness—By T. S. Thyagaraja Gnaniyar ... ... ... ... ... 182


### 1910-ம் செப்டம்பர்மீ, 6-வது சஞ்சிகை.


1. "வள்ளுவர் வைப்பு" எனச் சிறப்புப் பெயரெய்திய திருக்குறளியல், ... ... ... 154
2. "திருவூடல்" ... ... ... ... ... ... ... ... ... 160
3. குடிவாழ்க்கை (T. C. வெங்கடரமண அய்யர்) ... ... ... ... ... ... 161
4. "நாகப்பட்டணம் யோகி"யும் யோக-பூமிகளும், ... ... ... ... ... 163
5. சிவயோக தீபிகையில் அஷ்டாங்க பூஜா அந்தரங்க சதாங்க விதானமென்ற மூன்றாவது படலம்—(ஸ்ரீ ஸதாசிவ யோகீந்திரர்) ... ... ... ... ... 169
6. கண்ணகி—அங்கம் III, காட்சி, 3. (நா. ஸி. கோபால கிருஷ்ணன்) ... ... ... 172
7. உபநிஷதர்த்த தீபிகை:—V அத்வயதாரகோபநிஷத் (மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி. எ., பி. எல்.) ... ... ... ... ... ... 175
8. தேகப்பயிற்சிக்கும் மனப்பயிற்சி அவசியமே, ... ... ... ... ... 179
9. நோய், (டி. எஸ். தியாகராஜஞானியார்) ... 

## No. 7. For OCTOBER, 1910.


1. Tirukkural-The Essence of Truth.—The Ministry of 'Heaven'—Rain ...
2. Easy Lessons in Economics—V. Wages, By T. C. Venkataramana Iyer ... ... 185
3. The Mental Cause—Secret of the "Mental Science" Cure ... ... 194
4. Stilt-Walking in Excelsis ... ... 196
5. Sivayoga-Deepika, Chapter III. Second Part, Ashtangayoga Siddhi—By Sri Sadasiva Yogindra ... 201
6. Kannaki—A Social Drama Act III, Sc. 4. By N. C. Gopalakrishnan ... 204
7. Upanishadartha Deepika:—6, Vajra Soochikopanishad By M. K. Narayanasawmy Iyer, B.A., B.L., ... 207
8. Stray Lessons in Civics:—1. Toll, By M. N. Ganesa Iyer ... 209
9. Madras School-fee Regulations ... 211
10. The Mahalaya Fortnight ... ... 213
11. Corrigenda to Mandala Brahmanopanishad ... 211
... 215


### 1910-ம் ௵ அக்டோபர் ௴, 7-வது சஞ்சிகை.


1. திருக்குறளியல், 2. "வான் சிறப்பு" ...
2. குடிவாழ்க்கை (T. C. வெங்கடரமண அய்யர்) ... 185
3. "மனமாயை" என்னும் "மார்ஜாலவித்தை" ... 194
4. பொய்க்கால் நடைமலிப் போலியர் உயர்வு. ... 196
5. சிவயோக தீபிகையில் அஷ்டாங்க பூஜா அந்தரங்க சதுரங்க விதாநமென்கிற மூன்றுவது படலம்—(ஸ்ரீ. ஸதாசிவ யோகீந்திரர்). ... 201
6. கண்ணகி—அங்கம் III, காட்சி, 4. (நா. ஸி. கோபால கிருஷ்ணன்) ... 204
7. உபநிஷதர்த்த தீபிகை:—VI வஜ்ர சூசிகோபநிஷத் (மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்.) ... 207
8. துரைத்தன விளக்கம் தனிப்பாடங்கள்: 1. சுங்கம் ... ... 209
9. சென்னைப்பள்ளிக்கூட சம்பளங்கள் ... 211
10. மஹாலய பக்ஷம் ... 213
11. மண்டல ப்ராஹ்மணோபநிஷத் பிழைத்திருத்தங்கள் ... 214
... 215


## No. 8. For NOVEMBER, 1910.


1. Harischandra—The Martyr to Truth—A New Version ...
2. Easy Lessons for the Young—I. How to Control the Uncontrollable Mind ... 217
3. I. Ten years' War of the Flesh and the Spirit 1901-1910.—Overcomming the World or The Great Vow of Renunciation ... 223
4. II. Navaratri 1910—"Hunger and Thirst" conquered ... 226
5. The Vision of the Merging of the Unifying Spirit in Unity Eternal ... 229
6. Correcting the False Notion of Body—by St. Thayumanavar ... 232
7. Upanishadartha Deepika:—7. Sukarahasyopanishad By M. K. Narayanasawmy Iyer, B.A., B.L., ... 233
8. Kannaki—A Social Drama Act III, Sc. 5. By N. C. Gopalakrishnan ... 236
9. Sita—A Tale of Hindu Domestic life—By S. Ramaswami Iyer, B.A., ... 240
10 Stray lessons in Civics: 2. Thumb impression By M. N. Ganesa Iyer ... 242
... 246


### 1910-ம் ௵ நவம்பர் ௴, 8-வது சஞ்சிகை.


1. சத்தியவாக்கு அரிச்சந்திரன்—"சத்தியம் வத ; தர்மஞ்சர." ...
2. சிறுவர்க்கான ஹிதோபதேசங்கள்—1. அடங்காப்பிடாரியை அடக்கும் விதம். ... 217
3. 1. வயிறெரி கிளத்தல் 1901.—உலகை விட்டொழித்தல் அல்லது மஹாபிநிஷ்க்ரமணம் ... 223
4. நவராத்திரி பூஜை 1910-11. "வயிற்றை விட்டொழித்தல்." ... 226
5. "குருலிங்க சங்கம தரிசனம்" ... 229
... 232
... 233





7. உபநிஷதர்த்த தீபிகை:—7. சுகரஹஸ்யோபநிஷத் (மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி ஏ, பி.எல்.) 227
8. கண்ணகி—அங்கம் III காட்சி, 5. (நா. ஸி. கோபால கிருஷ்ணன்) ... 240
9. சீதா அல்லது இல்லறவாழ்க்கை 31-வது அதிகாரம் (எஸ். இராமஸ்வாமி அய்யர். பி. ஏ.) ... 242
10. துரைத்தன விளக்கம்: 2. கட்டை விரல் அடையாளம் (எம். என். கணேசய்யர்.) ... 246


## No. 9. For DECEMBER, 1910.


1. Khanda-Yog, or Absolute Mind-Control ... 249
2. The Supplicating Voice and the Responsive Echoe ... 254
3. Easy Lessons for the Young—2. The Siddha's Sayings Explained ... 254
4. Milking the Snakes ... 257
5. Upanishadartha Deepika:—7. Sukarahasyopanishad by M. K. Narayanaswamy Iyer, B.A., B.L., ... 259
6. Sivayoga-Deepika—IV. Sankhya Yoga and Taraka Yoga by M. K. Narayanaswamy Iyer, B.A., B.L., ... 261
7. Kannaki—A Social Drama By N. C. Gopalakrishnan ... 266
8. Sketches for Children—Sita-Manonmani—By M. N. Ganesa Iyer ... 271
9. Easy Lessons in Economics—VI. Profit, By T. C. Venkataramana Iyer ... 274
10. Sita—A Tale of Hindu Domestic Life, Chap. 32:—By S. Ramaswami Iyer, B.A., ... 276


### 1910-ம் ௵ டிசம்பர் ௴ 9-வது சஞ்சிகை.


1. கண்டயோகம் அல்லது "மனமிறக்கக் கற்றல்" ... 250
2. தேவி ப்ரச்னோத்தரம் ... 254
3. சிறுவர்க்கான ஹிதோபதேசங்கள்—2. சித்தாது உபதேச வாக்கியங்களின் உண்மை விளக்கம் 254
4. பால் கறந்தால் பாம்பு இறையெடுக்காது. ... 257
5. உபநிஷதர்த்த தீபிகை—7. சுகரஹஸ்யோபநிஷத் ... 259
6. சிவயோகதீபிகை—சாங்கிய தாரகயோகவிதானம் (மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர், பி ஏ. எல்.) 261
7. கண்ணகி—அங்கம் IV காட்சி, 1. (நாகை. ஸி. கோபால கிருஷ்ணன்) ... 266
8. சீதா-மனோன்மணி, எம். என். கணேசய்யர். ... 271
9. இலாபம் (T. C. வெங்கிடரமணய்யர்) ... 274
10. சீதா அல்லது இல்லறவாழ்க்கை—32-ம் அதிகாரம் (எஸ். இராமஸ்வாமி அய்யர், பிஏ,) ... 276


## No. 10. JANUARY, 1911.


1. The Spirit of Religion or Veera-Saivam to the Fore (The Tenth Aradradarisanam) ... 281
2. The Old Dame's Prophesy ... 286
3. Stray Lessons in Civics:—3. Currency—By M. N. Ganesa Iyer ... 288
4. Sivayoga-Deepika—1. Ashtanga Nirguna Poojah—by M. K. Narayanaswamy Iyer, B.A., B.L., ... 290
5. Upanishadartha Deepika:—8. Atmopanishad—by M. K. Narayanaswamy Iyer, B.A., B.L., ... 293
6. The Pluperfection of Ponnammal (A metapsychic tale from Real Life) ... 297
7. Kannaki—A Social Drama Acr IV. Scene 2—By N. C. Gopalakrishnan ... 302
8. Aids to Nature Study: (Elementry Botany and Study of Plant Life)—A Review ... 308


### 1911-ம் ௵ ஜனவரி ௴ 10-வது சஞ்சிகை.


1. சிரத்தா பக்தி அல்லது வீரசைவம் (ஆருத்ரா தரிசனம்—பத்தாம்முறை) ... 282
2. விருத்தாசலத் தம்மைகுறம் ... 286
3. துரைத்தன விளக்கம்: 3. செலாவணி, (எம். என். கணேசய்யர்) ... 288
4. சிவயோகதீபிகை—1. அஷ்டாங்க நிர்க்குண பூஜாவிதானம்—(மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர், பி ஏ., பி.எல்.) ... 290
5. உபநிஷதர்த்த தீபிகை:—8. ஆத்மோபநிஷத்—மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல். 293
6. பொன்னம்மாள் குறைநிறை—தத்துவா தீதமானதோர் திவ்வியகதை'. ... 297
7 கண்ணகி—அங்கம் IV காட்சி, 2 (நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்) ... 302
8. பிரகிருதி வித்யைக்கு வேண்டிய சாதக சாதனங்கள் ... 309

## No. 11. For FEBRUARY, 1911.


1. Darkness and Dawn—A Parable ... ... ... ... ... ... ... 313
2. Stray Lessons in Civics—Our new Viceroy on 'Civic Responsibilities' ... ... ... ... 317
3. Sivayoga-Deepika, Chap. V. Part II The Six States of Consciousness, M. K. Narayanaswamy Iyer B.A., B.L., 320
4. Aids to Nature Study (Elementary Botany and Study of Plant Life)-*Concluded* ... ... ... 324
5. Last days of Tolstoy ... ... ... ... ... ... ... 327
6. Upanishadartha Deepika:—9. Adhyatmopanishad by M. K. Narayanaswamy Iyer, B.A., B.L., ... ... 329
7. Kannaki—A Social Drama, Act IV. Scene 3—By N. C. Gopalakrishnan ... ... ... 332
8. Sita—A Tale of Hindu Demestic Life, By S. Ramaswamy Iyer B.A., ... ... ... ... 333
9. Temple Traditions: The Mystic Dalliance ... ... ... ... ... ... 337
10. The Sage and the Singer ... ... ... ... ... ... ... ... 341
11. Agricultural Notes: On Pepper Cultivation ... ... ... ... ... ... 343


## 1911-ம் வரு பிப்ரவரி 11-வது சஞ்சிகை.


1. அர்ச்சாரதி தூமாதிமார்க்கங்கள்: உத்தராயண தக்ஷிணாயன விசேஷார்த்தம் ... ... 314
2. துரைத்தனப் பொறுப்புகளைப்பற்றி நமது இராஜப்பிரதிநிதியவர்கள் போதனை ... ... 317
3. சிவயோகதீபிகை—V. 2. ஆறு அவஸ்தைகள் ... ... ... ... ... 320
4. பிருகிருதி வித்யைக்கு வேண்டிய சாதக சாதனங்கள். (முடிவு) ... ... ... 324
5. டால்ஸ்டாயின் துறவும் தேகவியோகமும் ... ... ... ... ... 327
6. உபநிஷதர்த்த தீபிகை:—9. ஆத்மோபநிஷத்.—மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர் பி. ஏ. பி. எல். 329
7. கண்ணகி—அங்கம் IV காட்சி, 3 (நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்) ... ... ... 332
8. சீதா அல்லது இல்லறவாழ்க்கை (எஸ். ராமசுவாமி ஐயர். பி. ஏ.) ... ... ... 336
9. கோயிற்புராணம் : திருவூடல் ... ... ... ... ... ... 337
10. "இயலிசைப்புலவர் தாரதம்மியம்" ... ... ... ... ... ... 341
11. விவசாயக் குறிப்புகள்: மிளகு ... ... ... ... ... ... 343


## No. 12. For MARCH, 1911.


1. Aviation—As Pure Science and Black Art ... ... ... ... ... ... 345
2. The Magh Mela ... ... ... ... ... ... ... ... 351
3. Upanishadartha Deepika:—9. Adhyatmopanishad By M. K, Narayanaswami Iyer, B.A., B.L., ... ... 352
4. Sita—A Tale of Hindu Domestic Life, By S. Ramaswami Iyer, B.A., ... ... ... ... 356
5. Agricultural notes:—Hairy Caterpillars ... ... ... ... ... ... 360
6. The Spiritual Year ... ... ... ... ... ... ... ... 361
7. To our Readers: On the Eve of a New Year ... ... ... ... ... ... 365
8. On the Virtues of Herbs ... ... ... ... ... ... ... ... 367


## 1911-ம் வரு மார்சு, 12-வது சஞ்சிகை.


1. பறத்தல் வித்யையும் வேடிக்கையும் ... ... ... ... ... 346
2. மாசிமகம் ... ... ... ... ... ... ... ... 351
3. உபநிஷதர்த்த தீபிகை: 9. அத்யாத்மோபநிஷத் M. N. நாராயணஸ்வாமி ஐயர், பி ஏ , பி. எல். 352
4. சீதா அல்லது இல்லறவாழ்க்கை, 34-ம் அதிகாரம் (எஸ். ராமசுவாமி ஐயர், பி. ஏ.) ... ... 356
5. கம்பளிப் பூச்சியைப்பற்றிய குறிப்பு ... ... ... ... ... ... 360
6. 'வருஷத்திற்கொருநாள்'-அல்லது "காலவந்தனம்" ... ... ... ... 361
7. விவேகசிந்தாமணியை வாசிக்கும் நண்பர்களுக்கு: "பழையனகழிதலால் புதியனபுகுதலாம்" ... 365
8. ஔஷதிகள் ... ... ... ... ... ... ... ... 367


OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 8 - JUL 1910 MADRAS.

உ

*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you find it." But,*

*"Make your Choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**Speak the Truth.**

"HITCH YOUR WAGON TO A STAR". "TO THINE OWN SELF BE TRUE".



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்சத்.] [God is Love. Knowledge is Power. *Aum.*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு. **18.**] **1910** வரு ஏப்ரல்-மேமீ, சாதாரண வரு சித்திரை-வைகாசிமீ [ச. **1-2.**

# THE NEW YEAR & THE OLD.

## *A Tale of Self Experience.*

### The Singing Heart & The Testing Rod.

THE SINGING HEART.

I spoke a traveller on the road
Who smiled beneath his leaden load,
" How play you such a blithesome part?"—
"Comrade, I bear a singing heart?"
I questioned one whose path with pain
In the grim shadows long had lain,
"How face you thus life's thorny smart?"—
"Comrade, I bear a singing heart!"

I cried to one whom adversity
Could not make bend the hardy knee,
"How such brave seeming? Tell the art!"—
"Comrade I bear a singing heart!"
Friend, blest be thou if thou canst say
Upon the inevtiable way
Whereon we fare, *sans* guide or chart,—
"Comrade, I bear a singing heart!"

—CLINTON SCOTLAND IN The *Independent.*

# புதுவருஷப்பிறப்பு.

"பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு".
மோனகானகிருஷ்ணனும் தீனமானசனியனும்.

" பழையனகழிதலும் புதியன புகுதலும்
வழுவலகாலவியல்பினானே. "

ஸௌம்மிய வருஷம் கழிந்தது. ஸாதாரண வருஷம் பிறந்தது. சென்ற வருஷத்தில் நாம் படாதபாடும் பட்டுக் கெடாதபடியெல்லாம் கெட்டோம். "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" † என்னும் வசனம் நம்விஷயத்தில் உண்மையா யிருந்தது. ஏழரைநாட்டுச்சனி ‡ எம்முள் புகுந்து ஆட்டின ஆட்டத்துக்கெல்லாம் ஈடுபட்டிருந்தோம்.

'பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினிநமக் குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.'—

என்றபடி, அரிச்சந்திரன் அண்டத்திற் பட்டபாடெலாம் பிண்டத்திற் பட்டுத் தீர்த்தோம். அன்னையாமவ ளங்கமெல்லாம்நொந்து ஆவலோடு பெற்றெடுத்த அழகு பொருந்திய தேஹமாம் 'பதியை'த் தாபலாக்நியினால் கொளுத்தி 'மன்மததஹனம்' போல் அது சாம்பலாகப் போகக் கண்டோம்.

"கர்மத்தைச்சுட் டெரிக்கா நாயேன்
காயத்தைச்சுட் டெரிதீ கண்டேன்
காயத்தைச்சுட் டெரிதீ கண்டும்
காமத்தைச்சுட் டெரிதீ காணேன்
காமத்தைச்சுட் டெரிதீ கண்டால்
கர்மத்தைச்சுட் டெரிதீ காண்பேன்
கர்மத்தைச்சுட் டெரிதீ கண்டால்
காயத்தைச்சுட் டெரித்தே னுவேன்."

என்னும் குண்டலிநியோக விதியை யனுசரித்துக் காயத்தைச் சுட்டெரித்துக் "காமதஹனமாம்" கண்கொள்ளாக் காட்சியைக்கண்டனுபவித்தோம். காமக்குரோதலோபமோஹமதமாச்சரியங்களுக்கெல்லாம் இருப்பிடமான கட்டழகனும் " காமனை யுகந்த கண், ஆரையுகப்பது " "தூய்மொழி வாசகம் சொல்லுமினீரே!" தேகம் 'சாம்பலாகப்போகக்கண்டது' எப்படி யென்பீரோ, கேண்மின்!

" காயத்தைச்சுட் டெரித்தே யானும்
காமத்தைச்சுட் டெரிதீ யானேன்
காமத்தைச்சுட் டெரித்தே பின்னும்
கர்மத்தைச்சுட் டெரிதீ யானேன்
கர்மத்தைச்சுட் டெரித்தேன் காணினிக்
காயத்தைச்சுட் டெரிதீக் கஞ்சேன்!
கர்மத்தைச்சுட் டெரித்த நானே
காயகல்ப விபூதி யானேன். "

" விபூதியான நான் " விசுவகர்மா மயன் செய்த வேலை யெல்லாம் செய்யக் கற்றேன். எப்படி யென்பீரேல், கேண்மின்:—

ஒன்பது வாசற் குச்சைக் கொளுத்திக்
கோமயத் தாலதை வெண்ணீ றாக்கி
ஐம்பதும் ஒன்றுமாய் அதனுள் வசித்த
வர்ணங்கள் சேர்த்துத் திருநீ றாக்கி
எண்பதும் ஒன்றுமாய் விளங்கு பதத்தை
வேரொடு கல்லித் திரவமாய்க் காய்ச்சி
மந்திரம் பதினொன் றாலேமாயச் சாந்ததுகூட்டி
நவசக்ரக் கோட்டைநிர் மித்தவகை யறியீரே!

நவசக்ரக்கோட்டையை நிர்மித்தபின்னர் நந்திதன்னருளாற் "பாலனையிழந்தனம்."

" ஆபாலகோபவிதிதாயை " யானவென் அம்பிகை யருளால் ஆத்மானுசந்தானம் முதிரவுந்தானே, முன்செய்வினையால் " படைத்ததோர் நிதியிழந்தனம்." இப்படியாகப், " † பதியிழந்து " நாம் " ‡ பாலனையிழந்து " பின், "படைத்ததோர் $ நிதியிழந்து" பாரினிற்பட்டதோர் துன்பங்களைச் சொன்னோம்.

" இனிநமக்குளதென நினைக்கும் ¶ கதியிழக்கினும் கட்டுரையிழக்கிலேம் " என்றுமே

† " ஸ்வானுபவத்தாலன்றி அபரோக்ஷஞானம் சித்திக்காது" என்பது இதன் பொருள்.

‡ மூன்றரைச் சுற்றுள்ளது குண்டலினிபோல், ஏழரைச்சுற்றுள்ளது 'அசுத்தமனமாம்' சனி. அசுத்தமனம் காமங்களை சங்கல்பிக்கும் என்பது சுருதிவாக்கு.

† பதி-தேஹம்; ‡ பாலன்-தற்போதம்; $ நிதி-கர்மம்; ¶ மோக்ஷகாமியம்; கட்டுரை-ஸத்யம்.



உன்னி, உண்மையைப்பற்றி உள்ளத்தே யாய்ந்து, உள்ளத்தை யுள்ளபடி உள்ளத்தேபற்றி, கள்ளமனமது கரைந்தேபோக, உள்ளமனமது முருகியே தெளிய, தெளிந்ததோர்மனமும் பளிங்கு போல் ஸ்படிகலிங்கமா யுறைந்த வம்மனதில் ஜோதிர்லிங்கத்தை ஜ்வலிக்கஇருத்தி, ஆதிபராசக்தி அம்மை பூர்வத்திலே, " ஞான ஆனந்தமயிலாகத் " தோன்றிப், பரம்பொருளா மந்தப் பேரின்பசுகத்தைப், பெறுதல் வேண்டிப் பூஜைமிகச் செய்த, புண்யஸ்தலமாம் † புநிதபூமியில், தேவியைத் தொழுது திவ்ய யாகம் செய்து, ஆவியையொடுக்கி அருந்தவங்கள் புரிந்து, பூர்வவாசனைப்புண்யபலத்தால், கர்வமழிந்து கிருதகிருத்தியனாகி, இருக்குந் தருணத்தில் " ஏழரைநாட்டான்," ஆட்டின கூத்தெல்லாம் போதாதென் றென்னுள்ளே, பாட்டிகதைகளைச்சொல்லித் திரியுமோர் பழம் பெருச்சாளியாய் வந்துதித்தானே!

பெருச்சாளியானவன்பேச்சை நான் நம்பி, குருபரன் பாதத்தை யுள்ளத்தேயிருத்தி, கருமுகில்வண்ணத்தன் காரிருள் போக்குவன், ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாம் அன்பினிற் கன்பன் என்றுமே சொல்லித்திரிந்த வச் சனியனை, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாத்தெரிசிக்கப்போனேன். அன்பானவார்த்தைகளைத் தான்பாக எண்ணி, அகண்டபரி பூரணத்தைக் கண்டதுண்டம் செய்து, ஆலஹால விஷம்போலும் உயிர் வாங்கு வார்த்தையை, ஆத்திரப் பட்டவன் சாத்திரம்பேசி, சூத்திரப் பொம்மைபோல் ஆடினான் கூத்தை. சத்திய - பத்திய உண்மையைச்சாதனை செய்தீரோ வென்கவும், 'சத்தியமாவது! சாதனையாவது! சத்தியம் நாசமாப் போகவே!' யென்றான்.

சத்திய-நாச காலனைக் கண்டு நான், 'நமக்குளதென நினை' கதிமிகக்கலங்கினன். கதிகலங்கவும் கண்ணது கலங்கிக், கண்ணீர் தாரையா வொழுகவுமாச்சுது! ஒழுகிய கண்ணீரைக் கண்டவன் கலங்கிப், பழுதானவார்த்தையைப் பரிகரித்தேனென்றான்.

வாக்குக்கதிஷ்டானம் வாணியேயானாலும், வாக்குப்பிறந்தது வந்நியிலிருந்தே! வந்நியிற்பிறந்த வாக்கை யறிந்தவர்க் கந்நியமானதோ வந்நியி லக்நி! அந்நியமில்லாத வச் " சித்-அக்கினி" தன்னைத் தன்னிலேவைத்து வளர்க்குமோர் சித்தரை வாக்கினால்சுட்டுப்பின் வாய்மதம்பேசினால், சுட்டசூடாறுமோ வாய்மதப் பேச்சினால்? உண்மையை நிந்தித்த வத் தன்னயவிஷமென்னுள் செய்ததோர் துவம்ஸத்தை யென்னென்று சொல்லுவேன்!

காட்டுத்தீபோ லது பற்றி யெரிந்தது; காடுவனமெல்லாமழித்துத் தஹித்தது; த்வக்குத்தோலெல்லாம் உருகவெரித்தது; மயிர்க்காலெல்லாம் ரணமாகச்செய்தது; பக்குவமான தாதுவையெல்லாம் கக்கிக்கொண்டெரித்தது அக்னித்திரவம்போல்; உள்ளமெரிந்தது உடலுமெரிந்தது;கள்ளமனமதுங்கருகவெரிந்தது! கொப்புளித்துள்ளே குமுழியிட்டது தொப்புளுக்கிடையே தோன்றிற்று முத்தாய். ஏழரைநாட்டுச்சனியன் என்னைப் படுத்திய பாட்டையென்னென்று சொல்வேன்! ஏழரைவருஷமாய் என்னைப்பிடித்துப் படுத்தியபாடெல்லாம் போதாதென்று உள்ளத்தில் நுழைந்து கள்ளத்தனமாய், மெள்ளவென்னறிவாம் தற்போதத்தையும் கொள்ளையிட்டது காண் கூ கூ! முறையோ!

அண்டத்தில் ஏழரைவருஷமது, ஆட்டின கூத்தெல்லாம் போதாதென்று, பிண்டத்திற்புகுந்து ஏழரை நாளில், கண்டங்கறுக்கவே செய்தது சனி காண். கார்க்கோடான் விஷந்தலைக்கேறிய நளன்போல்,உருத்தெரியாமலே செய்தனன் சனியெனை! ஏழரைநாளிலோரேழரைநாழிகை பட்டதோர் பாட்டையானென்னென்று சொல்லுவேன்! அதிலுமேழரை நிமிஷமெனக்கு ஏழரையுகமாத்தோன்றியதப்பா! தோன்றிய ஏழரை நிமிஷத்தி லொன்றைத்

† திருமயிலையில்.

தேர்ந்தெடுத் துள்ளே வைத்துக் கொண்டு நான், மாத்திரைக் கணக்கால் அளந்து பிரித்ததை, "அரைமாத்ரை" யளவு எடுத்துக் கொண்டேன். இந்த அரைமாத்ரை யளவாம் காலத்தை யன்றி, வேறொன்றையும் நான் கண்டறியேன் ஸத்தியம்!

நாடுநகர் வீடுவாசல் பெண்டுபிள்ளை யெல்லாம் விட்டு, ஓடித்திரியவே ஓட்டிய சனியது, பாடுபட்டு 'நான்' தேடிவைத்ததோர் பொருளை யெல்லாம் பரித்துக்கொண்டு, பரதேசியாயென்னைப் பாரினில் விட்டுப், பார்த்ததொன்றுமே போதாதென்று, ஓடுங்கையுமாத்துரத்தவெண்ணியென் னுள்ளறிவையுங் கொள்ளை யிடவே பார்த்தான். என் அன்பிற்கன்பாய் அறிவுக்கறிவாய், என்னுள்ளிருந்தே யென்னையாண்டான், என்துன்பைத் துடைத்துத் தூய்நெறி காட்டுவான், அன்பால் என்னஹத்தே வந்துமே யுதித்தான்.

'பதியிழந்து' நான் 'பாலனையிழந்து' மதியிழந்து பின் கதியுமிழந்து, பொருளிழந்து மருளிழந்து, புண்யபாபமிவையிழந்து, இழக்க வேண்டியதெல்லா மிழந்து, நானெனதெனுமோரறிவு மிழந்து, பித்துப்பிடித்துப் பேய்போலாகி; இத்தனை கோலமுங் கண்டுபின்னர் மத்துப் பிடித்து வெண்ணெய் கடையும், மாதிரிடை விளை யாடித்திரியும் வீணான வீணனும் வேணுகோபாலனை, வேண்டித் தவம் செய்ய வைத்தானே சனி. "கெடுத்தசனி கொடுப்பான்" என்பார்; "கொடுத்தசனி கெடுப்பான்" என்பார். "அரைமாத்ரை"யளவு காலமே வைத்து, அத்தனையுங்கெடச் செய்தசனியவன் கொடுத்ததோர் பாக்கியத்தைக் கண்டீரோ நீங்கள்! படுத்திய பாட்டையும் கேட்டீரோ! சொல்லுமின்.

*'பச்சிமவாஹிநி' யெனுமாறு; தலைகாலா மாறி யோடு மது. பச்சிமவாஹிநி யாற்றங்கரையினில் பாரதோ நிற்கிறான் கோபாலன். மாடுமேய்ப்பது அவன் தொழில்காண்; கையில் ஆயக் கோலுடையான். ஆயக்கோலை நீ ஆய்ந்து பார்க்கில், அதுவும் பல்துளைவேணுவே காண். வேணுவைக் கொண்டவன் கானத்தை மூட்டுவான்; விசுவமெல்லா மதில் லயிக்கச் செய்குவான். ஆடச்செய்வான் பாடச் செய்வான், கூடிக்கொண்டு குதிக்கவும் செய்வான். ஓடச்செய்வான் ஒடுங்கச் செய்வான், இன்னிசையுள்ளே பதியச்செய்வான், பதியச் செய்வான் இதயத்துள்ளே இன்னிசைநாதம் விளங்கச் செய்வான். விளங்கச்செய்வான் நாதம்உள்ளே நாதத்துள்ளே த்வனியை வைப்பான்! நாதத்தைக் கிளப்பி த்வனிக்கச் செய்வான், த்வனியினுள்ளே ஜோதியை வைப்பான்! த்வனியைக் கொண்டு ஜோதியை மூட்டுவான், ஜோதியினுள் மனப் பாம்பை வைப்பான்! ஜோதிக்குடத்திலே பாம்பை யடைப்பான், பிடாரனாய்த் தானுமே நின்றதை யாட்டுவான்! ஆட்டுவான் பாம்பை, மீட்டுவான் நாதத்தை; நாதத்திலிருந்துமே பின்,கானத்தைக்கிளப்புவான். கானத்தைக்கொண்டு ஜோதியை வளர்ப்பான், ஜோதியைக் கொண்டந்தப் பாம்பை வளர்ப்பான். குட்டிப்பாம்பைக் கோடியாச் செய்குவான், கோடிப்பாம்பை அனந்தமா நீட்டுவான். அனந்தமான பாம்பையாட்டி ஆதிசேஷனாச்செய்துமே வைப்பான்! சேஷநாகப் பணாமுடியில் தன் மாணிக்க வொளியை விளங்கவே வைப்பான். விளங்கவேவைப்பான் களங்கமதற்றால், உளங்களிப்பானவன் உள்ளிருந்துண்மையில்; களங்கமுற்றுத்தான் உளங்கசிந் தோமாகில், காளிங்கமர்த்தனம் செய்துமே வைப்பான்; செய்து வைப்பானவன், கொய்துமே வைப்பான், சங்கு சக்ர பாணியாய்த்தோன்றி; மதம்பிடித்துள்ளே ஹிதமழிந்தால் பின் கதையால்வதை

* குடகுமலையில் உதித்து மேற்கேயிருந்து கிழக்குமுகமாய் ஓடும் காவேரிநதி மைசூரில் ஸ்ரீரங்கப் பட்டணத்தண்டை வரும்பொழுது அந்தர்முகமாய்த் திரும்பிய யோகி மனம்போல், கிழக்கேயிருந்து மேற்குமுகமா யோடும் பாகத்திற்கு பச்சிமவாஹினியென்று பேர். அங்கே ஸ்ரீவேணுகோபாலர் ஆலயமொன்று இருக்கிறது.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 6 - JUL 1910 MADRAS.

யும் செய்துமே வைப்பான்; உருவ நாசமுற்றவர் தமக்குத் துருவன் முன்போல் வந்துமே நிற்பன். அருவநாச முற்றவர்க்குள்ளோ அன்பேயாகி யுடன் கலப்பன்.

உருக்குலைத்தென்னை யோட்டிவிட்ட சனியை யென்னசெய்வேனையகோ! கைப்பிடித்தடித்த பிரம்பு தடித்தால், பிரம்போ கண்டதண்டஞ் செய்வது? அண்ட பிண்ட மிரண்டினும் அவனே காரணகாரிய தோரணமாகுவன். பிரகிருதி விகிருதியா விளங்குநற் சனியைப், பாரினுள்ளோர் அறிவார்களோ!சுகிர்த-விகிர்தமிரண்டும்செய்யும் சூன்யபுருஷனை யாரறிவார்?

காலதத்துவத்தைக் கடந்துமே சென்றோர், காரண-காரிய தோரணை யறிந்தோர், ஆரணபூரண சாரணர்கள்தாம், பூரணதத்துவ ஞானியர்கள், காலவஞ்சனம் செய்தவர்கள், கர்மயோகத்தைக் கடந்தவர்கள், ப்ரபத்தி பூரணகாரணர்கள், அத்யாத்மயோக ஸம்யமர்கள்,—இவர்களையன்றி சனியின் பெருமையை இகத்தினுள்ளோர் அறிவார்களோ! மஹாத்துக்கள் புகழ் சனியின் மகிமையை மாதவர் அல்லோ உணர வல்லார்!

'அர்த்தமாத்ரை' யளவையுள்ளது பிந்துவிருக்கும் ஸ்தல மல்லவோ! அதினிற்பாதி அர்த்தபிந்து; அதனினும்பாதி ரோதினி! ரோதினியிற் பாதி நாதமாம்; நாதத்திற்பாதியே நாதாந்தம்! அதனிற்பாதி சக்தியென்பர்; அவளினும் பாதி வியாபிகா! அவளினும்பாதி ஸமானா; ஸமானாவிற்பாதி உன்மனா! உன்மனாவைக் கூறு போட்டுப் பார்க்கவோ, உண்மையில்அவளிடம் ஒன்றுமேயில்லை பாரப்பா! ஒன்றுமில்லாத உன்மனாவஸ்தை உபாதியற்றதென்று கொள்க! உபாதியற்ற உன்மனா தாண்டினால் நிருபாதியான 'காமகலா'. காமகலாவைக் கண்டறிந்தவர் கிருஷ்ணப்ரேமையில் ஒரு துளியறிவார். பலதுளி கூடிப் பெருவெள்ளமானால் ஸ்ரீகிருஷ்ணலீலை செய்யலாகும்! ஸ்ரீகிருஷ்ணன் லீலை செய்யப் பெற்றாலோ, ஹ்ரீசகோதரி யாம்தேவி பாதசேவை சித்திக்கும்கெட்டி, சின்மயானந்தரே யுள்ளறிவீர்! சுருதிலயந்தானே ஹிருதயமத்தியிலுள்ள தஹராகாசத்தில் மோன-கானமாகும்.

"மோனகுரு நாதர் நட மாடிவரு சீலமுறு
கானமிகு நாதவொலி கேட்டெழுந் துணர்வினுள்ளே
ஏனமிலா சோதியரு தரிசனங் காண்டு கொள்வான்
ஈனமிலா வானநிறை வாயுதனி லலைந் துரைந்து
தீனமுடை நெஞ்சனாய் வட்டமிட்டதனுளொரு சக்
[கரக் கோட்டை கட்டி
மானமுட னபிமான சாரமது உண்மையினி லுள்ள
[படி விட்டரைத்து
ஏனமிசை குயவனவன் கைப்பிடிக் கிசைந்து வனை
[திருகை மண்ணாய்
வானமிசை விரிசடையோன் கைப்பிடியில் அஹமு
[மவன் மயமேயாகி
மோனவுரு வானவொரு வதிர்சயம் காண்டுகொள்
[அன்பிலமுதே!"

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாயநம:.

## நமது கையொப்ப நேசர்க்கு அறிக்கை.

இந்த சஞ்சிகையோடு விவேகசிந்தாமணியின் 18 - வது வால்யம் துவங்குகிறது. 17 - வது வால்யத்துக்கு சந்தா பாக்கியுள்ளவர்களெல்லாரும் நாம் கோரியபடி சித்திரைமீ பிறக்குமுன்தானே அவரவர்பாக்கியை அனுப்பாமையால் தாமதம் நேரிடலாயிற்று. பாக்கியுள்ளவர்களுக்கு தனித்தனியே நச்சி நச்சிக் கடிதமெழுதுவது சாத்தியமாயில்லை. ஆகையால் ஒருதரம் எழுதப்பெற்றோர் இஃதையே ஞாபகமூட்டும் கடிதமாகக்கொண்டு பாக்கியை யுடனே அனுப்பிவிடக் கோருகிறோம். மாவில்லாமல் பணியார மாகாதுபோல் பணமில்லாமல் பத்திரிகையை அச்சிட்டு கைச்செலவு செய்துகொண்டு அனுப்புவது யாருக்கும் துர்லபமே. இதை யெல்லோரும் ஹிருதயத்தில் வைத்தொழுக வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

பத்திராசிரியர்.

# THE FUNCTION OF JOURNALISM.

"High is the function of journalisam. The Editor ought really to be the great Teacher of the general public, the holder of the torch of Truth and unbending chastiser of those who go astray." The high ideal desirable is thus defined by a celebrated writer:—

2. "Adherence to conviction can and should be taught by precept and example as not only a high principle but sound policy."

3. "The editor, the real 'Journalist' of the future, must be a man of such known integrity that he will be above the suspicion of writing or editing against his convictions. He must be known as one who would resign rather than sacrifice his principles to any business interest."

4. "*To sell the mind for money is a greater sin than to sell the body.*"

5. "*As to Papers*:—Above knowledge, above news, above intelligence, the heart and soul of a paper be in its moral sense, in its courage, its intergrity, its humanity, its sympathy for the oppressed, its independence, its devotion to the public welfare, its anxiety to render public service." And this soul becomes contaminated if it is sold to an individual, or a group, or a party or sect, or to the powers that be.

6. "*The Secret of Success*—To think rightly, to think instantly, to think incessantly, to think intensely, to seize opportunity when others let them go by—this is the secret of Success in Journalisim".

---

## பத்திரிகாதர்மம்.

"ஆசிரியர் விருது."

"ஆராலு மென்னை யமட்டவொண் ணாதினிச்
சீரார்பிரான் வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லாதினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே."—திருமந்திரம்.

"பணிந்து நின்றேன் பரமாதி பதியைத்
துணிந்துநின் றேனினி மற்றொன்றும் வேண்டேன்
அணிந்து நின்றேனுட லாதிப் பிரானைத்
தணிந்து நின்றேன்சிவன் தன்மைகண் டேனே."—
[திருமந்திரம்.

"பத்திரிகாதர்மம்" என்பது இத்தேசத்திற் புதிதாயுண்டான ஸ்தாபனமூலமா யேற்பட்டதென்பர். பத்திரிகைகள், அச்செழுத்தால் அச்சிடப்பட்டு எங்கும் வியாபித்துத்திரிவது சென்ற இருநூறு முன்னூறு வருஷங்களுக்குள் உண்டாகி விருத்தியானதே. பத்திரிகை புதிதாயுண்டானதாயினும் அது ஆத்மதர்மத்துக்குவேறானதல்ல. ஏனெனில் பத்திரிகையின் லக்ஷியத்தை யாராய்ந்தால் அதுவும் ஆத்மார்த்தமானதேயென்று நன்றாக விளங்கும். பத்திரிகாலக்ஷியத்தைப்பற்றி ஆங்கிலேயவித்வான் ஒருவர் எழுதிவெளியிட்டிருக்கும் உயர்பாவத்தை இதன் முகட்டில் இங்கிலீஷில் தானே அச்சிட்டிருக்கிறோம். அந்த மஹானுடைய லக்ஷியார்த்தம் பத்திரிகைகளுக்கு அமையப்பெறின், "பத்திரிகாதர்மம்" ஸநாதந தர்மத்தில் சேர்ந்ததாய்விடுகிறதென்பதிற் சந்தேகமில்லை.

பூர்வத்தில் ப்ரஹ்மவித்துக்கள் லோகோபகாரமாய்ச்செய்துவந்த கடமையெல்லாம்,பத்திரிகாசிரியர்கடமையாகக் குறித்திருக்கிறார்.



இது மெய்யே. ஏனெனில், பத்திரிகை வயிற்றுவளர்ப்புக்காக ஏற்பட்டதல்ல. பொதுஜனவிர்த்திக்காக வேற்பட்டதே. பொதுஜனக்ஷேமத்தை நாடி ஜனங்கள்பொதுவாய் நற்கதியடைய உழைப்பவர்கள் சமஷ்டி வித்தையில் தேர்ந்தவர்களாயிருக்கவேண்டியது அவசியம். வியஷ்டிபாவம் முதிர்ந்து பழுத்தாலன்றி சமஷ்டிபாவம்முளைக்காது. அஃதாவது ஜீவபாவம் பழுத்து சிவபாவம் உண்டாக வேண்டும். 'தேஹோஹம்' என்கிற பாவனையுள்ளவன் மூடன். அவன் "முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்கள்" இனத்தைச் சேர்ந்தவன். அது விட்டு "ஜீவோஹம்' என்னும் பாவம் சித்திக்கப்பெற்றவன்மனிதன். அஃதாவது அவித்யா சம்பன்னன். இவன் பேதபாவம் முதிர்ந்தவன். வியஷ்டிவித்தையொன்றே யிவனுக்குவரும். இதிலிருந்து முதிர்ந்து ஜீவேசுவரபேதம் 'பொய்' (அஃதாவது, 'கற்பனை') யென்று கண்டவன் சமஷ்டிவித்தைக்கருகனாகிறான். அவன் ஜீவபாவத்தைவிட்டு, "சிவோஹம்" என்னும் பாவம் நிறைந்தவனாகிறான். "சிவோஹம்" என்னும் எண்ணம் தடித்து உள்ளம் துடிக்க அது உயிர்பெற்றெழுமானால் அப்பொழுது"சிவோஹம்" என்னும் எண்ணம் மந்திரரூபமாக வுயிர்த்தெழுவதாகிறது. அப்படி உயிர்த்தெழுங்கால், 'சிவோஹம்' என்பதிலுள்ள எழுத்து, பதம் எல்லாம் நழுவிப்போய் அதன் நாதம் மட்டும் ப்ரமரகீதம்போல் (வண்டின் ரீங்காரம்போல்) மனத்திலிருந்து உள்ளத்துணர்வாய் ஒலித்துக்கொண்டிருக்கும். அந்தஸ்திதிக்கு வந்துவிட்டால் அதற்கு "ஸோஹம்பாவனை" யென்று சொல்கிறது.

கலை, தத்துவம், புவனம், எழுத்து அல்லது வர்ணம், பதம், மந்திரம் என இவ்வாறும் ஷடத்துவாக்கள். உலகானுபவம் இப்படி அறுவகைப்பட்டு அறுவிகாரங்களால் விளங்கும். இதில் எழுத்து, பதம், மந்திரம் இம்மூன்றும் "சொல்லிலக்கணம்"— வாக்கின் லக்ஷணம் என்று சொல்லலாம். புவனம்,தத்துவம், கலை யிம் மூன்றும் "சுவடியிலக்கணம்"—முதல் மூன்றும் பூரணமாய் விளங்குவதற்கு ஆதாரபூதமாக விருப்பது சொல்லாம். சொல், சுவடி—இந்த இரண்டும் வியஷ்டி, சமஷ்டியென்னும் பாவங்களுக்கு அறிகுறியடையாளமாக நிற்கின்றன. சொல் அல்லது வாக்கு என்பதில் எழுத்து, பதம், மந்திரம் என்னும் மூன்றுறுப்புகளு மமைந்திருக்கும். உதாரணமாக அ என்னும் முதலெழுத்தை யெடுத்துக்கொண்டு பார்ப்போம்:—

(1) அ என்பது வடிவில் முதலெழுத்து. (எழுத்திலக்கணம்).

(2) அ என்பது ஒலிக்கில் ஸ்வரம் ஆகிறது. (இது அ என்பதின் பதார்த்தம் அல்லது சொல்லிலக்கணம்).

(3) அ என்னும் ஸ்வரத்தை நீட்டிக்கொண்டேபோனால் அது அனுஸ்வாரமாம் மோனத்திற் புகுந்து "அம்" என்னும் மந்திரமாகும்.

இந்த அம் என்னும் மந்திரத்தின் திரிவிதமான வியஷ்டிலக்ஷணத்தை, சமஷ்டிலக்ஷணமாம், புவனம், தத்துவம், கலை யென்னும் மேலத்துவாக்கள் (மேலேபோம்வழி) மூலமாகப் பார்க்கில் அது எங்கே போகிறது பார்ப்போம்:—

அம் என்னும் மந்திரத்தை உள்ளபடி தியானித்து அதன் தியேயாகாரத்தைக் கிளப்பினால் அது புவனங்களையெல்லாம் கரைத்து ஒன்றாக சமஷ்டிரூபப்படுத்தினது போல் 'அமிர்தாகர்ஷணி' யென்னும் அதிர்ஷ்டானதேவதையைக் காட்டிவிடும். (இது தான் புவனலக்ஷணம், அஃதாவது 'அம்' என்பதின்லோகார்த்தம்).

புவனத்தில் (லோகாந்தரத்தில்) அமிர்தாகர்ஷணியாக விளங்கும் 'அம்' என்னும் லோகாந்தரபாவத்தைத் தத்துவார்த்தமாகப் பார்க்கில், அது நாதமுதல் பிருதிவியீறாகவுள்ள 36

தத்துவங்களும் பொருந்தப்பெற்றதாக விருக்கக் காணலாம். இது யோகிகளுக்கே சாத்தியமானதால் இதைப்பற்றி யிங்கு அதிகமாய் விவரிக்க நிமித்தமில்லை.

தத்துவங்கள் 36-ம் 'அம்' என்னும் மந்திர பீஜத்தில் அடங்கி யிருக்கக்கண்ட யோகி அவைகளை யெல்லாம் ஒன்றுகப்பாவித்து அதன் மூலத்தைவிசாரிக்கப்புகுங்கால் தத்துவார்த்தத்தில்(தத்துவலக்ஷணத்தோடு 'துவந்துவமாய்' - 'அது நீ' என்று இரட்டையாய்ஜோடி சேர்ந்துவிளங்கிய)அம் என்னும் ஸ்வரானுஸ்வரங்களிரண்டும் "சுருதி-லயம்" என்கிற சமஷ்டி தத்துவமாகமாறி அதன் த்வந்த்வ நிவர்த்தியில் நிவிர்த்திகலையாகத் தரிசனமளிக்கும்.

இந்த நிவிர்த்தி கலையைப் பிடித்து ஆராய்ந்தால் இது ஐந்துகலைகளாகப் பிரிந்துகாணும். அஃதாவது (1) நிவிர்த்தி, (2) பிரதிஷ்டை, (3) வித்தை, (4) சாந்தி, (5) சாந்தியதீதை.

இந்த ஐந்துகலைகளும் சமஷ்டிஸ்வரூபமேயான "ஆதிபகவன்". இவ்வளவையும் சித்த புருஷரும், தத்துவஞானியுமான தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் ஈரடிக்குறள் ஒன்றில் கூடமாய்ச் சொல்லி முடித்துவிட்டார்.

" அகரமுதல வெழுத் தெல்லாம்
ஆதிபகவன் முதற்றேயுலகு."—திருக்குறள்.

உலகிலுள்ள கிரந்தங்களெல்லாம் அமுதலான வெழுத்துக்களாலாகி அவ்வெழுத்துக்களின் விகாரமேயன்றி வேறல்ல. அப்படியான அந்த கிரந்தங்களுக் கெல்லாம் முதலாக (மூலகாரணமாக) விருப்பது "அகரம்" (அ-என்னும் சப்தம்: இதை ஸம்ஸ்கிருதத்தில் ஸ்வரம் என்பர்). இது வியஷ்டிபாவம்.

அஃதேபோல, புவனமுதலான சமஷ்டிபாவ சிருஷ்டிக ளெல்லாம் "ஆதிபகவன் முதற்றே"—ஆதியாயுள்ளபகவானை முதலாக(மூலகாரணமாக) வுடையது. இந்த ஞானம் பெற்றவருடைய தன்மையைத் திருமந்திரம் ஓதிய திருமூல தேவர் " அணைந்தோர் தன்மை " யென்னும் தலைப்பின்கீழ் சொல்லி யிருக்கிறுர். அதிலிருந்து இங்கே நாமெடுத்துக்கொண்ட "பத்திரிகாதர்மம்" என்னும் சமஷ்டிவித்தை லக்ஷணத்துக்குப் பொருந்த, அதை ஆச்ரயிப்போர் குணம் விளங்க, இரண்டு மந்திரத்தை முதலில் எடுத்தெழுதி யிருக்கிறோம்.

இங்கிலீஷ் குறிப்புப்படி, பத்திரிகாசிரியர்,—

(1) ஸத்தியப்பிரகாசம் என்னும் தீவர்த்தியைக்கொண்டு உலகவாசனை படிந்துள்ளார் உள்ளத்திலுள்ள அந்தகாரத்தைப் போக்குபவரா யிருக்கவேண்டும்.

(2) அவர் உள்ளத்துணர்ந்த உண்மைக்கு விரோதமாக நடக்கக்கூடாது. விரோதமின்றி உலக வழியிலும் நடந்துகொள்ளலாம். நடந்துகொள்ளவேண்டு மென்று உலகுக்கு உதாரணமாயிருந்து அந்த வுண்மையைப் போதித்து வரல் வேண்டும்.

(3) "எடிடர்" என்னும் சப்தத்துக்குரிய மஹான், பத்திரிகாசிரியர்தொழிலில், "ஸத்யம் வத: தர்மம்சர" என்னும் வாக்கியங்களுக்கிலக்காய், உள்ளத்திற் கள்ளமின்றி யொழுகவேண்டும். இந்த ஒழுக்கமில்லார் 'எடிடர்' என்னும் திவ்யநாமத்துக்குரியராகார். அஃது " ஆச்சாரியாபிஷேகத்துக்கு " சமானமான ஒரு உந்நத பதவி. பிழைக்க வழியற்றவர்களுக் கெல்லாம் புகலிடமாக அதை யெண்ணுவது கலியின் கூத்தென்று சொல்ல வேண்டுமே யொழிய ஆச்சாரிய தர்மத்தில் சேர்ந்ததல்ல.

'தேஹ வியபசாரத்திலு மனதை வித்துப் பிழைப்பதாம் வித்யா வியபசாரம் கோடியது' என்று இங்கிலீஷ்குறிப்பில் ஆங்கிலேயர்தாமே சொல்லியிருக்கிறுர்.

நம்மவர்களுக்கு ஆங்கிலேயரிடத்தில் விளங்கும் ஸநாதனமான உயர்பாவங்களும் உத்தம குணங்களும் நன்னடத்தைகளும் எளிதில் படிவதில்லை. அவர்களிடத்துள்ள குற்றங்



கோணல்களையே யெளிதிலறிந்து கைப்பற்றுகிறுர்கள். அல்லது அதற்காக அவர்களைத் தூஷிக்கிறுர்கள். தூஷணையும் பூஷணையும் அந்தர்லக்ஷியம் ஸரியாக ஏற்பட்டவர்களுக்கு ஈஷணையொக்கு மாதலால், அவர்கள் அதை லக்ஷியம் செய்யார். மற்றவர்கள் உலகவாசனை படிந்துள்ளகாரணத்தால் தூஷிக்கவும் பூஷிக்கவும் அநதிகாரிகளாயிருக்கிறுர்கள்.

(4) பத்திரிகைகளுக்கு சன்மார்க்கமொன்றே நன்மார்க்கம் என்கிறுர். அஃதொன்றே பத்திரிகைக்கு உள்ளமும் உணர்வுமாயிருக்கிறதென்கிறுர். பரோபகாரமே யுருவெடுத்தாற்போலு மிருக்கவேண்டிய பத்திரிகாலக்ஷணம்,பணத்துக்கு விற்றுவாங்கக்கூடியதாயிருந்தால், அதற்கும் வியபிசார தோஷம் நேரிடுகிறது. வியபிசாரத்துவம் சண்டாளத்துவத்திலும் கொடியது.

(5) கடைசியாக, 'பத்திரிகாதர்மம்' தலையெடுத்து விளங்க, பத்திராசிரியர் உண்மையிற் றேர்ந்த தியானயோகியாக விருக்க வேண்டு மென்கிறுர். அவர்,

(i) சரியாக (ஸ்வதர்மத்துக்குக்கேடுவாராமல்) நினைக்க (சிந்திக்க)க் கற்றிருக்க வேண்டும். அஃதாவது பாவனுவிதியறிந்து பாவிக்க வேண்டும். மனோதர்ம மறிந்து சித்தவிருத்தி நிரோதனம்செய்து நினைக்கத்தக்கவரா யிருக்க வேண்டும்.

(ii) காலதத்துவ முணர்ந்து (காலதாமஸமின்றி) சிந்திக்க வல்லவரா யிருக்கவேண்டும்.

(iii) தீராச்சிந்தனை யுள்ளவரா யிருக்க வேண்டும். தியானயோகத்திற் பழகியவர்க்கன்றி இது சாத்தியமில்லை.

(iv) ஆழ அமர்ந்து சிந்திக்கவேண்டும். சித்தவிருத்தி நிரோதனத்தா லன்றி இது வேறு விதமாக சாத்தியமில்லை.

(v) சந்தர்ப்பங்களை நழுவவிடாது பிடிக்க வல்லவரா யிருக்கவேண்டும். இந்தவல்லமை பூரணமாயிருந்தால் அவரையே திரிகாலஞானி யென்று சொல்லுகிறது. இந்தவிதமாகப் பஞ்சலக்ஷணத் தோடு பொருந்திய தியானசக்தி யிருந்தால், அதுவே, 'பத்திரிகாதர்மம்' தலையெடுக்கச் செய்வதற் குகந்த உண்மையான இரகஸிய ஸாதனமா மென்கிறுர்.

இப்படியாகப் பத்திரிகை நடத்தவும் பத்திரிகாசிரியரா யிருக்கும் " ஆச்சாரியபீடம் " வகிக்கவும் உரியவர், ஆங்கிலேயரின் உத்தமக் கொள்கைப்படியே பார்க்கில், உண்மையிற் றேறிய யோக தற்பரனு யிருக்க வேண்டும் என்று உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நன்ருக விளங்குகிறது.இந்தயோக்யதைபெற நாம் பதினெண்வருஷமா யுழைத்துப் பத்துவருஷமாய்ப் பலதீக்ஷைகள் பெற்றுக் கடைசியில் பரமன் கருணையால் நிர்வாணதீக்ஷையும் அளிக்கப் பெற்றேம். இப்படி தீக்ஷைகளி லெல்லாம் பெறற்கரியதாம் நிர்வாண தீக்ஷையளித்த பரமனைப்போற்ற, திருமந்திரத்தில் சொல்லிய மந்திரங்கள் இரண்டொன்றை யெடுத்துக்கூறி நமது உட்கருத்தை விளக்குவதோடு இதனை முடிப்போம்.

" மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யர்தே புலம்புவர்
தேயமு நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னுட்டிடைக் கண்டு கொண்டேனே."

இதற்குச் சாதன மென்ன வெனிலோ, கேண்மின்:—

" மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது வாய்வு
மனவிரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்துரை மாண்டது முத்தியே."

"உண்ணின் றொளிரும் உவப்பிலி நாதனைக்
கண்ணின் றளிதரும் கருணையங் கடலை
எண்ணின் றெளியரைக் காக்குமென் னீசனைப்
பண்ணின்று பாடப் பணியது வாமே."

இப்படிச் செய்யும் பாவயோக முதிர்ச்சியில் பாவசமாதி சித்திக்கும்போது கருணையங் கடலைக் கண்ணாரக் காணலாம். உள்ளம் புகுந்தானை, உவப்பிலி நாதனைப் போற்றும் வழியெதுவெனில், இது:—

" புகுந்து நின்றானெங்கள் புண்ணிய மூர்த்தி
புகுந்து நின்றானெங்கள் போதறி வாளன்
புகுந்து நின்றானடியார் தங்கள் நெஞ்சம்
புகுந்து நின்றானையே போற்று கின்றேனே."

" பூதக்கண் ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக்கண் ணாடியில் வேறே வெளிப்படும்
நீதிக்கண் ணாடி நினைவார் மனத்துளன்
கீதக்கண் ணாடியிற் கேட்டுநின் றேனே."

—திருமந்திரம்.

ஓம் தத்சத்.

---

## " They Only Live Who Dare."

' Stand upright, speak thy thought, declare
The Truth thou hast that all may share;
Be bold, proclaim it everywhere.
They only live who dare."

*H. E. Sir George Clarke's exhortation to the Students' Brotherhood, Bombay.*

### அஞ்சா நெஞ்சுடையவரே வாழ்பவர்.

பம்பாயிலுள்ள மாணவர் சகோதர சங்கத்துக்குத் தலைவரான ஸர் நாராயணராவ் சந்தரவர்க்கர் அவர்களுக்கு "நைட்" பட்டம் அளிக்கப் பெற்றதைப்பற்றி அவர் அக்கிரசனாதிபதியாக விருக்கும் அச்சங்கத்து மாணவர், அவருக்கும் அவருடைய பத்நியாருக்கும் சந்தோஷமுகமன் பத்திரிகை யொன்று வாசித் தார்கள். அப்பொழுது பம்பாய் கவர்னரான கனம்பொருந்திய ஸர் ஜியார்ஜ் க்ளார்க் அவர்கள் அக்கிரசனாதிபதியாக வீற்றிருந்து பேசியதில் அம்மாணவர்களுக்குப் புத்திமதி கூறிச் சில நல்வசனம் கூறினர். அவற்றில் மேற்குறிப்பிட்ட இங்கிலீஷ் கவியிலடங்கிய பொருள் மிகவும் மேலானதும் அருமையாகவுமுள்ளதுபற்றி அஃதை அப்படியே யெடுத்து வரையலானோம். அதன் கருத்து யோகசாஸ்திரத்தின் மூலக் கொள்கையா யிருப்பதால், அது நாம் அறிந்ததே யாயினும், ஆங்கிலேயருடைய உந்நத பாவமும் நம்முடைய உந்நத பாவமும் ஒன்றே யென்பதை விளக்குவதற்கு இது மிகவும் ஏற்றதா யுள்ளதுபற்றி இங்கு விசேஷமா யெடுத்துக் கூறலானோம்.

அதன் கருத்து என்னவெனில்:—

" நிற்க நிமிர்ந்து நேர்வழிதன்னில்
உன்னிய தொன்றை யுண்மையாப் பேசுக!
தர்க்கம தன்றியே தானுண ருண்மையைப்
பலரு மறியவே பறையறைந் தோதுக!
திடனுறு நெஞ்சத் தடல்மிகு தீரனாய்
உண்மையை யொளிக்கா தோதுக வெங்கும்!
அஞ்சா நெஞ்சுடை யவரே யுலகில்
நஞ்சா வருதுயர் வென்றுவாழ் பவராம்."

இது கூடியவரையில் இங்கிலீஷ் மூலத்தின் கருத்தையொட்டி அதிலடங்கிய உண்மையை உள்ளபடி வெளியிடுவதா யிருக்கிறது. இஃதுடன் ஸ்வாமி விவேகாநந்தர் செய்தருளிய சந்நியாசி கீதத்தின் மூன்றாம் பாடலின் பொருளை யுற்று நோக்கி யுணர்க:—



" எதற்கும் அஞ்சா இயல்புடைத் துறவீ
இடுக்கண் மேன்மேல் அடுக்கும் பொருட்டுச்
சிமிட்டிச் சிமிட்டிச் சிற்றொளி காட்டி
இட்டுச் செல்லும் துட்டத் தீப்பேய்
அந்த காரம் அடியொடு தொலைத்தி.—
ஆ! ஆ! அதுவே ஜீவாத் மாவைப்
' புநரபி ஜநநம் புநரபி மரணம் '
என்னும் இவற்றிற் கீர்த்துச் செல்லும்.
தான்அடங் கொருவன் தான்அடக் குவன்எலாம்.
ஈதறிந் தென்றும் இடம்கொடா திருத்தி " *

---

## Easy Lessons in Economics.

### குடிவாழ்க்கை.

பாடம்—1. செல்வம்.

(*Specially written for the Vivekachinthamani.*)

செல்வம் என்பது என்ன வென்ற கேள்விக்கு விடை பகருவது எளிதான தென்று யாவரும் எண்ணக்கூடும். செல்வம், தனம் என்றபதங்களுக்குப் பணமொன்றையே அநேகர் பொருளாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஜனங்களுடைய திரவியத்தை அளவிடும்போது இத்தனை இலக்ஷம், இத்தனை ஆயிரம் ரூபாய், அல்லது இத்தனை ரூபாய் பெறும்படியான பூமிமுதலியவை யென்றே அளவிடுவது சகஜம். செல்வம் என்னும் பொழுது ரூபாய் முதலிய நாணயக்குவியல்களே நம்முன் வந்து நிற்கும். மேலும் பணமொன்றுண்டானால் மற்ற எல்லாப் பொருள்களையும் நாம் கைக்கொள்ளலாம்.

உணவு, ஆடை, ஆபரணம் வீடுமுதலியனவாகிய நம்முடைய ஜீவனத்திற்கும் சௌக்கியத்திற்கும் அவசியமான சகல பொருள்களும் பணமொன்றிருந்தால் நம்முடைய கையிலிருப்பனவாகும். பணத்தினால் எவ்விஷயத்தையும் நிர்வகிக்கும் சாமர்த்தியத்தை நாம் பெறுவதைக்கொண்டு அதை நாம் சம்பாதிக்கப் பலவழிகளில் பாடுபடுகிறோம். பணத்தை யொரு ஆதாரக்கருவி யென்று நினையாமல் அதையே அனுபவயோக்கியமான ஓர் பொருளென்று எண்ணுவது வழக்கம்.

ஆனால் செல்வத்தின் ரூபமானது மனிதருடைய பலவகையான சுக சௌக்கியங்களுக்கு யோக்கியமானவைகளும், ஒருவரிடத்திலிருந்துமற்றொருவர் கைமாற்றுதலுக்குத் தகுந்ததாயுமுள்ள எல்லாப் பொருள்களு மாகும். தானிய தவசவகைகள் நமக்குணவாகவுதவி, தகுந்த விலையாவது ஈடாவது நாம் கைமாற்ற விரும்பும் பொழுது கொடுக்கக் கூடியதாயிருந்தால் செல்வத்தில் சேருகிறது. மேற்படி தானியவகைகளைப் பயிர்செய்ய அவசியமான கருவிகளும் கால்நடைகளும், வீடுமுதலிய கட்டடங்களும், யந்திரங்களும், தொழிற்சாலைகளும், கப்பல், தோணிமுதலிய வியாபார ஸ்தாபனங்களும் செல்வமேயாகும். உணவுக்குரிய பொருள்களும், நம்முடைய சுகத்திற்கு அவசியமான வீட்டிலுள்ள சகல பொருள்களும் செல்வத்தின் ரூபபேதங்களே. பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படும், பொன், இரும்பு, நிலக்கரி முதலிய உலோகங்களும் நமக்கு நன்மை பயப்பனவாயிருப்பது பற்றியும் கைமாற்றும் பொருளாயிருப்பது பற்றியும் செல்வத்தில் சேர்க்கத் தக்கனவே என்பதில் சந்தேகமில்லை. ஒரு அணா நிக்கல் நாணயம் வெளிப்பட்ட சமயத்தில், அதிலுள்ள சக்கரவர்த்தியின்தலை, எழுத்துமுதலியவைகள் தேய்வினால் மறைந்து போனால் அவ்வுலோகமாகிய நாணயம் ஒரு பைசாவுக்குக்கூட விற்க லாதே என்று கூறினார்கள். இங்கிலாந்தில் சில வருஷங்களுக்கு முன் பழைய தபால் ஸ்டாம்புகளை ஏலம்போடுகிறவர்களான ஒரு கூட்டுவர்த்தக சங்கத்தார், மோரிஸ் தீவில் 1854-ம் வருஷத்தில் உபயோகப்படுத்தின ஒரு செண்டு (சதம்) ஸ்டாம்பை

* இது ஸ்ரீமத் ம - கோபால கிருஷ்ணய்யர் பிரசுரித்துள்ள சிறு புத்தகத்திலிருந் தெடுக்கப் பெற்றது.

ஏலத்தில் விட்டபொழுது "நாலாயிரம்பவுனுக்கு" ஒருவர்வாங்கினதுடன், தனக்கு அது சகாயமாகவேகிடைத்ததென்று கருதினாராம். ஆகையால் ஒவ்வொரு பொருளுக்கும் மதிப்பே விலையாகிறதன்றி அப்பொருளிலடங்கியிருக்கும் விலை மதிக்கத்தக்க உலோகமாவது மற்றப் பொருளாவதன்று. இப்படியில்லாவிட்டால், வயிரக்கல், கெம்பு முதலிய நவமணிகளுக்கு விலை யேறுவதில் நியாயமில்லை. பணமொன்றைக்கொண்டு இவையனைத்தையும் நாம் அடையலாமாயினும் பணமே சுகப் பொருளன்று. சுகத்தைத் தரத்தக்க மற்ற எல்லாப் பொருள்களையும் அதன் மூலமாய்ப் பெறுவது எளிதென்பதை யுணர்ந்தே, அதைத்தேடி திரைகடலோடியு மடைந்து நாளாவட்டத்தில் அதையே சுகசௌக்கியத்திற் குரியது போல் எண்ணி அதன் மாய்கைக்கு மனிதர்கள் உட்படுவது சகஜம். பணமொன்றே செல்வமென்று கருதுவது பிழையே யாயினும், பணமும் செல்வத்தில் சேர்ந்த பல வற்றி லொன்றென்பதில் சந்தேகமில்லை என்று கூறத்தகும். இப்படியே மனிதர்களுக்கு அனுபவயோக்கியமும் அவசியமுமான எல்லாப்பொருள்களும் செல்வமாகமாட்டா. எப்படி யென்றால்:—காற்றும் தண்ணீரும் நமக்கு அவசியமான பொருளாயினும், அவைகளைப்பணங்கொடுத்துவாங்குவது சாதாரணமாயில்லை. பெரிய நகரங்களில் தண்ணீருக்கு வரி என்கிற விலையும், சமுத்திரங்களில் முத்து முதலியவைகளுக்காக முழுகுகிறவர்கள் அச்சமயத்தில் எவ்வளவு விலை கொடுத்தாயினும், காற்றைவாங்க சம்மதிப்பார்களாயினும், இவைகளுக்காக பிரபஞ்சமொத்தத்தில் பார்க்கும் பொழுது விலையில்லையாதலின் செல்வத்தில் சேராதென்றே கருதலாம்.

ஏ. என்றவன் பி. என்றவனுக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்க, பி. என்றவன் அதை கைமுதலாகக் கொண்டு வியாபாரஞ் செய்தால் மொத்தத்திலுள்ளது ஆயிரம் ரூபாய் தானேயன்றி, ஏ, பி. என்கிற இருவருக்கும் அத்தொகை வருமானத்திற்குக் காரணமாயினும், முதல் இரண்டாயிர மாகாதன்றோ! ஒரு தோட்டத்தில் வெட்டப்பட்ட கிணற்றில் ஜல ஊற்று ஏற்படாததைக்கொண்டு அதன் சொந்தக்காரன் அடுத்த தோட்டத்திலுள்ள கிணற்றுத் தண்ணீருக்கு விலை கொடுத்து வாங்குகிறான். தண்ணீருள்ள கிணற்றின்சொந்தக் காரனுக்கு அக்கிணற்று நீர் செல்வமானாலும் அதனால் தேசத்திற்கு செல்வப் பெருக்கமுண்டாகிறதில்லை. ஒரு தேசத்திலுள்ள இருவர்களில், ஒருவர்பணம் மற்றொருவருக்கு மாறுவதால் தேசமொத்தத்திற்கு செல்வத்தில் மாறுதலொன்றுமில்லை. நம்மிடத்திலுள்ள இருபெட்டிகளில், ஒன்றினின்று மற்றொன்றில் பணத்தை மாற்றிவைப்பதினால், நம்முடைய தொகை எப்படி அதிகப்படுவதில்லையோ அப்படியே ஒருவனுடைய பூமி, வீடு முதலியவைகளுக்கு அதிக விலை கொடுத்து வாங்குவதினால் ஒருவனுக்கு நஷ்டமும் மற்றவனுக்கு இலாபமுமேயாயினும், தேசமொத்தத்திற்கு இலாபநஷ்டமொன்று மில்லை யென்றே கூறலாம்.

ஒரு தேசத்தின் கண்ணுள்ள செல்வம் பலவகைப்பட்டது. மனிதனுக்கு சுகத்தையும் சௌக்கியத்தையும் தரத்தக்க பொருள்களும் மனோவிருப்பத்தைப்பூர்த்திசெய்யத்தக்க பொருள்களும், வேண்டுமளவு இலவசமாய்க்கிடைக்காமல் விலை கொடுத்து வாங்கும் நிலைமையிலுள்ளயாவும் செல்வமாகவே கருதப்படுகிறபடியால், ஒவ்வொருதொழிலுக்கு வேண்டிய கருவிகளும் செல்வமேயாகும். இவ்விதமான செல்வம் யாவருக்கும் ஒரேயளவாக அமைகிறதில்லை. சிலருக்கு மிகுதியாகவும் பலருக்கு ஜீவனத்திற்குப் போதுமான அளவாகவும், அநேகருக்கு அதற்குங்குறைந்து மிருக்கின்றது. விசாரிக்குங்கால் செல்வவிஷயத்தில் ஏற்பட்டிருக்கிற ஏற்றத்தாழ்வுகள் கடவுளின்



காரியமல்லவென்றும், முன்ஜன்மத்தின் தீவினைப் பயனல்லவென்றும், சிலருடைய பேராசையினாலும் மோசக்கருத்தினாலுமுண்டான தீங்குமல்லவென்றும், தனவான்களாயிருப்பதும், தனமின்றிவருந்து வதும் நாமே செய்துக்கொள்ளும் காரியமென்றும் மேனாட்டுநாகரீகத்திற் பயின்ற பலமேதாவிகளும் கருதுகிறார்கள். அப்படிக் கருதாவிடில், சிரமப்பட்டு தனத்தைத்தேடயாவரும் முன்வராரென்பதில் தடையில்லை. ஆகையாலன்றோ ஒருவன் சம்பாதித்த தனத்தை அவனே வைத்து ஆண்டு அனுபவிக்க வேண்டுமேயல்லாது அவனை மீறி பிறர் அதைப்பிடுங்கிக்கொள்ளுதல் நியாயமன்றென்றும், அவ்விதமாக அநியாயஞ்செய்வோர் தண்டனைக்குள்ளாவாரென்றும் எத்தேசத்திலும் ஏற்பட்டிருக்கிறது.

ஒருவன் தேடிய பொருளைத் தன் இஷ்டப்படி செலவிடத் தேடியவனுக்கு அதிகார மிருக்கவேண்டியது அவசிய மாகையால், அவன் அதை அனுபவித்தாலும், புதல்வர், இஷ்டமித்திரர்களுக்குத் தானுள்ளபோதும், தனக்குப் பிற்காலத்திலும் கொடுத் துதவினாலும், தர்மத்தில் செலவிட்டாலும், வீணாக்கினாலும், அதைத் தடுத்து உரிமையைக் குறைப்பது நியாயமாகமாட்டாதென்றுஎண்ணப்படுகிறது. மனிதர்களெல்லாம் மற்ற பல விஷயங்களில் ஒத்திருக்கும்பொழுது, சிலர் சிரமப்பட்டுத்திரவியத்தைத் தேடாமல், பிதா தனக்கு வைத்ததென்றும், தாயாதிகளிடத்தினின்றுகிடைத்ததென்றும் வைத்துக்கொண்டு சுகமாயிருக்கையில் பலர்வருந்துவது நியாயமாகுமா? தங்களுடைய பிதாமுதலியோர் திரவியத்தைச்சேகரித்துவைக்காமற் போன குற்றத்திற்காக அவர்கள் வருந்துவதில் பிரயோஜனமுண்டா? தான் தேடிய திரவியமானது தனக்குப்பிறகு பிரியமான புதல்வர் முதலியோருக்குச் சேராதென்றால், ஒவ்வொருவனும் தான்தேடியதைத் தன் ஆயுள் நாளிலேயே வீணாக்கிவிடக் கருதுவானன்றோ? தவிர தனக்கு வேண்டியமட்டும் சம்பாதித்த பின் அதிகமாய்த்தேடுவது கண்டவர் கைக்குப் போவதாயிருந்தால் ஒருவனும் அதிகமாய்ச் சம்பாதிக்க ஆவல்கொள்ளான். ஆகையால் அவனவன் தேடிச்சம்பாதித்த பொருளை அவனவன் ஆண்டு அனுபவிக்கவும், இறந்த பின்னும் அவனிஷ்டப்படி அதைச் செலவழிக்கவும் உரிமையைப்பெற்றிருக்கின்றான். இல்லாவிட்டால் மனிதர்களுக்கு செல்வவிருத்தியிலுள்ள அவா மழுங்கிப்போம். ஒருவரும் செல்வ விருத்திக்கான மார்க்கத்திலிறங்கமாட்டார்கள்.

T. C. வேங்கடராமண ஐயர்.

---

## THE RECOGNITION OF THE ETERNALLY FEMININE, OR, THE CENTRAL WILL.

## The Marriage of Uma at Tiru-mayilai.

### A CLUE TO THE REALISATION OF THE MEANING OF "*BINDU*."

(A Sequel to the Study of Temple Traditions).

* "*Ichcha Sakti Umakumari*".—*Siva Sutra.*—

"Nature & Wisdom always say the same thing."—*Juvenal.*

* "Whatever we call it, we mean that it is the Feminine Principle, and instinctively look upon it as self-procreative. The Real we do not know in any other form than that of the feminine or central will.... As in physics energy is the only thing known, so in reality the Feminine is the only life known or definable. Hence the Feminine or central will is by necessity the central principle of all philosophy, & is the Monism we all search for.— " 'The Eternally Feminine.'

குண்டலிப்பாம்பந்த ஜோதிக்குடத்தில் குதித்துக்குதித்து ஆடுதுபார் !
குண்டலிப்பாம்பது குதித்தாட குணத்திரியங்களும் ஆடுதுபார் !

8. குண்டலிநிதரிசனம் செய்து கொண்டு அதிலிருந்தபடி மோககாநத்தில் லக்ஷியத்தைக் கூட்டும் வகையுணர்த்தல். (திருமயிலைக் கோயிலில் இது "நடராஜாதரிசனம்" எனும் உற்சவமாய் நடத்தப்படுகிறது.)

(8) ஆடுதுபாராதோ குண்டலிப்பாம்பதை யடக்குவாருண்டோ சொல்லுநீ !
பாடுதுபாருள்ளே ப்ரேமகானம் !
படத்தைத்தூக்கி நின்றாடுதுபார் !
ஆடுதுபாரந்தக் குண்டலிப்பாம்பு அசைவற்றுநின் றாடுதுபார் !

9 சமஷ்டிபிந்துவைக் காட்டி வேதமஹாவாக்கியங்கள் அதில் ஒடுங்கி நிற்பதையுணர்த்தல்.—(இதுவே கோயிலில் ஸ்வாமி திருமணக்கோலத்தோடு கைலாஸபதியாகக்கொடுக்கும் கைலாசவாஹனக்காட்சி.)

(9) அசைவற்றுநின் றாடுமனமே பிந்துரூப மென்றுசொல்லு !
அசைவற்றுநின் றாடுமனத்தை அறிவாலன்றி யறிவதுண்டோ !
அசைவற்றாடு பம்பரம்போல் இசையுற்றாடிற்சோதிமனம்
பசையற்றதுமுன் விஷயமற்று வேதாந்தமோனமாய்த்தான் விளங்கும்.

10. சமஷ்டிபிந்துவின் த்ரிபுடிராஹிதமே துரியபிந்துவென்றும் சமஷ்டிபிந்துவின்சலனரூபமே மாயை மயக்கத்துக்குக் காரணமென்று முணர்த்தல்.—(இதுவே கோயிலில் அதிசிரேஷ்டமான 'பள்ளியறைத்தீபாராதனை' யுற்சவமாம்.)

(10) வேதாந்த மோனமாய் விளங்குயர் மனத்தை ¶
நாதாந்தரூபமா யஹம்விண்டு கண்டால் $
நாதவடி வானமஹா மந்திராதி சக்தியின்
வேதவடிவதே பிந்துரூபம்! வாதனோவாலது போதையாமே !

¶ இஃதையே 'உன்மனிபாவம்' என்றும், 'ஆத்மபாவம்' என்றும் சுருதிகள் எடுத்துச்சொல்லும்.

$ "அஹத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்" என்றும் திருமந்திரோபதேசத்தை யுன்னிப் பின்னும், "அறிந்த அறிவழியவேண்டும், அப்புறந்தானே யாசுகம்" என்ற ஆநந்தத்தாய்மொழியின் உண்மையை ஆய்ந்தோய்ந்துணர்ந்துய்க. 'துரியபிந்து' வென்றாலும் 'மஹாபிந்து' வென்றாலும் 'ப்ரஹ்மபிந்து' 'அமிர்தபிந்து' என்றதைப்போல் ஒன்றே. அஃது உன்மனியுங் கடந்ததானதால் அதை அறிவாலறிந்து சொல்லமுடியாது. "அறிவழிந்த சுகமதனையறிந்து சொல்வ தெப்படிச்சொல்!" "அறிவழிந்த சுகமதனை யனுபவித்தேயறியவேண்டும்"—என்ற ஆனந்தத்தாய்மொழிப்படி, உமையம்மையார் திருமணக்கோலத்தை மந்திர, தந்திர, யந்திரபாவங்கள் பொருந்தப் பொருத்தி யலங்கரித்திருந்த கண்கொள்ளாக் காட்சியை நாம் காணக்கொடுத்துவைத்ததுபோல் அஹக்கண்கொண்டு பார்த்தனுபவிக்கக்கொடுத்து|"வைத்தவர்களே பிந்துதர்ப்பணசந்துஷ்டாயைநமஃ" என்னும் ஹசிய நாமத்தின் உட்பொருளை யுணர்ந்து 'அமிர்தபிந்து" அல்லது 'ப்ரஹ்மபிந்து' வின் உட்பொருளை யுணர்ந்துய்வார்.



KANNAKI - A SOCIAL DRAMA.

## கண்ணகி.

அங்கம் II.] [காட்சி 3.

இடம்:—கண்ணகியின் அந்தப்புரம்.

காலம்:—நண்பகல்.

பாத்திரர்:— கோவலன், கண்ணகி, தேவந்தி

தேவ:—கண்ணகி ! நீ எவ்வளவுகாலந்தான் தனித்து வாழவேண்டுமோ! அப்பாதகி மாதவி கையில் சிக்கிக்கொண்ட உனதுகணவர் அவள் மாயவலையினின்றும் தப்புவதற்கு இறைவன் அருள்புரியமாட்டானா! பெண்ணாயகி நீ வருந்துவது அவ்விறைவனுக்குத் தெரிய வில்லையோ! சகி! உன்னுடைய நிலைமையை நினைக்கும்போது என்மனம் அனலிலிட்ட மெழுகுபோ லுருகுகின்றது ! என்னசெய்யலாம் !

(பெருமூச்சு விடுகிறாள்.)

கண்ணகி:—என்னடி தேவந்தி ! நீ கூட கொஞ்சமும் அறிவில்லாமல் பேதைத் தனமாக வார்த்தையாடுகிறாய்! எனது கணவர் தான் என்செய்வார் ! இறைவர்தாம் என்செய்வார் ! மாதவியைத் தூஷிப்பதாற்றான் பயனென்ன ! எல்லாம் அவரவர் செய்தவினைக் கீடாக நடக்குமேயன்றி வேறில்லை !

தேவ:—இறைவன் பார்த்து அவ்வினையை மாற்றவேண்டுமானால் மாற்றக் கூடாதோ?

கண்ணகி:—சகியே ! இறைவனா லாகாத காரியமு மிருக்கின்றதோ ?

"கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான் றாளைவணங்காத் தலை" என்றாரன்றோ நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் ! தேவந்தி! அதிலுள்ள "எண் குணத்தான்" என்பதைப்பற்றிச் சற்று ஆழ்ந்து யோசனை செய்தால் இறைவனுடைய

3

இலக்கணம் நன்கு புலப்படும். எண்குணமாவன:—தன் வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யறிவினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, வரம்பி லின்பமுடைமை, முடிவி லாற்றலுடைமை என்பனவாம்! இவ்வொவ்வொன்றனையும் பற்றிக் கூறப்புகின் நமது சம்பாஷணை இப்போது முடிவுபெறாது! மேலும் அவைகளை யெடுத்துரைக்கக் கூடிய ஆற்றலும் என்னிடத்தில்லை! நீ இறைவனுடைய சக்தியைக்குறித்து வினவியபடியால் அதைமட்டும் விவரிக்கவேண்டி மேற்சொல்லிய எண்குணங்களுள் ஒன்றாகிய "முடிவிலாற்ற லுடைமை" என்பதை மட்டும் என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் ஒருவாறு சொல்லுகிறேன் !

தேவ:—சகி ! சொல் கேட்கலாம் !

கண்ணகி:—சகி ! தேவந்தி! நான் சொல்வதைக் கவனமாய்க்கேள் ! "ஆற்றல்" என்றால் "சக்தி" என்று அர்த்தம். "முடிவில்" என்பதற்கு முடிவு இல்லாத, எல்லையற்ற, ஓர் வரையறைக் குட்படாத என்று பொருள். ஆகவே 'முடிவிலாற்றல்' என்பது எல்லையற்ற சக்தி எனப் பொருள்படுகிற தன்றோ! அறிவுள்ள பொருள்களெல்லாம் இறைவன் அறிவித்தாலன்றித் தாமே யறியமாட்டா! அறிவற்ற பொருள்க ளெல்லாம் அவன் அசைவித்தாலன்றித் தாமே அசையமாட்டா ! கேவலம் ஒரு நாட்டைப் பரிபாலிப்பதற்கு அரசன் எவ்வளவு சக்தியுடையவனாக இருக்கவேண்டியதிருக்கிறது ! அப்படியிருக்க எல்லாச் சீவர்களையும் அறிவித்தற்கும், எல்லாப் பிரபஞ்சங்களையும் அசைவித்தற்கும் எவ்வளவு ஆற்றல் வேண்டியிருக்கும் ! உன்னாலாவது, என்னாலாவது, மற்றெவராலாவது சொல்ல முடியுமா ? ஆற்றலின் அளவு தெரிந்தாலன்றோ பின்பு அவ்வாற்றலை யுடைய பொருளின்

இலக்கணம் தெரியும்! அப்படியிருக்க இறைவனுடைய இலக்கணத்தைப் பற்றி யாரால்தான் முற்றும் உரைக்கக்கூடும்? சகி! எல்லாப் பொருள்களும் ஆற்ற லுடையனவே! அறிவுள்ள பொருளாயினும் சரி அறிவற்றபொருளாயினுஞ் சரி. ஆனால் சில சமயம் இவ்வாற்றல் மறைந்தும், சிலசமயம் வெளிப்பட்டும் காணப்படும்! காந்தத்திற்கு இழுத்தற்றொழில் ஓர் ஆற்றல். காந்தக்கல் தனியே கிடக்கும்: அதனிடமுள்ள "இழுத்தல்" என்னும் ஆற்றல் மறைந்துகிடக்கிறது! இரும்பைக்கண்டவழி வெளிப்பட்டுத் தோன்றுகிறது! அதுபோலவே இறைவனுக் குள்ள இயற்கைப் பேராற்றல் மறைந்து கிடந்ததே யாயினும் எண்ணிறந்த சீவர்களைக் கண்டவழி வெளிப்பட்டுத் தோன்றுகிறது! எங்ஙனமெனில் இப்பிரபஞ்சத்தையும், ஆகாயத்தில் விளங்கும் எண்ணிறந்த வான்மீன்களையும், சூரியமண்டலம், சந்திரமண்டலம் முதலிய கோளங்களையும் பார்க்கும் போது இவ்வளவையும் உண்டாக்கின கர்த்தா ஒருவன் இருக்கவேண்டுமென உனக்குப் புலப்படவில்லையா! இவ்வளவு சிருஷ்டியையும் எதற்காகச் செய்தான்! விளையாட்டிற்காகவா? இல்லை; இல்லை! சீவர்களாகிய நாம் இன்ப மனுபவிப்பதற்காகவே! துன்பமனுபவிக்கவன்றோ வெனின்; அன்று. இறைவன் அன்பே சொரூபமானவன்! கருணையே உருவமானவன்! இன்பக் கடல்! ஆனந்த சமுத்திரம்! அப்படிப் பட்டவன் நமக்கு துன்பத்தைக் கொடுப்பான் என்று சொல்வது எவ்வளவு அறியாமை! மேலும் அவனே இயற்கை யறிவும், முற்றுணர்வுமுடையவன்! நமக்கு நன்மை இன்னது தீமை இன்னது என்பதை அறிந்தவன்! ஆதலால் நம்முடைய நன்மைக்காகவே எல்லாம் செய்கிறான்! இப்போது நாம் கஷ்டப்படுவதும் நன்மையைக் குறித்தே! ஆதலின் இறைவனைக் குறை கூறுதல் மூடத்தனம்! நான் எனது கணவனுடைய ஆதரணையிலிருந்து அவரோடு சரசசல்லாபம் செய்துகொண் டிருந்தால் கடவுளை நினைக்கப்போகிறேனோ? இல்லை! எத்தனையோ செல்வவந்தர்கள் கடவுள் என்னும் பெயரை மறந்திருக்கிறார்கள்! சுகமுண்டாகும் போது கடவுளைப் பற்றிநினைப்பவர்கொஞ்சம்; துக்கமுண்டாகும் போதுதான் இறைவனைப்பற்றி எண்ணவிடமுண்டாகிறது. ஆதலால் கோவல ரிவ்வித மென்னை வருத்தத்திற்குள்ளாக்கி வருவதும் எனது நன்மையைக் கருதியே! எனதாசைக்கணவர் எனக்கு நன்மையைத்தானே கருதுவர்!

தேவ:—இரு இரு! யாரோ கதவைத் தட்டுகிறார்களே! பார்த்துவருகிறேன்!
(போகிறாள்).

கோவ:—(தேவந்தி கதவைத்திறக்கவே) தோழி! உனதுதலைவி கண்ணகி எங்கே? என்னசெய்துக்கொண் டிருக்கிறாள்?

தேவ:—அந்தப்புரத்திற்ற னிருக்கிறாள் சும்மாதா னிருக்கின்றாள்!

கோவ:—நான் வந்திருப்பதாகத் தெரிவி.

தேவ:—அப்படியே! (போகின்றாள்.) (மீண்டும் வந்து) வரும்படியாகக் கேட்டுக் கொண்டாள்!

கோவ:—மிகவும் வருத்தமாக விருக்கின்றாளோ?

தேவ:—வருத்தமாகத்தா னிருந்தாள்! ஆனால் இப்போது—இல்லை! தங்களுடைய வரவைத் தெரிவித்தவுடன் அவளுடைய வருத்தம் சூரியனைக் கண்ட பனிபோலப் பறந்து போய் விட்டது!

கோவ:—என்னையே எதிர்பார்த் திருந்தாளென்று சொல்!

தேவ:—ஆம்! சூரியனை யெதிர்பார்த் திருக்கும் தாமரைப் பஷ்பம் போலவும், கார்காலத்தை யெதிர்பார்த் திருக்கும் மயிலைப் போலவும் உங்கள் வரவையே எதிர்பார்த் திருந்தாள்!



கோவ:—ஆனால் வா போகலாம்!

(இருவரும் உட்செல்லுகிறார்கள்).

கண்:—(கோவலன் வந்ததும்) நாதா! வரல்வேண்டும்! (சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து நிற்கின்றாள்).

கோவ:—என் காதற்கிழத்தியே! கைக்காத தீங்கனியே! கரையாத கற்கண்டே தெவிட்டாவமுதே! கணுவற்ற கரும்பே! கொய்யாத நறுமலரே! கோவாதமணியே! குலையாத வொளியே! குளியாப் பெருமுத்தே விலையறியாப் பொன்னே! மெய்யான பெருவாழ்வே! விர்தை மாகதமே! மங்காதசுடரே! வானோர்புகழ் திருவே! உயிரோவியமே! எனதுயிருக் குயிரே! கண்ணகிச் செல்வமே! நான் செய்தபிழையை யெல்லாம் மன்னிக்கக் கோருகிறேன்! (பாதத்தில் வீழ்கிறான்.)

கண்:—(அவனை வாரியெடுத்து) நாதா! தாங்களும் இவ்விதம் செய்யலாமா! கேவலம் தங்கள் ஊழியக் காரியான என்னையும் வணங்கல் முறையோ! தருமமா! நீதியா!

கோவ:—காதலி! கல்வியிற் கலைமாதெனவும், கற்பில் அருந்ததியெனவும், பொறுமையிற் பூமிதேவியெனவும், கருணையில் கௌரியெனவும், எழிலில் இந்திராணி யெனவும் சொல்லக்கூடிய உன்னை விடுத்துக் கேவலம் ஓர் தாசிவயப்பட்ட இக்கொடியவன் உன்னையேன் வணங்கலாகாது! அடி பிராண நாயகி, நான் எதை நினைத்து வருவேன்! நான் எதைப் பற்றி அழுவேன்! இப்பாதகனுகிய எனக்கும் விமோசன முண்டோ! (துக்கத்துடன்) உண்மைக்காகவே உருவெடுத்து வந்திருக்கும் உன்னை அலட்சியம் செய்தேனே, அதைக்குறித்தழுவனே! எனது பெற்றோர்களுக்குக் கெட்டபெயரை உண்டாக்கினேனே அதைக் குறித் தழுவனே! பரஸ்திரீகமனனென உலகம் கூறும் இழிசொல் நினைந் தழுவனே! மாதவியின்பொய் ஒழுக்கத்தை யறியாமலிருந்த, என் மதியீனத்திற்காக அழுவனே! பேதையாகிய உனக்கு ஏற்பட்டவருத்தத்தைக் குறித்தழுவனே! ஐயோ! பிராணசகி! என்னுடைய துக்கத்திற்குக் கரையுண்டோ! அளவுண்டோ! அக்கடலைக் கடத்தற்கு நீயே தெப்பம்! நீயே கரை! நீயே அணை! உன்னுடைய மன்னிப்பைப் பெற்றாலன்றி என் மனம் சமாதானப்படாது! எனது துக்கம் தீராது! உன்மனமிரங்கி, உன் முத்தானவாய் திறந்து "மன்னித்தேன்" என்று ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா? நீயேசரணம்! நீயே சரணம்! (மூர்ச்சையாகிறான்).

கண்:—(விசிறிக்கொண்டு கோவலனுக்கு விசிறித், தண்ணீர் தெளித்துக் களை தீர்த்த பின்) நாதா! மன்னித்தேன்! மன்னித்தேன்! மன்னிக்கவேண்டும்!

கோவ:—கண்ணகி! மன்னித்தேன் என்று சொல்லிப் பின் மன்னிக்க வேண்டு மென்றாயே! அஃதென்ன!

கண்:—பிராண காந்தா! நானோ தங்களை "மன்னித்தேன்" என்று கூறுவது! அப்படி நான் கூறுவது பாதக மன்றோ! தங்களுடைய வார்த்தையைக் கடக்கக் கூடாதெனச் சொன்னேன்! அப்படிச் சொன்னதை மன்னிக்க வேண்டும்! (புன்னகையுடன்) இப்போது சமாதான மாகிவிட்டதா!

கோவ:—சமாதானமாயிற்று.

கண்:—ஆனால் நான் சொல்வதைச் சமாதானத்துடன் கேட்கலாமன்றோ?

கோவ:—அப்படியே!

கண்:—பின்பு அப்படி யல்ல இப்படி யல்ல வென்று ஆட்சேபிக்கக் கூடாது! தங்களுக்குத் தெரிந்ததைத்தான் நான் சொல்லப் போகிறேன்!

கோவ:—நீ என்ன சொன்னபோதிலும் கேட்கிறேன்! சொல்!

கண்:—நாதா!

† "காமமே குலத்தினையும் நலத்தினையுங்
 கெடுக்கவந்த களங்க மன்றிக்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும்
 புகட்டிவைக்குங் கடார மற்றுங்
காமமே பரகதிக்குச் செல்லாமல்
 வழியடைக்குங் கபாட மின்னுங்
காமமே யனைவரையும் பகையாக்கிக்
 கழுத்தரியுங் கத்தி தானே!"

உலகத்தில் அடைதற் கரிய பொருள் காதல். காதலிற்குப் பெருந்தடையா யுள்ளது காமம். நல்லபயிர்விளைந்து வரும்போது அதனுடன் களையுந்தோன்றி அப்பயிரை எவ்விதமழிக்கிறதோ அவ்விதமே காமம் காதலை அழிக்கும் வாளாகவிருக்கிறது. பயிரைக்காப்பாற்றுவதற்கு களைபிடுங்கவேண்டுவது அவசியமாயிருத்தல் போல காதல் என்னும் அரும் பெருந்தனத்தைப் பெறுதற்குக் காமம் என்னும் சத்துருவை வெல்ல வேண்டும். காதல், காமம், இவையிரண்டிற்கு முள்ள வித்தியாசம் நண்பகலிற்கும், நள்ளிருளிற்கும் எவ்வளவோ அவ்வளவிற்கு மேலாகும். தலைவ! எல்லாமறிந்த தாங்கள் கேவலம் பால்ய சேஷ்டையா லுண்டாகும் காமவயப்பட்டு, அன்பென்பது சிறிதுமற்ற பரத்தையைக் கூடி வாழுதல் தகுமா? தாங்கள் கொண்டிருக்கும் அன்பு இத்தகையதென அம்மாதவி அறிவாளா? பொருள் அபகரிக்கும் நோக்கமே பெரிதுமுடைய தாசியை நம்புதல், தங்களைப் போன்ற அறிவாளிகளுக்கு அழகோ?

"அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா—ரின்சொ லிழுக்குத் தரும்" என்னும் நீதிவாக்கியத்தை மறந்து விஷத்தினுங்கொடிய தீமைபயக்கும் வார்த்தைகளை அமிழ்தம் போலப் பேசும் அப்பரத்தையின் சொல்லைத் தாங்கள் கேட்டபடியா லன்றோ என்னை அலட்சியஞ்செய்தீர்கள்! நாதா! என்னை அலட்சியம்செய்ததற்காக நான் வருத்தப்படவில்லை. நிறைந்த தேனடையிலுள்ள தேனை உண்ணாமல் சிறிய புஷ்பங்களிலுள்ள அற்பத் தேனையுண்டு மயங்கும் வண்டினம் போலக் காதலால் விளையும் அழிவற்ற பேரின்பத்தை நாடாமல், சிறிதுகணந் தோன்றி அழியும் அற்ப சிற்றின்பத்தைப் பயக்கும் காமம் என்னுங் கொடிய வலையிற்சிக்கி வருந்துகின்றீர்களே என்றுதான் நான் வருந்துகிறேன்!

"தினைத்துணை யுள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும் அனைத்தெலும்புண்ணெக வானந்தத் தேன்சொரியுங் குனிப்புடை யானுக்கே சென்றாதாய் கோத்தும்பீ" என்று ஆன்றோரால் புகழப்பட்டுள்ள இறைவனுடைய சொரூபமே "காதல்" மயமாகவுள்ளதென்றால் காதல் என்னும் தேனைச் சொரிகின்ற உண்மை அன்பை நான் எங்ஙனம் புகழ்வேன்! அவ்வன்பு இரண்டு உயிர்களிடத்திலும் தோன்றுமேயன்றி ஒரு உயிரிடத்தில் தோன்றாது! தோன்றினாலும் பயனில்லை! மேலும், கோவல! ஏகபத்தினி விரதமுடையவனே மனிதன்! பரஸ்திரீகமனஞ் செய்வதைவிடப் பாதகமானதொழில் வேறில்லை யென்பதைத் தாங்களறியீர்களா? ஸ்திரீகளுக்கு "கற்பு" என்னும் விரதம் ஏற்பட்டிருப்பது போலவே புருஷர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறதென நான் நினைக்கிறேன்! நான் இவ்விதமெல்லாம் சொல்லுகிறேனென வருத்தப்படாதீர்கள்! கணவர் சொற்படி நடப்பதே பெண்களின் கடமை. தங்கள் மனதிலுள்ளதைச் சொல்லுங்கள்.

கோவல:—(தன் தேவியை நோக்காது பூதேவியை நோக்கிய வண்ணம் நிற்கிறான்).

கண்:—தலைவ! நான் இவ்வளவு சொல்லியும் இன்னமும் பரஸ்திரீகமனஞ் செய்கிறீர்களே! (தேவந்தியை நோக்கி) தோழி! அதோ பாரடி! என் நாதன் என்முகத்தைப் பார்க்கக் கூடாதெனப் பூமிதேவியின் முகத்தைப்பார்க்கிறார். அதுபரஸ்திரீ கமனந்தானே! (சிரிக்கிறாள்).

தேவந்:—அதேதான் அவருக்குத்தொழிலாக விருக்கிறதே அம்மணீ! மாதவிக்குக் கொடுக்க ஒன்றும் பொருளில்லைபோல் இருக்கிறது. அதனால் தான் இன்று அந்தப்புரத்திற்கு வந்தார்.

கண்:—ஆமாம். அவருடைய முகத்தைப் பார்த்தால் பொருளின்றி வருந்துவதாகவே தெரிகிறது! (கோவலனுடைய தலையை நிமிர்த்தி) காதல்! ஏன்விசனமாக விருக்கின்றீர்கள்?

கோவ:—விசனமொன்று மில்லை. நான்—

தேவ:—மாதவி யிருக்கும்வரையில் விசனமென்ன!

கண்:—போதும். சகி! சும்மாபரிகாசம் செய்தால் என் நாதருக்கு மனவருத்த முண்டாகும்; பேசாதிரு!

தேவ.:—நான் ஒன்றும் பேசவில்லை இனிமேல்!

கண்:—நாதா! என தருமைக்காதலா! தாங்கள் ஏன் வருத்தப்படவேண்டும்? அடியாளுடைய உடல் பொருள் ஆவி மூன்றும் தங்களுடைய தன்றோ! பொருளில்லையே என வருந்தாதீர்கள். கண்ணகியாகிய நான் இருக்கும்வரையில் தங்களுக்கு விசன மென்பதே வேண்டாம். தங்களுக்குப் பிரயோசனப்படா உடைமை இருந்துபயனென்ன? என்னிடத்தில் இரண்டு சிலம்புகளிருக்கின்றன. அதைத் தருகிறேன். கொண்டுபோய் விற்றுப் பொருள் வாங்கிக் கொள்ளுங்கள். மாதவிக்குக் கொடுக்கப் பொருள்இல்லையென்று தாங்கள் வருந்த வேண்டாம். நீங்கள் விசனமின்றி இருந்தால் எனக்குப் போதுமானது.



கோவ:—பிராணசகி! நான்தான் முன்னமேயே என் குற்றத்தை ஒப்புக்கொண்டேனே. வீணாக ஏன் என்னைப்பரிகாசம் செய்கிறாய்! மாதவியை இனித் திரும்பியும் பாரேன். அவளைப் பற்றி நான் விசனிக்கவில்லை.

கண்:—பின் எதைக் குறித்து விசனிக்கின்றீர்கள்?

கோவ:—எனது பெற்றோர் என்னைத் தனியாக வைத்து இல்லறம் செம்மையாக நடத்தும்படி அளவற்ற பொருளையும் கொடுத்தார்கள். நானோ சகலபொருளையும் தீயவழியிற் செலவு செய்து விட்டு இப்போது வருந்துகிறேன். வெளியூருக்குச் சென்று ஏதாவது வியாபாரஞ்செய்து பொருள்தேடி வரலாமென உத்தேசிக்கின்றேன். உன்னுடைய அனுமதி வேண்டும்.

கண்:—நாதா! என் அனுமதியா, நானும் கூட வருகின்றேன். வழியில் தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து தங்களை இன்புறச் செய்த லன்றோ அடியாளுடைய கடன்.

 * எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
 யப்பணியா லப்பொழுதே யின்புறுத்தி—யொப்ப
 மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
 கனங் குழையார்கள் கடன்."

மேலும் காதல! தங்களுடன் இருந்து நான் படும் கஷ்டங்கள் எனக்குஇன்பமாகும். தாங்களில்லாமல் நான் அனுபவிக்கும் சுகம் துன்பமே யாகும். தாங்கள் இருக்கும் காடு எனக்கு நாடு. தாங்களில்லாத நாடு எனக்குக் காடேயாகும். தலைவ! கணவன் இறந்துபடின் அக்கணமே தானும் உயிர் நீத்தலும், கணவன் கஷ்டப்படும்போது உடனிருந்து அக்கஷ்டத்தைத் தானும் அனுபவித்தும், கணவன் பொருள் வேண்டும்போது அவனுக்கு

* பெருந்தேவனார் பாரதம்.

உதவியும், அவனுடன் இனிய சொற்கள்பேசியும், அவன் கலவி கருதும்போது அவனது அபீஷ்டத்தை நிறைவேற்றியும், பிரிவாற்ருமையும், இன்னோ ரன்ன குணங்க ளெல்லாம் பெண்களுக்கு இருக்க வேண்டுவன வன்றோ? அவர்கள்தான் உண்மைக் காதலும் கற்பும் உடையவர்கள்.

† "சாவிற் சாதல் நோவின் நோதல்
ஒண்பொருள் சொடுத்தல் நன்கினிது மொழிதல்
புணர்வுநனி வேட்டல் பிரிவுநனி யிரங்கல்"

என்பது கற்புடைய ஸ்திரீகளின் இலக்கணமன்றோ? தங்களைப்பிரிந்து நான் எவ்வளவு சுகமனுபவித்த போதிலும் "பிரி வாற்ருமை" என்னும் துன்பத்திற்கு முன் அச்சுகங்கள் எம்மாத்திரம்? நாதா! நானும் கூடவருகின்றேன்.

கோவ:—வெளி யூர்களில் எவ்வளவோ கஷ்ட மனுபவிக்கவேண்டி வரும். நீயோ பெண். காடுமலைமுதலானவைகளில் நடப்பதற்கு உன்னுல் முடியாது. நீ இவிடம் தானே இரு.

கண்:—நாதா! இவ்விஷயத்தில் தாங்கள் எவ்வளவு சொன்னபோதிலும் என் செவிக்கு ஏறமாட்டாது.

கோவ:—ஆனுல் உன்னிஷ்டம். மதுரை மாநகருக்குச் சென்று வியாபாரம் செய்யலாமெனத் தோன்றுகிறது.

கண்:—என்னுடைய சிலம்பு இரண்டையும் விற்று அதிற்கிடைக்கும் பொருளையே முதலாகவைத்து வியாபாரம் செய்யலாம். என்று பிரயாணப்படலாம்?

கோவ:—நாளையிரவில் பிரயாணப்படுவோம். நாம் வெளியூர் செல்வது ஒருவருக்கும் தெரியக்கூடாது. இரகசியமாக இருக்க வேண்டும்.

† இறையனு ரகப்பொருள்.

கண்:—அப்படியே.

கோவ:—பிரயாணத்திற்குவேண்டு வனவெல்லாம் சித்தம் செய்துகொள். நான் போய் வருகிறேன். (அந்தப்புரத்தினின்றும் நிஷ்கிரமித்தில்).

நாகை, ஸி - கோபாலகிருஷ்ணன்.

## Sita—A Tale of Hindu Domestic Life.
## சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

### 27-வது அதிகாரம்.

தங்கம் காமேசுவரய்யர் எப்போது பிரித்துகொள்ளபோகிருரென்று காத்திருந்தாள். இராமச்சந்திரய்யருக்கு காமேசுவரய்யர் சொத்துகிடைக்கிறதாவென்கிற அசூயை அவளுக்கு வெகுநாள் இருந்து இப்போதுதான் அது நீங்கிற்று. ஆகிலும் காமேசுவரய்யர் மறுபடியும் இராமச்சந்திரனோடு சேர்ந்துவிட்டால் என்னசெய்கிறதென்று யோசித்து கடைசியில் இரண்டாவது குமாரனை காமேசுவ ரய்யருக்கு ஸ்வீகாரம் கொடுக்கிறதென்று தீர்மானித்தாள். காவாலி சுப்பய்யன் தன் குமாரனை காமேசுவர்யருக்கு ஸ்வீகாரம் கொடுக்க வேண்டுமென்றுதான் சாமேசுவரய்யருக்கும் இராமச்சந்திரனுக்கும் மனஸ்தாபத்தைக்கொண்டுவந்துவிட்டான். தங்கம் இவனை ஏமாற்றி தன் குமாரனை ஸ்வீகாரம் கொடுக்கவேணுமென்றுயோசித்தாள். கடைசியில் காவாலி சுப்பய்யன் ஜயில்போய் சேரவும் தங்கம் இது தான் சமயமென்று கண்டு காமேசுவரய்யருக்கு கொஞ்சம் கொஞ்சமாக உபதேசம் செய்ய ஆரம்பித்தாள். முதலில் காமேசுவரய்யருக்கு ஸ்வீகாரம் செய்து கொள்வதில் இஷ்டமில்லை. பிறகு தங்கம் கொஞ்சம் கொஞ்சமாக அவரை ஸ்தோத்திரம் செய்து அந்த ஊரில் பெரியோர்களென்று சொல்லப்படும் சிலவேஷதாரிகளைக் கொண்டு காமேசுவரய்யருக்கு உபதேசம் செய்ததினும் அவர் அப்படியே சம்மதித்தார். ஆனுல் அடிக்கடி மனம் கலங்குகிறவர் ஆதலால், தங்கம் எங்கேயும் வெளியே சொல்லாமல் வெகு இரகசியமாக காரியத்தை முடிக்கவேணு மென்று தீர்மானித்தாள். பட்டணத்தில் இருந்த இராமச்சந்திய்யருக்கு மரியாதைக்குக் கூட கடிதம் எழுதவில்லை. இப்படி ஒருவருக்கும் தெரியாமல் யோசனை செய்து தங்கம் உடனே ஒரு முகூர்த்தத்தை பார்த்து இராமச்சந்திரய்யர் பிரித்துக் கொண்ட ஒரு வருஷத்திற் கெல்லாம் தன் இரண்டாவது பிள்ளையை காமேசுவரய்யருக்கு ஸ்வீகாரம் கொடுத்து பூணுலும்போட்டு விட்டாள். பூணலுக்கென்று காமே சுவரய்யருக்கு அதிகமாக கடன் வாங்க மனம் இல்லை;கடன் வாங்க ஒட்டமும் இல்லையென்பது அவருடைய சலங்கைபோட்ட மாடுகளுக்குக்கூடத் தெரியும். அதுகளை வண்டியில் கட்டினுல் அதுகள் கடன் கடன் கடன் கடனென்று கட்டியம் கூறிக்கொண்டே போகும். ஆனுல் இப்படி கடன் இருப்பது தங்கத்துக்கு தெரியவில்லை.

இராமசந்திரன் பூணுல் எவ்வளவு ஆடம்பரமாக நடந்ததோ அப்படியே என்பிள்ளை பூணுல் நடக்க வேணுமென்று சொன்னுள். காமேசுவரய்யருக்கு அவளை மீறி ஒன்றும் செய்யமுடியவில்லை. பிறகு அதற்கும் கடன் வாங்கி இராமச்சந்திரன் பூணுல் போலவே வெகு சிறப்பாக நடத்த ஆரம்பித்தார். தங்கத்திற்கும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கும்உண்டான சந்தோஷத்தில் பூலோகத்தில் இருப்பதாக ஞாபகமில்லை; காமேசுவரய்யருக்கு ஆசார உபசாரம் செய்தார்கள். காமேசுவரய்யர் அப்படிப்பட்ட உபசாரத்தை எப்போதும் அறிந்திருக்கமாட்டார். தங்கம் இராமச்சந்திரன் பூணுலைவிட தன்பிள்ளை பூணுல் வெகு ஜோராய் நடந்ததாக பெருமைசொல்லிக் கொள்ளவேண்டுமென்று எண்ணி எல்லாம் வெகு தோரணையாகச் செய்தாள். ஆனுல் தெய்வசங்கல்பமானது பூணுல் போடுகிற சமயத்தில்கூட கொட்டுமேளமே இல்லாமல் பூணல்போடும்படி நேர்ந்தது. இதுவும் கடவுள் செயல் அல்லவா! மேளகாரன்கள் பந்தலின் ஒர்புறத்தில் கீத்துகளினுல் போடபட்ட ஒர் அறையில் ஒரு மாத்தில் மத்தளங்கள் இரண்டையும் மாட்டி விட்டு வெளியே போயிருந்தார்கள். கமலாவடியிலிருந்து நாலு துஷ்டப் பையன்கள் கல்யாணத்துக்கு வந்திருந்தார்கள். இவர்கள் மத்தளம் பார்த்ததேகிடையாது இவர்கள் மத்தளத்துக்குச் சமீபத்தில்போகவும் அது காற்றில் ஆட ஆட அதற்குள்ளிருந்து ஒர் சப்தம்வந்தது. பையன்களொளுருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டுக்கொண்டு நிதானித்துக் கேட்டார்கள். சப்தம் அப்படியே வந்து கொண்டிருந்தது. பையல்களில் ஒருவன் 'எலே சேஷா! இரண்டு பெட்டிக்குள்ளும் ஆள் உட்கார்ந்துகொண் டிருக்கிருனடா' என்ருன்.

சுப்பன்: 'எலெ பேசாதே! அந்த ஆளை மெள்ள பிடிக்கணுண்டா! சின்ன ஆள்போல் இருக்கிறது விடக்கூடாது!' என்ருன்.

உடனே சேஷனும் சுப்பனும் ஒருபெட்டியைப் பிடித்துக்கொண்டார்கள். நாராயணனும் இராமுவும் மற்றொரு பெட்டியைப்பிடித்துகொண்டார்கள், ஒவ்வொரு வனும் ஒரு கத்திகொண்டுவந்திருந்தான். உடனே கத்தியை யெடுத்து எல்லோரும் சந்து செய்து கையை உள்ளேவிட்டார்கள். சேஷன் கை சுப்பன் கையில்பட்டதும் சுப்பன் சேஷன்கை யென்பது தெரியாமல், 'எலே ஆள் அகப்பட்டாண்டா, விடாதே!'என்று அந்தக்கையை இழுத்தான், சேஷன் சுப்பன்கையென்று அறியாமல் 'ஆமாண்டா, விடாதே! ஆள் என்னைக்கூட உள்ளே இழுக்கிருண்டா! விடாதே' என்ருன். இருவரும் 'விடாதே! விடாதே!' என்று கத்திக்கொண்டு இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

இதேமாதிரி மற்ற மத்தளத்திலும் இராமு நாராயணன் கையைப்பிடித்துக்கொண்டு ஆள் அகப்பட்டுவிட்டான் 'விடாதே! விடாதே!' என்று இழுத்துக் கொண்டிருந்தான். இப்படி இருக்கும்போது மேளக்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு மிருதங்கத்தின்தோல் அறுக்கப்பட்டதைப்பார்க்க வயிறு பற்றிற்று. "அன்றையதினம் முழுவதும் மிருதங்கம் வாசிக்கமுடியாதே! கூலிபோச்சே! என்று கோபத்தால் நாலுபேரையும் குடுமியைப் பிடித்துக் கொண்டு அடி அடி யென்று அடித்தார்கள். இதற்குள் ஏகக்கூட்டம் கூடிவிட்டது. சிலர் சிரித்தார்கள். பையன்களைச் சேர்ந்தவர்கள் எப்படி பாப்பாரப்பிள்ளையைத் தொட்டு அடிப்பாயென்று மேளக்காரனிடம் சண்டைக்குப்போனுர்கள், சிலர் அப் பையன்களுடைய துஷ்டத் தனத்துக்கு அதுவேண்டு மென்ருர்கள். கடைசியில் அடிபட்ட பையன்கள் கொஞ்சதூரம் போய் சந்தோஷப்பட்டுக்கொண்டு 'எலே! அடிபட்டாலும் பட்டோம், அது மத்தளம் என்று தெரிந்ததடா!' என்று சொல்லிக்கொண்டார்கள்.

அது குக்கிராமமானதால் வேறேமத்தளங்கூட கிடையாது. மத்தளம் எடுத்துவரப்போக வேண்டுமானுல் போய்வர ஒருநாள்முழுவதும் ஆகும். தங்கம் இப்படி இராமச்சந்திரன் மீது எடுத்ததற்கெல்லாம் அசூயைப்பட்டு போட்டி போட்டது பகவானுக்குக்கூட பொறக்கமுடியவில்லை. கல்யாணத்தில்

தாலிகட்ட மறந்துபோவதுபோல் கல்யாணத்திற்கென்று தருவிக்கப்பட்ட நாகஸ்வரம் பூணூல் போடும் சமயத்தில் உபயோகப்படுத்தமுடியாமல்போயிற்று. பிறகு பூணூல் நடந்தது. தங்கம் காமேசுவரய்யருக்கு ஸ்வீகாரம் கொடுக்கும்போது அவருக்கு ஏராளமான சொத்து இருக்கிறதாக அவளுடைய எண்ணம். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளும் அப்படியே எண்ணிக்கொண்டு தான் இராமச்சந்திரய்யரை ஏமாற்றிவிட்டதாக நினைத்து அதிக சந்தோஷமடைந்தார். இராமச்சந்திரய்யர் பட்டணத்தில் வெகு நன்றாய் படித்துக்கொண்டு பூவரசநல்லூரைப்பற்றி நினைத்தால் கூட தோஷம் உண்டாகுமென்று வெறுத்து அதை மறந்தே இருந்தார். ஆனால் அவருக்கு ஒரு கவலை மட்டும் இருந்தது. தனக்கு வழக்கமாக வாரத்திற்கொரு தரம் கடிதமெழுதிக்கொண்டிருந்த சீதா மூன்றுவாரமாக கடிதமேஎழுதவில்லையென்பதே. இராமச்சந்திரய்யர் தினந்தோறும் காலை 8-மணிக்கு மாடியில் வெளிப்புறத்தில்வந்துநின்று எதிர்பார்த்துக்கொண்டே இருப்பார். தபால்காரன் வந்து இந்தவீட்டைத்திரும்பிப்பார்த்தால்கூட வெகு விரைவாய் கீழே ஓடுவார். அவனைப்போய் பார்ப்பதிற்குள் அவன் வேறே வீடு போய்விடுவான், இராமச்சந்திரய்யர் வெகுமனவருத்தத்துடன் திரும்பிவருவார். இப்படிப் பார்த்துப்பார்த்து பொறுக்கக் கூடாமல் தன் பெண்ஜாதிக்கு அடியில் வருமாறு ஒரு கடிதம் எழுதினார்.

"138 தம்புசெட்டி தெரு,"
சென்னப்பட்டணம்.

" என் கண்ணுக்குக் கண்ணான என் சீதாவுக்கு உன் பிரியமுள்ள சந்திரன் அநேக ஆசீர்வாதம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதி அனுப்பவும். நான் உனக்கு மூன்று கடிதம் எழுதியும் நீ பதிலே எழுதவில்லை. பதில் எழுதக்கூட சாவகாசம் இல்லைபோல் இருக்கிறது. நீ என்ன செய்வாய்! ஒருவேளை என் ஞாபகமே உனக்கு இருந்திருக்கமாட்டாது. உன் மீது குற்றம் சொல்வதில் பிரயோஜநம் என்ன! பிறந்தகம்போன பெண்களுக்கு புருஷன் வீட்டு ஞாபகம்கூட இருக்குமா? வாய்திறந்து பேசக் கூடாத குரங்குகூட வல்லவா பிறந்தாத்துக்கு ஜலம் எடு என்றால் குடத்தைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறது! புக்ககத்துக்கு ஜலம் எடு என்றால் குடத்தைக் கீழே போட்டு விடுகிறது! குரங்குகளுக்கே அப்படி யிருக்கும்போது மனிதர்களுக்குக் கேழ்ப்பானேன்! இந்தக் கடிதம்கூட உன்சுகத்துக்கு இடஞ்சலா யிருக்கும்! உனக்கு உடைத்துப் பார்க்கக்கூட அவகாசம் இருக்கமாட்டாது! நானோ வேலையற்றவன்; உனக்குக் கடிதம் எழுதுகிறதுதான் வேலை. அப்படி உனக்கு அங்கே கடிதம் எழுதுவதற்குக்கூட சாவகாசம் இல்லாதபட்சத்தில் இனிமேல் எழுத வேண்டா மென்றாவது நீ எனக்கு தெரிவிக்கக் கூடாதா! அப்படியாவது இந்தக் கடிதம் கண்ட உடனே எழுதுவாய் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு உன்பிரியனான
சந்திரய்யர்.

இந்தக் கடிதம் போட்ட மூன்று நாளைக்கெல்லாம் தபால்காரன் ஓர் கவரைக் கொண்டுவந்து இராமச்சந்திரய்யரிடம் கொடுத்தான். இராமச்சந்திரய்யருக்கு வெகு சந்தோஷம். உடனே கடிதத்தை உடைத்துப்பார்க்க அதில் அடியில்வருமாறு எழுதியிருந்தது.

"பூலாவடி."

"என் உயிர்த்தோழரான என்பிராணநாதர் சந்திரய்யர் அவர்களுக்கு தங்கள் உயிர்த் தோழியாகிய சீதா அநேககோடி நமஸ்காரங்கள் செய்து எழுதிக்கொண்டது:—"

"இவ்விடம் க்ஷேமம். அவ்விடத்து க்ஷேமத்துக்கு எழுதி அனுப்பக் கோருகிறேன். தங்களுடைய கடிதம் எனக்குக்கிடைத்தது; புருஷர்களுக்கு ஒரு பாவத்தையும் அறியாத பெண்டுகள் மீது குற்றம் சொல்வது சகஜம்தானே! அதைப்பற்றி நான் முறையிட்டு என்ன பிரயோசனம்! நான் மூன்று கடிதம் எழுதியும் அதற்குப் பதிலே எழுதாமல் என் ஞாபகமே இல்லாமல் இருந்துவிட்டு, இப்போது அக்கடிதங்களே வரவில்லைபோல் எழுதியிருக்கிறதும் புருஷர்களுடைய சாமர்த்தியம்தான்! இந்த சாமர்த்தியம் பெண்டுகளுக்கு வருமோ! ஆனால் தங்களைக் குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை! தங்களுக்கு என்ஞாபகமே இல்லாமலிருக்கச் செய்தவள் சொன்னபடிதானே தாங்கள் கேட்கவேண்டும்! அவள் இதுவரையில் என் கடிதத்திற்குத் தங்களை பதில் எழுதும்படி உத்திரவு செய்ய வில்லைபோலிருக்கிறது! போகட்டும்! இப்போதாவது என்ஞாபகம் வந்ததே! என்ஞாபகம் வந்தும் குழந்தை இராஜகோபலன் ஞாபகம் தங்களுக்கு வரவில்லைபோலிருக்கிறது! இராஜகோபாலன் என்கிற குழந்தை இருக்



கிறதாக இப்போதாவது ஞாபகத்திற்கு வருகிறதோ, சற்று நினைத்துப் பாருங்கள்! இருக்கட்டும்! இதற்கெல்லாம் நான் நேரில் வந்து தகுந்தவழி சொல்லுகிறேன்! காம்களுக்குள்ள தொழில் கடிதத்திலேயே வந்துவிட்டது! இல்லாமற்போனால் வந்த கடிதத்தை நீங்கள் மறைக்க நியாயமில்லை! உங்கள் ஊரில் உங்கள் காமேசுரய்ய ரவாளுக்கு பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறதாம் உங்களுக்குந் தெரியுமா? எல்லோரும் பத்துமாஸம் சுமந்துபெற்றும் குழந்தை பிறந்த வுடனே பூணூல்போட விடுகிறதில்லை! உங்கள் லட்சுமி அம்மாளுக்கு பிரஸவமென்கிற சிரமமே இல்லாமல் ஒரு குழந்தை பிறந்துவிட்டது. அது பிறந்தவுடனே பூணூலும் போட்டுவிட்டார்கள். குழந்தை பிறந்தது என்றால் விர்த்தி உண்டென்று எண்ணவேண்டாம். நமக்கெல்லாம் விருத்தி லாபம் செய்துவிட்டார்கள். இந்தரகசியம் ஒருவருக்குந் தெரியாதாம்! அந்த ஊரிலேயே அநேகருக்கு ஸ்வீகாரம் ஆனபிறகுதான்தெரியுமாம். இதுவும் ஒரு வேடிக்கைதான். இந்த வேடிக்கையோடு எங்கள் வீட்டிலும் ஒரு வேடிக்கை நடந்தது. எனக்கு பூவரசநல்லூரிலிருந்து என்சிநேகிதியும் எங்கம்மாளுடைய தங்கை பெண்ணுமாகிய மீனாக்ஷியிடமிருந்து இந்த சமாசார மடங்கிய கடிதம் ஒன்று வந்தது. தபால்காரன் என்தாயாரிடத்தில் கொண்டு வந்து கொடுத்தான். எங்கம்மா கடிதம் எங்கேயிருந்து வந்தது என்று அவனைக் கேட்டாள். அவன் பூவரச நல்லூர் மீனாக்ஷியம்மாளிடமிருந்து என்று சொல்லவும், எங்கம்மா தபால்காரனைப் பார்த்து 'ஏபையா நீ எத்தனை மணிக்கு பூவரசநல்லூரை விட்டு பிறப்பபட்டே! மீனாக்ஷி சௌக்கியமா யிருக்கிறாளோ! இன்னும் வாய் சமாசாரமாக ஏதாகிலும் சொன்னாளோ! அவள் ஆம்படையான் ஊரில் இருக்கிறானா? காவேரியில் ஜலம் எவ்வளவு ஓடுகிறது?' என்று சண்டப்பிரசண்டமாய் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விட்டாள். நாங்கள் எல்லாரும் சிரித்துவிட்டு அவளை கேலிசெய்தோம். இதை நினைக்க நினைக்க எனக்கு இன்னும் சிரிப்பு அடங்கவில்லை. தாங்கள் விசாரிக்காமல் போன போதிலும் இராஜகோபலன் சவுக்கியமா யிருக்கிறானென்று நான்உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். எனக்குதங்களிடம் பக்ஷியாகவாவது பறந்து வந்துவிட வேணுமென்று ஆவல் இருக்கிறது! தங்களுக்கோ பக்ஷியைவிடவேகமாய் பறந்துபோய் என்னை மறக்க உபதேசம்செய்பவர்களிடம் போய் சேரவேண்டுமென்று இருக்கிறது! எல்லாவற்றிற்கும் நான் கொஞ்ச நாளில் அவ்விடம் பறப்புட்டு வருகிறேன்.

"பிரிய நாயகர் பாதத்தில் தங்கள் உயிர்த்தோழி" சீதா அநேக நமஸ்காரம்.

"சீதா."

இந்தக் கடிதத்தை இராமச்சந்திரய்யர் பார்த்து வெகு சந்தோஷமடைந்தார். இராமச்சந்திரய்யர் மனது பெருந்தன்மை யுள்ளதாதலால் அவர் காமேசுவரய்யர்செய்ததைப்பற்றி லக்ஷியம் செய்யவே இல்லை. வெங்கட்டராம சாஸ்த்திரி குமாரன் பூலாவடியைச் சேர்ந்த போஸ் டாபிஸில் போஸ்டு மாஸ்டராய் இருந்ததால் அவன் ஏதோ தன்கடிதங்களை ஒளித்து சீதா பதில் எழுதாமல் இருக்கட்டும் அதினால் ஸ்வீகார சங்கதிகள் தெரியாமலிருக்கட்டு மென்று செய்த சங்கதி யென்று ஊகித்தார். காமேசுவரய்யருக்கு சொத்துக்குத் தகுந்த கடன் வந்துவிட்டது. என்ன கடன் வந்தும் அவருக்கு செலவை மட்டுப்படுத்த முடியவில்லை. கடன் வரவர வெகுஅதிகமாய் விட்டது. அநேகர் வியாஜ்ஜியம்போட ஆரம்பித்து விட்டார்கள். காமேசுவரய்யருக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. பார்த்தார்! தங்கத்தைத் தன்கடனையெல்லாம் தீர்க்கும்படி கேட்டுக்கொண்டார்! தங்கம் இவர்கடனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கவன மில்லாமல் இருந்து விட்டாள். ஸ்வீகாரம்ஆன ஒரு வருஷத்திற்கெல்லாம் காமேசுவரய்யருக்கு ஒத்தாசை செய்ய ஒருவரும் இல்லை. ஒருவன் வாரண்டு கொண்டுவந்து விட்டான். காமேசுவரய்யரிடம் சொத்து இருந்தவரையில் எல்லோரும் அவரைச் சுற்றிக்கொண்டே இருந்தார்கள். இப்போது அவருக்கு சொத்துக் குறையவும் முன் அவரிடம் சுற்றிக்கொண் டிருந்தவர்க ளெல்லாம் இப்போது அவரை வெறுக்கஆரம்பித்தார்கள். தங்கம் மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாக வெறுத்தாள். வாரண்டு சேவகன் இதுதான் சமயம் என்றுகண்டு தங்கத்துக்கு இரகசியமாக 100 ரூ கொடுத்து காமேசுவரய்யரைப் பிடித்துக் கொடுக்கச் சொன்னான். தங்கத்துக்கு காமேசுவரய்யருக்கு சோற்றுக்கு செலவாவதுகூட பொறுக்க வில்லை யாதலால் வாரண்டு சேவகனுக்கு ஒத்தாசை செய்ய ஒப்புக்கொண்டாள். வாரண்டுக்கு பயந்து ஒண்டிக்கொண்டிருந்த காமேசுவரய்யருடைய இருப்பிடத்தை தங்கம் சேவகனுக்கு நன்றாய்ச்சொல்லி பிறகு காமே

4

சுவரய்யரையும் உள்ளே ஒரு இடத்தில் ஒளியச் சொல்லி மெள்ள சேவகனை உள்ளே விட்டு விட்டாள். சேவகன் வந்ததும் காமேசுவரய்யர் அகப்பட்டுக் கொண்டார். காமேசுவரய்யர் பிறகு வெகு வருத்தப் பட்டு தங்கத்தைப் பார்த்து தனக்கு எப்படியாவது ஒத்தாசை செய்யவேணுமென்று கேட்டார். தங்கம் நீர் என் பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொண்டு கெடுத்தது போதாதா! அவனுக்கு கர்மமும் சிரார்த்தமும் தானே மிச்சம்செய்து வைத்தீர்! இன்னும் என் சொத்தையும் வாயில் போட்டுக்கொள்ளப் பார்கிறீரா! நான் மாட்டே னென்றாள். காமேசுவரய்யர் ஸ்வீகாரம் வேண்டாம் என்று சொல்லும்போதே தான் கட்டாயப்படுத்தி அவரை ஸ்வீகாரம் செய்து கொள்ள சொன்னதை தங்கம் முற்றிலும் மறந்து, பழியை இப்போது காமேசுவரய்யர்மீது போட்டாள். இந்த சங்கதிகள் இராமச்சந்திரய்யருக்குத் தெரிந்ததும் அவர் உடனே பட்டணத்திலிருந்து வந்து காமேசுவரய்யர் சொத்து கடன் எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு அவரை அவமானப்படாமல் காப்பாற்றி அவரையும் பட்டணத்துக்குக் கூட்டிக் கொண்டு போனார்.

எஸ். இராமஸ்வாமி ஐயர், பி. ஏ.

## "Man is Man and Master of his Fate & Fortune."

A CRITICAL STUDY OF THE TEMPLE TRADITION IN A RECENT FESTIVAL.

"Turn Fortune, turn thy wheel, and lower the proud;
Turn Fortune, turn thy wheel, in sunshine, storm and cloud; [of many lands;
Thy wheel and thee we neither love nor hate. Smile and we smile, the lords
Frown and we smile, the lords of our own hands;
For man is man and master of his fate."—*Tennyson*.

"As I walked by myself
I talked to myself
And myself said this unto me:
Make friends with thyself!
Be true to thyself!
And thyself thy good angel be!"—*Anon*.

"சலனசக்தியை வெல்லவேண்டில், கரபாத்திரச்சாமி யாகவேண்டும்."

பேரன்புப் புகழ்.

"அன்பேயருளே இன்பே கனியே இன்னமுதேயுன்
கண்ணிற்பிறந்த கண்மணிக ளெத்தனைபேர்!
உள்ளங் கனிந்தாரை யுள்ளபடி போற்றுவாயே
உளங்கனிந்தேதான் வீழ்ந்தால் உவகையுட னேந்திடுவாய்
மண்ணில்வீழ்ந்ததானால் மாயைவந்து தொத்துமென்று
மார்பிலே தாங்கியம்மா மடியில்வைத்து வளர்ப்பாயே!
நீ ஆகாசகங்கையென்று நின்னையள்ளிக் குடிக்க வெண்ணி



அடுத்தடுத்து வருவாரம்மா அனந்தனந்தம் பேர்களுமே,
நீ கைக்கெட்டா கங்கையல்லோ வாய்க்கெட்டா விண்ணமுதே!"

"உள்ளதுணர்ந்து உளவறிந் துனைக்கண்டு
ஹிருதயமாம் கலசமதை யழுக்கறவே தான்விளக்கி
அன்பாங் கைநீட்டி யாதரவா யுனையேந்தி
ஆருமறியாத அம்பரத்தே தனியிருந்து
தன்னைத்தா னறியத் தபித்தவர்கள் தான்குடிப்பார்!
தபித்துக் குடித்தார்க்குத் தாகமது அற்றுப்போம்:
உண்டுகளித்தார் உளம்பெருகிப் பூரிப்பார்
இத்தனையும் சொல்லி எத்தனையோ எண்ணினேன் நான்:
எத்தனைதான் சொன்னாலு மேற்குமம்மா உன்றனுக்கு!"

—ஆனந்தத்தாய்மொழி, "அவள்பேரன்புப்புகழ்."

## "பந்தம்பறி" யுற்சவக்காக்ஷி.

[திருமயிலையில் 'புன்னையங்கானல் மடமயிலைக் கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்' திருக்கலியாணம் செய்து கைலாசவாகனமேறித் திருவுலாவந்து, கூடியிருந்து, மறுநாட்காலையில் பக்தகோடிகளுக்கு உமாமஹேஸ்வரராயிருந்து தரிசனமளித்தபின், மாலையில் நாயகிசமேதராய் நகர்வலம் வரும்பொழுது, சிவபெருமான் சடையிலிருந்த கங்கையைக்கண்டு பேதபாவம்கொண்டு உள்ளே யூடல்கொண்ட நாயகி, திருக்கோயில் எதிர்வரவும், ஊடல்முற்றிச் சினமாகத் தன்கலைகளாம் (தீவர்த்திப்) பந்தங்களையெல்லாம் பறித்துக்கொண்டு தான்மட்டும் கோயிலிடமடைந்து, பகவானை முச்சந்தியில் விட்டுவிட்டுவந்துவிட, "பந்தம்பறி" கொடுத்துத் "திக்கற்றநாதன்போல்" சந்தியில் நின்றுகொண் டிருந்த ஸ்வாமியைக்கண்ணுற்று, "தம்பிரான்தோழர்" எனப்பேர்பெற்ற சுந்தரமூர்த்தியடிகள் பகவானிடம் சென்று பின்னசக்தியின் ஸ்வபாவத்தைச்சொல்லி அவருக்கு ஆறுதல் கூறுகிறபாவனையிது. "பற்றொன்று பற்றொன்று பவோபவம்" என்றபாவனா லக்ஷணத்துக்கிசைய, 'தம்பிரான் தோழர்' பகவானிடத்தில் பற்றிய பற்றொன்றேற பாவனையாக விருந்து பேசுகிறார்.]

1. 'தம்பிரான் தோழர்' 'பவோபவ'ப் பிரலாபம்.
"குலஸங்கேத பாலிநியை நமஃ"

(1) சலனசக்தி யென்றுசொல்வர் சாதிகெட்ட லெக்ஷ்மியை
மலினபுத்தி யென்றுஞ்சொல்வர் மாயைவென்ற தாயவள்காண்!
சலனசக்தி யென்றசெல்வி சகடக்கா லதுபோலே
† மலினபுத்தி யார்மனத்தை யுருளவைப்ப ளுண்மையிதே!

2. இதுவுமது:— "கௌளிகியைநமஃ" "குலயோகிந்யைநமஃ"

(2) உருளவைப்ப ளுண்மையிது! மருளவைப்பள் மாயையினால்!
தெருளவைப்பள் தேர்ந்தாரை! யிருளவைப்பள் திரிந்தாரை!
மருளவைத்து இருளவைத்து மாயைமனந் தானொழியத்
தெருளவைத்துத் துன்பொழிப்பள் தேவிசலந சக்களத்தி!

† காமசங்கல்பங்களையே செய்யும் அசுத்தமனத்தை.

3. இதுவுமது.—"அருலரையநமஃ"

(3) சக்களத்தியவள் நிச்சலதேவிக்குச், சலநரூபமே யானவள்,
மக்களற்றவள் மாயாவிரூபி, மன்மதசுந்தரப் பேற்றவள்,
‡ நிஷ்களத்திலே நிர்மலதேஹி, சகளவடிவில் செந்தாமரையாள்,
§ புஷ்கரத்திலே புகுந்துவசிப்பள் புஷ்டியுடையவள் பாதகி!

4. பகவான் தன்தோழரிடம் 'பந்தம்பறி' செய்த தலைவியின்மேல் குறைகூறல்.

(4) பாதகியைநம்பிச் சாதனைசெய்தேன், பேரும்புகழும் பாவச் செய்தாள்!
சாதகியைநம்பிச் சாத்விகனானேன் † சாதகிபாதகி யானாள்காண்
பாதகிகூடிக் கெடுத்தாளென்னைப் பாரிலுள்ளவர் தான்சிரிக்க!
சாதகியென்றுநான் நம்பினபாதகி சந்தியில்விட்டென்னை யோடிப்போனாள்!

5. இதுவும் பகவான் வாக்கு.

(5) ஓடிப்போனாளவள் சங்கைகெட்டு நாடிக்கொண்டேயொரு பாதகனை ¶
நாடிப்போனாளவள் பாதகனையென்று நாட்டிலுள்ளோர்கள் தான்சிரித்தார்
நாடிப்போனவந்தப் பாதகனைத் தூக்கி நாட்டார்புகழவே யாட்டிவைத்தாள்
வாடிப்போனதோர் பூப்போலவனை யாட்டியனுத்துமே சீரழித்தாள்.

6. அவ்யாகிருதனைக்கூடி யழித்துத் தைஜஸனுக்கிப் பின்னுமவனை யிரண்யகர்ப்பனுக்கி விசுவன் வைசுவானரனுக்கச்செய்து, 'விராட்ரூபி' யாகக் கூடி யிருந்த கேட்டை யெல்லாம் கண்டு பகவான் தம்தோழரான சுந்தரமூர்த்தியிடம் பின்னும் தன் குறையைச் சொல்லிக்கொள்கிறார்.

(6) சீரழித்தவள் சிரிப்பாணிகண்டாள் சாதிகெட்டவனைச்சேர்ந்திருந்தாள்!
பேரழித்து பெருமையுமழித்துச் †† சிறுமைப் பட்டவனோடேபோனாள்!
சீரழிந்துநான் சிரிப்பாணிப்பட்டும் சிறுமைப்படாமலே தானிருந்தேன்!
வேரழிந்துள்ள வினைவினை வேண்டியவள்தானும் போயடைந்தாள்!

7. தன்னைப் பிரிந்த நாயகியின் செய்கையையும் தன்னிலையையும் பகவான் தோழர்க் குணர்த்துகிறார்.

(7) போயடைந்தாளவள் போதையுள்ளாள் போதைமயக்கத்தை யொழித்தேனென்று
போயடைந்தாரைப்புன் முறுவலுற்றாள் : பொங்கிற்றவர்செல்வம்பாற்கடல்போல்;

‡ தேவியின் பிரகாச விமர்சரூபங்களை யந்தர்லக்ஷியமாகக்கொண்டு குறிப்பிட்டபடியென்க.

§ 'இச்சையுதித்தவிடத்திலே', அஃதாவது 'ஹிருதயபுண்டரீகத்தில்' என்று அர்த்தம் கொள்க. 'பௌஷ்கராகமம்' பார்க்க.

† ஆண்டிவேஷம் தரித்து அஸங்கனுயிருந்ததை விட்டு 'உமாமஹேஸ்வரராய்' கிரகஸ்தனானதைச் சொல்கிறார்.

¶ அவ்வியக்தமான 'அவ்வியாகிருதனைக்' குறிப்பிட்டபடியென்றுகொள்க.

†† ஸ்வயம் பிரகாசரான தன்னை மணந்துபின் 'இருளில் ஒளியாம்' தைஜஸனைச் சேர்ந்ததுபற்றி அவனைச் 'சிறுமைப்பட்டவன்' என்று இழித்துச் சொன்னார்.



போயடைந்தேபின்னும் வெறுவனுற்றாள் வீங்கித்தூங்கியவர் வீழலுற்றார் !
† காயடைகிழங்கே தின்னுக்கொண்டு காற்றையொடுக்கி நான் தபஸிருந்தேன்.

8. பகவான் தபஸியற்ற 'தர்மஸம்வர்த்தனி'யாகவந்து தேவி வரித்ததைக் கூறுகிறார்.

(8) தபஸிருந்தேனென்று தேவியவள் தர்மஸம்வர்த்தனி யாத்தோன்றி
தபஸுக்குவந்தேன் கேள்வரமென்று தர்மஸம்வர்த்தனி தானிசைத்தாள்
தபஸிருந்தேநான் தேவியைக்கண்டேன் தர்மஸம்வர்த்தனி சொரூபமதா
தபஸுக்கிசைந்ததோர் தர்மஸம்வர்த்தனி தானேவேண்டினே னென்றுரைத்தேன்.

9. தர்மஸம்வர்த்தனியை யடைந்து சலனத்தை நீக்கியதுரைத்தல்.

(9) வேண்டினேன் வேண்டினபடியிருந்தாள் வேட்கையெல்லாமவள் தான்துடைத்தாள்!
ஆண்டியேயானாலும் வேண்டேன்சலனத்தைவேட்கைதீர்த்தென்னை யாண்டவளே
வேண்டியேசலன சக்தியைநம்பிநான் பட்டதெல்லாம்போதும் பாருலகில்
ஆண்டியேயானாலும் ஆண்டாளுக்கடிமை யாகவேவேண்டினே னென்றுரைத்தேன்.

10. பேதத்தை யொழித்துத் தர்மத்தைவளர்ப்பதே சரியென் றிசைந்ததேவி அன்னபூரணி யாகிச் சிவனுக்குக் கரபாத்ரப்பிச்சையிட்டதை யுரைக்கிறார்.

(10) உரைத்தேனுண்மையை உள்ளதது வென்றாள்
‡ கரைத்தாள்தன் தேஹத்தை யப்புவி லுப்புப்போலே!
¶ பரத்தைமறைத்ததோர் பார்முதற் பூதமுன்
கரத்தைநிறைத் தென்றும் கார்க்கவேயென்றாள்!

11. கரபாத்திரப் பிச்சையிட்டதேவி, ஊடல் கொண்டசதிபதியிருவருக்கும் சமாதானம் செய்துவைத்த 'தம்பிரான்தோழரை'ப் பார்த்து ஆசிகூறி யருளமுதுபடியிட்ட சிறப்பைக்கூறுகிறது.— சாட்சியாய்நின்ற சுந்தரர்வாக்கிது.

(11) கார்க்கவே யென்றாள் கார்முகில் போலொத்தாள் !
பார்க்கவே யென்றும் பரத்தைநீ யென்றாள் !
பார்க்கப் பார்க்கவே பரமும் கரமாச்சுகாண் !
கார்க்கவே ஐங்கரன் கரபாத் ரமா வுனையென்றாள் !

† "தேவியவள் புரம்விட்டுத் திக்கற்றநாதன்போல், ஆவிதனை யொடுக்கிக்கொண்டு அருந்தவங்கள் செய்துகொண்டு, தான்திகழும் சாம்பவரைக்கூடிவாழவேண்டுமென்று"

‡ "ஏகைவ சக்தி பரமேச்வரஸ்யப்ரயோஜ னார்த்தாய சதுர்விதா பூத்.
போகேபவானி புருஷேஷு விஷ்ணு, க்ரோதேச காளி, சமரேச துர்க்கா."

¶ "மரத்தைமறைத்து மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்ததுபார் முதற்பூதம்
பரத்தின் மறைந்ததுபார் முதற்பூதம்."—திருமந்திரம்.

12. பாகவானுக்கும் தேவிக்கும் ஊடல் தீர்த்துவைத்த சுந்தரமூர்த்திகள் தேவியருளால்
"காமேச்வரமுகாலோககல்பித ஸ்ரீகணேச்வராயைநமஃ" என்னும் இரஹஸிய
நாம உண்மையை நிதரிசனமாய்க்கண்டு கிருதார்த்தரானதைச்
சொல்லுகிறது.—சுந்தரமூர்த்திநாயனார்வாக்கிது.

(12) கரபாத்ர மென்றென்தாய் கசிந்துரை செய்தசொல்
கரபாத்ர மந்த்ரமாய்க் காதிலே நுழைந்தது
கரபாத்ர மந்த்ரம்பின் தந்த்ரமாய் மாறியே
† கரபாத்ர சாமியாம் யந்த்ரமா யிசைந்தது !

13. சுந்தரமூர்த்தி நாயனார் தன் ஸ்வானுபவத்தைச் சொல்கிறார்.

(13) இசைந்தது பார்யந்திரம் ஈஷணைத் திரியம்விட்டு !
இசைந்தது பார்சலநம் நிச்சலன தேவியாய்
இசைந்தது பாருலகம் அப்போடுப் பதுபோல
இசைந்தது பாருடனும் உயிரோடொன் றுகவே !

14. சுந்தரர்தன் ஸ்வானுபவத்தைக்கொண்டு வேதசாஸ்திரங்களின் சத்தையெல்லாம்
வெண்ணெயாய்த்திரட்டி யெடுத்துச்சொல்கிறார்.

(14) உயிரோ டொன்றாய் உடல்சே ரவுமே
தயிரோ டொன்றாய்ப் பால்சேர் தன்மைபோல்
உயிருட லென்னும் பேதம தொழிந்து
தயிரொடு பால்சேர் வெண்ணெய தாச்சே !

15. சுந்தரமூர்த்தியடிகள் பூரணத்தில் நிர்வாணதீக்ஷைபெற்று பகவானால் ஆச்சாரியாபிஷேகம்
செய்யப்பெற்றபின், தான் மண்ணில்வந் துதிக்கநேரிட்ட பூர்வவாசனையைப்பழித்து,
நித்தமுத்த சுத்தமாயுள்ள சுபவாசனையை யேற்றிச்சொல்கிறார்.
(ஸமயாச்சாரியரான சுந்தரர்வாக்கிது.)

(15) வெண்ணெய தானபின் மத்தடி படுவானேன் !
வெண்ணெயா யிருக்கநான் நெய்க்கழு வானேன் !
வெண்ணெய்தயிர் பாலுண்ண வேணபட்டும் தானிருக்க,
வெண்ணெய்தயிர் பால்விட்டு மண்ணையுண்ண வேண்டுமோ !

குறிப்பு:—இதனால் பூரணத்தில் ஸ்வானுபவம் சித்தித்தபின் சுகதுக்கரூப அலைகளால் முன்னும் பின்னுமடித்து மோதப்படப்பெறும் உலகானுபவத்திற் சிக்கியுழல வேண்டிய நிமித்தமில்லையென்றும், உலகானுபவத்தால் வரும் சுகபோகபோக்கியங்களெல்லாம் ஸ்வானுபவமுதிர்ச்சியில் சங்கல்பமாத்திரத்தாலே சித்திப்பதாயிருப்பதால், அபரோக்ஷஞானம் சித்திக்கப்பெற்றவருக்குப் பரோக்ஷஞானம் ரஸிக்காதென்னும் உண்மையை உணர்த்தினபடி யென்க.

† துதிக்கையையே பாத்ரமாகக்கொண்டு மோதகமுண்பவராதலால் சித்தி விநாயகருக்குக் 'கரபாத்ர சாமி' யென்னும் பேர் பொருந்தலாயிற்று. 'யந்திரம்' என்றாலும் 'தேஹம்' என்றாலும் 'மூர்த்தம்' ஒன்றையே குறிக்கும்.



16. உமையம்மை மயூரவடிவமாய் மஹாதேவரைப்பூஜித்து அவரைத் திருமணம் செய்து கூடல் ஊடல்
ஆடிய 'புன்னைவன' க்ஷேத்திரமாகிய ஸ்ரீகபாலீச்சரத்தில் மெய்யன்பர்க் கமுதளிக்கும்
பேரமுதையெளிதிற்பெற்றுய்யவேண்டில் 'கரபாத்ரம்சாமியாகக் கைநீட்டி
நிற்கவேண்டும்'என்று முடிவுரைசொல்லி அனுபவாதீதமுரைக்கிறார்.

(16) மண்ணையுண்ண வெண்ணங்கொண்டால் சலனசக்தி தயைவேண்டும்
கண்ணைப்பிசைந் தழுவேண்டும் காயகல்பம் தேடவேண்டும் !
என்னையாண்ட அன்னைதன்னைப் புன்னைவன மடமயிலைப்
பின்னையாண்டு ஊடல் தீர்த்தான் பேரமுதை யுண்ணவேண்டில்,—
கரபாத்ரம் சாமியாகக் கைநீட்டிநிற்கவேண்டும் !
கரபாத்ரம் நீட்டிநின்றால் அமுதளிப்பா னுளம்பூரிக்க !

ஸ்ரீ கல்பகாம்பாள் ஸமேத கபாலீச்சரர் திருவடிகளேசரணம்.

ஓம் தத் ஸத்.

---

"THE COMING OF THE THEOSOPHICAL MILLENNIUM."

## "அவதாரபுருஷர் தோன்றும் கிரஹசார நிலை."

*அவதாரபுருஷர்க்கு ஆயிரமாண் டென்பர். ஆண்டெனச் சொல்வதும் ஆரமேயாகும். ஆரமதாவதும் ஜோதி ரூபம்மே. காலத்திற் சோதியைக் கிரணமென் றுரைப்பர். கிரணமாவதும் வியஷ்டிபாவம்மே. வியஷ்டிக்கிரணம் சமஷ்டியிற் சூரியன். சூரியன் என்பதும் ஆதித்தன் தானே. ஆதித்தன்கலை பன்னிரண்டாமே. பன்னிருகலையும் பன்னிராதித்தனும். அண்டாதித்தன், பிண்டாதித்தன், என்னுமேயவற்றை எண்ணுவர் மேலோர். அண்டத்தி லுள்ளது பிண்டத்திலும்ஆமே. அண்ட பிண்டத்திலும் அவனே யொளிர்வன். அண்டபிண்டமும் சமஷ்டி வியஷ்டியே. சமஷ்டிபாவம் சங்கியையில் ஒன்றே. ஒன்றே பலவாய்ப் பிரியினும் பொருந்தும். பலவுமொன்றுவதே பிரகிருதியிற் சமஷ்டி. வியஷ்டிபாவம் விரிந்ததில் ஒன்று. ஒன்றே பலவாய்ப் பிரிந்து விரிந்தபின், விரிந்ததில் ஒன்று வியஷ்டிபாவம்மே. சமஷ்டி வியஷ்டியைச் சங்கியையால் உணர்த்துவான் "ஏகன், அனேகன் வாழ்க" வென் றோதினர். ஓதினவுண்மையை உணரா மூடர்கள் வாதில் நுழைந்து வழக்குரைத்துளறுவர். கோதில் உண்மையைக் குருமுகமறிந்தவர் வாதில் நுழைந்து வழக்குரைசெய்யார். காதல் நிறைந்தவர் காதியைநீக்கி ஹோமஞ்செய்தவர் ஹாதியைப் பற்றுவர். காதி, ஹாதியெனவித்தையிரண்டு. காதி வித்தைகாண் கர்மத்தை வளர்க்கும். கர்மிகட்கது காமத்தைமூட்டும். காமத்தைத்தஹித்துப் பின் காதியை ஓதினர் கேளடபாதர் அவரேயாவர். காமதஹனத்தைக்காணுதயோகியர் 'பாவனுபூஜையால்' ஹாதியைத் தொழுவர். பாவனுபூஜை செய்யும் விதமது பாவனோபநிஷத்திலே "பார்ப்பார்" பார்க்கவே. பார்க்கப்பார்த்துப் பிரயோகமுமறிந்து பூஜைமிகச்செய்வார் பூரணராவார். பூரணகாரணசாரணராவார்காரணகாரியதோரணையறிவார். ஹாதிவித்தையையனுசரித்தோதினர் ஹம்ஸனுமந்த ஆத்மனேயாவர். ஹாதிவித்தையால் ஆத்மனே யானவர் காதிவித்யையைக் கண்டனு போகிப்பர். அனுபோகம் முதிர்ந்த ஆத்துமபூரணர் 'கைவல்யசித்தர்" ஆகியும்பின்னர், மன்னுயிரைத் தன்னுயிராக்கொண்ட, யாதவரானதால் மனமிரங்கி,

பின்னும் பரையோக சாமர்த்தியத்தாலே, பாரினில் அவதாரமாகிநிற்பார். ஸநாதநதர்மத்தைச் சாதிக்கவென்றே ஜன்ம மெடுத்தவர் ஜகத்திலே வாழ்வார். தாமரையிலையிற் றண்ணீர்போ லிருந்தவர் ஒட்டியு மொட்டாமலே யுழைப்பர். இப்படியவதாரம் ஆரும் புருஷர்க்கு ஆனதோர்சங்கியை ஆயிரமே. ஆயிரமான சங்கியையை உலகத்தோர் ஆயிரம் ஆண்டாய் அநுசிந்திப்பார். மாதவர் அஃதை "ஆயிரம் ஆரமாய்" ஆத்மபூரணத்தில் தொழுவர். ஆத்மபூரண மிருக்குமிடமது "ஸஹஸ்ராரம்" எனப் பேர் பெறுமே. இப்படியாக "மில்லங்கியம்" (Millennium) என்று சொல்லும் ஆயிரத்தின் பாவனை ஐதிகபாவத்தால் ஆண்டாமே. ஐதிகத்தைபொட்டி அவதாரபுருஷரின் ஆத்மவுண்மையை யினிச்சொல்வோம்.

இப்படியாக அவதாரபுருஷர்க்கு ஆயிரம் ஆண்டென்பர் ஐதிகபாவம் தான்முதிர்ந்தோர். ஆண்டாயிரமே, யாறுமவர்கள், இருப்பது எப்பவும் "ஸஹஸ்ராரமே". மனுபுத்திரர்கட்கு மண்ணில் நூறு ஆமுண்டு. நூறாந்தன்னையே நூற்றாண்டாக்கி அண்டத்தின் அளவால் அதையுரைப்பர். அதுவே மண்ணில் மனிதர்க்குப்பூர்ண ஆயுசு வென்பர். மண்ணில் நூறாய்விளங்குமதே விண்ணில் ஆயிரம் ஆகிவிடும். எப்படியெனிலோ, இயம்பக் கேண்மின்: பிரகிருதியெப் பொழுதும் நவாத்மக மானது; தசமியிலிருப்பது புருஷதத்துவம். ஒவ்வொன்றும் பத்துக்கூறாய் விளங்கும் வியஷ்டிபாவம் மேலிடவே. நவாத்மகமான பிரகிருதி ஒன்பதும் ஒன்றுபத்தாகவிருந்திடலப்போ,ஒன்பதே தொண்ணூறதுவாமே. அப்பாலுள்ள தசமியில் பத்துள தஃதைச் சேர்க்கில், தொண்ணூறும் பத்தும் நூறாமே. நூறான இந்த சங்கியை தானே பூரண ஆயுளென்பர் மனிதர்கட்கு. சாதகபுருஷராமனிதர்க்கொன்றாவது சாத்திய சித்தர்க்குப் பத்தாமே. ஆகவே சாதகர்க்கு "நூறும்" ஒன்றது சாத்தியபுருஷர்க்கு நூறுபத்தாம். நூறுபத்தான ஆயிரமஃதையே சித்தர்வப தென்றுசாதிப்பர். சித்தர் இருப்பது காலங்கடந்த புருஷதத்துவம் அதிலேயே. தத்துவமான புருஷனிருப்பதும் தசமியிலென்று ஓதினேமே. தசமியிலுள்ளபுருஷதத்துவத்தில், புருஷன் ஒருவன் என்றுமுளான். 'தத்துவமெங்குண்டுதத்துவனங்குண்டு' என்னும் திருமந்திரத்தாலே, மந்திரமாமந்த புருஷதத்துவனே தந்திரமாகவும் உத்பவிப்பன். மந்திர தந்திர உற்பத்தியைப் பௌஷ்கராகமத்தில் தான்பார்க்க. "பிந்துவென்றால் என்ன?" வென்று, போதபூரணத்தி லுரைத்த பதிகம்பத்தாலும் உணரலாமே. * மந்திர தந்திரமான அவனே ஹம்ஸனும் ஆத்மனுமா யிருப்பன். மந்திர தந்திரத்தால் மண்ணிலுதிப்பானை அவதார புருஷன் எனச் சொல்வார். அவதாரமானவன் ஆத்மபுருஷனே; ஆத்மனே யவதார புருஷனுமாவன். அவதார புருஷன் தோன்றக் கிரகநிலை ஒன்பதும் ஒன்றாய்ச் சேரவேண்டும். கிரகங்கள் ஒன்பதும் ஒன்றாய்ச் சேரின் சமஷ்டிபாவம் தானுதிக்கும். சமஷ்டிபாவத்தில் உதிக்கும் ஆத்மனே "அவதார புருஷன்" எனக் கொள்க. இத்தனையும் சொல்லி நிற்கையிலே "பூர்ணசந்திரோதயம்" என்னும் பத்திரிகை யொன்று தான் கிளம்பி பார்வைக்கு முன் வந்து நிற்கிறது. நிற்கிற பத்திரிகையைத் தான் பார்த்து நித்யமா யுள்ளதை யெடுத்துரைப்போம்;

"இக்காலமே நன்மையைக் கொடுக்கும் நற்காலம்" எனப் புகழுமது. காரணம் கேட்கில், "மஹாபுருஷர் அவதாரம் ஆகவேண்டிய காலம்" எனவுரைக்கும். பின்னுமது சொல்வதைச்சுடக் கேண்மின்:—

* இந்த விவேகசிந்தாமணி யின் 14 - 1 - ம் பக்கம் பார்க்க: உமாமஹேசுவரர் திருக்கல்யாண மஹோற்சவக் காட்சி: கோயிற் றிருப்பதிகம்: "பிந்துவென்றால் என்ன?"



THE REGISTRAR OF BOOKS REGISTERED 6 - JUL 1910 MADRAS.

"இவ்வருஷம் ஜனவரிமீ 11 உ யில் கிரகங்களின் நிலையால் அவதாரருஷர்கள் ஜனிக்கும் உற்ற காலம் என்று அறிகிறோம். அனேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு கிரகசாரம் இவ்வித மிருந்ததாம் சுமார் 10, 000 வருஷங்களுக்குமுன் இவ்வாறு இருந்தது என்று ஜோதிஷசாஸ்திரியான ஸட்கிளிப் என்பவர் சொல்லுகிறார். அம்மஹா புருஷர் சுமார் 30 - 40 வருஷங்களுக்குள் நம்முடைய ஊனக்கண்ணுக்கு முன்தோன்றுவரென்று பிரஹ்மஞான புத்தகங்களின் (Theosophical Books) மூலம் தெரிய வருகிறது."

அவர் எப்படி இருப்பரென்னில் பின் வருமாறு அவர் இலக்ஷணங் கூறுகிறார்.

"வானத்தில் மண்ணில் பெண்ணில் மைந்தரில் பொருளில் ஆசை, தானற்றுத் தமையும் நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர் ஞானக்கண் கொண்டேயன்றி நாடருஞ் ஜோதி, மண்ணோர், ஊனக்கண் கொண்டும்காண உடன்விளை யாடல் செய்வான்."

"ஞானக்கண் கொண்டேயன்றி நாடருஞ் ஜோதி" நிமிஷத்துக்கு நிமிஷம் உண்மையுணர்ந்த உத்தமர் தம் புனித உள்ளத்திற் பிறந்து கொண்டே யிருக்கிறது பிரத்தியக்ஷபூர்வகமாக ஞானிகள் அறிந்துள்ளதோர் அநுபவமாம். அப்படிப்பட்ட பரஞ்ஜோதியானது "மண்ணோர் ஊனக்கண் கொண்டும் காண உடன்விளையாடல் செய்வான்" என்றதனால், "அவதார புருஷராய்" த் தோன்றுவர் என்று சொல்கிறார். ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குத் தன் ஸ்வரூபத்தைக் காட்ட வேண்டி "ஞானசட்சுஸ்" கொடுத்துப் 'பார்'! என்றார். அவன் ஊனக்கண்ணுக்கு ஸ்ரீகிருஷ்ணன் மச்சானாகத்தான் பட்டார். அப்படியே "மண்ணோர் ஊனக்கண்கொண்டு" பார்ப்பது ஊனமாகவே தானிருக்கும். ஞானக்கண் உண்டானால் அவதாரபுருஷர்களை எப்பொழுதுந் தரிசிக்கலாம்.

மூலக் கொள்கைகளான ஸநாதனதர்மங்களின் ஜயமே "அவதார லீலை." வல்லவருக்குப் புல்லுமாயுதம் என்பதுபோல, தர்மம் தலையெடுக்கும் காலம் வந்தால், ஒவ்வொருவர் உள்ளத்திலும் தர்மசிந்தை யுதிக்கும். இதுவே அவதார புருஷர் உதிப்பதற்கான நல்லகாலம். ஆகையால் "ஸத்யம் வத: தர்மம் சர" என்னும் வேதவாக்கை யனுஷ்டித்து ஜனங்கள் எப்பொழுது ஏகோபித்து நடக்கிறார்களோ அப்பொழுது அவர்கள் தர்மசிந்தை யெல்லாம் கூடி யுருவெடுத்ததுபோல் ஒரு உருவம், ஒன்றாகவோ, பலவாகவோ ஒன்றிற்பலவாகவோ பலவிலொன்றாகவோ தோன்றும். ஆகையால் "நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க, இமைப்பொழுது மென்னுள்நின்று நீங்காதான் தாள்வாழ்க" வென்று ஜனங்கள் ஏகோபித்துத் தத்தம் ஹிருதய மத்தியிலுள்ள தஹராகாசத்தில் எப்பொழுது இறைவனை இடைவிடாது தொழுது துதிக்கிறார்களோ அப்பொழுது அதுவே "நற்காலம்" ஆகும். அக்காலத்தில் "எண்ணினார்க் கெண்ணினபடி யிருந்தருளீயு மீசன்" "ஏகன், அனேகன் வாழ்க" வென்றபடி ஏகனாகவும்அனேகனாகவும்இருந்து அருள் சாதிப்பன். இதுவொன்றே யொருகாலும் பொய்க்காத உத்தம "கிரகசாரநிலை."

"பக்தமான ஸஹம்ஸிகாயை நம:" "முனிமானஸ ஹம்ஸிகாயை நம:" என்னும் இரஹஸ்யநாமங்களால்,பக்தர்கள் மனஸிலும், முனிவர்கள் (Thinkers) மனஸிலும் ஹம்ஸமந்த்ர தேஹத்தோடு சதாசிவ மூர்த்தியாய் அவதரித்துச் சதா லீலைசெய்துகொண்டிருக்கும் பகவான் "மண்ணோர் ஊனக்கண் கொண்டு பார்க்க" என் லீலைசெய்து விளையாடுவதில்லை? திருப்பதி மஹாத்மியத்திலே ஸ்ரீவேங்கடாசலபதி யவர்கள் ஆகாசராஜனோடு சம்பந்தஞ்செய்து "ஊனக்கண்கொண்டு பார்க்கவும் காண" லீலைசெய்துவர, அஃது அநர்த்தமாய் முடிந்தது கண்டு மௌனியாகி ஸ்வப்னாவஸ்தையில் மட்டும் தோன்றுவாராகி ஜாக்ராவஸ்தையில் காண்போர்க்கு சிலையாக அமர்ந்து நின்றார். "குழந்தையும் தெய்வமும் கொண்

டாடு மிடத்திலே" யென்பது பழமொழி யல்லவோ! பகவானைக்கொண்டாடாது ஊனைக் கொண்டு ஊனைவளர்த்து ஊனே பெரிதாய் நினைப்பார்க்குப் பகவான் ஊனே யுருவாய்த் தோன்றிக் கல்லாய்ச் சமைந் திருப்பதன்றி புருஷோத்தமனாக விருந்து "உடன் விளையாடுவது" எப்படி? விளையாடினாலும் அவன் விளையாட்டைக் காணக் கண்படைக்க வேண்டாமா? "அந்தர் முகத்திலே" ஆராதிப்பதற் கெளியவரான, பகவான் "பஹிர்முக துர்லபா" என்றபடி பஹிர்முகத்திலே காணத் துர்லபமாய் விடுவார். ஆகையால் திருமூலர் ஓதிய திருமந்திரம் பொய்க்காது.

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்ஙனே!"

அவதார புருஷரைப் பக்திபென்னும் உள் நம்பிக்கை ஊன்றிப் பழுத்த ஊக்கண்ணாலன்றி "ஊனக்கண்கொண்டு காண்பது" எப்படி? ஊனமில் உருவை ஊனக்கண்கொண்டு பார்க்கில் ஊனமாய்த்தான் விளங்கும்.

# "The King is dead, Long Live the King."

## Reminescences & Recollections.

The following letters received 10 and 12 years ago are now first published, to show how King Edward the Man outshone the mere King. If the great Crown of the United Kingdom shed its luster on the brow of the man who wore it, the Man in turn shed more luster on the Crown, because the Light of his heart was greater than the brilliant gems that adorned the ancient Crown of England.

*"Marlborough House, Pall Mall, S. W. 28. July, 1900. Dear Sir,—I have submitted your letter and enclosures to the Prince of Wales. His Royal Highness desires me to express to Mr. Swaminatha Aiyar his best thanks for the copy of Verses which he has been good enough to transmit to him through you" Yours faithfully, Francis Knollys.*

(Now, Lord Knollys).

Miss Manning, the devoted Secretary of the National Indian Association, who had done so much to bring England & India together, & who visited the Editor of this Journal in his humble home in response to an invitation from himself & his wife, in a covering letter, says:—

*"I told the Private Secretary (to the Prince of Wales). that you were actively interested in the improvement of sanitation in Villages and Towns and in Education."*

Two years earlier, on 24th Novr, 1898, Sir Francis Knollys had written in reply to a letter submitting a Copy of the Life of the Queen to the acceptance of His Royal Highness as follows:—Marlborough House, Pall Mall, S. W. 24, Novr, 1898. "Sir,—I



have submitted your letter to the Prince of Wales, and I am desired by His Royal Highness in reply to request you to thank Mr. Swaminatha Aiyar for the copy of the work on the Queen which he has transmitted to him through you. I am &c *Francis Knollys.*"

"This change of name from Black town to George town is made at the express desire of His Royal Highness the Prince of Wales to whom the popular sentiment in the matter has been represented."—Chief Secy. Mr. M. Hammick in the Fort St. George Gazette of 27th Jany. 1906.

## "வாழையடிவாழையாய் வாழ்கவேயரசு."

இந்த மேமீ 6உ வெள்ளிக்கிழமை இராத்திரி பதினொன்றே முக்கால் மணிக்கு நமது சக்ரவர்த்தியும் இராஜாவுமான மாக்ஷிமை தங்கிய ஏழாவது எட்வர்ட் அரசர் சுவாசக்குழலைப்பற்றிய நோயால் சிறிது காலமட்டும் அசௌக்கியமாயிருந்து திடீரென்று காலமானார். அவர் மூச்சடங்கவும் அரசுரிமை வேல்ஸ் இளவரசரான மேன்மை தங்கிய ஜார்ஜ் அவர்களதாக, அவர் ஐந்தாவது ஜார்ஜ் என்னும் பேரால் சீமைக்கு ராஜாவும் நமக்கு சக்ரவர்த்தியுமானார். க்ஷேத்திர க்ஷேத்ரஜ்ஞவிபாக யோகத்தையுள்ளபடி உள்ளாய்ந்தறிந்தவர்கள் "ஊனேமறிவதென்றாதேடாகாளம், உணர்வே ப்ரஹ்மமென்றாதேடாகாளம்" என்ற தத்துவராயர் வாக்குப்படி தேஹம் விழுந்துபோக தேஹி அஃதோடு அழியாமல், அழிவற்ற வஸ்துவாக ஆத்மஸ்வரூபத்தையடைந்து ப்ரஹ்மாத்மஐக்கியமாம் சாயுஜ்ய சாம்ராஜ்யத்தை உடனேயேயோ அல்லது எஞ்சிநின்ற கர்மம் கழிந்த பின்னரோ அடைகிறான் என்று நன்றாக அறிவர்.

"அரசனிறந்தான் வாழ்கவேயரசுநீடூழியும்" என்னும் ஸத்யவாக்கு அரசன் மறித்தவுடனெழும் அசரீரியான பிரஜாவாக்கு. இதன் பொருளென்ன வெனில் தேஹமான அரசன் இறந்தான், தேஹியான அரசன் வாழ்க வென்பதாம். வாழையானது பலனையீன்றதும் நசித்துப்போவது நிச்சயமானாலும், அதன் அடியிலிருந்து முளைகிளம்பி மேல்வாழை நசிக்குமுன் அடி வாழை தலையெடுத்துக் கிளம்பி விடுகிறது சகஜமாயிருக்கிறது. ஆதலால் தான் "வாழையடிவாழையாக வாழ்க" வென்கிற மூத்தோர் வசனம் உண்டாயிற்று. அதன் கருத்து என்னவென்றால் மிருத்யுவசத்தனான (மரணத்துக்குட்பட்டவனான) மனிதன் தேஹமாத்திரத்தில் நாசசகிதனாயிருந்தாலும் தேஹிமாத்திரத்தில் நாசரஹிதனாயிருக்கிறான் என்னும் ஆத்மதத்துவ உண்மையை உணர்த்துவதேயாம். அதுபோல, அரசன் பிறப்பான் இறப்பான். அரசு பிறப்பிறப்பின்றி "வாழையடி வாழையாக" நீடித்து நித்தியவாழ்வெய்தியிருக்கும். அப்படியே தேஹோபாதிகனான மனிதன் பிறப்பான் இறப்பான். தேஹோபாதி நீங்கிய சமஷ்டிஜீவனான மனு "வாழையடி வாழையாக" நீடித்து நித்தியவாழ்வெய்தியிருப்பான். இப்படியாக, மனிதன் மிருத்யுவுக்கு (மரணத்துக்கு) உட்பட்டவனாயும், மிருத்யுவைக்கடந்தவனாகவு மிருக்கிறான். அதாவது காலாதீனனாயும், காலாதீதனாயுமிருக்கிறான். காலாதீனனான (காலத்தின் வசப்பட்டவனான) மனுஷன் காலாதீதனாவது (காலத்தைக்கடந்தவனாவது) எப்படி? பிராகிருததர்மத்தில் இதற்கு மரணம், மிருத்யுவென்றுபெயர்.

'ஊரெலாங் கூடி ஒலிக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமெனப் பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.'

—திருமந்திரம்.

இது லோகாயத சம்பிரதாயமான தர்மம், தேஹத்தை அக்னிக் கிரையாக்கிச் சுட்டெரித்தாலும் சரி, பூமிக்கிரையாகப்பிரேதத்தைக் குழியிலிட்டு அடக்கம் செய்தாலும் சரி, ஐம்பூத சையோகத்தாலுண்டான ஸ்தூலதேகம் சையோகம் விட்டுப்பிறிந்து பஞ்சபூதங்களாக மாறுவது நிச்சயம். நமது எட்வர்ட் அரசரின் தேஹ அடக்கம், மேமீ 20௳ வெள்ளிக்கிழமை யன்று மத்தியானம் நடந்தேறியது. அன்று உலகெங்கும் பரவியுள்ளபிரிடிஷ் இராஜ்யத்தில் எல்லாரும் தத்தம் தொழிலை விட்டு இறந்துபோன அரசனுக்காகத்துக்கம் பாராட்டினார்கள். உலகவழக்கில் இது சகஜமாம்.

காலாதீனன், காலாதீதனாவது எப்படி? யென்று கேட்டோம். பிராகிருதிதர்மத்தை விட்டு ஆத்மதர்மத்தையொட்டிப்பார்த்தால், அதற்கு உபாயம் வேறு இருக்கிறது. அந்த உபாயத்துக்கு "அத்யாத்மயோகம்" என்று பேர். க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞ சம்பந்தியான டீலிதன், க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞ விபாகயோகத்தாலே, தேஹம், தேஹி யென்கிற தேஹாத்மவிசாரஞ் செய்து தேஹத்தைவிட்டு தேஹியை (ஆத்மாவை)ப்பற்றி நின்று, "காலவஞ்சனம்" என்னும் யோகசாதனத்தால், லயயோகத்தையனுசரித்து, தேஹாதீதனாய் (தேஹோபாதி ரஹிதனாய்) உன்மனியவஸ்தையடைந்து, மனோன்மனியைப் பூஜித்து அந்தப் பராசக்தியின் அருளால், தன் இச்சாமாத்திரத்தினாலே தேஹத்தை விட்டு தேஹியாகிச் சாக்ஷி மாத்திரமாய் நின்று பார்த்திருப்பன். இப்படிப்பட்டவர்கள் யோகசித்தர்கள் என்று சொல்லப்படுவார்கள். * கிறிஸ்துவுக்கு இந்தச்சித்தியுண்டு. இவர்கள் அத்யாத்மயோகத்தில் சித்தியடைந்தவர்கள் என்பது கருத்து.

சாதன மின்றிச்சாதிப்பாரில்லை. யோகசாதனங்களில் பழகிவருகிறவர்கள் சாதகர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

சாதனங்களைப்பற்றிநின்று சாதித்த தீரர்கள் சித்தர்கள் என்று சொல்லப்படுவார்கள். உதாரணமாக, இவ்விவேகசிந்தாமணியைத் துவக்கும் பொழுது அஃதை 'அறிவைப்பரவச்செய்வதற்கான'தோர் சாதனமாகக்கொண்டு சாதகர்தேடி யதை நடத்தி வந்த "மாயாண்டிப்பிள்ளை" சாதகபுருஷனும். 'கிராமாண்டி' யென்று வெளிவந்தவர் அந்தமாயாண்டியின் பிரதிபாசமான (கண்ணாடியில் முகம் போலும் பிரதிபிம்பாரோப) வியஷ்டித்தோற்றம். கிராமாண்டியின் சமஷ்டிபாவம் மாயாண்டி. மாயாண்டியின் வியஷ்டிபாவம் கிராமாண்டி. அறிவைப்பரவச்செய்வதான தர்மத்தை யனுசரித்து அதையே கடைப்பிடியாகப்பிடித்து "அறிவெனுந்தேவியை" ப் பூஜித்து, அவள் பிரத்தியக்ஷமாகப்பெற்று, சாதிக்க யத்தனித்ததை சாத்தியமாகக்கண்டவர், "மாயாண்டிச்சித்தர்." இப்படி சாதனையைக்கொண்டு சாதித்தவரான சித்தபுருஷராம் மாயாண்டியினிடத்தே சமஷ்டி வியஷ்டி. பாவங்களிரண்டு மொன்றாய்க் கலந்து ஏகீபாவப்பட்டிருக்கும். இனி அவர்தம் இச்சாமாத்திரத்தினாலே மாயாண்டியாகவும், கிராமாண்டியாகவும், 'மாயாண்டி, கிராமாண்டி, யெல்லாம் சேர்ந்து தன்னிலடக்கமான மாயாண்டிச்சித்தனாகவுமிருப்பர். இது ஸ்வானுபவத்திலிருந்து கண்டதோர் திருஷ்டாந்தம். இப்படியே ஒவ்வொருவரும் தம் கடமையை ஸ்வதர்மம்தப்பாமல் செய்வதினால் அக்கடமையைக் குறைவறச் செய்து முடித்தமாத்திரத்தினால் நிறைவெய்தி சாதனையைச்சாதித்துக்கொண்ட சித்தபுருஷராகலாம். "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா!" என்று கேட்ட சிவவாக்கியர் பத்னியும் இல்லறதர்மத்தைக்குறைவறச்செய்து அதனால் சித்தியடைந்தவரல்லவோ! காலஞ்சென்ற நமது எட்வர்ட் அரசர் தாம் சாதனமென்று கொண்டதைச் சாதித்துக்கொண்ட "சித்தபுருஷர்" என்பது நம்முடைய மதம் (அபிப்பிராயம்). எப்படியெனில், சொல்வோம்:—

* Vide, St. John X. 17-18.



முதலாவது இவரிடத்தில் ஜீவகாருண்யத்தின் பிரதிபாவமான (பிரதிரூபம் அல்லது சாயலான) அனுதாபசிந்தை பூரணமாயிருந்தது. 1875-ம் வருஷத்தில் இவர் இந்தியாவுக்கு விஜயமாய் வந்திருந்த பொழுது அது பிரத்தியக்ஷமாயிற்று. பின்னர் 1898-ம் வருஷத்தில் நாம் விக்டோரியா மஹாராணியின் சரித்திரம் வெளியிட்டபோது அஃதை யவருக்கு அனுப்ப அவர் அதை யேற்றுக்கொண்டனுப்பியகடிதத்தால் இவர் அனுதாபகுணம் மேல்மினுக்கானதல்லவென்று தெரிந்தது. பின்னர் 1900-ம் வருஷத்தில் இவர் உயிருக்கு ஆபத்து நேர்ந்த பொழுது இவருக்கு வாழ்த்துக்கூறி வெளிவந்த பாக்களடங்கிய விவேகசிந்தாமணி சஞ்சிகையொன்றை இவர்க்கு அனுப்ப, அப்பொழுது அவர் இந்த ஏழையினிடத்து எடுத்துக்கொண்ட சிரத்தையினாலும் அவருடைய "Best thanks" பூர்ணவந்தனத்தைச் சொல்லும்படி யெழுதினதினாலும் அவர் பரமதயாளு என்றுநமக்குத்தெரியவந்தது. அப்பொழுது நாம் கிராமசுகாதாரத்தைப்பற்றிவனுவில் சிரத்தையெடுத்துக்கொண்டுழைத்து வந்தோம் வித்யாசம்பந்தமான விஷயங்களிலும் எப்போதும்போல சிரத்தை பூண்டுழைத்துவந்தோம். இது சங்கதிகளை நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன் காரியதரிசியான மிஸ்மானிங் துரைசானியவர்கள், சென்னைக்கு விஜயமாய் வந்திருந்த பொழுது, ஊருக்குழைக்கிறவனென்கிற தயாவினால் இவ்வேழையின் வீட்டுக்குவந்து குஞ்சுகுழந்தைகளையும் பத்னியையும் பார்த்துச்சந்தோஷித்துப்போனவ ராதலால், இவன் செய்து வரும் வேலைகளை மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசரான எட்வர்ட் அவர்களுக்குத்(அப்புறம் தான் அவர் பட்டத்துக்கு வந்தார்) தெரிவிக்க அவர் ஹிருதயமலர்ந்து, முன் பின் கண்டறியாத இவ்வேழையிடத்து ஊருக்குழைக்கிறவனென்கிற வாஞ்சையால் தயவுமிகக் கூர்ந்து விசாரித்து அவருடைய பூர்ணவந்தனத்தைத்தெரிவிக்கும்படி ஆஜ்ஞாபித்தார். அவருடைய காரியதரிசியான ஸர் ப்ரான்ஸிஸ் (இப்பொழுது லார்ட்) நோலிஸ் அவர்கள் அவ்வாஜ்ஞைப்படியெழுதியகடிதத்தில் 'His Royal Highness desires me to express to Mr. Swaminatha Aiyar his best thanks for the Copy of verses which he has been good enough to transmit to him through you" என்று எழுதியிருந்தார். இதை நாம் அப்பொழுது பிரசுரிக்கவில்லை. ஏனெனில், பரஸ்பரம் ஹிருதயபூர்வகமாய் உள்ளமுணரவுணர்ந்த விஷயங்கள் "அஹப்பொருட்" தன்மைவாய்ந்தவையாய் விடுவதால், அஃதைப் பல்லாரறியப்பகர்ந்து கூறல் ஹிருதயத்துக்கு இதமாயில்லாதது பற்றியும், உண்மை உணரற்கரிதுபற்றியுமென்று கொள்க. இப்பொழுது வெளியிட்டதேனெனில் அரசாயிருந்து உலகறிய சமாதான புருஷர் (Peace-Maker) என்று பேர் பெற்று விளங்கின நமது அரசர் பட்டத்திற்கு வந்த மாத்திரத்தினாலேயே பேர் விளங்கப்பெற்ற வராயின்றி ஏற்கனவே யவரிடத்திருந்த ஆத்மப்பிரகாசம் அவர்பட்டத்துக்கு வந்ததால் குன்றின்மேல் விளக்குப்போல் பிரகாசிக்கலாயிற்று என்பதை வற்புறுத்தவே யாம்.

அவர்பட்டத்துக்குவந்த பொழுது அவர் பிராணனுள்ளமட்டும் ஜனங்களுடைய க்ஷேமத்தையே நாடி யுழைக்கக்கங்கணம் கட்டிக்கொள்வ தாகச்சொன்னார். அவர் பிராணன் நீங்கிய வெள்ளிக்கிழமையன்றும் அவருடைய அந்தரங்ககாரியதரிசியான லார்ட்நோலிஸ் அவர்கள் தேகஜாட்டியமாயிருக்கையில் வேலை செய்ய வேண்டாமேயென்ன, அதற்கு அவர் "அப்படியில்லை: கடமையினின்றும் பின் வாங்கேன். கடைசிவரையில் செய்கடனைச்செய்தேதீர்ப்பேன்" என்று சொல்லித்தம் கடமையைச்செலுத்தினாராம். இப்படி ஸ்வதர்மத்தைக்காப்பாற்றிய உத்தமசித்தமுள்ளவர் தர்மசாதனமாகத்

தான் கொண்டதைச் சாதித்தவராகாரோ! அவர் தர்மசாதனையைச் சாதித்த சித்தபுருஷரென்பதே எல்லாருக்கும் சம்மதமாம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்து வந்ததில், "மனிதரில் நான் அரசனாவேன்" என்றார். ஆகையால் அரசன் ஆத்மஸ்வரூபனாயிருக்கத்தக்கவன். ஆத்மா வென்பது அறிவு. அறிவு தர்மஸ்வரூபத்தை ஆஸ்ரயித்து விளங்குகிறது. அதனால் தான் தர்மஸ்வரூபமான விருஷபம் அதற்கு வாகனமாகிறது. தர்மமழிந்துபோய் அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் பகவான் தர்மத்தை நிலை நிறுத்தத் தான் அவதாரமாகிறதாகச்சொல்லியிருக்கிறார். தர்மம் தலைகாக்குமேயன்றி அதர்மம் தலைகாக்காது. தர்மஸ்வரூபியாக விளங்கிய அரசன் திடீரென்றிறந்தான் என்றால், தீர்க்கதரிசிகள் உள்ளத்தில் அதர்மம் தலையெடுத்ததால் தான் தர்மஸ்வரூபம் மறையலாயிற்றென்று தானே படும். தர்மாதர்மங்களுக்கு நியாமகனாயிருப்பவன் பகவான். அவனன்றியோரணுவும் அசையாது. தர்மஸ்வரூபியான நமது எட்வர்ட் சக்ரவர்த்தியாம் அரசர் உலகத்தாருக்குத் திடீரென்று மறைந்தாராயினும், திரிகாலஞானிகளான தீர்க்கதரிசிகளுக்கு அவர் அப்படிமறையநேரிட்டதொன்றும் அதிர்சயமாக விராது. கொம்பில் பழுத்துவிழுங் கனிபோல், வெம்பியதும் கொம்பில் நிற்காது. தர்மவிருக்ஷமாகிய இராஜ்யத்தின் பலனாயிருப்பது அரசு. அதர்மம் மலிந்ததனால் தர்மவிருக்ஷம்வாடிப்போகக் கொம்பிற்பலன் முதிராது வெம்பிப்போம். "யதாராஜா ததாப்ரஜா" என்பது போல, ராஜ்யதர்மம் எப்படியோ அப்படியே ராஜாவுமாகிறான் என்பதுண்மை. அப்படியென்றால் இராஜாவும் இராஜ்யதர்மமும் 'தர்மம், தர்மி (தேஹம்)' என்பது போல், அதாவது தேஹமும் அதன் தொழிலும் போல்இணைபிரியக்கூடாத தாதாத்மியசம்பந்தமுற்றிருக்கிறது. தேஹம் சரியாக விருந்தால் தான் தொழிலும் சரியாகநடக்கும். தொழில் சரியாக நடந்தால் தான் தேஹம் சரியாகவிருக்கும். இராஜா, தேஹம்; இராஜ்யபாரம், அதன் தொழில். இங்கிலாந்தில் இராஜ்யபாரமாகிய தொழில் தற்காலம் சிக்குற்றிருப்பது பிரத்தியக்ஷப்பிரமாணமாய் விளங்குவது. இச்சமயத்தில் அரசனிறந்தது அரசியல் தேஹத்துக்கு ஹானிவந்தது போலாம். இது யாவருள்ளத்திலும் உறுத்துவதா யிருக்கிறது. ஆயினும் "ஸர்வம் விஷ்ணுமயம்ஜகத்" என்றிருப்பதால், ஸர்வஜீவதயாபரரும் ஸ்திதிகர்த்தாவுமான விஷ்ணுஸ்வரூபமாய் விளங்கும் ஜகத்தானது நல்லதையே உண்டு பண்ணுவதாகுமென்பது சித்தாந்தம். ஏனெனில் எல்லாம் விஷ்ணுமயமாயிருப்பதாலும், விஷ்ணு ஸ்திதிகர்த்தாவாகவிருப்பதாலும். ஆதலால் தான் "அரசனிறந்தான் வாழ்கவேயரசுநீடூழியும்" என்று சொல்லும் அசரீரியான பிரஜாவாக்கியம் தத்துவார்த்தமானதென்று அதை நாம் விளக்கப்புகுந்தது. எட்வர்ட் அரசருக்குப்பின் பட்டத்துக்கு வந்த நமது ஐந்தாவது ஜார்ஜ் அரசரும் அவர் வழியில் நடந்து பழகினவராதலால் எல்லாம் சுபமாகவேமுடியும். இந்த திருடம் பற்றியே'வாழையடிவாழையாக வாழ்கவேயரசு' என்று இதற்கு மகுடம் சூட்டினோம். இப்பொழுது பட்டத்திற்கு வந்திருப்பவர் 1906-ம் வருஷத்தில் தம் பத்னிசகிதமாய் இந்நகரிற்கு விஜயமாய் வந்திருந்தபொழுது "பிளாக்டவுன்" என்னும் பேரைமாற்றி "ஜார்ஜ்டவுன்" என்று அவர் பேரைச்சேர்த்து இந்நகரிலுள்ள "பட்டணத்துக்கு"ப் புதுப்பேர் சூட்டவேண்டுமென்று நாம் நாமதாரணையிலுணர்ந்த பொதுஜனாபீஷ்டத்தைத் தெரிவிக்க, அதற்கிணங்கி, அவரும், இந்நகரிலிருந்த ஒருவாரத்துக்குள் தம்மனமுவந்து "ஜார்ஜடவுன்" என்கிற பேர் விளங்கத் தம்பேரை இந்நகரில் நிலையாகஸ்தாபித்துப்போனார். ஆத



லால் பிரதிஷ்டாவிதிப்படி ஐந்தாவது ஜார்ஜ் அரசர் லண்டனிலேயிருந்தாலும், விசேஷமாய் அதிபூர்வமான இச்சென்னைமாநகரில் அவருடைய நாமரூப ஆத்மா வாசஞ்செய்து கொண்டிருக்கும். இதனால் இந்நகருக்கும் அரசுக்கும் ஒருவித விசேஷசம்பந்தம் கற்பிக்க இடமுண்டாகிறது. நாமதாரணையிற் பழகினோர் அந்த விசேஷம் இன்னதென்றும்,விசேஷபதார்த்தம் இன்னதென்றும் தாமேயறிந்து கொள்வார்கள். விசேஷம் எதுவுண்டோ அதை ஆஸ்ரயிப்பது வைசேஷிகமதம். அம்மதப்படி தற்கால ராஜாவான ஐந்தாவது ஜார்ஜ் இந்நகரிலுள்ள நமக்கு 'சாமீப்பிய (சமீப) சம்பந்தி' யாகிறார். அதாவது நினைவில் நெருங்கிய சம்பந்த முள்ளவராகிறார். ஆகவே, "ஐந்தாவது ஜார்ஜ் அரசர் வாழையடி வாழையாய் வாழ்கவே" யென்று நாம் வாயும்மனமும் ஒத்து வாழ்த்துகிறோம்.

## In Memorium Verses to the Citizen-King & Emperor.

காலஞ்சென்ற இந்திய சக்கரவர்த்தி அவர்கள்பால் எழுதிய

### சரம கவிகள்.

நேரிசைவெண்பா.

1 பண்டைமனு நிற்குவமை பார்காப்பில் ஆவான்கோல்
கொண்டபே ரெட்வர்டெங் கோமானே—விண்டுரைத்தால்
நின்னீதி யாவர்க்கும் நேராகும் அன்னவன்றன்
தன்னீதி வேற்றுமையே தான். (க)

2 மன்னாவென் றுறை மகிதலத்தி லேயழைப்போம்
பன்னாடும் போற்றப் பரிந்துவந்து—சொன்னாடும்
தன்னுலகம் நீத்துத் தரணியுளோர் துன்புறநீ
பொன்னுலகம் சென்ற பொழுது. (உ)

3 அன்னையிடம் பெற்ற வரசுரிமை கைக்கொண்டு
சொன்னமொழி பொய்க்காது தொல்லுலகை—தன்னைநிகர்
முப்போது மில்லையென மொய்ம்புடனாள் மன்னவனை
எப்போது காண்போம் இனி. (ங)

4 மண்ணரசை ஜார்ஜ் மகற்களித்துப் பண்புடனே
விண்ணரசு செய்தற்கோ, விக்டோர்யா—பெண்ணரசி
மாதாவைக் கண்டு மகிழ்தற்கோ, சென்றாய் கோல்
தாதாரும் பூந்தாராய் சாற்று. (ச)

5 பத்தொன்பான் நூறுடன்சேர் பத்தாண்டின் மேமதியில்
வித்தகம்சேர் ஆறிலவிர் வெள்ளியதாம்—முத்தித்
திருவமிகும் எட்வர்டெம் † சீமான்மன் ஈசன்
திருவடியிற் சேர்ந்த தினம். (ரு)

நா. சேதுராமய்யன்.

† Our Citzen - King, Edward.

# His Majesty's Message To India.

## மாக்ஷிமைதங்கிய நமது சக்ரவர்த்தியவர்கள் நமக் கனுப்பியிருக்கும் சமாசாரம்.

மாக்ஷிமைதங்கிய நமது சக்ரவர்த்தியும் அரசருமாகிய ஐந்தாவது ஜார்ஜ் அவர்கள் இந்தியாவிலுள்ள சிற்றரசர்களுக்கும் ஜனங்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பி யிருக்கிறார். அது கெஜட்டில் பிரசுரமா யிருக்கிறது. அதன் தமிழ்மொழி விளக்கம் இதுவாம்:—

"எனது அன்புமிகுந்த பிதா நாமெல்லோரும் துக்கிக்கத் திடீரென்று காலஞ்சென்றதனால், நான் நீண்டதும் பூர்விகமானதுமானவோர் அரச வம்சத்தி லுதித்த அரசுரிமைக்குப் பாத்தியனான முறையில் ஸிம்மாசனமேற வாய்ந்தது. ராஜாவும் சக்ரவர்த்தியுமான முறையில் எனது இந்தியா நாட்டில் வசிக்கும் சிற்றரசர்களுக்கும் மற்ற எல்லா ஜனங்களுக்கும் அளவளாவி முகமன் கூறுகிறேன். என் பிதா மரணமடைந்தசந்தர்ப்பத்தில் இந்தியாவிலுள்ள பல்வேறு ஜாதி மத வகுப்பார்களும் பூரணமாய்க் காட்டிய ராஜ விசுவாசத்துக்கும் ராஜ கிரீடம் தரித்துள்ளவர்கள் பேரில் வைத்துள்ள விசேஷப் பிரீதிக்கும் நான் உங்களுக்கு ஹிருதய பூர்வகமாய் வந்தன மளிக்கிறேன்.

யாவராலும் கௌரவமாய்க் கொண்டாடப்பட்டு வரும் விக்டோரியா மஹாராணியவர்கள் 1858-ம் வருஷத்தில் இந்தியாவின் இராஜ்ய பாரத்தைத் தாம் நேரில் வகித்தபொழுது இந்தியாவிலுள்ள சிற்றரசர்கள்மஹாஜனங்களுக்கு முகமன்கூறி ஒரு விளம்பரப் பத்திரம் அனுப்பினார். பிறகு 50-வருஷங்களுக்குப் பின் பேரும் பிரக்யாதியும் பெற்று விளங்கிய எனது பிதா அந்த விளம்பரத்திற் கண்டவற்றை உறுதிப்படுத்தி ஒரு முகமன் பத்திரமனுப்பினார். இவை சக்ராதிபத்தியத்தாலுண்டாகும் மேன்மைகளையும் நன்மைகளையும், அவ்வாதிபத்தியத்தின் உத்தமபாவத்தையும் உண்மையான நன்னோக்கையும் விளக்குமோர் (விலையிலாச்) சாஸனங்களாம். அச்சாஸனங்களில் கண்ட உள்நோக்கத்தையனுசரித்து என்னுடைய காலத்தில் நானுள்ளவரையில் உண்மையாய் நடந்துகொள்வேனென்று உறுதியாய்ச் சொல்கிறேன்.

மாக்ஷிமைதங்கிய மாஜி அரசர் விருப்பின்படி அவருடைய உதாரணத்தைப் பின்பற்றி நான் எனது ராஜ பத்நியோடு ஐந்து வருஷங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு விஜயம் செய்தேன். சரித்திரத்திலே பேர்போன இராஜ்யங்களென்ன, எங்களது நாகரிகத்திலும் மிகப் பூர்வீகமான உங்களுடைய நாகரிக சின்னங்களென்ன, பூர்வீகமான, ஆசாரங்களென்ன, நடவடிக்கைகளென்ன இன்னுமவ் விசாலமான தேசத்திலுள்ள ஜனங்களென்ன, நாடு நகரங்கள், பட்டணங்கள், கிராமங்களென்ன, இவைகளையெல்லாம் நாங்கள் நேரில் பார்த்து இவற்றின் ஞாபகம் மனதில் உறையப்பெற்றோம். இப்படியெங்கள் மனதில் பச்சைமரத் தாணிபோல் பதிந்த எண்ணங்களும் ஜனங்களுடைய விசுவாசங்களும், இன்னுமந்த எங்களுடைய ஆச்சரியங்கள் நிறைந்த யாத்திரையில் மனதிற்பட்டவைகளுமான ஞாபகங்கள் ஒருகாலும் மறையா.

என் முன்னிருக்கும் உச்சிதமான, ஊக்க மிகப்பிடிக்கும் இராஜ கடமைகளைச் செலுத்துவதில் நீங்களெல்லாரும் உரியபடியே முனைந்து நின்று எனக்கு சககாரிகளாகவிருந் துதவுவீர்களென்றும், எனது ஆளுகையில் எப்போதும் எனக்கு உள்ளெழுச்சியை யுண்டுபண்ணுவதா யிருக்கத் தக்கதான இந்தியாவின் க்ஷேமத்தில் உண்மையானபடியே எனக்குள்ள அனுதாப சிந்தைக்கு அனுகுணமாய் நடந்துகொள்ளச் சித்தமா யிருப்பீர்க ளென்றும் உறுதியாய் உங்களெல்லா ரிடத்திலும் நம்பிக்கை யுற்றிருக்கிறேன்."



ஓம்

ஸ்ரீகிருஷ்ணாயநமஃ

# To Sri Krishna the God of Love.

# பரமாநந்தபாலகிருஷ்ணப்ரேமை.

இராகம் - செஞ்சுருட்டி.

ரிமககரிஸ ஸாஸநிதபா தாஸரிமாகா
கமபப பாதா ஸாநிதபாம கமபமகரிஸ ரீகா.

### பல்லவி.

இந்தலூட்டி செய்யலாமோ யசோதைபாலா!
இந்தலூட்டி செய்யலாமோ சோதையுடைய பாலா!

### சரணங்கள்.

(1) சாயக்கொண்டையும் சரிகைவங்கியும் சட்டமாகவே
மாரிற்பதக்கங்கள் அசைய அசைய மகனேயோடி வாடா! (இந்த)

(2) அச்சுதாநந்தா! ஹரிகோவிந்தா! உச்சிதமாக
இச்சையான வெண்ணெய்தயிர்பால் மகனேயுண்ண வாடா! (இந்த)

(3) நித்தியாநந்த! நிர்மலசுந்தர! பத்தியமான
ஸத்தியவுண்மையைக் கீதையாப்போதிக்கவாடாமகனே, யோடிவாடா! (இந்த)

(4) பத்தியதென்ன! சத்தியதென்ன பழங்கனிபோலுளங் கனிந்துளாருள்ளத்தே
முக்திக்குவித்தாய்மும்மதக்களிறுய்ச்சச்சிதாநந்தவெண்ணெய்தயிர்பாலுண்ணவாடா
[மகனேயோடிவாடா! (இந்த)

(5) வாய்மதம்பேசி வீண்தர்க்கஞ்செய்யும் வாயால்வல்லவ ருள்ளத்தேயொளித்துத்
தாய்மனம்போலுளந் தண்ணாயுருகுவர் கண்ணேவிளையாடுமகனே யோடிவாடா! ()

(6) தன்னைமறந்துன்னைத் தன்னுள்ளேவைத்த கோபிகளைக்கூடியாடி
தன்னயவிஷந்தலைக் கேறியகாளிங்கன்றலையைநசுக்கிய தற்பரனேயோடிவாடா! (இந்)

(7) என்னைமறந்துன்னை யென்னுள்ளேவைத்து ஏங்கித்தவிக்கநானிங்கே
அன்னையைமறந்துன்னாயர்பாடியில் ஆடிக்குதிக்கிற மகனேயோடிவாடா! (இந்த)

(8) பொன்னைப்பணியைப்பூணாரந்தன்னைப் புவியிற்கருதிலேன் கண்டாய்!
அன்னையாவுன்னைப்பெற்றதோர்பாக்யம் பாரினிற்றந்தவென் மகனேயோடிவாடா! ()

(9) தன்னயவிஷந்தலைக் கேறியகாளிங்கன்றலையைமிதித்துத் தாந்தோம்எனக்கூத்தாட
அன்னவன்கக்கியவிஷத்தாலருமேனி கருமேனியானவென் மகனேயோடிவாடா! ()

(10) பரவெளியுனைப்பெற்றுஞ் சிறைவெளியிருந்துநான் சிறுமைப்பட்டலறுவேனோ!
குறைவெளியெல்லாநிறைவெளியாக்கிற மாணிக்கக்குன்றேமர கதமேயோடிவாடா!

(11) மாணிக்கக்குன்றே மரகதவொளியே
மனத்தேரோட்டிக்குணத்த்வனிசெய்யப் பிறந்ததோர்சேயே!
ஆணிப்பொன்னம்பலத்தாடியகூத்தைச்
சேடிப்பெண்கோபியரிடை மருங்கேயாடு, மகனே! யோடிவாடா! (இந்த)

(12) உள்ளந்துடிக்கவேயுன்னெண்ணந்தடிக்கக்
கள்ளமனதுங் கருகியுருகவே
எள்ளுக்குள்ளெண்ணெய்போலென்னுள்ளிருந்துநீ
ஏகாங்கியாயென்னைத்தவிக்கவேகாண்கிற மகனேயோடிவாடா! (இந்த)

(13) கள்ளமனதுங்கரைந்தேபோயிற் றுள்ளமுமுருகியே தண்ணுயுறைந்தது
கள்ளத்தனமாயுருக் காட்டியொளிக்கிறமகனேயோடி, வாடா! முத்தந்தாடா! (இந்த)

(14) பள்ளமுள்ளவிடந்தனில் நீர்தங்குமென்பர்! பாரில்நான்படுதுயர்காணுய்!
கள்ளமுள்ளமனம்விட்டுஉள்ளமுள்ளவிடங்கொள்ளு,மகனே ஓடிவாடா!முத்தந்தாடா.

(15) உள்ளமுள்ளஉள்ளம்விண்டு
கள்ளமனங்கள்ளதுண்டு கட்குடித்தமன மொழிவிலொடுக்கமுண்டு
உள்ளமனமுள்ளவுள்ள
ஒழிவிலுள்ளமனமொழிய மகனேயோடி வாடாமுத்தந்தாடா! (இந்த)

(16) வாடா!!! முத்தந்தாடா!!
வழிதேடாவழியுனைநாடினேனுன்
வாடாமுத்தந்தாடாவென்கவிதிரவுன்
திருமேனியைக்கட்டிநான்முத்தமிடவாடா! மகனேயோடிவாடா!
இந்தஹூட்டி செய்பலாமோ யசோதைபாலா!
இந்தஹூட்டி செய்பலாமோ சோதையுடைய பாலாஅு உம்.

---

# The Study of Comparative Religions.

## A Text Book by Sri Vidyaranya.

### "ஸர்வதரிசனசங்கிரகம்."

"எம்மதமும் சம்மதமே"—தருவாக்கு.

இது ஸ்ரீ சங்கரபீடத்தாசிரியராயெழுந்தருளியிருந்த ஸ்ரீ வித்யாரண்யஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய அருமையான கிரந்தம். வடமொழியிலுள்ளதை, தமிழ்ப்படுத்திச்சீர்படத்திருத்திப் புத்தகரூபமாயச்சிட்ட ம-ா-ா-ஸ்ரீ சென்னை, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், தமிழ்ப்பண்டிதர் கோ. வடிவேலு செட்டியார், ம. ஷண்முக முதலியா ரவர்களுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது. இவர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கத்துக்கு உதவியாயிருந்து ஸம்ஸ்கிருதகிரந்தத்தைத் தமிழில் வசனவடிவாக இயற்றிக்கொடுத்த விஷ்ணுபுரம் ப்ரஹ்மஸ்ரீ இராமச்சந்திர சாஸ்திரியாரவர்கள் செய்த வித்வத் சகாயத்திற்குக் கைம்மாறில்லை.



இக்கிரந்தம் "ஸர்வதரிசன சங்கிரகம்" எனப் பேருற்றும் இதிலுள்ள தரிசனங்கள் பதினாறே. பதினாறே ஸர்வமுமென்றால் எப்படியாகும்? என்று கேட்கலாம். கிரந்தங்கள் கோடானுகோடி யானாலும் அவைகளுக் கெல்லாம் உயிர்கொடுத்து உச்சாரண லக்ஷணமாகவுள்ளது பதினாறு உயிரெழுத்துக்களே. இப்பதினாறு உயிரெழுத்துக்களையும் அததன்கலை விளங்க 'ஷோடச கலாதரிசனம்" என்று சொல்லும் அறுக்கண்பார்வை (தரிசனம்) உண்டானால், மற்றக் கிரந்தங்களின் கருத்துக்களை யெல்லாம் இப் பதினாறு எழுத்துக்களின் ஸ்வரத்தி லடைத்து "இலக்கியம்கண்டதற்கு இலக்கணம் கூறி" முடித்துவிடலாம்.

இவ்வுயிரெழுத்துக்கள் பதினாறும் தனித்தும், முப்பத்தியைந்து மெய்யெழுத்துக்களை யுடலாகக் கொண்டும், "உடல்மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே" என்னும் இலக்கண சூத்திரப்படி இயல்பாய் ஒலிப்பதனால், வர்ணங்கள் என்று சொல்லப்படும். இந்த 51 எழுத்துக்களும் அவற்றின் விகாரங்களுமே எல்லாக்கிரந்தங்களுமாகவிரிந்தது. அந்தக்கிரந்தங்களிலிருந்து ஸர்வசமயங்களும் சாஸ்திரங்களும் உண்டாயின.

மேற்றிசையிலுள்ள பூதபௌதிக சாஸ்திர விற்பன்னர்கள், தற்காலம், (Radium) 'ரேடியம்' என்று சொல்லப்பட்ட ஸ்வப்பிரகாச "சோதி மருந்து" ஒன்றைக் கண்டுபிடித்து அதன் பிரகாசசக்தியை ஆய்ந்து வருவதில், இதுகாறும் அவர்கள் அறிவுக்கெட்டாததாயிருந்த அனேகம் ஜோதிவர்ணங்கள் இருக்கின்றன வென்பதைக்கண்டு அதிசயித்து ஆச்சரியமுற்று மேன்மேலும் அந்த ஜோதியை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். பிரகிருதி கேவலம் ஜடபதார்த்தமே யென்று நம்பியிருந்த அவர்கள், இப்பொழுது தாங்கள் இதுவரையில் சுத்த ஜடபதார்த்தமென்று நம்பியிருந்த வஸ்துக்களில் ஸ்வப்பிரகாசமான சக்தியொன்றிருக்கிறதென்று கண்டுதேர்ந்திருக்கிறார்கள். இந்த ஸ்வப்பிரகாசகலைகளை (Alpha Rays, Beta Rays etc) A கலை B கலை யென்று கிரேக்க பாஷையின் அக்ஷரங்களைக்கொண்டு வரிசைக்ரமமாகப் பேரிட்டு அவைகளின் வர்ணபேத விசேஷங்களை ஆராய்ந்து தேர்ந்து வருகிறார்கள்.

மந்திர திருஷ்டாக்களான நம்முடைய ருஷிகளால் தேவ பாஷையென்று வழங்கும் ஸம்ஸ்கிருதத்தின் ஒவ்வொரு அக்ஷரத்தின் வர்ணத்தையும் ஆராய்ந்து அவைகளெல்லாம் பிரணவ ஸ்வரூபமாம் "ஏகாக்ஷர"த்தி லிருந்து திரியாக்ஷரீரூபமாய் வெளிப்பட்டு (வியக்தமாகி)ப் பிராணசக்தி யென்று சொல்லும் பஞ்சசங்கியையால் விளங்கும் "பஞ்சாக்ஷர" மூலமாய் "அஷ்டாக்ஷரம்" அல்லது "அஷ்டபீஜாத்மகமாய்" விளங்கும் புருஷ ரூபமாயும், "ஷடாக்ஷரீ" யென்று சொல்லும் ஷட்பீஜாத்மகமான ஸ்திரீ அல்லது பிரகிருதியென்னும் சக்தி ரூபமாயும், இந்த புருஷப்பிரகிருதி ரூபங்களின் கூட்டுறவால் சதுர்த்தச(14)கலாரூப உத்தம ஜீவசக்தி யுண்டாகிறதென்றும், நவாத்மகபாவமாய் "நவாக்ஷரி" யென்னும் பேரால் விளங்கும், பிரணவத்துக் கபின்னமான ஏகரூப மஹாசக்தி, ஜகத்துக்கெல்லாம் ஆதிகாரணமாய் விளங்குகிறதென்றும் பிரத்தியக்ஷ சாக்ஷாத்காரமாகத் தரிசனமுகத்தால் அறிந்து நிச்சயித்திருக்கிறார்கள். நிச்சயித்திருப்பதன்றி குருசிஷ்ய பரம்பரையாகச் சிஷ்யர்களுக் கோதிப் பிரத்தியக்ஷ சாக்ஷாத்கார முண்டாகவும் செய்திருக்கிறார்கள்.

இக்கிரந்த மியற்றிய வித்யாரண்யர் தாமே, பூர்வாஸ்ரமத்தில் காயத்ரீ தரிசனம் காணவிரும்பி, லோகாயத சம்பிரதாயமாய் பிராஹ்மணர்களை வரவழைத்துப் பொருளுதவிசெய்து லக்ஷம் லக்ஷமாக காயத்ரி மந்திரத்தை யுருஜபித்துத் தமக்கு தத்தம் செய்யச்சொல்லியும், காயத்ரீதரிசனம் சித்திக்காமையால், காயத்ரியைக் காணும்வழி யிதுவல்லவென்று, கண்டு, கிருகஸ்தாஸ்ரமத்தைவிட்டு வித்வத்ஸந்யாசம் வாங்கிக்கொண்டு ஆரண்யத்திற் சென்று பர்ணசாலைகட்டி யதிலிருந்து காயத்ரியைக்காண வேண்டிக் கடுந்தபசியற்ற, காயத்திரிதேவி அவருக்குப் பிரசன்னமானாள். பிரசன்னமான தேவியைப்பார்த்து விட்டு ஒன்றும் வரம்கோளாமல் அவர்சும்மாப்போக, காயத்ரியானவள் அவரைப் பின்தொடர்ந்து சென்று ஏதாயினும் ஒருவரம் கேட்கத்தான் வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய, உபாஸ்ய சித்தரான அவர் அப்பொழுது தேசத்தார் பட்டுக்கொண்டிருந்த வறுமைப் பிணிதீரப் பொன்மாரிபொழியவேண்டுமென, அப்படியே சித்தித்ததென்று அவர்சரித்திரத்திற் காணலாம். வித்யாரண்யர் என்னும் பட்டமும் காயத்ரீதேவி கொடுத்ததேயாம்.

ஆதலால் "தரிசனம்" என்பது மஹாத்மாக்களும், மஹரிஷிகளும், மாதவர்களும், த்ருக்குதரிசிய

மாய் நேர் நேரிற்கண்ட உண்மைக்குப் பேரேயன்றி தபவியற்றிக் காணத் திறனில்லாமல், "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கள்" சொல்கிறபடி, வீணுணவெட்டிப் பேச்சில்லை.

ஆனால் த்ரிக்த, தரிசன, தரிசியம் என்றுள்ள திரிபுடி ரூபமான விஞ்ஞான அறிவில், காண்பான், காட்சி யென்னும் இரண்டு அங்கங்களின் லக்ஷணப்படி, தரிசியமான காண்பொருள் என்னும் லக்ஷியம் பேதப்பட்டுத் தோன்றும். இப்பேதத்தை "யானைகண்ட குருடர்கள்" கதையில் நன்றாகவிளங்கக் காணலாம். அஃதேபோல, அகக்கண்படைத்து தீர்க்கதரிசன முண்டாகத் தபவியற்றுதற்கு ஆற்றாத ஆஸ்திக புத்தியுள்ளவர்கள், தெய்வமொன்றுளதென நம்பி விசாரம்செய்யப் புகுங்கால், மாயாசத்திகளும், சமயவாதிகளும் வேறுவேறு தம்மாயைகளையும் மதக்கொள்கைகளையும் காட்டி வற்புறுத்தி ஆஸ்திக சித்தம் பற்றிய விசாரபுருஷரைத் தத்தம் வழியிலிழுத்துச் செல்லப் பார்ப்பார்கள். இது பிராகிருத தர்மம் பற்றிச் சகஜமாய் எல்லாருக்கும் நேரக்கூடியதாதலால், ஆத்மபுத்தி பலத்தால் தத்துவவிசாரம் செய்து மாயையைவென்ற மஹான்கள் ஜீவகாருண்யத்தினால் தாங்களடைந்த அனுபவத்தைக் கொண்டு பிறர்க்குதவியாக அவ்வச்சமயத்துண்மைபோற்படும் ஸர்வசமயக் கொள்கைகளையும், சாங்கோபங்கமாய்த் தரிசனமுறையானே தீரவிசாரித்து "எம்மதமும் சம்மதமே" என்னுமோர் ஏற்றமான ஸ்வானுபவ உண்மைபற்றி, ஒவ்வொன்றையும் உண்மைவிளங்க விசார புருஷர்களுக்குச் சாதகமாகச் சாதனமுறைபற்றிச் சாதித்து வைப்பர்.

இது சித்தர்களானோர் சாதகர்களுக்குச் செய்யக் கடமைப்பட்டதோர் உதவியாம்.

எம்பெருமான் ஸ்ரீமாணிக்கவாசக ஸ்வாமிகள் "போற்றித்திரு அகவலில்" "மதம்" என்னும் தலைப்பின் கீழ் சொல்லி யிருப்பது ஸ்வபாவ தர்மமாய் யாவருக்கும் பொருந்தக் கூறியதுபற்றி மனத்தில் வைக்கற்பாலதாம்.

" தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனி விலாததோர் பொருளது கருதலு,
மாறுகோடி மாயா சக்திகள்,
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாஸ்திகம் பேசி நாத் தழும்பேறினர்.
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்தும் பதறினர்; பெருகவும்
விரதமே பரம் ஆக வேதியருஞ்
சரதமாகவே சாத்திரங் காட்டினர்;
சமயவாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்.
மிண்டிய மயா வாதம் என்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித்தா அர்த்து
லோகாயதன் எனும் ஒண்டிறற் பாம்பின்
கலா பேதத்த கடுவிஷம் எய்தி,.
அதிற் பெரு மாயை எனைப்பல சூழவும்,"—

என்று தம் ஸ்வானுபவத்தைச் சொல்லி யிருக்கிறார் மஹா மேதாவிகளா யிருந்தபேர்களெல்லாம் ஆஸ்திக விசாரம் செய்யப் புகுந்து இந்தப் பாடுபட்டார்களென்றால், சுத்த சாமானியரான மற்றப்பேர்கள் ஆஸ்திக விசாரம் செய்து என்ன கடைத்தேறப் போகிறார்களென் றெண்ணி இதை வாசிப்போர் சிலர் சலிப்புறலாம். அப்படியல்ல அது; "அவனை அவன் அருளாற் கண்டால்" காணலாமே யன்றி மனிதன் தற்போதத்தால் (பேதமான தன்னறிவால்) தெய்வத்தைக் காண்பது துர்லபம். குருவருளா லன்றிப் பாதரிசனம் சித்திக்காது.

" உருவன்றி யேநின் றுருவம் புணர்க்கும்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற மாயப்பி ரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணாதே."

யென்பது எம்பெருமான் திருமூலதேவர் ஓதியதோர் திருமந்தி ரோபதேசம். எம்பெருமான் ஸ்ரீமாணிக்க வாசகரும் இஃதையே தம் ஸ்வானுபமாக வெடுத்துச் சொல்கிறார். மதவாத மாயாவாதங்களுக்கெல்லா மாளாகித் தவித்த தம்மைக் கரையேற்றியது தமது திருடமான குருபக்தியே யென்று சொல்கிறார்.

" கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியேயாகி நல்லிடை யறா அன்பிற்
பசுமரத்தாணி அறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி,
..........................................
" கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி இணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன் பின்னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்கு நெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி, 'நாத,' என்றரற்றி,
உரை தடுமாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களிகூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி!
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள், போற்றி!
ஆடக மதுரை அரசே! போற்றி!"

என்று போற்றித் திருவகவல் கூறியிருப்பதை உளங்கனிந்து உள்ளுணர்வோடு படித்து நினைத்துப் பக்தி மேலிட்டுத் தியானமு நழுவித் "தியேயாகாரமா" யிருந் துணர்வார்க்கும் "பேராயிரமுடைப் பெம்மான்போற்றி!" யென்றதினாலேயே அனந்த குண கலியாணரான கடவுளுடைய திருநாமம் ஒவ்வொன்றும் ஒரு தரிசனமாமென்று பெறப்படும்.

இப்படிப் பல்கோடிக் கணக்காய் விளங்கும் தரிசனங்களத்தனையையும், பதினாறு தரிசனங்களில் அடக்கி அதற்கு "ஸர்வதரிசன சங்கிரகம்" எனப் பேர்கொடுத்தது கடுகைத்துளைத்துக் கடலையடைத்தது போலும், உள்ளங்கைதனில் உவர்நீர் ஏழையுங் (சப்த சமுத்திரங்களையுங்)கொண்டு ஆசமநம் செய்தது போலவு மல்லவா இருக்கிற தென்று மலைக்கலாம். இந்த மலைப்புக் கிடங்கொடுக்கக் கூடாதென்றே "ஸர்வ தரிசனங்களும்" பதினாறு தரிசனங்களில் அடங்கு மென்று அக்ஷரலக்ஷியத்தை யுதாரணமாய்க்கொண்டு எடுத்துக் காட்டினோம்.

இதிலடங்கிய பதினாறு * மதங்களாவன:—

(1) சார்வாக தரிசனம் என்னும் லோகாயத மதம்; நாஸ்திகமென்றும் சொல்வதுண்டு.

(2) பௌத்ததரிசனம் எனும் புத்தி தத்துவ போத மதம்.

(3) ஆருகததரிசனம் எனும் ஜயினமதம்.

(4) இராமாநுஜ தரிசனம் அல்லது இராமானுஜர் மதம்.

(5) பூரணப்ரஞ்ஞ தரிசனம்,அல்லது மத்துவாசாரியார்மதம்.

(6) நகுலீசபாசுபத தரிசனம், அல்லது வீரசைவம்.

(7) சைவதரிசனம்.

(8) பிரத்தியபிஞ்ஞா தரிசனம், (ஜீவேசுவர அபேத மதம்.)

(9) இரசேசுவர தரிசனம் (சித்தர் வழியென்னும் ரசவாத மந்திரஸித்தி மதம்.)

(10). வைசேஷிக தரிசனம்.

(11) நியாய தரிசனம்.

(12) ஜைமினி தரிசனம்.

(13) பாணினி தரிசனம்.

(14) சாங்கிய தரிசனம்.

(15) பதஞ்சலி தரிசனம்.

(16) சாங்கர தரிசனம்.

இவையெல்லாம் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று பொருந்தாதபடி சமயவாதஞ் செய்வதாய்த் தோற்றினும், குடகிலே யுதித்த காவேரி நதியானது பச்சிம வாஹினி யாகத் திரும்பி, அந்தர்முகமான யோகியின் மனம் போல், தன்னைத் தானறிந்து, பின்னர் பூர்வம்போல் வெளிப்பட்டு அகண்ட காவேரியாய்த் திரண்டோடிப் " போரை "யின்கண், பல்வேறு கிளைகளாகப் பிரிந்து, பஞ்சநதியாகிப் பின்னும் பிறிந்து பிறிந்து பாய்ந்து தீர்த்தம் ஒன்றே யானாலும் "தண்ணீர் நிலநலத்தால்" என்றபடி நிலபேதத்தால் பேதமேற்பட்டுக் கடைசியில் சமுத்திர சங்கமமாகும்பொழுது எல்லாம் ஒன்றாகவே அபேதமடைவது போல், பதினாறு தரிசனங்களும் சமயவாதிகளுக்கு வெவ்வேறாயினும், பாதரிசனத்தில் ஒன்றேயாம்.

* "மணமொடுங்கிப் பின்னெழாத் தரிசனமொன்றே பாதரிசனமளிக்கும்" திரிபுடி ஸஹிதமான மற்ற தரிசனங்களெல்லாம் பல்வேறு சமயங்களானமதங்களேயாம். இவை ஷோடச சங்கியையில் அடங்கும்.

அவ்வாறு அதைவிடுத்த அகாரம் முதல் அனுஸ்வாரம் (அம்), விஸர்க்கம் (அ:) ஈருகவுள்ள பதினறு அக்ஷர லக்ஷியங்களையும் "ஷோடசகலா நியாஸ" முறையாலே கீழேயெடுத்துச் "சொல்லாமற்" சுட்டி விளக்குகிறோம்:—

## (ஷோடசகலாதரிசன முறை.) *

(1) அ-அகாரத்தை † யற்றுப் பார்
அமிர்தாயை நமவென்று;
(2) ஆ-ஆகாரத்தைப் † பெருக்கிப் பார்
அநஜாயை நமவென்று;
(3) இ-இகாரத்தை † யிருந்து பார்
பூஷாயை நமவென்று;
(4) ஈ-ஈகாரத்தை † யீட்டிப் பார்
துஷ்டாயை நமவென்று;
(5) உ-உகாரத்தை † யுற்றுப் பார்
புஷ்டியை நமவென்று;
(6) ஊ-ஊகாரத்தை † யூதிப் பார்
ரதியை நமவென்று;
(7) ரு-ருகாரத்தை † ரஸித்துப் பார்
யூ (த்ர) தியை நமவென்று;
(8) ரூ-ரூகாரத்தை யுண்டு பார்
ஹம்ஸிநியே நமவென்று;
(9) லு-லுகாரத்தைச் சிந்தையிற் பார்
சந்திரிகாயை நமவென்று;
(10) லூ-லூகாரத்தைக் கண்ணிற் பார்
காந்தியை நமவென்று;
(11) ஏ-ஏகாரத்தை யேறிப் பார்
ஜ்யாத்ஸநாயை நமவென்று;
(12) ஐ-ஐங்காரத்தை யறிந்து பார்
ஸ்ரீயை நமவென்று;
(13) ஓ-ஓங்காரத்தை யோதிப் பார்
ப்ரீதியை நமவென்று;
(14) ஔ-ஔகாரத்தை யெண்ணிப் பார்
அங்கதாயை நமவென்று;
(15) அம்-அனுஸ்வாரத்தை யடக்கிப் பார்
† பூரணையை நமவென்று;
(16) அ:-'விஸர்க்கத்தை' விட்டுப் பார்
பூர்ணமிருதாயை நமவென்று.

---

* மிக்கமனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம்.:—ஔவை குறள்.

† அக்ஷரலக்ஷியங்களைப் பார்ப்பதற்குச் சாதனமாய்ச் சொல்லப்பட்ட அடைமொழியின் லக்ஷியார்த்தத்தை விளக்கும் ஆப்தவாக்கியங்கள்.

(1) அ-"அற்றது பற்றெனில் உற்றதுவீடு."
(2) ஆ-"உள்ளப் பெருக்கில் ஊனமதுருகும்."
(3) இ-"சும்மா இருக்கச் சுகம்சுக மென்றோதும்
மறையெல்லாம்."
(4) ஈ-"தர்மத்தை யீட்டிக் கர்மத்தை முடி."
(5) உ-"ஊனமில் பதத்தைப் பெற்றிருந்தார்
ஒழுவிலொடுக்கம் உற்றுணர்ந்தார்."
(6) ஊ-"ஊனே மறிவதென் றூதூது சங்கே
உணர்வே பிரஹ்மமென் றூதூது சங்கே."
(7) ரு-"ருக்கொடு தர்க்குத் தரிசய மெல்லாம்
ரஸம்போலொழுக வுண்ணுவர் மேலோர்."
(8) ரூ-"கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்; கண்டதை விண்டபின் உண்டவர் மாண்டிலர்."
(9) லு-"சிந்தைய தென்னச் சிவமென்ன வேறில்லை."
(10) லூ-"விண்ணோடு விண்கலந்து விண்ணு
மண்ணு மொன்றானால்
கண்ணோடு கண்கலந்த காட்சியது பிந்துவாமே."
(11) ஏ-"நயந்துபார் வாசிசட்டி ஊசிமுனை தன்னிலேறி, பயந்துபோனால் யோசம் வரும் நாச மாவாய்,
வியந்து நின்றால் மயக்கம் வரும் இயக்கமெத்த, கயந்துபோனா லயர்ந்து போவாய் முயன்றுபாரே."
(12) ஐ-"அறிவே வடிவென் றாதேடா காளம்
அறியாமை போனதென் றாதேடா காளம்."
"கோசங் குலைந்ததென் றாதேடா காளம்.
கூரறி வானதென் றாதேடா காளம்."
(13) ஓ-ஓதியுணரும் உணர்வே யுணர் வஃதை
ஓமென் றோதியுணர்."
(14) ஔ-"எண்ணினே னெண்ணமிது வெண்ணாத [வெண்ணில்
நண்ணினேன் நாணாது நட்டு."
(15) அம்-"அலையுமனத்தை யடக்கு மவனே" யோகி, ஞானி யெல்லாமவன்.

† "நிறைவெளிதனில் நிறைந்ததொரு பூரணத்தைக் குறைவறவே சொல்லவெனிற் சொல்லாலாமோ!"

(16) அ:—"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றுங்
காதலிரு வர்க்குங் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."



இப்படியாக விஞ்ஞானகலைவிளங்கும் விசுத்தி சக்ரகமலத்தின் 16 இதழ்கள் வடிவமாக விளங்கும் ஸ்வராந்தமான பதினறு அக்ஷர லக்ஷியங்களையும் தியானித்து தியேயாகாரமாகி, அவைகளின்சமஷ்டிரூப அந்தர்க்கத அதிர்ஷ்டான தேவதையான (பிரகாசரூபமான) ஸாகிநீஸ்வரி (டாகினீசுவரி) யைத் தியானயோகத்தா லறிந்து ஷடாதார உச்சமான ஆஜ்ஞையில் பிரகிருதிதத்துவத்தை "ஹாகினீரூப தாரிணியை நம:" வென்று தரிசித்து, அதன் மேல் பைந்தவஸ்தானத்தில் பிந்து தரிசனஞ் செய்துகொண்டு, காலவஞ்சனஞ் செய்து உன்மனு தரிசனம் பெற்று, அதற்கும் மேலான காமகலா தரிசனம் பெற்றால் "ஸர்வதரிசன சங்கிரஹமான" ஸத்ரூப சாக்ஷாத்காரம் கிடைக்கும். அந்தப் பாதரிசனம் கிடைத்தால் "ஓம் தத் ஸத்" என்பதின் உண்மை தெரியும். அதை யறிவதற்கு அனுகுணமாக சமயவிசாரம் செய்யத் தொடங்கும் விசார புருஷர்களுக்கு ஸ்ரீவித்யாரண்யர் இயற்றிய 16 - தரிசனங்கள் (மதங்கள்) அடங்கிய இந்த "ஸர்வதரிசன சங்கிரகம்" மதபேதங்க ளின்னவாறென்றும், சமயவாதிகள்தத்தம் சமயத்தை ஸ்தாபிக்கச் சொல்லும் ஆக்ஷேப சமாதானங்க ளின்னவா றென்றும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளப் பரமஸாதன மாகுமென்பதற் கையமில்லை. இதன் விலை ரூ. 2 - 8. இக்கிரந்தத்தின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பின் விலை ரூ 7 - 14 எனத் தெரிகிறது. ஆதலின் இதன் விலை மிகவும் சரஸமேயென்பது நாம் சொல்லாமலே விளங்கும். மதவிசாரம் செய்வோர்க்கு இது இன்றியமையாத கிரந்தமாமென்பது ஸ்ரீவித்யாரண்யர் ஸ்ரீ ருங்ககிரியிலுள்ள சாரதாபீடத்தில் ஆச்சாரியமூர்த்தமாய் எழுந்தருளி யிருந்த மஹான்களி லெல்லாம் மேலானவரென்றும், பஞ்சதசி யருளி ஸ்ரீசக்ரக் கோட்டையை ஸ்தாபித்தவரென்றும் சொல்லத், தானே விளங்கும்

---

ஓம் ஸ்ரீசாவித்திரியை நம:

# உபநிஷதார்த்த தீபிகை.

## II. மண்டலப்பிராஹ்மணோபநிஷத்.

யாஞ்ப வல்கியர் என்னும் மகாமுனியானவர் ஆதித்திய லோகம் போனர். அந்த ஆதித்யனை நமஸ்கரித்து "ஓ பகவானே! ஆத்மதத்துவத்தைச் சொல்லவேண்டும்" என்றார்.

அந்த நாராயணர் (பின்வருமாறு) சொன்னர்:—

ஞானத்துடன் சேர்ந்த இயமம் முதலான எட்டு அங்கங்களுடன் கூடிய யோகம் சொல்லப்படும்.

குளிர், உஷ்ணம், உணவு, தூக்க மென்னுமிவற்றின் ஜயம், எப்பொழுதும் சாந்தி, நிச்சலத்தன்மை, விஷயங்களிற் செல்லாமல் இந்திரியங்களைக் கட்டுப்படுத்த லென்னு மிவை இயமங்களாம்.

குருபக்தி, தத்துவமார்க்கத்தில் பிரியம், சிரமமின்றி அடையப்பட்ட பொருள்களின் அனுபவம், அவ்வநுபவத்தால் சந்தோஷம், சங்கமின்மை, ஏகாந்தவாசத்தால் மனோநிவிர்த்தி, பலத்தில் ஆசையின்மை, வைராக்யபாவ மென்னுமிவை நியமங்களாம்.

சுகமாக ஆசநத்தில் இருப்பதும் அப்படி வெகுகால மிருத்தலும் ஆசனத்தின் லக்ஷணமாம்.

பதினாறு, அறுபத்து நான்கு, முப்பத்திரண் டென்னும் இந்தக் கணக்கின்படி பூரக கும்பக ரேசகங்கள் பிராணாயாமமாம்.

விஷயங்களினின்றும் இந்திரியங்களினின்றும் அவற்றின் பொருள்களினின்றும் மனதைத்தடுத்தல் பிரத்தியாகாரமாம்.

விஷயங்களினின்றும் திருப்பியபிறகு மனதைச் சைதன்யத்தின்கண் ஸ்திரப்படுத்துதல் தாரணையாம்.

சர்வசரீரங்களிலும் சைதன்யத்தை ஏகமாய்ப்பார்த்தல் தியானமாம்.
அத்தியானத்தின் விஸ்மிருதி (தியானத்தின் வாசனையை விடுதல்) சமாதியாம்.
இவை சூக்ஷ்மாங்கங்கள். இப்படி அறிகிறவன் மோக்ஷமனுபவிப்போனவன்.

(முதற் பிராஹ்மணம் - முதல் அத்தியாயம் முற்றிற்று).

காமம், குரோதம், பயம் நிச்வாசம் (பெரு மூச்செறிதல்) நித்திரை என ஐந்து தோஷங்கள் தேகத்திற்கு உண்டு. அவைகளைப்போக்க நிஸ்ஸங்கல்பம், க்ஷமை (பொறுமை), குறைந்தவுணவு, (ஆன்மநாட்டத்தில்) தவறுதலின்மை, தத்துவசேவனம் (சொரூபத்தில் ஏகாக்கிரதை அடைதல்) இவை (காரணமாம்).

நித்திரையென்னும் பாம்பும், ஹிம்ஸை (துக்கம்) என்னும் அலைகளும், ஆசையென்னும் சுழலும், மனையாள் என்னும் சேறும், (இவைகளால் நிறைந்த) சம்சாரமாகிய கடலைக்கடக்கச் சூக்ஷ்மமார்க்கத்தை (விருத்தி எழும் இடத்தை)ப் பிடித்துச் சத்துவம் முதலிய குணங்களைக்கடந்து ; தாரகத்தைப் பார்க்கவேண்டும். புருவமத்தியில் பிரகாசக்கூட்ட ரூபமான தாரகப் பிரமம் (இருக்கிறது). அதற்கு (அதை அடைவதற்கு) உபாயம் மூன்று லக்ஷியங்களைப் பார்த்தல். (அவை வருமாறு):—

(1) (அந்தர் லக்ஷியம்): மூலாதாரத்தில் ஆரம்பித்துப் பிரம்மரந்திரம் வரையில் சுஷும்நா நாடி சூர்யனைப்போல் பிரகாசியாநிற்கும். அதன் மத்தியில் கோடி மின்னல்களுக்குச் சமானமானதும் தாமரைத்தண்டின் நூலைப்போல் சூக்ஷ்மமுமான குண்டலினீ இருக்கும். அவ்விடத்தில் அஞ்ஞான நிவிருத்தி (உண்டாகிறது).

அதன் (குண்டலினியின்) தர்சநத்தால் சர்வபாப நிவிருத்தியா. சுட்டுவிரல்களின் நுனிகளால் மூடப்பட்ட காதின் இரண்டு துவாரங்களிலும் பூத்கார சப்தமுண்டாகும். மனம் அவ்விடத்தில் நிற்கக் கண்மத்தியிலுள்ள நீலமான ஜ்யோதியைப் பார்க்கிறான்; அவ்விதம் ஹிருதயத்திலும் பார்க்கிறான்.

(2) பஹிர் லக்ஷியமாவது: மூக்கு நுனியிலிருந்து நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு அங்குலங்களுக் கப்பால் வரிசையாக நீலம், சியாமளம் (கறுப்பு அல்லது கருநீலம்), சிகப்பு, வெண்மை, மஞ்சள் இந்நிறங்களோடுகூடிய வியோம தத்துவத்தை (ஆகாசதத்துவத்தை)ப் பார்க்கிறான்; அவனேயோகி. சலியாத பார்வையால் வியோம பாகத்தைப் பார்க்கும் புருஷனுக்கு அவன் பார்வைக்கு முன்னர் ஜ்யோதிக் கூட்டங்கள் உண்டாகும். அந்தப் பார்வை



ஸ்திரமாகும். சிரசுக்கு மேல் பன்னிரண் டங்குலப் பிரமாண முள்ள ஜ்யோதியைப் பார்க்கிறான். அப்பொழுது அமிர்தத்துவத்தை (சாகாத்தன்மையை) அடைகிறான்.

(3) மத்யலக்ஷியமாவது:—தனக்குள் அநேக வர்ணங்களான சூர்ய சந்திர அக்நிச் சுவாலைகளைப் போலும், இவைகளெல்லாமற்ற ஆகாசத்தைப்போலும் பார்க்கிறான். அதன் ரூபமாகிறான்.

அப்பியாசத்தால் நிர்விகாரமானதும் குணமற்றதுமான ஆகாசமாகிறான்; பிரகாசிக்கும் நக்ஷத்திரத்தோடுகூடிய மகாந்தகாரத்திற்குச் சமானமான பிரகாசமாகிறான்; பிரளயகாலத்து அக்நியைப்போல் பிரகாசிக்கும் மஹாகாகாசமாகிறான். சர்வத்திற்கும் மேன்மையான பரமப்பிரகாசத்தோடு பிரகாசிக்கும் தத்துவாகாசமாகிறான்; கோடிசூர்யப் பிரகாசமுள்ள சூர்யாகாசமாகிறான். இவ்விதம் அப்பியாசத்தால் அதனதன்மயமாகிறான்.

(முதற் பிராஹ்மணம் - இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று).

I - வது பிராஹ்மணம் (3 - வது அத்தியாயம்).

அந்தயோகம் பூர்வம் அபரமென இருவகையென்றறி. பூர்வத்தைத் தாரகயோகமென்றும், அபரத்தை அமநஸ்கமென்றும் அறியவேண்டும். தாரகமும் மூர்த்திதாரகம் அமூர்த்திதாரகமென இருவகையாகும். எது இந்திரியாந்தமோ (இந்திரியங்களைக் கடந்ததோ) அது மூர்த்திதாரகம். எது புருவமத்தியத்துக்கு அப்பாற்பட்டதோ அது அமூர்த்திதாரகம். (மூர்த்திதாரகம் அமூர்த்திதாரகம்) இரண்டும் மனதோடு சேர்ந்து அப்பியாசிக்கத் தக்கனவாம்.

மனத்தோடு சேர்ந்த, அந்தர் திருஷ்டி (உட்பார்வை) தாரகப் பிரகாசத்திற்குக் காரணமாகும். இருபுருவ மத்தியிலிருக்கும் துவாரத்தில் தேஜசு (பிரகாசம்) உண்டாகும். இதுபூர்வமெனச் சொல்லப்பட்ட தாரகம்.

உத்தரம் (உத்தரபாகமான யோகம்) அமநஸ்கம். † தாலுமூலத்தின் மேல்பாகத்தில் மகா ஜ்யோதி இருக்கின்றது. அதன் தர்சனத்தால் அணிமாதிசித்திகளுண்டாகும். லக்ஷியம் உள்ளே இருக்க வெளிப்பார்வை, மூடுதல், திறத்தல் அற்றால், இது சாம்பவீ முத்திரை ஆகும். சர்வ தந்திரங்களிலும் ரகசியமாய் வைக்கவேண்டிய மகாவித்தையாகும். அதை அறிவதால் சம்சார நிவிர்த்தி யுண்டாகும். அதன் பூஜை மோக்ஷமாகிற பலத்தைக் கொடுக்கும்.

(அமநஸ்கத்தின்) அந்தர்லக்ஷியம் ஜலஜ்-ஜோதிஸ்வரூபமாகும்; ‡ மகரிஷிகளால் அறியத்தக்கது; உள்ளிந்திரியங்களாலும் வெளியிந்திரியங்களாலும் அறியப்படாதது. சகஸ்ர கமலத்தில் ஜலஜ்யோதியே அந்தர்லக்ஷியம். புத்திபாகிற குகையில் சர்வாங்க சுந்தரனான புருஷனை அந்தர்லக்ஷியமென்று மற்றவர் சொல்லுவர். சிலர் சிரசுக்கள் இருக்கும் மண்டலத்தின் மத்தியில் ஐந்து முகத்தையுடையவரும் உமையோடு கூடியவரும், பிரசாந்தருமான (மிகவும் சாந்தருமான) நீலகண்டரே அந்தர்லக்ஷியமென்பர்.

† "தாலு' என்பது வாயின்மேற் பாகம்; அதன் "மூலம்" நாக்கு உற்பத்தியாகும் இடம்.
‡ இதுவே காயத்திரீ சிரசு என்று சொல்லப்படும் "ஓம் ஆபோ ஜ்யோதீரஸோ அமிருதம் பிரம்ம பூர்புவஸ்ஸுவ ரோம்" என்கிற மகாமந்திரத்தின் பொருளென்று உரையாசிரியர் சொல்லுகிறார்.

† இன்னும் சிலர் அங்குஷ்டப் பிரமாணமுள்ள புருஷனே அந்தர்லக்ஷிய மென்பர் இப்படிச்சொல்லப்பட்ட விகற்பங்களெல்லாம் ஆத்மாவே. இந்த லக்ஷியத்தைச் சுத்தாத்மதிருஷ்டியால் பார்ப்பவனே பிரம்மநிஷ்டனாவான். இருபத்தைந்தாவது (தத்துவமான) ஜீவன் தன்னால் கற்பிக்கப்பட்ட இருபத்துநான்கு தத்துவங்களையும் விட்டு இருபத்தாறாவதான பரமாத்மாவே தானென்கிற நிச்சயத்தால் ஜீவன்முக்தனாகிறான்.

‡ இவ்விதம் அந்தர்லக்ஷியத்தின் தரிசனத்தால் ஜீவன்முக்தி தசையில் தானே அந்தர்லக்ஷியமாகிப் பரமாகாச அகண்ட மண்டல மாகிறான்.

முதற் பிராஹ்மணம் முற்றிற்று.

## II - வது பிராஹ்மணம். (1 - வது அத்தியாயம்).

அப்பொழுது யாஞ்யவல்கியர் ஆதித்திய மண்டல புருஷனைக் கேட்டார். ஓ பகவானே! அந்தர்லக்ஷியம் முதலியன தங்களால் அநேகவிதமாகச் சொல்லப்பட்டது. அவற்றை நான் அறியவில்லை. அவற்றை எனக்குச் சொல்லவேண்டும் என்றார்.

அதற்கு அவர் (மண்டலபுருஷன்) சொன்னார். பஞ்சமஹா பூதங்களின் காரணமானதும் மின்னற் கூட்டத்தைப்போல் பிரகாசமானதும் சதுஷ்பீடமாம். அதன் மத்தியில் தத்துவப் பிரகாசம் (உண்மையின்பிரகாசம்) உண்டாகும்; அது அதிரகசிய மானது, அவ்யக்தமானது (வெளிப்படை யல்லாதது). அது ஞானமெனப்படும் ஓடத்தில் ஏறினவனாலேதான் அறியப்படும். அது பாஹ்யாந்தர § லக்ஷியமானது. அதன் மத்தியில் ஜகத் (உலகம்) லயமாயிருக்கும். அது நாதம், பிந்து, கலை இவைகளுக்கு அதீதமான (அப்பாற்பட்ட) அகண்ட (பிரிவினையற்ற) மண்டலம். அது சகுண நிர்க்குணஸ்வரூபம். அதை அறிந்தவன் முக்தன்.

ஆதியில், அக்நிமண்டலம், அதன்மேல் சூர்யமண்டலம். இவற்றின் (இவ்விரண்டின்) மத்தியில் சதா (அமிருத) சந்திரமண்டலம். அதன் மத்தியில் அகண்ட பிரம்ம தேஜோமண்டலம். அது (அகண்ட பிரம தேஜோமண்டலம்) மின்னலைப்போல் வெண்மையான ஒளியுள்ளது. அதுவே சாம்பவியின் லக்ஷணம்.

† இந்தலக்ஷணம் கடவல்லி யுபநிஷத்திலும் தைத்திரீய உபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

‡ இவ்விடத்தில் சாங்கியமதத்தை ஒருவாறாக அநுசரித்து தத்துவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சாங்கியமதப்படி தத்துவங்கள் 25. அவை வருமாறு:—

(1) பிரகிருதி, (2) புத்தி, (3) அகங்காரம், (4 - 8) தந்மாத்திரைகள் ஐந்து, (9 - 13) ஞானேந்திரியங்கள் ஐந்து, (14 - 18) கர்மேந்திரியங்கள் ஐந்து, (19) மனம், (20 - 24) ஸ்தூல பூதங்கள் ஐந்து, (25) புருஷன் அல்லது ஆத்மா.

கபிலரிஷி சித்தாந்தமாகிய நிரீசுவரசாங்கியமதத்தில் பரமாத்மாவை ஒப்புக்கொள்கிறதில்லை. அவர் மதப்படி புருஷன்தன்னைப் பிரகிருதியைவிட வேறாகவும்அதனுடன் சம்பந்தமில்லாதவனாகவும் பார்ப்பதே முக்தி. ஸ-ஈசுவர சாங்கியமெனப்படும் பாதஞ்சல யோகதர்சநப்படி 26-வது தத்துவமான ஈசுவரன் உண்டு. ஆனால் அதன்படி பிரகிருதி-புருஷ விவேகத்தை உண்பெண்ண ஈசுவரத்தியானமும் பலவழிகளில் ஒன்றாக சொல்லப்படுகிறதே யல்லாமல், ஈசுவர-ஆத்ம ஐக்கியம் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

§ பாஹியம் (வெளி); ஆந்தரம் (உள்). இவ் விருவிதப் பார்வைக்கும் மத்தியகதமான லக்ஷியமானது (ஜகத்லயதிருஷ்டி) என்று உரையாசிரியர் பொருட்படுத்துகிறார்.



அதன் (அச்சாம்பவியின்) தர்சநத்தில் மூன்றுவித திருஷ்டிகள் (பார்வைகள்) உண்டு. அவை அமா, பிரதிபத் †, பூர்ணிமா எனப்படும். (கண்) பார்வை முழுதும் மூடப்பட்டது அமாதிருஷ்டி. பாதிதிறந்தது பிரதிபத் (திருஷ்டி). முழுதும் திறந்தது பூர்ணிமா (திருஷ்டி). இவற்றுள் பூர்ணிமா அப்பியாசமே செய்யத்தக்கது.

அதன் லக்ஷியம் நாஸாக்கிரம் (மூக்கு நுனி). அப்பொழுது (லக்ஷியத்தைப் பார்க்கும் போது) மிகுந்த இருள் தோற்றும். அதன் அப்பியாசத்தால் அகண்ட மண்டலாகாரமான ஜ்யோதி காணப்படும்; அதுவே சச்சிதானந்தப் பிரஹ்மம் ஆகும். இவ்விதம் மனம் எப்பொழுது சஹஜானந்தத்தில் லயமாகின்றதோ அப்பொழுதே சாம்பவீ முத்திரை யாகும். அதையே (அந்த முத்திரையையே) கேசரீ என்றும் சொல்லுவார்கள். அதன் அப்பியாசத்தால் மனத்திற்கு ஸ்திரத்தன்மை யுண்டாகும், அதனால் வாயு ஸ்திரமாகும். ‡

அதன் அடையாளங்களாவன. ஆரம்பத்தில் நக்ஷத்திரத்தைப் போல் தோற்றும். பிறகு வயிரக் கண்ணாடிபோலும், அதன் பிறகு பரிபூர்ணமான சந்திரமண்டலம் போலும், அதன் பிறகு நவரத்தினப் பிரகாசமுள்ள மண்டலம்போலும், அதன்பிறகு மத்தியான்ன சூர்யமண்டலம் போலும், அதன்பிறகு அக்நி சிகா (நெருப்பின் ஜ்வாலை) மண்டலம்போலும் வரிசையாகக் காணப்படும்.

அப்பொழுது பஸ்சிமாபிமுகமான (பின்நோக்கிய) பிரகாச முண்டாம். ஸ்படிகம், புகை, பிந்து, நாதம், கலை, நக்ஷத்திரம், மின்மினி, தீபம், பொன், நவரத்தினங்கள் இவை முதலான பிரகாசங்கள் தோன்றும். அப்பொழுதுதான் பிரணவ ஸ்வரூபம் (அறியப்படும்).

(இரண்டாவது பிராஹ்மணம் - முதல் அத்தியாயம் முற்றிற்று).

## II - வது பிராஹ்மணம் (2 - வது அத்தியம்).

பிராணன் அபானன் இரண்டையும் ஐக்கியம் செய்து கும்பகத்தில் திருடமானவனாய் நாசிகாக்கிரத்தின் (மூக்குநுனியின்) பார்வையில் திருடமாகிய பார்வை யுள்ளவனாய் இரண்டு கைகளின் விரல்களால் ஷண்முகீகரணம் § செய்து பிரணவத் துவனியைக் கேட்டு மனம் அவிடத்தில் லயமாகிறது. அப்படிப்பட்டவனுக்குக் கர்மம் ஒட்டாது. சூர்யனுடைய உதயம் அஸ்தமன (கால)ங்களி லன்றோ கர்மம் செய்யவேண்டும். இவ்விதம் தெரிந்தவனுக்கு ஞான சூர்யனின் உதயா ஸ்தமனம் இல்லாததால் அவனுக்குச் சகல கர்மங்களும் கிடையாது. சப்தமும் காலமும் லயமான காரணத்தால் இராப்பகல் கடந்தவனாகிச் சர்வ பரிபூரணஞானத்தால் உன்மனியவஸ்தையின் வசத்தால் பிரமத்தில் ஐக்கியம் ஆகிறான். உன்மனியால் அமநஸ்கம் உண்டாகிறது. இவ்விதம் அறிகிறவனுக்கு சிந்தனையற் றிருப்பதே தியாநம். சர்வ கர்மங்களைப் போக்குதலே ஆவாஹனம், நிச்சய ஞானமே ஆசனம், உன்மனீபாவமே பாத்தியம், எப்பொழுதும் அமநஸ்கமே அர்க்கியம், சதா பிரகாசமே ஆசமநம், அளவிடக்கூடாத அமிருத விருத்தியே ஸ்நாநம். சர்வத்திலும் ஆத்ம பாவனையே (சர்வமும் ஆத்மா என்கிற பாவனையே) கந்தம், திருக்(பார்

† 'பிரதபத்' என்று பிரதிமை திதிக்குப்பேர்.

‡ மனோலய மாகவே பிராணவாயுவின் லயம் தானே ஆகுமென்று உரையாசிரியர் சொல்லுகிறார்.

§ இரண்டு கைகளினுடைய ஆறு விரல்களால் காது துவாரம் இரண்டு, மூக்கு துவாரம் இரண்டு, கண்கள் இரண்டு இவ்வாறையும் மூடுதல்.

ப்பவன்) ஸ்வரூபத்தில் ஸ்திரப்படுதலே அக்ஷதைகள், † சித்தை (ஞானத்தை) அடைவதே புஷ்பம், சித்தாகிற (ஞானமாகிற) அக்நிஸ்வரூபமே தூபம், சித்தாகிற (ஞானமாகிய) சூர்யஸ்வரூபமே ‡ தீபம், பரிபூர்ணமான சந்திரனுடைய அமிருதத்தோடு ஒன்று படுதலே நைவேத்யம், நிச்சலத்தன்மையே பிரதக்ஷிணம், ஸோஹம் § பாவமே நமஸ்காரம், மௌனமே ¶ ஸ்தோத்திரம், சர்வசந்தோஷமே விசர்ஜனம் (பூசையின் முடிவு) †† ஆகும்.

(இரண்டாவது பிராஹ்மணம் - இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று).

## II - வது பிராஹ்மணம் (3 - வது அத்தியாயம்).

இவ்விதம் திரிபுடி நீங்க, அலையற்ற சமுத்திரம்போலும், காற்று இல்லாதவிடத்துத் தீபம் போலவும், சலனமற்றதும் சம்பூர்ணமானதும் ‡‡ பாவ அபாவங்கள் அற்றதுமான கைவல்ய ஜ்யோதியாகிறான்.

சாக்கிரம் (விழித்திருக்கும் நிலை) தூக்கம் இவைகளின் முடிவை யறிந்ததால் பிரஹ்மவித்தாகிறான் (பிரஹ்மத்தை அறிந்தவனாகிறான்).

சுழுத்திக்கும் சமாதிக்கும் மனோலயம் பொதுவாக இருந்தபோதிலும், சுழுத்தியில் (மனம்) அஞ்ஞானத்தில் லயப்பட்டிருப்பதாலும், அது மோக்ஷத்துக்குக் காரணமாகாதபடியாலும் இரண்டுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. சமாதியிலோ அஞ்ஞானமும் அதன் விகாரங்களும் நீங்கிய மனம் அகண்டாகாரவிருத்தியாம் சாக்ஷிசைதன்யாகாரமாகப் பெற்று பிரபஞ்சத்தின் லயமுண்டாகும். ஏனென்றால் பிரபஞ்சம் மனதினால் §§ கற்பிக்கப்பட்டதால் அவையிரண்டிற்கும் பேதமில்லை. ஒருவேளை மனம் வெளிப்பட்டாலும் (அப்பொழுது அவ்வெளித் தோற்றங்கள்) மித்யை (அசத்யம்) என்கிற பாவனையால் (பிரபஞ்சலயமுண்டாகும்).

† பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் பொருள் எனமூன்று பகுதிகளாயுள்ளது விஷயஞானம்; அல்லது அபரஞானமாகும். இதுவே திரிபுடிஞானமெனச் சொல்லப்படும். பார்வையும் பார்க்கப்படும் பொருளும் பார்ப்பவன் மாத்திரமாய் நிற்றலே திருபுடியற்ற பரஞானமாகும்.

‡ இவ்விதம் அக்நி, சூர்ய, சந்திர மண்டலங்களாகிய மும்மண்டலங்களும் சொல்லப்பட்டன.

§ "ஸோஹம் பாவம்" அவனே நான் என்னும் பாவனை, அல்லது ஸ்திதி; இதுவே அஜபா காயத்திரி அற்ற சுத்த மந்திரத்தின் உண்மை.

¶ இவ்விடம் மௌனம் என்பது வாக்கின் மௌனமன்று, மனதின் விருத்திகளடங்கின பரமசூன்யமான மனோமௌனமுமன்று, பரம்பொருளே தான் என்றும், பிரம்மாநந்தத்தை அனுபவிக்கிறோம் என்கிற தோற்றமுமற்ற மகாமௌனமாகிய ஆநந்தாதீத நிலையே என்று பொருள் கொள்ளவேண்டும்.

†† இவ்வாறு ஜீவன்முத்தர்களின் நிலை பூஜையாக உருவகப்படுத்திச் சொல்லப்பட்டது.

‡‡ பாவ அபாவங்கள் என்பன நினைவு நினைவின்மை யாகிய சகல, கேவலங்களைக் குறிக்கும்.

§§ காரணமும் காரியமும் அபேதம் என்கிற நியாயப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. சுழுத்தியில் பரிச்சின்னமான மனம் அஞ்ஞானத்தில் லயப்படும் என்றும், சமாதியில் அம்மனமே அஞ்ஞானத்திலிருந்தும் நீங்கி அபரிச்சின்னமாகும் (திரிபுடியற்றதாகு மென்றும்) உரையாசிரியர் சொல்லுகிறார்.



எப்பொழுதும் பிரகாசிக்கும் சதாநந்தானுபவ மொன்றிலேயே இருக்கும் பிரஹ்மவித்தானவன் அதுவே (அப்பிரஹ்மமே) யாகிவிடுகிறான். †

எவனுக்குச் சங்கல்பநாசம் உண்டாயிற்றோ அவனுக்கு முக்தி கையிலிருக்கும்; ஆகையால் பாவ அபாவங்களைத் தள்ளிப் பரமாத்மதியானத்தால் முக்தனாகிறான். மறுபடியும் மறுபடியும் சகல அவஸ்தைகளிலும். ஞானம் ஞேயம் (அறியப்படும்பொருள்), தியானம், தியேயம் (தியானிக்கப்படும்பொருள்) லக்ஷியம் அலக்ஷியம் (லக்ஷியமல்லாதது), திருசியம் (பார்க்கப்படும் பொருள்), அதிருசியம், வேண்டுவன வேண்டாதன என்னும் இவைகளைத்தள்ளிஜீவன்முக்தனாகிறான்.

(இரண்டாவது பிராஹ்மணம் - மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று).

## II - வது பிராஹ்மணம் (4 - வது அத்தியாயம்).

அவஸ்தைகள் ஜாக்கிரம், சுவப்நம், சுழுத்தி, துரீயம், துரீயாதீதமென ஐந்து.

ஜாக்கிரத்தில் ஜீவன் பிரவிருத்தி மார்க்கத்தில் ஆசையுள்ளவனாய்ப் பிரவர்த்திக்கிறான்; பாபங்களின் பலமாகிய நரகமுதலியவை தனக்கு வேண்டாம், நற்கர்மங்களின் பலமாகிய சுவர்க்கமே தனக்கு வேண்டுமென்று இச்சிக்கிறான். அவனே வைராக்கியம் பூண்டு கர்மத்தாலுண்டாகிய ஜன்மங்கள் போதும் சம்சாரமாகிய பந்தம் போதும் என்று முக்தியில் ஆசையுள்ளவனாய் நிவிர்த்தி மார்க்கத்திற் பிரவேசிக்கிறான்.

அவனே (அந்தஜீவனே) சம்சாரத்தைக்கடக்க வேண்டிக் குருவை ஆசிரயத்துக் காமம் முதலியவைகளைவிட்டு விதிக்கப்பட்ட கர்மங்களை (மாத்திரம்) செய்துகொண்டு, சாதனங்கள் நான்குடன் கூடினவனாய் ஹிருதய கமலமத்தியில் ‡ சத்தாமாத்திரமான பகவானை அந்தர்லக்ஷியரூபமாய் அடைந்து சுழுத்தியவஸ்தையிலும் முன்சொன்ன பிரஹ்மானந்த ஸ்மிருதி (ஞாபக, ஞாப்தி)யை § அடைந்து, நான் ஏகனே அத்விதீயனென்று (இரண்டற்றவனென்று அறிந்து) கொஞ்சகாலம் அஞ்ஞானத்தின் விருத்தியால் (ஸ்வரூபத்தை) மறந்தும், ஜாக்கிராவஸ்தையில் உண்டானவாசனைகளால் நான் தைஜஸ ¶ னென்றும், இருவாசனையும் (சாக்கிரசொப்னம் இரண்டின்வாசனையும்) விட்டு இப்பொழுது நான் பிராஞ்ஞனென்றும் (நினைந்து) ஸ்தானபேதத்திலும் நான் ஒருவனே, அவஸ்தைபேதங்களுக்கு அப்பாற்பட்டவன், என்னைத்தவிர வேறு இல்லையென்று விவேகம் பிறந்தவனாகி, சுத்தாத்வைதமான பிரஹ்மம் நானே என்று பேதவாசனைக

† அனுபவம் முதல் உண்டான பொழுது பிரஹ்மம் தானென அறிகிறவன் பிரஹ்மவித், அதாவது பிரஹ்மத்தை யளிக்கிறவன்; பிறகு பிரம்மவரன், வரியான் என்னும் நிலைகளையும் கடந்து ஆநந்தாதீத நிலையிலிருப் பவனே பிரம்மமேயானவன்.

‡ இதன்பொருள் ஞானவாசிட்டம் உத்தாலகன் கதையில் சத்தாசாமானியம் சித்சாமான்யம் என்று சொல்வதில் பார்க்கலாம்.

§ இதையே ஸ்ரீக்ருஷ்ணபகவான் கீதையில் ஞானியானவன் எவரும் தூங்கும்போது விழித்திருப்பான் என்று சொன்னது. இதையே நனவிற்சுழுத்தியென்றும் சொல்வதுண்டு.

¶ அஞ்ஞானத்தால் சாக்கிராவஸ்தையில் விசுவனென்றும், சுவப்நாவஸ்தையில் தைஜசனென்றும் சுழுத்தியவஸ்தையில் பிராஞ்ஞனென்றும் ஒரே ஜீவன் அந்தந்த அவஸ்தைகளில் நினைக்கிறான். இதன் விஸ்தாரத்தைப் பிரணவோபாஸனையைக் கூறும் மாண்டூக்கிய உபநிஷத்தில் பார்க்கலாம்.

லைப்போக்கி, தன்னுள்ளத்தில் உதிக்கும் சூர்யமண்டலதியானத்தால் ததாகாரமாகி பரப்பிரஹ்மமாகிய மோக்ஷமார்க்கத்தைப் பிடித்தவனாய்ப் பரிபக்குவனாகிறான். சங்கல்பம் முதலியவைகளுடன் கூடியமனம் பந்தத்துக்குக் காரணமாகும். அவைகளினின்றும் விடுபட்டமனம் மோக்ஷத்துக்குக் காரணமாகும். அவ்விதமானவன் கண் முதலிய வெளிப்பிரபஞ்சத்தில் உபரதி (விடுதலை) யடைந்தவனாகி, பிரபஞ்சவாசனைகளையும் விட்டு, சகலஜகத்தையும் ஆத்மஸ்வரூபமாகப் பார்க்கிறவனாய் அகங்காரத்தைவிட்டு, பிரஹ்மம் நான் என்று சிந்தித்துக்கொண்டு, இவ்வெல்லாம் (சகல ஜகமும்) அந்த ஆத்மாவே என்று பாவித்துக் கிருதகிருத்தியனாகிறான்.

(இரண்டாவது பிராஹ்மணம்-நான்காவது அத்தியாயம் முற்றிற்று).

சர்வபரிபூரண துரீயாதீதப் பிரஹ்மமாகிவிட்ட யோகியாகிறான். அவனையே பிரஹ்மமென்று துதிப்பர். சர்வலோகங்களாலும் துதிக்கத்தகுந்தவனாகவும், சகலதேசங்களிலும் சஞ்சரிக்கத் தகுந்தவனாகவு மாகிறான்.

பிந்துவை பரமாத்மாவாகிய ஆகாயத்தில் (சங்கற்பத்தை) வைத்துச் சுத்தாத்வைத † அஜாட்ய அமனஸ்க யோக நித்திரையாகிற அகண்டாநந்த பதவியில் நிற்பதால் ஜீவன்முக்தனாகிறான். அவ்வானந்த சமுத்திரத்தில் மூழ்கினவர்கள் யோகிகளாவார்கள். அவ்வானந்தத்தை உத்தேசிக்க இந்திரன் முதலியவர்களும் சுவல்ப ஆநந்தத்தையுடையவர்கள். இவ்விதம் ஆநந்தத்தை யடைந்தவன் பரம யோகியாவான்.

இரண்டாவது பிராஹ்மணம் முற்றிற்று.

## III - வது பிராஹ்மணம் (முதல் அத்தியாயம்).

யாக்ஞ்யவல்கிய மகாமுனியானவர் மண்டலபுருஷனைப் பார்த்து "ஓ ஸ்வாமி! தங்களால் சொல்லப்பட்ட அமநஸ்கத்தின் லக்ஷணத்தைமறந்துவிட்டேன். மறுபடியும் அதன் லக்ஷணத்தைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார். அதற்கு மண்டலபுருஷன் அப்படியேயாகட்டுமென்று (பின்வருமாறு) சொன்னார்.

இவ்வமநஸ்கம் மிகவும் ரகசியமானது. அதை அறிவதால் (புருஷன்) கிருதார்த்தனாகிறான். அது எப்பொழுதும் சாம்பவீமுத்திரையுடன் கூடினது. பரமாத்மதிருஷ்டியினால் அதன் பிரத்தியய(ஸ்வரூபம்) லக்ஷியங்களைப் பார்த்து, பிறகு சர்வேசுவரனானதும்(சகலத்தையும் ஆள்வதாயும்) அப்பிரமேயமாயும் (பிரமாணங்களுக்கு எட்டாததாயும்) அநாதியாயும், சிவமாயும் (மங்களஸ்வரூபமாயும்) பிரகாசமாயும், நிராலம்பமாயும் (ஒன்றினிடத்தும் பற்றுக்கோடில்லாததாயும், அத்வயமாயும் (இரண்டற்றதாயும்) பிரம்மாவிஷ்ணுருத்திரன் முதலானவர்களுக்கும் ஒரேலக்ஷியமாயிருப்பதாயும், சர்வத்துக்கும் காரணமாயும் இருக்கும் பரப்பிரஹ்மத்தை ஆத்மாவிலேயே பார்ப்பவனாகி, (மனமாகிய) குகையில் இருக்கும் அதை (பிரஹ்மத்தை) நிச்சயமாக அறிந்து, பாவம் அபாவம் முதலிய துவந்துவங்களைக் கடந்தவனாகி, மனோன்மனி அனுபவத்தை அறிந்தவனாகி, அதன் பிறகு சகல இந்திரியங்களும் க்ஷயம் (நாசம்) அடைந்த காரணத்தால், அமநஸ்கசுகமாகிய பிரஹ்மாநந்தக் கடலினிடத்து மனதினது பிரவாஹ (ஓட்ட) ரூபமாகிய யோகத்தால், ‡ காற்று இல்லாதவிடத்துத் தீபம்போல் அசைவற்ற பரப்பிரஹ்மத்தையடைகிறான். பிறகு காய்ந்துபோன விருக்ஷத்தைப்போல், மூர்ச்சை, நித்திரை, நிச்சுவாஸ உச்சுவாஸங்கள் (கீழ்மூச்சு மேல்மூச்சுகள்) இவைகளின்மையால் துவந்துவங்கள் கழிந்தவனாகி, அசைவற்ற † காத்திரத்தை (சரீரத்தை) யுடையவனாய், பரமசாந்தியை யடைந்து, (அவன்) மனம் அலைவற்றுப் பரமாத்மாவினிடம் லயமாகிறது. பால் கறந்த பிறகு பசுவின் ஸ்தனத்தில் உள்ள பால் (எப்படி நஷ்டமாகிவிடுமோ அது) போல, சகல இந்திரியங்களும் நஷ்டமானபிறகு மனோநாசமுண்டாகும். அதுவே அமநஸ்கம்.

† ஜடத்தன்மையில்லாத நித்திரை. இதுவே அறிதுயில், அதாவது நனிவிற் சுழுத்தி ஆநந்தமென்றும், Luminous sleep என்றும் சொல்லப்படும்.



பிறகு நித்தியசுத்தமான பரமாத்மா நானே, "தத்துவம் அசி" (அதுவே நீ யாயிருக்கிறாய்) என்கிற உபதேசத்தால் நீயே நான், நானே நீ என்று தாரகயோகமார்க்கத்தால் அகண்டானந்தம் நிறைந்தவனாகிக் கிருதார்த்தனாகிறான்.

(மூன்றாவது பிராஹ்மணம் - முதல் அத்தியாயம் முற்றிற்று).

## III - வது பிராஹ்மணம் (2 - வது அத்தியாயம்).

பரிபூரணமான பரமாகாசத்தில் முழுகின மனதை உடையானாய், உன்மனீ அவஸ்தையை அடைந்து, சகல இந்திரியக்கூட்டங்களையும் விட்டு, அநேக ஜன்மங்களில் சம்பாதிக்கப்பட்ட புண்ணியக்கூட்டங்களின் பரிபக்குவத்தால் கைவல்யமாகிய பலத்தை (பிரயோஜனத்தை) அடைந்து, அகண்டாநந்தத்தால் சகலமான துக்கங்களாகிய மாசுக்களையும் நீக்கினவனாகி, பிரஹ்மமே நான் என்று கிருதகிருத்தியனாகிறான்.

பரமாத்மாபூர்ணனானதால் நீயே நான் (நம்மிருவருக்கும்) பேதமில்லை யென்று சொல்லிச் சிஷ்யனை ஆலிங்கனம் செய்து அவனுக்கு (குருவாகிய மண்டலபுருஷனானவர்) ஞானத்தை அடைவித்தார்.

(மூன்றாவது பிராஹ்மணம் - இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று).

மூன்றாவது பிராஹ்மணமும் முற்றிற்று.

## IV. வது பிராஹ்மணம்.

யாக்ஞ்யவல்கியர் மண்டலபுருஷனை வியோமபஞ்சகத்தின் (ஐந்து ஆகாயங்களின்) லக்ஷணத்தை விரிவாகச்சொல்லவேண்டுமென்று கேட்டார். அவர் சொன்னதாவது: ஆகாசம், பராகாசம், மகாகாசம், சூர்யாகாசம், பரமாகாசமென ஐந்து உண்டு. உள்ளும் புறமும் இருள் மயமாயிருப்பது ஆகாசம், உள்ளும் புறமும் பிரளயகாலத்து அக்கினியைப்போல்வது பராகாசம், உள்ளும் புறமும் அளவிடக்கூடாத பிரகாசத்தைப் போல்வது தத்துவ மகாகாசம், உள்ளும் புறமும் சூரியனைப்போல்வது சூர்யாகாசம், வசனிக்கக்கூடாத ஜ்யோதியாய் சர்வவியாபகமானதும், நிரதிசயாநந்தலக்ஷணமுள்ளதும் பரமாகாசம். இவ்விதம் அந்தந்த லக்ஷியத்தைப் பார்ப்பதால் அந்தந்தமயமாகிறான்.

‡ விஷயங்களினின்றும் அந்தக்கரண விருத்தியை விசாரத்துவாரா நிக்கிரகம்செய்து விருத்தி எழும் இடத்தை நாடிச் சாதகம் செய்யும் பரிபாக திசையில் இந்திரியங்களின் அடக்கம் உண்டாகி ஆண்டு நிகழும் அகண்டாகார விருத்தி விளக்கத்தால் உண்டாகும் ஆனந்தானுபவத்தில் சித்தவிருத்திலயம் நிரந்தரம் நிலை பெற்றிருக்கும் சமாதியனுபவத்தால் நிவாததீபம் போல் சலனமற்ற சத்தாசாமானிய வடிவாகிய பிரஹ்ம ஸ்திதியை அடைகிறான்.

† இது சூக்ஷும காரண மகாகாரண சரீரங்களைக் குறிக்கும்.

ஒன்பது சக்கரங்களையும், ஆறு ஆதாரங்களையும், மூன்று லக்ஷியங்களையும், ஐந்து ஆகாசங்களையும் எவன் நன்ருய் அறியவில்லையோ அவன் பேருக்கு மாத்திரம் யோகியாவான் (உண்மையான † யோகியாக மாட்டான்).

நான்காவது பிராஹ்மணம் முற்றிற்று.

## V. வது பிராஹ்மணம்.

விஷயங்களோடு கூடியமனம் பந்தத்துக்கும், நிர்விஷயமான (விஷயங்களற்ற) மனம் முக்திக்கும் காரணமாகும். சகல ஜகத்தும் சித்தத்தை ஆதாரமாக உடையது. சித்தம் (மனம்) நிராசிரயமாக (தாக்கற்றதாக) மனோன்மனி அவஸ்தையை யடையப் பக்குவமானதாகவும், லயமாகத்தகுந்ததாகவும் செய்யவேண்டும். அதன்லயத்தைப் பரிபூரணமான வென்னிடத்து அப்பியாசஞ் செய்யவேண்டும். மனோலயத்துக்குக் காரணம் நானே. அநாஹதமான (அடிக்கப்படாத, அல்லது அநாஹத சக்கரத்திலுண்டான) சப்தமெதுவோ, அந்தச் சப்தத்திற்குள் துவனியெனப்பெயர்: அந்த துவனியின் உள்ளிருப்பது ஜ்யோதியாகும்: அந்த ஜ்யோதியின் உள்ளிருப்பது மனம் (சுத்தமனம்). அந்தமனம் மூன்று லோகங்களினுடைய (ஸ்தூல சூக்ஷ்ம காரண லோகங்களுடைய) சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்கிற வேலையைச்செய்யும். அம்மனம் எவ்விடத்தில் லயமடைகிறதோ ‡ அதுவே விஷ்ணுவின் பரமபதம்.

§ அதன் (அம்மனதின்) லயத்திஞல் (பேதங்களற்றுப்போவதால்) அத்வைதம் சித்திக்கும்.

இதுவே பரமதத்துவம் (உண்மை). அதை அறிந்தவன், பாலனைப்போலவும், பைத்தியம் பிடித்தவனைப்போலவும் பிசாசத்தைப்போலவும் லோகத்தில் சஞ்சரிப்பான்.

இவ்வித அமநஸ்காப்பியாசத்தால் நித்திய திருப்தி, மூத்திரமலங்கள் அல்பமாதல், மிதமான ஆகாரம், சரீரதிருடம் (பலம்), அஜாட்ய நித்திரை (அறிதுயில்), பார்வை வாயு இவைகளின் சலநமின்மை, பிரஹ்மதரிசநத்தா லுண்டாகிய சுகஸ்வரூபம் இவைகள் சித்தியாகும்.

இவ்விதம் வெகுகாலம் சமாதியில் உண்டாகும் பிரஹ்மாமிருதத்தைப் பானம் செய்வதே தொழிலாயிருப்பவன் சன்னியாசியாகவும் பரமஹம்ஸனுகவும், அவதூதனுகவுமாகிருன்.

அவன் பார்வையால் சகல சகத்தும் சுத்தமாகும்: அவனைச் சேவிப்பதில்(ஊழியம் செய்வதில்) ஊக்கமுள்ளவன் அறிவில்லாதவனுனாலும் முக்தனுகிருன். அவனுடையகுலத்தை நூறு தலைமுறைவரையில்(சம்சாரத்தைத்)தாண்டும்படி செய்கிருன். அவனுடைய தாய்தகப்பன் குழந்தைகள் இவர்களின் வர்க்கங்கள் எல்லாரும் முக்தராகிருர்கள். இவ்விதம் உபநிஷத்.

ஐந்தாவது பிராஹ்மணம் முற்றிற்று.

மண்டலப் பிராஹ்மணோபநிஷத்து முற்றிற்று.

மு. கோ - நாராயணசாமி அய்யர்.

† நவசக்ர ஷடாதாரம் த்ரிலக்ஷ்யம் வ்யோமபஞ்சகம் ।
ஸம்யகேதன்ந ஜாநாதி ஸயோகீ நாமதோபவேத் ॥

‡ இவ்விடத்தில் விஷ்ணுவென்ருல் சர்வவியாபியான வஸ்துவாகிய பிரஹ்மம் என்றுபொருள்.

§ அநாஹதஸ்ய சப்தஸ்ய தஸ்ய சப்தஸ்ய யோ த்வநி ।
த்வநேரந்தர்கதம் ஜ்யோதிர் ஜ்யோதிரந்தர்கதம் மந: ॥
யந்மநஸ்த்ரிஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி வ்யஸநகர்மக்ருத் ।
தந்மநோவிலயம் யாதி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥



*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith.*

*"Seek Truth wherever you find it." But,*
*"Make your Choice and stick to it till you reach the End."*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 20 JUL 1910 MADRAS.

ஸத்தியம் வத—**Speak the Truth.**

"HITCH YOUR WAGON TO A STAR". "TO THINE OWN SELF BE TRUE".




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்சத்.] [God is Love. Knowledge is Power. *Aum*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு. 18.] 1910ஹு ஜூன்மீ, சாதாரணஹு ஆனிமீ [ச. 3.

# *The King's Sympathy and India's Ideal.*

"I have realised the patience, the simplicity of spirit, the loyal devotion, and the religious spirit which characterise the Indian peoples. I know also their faith in the Justice and integrity of our rule. I cannot help thinking from all I have heard and seen that the task of Governing India will be made the easier if we, on our part, infuse into it a wider element of sympathy. I will venture to predict that to such sympathy there will be an ever abundant and genuine response."—*The King's Speech at the Guildhall Banquet, on his return from India & the Colonies.*

"I can assure you and all our other friends in this great and wonderful land that we leave India with feelings of gratitude and affection. We have seen and have learnt India. We have seen enough to make India a living reality to us, enough to make us wish that we could see more and to implant for ever in our hearts a sympathy and an interest in all that affects our fellow subjects in India—of whatever creed or race.

We have gained impressions which with further study and observation will enable me to try and understand some of the problems of British Administration. In bidding India farewell, I can truly say that our visit has been to us an unending and unbroken series of happy and most instructive experiences."—*H. M. King George V on the Occasion of his leaving India on the completion of his Royal Tour in 1905 - 06.*

## அரசர் அனுதாபமும் இந்தியாவின் லக்ஷியமும்.

"உள்ளம் உருகவுருகக் கள்ளங்கரையக் கரைய" என்பது ஆன்றோர்வாக்கு. இன்னருட்சக்தியாம் "ஸ்ரீகுரு" மூர்த்தமாய் விளங்கிய என்தாய் இம் மூதுரையை அடிக்கடி யெடுத்துரைப்பள். "ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும், நன்றே செய்மின் நாணுமே" யென்றோதிய திருமூலதேவர், "மன்குல மெல்லாம் ஒன்றே; இந்த ஓரேகுலத்துக்கு தேவனும் ஒன்றே; யென்று ஓதியதெப்படி ? ஊனுணர்வொழித்து உள்ளுணர்வுணர்ந்தார்க்கு வினை வர்ணபேதங்க ளெல்லாம் ஒழிந்துபோம். சூரிய ரஸ்மி ஊனக்கண்ணுக்கு வெளிச்சமாய் மட்டும் தோற்றுகிறது, எல்லாவர்ணங்களையும் விளங்கச் செய்வதாயினும் அதற்கு வர்ணமில்லை: ஆனால் அந்த சூரிய ரஸ்மியை த்ரிகோணவடிவான ஒரு ஸ்படிகத் துண்டு வழியாய்ச் செல்லவிட்டுப் பார்த்தால், "இந்திரவில்" போல் ஸப்தவர்ணங்களும் அதில்வெகு அழகாய்ச் சேர்ந்து விளங்குவது கண்ணுக்குப் புலப்படும். அஃதேபோல, ஸப்தவர்ணங்களையும் ஒருமுகமாகச் சேரத்தக்க உபாயம் செய்தால், ஏழுவர்ணங்களும், ஒன்று சேர்ந்து வெள்ளைஜ்யோதியாகக்காணும். இதிலிருந்துவெள்ளையென்பது ஒருவர்ணமல்லவென்றும், இந்திரதனுவில் காணப்படும் ஸப்தவர்ணங்களின் சமஷ்டி ரூபமே வெள்ளை யென்றுந் தெரியவரும். இப்படி ஒன்று பலவாக விரிவதும், பலவாக விரிந்தது ஒன்றாகக் கூடிவிளங்குவதும் பிராகிருத தர்மமாம். இந்த வேற்றுமையும் ஒற்றுமையும் பிரகிருதியில் ஸ்வபாவமாக நிகழும். இப்படி நிகழ்வதை ஸ்வபாவமென்றுணர்வதே உள்ளுணர்வு. அஃது எப்படி?

உள்ளம் என்பது அந்தக்கரணம். இது விஷயப்பற்று காரணமாய் மலினப்பட்டு கடினமாயிருக்கிறது. இப்படி மலினப்பட்டு கடினப்பட்ட அந்தக்கரணமே, "மனம்" என்றும், "மாயை" யென்றும் சொல்லும் தத்துவமாக மாறுகிறது. மனோ தத்துவத்தின் மலினம் நீங்க, அது கடினப்பட்டிருப்பது நீங்கி இளகியுருகவேண்டும். மனம் இளகுவதற்குக் காரணம் என்ன ? அனுதாபசிந்தை: அப்படியென்றால், தன்னைப் பிறனாகவும், பிறனைத் தானாகவும் சிந்திக்கும் சக்தியாம். இந்தச்சக்தி ஸ்வபாவமாயுள்ள ஆத்மசக்தி: அறிவுள்ள விடத்தில் அனுதாப சிந்தையிருக்கும். அநுதாப சிந்தையினாலேயே அறிவு விர்த்தியாகிறது. அனுதாப சிந்தையிற் பழகிப் பழகித் தேர்ந்து முதிர்ந்தால், அதற்கு "ஜீவகாருண்யம்" என்று சொல்கிறது. "அனுதாப சிந்தை" யென்பது இளங்கொடி. "ஜீவகாருண்யம்" என்பது அவ்விளங்கொடி வளர்ந்து முதிர்ந்து படர்ந்து எங்கும் பரவிப் பலனைத்தரும் பக்குவம் பெற்றது. யேசுநாதர், "I am the Vine; and My Father is the Husbandman." என்று ஒரு பாரார்த்தமான கதைசொல்லியிருக்கிறார். திராக்ஷக்கொடிபோலும் தன்மையுள்ளது அனுதாபசிந்தை. இதையே மானுஷீகம் என்றுசிறப்பித்துக்கூறுவது. அனுதாபசிந்தையில்லாதவன் மிருகப் பிராயத்தவனாவன். அம் மானுஷீகத் தன்மையாம் அனுதாபசிந்தையை தெய்விகத்தன்மை பொருந்திய ஜீவகாருண்யமாக வளரச்செய்து பலனைக்கொடுக்கச் செய்பவன் பரமபிதாவாகிய தேவன். இந்த ஜீவகாருண்யமாம் திராக்ஷப்பழங்களின் மதுரமான ரஸமே "ஆனந்தம்" என்று சொல்வது. இந்த ஆனந்தத்தின் மூலமே "பரங்கருணை" யென்று சொல்லும் கடவுளின் பரமலக்ஷணம். இந்த லக்ஷணத்துக்கு இருப்பிடமா யிருப்பதொன்றெதுவோ அதுவே "பரம்பொருள்", "பரலக்ஷியம்" என்று சொல்வது. திராக்ஷத்தோட்டம் போட்டவன், திராக்ஷயின் புளிப்பை நாடினவனல்ல: திராக்ஷப்பழத்தின் புளிப்பு அதன் உண்மைக்குணமல்ல; ஆனால் அதன் அபக்குவத்தைக் காட்டுமோர் குறியாம். அப்படியே மனிதனுடைய உள்ளமும் (அந்தக்கரணம்) அனுதாப சிந்தையால் "உருகி உருகி", அதிலுள்ள "கள்ளம் (புளிப்பு) கரையக் கரைய" அது தித்திக்கும் திராக்ஷரஸம்போல் பக்குவப்பட்ட உள்ளுணர்வாகும்: இந்த "உள்ளுணர்வே" அதன்பக்குவமுதிர்ச்சியில், பிரஹ்மமாக" அதாவது, "எல்லாமாய் அல்லவுமாய், விளங்குகிறது. "எல்லாமாய்" என்றதனால் எல்லாவற்றிலும் அந்தர்யாமியாய் விளங்குந் தன்மையால் சமஷ்டியில் அவற்றோடு அபேதமாய் விளங்கியும், "அல்லவுமாய்" என்றதனால் வியஷ்டியில் ஒவ்வொன்றுக்கும் உள்ளுறைந்தும் அஃதோ டொட்டாது(விஷயப்பற்றின்றி) வேறாயிருப்பதால், பேதமாயும் அதாவது அந்நியமாயும் விளங்குவது என்பது குறிக்கப்பட்டது. அறிவு சமஷ்டியில் ஒன்றும், வியஷ்டியில் பல்வேறுமாய் விளங்கும். ஏன் இப்படி விளங்கவேண்டுமென்றால், "உபாதிபேதத்தால்" என்பர்மேலோர். பார்ப்பான் ஒருவனாயினும் பல்வேறு வர்ணமுற்ற கண்ணாடிகளின் வழியாகிப் பார்ப்பதால், காண்பான், காண்பொருள், இரண்டும் ஒன்றேயாயினும், காட்சி மட்டும் வேறு பட்டு விளங்குவது போல, அறிவு ஒன்றேயாயினும், ஊனின் (உடம்பின்)வேற்றுமையால், அறிவானும், அறிபொருளும் ஒன்றேயானபோதிலும் (உபாதிவிசேஷத்தால்) அறிவு பேதப்பட்டு விளங்கும். இதைத்தான் பகுத்தறிவு என்று சொல்கிறது. பேதபுத்தி யென்றும் சொல்லுவர். "பகுத்தறிவு" பேதத்தைக் காட்டுவதுபோல, "தொகுத்தறிவு" அபேதமாம் ஒற்றுமையைக் காட்டும். இந்த இரண்டின் இலக்ஷணத்தையும் நன்றாக ஊன்றிப் பார்த்து உள்ளத்தில் வைக்கவேண்டும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 20 JUL 1910 MADRAS.

மரம் என்கிற விசேஷ வுணர்வுண்டாகும்போது மரத்தின் வேற்றுமைக ளெல்லாம் உணர்விற்படும். மரத்தை விட்டுத் தோப்பு என்கிற பொது ஞானம் உதிக்கும்போது மரத்தின் வேற்றுமைகள் தோப்புஎன்னும் சமஷ்டிபாவ பொதுலக்ஷணத்தில் மறைந்து விடுகிறது. இப்படியே மரம் என்கிற பொதுப்பேருக்கும், மரத்தாலான யானை முதலிய நாமரூப லக்ஷணங்களுக்கு முள்ள வித்யாஸத்தை நன்றாக விசாரித் துணரல்வேண்டும். மரத்தினால் ஒரு மதயானைபோன்ற உருவம் சமைக்கப்பட்டிருந்தால், அந்த "மரம்" என்கிற விசேஷ பதார்த்தத்துக்கும், "ஆனை" யென்கிற நாமரூபலக்ஷணார்த்த விசேஷியத்துக்கு முள்ள சம்பந்தத்தை யுள்ளபடி ஆய்ந் துணரவேண்டும்.

"சித்தவிருத்தி நிரோதனம்" செய்து உள்ளதை ஊன்றிப்பார்த் துணர்ந்தார்க்குப் பின்வரும் திருமந்திரோபதேசத்தின் பொருள் விளங்கும்.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்."

நாமரூப லக்ஷணங்களோடு கூடிய "மர் மத யானை" என்னும் உருவஞானம், அருவமாயுள்ள (வேலை செய்யப்படாததற்கு முன்னிருந்து பின்னுமுள்ள) "மரம்" அல்லது 'கட்டை' யென்கிற அபேதஞானத்தை மறைத்தது. யானையின் உருப்பமைப்புகளா யிசைந்த எல்லாம் மரமே யென்கிற பொதுவான பூர்வஜ்ஞானம் உண்டானபோது, "மாமதயானை" என்கிற விசேஷஜ்ஞானம் மறைந்துபோய்விட்டது.

பொதுவாயுள்ள "பூர்வஜ்ஞானத்தை" "ப்ரஜ்ஞானம்" என்றும், விசேஷமாயுள்ள விருத்திஞானத்தை "விஞ்ஞானம்" என்றும் சொல்லுவர் மேலோர்.

"பிரஜ்ஞானம் ப்ரஹ்மம்." "விஞ்ஞானம் விருத்தி." ப்ரஜ்ஞானத்தை விஞ்ஞானமாகப் பெருக்கி எல்லாம் அதுவே யென்றுணர்ந்து, உணர்ந்ததோர் உணர்வும் ஒழிந்து உள்ளுணர்வு மாத்திரமாக மிஞ்சி நிற்பது ஸ்வாநுபவமாம். இந்த ஸ்வாநுபவம்தானே துரியாதீதத்திற் போல் ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி, மூன்றிலும் இம்மூன்றும் ஒன்றாய் விளங்கும் துரியத்திலும் உறுதியாய் உள்ளதென்று உள்ளத்தே திடமுண்டாகி நிச்சலனமா யிருப்பது சித்தாந்தம். இப்படியாகவேதாந்தத்தின்உறுதியே சித்தாந்தம். ஆதியிலுள்ளது அறிவு ஒன்றே. அந்த அறிவுதானே விஞ்ஞானத்தால் பார்முதற் பூதமாய்ப் பரந்து விரிந்தது. அதாவது அந்த அறிவின் "விருத்தியே" நாமரூப பிரபஞ்சங்களாக அமைந்து அண்டபிண்டங்களாகஆயிற்று. அந்த விருத்தி யறிவின் முடிவே வேதாந்தம். அது "ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம்" என்று ஓதும். அஃதை யாராய்ந்து தேர்ந்து, அஹம், துவம், இதம், (நான், நீ, இது) என்கிற முப்பொருளையும் அதுவாகவே யறிந்தமர்வது சித்தாந்தம். இப்படி யெல்லா மொன்றேயென்றுணர்ந்து விசாரமற்று அலையோய்ந்த சமுத்திரம்போல் மனதில் சலனம் நீங்கி விளங்குவது அத்வைதம். இது "வேதாந்த சித்தாந்த சமரஸ நன்னிலை." இந்நிலை பெற்ற சித்தர்களே (சாதனம் பற்றிச் சாதித்த சாத்தியர்களே) அவதார புருஷர்கள் ஆவர். அவர்தம் இச்சாமாத்திரத்தால் தோன்றுவர், மறைவர், இருப்பர், இறப்பர். † இவையெல்லாம் செய்தும் ஜனனமரண முண்டென்று கனவிலும்நினையார். நமக்கு நினைப்பும் மறப்பும்போல் அவர்களுக்குப் பிறப்பும் இறப்பும். இப்பேர்ப்பட்ட அவதார புருஷர்கள் ஜனிக்கப் போகிற (அதாவது, மன்குல க்ஷேமவிர்த்தியைப் பற்றி நினைக்கப்போகிற) காலத்தில் அரசுரிமைக் கேற்றவர் அனுதாப சிந்தை நிறைந்தவராகவே யிருக்கவேண்டும். ஹிருதயத்திலே அனுதாபசிந்தை யொன்றுமட்டும் நிறைந்திருந்தால், திராக்ஷைக் கொடி பயிரிடுவது போல, அவர்கள் அஃதொன்றைக் கொண்டு எல்லாம்தானே ஸ்வபாவமாக உண்டாகச் செய்வர். ஆதலால் நம் தேசத்துக்கு அதிபதியாக வமைந்துள்ள புதிய அரசரும் சக்ரவர்த்தியுமாகிய மாக்ஷிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் அவர்கள் இக்காலத்துக்கு இன்றியமையாத இவ்விலக்ஷணம் பொருந்தி யிருப்பதை நினைக்க மனமுவந்து, அஃதை யெல்லாருக்கு மெடுத்து துணர்த்துவன். அவர் 1905 - 6 - ம் வருஷத்தில் இந்தியாவிற்கு விஜயமாய் வந்து விட்டுப்போனபொழுதும், அதன் பின்னரும் வரைந்ததோர் சங்கதியை முகட்டிலெடுத் தச்சிட்டிருக்கிறோம்.

† Compare St, John X 17, 18.

அவருக்கு இந்தியா அத்தை பாட்டி கதையிற் கேட்டதோர் கந்தர்வ தேசமல்ல. உண்மையாக வுள்ளதென்று அதன் குணலக்ஷணங்களை நேரில் கண்டுணர்ந்தவரா யிருக்கிறார். அவர் தம் தர்மபத்னியோடு, இந்தியாவைக் கண்ணாரப்பார்த்து மனதாரவுணர்ந்திருக்கிறார். இதை அவர் தாமே உள்ளம்பூரிக்க வுணர்த்தியிருக்கிறார். இந்தியாவைப் பார்த்தமட்டில், இன்னும் அத்தேசத்தையும் அதன் ஜனங்களையும் நன்றாக வுணர்ந்து அவர்களிடத்து அனுதாப சிந்தை தம் உள்ளத்தூறிப் பெருக வேணுமாய்ச் சிந்திக்கச் செய்திருக்கிறது. அவர் உள்ளக்கருத்தை உள்ளபடி அவர் வெளியிட்டிருக்கிறவாறே இதை வாசிப்போருள்ளத் துறைக்கும்படி யுணர்த்த வேண்டுமானால், அவர் வாய்மொழியைத் தமிழ் மொழியில் இவ்வாறு முணர்த்துவ தொக்கும்:—



இந்தியர்களின் சாந்தம், சுத்தம், பக்திவிசுவாஸம், ஆஸ்திகபுத்தி இவைகளை யுணர்ந்து இந்தியரையாள அனுதாபகுணம் வேண்டுமென்றும், அனுதாபம் காட்டினால் இந்தியர் மிகவும் நன்றியுள்ளவராக விருப்பார்களென்றும் சொல்லியிருப்பதோடு பின்னும் எழுதியிருக்கிறார்,—

" இந்தியாவோர் மஹத்தானதேசம்: பார்க்கப்பார்க்க அதிர்சயம் விளைப்பது: இப்பூமண்டலத்தி லதிர்சயமான இத்தேசத்தைப்பார்த்த நாங்கள் (தாமும் தம் பத்னியும்) அன்பும் ஆர்வமும் நிறைந்தவர்களாய் அதைவிட்டுப்போகிறோம். இந்தியாவைக்கண்ணாரக்கண்டுகளித்தோம். மனதாரவுணர்ந்து மகிழ்ந்தோம். இந்தியாவை என்றென்றைக்கும் மறக்கக் கூடாதபடி அதைவேண்டுமட்டும் பார்த்தோமானோம். தின்னத் தெவிட்டாத தேனமுதம்போல், இந்தியாவைப் பின்னும் பார்த்துப் பார்த்துப் பழகி, இந்தியாவிலுள்ள எங்கள் உடன்பிரஜைகளான எல்லா ஜாதிமதஸ்தர்களின் க்ஷேமலாபத்திலும் ஒரு அக்கறைபிறந்து எங்கள் ஹிருதயகமலத்தில் அனுதாப சிந்தையென்னும் தேன் கசிந்தூறும்படியாக வேண்டுமென்றுண்மையாய்ச் சிந்திக்கலானோம். இப்பொழுது பச்சைமரத் தாணிபோல் மனதிற்பதிந்த உண்மைகளைக்கொண்டு, இன்னும் இந்தியாவைப்பற்றி நன்றாகத் தீரவிசாரித்து வாசித்துணர்வதால், இந்தியாவில் பிரிடிஷ்துரைத்தனத்தார் செய்யக் கடமைப் பட்டுள்ள கிருதகிருத்தியங்கள் சிலவற்றை ஐபந்திரிபற ஆய்ந்தறியக்கூடியவனாவேனென்று நினைக்கிறேன். இந்தியாவினின்றும் விடை பெற்றுக்கொண்டு போகும் இத்தருணத்தில், இந்தியாவிற்குவந்து பார்த்ததில் ஆதியோடந்தமாய் மனதுக்குச்சந்துஷ்டியையும் அறிவுவிர்த்தியையும் கொடுப்பதான அனுபவங்களை யெங்களுக்கு நேர்ந்தன வென்பதை நான் உண்மையா யுரைக்கிறேன்." இந்த 'அறிவு விருத்தி' அனுதாபசிந்தையினால் பூரண அறிவாகவும், "மனசந்துஷ்டி" அறிவானந்தமாகவும், அனுதாபசிந்தையின் விசேஷத்தால் வளர்ந்து வருமாயின் இந்தியா சித்தர்கள் வசிக்கும் ஞானபூமியென்றும், புனிதமான அதன் மண்ணை மிதித்த மன்னர்களும், மஹத்துக்களாய் மாறி, " நான் மனிதர்களுக்குள் அரசனாயிருக்கிறேன்" என்று சொல்லிய பகவத்வாக்கியம் பொய்க்காது உலகில் பிரசித்திபெறுமென்பது ஸ்பஷ்டமாம். இந்தியா " ஞானபூமி " யென்பது உண்மையாயின், ராஜலக்ஷ்மி, அகண்டானந்தலக்ஷ்மிக்குப்பெண்ணாய் விளங்க, அவள் பராக்ரமத்தைக்கண்டு மகிழும் தேவியின் இரகஸியநாமலக்ஷியார்த்தம் விளங்க, "அனுதாப சிந்தை" யொன்றினாலேயே இந்தியாவை யாளலாமென்று கூறிய இளவரசர்தாமே பட்டத்துக்கு வந்தபின், அவர் அரசாக்ஷி யதற்கு அத்தாக்ஷியாய் விளங்குவதாகு மென்பதற் கையமில்லை. அப்பொழுது இந்தியாவிலுள்ள சித்தபுருஷர்கள் தாம் நினைத்தகாரியத்தை முடித்தவர்களாய் 'பண்டபுத்ரவதோத்யுக்த பாலாவிக்ரமநந்திதாயைநமঃ' வென்று தேவியை வணங்கி தேவியின் ஸாந்நித்தியம் உலகெங்கும் விளங்க விசுவேசுவரர்களாக விளங்குவார்கள். மூடர்கள் மூக்காலும் மூடர்களேயாவர். அவர்களுக்கு மூடத்துவம் நீங்கினாலன்றி மனுஷத்துவமில்லையாதலால், அவர்களைப்பற்றி நாம் இங்கு சிந்திக்கவும் இடமில்லை.

ஓம்தத்சத்.

உ

## ஸ்ரீ மங்களாம்பிகை பஞ்சரத்நமாலை.

1. மாயவலையிற் சிக்கவிட்டென்னை மண்ணில்வந்து பிறக்கவைத்தாய்
காயவலையிற் புகுந்துகொண்டு காரணமாமுன்னை மறந்துவிட்டேன்!
† தாயமான காயத்திலே தாயேவந்துநீ யுத்பவித்துப்பின்
மாயமான காயத்தையுருக்கி மண்ணிற்பிறந்ததை மறக்கவைத்தாய்!
மாயகாய தாயமாய மங்களாம்பிகே சரணமம்மா!

2. மகவென்றுன்னை வாரியெடுத்து மாரிலணைக்க வுள்மனமகிழ்ந்து
அகமகிழ்ந்துபின் னார்வம்நிறைந்து அன்பிற்பிறந்ததோர் மதுரமென்று
ஜகமுழுவது முன்மயமாக ஜகத்ஜ்யோதியை யுன்னிடங்கண்டுபின்
தகதகவென்றுள்ள தங்கமேனியில் தாய்முகம்விளங்கத் தாபந்தீர்த்த
மகமகக்ஷேத்திர ஜகதகஜ்யோதியாம் மங்களாம்பிகே சரணமம்மா!

3. ஐந்துவயதிலுன் தாய்தேஹங்கழிய அவளுடன் என்னுயிர் தானும்போக
ஐந்துவயதாகாப் பாலையாயிருந்துநீ யவளுக்குபதேசம் செய்வழிகாட்டி
ஐந்துவிரலாலும் அழகாய்க்கோலியுன் மழலைவாய்ப்பிறந்த "ஓம்மாச்சி
[கோவிலில்"
ஐந்துமூன்று மானவுன்தாய் புரியஷ்டகத்தைப் பிரதிஷ்டைசெய்து
மூவைந்தான வயதிலென்னைப் பிரியாமற்பிரியமனந்துணிந்த
மங்களாம்பிகே சரணமம்மா!

4. ஏழையேன்கோழை மனக்குரங்காலே யேங்கித்தவித்த போதெல்லாம்
கோழைமனமென் குடிகெடுக்காமலே குணக்குன்றாய்விளங்கியென் கலி
[தீர்த்தாய்
வாழையுங்குணதிசைப் பலனிட்டதென்று வாழைக்குப்புட்டுச் சமைத்
[திட்டாய்!
வாழைக்குப்புட்டுச் சமைத்திட்டசெல்வீ ஏழையேன் குழந்தையைக்
[கட்டிக்காப்பாய்!
ஏழைக்குங்கோழைக்கும் வாழைக்குமிரங்கும் மங்களாம்பிகே சரணம்மா!

5. சரணமென்றுரைத் தருணத்திற்காக்கும் மங்களாம்பிகே சரணமம்மா!
சரணம்சரணமுன் பாதமேசரணம் ஜகத் அம்பிகே முக்காலும்சரணம்!
தருணம்! தருணம்! தருணமிது! தருணத்தில்வந்தென்னைக் காரம்மா!
வருணனோடருணன் வாயுவும்வணங்கும் ஜகத்காரணீ! சரணமம்மா!
சரணம்சரணமுன் கருணைக்கேயழுகிற குழந்தையைக்கைநீட்டிக்
காத்தருள்தாயே!

---

† ஆதியிலிருந்துண்டான.



## The Science and Conduct of Life.

"Nature is the great Vedantist; and in all her works—for those that have eyes to see—She is but elaborating and manifesting that mighty process which the inspired sages of the past endeavoured, as best as they could, to interpret in the language of common speech."

"All tht we have to do is to think of Nature as something living and conscious, and she at once becomes the model to which we are blindly seeking to conform. Here has been the crux of all Western philosophers; and it is this which has divorced their speculations from life. The western thinker dare not take the plunge which Eastern sages have taken with such splendid boldness. Infected by that anthropomorphism, which has crippled all Western religions, he cannot think of consciousness save in organic creatures such as animals or men". The indian sage finds reality in the total life To him all limitation is unreal and all differentiation is *maya.* And this gives us says Prof. Wodehouse, a metaphysic which is one with Nature supplying a simple formula for her laws. It founds philosophy on an inexpungeable basis so that all scientific discoveries make it only safer and firmer. Hence it is that Vedanta, which expounds this phenomenon, is the true philosophy. "It is that simple and transparent Nature philosophy, for which the World has long yearned—the philosophy which will knit together Science and Religion and re-infuse into our common life the inspiring breaths of an ideal derived fom Nature herself, and so immortal and ever young". The Vedanta stands for a truth which tells the world that religion, philosophy and science must be eventually one—a truth which the world has been struggling for thousands of years to attain. What is needed, for the realisation of this ideal, is scientific interpretation. Prof. Wodehouse concludes with the following remarks:—" We need new commentaries to-day which shall present these ancient truths afresh in the light of modern knowledge. We need not fear that they will suffer in the process. The result will be quite the reverse. For it will make of what is now a dry and dusty tradition something young and living, replete with reference to our daily life. And it will, if ever it be undertaken, supply for India what she sadly needs to-day—namely a philosophy of the present, in touch with the awakening life of the country and with her new born hopes and aspirations instead of merely a far-off echo of a half-forgotten past. All this the Vedanta still can do; for it has in it the science of a life eternal, since it is, as I have said, the philosophy, not of the library and the lecture room, but of Nature herself. And that day will be the day of *its* resurrection when it comes to be realised as such."—Professor Wodehouse in *the 'Times of India'* and in the *'Hindustan Review.'*

" I am glad to find that you are devoting your time and talents to spiritual investigations. I wish our young friends of the rising generation will devote some portion of their time to such enquiries." *Dewan Bahadur P. Ragaratna Mudaliar.C.I.E.*

" I shall never forget the short conversation which I had with you in 1893 in Madras. I was much impressed by your energy and enthusiasm in the noble cause of making people enlightened and healthy. I note with pleasure that since 1900, you have been working in a new direction and that you are able to suppress your mind. " *Guru - Bhakta - Kesari, Dewan Bahadur A. Ramachandra Iyer, Rtired Chief - Judge, Mysore, now at Kalady.*

## ஸ்ரீவித்தையும் ஸன்மார்க்கமும்.

"நசிமசியென்று நமசியை வைத்து
நம சியோ டொன்று வகையறிவா ரில்லை
நம சியோ டொன்று வகையறி வாளர்க்கு
நமசியோ டீசன் நயந்துநின் றானே."

ஸ்ரீவித்தை என்பது ஜீவ சத்தியின் உற்பத்தி லய விசேஷத்தை விளக்குவதாம். சக்தி யிரண்டு விதம்: பரம், அபரம்; அதாவது, ஜீவசக்தி ஜடசக்தி என இரண்டாம். ஜீவசக்தியே சிவசக்தியாம். ஜடசக்தியே பிரகிருதியென்று சொல்லப்படுவது. இவை யிரண்டும் உயிருடல் போல் சம்பந்தப்பட்டுள்ளன. உயிருக்கும் உடலுக்குமுள்ள சம்பந்தம் உள்ளபடி பார்க்கில் அத்வைதசபந்தமாம்.

"பிரகிருதியின் உண்மையில் பரமனைக்காணலாம்" என்னும் தலைப்பின்கீழ் நாம் பிரசுரித்துவந்த விஷயங்களின் உண்மையைக் கிரகித்தறிந்தோர் 'உயிருடல்' உண்மையை உள்ளபடி யறிவார். பிறகு 'ஸ்ரீவித்தையல்லது "மதிவளர்வித்தை' என்னும் தலைப்பின்கீழ் பிரசுரித்துவந்த விஷயங்களின் உண்மையை உணர்ந்தோர் ஜீவசக்தியின் மஹிமையை யுள்ளபடி யுணர்வார். ஜீவசக்தி சித்சக்தியிலிருந் துற்பத்தியாகிச் சித்சக்தியிலேயே வந்தொடுங்குகிறது. ஜடசக்தி ஜீவாதாரமா யிருப்பதுண்டெதுவோ அது. இந்த ஜடசக்தியும் உண்மையாக வாராயில் சத்தாமாத்திரமான பதத்தி லிருந்து மாயா சம்பந்தத்தா லுண்டானதென்று விளங்கும். பிரகிருதி ஜடமயமானாலும், சித்தோடு கூடியே விளங்குவதால் அது அறிவின் பிரகாசம் பொருந்தியது என்பது ஸத்யம். சித், சடம், என்னு மிரண்டும் சேதனம் அசேதனமெனச் சொல்லப்படும். அதுவே அறிவு, அறியாமை என்று சொல்வதுமாம்.

அறிவு, அறியாமை யிரண்டும் ஒன்றா அல்லது இரண்டுபொருளா? பேதபுத்தியுள்ள மனிதர்புத்திக்கு இரண்டாகத் தோன்றினாலும், உண்மையில் உள்ளபடி பார்க்கில் அவை யிரண்டும் ஒருபொருளின் இருப்பு மறைப்பே யொழிய வெவ்வேறான இரண்டு பொருளல்லவென்பது ஸ்வானுபவத்தில் நன்றாகவிளங்கும். ஒன்றையிரண்டு போல்காட்டுவது பின் எதுவென்றாலோ? அது அந்த ஒருபொருளின் இருப்பு மறைப்பு என்று முன்னமே சொன்னோம். இவை யிரண்டில் "இருப்பு" ஸ்வபாவமாயுள்ளது. "ஸத்" ரூபமாய் விளங்குவது. இதுதான் உண்மை. இந்த உண்மையை விளங்காமல் மறைப்பது ஒன்று எதுவோ அதுதான் ஆவரணம் என்று சொல்வது. ஆவரணம் என்றால் திரை அல்லது மறைப்பு என்று பொருள்படும். சிலந்திப் பூச்சியின் வயிற்றிலிருந்து நூலெப்படியுண்டாகி வலையாகவேற்பட்டதோ, பட்டுப்பூச்சியின் வயிற்றிலிருந்து நூல் எப்படியுண்டாகி பட்டுப்பூச்சியை மறைத்ததோ அப்படியே "ஸத்" ரூப உண்மையி லிருந்து அதை மறைக்குந்தன்மையதான "இன்மை" "இல்லாமை" யுண்டாயிற்று. இதனால் இவையிரண்டும், வெவ்வேறான இரண்டு பொருளல்ல வென்றும் ஆனால் ஏகமாயுள்ள ஒரு பொருளின் பரிணாமமென்றும் ஏற்படுகிற தல்லவா!

ஒன்று இரண்டாய்ப் பரிணமித்ததுபோல உண்மை, இன்மையென்னு மிரண்டுஞ் சேர்ந்து "உண்டில்லை" யென்னு மோர் மூன்றும் பொருளாகப் பரிணமித்தது: இப்படி இரண்டு மூன்றாக,இந்த மூன்றிலிருந்து இப்பிரபஞ்ச மெல்லாம் தோன்றுவதும், பிறகுதோன்றின விடத்தே யொடுங்குவது மாயிற்று. ஒன்றிலிருந் துண்டான இம் மூன்றையே த்ரிபுடிஞானம், த்ரிகுணாத்மகம் என்றும் த்ரிபுரம் அல்லது த்ரிகரணம் அல்லது த்ரிதேஹம் என்றும் பரிணாமக்கிரமத்தில் சொல்வதுண்டு.

அறிவு ஒன்றையே பற்றிப் பார்க்கில் அது த்ரிபுடிஞானமாய்விளங்கும். திரிபுடி ஞானமாவது:— அறிவான், அறிபொருள், அறிவு என்பனவாம். இஃதையே யுள்ளபடி யாராய்ந்து உபாதிரஹிதமாய்ப் பார்த்தால், அறிவு,அறியாமை, அறிவறியாமையென மூவ்விதமாகப்படும். அறிவு, "ஸத்ஸ்வரூபமாக வுள்ளது." அறியாமையோ "அஸத்"மாத்திரமாயுள்ளது. அறிவறியாமை யென்பது "ஸதஸத்" ரூபமாய்விளங்குவது. இதிலெல்லாம் அறிவு ஒன்றே உண்மையானது; மற்ற விரண்டும் அதன் பிரதிபாஸமான பரிணாம பேதங்களாம்.

அப்படியே த்ரிகுணாத்மகமா யுள்ள சீவனைப் பிரித்துப் பார்க்கில் ஸத்வம், தாமஸம், ராஜஸம் என முக்குணத் தோற்ற முண்டாகும்.

ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமென்கிற புரங்கள் அல்லது தேஹங்கள் மூன்றும் இப்படி ஒன்றாயுள்ள காரண தேஹத்தின்(உள்ளுடம்பின்)பரிணாமபேதங்களாக விளங்கும். இவைகளையெல்லாம் பற்றி விவரமாய் ஏற்கனவே விவேகசிந்தாமணியில் ஐயந்



திரிபற விளக்கி யெழுதி யிருக்கிறோமாதலால் பின்னு மவற்றை விரித்தெழுதவில்லை.

இவ்வளவையும் இங்கு சுருக்கமாய் எடுத்துச் சொன்னதின் காரணம் என்னவென்றால், நிருபாதிகரும், நிர்மலரும், நித்தியமுக்தருமாயுள்ள பரம் பொருள் ஒன்றே விவிதமான இப் பிரபஞ்சமாகத் தோன்றி எல்லாவற்றையும் ஒழுங்காய் நடத்திவருகிறதன்றி அதற்கந்நியமான வுண்மையொன்றில்லையென்பதை வற்புறுத்துவதற்கேயென்றுணர்க.

"ஏகமேவாத்விதீய"மா யுள்ள நித்தமுத்த ஸத்தியப் பொருள் ஒன்றே சாசுவதமாயுள்ளது. அதற்கு அந்நியமாய்க் கிஞ்சித்தும் இல்லை. அந்த ஏகமான உத்தமப்பொருளை பரமசிவம் என்று ஸௌகரியார்த்தம் பேரிட்டழைப்போம். அந்தப் பரமசிவத்துக்கு லய, போக, அதிகார பேதங்களால் உபாதிபேதம் உண்டாகிறது. அந்த உபாதிக்கு இருப்பிடம் அதுவேயன்றி வேறல்ல. ஆயினும், அது பட்டுப்பூச்சி போலும், சிலந்திப் பூச்சிபோலும், தன்னிடத்திலுண்டான உபாதியில் தான் சிக்கிக்கொண்டது போல் பார்வைக்குமட்டும் தோற்றமாய் விளங்கி, உண்மையில் அந்த உபாதியைத் தரித்ததாய் அதில் வியாபித்து நிற்கிறது.

இப்படி யேகமாயுள்ள இரண்டற்ற பரம்பொருள் லயமடைந்திடுங் காலத்தில் அதாவது பரிணாமதசைவிட்டு ஒய்ந்துட்கார்ந்து இளைப்பாறுங் காலத்தில் அதற்கு உபாதியாக விருப்பது பிந்துவென்றும் குண்டலிநி யென்றும்சொல்லப்படுகிறது. இந்தக் குண்டலிநி சத்தியென்னும் சுத்தமாயையானது அதன் காரணமாகிய பரசிவத்தில் ஒடுங்கும்போது "ஏகமோவாத்விதீயமான" ஒரேபொருள்தான் உண்டு. அதை உண்மையில் உள்ளபடி ஸ்வானுபவத்தில் அனுபவித்தறியலா மானாலும், வாக்குக்கும், மனதுக்கும் எழுத்துக்கு மெட்டாத அதைப்பற்றி ஒன்றும் சொல்ல இயலாது. அந்த ஏகமான பொருளுக்கு சுத்தமாயை யென்று சொல்லும் குண்டலிநி சக்தி மாத்திரம் உபாதியா யிருக்கும் பொழுது அது இளைப்பாறும் தன்மையில் ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும். இதற்கு லயசிவம் அல்லது "God at Rest" என்றுபேர். இப்படி இளைப்பாறுதல் விட்டு, மெய்யன்பர் தம்மை வழிபா டெய்தும் பொருட்டு சகள வுருவந்தாங்கி போகாங்கமூர்த்தியாய் விளங்கும்பொழுது அவர் ஆதிகலாரூபியும்,குண்டலிநியின் பிராணபந்த ஸ்வரூபையுமான மனோன்மனி சக்தியாம்."சதாசிவகுடும்பிநி"யோடு நைஷ்கர்மசித்தராய் போகானுபவங்களைப் புசிக்கும் வழிகாட்டிச் சகளமூர்த்தமாய் விளங்குகிறார். இவருக்குப் போகசிவம் அல்லது ஸதாசிவம் என்று பேர்.

பிறகு அதிகார பேதமுண்டாகும்போது மாயா ஸம்பந்தராய் சலந சக்தியோடுகூடி பஞ்சகிருத்தியங்களு மியற்றியருளி, சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோபவானுக்ரகங்கள் புரிந்து "அதிகாரசிவம்' என்னும் பேரோடு உமாமஹேசுவராய் விளங்குகிறார்.

ஒன்றாயுள்ள பரம்பொருளின் லய, போக, அதிகார பேதங்கள் உபாதி பேதத்தால் உண்டாவதை யுள்ளபடி யறிந்தவர்கள் இகபர சாதனங்களையெல்லாம் சாதிக்கவல்ல சாத்தியபுருஷராவர்.

அப்பியாஸ புருஷர்களில் சாதகர் சாத்தியர் என இருவகையாயினருளர். சாதகவழி யறிந்து சாதனை புரிந் தப்பியாசிப்பவர்கள் 'சாதகபுருஷர்கள்' என்னும் அப்பியாஸயோகிகளாம்.

சாதனைகொண்டு சாதித்துத் தேறினவர்கள் சாத்திய புருஷர்கள் என்னும் ஸித்தயோகிகளாம்.

முன் சொன்ன அப்பியாச யோகிகள் முக்திவழியில் முனைந்து நிற்பவர்களாவார்.

பின்சொன்ன சித்தயோகிகளோ, "முழுதும் வழியறிந்து, முழுவழியுந் தானடந்து" தேறினவர்களானபடியால், அவர்கள் 'முக்தி யென்னப்படும் மங்கையைச்சேர்ந்து" முயங்கி, "சக்தி யென்னப்படு மீசனருள்பெற்று"ப் பேரானந்தத்தில் மூழ்கி உலகுய்ய வேண்டி அதிகார சிவத்துக் கடிமையா யிருந்துழைத்து, போகசிவத்தோடு பேரானந்தம் புசித்து, லய சிவந் தன்னிலிருந் திளைப்பாறி, "சித்தன்போக்கு சிவன் போக்கு" என்றபடி கடவுளின் கிரியா லீலைகளையே லளிதா பக்தராயிருந்து விளையாடுவர்.

மேலே சொன்ன மர்மங்களை யுள்ளுற் றறிதலே ஸ்ரீவித்தையாம். உள்ளுற்றறிந்து ஸ்வானுபவத்தா லுணர்ந்ததை யுள்ளபடியே சகஜானுபவத்தக்குக் கொண்டுவந்து அந்த அனுபவம் நிலைகுலையாதிருந் தொழுகுவதே ஸன்மார்க்கமாம். மற்றதெல்லாம் துன்மார்க்கமே.

இந்தக் கருத்தையே இங்கிலீஷில் ஒருவிதமாய்க் கிரஹித்து ப்ரொபெஸ்ஸர் வூட்ஹவுஸ் என்பவர் "உண்மை வேதாந்தம்" என்னும் தலைப்

பின்கீழ் முதலில் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்னும் பத்திரிகையிலும், பின்னர் "ஹிந்துஸ்தான் ரிவியூ" என்னும்" மாதாந்தப் பத்திரிகையிலும் இங்லீஷ் படித்தவர்கள் புத்திக்கு விளங்கும்படி தெள்ளிதாய் விளங்க ஒரு வியாஸம் எழுதி யிருக்கிறார். அதில் முக்கியமான ஒரு பாகத்தை இதன் முகட்டில் எடுத்து அச்சிட்டிருக்கிறோம், அதிலிருந்து, வேதாந்தம் என்றால் "வெட்டிப் பேச்சல்ல', ஆனால் இகபர மிரண்டையும் ஒன்றாகப் பொருந்தப் பொருத்தும் ஓர் உண்மையான மஹாவித்தை யென்று ஆங்கிலேயரும் அறிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நம்மவர்கள் அறிவார்களாயின், அவர் எழுதியதும் நாம் எழுதியதும் வீண்போகாதென்பது திண்ணம். நம்மவர்களில் வயது முதிர்ந்த பெரியவர்களும் ஆத்ம விசாரம் செய்யவேண்டியதின் முக்கியத்தைப்பற்றி விழித்துக் கொண்டவர்களாய் நம்மில் வாலிபராயுள்ளோர் ஆத்மவிசாரம்செய்து நல்வழிக்கு வந்து இத்தேசத்தின் பேரும் கீர்த்தியும் முன்போல் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்று அவாவுற்றிருக்கிறார்களென்பது திவான் பஹதூர் ப. இராஜரத்ன முதலியா ரவர்கள் நமக்கெழுதி யிருக்கும் கடிதத்திலடங்கிய சிலவாக்கியங்களை யச்சிட்டிருப்பதிலிருந்து விளங்கும். குருபக்த கேசரியான திவான் பஹதூர் அ. இராமச் சந்திரய்யர் அவர்களும் மனதையடக்குவதே எல்லாவற்றிலும் சிலாக்கியமென்று எழுதியிருப்பதையும் அச்சிட் டிருக்கிறோம். இவர்களைவிட அதிகமாய் நாம் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை.

"எல்லாம் சரிதான்! இதை யெல்லாம் யார் கண்டார்கள்!" என்று கேட்கும் நவநாகரிகப் புஞ்சங்களுக்கு நாம் எதும் பதில் சொல்ல ஆற்றாதவராகவிருக்கிறோம். ஆனால் உண்மையில் உள்ளபடி "ஐயோ! இதை யெல்லாம் அறிய வகையில்லையே!" என்று உளம்விண்டு பரிதாபிப்போருக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். அஃதாவது:—

"அப்பா நீ அப்படி அங்கலாய்க்காதே! மஹாரிஷிகளும் தபஸிகளும் நிறைந்த வேதபூமியாம் இந்தப் பாதகண்டத்தில் கடவுளை வழிபடக், கண்டவிடமெல்லாம் சாதனங்கள் நிறைந் திருக்கின்றன. ஔவையார் "கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறினாள்: அவள் வாக்குக் குன்றாதபடி நம்முன்னோர்களும் இவ்விந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் க்ஷேத்திரமென்றும், தீர்த்தமென்றும், மூர்த்தமென்றும் ஸ்தல மஹிமை, தீர்த்த மஹிமை, மூர்த்தி மஹிமை பொருந்திய விடங்களிலெல்லாம் கோயில்கட்டி கும்பாபிஷேகம் செய்து நித்தியமான சாதனங்களை மந்திர தந்திர யந்திரங்கள் மூலியமாக, செலவைச் செலவென்று பாராமல் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளின் கருத்தை கவனித்தறியாத குறையன்றி வேறொன்றுமில்லை."

"மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
யந்திரமாவதும் தூய்நெறியாவதும்
எந்தைபிரான்தன் இணையடி தானே."

—திருமந்திரம்.

## Easy Lessons in Economics.

## குடிவாழ்க்கை.

### பாடம் - 2. செல்வம்.

"முயற்சி திருவினையாக்கும்."

(முன்தொடர்ச்சி).

*(Specially written for the Vivekachinthamani.)*

செல்வம் என்ற பதத்திற்கு அர்த்தமே 'சென்றுக்கொண் டிருப்போம்' என்று ஏற்படுவதால் அது நிலைத்து நிற்பதல்ல வென்று ஏற்படுகிறது.

தென்னமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேச மெல்லாந் துதிக்குஞ்
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
செம்பொன் மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினால்
வெம்பமரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்கு றாது
கள்ளராற் றிருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவு றாது
கருணைஞா னந்தழையு மாகையா லுனையிதய
கமலத்தில் வைப்ப தெளிதாம்.

என்ற சதகப்படி, கல்வியையே சிறந்த பொருளென மதித்து அதை யடைந்தவர்களும், பிறகு திரவிய அபேக்ஷை மேலிட்டவர்களாய், வேண்டிய அளவு சம்பாதித்துப் பூமியில் புதைத்துவைக்கவும் மனமில்லாதவர்களாய், கூட்டுவர்த்தக கம்பெனிகள் அடிக்கடி விழுந்து போவதால் அப்பேர்க்கொத்த கம்பெனிகளில் போடவும் துணியாதவர்களாய் நிலத்திற் போடுவதே நலமெனத் துணிந்து தாங்கள் தேடிய தனத்தைக்கொண்டு பூமிகள் வாங்குவது சர்வ சாதாரணமாயிருக்கிறது.



ஒருவன் பலவிதமான சட்டங்களை முன்னிட்டு தனமே தன் சுகசௌக்கியங்களுக்கு முக்கிய ஆதாரமெனக்கொண்டு ஒன்பதுகோடி ரூபாய் பெறுமான சொத்துக்களைச் சம்பாதித்து, அதில் பெரும்பாகத்தைப் பூமியில் புதைத்துவைத்து மற்றதைக்கொண்டு தனக்கு வேண்டிய விஷயங்களில் செலவிட்டு வந்ததன்றி ஒரு தாசியையும் வைப்பாக வைத்துக் கொண்டிருந்தான். கையிலிருந்த தொகையெல்லாம் செலவானபிறகு பூமி, வீடு, முதலிய ஸ்தாவரசொத்துக்களையும் விற்றுத் தாசிக்குக் கொடுத்தான். பிறகு கையில் ஒன்றுமில்லாமற் போகவே, பூமியில் வெகுகாலத்திற்கு முன் புதைத்துவைத்த திரவியத்தை எடுக்க எண்ணங்கொண்டு ஒருநாள் இரவில் பூமியைத் தோண்டினான். அப்பொழுது திடீரென்று தனது மனதிற்கிசைந்த மாதாகிய தாசியை விட ஆயிரமடங்கு மேலான இலக்ஷணங்களோடு கூடிய ஓர் திவ்யஸ்திரீ அவ்வேசிகாந்தன் கண்ணிற்குத் தோன்றி, 'ஏ உத்தமனே! இது நீ கஷ்டப்பட்டுத்தேடிய பொருளென்பதில் சந்தேகமில்லை. உன் கையாலேயே இது செலவழிக்கப்படல் வேண்டும். ஆனால் சிறிது காலத்திற்குமுன் நீ என்னை நம்பி இப்பொருளை ஒப்பிவைத்தாய். நான் அதில் ஒரு தூசிகூட எடுத்துக்கொள்ளாமல் நாளதுவரை காப்பாற்றி வைத்திருக்கிறேன்.

நீ இப்பொழுதோ என்னைவிட அதிக நம்பிக்கையும் விசுவாசமு முள்ளவளென்பதாக வேறொருஸ்திரீயினிடத்தில்இந்ததிரவியத்தை ஒப்பிவைக்கப் போகிறாய். அவள் சீக்கிரத்தில் என்னையே உன்வாயிலும் தலையிலும் போடுவாளென்பதில் சந்தேகம் வேண்டாம்,' என்று பூமிதேவியாகித்தோன்றிய ஸ்திரீரூபம் கூறி மறையவே, இவன் சிந்தனை செய்து தெளிவடைந்து தாசியுறவைத்துறந்து, தானதர்மங்களைச்செய்து வெகு நாள் வாழ்ந்ததாக ஒருகதையுண்டு.

அக்காலத்தில் பூமியில் புதைத்து வைப்பது சிரேஷ்டமானதென்று கருதப் பட்டது போய் பிற்காலத்தில் பூமிகள் வாங்குவது மேலானதென்று எண்ணப்பட்டது. அது முயற்சியின்றி பெரும்பயனைக் கொடுப்பதில்லையென்று கண்டவர்களும், மேற்கத்திய நாகரிகத்தில் பயின்று அவர்களுடைய போதனைகளாகிய "நகைகளில் பணத்தைப்போட்டும், கல்யாணங்களில் ஏராளமான செலவு செய்தும் வீணாக்காதே" என்பது போன்ற வார்த்தைகளில் நம்பிக்கைவைத்து, கம்பெனிகளில் போட்டுக் கொண்டு வந்தார்கள். அவைகளும் இப்பொழுது அவ்வளவுசாரமுள்ளவைகளென்று எண்ணுவது தொலைந்து நிலத்தினுரிமையே மேலானதென்றும் எண்ணுகின்றார்கள்.

நம்முடைய முயற்சியாலமையும் பொருள்களை நம் மிஷ்டப்படி செலவு செய்வது கிரமமாயினும், நம்முடைய முயற்சியின்றியே இயற்கையாயுள்ள நிலத்தை சிலர் 'என்னுடையது, என்னுடையது' என்று பாத்தியம்பாராட்டுவதும் நியாயந்தானென்றே சட்டங்கள் ஏற்பட்டும், நம்மை ஆள்வோர் அவ்வித பாத்தியதையை அங்கீகரிப்பதும் நியாயமானதாகவே தோற்றுகிறது. ஏனென்றால் நிலமானது, ஒரு தொழில்செய்து இலாபம் சம்பாதிப்பதற்குக் கைமுதல் எப்படி அவசியமோ, அப்படியே பயிர் செய்து இலாபம்பெறுவதற்கு ஏற்ற கைமுதலாகிய சொத்தா யிருக்கிறது. நிலம் ஈசனது சிருஷ்டிதான். அதையுண்டாக்கியவன் மனிதனல்ல. ஒருதேசத்திலுள்ள ஜனங்களனைவருக்கும் அதில் சமமான பாத்தியமிருப்பதாகவைத்துக்கொண்டாலும், பூமியானது சிருஷ்டித்த ஸ்திதியிலேயே யிருந்தால்

உபயோகமில்லையன்றோ? அதைத்திருத்தி விளையும்படி செய்தல் மனிதனுடைய செயலேயாகும். இவ்விதம் திருத்தியதை விளைநிலமாக்கியவர்களுக்கு அது ஒருதனமாகிறது. அவர்களும், அவர்கள் வம்சத்தாரும் அதைத்தங்களுக்குரிய செல்வமாய் அனுபவித்தல் நியாயந்தான். மேலும் ஒருவன் ஒரு பூமியை அநியாயமாய்க் கைப்பற்றி, அவனும் அவனுடைய சந்ததியாரும் நெடுங்காலமாய் அனுபவித்து வருவாராயின், ஆதியிலவன் அதை அநியாயமாய்க் கைப்பற்றியதைக்கொண்டு, இப்பொழுது அதை அவன் வம்சத்தினரிடத்திருந்து விலக்குதல் சாத்தியமாகாது. காலத்தினால் அநியாயமும் நியாயமாகலாம். சென்ற காலத்தின் அநீதிகளை இப்பொழுது மாற்ற ஆரம்பித்தால், ஒவ்வொன்றும் மாற்றவேண்டியதாகும். ஆகையாலன்றோ நம்மையாள்வோரும் அனுபோகமே உரிமைக்குச்சிறந்த சாதனமென்று மதிக்கிறார்கள்!

கஷ்டப்பட்டு செல்வத்தைத்தேடியவன் தனம் அவனிஷ்டப்படி செலவிடப்படுவது நியாயமாகையால், தனமுள்ள வரைப்பார்த்து பொறாமைப்படுவதில் பிரயோஜனமில்லை. தனமுடையவனை முயற்சியுடையவனென்றே கருதவேண்டும். அவனால் அவனுடைய வம்சத்தில் ஜனிப்பவரும் சுகிக்க இடமுண்டாகும். முயற்சி யில்லாதவர்கள் தாங்கள் வருந்துவதுடன் தங்களைச்சேர்ந்தவர்களுக்கும் பயன்படார். முயற்சியுள்ளவர்களோ தங்கள் முயற்சியால் தானே தனமுள்ளவர்களாவார்கள். அப்படியென்றால், முயற்சியே தனமுமாகும். 'முயற்சி திருவினையாக்கும்' என்றதன் உண்மை செல்வநூலின் முக்கிய தத்துவங்களில் ஒன்று.

T. C. வெங்கடரமணய்யர்.

## YOGACHANDRIKA—THE ALLEGORY OF TARA AND CHANDRA.

## யோகசந்திரிகை.

### "தாரை சந்திரனோடு போனாள்" என்பதின் தத்துவார்த்தம்.

### வசந்த பௌர்ணமி விசேஷம்.

"அமாவாசை பூரணையாகுமவர்க்குச்
சமனாமுயிருடம் புதான்."—ஔவைகுறள்.

"வைகாசி மாசம் சிரேஷ்டமான மாசம். அதில் பௌரணை மிகச் சிரேஷ்டமானது. அது ஞானிகளுக்கு முக்கியதினம்." என்று பூரணசந்திரோதயம் பத்திராசிரியர் அப்பத்திரிகையின் முதலெடுப்பில் எழுதியிருக்கிறார். "அவ்வுயர்நலமமைந்த தினத்தைமுன்னிட்டு இப்பத்திரிகை வெளிவருதலின் இதற்குப் பூரண சந்திரோதயம் என்று நாமகரணம் செய்திருக்கிறது" என்று அவர் வசந்தபௌர்ணமியை முன்னிட்டுத் தம் பத்திரிகைக்குப் பேர் புனைந்ததைப்பற்றிச் சொல்கிறார். இதை வாசிக்கவும் நமக்குப் பழைய ஞாபகங்களும் அனுபவங்களும் உள்ளத்துவகையோடெழுந்து உளம் பூரிக்கவும், மனம்பூரிக்கிறது. ஜாக்ரத்தில் நம் கண் முன்னே புருவமத்திக்கெதிரே கையால் எட்டிப்பறிக்கும்படியான தூரத்தில் பூர்ணசந்திரோதயம் உண்டாகிப், பால்போலும் முத்துப்போலும் அமிர்தகலை யொழுகும் பூர்ணசந்திர மண்டலமானது பிந்து தத்துவத்தில் தோன்றி அரைமாத்ரை யளவுகாலம் இருந்து எழுபத்தியீராயிரம் நாடிகளையும் நனைத்து தேஹம் புளகாங்கிக்கச் செய்தது. ஆகவே 'ஜாக்ரத்தில்' என்று சொன்னதைத் "துரியஜாக்ரம்" என்று கொள்ளல்வேண்டும்.

எல்லாமாசங்களிலும் மார்கழிமாசம் சிரேஷ்டமானதென்று பகவான் கீதையில் சொல்லியிருக்க, வைகாசிமாசம் 'சிரேஷ்டமானமாசம்' என்றது எப்படி? மார்கழிமாசத்தில் ஜீவகோடிகளிடத்தும் பகவானுக்கு அருள் சுரப்பதால்



தனுர்மாசத்துப் பௌர்ணமை சேர்ந்த ஆருத்ரா நாள் "மஹாசிரேஷ்டம்" பொருந்தியது என்பதிற் சந்தேகமில்லை. "தன்னந்தனியாய்த் தனுவற்ற தேஹியாய் (அசரீரியாய்) இருந்த பகவானுக்கு ஜீவகோடிகளிடத்திற் கருணையுண்டாகுங் காலமே எல்லாக்காலத்திலும் சிரேஷ்டமான காலம். ஸௌரமான, சந்த்ரமான வருஷங்களிரண்டிலும் தனுர்மீ பௌர்ணமிகூடிய ஆருத்ராநாள் மார்கழிமாசத்தில் நேர்வதால், அதுவே மாசங்களிலெல்லாம் சிரேஷ்டமானது. ஆனால் அது உலகத்துக்கு "சூன்யமாசம்." உலகுக்குச் சூன்யம், பகவானுக்குப் பூர்ணமாதலால் அதனால் அம்மாதத்தின் சிரேஷ்டத்துக்குக் குறைவொன்று மில்லை. அப்படியானால் வைகாசிமாசத்தை சிரேஷ்டம் என்று சொன்னது எப்படியெனில், வைகாசிமீ வசந்தருதுபூரணமாய் விளங்கும் காலம். வசந்தருதுவில் சிருஷ்டி பூரணமாய்ப் பயிர்பச்சைகளெல்லாம் தோன்றிப்பூத்துக்காய்த்துப் பழுத்து எங்கும் பச்சென்று இருக்கப் பிரகிருதி பலவர்ணங்களோடு கூடி ஸுவர்ணமாய் விளங்கும் காலம்.

"ஒங்காரியென்பாளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தையுடையவள்
ஆங்காரியாயே ஐவரைப்பெற்றிட்டு
றீங்காரத்துள்ளே யினி திருந்தாளே."

என்பது திருமந்திரோபதேசம். மார்கழிமீ ஆருத்ரா தினத்தில் லோகரக்ஷணார்த்தம் தோன்றிய பகவானுடைய இச்சாரூப "இன்னருட்சக்தி" யானது அறுகுண பூரணமாய் ஷடாக்ஷரரூபியாய் எங்கும் நிறைந்து ஏகமாய் விளங்குவது வைகாசிமாசத்திலேயாம். ஆனி மாசம்பிறந்ததும் ஆனித்திருமஞ்சனத்தன்று பகவான் மிதுனபௌர்ணமையில் திருமஞ்சன நீராடி, அழுக்காறொழித்துத் திருப்பள்ளி கொள்ளப்போவார்.

ஆதலால் பகவானும் தேவியும்பூரணமாய் விளங்கும் பருவமாம் வசந்தகாலத்திற் சிரேஷ்டமானது வைகாசிமீ வைகாசியிற் சிரேஷ்டம் பருவகாலமான வசந்தபௌர்ணமை. மேலும் புரட்டாசிமீ நவராத்திரியின்போது துஷ்டநிக்ரகஞ்செய்து விஜயதசமியில் வித்யாரம்பம் செய்த தேவி நவாத்மக ரூபியாதலால், புரட்டாசிக்கு ஒன்பதாவது மாசமான வைகாசியில் பருவத்தால் பூரணத்துவமடைந்திருப்பள். ஞானிகள் யோகசாதனங்களை யனுஷ்டித்து உண்மையறியச்செய்தபிரயத்தனங்களெல்லாம் வைகாசியில்தான் பலனைக்கொடுக்கும். "உடன்மே லுயிர்வந் தோன்றுவ தியல்பே"யென்பதின் உண்மையை உணரப் பூரணமான பக்குவகாலம் வசந்தபௌரணையே. புரட்டாசி அமாவாசையில் சூன்யதரிசனம் செய்துகொண்டு நவராத்ரி விரதமிருந்து மஹாநவமியில் தேவியைப் பூஜித்து விஜயதசமியில் வித்யாரம்பம் செய்த யோகி வசந்த பௌர்ணமியன்று யோகசந்திரனைத் தரிசித்து "அமாவாசை பூரணையாகும்" படியான யோகசித்தி பெற்றால் "அவர்க்குச் சமனாம் உயிருடம்புதான்." "உடலோடுயிர்வந் தொன்றுவது" இயல்பே பிராகிருததர்மஸ்வரூபமேயாம். அஃதேபோல், "உயிரோடுடல் சென்றொன்றுவது" இருளே - அஞ்ஞானாந்தகார ஸ்வரூபமான அவித்யா லக்ஷணமேயாம் "மாயை." 'அமாவாசை' யான 'இருள்' போக 'பூரணை'யான "அருள்" 'ஆகுமவர்க்குச் சமனாம் உயிருடம்புதான்.' "பிரகிருதி பூரணம்" "பிரகிருதி ஜீரணம்" எனப் பிரகிருதியானது வியக்தாவ்யக்தஸ்வரூபமாய் விளங்கும். வசந்த பௌரணையில் "பிரகிருதி பூரணமான" வியக்தஸ்வரூபம் விளங்கும். "பிரகிருதி ஜீரணமான" புரட்டாசி அமாவாசைக்குப்பின் தேவியானவள் அசுரர்களையெல்லாம் வதைத்து ஸ்ரீவித்யையை ஸ்தாபித்துப் பின்னும் பிரகிருதி விளங்கச் செய்வாள். அவ்யக்தமான இருள் நீங்கி வ்யக்தமான அருள் தோன்றும் நாளே ஆருத்ரா நாள்.

மைசூர் இராஜ்யத்திலுள்ள நஞ்சங்கோட்டில் சித்ராபௌரணையன்று நந்தியருள்பெற்று

நஞ்சுண்டேசுவரரைத் தரிசித்துக்கொண்டு, அம்பாள்தரிசனத்துக்கு அவசர அவசரமாய்ப் போனபொழுது, தேவிக்கு அபிஷேகமாகி அலங்காரமாய்க் கொண்டிருந்த படியால், அவள் தரிசனங்கிடைப்பது துர்லபமாயிருந்தது. தரிசனத்துக்குப்போனவர்கள் உடனே அன்று இராத்திரி ரயிலில் பச்சிமவாஹினிக்குத்திரும்பிவரவேண்டியவர்களாயிருந்தபடியால் எல்லாரும் மானசிகதரிசனம் செய்து கொண்டு திரும்புவதாகச்சொன்னவார்த்தை அக்கோஷ்டியைச் சேர்ந்த பலருக்கு ஒவ்வாததாயிருந்ததனால், அர்ச்சகரை ஆச்ரயித்து, தேவி தரிசனம் அவசரமாய் வந்தவர்களுக்கு அந்தரங்கமாயாவது அளிக்கவேண்டுமென்றுகேட்டுக் கொள்ள, அவர் ஒற்றைக்கதவைத்திறந்தது தேவியின் திருமுக்மண்டலங்காணத் தரிசனமளித்தார். அப்பொழுது பார்வதிதேவியாரான அம்பாள் தமிழ்தேசத்தார் வழக்கப்படி 'கொசாம்,மடிசார்' வைத்துப்புடைவைபுடுத்து நின்ற கோலத்தைக்கண்ணுற்ற பாலாத்மகமான தோழியொருத்தி "அப்பா, தேவி உங்கள் ஜாதியாளைப்போல் புடைவையணிந்திருக்கும் கோலத்தைப்பார்" என்று காட்ட, தேவியின் திருமுகமண்டலத்தைக்காண அவாவுற்றுத்தயங்கித்தவித்துக்கொண்டிருந்த திவ்யோபாஸகன், தேவியை ஸஜாதீயமாய்த் தரிசிக்கவுடனேபளிச்சென்று பூர்ணசந்திரோதயமானதுபோல்தேவியின் முகமண்டலம்பாலொழுகப் பளிங்கேபோல் அவன் கண்ணெதிரே த்ரிவேணிசங்கமமென்று சொல்லும் திரிகூட ஸ்தானமாம் புருவமத்திஸ்தானத்திலிருந்து தோன்றியது. இப்படி ஜோதிர்லிங்கமாய்த் தோன்றிய திருமுகமண்டலத்தைப்பார்த்து ப்ரேமைதலைக்கேறிப் பிரிவாற்றாமையால் ஸந்நிதானத்தைவிட்டு வரமாட்டேனென்று நின்ற உன்மத்தனை மற்றோர்கெடுபிடிசெய்து தடபுடலியற்றி அழைத்து வந்து விட்டார்கள். நஞ்சங்கோட்டில் தேவிஸந்நிதானத்தில் கண்ட அப்பார்வதி தேவியாரின் திருமுக மண்டலத்தையே தியானம் செய்து கொண்டு ஏகாக்ரசித்தனா யிருந்த உபாஸகனுக்கு உபாஸ்யையான தேவி அடுத்த வைகாசி பௌரணையன்று முதலில் முன்போல் பாலொழுகும்தன் திருமுகம் விளங்கத்தரிசனமளிக்க, வரவரத்திருமுகமண்டலம் சந்திரமண்டலமாக மாறிற்று. கையால் எட்டிப்பிடிக்கும் தூரத்தில் சந்திரகலை நிறைந்து பதினைந்து கலைகளாலும் பூரணமான வசந்த பூரணசந்திரன் பதினாறுவது கலையும் சேர்ந்ததனால் நித்தியபூரணனாய் நிர்மலஸ்வரூபந்தரித்துத் தன்னுளிருந்த களங்கமும் நீங்க அமிர்தவர்ஷம் பொழிந்துகொண்டு ஆத்மபூரணமாய்நின்றான். மனஸ்தத்துவத்துக்கு அதிபதியும் அதிஷ்டான தேவதையுமான இந்த வசந்த பூரணசந்திரனைப் பதினாறு கலைகளோடு கூடினவனாக யோகிகள் தவமிருந்து தரிசிப்பார்கள்.

புருஷ சூக்தத்தில் உபதேசிக்கப் பட்ட "சந்திரமா மநஸோஜாதஃ" என்னும் சந்திரனும் பதினாறுகலைகளோடு கூடிய இந்தப்பூரணசந்திரனே. பௌரணைச்சந்திரனுக்குத் தேய்ந்து வளருவதானகலைகள் பதினைந்தேயுண்டு. பதினாறுவதான "ஸாதாக்கியம்" எப்போதும் பரமசிவத்தின் ஜடாமுடியில் நித்தியவாஸமாயிருப்பது. கங்காதேவியோடு கூடியிருப்பதால் அமிர்தகலை யென்றும் பேர். இந்த நித்தியமான குறைவு நிறைவற்ற ஸாதாக்கியகலையினால் தான் சந்திரனுக்கு அமிர்தத்துவம் சித்தித்தது. நித்தியவாழ்வெய்திய சந்திரன் பிரஹஸ்பதியின் சிஷனாயிருந்தது 15 - கலைகள் மாத்திர முள்ளவனாயிருந்த காலத்தில். பதினாறுவதுகலையாம் தனது நித்திய கலையையறிந்து அஃதோடைக்கியம் பெறவும் அவன் தனது மித்தியாதேகமான தேய்பிறை வளர்பிறைபதினைந்தையும் தானல்லவென்று தள்ளி அவைகளின் வளர்வுதேய்வுகளில் அபிமானமற்றவனாய் சிவஸாதாக்கியமேதானென்றுணர்ந்து அனுபவித்திருந்தான். கேவலம் கர்மயோகியான பிரஹஸ்பதியின் பத்நியான புத்திதத்துவ'யோகசக்தியாம்" தாரை நைஷ்கர்மஸித்திபெறுதவளாகையால், கர்மயோகத்திலும்தியான யோகம் பெரிதென்று மதித்து, கர்மயோகியான தன்புருஷன் கூட்டுறவைவிட்டு, தியானயோகியாய் அமிர்தபானம் செய்து கொண்டு அமிர்தவர்ஷம் பொழியும் ஸாதாக்கிய கலையில் நித்திய யோகியாயிருந்த யோகசந்திரனைப் பூர்வத்தில் தன் பர்த்தாவிடம் சிஷனாயிருந்ததால், தனக்கு ஆத்மபுத்திரனாக வேண்டுமென்கிற ஐதிகபாவத்தைமறந்து, உண்மைச்சுகத்தில் (பாசுகத்தில்) உண்டான உள்ளாவல் பற்றியிழுக்க, அவனிடம் யோகாப்பியாஸம் செய்யக் கருதி அவனை நாடிச்சென்றாள். "பிரஹஸ்பதி" தான் தேவகுரு வானதால் கர்மத்தைத் திரஸ்கரித்தல் தன் தொழிலுக்கு ஒவ்வாதென்று சந்திரனிடத்திற் சென்று தனது பத்னியை (புத்தி தத்துவமாம் யோகசக்தியை)க் கர்ம யோகத்தாலே யீடேற்றுவான் தெய்வீகாங்கார புருஷனை தன்னிடம் ஒப்புவிக்கும்படிக் கேட்டார். சந்திரன் பூர்வத்தில் சாதக புருஷனா யிருந்தகாலத்தில் பிரஹஸ்பதி யிடம் சிஷ்யனாயிருந்தவனாயினும் தியான யோகத்தில் சித்தி பெற்றவனானதின் நிமித்தம் சாதகர்க்குரிய சிக்ஷாவிதி தீக்ஷாவிதிகளெல்லாம் கடந்தவனாதலால், பாசுகத்தைத் தேடும் பரமயோகிகளை "யாராலும் தடுக்க வொண்ணாது" என்னும் ஸநாதந விதியை யனுசரித்து தியானயோகத்திற் பழகிவரும் தாரையை (புத்தி தத்துவயோக சக்தியை) பலாத்காரமாய்த் தான் தெய்விகாங்காரத்திற் றிருப்புவது கூடாதென்று தனது தீக்ஷா குருவான பிரஹஸ்பதிக்கு பதிலளித்தான். தியானயோக முதிர்வில் "கருத்தரித்து" அதாவது, "சித்தவிருத்தி நிரோதன முற்றும் சித்திக்கப் பெற்று" சாதக மெல்லாம் சாத்தியமாகி யோகசித்தி பெற்றபின் பூர்வாச்ரமத்துக்குச் சென்று பிரஹஸ்பதி ஸ்தானத்திலிருந்து பூரணமான ஸூக்ஷ்ம புத்திரனை புத்தி தத்துவமாம் புதனைப் பெற்றாள். ஸ்வாதிஷ்டானத்துக்கும், விசுத்திக்கும் எப்போதும் தாய்க்கும் மகனுக்குமுள்ள வாஞ்சைரூப ஆகர்ஷண சக்தியுண்டு. அது பூரணசந்திரனுடைய ஸ்தானமான பிந்து தத்துவத்துக்கும் யோகதாரக ஸ்தானமான குருபீட ஸ்வாதிஷ்டானத்துக்கும் இடையே புத்திதத்துவத்தை ஆச்ரயித்து கண்டஸ்தானத்தி லிருக்கிறது. இப்படியாக, கர்மயோகத்தை யனுசரித்து நைஷ்கர்மஸித்தி பெறுவதிலும், தியானயோகத்தால் யோகசித்தி பெறுவது சுலபமும் சுகிர்தமுமென்றுணர்ந்த தாரையானவள் தன் பர்த்தாவும், அதனால் தனக்கு குருவுமான பிரஹஸ்பதி யானவர் "தேவகுரு" வா யிருந்ததினால் கர்ம யோகத்தை ஆச்ரயித்தவரா யிருப்பதுணர்ந்து அவருடைய சிஷ்யனான சந்திரன் தியானயோகத்தால் அமிர்தகலையுண்டு அமிர்தவர்ஷம் பொழிந்துகொண்டிருப்பதைக் கண்டு, தான், ஸ்திரீ ஜாதியும் அமிர்தாம்சையு மானதால்,தனக்குகந்ததும் இயன்றதுமான தியான யோகத்தைச் சந்திரனையடுத்து ஆச்ரயித்து யோகசித்தி பெற்றாள் - என்பது தத்துவார்த்தமான உண்மை.

"கஞ்சிவாதப்பா!" என்றால் "எங்குவாதப்பா!" என்றவன் கதைபோல் யோகதத்துவார்த்தமான இந்த உண்மையை யுணரமாட்டாதார், தாரை குருபத்னியா யிருந்தும், சிஷ்யனான சந்திரனோடு போனா ளென்றும் சந்திரனுக்கு ஒரு பிள்ளையைப் பெற்றாளென்றும், குரு லஜ்ஜைகெட்டு அவளை யழைத்தாரென்றும், லோகாயதமாக அர்த்தம் செய்து கொண்டு அநர்த்தம் விளைக்கிறார்கள்.

ராதை ஸ்ரீகிருஷ்ணனையே புருஷோத்தமனென்றுணர்ந்து அப்பரம புருஷனை ஆச்ரயித்தடைந்தபொழுது அவளுக்கு லோகாபவாதம் கட்டிய உலகஞானிகளான லோகாயதரிஷிகள் முன்னர் அவள் தன் அபவாதத்தை நீக்க

"ஆயிரம் ஓட்டையுள்ள குடத்தில் நீர் ஒழுகாமல் எடுத்துப்போய்" தன் பதிவிரதாதர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டதுபோல், தாரையும் யோகதாரகமாய் விளங்கித் தனக்கு வந்த லோகாபவாதத்தைத் தீர்த்துக்கொள்கிறாள். யோக சாதனங்களில் உண்மையாய்ப் பழகுகிறவர்கள் அதிகமின்மையால், அவ்வுண்மை சாமானியருக்குப் பிரசித்தமாகாமல், யோகியர்களுக்குள் மட்டும் பிரசித்தமாய் வழங்கிவருகிறது.

யோக தாரகமான லக்ஷியம் சாதாரண மனிதனை (இந்திரியாந்தமான) உயர்பாவத்துக்குத் தூக்கி உண்மை மனிதனாக, அதாவது, தியானயோகியாகச் செய்கிறது. நமது ஆச்சாரிய ஸ்வாமிகள் செய்தருளி யிருக்கும் "யோகதாராவளி"யைப் பார்த்தால் உண்மை விளங்கும். அமெரிக்காவிற்றோன்றி பரமயோகியாய்விளங்கிய "ரால்ப் வால்டோ எமர்ஸன்" என்பவரும் இந்த யோகதாரகத்தை மெச்சி "Hitch your wagon to a star." என்று சொல்லி யிருக்கிறார். அது நமது விவேகசிந்தாமணியின் மேற்பக்கத்தில்பொருளடக்கம் சொல்லும் அட்டவணைக்குமேலாக அச்சிட்டு விளங்குகிறது. அப்படியென்றால் "யோகதாரகமாம் லக்ஷியத்திற் சிந்தையைவைத்துஇல்லறமென்னும் இயல்புடைய வான்சகடத்தைச் செலுத்து" என்று அருத்தம். இஃதையே லக்ஷியார்த்தமாகக் கொண்டு, "எம்மதமும் சம்மதமே" யென்ற குருவாக்கை யனுசரித்து "நமது மதம் மானிடரின் ஹிருதயத்தைச் சுத்தி செய்வதே" என்கிற இன்னொரு எமர்ஸன் வாக்கியத்தையும் தலைப்பேட்டின் கீழே யச்சிட்டிருக்கிறோம். அது "Our Theism is the Purification of the Human Mind" என்று இங்கிலீஷில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஹிருதய சுத்தியினாலேயே எல்லாச்சித்தியு முண்டாமாகையால் அதுவே எம்மதத்திலும் சம்மதான நன் மதமாம்.

ஓம் தத்ஸத்.

## *The Benificent Light of Yóga—Foreword.*

"I TOLD YOU 'I AM THE LIGHT:' LOOK AT ME!"—GURU VAK.

### சிவயோகதீபிகை.

(முகவுரை.)

இந்தச் சஞ்சிகைமுதல் ஸதாசிவ ப்ரஹ்மம் என்று சிறப்புப்பேர் பெற்ற ஸதாசிவயோகீந்திரர் இயற்றியருளிய சிவயோகதீபிகை யென்னும் பூர்வகிரந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை, பழையபிரதிகளையும் ஏட்டுச்சுவடிகளையும் கொண்டு ஆராய்ந்து பரிசீலனை செய்து திருத்தியபடி விவேகசிந்தாமணியில் வெளியிட்டுவரத் துவக்கியிருக்கிறோம். வித்தை சுத்தம், அசுத்தமென இரண்டு வகையாவது போல், யோகமும் சுத்தம், அசுத்தமென இருவகைப்படும். அவற்றில் சுத்தயோகம் "சித்தவிருத்தி நிரோதனமாம்." அசுத்தயோகமென்பது சித்த விருத்தியைத் தடுக்காமல் தானே மனோசக்தியை பலப்படுத்திக் கொண்டு காமிய வழியில் பல ஸித்திகளைத் தேடி யனுபவிப்பதாம். இது காமியகர்மார்த்தமானதால், இதற்கு ஸித்தியானது சூன்யத்துவமென்று சொல்லப்படும். ஆதலால் இதற்கு சூன்யவித்தை யென்றும் "Black Magic" என்றும் பேர் வந்தது.

தற்பொழுது உலகெங்குமுண்டாயிருக்குமொரு மனக்கிளர்ச்சியால் தத்துவவிசாரம் செய்வோர் அல்லது செய்ய விரும்புவோர் தொகை யதிகமாக தினேதினே விருத்தியாகிப் பெருகிவருகிறது. இவர்களிற் பெரும்பாலார் ஐதிகார்த்தமாகவே (இகலோக சாதகமான க்ஷணிகசுகத்தையே கோறி) மனோதத்துவங்களை ஆராய்ந்து தேர்ந்து அதனால் மற்றவர்களைத் தம் வசப்படுத்த வேண்டும் அல்லது மற்றவர்களைவிடத் தாம் விசேஷமாய் விளங்கவேண்டுமென்று சிந்தித்து யோகத்தைச் செய்ய இச்சிக்கிறார்கள். இன்னும் சிலர் ஜீவனார்த்தமாக வசிகாவித்தை (Hypnotism) ஆகர்ஷண



வித்தை (Mesmerism), மந்திரவித்தை (Mental cures), தந்திரவித்தை யல்லது ஜாலவித்தை (Spirit-phenomena) முதலிய சூன்யவித்தைகளில் (Black Arts) பழகிப் பிரசித்தி பெறலாமென்று முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கேற்க மேற்றிசையார், முக்கியமாய் அமெரிகாவிலுள்ள அனேகர், மனோதத்துவங்களில் ஒருபாகத்தைமட்டும் கற்று அதில் ஏதோ ஒருவித சித்தியடைந்து, படித்தவர், பாமரர், முதலான எல்லாஜனங்களையும் மயக்கி தபால் மூலமாய் மந்திரயோக சம்பந்தமான வித்யாதத்துவங்களைப் பணத்துக்கு விற்றுப்போதிப்பதாக இரகஸியமான புஸ்தகங்களில் அதிசாமான்யமான சில மனோதத்துவங்களைப் பிரம்மை (மயக்கம்) உண்டாகப் பிரமாதமாகச் சிலாகித்துக்கூறி ஆசைகாட்டிக் கடைசியில் மோசம்போகும்படியாக வில்லங்கம் விளைத்துவருகிறார்கள். இப்படி போகஸித்திகளுக்கு ஆசைப்பட்டு கைப்பணத்தைக்கொடுத்து, அவர்கள் "அதிரகஸியம்" என்று குறிப்பிட்டு அனுப்பும் புஸ்தகங்களை குருமுகமானதத்துவவிசாரமின்றி வாசித்து ஏதோ சில சாதகங்களை இரகஸியமாய்க் கைக்கொண்டு ஏழைமதிகளானசிலரைத்தூங்கவைத்தும், இன்னும் சிலருக்கு "ஏவல்" என்னும் ஆக்ஷேபத்துக்கிடமான மனோசிட்சையால் சில வியாதிகளைச் சொஸ்தம் செய்தும், தமக்கு ஏதோ யோகஸித்திகள் வந்துவிட்டதென்று மலைத்து மனப்பால்குடித்துப், பின்னால் மனோஸம்ஸ்காரங்கள் இடைவிடாதெழுந்து தொந்திரவுபண்ண மனோவாதை பொறுக்கமாட்டாமல் தூக்கமும் கெட்டு, சொப்பனமும் பயங்கரமாகமுடிய, திகில்கொண்டு மனஏக்கம் பிடித்து 'உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பினி' கதையாக ஒன்றும் சொல்லமாட்டாமல் தவித்துக் கடைசியில் உபத்திரவம் பொறுக்கமாட்டால் தங்கள் அனுபவத்தை "அதிரகஸியம்" என்று குறிப்பிட்டு விசாரபுருஷர்கட்குத்தெரிவிக்க, அவர்கள் இவர்களுடைய பரிதாப நிலைமையை யுணர்ந்து "இரகஸியத்தில்" ஏதும் செய்வது உசிதமன்றென்றுன்னி, அவர்களைத் தங்கள் வினைப்பயனை யனுபவிக்கும்படி விட்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட கேஸ்கள் எத்தனையோ நமக்குத்தெரிந்தது. நேரில் நம்மிடம் வராமல் தபால் மூலமாகவும், அபற்சார்பாகவும் கேள்விப்பட்டது எத்தனையோ! இப்படி அரைகுறையாக யோகஸாதனங்களைப் பழகிக் கெட்டுப்போகிறவர்கள் ஒருபக்கமிருக்க, உண்மையாக உள்ளபடி மனோதத்துவங்களை யோக முறைபற்றி ஆராயவேண்டுமென்று ஆவலுற்றுத் தபால் மூலமாய் தீக்ஷை கேட்பவர் பலர்.

தபால் மூலமாய் தீக்ஷைகொடுப்பது சாத்தியமில்லாமையாலும் குருமுகமாயன்றி யோகசாஸ்திரமும் மனோதத்துவங்களும் உண்மையாக உளவறிந்து பயில்வதற்கேலாதனவாகையாலும், அசுத்தமான சூன்யவித்தையைச்சேர்ந்த அசுரயோகத்தைத் தள்ளி, நன்மையைநாடி, நன்மையேகருதி, நலந்தரும் யோகமாம் சிவயோகத்தை, அந்தயோகத்தில் கரைகண்டு தேர்ந்தவரும் மஹாசித்தருமான ஸதாசிவ யோகீந்திரர் கருணை மிகுதியால் சற்சிஷனுக்குத் திருவருள் சாதித்துக் கூறியபடி பூர்விகமான கிரந்தத்தைக்கொண்டு ஆராய்ந்து பிரசுரிக்கத் துணிந்தோம். இந்த யோகசாதனங்கள் அதிரகஸியமானவைபற்றி அவைகளை அயோக்கியர்களும் அநாதிகாரிகளும் கைப்பற்றாதபடி யோகசாதகர்களுக் கெளிதான சில பரிபாஷைகளை (வெள்ளையாய்ச் சொல்லாமல்) ப்ராசீன மொழிபெயர்ப்பில் பெரியோர் சொல்லியபடி அப்படியே பிரசுரிக்கத் தீர்மானித்தோம். இப்பூர்வ கிரந்தத்தைப் பரிசிரமமெடுத்துக்கொண்டு மிகவும் பழுதான பூச்சியரித்த பழைய ஏட்டுச்சுவடியை மிகப் பொறுமையோடாராய்ந்து, அதற்குச் சரியான ஸம்ஸ்கிருதப்பிரதியை மியூஸியம் ஓரியண்டல் லைப்ரேரியிலும் வேறு இடங்களிலும் ஆராய்ந்து சரிபார்த்துச் சுத்தப்பட எழுதின விவேகசிந்தாமணி கமிட்டி

யின்காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ, மு.கோ. நாராயணஸ்வாமி அய்யர் பிஏ, பி. எல், ஹைகோர்ட்டுவக்கீல் அவர்களுக்குத் தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறதைத் தெரியப்படுத்துவது நம் கடனென்று இம்முகவுரையில் அஃதை வெளியிட்டுரைக்கலானோம். அசத்துக்களும், அயோக்கியர்களும், சத்துக்களுக் குபயோகமாகப்பிரசுரிக்கப்படும் இந்த குப்தசாதன முறைகளைத் துர்ச் சிந்தையோடும் அப்பியஸித்து துர்க்கிருத்தியத்திற் பிரவேசிப் பார்களானல் அந்த துராத்மாக்கள் சித்தர்கணத்தால் சபிக்கப்படுவதன்றி இகத்திலும் பரத்திலும் தீராத்தொல்லை யனுபவிப்பார்கள் என்பதை யாவருமறியவற்புறுத்திக்கூறி எச்சரிக்கலானோம். "துராத்மா" யாரெனில், —

"வசஸ்யேக மனஸ்யேக கர்மண்யே கமஹாத்மநாம் !

வசஸ்யந்யத் மனஸ்யந்யத் கர்மண்யந்யத் துராத்மநாம்." என்பதிலிருந்து யாவரும் அறிந்துகொள்ளலாம்.

ஓம் சதாசிவ ப்ரஹ்மணே நமஃ.

## SIVA YOGA DEEPIKA.
### By Sri Sadasiva yogindra.
## சிவயோகதீபிகை.

சதாசிவ யோகீந்தரரால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட சிவயோகதீபிகையின் மொழிபெர்ப்பு * ஓர் பிராசீன தமிழ்மொழி பெயர்ப்பை யனுசரித்துச் சீர்திருத்தப்பட்டது.

அந்தரங்க பூஜாவிதான மென்னும் முதல் படலம் மொழிபெயர்த்தவரின் அவதாரிகை:—

ஸ்ரீசதாசிவ யோகீசுவரர் என்பவர் தம்மாலியற்றப்பட்ட சிவயோக தீபிகை யென்னும் யோக சாஸ்திராரம்பத்திலே ஹிருதய புண்டரீக வாஸியாயிருக்கும் ஜ்யோதிர் லிங்கத்தை பஜிக்கிறேனென்று அந்த லிங்கபூஜாவிதியையே மங்களமாகக் கூருகின்றார்.

(1) பரமயோகீசுவரர்களுடையமனமாகிய தாமரைப் புஷ்பத்திற்குவண்டுபோலவும், மூவித காரணங்களுக்கும் காரணமாகவும், அவ்வியயமாகவும், சகுண நிர்க்குணத்துவ ஸ்வரூபமானதும், ஜநந மரணங்க ளில்லாததுமான குருவவரூபமான சதாசிவலிங்கத்தை நான் பஜிக்கின்றேன்.

என் றிந்தப் பிரகாரம் குரு நமஸ்காரம் செய்து சதாசிவ யோகீசுவரரானவர் சிவயோக தீபிகையென்கிற கிரந்தத்தை ரசிக்கத் துடங்குகிறார்.

### முதல் படலம்.

(2) ஸ்ரீகுருவி னுடைய பிரசாதத்தால் சிவஸ்வரூபமான யோகத்தை நன்று யறிந்து (அஞ்ஞானிகளுக்கு) ஸுஞ்ஞானம் உண்டாகும் பொருட்டு சிவயோக தீபிகை யென்கிற கிரந்தத்தைச் சொல்லுகிறேன்.

(3) சிவதத்துவ ஸ்வரூபத்தை அறிந்தவர்களுக்குள்ளே உத்தமனான சீஷனே சிவ யோகமானது பரம ரகசியமான போதிலும் உன்னுடைய பக்தி விசேஷத்தாலே அதை நானிப்போ துனக்குச் சொல்கிறேன் கேள்.

(4) சிவயோகமானது மந்திரயோகமென்றும், லயயோகமென்றும் ஹடயோக மென்றும், ராஜயோகமென்றும், நாலுவிதமா யிருக்கும். அவை பரமேசுவரராலே போதிக்கப் பட்டதென்று முன்னோர்களான ரிஷீசுவரர், சித்தர் முதலானவர்கள் சொல்லுவார்கள்.

* இவ்வபூர்வக்கிரந்தமானது ம-ா-ா-ஸ்ரீ மயிலை அழகப்பமுதலியா ரவர்களால் உபகரிக்கப்பட்டதும் சம்ஸ்கிருத பாஷாமூலத்துடன் யாரோபூர்வீகர்ஒருவரால் செய்யப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியதுமான ஓர் ஏட்டுப் பிரதியின் உதவியாலும் திருநெல்வேலி ம-ா-ா-ஸ்ரீ S. பால்வண்ண முதலியா ரவர்களாலுதவப்பட்ட மொழிபெயர்ப்புப் பிரதி ஒன்றின் உதவியாலும், சமஸ்கிருத பாஷையி லுள்ள மூலத்திற் கேற்ப திருத்தி எழுதப்பட்டது.



(5) மந்திரயோகாப்பி யாசம் செய்பவன் மோக்ஷார்த்தமாக ஓரக்ஷரம், அல்லது மூன்றக்ஷரம், அல்லது எட்டக்ஷரம் கூடிய மந்திரங்களில் ஒன்றை எக்காலமும் ஜெபம் செய்ய வேண்டும்: (இதை மந்திரயோகமென் றறிக.)

(6) எவனுடைய சித்தமானது தியானத்தால் மனோ வாயுக்களோடு அல்லது நாதத்தோடு கூடி லயிருக்கின்றதோ அவனே லய யோகி யென்னப்படுவன்.

(7) யாதாமொருவன் அஷ்டாங்க மார்க்கத்தினாலும் தசவித (பத்துவித) முத்திரைகளினாலும், கரணங்களாலும், (மூல, உட்டியான, ஜாலந்தரமாகிய மூன்று) பந்தங்களாலும், அல்லது அப்படியே கேவல கும்பகத்தினாலும் வாயுவை வசப்படுத்தினவனா யிருக்கின்றானோ அவன் ஹடயோகி யாவான்.

(8) யாதாமொருவன் (அந்தர், பாகிய, மத்திய மென்கிற மூன்று) லக்ஷியங்களிலும் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை யடைவானோ, அல்லது ஞானத்தாலாகிலும் மனோ விருத்திகளில்லாம லிருப்பானோ அவனே ராஜயோகி யென்னப் படுவான்.

(9) இந்த யோகங்கள் நாலும் முறையே ஒன்றைப்பார்க்க வொன்று விசேஷமாக விருக்கும். இவைகளில் ராஜயோகமானது மிகவும் உத்தமமானது.

(10) அந்த ராஜயோகமும் சாங்கியமென்றும், தாரக மென்றும், அமனஸ்க மென்றும் மூன்றுவிதமா யிருக்கும். அவற்றுள் இருபத்தைந்து தத்துவங்களையும் அறிவது சாங்கிய யோக மென்று சொல்லப்படும்.

(11) பாஹ்ய முத்திராலக்ஷண மறிவது தாரகயோக மென்னப்படும். அந்தர் முத்திரா லக்ஷண மறிவது அமனஸ்க மென்னப்படும்.

(12) சாங்கிய யோகத்தைப் பார்க்க தாரக யோகம்மேலாகும். தாரக யோகத்தைப்பார்க்க ராஜயோகம் மேலாகும். சகலயோகங்களுக்கும் ராஜாவானபடியால் இது ராஜயோக மென்னப் படும்.

(13) ராஜயோகத் திற்கும் சிவயோகத் திற்கும் நாமபேதமே யல்லாமல் அனுபவபேத மில்லை; ஆகிலும் சிவத்தை விரும்பினவர்க்கு அவர்கள் புத்தி (அந்த யோகத்திடம்) பிரவிர்த்திக்கு நிமித்தம் சிவயோகம் முக்கியமென்று (மகரிஷிகளாலே) சொல்லப்படும்.

(14) அப்படி சிவத்தை அபேக்ஷிக்கிறவர்களுக்கு அவைகளுள் பேதம் பிரதிபாதிக்கப் பட்டதாகையால் தெரிந்தவர் இக்கேவல சிவயோகத்தையே முக்கியமாகக் கிரகிக்கவேண்டும்.

(15) இச் சிவயோகமானது சிவத்தியானம் சிவபக்தி, சிவஞானம், சிவவிரதம், சிவார்ச்சனை என ஐந்து விதமாயிருக்கும்.

(16) சிவார்ச்சனை செய்யாதவன் பசுவே யென்பதிற் சந்தேக மில்லை. அப்படிக் கொத்தவன் சதாகாலமும் சம்சாரசாகரத்திற் சுழன்று திரிபவன்.

(17) முன்னோர்களான வித்துவான்களால் நிச்சயிக்கப்பட்ட உண்மையான தத்துவத்தை உனக்குச் சொல்கிறோம் கேள். (அந்தத் தத்துவ மானது) சகல தெய்வமயமாயும், சர்வ பூத மயராயும்,

(18) சர்வ ஞானமயராயும், சகல தத்துவங்களுக்கும் உத்தமோத்தமராயும், சர்வதேஜோமயராயும், சர்வமான (ஜகத்துக்கும்) ஆநந்த சுவரூபராயும், (இருப்பவர்—)

(19) மாயையோடு கூடினபோது சகலர், தனித்திருக்கும்போது நிஷ்களர், 'உளன்-இலன்' எனுமிரண்டு பேதமுமற்றவர், வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதவர்.

(20) ஒரு வர்ணமு மில்லாதவர், பல வர்ணமு முள்ளவர், ஒரு ரூபமு மில்லாதவர், சகல ரூபமு முள்ளவர், பரமாத்மா, பரப்பிரஹ்மம் எனப் பலவித நாமங்களோடு கூடி (சர்

வாந்தர்யாமியாய்) சித்பிரகாசமான சிவம் என்று சொல்லப்பட்ட ஓர் தேவனிருக்கிறார்.

(21) அப்படிப்பட்ட சிவனிடத்திலிருந்து ஓர் சக்தி பிறக்கின்றது. அந்தச் சக்தியானது சாந்தி யென்றும், அதீதை யென்றும், பாரத்மிகை (பரை) யென்றும் (யெர்களுடனே கூடி) இவ்வளவென்று அளவிடக்கூடாத குணங்களுடன் கூடி சிவனுடைய ஆஞ்ஞையால் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

(22) அச்சக்தி ஐவிதபேதமாய், பஞ்சப்பிரஹ்ம ரூபமாயும், பஞ்ச பூதமயமாகவும், எப்பொழுதும் விளங்கிக்கொண் டிருக்கும். அந்தச்சக்தியினிடத்தி லிருந்து சகல பிரபஞ்சமும் பிறந்தது.

(23) இந்தச்சக்தியிலிருந்து முதலில் சதாசிவதேவ ருண்டாகி ஆகாசதத்துவத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். சதாசிவத்தினிடத்திலிருந்து ஈசுவரன் பிறந்து வாயுதத்துவத்தில் பிரகாசிப்பர்.

(24) அந்த ஈசுவரனிடத்தி லிருந்து ருத்திரன் பிறந்து அக்நியில் பிரகாசிக் கின்றார். அந்த ருத்திரனிடத்திலிருந்து மஹா தேஜஸ்வியான விஷ்ணு பிறந்து ஜலதத்துவத்தில் பிரகாசிப்பர்.

(25) அந்த விஷ்ணுவி னிடத்திலிருந்து பிரஹ்ம தேவன்பிறந்து பிருதிவியிலே பிரகாசிப்பர். இந்தப்பிரகாரம் அந்த பராசக்தியிலிருந்து லோகநாதர்களான பஞ்சமூர்த்திகளும் உற்பவித்தார்கள்.

(26) நிவிருத்திகலே, பிரதிஷ்டாகலே, வித்தியாகலே, சாந்திகலே, சாந்தியதீதகலே ஆகிய இவ்வைந்து கலேகளும் பிரஹ்மதேவன் முதற்கொண்டு ஐந்து மூர்த்திகளினும் சேர்ந்திருக்கும்.

(27 - 29) இந்த ஐந்து சக்திகளும் சிவனுடைய ஆஞ்ஞையாலே மகாப்பிரகாசமாக விளங்கும் (இவர்கள் பிரகாசத்திற் குட்பட்ட) பிரமதேவனாலே தேவதைகள், அசுரர்கள் முனீசுவரர்கள், மனிதர்கள், ஸ்வேதஜங்கள் (வியர்வை ஜலம் முதலானவைகளில் உண்டாகும் புழு பூச்சி மீன் முதலியவைகள்), அண்டஜங்கள் (முட்டையில் பிறக்கும் பக்ஷிமுதலியவை), ஜராயுஜங்கள் (கர்ப்பப்பையில் பிறக்கின்ற மனிதர், மிருகம் முதலியவை), உத்பீஜங்களாகிய புல், செடி, கொடி, மரம் முதலானவைகளும், மலேகள், நதிகள், மற்றும் சமுத்திரங்கள், தடாகங்கள், இந்த நாலுவகைப் பிறப்புள்ள சகலஜகங்களும் முறையே உண்டாகின்றன. ஆகவே சகலஜகத்தும் (சிவனுடைய ஆஞ்ஞையால் உண்டாகின்றமையால்) சிவமயமெனப்படும்.

(30) யாதாமொருவன் இவ்வித லக்ஷணங்களோடு கூடினதும் கேவல சித்ஸ்வரூபமானதும், சூர்ய சோமாக்னி மும்மண்டலங்களிலும் நிற்கும் சிவத்தை, குருபிரசாதத்தினலே மும்மலங்களேயும் போக்கி (நன்றாயறிந்து) தியானித்து பூஜிக்கின்றானே அவன் மோக்ஷ சுகத்தை யடைவான்.

(31) முன்சொன்ன சிவஞானம் சகுணம் நிர்க்குணமென இருவகையா யிருக்குமென்றறிக. முன்னர் சகுணத்தை யனுஷ்டித்துப் பின்பு நிர்க்குணத்தை யப்பயசிக்க வேண்டும்.

(32) அதில் சகுணமானது உள்ளும் புறம்பும் பிரகாசித்துக்கொண்டு வெகுபேதங்களாகச் சொல்லப்பட்டிருக்கும். நிர்க்குண ஸ்வரூபமானது ஆகாசத்தைப்போல் இந்திரியம் முதலியவைகளால் அறியக் கூடாததாயிருக்கும்.

(33) இவ்வித சகுண நிர்க்குண பேத தத்துவஞானம் குருமுகத்தால் மாத்திரம் அறியப்படும் (வேறு விதத்தில் அறியக்கூடாது). ஆகையால் மோக்ஷத்தை யபேக்ஷித்தவர்கள் சற்குருவையே (எக்காலமும் பூஜிக்கவேண்டியது).



(34) மனிதனானவன் தீர்க்காயுள், ஆரோக்கியம், பெருஞ்செல்வம், வித்யை, கீர்த்தி, சுவர்க்கசுகம், மோக்ஷம் இப்பலன்களே யெல்லாம் குருகடாக்ஷமின்றி யடையமாட்டான்.

(35) ஆகையால் (சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட) சகல லக்ஷணங்களோடும் கூடிய(ஸர்வஞ்ஞரான) குருவை மனம், வாக்கு, காயம் (என்கிற திரிகாணங்களாலும்)சாக்ஷாத் சிவமாகவே பாவித்துப் பூஜிக்கவேண்டும்.

(36) ஆகையினால் குரு வாக்கியத்தால் (போதிக்கப்பட்டு) தீக்ஷிதனான (தீக்ஷையை யடைந்தவனான) யாதாமொருவன் சிவத்தை (குருவையே அச் சிவஸ்வரூபமாகப் பாவித்து பூஜிப்பானே அவனுக்கு (தர்ம, அர்த்த, காம, மோக்ஷமென்னும்) நாலு புருஷார்த்தங்களும் அவன் உள்ளங்கையிலிருக்கும்.

(37) குருசொன்ன மார்க்கமாக ஒருகாலமானாலும், இருகாலமானாலும், ஓரே காலமானாலும், (தனது சக்திக்குத்தக்கதாக) சித்பிரகாசரான சிவத்தைப் பூஜைபண்ண வேண்டும்.

(38) அந்தச் சிவபூஜையானது அந்தர்யாகமென்றும் (அந்தரங்கபூஜை யென்றும்) பஹிர்யாக மென்றும் (பாஹிய பூஜையென்றும்) இரண்டுவிதமாயிருக்கும். அதில் அந்தர்யாகமாகிய பூஜை முக்கியமாகும். பாஹிய பூஜை சாமான்யமாகும்.

(39) சத் புருஷாளான பெரியோர் அத்தியந்த பிரகாசமாய் சாந்த ஸ்வரூபமான பரமேசுவரனைத் தங்கள் (சுத்தசங்கல்ப) மனத்திலே பிரகாசிக்காநின்ற ஆத்மாவி னிடத்தில் (தரிசித்து சதாகாலமும் தியானம் பண்ணி) பூஜிக்கின்றார்கள். அற்பபுத்தி யுள்ளவர்களான அவிவேகிகள் பாஹியத்திலே (தாம்பிரம், தாரு=கட்டை, மிருத்திகை மண், இதுகளாலே நிர்மாணிக்கப்பட்ட) பிரதிமாரூபங்களாக பாவித்து கந்தபுஷ்பாக்ஷதை முதலிய பாஹிய கிரியைகளால் பூஜிப்பார்கள்.

(40) அந்தரங்க பூஜையாவது தன் ஹ்ருதயத்தை ஓர் தாமரைப் புஷ்மாகப் பாவித்து அப்புஷ்பத்திற்கு சிவதர்மமாகிற கந்தத்தையும், [சிவநேசமாகிற ஸுவர்ணத்தையும்] சுகஞானமாகிய (செவ்வியஞானமாகிய) நாளத்தையும் (தண்டையும்), எட்டு ஐசுவரியங்களாகிய எட்டிதழ்களேயும், வைராக்கியமாகிய கர்ணிகையையும், சந்திரனைப்போன்ற நிறத்தையும், ஸ்ரீ ருத்திரனாகிய கேசரங்களேயு முடையதாகப்பாவித்து அதன்மத்தியில் விளங்குகின்ற சூர்ய சோமாக்கினி மண்டலமத்தியத்தில் பிரகாசிக்கின்ற சின்மயமான சிவனைத் தியானஞ் செய்யவேண்டும்.

(41) (இப்படிச்சித்பிரகாசமான சிவஸ்வரூபத்தை எப்படித் தியானம் பண்ணவேண்டுமென்றால்) பிரசன்னமான முகத்தையுடையவராயும், சாந்தராகவும், பதினாறு வயதுள்ளவராகவும், மிகுந்த பிரகாச முள்ளவராகவும் கோடிமன்மத ஸமானமான அழகுடன் கூடிய ரூபத்தை யுடையவராயும்,

(42) பின்னும் நாலு புஜங்களுடையவராகவும், மான், டங்கம், அபய வரத ஹஸ்தங்கள் உடையவராகவும், அர்த்தசந்திரனைச் சிரசில் பூஷணமாக உடையவராகவும், சரத்காலத்து பூர்ண சந்திரப் பிரகாசமாகவும்,

(43) திவ்யவஸ்திரம், திவ்யகந்தம், திவ்ய ஆபரணங்கள், திவ்ய புஷ்பங்கள் இவை களாலலங் கரிக்கப்பட்ட வராகவும்,

(44) மூன்று நேத்திரங்களுடன் கூடினவராகவும், முக்குணங் களுக்கு மாதாரமாகவும், மும்மலங்களேயும் போக்கக் காரணமானவராகவும், இடது துடையிலிருக்கும் பார்வதி தேவியால் சோபிக்கப் படுகிறவ ராகவும்,

(45) பின்னும் பலபுஷ்பங்களோடு நிறைந்து பிரகாசிக்கும் கற்பக விருக்ஷத்தினடியில் வேதிகையின் மேல் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந் தருள்பவராயும்,

(46) பின்னும் துவைதமற்ற ஏகவஸ்துவாயும், விகாரநாச மில்லாதவராயும், விஷ்ணுவாயும் (சர்வவியாபியாய்), நித்தியராயும், மோக்ஷத்துக் கதிகாரியாயும், சிந்தைக்கெட்டாதவராயும், பிறவியற்றவராயும், இப்படிக்கொத்தவரென்று நிர்ணயிக்க கூடாதவராயும், ஆதிமத்தியாந்த ரஹிதராயும்,

(47) இவ்விதம் பரமசிவத்தை ஹிருதயத்தில் தியானம் பண்ணி நிச்சலமான மனதோடு அந்தரங்க திரவியங்களால் சாவதானமாகப் பூஜிக்கவேண்டும். அது எவ்விதமெனில், மேல் சொல்லுவோம்!

(48) (அவ்வந்தரங்க பூஜாக்கிரமமாவது) சிவத்துக்குச்சாந்தியென்னும்ஜலமே அபிஷேகதிரவிய மாகவும், சகல வஸ்துக்களிலும் பூர்ணபாவனையே வஸ்திரமாகவும்,(இச்சா,ஞான, கிரியா) சக்திகளே (மூன்று நூலுள்ள) யஞ்ஞோப வீதமாகவும், சுத்தவித்தையே (ஸ்வஸம்வித்-தன்னறிவு) கந்தமாகவும் (வாசனைத் திரவிய மாகவும்), மிகுந்த பூததயவே அக்ஷதை யாகவும், பிரகாசமான பத்தியே புஷ்பமாகவும் பாவித்துச் சமர்ப்பிக்கவேண்டும்.

(49) (மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும்) அந்தக்கரணங்கள் நாலையும் தூப மாகவும் (சுரோத்திரம் முதலான) ஞானேந்திரியங்களைத் தீபமாகவும் விளக்கி, சுகதுக்கங்களற்ற ஜீவனையே நைவேத்தியமாக சமர்ப்பிக்கவேண்டும்.

(50) பின்னும் சத்துவ ரஜஸ் தமஸென்னும் முக்குணங்களையே தாம்பூலமாகவும்,பிராணனையே நமஸ்காரமாகவும், இப்பிரகாரம் பரமேசுவரனுக்கு அந்தரங்கமாக பூஜாதிரவியங்களைச் சம்பாதித்துப் பூஜிக்கவும்.

(5.) அல்லது அந்தரங்கத்தில் பரமாத்மாவான பரமசிவத்தை மிகுந்த பக்தியுடன் மஹாராஜாவைப் போல் வாகனம் முதலிய ராஜோபசாரங்களால் பூஜைசெய்வாயாக,

(52 - 53) இவ்வித அந்தரங்கபூசை சமஸ்த பாபங்களையும் போக்கி, சமஸ்த துக்கங்களையும் நீக்கி, சிவத்தினிடத்தில் மிகுந்த பக்தியைக்கொடுத்து, மனதைநிர்மலமாய்ச்செய்து, சகல ஐசுவரியங்களையும் கொடுத்து தெள்ளிய யோகத்தையும் ஞானத்தையும் கொடுக்குமாதலால், இந்த அந்தரங்கபூஜையையே எக்காலும் செய்யக்கடவாய் (என்று குருமூர்த்தியானவர் சிஷ்யனுருக்கு அனுக்கிரகம் பண்ணினர்).

சிவயோகதீபிகையில்

அந்தரங்க பூஜாவிதானமென்கிற முதல் படலம்

முற்றிற்று.

---

## *Sita - A Tale of Hindu Domestic Life.*

## சீதா, அல்லது இல்லறவாழ்க்கை.

### 23 - வது அதிகாரம்,

தங்கத்துக்கு காமேசுரய்யா வீட்டில் இருக்கிறதில் திருப்தி யில்லை. ஒரு வருஷம் இருந்துபார்த்தாள், பிறகு ராமச்சந்திரனைச் சேர்ந்த அருகையால் பங்களாவுக்குப் போவதாய்த் தீர்மானித்தாள். இராமச்சந்திரன் அவளை யிருக்கச் சொல்லியும் அவள் தன் கெட்ட எண்ணத்தால் புறப்படுவதிலேயே தீர்மானமாயிருந்தாள். தங்கம் பங்களாவுக்கு வருவதாக வேம்பய்யர் பங்களாவை யெல்லாம் ஒழித்துவைத்து இவர்கள் வரவை எதிர்பார்த்திருந்தார். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஒருவருஷத்துக்கு லீவ் வாங்கிக்கொண்டுவந்திருந்தார். தங்கம் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளெல்லாரும் பங்களாபோய்ச் சேர்ந்ததும் அங்கேநடந்திருந்த சங்கதிகளைக்கேட்க அவர்களுக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது. அந்தக்கிழவியம்மாள் ஏன்பாரா இருக்கவேண்டும்? அவள் தங்கத்தின்காதில் பாசியறைக்குள் போகாதே என்று செல்லக் காரணமென்ன? பிறகு பங்களாவுக்கு வந்து உள் உள்ளே சோதனைபோடகாரணமென்ன? மேற்குவீட்டு பழைய அறைகளெல்லாம் திறந்துபார்க்கக் காரணமென்ன? இதெல்லாம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கு பயத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. அவர் ஒருவேளை தங்களுக்கு ஏதாவது அபாயத்தைத் தேடுகிறவர்களோவென்று பயந்தார். தங்கத்துக்கு இவைகளை யெல்லாம் நினைக்க நினைக்க வெகுபயமாயிருந்தது. வேம்புவய்யர் நடந்த சங்கதிகளையெல்லாம் விபரமாகச் சொல்லி நானும் உங்களைபோலவே சந்தேகித்து அவர்களைப் போலீஸில் பிடித்துவைத்து விடலாமென்று பார்த்தேன். ஆனால் தங்கள்கடிதத்தால் அவளை ஒன்றும் செய்யக்கூடவில்லை என்றார். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் பிறகு நாம் இங்கே அதிகமாக இருக்கக்கூடாதென்று மறுநாள் கமலாவடிக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்தார். மறுநாள் அந்தப்படி பயணத்துக்குத் தயாராய் இருக்கும் சமயத்தில் ஓர் வயதுசென்ற கிழவன் ஓடிவந்து ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டு 'அய்யா தாங்கள் பெரியவரா யிருந்தால் நான் நமஸ்காரம்கூடச் செய்வேன். ஏழைபேரில் இரங்கவேண்டும். எனக்கும் ஒத்தாசைசெய்து காப்பாற்றவேண்டும் என்று கண்ணில் நீர்வடியச் சொன்னான். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் என்னவென்று கேட்க கிழவன் சரித்திரத்தை அடியில் வருமாறு சொன்னான். அவன் சரித்திரம் ஆரம்பித்ததற்குள் வேம்பய்யர் வந்து பார்த்து அய்யா இவர்தான் முன்வந்த கிழவனென்றார். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அதைக்கேட்டு நடுங்கினர். கிழவன் அதைக்கண்டு அய்யா தாங்கள் ஏன் என்னைக்கண்டு நடுங்கவேண்டும்! நான் தங்களுக்கு என்ன தீங்கு செய்யக்கூடும்! என்சரித்திரம் முழுவதையும் கேட்டால் தாங்களே என்னைக் கண்டு பரிதாபப் படுவீர்கள்.

"நான் என் ஒரேதமக்கையாகிய தாங்கள் பார்த்த கிழவியின் தாயாரோடு வெகுநாளிருந்தேன். எனக்கு உற்றுருறவினர் ஒருவரும் கிடையாது. எனக்கு பிள்ளையும் கிடையாது. ஆதலால் அந்தக் கிழவியையே எனக்குப் பெண்போல் வளர்த்து வந்தேன். பிறகு ஓர்தூரதேச யாத்திரை செய்யும்படி வந்துவிட்டது. அதற்காக நான் போய் விட்டேன். நான் போயிருந்த காலத்தில் என் தமக்கையு மிறந்துபோய்விட்டாள். அந்தச் சமாச்சாரம் எனக்குத் தெரியவேயில்லை. ஐயோ அந்தக் காலத்தில் என்மருமகள் பட்டகஷ்டம் சொல்லி முடியாதாம். பிறகு இதைப்பார்த்து பரிதபித்து அவளுக்கு கலியாணம்முதல் உங்கள் மாமனார் சேஷய்யர்தான் செய்துவைத்துக் காப்பாற்றினராம். அந்த மகராஜன் வெகுநாளிருக்கலாம், அல்பாயுஸாய் போய்விட்டார். அதுவும் என்மருமகள் துரதிஷ்டம் தான்", என்று சற்று தயங்கினன்.

இதைக்கேட்டிருந்த தங்கம் ஓஹோ சுப்புவா! அய்யோ எனக்குத் தெரியாமல் போயிற்றே! அவள் அடையாளம் கூட தெரியவில்லையே என்றாள். கிழவன்: "ஆமாமா சுப்புதான் அவள்பெயர். அவள் உங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெகுநாள் அலைந்ததில் அவள் அடையாளம் கூட தெரியாமல் இருக்கும்படி இளைத்துப்போய் விட்டாள். ஒரு அல்பகடிதத்துக்காக பயந்துகொண்டு வீட்டைவிட்டு ஓடிப்போய் விட்டாள்" என்று மறுபடியும் சற்று தயங்கினன்.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஓஹோ! முன்னமேயே எங்கள்மாமனருக்குஒருகடிதமெழுதிவைத்ததாகவும் அதில் ஒருகடிதத்தை வீட்டில் ஒளித்துவைத்திருந்ததாகவும் எழுதியிருந்ததாகச் சொன்னார்களே அது தானே?

கிழவன் "ஆமாம் அய்யா! அது தான். அந்தபாழுங்கடிதத்தால் தான் அவள் உயிர் போய்விடும்போலிருக்கிறது. பிறகு சமாசாரத்தைக்கேளுங்கள். நான் வெகு தூரதேசங்களி லெல்லாம்போய் அவளைத் தேடினேன்: கடைசியில் ஒரு ஊரில் அவள் அகப்பட்டாள். பிறகு சமாசாரங்களை யெல்லாம் விசாரிக்கவும் அவள் தான் கல்யாணம் செய்துகொண்டது, ஒரு பெண்பிறந்து அது அறையிலேயே இறந்தது, அதன்பிறகு தன் எஜமானி இறந்தது, கடிதம்கொடுத்தது, அதைவீட்டில்ஒளித்துவிட்டு ஓடிப்போனது எல்லாவற்றையும்சொல்லி மறுபடியும் தங்கள் சம்ஸாரத்துக்கு பிரசவ சமயத்தில் அவள் பக்கத்துவூரிலிருந்ததாகவும் தாங்கள் போய்க் கூப்பிடவும் உங்களையெல்லாம் தெரிந்துகொண்டு கடிதத்தின் சமாசாரத்தை அறியும் பொருட்டே யுங்கள் பெண்ஜாதிக்கு அவள்மருத்துவம் செய்ததாகவும் நீங்கள் ஓர் அறையை ரிபேர் செய்வதாக சொன்னதற்கு அவள் எங்கே கடித்தை எடுத்துவிடுவார்களோ வென்று பயந்து அந்த அறைக்குப்போகாதே என்று காதோடுசொல்லவும், அவளை நீங்கள் துறத்திவிட்டதாகச்சொல்லி, உடனே அந்தக்கடிதத்தை வெளியில் எடுத்து வேறு இடத்தில் வைக்காமல்போனால் தன் உயிர்போய்விடுமென்று அழுதாள். நான் அதனால் அவளைக் கூட்டிவந்து அந்தப்படியே ஒத்தாசை செய்தேன். தங்கள் பங்களாவுக்கு அதற்காகத்தான் இரண்டுநாள் வந்தேன். இரண்டாவது நாளில் என் மருமகள் அந்த உள்புறம்போய் பயந்து ஓடிவந்து மூர்ச்சையாய்விட்டாள். பிறகு நாங்கள் போய்விட்டோம். அதன்மேல் அவள் என்னிடத்தில் இருக்கமாட்டேனென்று சொல்லி ஓடிப்போய்விட்டாள். நான் மறுபடியும் அவளைத்தேடிக் கண்டுபிடித்தேன். அவள் மனோ

வியாதியினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டு உயிர் போய்விடும்போ லிருக்கிறாள். அய்யா தாங்கள் தயவுசெய்து அந்தக்கடிதத்தைச் சோதனை செய்கிற தில்லையென்று சொல்லவேண்டும். அதுதான் நான் உங்களைக்கேட்டுக்கொள்வது. இது நிச்சயம். நீங்கள் சொல்லிவிட்டால் அவள் பிழைத்துக் கொள்வாள். அய்யா என்மருமகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுங்க” ளென்று கிழவன் அழுதுகொண்டு கேட்டான்.

ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் மனமிறங்கி அந்தக் கிழவனுக்குத் தான் ஒத்தாசை செய்வதாய்ச்சொல்லி அவனையும் நிறுத்திக்கொண்டு அந்த உள்களை சோதனை போட ஆரம்பித்தார். கிழவன் அய்யா அந்த அறைகளை நீங்கள் சோதனைபோடக் கூடாதென்பதல்லவா என்பிரார்த்தனை என்றான். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தான்சோதனை போடுவதாயும் அதைத் தெரிந்து கொண்டு பிறகு அவளிடம் கடிதத்தை பார்க்கவே யில்லையென்று சொல்லிக் கடிதத்தைக் கூட கிழவனிடம் கொடுத்து விடுவதாகவும், கிழவன் தன் மருமகளிடத்தில் ஒருவரும் அறியாமல் கடிதத்தை எடுத்துவந்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளலா மென்றும் சொன்னார்.

அவைகளை சோதித்ததி லநேகம் அறைகள் இருந்தன. பாசியறையென்பது இது தான் என்று தெரியவில்லை. பிறகு ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் அந்த அறையை எப்படி கண்டுபிடிப்பதென்று யோசித்துப் பார்த்தார். ஒன்றும் தோன்றவில்லை. கடைசியில் எஜண்டு வேம்பய்யர் ஒருபாயம் சொன்னார். என்னவென்றால், மேல்புறம் வீடுகட்டினபோது அதற்காக பிளான் எழுதப்பட்ட தென்றும் அது இப்போது காமேசுவரய்யரிடம்இருக்கவேணுமென்பதே. உடனே காமேசுவரய்யரைக் கேட்க ஒரு ஆள் அனுப்பினார். சாமேசுவரய்யருக்கு தங்கத்தின் மீது இருந்த கோபத்தில் அதைக்கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டார். காமேசுவரய்யர் இதன் பிறகு அந்தபிளான்ஞாபகத்துக்கு வந்து பிளான்களையெல்லாம் தனியாக எடுத்து ஒரு பீரோவில் வைத்தார். பீரோவின்சாவி சிலசமயங்களில் அவர் பரிசாரகனிடத்தில் கூடகொடுக்கப்படும் பிளானை கேட்கப்போன ஆள் இதை யெல்லாம் அறிந்துகொண்டு அங்கேயே இருந்துகொண்டு பரிசாரகனுக்கு ஐம்பதுரூபாய்கொடுத்து அதைநகல்செய்து தரும்படி சொன்னான். பரிசாரகன் அதை தனியாய்க்கொண்டுபோய் ஒருவருக்கு அஞ்சுரூபாய் கொடுத்து நகல்செய்யும்படிசெய்து அதை ஆள்வசம் கொடுத்து விட்டான். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் போன ஆளுடைய வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தார். ஆள் ஒருவாரத்திற்குப் பிறகு பிளானுடன் வந்தான். எல்லோரும் உட்கார்ந்து பார்க்கவும் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் வெகு சந்தோஷத்துடன் அகப்பட்டுவிட்டதென்றார். அந்த பிளானில் வடக்குக்கோடி உள்ளுக்குப் பாசிஅறையென்று எழுதி இருந்தது. உடனே எல்லோரும் போய் அந்த உள்ளைத்திறந்தார்கள். அந்த உள்ளில் ஒவ்வொருசாமான்களையும் எடுத்து பிறித்துப் பார்த்தார்கள். ஒன்றிலும் ஒருகடிதத்தையும் காணோம். மற்ற பிறைகள் சந்துகள் எல்லாவற்றையும் பார்த்தார்கள். பழைய கடிதங்களும் கிழிந்து போன படங்களும் அகப்பட்டனவேயன்றி வேறு நல்லதாக ஒன்றும் அகப்படவில்லை; கடைசியில் ஒன்றையும் காணோமே என்று மலைத்தார்கள். இப்படியிருக்கத்தங்கம்அதோ பாருங்கள் ஒரு அலமாறி இருக்கிறது, சுவருக்கும் அதுக்கும் வித்தியாசமே தெரியவில்லை; அதைத் திறந்து பாருங்களென்றாள். உடனே கொத்துதிறவுகோல்களைபோட்டுப் பார்த்ததில் ஓர் திறவுகோல் சேர்ந்தது; அலமாறியைத்திறந்து பார்த்தார்கள். அதில் இரண்டுபடங்களிருந்தன. தங்கம் அதை ஆவலுடன் பார்க்க அதில் ஒன்று தன்தாயினுடையதும் மற்றது சேஷய்யருடையது மாயிருந்தது. தங்கம் அவைகளைத் தனியாக எடுத்து வைத்தாள். அப்படங்களை எடுத்த வுடன் அதன்பின் ஓர் சிறியபெட்டி இருந்தது. அதைத் திறப்பதற்கு திறவு கோல்களைப் போட்டுப் பார்த்தார்கள். ஒன்றுக்கும் சேரவில்லை. வேறு திறவுகோல்களையும் காணோம், எல்லோரும் என்ன செய்கிறதென்று விசாரப்பட்டுக்கொண்டிருக்க தங்கம் படம் நன்றாய் இருக்கிறதென்று ஒரு படத்தை எடுத்து முன்புறம்பார்த்து விட்டுப் பின்புறம் திருப்பினாள். அதில் ஓர் திறவுகோல் சொருகப்பட்டிருந்தது. உடனே அந்தத்திறவுகோலை யெடுத்து அப்பெட்டிக்குப் போட்டுப் பார்த்தாள். அது பெட்டியில் சேர்ந்தது. பெட்டியை எல்லாரும் வெகு ஆவலுடன் திறந்து பார்த்தார்கள். அதில் ஓர்கடிதம் வைக்கப்பட் டிருந்தது. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் உடனே கடிதத்தை எடுத்துப்பார்த்தார். தங்கம் இது என் தாயாரின் கையெழுத்துத்தானென்றாள். கிழவனுக்குக் கடிதம் அகப்பட்டதில் வெகு சந்தோஷம். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் உடனே கடிதத்தை வாசிக்கவேண்டுமென்றார். தங்கம் அதை வேம்பய்யர் முன் வாசிக்கக்கூடாதென்று உள்ளே கொண்டு



போய்விட்டாள். வெம்பய்யருக்கு வெகு வருத்தம். ‘நாம் இவ்வளவுபிரயாசைபட்டும் நம்மிடத்தில் வித்தியாசம் நினைத்து விட்டாள் பார்’ என்று சொல்லிக் கொண்டார். உள்ளே போனதும் கிழவன் தங்கம் இரண்டுபேரைமட்டும் வைத்துக்கொண்டு ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் கடிதத்தை அடியில் வருமாறு வாசித்தார்.

“என் பிரியமுள்ள பிராணநாதருக்கு அநேக நமஸ்காரம். நான்பெரிய மோசக்காரியாகப் போய்விட்டேன். ஆனாலதற்காகத் தாங்களென்மீது கோபித்துக்கொள்ளக்கூடாது. குழந்தை தங்கத்தையும்வெறுக்கக்கூடாது. சாகிறகாலம் வந்துவிட்டபடியால் இனிநான் அதைத் தங்களிடம் மறைப்பது சரியல்ல. அய்யோ ஒரு குழந்தை இல்லையென்று நீங்கள் என்னை என் திரும்பிப்பாராமல்கூட இருந்தீர்கள்! ஊரார் குழந்தையெல்லாம் என் எடுத்து வைத்துக் கொஞ்சினீர்கள். அடிக்கடி‘உனக்கொரு குழந்தை இருந்தால் தான் நானுன்னைமதிப்பே’னென்று என்சொல்லிவந்தீர்கள், ஆகா! எனக்கும் அதை கேட்கக்கேட்க உயிரைவிட்டு விடலாம் போலிருந்ததே. மேலும் நமக்கு ஒருபெண்கூடஇராமல் எல்லாசொத்தையும் மைத்துனன்மார்கள் அடைகிறதா என்று எனக்கு ரோசம் பொறுக்க முடியவில்லை. தாங்களும் குழந்தை இல்லாமல் என்னை லட்சியம் செய்வதில்லை. நானென்ன செய்கிறது ! ஒருகுழந்தை என்று பெயருக்காவது வைத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தேன். சுப்புகர்ப்பமானாள்.அவளுடன்நானும்கர்ப்பமானதாக சொல்லிக்கொண்டேன். சுப்புவும் நிஜமென்றே நம்பினாள். பிறகு மாசம் ஆக ஆக என் வீட்டிலும் ஒருவரும் இல்லாததால் சுப்புவை நான் சத்தியம் செய்யச்செய்து நான் கர்ப்பம் இல்லை யென்பதை வெளியிடாமல் இருக்கச்செய்து கர்ப்பமென்று வெளியில் நம்பும்படி செய்தேன். கடைசியில் பிரசவ சமயத்தில் சுப்பு குழந்தையை நான் ஒளித்து வைத்து குழந்தை இறந்துவிட்டதென்றேன். இரண்டுநாளைக்குப் பிறகு நான் பிரஸவித்ததாக வேஷம்போட்டு சுப்பு குழந்தையை வெளியில் காட்டினேன். சுப்பு முதலில் சம்மதிக்கவே இல்லை. பிறகு அவளை அநேகவிதத்தில் பயமுறுத்தினேன். கடைசியில் அவளும் சம்மதித்தாள். சுப்புவைக் கோபித்துக் கொள்ளவேண்டாம். அவள் மீது பிசகே இல்லை. பிசகு எல்லாம் என்னுடையது தான். தங்கம், சுப்பு குழந்தையானபோதிலும் வளர்த்தினவாஞ்சை எனக்குப்போகவில்லை. அவளைத் தாங்கள் தவறவிடக்கூடாது. என்னை மன்னிக்கும்படி நான்ரொம்பவும் கேட்டுகொள்ளுகிறேன். தங்களுக்குப் பெரிய அபராதத்தைச் செய்துவிட்டேன். இப்படிக்குத் தங்கள் ‘ஜானகி’—என்று எழுதி இருந்தது.

ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் இதைப்பார்த்ததும்ஒன்றும் செய்யத் தோன்றாமல் அப்படியே பிரமித்து நின்றார். தங்கம் தன் கண்களில் தாரை தாரையாக நீர்வடித்தாள். கிழவன் ஆகா ! தங்கம் என் மருமாள் பெண்தானா அய்யய்யோ பாவி சுப்பு இதை என்னிடம் சொல்லாமலே ஏமாற்றி விட்டாளே என்றான். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் பிறகு கிழவனைக் கூப்பிட்டு அய்யா இந்தக்கடிதத்தை உங்கள் மருமகளிடம்கொடுத்து விடுங்கள். அவளுக்குத்தைரியம் சொல்லுங்களென்றார். கிழவன் வெகு சந்தோஷமாக அதை வாங்கிக்கொண்டு வெளியிலே போய்விட்டான்.

ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் ஒருயோஜனையும் இல்லாமல் கடிதத்தைக் கொடுத்து விட்டார். அன்றைய தினம் முழுவதும் தங்கம், ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் ஒரு யோசனையும் ஓடாமல் வெகுகவலையுடன் இருந்தார்கள். வேம்பய்யருக்கு சமாசாரம் மெள்ள மெள்ள எட்டிவிட்டது. மறுநாள் இதை யோஜிக்க யோஜிக்க ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளுக்கு ஓர் யோஜனை தோன்றிற்று. தங்கம் சேஷய்யர் பெண்ணல்லவென்றால் சேஷய்யர் சொத்து இராமச்சந்திரனுக்குத் தானே கிடைக்கும். இதற்கென்னசெய்கிறது என்று யோஜித்தார். தங்கத்தினிடத்தில் அவர் இதைச் சொல்லவும் அவள் ஓஹோ கடிதத்தைக்கூடகிழவனிடத்தில் கொடுத்துவிட்டோமே என்றாள். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் பிறகு கிழவனைதேடச்சொன்னார். எங்கேதேடியும் அவன் அகப்படவில்லை. தங்கம் அதே கவலையாயிருந்தாள். இப்படித் தானென்று நினைக்க தங்கத்துக்கு தெய்வம் ஒன்று நினைத்தது.

# *Mantra-Yoga.*

## Father & Mother Glorified in the Son.

ஷடாக்ஷரீஸ்தவமெனும்

ஶரவணபவஸ்துதி

(பழனியாண்டவர் துணை)

மாயாண்டிச்சித்தன் ஞானப்பாட்டு.

ஶம் * ஆவிநேக்கு நேக்குருக வன்புமிக வென்புருகவே
ரம் யிதயபுண்டர மலரிலெழு ஸுமுகரஸ வாறுமுக
வம் ஸங்க்ரமண ஸ்ரீகண்டர் பூர்ணோ ரத்துதித்
ணம் துமையன்பிழுக்கவே யசரீரி † ஈ'சரீஇ ரியான,
பம் ஈரண்ட ஸ்வருபாருப மிவைக்கிலக் காகியே
வம் அனலண்ட மெழுதுபோ லாதாரவாதேய நேரோக்கவே
ஓம் யோருருப மாய்நிற்கு மெழில்பொழி யென்னீசனே!
நம் சரணம் சரணமென்றுன் பாதமே யடைந்தேன்
மோ ஶரவண பவவென்னைக் காத்தரு ளாயே!
நம் ஶக்திவே லாயுத ஸமயந்தப் பாமலே
ம: கைகொடுத் தென்னைநீ காத்தருள் வாயே!
ஓம் ஓம்ஶர வணபவ நமோ நமோம்.
தத்ஸத் ஓம்தத் ஸத்இதி நமோ நமோம்.

---

* ஶம் ஶுத்தஸ்வாத்மநே பவகேஶாய வாக்ரேண்யோ நம: ।
ரம் ஸ்வப்ரகாஶ தத்வாத்மநே ஹம்ஸாய ஸம்பேவ்யோ நம: ।
வம் ஹம்ஸ்வ்ய: ஸ்ரீகண்டேஶாயவ ப்ரணேதாரேப்யோ நம: ।
ணம் உமாகாந்தேஶாய ஶரீரிணேப்யோ நம: ।
பம் அரண்டேஶாய ஸ்வரூபேப்யோ நம: ।
வம் சேதஸ்வாத்மநே வஹ்நேஶாய ரோமவேப்யோ நம: ।
ஓம் ஷட்த்ராஜாதேஶாய ஜ்வாலேப்யோ நம: ।
ஶ்ரம் த்ரிமூர்த்தீஶாய ஶோணாக்ஷேப்யோ நம: ।



சிறுவர்க்கான பக்கம்.

## கலியாணப் பாட்டு

# ஏசல் பேசல்.

"இச்சாசக்தி உமாகுமாரி."—சிவசூத்திரம்.

"அந்தப் பெண்ணைக்கேள்."

தாயார் பெண் சம்வாதம்.

(1) தாயின் கேள்வி.

"அம்மா பெண்ணே தும்பப்பூவே!
ஆம்பான் வந்தால் என்னசெய்வை?"

பெண்ணின்பதில்.

"கட்டிவெல்லத்தைப் புட்டுவைப்பேன்
கறந்தபாலைக் காய்ச்சிவைப்பேன் [பேன்
உள்ளன்புவைத்தால் உளதெல்லாம்கொடுப்
கள்ளத்தனஞ்செய்தால் பள்ளிப்பயல்
என்பேன்."

(2) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப்பூவே!
ஆம்பான் அடித்தால் என்னசெய்வை?

பெண்ணின் பதில்.

I.

ஊசிமேல் தபஸிருந்து
உத்தமரே வேணுமென்றேன்!
காசியாத்திரை போனவனைக்
காத்திருந்து அழைத்துவந்தார்
காசாசைப் பட்டவனைக்
காட்டிக்கொடுக் காதேயென்றேன்
காசியாத்திரை போறே'னென்று
ஆசையெல்லாம்விட்டொழித்தான்!
ஆசைவிட்ட பிள்ளையென்று
அப்பா அழைத்துவந்தார்;
ராசியாக மாப்பிள்ளையும்
தேங்காயை வாங்கிக்கொண்டார்
ஆசைவிட்டு ராசியாக
மாப்பிள்ளைக் கோலங்கொண்டு
காசியாத்திரை போனபிள்ளை
திரும்பிவரக் கண்டேனம்மா!

II.

மாப்பிள்ளைக் கோலங்கண்டேன்
மையிட்ட கண்ணுங்கண்டேன்
மௌனவிரதம் பூண்டபிள்ளை
மனதுக் குகந்ததென்று
அம்மானுந் தோளெடுக்க
அவர்மே லிருந்துகொண்டு
உச்சித மாக்கிடைத்த
உயர்ந்ததோர் வரனென்று
கச்சித மாகவேநான்
கைநீட்டி மாலையிட்டேன்:
மாலைவாங்கி மாலையிட்டே
மாப்பிள்ளையை மணக்கவைத்தேன்!
மாலையிட்டு மணக்கவைத்த
மாப்பிள்ளையும் அடிப்பனோடி?
அடித்தால் அவன் கெடுவான்!
ஆண்மைகெட்டுச் சீரழிவான்!

(3) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப்பூவே!
ஆம்பான் அழைத்தால் என்னசெய்வை?

பெண்ணின் பதில்.

காசாசைப் பட்டு வந்தால்
காறியுமிழ்வேனடி!
மாசுமறு பட்டுவந்தால்
மறுத்தவனைப் போச் சொல்வேன்!
வேசியென்று எண்ணிவந்தால்
வேலையில்லை போவென்பேன்
தாசியென்று பேசிவந்தால்
தாழ்வில்லை போவென்பேன்!

மாசுமறு வில்லாமல்
மாலையிட்ட மாப்பிள்ளையும்
காசாசை தான்விட்டு
காமேசு வார்போலே
ராசியாய் அன்புவைத்து
ராமரும் வந்தாற்போல்
கூசாம லழைத்தாரானால்
கூடவே நான்போவேன்!

(4) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப் பூவே!
மாப்பிள்ளை வந்து மல்லுக்கு நிற்கிறான்
என்னடி சொல்ல நான் கண்மணியே?

பெண்ணின் பதில்.

மாப்பிள்ளை வந்தால்
மல்லுக்குநிற்பானேன்!
ஊர்ப்பிள்ளை வந்தால்
உதவாது போகச்சொல்!
மாலையிட்ட பிள்ளையானால்
மரியாதையா வரச்சொல்!
மரியாதைதப்பி வந்தாலவனைத்
தெரியாதென்று போகச்சொல்!
காசாசைப் பட்டுவந்தால்
காசிக்கே போகச்சொல்!
வீணாசைப் பட்டுவந்தால்
வெறும்மனே போகச்சொல்!
பெண்ணாசைப் பட்டுவந்தால்
பரிவாகப் பேசச்சொல்!
பொன்னாசைப் பட்டுவந்தால்
போகச்சொல்வீணனையே!

(5) தாயின் கேள்வி.

அம்மா பெண்ணே! தும்பப் பூவே
ஆம்பான்வந்ததோ நிற்கிறானடி!
பெண்ணை விடச் சொல்லியவன்
பேய்க்கூத்து ஆடு'றான்டி!
பேய்க்குவாழ்க்கைப் படவோ உன்னைப்
பெற்றெடுத்து வளர்த்தேனடி?

பெண்ணின் பதில்.

'ஆம்பான்' வந்தானானால்,
வீம்பேன் அவனுக்கிப்போ?
ஆண்பிள்ளையவனானால்
அடக்கம் மிகவேண்டும்!
பெண்பிள்ளையானாலும்
பொறுமை மிகவேண்டும்!
ஆணும்பெண்ணு மில்லையானால்
அலியென்றேதா னொடுங்கவேண்டும்!
பெண்ணைவிடச் சொல்லியவன்
பேய்க்கூத்தே யாடவேண்டும்?
நான்மாலையிட்ட பிள்ளையானால்
நலுங்காமற் பேசவேண்டும்!
வேலையற்ற காளையானால்
வேஷம்போட்டு ஆடவேண்டும்!
என்கைபிடித்த புருஷனானால்
யசஸாயென்னை நடத்தவேண்டும்!

## தலைவி தனியிருந்து தோழியுடன் பிரலாபித்தல்.

"மூவாறுமாகி நின்றாள்
வித்தையொடவித்தையாம்
கலைகளென்ன, காமியமென்ன!"
—ஸ்ரீதேவீஸ்தோத்திரம்.

## மூன்றாறு - முதலாறு (Action).

தன் விதியறிந்து விளம்பல்.

1.

காசுபெறாத மாப்பிள்ளை யவன்
காசுக்காசைப்பட்டு ஏங்குறான்டி!

மாசுமறுவில்லா மாப்பிள்ளை யென்று
மணஞ்செய்து கொடுத்தென்னைமகிழ்ந்தாரடி!

2.

ஆயிரங்காலத்துப் பயிராச்சேயென்று
ஆயிரச்செலவில் மணமுடித்தார்!
வாயிரண்டாயிப்போ பேசுறான்டியவன்
தாயில்லாப்பெண்ணென்று தாண்டு'றான்டி!

3.

தாயில்லாப்பெண்ணென்று தாழ்ச்சிவாராதே
கோயிலிற்றேவியைக் கும்பிடச்சொன்னார்
கோயிலிற்றேவியைத் தாயென்றுகாட்டியும்
வாயில்லாப்பூச்சிபோற் பேசு'றான்டி!

4.

பேசு'றான்டியவன் ஏசு'றான்டிபின்னும்
நேசமுள் ளவன்போல் நடிக்கிறான்டி
காசுக்குவீங்கிப் பேச்சைவிட்டவன்
தூசும்பெறுமலே தூறு'றான்டி.

5.

தூறு'றான்டியவன் வீறு'றான்டிபின்னும்
கூறுபோட்டென்னைப் பேசுறான்டி
தாறுமாறாயவன், பேசு'றான்டிபின்னும்
நூறுபத்தாய் வார்த்தை வாங்கு'றான்டி!

6.

பெண்ணாசைமண்ணாசைபொன்னாசைமூன்றும்
விண்ணாசைவைத்தவர் தான்விடுப்பார்!
வீணாசைகொண்ட வீணன வீணர்க்கு
நானாசைகொண்டேனோ சொல்லடியே!

ஓம் ஹ்றீங்காரியைநமஃ

## பின்னாறு - பதிலாறு (Reaction).

விதியறிந்து மதியாற்றேறல்.

7.

இல்லறமல்லது நல்லறமென்பார்
இல்லறக்கிழத்தியை லக்ஷ்மியென்பார்
இல்லறம்விளங்கக் கைப்பிடித்தென்னை
நல்லறம்விளங்காதே நடிக்கிறான்டி!

8.

நடிக்கிறான்'டியவன் படிக்கிறான்'டிபேச்சைத்
துடிக்கிறான்'டியவன் தூய்நெறி விட்டு
நடிக்கினும் படிக்கினும் துடிக்கினும் ஆமோ!
படித்ததற் கொருபலன் இல்லை யேடி!

9.

இல்லை யேடி குணம் அவனிடத்தே
தொல்லை யேடி பின்னும் தனிவாழ்வும்!
கல்லைவைத் தாயினும் கணவ னெனத்தொழ
கல்லுங் கரைந்துருக் காட்டு மேடி!

10.

கல்லையுரு வாக்கும் கற்புள்ள பெண்ணிற்குத்
தொல்லையுண் டோடி தொல்லு லகில்!
கல்லை யமுதாக்கிக் கணவனுக் கிட்டதோர்
எல்லையில் சக்தியும் கற்புக் கல்லோ!

11.

கற்புடைப் பெண்ணிற்குக் கலக்கமுண் டோடி!
விற்புரு வங்களிற் பேத முண்டோ!
கற்புடை யென்தாயார்கலந்தென்னைப்பெற்றவர்
சொற்படி நடக்கச் சுகமல்ல வோடி!

12.

கற்பெனப் படுவது சொற்றிறம் பாமையால்
கற்புடன் கைநீட்டித் தொட்ட வரை
கற்புடன் தெய்வம் என்றுநான் தொழுதால்
கற்புடைச் சக்தியால் கரையேற மாட்டேனோ!

ஓம் ஸ்ரீங்காரியைநமஃ

## மூவாறு - முடிவாறு (Conclusion).

சதியறிந்து சாக்ஷியுறல்.

13.

சீரும் சிறப்புமாய் வளர்த்தாரடி யென்னைச்
சீர்கெடப் போகாதென் றுரைத்தாரடி!
சீர்செய்யச் சொல்லிக் கேட்கிறாடி யிப்போ
சீர்குலைந் தவரைப் பேசு றாடி!

14.

பேசுறுடியவள் பேச்சு மெத்த
ஏசுறுடி யென்னை யேழை யென்று!
காசுக்காசைப்பட்டுச்சொல்லாதவார்த்தையைச்
சொல்லுறுடிமிகக் கேடுகெட்டு!

15.

கேடுகெட்டு மிகப் பாடுபட்டுப் பின்னும்
கேடுள்ள வார்த்தையைப் பேசுறுடி!
ஆடுபோல் நினைத்தென்னை யாட்டுறுடி யவள்
காடுமே டெல்லாம்விட் டோட்டுறுடி!

16.

ஓட்டுறுடி யவள் ஓட ஓட
மீட்டுறுடி பின்னும் வார்த்தை களை!
தீட்டுறுடி கையைத் தேய்த்துக் கொண்டு!
சாட்டுறுடி யென்னைச் சாதி கெட்டே!

17.

சாதிகெட் டேயவள் பேசுறுடி பின்னும்
சாதிகெட் டுள்ளே மானங் கெட்டு!
சாதியிற்பெண்ணென்றுநினைத்தேனடியிப்போ
சாதிகெட் டுச்சும்மா பேசுறுடி!

18.

பேசு’றுடியவள் ஏசு’றுடி பின்னுந்
தேசுற்றவரை மிஞ்சிப் பேசு’றுடி!
காசுக்காசைப்பட்டுத் தூசுபேறுமலே
மாசுமறுவுற்றுப் பேசுறுடி!

ஓம் ஸ்ரீங்காரியைநமஃ.

## நாலாறு - மேலாறு (Rest).

"All ye that labour and are heavy laden
Come unto me and I will give you Rest".
—Christ

"நாலே சிவபுரமாய்
நல்லவஸ்தைக் கிலக்ஷியமாய்
நாதருட்ல் கொண்டோடி
நான்மறையி லொளித்ததென்ன!"
—தேவீஸ்தோத்திரம்.

உண்மையறிந் தோடுங்கல்.

19.

பேராசைகொண்டவள் பேச்சைவிட்டாள்
நேராசைகொண்டதும் நேசமானாள்
தராசுபோல்நிற்கும் மனமேயன்பு
துராசைகொண்டால் துன்பதுவே!

20.

துன்பதுவேபின்னும் இன்பதுவாம்
துன்பிற்றுணிந்துடன் தேறிவிட்டால்
இன்பதுந்துன்பதும் இரண்டலவே!
இன்பதுன்பங்களும் அன்பு வன்பே!

21.

அன்பு வன்பென்பதை யாராயிலோ
அன்பதுவாவதும் அஹக்கண்பார்வை
துன்பதுவாவதும் தூய்மையின்மை
மன்குலத்தவர்க்கது மூடத்தன்மை!

22

மூடத்தன்மையுள்ள மூர்க்கரைநேசிக்கக்
கூடஸ்தன்ஒருவனே கூர்மையுள்ளான்!
தடஸ்தமானதோர் தன்மயங்கண்டவர்
கூடஸ்தரென்றே கூறும்மறை!

23.

மறைகூறும்சொல்*லதுமர்மமடி
பறையறைநா†வது கர்மமடி
குறைகூறும்மன‡மதுகுற்றமடி
நிறைகுடந்தா¶னதும் நிர்மலத்தே!

24.

நிர்மலத்தேகர்ம மலங்கழியும்
நிமலன்பரசேவை தான்பெறலாம்
கமலனைப்பெற்ற விமலன்பாதம்பற்றில்
கர்மமலந்தானே கழியுமடி!

ஓம்ஸௌம்ஸ்வஸ்வாஹா

* மஹா வாக்கியமாம் பரைவாக்கு. † வைகரி வாக்கு. ‡ காம சங்கல்பங்களோடு கூடிய அசுத்த மனம். 'ஆசைக்கோரளவில்லை' யென்று தாயுமானவர் பாடியிருப்பதையும் கண்டுகொள்க. ¶ தத்பத லக்ஷியார்த்தமான பூரணாத்மாவேயாகும் நிர்மலசித்தி பெற்ற விடத்தே யென்றபடி.



## Kannaki—A Social Drama.

### கண்ணகி.

அங்கம் II] [காட்சி 4.

இடம்:—காவரியாற்றினருகே ஒரு பூஞ்சோலை.
காலம்:—காலைப்பொழுது.

பாத்திரர்:—
- கண்ணகி.
- கோவலன்.
- கவுந்தி (ஓர் சந்நியாசஸ்திரீ.)
- பரத்தை, தூர்த்தன், ஓடக்காரன் முதலியோர்.

கண்ணகி:—நாதா! நடக்க நடக்க வழி தொலையவில்லை! கால்நோவுகின்றதே! நாவுலருகின்றதே! சரீரம் நடுக்கமுறுகின்றதே! தாகமோ அதிகமாகவிருக்கிறது! என்செய்வேன்! (பெருமூச்சுடன் அயருகிறாள்).

கோவ:—பிராணசகி! இதோ சமீபத்தில் ஒரு சோலைதெரிகிறது! அங்கு போய் இளைப்பாறுவோம்! உன்னால் நடக்கமுடியாது, நீ வரவேண்டாம் என்று சொன்னேனே நீகேட்டாயா?

கண்:—நாதா! தங்களைவிட்டு நான் எவ்வாறு பிரிந்திருப்பது! அதனால் தான் கூடவந்தேன்!

கோவ:—பிராணசகி! இதோ சோலையை நெருங்கி வந்து விட்டோம்! அதோ ஓர் அம்மாவீற்றிருக்கிறார்கள்! அவர்களைப் பார்த்தால் தவத்திற் சிறந்த முதியவர்களாயிருக்கிறார்கள்! அவர்களிடம் செல்வோம்!

கண்:—இனி நமக்கு பயம் நீங்கிற்று! இவர்களையே நாம் சரணமடைவோம்! விரைந்து வாருங்கள்!

(கௌந்திக்குச் சமீபமாய்ச் செல்கிறார்கள்.)

கௌந்தி:—(நிஷ்டையிலிருந்தும் விழித்து இவர்களிருவரையும் நோக்கி) உங்கள் வரவு நல்வரவாகுக!

கோவ:—அம்மணீ! சரணம்! (வணங்குகிறான்).

கண்:—மாதவஸ்திரீயே!நமஸ்காரம்(வணங்குகிறாள்).

கௌந்தி:—நீங்களிருப்பது எந்த தேசம்? மனிதர்கள் நடமாடாத இவ்வழியாக நடந்து வரக் காரணமென்ன? உங்களைப் பார்த்தால் நல்ல குலத்திற் பிறந்து நல்ல ஸ்திதியிலிருந்தவர்களைப்போல் காணப்படுகிறதே!

கோவ:—அம்மணீ! நாங்களிருப்பது காவிரிப்பூம்பட்டினம்! வாணிபஞ்செய்து பொருள் சம்பாதிக்கலாமென மதுரையைநாடிச் செல்லுகிறோம்.

கௌந்தி:—எனக்கும் மதுரைக்குவர வேண்டுமென விருப்ப மிருக்கிறது! மதுரையிலுள்ள கற்றாரிடம் அறநூல்களைக்கேட்க வேண்டும்! ஆதலால் நானும் உங்களோடு வருகிறேன்!

கண்:—அப்படியே! தங்கள் சித்தப்படி செய்யுங்கள்.

கோவ:—எனக்கும் சம்மதமே!

கௌந்தி:—வாருங்கள்! அரங்கமடைந்து சாரணர்களை தரிசித்துப் போவோம்!

(மூவரும் போகிறார்கள்).

கண்:—சாரணர்களை தரிசித்து விட்டோம்! இனி எங்கு செல்வது?

கௌந்தி:—ஓடத்திலேறி காவிரியாற்றின் அக்கரைசென்று அங்கிருக்கும் பொழிலில் சற்று நேரம் தங்கியிருந்து பின் மதுரைக்குச் செல்வோம்!

கோவ:—அப்படியே செய்வோம்!

ஓடக்:—எங்குபோக வேண்டும்?

கோவ:—ஆற்றின் அக்கரைக்கு!

ஓடக்:—ஆளுக்கு அரைப்பணம் கொடுக்கவேண்டும்!

கண்:—அப்படியே தருகிறோம்!

ஓடக்:—ஆனால் ஓடத்தில் ஏறிக்கொள்ளுங்கள் (மூவரும் ஏறி அக்கரை செல்லுகிறார்கள்).

கோவ:—இறங்குங்கள்! அந்தப் பொழிலிடம் செல்வோம்!

கண்:—இந்தா! ஓடக்காரா! ஒன்றரைப் பணம்! (பணத்தைக்கொடுக்கிறார்கள்.)

கௌந்தி:—பொழில் இதோ சமீபத்தில்தான் இருக்கிறது! (மூவரும் அவ்விடம் சேருகிறார்கள்).

தூர்த்தன்:—(கண்ணகியை நோக்கி) இவளைப் பார்த்தால் மிகவும் அழகுடைய வளாயிருக்கிறாள்! இவள் சமீபத்தில் சென்று வார்த்தை யாடலாம்! (கண்ணகியை நெருங்கி) அம்மா! நீ இருப்பது எந்த ஊர்? இங்கு ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? என் மனதிற்கிசைந்து நட! உனக்கு வேண்டிய பொருள் எல்லாம் தருகிறேன்!

கண்:—ஹே! மதிமூடா! என்னை யாரென நினைத்தாய்! கொஞ்சமும் மரியாதையின்றி அடாதவார்த்தை யாடுகிறாய்! சீ விலகிப்போ!

பரத்தை:—(கோவலனை நோக்கி) ஹே! மகாபுருஷா! உன்னுடைய சௌந்தர்யத்தைக் கண்டு காதல்கொண்டவளா யிருக்கிறேன்! தயைசெய்து என் இஷ்டத்தை நிறைவேற்று!

கோவ:—அடிபாதகி! கொஞ்சமும் நாணமில்லாமல் என்னிடம் வார்த்தை யாடுகிறாய்! மரியாதையோடு இவ்விடத்தை விட்டுப் போய் விடு!

கௌ:—அதோ ஒரு தூர்த்தனும், பரத்தையும் கோவலனோடும், கண்ணகியோடும், வாதாடுகிறார்கள் போலிருக்கிறது! நான் சமீபத்தில் சென்று பார்க்கிறேன்! (அவ்விடம் செல்லுகிறாள்).

கோ:—(கௌந்தியைநோக்கி) அம்மணி! இவ்விருவர்களும் எங்களுடன் அடாதவார்த்தையாடி அவமதித்துப்பலவாறுபேசுகிறார்கள்!

கௌந்:—இருக்கட்டும்! (அப்பரத்தையையும் தூர்த்தனையும் நோக்கி) நீங்கள் சுத்த காம வசப்பட்டு என்னுடைய குழந்தைகளை அவமதித்துப் பேசியபடியால் இக்கணமே உங்களைச் சபிக்கிறேன்! நீங்களிருவரும் நரியாகப் போகக்கடவது! (இவள் சபிக்கவே அவர்கள் நரியாகமாறி விடுகிறார்கள்)

கோவ:—அம்மணீ! அவர்கள்தான் மதியீனத்தால் அவமதித்துப் பேசினார்கள்! தாங்கள் இவ்வளவு பெரிய சாபம் கொடுத்து விட்டது உங்கள் கருணைக்கு இழுக்காகும்!

கண்:—ஆம்! தயைசெய்து சாபத்தை நிவர்த்தி செய்யுங்கள்!

கௌ:—ஆனால்சரி இன்னும் ஒருவருஷத்திற்குள் அவர்கள் சாபம் நிவர்த்தியாகும்! நாம் புறப்பட்டு மதுரைக்குப் போவோம்! (இப்பொழிலை விட்டுப் புறப்பட்டு நடக்கிறார்கள்).

கோவல:—உறையூரைச் சமீபித்து வந்து விட்டோமே!

கண்:—இங்கு தங்கி யிருப்போம்!

கௌந்:—அப்படியே ஆகட்டும்! (மூவரும் உறையூரை யடைந்து அங்கு தங்குகிறார்கள்).

இரண்டாம் அங்கம் முற்றும்.

*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your Choice and stick to it till you reach the End."*

THE REGISTRAR OF ... REGISTERED 20 JUL 1910 MADRAS.

ஸத்தியம் வத—**Speak the Truth.**

"Hitch your wagon to a Star". "To Thine Own Self be True".




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்சத்.] [God is Love. Knowledge is Power. *Aum*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

பு. **18.**] **1910**௵ ஜூலை௴, சாதாரண௵ ஆடி௴ [ச. **4.**

# *The Religious Feeling-Its Use and Abuse.*

Commenting upon the lack of religious feeling in India, the *Bengalee* writes:—"And can we hope to live to be a great nation when our religion has become a round of formulae and has ceased to be a vitalizing influence? Does not the thought naturally strike one that it would be idle for us to attempt to re-achieve our past greatness unless we can make a living thing of that spirituality that constituted the central factor of that greatness? We earnestly appeal to the thoughtful section of our countrymen, to think over this question seriously, to address themselves to the leaders of our society, to take up the task of spiritual reconstruction side by side with the efforts they have so long, so strenuously put forth in other useful directions."

"Much harm has been done to youngmen by the perversion of sacred writings for seditious purposes and the district officer should draw attention to the danger of attempting to graft politics on to religion."—*The Government of India* Circular Letter dated March 14, 1910.

"Special interest will be attached to a learned contribution on what he calls "*Spiritual Ventures,*" by Mr. C. V. Swaminatha Aiyar, in the *Hindustan Review.* It will throw a flood of light upon the doings in Bengal and in certain other parts of India. It is explained that as the body, so the soul, has certain stages of development. There is a stage in the life of every man, unless that man has sunk to the lowest depths, in which he feels an elation of the mind, that rises above the narrow surroundings of the world. Sufficient attention is not paid to this development of the mind; and other thoughts and ambitions coming crowding in, this awakening of the Soul, as it is called, is not sufficiently nourished so that it might result in the good of the Individual. But it is not that it is insufficiently nourished, so as to build up a great and good man, that constitutes the chief complaint. It is that when the soul has awakened and is ready to receive impressions, wrong impressions are given by people who call themselves religious and pretend to lead the life of abstinence."—*The Indian Patriot of 16th June 1910.*

## ஆஸ்திக சித்தம்.

அதனுல்வினையும் துணுமும் கேடும்.

"தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி முனிவிலாததோர் பொருளது கருதலு மாறுகோடி மாயாசக்திகள் வேறுவேறுதம் மாயைகள் தொடங்கின"—என்கிறார் எம்பெருமான் ஸ்ரீமாணிக்கவாசகர். இது எல்லா விதத்திலும் உண்மையே! "தெய்வம் என்பதோர் சித்தம்" உண்டானுல்தான் மாயையின் கூத்துக் கிளம்புகிறது. மாயையின்கூத்தே மனக் கிளர்ச்சியையுண்டுபண்ணுகிறது. மனக்கிளர்ச்சி யென்றுலும் உற்சாகம் என்றுலும் ஒன்றே. இளங் குழந்தை விரகதாப மறியுமா? அறியாது. அதுபோல மூடம் நிறைந்த அறிவு (மூடாத்மா) மனக்கிளர்ச்சியை யுணராது. அது தேஹாஹ பாவனையில் திடபட்டுத் தேஹமே சதமென வுழலுமாதலால் உலகப்பற்றுவிடாது அதில் சிக்கி ஆடிவரும். தேஹப்பற் றுண்டானுல் உலகப்பற்று தானேவரும். அவை யிரண்டும் வியஷ்டி, சமஷ்டி ரூபங்ககளாம். இப்படிப்பட்ட மூடாத்மாக்களுக்கும் உலகானுபவம் முதிர்ந்த காலத்தில் இஹத்தில் சுகமில்லையென்று தேறி, இவ்வுலகில் காணக்கிடைக்காத சுகத்தைத் தேடி யலையும்போதும், தேஹம் அநுத்துச்சநுத்துக் களைத்துப்போக சுகத்தை நாடியலைந்த மனம்மட்டும் சூக்ஷ்ம ஸ்வரூபமானதால் களைத்துப்போகாது, தேஹம் அயர்ந்து கிடக்கவும் தான் சுகந்தேடி அலையும். அது எந்தத்தேஹத்தைக் கொண்டு வியவஹரிக்கிறதோ அதற்குப் "புரியஷ்டகம்" என்றும், "ஸ்வப்ன தேஹம்" என்றும், "சூக்ஷ்மசரீரம்" என்றும் பேர்சொல்வர்.

"மாயனை நாடி மனநெடுந்தேறேறி
போயின நாடறியாதேபுலம்புவர்"—என்பது—திருமந்திரோபதேசம்.

இந்த "மனத்தேர்" ஏறி சுகத்தைத்தேடியலையும் மனோதத்துவாத்மகனை ஜீவன் முதலில்,—

"உடலுண்மை யென்றே யுலகை யாய்ந்திடும்
உடலுக்கின்ப மூலகிலே யென்றிடும்
உலகெலாந்தேடி யலுத்தது போனபின்
உடலைவிட் டுயிரிலே யின்பத்தைத் தேடிடும்"

" இன்பத்தைத் தேடி யிகசுக நாடிடும்
இன்பமிகத்திற் கண்டத னுண்மை யுணர்ந்தபின்
மின்னற்போலது மறைவதென் றறுக்கும்
ஒறுத்தபி னுண்மையை உலகிலே தேடிடும்."

இப்படி இகசுகந் தேடியலைந்து அதுநிலையற்ற தென்றுணர்ந்த ஜீவன் உலகத்தின் ஸ்வபாவத்தை யறிந்துமறியாமல் அல்லற்படும்.



REGISTERED 20 JUL 1910 MADRAS.

ஏனெனில், அதன் உண்மை யறியமாட்டாமையால்.

'உலகமோ கானற்சலமாம் கடுவெளித் தோற்றம்
உலகமே சதமெனி லுண்மை யதுபோற்படும்
மலமிகு சிந்தையை மாயையி லாட்டிடும்
மாலுமியில்லா மரக்கலமாக்கிக் கடுவெளி தன்னிற்
[கரைந்திடு மதுவே.

"மலமிகு சிந்தையை மாயையி லாட்டிடும்" சக்தி "கானற்சலமாம் கடுவெளித் தோற்றமான" ஜகத்துக்கு எங்கேயிருந்து வந்தது? இதை யுள்ளாய்ந் துணர்ந் தறிவார் யாரோ அவரே விவேகி யென்னப்படுவர். பொய்யான ஜகத் தோற்றத்துக்கு மெய்யானதோர் சக்தி யுண்டாயிற் றென்றுல் அதை யெப்படி நம்புகிறது? பொய்யிலிருந்து மெய் யுண்டாகுமா? அவரை போட்டால் துவரை முளைக்குமா? முளைக்காதுபோல பொய்யான ஜகத்திலிருந்து மெய்யானதோர் சக்தி யுண்டாகமாட்டாது. இந்தமட்டும் உண்மை யென்று உறுதிப்பட்டால், "மலடிமகன் காடி பழகி திருடியை அடிக்கிறுன், எல்லாரும் வேடிக்கை பார்க்க வாருங்கள்" என்று ஒருவன் பறை அறைந்து கூறினுல், அதைக்கேட்டு ஊரெல்லாம் பாழாக எல்லாரும் வேடிக்கைப் பார்க்கப்போன கதையாக முடியாமல், சிறிது மனவிஸ்ராந்திக்கு இடமுண்டாகும். அதாவது ஓடியலுத்த மனம் ஓய்ந்து உட்கார்ந்து களைதீர இடமுண்டாகும்.

"மலடிமகன் காடிபழகி திருடியை அடிக்கிறுன்" என்கிற வசனத்தைக்கேட்டதும், ஏதோ வேடிக்கை நடக்கிறது பார்கப்போகலாம் என்று நினைக்கும் மனம் இருளடைந்து மூடம் நிறைந்த மனம். அது சப்தவிகாரமாத்திரத்திலே கூத்தாடி குதிக்குந் தன்மை வாய்ந்தது. † பதார்த்தம் என்பது இன்னதென்றேயுணராமல், கேவலம் சூத்திரப்பொம்மைபோல், சப்தவிகாரத்திலே யாடத்தக்கது. காதில் விழுந்த சப்தத்தைக் கிரஹித்து பதத்தை யுணர்ந்து, பதார்த்தத்தை விசாரித்து, விசாரித் தறிந்த பதார்த்தங்களின் தொடர்பை இலக்கணமுறையாலே, வாச்சியார்த்தம்செய்து, வாக்கியத்தை மனத்தில் வாங்கிக்கொண்டு, வார்த்தைகளினின்றும் வாச்சியார்த்தத்தைப் பிரித்து, முட்டையிட்ட பக்ஷி கூட்டிலிருந்து அடைகாப்பதுபோல், வாச்சியார்த்தத்தை உள்ளத்திலிருத்தி "இடையறுத்தியானம்" என்கிற அடைகாத்து, முட்டையிலிருந்தும் பக்குவ முதிர்ச்சியில் குஞ்சுண்டாவதுபோல், "வாச்சியார்த்தத்தின் இடையறுத் தியானத்திறுல்" லக்ஷியார்த்தம் என்னும் ஸ்வரூபஞானமாகிற குஞ்சு பொறிக்கப் பார்க்கிறவன், "பார்ப்பான்" என்று சொல்லும் இருவியர்வான்.

ஞானசட்சுஸ் கொண்டு பார்ப்பான் கால தேச, பரிச்சின்னங்களை விட்டு வஸ்துவையே பார்ப்பான். வஸ்துதரிசனமானவனுக்கு மாயை மயக்கும் காயமுடக்கும் இல்லை. காரணம் ஒன்றையேபற்றி நிற்பான். "தியானம் நிர்விஷயம் மனঃ" என்று சுருதிகூறுவதால், விஷயவாசனையற்று விளங்கும் அவன் மனம் நிர்மல சுத்தமாய் நிருபாதிகமா யிருந்து வேலைசெய்யும். அப்படிப்பட்ட மனதை தேஜோமனம் என்று சொல்வர். "சோதியே, சுடரே, சொல்லிறந்த மதியே, ஆதியே, அநாதியே!" என்று சொல்லும் நாமங்களுக்குள்ள லக்ஷியார்த்தத்தையுணரக்கூடிய மனம் இந்த தேஜோமனமே. "ஜோதிரந்தர்க்கதம்மநঃ" என்று சுருதிகூறும் இம்மனத்திறுலே 'காரியகாரண தோரணை'யறியலாம். 'காரியகாரணதோரணை' யென்பது பரிணும விதியை யொட்டினதாகும். "Evolution is the Law of Life" என்று Pythagoras என்னும் தத்துவஞானி சொல்லியதின் உண்மை யிதுவே. காரியகாரணதோரணை யறிந்தார் உடலுயிர் உண்மையறிந்தார். உடலுயிருண்மை யறிந்தார் அவற்றின் உறவையும் உள்ளபடி யறிந்தவராவர். உடலுயிருண்மையுறவின் அறிவே "அத்வைத ஞானம்" என்று சொல்வது.

‡ பத-அர்த்தம்=பதத்தின் பொருள் அல்லது லக்ஷியம்.

இவ்வாறாக "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக"வும், முனிவிலாததோர் பொருளுறு கருதல்" என்னும் விஷய ஞானமில்லாத நிர்விஷய ஞானம் உண்டாகும். நிர்விஷயப்பட்ட மனமே மாயாரூபி. இந்த மாயாரூபியான மனம் 'திரண்ட பெண்ணுக்குச்' சமானம். திரண்ட பெண்ணுக்கே (தேஹ பக்குவம் சித்தித்த பெண்ணுக்கே) விரகதாபம் என்கிற மனோ விகாரம் உண்டாகும். விரகம் என்பது ராக தத்துவத்தினுடைய விசேஷ இயக்கம். ராகம் என்றால் விருப்பு. விருப்பம் என்பது உள்ளத்திலிருந்தெழுமோர் உண்மைச்சக்தியின் விகாரம். அந்த உண்மைச்சக்தியின்உபாதிஸஹிதமே தெய்வம். அந்த உண்மைச் சக்தியின் உபாதி சஹிதமே தெய்விகம்: தெய்வம், தெய்விகம் இரண்டும் தேவன், தேவி. இவர்களிருவரும் உயிருடல்போல் அத்வைத உறவினராதலாலும் இவர்களுடைய சம்பந்த மாத்திரமான குலமும் அந்த அத்வைதமான உறவிற்கு வேறிலாமையால்,

"ஒன்றேகுலமும் ஒருவனே தேவனும்" என்று திருமூலதேவர் திருமந்திரோபதேசஞ் செய்தனர். இப்படியாக ஆதியாயுள்ள "ஆஸ்திகசித்தம்" என்பதிலிருந்து அத்வைத ஞானமும், அதிலிருந்து மன்குல ஒற்றுமையும் "ஏகம்பிரஹ்மம் ஸத்யம்" என்கிற சுருதி வாக்கிய உண்மையும் உண்டாகிறது. ஆஸ்திக சித்தம் காரணமாக வுண்டாகுங் குணமும், சமயநெறிபற்றிய சன்மார்க்கமும் நன்மார்க்கமுமிது. இந்த ஆஸ்திக மதத்திலிருந்துண்டாகும் கேடு என்னவெனில், "ஆறுகோடி மாயாசக்திகள் வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின" என்றபடி மாயாசக்திகள் "வேறு வேறு" தம்மாயைகளைக் காட்டத்தொடங்குவதாம். இந்த மாயைக்கு சக்தி யெங்கிருந்து வந்ததெனில்,

"உலகமேசதமெனில் உண்மையதுபோற்படும்" என்று சொல்லியவாக்கியத்தின் லக்ஷியார்த்தத்திலிருந்து வந்தது என்று சொல்வோம். இதைப்பற்றி விரித்தெழுதில் விளங்காதாகையாலும் அதன் உள்மர்மத்தைக் குருமுகமாகவே தெரிந்துகொள்ள வேண்டுமாதலாலும், அந்த லக்ஷியார்த்தத்தைச் சாதிக்கும் சாதனமுறையை விட்டுச் சாத்தியமான தொன்றையே சுட்டிக்காட்டுவோம். மாயாசக்திகள் என்றது சங்கல்பசக்தி யொன்றேயாம். சங்கல்பசக்தியானது "உலகமேசதமெனில் உண்மையது போற்படும்.

இந்தச் சங்கற்ப சக்தியொன்றே வேறு வேறுவேஷம் பூண்டு ஆறுகோடிமாயாசக்திகளாகத் தோன்றும். இந்த மாயா சக்திகளைக் கொண்டு உலகத்தை யாட்டுவிக்கலாம்.

விரகதாபம் கொண்ட பெண்ணை விட்டபுருஷன் ஒருவன் உத்தமனாகில் கைபிடித்துக் கடிமணஞ்செய்து இல்லறநெறியில் நல்லறம் புகட்டி ஆத்மபூரணத்தில் வேற்றுமையின்றியே கரையேற்றியும் வைக்கலாம். அவனே பின்னும் அதமனாகில், ஆசைகாட்டிமோசஞ் செய்து கற்பையழித்தவள் பொற்பை (உள்ளழகை)க் குலைத்து பாதகவழி செலச்சாதகனாகியே சிறுமைப்படுத்திச் சிரிப்பாணிகாணலாம். அப்படிபோலவே ஆத்மநெறியில் உள்ளத்துணர் வொரு பக்குவப்படுந்தோறும் மனத்தெழு கிளர்ச்சியை நல்வழிதனிலும், தீவழியதனிலும் தெரிந்தே நடத்தலாம். முன்னவர் தாமே சற்குருவாவர்; பின்னவரவரே அசற்குரு என்க. இவர்களைக் காரண குருவென்றும் காரியகுரு வென்றும் சொல்வர். முன்வழியதையே நல்வழியென்றும் "ஸமயநெறி"யென்றும் செப்புவர் மேலோர். பின்வழியாமதைப் புறக்கடைவழி யென்றும் "புன்னெறி" யென்றும் புகலுவர் புலவர். இவற்றையே White magic என்றும் Black magic என்றும் வழங்குவர் அயலோர்.

"ஆஸ்திகசித்தம்" (Religious feeling) குறைந்து வருகிற இக்காலத்தில் நாம் முன்னுக்குவருவதெப்படி! யென்று பெங்காளிபத்திராசிரியர் ஏங்குகிறார். ஆஸ்திக சித்தம்தன்னில் நாஸ்திகமானதோர் இராச்சிய விஷயங்களை முட்டச் சேர்த்து ஒட்டவைப்பதினால் கஷ்டமே மிகவும் கைகண்டபலனாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் இடித்துரை கூறிகின்றார். ஆஸ்திகசித்தமாம் ஊற்றிலிருந்து ஊறுமோர் உணர்வும் கிளர்ச்சியேயாக வலைத நல்வழி, தீவழி யிரண்டிலும் ஓடச் செய்யலாம் என்பதைச் சுட்டிக் காட்டுவான் சூக்ஷுமமதாகவே குறிப்பித்தோம்.



REGISTERED 20 JUL 1910 MADRAS

## Easy Lssons in Economics—III.

## குடிவாழ்க்கை.

### பாடம் - 3.

### தொழில்.

*(Specially written for the Vivekachinthamani.)*

மனிதன் செயலின்றி அவனுடைய உபயோகத்திற்கு சாதகமாகும் பொருள்களெல்லாம் இயற்கையாலே உண்டானவல்ல. பூமி முதலிய சிருஷ்டியின் ஒவ்வொரு பதார்த்தமும் இயற்கைப் பொருளேயாகும். மரவகைகளும்,பயிரிடப்பட்டும் தானாகவளர்ந்தும் காணப்படும் சகலபுல்பூண்டுகளும், இரும்புமுதலிய லோகவகைகளும் இயற்கைப் பொருள்களே. பூமியைத்தவிர மற்ற பதார்த்தங்களும், விதைத்துப்பயிரிடுவதினால் உண்டாகும்தானியவகைகளும், விதைபோட்டுத் தண்ணீர் பாய்ச்சி வளர்த்த மரவகைகளும், பயிரிட்ட பருத்தியைக்கொண்டு நெய்த ஆடைகளும், இரும்பு முதலிய லோகங்களினால் செய்த பலவிதக் கருவிகளும் நாம் உண்டாக்கினவை, இயற்கைப்பொருளல்ல வென்று நினைக்கப்படுகிறது. ஆயினும் இவ்விஷயங்களில்இயற்கைப்பொருள்களை உருபேதப்படுத்தும தொன்றே மனிதனுடைய செய்கையாலானதேயன்றி மற்றெல்லாம் பொருள்களின் இயற்கையான குணங்களின் தன்மை யென்பதை நாம் அறியவேண்டும்.

உலகத்தில் ஏற்கனவே உள்ள சாரங்களுக்கு ஓரணுவைக் கூட்டவாவது, அவைகளின் ஓரணுவைக்குறைக்கவாவது மனிதனாலியன்ற காரியமல்ல. பயிரிட்ட தானியத்தைப்பலமடங்காக அறுத்துக்கொள்ள மனிதன் நிற்கவேண்டியவனே தவிர, அவன் கைச்சாதுரியத்தினாலேயே பெருகிவரும்படி செய்கிறானென்பது ஒவ்வாது. பூசாரத்தினாலும், சூரிய வெப்பத்தினாலும், காற்றினுதவியினாலும், விதைத்த விதையினின்று பயிர்முளைத்து அதற்குரிய இயற்கையின் கிரமப்படி வளர்ந்து பலனைக் கொடுக்கும். விதை, மண்ணுடன் தக்க காலத்தில் சம்பந்தப்பட்டு, நீர் முதலிய உதவியையும் ஏற்றபடி பெற்றால், அது முளைத்துத் தளிர்த்துப் பலனைக் கொடுப்பது மனிதனிட்ட ஆக்கினைக்குப் பயந்து செய்த காரியமன்று.

கிரமமான பருவத்தையும், பூசாரத்தையும், நீர்வளப்பத்தையும் செவ்வையாயறிந்து மண்ணுடன் விதையைச்சேர்க்கும் தொழிலொன்றையே மனிதன் செய்யத்தகும். நீரை மண்ணுடன் கலக்கச் செய்யவும் வல்லமை படைத்தவனே. அதாவது, சம்பந்த மற்றுப் பிரத்தியேகமாயிருந்த நீர், மண், விதைமுதலிய பொருள்களை சம்பந்திக்கும்படி செய்யும் வல்லமை யொன்றே மனிதனுக்குள்ள தெனலாம். ஆகையால் நாம் தனித்தனியான பொருள்களை சம்பந்திக்கும்படி செய்வித்தோமானால், அவைகளுக்குள்ள இயற்கையான குணங்களுக்குத் தக்கவாறு பலனையடைகின்றோம். பயிரிடுவதொன்றில் மட்டுந்தான் இவ்விதமாக நம்முடைய வல்லமைக்குப் பூர்ணமான இடமில்லை யென்று எண்ணக்கூடவில்லை. பருத்தியைப் பயிரிட நாம்செய்யும் தொழில் அற்பமே

யாயினும், விளைந்த பருத்தியைக் கொண்டு ஆடைகளைச் செய்வதில் நம்மா லாகவேண்டிய தொழில் அற்பமானதல்ல வென்ற எண்ணமுதிப்பது சாதாரணம். விஸ்வகர்மாவின் சிருஷ்டிதானோ வென்று ஊகிக்கும்படியான யந்திரங்களைச் செய்து அற்புதமான வேலைகளைச் செய்வது மனிதனுடைய புத்தியின் காரியமாகையாலும், மனிதனின்றி அவை எக்காலத்திலும் தங்கள் இயற்கைகுணத்திலிருந்து இவ்வித நிலைமைக்கு வராதாகையாலும், அவை முழுவதும் தன் கைசாதுரியத்தின் சிருஷ்டியென்று மனிதன்நினைக்கின்றானாயினும், அவன் சிருஷ்டித்தது ஒரு அணுவேனுமில்லை யென்றே கருதவேண்டும். பூமிக்குள் மறைந்துகிடந்த இரும்பை ஸ்தானபேதப்படுத்தி, அத்துடன் கலந்திருந்த மற்ற பொருள்களை வேறுபடுத்தி, இரும்புப்பொடிகளைமட்டும் ஒன்று சேர்த்து பல ரூபபேதங்களை யுண்டாக்கி, ஏற்கனவேயுள்ள இரும்புக்கு யந்திரம் என்ற ஓர் நூதன நாமத்தைக்கொடுக்கின்றானே யல்லாமல் புதியதாய் அவன் எந்தப்பொருளையும் செய்வதில்லை.

மரங்கள் வனங்களில் இயற்கையாகவே வளர்ந்து புஷ்பித்துக்காய்த்துப்பழுத்து மனிதனுடைய ஜீவனத்திற்கு ஆதார மாகலாம். இயற்கையி லமைந்த குகைகளில் வசித்து, ஆடைக ளின்றியும், தாமாக வளர்ந்த மரங்களின் பழங்களைப்புசித்தும் மிருகங்களைப்போல் காலங்கழிப்போருக்கு இயற்கைப் பொருள்களே ஜீவனத்திற்குப் போதுமான சாதனமாயிருந்தாலும், கனிமுதலிய உணவுகள் மனிதன் வயிற்றைத் தேடிவரச் சக்தியற்றவை யாதலால், அவைகளைத் தேடியடையும் தொழில் தானு மின்றி உயிரைக் காப்பது முடியாத காரியம்.

தொழில் பல பிரிவுடையன. நெல்பயிரிட்டு அறுத்துச் சேர்க்க வேண்டியதா யிருக்கிற தன்றி, குத்தி அரிசியாக்கி சமைத்தபின் தான் உணவுப்பொருளாகும். கோதுமை பயிரிட்டு சேகரித்தபின், அதையரைத்து நொய் பிரித்து ரொட்டியாகச் செய்தபின்புதான் உணவுக்கு யோக்கிய மாகும். தானியங்களைப் பயிரிடக் கலப்பை மாடு முதலியவைகளும், தண்ணீர்பாய வாய்க்கால், அணைக்கட்டு, மதகு முதலிய சிற்பவித்தையினால் உண்டாக்கப்படும் சாதனங்களும், வேலிகட்டுதல் காத்தல்போன்றவைகளும், தானியங்களை வயலினின்று களத்திற்குக் கொண்டுவந்து வைக்கோலினின்று விடுவித்து, அவசியமான விடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதும் அவசியமாகின்றது. இவற்றிற்கு மரம் இரும்பு முதலியவைகளால் செய்யப்பட்ட கருவிகள் வேண்டுமாகையால் அச்சாதனங்களை யடைய தொழில் செய்வோருதவியும் பயிரிடுபவருக்கு வேண்டியதாயிருக்கின்றது.

T. C. வேங்கடரமணய்யர்.

# *"My Property"—A Tell Tale Tantram.*

## " என் சரக்கு "—ஓர் உளவறிதந்திரம்.

" We are as elastic as the gas of gunpowder, and a sentence in a book, or a word dropped in conversation, sets free our fancy, and instantly our heads are bathed with galaxies and our feet tread the floor of the pit. And this benefit is real, because we are entitled to these enlargements, and, once having passed the bounds, shall never again be the miserable peasants we were."—*Emerson.*



1. காயக்கப்பல் சரக்கேற்றிப் போதுதல் (பிறப்பு).

பஞ்சபூதப் பலகை கப்பலாய்ச் சேர்த்து
பாங்கான ஓங்குமரம் பாய்மரம் கட்டி
நெஞ்சுமனம்புத்தி ஆங்காரஞ் சித்தம்
மானுபி மானங் கயிறுகச் சேர்த்து
ஐந்தெழுத் தைக்கட்டிச் சரக்காக ஏற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கா னிறுத்தி
நெஞ்சு கடாக்ஷத்தால் சீனிப்பாய் தூக்கி
சிவனுடைய திருப் பொருளைச் சிந்தையில் நினைத்து
தஞ்ச லானந்த வெள்ளத்தில் தானே
அகண்டரதம் போகுதடா—ஏலேலோ ஏலெலிலோ.

2. சிதாபாஸன் கப்பல் தள்ளுதல் (வளர்ப்பு).

களவையுங் கேள்வையுந் தள்ளுடா தள்ளு
கருணைக் கடலிலே தள்ளுடா கப்பல்,
நிர்க்குணந் தன்னிலே தள்ளுடா தள்ளு
நிறைந்தபரி பூரணத்தால் தள்ளுடா கப்பல்,
† மூக்கணை மூன்றையுந் தள்ளுடா தள்ளு
முப்பாழுக் கப்பாலே தள்ளுடா கப்பல்,
திக்குத் திசையெங்கும் தள்ளுடா தள்ளு
திருமந்திரஞ் சொல்லி தள்ளுடா கப்பல்,
பக்கமுடன் கீழ்மேலுந் தள்ளுடா தள்ளு
பரவெளிக் கப்பாலே போகுதடா கப்பல்.—ஏலேலோ ஏலேலோ.

3. அருளானந்த வெள்ளத்தில் கப்பலழுந்துதல் (மறைப்பு).

தந்தைதாய் சுற்றமும் சகலமும் மறந்து
தாரம் சகோதரம் தானதும் மறந்து
பந்தமும் நேசமும் பாசமும் மறந்து
பதினாலு லோகமும் தன்னையும் மறந்து
இந்திரியர்கள் இரட்சித்த கப்பலி லேறி
ஏகாந்த மானதொரு கடலிலே தள்ளி
அந்தரமான வெளியரு ளாநந்தந் தானான
வெள்ளத்தி லேலேலோ அழுந்துதையா கப்பல்.—ஏலேலோ ஏலேலோ.

ஏலேலோ ஏகாதம் சர்வாதம்
பிரஹ்மாதம் ஏலேலோ ஏலலிலோ.

† நாசிகாந்தம், நாசிமத்தியம், நாசிகா மூலம் அல்லது புருவத்தின் அடி, நடு, நுனி, ஆகியமூன்றும் ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி என்கிற மூன்றணைகள் (ஆவரணத்தடைகள்) இருக்கு மிடமாம்.

* “ சாயச் சரக்கெடுத்தே † சாதிலிங்கந் தான்சேர்த்து
மாயப் பொடிகலந்து வானுழுவை நெய்யூற்றி
பொட்டென்று பொட்டு மிட்டால் புருவத் திடைநடுவே
இட்ட மருந்தாலே என் கண்ணம்மா!
இவ்வேஷ மானேனடி!”—அழுகணிசித்தர்.

1.

“அஹம்பாவக் கூத்தோ அறக் கூத்தோ?

“செட்டியார் முடுக்கோ சரக்கு முடுக்கோ! என்பது பழமொழி. அதன் பொருள் எல்லாருக்கும் தெரிந்தேயிருக்கிறது. வெள்ளையாய் எடுத்துச் சொன்னால் வீண்தோஷம் சம்பவிக்கும். ஆகையினாலே பழமொழியைப் பழமொழியாகவே யுபயோகித்தல் நலம். வியாக்கியானம் செய்தால் வில்லங்கம் வரும். இக்காலத்தில் விவாகம் நம்முன்னோர்கள் ஏற்படுத்திய ஸநாதனமான ஆத்ம லக்ஷியத்தை மேற்கொண்ட ஆத்மவிவாஹமாக வில்லாமல், ஸ்ரீரங்கம் சந்தையில் மாடுபிடி சமாசாரமாகவும், செட்டியார் சரக்குப்பிடிக்கிற தோரணையாகவுமிருக்கிற தென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். தர்மதேவதை நாலு காலாலும் ‡ நடந்து நிருத்தமிட்ட இப்புண்ய பூமியில் இப்பொழுது கலியின் (‘தேஹோஹம்’ என்கிற கொடிய பாவனா முதிர்ச்சியின்) கொடுமையினால் தர்மம் ஒடுங்கி அதனால் தர்மதேவதை கால் முடங்கிப் படுத்திருந்தாலும், ஒற்றைக் காலை மட்டும் தூக்கிவைத்துத் தான் எழுந்திருக்கும் பாவனையாக விருக்கிற சூக்ஷ்மம், உண்மையில் உணரமாட்டாதாரும் கோயில்களில் தர்ம தேவதையாகிய நந்தி ஒற்றைக் கால் தூக்கிப் படுத்திருக்கும் பாவனையாக அமைத்திருப்பதால் மூடமாய் அறிவார்கள். மூடமாய் என்றதனால் மூடபக்தியினால் என்று கொள்ளல் வேண்டும். மூடரும் பக்தியினால் உண்மையுணர்வார்கள். கற்றறிமூடரோ பக்தியுமின்றித் தானே யுணரும் விவேக சக்தியுமின்றி வாய்மதம்பேசித் தான் கெடுவதன்றி தன்னையடுத்தாரையும் கெடுவழியில் கொண்டுபோய் சிக்கவைத்து எடுத்த ஜன்மம் பாழாகச் செய்வர். அம்மம்ம! இவர்கள் கெடுமதியை நினைக்கவும் மனங் கூசுகிறது. இதுநிற்க,

தர்மதேவதை கால்கள் முடங்கிப்படுத்தும் ஒற்றைக்கால் தூக்கியெழுந்திருக்கும் பாவனையாக வமைத்திருக்கும் தந்திரம் சுளுவாய் அறியத்தக்கது. தர்மம் அழிவற்றது. அது ஓங்கும், ஒடுங்கும். ஒடுக்கம் அதிகமான போது முடங்கும். ஆனால் அதை முடக்கித்தள்ளிவிட்டோமென்று சொல்லயாராலும் ஒண்ணாது. தர்மம் ஒடுங்கி அதர்மம் மேலிடும்போதெல்லாம் நான் அவதாரமாகி அதர்மத்தையடக்கித்தர்மத்தை நிலைநாட்டுகிறேன் என்று பகவான் கீதையில் அர்ச்சுனனுக்குபதேசித்த அபயவாக்காம் அவ்யக்த மந்திரத்தின் தந்திரமே (வியக்தலக்ஷணமே) நந்தியின் திருவுருவமைப்பு. இத்திருமயிலையில் ஐந்தாம் நாள் ரிஷபவாஹனாரூடராய் சேவைகொடுப்பதின் விசேஷமும், அச்சேவையினுள்ள மஹிமையும் இதுவே. தர்மதேவதை நாலுகாலாலும் நின்று நிருத்தம் செய்யும்போது பகவானுடைய காணற்கரிய காட்சி ரிஷபதேவர்மூலமாய் எல்லாருக்கும் எளிதில் கிடைக்கிறது. ரிஷபவாஹனம் வாயிலிரையெடுத்தபடியே பகவானுடைய தரிசன பூரணத்தில் வாயசையாது கருவிகரணங்களெல்லாம்

* சாயச்சரக்கு - விஷயவாசனை முதிர்ந்த திரிகுணாத்மக ஸ்வரூப சங்கல்பவிருத்தி.

† சாதிலிங்கம் - சிவசத்தியருள்: “சாதியென்ற சத்திசிவ மருள்தன்னாலே யென்ற” சுப்பிரமணியர் ஞானம்” போதிக்கும் சித்தர் வாக்காலு மறிந்துகொள்க. சாதி லிங்கமென்பது ரஸகந்தக் கலப்பான ஒரு சரக்குமாம்,

‡ தர்மார்த்த காமமோக்ஷம், அதாவது அறம் பொருளின்பம் வீடு இவைநான்கும் நாலுகால்களாம்.



அசைவற்றுப்போக, அத்தரிசனத்தி லீடுபட்டு நிற்கிற பாவனை, வெள்ளி ரிஷபவாஹனத்தைக் கண்ணுற்றோர் உள்ளத்தில் தானாகப்படும்.

தர்மம் ஒடுங்கின காலத்தில் அது நசித்துப்போகாது பின்னும் எழும்பும் கிளர்ச்சியுடையதென்பது தர்மத்தின்ஸ்வபாவம். அது நந்திதேவர் பகவானையே கண்ணிமையாது பார்த்துக்கொண்டிருப்பது போல், பகவானையே சிந்தித்துக்கொண்டிருப்பார் உள்ளத்தில் பிறர்தூண்டுதலின்றி தானாயுதிக்கும் உள்ளக்கிளர்ச்சியாகவிருந்து விளங்கும். அந்த உள்ளக்கிளர்ச்சி காசு பணம், பேர் புகழ், கீர்த்தி அபகீர்த்தி, ஸ்வபநலம் பிறநலம் முதலான துவந்துவ(பேத)பாவனையினால் பாதிக்கப்படாதது. தர்மம் ஒன்றே லக்ஷியமாகி (ஏகபாவமாய்)அதில் மனம்போவ தமைந்த புத்தியுள்ளதாய், தேஹோஹம் என்கிறபாவனையற்றதாய், அபார சக்தியுள்ளதாய் இயங்கி விளங்கும். “யாரானு மென்னை யமட்டவொண்ணாதினி, சீரார் பிரான்வந் தென்சிந்தை புகுந்தனன்” என்னும் திருமூலர்வாக்கு தர்மிஷ்டர் ஒருவருக்கே பொருந்தும். மற்றோர் அதன் மர்மத்தையறியார். அதன்சக்தியையு மறியார். அந்த தர்மிஷ்டர் உள்ளத்திலே உதயாஸ்தமனமின்றிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் உண்மைப்பிரகாசத்தையும் உணரார். “ஏன் உணரார்?” எனில்“ஊனர்களானபடியினாலே!”அவர்களது மூடமான தேஹோஹபாவனையில் உள்ளன்புக்கிடமில்லையாதலால், அறிவிலாய்ந் தமர்தலாம் சக்தியின்றி “ பரிந்து பலபேசுவர் பாரைச் சீர்திருத் தென்பர், அறிந்தறிந் துணரவோ ஆர்வமுமில்லை யென்பர், அரிதரிது கொடுமையிது! அநியாயமிது வென்பாரே!”

அவர்களுடைய ‘விருதாவார்த்தை’யான இப்பேச்சுகளைத் தள்ளினாலோ, “ அகம்பாவக் கூத்து ” இஹம்பாவம் (இந்தலோகமேசதமென்கிற லோகாயதமதம்) நிறைந்து ஆடுவர். அந்த அஹம்பாவக்கூத்தைக் கண்ணிருந்து கண்டோர், அதை நன்றாக வரைந்திருக்கிறார்.

“ என்பாரே யவர் எல்லா மறிந்தவர்போல்
வன்பேச்சுப்பேசுவர் வான்மேற் பழிபோட்
டுன்பேச்சுக்கேளே னுண்மையுமுணரவல்லேன்
என்பேச்சுக் கேட்டேநீ யிவ்வுலகை யிரக்ஷியென்
[பார். ”—‘Vanity Fair’.

அகம்பாவக்கூத்தாடி அகச்செருக்கு மேற்கொண்டு அஹமுகப்பார்வையற்று உளக்கண் குருடாகி உலகையெல்லாம். தன் வழிப்படுத்தப் பார்ப்பார். “குருடனும் குருடனும் குருட்டாட்டமாடிக் குழியில் விழுந்தற்றே ” யென்ற திருமந்திரத்துக்கிலக்காக இவர்கள் தானுங்கெட்டுத் தன்னையடுத்தாரையும் கெடுவழிகாட்டிக் கெடச்செய்வர். இவ்வளவும் தத்துவார்த்தம். தத்துவஞானமில்லாதார் “எல்லாந்தெரிந்தவர் போல்” “ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது” என்று குதர்க்கவாதம்பேசுவர். இப்பேர்ப்பட்டவர்கள் வாயை அடக்குவது அசாத்தியமாயினும், இவர்கள் “அகச்செருக்கு” அதாவது “கொட்டம்” அடங்க, சாதனவழிபற்றிச்சாதித்தோரான சித்தர்கள் “ கடுகைத்துளைத்தெழு கடலையடைத்த” வாறு, இவர்களுடைய அசட்டுப் பேச்சில் ஆத்மார்த்தமான வுண்மை பொருந்தப் பலவாறு பாடியிருக்கிறார்கள். “ஸர்வம் பிரஹ்மமயம்” என்ப துண்மையானால், அகப்பேய்பிடித்த அசடர்கள்மொழியில்மட்டும் அந்தப்ப்ரஹ்மம் இல்லாமற் போய்விடுமோ? போகாது! ஆகவே அகச்செருக்குற்றவர் படும் பாட்டையெல்லாம் ஸ்வானுபவத்தாலே யுணர்த்துவான் அகப்பேய்ச்சித்தர் என்பவர் அகப்பேய்ப் பாட்டுப் பாடியிருக்கிறார். ஸ்வயபுத்தியுமில்லாது, சொல்வார்பேச்சையும் இதாஹிதமறிந் துணருவதற்கு வேண்டிய விவேகமில்லாது, சிறு குழந்தை பிடிவாதம் செய்து தான் பிடித்தபிடியைநிறைவேற்றிக்கொள்ள அழுகையன்றி வேறுசாதனமறியாது, அழுகையையே அணியாகப் பூண்டு விளங்குவதுபோலுள்ள கோழைமனத்தர்கள் குறை நிறையைக்குறிப்பிட்டுக்காட்டுவான் ஒருவர் அழுகணிச்சித்தராய் முன் வந்து “ஞானசட்சுஸ்” என்றுசொல்லும்

“ ஞானக்கண்ணையே ” குறியாகக்கொண்டு ‘‘என் கண்ணம்மா!’’வென்று சொல்லிப் பிரலாபித்திருக்கிறார். அவருடைய பாட்டில் ஒன்றுதான், இதன் முகப்பில் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

---

2.

“ கலியாணக்கூத்தோ, கலிக்கூத்தோ? ”

விவேகசிந்தாமணியை வாசிப்போர் எல்லாரும் 1909-ம் வருஷம் பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் மாதங்களின் விவேகசிந்தாமணி சஞ்சிகைகளில் ‘மாப்பிள்ளைதேடல் அல்லது காணாமற்போன கட்டழகன்’ என்ற மகுடஞ்சூட்டி ஸ்ரீஸத்யானந்தசாந்தசர்மா எழுதிய மூன்று விஷயங்களையும் நன்றாக வாசித்து மனதில்வைத்திருப்பார்களென்று எண்ணுகிறோம். அதில் ‘‘மாப்பிள்ளையென்றால் என்ன?’’ என்று துவக்கி, உண்மையில் உள்ளபடி இலக்ஷியம் கண்டதற்கு இலக்ஷணம் கூறியிருந்தார். அவர் யோகியானதால் பொறி புலன்களையடக்கித் தன் ஜ்யோதிர்மனதினாலேயே ‘‘யன்மனஸ்ஸிருஷ்டிஸ்திதிவ்யஸநகர்மக்ருத்’’ என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்வாக்கியப்படி, தான்தேடிய மாப்பிள்ளையைத்தன்னுள் தானே சிருஷ்டித்து வளர்த்து லக்ஷணங்கூறிப்பின்னர் லக்ஷியத்தில் தானே அந்த மாப்பிள்ளையை ஒடுக்கிவிட்டார். கலிமிகுந்த இக்காலத்தில் லக்ஷியார்த்தமான மாப்பிள்ளை (Ideal Bridegroom) கிடைப்பது லகுவாயிருக்கிறதா? எங்குபோனாலும் ‘‘எதிர்ஜாமீன்’’ என்ன கொடுக்கிறாய் என்பது வழக்கமாயிருக்கிறது. குலம், கோத்திரம், குணம், மணம் எல்லாம் அப்புறம்தான். ‘எதிர்ஜாமீன்’ என்றால் முதல் ஜாமீனுக்கு எதிராக ஏதோ ஜாமீன்கேட்கிறார்கள் என்று வாச்சியார்த்தம் பண்ணிக்கொண்டு, ‘‘ஸ்வாமி! எதிர்ஜாமீன் கேட்கிறீர்களே, உங்களிடத்தில் ஜாமீன்கொடுக்க என்ன இருக்கிற’’தென்றால் ‘பிள்ளையிருக்கிறது’ என்கிறார்கள். அப்படியென்றால் அவர்கள் உள்ளக்கருத்தையுள்ளபடி பச்சையாய்ச்சொல்ல, ‘‘உங்களிடத்தில் பெண்ணிருக்கிறது, எங்கள் பிள்ளையாண்டானிடத்தில் கோவணமிருக்கிறது. இன்னம் என்னவேண்டும்?’’ என்று அர்த்தமாகும். கோவணத்துக்குக் காசுகொடுத்துச் சிற்றின்பம் நாடினால் அதைத்தான் பண்டைக்காலத்து மநுவும் மற்ற முட்டாள்களும் வியபிசாரம் என்று சொல்லியெழுதிவைத்துவிட்டார்கள். என் பெண்ணை நான் இல்லறம் நடத்தச் செய்ய எண்ணமேயல்லாமல், வியாபிசாரஞ்செய்யத் தயார்செய்ய வேண்டி நான் வரன் கேட்கவில்லையென்றால், ஆ! அப்படியா! அது தான்தர்மம்! ‘இல்லறமல்லது நல்லறமல்ல’ வென்று சொல்லியிருக்கிறதோ இல்லையோ! எங்கப்பா இந்திரனாயிருந்தார், அவரப்பா சந்திரனாயிருந்தார். எங்கள் சந்ததியே தெய்வீகமன்றி மானுஷீக மில்லை!’’ யென்கிறார்கள்.

இவர்கள் குலம் கோத்திரம் தெய்வீகமாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி! ‘‘மானுஷீக மில்லை’’ யென்பதுமட்டும் சத்தியம்! இது பின்னால்தான் தெரியவரும். தத்காலத்துக்கு வாய்தவறி வந்ததோர் உண்மையானதால், அதைப் பொய்யோடு பொய்யாகப் பொருந்த வைத்துத் தப்பர்த்தம் செய்துகொள்ள வேண்டியதுதான். எப்படியோ கெட்டலைந்து காணாத காட்சி யெல்லாம் கண்டு, கேளாத வார்த்தையெல்லாம் கேட்டு, மூன்று நான்கு வருஷம் ‘‘காணாமற் போன கட்டழகனை’’த் தேடியலையும்போது, கலியாண தரகர்களான வைதிகப் பாவிகள் இவனை மோப்பம்பிடித்துக்கொண்டு, இவனுக்குச் சூழ்வினை வேறு செய்துவிடுகிறார்கள். இவனும் அலைந்தலைந்து அலுத்துச் சலித்துப் போனான். தேங்காய்த் துண்டத்துக் காசைப் பட்ட எலி யல்லவாதலால், புறைவைத்துப் பிடிக்க முடியாது. ‘‘மாப்பிள்ளை தேடித் தேடியலைந்து தேர்ந்தபழம் பெருச்சாளி யிது!



ஆகையால், இதைக்கூடவைத்தே பிடிக்க வேண்டும். அந்தக் கூட்டிற்குள்ளும் பழந்தோசை போட்டால் ஊசல் வேகம் அறிந்துகொண்டு பழம்பெருச்சாளி ‘‘யிது தர்மசத்திரமல்ல பெருச்சாளிக்கூடு’’ என்று தெரிந்துகொண்டுபோய்விடும். கலியாணப்படிப்பு’’பழந்தோசை போல் ஊசல் எடுத்துப் போய்விட்டது. ஆகையால் சுடச்சுட ‘கமகம’ வென்று வாசனையடிக்கும்படி நெய் சேர்த்து வார்த்த அடைசுட்டுக் கூட்டில்வைக்க வேண்டும் இதற்கும் விதியற்ற முண்டங்கள் பிண்டங் தின்றுகொண்டு எத்தனைபோ இருக்கின்றன. அவர்களைப் பற்றி இப்பொழுது விசாரமில்லை!

அப்பன்எப்படியோ உத்தியோகஞ்செய்து அரைக்காசு வைத்துவிட்டுப் போய்விட்டால் அதைக்கொண்டு கௌரவமாய்க் காலக்ஷேபம் செய்துகொண்டு கலியாணச்சந்தையில் கிராக்கி பேசும் காளைகள் ஏதோ சில விருக்கின்றன! எங்கு பார்த்தாலும் ஏகாதசி விரதமும் துவாதசிக் கட்டளையுமா யிருக்கும் இக்காலத்தில், ஏதோ தத்காலம் அன்ன வஸ்த்ரத்திற் கிருக்கிற விடமா யிருந்தால் எப்படியாவது மானமாய்ப் பிழைத்துப்போவான் என்பது பெண்ணைப் பெற்றவனுடைய எண்ணம்! ஆனால் அப்படி நினைப்பவன் தர்மிஷ்டனாயிருப்பானாதலால், அவன் எதிர்ஜாமீன்’’ கொடுக்கும் வியபிசார விவாஹத்திற் குடன்படான். ஆகவே பெருமைக்காகவோ பேருக்காகவோ ஊசலெடுத்துப்போன ‘‘ கலியாணப் படிப்பு ’’க்குப் பதிலாக, ‘‘கலியாண உத்தியோகம்’’ என்று ஒன்று புதிதாய்க் கிளம்பி யிருக்கிறது. ‘‘ஞானியின் பிள்ளை பைத்தியக்காரன்’’ என்றொரு பழமொழி யுண்டு. இது எப்படி யானாலும் ‘‘உத்தியோகஸ்தன் பிள்ளை தத்தாரி’’ யென்பது மட்டும் நிச்சயம். தத்தாரி யென்றால் காசு பண மில்லையென் றருத்த மில்லை. காசு பணமிருப்பதனால்தான் பணத்தை நம்பிக் குணத்தை யிழந்த குதர்க்க மார்த்தாண்டனாய்விடுகிறான்! ஐயோ பாவம்! இவர்கள் பால்யத்தையும் பின்வரும் கதியையும் நினைக்கநினைக்கப் பரிதாபம் மேலிடுகிறது!

‘‘காணாமற்போன கட்டழகனை’’க் கண்டுபிடித்தாய் விட்டது! உண்மையான உள்ளழகு பொருந்தியவனா யிருந்தால் அவன் விலையில்லா மாணிக்கம். லக்ஷ்மீநாராயணனைச் செய்யும் பூஜைக்குகந்தவனான சற்பாத்திர னாய்விடுகிறான். அப்படிப்பட்ட மாப்பிள்ளை பெண்ணின் பூர்வஜன்ம பூஜாபலனாலேயே கிடைக்க வேண்டும். மற்றப்படி குடுமி யழகும் கோவணக்கட்டழகும் மட்டும் பொருந்தியமாப்பிள்ளை யெல்லாம் மண்ணாங்கட்டி மாப்பிள்ளைதான். தாலி கட்டி யாகிறமட்டும் மாப்பிள்ளையின் குடுமி யழகும், கலியாண க்ஷவரம் செய்துகொண்டு காசியாத்திரை போவதற்காக மைதீட்டிய கண்களும், பொட்டிட்டநெற்றியும், மாப்பிளைக் கோலமும் மௌனவிரதம் பூண்ட வாயுமாய், பிள்ளை பார்ப்பதற் கழகாய்த்தா னிருக்கிறான். இந்த மேல்மினுக்கெல்லாம் தாலிகட்டுகிற மட்டும் தான். அப்புறம் மினுக்குத் தளுக்கெல்லாம் போய் குணக்குப்பிணக்கெல்லாம் கிளம்புகிறது! மனக்குரங்கு சும்மா விருக்காமல் வானரசேஷ்டையெல்லாம் செய்கிறது! ‘‘சும்மா விருக்கிறையா சொரூபத்தைக்காட்டட்டுமா?’’ என்று மாப்பிள்ளை உறுமிப் பயமுறுத்துகிறார். வெற்றிலை பாக்குச் சமாசாரம் முதல் நலங்கு விளையாட்டுச், சீர்சினத்தி வரையில் எல்லாம்மாப்பிள்ளையின் வானரசேஷ்டைக்குப்பயந்து கொண்டுதான் பெண்ணைப் பெற்றவர்கள் யோசித்து நடக்கவேண்டும். அத்தை, பாட்டி, கல்யாணத்துக்கு வந்தவர் போனவர், கெட்டவர், கழிந்தவர் நட்டவர், இட்டவர் எல்லாருக்கும் மாப்பிள்ளைமுகத்தைப் பார்த்துக்கொண்டுதான் மரியாதை செய்யவேண்டும்.

கலியாணத்திற் கூடவந்தது கழுதையானாலும், மாப்பிள்ளை சம்பந்திகளோடு அதுவும் கலந்து விட்டால், அதற்கும் ஸர்வோபசாரங்

களும் செய்து தீரவேண்டும். உபசாரசந்தோஷத்தில் அது தன் குரலைக்காட்டி விட்டால் மாப்பிள்ளை முகத்துக்காக அதன் காலில் விழுந்து "கத்தாதேயப்பா வுன்காலில் விழுகிறேன்!" என்று கேட்டுக்கொள்ள வேண்டும். அத்தைபாட்டிகள், கலியாணத்துக்கு வந்த வம்பர்கள், வீணர்கள் இவர்கள் வைக்கும் சொட்டுகளுக்கெல்லாம் முதுகு கொடுத்துக் கொண்டு நிற்கவேண்டும்! கலியாணம் ஐந்து நாளும் எப்படியோ படாத பாடும்பட்டுக் கெடாத கேடும் கெட்டு சம்பந்திகளை யூருக்கு அனுப்பியாய்விட்டது! "அப்பா!" என்று ஒரு வாரம் கலியாணம்செய்த சிரமந்தீர எல்லாரையும் மறந்துஇளைப்பாற இடம் கொடார்கள். மாப்பிள்ளைக்குத் தாலிகட்டியானவுடனே பெண்ணின் அழகு தனதுமன்மதரூபத்திற்கு இசைந்ததாக வில்லையென்று நன்றாகப்பட்டுவிடுகிறது. அவன் நினைத்துக்கொண்ட ரதி இதற்குமுன் சொப்பனத்தில் மட்டும் தோன்றியவள், இப்பொழுது ஜாக்கிரத்திலும் அவன் முன் வந்து நின்று மோஹினிபோல் தன் அழகைக் காட்டி, "என்னைத்தள்ளி அந்தப்பெண்ணைத் தாலிகட்டினையே, என்னழகு அவளுக்குவருமா?" வென்று கேட்கிறாள்! மாப்பிள்ளைக்கு துக்கம் பொறுக்கமுடிகிறதில்லை! மோஹினியழகைப்பார்த்துவிட்டு, "என்னுடைய ரம்பைக்கு ஒற்றைக்கண் பொட்டை"யென்று சொன்னவன் கதையாக, எதிரே வந்த மோஹினியை ரதி யென்றேநம்பி, இந்தப்பெண்டாட்டி யெனக்கு அழகாக வில்லையென்று வீட்டிலுள்ளவர்களை யெல்லாம் வைய ஆரம்பிக்கிறான். தாயாருக்குப் பாவம்! பிள்ளையாண்டான் படும்துக்கம் பொறுக்க முடியவில்லை! அவளுடைய பெற்ற வயிறு புண்ணாகத், தானும் கூடவருந்துகிறாள்... என்ன சமாதானம் சொல்லியும் பிள்ளையாண்டானுக்கு மனது சமாதானம் ஆகவில்லை! இவன் 16-வது பிராயமுதல் 23-வது பிராயம்வரையில் கலியாணமாகாம லிருந்து வேறு இடங்களில் கலியாணமானபெண்களெல்லாரும் இந்த மன்மதன் அழகைக்கண்டால் மோஹித்துப் போயிருப்பார்களென்று மனப்பால் குடிக்கிறான்! கலியாணத்துக்குப் போய்வந்தவீடு அல்லோல கல்லோலப்படுகிறது! பிள்ளையாண்டான் தன் சன்ம மெல்லாம் பாழ்த்துப்போய்விட்டதென்கிறான். இந்தக்கஷ்டத்திற்கென்னசெய்கிறது பாவம்! பிள்ளையாண்டான் நடத்தை பார்ப்பவர்களுக்குப் பரிகாசமாயிருக்கிறது! பெற்றவளுக்கு அப்படித் தோன்றுமா? எப்படியும் "காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு" தானே! மற்றவர்களெல்லாம் பிள்ளையாண்டான் ஆறுத்துயரைப் பார்த்துப் பரிஹாஸம் செய்ய, பெற்றவள் மட்டும், பிள்ளையைப்பெற்ற வாஞ்சையால் அவனோடு அனுதாபப்பட்டு அவன் எண்ணமெல்லாம் தன்னெண்ணமாகு மளவுக்குச் சிந்தாகுலப்பட்டு வருந்துகிறாள். தாய்க்கும் பிள்ளைக்கும் மனதொத்துப் போய்விட்டது! இனி உலகம், தர்மம், உண்மை யொன்றும் அவர்களுக்கு லக்ஷியமில்லை! எப்படியாவது தாயும் பிள்ளையும் மனமொத்திருந்தால் அதுவே போதும்!

பெண்புத்தி பின்புத்தியாதலால், பிள்ளையைச் சமாதானப்படுத்தவேண்டி அவன் ஆலோசனைக்கெல்லாம், உடந்தையாயிருந்து அவனபிப்பிராயங்களெல்லாம் தன்னதாகப் பாவிக்கிறாள். வேறுகலியாணம் செய்யவோ விதி (சட்டம்)இல்லை. நடந்ததைத் தள்ளவோ நிமித்தம் (காரணம்) இல்லை. ஆகவே பெண்புத்திக்குச் சூழ்வினைசகஜமாய் வருமாதலால், கைகேயியைப்போல் ஒரு யுக்திசெய்து தீர்மானம் கட்டுகிறாள். எல்லாரும் முன்னதாகப்பார்த்து மனம்ஒப்பிச் செய்த விவாஹத்தைத் தள்ளுவது லகுவல்ல! தள்ளினால் வேறுவிவாகம் செய்வது லகுவில் சாத்தியமல்ல; சாத்தியமானாலும் யுக்தமல்ல! ஆகையால் கைகேயிபுத்தியைக்கொண்டு எல்லாருங் கூடிப் பின்வருகிறபடி யோசனைசெய்து முடிவு கட்டிவிடுகிறார்கள்:—

"கொண்டவிடம் குலமும் கோத்திரமும் பொருந்தியதாயிருப்பதால், கிணத்துச் சலத்தை வெள்ளங்கொண்டு போகாது என்பது நிச்சயம்! தாலிகட்டின பெண்ணை ஒன்றும் செய்யமாட்டார்கள். தாம் பிள்ளைவீட்டுக்காராதலால், தமக்கு வேறுபெண் தேடுவதாகப் பாசாங்கு செய்வதில் லஜ்ஜை மானம் ஒன்றுமில்லை. ஸநாதநமான ஆத்மவிவாஹத்தை அக்நிசாக்ஷியாகவும் பிராஹ்மணாள் சாக்ஷியாகவும் ஆயிரம் சத்தியம்செய்துகொடுத்துவிட்டு, ஆயிரக் கணக்காகப் பணத்தையும் செலவு செய்து ஊரான் நடத்த, அவன்பெண்ணை தர்மபத்நியாய்க் கைநீட்டி க்ரஹித்துக் கொண்டபின் அதர்மம் செய்யத் துணிவானானால், அவன் துணிச்சலைக் கேடுகெட்டதோர் கலியுலகம் சிலாகித்துக் கொண்டாடினாலும் கொண்டாடா விட்டாலும், அவனைப் பாதகனென்றும், பஹிஷ்டனென்றும் தள்ளிவைப்பதில்லை. ஆகையால், 'கெடுவான் கேடுநினைப்பான்' என்பதை யுன்னாமல், வியவஸ்தை கெட்டுத் தான் ஆடினதே கூத்தாக ஆடலாம் என்பது இவர்களுடைய துராலோசனையின் முடிவு.

3

## மாப்பிள்ளை முடுக்கோ மணமுடுக்கோ?

கலியாணம் ஆனபின் இரு குடும்பமும் நெருங்கிப் பழகுவதற்கு ஆஸ்பதமாகவும் போக்குவரத்துக்கு இடமாகவு மிருக்கும்படி வைதிகமாகவும் லௌகிகவும் பெரியோர் பல சம்பிரதாயங்களை யேற்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆடி யென்றும், ஆறுமாசமென்றும், தீபாவளி யென்றும், ஸ்தாலீபாக மென்றும், சோபன மென்றும் அனேக சுப சோபனாதிகளிருக்கின்றன. இவையெல்லாம் சம்பந்திகள் மனமொத்துக்கலந்து ஒத்த உறவினராகுவதற்குச் சாதனங்களாக அமைந்தன. இதையெல்லாம் தூர் வினியோகப்படுத்தி மாப்பிள்ளையைக் கிண்டிவிட்டுக் காசுபறிப்பதற்கான சமயங்களாகச் செய்து மனஸ்தாபத்தை விருத்தி செய்துகொண்டு, கடைசியில் மனஸ்தாபம் காரணமாக வேறு கலியாணம் செய்து விடுவதாக பயமுறுத்தி பெண்ணைப்பெற்றவளை ஓட்டாண்டியாக்கி விட்டுக், கடைசியில் பெண்ணுக்குப் பிறந்தஹமும் பாழாகிப் புகலிடமுமில்லாமல் சந்தியில் நிற்கும்படியான ஸ்திதியில் எவனாவது போக்குச்சாக்குக் கெட்டவன் பெண்ணைக்கொடுக்கவந்தால், வீண்வர்மத்தாலும், காமத்தாலும், கர்வம் தலைக்கேறி வேறு "விவாஹம்" செய்து கொண்டு தர்மாதர்மமென்கிற வியவஸ்தை கெட்டு, ஆயிரங்காலத்துப் பயிரான விவாஹதர்மத்தை யழித்துத் தானுமழிந்து, தன் குலமுமழிந்து, நலமுமழிந்து சாதிமதாசாரங்களு மழிந்து, ஊருக்குக் கேடாய் உலகுக்குப் பாரமாய், காமவெறியிற் பிறந்த குழந்தைகள் சிலவற்றை அநாதைகளாகவும் அயோக்கியர்களாகவும் விட்டு, பொய், பிறட்டுப், பித்தலாட்டங்களால் வயிற்றை வளர்த்துக்கொண்டு பேமானிகளாய்க் காலங்கழிக்கும் கசடர்கள் எத்தனையோ பேர்கள்! இவர்கள் நம்தேசத்தைக் கெடுக்கவந்த நாசகாலர்களே யன்றி, "மானுஷீகத் தன்மை" யென்பது இவர்களிடம் மருந்துக்கு மில்லை!

இவர்களுக்கு அனுகுணமாகப் புத்தி கெட்ட பெண்பாலர் தர்மாதர்ம மின்னதென்றுணராமல் தம் மௌட்டியத்தால் ஹடம் சாதிக்கிறார்கள். நமக்குள் விவாஹம் என்பது காமத்தை வளர்ப்பதற்கில்லை: காமத்தை விடுவதற்கே யென்று இவர்கள் உணர்வதில்லை. உணர்த்தினும் கேட்பதில்லை. மாப்பிள்ளை பெண்டாட்டி வேண்டாமென்று முறுக்கின காலமெல்லாம் பொறுத்திருந்[illegible]ன், "ஐயோ! 'இச்சாசக்தி உமா[illegible]' என்[illegible] போல், அன்பிற்பிறந்[illegible] அன்பில் வளர்[illegible] அன்புருவேயாகி, த[illegible]து 'இச்சாசக்தி' [illegible]

போதும் உமாகுமாரியைப் போதும் வளர்ந்த பெண்ணை வேண்டாவெறுப்பா யிருப்பவன் வாசலில் கொண்டுபோய் எப்படி விடுகிறதென்று மனமொடுங்கி எப்படியும் நம் மானத்தை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்!" என்கிற உறுதியோ டிருக்கையில், கெடுமதியால் கேடுகெட்டு துராலோசனை செய்து சங்கற்பித்த கபடநாடகம், கடைசியில் தாங்கள் நினைத்ததுபோல் நடந்தேறாமை கண்டு, மானங் கெட்டு, மரியாதை கெட்டு, லஜ்ஜை கெட்டுத் தான்செய்ததை யெல்லாம் ஒளித்துக் காட்டிப் பொய்சொல்லிப் பலரிடத்தும் சொல்லாத வார்த்தைகளைச் சொல்லிப் போய் யனுதாபம் சம்பாதித்துக் கொண்டு, "என் பெண்டாட்டியை விடுகிறையா இல்லையா!" வென்று கலைக்காரனைப்போல் கக்ஷி கட்டிக் கொண்டு, ஊரிலுள்ளவர்களை யெல்லாம் உடந்தையாய்ச் சேர்த்துக் கொண்டு வீண்கலகம் செய்கிறான்! ஐயோபாவம்! இவன் புத்திபோன போக்கை யென்னென்றுசொல்கிறது!

"பனங்காட்டுநரி சலசலப்புக் கஞ்சாது!" என்றொரு பழமொழி யுண்டு. இப்பேர்ப்பட்ட யோக்கியதைகள் நிறைந்த விடத்தில் சம்பந்தம் செய்து, படாதபாடும் பட்டுக் கெடாதபடி யெல்லாம் கெட்டு, இந்தப் பேமானிகளுக்குச் சரியான சம்பந்தியாய் வெளியில் வந்து தலை நிமிர்ந்து நிற்க வெட்கப்பட்டுக்கொண் டிருக்கிறவன் இவர்கள் மனத்தையும் குணத்தையு முள்ளபடி யறிந்தவனானால், காய்ந்த பனவோலைகள் காற்றில் சலசலவென்று சப்திப்பதினால், ஏதோ அபாயம் வந்து விட்டதென்று நினைப்பானா? தர்மமேதலைகாக்கு மென்கிற திடசித்தத்தோடு இந்த மானிடப்பதர் காற்றில் அடிபட்டு ஓடுகிறபடியெல்லாம் ஓடட்டும்! சத்துள்ள தானியம் எப்படியும் சமையலுக்கே யாகும்! குப்பையிற் கிடந்தாலுங் குந்துமணி நிறங் கெடாது! என்றற்றொடக்கத்து வாக்கியங்களில் பக்தி சிரத்தையோடு லக்ஷியம் வைத்தவனாய் இவன் செய்யும் அட்டஹாஸங்களுக்கெல்லாம் ஆளாயிருந்தும், நிலை குலைந்து மனந்தளர்ந்து போகான்.

அவ்வளவு முன்யோசனையும் தைரியமுமில்லாதவர்கள், முன்னுக்குப் பயந்து பின்னுக்குத் துணிந்து இப்படிப்பட்ட பேமானிகளின் பேய்க் கூத்தை யடக்குவான் தீரமாய் நடந்துகொள்வார்கள். எப்படியானாலும் தர்மபத்னியென்று கைதொட்ட புருஷன் ஸஹதர்மிணியான பத்நியைக் கொள்வன கொடுப்பனவாம் சரக்காக மதித்து "என் சரக்கை யென்னிடம் ஒப்புவி" யென்று கேட்பானாகில் அந்த மதியிலியைப்போல நிர்மூடன் உலகத்தி லில்லை.

"மாப்பிள்ளை முடுக்கோ, மணமுடுக்கோ!" வென்று சொல்லும்படி, இது மாப்பிள்ளையின் குணவிசேஷத்தால் செய்யும் முடுக்கோ அல்லது மணமுடுக்கோ?

இது விஷயமாய் ஒரு கதையுண்டு. ஒரு குரங்கு மனுஷரூபம்தரித்து, ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டது. பின்னர், தான் மணவினைசெய்து கொண்ட முடுக்கினால், அப்பெண்ணைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போகவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தது; தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்ட பெண்ணை அப்படியேவிட, அவளைக்காட்டு வழியே அழைத்துக்கொண்டு போயிற்று. அப்பெண் கால்நோவுற்றுக் களையுற்றுப்பசியுங்களையும் மேலிட்டு இனி நடக்கச்சக்தியில்லையேயென்று சொன்ன போதெல்லாம் 'சும்மாவிருக்கிறையா சொரூபத்தைக்காட்டட்டுமா?' வென்று பயமுறுத்தும், அந்தப்பேதைப்பெண் பயந்து பின்னும் பின்னும் பொறுத்து, வழிநடந்து நடுக்காட்டிற்போயும், வீடுவாசல் ஊர்பேர் ஒன்றுந்தெரியாமல் தன்னை மருட்டியுருட்டிக் கொண்டேபோன கணவனைப்பார்த்துக் கடைசியில் 'உமது சொரூபத்தைத்தான் காட்டுமே பார்ப்போம்' என்று சொல்ல, அது மானுடவேடம் மாறித் தன்ஸ்வரூபமான குரங்கு ரூபமெடுத்



துக்கொண்டு மரக்கிளைகளின்மேல் பாய்ந்து ஓடி விட்டதாகச் சொல்லும் ஓர் தத்துவஸாரம் நிறைந்தகதையுண்டு. அதுபோலக்குணக்கேடன் ஒருவன் நற்குடிப்பிறந்த குலப்பெண்ணைப் பார்த்து "நான் தான் உன்னைத்தாலிகட்டிவிட்டேன்! நீதான் தர்மத்திற்குக் கட்டுப்பட்டுவிட்டாய்! இனி நீ யென்வசம் நன்றாய்ச்சிக்கொண்டவளானாய்!" என்று சொல்லிக் காட்டுவானானால் அது குரங்கு மாப்பிள்ளை செய்து காட்டிய மணமுடுக்கை யொக்கும்!

அந்தக் குரங்கின் கதை யென்னாயிற்றென்று, அத்தை, பாட்டி, கிழவிகளுக்கும், சிறு பெண்களுக்குங்கூட நன்றாகத்தெரியும். அதர்மம் காலபலத்தால் சிறிது காலத்துக்கு தர்மத்தைப் பெண்டு கொண்டு தனக்குக் கீழ்ப்படும் படியாளும் பாக்கியம் பெற்றாலும், கடைசியில் தர்மமே தலையெடுக்கும்! அதர்மம் அதன் குலத்தோடு நிர்மூலமாயழிந்தேபோகும்! என்பது அக்கதையின் உண்மைப்போதமாம்.

மனமாகிய குரங்கு விஷயப்பற்றென்கிற காட்டைவிட்டு, விஷய நிவிர்த்தி யென்கிற கருணைவடிவாம் மானிடவுருவம் தரித்து, தர்மம் என்கிற "கருணையங் கடலாம்" பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு, அப்பெண்ணை அதர்மம் நிறைந்த விஷயப்பற்றான காட்டில் இட்டுக்கொண்டுபோக, அப்பெண் விஷயப்பற்றில் நாட்டம் வைக்காமல் தானே தர்மஸம்வர்த்தனியாயிருந்து விஷயப்பற்றில் நுழைந்துவெகுதூரம் தனது விரக்தி வைராக்கியத்தால் சமாளித்தும், கடைசியில் சோர்வுற்றபோது தன்னைத்தாலிகட்டிய(அதாவதுஇங்கே தர்ம வேஷம்போட்டுக்கைப்பற்றிய) கணவன் மருட்டல் உருட்டலுக்குப் பயப்படாதவளாய் அவன்சொரூபத்தைக்காட்டச்சொல்ல, "காமத்தோடு கூடிய மனமாம் குரங்கு" தான் விஷயத்தில் பற்றுண்டுழலுவதைக்காட்ட, அவள் அது சகியாளாகி மூர்ச்சித்துப்போகப் பொறுமை யுருக்கொண்டு தர்மத்தையே சிந்தித்து வந்த அந்தப் பெண்ணை அவளுடன் பிறந்த ஆண்பிள்ளையான தீரம் என்னும் சகோதரன் வந்து விஷயபற்றுள்ள மனமாங் குரங்கையும் அதிலிருந் துண்டான பாப கர்மங்களாகியசந்ததியையும் நாசம்செய்து தன் வீரச்செய்கையால் அவளை (அந்தத் தர்மப்பெண்ணை) அதர்மத்தினின்று விடுவித்துப் பிறந்தகமாம் (தர்மஸ்வரூப)வீடுவிளங்க அவளை யிட்டுக்கொண்டு போய், வஞ்சகநெஞ்சோடு அங்கும் வந்த காமசங்கல்ப மனதாகிய குரங்குரூப மாப்பிள்ளையைத் தியான குஹை யென்கிற கிணற்றில் தள்ளி தர்மஸ்வரூபிணியான பெண்ணை முக்தி வீட்டில் நிலையாக இருக்கச் செய்தான். கிணற்றில் விழுந்த மாப்பிள்ளை பிழைத்தெழுந்து விவேகமுற்றுத் தானும் ஆத்ம ஸ்வரூபியேயானாலும், "சாயச் சாக்கெடுத்தே"— திரிகுணாத்மகனாகி ரஜோ குணத்தி லீடுபட்டுள்ள விஷயவாசனை முதிர்ச்சியில், சிவசத்தியருளாம் "சாதிலிங்கம்" சேர்த்து, அணுத் திரளாய் விளங்கும் ஆணவமல மாயை சேர, அஃதை தியானஞ்செய்து தைலதாரைபோல் ஆணவமலத்தியானம் முதிர்ந்து, "புருவத்திடை நடுவே பொட்டென்று பொட்டு மிட்டால்"— தியேயாகாரமான ஆணவ மலத்தைப் புருவமத்தியில் மைபாகக்கூட்டி, ஆவரண திலகமாகவே லலாடத்தில் தரித்ததனாலே, புருவமத்தியமான ஆஜ்ஞா சக்ரத்தில் அஞ்ஞான மருந்துசேர்ந்து(ஆத்ம பூரண பாவம் சிறிது கலங்கினதினாலே) ஞானப்பெண்ணாகிய "என்கண்ணம்மா!" நான் "இவ்வேஷமானேனடி!"—இப்படிக் குரங்கு வேஷமெடுத்து உன்னையும் படுத்தி, நானும் படாதபாடெல்லாம் பட்டுக், கடைசியில் கிணற்றில் வீழ்த்தப்பட்டுப் (பிரகிருதிவசத்தனாய்த் தியானாகாசகுஹையில் விழுந்து) பிழைத்ததீறாக வுள்ள இந்த வேஷமெல்லாம் தரிக்கும்படியானேனடி! (ஆத்ம) புத்தி கெட்டுக் குரங்காய்ச் சமைந்தனக்கு இப்பொழுது உன்னருளாலே (ஆத்ம) புத்தி வந்தது! என்றபடி.

ஓம் காமேச பத்தமாங்கல்ய ஸூத்ரசோபித கந்தராயநமஃ

# * Root-Cure.

## The Sixteen-fold Remedy for the Sorrows of Life.

## ஆதி வைத்தியம்.

### "சோக நிவாரண ஷோடசீ" மாத்ரை.

[இந்த ஷோடசீ மாத்ரையானது ஸ்ரீபுரநகரி லுள்ள மலை ப்ரதேசங்களின் பேருப்ரஷ்டங்களில் அகப்படும். பன்னிரு மூலிகைகளைக் கொண்டு செய்து, புருஷார்த்தங்களான தர்மார்த்த காம மோக்ஷ மென்கிற (அறம் பொருள் இன்பம் வீடு என்கிற நாற்பால்) நல்வழி நான்கின் சொரூபசாரம் சேர்த் தரைத்துச் சிதக்னி தூண்ட மென்னும் உத்கிருஷ்டமான உலையில் வைத்து ஏகரஸமாக்கிச் செய்ததோர் புநிதமாத்ரை (அளவு). யோக ஸம்யமத்தால் சக்தியாநுசாரம்உட்கொள்ள, உலகப்பேற்றில் பெரிதாம் 'மக்கட்பேறு' பெற்றுப் புநிதரான தம்பதிகள் பூர்வகர்ம வாசனையால் அவர்களை விட்டுப் பிரியும்போ துண்டாகும் மாசோகம் முதலான சோகமோகங்களைப் போக்கிச் சோக மோக நிவாரணத்தா லுண்டாகும் சொரூபாநந்த மென்னும் சோராத முத்திச் சுகமளிக்கும்.

ஸ்ரீபுரமென்பது வினைப்பயனின் சொரூபமாய் விளங்கும் 'விசுவகர்மா', சோகமோகங்களின் சாரமாய் விளங்கும் 'மயன்' என்கிற தேவாசுரத் தச்சர்க ளிருவரும் அவர்களுடைய கல்பசில்ப வித்வத்தினாலே "அறிவான் அறிவெனும்" ஸ்ரீதேவிக்கு வாசஸ்தாநமாக விருக்கும்படி நிர்மித்ததோர் அத்யற்புத புநித பட்டணமாம். அது நித்தியஞானமென்கிற சமுத்திரமத்தியிலே ஷோடச (16) க்ஷேத்திரங்களுக்கிடையே ஷோடச (16) சங்கியையாலே யேற்பட்டது. இந்தப் பதினாறில் ஏழு திரவரூப சமுத்திரங்கள் (of the nature of Emotions of Rudratman the weeping Ishta); ஒன்பது கிரிரூப பர்வதங்கள் (silent but towering Thoughts of the One Thinker). இவைகளின் உண்மையை ஸ்வரூப சித்தர்களான முத்தர்களை யடுத்துச் சிஷ்டர்களா யிருந்து குருபரம்பரை மார்க்கத்தை யனுசரித்து வசிபாவ சித்தத்தோடு கேட்டு அப்பியாச முகத்தில் ஐயந்திரிபற அனுபவித்தறிதல்வேண்டும். "தேஹோஹம்" என்கிற பாவனையோடு 'அன்னமயகோசமாம்ஆகமே யுள்ளளவும், குருவையடைந்து குருசொன்னபடி கேட்டாலே சுகமுண்டு].

---

"வீரமருந்தென்றும் விண்ணோர்மருந்தென்றும்
நாரிமருந்தென்றும் நந்தியருள் செய்தான்
ஆதிமருந்தென்றறிவா ரகலிடஞ்
சோதிமருந்திது சொல்லவொண்ணாதே."—திருமந்திரம்.

1. அறநெறிச்சொரூபசாரம். (தர்மசொரூபஸாரம்).

1. "அன்னமய கோசமா மாகமே யுள்ளளவுஞ்
சொன்படி கேட்கிற் சுகமடைவாய்!—என்னுணை
கெட்டபாழ் வாசனையைக் கிட்டாதே யாதேனு
மிட்டபடி கண்டே யுணர்."

---

* The cure that goes to the Root of Ills.



2. அசுப்வாசனை சுபவாசனைகளை அனுபவமுறையானே யுணர்த்தல்.

2. அன்றொருநாள் துஷ்டப்பேய் மனமுன்னைச் சாலவுந்தான்
பின்றொடர்ந்து கஷ்டமிகச் செய்ததுகாண்—மன்றிலாடும்,
மாயவன்றன் கூத்திதென்று மாயம்போகக் கண்டதொரு
தாயமர்பொன் திருவாசிக் கூத்தைநினை.

3. † மனோபவம், பவோபவமிரண்டையும் அனுபவமுறையானே யுணர்த்தல்.

3. பின்னொருநாள் பேதைமனம் பற்றுவைத்த பாலைதேகம்
சின்னபின்ன முறக்கண்டு சோர்வடைந்தாய்!—அந்நாளில்,
என்னைமறந் தென்னன்னை யிட்டதொரு கட்டளையை
உன்னைமறந் துன்னுள்ளே வைத்துப்பிழை.

4. வியஷ்டிபேதமெல்லாம் சமஷ்டியிலொடுங்கி யொன்றுதல் காட்டிச், சமஷ்டிபாவ லக்ஷிய முணர்த்தல்.

4. வேறொருநாள் வேதனையால் வெந்தபோ துன்தேகம்
வேறொருவன் ஆகாமையால் வெந்ததுபார்!—என்தேகம்,
உன்தேக மென்தேக மென்னுமுறு பேதமெல்லாம்
பொன்தேக மானதொன்றைப் போற்று.

5. மாயாஜால மந்திர தந்திர சூக்ஷ்ம முணர்த்தல்.

5. உள்ளத்தே யுள்ளதொரு கள்ளமுடைப் பொய்நெஞ்சம்
வெள்ளமிகுந் தோடிவரச் செய்யுமது!—கானலாறு,
கரைகடந்தே யோடிவரும் கானல்ஜலம் பரவியெங்கும்
திரைகடலா யொலிப்பதைநீ தேர்.

6. அத்தியாஸ ஆரோபயுத்தியால் மனோசிருஷ்டியுணர்த்தல்.

6. மாலையிலே தூரவுள்ள மரக்கட்டை மனுஷனும்போல்
பாலையிலே யொளிர்கானல் ஜலமாகும்!—அஃதேபோல்,
மூலையிலே யிருட்டறையின் முளைத்ததொரு மாயமனம்
காலையிலே கனவியற்றல் காண்.

7. நித்தியமான ஸத்தியவொளி நீயாயிருக்க மித்தியா புருஷனும் மாரகன்மயக்கில் விழுந்த தென்னையென் றுசாவி யுணர்த்தல்.

7. மரக்கட்டை மனிதனாக மாறினதா ரோபம்போல்
பரக்கட்டை ‡ பாழ்மனதாய்த் தோன்றியது—ஸத்தியமிது,
நித்தியமான ஸத்தியவொளி நின்மனதில் தானிருக்க
மித்யாமாரன் மயக்கில்விழுந் துழன்றதென்னை!

---

† "மற்றொன்று மற்றொன்று மனோபவம் பற்றொன்று பற்றொன்று பவோபவம்." என்பது பெரியோர் வாக்கு.

‡ தாணுரூபமான (நிச்சலப்பொருளாம்) பரம்.

8. புருஷார்த்தம் நான்கில் பொருள்நெறிப்பாலாம் ஜீவத்துவ (ஜீவார்த்த) சொரூபசாரமுணர்த்தல்.

8. " சுத்த சடமான சுக்கிலங்கெர்ப் பிகரித்துச்
சித்தத் துவங்கலந்து சீவித்துச்—சத்தியம்போல்,
வந்தபொழு தீதெல்லாம் மாயையென்று தற்சொரூபஞ்
சிந்தைசெய்வா ரன்றோ சிவம்!"

9. அத்யாத்மயோக தீக்ஷையால் (சிவசக்தி ஸ்பர்சத்தால்) சொரூபதரிசன முணர்த்தல்.

9. தாராகாந்தி திரஸ்காரி நாஸாபரண பூஷிதாவைப்
பாராத தோஷத்தால்நீ பரிதபிக்கிறாய்!—பாரப்பா,
பரத்தை மறைத்ததோர் பார்முதற் பூதங்கள்
பரத்தில் மறைந்ததோர் புதுமை!

10. சொரூப தரிசனங்காட்டிச் சொரூபத்தை மறைக்கும் சுவாஸனுரூப மாயாவிலாஸ முணர்த்தினதுணர்த்தல்.

10. உன்னைப்போ லென்னுடம்பு வேகவே யன்றுநான்
என்னைப்போ லுன்னையெண்ணி யேகமாய்த்—தான்கண்டு,
பொன்னை மறைத்ததோர் பூண்மணி யாரம்போல்
என்னை மறைதத்தோர் பூம்பாவை காட்டினேன். †

11. புருஷார்த்தங்கள் நான்கில் இன்பநெறிப்பால்பற்றி அஹப்பொருளின்பமாயுள்ள தன்னைக் காமேசுவரர் மடியில் வீற்றிருக்கும் காமேசுவரியாகக்கண்ட மர்ம முணர்த்தல்.

11. " என்னைநான் கண்டபடி யிப்புவியி லெல்லோருந்
தன்னையே காணத் தகுங்காணுஞ்—சொன்னேன்,
ஒளிநாட்ட மோடுமன முள்நாட்டம் பெற்று
வெளிநாட்ட மாகா விடின்."

12. ரூபநாசமானவிடத்து சங்கல்ப சொரூபத்தை யுணரப்பத்திமை போதாமையால் பேதபாவம் நீங்காமையுணர்த்தல்.

12. "கற்பரசி ஸாவித்திரி காயமறைந் துணையடையப்
பொற்பரசி பூம்பாவை தரிசநம்நீ— கண்டிலையால்,
சொற்பமதி யாலுழன்று ஸ்வப்நசித்தர் போதிக்கும்
கற்பமதி யூகமிலாய் காண்!"

13. அபக்குவம் நீங்கிப் பரிபக்குவமாகச் சாதனமுரைத்துச் சாதிக்கு முறைமையுணர்த்தல்.

13. ஸாவித்திரி யென்பாளவள் ஸவிதாரூப மென்றுணர்நீ
காயத்ரீ தரிசநத்தாற் கண்டுகொள்வா—யுண்மையதை,

† குண்டலிநீயோக முதிர்விலுரைத்த திருப்பா இருபஃது பார்க்க.



யோகசித்தர் தன்மதியால் 'உந்மநியில்' கண்டதொரு
போகசித்தி ‡ மூக்குத்தீயில் காண்!

14. அத்யாத்மயோகத்தில் சாக்ஷாத்கரித்த தாரக லக்ஷியத்தை அம்பிகாயோகத்தால் விமர்சமாக்கி பவானியோகத்தா லுண்டான போகாதிகாரசக்தியால் மூர்த்தாகாரமாய் விளங்கிய சொரூபத்திற் கலந்ததுணர்த்தல்.

14. மூக்குத்தீயில் கண்டதொரு மும்மண்டல தாரகத்தை
நாக்குத்தீயால் விமர்சமாக்கி நாதபிந்து—தத்துவத்தால்,
மூர்த்தமாகத் தான்கற்பித்து முன்செய்வினைப் பயன்போக்கி
தீர்த்தாகாரமீ யான்புணர்ந்ததைத் தேர்.

15. அநிச்சானுசார ரூப கர்ம பெந்தத்தினால் உண்டாகும் அநுபோகத்துக்கும் சுத்தாத்துவாவில் இச்சானுசாரமாய் லபிக்கும் (நைஷ்கர்மஸித்தி) போகத்துக்கும் உள்ள வித்தியாஸ முணர்த்தல். (சுத்தாத்துவாவில் போகத்துக்குக் கர்மம் காரணமின்றி நைஷ்கர்ம சித்தியா லுண்டான மலபரிபாகமே காரணமாகையால் கர்மபெந்தமில்லை). †

15. பெற்றமக வென்றுநீ பெந்தக்கட்டுக் குட்பட்டு
கற்றமனக் கல்வியதால் கண்டதொரு காட்சிபோல்
பெற்றபெரும் பேறென்று பெந்தக்கட்டை யானறுத்து
உற்றதொரு மாபோகம் உள்ளேயுணர்.

16. புருஷார்த்தங்கள் நான்கில் வீட்டுநெறிப்பால்பற்றிப் பரனைநினைத்துப் பற்றெல்லாஞ் சுட்டறுத்தாலன்றி சித்திகள்யாவு முத்திதராவென்று பரமுத்திசொரூபமுணர்த்தல்.

16. " மாகேள்வி பெற்றானு மாயோக முற்றானும்
தேகேந் திரியந்திரிந்தாலும்—மாகருணை,
சேரார் உபசாந்தி தேறார் பெறார்பேறு
சோராத முத்திச் சுகம்."

# An Appeal To Agriculturists.—I.

## வியவசாயிகளுக்கோர் அறிக்கை—I.

ஸ்வல்பமான நிலங்களுள்ள ஜனங்கள் ஐயோ! இப்பொழுது எங்களுக்கிருக்கும் நிலங்களைவிட கிஞ்சித்துக் கூட விருந்தால் குடும்ப சம்ரக்ஷணைக்குத் தேவையான மாசூல் கிடைக்குமே என்று நினைத்து அனுதாபப்படுகிறார்கள். இதற்குக் காரணம், அதிகமான மாசூலுக்குக் காரணம் பூமியின் வளமும், அதில் களையறப் பாடுபடுவதுமே ஒழிய நிலவிஸ்தீரணத்தால் அல்லவென்ற அறிவின்மையே. ஒரே ஸ்தலத்திலுள்ள அக்கம்பக்கமான இருநிலங்களில் ஒன்று ஏராளமான பலனைத் தரும்படி செழித்த பயிர்களுடன் கூடியிருக்க, மற்றது நரைத்த பயிருடன் கூடியிருக்கக் காரணமேன்? ஒன்றில் நிலக்கார

‡ மூக்குத்தீயை 'நாசிகேதாக்நி' என்று சுருதிசொல்லும்.

† "ஆனந்தத்தாய்மொழி" முதலாவது 'வித்தைப்படலத்தில், 13-வது திடவார்த்தை' என்பதுமுதல், 24-வது அருட்பேறு, 25-அருளானந்தம் வரையில்பார்க்க. அந்துவா என்றால் மார்க்கம்.

ணது பாடு அதிகம், மற்றதில் குறைவு, என்பது காதலா மலகம்போல் விளங்க வில்லையோ! "பூமி மெய் வருந்தக் கூலிதரும்" என்ற பழமொழியும் மறக்கத் தக்கதோ! விவசாயிகாள்! தற்காலத்தில்நமது தேசத்திலுள்ள பஞ்சத்திற்குக் காரணம் யாது? உணர்விற்கு வேண்டிய மாசூலைத் தரத்தக்க நிலங்கள் இல்லையென்பதால் அல்ல அனேகர் பஞ்சத்தால் மடிவது! விவஸாயிகளில் பெரும்பாலோர் "செடிகொடிகள் எப்படி வளருகின்றன? அவைகளின் உணர்வு எது? நாம் எவ்வாறு செய்தால் நமது நிலங்களினின்று எவ்வளவு மாசூலை அடையக் கூடலாமோ அவ்வளவையும் அடையலாம்" என்ற தெளிவான சாஸ்திர ஆராய்ச்சியின் அனுபவ மில்லாமலிருப்பதே மேற்கூறிய குறைக்குக் காரணமென்பது திண்ணம். நிலத்தில் உழைத்து, எருபோட்டுக், களை பிடுங்கி சுத்தமாய் வைத்திருப்பதே முதல் முதல் எல்லா விவஸாயிகளும் கவனிக்கவேண்டிய விஷயம்.

## களை.

களை எப்பொழுதுமே நிலத்திற்குக் கெடுதலைத் தருவதென்று எண்ணுவது தப்பான அபிப்பிராயம். மாசூல் அறுவடையானதும், நிலத்திலுள்ள நுட்பமான களைகளை அவைகள் விதைபிடிக்குமுன் கொத்தித்தள்ளி நிலத்தில் மடியச்செய்வது நிலத்தின் வளத்தை விருத்தி செய்யும். களை கெடுதி உண்டாக்குவதெல்லாம் கூடி பூமியிலுள்ள சாரத்தின் பெரும் பாகத்தைத்தான் எடுத்துக்கொண்டு பயிர்களின் உணர்வைக்குறைக்கிறதென்பதே தவிர வேறொன்றுமில்லை யென்பது மறக்கத்தக்க தல்ல. ஆகையால் நிலங்களில் பயிருள்ளபொழுது களைபிடுங்கி அறுவடை யானதும் பிடுங்கின களைகளை நிலத்திலேயே மடியச்செய்வது மிகவும் நல்லது.

சில ராஜாங்கங்களில், சர்க்காரார் பாடுபட்டுப் பயிர் செய்யாதவர்களிட மிருந்து நிலத்தைப் பிடுங்கியும், பாடுபட்டுப் பயிர் செய்பவர்களது நிலங்களை அதிகப்படுத்தியும் செய்து வந்ததின் காரணம், மேற்படி தேசங்களில் பயிரிடத்தக்க நிலங்களின் விஸ்தீரணக்குறைவும், விவஸாய விருத்தியில் சர்க்காரின் நோக்கமுமே.

## வியவசாயிகள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்.

தமது நிலங்களிலிருந்து அடையக்கூடிய மாசூலை அடையவியவசாயிகள் தெரிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாத விஷயங்கள்:—

(1) பூமி எப்படி ஆனது, அதிலடங்கி யிருப்பன எவை செடிகள்வளர்வதற்கு அது எவ்விதமாய் உதவி செய்வது, எவைஎவை அடங்கியுள்ளநிலம் எந்தெந்த செடிகளின் வளர்விற்கு ஏற்றது என்பதும்,

(2) வித்தென்பதெது? அதுமுளைப்பதெப்படி? செடி, கொடி, மரங்களை வித்தினின்றும் பதியன்களினின்றும் எப்படி பயிர்செய்து மாசூல் உண்டாக்குவது? எந்தெந்த செடிகளுக்கு எவ்வெவ்விதமான உணர்வுதேவை? என்றுதெரிந்து அதற்கேற்ற பூமியில் அதிகமாய் இராத வஸ்துக்கள் உள்ள எருவைப் போடுதல், பயிர்களைக் கெடுக்கும் களைகளைப் பிடுங்கி, அவைகளுக்குத் தீங்கிழைக்கும் பூச்சிபுழுக்களை எப்படி அகற்றுவது என்ற அறிவு முதலியனவும்,

(3) செடி கொடி மரங்களின் வெவ்வேறுபாகங்களும், அவைகளின் அமைப்பும், நமது சரீரத்தின் இந்திரியங்கள் அவயவங்கள் இவைகளது உபயோகம் போன்ற, செடி கொடி மரங்களின் வளர்விற்கும் விருத்திக்கும் ஆதாரமும் அனுகூலமுமான உபயோகங்கள் எவையென்ற தெளிவான அறிவுமே.

## நிலவளம்.

அநேக ஆண்டுகளாக மழை, காற்று, பனிமுதலியவைகளால் பொடிக்கப்பட்ட பாறைகளாலும், புற்பூண்டுகள், செடிகொடிகள் புழுப்பூச்சி மிருகங்கள் முதலியன மடிந்துமக்கினதினாலும், நானாவித உலோகங்களின்ரேணுக்களின் சேர்க்கையினாலும் சேர்ந்து ஆயிருப்பதைத்தான் நாம் நிலமென்கிறோம். இவைகளை நாம் இருபெரும் பாகமாய்ப் பிரிக்கலாம் ஒன்று உயிருடன் கூடிய செடிகொடிகளின் மக்கிப்போன பொடிகள். மற்றொன்று உயிரில்லாமல் பாறைகள் பொடிக்கப் பட்டதால் ஆன ரேணுக்கள். செடிகொடிகள் வளர்வதற்கு இவ்விரண்டுவித சத்துக்களும் அவசியம். நிலத்தைப்பரிசோதித்து இன்னின்ன செடிகளுக்கு எவ்வெவ்வித உணர்வுகள் வேண்டுமென்ற அறிவினால் இல்லாதவைகளை பூமிக்கு எருவாகப் போடுவதனால் நாம் பூரணமான மாசூலை அடையக் கூடும். நம்மனோர் இவ்வித அறிவில்லாமல் பூமியில் ஏராளமான சத்துக்கள் போன்ற சத்துள்ள எருவையே திருப்பப் போட்டும் சரியான மாசூலை அடைய முடியாததால் வருத்த முறுகிறார். பயிருக்குவேண்டிய, பூமியில் அதிகமாக விராத சத்துக்களுள்ள எருபோட்டுப் பயிர்செய்தால் அவர்கள் அவ்வாறுவருத்த முறக் காரணமிராது.



செடிகொடி, மரங்கள் வளர்வதற்குப்பூமிஎங்ஙனம் உதவிபுரிவதெனில், அவைகளின் வேர்கள் தங்குவதற்கும், அப்படித்தங்குவதால் மேற்படிசெடி கொடி மரங்கள் உறுதியாய்நிற்க ஹேதுவாவ தன்னியில் அவைகளுக்கு வேண்டிய உணவுகளையும் அது அடக்கிக்கொண்டிருக்கிற தல்லவோ! இவ்விதஅறிவு தெளிவாய் மனத்தில் இருக்கின், வேரூன்றி செடிகொடிகள் உறுதியாய்நிற்க நிலத்தை எவ்விதம் கொத்தி உழவேண்டுமென்பது, பயிர் செய்யவேண்டிய பயிர்களின் இயற்கை ஸ்வபாவ அறிவினால் நன்குவிளங்கி புத்திசாலித் தனமாய் சாகுபடி செய்ய அனுகூலமாகு மல்லவா. ஆகையினால் நன்றாக சாகுபடிசெய்து பூர்த்தியான மாசூலைஅடைய பூமி சம்பந்தப்பட்ட மாத்திரம் நாம் முக்கியமாய் அறிந்து மனத்தில் கவனமாய் வைக்கவேண்டியது. பூமி செடி கொடி விருக்ஷங்களுக்கு வேண்டிய உணர்வுகளின் சேர்க்கையென்றும், எவ்வெவ்வித செடிகளுக்கு வேண்டிய இயற்கையான உணவு எந்தெந்தபூமியில் இல்லையோ அந்தப் பூமியில் அவ்வித செடிகள் நன்கு வளராதென்பதும், பயிரிடப்பட்டுள்ள பூமியில் களைகளை வளரவிட்டிருப்பதால் பயிர்களுக்குவேண்டிய உணவு களைகளால் எடுத்துக்கொள்ளப்பட்டு பயிர்கள் உணர்வின் குறைவினால் க்ஷீணதிசையை அடைந்து தகுதியான பலனைத் தராதென்பதே முக்கியமானது.

## வித்து.

வித்தென்பது வளரக்கூடிய செடி கொடி மரங்களின் அதி நுட்பமான ஸ்வரூபத்தையும், வித்து பூமியில் போடப்பட்டு வேரூன்றி அதினின்றும் உணவை உட்கொள்ளும் வரையில் ஜீவித்திருக்க வேண்டிய வஸ்துக்களையும் ஒருகடினமான போர்வைக்குள் அடக்கிக்கொண் டிருப்பதே. ஆதலின் நல்ல வித்தினின்று உண்டாக்கப்படும் நாத்துக்கள் பலத்துடன் கூடியிருப்பதால் வேர் ஊன்றினதும் பூமியினின்றும் அதிகமான உணவை உட்கொள்ள சக்தி யுள்ளதாகஆகி ஏராளமான மாசூலைத்தர ஹேதுவாக ஆகிறது. வித்து கெடுதலாக விருக்கின் நாற்று பலஹீனமுள்ளதாக ஆவதால் அதன்வேர் அதிகமான உணவை பூமியினின்றும் கிரஹிக்கச் சக்தியற்று அல்பமான மாசூலை யடைய ஹேதுவாகிறது. ஆதலின் பயிர்செய்ய வித்துக்கள் மிகவும் நன்றாகவிருத்தல் வேண்டுமென்பது அத்தியாவசியம். இது விஷயத்தில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது எவ்வளவுகாலத்திற்குப்பிறகுதான் வித்து பூமியில் போடப்படவேண்டுமென்பதும், இக்காலம்செடிகொடி மரங்களைப் பொறுத் திருக்கிற தென்பதுமே. சில வித்துக்கள் ஒரு வருஷத்திற் குள்ளும் சில ஒருவருஷத்திற்கு மேற்பட்டும் நானாவிதமாக பூமியில் பயிர்செய்யப்படவேண்டியிருக்கும். சிலவித்துக்கள் பூமியில்ஆழமாய்ப் போடப்பட்டால்தான் முளைக்கும். சில மேலாகப் போடப்பட்டால் முளைக்கும், ஆழத்தில் போடப்பட்டால் முளைக்காது. சிலதிற்கு அதிக வெளிச்சம் கூடாது: இதற்காக விதைவிதைத்த பாத்தியில் தழை, வைக்கோல் முதலியவைகளால் மூடி வைக்கவேண்டும். சிலதிற்கு அதிகவெளிச்சம் தேவை. ஆதலின், செடி மரம் முதலானவைகளின் கீழ் பாத்தி உண்டாக்கி விதைக்கப்படின் நன்கு வளரா. இவைகளையெல்லாம் பொறுமையான அனுபவத்தால் கண்டறிந்துதான் தெரிந்துகொள்ளல் நன்று.

## பதியன்கள்போட்டுப் பயிர்செய்தல்.

பதியன்கள்போட்டுப் பயிர்செய்தால் புதிதாகச் செடிஉண்டாக்குவதன்று. தாய்ச்செடியின் இயல்போடுகூடிய அச்செடியின் ஒருபாகம் போன்றதே ஒழிய, வித்தினின்று உண்டாக்கப்படுவன வற்றைப்போல் வேறானதல்ல வென்போர் பலர். இதுவும் வாஸ்தவமே. ஏனெனின், வித்தினின்றும், பதியனினின்றும் பயிர் செய்யக்கூடிய எலுமிச்சை போன்ற செடிகள் பதியன்போடப்பட்ட செடி, வித்தினின்று உண்டானதைக் காட்டிலும் அதிசீக்கிரத்தில் பலன்தருவதை நாம் பார்த்திருக்கிறோ மல்லவா! செடியிலேயேபோடப்படாமல் வெட்டிக் கொண்டுபோய்ப்போடப்படும் பதியன்கள் அதிககால தாமதம் இல்லாமலும் ஒருகணுவிற்குக் கீழாக ஒழுங்காய் வெட்டப்பட்டும் போடப்படவேண்டும். வெட்டுவதற்கு அதிகூர்மையான கத்தியிருத்தல்வேண்டும். ஏனெனின் மழுங்கலான கத்தியினால் வெட்டப்படின் வெட்டுப்புறம் ஒழுங்காய் இராததும்தவிர பட்டையும் வழுவுண்டுபோகுதல் கூடும். நமதுசரீரத்திலும் கூட கூரான கத்தியால் உண்டான காயம் மழுங்கலான கத்தியா லானதைவிட சீக்கிரம் ஆறிப்போவதை நாம் பார்த் திருப்பதால், பதியனிலும் முளைகள் ஒழுங்காய்வெட்டப் பட்டிருக்கின் அவைகள் கூடுவது

சீக்கிரத்தில் ஆகி, வேர் சீக்கிர மூன்றித் தளிர்களும் சீக்கிரம்விடும். பதியன் போடப்படுமிடம் ஈரமாயும் மணற் பாங்காயு மிருத்தல் வேண்டும். கட்டுச்செடி உண்டாக்குவதும் ஒருவிதபதியன் போடுதலே. இதனால் செடிகள் நன்றாகவிருந்தும் சிலாக்கியமற்ற பலனைத் தரும்படிசெய்தல் இயலும்.

### எருவகை.

செடிகளுக்கு உணவாக பூமியில் போடப்படும் எருக்கள் பலவகை. ஒன்று செடிகளுக்கு வேண்டிய உலோகசம்பந்தமானவைபூமியில்இல்லாவிடில் அதைத்தயார்செய்து போடுதல்;மற்றது செடி கொடி தானியம் முதலியனவைகளைக்கால்நடைகள் தின்று ஜீரணமாகாதவைகளைச் சாணியாய்த் தள்ள அதை எருவாக உபயோகிப்பது; கால்நடைகளின் சாணி மூத்திரம் முதலானதும் காய்ந்த தழைமுதலிய குப்பைகூளங்களும் ஒன்றாகப்போட்டுச் சேர்த்து வைக்கப்பட்டு எருவாய் உபயோகிப்பது. கால்நடைகளின் சாணி மூத்திரம் முதலிய பூமியில் சுவறி வீணாக்கப்படாமல் வைக்கோல் முதலியவைகளைப் பரப்பி அவற்றின் மேல் கால்நடைகளைக் கட்டி, சாணி மூத்திரம் முதலியவைகளால் ஊறிக் கலந்துள்ள அவ்வைக்கோல் முதலானவைகளை எருவாய்உபயோகித்தல். பச்சைத் தழைகளை ஒடித்து நிலத்தில்போட்டு அழுகும்படி விட்டிருப்பது. செடிகொடி புற்பூண்டு பிராணிகள் முதலியன எரிக்கப்படின் அச்சாம்பலை எருவாக உபயோகித்தல், சுண்ணாம்பை ஐந்தாறு வருஷங்களுக் கொருதரம் கணக்காக நிலத்தில் சிறுசிறு மூட்டு முட்டாய்க் கொட்டி மூடிவைத்து மேலாக உழுது விடுவது. அன்னபேதி முதலான சிற்சிலவைகளை ஜலத்தில் கரைத்து செடிகளுக்குஊற்றுவது அவைகளின்மேல் தெளிப்பது முதலியன.

### விக்கினங்கள்.

ஜகத்தில் ஒவ்வொரு விருத்தி அம்சத்திற்கும் அப்பியந்தரம் பலஉள. இவ்வாறே தோட்டப் பயிர்களின் விருத்திக்கும் பல இடையூறுகள் உண்டு. முக்கியமாய் பூண்டு, களைகளினால் உண்டாகும் கெடுதி அதிகம். நாம் ஏராளமாய் பணச்செலவுசெய்து குழிவெட்டி கிடங்கறுத்து எருப்போட்டு பாடுபட்டதெல்லாம் களைபிடுங்கப்படாவிடில் விழலுக்கிறைத்த நீர்போலாகும். எப்படியென்றால் களைகள் கொள்ளை கொள்வது பூமியிலுள்ள உலோகஉணவுகள் மாத்திரமன்று, இன்னம் பூமியிலுள்ள இதர சாரங்களையெல்லாம் கிரஹித்துக்கொண்டு பயிர்களுக்கு உயிரின் ஆதாரமாகிய நைப்பைக்குறைப்பதுடன், அவைகளைச் செழுமையாய் வளர வொட்டாமல் செய்கின்றன. நிலங்களினின்றும் களைகள் கிரஹித்துக் கொள்ளும் சாராம்சங்களைக் கணக்கிட்டுப் பார்க்கின் அதன் ஏராளம் நன்கு விளங்கும். ஆதலின் உலகில் ஒருவன் தன்னால் எவ்வளவுபூமி நன்குபாராமரித்து களையின்றி சுத்தமாய் வைத்துக்கொள்ள முடியுமோ அதற்கு மேல் வைத்துக் கொள்ளுதல் தக்கதன்று. களைகளன்றியில் பயிர்களுக்கு சத்துரு அநேகவித புழுப்பூச்சி வண்டு முதலியன. இவைகள் செடிகளின் துளிர் இலை முதலியனவைகளைத் தின்னும், வெட்டியும், இலை தளிர்களின்மேல் முட்டைகளை இட்டும் நாசம் பண்ணுகின்றன. இக்கெடுதி செய்யும் பூச்சி முதலியவைகளை நாசப்படுத்தும் குருவிமுதலானவைகள் பல. இவைகளைப் பயப்படுத்தித்துரத்திவிடாமல் தோட்டங்களில் யதேச்சையாய் சஞ்சரிக்கவிடுதலால் மேற்கூறிய கெடுதி சொஞ்சம் குறைவு படலாம்.

### “வரப்புயர” எனும் வாழ்த்து.

ஔவையார் ஒருதரம் ஒருகிராமத்திற்குப்போக ஊரார் எதிர்கொண்டு சென்று கிராமத்துக்கு அழைத்து வருகையில் ஒரு வரப்பின்மேல் இவ்வரப்புயர! என்று ஆசியாய்ச் சொல்லி உட்கார்ந்த அவ்வம்மணியை நோக்கி அவ்வார்த்தையின் தாற்பரியத்தைக் கேட்க, அவளும் வரப்புயர்ந்தால் நீர் உயரும், நீர் உயர்ந்தால் நெல் உயரும், நெல் உயர்ந்தால் குடி உயரும், குடி உயர்ந்தால் முடிஉயரும் என்று வியவகரித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலின்நம்மில் ஒவ்வொருவரும் தான் செழித்தால் போதுமென்ற சுயநயமான எண்ணத்தை விட்டு நாடு செழித்து க்ஷேமத்தை அடைந்தால் நமக்கும் க்ஷேமமென்ற திவ்விய சங்கல்பத்தில் ஆழ்ந்தநோக்கமுள்ளவர்களாய் ஜாஸ்தியான நிலமுள்ளோர்கள் தமக்கிருக்கும் நிலவிஸ்தீரணத்தால் ஸ்வல்பமான மாசூல்கிடைத்தாலும் போது மென்ற எண்ணத்தைவிட்டு தன் தன் நிலங்களிலிருந்து எவ்வளவு மாசூலை அடையலாமோ அவ்வளவு மாசூலை அடையாமல் அஜாக்கிரதையாய் கிடைத்தது போதுமென்றிருப்பது உலகத்தில் க்ஷாம முதலானவைகளுக்குத் தங்களாலியன்ற உதவி புரிவதாக ஆகும் என்று அறிந்து அப்படிக்கில்லாமல் பூமியை வளமாகச் செய்து இயன்ற எருக்கள் போட்டு கூடுமான பலனை அடைய முயலுவது நாட்டுக்குப்பஞ்சம், பிணி முதலியவைகளை நீக்கி க்ஷேமத்தைத் தரும் என்றதை மனதில் வைக்க வேண்டியது அத்தியாவசியம். வெகு நாட்களுக்கு முன் பயிர் செய்வோர்களுக்குத் தான் மிக்கமரியாதை, சர்க்காராலும், இன்னம் மற்றவர்களாலும் செய்யப்பட்டுவந்ததாம். ஏனெனில் ஒருவன் எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும் அவன் தன்பணத்தைத் தின்று ஜீவிக்கலாகுமா? குடியானவர்களது பிரயாசத்தால் உண்டாக்கப்பட்ட தானியம், காய்கறி முதலியவைகள் இல்லாமல் அவர்கள் ஒரு நாள் ஜீவிக்க முடியுமா? முடியாதல்லவா! இதைத் தெளிவாகக்காட்ட ஓர் சிறுகதையுண்டு. விஷயம் விரிந்துவிட்டதால் அதை அடுத்த சஞ்சிகையில் சொல்வோம்.

எம். என். கணேசய்யர்.



## SIVAYOGA DEEPIKA—II.

## சிவயோக தீபிகையில்

### பாகிய சதுரங்க பூசாவிதானமென்ற

### இரண்டாவது படலம்.

1. (ஸ்ரீ குருமூர்த்தியானவர் அந்தரங்க பூஜாவிதானத்தைச் சொல்லி சிஷ்யனை யழைத்து) இந்த சிவபூஜாவிதியானது பெரியோர்களாலே வேறொரு பிரகாரமாகிய யோகமார்க்க கோசரமாகச் சொல்லப்படிருக்கின்றது. அதை நானுனக்குச் சொல்லுகிறேன் (கேளென்று சொல்லத்தொடங்கினார்).

2. ஓ சிஷ்யனே! யோகத்தால் ஞானமும், ஞானத்தால் யோகமும் பிறக்கும். இவ்விரண்டும் சித்திப்பதற்காக பூமியிலே பூதசரீரத்தைக் காப்பாற்றவேண்டும்.

3. தேகத்தைக் காப்பாற்றுவ தெவ்வாறென்னில் சிலேஷ்மம் நாசமானால் சரீரம்ஸ்திரமாவது நிச்சயம். அது அழிவதெப்படியென்னில் ஹடயோகத்திலழியும் (என்றால் வாயு கும்பகத்தில் ஸ்திரமானால் சிலேஷ்ம மழியும். வாயுவைக்கட்டாமல் சிலேஷ்மத்தை யழிக்கக் கூடாது; ஆகையால் வாயு தாரணையினாலே சிலேஷ்ம நாசம் பண்ணி தேகத்தை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றவாறு).

4. யோக சாதகம் செய்கின்றவர்களுக்கு சாதிக்கவேண்டியது சிவயோகமே யாகும். அதற்குச் சாதனம்ஹடயோகமாகும். ஆதலால் முதல் ஹடயோகத்தைச் சாதிக்கவேண்டியது. அதற்கு எட்டு அங்கங்களுண்டு. (அவை பாஹிய சதுரங்கமென்றும், அந்தர சதுரங்கமென்றும் இரு வகையாகப் பிரிக்கப்படும்). அந்த ஹடயோகத்தைச் சாதிக்க முதல் இயம நியமாதி அஷ்டாங்கங் களினாலே சிவபூஜை செய்யவேண்டும்.

5. (அப்பூஜையாவது யம, நியம குணங்களாலே ஆத்ம சுத்தி பண்ணி, தன் வசமான பலவித ஆசனங்களி லொன்றில் ஸ்திரமாக விருந்துகொண்டு, பிராணாயாம மென்கிற ஜலத்திலே திவ்யலிங்கத்தை அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த நாலுமே பாஹியசதுரங்க பூஜாவிதான மெனப்படும்.

6. அந்தப் பரமேசுவரனுக்கு இந்திரிய நிக்கிரகமே கந்தமும், தியானமே புஷ்பமும், திடமானதாரணையே தூபமும், சுத்த சமாதியே மகா நைவேத்தியமுமாக சமர்ப்பிக்க வேண்டியது. இந்த நாலுமே அந்தர சதுரங்க விதானமெனப்படும்.

7. இந்தப் பிரகாரம் அஷ்டாங்கயோக மார்க்கத்தினாலே எப்பொழுதும் ஹிருதயகமலத்தில் பரமேசுவரனைப் பூஜிக்கவேண்டும். பாஹ்ய பூஜையினால் என்ன பிரயோஜனம்?

8. இந்தப் பிரகாரம் அந்தரங்கத்திலே அஷ்டாங்க யோகமார்க்கத்தினால் அவ்வியயனை சிவனை எவன் பூஜிப்பானோ அவனே சைவன், அவனே வித்வான் அவனே யோகமறிந்தவருள் உத்தமனாவான்.

9. (1) பிரஹ்மசரியம் (ஸ்திரீசங்கமின்மை), (2) (தேகத்துக்கனுகுணமான) மிதமான

ஆகாரம், (3) தைர்யம், (4) பூததயை, (5)சத்திபவசனம், (6) நேர்மையானபுத்தி, (7) சுசியாசாரம், (8) பொறுமை, (9)களவின்மை (10) ஹிம்ஸைபண்ணுதிருத்தல் ஆகிய இப்பத்தும் இயமங்க ளென்று பெரியோர்களால் சொல்லப்படும்.

10. (1) (எப்பொழுதும்) சந்தோஷம், (2)சம்பூரணபாவனை, † (3) நல்ல புத்தி, (4) தபசு, (5) விரதம், (6) சிவபூஜை, (7) ஜெபம், (8) நிஷ்டை, (9) சத்பாத்திரத்தில் தானம் செய்தல், (10) இருதயசுத்தி ஆகிய பத்தும் நியமங்க ளென்று சொல்லப்படும்.

11. இந்தப்பிரகாரம் இயமங்கள் பத்து, நியமங்கள் பத்து ஆக இருபது லக்ஷணங்களினாலேயும் ஸ்திரமான புத்தியோடுகூடி ஆத்மசுத்தி பண்ணவேண்டும்.

12. ஆசனங்களி லனேகமுண்டு. அவற்றுள், சித்தாசனம், பத்மாசனம், ஸ்வஸ்திகாசனம், முக்தாசனம், வீராசனம், பத்திராசனம், கருடாசனம், சிங்காசனம், கோமுகாசனம், சுகாசனமென்னும், இப் பத்தாசனங்களுமே சிரேஷ்டமானவை.

13. கிரஹஸ்தர்களுக்கு பத்மாசனம் சிரேஷ்டம். மற்ற யோகிகளுக்கு சித்தாசனம் சிரேஷ்டம். சகலமானபேர்களுக்கும் சுகாசனம் சிரேஷ்டமாகும். இம் மூன்றுமே சிரேஷ்டமாகும்.

14. பிரசித்தமான ஆசனங்க ளநேகங்களில் எவை தனக்குச் சரியாய் இஷ்டமாயிருக்குமோ அவற்று ளோராசனத்திலிருந்துகொண்டு ஏகாந்த ஸ்தானத்தை யாசிரயிக்கவேண்டும்.

15. அந்த யேகாந்த ஸ்தலத்திலொரு அழகியமடத்தைக் கற்பிக்கவேண்டும். எப்படியென்றால் (ஓரிடத்திலேயும் வெளியில்லாமல்) குறுகியவாசலுள்ளதாகவும், சுற்றுப்பிராகாரத்தால் சூழப்பட்டதாயும், மிகபரிசுத்தமாகவும், வெளியிற் கூடமுள்ள தாகவும்,

16. நல்ல வாசனையுள்ள புஷ்பங்களால் நிறைந்ததாகவும், விதானத்தால் (கட்டிலால்) சோபிக்கப்பட்டதாகவும், மிருதுவான மெத்தை படுக்கை ஆசனம் இவற்றோடு கூடினதாகவும்,

17. (சாம்பிராணி முதலிய) தூபத்தால் வாசனையுள்ள தாகவும், பசுவின் சாணங்கொண்டு மெழுகப் பட்டதாகவும், சமித்து, புஷ்பம், பத்திரம் (இலைகள்) இவைகளோடும், கந்தமூல பலங்களோடும் கூடினதாகவும்,

18. விபூதி, ருத்திராக்ஷம், தெர்பை, கிருஷ்ணஜினம் இவற்று லலங்கரிக்கப்பட்டும், சுத்தமான அன்ன பானங்களால் நிறைந்து, சகல மூலிகைகளாலும் சம்பூர்ண மானதுமாக (அம்மடம் கட்டப்பட் டிருக்கவேண்டும்).

19. அப்படிக் கொத்த மனோகரமான மடத்தில் எப்பொழுது மிருந்துகொண்டு நியதமான மனதோடு கூடினவனாய் தன் ஹ்ருதயத்தில் சதாசிவலிங்க மூர்த்தியை நன்றாகப் பூஜிக்கவேண்டும்.

20. அப்பூஜாவிதி யெப்படியெனில் ஓ வித்வானான சிஷ்யனே கேளாய்! ஆதியில் கேவலகும்பகத்தில் வாயுவை நிரோதம்பண்ணி பிராணயாமமென்கிற ஜலத்தினால் சித்பிரகாசரான சிவமூர்த்தியை அபிஷேகம் செய்யவேண்டும்.

21. பிராணயாம மாவது பிராகிருதமென்றும் வைகிருத மென்றும் இரு விதமாகும். இவை இரண்டுமெல்லாமல் நின்றது கேவலகும்பக பாதும்.

22. அவைகளில் பிராகிருதப் பிராணயாமமாவது, பிராணவாயுவு நிஸ்வாச உச்சுவாசரூபமாய் ஸ்வபாவமாகவே போக்கு வரத்தா யிருப்பது. இது சகல ஜனங்களுக்கும் நடக்கின்றது.

† மூலத்தில் ஆஸ்திக்கியமென்கிற வார்த்தை காணப்படுகிறது.



23. வைகிருதப்பிராணயாமமாவது, சாஸ்திரங்களிற் சொன்ன விதிப்படி ரேசகபூரக கும்பகங்களின் கிரமமறிந்து வாயுவை நிறுத்துதல்.

24. இந்தப் பிராகிருதம் வைகிருதம் என்கிற இரண்டும் எந்த மகாத்மாவுக்கு க்ஷணமாத்திரத்திலே சித்தியாமோ அதுவே கேவலகும்பக மென்று சொல்லப்படும். (ஏனென்றால் நினைத்த மாத்திரத்தில் பிராணவாயுவை மனத்தோடு கூட்டிப் போக்குவரத்தில்லாமல் நிலைநிறுத்துதலா லென்றறிக).

25. முன் சொல்லப்பட்ட பிராகிருதமானது அஜபா ரூபமான மந்திரயோகமாகும். இரண்டாவதான வைகிருதமானது (தன் யத்தினத்தால் வாயுவை நிறுத்துகிறபடியால் லயயோகமாகும். மூன்றாவதான கேவலகும்பகம் (வாயு மனதோடு கூடி ஸ்திரமாய் நிற்கின்றபடியால்) ஹடயோகமாகும். (அவைகளை அதிக்கிரமித்தது) அமநஸ்கம். அதுவே ராஜயோகமென்று சொல்லப்படும்.

26. முந்தினது அஜபாயோகம், இரண்டாவது வாயு நாதத்தில் லயமாகும் லயயோகம். மூன்றாவது மனதும் வாயுவும் ஒன்றாய் ஸ்திரப்படுவது ஹடயோகம். (இவைகளுக் கெல்லாம் மேலானதாம்) நாலாவதான ராஜயோகம் விருத்திக ளில்லாம லிருப்பது.

27. பிராணயாமத்தினாலே இந் நான்கு வித யோகங்களுஞ் சித்திக்கும்: ஆகையால் அப்பியாச சூரனான நீயும் பிராணயாமத்தை முக்கியமா யநுஷ்டிப்பாயாக.

28. (அப்பிராணயாமத்தில் அஜபாரூபமானது பிந்துவுடன் கூடின ஸகாராந்தமான பீஜாக்ஷரமானது உச்சுவாச ரூபமாய் வெளிப்படும்! இரண்டு பிந்துக்களுடன் கூடிய ஷகாராந்தமான பீஜாக்ஷரம் நிஸ்வாச ரூபமாய் உள் பிரவேசிக்கும். ‡

29. இந்தப்படி பிராணவாயு சகலமான பேர்களுக்கும் போக்குவரத் துள்ளதாயிருக்கும். இப்படிநாள்தோறும் செய்யப்படும் [பிராணயாமயோகமே] அஜபாகாயத்ரீ மந்திரஜெபமென்று சொல்லப்படும்.

30. யாதாமொருவன் அருணோதய காலத்தில் குரு உபதேசித்த மார்க்கமாக இந்த அஜபா காயத்திரீ மந்திரத்தை அஹோராத்திரம் 21,600 சங்கியையாக ஜபம்பண்ணுவானே அவன் அஜபாமந்திர ஜபபலத்தை யடைவான்.

31. இப்படி அஜபாமந்திரத்தை ஸங்கல்பஞ்செய்து ஜபம்பண்ணுபவன் சகலபாபங்களினின்றும் நீங்கி சீக்கிரமாகவே சிவயோகசித்தியை யடைவான். சந்தேகமில்லை.

32. [இந்த அஜபாகாயத்ரீ மந்திரத்தை அருணோதய காலத்தில் நியமமாக விருந்துகொண்டு சாஸ்திரப்பிரகாரம் ஸங்கல்பம் பண்ணி உச்சுவாச நிஸ்வாசம் 21,600-ம் (மூல) ஆதாரமுதற்கொண்டு சஹஸ்ரதள கமலபரியந்தமான சப்தமண்டல தேவதைகளான கணேசுவரர், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் சிவன், பரமாத்மா, ஸ்ரீசற்குரு வென்கிற சப்த தேவதைகளுக்கும் அவரவர்கட்குச் சொன்ன சங்கியைப்பிரகாரமாக சமர்ப்பணம்பண்ணி அஜபாமந்திரத்தை மநோதிருஷ்டியினால் பார்க்கவேண்டும்]. அந்த அஜபாகாயத்ரீ மந்திர பீஜங்க ளிரண்டும் த்ரிவேணி சங்கமஸ்தலத்தில் லீனமானால் சப்தப்பிரஹ்ம ரூபமான பிரணவநாதம் பிரகாசிக்கும்.

‡ ஸகாராந்த மென்பது ஸகாரத்திற்குப் பின்வரு மக்ஷரமாகிய "ஹ"காரத்தைக் குறிக்கவே "ஹம்" என்கிற பீஜம் சித்திக்கும். ஷகாராந்தமான அக்ஷரம் "ஸ"காரம். ஆகவே "ஸ:" என்கிற பீஜம் நிஸ்வாசத்திற்கு ஏற்படுகின்றது. இதன் விரிவை ஹம்ஸோபநிஷத்தில் பார்க்கலாம். [இந்த உபநிஷத் அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். வி. சி. பர்.]

33. ஆத்மமந்திரத்தை (ஹம்ஸமந்திரத்தை) ஸோஹம் எனச்செய்து அப்பதத்திலுள்ள இரண்டு எழுத்துகளையும் வியக்தமாகச்செய்து அவ்வெழுத்துக்களிலுள்ள மெய்யெழுத்துப் பாகத்தைத் தள்ளி யெழுத அது திவ்வியமான ஓம்காரமந்திரமாகும்· சகல மந்திரங்களுக்கும் மேலான இதை அநுஸ்வாரத்தோடு சேர்த்து எவன் பிரஹ்மநாடியில் சேர்ப்பானே அவன் பூரணாநந்தனாய் குண்டலிநி (யோக) அனுபவத்தில் தேர்ந்தவனாவான். [ † "கர்மணே மூர்த்திமேதி"—(ஷட்)கர்மா சக்தியின்பொருட்டு(பிரணவ மந்திரோபாசனை செய்கிறவன்) மூர்த்தி (தாரகம்) என்னும் பூர்வ யோக சித்தியை (இந்திரியாந்தத்தை) அடைகிறான்.]

[குறிப்பு:—ஸோஹம் என்பதில் மெய்யெழுத்துகளான ஸ, ஹ இரண்டையும் தள்ள ஓம்எனநிற்கும். எப்படிநாம் ஜீவமந்திரமாகிய ஸோஹம் என்பதின் உபாதிகளான மெய்யெழுத்துக்களைத்தள்ள உபாதியற்ற உயிர்ரூபமான பிரணவம் நிற்குமோ அவ்விதம் ஜீவோபாதிகளை நீக்கிப்பார்க்க பரமாத்மாவே மிஞ்சி நிற்கும் எனப்பொருள்.]

34. வாமகதியான இடாநாடி சந்திரனென்று சொல்லப்படும். அதுவே யமுனா நதி. தக்ஷிண கதியான பிங்களாநாடி சூரியனென்று சொல்லப்படும். அதுவே கங்காநதி.—மத்திய கதியான சுஷும்னாநாடி அக்னியென்று சொல்லப்படும். அதுவே சரஸ்வதி நதி. இந்த மூன்றும்கூடின ஸ்தான மெதுவோ அதுவே த்ரிவேணீசங்கம மென்றும், த்ரிகூட மென்றும் சொல்லப்படும்.

35-36. [அந்த ஸ்தானமான தெதுவென்னில், கர்மேந்திரியங்க ளிரண்டும் நாசிகாவிந்திரியங்க ளிரண்டும் எங்கே கூடியிருக்குமோ அந்தஸ்தலம்.] அந்தஇடத்தையே சதுஷ்பீடமென்றும் ஸ்ருங்காடகமென்றும்சொல்லப்படும். ஆகையால் அந்த ஒருஸ்தானத்திற்கே த்ரிகூட மென்றும் த்ரிவேணிசங்கம மென்றும் சதுஷ்பீட மென்றும், ஸ்ருங்காடக மென்றும் பெயர்.

37. உச்சுவாச நிசுவாஸ ரூபமான வாயுவை மனதோடு த்ரிகூட ஸ்தலத்திலே சேர்த்து ஸ்திரப்படுத்தி அதன்மேல் த்ரிகோண (வெளியாகிற) சுஷும்னா நாடி மார்க்கத்திலே பிரவேசிக்கப் பண்ணவும்.

38. அப்படிக் கொத்த பிராணவயு உயர (வெளியில்) நடக்கிற கதியை நிறுத்தினால், ஊர்த்துவ சூக்ஷ்மசக்தி நிபாதமாம். அந்தப்பிராணவாயு பிரத்தியாகதமாய்த் திரும்பி (அதைக் கீழேநடப்பித்தால் மத்தியமசக்திப்பிரபோதனமாம். பின்னையும் கீழேநடப்பித்தால் (அபானத்திலே மூட்டி) மூலசக்தி நிகுஞ்சனமாகும்.

39. ஆகையாலிந்தப்பிரகாரம் ஊர்த்துவ சக்தி, மத்தியமசக்தி, அதோசக்தி இந்த மூன்றையும் கிரமமாக நிபாதனமும் பிரபோதனமும் ஆகுஞ்சனமும் பண்ணின யோகீசுவரர்கள் பரமகதியை யடைவர்கள்.

40. ஆகையாலே நீயும் மகாச்சரியமாக சந்திரசூர்யாக்நி மண்டலங்களிலே (இந்தமூன்று சக்தி லக்ஷணங்களை யறிந்து) பிரணவத்துவனியோடு கூட வாயுவை சந்தானம் செய்வாயாக.

41. மூன்று வேதங்களும், மும்மூர்த்திகளும், மூன்று லோகங்களும், முக்குணங்களும் இவை யெல்லாம் பரபிரஹ்ம ஸ்வரூபமான ஏகாக்ஷர மென்னும் பிரணவ மந்திரத்திலிருக்கின்றன. இதுநிச்சயம்.

[†] இந்த அடையாள முள்ளது மூலத்தின் பொருள் விளங்கச் சேர்க்கப்பட்டது. கர்மணே, யென்பதற்கு (ஷட்) கர்ம சித்தியின் போருட்டு என்றும் அர்த்தம் செய்யலாம். இது ஹடயோக சித்தி. ஷட்கர்ம சித்திகளாவன:—(1) தௌதி (துணியினால்), (2) பஸ்தி (ஜலத்தினால்), (3) நேதி (நூலினால்), (4) தாடகம் (கண்ணினால்), (5) நௌலிகம் (வயிற்றினால்), (6) கபாலபாதி (வாயுவினால் கபசோதனம் செய்து ஹடயோக சித்தி சாதித்தலாம்). மேலே மூன்றாவது சுலோகம் பார்க்க.

(வி. சி. பர்).



42. இவ்விதம் இந்தக் கேவலகும்பகப் பிரகாரத்தை சகல சித்தபுருஷர்களு மறிவார்கள். இந்த கேவலகும்பக மானது சர்வதந்திரங்களிலும் சிரோஷ்டமானது: மகாச்சரியமா யிருக்கும்.

43. யாதாமொருவன் தேகத்தில் நடக்கின்ற பிராணவாயுவினுடைய போக்குவரத்துக் களினுடைய நீதியை அறிந்து அதற்குத் தக்க விதானத்தால் வாயுவை ஸ்தம்பனம் பண்ணுவானே அவனுக்கு வாயுதாரணை சித்திக்கும்; சரீரசித்தியு முண்டாகும்.

44. சித்தபுருஷர்களா லொப்புக்கொள்ளப்பட்ட சாஸ்திரங்களிலே கேவலகும்பகத்தின் லக்ஷணம் சொல்லப்பட் டிருக்கின்றது. ஆகிலும் மிகரகசியமா யிருக்கிறபடியால் அவிவேகி களுக்குத் தெரியமாட்டாது.

45. குருகடாக்ஷத்தால் கேவலகும்பகாப்பியாசம் சித்தித்ததே யானால், முத்திரா கரண பந்தனங்களால் ஓர் பிரயோசனமுமில்லை.

46. கேவல கும்பகத்தினாலே பிராணவாயு நாதத்துடன் விஷ்ணு பதத்தை யடைந்து (லயித்தால்) அப்பொழுது ஜீவாத்ம பரமாத்ம ஐக்கிய முண்டாகும்.

47. நிச்சப்தமாய் (நாதமற்றதாய்) நின்றதே தத்துவ மென்றும் அநிர்வாச்ய மென்றும் (புகலொணாத தென்றும்) பரமபத மென்றும் சொல்லப்படும். அதுவே பூதேந்திரியாத்மகமான பிரகிருதிக்கும், சகலதத்துவங்களுக்கும் லயஸ்தான மென் றறியவேண்டியது.

48. மூலபந்தனம், ஒட்டியாண பந்தனம், ஜாலந்திரபந்தனம் என்னும் பந்தனத் திரயங்களையு மப்பியாசம் பண்ணின யோகீசுவரனுக்கு அந்த அப்பியாசத்தினால் ஊர்த்துவமான பிராணவாயு ஆகாசத்தில் நின்றால் அதனால் பூதங்களும், இந்திரியங்களும், இந்திரிய விஷயங்களும், மனம் சித்தம் அகங்காரம் முதலிய அந்தக்கரணங்களும் இது முதலிய சமஸ்தமும் லயமடையும். அப்பொழுது விருத்திரகிதமான (மனோ விருத்திகளற்ற) சுகமுண்டாகு மென்று சொல்லப்படும்.

49. (அந்த பந்தத் திரயங்க ளென்னவென்றால்): யாதொன்றானது வாயு நிரோதனத்தால் அபானனென்கிற சூர்யனைப்பிராணனென்கிற சந்திரனோடே கூட்டி மேற்செல்லும்படியாகச்செய்து சமஸ்தயோக சித்திகளையுமடையப் பண்ணுமோ அதுவே மூலபந்தன மென்று யோகீசுவரர்களால் சொல்லப்படும்.

50. நாபிக்குக்கீழ் அபானனும் நாபிக்கு மேல் பிராணனுமாக நிறுத்தி (அறிவின் பலத்தினாலே) பந்தனம் பண்ணுவது ஒட்டியாண பந்தனமென்றுசொல்லப்படும். இப்பந்தமானது சகலரோகங்களையும் ஜனன மரணங்களையும் மிருத்தியுவையும் போக்குவிக்கும்.

51. கழுத்தை வளைத்துக் கொண்டு ஹ்ருதயத்திலேசிபுகத்தை(முகவாய்க்கட்டை) திடமாகப் பொருந்தச் செய்தலே ஜாலந்தரபந்தனமென்று சொல்லப்படும். இது ஊர்த்துவத்திலிருக்கும் (மேலிருக்கும்) அமிர்தத்தையிறங்கச்செய்யும்.

52. இப்படி (பந்தனங்கள் மூன்றையு மப்பியசித்து) ஊர்த்துவ மத்திம பந்தனங்களினாலேயும், அபான வாயுவினுடைய ஆகுஞ்சனத்தினாலேயும் ஓர் நாசிகா துவாரத்தில் சகல வாயுக்களும் உட்பிரவேசிக்கும். அதினால் சீக்கிரத்தில் கேவலகும்பகசித்தி யுண்டாகும்.

53. இக்கேவல கும்பக மானது எவனுக்கு சதாகாலமும் வசமாகுமோ அவன் மகாபிரசித்தனான பிராணசம்யமி யென்று சொல்படுவான்.

54. இந்தப்பிரகாரம் பிராணயாமவிதானத்தை மூன்றுமாதம் தப்பாமல் அப்பியாசம் பண்ணினயோகீசுவரனுக்கு தேக லகுத்துவமும், அக்நிதீபனமும் சமஸ்தநாடி சுத்தியும், நாதசிரவணமுமுண்டாகும்.

55. ஆகாசத்தில் பிராணன் (லயம்) அடைந்தால் அந்த க்ஷணமே உன்மனி ஆகும். அந்த உன்மனீ அடையப்பெறுகிற வரைக்கும் விவேகியானவன் இக்கேவல கும்பகாப்பியாசத்தை விடாமலனுஷ்டிக்க வேண்டும்.

56. (அப்பியாசப்பிரகாரமேன்ன வேன்றுல்):முன்னல் பிரஹ்மஜ்ஞானியாகிய குருவை நமஸ்காரம் பண்ணி அந்தரங்கத்தி லிருக்கும் காமக் குரோதாதிகளாகிய சத்துருக்க ளறுவரையும் ஜெயித்து, ஏகாந்தமாய் சுத்தமான ஸ்தலத்திலே யிருந்து கொண்டு புருவ மத்தியமாகிற பத்மத்தில் பரசிவத்தைத் தியானம் பண்ணவேண்டும்.

57. (இவ்விதம் தியாநம்பண்ணி) [நாதானுசந்தானத்தால், அதாவது] சதாகாலமும் அநாஹத திவ்யநாதத்தைக்கேட்டு விபின்னமாய் நிர்மலமான பிந்து ரத்னத்தைத் தரித்து சந்திரமண்டலத்தி லிருந்துவரும் அமிர்தத்தையுண்டு, சங்கல்ப விகல்பக் கூட்டங்களை யறுத்து,—

58. திரிகூடஸ்தானத்தில் வாயுவை திடமாக நிறுத்தி, அவ்வாயுவை மனதுடன்கூட திரிகோண ரூபமான சஷும்ஞநாடி மார்க்கத்திற் பிரவேசிக்கச் செய்து அப்பொழுது ஊர்த்துவ சூக்ஷ்ம குண்டலிநியைப் பேதித்து விஷ்ணுபதத்திலே யடையப்பண்ணி சுகத்தை யனுபவிப்பாயாக.

59. இப்படிப்பட்ட விஷ்ணுபதஸ்வரூபமானதும் சர்வவியாபகமானதும் சதாகாலமும் பாவிக்கப்பட்ட விஷ்ணுரூபமானதும் கேவல கும்பகாப்பியாசத்தால் சித்தியானது மாகிய சிவத்தை பிராணயாம ஜலத்தால் அபிஷேகம் பண்ணிப்பூஜிப்பாயாக.

இங்ஙனம்
சதாசிவ யோகீந்திரரால்
செய்யப்பட்ட
சிவயோக தீபிகை யென்கிற கிரந்தத்தில்
பாஹ்ய சதுரங்க பூஜாவிதான மென்னும்
இரண்டாம் படலம் முற்றும்.

---

## *Sita—A Tale of Hindu Domestic Life.*

## சீதா, அல்லது இல்லறவாழ்க்கை.

### 29 - வது அதிகாரம்.

ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் என்னமறைத்தும் சமாசாரம் வெளியில்வந்துவிட்டது. ஏஜண்டு வேம்பய்யருக்குக் கோபம் உண்டானபடியால் தன்னிடத்தில் சமாசாரம் சொல்லவில்லை, இரகசியமாய் பேசினர்களென்று இராமச்சந்திரய்யர் காதில் படும்படி இந்த சங்கதிகளை யெல்லாம் பட்டணத்திற்குச் சொல்லி அனுப்பிவிட்டார். உடனே இராமச்சந்திர அய்யர் ஸ்ரீநிவாசசாஸ்திரிகளுக்கு சமாசாரம் என்னவென்று கடிதமூலமாய்க் கேட்டார். அதற்கு ஸ்ரீநிவாசஸாஸ்திரிகள் பதிலே எழுதவில்லை, பிறகு இராமச்சந்திரய்யருக்குக் கோபம் பிறந்து நேரில்போய்க் கேட்பதென்று வந்தார். ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் அப்போதும் அவரைக்கவனியாமல் சொத்து ஒன்றையும் அவரிடம் ஒப்புவிக்க முடியாது, வேண்டுமானல் வியாஜ்ஜியம் செய்து பெற்றுக்கொள்ளலா மென்று சொன்னர். இராமச்சந்திரய்யருக்குக் கிழவனிடம் கொடுக்கப்பட்டகடிதத்தின் சமாசாரம் விசாரிக்க நன்றாய்த் தெரிந்தது. உடனே இராமச்சந்திரய்யர் தங்கத்தின் மீது வியாஜ்ஜியம் போட்டு கிழவன் இருப்பிடத்தைச் சோதனை செய்து தஸ்தாவேஜியை எடுக்க வேண்டுமென்று கோர்ட்டு மூலமாய்க் கேட்டார். அப்படியே உத்தரவாகி சர்க்காரில் கிழவன் வீட்டைச்சோதனை போட்டு கடிதத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இதற்குள் தங்கம் தனக்கு வரப்போகிற தீங்கை நினைக்காமல் தன்தாயாரைப் பார்க்கவேண்டுமென்று ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளைத் தூண்டிவிட்டாள். அவர் அப்படியே ஊர்ஊராய் விசாரித்துப் பார்க்கக் கடைசியில் பீமபுரத்தில் ஒரு வீட்டில் அவளிருக்கக் கண்டார்கள். அங்கே போகவும் அந்தக்கிழவி அம்மாள் இவர்களைக் காணவும் நடுங்கினுள். தங்கம் அவளுக்குச் சமாதானத்தைச்சொல்லி கடிதம் வந்ததா என்று கேட்டாள். அவள் கடிதம்என்ற பேச்சை கேட்கவும் நடுங்கி அய்யோ அதை எடுத்துவிட்டீர்களோ! என்றாள்! ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் தங்கத்தை அடக்கி அம்மா நாங்கள் கடிதம் ஒன்றையும் அறியோம். கிழவரை அந்தக்கடிதம் இருந்தால் சோதித்து எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டோம். ஆனல் எங்களுக்கு ஓர் யோகி மூலமாய் எல்லா சமாசாரங்களும் தெரிந்துவிட்டது. உங்கள்மீது தப்பிதம் ஒன்



றும் இல்லையே; நீங்கள் என் வருத்தப்படவேண்டும். நானும் உங்களையும் மன்னித்து இப்போதும் தங்கத்தை சேஷய்யர் பெண்போலவே பாவித்துத் தான் நடத்தி வருகிறேன். நீங்கள் அதுவிஷயத்தில் ஒரு கவலையும் வைக்கவேண்டா மென்றார். அந்தம்மாள் அய்யா எனக்கு அவ்வளவு தான்வேண்டியது. நான் என்ன செய்வேன்! என்யஜமானி அப்படிக் கட்டாயப்படுத்திவிட்டாள்! இது தெரிந்தால் வெகு கஷ்டமெல்லாம் வருமென்று நான் தான் அக்கடிதத்தை ஒருவருக்கும் காண்பிக்கக்கூடாதென்று இருந்தேன். உங்களுக்கு சங்கதி தெரிந்துவிட்டது! இனி நீங்கள் கடிதத்தைப் பார்த்தபோதிலும் பாதகமில்லை யென்றாள். உடனே ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அம்மா நாங்கள் கடிதத்தைப் பார்த்துவிட்டோம்! ஆனல் அது உங்களுக்குத் தெரிந்தால் வருத்தம் உண்டாகும்;உங்கள் மனவியாதியும் அதிகமாகு மென்று சொல்லவில்லை யென்றார். இப்படிக் கவர்கள் பெசிக்கொண்டிருக்கும் போதே கிழவர்வந்து சேர்ந்தார். வந்தும் எல்லோரும் அவரையுபசரித்தார்கள். கிழவி அம்மாள் தான் எல்லாவற்றையும் கேட்டதாகவும் நிரம்ப சந்தோஷமாச்சுதென்றும் இனி கடிதத்தை அவர்களிடம் காண்பிக்கலாமென்றும் சொன்னுள். கிழவன் சற்று பேசியிருந்துவிட்டு பிறகு ஸ்ரீநிவாச சாஸ்திரிகளைத் தனியாகக் கூப்பிட்டு தன்வீட்டிலே சோதனை போட்டுக்!கடிதத்தைக்கொண்டுபோய் விட்டார்களே என்றான். ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுக்கு வெகுவருத்தமுண்டாகிவிட்டது. அவர் என்னசெய்வார்! உடனே அவர் தங்கத்திடம் சொல்ல எல்லோரும் கவலைப்பட்டுக்கொண் டிருந்தார்கள். ஆனல் இதுகளையெல்லாம் கிழவியம்மாளுக்குத தெரிவிக்வேண்டு மென்று தீர்மானித்து, அவளையும் கிழவனையும் தாங்களே காப்பாற்றுகிறதென்று கூட்டிப்போனர்கள். இராமச் சந்திரய்யருக்கு அநியாயமாய் நிலங்களைக் கட்டிக் கோள்வதற்குப் பிரிய மில்லை. பேருக்கு வாங்கிக் கொண்டு அதை தங்கத்துக்கே தானமாகக் கொடுப்பதாக உத்தேசித்துஇருந்தார். தங்கம் கெட்டஎண்ணமாக நடப்பதைக் கண்டுதான் அவர் வியாஜ்ஜியம் போட ஆரம்பித்தார். இராமச்சந்திரய்யர் வியாஜ்ஜியத்தில் சேஷய்யர் காலத்தில்நடந்த மோசமெல்லாவற்றையும் ஏஜண்டுவேம்பய்யரைக்கொண்டே ருசுப்படுத்திக் கிழவனையும் ஸம்மன் செய்து அவர்கள் இருவரையும் ஜாநகி யம்மாள் கடிதத்தையும் வைத்துக் கொண்டே கேஸை ருசுப்படுத்தி விட்டார். வேம்பய்யர்மீது இராமச்சந்திரய்யருக்கு சமாசாரம் கொடுத்ததாக சந்தேக மிருந்தபடியால் அவரை ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் பண்ணையை விட்டுத் தள்ளிவிட்டார். பண்ணைகாரியஸ்தர்களைத் திடீரென்று யோஜிக்காமற்றள்ளுகின்றது பிசகென்று ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் நினைக்கவேயில்லை. தள்ளினதும் அவர் இராமச்சந்திரன் பக்ஷம் சாக்ஷிக்குவந்து விட்டார். இராமச் சந்திரய்யருக்கு வியாஜ்ஜியம் ஜெயித்துவிட்டது. இராமச்சந்திரய்யர் வியாஜ்ஜியம்முடிந்ததும்பட்டணம் புறப்பட்டுப்போய்விட்டார். தங்களுக்கு வியாஜ்ஜியம் தோர்த்துப் போனதில் வெகு வருத்தம். தன் கோபங்களை யெல்லாம் இராமச்சந்திரய்யர் மீது செலுத்த ஆரம்பித்தாள். இராமச்சந்திரய்யருக்கு ஏதாவது கெடுதலை கூடிய சீக்கிரத்தில் செய்ய வேண்டு மென்று தீர்மானித்தாள். வியாஜ்ஜியம் தோற்றுப்போன முதல் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் தங்கத்தை லட்சியம்செய்கிறதில்லை. அவளுடன் பேசுவதைக்கூட விட்டுவிட்டார். தங்கத்துக்கு இதைப் பார்க்கப்பார்க்க வருத்த மதிகரித்தது. அதனல் இவரிடம் அவளும் நெருங்குகிறதில்லை. தங்கத்துக்கு இராமச்சந்திரனுக்குக் கெடுதல் செய்வதைப்பற்றி யோஜனைசெய்ய வெங்கடாமசாஸ்திரிகள் குமாரன் முத்துசாமி அகப்பட்டான்: அவனும் வெங்கடராம சாஸ்திரிகளைப்போலவே வாய்ப்பேச்சில் வெகு நைச்சியமுள்ளவன்.

ஆனால் அவன் எண்ணம்மட்டும் நிரம்பவும்கெட்டது. கெட்ட எண்ணமே குடிகொண்டிருக்கும் தங்கம் அவனை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து இரகசியம் பேசிக்கொண்டிருப்பாள். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கு அவன் அடிக்கடி வருவதையும் தங்கம் அவனுடன் வெகு சரஸமாய்ப் பேசுவதையும் தன்னிடம் அதிகமாக வராமல் இருந்ததிலும் தங்கம் முத்துசாமியை வைத்துக்கொண்டிருக்கிறளென்று சந்தேகிக்க ஆரம்பித்தார். ஆனல் தங்கத்தினிடத்தில் அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தன்னை அலட்சியம்செய்வதை நினைத்து நினைத்தே தங்கம் உருகினுள். சொத்துப்போனதில் அவளுக்குப் பாதி உயிர்போய்விட்டது. தங்கம் வரவர உலகவாழ்க்கையையே வெறுக்க ஆரம்பித்தாள். ஒருநாள் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் வெளியேபோயிருந்தார். அவர் வெளியேபோய்விட்டுத் திரும்பிவரும்போது தபால்காரன் அவரிடம் ஒருகடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அவர் அதைப் படித்துப்பார்க்க இராமச்சந்திரன் சேஷய்யர் சொத்து தனக்குத்தீர்ப்

பாகி இருந்தபோதிலும் தனக்கு வேண்டாமென்றும் வியாஜ்ஜிய செலவுபோக மீதியில் பாதியை தர்மத்துக்கு எழுதிவைத்து விடுவதாகவும் பாதியை தங்கத்துக்கே கொடுத்துவிடுவதாகவும் தன்னைவியாஜ்ஜியத்துக்கு விடாமல் முந்தியே சொத்தைக்கேட்டபோது கொடுத்திருந்தால் பூராசொத்தையும் தங்கத்துக்கே விட்டிருப்பே னென்றும் எழுதியிருந்தான். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளுக்கு இதைப்பார்க்க வெகுசந்தோஷமுண்டானது. அவர் தன்குடும்பசொத்தைக்கூட நம்பாமல் இதைத்தான் நம்பி இருந்தார். பாதியாவது வருகிறதேயென்று சந்தோஷப்பட்டு இந்த சந்தோஷ சமாசாரத்தை தங்கத்திற்குச் சொல்லும் பொருட்டு வெகு வேகமாய் வீட்டுக்குள் போனார். வீட்டில்போகவும் தங்கத்தைக்காணோம். எங்கே தேடிப்பார்த்தும் அவள் அகப்படவில்லை: நகைகள்வைக்கும் அறையில் ஒருவேளை இருப்பாளென்று அங்கே வந்தார். அந்தக் கதவுகள் போடப்பட் டிருந்தன. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் கதவையிடித்தார். கதவு திறக்கப்படவில்லை. வெகுநேரம் இருந்து பார்த்தார். கதவு திறக்கப்படவில்லை ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் ஏதோசந்தேகித்து இரண்டு ஆள்களைக் கூப்பிட்டு கதவைப்பெயர்த்துவைக்கச் சொன்னார். கதவைப்பெயர்த்துவைக்கவும் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் உள்ளேபோய்ப்பார்க்க அங்கே தங்கம் கழுத்தில் சுருக்குப்போட்டுக் கொண்டிறந்துபோய்ச் செத்தபிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தாள். ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளுக்கு இந்த கோரமானகாட்சியைப்பார்த்துச் சகிக்கக்கூடவில்லை. இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் புரண்டு புரண்டு அழுதார். இதற்குள் அங்கே கிடந்த கடிதத்தை ஒருவர் எடுத்தார். அதில் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளுக்கென்று எழுதியிருந்தது. ஸ்ரீநிவாவிசாஸ்திரிகள் அதை எடுத்துப்படித்துப்பார்த்தார். அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது,

"என் இஷ்டமுள்ள பிராணநாதருக்கு நமஸ்காரம். தாங்கள் என்னைவெறுக்க நான் என்ன தப்பிதம் செய்தேனோ தெரியவில்லை. தெய்வச்செயலாய் நேர்ந்தது: எனக்கு சொத்தில்லாமல் போன தப்பிதத்தைத் தவிர வேறு ஒரு தப்பிதத்தையும் நான் அறியேன். ஆனால் தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்று நான் முத்துசாமியோடு அடிக்கடி இராமச்சந்திரனுக்குக் கெடுதல் செய்யயோஜித்த பாவமானது தாங்கள் என்னை வெறுக்கச்செய்தது. நான் இப்படித்தங்கள் பிரியத்தையும் இழந்து சொத்தையும் இழந்து உயிர்வைத்திருப்பதைவிட பிராணனை விட்டுவிடுவதே நலமென்று யோசித்து விட்டேன். ஆகையால் என்னைப் பற்றி ஒருவரும் விசாரப்படவேண்டாம். இராமச்சந்திரன் என்மீது ஒரு தப்பிதமும் கெடுதல்செய்யவும் எண்ணவில்லை. அப்படியிருக்க அவனுக்குக் கெடுதல்செய்தது பிசகுஎன்பதற்காகவே கடவுள் என்னை இப்படி தெண்டிக்கிறார். அசூயைப் படுவதற்கும் பிறருக்கு தீங்கு நினைத்ததற்கும் பிரயோஜனம் இது தான். அதை நான் அனுபவிக்கிறேன். இனி என்னைப்பார்த்து எல்லோரும் நல்ல மார்க்கத்தில் நடக்கட்டும்.

தங்கம்."

என்று எழுதியிருந்தது. ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் அய்யோ!நான் அவர்களைவீணில் சந்தேகித்தேனே!அவள்மீது ஒருபிசகும் இல்லையே! அய்யோஎன்பிரியம் குறைந்ததென்றல்லவா அவள் உயிரையேமாய்த்துக்கொண்டாள். நானும் அவள்போலவே உயிரை விட்டு விடுகிறேனென்று கயிறையெடுத்துக் கட்டிக்கொள்ளப்போனார். சுற்றியிருந்தவர்கள் நல்ல வார்த்தை சொல்லி அவரைத்தேற்றினார்கள். ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் மறுபடியும் அய்யோ இராமச்சந்திரன் கிரமமா பாதி சொத்துகொடுப்பதாக எழுதியிருக்கிறதைக்கேட்டால்கூட எவ்வளவோ சந்தோஷப்படுவாளே! இந்தக்கடிதம் நேற்றையதினமாவதுவந்ததா.எனக்கு இனி யார் இப்படி என் குடும்பத்தை பொறுப்பாகப் பார்க்கப்போகிறார்கள்! என் கோபத்தினால் அவள் பயந்து பக்கத்தில்வராமல் இருக்க அதைக்கூடநான் அவளுக்கு முத்துசாமிசினேகிதத்தால் நமதுமீதுபிரியமில்லை யென்று சந்தேகித்தேனே? அய்யோ இனி இவளைப்போல் பிரியமுள்ளவர்கள் ஒருவரும் இல்லையே! என்றுசொல்லி ஒவ்வொரு சமாசாரங்களையும் சொல்லிச்சொல்லி அழுதார். கிழவியம்மாள் கிழவன் எல்லாரும் அதேமாதிரி அழுதார்கள். தங்கம் இறந்த சாமாசாரம் உடனே தந்திமூலியமாக வேங்கலக்ஷிமி அம்மாள், சீதாராமன், இராமச்சந்திரய்யர் எல்லோருக்கும் சொல்லியனுப்பப்பட்டது. அவர்களெல்லாரும் வரவேண்டுமென்று பிணத்தைக்கூடநிறுத்த ஏற்பாடு செய்தார்கள். சிலர்அதுகூடாது போலீசார்வந்துவிடுவார்கள்: உடனேஎடுக்கவேண்டும்என்றார்கள். ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் போலீசார் என்கிறபேச்சை கேட்கும்போதேநடுங்கினார். உடனேஎல்லோரும்சேர்ந்து பிணத்தை எடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளுக்கு சம்மதமில்



லாமலிருந்தபோதிலும் போலீஸ்பயத்தினாலும் இருக்கிறவர்கள் தொந்தரவினாலும் அப்படியேசெய்ய சம்மதித்தார். பாதிதூரம்கொண்டுபோனதும் போலீசார்வந்து மறித்துக்கொண்டார்கள்.பிணத்தைக்கொண்டுபோனவர்கள் எடுத்தபிணத்தை வீட்டுக்குக்கொண்டுவரக் கூடாதென்கிற சாஸ்திரத்தால் அதை அங்கேயே வைத்தார்கள். போலீசார் சோதனைசெய்துபார்த்து டாக்டர் வரவேண்டுமென்றார்கள். டாக்டருக்குத் தந்தி கொடுக்கப்பட்டு அவரும்சற்று நேரத்திற் கெல்லாம் வந்து சேர்ந்தார். டாக்டர் பிரேதத்தைப்பார்த்து பரிசோதித்து தற்கொலையாய்ப் பிராணன் போனதென்றும் மூச்சுபிடித்துக்கொண்டு கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டதால் மரணமென்றும் ரிபோர்டுசெய்தார். போலீசாரும் அங்கிருந்த சிலரிடத்தில் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளிடமும் வாக்கு மூலம் வாங்கிக்கொண்டு புறப்பட்டுபோய் விட்டார்கள். ஜெனங்களெல்லாம் சேர்ந்துகொண்டு கார்த்து கார்த்தோம் இராமச்சந்திரய்யர் காமேசுவரய்யர் வெங்கலட்சுமி அம்மாள்எல்லோரும் வருகிறவரையில்கார்க்கிறதென்றுபிணத்தை அப்படியே போட்டுவைத்தார்கள். அன்றைக்கு அந்தஊரில் இருந்தவர்களெல்லாம் பிணம் கிடக்கிறது வீட்டில் சாப்பிடலாகாதென்று வாய்க்கால் கரைக்கு சாதம்கொண்டுபோய்ச் சாட்டார்கள். அந்த ஒரு ராத்திரிதான் பட்டியினி இருந்துவிட்டால் இறந்துபோய் விடுவார்களா ! அந்தப் பிணமும் அப்படியே சுகப்பட்டதுதானே. இப்போது எப்படியிருக்கிறது. அதைச்சேர்ந்த மனிதர்களாயிருந்தும் அந்த விசனத்தை யெல்லாம் மறந்து சாப்பிடும்படி பசிகூட ஞாபகத்துக்கு வருமா? மனித சுபாவமே இப்படித்தான். தன் காரியத்தைத் தான் பார்த்துக் கொள்வார்கள். அந்த வயிறுதான் கேட்கிறதா!

'ஒருநா ளுணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய் [வயிறே
ஒருநாளு மென்னோவறியா இடும்பைகூ—றென்
உன்னோடு வாழ்த லரிது."

என்று சொன்னது அந்த ஜனங்களுக்குத்தான் சொன்னதுபோ லிருந்தது. மறுநாள் இராமச்சந்திரய்யர், காமேசுவரய்யர், வெங்கலட்சுமி அம்மாள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். காமேசுவரய்யர் தன் கஷ்டத்தை எல்லாம் மறந்து தங்கத்தின் கொடுமை யெல்லாம் மறந்து, அவள் மீது விழுந்து அழுதார். இராமச்சந்திரய்யர் அய்யோ தங்கம் நான் சொத்துமுழுவதும் உனக்கேகொடுத்து விடுவேனே நீயேதானே கெடுத்துக்கொண்டாய்! ஐயோ என் கடிதமாவது இரண்டு நாளைக்குள் வந்ததா! அதைப் பார்த்தால்கூட நீ இப்படி யோஜித் திருக்கமாட்டாயே! அய்யோ நான் பாவி உன்மீது வீணில் நான் என் வியாஜ்ஜியம் செய்தேன் என்று அழுதார்: காமேசுவரய்யர் அவள் எனக்கு ஒரு ஒத்தாசையும் செய்யவேண்டாம்: அவள் ஒருவள் உயிரோடிருந்தால் போதுமே! என்று அழுதார். வெங்கலட்சுமி அம்மாளும் என் தங்கத்தைப் போல வீட்டில் யார் காரியம் செய்வார்கள்! அவள்புத்தி யாருக்குவரும்! என் அதிர்ஷ்டம் அவ்வளவுதா னென்று சொல்லி அழுதாள். துக்கசமாசாரத்தை நாம் வர்ணிக்கவேண்டிய தில்லை. தங்கத்துக்கு யெல்லாம் கிரமம்போல் நடந்தது.

---

ஓம் ஸ்ரீசாவித்திரியை நமஃ

# உபநிஷதர்த்த தீபிகை.

## பிக்ஷுகோபநிஷத்.

ஓம்வ-ஞணூ ஊஷ உகிமாஷி:

1. மோக்ஷத்தை யிச்சிப்பவர்களான பிக்ஷுக்கள் (சந்நியாசிகள்) குடீசன், பஹூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என நான்கு விதமாவர்கள்.

2. குடீசககர்க ளென்பதாவது கௌதமர், பரத்வாஜர், யாஞ்யவல்கியர், வசிஷ்டர் முதலியவர்கள், எட்டுக்கவளங்கள் (அன்னத்தைச் சாப்பிடுவதாக) நியமமுள்ளவர்களாகி யோக மார்க்கத்தில் மோக்ஷத்தையே பிரார்த்தியா நிற்பர்.

3. பஹூதகர்களாவது திரிதண்டம், கமண்டலு, குடுமி, யஞ்ஞோபவீதம் (பூநூல்) காஷாயவஸ்திரம் இவைகளைத் தரித்துக்கொண்டு

பிரஹ்ம ரிஷிகளின் * வீட்டில் மதுமாம்சங்களை விலக்கி எட்டுக் கவளங்கள் பிக்ஷையெடுத்து யோகமார்க்கத்தில் மோக்ஷத்தையே பிரார்த்தியா நிற்பர்.

4. ஹம்சர்களாவது கிராமத்தில் ஓர் இராத்திரியும், நகரத்தில் ஐந்து இராத்திரியும், க்ஷேத்திரத்தில் ஏழு இராத்திரியும் (வசிப்பார்கள்). அதற்குமேல் வசிக்கக்கூடாது. கோவின் மூத்திரம் கோமயம் இவைகளை ஆகாரமாயுடையவர்களாகி சாந்திராயண (விரதத்தில்) ஊக்கமுடையவர்களாய் யோக மார்க்கத்தில் மோக்ஷத்தையே பிரார்த்தியா நிற்பர்.

5. பரமஹம்சர்களாவது, சம்வர்த்தகர், அருணி, சுவேதகேது, ஜடபரதர், தத்தாத்ரேயர், சுகர், வாமதேவர், ஹாரீதகர் முதலானவர்கள் எட்டுக் கவளம் நியமம் வைத்துக்கொண்டு யோகமார்க்கத்தில் மோக்ஷத்தைப் பிரார்த்தியா நிற்பர். மரத்தினடியிலாவது, பாழும் வீட்டிலாவது (இருப்பர்). ஸ்மசானத்திலாவது வசிப்பர். வஸ்திரமுடையராயாவது திகம்பரராகவாவது (வஸ்திரமில்லாமலாவது) இருப்பர். அவர்களுக்கு தர்மம் அதர்மம், லாபம் லாபமின்மை, சுத்தம் அசுத்தம் என்பன இல்லை. த்வைத மற்றவராய், மண், கல் தங்கம் இவைகளையும் சமமாய்ப் பார்ப்பவராய் எல்லா வர்ணத்திலும் (ஜாதியிலும்) பிக்ஷையெடுப்போராய் எங்கும் ஆத்மாவே யென்று பார்ப்பர். * பிறந்த மேனியாய் துவந்துவமற்றவர்களாய், ஒன்றையும் வாங்காதவராய், சுக்லத்தியானத்தில் ஊக்கமுள்ளவராய், ஆத்ம நிஷ்டர்களாய், பிராண சம்ரக்ஷணையின்பொருட்டு (மாத்திரம்) சொல்லிய காலத்தில் பிக்ஷையெடுப்போராய், பாழும்வீடு, தேவாலயம், புல் புதர், கரையான் புத்து, மரத்தடி, குயவன் பட்டரை, அக்கினி ஹோத்திர சாலை, ஆற்றங்கரை † மலைக்குகை, மரப்பொந்து, மலையருவி, ஸ்தண்டிலம் ‡ இந்த இடங்களில் (இருந்து கொண்டு) பிரஹ்ம மார்க்கத்தில் நன்றாய் முதிர்ந்தவர்களாய், சுத்த மனதுடையராய் பரமஹம்ஸாசாரமாகிய சன்னியாசத்தால் தேகத்தை விடுவார். அவர்களே பரமஹம்ஸர்கள்.

—oo%oo—

* பிராஹ்மணர்கள் ரிஷிகள் இவர்களுடைய வீடுகளில் என்று பொருள் சொல்லவேண்டும்.

† சாந்திராயண மென்பது ஓர் விரதம். இதில் பௌர்ணமியில் பதினைந்து கவளம் அன்னம் சாப்பிட்டு பிறகு நாளைக்கு ஓர் கவளமாகக் குறைத்து அமாவாசையில் ஒன்றும் சாப்பிடாமலிருந்து மறுபடியும் நாளைக்கோர் கவளம் ஜாஸ்தியாக்கிப் பௌர்ணமியில் பதினைந்து கவளம் சாப்பிடுதல் நியமம்.

* பிறந்த ரூபத்தைத் தரிப்பவராய் என்பது மூலம். ['பிறந்த ரூபம்' என்பதற்குப் பொருள் தத்துவார்த்தமாய்க் கொள்ளல்வேண்டும். 'பிறப்பு' என்றால் கருவிலிருந்து பிண்டம் நழுவுவதையே வியவகாரத்தில் கொள்கிறார்கள். பாரமார்த்திகமாய்ப்பார்க்கில் "பரமாய சக்தியுட் பஞ்சமாபூதந், தரமாறிற் றோன்றும் பிறப்பு." என்று ஔவைகுறள் ஓதியதேயுண்மையென்பதை சாதகபுருஷர்கள் குருமுகமாய் ஐயந்திரிபற அறியவேண்டும். வி. சி. பர்.]

† புலிநம் என்பது மூலம். என்றால் ஆற்றினிடமுள்ள மணற்பாங்கான கரை அல்லது மணல்மூட்டு.

‡ யாகத்திற்காக ஒழுங்கு படுத்திய பூமி.



*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your Choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**Speak the Truth.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN S

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 18 OCT 1910 MADRAS.



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்சத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*

ஸத்யமே ஜெயம்—**Satyameva Jayati.**

புத்தகம். **18.**] **1910**ஆ ஆக்ஸ்டு௴, சாதாரணஆ ஆவணி௴ [சஞ்சிகை. **5.**

# *The Ideal and Its Characterestics.*

"*Man makes the Ideal and the Ideal makes the Man.*" The Ideal is ever the goal of Thinker's Thought: It is a Self-organising Spiritual Force and never stops short of attainable perfection: Nor does it waste itself—its organising power and energy, on the unattainable. Perfection and Beauty are the inalienable characterestics of an Ideal. The Supreme Ideal that Human Thought can aspire to and realise, transcending itself in its supreme endeavour to realise "*the Summum bonum* of Human Existence * " is what has well been called *the Advaita.* It is more a process than a doctrine—the realisation of the *Relation* in its absolute, supremest Existence. It is the one Measure which measures the progress of the Human Race in all its stages. As *Mæterlinck* well and truly says:—" When we in our study of human history endeavour to gauge the moral force or greatness of a people or race, we have one standard of measurement only —the dignity and permanence of their Ideal and the abnegation wherewith they pursue it."

* *Auvayar* in her *Kural.*

"The ideals of the Indian people are noble and beautiful—the loftiest in the world. They are spiritual. They are embodied in their ancient religion, that soul-inspiring path to God which has no equal among men."—*Mr. M. H. Phelps.*

"It is only when the whole history and development of the faith are envisaged that we begin to realise what a gigantic task Hinduism essayed and accomplished, and what an exalted place it holds among the religions of the world. Its theory of God and the World, is so serious, bold and far-reaching as to set the religion among the very greatest...The nobility and sombre grandeur of this master-conception are apparent. Faith in the Hindu world-conception has been no dilettante toying with a pretty thought, but has worked itself out in heroic efforts....Yet, fullest acknowledgment being made of the gross hypocricy, idleness, immorality and uselessness of vast numbers of yogis, we are still face to face with the grandeur of the Ideal, the simple honesty of multitudes of good men and the heroic achievements of leaders."—*Mr. J. N. Farquhar of the Y. M. C. A., Calcutta,* on "the Greatness of Hinduism," in the *Contemporary Review.*

## லக்ஷிய லக்ஷணம்.

இலக்ஷியமென்று லென்ன ? அதன் இலக்ஷணமென்ன? " இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலிற், பகுதி விகுதி பகுத்திடைநின்றதை, வினைக்குறிப்பிடைநிலை யென்னல்வேண்டும்" என்னும் பதவியல் சூத்திரத்தைக்கொண்டே யிதற்கு லக்ஷணங்கூறுவோம். முற்காலத்திற் கண்டதாகிய லக்ஷியத்திற்கு லக்ஷணம் சொல்வதில் ஆதியாய் நின்ற பகுதிவர்க்க தத்துவனையும், இறுதியாய் நின்ற விகுதிவர்க்க தத்துவத்தையும் " பகுத்து"க் காட்டி, " இடைநின்றதை" "வினைக்குறிப்பிடைநிலை யென்னல் வேண்டும்," அப்படியே, "இலக்கு" அல்லது "குறி" பகுதி, "அம்" விகுதி; "இய" இபங்குதற்றொழிலைக்குறிக்கும் " வினைக்குறிப்பிடைநிலை." 'இலக்ஷியம்' என்றால் ஒன்றில் இலக்கு அல்லது குறிவைத்திருந்து அது சித்திக்கும் வரையில் முயலுதலாம் "இபக்கமியற்றி" அது சித்தித்தவிடத்துத் திருப்தியுறலாம் "பூரணமிருதம் பருகுதலில்" இறுதியல்லது முடிவையடையும் ஓர் ஆத்மசங்கல்பத்தைக் குறிக்கும். இது "இலக்ஷியம்" என்னும் பதத்துக்கு இலக்ஷணமாம். இலக்கிய இலக்கணமிரண்டும் அவயவ அவயவிபோல் ஒன்றுக்கொன்று வேறுபடாது அபேதமா யமைந்துள்ளது.

மனிதன் ஒன்றை அறிவதற்கு அறிவே காரணமாயிருந்தாலும், கருவிகரணங்களின்றி அவன் தனக்கு அந்நியமாயுள்ள எதையும் அறியக்கூடாதவனாயிருக்கிறான். "Man sees as he is" என்றார் எமர்ஸன் தத்துவஞானி. " மனிதன் தானிருப்பது போலவே தனக்கு அந்நியமானதை உணர்கிறா"னாயினும், கருவிகரணங்களின் சாதனமின்றி இது சாத்தியமில்லையாம். " கள்ளனுக்குத்தோன்றும் திருட்டுப் புத்தி." "ஞானிக்குத்தெரியும் ஞானியின் லக்ஷணம்." இவை போன்ற பழமொழிகளெல்லாம் எமர்ஸன் சொல்லிய உண்மையையே உணர்த்துவன வாகும். ஏன் இப்படி யென்றால், இந்த நாமரூப பேதப்பிரபஞ்சங்களெல்லாம் துவைதபாவத்தாலும் பேதபுத்தியாலும் "ஏகமேவாத்விதீயம்" என்ற ஏகமான அத்துவிதப் பொருளிலிருந்து உண்டாயினவா யிருப்பதாலே யென்று அறிக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1 8 OCT 1910
MADRAS.

"ஏகமான இரண்டற்ற அத்துவிதப்பொருள்" என்றது எங்கும் நிறைந்து பரிபூரணமாயுள்ள வஸ்து ஒன்றையே குறிக்கும். அது,

> "காட்டக்குறியுங் கடந்தவர்காரணம்
> எட்டின் புறத்திலெழுதிவைத்தென்பயன்!"

என்ற திருமந்திரோபதேசத்தாலே வாக்குக்கும் மனதுக்கு மெட்டாததென்று ஏற்படும். அதைக் "கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்." ஏன் கண்டவர் விண்டிலர் எனில், அந்தப் பரிபூரண வஸ்துவை சாக்ஷாத்காரத்தாலே மட்டும் காணலாம். அப்படிசாக்ஷாத்கரித்தவர் அப்பிளுப்புப்போல் அதிலீடுபட்டு அதன்மயமே யாகிவிடுகிறார்களாதலால், அதைச்சொல்லஆளில்லாமற்போகிறது. ஆயினுமதைச்சொல்லாமற்சொல்லி சுட்டாமற்சுட்டலாம். இந்த சாமர்த்திய முள்ளவர்களை " உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்கள்" என்று திருமூலர் விளித்துரைசெய்திருக்கிறார்.

> " உரையற்றதொன்றை யுரைசெய்யமூமர்காள்
> கரையற்றதொன்றைக் கரைகாணலாகுமோ!
> திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தார்க்குப்
> புரையற்றிருந்தான் புரிசடையோனே!"

என்பது அவருடைய பூரணமான திருமந்திரோபதேசம். இப்படிக் கரையற்றுத் திரையற்று 'அறிவான், அறிபொருள்' என்கிறபேதமற்றுப் பிரிவற்று நின்றதொன்றெதுவோ அதுவே பூரணலக்ஷியமாம். அந்த ஒரு லக்ஷியத்தில் எல்லா லக்ஷியங்களும் பொருந்தப் பொருந்தி நிற்கும். இந்த லக்ஷியத்தையறிந்தவர் நித்தியகுண கலியாணராய், நிர்மலராய், நிஷ்களராய், நித்தமுக்தராய், துவந்துவமற்றவராய், தானேதானாய், ஜகமெங்கும் தன்மயமன்றி வேறிலாத வேற்றுமையற்றவராய் விளங்குவர். இவர் ஏகமாயும் அநேகமாயும், பிரஹ்மமாயும் (ஸர்வாந்தர்யாமியாயும்), பிரபஞ்சமாயும் (நாமரூபத்தோற்றமாயும்) விளங்குவர். விளங்கியும் விஷிதாகாரமற்று அகண்டாகாரமாய்த் தானே தன்மயத்திலீடுபட்டு நிற்பர். இவர்கள் இப்படி நிற்பதற்குச்சாதகமாயிருப்பது இவர்களுடைய அகண்டலக்ஷியமாம்.

"திரையற்ற நீர்போல் சிந்தை தெளிந்தால்" அது " கரையற்றதொன்றோடு " அப்பிளுப்புப்போல் கரைந்தேபோய்விடும். அந்த சிந்தையானது "திரையற்ற நீர்போல்" தெளியாது, சலனப்பட்டுக் கொண்டிருந்தால் அஃது சகலரூபமான சங்கல்பவிகல்ப அலைகள் நிறைந்திருக்கும். இந்த சங்கல்பவிகல்ப அலைகளும் அதிலிருந்து சிதறுண்ட நீர்த்திவலைகளுமே நாமரூபப்பிரபஞ்சமாகத் தோற்றுவது. இப்படிப்பட்ட நாமரூபப்பிரபஞ்சமான தோற்றம் அறிவிற்பட கருவிகரணங்கள் இன்றியமையாதனவாம். கருவியென்பது ஞானேந்திரிய கர்மேந்திரியங்களான பத்துக்களுடனே இவற்றின் சமஷ்டிரூப மனதை ஒரு இந்திரியமாகவைத்துக்கூட்டி ஏகப்பதினொன்று என்றுசொல்வர். இப்பதினொன்றையும் சமுத்திரத்தில் தோன்றும் அலைகள் போல் இயங்கச்செய்வது பஞ்சப்பிராணன்களும் அவற்றின் சமஷ்டிரூப வாயுவுமாம். மேலேசொன்ன இந்திரியங்களுக்கெல்லாம் சமஷ்டிரூபமாயும் உற்பத்திகாரணமாயுமிருக்கிற மனசு, இயக்கத்துக்கெல்லாம் காரணமாயிருக்கிற வாயுவோடு ஐக்கியப்பட்டால் விருத்திமார்க்கத்தில் தீர்க்கதிருஷ்டியும், நிவிர்த்திமார்க்கத்தில் தீர்க்கதரிசத்துவமும் உண்டாகும். "வாயுமேன் வார்த்தையேன் வாயுமனமொன்றுமேல்" என்பது பெரியோர் மேற்கோள். " வாயுமனம் ஒன்றுமேல்" கேவல கும்பகத்தில் ஒன்றுபட்ட அந்த ஜோதிர்மனம் தன் சங்கல்பமாத்திரத்தாலே "சிருஷ்டிஸ்திதிவியஸனகர்மக்ருத்" என்ற சுருதிவாக்கியப்படி, ஸ்தூல, சூக்ஷம, காரணமாகத்தோற்றும் மூவிதத் தோற்றங்களைச் சிருஷ்டித்து (உண்டுபண்ணி)க், காப்பாற்றி, யழித்து முன்போல் தன்னில் லயமாகச்செய்யும் சக்தியுள்ளது. இந்தச் சக்தியுள்ளவனே மன்குலதிலகன். இவனே மனுபுத்திரன். இவனே முனிபுங்கவன். இவன் தன்னுடையசங்கல்பசக்தியால் மேன்மேலும்

அழகு பொருந்த மன்மதசிருஷ்டிகளைச்சிருஷ்டிக்கிறான். "அகத்தழகு முகத்தில் தெரியும்" என்பதாய் இவன் அகமுகத்தில் அழகுபொருந்திய உருவங்களைச் சிருஷ்டித்துவருவது இவன் முகத்தில் "களை" யென்றுசொல்லும் தேஜஸ்ரூபமாய் விளங்கும். ஸ்தூலத்தில் சிருஷ்டித்துப் பார்த்துப்பார்த்து மன்மதரூபத்துக்கு பிருதிவியாதி ஸ்தூலபூதங்கள் போதுமான ஸன்னம் பொருந்தியவையாகவில்லை யென்று அவைகளையெல்லாம் விட்டுப் பஞ்சபூதங்களையும் அவற்றின் காரணமான சூக்ஷ்மபூதங்களில் அஷ்டாங்கயோகத்தால்அடைத்து லயிக்கச் செய்கிறான். இதனால் இவனுடைய ஸ்தூலதேகமும் நழுவிப்போகப்புரியஷ்டகத்தை(சூக்ஷ்மதேஹத்தை)க்கொண்டு மந்திரசிருஷ்டிகளான தேவதைகளைச் சிருஷ்டிக்கிறான். இவைகளும் இவன் அழகு பொருத்துவது முற்றும் பொருந்தாதுபோக,சூக்ஷ்மபூதங்களையெல்லாம் தள்ளி அவைகளை யவற்றின் காரணமான அஹங்கார தத்துவத்தி லடைத்து,த்ரிகுணாத்மகமான அஹம்பாவத்தைக்கொண்டு பூரண வழகும் பொருத்தப்பொருந்தும் உருவத்தை (சகுணவடிவை) யுண்டுபண்ணிப் பார்க்கிறான். இப்பொழுது கருவிகரணங்களை விட்டு இச்சாசக்தி,ஞானசக்தி,கிரியாசக்தியென்னும்மூன்று சக்திகளைக் கொண்டு தன்னுள்ளத்திற் பொருந்திய பூரண அழகுள்ள உருவை உருப்படுத்திப் பார்க்கிறான். குறியும் குணமும் பொருந்த திரிகுணமும் சமனானபொழுது திரிகுணாதீதமான ஒரு அருவுரு (உருவில்லாத வுருவாம் சகள-நிஷ்களரூபம்) இவன் அறிவிற்கு அறிவாய்த் தோற்றுகின்றது.

அதையே அழகு பொருந்திய அழகுருவமாகக் கண்டு "யாரே அழகுக்கு அழகுசெய்வார்?" என்ற மேலோர் மூதுரையினால் விவேகமுற்றவனாகி (சத்திநிபாதமான அத்தன்மையில்) இதுவரையில் தான் சிருஷ்டி ஸ்திதி லயரூபமான கிருத்தியம் செய்து வந்ததெல்லாம் நித்தியமாய் நிர்மலமா யுள்ள அழகைக் கெடுத்து அதன் சுந்தராகாரத்தை விகாரப்படுத்தினதன்றி, அதன் அழகு விருத்தியாகச் செய்ததில்லை யென்று கண்டுணர்ந்து, தான் இதுகாறும் செய்த வேலையெல்லாம் (சங்கற்பரூப கர்மாவெல்லாம்)வீணுக்குச்செய்த வெட்டிவேலையென் றுள்ளுணர்ந்து கண்டு, சங்கற்ப-விகற்ப வாசனைபடிந்த மனதைச் சித்தவிருத்தியின்றி நிரோதனம் செய்து "திரையற்ற நீர் போல் சிந்தைதெளியச்" செய்வதே தான் செய்யத்தக்க மஹத்தான வேலையென்றுணர்ந்து, "அப்ராப்த ப்ராபணம்யோகః க்ஷேமொ லப்தஸ்யபாலநம்" என்ற யோக-க்ஷேம சாதனங்களை யப்பியஸித்துக் கிரமேண (படிப்படியாக) சித்தவிருத்திநிரோதனஞ் செய்து "அலையு மனத்தையகத்தடக்கும்" அதீத சக்திவாய்ந்த யோகதற்பரனாய், மனம் நழுவின விடத்தில் திரிகுணாதீதமாய் நின்ற குறியைத் தான் கண்டது கண்டபடி நித்தமாய், நிர்மல சித்தனாய் அதைக் கண்டு களிக்கும்படியான "ஞானியதிசூரன்" ஆகிறான். மேலே குறிப்பிட்டுக் காட்டியதோர் பெறுதற் கரிய பேறும் உன்மனி யவஸ்தையில் அந்தர்லக்ஷியத்தைக் கண்டு அதன் அழகில் ஈடுபட்ட ஆத்மன் (அசங்கனாய் "அறிவுரு" மாத்திரமாய் மிஞ்சி நின்ற ஜீவன்) அதிலிருந்து பழகப்பழக அப்பியாஸ முதிர்ச்சியில் தன்சொரூபத்தைக் கண்டு களித்து நிரதிசயானந்தனாகி, மன்மதரூபனான தான் பஞ்சதசாக்ஷரீ மந்திரதிருஷ்டாவாகி, அம்மஹாமந்திரத்தின் அதிதேவதையும் "ஸர்வகாரண பூதாசக்தி" யுமான (ஸ்வாத்மானந்த பூரணமான) லளிதாபரதேவதையைக் கண்டு "ஸ்ரீகுரு" வென்று சரண் அடைந்து அவளுடைய கிருபாகடாக்ஷபூரணத்தால் "அகண்டலக்ஷயானந்தம்" பெற்று கிருதார்த்தனாகிறான். இதுவே லக்ஷியங் கண்டதற்கு லக்ஷணம். மற்றவையெல்லாம் அவலக்ஷணமான விலக்ஷணமே!

ஓம் முனிமானஸஹம்ஸிகாயைநமః |



# "What is Truth?" or "Sri Guru?"

"Beauty is truth, truth beauty—that is all
Ye know on earth, and all ye need to know."—*Keats.*

## "ஸ்ரீகுரு" என்றால் என்ன?

"ஸ்ரீகுரு: ஸர்வகாரண பூதாசக்தி:"—பாவனோபநிஷத்.

[மாயாண்டிச்சித்தன் ஞானப்பாட்டு.]

"வினைகடிந்தாருள்ளத்துள்ளொளிமேவித்
தனையடைந்தார்க்கெல்லாந்தத்துவமாய்நிற்பள்
எனையடிமைகொண்டவேந்திழையீசன்
கணவனைக்காணவனுதியுமாமே."—திருமந்திரம்.

1. குருதரிசனத்துக் காசைப்பட்டதுணர்த்தல்.

(1) "ஸ்ரீகுரு" வென்ப தோர் ஶ்ருதிநாமம் *
"ஸர்வ காரண பூதா சக்தியது:"
ஸ்ரீகுரு வாமந்தத் திருநாமந் தன்னை
ஸ்வகார்ய மாகவே தேடினே னான்.

2. ஸ்வகார்யசித்தருக்கு குருதரிசனம் கிடைப்பது துர்லபமென்பதுணர்த்தல்.

(2) தேடித் தேடி யலுத்தே னம்மா!
பாடிப் பாடி யழுதே னம்மா!
ஆடிப் பாடி யழுதுந் தேடியுந்
தேடிய "ஸ்ரீகுரு" தென்படக் காணேன்!

3. இந்திரிய நிக்கிரகத்தாலன்றி வேறுவழியில்லையென்ப துரைத்தல்.

(3) காணேன் "ஸ்ரீகுரு" நாமந் தன்னை
காணவோ வழியொன்றுந் தோற்ற வில்லை:
காணவே காரிய மாவுலகில் லதைக்
கண்மூடி யானுந் தபஸிருந் தேன்!

4. இந்திரிய நிக்கிரகமும் தீக்ஷார்த்தமாகவேயன்றி வேறல்லவென்ப துணர்த்தல்.

(4) தபஸிருந் தேன்வெகு கால மதாய்
தபஸிருந் தேயூன் உணவொழித் தேன்!
தபஸிருந் தேயான் காரிய வுலகில்
"தபஸ்வி" யென்றொரு பேரெடுத் தேன்.

* 'ஶ்ருதிநாமம்' என்றாலும் ஸ்வராந்தம், என்றாலும் மந்திரதிருஷ்டி யில் ஒன்றே. 'மறைநாமம்' என்றும் பாடமுண்டு. அப்பொழுது இரகஸியநாமம் என்பது பொருள். இருட்டைப்போக்கும் "காமகலா" என்னும் ஸாதாக்கியத்தைக் குறிக்கும்.

5. இந்திரிய நிக்கிரகத்தாலும் சமயதீக்ஷையாலும் குருதரிசனம் கிட்டாது என்பதுணர்த்தல்.

(5) பேரெடுத் தேன்பெருந் தபஸ்வி யென்றே
ஊரெடுத் தேயுருத் தான்ஜபித் தேன் †
பேரெடுத் தூரெடுத் துலகெடுத் தேன் †
பேரிலா "ஸ்ரீகுரு" நாமங் காணேன்.

6. பிராணாயாமத்தாலே இந்திரியநிக்ரகம் செய்தவர் பிரத்தியாஹாரத்தாலே தாரணைசாதிக்க வேண்டுமெனல்.

(6) நாமங் காணே னுள்ளே காமங்கண்டேன்
‡ காமங் கண்டே யதன் நேமங்கண்டேன் ‡
காமத்தி னேமமாங் † காரணங் காணவுங்
காமநே மத்தில் திவ்ய உருக்கண்டேன். †

7. தாரணைசித்தித்ததின்மேல், தியானசாதனமும் அதன்சித்தியு முணர்த்தல்.

(7) உருக்கண்டே யதன் அழகு கண்டேன்
§ உருக்கொண்ட அழகின் உரு வொழித்தேன்:
உருவொழிந் துருக்கொண்ட அழகு கண்டேன்:
உருவரு வாமதன் மூலங் கண்டேன்!

8. தியானசித்திக்குப் பின் சமாதிசாதனையும் அதன் சித்தியுங்கூறல்.

(8) மூலங்கண்டே யதன் சொரூபங் கண்டேன்
§ மூலத்தில் அருவாம் உருக் கண்டேன்
மூலத்தில் அருவுருக் கண்ட நானே
¶ மூலத்தில் உருவரு வாகி நின்றேன்.

9. தாரணத்தியானசமாதியான யோகசம்யமத்தில் சித்தித்த குருமூர்த்த முணர்த்தல்.

(9) உருவரு வாகியும் அருவுரு வாகியும் ††
அருவுரு வில்லுரு அருவா யுந்தான்
அருவே யுருவும் உருவே யருவுமாத்
திருவுரு வானது "ஸ்ரீகுரு" வாம்.

---

(5) † Compare: "உருவிலாகும் சித்தியெல்லாம் உலகத்தோர்க்கே, அருவிலாகும் சித்தியதே யளிக்கும் முத்தி." Name, fame & world-wide reputation as *tapasvi* availed not.

(6) ‡ காமம்=ஆசை,விஷயப்பற்றுள்ள மனம். அதன் நியமம் காமஸங்கல்ப ரூப அசுத்தமனம்; † ஆசைக்கிருப்பிடம் சங்கல்பமாத்ரத்துவனி; அந்த துவனிக்குள் தேஜோமயஜ்யோதியும், அந்தஜ்யோதிக்குள் சுத்தசங்கல்பமனமும் இருக்கிறது. "திவ்யவுரு"=தேஜோமனம்.

(7) § தேஜோமனத்தின் உருவொழிந்தால் அது மனோலயம் ஆகிற பிந்துவாம். இதற்கு நுபநாசம் அல்லது உருவநாசம் என்றும் "ஒழிவில்ஒடுக்கம்" என்றும் சொல்வர் மேலோர். உருவிலுரு=மிச்ரபிந்து, உருவிலரு=நாதம். அதன்மூலம்=நாதாந்தம்.

(8) § மூலத்தில்=மூலகாரணத்தில்; "அருவாம் உரு" அல்லது "அருவுரு" நாதாந்த வெட்டவெளி.
¶ "நாதவடிவாகிய மஹாமந்திராதிரூபியாய்" வித்யாசரீரியாகிநின்றேன்.

(9) †† நாதாந்தவெட்டவெளியாகியும், நாதவடிவான மஹாமந்திராதிரூபியாகியும் என்றபடி.

9-வது பாட்டின் கருத்து ஸௌந்தரியலஹரி முதல் மந்திரத்தில் ஆச்சாரியஸ்வாமிகளால் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உருவருவாகியும்=சக்திசிவமாகியும், அருவுருவாகியும்=சிவ-சக்தியாகியும், (அந்த) சிவசக்தியில் (தோன்றும்) சொரூபம் (சகளமூர்த்தம்) அரூபமாகவும்(நிஷ்களமாகவும்),அரூபம் சொரூபமாகவும், (விளங்கும்) தான் (தத்பதலக்ஷியார்த்தமான பரமாத்மா), 'அருவே யுருவும் உருவேயருவுமா'-சிவமே சக்தியாகவும் சக்தியே சிவமாகவும் (சிவசக்திபேதமில்லாமல்) அழகிய உருவமமைந்த 'திருவுருவானது' "ஸ்ரீ குருவாம்". (ஆனந்தத்தாய்மொழியில் உ-வது தரிசனைப்படலத்தில் குருமூர்த்தம்'உருக்காட்டியுருவழித்தல்' என்பதைப் பார்க்கவும்) Compare the words of St: Tirumoolar who says:—

"உருவன்றியேநின் றுருவம்புணர்க்கும்
கருவன்றியேநின் றுதான்க்ருவாகு
மருவன்றியேநின் றமாயப்பிரானைக்
குருவன்றியாவர்க்குங்கூடவொண்ணாதே."—திருமந்திரம்.

குருமூர்த்தமும் குருதரிசனமுமின்றி 'உண்மை" யுணர்வதற் கரிதாம் என்பதைப்பற்றி யேசுநாதர் நன்றாகச் சொல்லியிருக்கிறார். எம்பெருமான் திருமூலதேவரும் அப்படியே,—

"திருவாய சித்தியு முத்தியுஞ் சீர்மை
மருளாதருளும் மயக்கறு வாய்மைப்
பொருளாய வேதாந்தப் போதமு நாத
னுருவா யருளாவிடி லோர வொண்ணாதே."—திருமந்திரம்.



10. யோகஸம்யமனான சற்சீஷனுக்கும் சற்குருவுக்குமுள்ள ஸ்வாகர்ஷணரூப காந்தசக்தி யுணர்த்தல்.

(10) "ஸ்ரீகுரு" வாமந்த சொரூபங் கண்டு
ஸ்ரீகுரு வழகில் மோஹங் கொண்டு ¶
ஸ்ரீகுரு வாமந்த அருவுருத் தன்னில்
ஸ்ரீகுரு மோஹனு யானிருந் தேன்.

11. சற்குரு ஸாந்நித்தியம் சித்திக்கப்பெற்ற சற்சீஷன் சித்தனாதலால் உபதேசத்தை விரும்பானாகி, வாச்சாமஹோசரமான 'மௌனமந்திராதிக்யவித்யை'யையே விரும்புவான் என்பது கூறல்.

(11) இருந்தே னிருப்பிடந் தானறி யாதே
‡‡ அருந்தேன் ஸ்ரீகுரு தேன் மொழியை!
விருந்தேன் ஸ்ரீகுரு சேவை கண்டேற்கு
மருந்தேன் மாயப் பிணி போக்கவே!

12. சற்குரு ஸாந்நித்திய ஸம்பந்நன் அபக்குவர்களான காமியகர்மிகள் சங்கத்தை யொழித்து நைஷ்கர்மசித்தியிலேயே லக்ஷியமுள்ளவனா யிருப்பானென்பது கூறல்.

(12) (*a*) பிணிபோக்க வேண்டேன் மருந் தெனக்கு!
(*b*) மணியோசை கேட்டே யான் பிழைப்பேன்
(*c*) பணிமோசஞ் செய்யும் பாவியர் நேசம்
அணிமா சித்திபோ லறவொழிப் பேன்!

13. "தர்மம்சர" வென்ற வேதவாக்கின் உண்மையும் உத்கிருஷ்டமு முணர்த்தல்.

(13) அறவொழித் தாலவர் கூட்டுற வைப்
பிறவொழித் தல்வேண்டா பூவுல கில்
அறவழி யில்லா மறவழி நீக்கில்
பிறவழி யெல்லாம் அறவழி யே! (*d*)

---

(10) ¶ *Cf.* "மையலதற நீங்க மண்ணும்விண்ணு மொன்றாகித், தையலாள் வித்தைபாற் றாபமேற்கொண்டேனுன்."

(11) ‡‡ Compare: "மௌனமந்திராதிக்கிய வித்யை"யை வியந்து கூறியபடியென்க.

(12) (*a*) இது திருவருட்பாவில் "நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால், அனைத்துலகும் வீடாமது." என்ற ஔவைதுறளைத் தழுவிநிற்றலுணர்த்தியபடியென்க. (*b*) "நாதானுசந்தானத்தாலே" யென்றபடி. (*c*) "காம்யபூஜைசெய்யும் கிரியாலோஹிகளான" பாவியர் சங்கம் என்றபடி.

(13) (*d*) 'தர்மம்சர' வென்று ஓதிய உத்தமவழியே.

14. 'தர்மம் சர' என்னும் வேதவாக்கே குருசேவையளிக்கு மென்பதுணர்த்தல்.

(14) அறவழி யேயது குருவழி யாம்
மறவழி யெல்லாம பிற'வழி † யாம்
அறவழி யேதனி ‡ வழிநடந் தால்
அறவழி யேகுரு எதிர்ப்படு வார்!

15. குருதரிசன விசேஷத்தால் 'உருக்காட்டியுருவழித்தல்' என்பது சித்திக்கில் "ஸ்ரீகுரு: ஸர்வகாரணபூதாசக்தி:" என்னும் சுருதிவாக்கியத்தின் லக்ஷியம் சித்திக்குமென்பதுணர்த்தல்.

(15) எதிர்ப்படு வாரவர் ஸ்ரீகுரு வாய்
எழில்பெறு மவருரு ஸ்ரீயுரு † வாம்
எழில்பெறு ஸ்ரீயுரு அருவி லாகில்
எதிர்ப்படு "ஸ்ரீகுரு:" "காரணபூதா சக்தியதே!"

16. சுருதிவாக்கிய லக்ஷியம் சித்தித்துச் சகஜஞானமுண்டானல் திரிபுடி நழுவிப்போச, விதேஹ கைவல்யமாம் அகண்டலக்ஷியாநந்தம் சித்திக்கு மென்பதுணர்த்தல்.

(16) காரணபூதா சக்தியதே காரியவுலகில் பெண்ணுருவம்!
காரணபூதா சக்தியதே காரணகாரிய தோரணையும்!
"காரணகாரிய தோரணை" அறிதலே "யோக-க்ஷேமம்" (1)
காரணகாரிய தோரணை யாமவள் "லக்ஷ்யாநந்தம்!" (2)

ஓம் ஸ்ரீகுருவே நம:!

---

(14) † பிற'வழி=பிறழ்வழி=தப்புவழி; தவறுதலுக்கிடமாம் வழி.

‡ ஸர்வஸங்கபரித்தியாக சித்தனாய், அல்லது, அசங்கனாயிருந்துகொண்டு; அதாவது பற்றற்றவனாய் என்றபடி.

(15) † ஸ்வயம்பிரகாச திவ்யதேஜோமயமான 'காமகலை'யே குருமூர்த்தமாய்த்தோன்றும். அது "உருவன்றியே நின்று உருவம் புணர்க்கும்." (ஆனந்தத்தாய்மொழியில் உ-வது, தரிசனப்படலத்தில் 'உருக்காட்டியுவருவழித்தல்' என்பதைப் பார்க்க.)

(16) (1) "அப்ராப்தப்ராபணம் யோக: க்ஷேமோ லப்தஸ்யபாலநம்" என்னும் வாக்கியத்தால் இதன் அர்த்தம் விளங்கும். (விவேகசிந்தாமணி 17-வது புத்தகம், 4-வது சஞ்சிகை, 97-வது பக்கம் பார்க்க).

(2) "லக்ஷியம்" என்றால் "குறி"="காட்டுக்குறியுங்கடந்தவர்" கைகாட்டுஞ் சின்முத்திரா லக்ஷணத்தின் "குறி" யென்று கொள்க. "ஆநந்தம்" - ஞாதுரு, ஞேயம் (அறிவான், அறிபொருள்) இரண்டும் ஒன்றேயாகி ஞானமாத்திரமாய் நிற்றல் உண்மையான ஆனந்தமாம். திரிபுடி நழுவினவிடத்தே யுதிப்பதொன்றெதுவோ அதுவே "ஆநந்தம்."

"காரியமேழுங் கரந்திடுமாயையுள்
காரணமேழுங் கரக்குங்கடுவெளி
காரியகாரண வாதனைப்பற்றறப்
பாரணவுமுப சாந்தப்பரிசிதே."—திருமந்திரம்.

(இத்திருமந்திரந்தானே "லக்ஷியாநந்தம்" என்னும் பதத்திற்கு லக்ஷியார்த்தமாம்.)

Compare: "அறிவார்பராசக்தியாநந்தமென்பர்
அறிவார்அறிவுருவாமவளென்பர்
அறிவார்கருமமவளிச்சையென்பர்
அறிவார்பரனுமவளிடந்தானே."—திருமந்திரம்.



# உபநிஷதர்த்த தீபிகை.

## 4. ஹம்ஸோபநிஷத்.

(1) ஸநத்ஸுஜாதரைப்பார்த்து கௌதமர் சொன்னதாவது:"சகலதர்மங்களையுமறிந்தவரும் சர்வசாஸ்திரங்களிலும் தேர்ந்தவருமான ஓ பகவானே! பிரஹ்மவித்தையின் உத்பத்தி என்ன உபாயத்தாலாகும்? (அதைச் சொல்லவேண்டுமென்றார்).

(2) ஸநத்ஸுஜாதர் சொன்னார்:— சர்வ வேதங்களையும் விசாரணைசெய்து சிவனுடைய அபிப்பிராயத்தை அறிந்து அவரால் பார்வதியின் பொருட்டு சொல்லப்பட்ட தத்துவத்தைச் சொல்லுகிறேன்! ஓ கௌதமா! கேள்,—

(3) யோகிகளுக்கோர் பொக்கிஷத்துக்குச் சமானமானதும், ஹம்ஸத்தின் (ஜீவனுடைய) நடையை விஸ்தரிப்பதும், போக மோக்ஷ பலன்களைக் கொடுப்பதுமான இது சொல்லக்கூடாதது; அதிரகசியமானது.

[குறிப்பு.—இம்மூன்று சுலோகங்களும் அநேகபிரதிகளில் காணப்படவில்லை. சங்கராநந்தரும் உரையிடவில்லை. நாராயணர் மாத்திரம் உரையிட்டிருக்கிறார். நாராயணர் மூன்றாவது சுலோகத்தில் "யோகினீ கோபசங்கிபம்" என்று ஓர் பாடம் சொல்லி அதற்கு, யோகினீ கோசமென்னு மோர் யோக சாஸ்திரம் பார்வதியால் சொல்லப்பட்டதென்றும் அதற்குச் சமானமாக இச்சாஸ்திரமும் இருக்குமென்று அர்த்தம்பண்ணி அந்தப்பாடத்தைவிட நாம் மேல்மொழிபெயர்த்ததே சரியானபாடமென்று சொல்லுகின்றார்.]

(4) [உப] இப்பவும் ஹம்ஸம், பரமஹம்ஸம் இவைகளின் நிர்ணயத்தை சாந்தனும் தாந்தனும் (இந்திரியங்களின் வெளிப்போக்கையடக்கினவனும்)குருபக்தியோடு கூடினவனுமிருக்கிற பிரஹ்மசாரியின்பொருட்டுவியாக்கியானம்செய்கின்றோம். ஹம்ஸ:ஹம்ஸ:என்று சதாகாலமும் (ஜெபித்துக்கொண்டு) இவன் (பிராணபுத்தியாகிய உபாதிகளுடன் கூடிய ஜீவன்) சர்வதேகங்களிலும், கட்டைகளுள் அக்கினியைப்போலும் எள்ளினுள் எண்ணெயைப்போலும் வியாபித்து நிற்பன். அவனை அறிந்தவன் மிருத்யுவை (மரணகாரணத்தை) யடையமாட்டான். குதத்தை (ஆசனவாயை) நிரோதனம்செய்து, ஆதாரத்தினின்றும் வாயுவை யெழுப்பி, ஸ்வாதிஷ்டானத்தை மூன்றுதடவைபிரதக்ஷணம் செய்து மணிபூரகத்தையடைந்து அநாகதத்தைத்தாண்டி, விசுத்தியில் பிராணன்களைநிரோதஞ்செய்து, ஆஞ்ஞையைத் தியானம்செய்து, பிரஹ்மரந்திரத்தை தியானம் செய்து, மும்மாத்திரை (யான பிரணவமே) தானென்று சதாகாலமும் தியானம்செய்துகொண்டு பிறகு நாதத்தை ஆதாரம்முதல் பிரஹ்மரந்திரம் வரையில் சுத்த ஸ்படிக வர்ணமாக (தியானம் செய்பவும்). அதுவே (அந்நாதமே) பிரஹ்மமென்றும் பரமாத்மாவென்றும் சொல்லப்படும்.

[குறிப்பு:--ஹம்ஸ:என்றால் சம்சாரத்தில்செல்பவன்: (ஹன்=செல்லுதல்)என்றும்,பரமஹம்ச:என்றால் 'பரமமானதும்'(உயர்ந்ததும்) அஞ்ஞானத்தையும், அதன் கார்யங்களையும் வாசனைகளையும் தன் ஆத்மாவின் தாதாத்மிக ஞானத்தால் "கொல்வது"(ஹன்=கொல்லுதல்)எதுவோ அது பரமஹம்சம்என்றும், இவ்விரு விஷயங்களும் இந்த உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று சங்கராநந்தர் உரை. நாராயணர் 'ஹம்ஸம்' என்பது பிராணரூபமான ஆத்மாவென்பர். குதத்தை நிரோதனம் செய்வதாவது அபானவாயுவை கீழ் நோக்கிச் செல்லாமற் றடுத்தல். மேல்நோக்கும் மூச்சு பிராணனென்றும் கீழ்நோக்கிச் செல்லும் மூச்சு அபானனென்றும் சொல்லப்படும். பிராணன் ஹ: என்று சப்தித்துக்கொண்டும், அபானன் ஸ: என்று சப்தித்துக் கொண்டும் செல்வதால், பிராணவாயுவுக்கே ஹம்ஸ: என்று பெயர் சொல்லப்படுமென்பது நாராயணருரை. ஆதாரத்தினின்றும், வாயுவை எழுப்பும் பிரகாரம் நாராயணரால் பின்வருமாறு சொல்லப்படுகின்றது: ஆதாரத்திற்கும் சுவாதிஷ்டானத்திற்கும் மத்தியிலுள்ள அக்னிகுண்டத்தினடியில் மனதை நிறுத்த, "மன்மனமெங்குண்டு வாயுவுமங்குண்டு" எனும் நேர்

மைப்படி வாயு அவ்விடம் செல்ல, பிராணவாயுவின் சேர்க்கையால் அக்னி ஜ்வலித்து தன் குணப்படி மேல்நோக்கிச் செல்ல, வாயுவும் மேல்நோக்கிச்சென்று ஆருதாரங்களையும் கடந்துபோய் நிற்கும். பிரஹ்மரந்திரம் என்பது ஸ்வயம்பிரகாசரான ஆநந்த ஆத்மாவை அறியும் இடம். அது கபாலத்தின் மூன்று பாகங்களும் சேருமிடத்தில் சஹஸ்ரதளகமல கர்ணிகையின் மத்தியனுள்ள சுஷும்னையின் நுனியென்பது சங்கரானந்தர் வியாக்கியானம். "மும்மாத்திரை" என்பது அகார உகார மகாரங்களாகிய மூன்று மாத்திரைகளுடன் கூடிய பிரணவம். இவ்விடத்தில் நாதத்திற்கு வர்ணம் தியானத்தின் பொருட்டுக் கல்பித்துச்சொல்லப்பட்டது. இந்நாதமே தேசகாலவஸ்துக்களால் பரிச்சேதமாகாத பிரஹ்மம்: ஜகத்துக்கு உத்பத்தி ஸ்திதி லயகாரணமானது.]

இதன்பிறகு அஜபாமந்திரத்தின் லக்ஷணத்தைச் சொல்கிருர்.

(5) [உப][இந்த ஹம்ஸஃ என்கிற அஜபா காயத்திரி மஹாமந்திரத்திற்கு] ஹம்ஸஃ ரிஷி, அவ்யக்த காயத்திரீ சந்தசு, பரமஹம்ஸஃதேவதை, ஹம் என்பது பீஜம், ஸஃ என்பது சக்தி, ஸோஹம் என்பது கீலகம், "ஆறு" என்கிற கணக்குப்படி ஓர் பகல் இரவுக்குள் 21,600 கணக்காகும். "சூர்யாய, ஸோமாய, நிரஞ்சநாய, நிராபாஸாய, அதனு சூக்ஷ்மபிரசோதயாத்," என்றும் "அக்னீஷோமாப்யாம் வௌஷட்" என்றும் ஹிருதயமுதலிய அங்கநியாசங்களும், கரநியாசங்களும் ஏற்படும். இந்தப்பிரகாரம் செய்து எட்டு இதழ்களுடன் கூடின ஹிருதயகமலத்தில் ஹம்ஸரூபமாகிய ஆத்மாவை தியானம் செய்யவேண்டும்.

[குறிப்பு:—மொழிபெயர்ப்பு சங்கரானந்தர்பாடத்தை அனுசரித்துச் செய்திருக்கிறது. அவ்யக்தகாயத்ரீயை சந்தஸாகச் சொல்லியிருப்பது ஹம்சனுகிய ஜீவன் அஞ்ஞானமாகிய ஆவரணத்தால் மூடப்பட்டிருக்கும் காரணத்தால் சொல்லப்பட்டது. ரிஷி என்பது மந்திரத்தைத் தியான வாயிலாகப் பார்த்தறிந்தவனைக் குறிக்கும். பரமஹம்சமாகிய பிரஹ்மமே தியானிக்கப்படும் பொருளாகிய தேவதை. சங்கரானந்தர் பாடத்தில் சக்தி, பீஜம், கீலகம், இவைகள் காணப்படவில்லை; ஆகிலும் நாராயணர் பாடத்தி லிருப்பதாலும் அவைகள் மந்திரத்திற்கு முக்கியாம்சங்களானதாலும் சேர்த்து மொழிபெயர்த்திருக்கிறேன். "ஆறு என்கிற கணக்கென்பது பகலை ஆறு பாகமாகவும், இரவை ஆறுபாகமாகவும் பிரித்து, ஒவ்வொருபாகத்தை ஒவ்வொரு ஆதாரதேவதைக்கு அர்ப்பணம் செய்வதைக் குறிக்கும். இதன் விபரம் என்னவென்ருல் ஓர் இராப்பகல் நடக்கும் 21, 600 சுவாசங்களையும் மூலாதார தேவதையாகிய கணேசனுக்கு 600, சுவாதிஷ்டானதேவதையாகிய பிரம்மாவுக்கு 6000, மணிபூரக தேவதையாகிய விஷ்ணுவுக்கு 6000, அனுகததேவதையாகிய ருத்திரனுக்கு 6000, விசுத்தி தேவதையாகிய ஜீவாத்மாவுக்கு 1000, ஆஞ்ஞையின் தேவதையாகிய பரமாத்மாவுக்கு 1000, பிரம்மரந்திர நாதாந்த தேவதையாகிய ஸ்ரீகுருவுக்கு 1000, இவ்விதம் அர்ப்பிதம் செய்யவும். ஷடங்கநியாசத்தில் சொல்லப்படும் ஷடங்கங்களாவன, ஹிருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்பன. கரநியாசங்கள் ஐந்துகைவிரல்களிலும் அவைகளின் சமஷ்டியிலுமாக ஆறு இடங்களில் செய்யப்படும். சங்கரானந்தர் பாடப்படி ஷடங்கநியாசம் பின்வருமாறுகும்:—

(1) ஓம் சூர்யாய ஹிருதயயே நமஃ-இதன்பொருள் ஆத்மைக்யமான அறிவைக் கொடுக்கும் சோபனகரமான வழியைச் செய்வோன்.

(2) ஓம் ஸோமாய சிரஸேஸ்வாஹா. உமையோடு கூடினவன் அதாவது ஜீவப்பிரஹ்மஐக்கிய ஞானத்தோடு கூடினவன்; அல்லது, பிரியமான பார்வையையுடையவன்.

(3) ஓம் நிரஞ்சனுய சிகாயைவஷட். அதாவது இருளாகிய அவித்தியாகாரண மற்றவன்.

(4) ஓம் நிராபாஸாய கவசாயஹும் அதாவது ஆபாசமற்றவன்; ஆபாஸமெனில் பிரதிபலன்த்தோற்றம். வஸ்துரூப சம்ஸ்காரமாகிய பிரபஞ்ச மற்றவனென்று பொருள்.

(5) ஓம் அதனுசூக்ஷ்மாய பிரசோதயாத் அஸ்த்ராயபட் - "அதனு" வென்ருல் ஸ்தூல சூக்ஷ்ம அவித்யாதேஹங்களில்லாதவன். "சூக்ஷ்ம" னென்ருல் அறியக் கூடாதவன், "பிரசோதயாத்" என்பது புத்தியைத் தன்னிடம் ஐக்கியப்படுவதில் செலுத்தட்டும் எனப்பொருள்.



(6) ஓம் அக்நீஷோமாப்யாம் நேத்ராப்யாம் வௌஷட் - "அக்நி" எனவே அக்ரத்திற்கு(ஆத்மஸ்வரூபத்திற்கு) நடத்துவது, எனப் பொருள் "சோம" என்பது முன்னரே இரண்டாவது நியாசத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஸோமசூர்யரூபியானவர் அதாவது ஆத்மஸ்வரூபத்திற் சேர்த்து ஐக்கியஞானமாகிய உமையுடன் சேர்ந்தவர்எனப்பொருள். இதுவரை சங்கரானந்தர் உரைப்படி விவரித்தோம்.

நாராயணரோ வேறுவிதமாக உபநிஷத்வாக்யத்தை அர்த்தம் செய்து நியாசத்தைச் சொல்கிருர். அவர்சொல்லியபடி நியாசமானது பின்வருமாறு:

(1) ஓம் சூர்யாய ஹ்ருதயாயநமஃ.
(2) ஓம் சோமாய சிரசேஸ்வாஹா.
(3) ஓம் நிரஞ்சநாய சிகாயை வஷட்.
(4) ஓம் நிராபாஸாய கவசாயஹும்.
(5) ஓம் தனுசூக்ஷ்ம நேத்ரத்ரயாய வௌஷட்.
(6) ஓம் பிரசோதயாத் அஸ்த்ராயபட்.

"அக்நீ ஷோமாப்யாம் வௌஷட்" என்பதை இவ்வாறு மந்திரங்களிலும் சேர்க்கவேண்டுமென்று சொல்லுகிருர். ஏனெனில் ஹம்ஸத்தை அர்த்தநாரீசுவர ரூபமாக தியானம் செய்ய வேண்டுமென்றும், அந்தரூபத்தில் புருஷபாகம் ஹம் என்றும், பிரகிருதியாகிய பெண்பாகம் ஸஃ என்றும், ஆகவே ஹம்ஸஃ என்பது பிரக்ருதி புருஷ ஐக்கியத்தைக் குறிக்கும் என்றும், அவ்விதமே ஹம் என்பது அக்னியையும் ஸஃ என்பது சோமனை அதாவது சந்திரனையும் குறிக்கும், என்றும், ஆகவே பிரகிருதி புருஷசேர்க்கை ரூபமாகிய ஹம்ஸ மந்த்ரம் ஒவ்வொரு அங்கநியாஸ மந்திரத்திலும் சேர்க்கவேண்டு மென்கிருர். வேறு விதமாக ஹ்ராம், ஹ்ரீம் முதலிய பீஜங்களைச் சேர்த்தும் நியாஸம் செய்வது சம்பிரதாயமென்றும் சொல்லுகிருர். சூதசம்ஹிதையில் ஆத்ம மந்திரமாகிய அஜபாவிதான அத்தியாயத்தில் இம்மந்திரத்திற்கு ரிஷி பிரஹ்மாவென்று சொல்லப்பட்டிருக்கின்றது.]

இதன்மேல் தியேய வஸ்துவாகிய ஹம்ஸத்தின் ரூபம் சொல்லப்படுகிறது.

6. [உப] (அதற்கு) அக்நியும் சந்திரனும் இரண்டுசிறகுகள், ஓம்காரம் சிரசு, பிந்து கண், ருத்திரன் முகம், ருத்திராணீ இரு பாதங்கள், காலம் இருகைகள், அக்நி இருபக்கங்களாகும். ஞானமும் வைராக்கியமும் மிகுந்த இரண்டு (பார்சுவங்களாகும்).

[குறிப்பு:—இது நாராயணர் பாடப்படியும் உரைப்படியும் எழுதியது. சங்கரானந்தர் பாடம் சுத்தமானதாய்த் தோன்ருததாலும், உபநிஷத் மூலப்பிரதிகளில் காணப்படாததாலும் எடுக்கப்படவில்லை. ஓங்காரமானது சிருஷ்டிக்கு முதன்மையானதால் சிரசாகச் சொல்லப்படும். பிந்து பிரகாச ரூபமானதாலும் வந்துளாகார மானதாலும் அனுஸ்வாரம் பிரஹ்ம வாசகமானதாலும் பிந்துவை நேத்திரமாகச் சொல்லப்பட்டது. முகம் வளைவாய் (வக்ரமாய்) இருப்பதால் ருத்திரனுக்கு ஒப்பிடப்பட்டது. சர்வத்திற்கும் ஆதாரமானதால் ருத்திராணியை கால்களாகச் சொல்லப்பட்டது. காலம் சகலத்தையும் கொடுப்பதால் கைகளாகச் சொல்லப்பட்டது. இவை நாராயணரின் உரைப்பிரகாரம். ருத்திரன் என்கிற பதத்திற்கு ரும்=துக்கத்தை, திரவமாக (நாசமாக)ச் செய்கிறவனென்று சங்கரானந்தர் பொருள் சொல்கிருர்.]

7. [உப] இந்த (ஹம்ஸனே) கோடி சூர்யபிரகாசனுனவன். எவனுல் இதுவெல்லாம் (சப்த பிரத்யயமாகிய சகல பிரபஞ்சமும்) வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த பரமஹம்ஸனுவன் அவனுக்கு எட்டுவித விருத்திகளுண்டு. (ஹ்ருதய கமலத்தின்) கிழக்கு இதழில் புண்யத்தினிடம் புத்தியும், ஆக்நேய(தளத்தில்) நித்திரை ஆலஸ்யம் (சோம்பல்) முதலியனவும் உண்டாகும். தெற்கு தளத்தில் க்ரூரத்தில் புத்தியும், நிர்ருதியில் (தென்மேற்கு தளத்தில்) பாபத்தினிடத்தில் (=பாப கார்யங்களில்) புத்தியும், வாருணத்தில் (=மேற்கு தளத்தில்) கிரீடையும் (விளையாட்டு புத்தியும்), வாயுவில் (=வடமேற்கு தளத்தில்) போக்கில் (தேசாந்தரப் பிரயாணத்தில்) புத்தியும், வடக்கு (தளத்தில்) ரதியினிடம் (=ஸ்திரீவிஷயபாகிய சுகங்களிடம்) பிரியமும், ஈசானத்தில் (வடகிழக்கு தளத்தில்) திரவ்யத்தைச் சேர்ப்பதில் (புத்தியும் உண்டாகும்). †

† இதன்விஸ்தாரத்தை நாரதபரிவ்ராஜக உபநிஷத் 6-வது உபதேசத்தில் பார்க்கலாம்.

[குறிப்பு:—இந்த வாக்கியத்தால் புத்திக்கு சாக்ஷியாகிய ஜீவன் உண்மையில் ஸ்வயம்பிரகாசரான பரமஹம்சருக்கு அபின்னமானவனென்று அறிவிக்கப்படுகிறது.]

8. [உப] (இதழ்களின்) மத்தியில் வைராக்கியம், கேசரத்தில் சாக்கிராவஸ்தை, கர்ணிகையில் ஸ்வப்நம், லிங்கத்தில் (கர்ணிகையின் மத்தியில்) சுஷுப்தி, இப்பத்மத்தை விட்ட (தாண்டின) விடத்தில் துரீயம், எப்பொழுது ஹம்ஸனானவன் நாதத்தில் லயமாகிறானோ அப்பொழுது துரீயாதீதமாகிய உன்மனோ; [அதுவே] அஜபாவின் முடிவென்று சொல்லப்படும். இந்தப் பிரகாரம் சகலமும் (மேற் சொன்னவைகளெல்லாம்) ஹம்ஸத்தின் வசத்தா லுண்டாவதால் மனமானது (உன்மனீ யாகிய துரீயாதீதத்தை யடையும் வரையில்) விசாரிக்கப்படும். இது (இந்த அஜபாமந்த்ரமாவது) கோடி ஜபமானதும் நாதமனுபவிக்கப்படும். அதுவும் பத்துவிதமாக வுண்டாகும். முதலில் சிணீயென்றும் இரண்டாவது சின்சிணீ யென்றும், மூன்றாவது மணிநாதமும், நாலாவது சங்கநாதமும், ஐந்தாவது வீணாநாதமும், ஆறாவது தாளநாதமும், ஏழாவது புல்லாங்குழல் நாதமும், எட்டாவது பேரீ நாதமும், ஒன்பதாவது மிருதங்கநாதமும், பத்தாவது மேகநாதமும் (உண்டாகும்). (முந்திய) ஒன்பதையும் தள்ளிப் பத்தாவதையே அப்பியாசம் செய்யவேண்டும்.

[குறிப்பு:—சங்கரானந்தர் உரையின்படிமொழிபெயர்ப்பு. நாராயணர், மனமே ஹம்ஸமாவதால் துரீயாதீதம் வரையதையே விசாரிக்கவேண்டியதென்று சொல்கிறார். இந்த பத்மத்தை விட்டவிடம் துரீயம் என்பதற்கு எட்டு இதழ்களுடன் கூடினதாய் சொல்லப்பட்ட ஹிருதய கமலத்தை நான் இந்த பத்மத்தில் மாத்திரம் இல்லை, நான் சர்வாத்மகன், தேசகாலவஸ்து சூன்யனான ஸ்வயம்பிரகாச ஆனந்தாத்மா என்னும் புத்தியால் அவ்விருதய கமலத்தை விட்டவிடமே துரீயம் எனப்பொருள். நான் கர்த்தா போக்தாவென்கிற புத்தியுடன் கூடிய ஜீவன் எக்காலத்தில் சத்தத்தின் த்வனியின் கடையில் நிற்கும் வாக்குமனதுக்கெட்டாத பரமாத்மாவில் லயிப்பனோ அதுவே துரீயாதீதம். 'உன்மனோ'' வென்பது மனம் மேற்போய் லயித்தவிடம்.]

9-11. [உப] முதலில் (முதல்நாதத்தை) அப்பியாசித்தால் சரீரம் சின்சிணீ ரூபமாகும், இரண்டாவதில் தேக முடையும், மூன்றாவதில் களைக்கும், நாலாவதில் தலை நடுக்கமுண்டாகும், ஐந்தாவதில் வாயில் ஊற்றமுண்டாகும், ஆறாவதில் அமிருதமொழுகும், ஏழாவதில் மறைபொருள்களின் ஞானமும், எட்டாவதில் பரைவாக்கும் (சித்திக்கும்). ஒன்பதாவதில் தேஹம் மறைவதுடன் திவ்யமாகிய பார்வையுடன் கூடி மலமற்றதாகும்; பத்தாவதில் (நாதத்தின் அப்பியாசத்தால்) பிரஹ்மாத்ம சந்நிதியில் (=சேர்க்கையில்) பரப்பிரஹ்ம (சாக்ஷாத்காரமாகும்).

12. [உப] அதில் (பரப்பிரஹ்மத்தில்) மனம் லயிக்கும். மனதின் சங்கல்ப விகல்பங்களும் புண்யபாபங்களும் நாசமானதும், சக்தியாத்மாவானவரும் (=சக்தியில் அந்தர்யாமியாயிருப்பவரும்), சர்வவியாபியாயும், ஸ்வயம் ஜோதியாயும், சுத்தராயும், புத்தராயும் (ஞானரூபியாயும்), நித்தியராயும், நிரஞ்சனராயும் (நிர்மலராயும்) சாந்தராயும் இருக்கும் சதாசிவனாகிறான். இது வேதத்தின்சொல்.

[குறிப்பு:—இந்த ஹம்ஸ மந்திரமானது, சக்தியக்ஷரமான ஸஃ என்பதை முன்வைக்க ஸோஹம் என நிற்கும். இதில் ஸஃ என்பதின் பொருளான சக்தியை சாக்ஷாத்கரித்து அதன்மூலமாய் ஹம் என்பதின் பொருளாகிய சிவத்தை யடைய வேண்டும். ஸோஹம் என்பதின் பொருளாகிய உபாதியுள்ள ஜீவன் உபாதிகளற்றதும், அதாவது மந்திரத்தி லுள்ள வியஞ்சனங்களை (=மெய்யெழுத்துக்களைத்) தள்ளிப் பார்க்க ஓம் என்கிற பிரணவமாக மிஞ்சி நிற்கும். ஆகவே ஹம்ஸ மந்திரம் ஜீவனைக் குறிப்பதாகவும், பிரணவம் பிரஹ்மத்தைக் குறிப்பதாகவும் சொல்லப்படும். மேலும் சூதசம்ஹிதையில் யஞ்ஞ வைபவ கண்டத்தில் ஏழாவது அத்தியாயத்தில் இவ்வாத்ம மந்திரமானது மகாவாக்கியங்களின் உட்பொருளையே அமைத்துள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஸோஹம் என்கிற பதத்தை ஸஃ+அஹம் எனப்பிரிக்க 'அவன் நான்' அதாவது பரப்ரஹ்மமாகிய அவனே நான் எனப் பொருளாகும். இவ்விதமே ''ஹம்ஸஃ'' என்பது, முதலிலுள்ள லோபமடைந்த அகாரத்தை சேர்க்கவே அஹம் + ஸஃ அதாவது அவ்னே நான் எனப்பொருள்படும். ஆகவே பூர்ண வாக்கியமானது '' ஹம்ஸஸ்ஸோஹம் ஸோஹம் ஹம்ஸஃ'' என நிற்கும்.

இங்ஙனம், விவேகசிந்தாமணி
உபநிஷதர்த்த தீபிகையில் நான்காவது
ஹம்ஸோபநிஷத் வாச்சியார்த்தம்
ஸம்பூர்ணம்.

---

## '' The Sins of the Parents visited on their Daughters. ''

## '' மாதாபிதாக்கள் செய்த கர்மம் மக்களைக்காக்கும்.''

''மாதாபிதாக்கள் செய்தகர்மம் மக்களைக் காக்கும்'' என்பதோர் பண்டைக் காலத்துப் பழமொழி. நவீனநாகரிகம் நிறைந்த இக்காலத்தில் மற்றெல்லாவற்றிற்கும் நவீனமானதோருபயோகம் ஏற்பட்டிருப்பதுபோ லிதற்கும் நவீனமான உபயோகமொன்று ஏற்பட்டிருக்கிறது. இதன்பூர்வார்த்தம் என்னவெனில் தேஹ பாரம்பரையில் மாதாபிதாக்கள் தம்மக்கள் உத்பத்திக்கு மூலமாயிருக்கிறார்களாதலால், அவர்களுடைய கர்மம் பாரம்பரிய தர்மவிதிப்படி (Law of Heridity) அவர்கள் மக்களுடைய தேஹதருமத்தில் வினைப்பயனாய் விளங்கும் என்பதாம். இது சாஸ்திரத்திற்கும் சங்கல்பத்திற்கும் ஒத்ததோர் உண்மையாம்.

ஆனால் இக்காலத்தில் விவாகதர்மம் கெட்டுக்கிடப்பதால், புதுமணஞ் செய்துள்ள போக்கிலித்தம்பிரான்கள் 'மாப்பிள்ளை முறுக்கு' முறுக்குவதில் முன்பின் யோசனையின்றிப் பெண்ணைப்பெற்றோரை மருட்டியுருட்டிக் காசுபறிப்பதற்கு வாய்ந்ததோர் வசனமாக உபயோகிக்கிறார்கள். பெண்ணைக் கொடுத்தால் போதும் என்றிருக்கும் பேமானிகளெல்லாம், பெண்ணை வதுவைகொண்டதும் வரம்புகடந்து மானங்கெட்டு மரியாதைகெட்டு நடந்து கொள்வதுமன்றி வியவஸ்தையில்லாமல் மாமனாரைக் 'காசு பணம்கொடுத்தாலாச்சுது, இல்லாவிட்டால் உன்பெண்ணை என்னபாடுபடுத்துகிறேன்பார்!' என்று பயமுறுத்துகிறார்கள். என்னதான் குலம், கோத்திரம் விசாரித்தாலும் இக்காலத்தில் விவாகத்துக்குப் பணம்வாங்குகிறதென்கிற வழக்கமொன்று ''நல்லமரத்திற் புல்லுருவிபாய்ந்தாற்போல்'' ஆதியாயுள்ள விவாகஸம்ஸ்காரத்தில் ஓர் துர்வாசனையாகப் பற்றிவிட்டபடியால், உத்தமகுணம்வாய்ந்தபிள்ளைகளன்றி மற்றதுகளெல்லாம் கலியாணத்தில் தாலிகட்டினது முதற்கொண்டு இரண்டொருபிள்ளை பெறுகிறவரையில் துள்ளிக்குதித்து தொப்பென்று விழுகிறதுகள். துள்ளினமாடு பொதிசுமக்கும் என்பதாக முன்னே பெண்ணைப் படுத்தினதற் கெல்லாம் பின்னுக்குவட்டியும் முதலுமாக ஸம்ஸாரம் தலையிலுரைத்ததும் பட்டனுபவிக்கிறார்களானாலும், இவர்கள் செய்யும் மூர்க்கத்தனம் இந்த மூர்க்கரை மணந்தபெண், இவர்கள்சம்பந்தஞ் செய்தகுடும்பம், அவர்கள் உற்றார் உறமுறையாரெல்லாருக்கும் வீணான மனவருத்தத்தையும் வியாகூலத்தையும் கொடுக்கிறது. ''காசுபெறாத மாப்பிள்ளை'' யெல்லாம் ''காசுக்குவீங்கி'' பேச்சைவிட்டுப் பெற்றோர்மனத்தைப் புண்படுத்துகிறார்கள். லஜ்ஜைகெட்ட இவர்களது உபத்திரவம் பொறுக்கப் பொறாமல், சிலர் இந்தப்பேமானிக்கு வாழ்க்கைப்பட்டு வரும் சுகத்தை நம்பெண் அனுபவிக்காமலிருப்பதே மேலென்று மாப்பிள்ளையை மரப்பிள்ளையாக்கித் தெருவில் விட்டுவிடுகிறார்கள். சிலர் அவ்வளவுக்குத் துணியாமல் தம் குழந்தை முகத்தைப் பார்த்து

இவர்கள் ஆடும் பேய்க்கூத்தையெல்லாம் பொறுத்தும்பொறுக்கமாட்டாதவர்களாய் வருந்துகிறார்கள். இன்னும் சிலர் "தலைவிதி" யென்று வந்ததை யனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள். பின்னும் சிலர் இந்தத் துள்ளுத்துள்ளுவதெல்லாம் கொஞ்சகாலத்திற்குத்தானே பார்த்துக்கொள்வோமென்று தைரியமா யிருக்கிறார்கள். இவர்கள் இக்கஷ்டத்தையெப்படிப்பொறுத்துக்கொண்டாலும், இந்தக் கோணங்கி மாப்பிள்ளைகள் செய்யுங் குரங்காட்டங்களை யெல்லாம் எப்படிச்சகித்து நிர்வகித்துக் கொண்டாலுஞ்சரி 'மனம் குவிந்து மலர்ந்து' அன்பெனும் அருக்கன் ஒளிகண்டு மகிழுங்காலையில் அதற்குச் செய்யப்படும்தீங்கு நமதுஜாதிவீரியத்தையும் தேஜஸ்ஸையும் குறைக்குந்தன்மையதாகிற தென்பது நிச்சயம். ஆகையால் இப்பொழுது "விவாகஸம்ஸ்காரம்" இப்படி சந்தையிற் கந்தப்பொடி தூவின சமாசாரமா யிருப்பதை மாற்றிப் பூர்வம் அதற்கு ஏற்பட்டுள்ள மணகுண மஹிமையையும் தகைமையையும் குறையாதபடி காப்பாற்றுவது எப்படி யென்று விவேகிக ளெல்லாரும் வழிதேடிக் கொண் டிருக்கிறார்கள்.

ஒருவர் 14 வயதுவரையில் விவாஹம் கூடாதென்று சட்டமுண்டுபண்ணவேண்டுமென்கிறார். இது 'இந்தியன் ஸோஷியல் ரிபார்மர்' பத்திராசிரியர்கருத்து. மற்றொருவர் 16-வயதுவரையில் கன்னியாதோஷம் கழியாமையால் விவாக ஸம்ஸ்காரமான பெண் 16-வயது ஆகுமுன் புருஷனோடு கூடிவாழ அருகளல்ல வென்கிறார். இது ஸ்ரீசிவகங்கை ஸ்வாமிகளுடைய அபிப்பிராயம். ஒருவர் ஸ்ரீதனமெல்லாம் பெண்ணுக்குப்பின் பிறந்தஹத்துக்காரர்களைச் சேரவேண்டுமென்பது பிராசீனமானசம்பிரதாயமாயிருக்க, பிரிட்டிஷ்கோர்ட்டார் அதைவிட்டு, இப்பொழுது கலியாணமானபெண்ணின் ஸ்ரீதனம் அவளிறந்தால் அவள்கணவனைச் சேர்ந்ததாகிற தென்று தீர்ப்புச் செய்திருக்கிறார்களென்றும், இதனால் எத்தனையோபேர் ஸ்ரீஹத்திதோஷத்துக் காளாகிறார்களென்றும், ஒருவனுக்கு இப்படிஇரண்டு மூன்று பெண்டாட்டிகள் செத்தால் சீக்கிரம் அவன் பணக்காரனாய் விடலாமென்றும், இதுபெண்டாட்டியைக்கொல்லப் பலதானம் கொடுப்பதுபோலாகிறதென்றும், இந்தநவீனமான ஏற்பாட்டைக் கோர்ட்டார் மாற்ற வேண்டுமென்றும் சொல்கிறார். இது உலகத்தில் அடிபட்டனுபவசாலியான ஒருவர் அபிப்பிராயம். இன்னொருவர் இன்னொருவிதமாக அபிப்பிராயப் படுகிறார்.

இப்படி பரிகாரந் தேடுவதில் பலர்பலவிதமாயபிப்பிராயப்பட்டாலும், வியாதி என்னவோ பரிகரிக்கவேண்டியது தான் என்பதைப்பற்றி எல்லாரும் ஒரேமனதாய் உறுதிகொண் டிருக்கிறார்கள்.

"விவாகம்" நமக்குள் ஓர் ஆத்மஸம்ஸ்காரம். அப்படியென்றால் ஆத்மா அனுபவித்தறிய வேண்டிய அனுபவங்களில் ஒன்று. பூணூல்போடப் பெற்றவன் எப்படி பிரஹ்மத்தையறிய யத்தனித்துழைத்துக் குருகுலவாசஞ்செய்து வித்யாஸம்பந்நனாகியும் பிரஹ்மத்தை யறியாமல் தானே, பிரஹ்மசாரி விரதத்தை முடித்துவிட்டு, கிரஹஸ்தனாக இல்லறம் நடத்திபிரஹ்மசாக்ஷாத்காரம்பெறுவேனென்று கிரஹஸ்தாச்ரமம் புகுகிறானோ அப்படியே, விவாகஸம்ஸ்காரமானபெண்ணும் இல்லறம் நடத்தவேண்டித் தன்னைக் கைப்பிடித்த குலமகன் இல்லறதர்மத்தையுணராதவனாகவாவது, உணர்ந்துநடக்கப் போந்த சமர்த்திலானாகவாவது இருப்பதாகத் தென்பட்டால் கிரஹிணியாகாமல் தானே நித்தியகன்னிகையா யிருந்து தன்னுடைய தபோமஹிமையால் நற்கதியடையலாம். அடையப் பாத்திரமும் ஸ்வதந்திரமுமுள்ளவள் என்பது உத்தமசீலர்களான சிலபெரியோர்களுடைய கொள்கை. இது ஸநாதநமான தர்மத்துக்கு ஒத்ததாயுமிருக்கிறது. உத்தமியான ஒருபெண் தன்னுடைய பதிவிரதாதர்மத்



தாலே அதமனையும் நல்வழிக்குக் கொணர்ந்து தானும் நற்கதிபெறலாம். இதுமிகவும் அருமையானது. ஏனெனில் அவ்வளவு மஹிமையுள்ள பெண் சாக்ஷாத்கௌரியம்சமென்றுசொல்லவேண்டுமே யன்றி அவளை மானிடப் பெண்ணாகச் சொல்லக்கூடாது. இதுபூர்வஜன்மவாசனைமுதிர்ச்சியாலேயே பொக்கத் தக்கது. அவ்வளவு பரிபக்குவம் பெறாதவர்கள் இந்தஜன்மத்தில் தமது சொந்த முயற்சியால் இந்திரியநிக்கிரகம் செய்து முன்னுக்குவரலாம். இதிலும் எவ்வளவோ கஷ்டமிருக்கிறது. ஏனெனில் பெண்பால் அடிமையானதினாலே, துஷ்டர்களினின்றும் காப்பாற்றத்தக்க புருஷன் ஒருவன் அவளுக்கு வேண்டிய தவசிய மென்பர். இதுநிஜமேயானாலும், பால்யவிதந்துக்கள் விஷயத்தில் அப்படிப்பட்ட கொள்கை யனுஷ்டிக்கப் படாமையினாலே, விவாகஸம்ஸ்காரமான பெண்ணும் அவளுடைய விவேகவைராக்கியத்தினாலே தனக்குவாய்த்த துர்த்தனொருவனைச் சேர்ந்து இல்லறம் நடத்துவது இயலாதென்றுணர்ந்து உணர்ந்தபடிநடக்கத்துணிவும்தைரியமுமுள்ளவளாயிருப்பாளாயின், அவள் இஷ்டத்திற்குவிரோதஞ்செய்வது தர்மமல்ல. இராஜாங்க நிர்ப்பந்தத்தால் அவள்தனக்கு இஷ்டபங்கம்வராதபடி காப்பாற்ற உத்தமரெல்லாரும் உடன்பட்டுழைக்கக் கடன்பட் டிருக்கிறார்கள். இந்தக்கடமையை ஜீவன் முக்தர்களான பெரியோர்களும் மகரிஷிகளும் செலுத்தத் தக்கவர்களேயன்றி மற்றப்படி சாமானியமான உலகபந்தங்களுக் குட்பட்ட கர்மிகள்செலுத்தவல்லமைவாய்ந்தவர்க ளாகார்கள். இஷ்டநஷ்டம் வந்தால் அது யாருக்கும் நன்மைபயக்காது. இஷ்டத்தின் வலியைப் பற்றித் திருமூல தேவர் இந்தத் திருமந்திரம் உபதேசித் திருக்கிறார்.

"கொட்டுக்குந்தாலியிரண்டேயிரண்டிற்குங்
கொட்டுக்குந்தாலிக்கும்பாரைவலிதென்பர்
கொட்டிக்குந்தாலிக்கும்பாரைக்குமூன்றிற்கு
மிஷ்டம்வலிதென்பரீசனருளே."

* கொட்டு=மண்கொட்டு. குந்தாலி=மரம்வெட்டுகிற கோடாலி. பாரை=கல்பிளக்கிற உளிப்பாரை.

# Kannaki—A Social Drama.
## கண்ணகி.

அங்கம். III.] [காட்சி 1.

இடம்:—காவிரிப்பூம்பட்டினத்தில்மாதவியின்வீடு.
காலம்:—மாலைக் காலம்.

பாத்திரர்:—
- மாதவி, மாதவியுடையசகி.
- தாய்க்கிழவி,
- கௌசிகன்,
- பக்கத்துவீட்டுப் பருவதம்.

மாதவி கட்டிலின்மேல் படுத்துக்கொண்டு தானாகவேபேசிக்கொள்ளுகிறாள்: "ஆ!தெய்வமே!பெண்புத்தி பேதமை யென்று உலகத்தோர் சொல்லுவார்கள். அந்தப்பழமொழி என்விஷயத்தில்தானா பலிக்கவேண்டும். கடற்கரையில் எனதருமைக் காதலன் கோவலனும் நானும் விளையாட்டாயும் பரிகாசமாயும் பேசிக்கொண்டது வினையாக முடிந்ததே. இந்தப் பாவிச்சிறுக்கியாகிய நான் பின்னால்வருவதை முன்னதாகயோசியாமல் அன்னியபுருஷன் ஒருவன்மீது காதல்கொண்ட பாவனையாக நடித்து அதற்குரிய வரிப்பாட்டையும் பாடினதினா லல்லவோ இவ்வளவு தீங்கும் விளைந்தது. அப்படியாவது நான் வாஸ்தவத்தில் பிற புருஷனை இச்சித்ததுண்டா! இல்லையே. இல்லையென்றால் யார்நம்புவார்கள்! அந்த ஈஸ்வரனுக்குத்தான் கோவலன்மீது எனக்குள்ள அடங்காக்காதல் தெரியுமே யொழிய மற்றயாருக்குத்தான் தெரியும். யார்தான் உள்ளபடி என் மனோநிலைமையை அறியப் போகிறார்கள்! ஒருவருமில்லை. இவ்வளவுகாலம் பழகியும் கோவலன் இந்த மாதவியினுடைய மனோநிலைமையை அறியாமற் போனாரே. அதுவும் என்காலவித்தியாசம் தான், துர்ப்பாக்கியந்தான். அன்னியபுருஷன்மீது நான்இச்சைகொண்டிருப்பதாக நினைத்தல்லவோ அவர் என்னை நிராகரித்து அந்நிய தேசம் சென்று விட்டார். இதற்குநான் என்னசெய்வேன்! நான் அவரை எப்போது காண்பேன்? "கோவலா" என்று மனமகிழ்ந்து நான்அவரை எப்போது அழைப்பேன் ? ஜெகதீசா! ஒன்றும் தோன்றவில்லையே! [மௌனமாகச்சிந்திக்கிறாள்.]

பருவதம்:--(மாதவியின் வீட்டுக்குள் சென்று கூடத்தில் உட்கார்ந்திருந்த தாய்க்கிழவியைப்பார்த்துப் புன்சிரிப்புடன்) என்னபாட்டி, சாவகாசமாய் உட்கார்ந்திருக்கின்றாயே! உண்டுகளித்து உல்லாசமாய் வீற்றிருக்கும் நினதுபாக்கியமேபாக்கியம்.

தாய்க்கிழவி:—என்னடிகுட்டி,என்னமோ கடமுடகடமுடங்கிருயே! நீ சொல்றது எனக்குப்புரியிலே.நீ படிச்சபடிப்பேஎங்கிட்டத்தானுடிகாட்டணும்! சாதாரணமா நாங்கள்ளாம் பேசுருப்லேபேசேண்டி.

பருவதம்:—அங்ஙனமன்று பாட்டி; படித்தவர்களுக்கும் பாஷாபிமான முடையவர்களுக்கும் அழகு இலக்கண சுத்தமாய்ப் பேசுவதன்ருே?நான்பேசுவது இலக்கணமாய்த்தானிருக்கும். நினதுபுதல்வி மாதவி யாண்டுளாள்? சடுதியிற் சாற்றுமின்! (புன்னகை புரிகிருள்).

தாய்க்கிழவி:—எலக்கணுமாம்! பிலக்கணமாம்! என்னுடி பூச்சிபுடிக்கிறே! காற்று கீற்று என்று வாயில் வந்தபடிக்கி உளறிப்புட்டு இலக்கணம் வடிக்கிருளாம் எலக்கணம்! உன்னுடைய படிப்பை யெல்லாம் சுருட்டி மூலையிலேவச்சுப்புட்டு எங்களாட்டம் பேசு. அப்போத்தான் உன்கூடப் பேசுவேன். இல்லாவிட்டால் நான்வந்திரிச்சுப்போறண்டி போடி வேலெமெனக்கட்டவளே! (எழுந்திருக்கிருள்.)

பருவதம்:--(எழுந்திருந்தவளை இழுத்துஉட்காரவைத்து) இல்லேபாட்டி,இல்லே. நீசொல்லுகிறபடியே பேசுகிறேன்.கோபித்துக்கொள்ளாதே. உன்னுடைய மகள் மாதவி எங்கே? என்னசெய்கிருள்?

தாய்க்கிழவி:—அந்த வயத்தெரிச்சலே இப்ப எண்டி கிளப்பறே! எவஞே தடிப்பய இவளைவிட்டுட்டுஊருக்குப்பூட்டாணும்!மவஉருகிப்போரு!எப்போ பாத்தாலும் அழுது வழிந்தபடியே இருக்கா. அந்தப் பய தொலஞ்சா இவளுக்கென்ன? அவனாலே ஒத்த செப்புக்காசுக்குப் பிரயோசனமுண்டா? நித்தம் ஒண்ணுக்கு எத்தினியோ கிராக்கிவருது. அதையெல்லாம் விட்டுட்டு இப்படி இருந்தாக்கா நம்பகுலம் விருத்தியடைவது எப்படி? இந்தக் கழுதைமூண்டையை விட்டுதொலைஞ்சுபோவலாண்ணாலும் நமக்குக் காலம் வல்லே, (அழுதகண்ணும் சிந்திய மூக்குமாகத் தேம்பித்தேம்பி ஆத்திரம் அடைக்கச்சொல்லுகிருள்).

பருவதம்:--இதற்காக என் இப்படி வருத்தப்படுகிருய்?மாதவி எங்கேஇருக்கிருள் சொல்லு.நான்போயவளுக்குவேண்டிய புத்திமதிகளைச் சொல்லுகிறேன்.

தாய்க்கிழவி:—ஆமா, அந்தப் படித்த மூண்டத்துக்கு இந்தப்படித்தமூண்டம் போய் புத்திசொல்லப் போவுதாம்! அவளை படிக்க வச்சது மகாபிசகாப்போச்சு. அந்தப்படிப்பினுலே வந்தகேடுதானே இதெல்லாம்! இல்லாட்டி அவபாட்டுக்கு செவனேண்ணு குலத்துத்தொழிலே செஞ்சிக்கிட்டிருப்பாள்ள?

பருவதம்:—இருக்கட்டும் பாட்டி;அவள் எங்கேயிருக்கிருள் சொல்லேன்?

தாய்க்கிழவி:—மாடிமேலே கட்டில்லே சாஞ்சு கெடக்கிரு போய்ப்பாரு.

பருவதம்:—(வெகுவிரைவாக மாடிக்குச்சென்று மாதவி படுத்திருக்கும் அறைக்குச் சமீபத்தில் மறைந்து சற்றுநேரம் நிற்கிருள்).

மாதவி:—(தனக்குள்) ஐயோ! இந்தஜென்மத்தை நான் இன்னமும் என் வைத்திருக்கவேண்டும்? கோவலா! உன்னை மறுபடியும் பார்க்கலாம், உன்னுடைய அன்பைப்பெறலாம் என்னும் நம்பிக்கை இருந்தாலும் இந்தப்பாழும் ஜென்மத்தை வைத்திருப்பேன். ஒருகுற்றமு மறியாத என்னை என் இப்படி வருத்துகின்ருய்? அன்பனே! போதுமடா! உன்னுடைய வர்மத்தை விட்டு விடடா! (மௌனம்).

பருவதம்:—(மெதுவாக அவளுடையஅறைக்குள் சென்று) என்னமாதவி! நிஷ்டையி லிருக்கிருய்? என்னோடு பேசலாகாதா? கோவலனுடைய தியானமே பெரியதியானமாக இருக்கிருய் போல்தோன்றுகிறது.

மாதவி:—(நாணத்தினுல் தலைகவிழ்ந்து சற்றுநேரங்கழித்து) அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. எங்கே இவ்வளவு தூரம்? உட்காரு (ஒருநாற்காலியைக் காட்டுகிருள்.)

பருவதம்:—மாதவி! நீ செய்கிறதொன்றும் நன்ருயில்லை. கோவலன் போய்விட்டால் என்ன மோசமுழுகிப்போய் விட்டது? இதற்காக இப்படி வருத்தப் படுவார்களா? அடி பயித்தியமே!

மாதவி:—பருவதம்! நான் உன்னைக் கோவலன் விஷயமாக யோசனை கேட்கவில்லையே. நீயாக என் அநாவசியமாக அவர்விஷயத்தை எடுக்கிருய். வேறு பேச்சு இருந்தால் பேசு.

சகி:—(மாதவியிடம் வந்து) அம்மா! கௌசிகரை அழைத்துவரச் சொன்னீர்களே. இதோஅழைத்து வந்திருக்கிறேன். திண்ணையில் உட்கார்ந்திருக்கிருர். உள்ளே வரச்சொல்லட்டுமா?

மாதவி:—ஆ! அப்படியா!கௌசிகர் வந்து விட்டாரா!சீக்கிரம் இங்கே அழைத்துக் கொண்டுவா.(பருவதத்தை நோக்கி) பருவதம்! வந்திருக்கும் கௌசிகருடன் நான்சில சங்கதிகள் பேசவேண்டும். நாளையதினம் வா.அவகாசமாய்ப் பேசிக்கொண்டிருப்போம்). இப்படிச் சொல்லுகிறேனே என்று வருத்தப்படாதே. தயைசெய்து மன்னிக்கவேண்டும்.



பருவதம்:—வருத்த மொன்று மில்லை; நாளைக்கு வருகிறேன்.வந்த மனுஷாளைக்கவனிக்க வேண்டியது முக்கியமே ஒழிய நம்முடைய பேச்சு முக்கியமல்ல. நான் போய்வருகிறேன் (பார்வதி மாதவியை விட்டு நீங்குகிருள். சகியும்,கௌசிகரும் உள்ளே வருகிருர்கள்).

கௌசிகர்:—(உள்ளே வரும்போதே) "என்ன மாதவி! சௌக்கியமா? எப்படி யோகக்ஷேமங்களெல்லாம்?" (என்றுகேட்டுக் கொண்டேவருகிருர்).

மாதவி:—(சந்தோஷத்தோடு) மாமாவாகிய தாங்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறை ஏற்படப்போகிறது? தங்களுடைய தயவுமட்டும் இருக்க வேண்டும். (சகியை நோக்கி) அடியே! மாமாவுக்கு தாகத்திற்கு நீர்மோர் கொண்டுவாடி! கிழப்பிராமணர் வெயிலில் வந்து களைத்துப்போயிருக்கிருர்.

கௌசிகர்:-என்னடி குட்டி! ஒருநாளுமில்லாத உபசாரம் செய்கிருய்? என்னுல் ஆகவேண்டியகாரியம் ஏதோ இருக்கிறதுபோலத் தெரிகிறது. அதனுல் தான் இவ்வளவு உபசாரம்!

மாதவி:—மாமா! என்னைப் பரிகாசம் செய்வது பின்பு ஆகட்டும். உங்களால் ஆகவேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. அது உங்களால்தான் முடியும்; அதை எப்படியாவது முடித்துவைக்க வேண்டும்.

கௌசிகர்:—என்னுல் ஆகவேண்டியது என்ன அதைச்சொல்லு;பின்பு முடியும் முடியாதென்பதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

மாதவி:—உங்களால் முடியாத காரியமும் உண்டா!முடித்துத்தருவதாக வாக்குக் கொடுங்கள். பின்பு சொல்லுகிறேன்.

கௌசிகர்:—என்ன உபத்திரவப்படுத்துகிருயே! சரி! முடித்துத் தருகிறேன் சொல்லு.

மாதவி:—(மேசையைத் திறந்து தான் ஏற்கெனவே எழுதிவைத்திருந்த கடிதத்தை அவர்கையில் கொடுத்து) மாமா! கோவலன் மதுரைநாடிச்சென்றிருக்கிருர். இந்தக் கடிதத்தை நீங்கள் அவரிடம் கொண்டுபோய்க் கொடுத்துஅவரை இங்கு அழைத்து



வரவேண்டும். அல்லது என்னை அவரிடம் அழைத்துக் கொள்ளும்படியான மார்க்கத்தைத் தேடவேண்டும். இதில் தான் உங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கப் போகிறேன்.

கௌசிகர்:—பேஷ்!நல்ல உத்தியோகம் கொடுத்தாய்.பிராமணகுலத்தில் பிறந்துவிட்டு இந்தப் புண்ணியமான வேலைக்குத்தானு வரவேண்டும்! (சகி கொண்டுவந்து கொடுத்த நீர்மோரை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே)காவிரிப்பூம்பட்டினம் எங்கே! மதுரை எங்கே!மதுரை உங்கள் வீட்டுக் கொல்லைப் புறத்தில் இருப்பது போல் சுலுவாச் சொல்லி விட்டாயே! என்னுல் போக முடியாது.

மாதவி:—மாமா! மாமா! அப்படிச் சொல்லக் கூடாது. தயை செய்ய வேண்டும்; கிருபை புரிய வேண்டும் (அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிருள்).

கௌசிகர்:—இதேது சங்கடமாயிருக்கிறதே! தெரியாத்தனமாய் உன்னிடத்தில் வந்து அகப்பட்டுக் கொள்ளுவேனு? நீ பல்லைக்காட்டுவதைப் பார்த்தால் பரிதாபமா யிருக்கிறது, என்ன செய்கிறது! சரி போய்வருகிறேன் (கடிதத்தை மடியில் வைத்துக் கொண்டு) வழிச்செலவுக்கு ஏதாவது கொடு.

மாதவி:--அதற்கென்ன?வேண்டியது தருகிறேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் (ஐந்தாறு பொன் நாணயங்களை கௌசிகரிடம் கொடுக்கிருள்).

கௌசிகர்:—நான் போய்வருகிறேன்! என்னமோ என்னுல் கூடிய வரையில் பிரயாசைப்படுகிறேன்; முடிந்தால் உன் அதிர்ஷ்டம். முடியாவிட்டால் நான் என் செய்கிறது.

மாதவி:—என்ன மாமா! பரிகாசம் செய்கிறீர்கள்! பிழைப்பதற்காக நீங்கள் எங்களை நாடி இவ்வூருக்கு வந்துவிட்ட போதிலும் கும்பகோணத்து ஐயர்களுடைய சாமர்த்தியம் கும்பகோணத்தில் பிறந்த தங்களுக்கு இல்லாமல் போய்விடுமா! ஜெயத்துடன் திரும்பவேண்டும்.

கௌசிகர்:—நல்லது;போய்வருகிறேன். (மாடியை விட்டிறங்கிச் செல்லுகிருர்).

மூன்றும் அங்கம் முதலாவது காட்சி

முற்றிற்று.

# Kannaki—A Social Drama.

## கண்ணகி.

அங்கம். 111] [காட்சி 2.

இடம்:—உறையூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு தோ[ப்பு.

காலம்:—நண்பகல்.

பாத்திரர்.
- கண்ணகி.
- கோவலன்.
- கௌந்தி.

கண்ணகி:—நாதா நாம் காலையிலேயே உறையூரை விட்டுப் புறப்பட்டு இன்னும் பாதிவழி கூட வந்தபாடில்லையே. வெயிலோ கடுமையாக எரிக்கிறது; கால் கொப்புளித்துப் போகிறதே! நாவோ உலருகிறது! என்னால் நடக்க முடிய வில்லையே! ஆ அப்பாடா உ ஸ்! [மயக்கத்தினாலும் களைப்பினாலும் தள்ளாடுகிறாள்.]

கோவலன்:—பிராணகாந்தி! இன்னும் கொஞ்ச தூரம் சிரமத்தைப் பாராமல் மெதுவாக நடந்து வா. அதோ தெரிகிறதல்லவா ஒரு புளியந்தோப்பு, அங்கு சென்று தங்கி சற்றுநேரம் இளைப்பாறி வெயில் தணிந்த பின்பு மறுபடியும் புறப்படுவோம் (தன்னுடைய மேல் வஸ்திரத்தினால் கண்ணகியின் முகத்தைத் துடைக்கிறான்).

கௌந்தி:—கண்ணகி! இப்போதாவது புத்தி வந்ததா; கோவலன் ஊரை விட்டுப் புறப்படும் போதே உன்னை வரவேண்டாமென்று சொன்னானே, அவனுடைய வார்த்தையைத் தட்டிவிட்டு வந்தாயே; அதனுடைய பலன்தான் இப்படி வந்தது! என்ன செய்யலாம்! புருஷன் வேண்டுமென்றால் வெயிலையும் மழையையும் பார்த்தால் சரிப்படுமா!

கண்ணகி:—(நாணத்தினால் தலை குனிந்தபடியே) தெரியாமற்றான் வந்து விட்டேன், என் மனம் இதோ காயும் கதிரவனின் மனதைப் போன்ற கல் மன மன்று. அதனால் வந்தேன்.

கோவலன்:—(புன்சிரிப்புடன்) உனது இளகிய மனம் உருகி நெற்றியெல்லாம் வியர்வை உண்டாகி விட்டது. சற்று வேகமாய் நடந்துவா (தன் கையைக் கொடுத்து அழைத்துச் செல்லுகிறான்).

கௌந்தி:—அம்மா கண்ணகி; இனி உன் கவலையை ஒழித்து விடு; இதோ நந்தவனத்தை நெருங்கி விட்டோம்?

கோவலன்:—(நந்தவனத்தை நெருங்கி) ஆஹா! என்ன அழகான நந்தவனம்! (கௌந்தியை நோக்கி) மாது ஸ்ரீ! இந்த வனத்தைச் சுற்றிப்பார்த்து விட்டுப் பிறகு புளியந் தோப்புக்குச் சென்று தங்கலாமென நினைக்கிறேன். இன்னும் பொழுது இருக்கிறது; தங்களுடைய அபிப்பிராய மென்ன?

கண்ணகி:—ஆமாம் அப்படியே செய்யலாம். இந்த நந்தவனத்திலிருக்கும் பற்பல வகையான புஷ்பஜாதிகளையும், பறவைக் கூட்டங்களையும் பார்த்தால் இயற்கை யமைப்பின் அற்புதங்களும், கடவுளுடைய அருமைத் திருவிளையாடல்களும் இனிது விளங்குமல்லவா?

கௌந்தி:—கண்ணகிக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதமே.

கோவலன்:—ஆனால் சரி வாருங்கள். (மூவரும் நந்தவனத்துக்குள் நுழைகிறார்கள்).

கண்ணகி:—சந்தோஷத்தினால் உடலும் உளமும் பூரித்து "கோவலா! இதோபார்த்தாயா பாரிஜாதம், அதோபார் மல்லிகைப் புஷ்பங்கள், ரோஜா, செண்பகம், இருவாட்சி, ஜாமந்தி புஷ்பங்கள் செடிகள் நிறையமலர்ந்திருக்கின்றன. பகுத்தறிவும், உணர்ச்சியுமில்லாத இந்த புஷ்பஜாதிகள் மனித சஞ்சார மில்லாத இந்த இடத்தில் எவ்வளவு சந்தோஷமாயும் முகமலர்ச்சியாயு மிருக்கின்றன. அப்படியிருக்க, பகுத்துணர்வோடு கூடிய நான் கொஞ்சதூரம் வெயிலில் நடந்துவந்ததற்கு மிகவும் வருந்தி முகவாட்ட மடைந்தேனே! என்னே! என்ன அறியாமை! இப்புஷ்பங்களுக்கு வெயிலும் ஒன்றுதான், மழையும் ஒன்றுதான். எல்லாம் இறைவனுடைய திருவிளையாடல் என்று நினைத்து அவைகள் வெயிலிலும் மழையிலும் காய்ந்தும் நனைந்தும் வருகின்றன. ஆனாலும் அவைகள் முகமலர்ச்சி யுடனேயே இருக்கின்றன. இப்புஷ்பங்களால் எனக்கு ஒரு நற்போதனை கிடைத்தது. சுகமுண்டாவதும், துக்கமுண்டாவதும் கடவுளுடைய செயல் என நினைத்துப் பொறுமையோடு சகித்துக் கொண்டு வருவதே அறிவுடையவர்களுக்கு அழகு என்னும் இந்த அருமையான நீதியை எனக்கு இது வரையில்போதித்தவர்கள் ஒருவருமில்லையே. இப்புஷ்பங்களல்லவா எனக்கு இந்த நீதியைப் போதித்தன. முழுமணம்வீசும் முல்லைமலரே உனக்கோர் வந்தனம். மலர்முகமுடைய மல்லிகையே உனக்கோர் நமஸ்காரம். வண்புடைய பாரிஜாதமே உனக்கும் வந்தனம். உங்களாலல்லவா நான் அரிய பெரிய நீதியைக் கற்றுக்கொண்டேன்."



கோவலன்:—புஷ்பங்களோடு நாளைக்கு வந்து பேசிக்கொள்ளலாம்; பொழுதுபோகும் சமய மாய் விட்டது; தோப்புக்குச் செல்லலாம் வா.

கௌந்தி:—கண்ணகி! இப்போதுதான் புஷ்பங்களின் இயற்கை அழகைக்கண்டு வர்ணிக்கிறாள் நீ அதற்குள் அவளை அவசரப்படுத்துகிறாய்.

கண்ணகி:—(சிரிப்புடன்) இயற்கை யழகுக்கு உள்ள வித்தியாசத்தை அவர் அறிந்திருந்தால் அவர் செயற்கையழகு செய்துகொள்ளும் தாசியாகிய மாதவியின் காலில்போய் விழுந்துகிடப்பாரா.

கோவலன்:—கண்ணகி நீதான் இயற்கை யழகுடையவள்; இப்போது திருப்தியாகிவிட்டதா.

கண்ணகி:—நான் அப்படிச் சொல்லிக்கொள்ளவில்லையே!

கோவலன்.—(சிரித்துக் கொண்டே) என்னை வீண்வம்புக்கு இழுக்கவேண்டுமென்று நினைக்கிறாயோ?

கண்ணகி:—நான் வம்புக்கு இழுக்கிறேன் என்பதும் அல்லது மாதவியின் காதலன் வம்புக்கிழுக்கிறான் என்பதும் இதோ சமீபத்திலிருக்கும் கௌந்தியடிகளைக் கேட்டால் தெரியும்.

கௌந்தி:—அதெல்லாம் ஒன்றும் எனக்குத் தெரியாது. வாருங்கள் தோப்புக்குச் செல்லுவோம் (தோப்பைநாடிப் போகிறார்கள்).

கண்ணகி:—அம்மா! தோப்புக்குள் வந்துவிட்டோம்! இனி பயமில்லை! சத்விஷயமாக ஏதாவது சொல்லுங்கள் கேட்கலாம்!

கௌந்தி:—நீதான் சொல்லு! நான் கேட்கிறேன்.

கோவலன்:—கண்ணகியைத்தான் சொல்லச் சொல்லவேண்டும். அவள் அநேக சாஸ்திரங்கள் படித்தவ ளாயிற்றே!

கண்ணகி:—சத்திரத்து சோற்றுக்குத் தாத்தையங்கார் உத்தரவோ! நான் சொல்வதற்கு ஒருவருடைய சிபார்சு என்ன?

கௌந்தி:—கண்ணகி! போதும் போதும்! வம்புக்கிழுப்பது கோவலனின் உண்மைக்காதலியா அல்லது மாதவியின் காதலனா என்பது இப்போது விளங்குகிறதே! நந்தவனத்தில் கேட்டசந்தேகம் இப்போது உனக்கு நிவர்த்தியாயிற்றா?

கண்ணகி:—அதிருக்கட்டும். தாங்கள் ஏதாவது ஒரு சத்விஷயத்தைப்பற்றிச் சொல்லுங்கள்.

கௌந்தி:—எதைப்பற்றிச் சொல்ல?

கண்ணகி:—எல்லாம்வல்ல சிவபெருமானின் அருளைப் பெறுவதெப்படி? அவருடைய பேரிலக்கணமென்ன? இவைகளைப் பற்றிச் சொல்லுங்களேன்!

கௌந்தி:—அவரிடத்தில் அன்புசெலுத்தினால் அவருடைய அருளைப்பெறலாம். அவர் செஞ்சடையும், வெண்ணிலவும் சிரசில் உடையவர். வெண்ணீறணிந்த மேனியுடையவர், இன்னும் என்ன சொல்லுகிறது?

கண்ணகி:—இப்போது தாங்கள் எனக்குத் தெரியும்படி விவரமாய் அந்தரங்க அர்த்தங்களை விளக்கிச் சொல்லவேண்டும்.

கௌந்தி:—விவரமாய்ச் சொல்லவேண்டுமானால் இன்னொரு சமயம் சொல்லுகிறேன். நாழிகையாகிவிட்டது. நீங்களிருவரும் சமையல் செய்து சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கொள்ளுங்கள். மற்றக் காரியங்களை பொழுதுவிடிந்து கவனிப்போம்.

கண்ணகி:—சரி; அப்படியே ஆகட்டும்

3-வது அங்கம் 2-வது காட்சி

முற்றும்.

நாகை - C - கோபால கிருஷ்ணன்.

முக்கியக்கவனிப்பு:—சந்தாபாக்கியுள்ளவர்கள் தாமதமின்றி 17 - வது வாலியமுக்குள்ள சந்தாபாக்கியோடு, நடக்கும் 18 - வது வாலியமுக்குரிய சந்தாவையும் அனுப்பக்கோருகிறோம். அனுப்பாதவர்களுக்கு வழக்கம்போல் இனி எந்த சஞ்சிகையாவது வி. பி. பியில் அனுப்பப்படும். இதை விவேகசிந்தாமணி பெறும் எல்லாரும் தவறாது கவனித்தறியக் கேட்டுக் கொள்கிறோம்.—பத்திராசிரியர்.

# * "Nature Study" And How to Do It.

"To educate is to give the child the power of self-expression and self-development."—*Motto adopted by the author of the little book.*

"Great men are they that see that spiritual is stronger than any material force."—*Emerson.*

"Consider the lilies of the field, how they grow."—*Christ.*

"The Elements of Nature are the mode of the Will of God."—*Hermes Trismegitus.*

"Now's the time to study hard ;
Work will bring its own reward
Then work, work, work! "

"Who would like an empty purse?
Empty brain would be still worse,
Then work, work, work! "

## "இயற்கை அறிவு."

"இளமையிற் கல்."

"முயற்சி திருவினையாக்கும்."

அறிவு, இயற்கையறிவு என்றும் செயற்கையறிவு என்றும் இருவகைப்படும். இயற்கை அறிவு தானாகத்தன்மாத் திரமாய் உண்டாவது. இது ஆத்மாவின் விருத்திஞானமென்றே சொல்லல்வேண்டும். செயற்கையறிவோ இயற்கையறிவைக்கொண்டு ஜடபதார்த்தங்களை விசாரப்படுத்திச் சேர்ப்பதனால் உண்டாவதாம். வீடு கட்டுதல், நாற்காலி மேஜைசெய்யல் முதலியன செயற்கையறிவினா லுண்டாவதாம். இயற்கையறிவு பூர்வஸம்ஸ்காரத்தினால் ஆத்மாவின் அனுபவஞானமாய் உதிப்பது. சூடுண்ட பூனை அடுப்பண்டைபோக அஞ்சுவது இயற்கையறிவு. கருடனைக்கண்ட பாம்பு தானாய் ஒடுங்குவதும் இயற்கையறிவேயாம். மனிதன் பிரகிருதியின் உண்மையையறிதல் இயற்கையறிவினாலேயாம். சுருக்கச்சொல்லில், அகமுகத்திலிருந்துதித்து பஹிர்முகப்பட்டு வருவது இயற்கையறிவாம். பஹிர்முகத்திலிருந்து பிரயத்தனபூர்வமாய் உள்ளே புகுந்து, பழக்க பலத்தால் செய்யத்தக்கதாவது செயற்கையறிவாம். இவையிரண்டிற்கும் பிரகிருதி, விகிருதி யெனப் பெயர். உதாரணமாக நாம் உயிரோடிருப்பதற்குக் காரணமான உச்சுவாஸ, நிசுவாஸரூபமான மூச்சுவாங்கலை யெடுத்துக்கொள்வோம்.

இந்த மூச்சுக்காற்றானது உள்ளேபோவதும், போனவிடத்தில் சற்றுத்தங்குவதும், பிறகு வெளியே நிசுவாஸமாக வருவதும், வெளிப்போனபின் சற்றுத்தங்குவதுமாக விருக்கிறது. இதற்குப் பூரகமென்றும், (காற்றை உள்ளேயிழுத்துப் பூரித்தல் - நிறைத்தல்), ரேசகமென்றும் (காற்றை வெளியே தள்ளி நிற்றல்), கும்பகமென்றும் (போக்கு வரத்தில்லாமல் நிலையாய் நிற்றல்), பெயர். மூச்சுக்காற்றின் போக்கு, வரத்து, நிற்றல் ரூபமான இந்தச் செயல்களுக்குப் பிராணாயாமம் என்று பெயர். பிராணன் - மூச்சுக்காற்று, யமம் - வசப்பாடு. இதற்குத்தமிழில் "வாசிவசம்" என்று பெயர். வாசி யென்றால் பிராணவாயுவுக்கும் குதிரைக்கும் பெயர். பிராணன் மனோரூப ஜீவனுக்குக் குதிரையைப்போல் வாஹனமாயிருப்பதால் அதற்கு வாசி யென்னும் பெயர் இருவிதத்திலும் பொருத்தமே.

"வாசிவசம்" என்று சொல்கிற இந்தப் பிராணாயாமம் கூட இயற்கை, செயற்கை யென்கிற இருவித பிரிவினிற்குட்பட் டிருக்கும். இயற்கை - தானாக நடத்தல், செயற்கை - ஒன்றைப்பார்த்துப் பிரயத்தன பூர்வமாய் நடத்தல். இது சம்பந்தமாய் எம்பெருமான் ஸ்ரீ ஸதாசிவயோகீந்திரர் சொல்லியிருப்பதைக் கவனிப்போம். அவர்சொல்லியிருக்கிறபடி,—

"பிராணாயாமம், பிராகிருதமென்றும் வைகிருதமென்றும் இருவிதமாகும். இவையிரண்டுமல்லாமல் நின்றது கேவலகும்பகம்" என்கிறார். இவைகளில் "பிராகிருதப் பிராணாயாமமாவது, பிராணவாயு நிஶ்வாச உச்சுவாசரூபமாய் ஸ்வபாவமாகவே (தானாகவே) போக்குவரத்தாயிருப்பது. இது சகல ஜனங்களுக்கும் நடக்கிறது."

"வைகிருதப்பிராணாயாமமாவது, சாஸ்திரங்களிற்சொன்னவிதிப்படிரேசக பூரக கும்பகங்களின் கிரமமறிந்து வாயுவை நிறுத்துதல்."

"இந்தப் பிராகிருதம் வைகிருதம் என்கிற இரண்டும் எந்த மஹாத்மாவுக்கு க்ஷணமாத்திரத்திலே சித்தியாமோ அதுவே கேவலகும்பகமென்று சொல்லப்படும்."

இதில் முதலாவதான பிராகிருதம் "மௌனமந்திராதிக்யவித்யையின் பயனான" அஜபா மந்திரயோகமாம். இரண்டாவதான வைகிருதம், பிரயத்தனபூர்வமான செயற்கையின் பயனான லயயோகமாம்.

மூன்றாவதான கேவலகும்பகம் (வாயு மனதோடுகூடி ஸ்திரமாய் நிற்கின்றபடியால், காரிய காரண ஐக்கியரூப) ஹடயோகமாம்.

இந்த மூன்று விதமான செயலுக்கும், (இயற்கை, செயற்கை, கேவலம் என்கிற பெயரோடுகூடி) தான், நான், தானவன் என்கிற சப்தார்த்தங்களின் லக்ஷியங்கள் கர்த்தாவாயிருக்கும்.

தான் என்னும் சப்தார்த்தத்தின் மந்திர (அந்தர்) லக்ஷியம் ஆத்மா.

நான் என்னும் சப்தார்த்தத்தின் மந்திர (அந்தர்) லக்ஷியம் அஹங்காரபுருஷன்.

தானவன் என்னும் சப்தார்த்தத்தின் மந்திர (அந்தர்) லக்ஷியம் பிரஹ்மாத்மஐக்கிய ஸ்வரூபனான யோகி.

"அப்ராப்தப்ராபணம் யோகஃ" என்ற வாக்கியப்படி, இந்த யோகிக்குப் பெறலரும்பேறுகளெல்லாம் சித்திக்கும்.

இது பிராகிருதஞானம் என்று சொல்லும் இயற்கையின் சுவபாவத்தை அறியும் சின்மய, சிதானந்த அறிவாம்.

இப்பொழுது "இயற்கை அறிவு" என்னும் பெயர்புனைந்து நம்பார்வைக்கு வந்திருக்கும் சிறு புஸ்தகத்தின் கருத்தை நூலாராய்ச்சி முறைபற்றி விசாரிப்போம். இது சென்னை ஸப்-அஸிஸ்டெண்ட் ஸ்கூல் - இன்ஸ்பெக்டர் ம-א-א-ஸ்ரீ, என். ஸ்வாமிநாதய்யர் அவர்கள் "இயற்கையறிவு சம்பந்தமாகத் தாவரநூலும் தோட்டவேலையும் எலிமெண்டெரி பாடசாலைகளில் கற்கும் முறை"யை விளக்கிக்காட்ட வேண்டி இயற்றியதோர் 76-பக்கங்கள் கொண்ட சிறு புஸ்தகமாம். (இதன் விலை அணா 4.)

இங்கே "இயற்கையறிவு சம்பந்தமாக" என்றதற்கு வாச்சியார்த்தம் செய்திருப்பது, நாம் மேலே விவரித்தெழுதியதற்குச்சற்று மாறாகத்தோற்றும். இங்கே "இயற்கை அறிவு

* "How to do Botany (Nature Study) and Gardening in Elementary schools." By N. Swaminathan, Sub-assistant Inspector of Schools, Madras. 1910. 4 as.

என்பது "பிரகிருதி ஞானம்" என்னும் ஸம்ஸ்கிருதவாக்கியத்தின் அர்த்தத்தைத் தமிழில் தெரிவிப்பதற்கானதோர் மொழிபெயர்ப்பாக உபயோகப்படுத்தப்பெற்றிருக்கிறதாக திருவள்ளூர் டிப்டிகலெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, ஜெ. தர்மாங்கராஜா அவர்கள் எழுதியிருக்கும் முகவுரையிலிருந்தும், நூல் விஷயத்திலிருந்தும் விளங்குகிறது. ஆனால் சற்று ஊன்றி விசாரிக்கில், "இயற்கை அறிவு" என்பது "இயற்கையின் அறிவு" என்பதின் தொகுத்தல் விகாரமாகவிருக்க வேண்டுமென்று நன்றாய் விளங்குகிறது. "இயற்கை அறிவு" என்பது அப்படி தொகுத்தல் விகாரமாயில்லாமற்போனால் இயற்கையினானே அது "இயற்கையான அறிவு" என்று விரியும். அதாவது, செயற்கையறிவில்லாத இயற்கையறிவு என்றே பொருள்படும். செயற்கையறிவு என்பது "Conventional Knowledge" என்று ஆங்கிலத்தில் பெயர் பெறும். இங்கே யொன்று நன்றாய்ச்சிந்தித்து ஊன்றியுணரத்தக்கது. அது என்னவெனில் வித்யையின் இருபகுதிகளாம். வித்தை யென்பது சுத்தவித்தை யென்றும் அவித்தை யென்றும் இருவகைப்படும்.

சுத்தவித்தை யென்பது அவ்யக்தப்பிராகிருதமானது: அதாவது பொறிபுலன்களுக்குத் தோற்றாது தன்னளவாய்த்தானே பரிணமிப்பதாயிருப்பது. இதை ஈசுவரசிருஷ்டியென்றும்; ஈசுவர சங்கல்பத்தைக் காரணமாகக்கொண்டு உற்பத்தி ஸ்திதி லயவிருத்தி நிவிருத்திகளுக் குட்பட்டதென்றும் சொல்லுவர் மேலோர்.

அவித்தை யென்பது வியக்த வைகிருதரூபமானது: அதாவது, பொறி புலன்களுக்குத் தோற்றுவதாய் இயற்கையின் விகாரப்புணர்ச்சியாலுண்டாகித் தோற்றுவதும் மறைவதுமாயுள்ளதாம். மேஜை நாற்காலி செய்வது முதல் இந்திரஜாலம் மகேந்திரஜாலமீறாகவுள்ள வித்தைகளெல்லாம் அவித்தை காரணமாக, அவித்யாசம்பந்தனான (சிதாபாஸ) ஜீவனுடைய சங்கல்ப விசேஷத்தால் இயற்கை விதிக்குட்பட்டுச்செயற்கை விதிகாரணமாக உற்பத்தி ஸ்திதி லயங்களுக்குட்பட்டதாக சொற்பகாலத்துக்கு மட்டும் விளங்கி யொடுங்குவதாம். உதாரணமாக, 'மரயானை' யென்பதில்,—

மரம்.—ஈசுவர சங்கற்பத்தினா லுண்டான சுத்த வித்யாரூப பிராகிருத சிருஷ்டி.

யானை.—அந்த மரத்தின் விகாரத்தினால் அமைக்கப்பட்ட மதயானை ரூபமான வாஹனம், ஜீவனுடைய சங்கல்பத்தினாலுண்டான அவித்யாரூப வைகிருத சிருஷ்டி.

பிராகிருதமான மரத்துக்கும், வைகிமான (அம்மரத்தின் விகாரரூப)மதயானைக்கும் உள்ள சம்பந்தமென்ன?

ஒன்று அவ்யக்த ப்ராகாரமாய்ச் செய்யப்பட்டது. மற்றொன்று வியக்த விகாரமாய்ச் செய்யப்பட்டது.

ஆயினும் இவையிரண்டும் ஒன்றை ஒன்று மறைக்கும் "ஆவரணசக்தி" வாய்ந்துள்ளன.

மரத்தினால் செய்யப்பட்ட மதயானை யொன்றை நாம் பார்த்து அதன் ரூபநாமத்தை மனதில் வாங்கிக்கொள்ளும்போது அது மரம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். யாதொன்று மரம் என்கிற ஞானத்தை (அறிவை) உள்ளிருந்து மறைக்கிறதோ அதுவே ஆவரணசக்தி யென்று சொல்லப்பெறுவது.

மரத்தாலானதோர் பெரிய மதயானையை நாம் மனத்தால் கிரகிக்கும்பொழுது, அதற்கு உபாதிகாரணமான மரம் முன்போலவேயிருப்பினும், யானையின் நாமரூபத் தோற்றமான விகாரஞானம்(வைகிருத கிராஹியசக்தி) "அது என்ன தான் நாமரூபத்தோற்றத்தினால் விகாரமடைந்தாலும், அந்த விகாரங்களுக்கெல்லாம் ஆதாரபூதமாயுள்ள மரம் மரமாகவேயிருக்கிறதென்னும்" ஸ்வபாவஞானத்தை (பிராகிருத



கிராஹிய சக்தியை)மறைத்துவிடுகிறது. இந்த மறைப்பு எதனாலுண்டாகி அதன்பயனாய்"அது மரமே" என்கிற ஞானம் மறக்க நேரிடுகிறதோ அது ஆவரணசக்தி. இந்த ஆவரணசக்தியை உள்ளாய்ந்து அறிந்தவன் யாரோ அவனே "ஆத்மஞானி;" அதாவது, தன்னையறிந்தவன்.

"தன்னையறிந்தவன் தலைவனாவன்" என்கிற வாக்கியப்படி இந்த ஆத்மஞானி எல்லாருக்கும் தலைவனான ஈசுவரனுக் கொப்பாய், ஸ்வானுபவ முதிர்ச்சியில் விதேககைவல்யனாகும்பொழுது ஈசுவரனே யாவன். இதுதான் ஜன்மசாபல்லியம்—மனுஷஜன்ம மெடுத்ததற்கான நல்லபலன். இவ்வளவு தூரம்விரித்துரைத்து விளங்கவைத்ததை யெல்லாம் எம்பெருமான் திருமூலதேவர் ஒரே திருமந்திரத்தில் வெகு அழகாய்ச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்திருக்கிறார்:

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற்பூதம்."

—திருமந்திரம்.

இந்த ஆவரணசத்தியானது வித்துக்குள்ளிருக்கும் மரத்தை மறைக்கிறது; அப்படியே மரத்துக்குள்ளிருக்கும் வித்தையும் மறைக்கிறது. இதைக்கேட்ட ஒரு கற்றறிமூடனான வித்வான், இவ்விரண்டினுள்ளுமிருந்துகொண்டு அடிமுடி தெரியாது 'காரிய காரண தோரணையை' மறைக்கும் ஆவரணசக்தி யென்னவென்று விசாரிக்கப்புகாது, விவேகசூன்யத்தினால் 'மரத்துக்கு வித்துக்காரணமா, வித்துக்கு மரம் காரணமா?' என்று விசாரிக்கத் தொடங்கி காரணகாரியமான வித்தையும் மரத்தையும் புறட்டிப்புறட்டி விசாரித்து வித்திலிருந்து மரமும் மரத்திலிருந்து வித்தும் உண்டாவதைக் கண்டுமயங்கி இதற்கிது காரணமென்று சொல்லத்தெரியாமல் புத்திகலங்கி சித்தப்பிரம்மை கொண்டு "மரத்திலிருந்து வித்துண்டாயிற்றா? வித்திலிருந்து மரமுண்டாயிற்றா?" சொன்னாலாயிற்று இல்லாவிட்டால்வழி விடேன் என்று வழியில் போகிறவர்களை யெல்லாம் வழிமறித்துக் கேட்டுக்கொண்டு நிற்க, ஒவ்வொருவரும் காரியார்த்தமாய்ப் போகிறவர்களா யிருந்தபடியால் இவனோடு மன்றாடிக்கொண்டு நிற்கப்பொறாமல் பித்துக்கொண்ட வித்வானைப் பிடித்துச் சாலையிலுள்ள மரம் ஒன்றில் பின் கட்டுமுறையாய்க்கட்டிவிட்டு, "மேலேபார்த்து அந்தமரத்தைக்கேள், அதிலொரு ஜடாமுனியிருக்கிறது: அதுசொல்லும்!" என்றுபோதித்துவிட்டுப் போயினர்கள்—என்றொருகதையுண்டு.

அக்கதைப்படி, அந்தபயித்தியக்கார வித்வான் "ஹே ஜடாமுனி என்கேள்விக்கு பதில் சொல்லுகிறாயா இல்லையா?" என்று அலட்டிக்கொண்டிருக்க அவன் கருவிகரணங்களெல்லாம் அலுத்துச்சலித்து அயர்ந்து ஒடுங்கிப்போக, முடுக்கிவிட்ட யந்திரம்போல், அவன் தன் கேள்வியை மட்டும் கேட்டுக்கொண்டு மற்றப்படி பஹிர்முகவிர்த்தி யெல்லா மொடுங்கி சித்திரப் பதுமைபோல் நின்றுகொண் டிருந்தான். இவனுடைய இந்த மேலான அவஸ்தையைக் கண்ட ஒரு மஹரிஷியானவர் அவருடைய ஞானதிருஷ்டியினால் இவனுடைய கேவலகும்பக அவஸ்தையை யறிந்து, அவனது கைக்கட்டு,கால் கட்டுகளையெல்லாம் தரித்து,முடிச்சுகளை யெல்லாம் அவிழ்த்து விட்டும் அவன் பஹிர்முகப் படாமல் தானே தான்கேட்ட கேள்வியையே கேட்டுக்கொண்டு நிற்க, பெரியவர் மிகவும் இரக்கங்கொண்டு, "ஐயோ இவனுடைய கேவலகும்பகம், பிராகிருதம், வைகிருதம் என்கிற இரண்டு விதமுமின்றி ஹடாத்காரத்தினால் சித்தித்ததென்றுணர்ந்து, இதுவும் மனமடங்க ஒரு வழிதானென்று க்ஷணமாத்திரத்தில் ஊகித்தறிந்து கொண்டு, அவனுக்கு முன் நின்று, "நீ கூவிபறைந்த ஜடாமுனி நான்

தான். 'என்னையேன் இப்படி அலட்டி உபத்திரவம் செய்கிறாய்?" என்று கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை கொடுக்க, அந்த மூடவித்வான் கன்னத்தைத் துடைத்துக்கொண்டு "நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்! இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்" னென்று முன்போல் வழியை மறைத்துக்கொண்டு நின்றான்.

"நீ உண்மையறிய என்ன செய்தாய்?" என்று ரிஷியாகிய "ஜடாமுனி" அதட்டிக் கேட்க, அதற்கு அவன், "இந்தமரம் நான் வைத்துப் பயிராக்கினதுதான். வித்திலிருந்தே யிது உண்டாயிற்று"—என்று சொல்லி முடிக்குமுன்,

"நல்லது! இந்த மரத்தின் வித்தொன்று கொண்டுவா!" என்று "ஜடாமுனி" பின்னும் அதட்டிச்சொல்ல, அந்த மூடவித்வான் சூத்திரப்பதுமை போல் தன்மடியிலிருந்த பையிலிருந்து ஒரு வித்தை யெடுத்துக்கொடுத்தான்.

அதை யவர் உற்றுப்பார்ப்பவர்போல், வாயில் போட்டு விழுங்கி ஜாடராக்னியினால் தஹித்துவிட்டு, மறுபடியும் அதை வாயால் தானே வெளியேற்றி அவன் கையில் கொடுத்து, "இந்தவித்தை முன்போல் முளைக்கவை பார்ப்போம்!" என்றார்.

"இதோ பார்!" என்று முளைக்கவைத்தான். அது முளைக்க எத்தனை நாள் செல்லுமோ அதைப்போல், இருமடங்கு மும்மடங்கு காலம் பொறுத்துப்பார்த்தான். வித்து முளைக்கவேயில்லை!

"ஓஹோ! காரியம் கெட்டுப்போய்விட்டதே!" யென்று "ஜடாமுனி" காலில்விழுந்து இந்த வித்து ஏன் முளைக்கவில்லையென்று வெகு விநயமாகக் கெஞ்சிக் கூத்தாடிக்கேட்டான்.

அதற்கு அவன் பார்வையில் "ஜடாமுனி" யாகத்தோன்றி நின்ற மஹாரிஷியானவர், "இன்னொருவித்து இருந்தால் எடு!" என்று அதட்டிச்சொன்னார்.

அதையும் முன்போல் வாயில் போட்டுக்கொண்டு தன் அமிர்தவருஷத்தால் அதை நனைத்து இந்த வித்தை முளைக்கவை பார்க்கலாமென்று கொடுத்தார்.

அதையும் முன் போலவே செய்ய அது மூன்றேமுக்கால் நாழிகைக்குள் முளைத்துக் கிளைத்துச் சிறுதுளிர்விட்டு நின்றது. மூடவித்வான் அதிசயித்து, "இந்த வித்து முளைப்பதற்கும் முளைக்காததற்கும் காரணம் நீர்தான். உம்மையறிந்துகொண்டால் இரகஸியம் தெரிந்து விடும்! நீர்தான் என்னைக்காப்பாற்றவேண்டும்" என்று காலில் விழுந்து அவர்காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். இதுதான் சமயமென்று அந்த மஹாரிஷியானவர், அந்த மூடன் தன்னை ஜடாமுனியாகவே அறிந்து காலில் விழுந்தானதலால் அப்படியே அவனுக்கு அனுக்ரகம் செய்யக் கிருபைகூர்ந்து, குப்புறவிழுந்து காலைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்று ஹடம் செய்தவன் முதுகில் 'படார்' என்று பிசாசு அறைந்தாற்போல் ஒரு அறைகொடுத்து அவன் மூர்ச்சித்துப்போக, அந்த அவசரத்தில் "ஐம் பீஜம் ஹ்ரீம் ஶக்திஃ, ஶ்ரீம் கீலகம்; ஶ்ரீயைநமஃ ஓம் இதிகாரணம்" என்று அவன் வலது காதில் மந்திரோபதேசம் செய்து உடனேதாரகோபதேசமுஞ் செய்துபோக, அவன்மூர்ச்சைதெளிந்து, பீஜம், சக்தி, கீலகம் சகிதமானமந்திரத்தை ஜபமாகவுள்ளத்தில் தியானம்செய்து, அவனது ஏகாக்ரசித்தத்தின் அதியற்புதமான மநநநிதித்தியாஸன சக்தியால் வெகுசீக்கிரத்தில் அவனுக்கு மந்திரயோகம் சித்திக்க, மந்திரசித்திபெற்ற அவன், "ஶ்ரீயை நமஃ" என்னும் அஜபாமந்திர அவ்யக்தகாயத்ரீயுபாசனையினால், ஸ்ரீகுரு தரிசனம் பெற்றவனாகி, "ஓம் இதிகாரணம்" என்ற மஹாவாக்கியத்தின் வாச்சியார்த்தமுணர்ந்து, அதன் லக்ஷியார்த்தத்தை குரு



முகமாகவே விசாரித்தவனாகக் கடைசியில், "ஶ்ரீகுருஃஸர்வகாரணபூதாசக்திஃ" என்னும் ஶ்ருதி வாக்கியத்தின் லட்சியம் சிந்தித்து அந்த ஸ்ரீகுருவின் "சின்முத்ரார்த்த லக்ஷியமே" "ஓம்" என்று ஐயந்திரிபறவுணர்ந்து, தான் ஹடாத்காரத்தினால் காரணபூரணனை விசாரித்துப் பூரணகாரணனானபடியால், தான் கைவல்யசித்திபெற்ற மார்க்கத்திற்கு "ஹடயோகம்" எனப் பேர்பெற்று உலகில் அதுபிரசித்தியடையவேண்டுமென்று "ஆதிகுருவான தக்ஷிணாமூர்த்தியைப் பிரார்த்திக்க" கல்லாலநீழலிலமர்ந்துள்ள கருணைமுகிலாம் அந்தப் பகவானும் "அப்படியே ஆகுக" வென்று ஆசீர்வதித்து "ஹடயோகத்தை" அந்தத் தற்பரனை சற்சீஷனுக்கே சாங்கோபாங்கமாக உபதேசித்தருளினாரென்பது நைமிசாரண்யத்தில், நடந்ததோர் பூர்வோத்தரமான விருத்தாந்தத்தின் கதை.

அதிலிருந்து, தாவரநூலிலிருந்து ஹடயோகமுண்டாயிற்றென்றும்; ஹடயோகத்திலிருந்தே தாவரநூலுண்டாயிற்றென்றும் சொல்லி மயங்கிப்பிறரையும் மயக்குறச்செய்வோர் பலர் உளர். அப்படிப்பட்ட மயக்கங்களிலொன்று "இயற்கை அறிவு" என்பதின் வாச்சியார்த்தம் அதன் லக்ஷியார்த்தத்தை யுணர்ந்தால் வாச்சியார்த்தத்தின் மயக்கம் தானே மயங்கும்: அப்படியெனில், "மயக்கறும்" என்று கொள்க.

"மனமாயையமாயையிம் மாயைமயக்க
மனமாயைதான்மாயுமற்றொன்றுமில்லை."

என்பது திருமந்திரோபதேசம். இச்சிறுநூலியற்றிய ஸப்-அஸிஸ்டெண்ட் ஸ்கூல்-இன்ஸ்பெக்டர் அவர்கள் உபாத்தியாயர்களுக்குப்போதனையாகச் சொல்லியிருக்கும் முன்னுரையில், "மலையளவு அறிந்தால் தான் கடுகளவுதிறமையுடன் போதிக்கக்கூடும்" என்ற உண்மையான கருத்தை உபதேசமாகக்கொண்டு, கடுகளவான "தாவரநூலும் தோட்டவேலையும்" என்னும் "பிரகிருதிஞானபோதகமான" இச்சிறுநூலின் கடுகளவு "இயற்கை அறிவை"க் கொண்டு மலையளவான மூலகாரணத்தை ஆராய்ந்துணர்ந்து "ஓம் இதியேகாக்ஷரம் பிரஹ்மஃ ஓம் இதியேகாக்ஷரம் பரம்" என்னும் மஹாமேருவான பரஞானத்தைப் பற்றும் வழிகாட்டினோம்.

இச்சிறுநூலின் போதனையை உள்ளபடியாய்ந்துணர்ந்து அதன் தத்துவத்திற்புகுந்து "தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு" என்னும் திருமந்திரோபதேசப்படி, தத்துவத்தில் தத்துவனைக்காணும் வகையறிய விரும்புமுபாத்தியாயர்கள் 1893-ம் வருஷம் செப்டம்பர் மாசத்து விவேகசிந்தாமணி சஞ்சிகையில், * "பிரகிருதியினுண்மையில் பரமனைக்காணலாம்" என்னும் விஷயத்தையும், இயற்கையின் அறிவைக்கொண்டு குழந்தைகளின் இயற்கையறிவு விர்த்தியாகப்பார்க்க ரசிகமான கிண்டர்கார்டன் கதை சொல்லும் விதம் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், மேற்சொன்ன விஷயத்தோடு, விவேகசிந்தாமணியின் முதல் வருஷங்களில், இச்சிறு நூலின் முகவுரை ஆசிரியரான ம-௱-௱-ஸ்ரீ, ஜெ. தர்மரெங்கராஜா அவர்களால் எழுதப்பெற்ற 'தண்ணீர் சொல்லியதன்வரலாறு' என்பதையும் மாதிரிக்குப் படித்துப்பார்ப்பது உசிதமாயும் நல்லறிவு பெறுவதற்கு உத்தமசாதனமாகவுமிருக்குமென்பதைச் சுட்டிக்காட்டலானோம்.

ஓம் தத் ஸத்.

* See Vol 12, No. 5 of the Vivekachintamani. "Through Nature to God"—A Kindergarten Sermon on Nature Study. And also: The Autobiography of Water by J. Dharmaranga Raju in the December No: of the Vivekachintamani for 1892, (Vol, I, No. 8.)

## An Appeal to Agriculturists - II.

## வியவசாயிகளுக்கோர் அறிக்கை - II.

(முன் தொடர்ச்சி.)

### குடித்தனமே துரைத்தனம்.

ஒருகாலத்தில் ஒரு சபைகூடியிருந்தது. அச்சபையில் அரசன் ஒரு உன்னதமான ஆசனத்தில் வீற்றிருக்க அவனைச்சுற்றி ஒரு வக்கீல், ஒரு வர்த்தகன், ஒரு வைத்தியன் இவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அரசன் "நான் உங்கள் எல்லோரையும் ஆள்கிறேன் என்றான். தன்மேலுள்ள இரத்தினாபரணங்கள் ஜ்வலிக்கப் பட்டுஉடைகளில் சரிகைவரிசைகள் பிரகாசிக்க எழுந்து நின்றுகொண்டு! பிறகு வக்கீல் எழுந்து தனது நாலுகைச்சட்டையை இழுத்துவிட்டுக் கொண்டு நான் கச்சேரிகளில்வாதம்செய்து உங்களுடைய வியாச்சியங்களை முடித்துக் கொடுக்கிறேன் என்றான். வர்த்தகன் தனது சூனைவயிற்றைத் தடவிக்கொண்டு நான் உங்களுக்கெல்லாம் வேண்டிய பதார்த்தங்களை வைத்து வியாபாரம் செய்கிறேன் என்றான். வைத்தியன் தான் கைபார்க்கவைத்திருந்த பட்டுக் கைக்குட்டையை உதறிக்கொண்டு நான் உங்களுக்கெல்லாம் வைத்தியம் பார்த்து வியாதிகளை சொஸ்தம் பண்ணுகிறேனென்றான். கடைசியாய் ஒரு மூலையில் தானிருந்தவிடமே தெரியாமல் தோலுமெலும்புமாய் உட்கார்ந்திருந்த ஒருகுடியானவன் எழுந்து ஹீனஸ்வரத்துடன் நான் உங்களுக்கெல்லாம் உணவளித்துப் பட்டினியினால் சாகாமல் காக்கிறேனென்றான். மேற்சொன்ன பேர்களில் எவர்கள் இல்லாமற் போனாலும் மனிதன் கஷ்டத்துடனாவது ஜீவிக்க ஹேதுவுண்டு. குடியானவர்களில்லாமல் ஒரு வருஷம் மாசூல் விளையாமற்போனால் எல்லோரும் பட்டினியினால் மடியவேண்டி வருமல்லவா? ஆதலால் "குடித்தனமே துரைத்தனம்" என்பதற்கிணங்க பயிர்செய்து ஜீவிப்போர்கள்தாம் சுகியென்பது அநேகரது அபிப்பிராயம்.

### பட்டினவாச லட்சணம்.

நாம் ஆழ்ந்துயோசித்துப் பார்க்கின், ஒரு குடியானவனுக்கிருக்கிற சுகம் ஒரு உத்தியோகஸ்தனுக்கில்லையென்பது நன்கு விளங்கும். உத்தியோகஸ்தனுக்கு ஏராளமான பணம் வருகிறது, வேண்டிய சௌகரியங்களைத் தேடிக் கொள்ளலாமென்பது வாஸ்தவமே ஆனால் இயற்கையாய் அனுபவிக்கும் சுகம் அவனுக்கில்லை. ஏனெனின் அவன் பட்டினங்களில் வசிக்கவேண்டியிருக்கிறது. நாலு பக்கங்களிலும் சாக்கடைக் குப்பையின் வாசனையும், கக்கூசுகளினின்றெழும் நாசிகளைக்கெடுத்து வாந்தியை உண்டாக்கும் வாசனைகளும், கிராமங்களிலேயும் தோட்டங்களின் மத்தியிலேயும் வசிக்கும் குடியானவர்களுக்குப் பட்டினம்சேர்ந்தால், இவ்வூரைவிட்டு எப்பொழுது அகலுவோமென்ற எண்ணத்தை உண்டாக்குகிறது. ஏனெனின் நாலுபக்கங்களிலுமுள்ள செடிமரங்களால் கரியமலவாயு உட்கொள்ளப்பட்டு பிராணவாயுவுடன் கூடிய காற்றை உட்கொண்டும், தினம் தினம் அடிவரையில் இறைக்கப்பட்டதால் மிக்க சுத்தமாயும் கரும்புபோன்றுமுள்ள நீரை உட்கொள்வதாலும், ஆரோக்கியமாய் இருந்துள்ள தேஹத்துடன் கூடினவர்களுக்கு, ஜனநெருக்கத்தாலும், வெகுநாளாய்த் தேக்கிவைக்கப்பட்ட ஜலத்தின் உபயோகத்தினாலும், சாக்கடை, கக்கூசு முதலிய இடங்களினின்று கிளம்பும் நாற்றத்தினாலும், கொசுக்கூட்டங்களின் கடியினாலும், வீதியில் சென்றால் அமைதியாய்க் காலம்கழித்தவர்களது செவிகள், இங்குமங்கும் ஓடும்வண்டிகள் ஜனங்களது சப்தங்களால் அடைத்துப்போய், வீதியினின்றெழும் புழுதியினால் சுவாசம்விடமாட்டாமல் திக்குமுக்காடும்படி நேர்வதும் அவர்களை அவ்வூரைவெறுக்கச் செய்வது ஆச்சரியமோ?

### நாட்டுப்புறவாசச் சிறப்பு.

வெயிலிற் சென்றவர்களுக்குத்தான் நிழலின் அருமை தெரியும் என்பதற்கிணங்க, பட்டினங்களில் பணங்களின் செலவினால் என்னதான் சௌகரியங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கினும், தட்டுக்கெட்டு ஒரு தரம் தோட்டங்களுக்குப்போய் அதன் மத்தியில் பங்களாப்போன்ற கட்டிடத்தில் நாலாபக்கங்களிலும் பயிர்களும்,செடிகளும் பச்சைப்பசேரென்று காண பட்டினங்களிலுள்ள மாடுகளைப்போல் கண்டவைகளையெல்லாம் தின்னாமல் பசும்புற்களை மாத்திரம் தின்றிருக்கும் பசுக்களின் பாலின் ருசியை அநுபவித்தறிந்து தேஹஆரோக்கியத்திற்கு அப்பேர்ப்பட்ட இடம் எவ்வளவு சிலாக்கியமானதென்று சுகாதார விளக்கத்தின் உணர்வினால் நன்கறிந்த உத்தியோகஸ்தர்களும், அக்குடியானவனது நிலைமையைப் பற்றிப் பொறாமையடைந்ததுண்டு.



### ஏருழுதுண்பான் இறகுபிடித்துழல்வான்.

நம் வாலிபர்களில் பெரும்பாலார் தங்களுக்கு இயற்கையிலேயே நிலங்கள் யதேஷ்டமாயிருந்து மேற்சொன்னபடி சுகமாய்க் காலம்கழிக்க சந்தர்ப்பமிருக்கினும், தம்நிலங்களை அறிவில்லாத ஆட்களினிடம் கிடைத்தது போதுமென்று குத்தகைக்கோ அல்லது சாகுபடிக்கோ விட்டுவிட்டு, பட்டினங்களில் ஏதாகிலும் ஒருகச்சேரியில் பதினைந்து ரூபாய் குமாஸ்தாவாக வேலைக்கமர்ந்து, தனது அல்பமான சம்பளத்தால் அவ்விடம் வேண்டிய சௌகரியங்களைச்செய்துகொள்ளவும் இயலாமல் காலம் கழிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். கிராமங்களில், இப்படிவாலிபர்கள் வெளிதேசங்களில் உத்தியோகமாய்ப் போவதால் வீடுகள் குடியின்றிப்பாழடைந்துபோயிருப்பதும், அநேக கிராமங்கள் க்ஷீணதிசை அடைந்திருப்பதும் சிரமமெடுத்து விசாரிப் போர்களுக்கு நன்கு விளங்கும்.

மேற் கூறியதினால் நம்வாலிபர்கள் படிப்பில்லாமல் மிருகங்கள்மாதிரி யிருந்து நிலங்களைக்கட்டிக் கொண்டழவேண்டுமென்பது நம்நோக்கமன்று. அவர்கள் நன்குபடித்து, வியவசாயசாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து, கச்சேரியில் 15 ரூபாய் சம்பளத்தைப்பெற்றுக்கொண்டு கஷ்டப்படாமல், இச்சம்பளத்தைவிட அநேகமடங்குவருமானத்தை தம் நிலங்களைச் செழிப்பாக்கி விவசாயம் செய்து அடைவதுடன் தங்கள் தேஹஆரோக்கியத்தை அடையலாமென்பதே நம் கருத்து.

### விருத்திக்கு வழி.

தவிர நம்வாலிபர்களும், குடித்தனக்காரர்களும் விருத்திக்குவர இன்னொரு வழியுமுண்டு. அதாவது பால் தயிர் நெய் வியாபாரம். ஏனெனில், மற்றவர்களைவிடவிவசாயிகளுக்குக் கறவைமாடுகளை வைத்துக் காப்பாற்ற அதிகமான சௌகரியங்கள் உண்டு. முதல் முதல் நிலங்களினின்று மாடுகளுக்குத்தீனி அடைவதால் அச்செலவின் குறைவு. இரண்டாவது மாடுகள்மேய நிலத்தின் ஒருபாகத்தில் கினிப் புல் என்னும் புல்லைப் பயிர்செய்வதனால் மாடுகளுக்கு பசும்புல் ஆகாரம்கிடைப்பது. தோட்டத்தில் சுற்றிலும் அகத்திச்செடி பயிர்செய்து அத்தழையை மாட்டின் உணவாக உபயோகித்தல்முதலான சௌகரியங்கள் மற்றவர்களுக்கியலா.

நல்ல தயிர் நெய் இன்னவிடம் கிடைக்கும் என்றுநிண்ணயம் ஏற்படின் அவைகளுக்குக் கிராக்கி வருதல் கஷ்டமேயில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. தவிர இப்பொழுது ரயில்வே கம்பெனியாரால் மாதாந்தர டிக்கெட்டு சஹாயமாய்க் கொடுக்கப்படுவதால், கிராமங்களினின்று தினம் தினம் பட்டினங்களுக்கு தயிர், பால், நெய் அனுப்புவது மிக்கசுலபம். பட்டினங்களில் உத்தியோகஸ்தர்கள் நல்ல சுத்தமான பால்முதலியன கிடைக்காமல் கஷ்டப்படுவதால் அப்பேர்ப்பட்ட சில வீடுகளை வாடிக்கையாய் அமர்த்திக்கொண்டு வியாபாரம் செய்யின் நல்லலாபத்தை அடையலாகுமல்லவா.

ஐரோப்பாகண்டத்தில் உள்ள தேசங்களில் அநேகர் **டேய்ரிபாரம்** என்ற மேற்கூறிய தொழிலை அனுசரித்து தனிகர்களாயிருக்கிறார்கள். நம்தேசத்திலும் இவ்வாறு செய்து விருத்திக்குவரஹேஷியமிருந்தும் அதை அனுபவத்தில் கொண்டுவருபவர் மிக்க சொல்பமே.

### கால்நடைச் செல்வம்.

வெகு காலங்களுக்கு முன் இந்தியாவிலேயே, எவனுக்கு மாடுகள் அதிகமாகவிருந்தனவோ அவனையே தனிகனென்றுசொல்வர். பணம்என்பதைக்குறிக்கும் இங்கிலீஷ்வார்த்தை மாடு என்பதைக்குறிக்கும் வார்த்தையினின்று வந்திருப்பதும்அதையேகுறிக்கிறது. தவிர ஸ்காட்லாண்டு தேசத்தில் ஒரு கனவானது செல்வமெல்லாம் கூடி அவரது பெருத்த ஆடு மாடுகளின் மந்தையென்றும், அம்மந்தையை, இராக்காலங்களில் காக்க அவர் வளர்த்துவரும் நாய்கள் எவ்வளவோ ஆயிரக்கணக்காயிருப்பதாயும் அக்கால்நடைகளைசம்ரக்ஷிக்க ஏற்பட்டிருக்கும் செலவும் சிப்பந்திகளும் அபாரமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

நிலங்களைச் செழிக்கச்செய்ய மாடு ஆடுகளின் எரு மிக்க சிலாக்கியமானபடியினாலும், நிலங்களை உழுது பயிர் செய்யவும் ஜலமிறைக்கவும் எருதுகள் வேண்டியிருப்பதாலும் விவசாயிகளின் செல்வம் அவர்களது நிலங்களன்றியில் கால்நடைகளுமென்றும், நிலங்களை வளமாக்கி, விவசாய சாஸ்திரத்தை அனுசரித்துப் பயிர் செய்து தக்க மாசூலை அடைவதுடன், கால்நடைகளின் சம்ரக்ஷணையின் அனுபவமும், அவைகளுக்கு கோமாரிமுதலான நோய்கள் வரின் அந்நோய்களை அகற்றவும் தொத்துவியாதிகளால் அந்நோய்கள் மந்தையில் பரவவொட்டாமல்

நோய்கண்ட கால்நடைகளை அப்புறப்படுத்திச் சிகிச்சைசெய்யவேண்டுமென்பதும் விவசாயிகள் கவனிக்க வேண்டிய முக்கியவிஷயம். நம்வாலிபர்களில் நிலமுள்ளவர்களில் பெரும்பாலார் சர்க்காரால் நியமித்துள்ள விவசாயகலாசாலையிலும் மாட்டுவைத்திய கலாசாலையிலும் சேர்ந்து விஷயங்களை அனுபவபூர்வமாய்க்கண்டறிந்து, தங்களது அனுபவத்தை, தங்களிட நிலம், கால்நடை இவைகளிடம் உபயோகப்படுத்துவதுடன் அறிவில்லாத குடியானவர்களுக்கும், அதைத்தெரிவிப்பதால் நம்தேசத்திற்கு உண்டாகத்தக்க நன்மை இவ்வளவென்று சொல்லமுடியாதல்லவா.

## யந்திரங்களால் வியவசாய விருத்தி.

கிராமங்களிலுள்ள குடியானவர்களில் பெரும்பாலார், தாங்கள் பரம்பரையாய்ச் செய்து வந்த மாதிரியே இப்பொழுதும் சாகுபடி செய்துவருவதை நாம் பார்க்கிறோம். அநேக விதமான விவசாய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும், அவைகளை உபயோகிப்பதால், சொல்பகாலத்தில் சாஸ்தியான வேலை சுளுவாயும் லாபமாயும் முடியும் விஷயமும் அவர்களுக்குத் தெரியாததால் அல்லவோ அவர்கள் அவ்வாறு செய்யவேண்டியிருக்கிறது. மேற்கூறிய குடியானவர்கள் சாகுபடிசெய்யும் நிலத்தின் சொந்தக்காரர்கள் தாம் நன்குபடித்திருக்கினும், தமது நிலங்களில் மேற்படி இயந்திரங்களை உபயோகிக்கச் செய்யாமலிருப்பது, அவர்கள் படித்தும் படிக்காமலிருப்பவர்களுக்குச் சமானமென்பது யாம் சொல்லவும் வேண்டுமோ !

எனக்குத் தெரிந்த ஒரு பெரிய குடித்தனக்காரர், தன் நிலங்களில் வெகு நாளாய்க் கபிலைகட்டி ஜலம் இறைத்துப் பயிரிட்டு வந்தார். அவர் தனிகரானபடியால், எவரோசொல்லக்கேட்டு ஒரு தண்ணீர் இறைக்கும் யந்திரம் தன்தோட்டத்தில் வைத்து சென்ற இரண்டு மூன்று வருஷமாக சாகுபடி செய்து கண்ட அனுபவம், மாடுவைத்துப் பயிர்செய்ததைக்காட்டிலும் இந்த யந்திரத்தினால் தண்ணீர் இறைத்துச் சாகுபடிசெய்தது மிக்கலாபகரமானதென்பதே.

## "புதியன புகுதலில்" உதாரணம் பெரிது.

உலகத்தில் ஏதாவதொரு புதிய ஏற்பாடு ஏற்படின் சிலகாலங்கள் வரை அது பிரபலமாகாது. அவ்வேற்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் மற்றோர் தம்மைக்கேலிசெய்து பேசினும், விடாமுயற்சியுடன் அதை அனுசரித்துவந்தால். அதனால் இருக்கும் லாபம் இன்னொருவனுக்குத் தெரியாமல் போகாது. அவனும் தான், மற்றவனை அனுசரிக்கச், கொஞ்ச நாளில் அநேகர் அப்புதிய ஏற்பாட்டை அனுசரிப்பதால் அதுவும் பழய ஏற்பாடாக மாறுமென்பது தெரியாதவர்கள் ஒருவருமிலர். இதுபோல் சாஸ்திரப்பயிற்சியில் தேறின சிலர் விடாமுயற்சியுடன் மற்றவர்கள் எதையோசொல்லிப்போகட்டுமென்று இருந்து தாங்கள் கற்றறிந்ததை அனுபவத்திற்குக்கொண்டு வருவதால் நாளாவட்டத்தில் எல்லோரும் அவரை அனுசரிப்பார்களென்பது திண்ணம்.

எம். என். கணேசய்யர்.

## *Sita—A Tale of Hindu Domestic Life.*

## சீதா, அல்லது இல்லறவாழ்க்கை.

### அதிகாரம் 30,

ராமச்சந்திரய்யர் தங்கம் இறந்தபிறகு, அவர்களுக்குக் குழந்தைகளிருந்தபடியால் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள்மீது இரங்கித் தான் முன்யோசித்தபடி தர்மத்துக்குக் கூட வைக்காமல் எல்லாவற்றையும் அவருக்கே தானமாகக் கொடுத்துவிட்டார். ஆனால் அந்த சொத்தையும் நிலைத்துவைத்துக் கொள்ள ஸ்ரீனிவாச சாஸ்திரிகளுக்கு அதிர்ஷ்டமில்லை. தங்கம் இறந்த விஷயம் தற்கொலையாதலால், போலீசார்கள் இதை அதிகப்படுத்தி ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் தான் அவளுடைய மரணத்திற்குக் காரணமென்று ரிபோர்டு செய்தார்கள்! அதன்மீது ஸ்ரீனிவாச சாஸ்திரிகளுக்கு வாரண்டு பிறந்து விட்டது. ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் உடனே வக்கீல்வைத்து ஜாமீன்பேரில் விடுதலை செய்யப்பட்டார். கேஸ் பலமாகநடந்தது. ஆனால் தங்கத்தின் கடிதத்தை ஸ்ரீனிவாசசாஸ்திரிகள் கொண்டுபோய்க் காட்டியதாலும் சாக்ஷிகளெல்லாம் அந்தக்கடிதம் தங்கத்தின் அறையில் அவளிறந்த சமயத்திலேயே எடுக்கப்பட்டனவென்றும் ருஜுசெய்ததாலும் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் செலவு 4000 ரூ. வரையில் ஆகிவிட்டது. ஸ்ரீனிவாசசாஸ்திரிகள் லீவுவாங்கிக் கொண்டு சுகமாயிருக்கலாமென்று யோஜித்துவந்ததற்கு இதுதான் பிரயோஜனமாச்சுது. இது போதமல் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளுடைய சொத்தை அழிக்க வேறு ஒரு சமாச்சாரமும் சேர்ந்தது. சீதாராமன் பெண்சாதிக்குச் சோதிரர்கள் இல்லையென்றும் நாராயணசாஸ்திரிகள் அதைக்கண்டு தான் அந்த இடத்தில் கலியாணம் செய்தாரென்றும் நாம் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அந்தப்பெண் பணக்கார இடத்திலிருந்து வந்தும் வெங்கலக்ஷ்மி யம்மாளுக்கு அவள் லட்சியமாகவிருக்கவில்லை. வெங்கலக்ஷ்மியம்மாள் தங்கத்தை நன்றாய் நாம்வைத்திருந்ததற்கு என்னபலனைக் கண்டோமென்று எண்ணி, சீதாராமன் பெண்சாதி சுப்பலக்ஷ்மியை வெகு கொடுமையாய் நடத்திவந்தாள். அந்தப் பெண்ணும் மிகவும் சாது; வீட்டுக்காரியம் சரிவரப்பார்க்கவும் தெரியாது. சாதுர்யமாய்ப் பேசவும் தெரியாது. தங்கம் தன் சாமர்த்தியத்தால்ஸ்ரீனிவாசசாஸ்திரிகளைமயக்கி அவர் தான் சொன்னபடி கேட்கும்படி வைத்திருந்தாள். ஆனால் அந்த சாமர்த்தியம் சுப்பலக்ஷ்மிக்கு இல்லை. தன்புருஷனைத் தன்வசப்படுத்த முடியாததால், சீதாராம சாஸ்திரி வெங்கலக்ஷ்மியம்மாள் பக்ஷம் சேர்ந்துகொண்டார். வெங்கலக்ஷ்மியம்மாள் இந்தப் பெண்ணுக்குச் சோறுகூட சரியாகப் போடுகிறதில்லை. ஆனல், சீதாராம சாஸ்திரியிடம் தோஷமெல்லாம் அந்தப்பெண்மீதே போட்டு, கோள்சொல்லி விடுவாள். சீதாராமசாஸ்திரி அதைக் கேட்டுக்கொண்டு அப்பெண்ணை மொத்து மொத்தென்று அடிப்பார். பாவம் அந்தப்பெண் என்னசெய்யும்! அழுதுக்கொண்டே யிருப்பாளேயல்லாது தன் மாமியார்மீது பிசகென்று சொல்லமாட்டாள். இப்படி சீதாமராசாஸ்திரி இடங்கொடுக்க வெங்கலக்ஷ்மி யம்மாளுக்குத் தைரியம் அதிகமாய்விட்டது. கொஞ்சநாளில் தானும் சுப்பலக்ஷ்மியை அடிக்க ஆரம்பித்தாள். பிறகு, கொஞ்சநாளைக்கெல்லாம் சுப்பலக்ஷ்மி புருஷனுடன் படுத்துக்கொள்கிறது கூட அவளுக்குப் பொறுக்கவில்லை; எங்கசீதாராமன் குஞ்சலமாட்டமா இருக்கஅவனுக்கு இந்த நாசக்காலியை எங்கேதான் வைத்திருந்தோ என்பாள். ஏதாவது தோஷத்தை அவள்மீது ஏற்படுத்திசீதாராமனிடம் அவள் போகாமலிருக்கும்பொருட்டுவாசல்படியில்படுத்துக்கொண்டு சுப்பலட்சுமியை வெளியில் படுத்துக்கொள்ளச் சொல்வாள். இப்படி இருவருக்கும் வெறுப்பை உண்டாக்கி வைத்து வெங்கலட்மியம்மாள் சீதாராமனுக்கு ஓர் தேவடியாளைத் தீர்மானம் செய்துகொடுத்தாள். பிள்ளை தெரியாத்தனமாக அப்படி நடந்துகொண்ட போதிலும் தாய் அவனுக்குப் புத்திசொல்லி சீர்திருத்தவேண்டியிருக்க, தானே தேவடியாள் வைத்துக் கொடுக்கும் தாயின் எண்ணம் எவ்வளவு கெட்ட எண்ணமாயிருக்கவேண்டும். சீதாராம சாஸ்திரிக்குத் தெவடியாளுடைய சிநேகம் அதிகமாக சுப்பலட்சுமியை முற்றிலும் மறந்துவிட்டான். சுப்பலட்சுமிக்கு சீதாராம சாஸ்திரியை ஒருநாளாவது தனியாய்க்கண்டு தன் சங்கதிகளை சொல்லிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம். ஆனல் வெங்கலட்சுமி அம்மாள் அதற்கு இடம் குடுக்கவில்லை. ஒருநாள் பாதிராத்திரியில் சுப்பலட்சுமிவிழித்துக்கொண்டுபார்க்க சீதாராம சாஸ்திரிகள் அறைதிறந்து கிடந்தது. வெங்கலட்சுமி அம்மாளும் அயர்ந்து தூங்கினாள். சுப்பலட்சுமி இதுதான் சமயமென்று கண்டு மெல்ல எழுந்திருந்து உள்ளே போவதற்காக வெங்கலட்சுமி அம்மாளைத் தாண்டினாள். இவளுடைய துரதிஷ்டம் வாசப்படி தடுக்கி வெங்கலட்சுமி அம்மாள்மீது விழுந்து விட்டாள். வெங்கலட்சுமிஅம்மாள் உடனே விழித்துக்கொண்டு சீதாராமசாஸ்திரிகளை எழுப்பி அடே சீதாராமா உன் பெண்சாதி பண்ணினகாரியத்தைப் பாரடா. என்னைக்கொல்ல வழிதேடிவிட்டாள் என்றாள். சீதாராம சாஸ்திரிகள் உடனே அவளை அடி அடி யென்று அடித்தார். பிறகு வெங்கலட்சுமி அம்மாள் வம்பர் மகாஜனங்கள் சபையெல்லாம் போய் தன் நாட்டுப் பெண் தன்னைக் கொல்லநினைத்ததாகச் சொன்னாள். அவர்கள் நீதானே உன் நாட்டுப்பெண்ணுக்கும் பிள்ளைக்கும்ஆகவிடாமல்அடித்துபிள்ளைக்கு தேவடியாள் வைத்துக்கொடுத்தாய் என்றார்கள். வெங்கலட்சுமி அம்மாள் அந்தபாவி அப்படி சொன்னாளா என்று சொல்லி அன்று முதல்நாள் ராத்திரி நடந்த சங்கதிகளைச் சொன்னாள் அவர்கள் அவளுக்கு ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கவேண்டும் இல்லாவிட்டால் இப்படி இருக்கமாட்டாள் என்றார்கள். உடனே வெங்கலட்சுமி அம்மாள் தன் நாட்டுப் பெண்ணுக்கு பைத்தியமென்று ஊரில் எல்லாம் சொல்லிகொண்டு பிள்ளையினிடமும் இப்படியே சொன்னாள். சீதாராம சாஸ்திரி அதற்காகத்தகுந்த வைத்தியனைப் பார்த்து கூப்பிட்டார். அவன் சீதாராமசாஸ்திரிகள் பணத்தை ஏராளமாகப்பறித்துக்கொண்டு பிறகு அது பைத்தியமில்லை யென்றும் பிசாசு என்றும் சொன்னான். பிறகு சீதாராமசாஸ்திரி ஓர் மாந்திரீகனை வரவழைத்தார். மாந்திரீகன் வந்துபார்த்து அதற்கு வேண்டிய பூஜைகளெல்லாம் செய்து அந்தப் பெண்ணை அஞ்சுபிசாசு

கள் பிடித்துக்கொண்டிருக்கின்றனவென்று சொன்னான். சுப்புலட்சுமிக்கு இந்தக்கூத்தையெல்லாம் பார்க்க வேடிக்கை ஒருபக்கமும் வருத்தம் ஒருபக்கமுமாய் இருந்தது. கடைசியில் தன் புருஷன் மாந்திரீகன் சுப்பலட்சுமியின் ஊரார் எல்லாரும் இருக்கும்போது சுப்புலட்சுமி மாந்திரீகனைப்பார்த்து அடே பைத்தியக்காரா போடா எனக்கு பிசாசு ஒன்றும் இல்லை என்னை பிடித்துக்கொண்டிருக்கும் பிசாசு வெங்கலட்சுமி அம்மாளைத் தவிர வேறே ஒன்றும் இல்லை என்றாள் பிறகு வெங்கலட்சுமியம்மாள் சுப்புலட்சுமியின் தாயாரை வரும்படி எழுதச் சொன்னாள். இதை எல்லாம் தெரிந்துகொண்ட சுப்புலட்சுமியின் தாயார் ஒரு சடவைவந்து சீதாராமசாஸ்திரிக்குத் தன்னால் கூடியவரையில் தனியாகப் போகும்படி உபதேசித்தாள். சீதாராம சாஸ்திரியைத் தன்வீட்டிலேயே இருக்கும்படிக்கும் கேட்டுக் கொண்டாள். சீதாராம சாஸ்திரிகள் ஒன்றுக்கும் சம்மதிக்கவில்லை. பிறகு அவர் தலைச்சனியன் என்று சொல்லிவிட்டு, விட்டு வெங்கலட்சுமி அம்மாள் அடித்தால் கூடத்திருப்பி அடிக்கும்படி தன் பெண்ணுக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். சுப்புலட்சுமியைஅவள்புருஷன் இவ்வளவுகொடுமையாய் நடத்தியும் அவன்மீது வெகுபிரியமாயிருந்தாள். அவ்வளவு நல்லமாதிரியானபெண்ணைக்கொடும்புலியானவெங்கலட்சுமியம்மாளும் சீதாராமசாஸ்திரிகளும் இப்படி கொடுமையாய்வைத்திருந்தார்கள். சுப்புலட்சுமி வரவர வெங்கலட்சுமியின் உபத்திரவம் பொறுக்கக் கூடாமல் கூடக் கூட பதில் சொல்ல ஆரம்பித்தாள். பிறகு கொஞ்சநாளைக்கெல்லாம் மாமியார் அடித்த அடிக்கும் திருப்பி அடிக்க ஆரம்பித்தாள். வெங்கலட்சுமியம்மாள் பார்த்தாள்: இனிநாம் ஏதாவது அவள்மீது பெரியதோஷத்தைச் சொல்லி அவளுக்குத் தகுந்த சிக்ஷை செய்விக்க வேண்டுமென்று தீர்மானித்தாள். அடிக்கடி தன் பிள்ளையிடத்தில் சுப்பலட்சுமி அவள் ஊரில் இருந்துவரும் ஒருமனிதனை வைத்துக்கொண்டிருக்கிறதாகச் சொல்லிவந்தாள். சீதாராம சாஸ்திரிகள் அதை நம்பவில்லை நீ சொல்வது நிஜமென்று நான் நேரில் பார்த்தால் நம்புவேனென்றார். அதற்கு வெங்கலட்சுமியம்மாள் நல்லது அந்தமனிதன் வரும் சமயம் பார்த்து உனக்குச்சொல்லி அனுப்புகிறேன் பார் என்றாள்! இப்படியிருக்க ஒருநாள் சுப்புலட்சுமியின் தமக்கை குஞ்சு என்ற ஒருவள் வந்திருந்தாள். அவள் சிலநாள் அங்கே இருந்ததில் பேச்சுவார்த்தையில் தான் சிறுவயதில் அடிக்கடி புருஷவேஷம் போட்டுக்கொள்ளுகிற வழக்கமென்றும் தன்தகப்பனுக்குப் பிள்ளை இல்லாததால் தனக்கு அடிக்கடி அப்படிவேஷம் போட்டு ஒருநாள் இரண்டுநாள்கூட அப்படியே இருக்கச் சொல்வாரென்றும் தான் டிராமாவில் நடிப்பதுபோல் புருஷவேஷத்தில் புருஷன் போலவே நடித்து தன் தங்கைகளில் யாரையாவது பெண்சாதிபோல் பாவித்து நடிப்பதைத் தன் தகப்பனார் கண்டு வெகு சந்தோஷப் படுவாரென்றும் சொன்னாள்'. இதைக்கேட்ட வெங்கலட்சுமியம்மாள் தனக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டு அவளை வெகு நன்றாய் உபசரித்து கொஞ்சநாள் இருந்துவிட்டுப்போகச் சொன்னாள். அவள் அப்படியே சம்மதிக்க வெங்கலட்சுமி அம்மாள் உடனே கிஜார் சொக்காய் எல்லாம் தயார்செய்து வைத்துக் கொண்டாள். சாயங்காலவேளையில் சுப்புலட்சுமி வாய்க்கால் கரைப்பக்கத்தில் இருக்கும்போது வெங்கலட்சுமி அம்மாள் கெஞ்சுவை புருஷவேஷம் போட்டுக்கொண்டு சுப்பலட்சுமி இடம் அவள் புருஷன்போல் நடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள் அவள் அப்படி சம்மதித்து வேஷம் போட்டுக் கொண்டு தன் தங்கையிடம்போனாள். வெங்கலட்சுமி அம்மாள் இது தான் சமயமென்று கண்டு தன் பிள்ளை சீதாராம சாஸ்திரியைக் கூப்பிட்டு நான் சொல்வது பொய் யென்றாயே அதோபார் அவர் இருவரும் கொஞ்சிக் குலாவுவதைப்பார் என்றாள். சீதாராமசாஸ்திரி பார்த்த சமயத்தில் அவர்கள் இருவரும் தோளில்மீது கைபோட்டுக் கட்டிக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். சீதாராம சாஸ்திரிக்கு வேறே சாக்ஷி இதை விட என்னவேண்டும், அப்படியே ஓடிப்போய் அந்த மனிதனை வெட்டிவிடலாமா என்று யோசித்துப் பார்த்தார் பிறகு அவனைக்கொல்வதில் என்ன பிரயோஜநம் இவள் சம்மதித்ததாலல்லவோ அவன் வந்தான். இருக்கட்டும் இவளை சித்திரவதைசெய்யாமல் விடக்கூடாது என்று தீர்மானித்தார். சீதாராம சாஸ்திரி அவளைக் கொல்லுகிற விதத்தைப் பலவிதமாகயோஜித்தும் ஒன்றும் சரிப்படாமல் கடைசியில் ஓர்கொழுவை காயவைத்து அவள் கண்ணில் இழுத்துவிடுவதாகத்தீர்மானம் செய்தான். ஒருநாள் இரவு சுப்பலட்சுமியிடம் கொழுவை நன்றாய் சிகப்பாய் இருக்கும்படி காயவைத்து அதை ஒளித்துக்கொண்டு சீதாராம சாஸ்திரி தன் தாயாரைக் கூப்பிட்டபோது வரச்சொல்லி விட்டு உள்ளே போய் சுப்பலட்சுமியிடம் படுத்துக்கொண்டார். சுப்பலட்சுமி வெகு பிரியத்துடன் சீதாராம சாஸ்திரிகளைக் கட்டிக்கொண்டு ஏது உங்களுக்கு என்மீது இவ்வளவு பிரியம் வந்தது என்றாள். சீதாராமசாஸ்திரி அதை ஒன்றையும் லட்சியம் செய்யாமல் அவள் கையை மெள்ள அப்புறம் எடுத்துவைத்தார். ஆகா சுப்பலட்சுமிக்கு அவருடைய கெட்ட எண்ணம் தெரிந்ததா. ஆட்டை வெட்டத் தயார்செய்துகொண்டிருக்க வெட்டுகிற மனிதனிடத்திலேயே அது கொஞ்சி அவன் கையில் இருக்கும் பில்லை விசாரம் இல்லாமல் தின்கிறது அல்லவா! அப்படிப்போல் சுப்பலட்சுமி சீதாராம சாஸ்திரியின் கெட்ட எண்ணம் தெரியாமல் அவருடன் கொஞ்ச ஆரம்பித்தாள். பிறகு சீதாராம சாஸ்திரிகையையை அப்புறம் எடுத்துவைக்கவும்சுப்பலட்சுமிவருத்தப்பட்டுக்கொண்டு என்னஉங்களுக்கு உடம்பு என்ன ஏதோ ஒரு மாதிரியாய் இருக்கிறீர்களே என்றாள். சீதாராமசாஸ்திரி ஒன்றுமில்லை தலையை வலிக்கிறது என்றார். சுப்புலட்சுமி ரொம்பவும் பரிதாபித்து எழுந்திருந்து அப்படியானால் நான் உங்கள் தலையைப் பிடித்து விடட்டுமோ என்றாள். சீதாராமசாஸ்திரி நீ எனக்கு இந்த உபசாரங்களெல்லாம் செய்யவேண்டாம் உன்னைக் கட்டிக் கொஞ்சுகிறவனுக்கு இந்த உபசாரம் செய் என்றார்.



சுப்பலட்சுமி அதனால் தான் என்னைக் கட்டிக் கொஞ்சுகிறதங்களுக்கு உபசாரம் செய்கிறேனென்றாள். சீதாராமசாஸ்திரி அதற்கு பாத்திரன் நானல்ல. மற்றவர்கள் இருக்கிறார்கள்.

சுப்பலட்சுமி:—அய்யோநீங்கள்என்னஇப்படிப் பேசுகிறீர்களே! நானுங்களுக்கு என்ன அபராதம் செய்தேன் சொல்லுங்கள்.

சீதாராமசாஸ்திரி:—இதைவிட நீ என்ன அபராதம் செய்யவேண்டும்.

சுப்பலட்சுமி:— அதை இன்னது என்று சொல்லுங்கள்.

சீதாராமசாஸ்திரி:—சொல்வது என்ன. இது தான் நான் சொல்லப்போகிறது என்று ஓர் பழுக்கக் காச்சின இரும்புப் கொழுவை எடுத்தார். சுப்பலட்சுமிநடுநடுங்கிப்போய் ஐயோ இது எதற்கு என்றாள்.

சீதாராமசாஸ்திரி:—நீ உன் ஊரானிடம் சுகபட்டதற்குப் பிரயோசனம் இதுதான். இதை உன் கண்ணில் வைக்கப்போகிறேன்.

சுப்பலட்சுமி:—தங்களுக்கு இதைஎன்கண்ணில் வைக்கமனம்வருமா. உங்கள் கண்ணில் ஒரு தூசிபட்டால் அது எவ்வளவு உருத்துகிறது. அப்படி இருக்க ஒரு பழுக்கக்காயவைத்த கொழுவை என் கண்ணில் இழுக்கிறேனென்கிறீர்களே இது தர்மமா.

சீதாராமசாஸ்திரி;—நான் வைக்கத் தடைஎன்ன உன் காரியத்தைவிட என்காரியம் பெரிததுல்ல.

சுப்பலட்சுமி:—என் துரையே என் மீதுவீணில் இப்படி சந்தேகப்படலாமா. நீங்கள் சொல்வது நிஜமானால் என்னைச் சித்திரவதை செய்யுங்கள்; இதோ பாருங்கள் நீங்கள் செய்யப்போகிற காரியத்தைப் பார்த்து அவமானத்தால் அந்த கொழுவுக்குக் கூட முகம் வெளுத்துபோய்விட்டது பாருங்கள் (கொழுவுக்குச் சூடுபோய் சாம்பல் தெரிந்தது).

சீதாராமசாஸ்திரி:-இதோஅதை ஊதிவிட்டால் மறுபடியும் செகப்பாகிறது;நான் உன்னைவிட்டேனா.

சுப்பலட்சுமி:—நீங்கள் அப்படி ஊதினால் கெட்ட காரியத்தைக் கண்டு கோபத்தால் அக்கொழுமுகங்கூட சிவந்து போகும். அய்யோ இந்த புத்தியார் தங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள்.

சீதாராமசாஸ்திரி:—வாயை மூடிக்கொள்ளுகிறாயா என்ன.

சுப்பலட்சுமி:—அய்யோ என் நாக்கு இருக்கிற வரையில் நான் எப்படி நீங்கள் செய்கிற இந்த குரூரமான காரியத்துக்குப் பேசாமல் இருக்கக்கூடும். வேண்டுமானால் முன்னாடி என் நாக்கை அறுத்து விடுங்கள். அய்யோ என் கண்ணிற்குப் பதிலாக என் நாக்கையாவது அறுத்துவிடக் கூடாதா.

சீதாராமசாஸ்திரி:— நீசெய்த குற்றத்திற்கு முதல் முதல் கண்ணைத்தான் எடுக்கவேண்டும்.

சுப்பலட்சுமி:--நான்ஒரு குற்றமும்அறியேனே. ஒரு கண்ணில்வலிவந்தால் உங்கள் கண் உங்களை எவ்வளவு கஷ்டப்படுத்துகிறது.போனவாரத்தில்நீங்கள் அப்படி கண்வலியால் கஷ்டப்படும்போது நான்என்

பட்டைப் போட்டு உங்கள் கண்ணை ஒத்தவில்லையா. என்னுடைய விலையுயர்ந்த பட்டைப் பட்டென்று பாராமல் தங்கள் கண்ணுக்கு உபயோகப்படுத்தினேனே. என்பேரில் இந்தக் குற்றத்தைமட்டும்சுமத்தாமல் சித்திரவதை வேண்டுமானாலும் செய்யுங்கள். என் கண்ணை மட்டும் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுங்கள். என் கண்கள் வேறொன்றுக்கும் இல்லாவிட்டாலும் உங்களைப் பார்ப்பதற்காவது இருக்கட்டும்,

சீதாராமசாஸ்திரி:-என்னைப் பார்க்க உனக்குக் கண்கள் எதற்கு. உன் ஊரிலிருந்து நிஜார்போட்டு வந்தானே அவனைப் பார்ப்பதற்காக கண்வேண்டுமென்று சொல் என்றார்.

சுப்பலட்சுமி:—நிஜார் போட்டுக்கொண்டு வந்தவன் யார் என்று நினைத்துக்கொண்டீர்கள். எங்கள் அத்தை உங்கம்மா வேண்டுகோள் படித்தானே ஆண் வேஷம் போட்டுக்கொண்டாள். அதைக்கண்டுநீங்கள் சந்தேகப்படுகிறீர்களா என்ன. அய்யோ நான் ஒருகுற்றமும் செய்யவில்லை. என் கண்ணைத்தவிர வேறு என் நாக்கையாவது என் கைகால்களையாவது எடுத்துவிடுங்கள் அல்லது என் உயிரையே எடுத்துவிடுங்கள். நீங்கள்பார்த்து என்னை என்னதான் செய்யக்கூடாது. என் கண்ணைமட்டும் எனக்குத் தங்களைப் பார்ப்பதற்காவது விட்டுவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

இப்படி அவள் சொல்ல சீதாராமசாஸ்திரிக்கு இதைக் கேட்கமனம் இறங்கிவிட்டது. உடனே கொழுவை கீழேபோட்டுவிட்டு நான் என் கையால் உன்னைக் கொல்லமாட்டேன். ஆனால் என்தாய் என்னை சாமானியமாக விடமாட்டாள் உனக்கு பின்புறத்துக் கதவைத் திறந்து விடுகிறேன் நீ அதுவழியேபோய் கடைசி உள்ளில்போய் ஒண்டிக்கொள், நான் உன்னை கொன்று விட்டதாக சொல்லி விட்டுப் பிறகு உன்னை வெளியே தாட்டிவிடுகிறேனென்றார். சுப்பலட்சுமி அப்படியே சம்மதித்து பின்புறம் சென்றாள். சீதாராமசாஸ்திரி வெங்கலட்சுமி யம்மாளிடம் போய் அவள் நாட்டுப்பெண்ணை கொன்று வெகு தூரதேசத்தில் காட்டில்போட்டுவிட்டதாகச் சொன்னார். வெங்கலட்சுமிக்கு வெகுசந்தோஷம். நமக்கு சீதாராமன் தான் பிள்ளை என்று நினைத்துக்கொண்டாள். சுப்பலட்சுமி பின்புறம்போனதும் மறுபடியும் தன் மாமியார் துறத்திவந்தால் என்ன செய்கிறது அல்லது சீதாராமன் மறுபடி தாயாருக்கு உட்பட்டு பழயபடி கண்ணைக் கொளுத்தவந்தால் என்னசெய்கிறதென்று பயந்து அந்தப் புறம் இருந்த ஓர் சுவற்றில் ஏறி எப்படி இருந்தாலும் இருக்கட்டுமென்று குதித்துவிட்டாள். கீழே வெகு ஆழமாயும் ஓர் கூர்மையான பாறையும் இருந்தபடியால் சுப்பலட்சுமி அதில் விழுந்து வெகு காயப்பட்டு மூர்ச்சைபோய்க் கிடந்தாள். இதைப்பார்த்த ஒருவர் சுப்பலட்சுமியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போய் ஒப்புவித்தார். மறுநாள் ஊர் முழுவதும் சீதாராமசாஸ்திரி வெங்கலட்சுமியம்மாள் இவர்கள் நாட்டுப்பெண்ணை செய்தகொடுமைகள் பரவிற்று. போலீஸார்எல்லாம் வந்து உடனே வெங்கலட்சுமி சீதாராமன் எல்லோரையும் கைதிகளாக்கி ஜெயிலில் அடைத்தார்கள். அந்த ஊரார் எல்லாரும் இந்தஅக்கிரமத்தைப் பார்த்துச்சகிக்கமுடியாமல் சகலசங்கதிகளையும் போலீஸாருடன் சொல்லிவிட்டார்கள். சுப்பலட்சுமியின் தாயார்வந்து தன் மகளின் நிலைமையைக்கண்டுபட்டகஷ்டம் சொல்லிமுடியாது. சுப்பலட்சுமி ஆஸ்பத்திரியிலிருந்தே இறந்து போய்விட்டாள். சுப்பலட்சுமியின் தாய்க்கு வருத்தமும் கோபமும் பொறுக்கமுடியவில்லை. வெங்கலட்சுமியம்மாளையும் சித்திரவதை செய்யவேண்டுமென்றிருந்தாள். உடனே அவள் தன்கோபத்தால் கேஸ் விஷயமாய் நன்றாய் முயற்சிசெய்ய ஆரம்பித்தாள். சீதாராமசாஸ்திரிக்கு செலவுசெய்ய பணம் ஒன்றும் இல்லை. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தன் சொத்தில் பாதிவரையில் செலவு செய்து பார்த்தார் ஒன்றும் பலிக்கவில்லை. வெங்கலட்சுமி யம்மாளுக்கு சுப்பலட்சுமியினால் கிடைக்கக் கூடிய சொத்துப்போனதுந்தவிர ஒவ்வொருவருக்கும் ஒருவருஷம் கடுங்காவல் தண்டனைகிடைத்தது.

எஸ். இராமஸ்வாமி ஐயர், பி. எ.

---

*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"Hitch your wagon to a Star." "To Thine Own Self be True."

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 6 OCT 1910



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*

ஸத்யமே ஜெயம்—**SATYAMEVA JAYATI.**

புத்தகம். 18.] 1910ஹ ஸெப்டம்பர்மீ, சாதாரணஹ புரட்டாசிமீ [சஞ்சிகை. 6.

# *TIRUKKURAL=THE ESSENCE OF TRUTH.

## *The "Valluvanar's Bequest."*

. . . . "This world is no blot for us
Nor blank ; it means intensely and means good.
To know its meaning is my meat and drink."—*Browning.*

"I have meat to eat that you know not of."—*Jesus Christ.*

* தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் ; பரிமேலழகருரையுடன், செந்தமிழ்ப் பத்திராசிரியர் மு. இராகவையங்காரால் பார்வையிடப்பெற்று மதுரை விவேகபாநு முத்திராசாலையில் பதிப்பிக்கப்பெற்றது. "பாக்கெட் எடிஷன்" விலை ரூபா 1.

# "வள்ளுவனார் வைப்பு"

எனச் சிறப்புப்பெயரேய்ந்திய

# திருக்குறளியல்.

### குருவணக்கம்.

"அருவேயுருவும் உருவேயருவுமாத்
திருவுருவானது ஸ்ரீகுருவாம்."
—மாயாண்டிச்சித்தன்.

"பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு."—ஔவைகுறள்.

"உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"
தன்னிய லாகியும் தானவ னாகியும்
மின்னிய லால்மா முனிவர் மனப்புகுந்
தோன்றிய சீர்மையை உள்ளுற வுணர்ந்தார்
நன்றுநன் றிதுவென நயந்துகொண் டாடும்
மன்றி லாடுமோர் மாயவன் கூத்தை
அறம்,பொரு, ளின்ப மெனவே பகுத்து
அப்பாலுக் கப்பாலாம் அத்தனைக் காட்டி
அவனையே உலகுக்கு ஆதியாக் கொண்டு—
(1) "அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு"—எனத்
திருக்குறள் பாடிய தெய்வப் புலமைத்
திருவள் ளுவனார் பொன்னடி சரணம்
புகுந்து நின்றனம் போற்றி போற்றியெனவே.

* * *

### முதலெழுத்தோதிய நூலின்பெருமை.

இப்பெருந் தகையார் இன்னிசைக் குறளால் ஓதிய தமிழிற்கு, உண்மையி லெழுந்த உள்ளறிவாலே உரையிடத்தானும் உரிமைபூண்டவப் பரிமேலழகர் உரையிதுவாமே: "எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலினையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து."

நுண்பொருளைக் கூறும் நூல்களுக்கெல்லாம் எழுத்து ஆதாரம்; அந்த எழுத்துக்களுக்கெல்லாம் முதலாயுள்ளது அகரமாகிய உயிர் முதலெழுத்து. அவ்வுயிர் முதலெழுத்தும் உண்மையில் ஸ்வரமாத்திரமானதே. ஆதலால் ஸர்வ கலைகளுக்கும் உலகியலுணர்த்தும் வேதசாஸ்திர முதலிய நூல்களுக்கும் ஆதியாயுள்ளது பிரணவத்தின் முதல்மாத்திரையாம் அகாரத்தின் ஸ்வரூபமான ஸ்வரமே. பிரணவ முதல் மாத்திரையான இந்த 'ஸ்வரம்' தானே நாததத்துவத்திற்பிறந்த சப்ததன்மாத்திரையென்று தத்துவ தரிசனத்தில் தானேவிளங்கும். இது உவமானம். இஃதேபோல் உவமேயத்திலும் பொருந்தும். நூல்களுக்கெல்லாம் எழுத்துக்கள் ஆதாரமா யிருப்பதுபோல், உயிர்களுக்கெல்லாம் உலகம் ஆதாரமாம். அந்த உலகுக்கெல்லாம் ஆதாரமாய் அகாரத்தைப்போல் எல்லாவற்றிலும் வியாபித்து அந்தர்யாமியா யிருந்துகொண்டு அவற்றை விளங்கச்செய்வது ஆதிபகவன். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்"—என்று சுருதிவாக்கியமு மிருப்பதாலே, உலகுக்கெல்லாம் ஆதிமுதற்காரணமாயிருப்பது "ஆதிபகவன்." இந்த ஆதிபகவனை "Logos" என்றும் "Word" என்றும் யேசுவழிப்பட்ட "ஜான்" என்னும் யோகசித்தர் ஓதியிருக்கிறார். அஃதொன்றையேதான் விஷ்ணுவென்றும் ஹரியென்றும் ஓதியுள்ளார் சித்தாந்த வழிபற்றிய நம் யோகசித்தர். ஏனெனில் 'அப்பர்' ஸ்வாமிகள் தேவாரத்தில்,

"எரியலால் உருவமில்லை ஏறலாலேறவில்லை, கரியலாற் போர்வையில்லை காண்தகு சோதியார்க்கு, பிரிவிலாத் தேவர்கூடிப் பெருந்தகை பிரானென்றேத்தும், ஹரியலால் தேவியில்லை ஐயனை யாறனார்க்கே"

என்று பாடியிருப்பதால் சகுண நிர்க்குணமிரண்டு மொன்றேயன்றி யிரண்டல்ல வென்பது தானே யேற்படும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 OCT 1910
MADRAS.

"ஸத்யம் வத" என்று வேதம் ஓதியதுபோல், உலகவழிபற்றி நின்றும் உண்மையை உள்ளபடி யுரைப்பதே "கடவுள் வாழ்த்து" என்றும், † திரிகரணசுத்தியே திரிமலந்தீர்த்து ஸ்ரீ குருதரிசனம் அளிக்குமென்றும், சகஜஞானப் பெருங் கொள்கையை மேற்கொண்டியற்றிய திருக்குறளின் அருமை பெருமையை, அவ்வள்ளுவனார் காலடித்தூசியும் பெறாத யானோ எடுத்துரைக்க வல்லேன்! ஆயினும் அவர் திருவடித்தூசி தலைமிசைப்படிந்த தோர் 'திவ்யகாரண மஹிமையால், அவர் காலடிசரணுய்க் கண்டதையுண்டு விண்டுரைசெய்யக் கற்பகவிநாயகர் காப்பதவேண்டிக் ‡ கரைந்து நிற்போமே.

* * *

### முதலெழுத்தோதுதல்.

"தாயேநீவாலை தயவுடை சுந்தரி
நாயேனைமாலை நயமுடன் கூடியே
வாயேனுனக்குள் 'அ'வறியா தென்னென்று
மாயேமீ மறைந்துபின் காலைவந்தோதினே."

உயிருக்கெல்லாம் முதலாயும் ஆதிகாரணமாயுமுள்ள இந்த அகாரத்தை (பிரணவத்தின் முதல் மாத்திரையை) ஓதுதல்தானே வேதமோதலாம். வேதங்கள் எல்லாம் ஸ்வர மாத்திரையானபடியால்தான் அவைகளை "ஏட்டில் எழுதி வைத்தல் ஒண்ணாது" என்று ஏற்பட்டது.

"காட்டுக் குறியுங் கடந்தவர் காரண
மேட்டின்புறத்தி லெழுதிவைத்தென்பயன்!"

என்றார் திருமூல நாயனாரும்!

"ஏட்டின் புறத்திலெழுதிவைத்தென்பயன்" என்ற அந்த முதலெழுத்து ஓதற்பாலதேயன்றி எழுதற்பாலதல்ல! எழுத்துக்களுக்கெல்லாம் முதலாகவுள்ள அகார மாத்ரை ஸ்வரூபமான ஸ்வரமும், நாத தத்துவத்தில் தானேயடங்கும்.

"பூத முதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றெனைக் காட்டியென்" தற்போதத்தை யாட்டியழித்துப் பின், அந்தப் "போதத்துள் நடுவாக அடியீறுமில்லாத போதபூரணவெளிக்குள் ஏதுமற நில்லென்றுபாயமாய் வைத்து, நினைவெலாஞ்செய் வல்லசித்தாம், இன்ப உருவைத்தந்த அன்னையே" சாட்சியாச் சொல்கிறேன், ஸத்திய மிதுவென்றே "உணர்க உணர்விலார்." ஊனுணர்விலா தொழித்த உத்தமர் தம் சித்தத்துள் பிரகாசிக்கும் தஹராகாச வெளியில் நாம் தேகிசாக்ஷியாகச் சொன்னது ஸத்தியமென்றே யுணர்ந்துய்வாராக.

* * *

### 'வேதம் அனாதி'யென்பதன் பொருள்.

இப்படியாக, ஏட்டிலெழுதப்பெறும் எழுத்துக்களுக்கெல்லாம் முதலாக (மூலகாரணமாக) வுள்ள அகாரமும் (ஸ்வரமாத்ரையான நாததத்துவமும்) கடந்து நின்ற கடவுளை யுணர்த்தும் வேதம் குருமுகமாக ஓதத்தக்கதேயன்றி எழுத்துமூலமா யறியத்தக்கதல்ல. இதுகாரணம் பற்றியே "வேதம் அனாதி" யென்று பேர்பெற்றுள்ளது. "மோக்ஷமூலர்" என்றுபேர்புனைந்துகொண்ட (Professor Max Muller) வேதங்களை யெல்லாம் மொழிபெயர்க்கிறேனென்று அச்சிட்டு முடித்துக் கடைசியில், அதன்பொருள் இன்ன தென்பதை யறியமாட்டாதவராய் "வேத மந்திரங்களெல்லாம்" வெறும் குப்பை கூளங்களேயன்றிப் பின்னர் வேறொன்றுமில்லையென்று தம்தலையறியாத வேதத்தின் பொருளறியாது மயங்கித்தியங்கி யேதோ அவர்கற்ற கல்விக்குச் சரியாகத் தோன்றியதை யெழுதிவைத்துவிட்டுப் போனார். அதைச் சொல்விக்கொண்டு அனேகர் வேதத்தைப் பழித்து வேதமந்திரங்களை யிகழ்ந்து "கன்னா பின்னா" வென்று எழுதி யச்சிட்டுத் தாமும் கெட்டுப் பிறரையும் கெடுமதிக்காளாக்கி வருகிறார்கள்.

† Compare: Emerson's Dietum. "Our Theism is the purification of the human mind" which stands as a motto of the Vivekachintamani.

‡ உள்ளங்கரைந்தாரை உள்ளபடி காப்பவரானதால் 'கரைந்து நிற்போமே' என்றதனுண்மை யுணர்க.

கற்றதனாலாய பயன்.

* இதை யறிந்தே யெம்பெருமான் திருவள்ளுவநாயனார் அடுத்த குறளை மெய்ச்செல்லாம் முதலெழுத்தான ககாரங்கொண்டு துவக்கிக்

(2) "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்".

[எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வியறிவானுபபயன்யாது, மெய்யுணர் வினையுடையானது தாள்களைத்தொழாராயின்?—பரிமேலழகருரை.]

நாதமுங்கடந்து நாதாந்த வெட்டவெளியாய் நிற்குமென் அருட்டாய் அருள்பெற்று ஞானப்பாலுண்டு கடவுளைத்தொழுது பிறப்பறுக்கவல்லாரே "கற்றதனாலாய பயன்" பெற்றார். மற்றவர் கற்றகல்வியினாலாயபயன் ஒன்றுமில்லை யென்க. "மோக்ஷமூலரை"ப்போல் கற்றுவல்ல கசடர் உலகில் மிகுதிபற்றியே, அவரால் உலகத்தார் கெட்டுப்போகாதபடி, இந்தக் குறளையும் கடவுள் வாழ்த்தாகக் கூறினார்.

* * *

பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவுதற் பயன்.

முதற்குறளால் மெய்யைச் சொல்லி யிரண்டாங்குறளினால் பொய்யைத் தள்ளினார். விவேகிகள் பொய்யைத்தள்ளி மெய்யைத் தழுவுவதினாலுண்டாகும் பயனை மூன்றாவது குறளில் எடுத்துரைக்கிறார்.

(3) "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்
நிலமிசை நீடுவாழ் வார்." [தார்

மலர்மிசை அன்பினால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் "மலர்மிசை யேகினான்" என்று கடவுளுக்குச் சிறப்புப் பெயர் வந்தது. அவனுடைய மாட்சிமைப்பட்ட அடிகளைச்சேர்ந்தார் "நிலமிசை நீடுவாழ்வார்"—வீடுபெற்று நிலமிசை நித்திய வாழ்வெய்துவர்.

* * *

"ஆதியாய் நின்ற அறிவு."

இம்மூன்று குறட்பாக்களின் கருத்தைச் சுருக்கி ஔவையார் ஒருகுறளில் "பிறப்பினிலை" யுணர்த்துவான் முதலில் உண்மையை ஓதியிருக்கிறார். அது இது:—

"ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன்."

ஏட்டில் எழுதப்பெறும் நூல்களுக்கெல்லாம் ஆதியாய் (மூலகாரணமாய்) உள்ளது எழுத்துக்கள். எழுத்துக்களுக்கெல்லாம் முதலாய் (மூலகாரணமாய்) உள்ளது அகாரம் (ஸ்வரம்). அந்த முதலெழுத்துத்தானே பிரணவத்தின் முதல் மாத்திரை. எல்லாவெழுத்துக்களுக்கும் (அவை மூலமாய் எல்லா நூல்களுக்கும்), எழுதப்பெறாது காட்டுக்குறி (சின்முத்திரை) யானவாக நிற்கும் பிரணவத்திற்கும் முதலாய் நிற்கும் பிரணவ நாதத்தின் ஸ்வரமாத்ரமாயுள்ள இந்த முதலெழுத்தோதிய நூலின் (வேதத்தின்) பயன் "ஆதியாய் நின்ற அறிவு". இந்த "ஆதியாய் நின்ற அறிவு"தனைப் பெறுதலே "கற்றதனா லாயபயன்". ஏனெனில் ஆதிபராசக்தியின் உணர்வு (தரிசனம்) இன்றி அருட்பேறில்லையாம்; அருட்பேறில்லாவிடத்து "வாலறிவன் நற்றாள்தொழுத"லும் இல்லையாம். இதனாலே "கற்றதானாலானபயன்" சித்சக்தியின் அருட்பேறு பெறுதலென்றும், அந்த அருட்பேற்றினால் "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்" நிலமிசை கைவல்யசித்திபெற்று நித்திய வாழ்வெய்துவரென்றும் கொள்ளத்தக்கது.

* Compare the following quotation from Max Muller by a Rev. Father of the Church of Rome in a red pamphlet which has caused much pain to Hindus in Ceylon: "Still it cannot be denied that the sacred books of the East are full of rubbish, and that the same stream which carries down fragments of pure gold carries also sand and mud and much that is dead and offensive."—(*Preface to the Sacred Books of the East.*)



இலக்கியங்கண்டதற் கிலக்ஷணம்.

இம்மூன்று குறள்களினாலும் லக்ஷியங்கூறி, இனி "லக்ஷியங்கண்டதற் கிலக்ஷணா மியம்புகிறார்."

"முனிமானஸ ஹம்ஸிகாயை நம:" என்றும்; "பக்தமானஸ ஹம்ஸிகாயை நம:" என்றும் கூறியுள்ள இரகஸிய நாமங்களின் லக்ஷியத்திற்கேற்க, "அன்பால் நினைந்தவர் உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்தவடிவோடு விரைந்து சேரலின்" "மலர்மிசை ஏகினான்" என்று லக்ஷியங்கொண்டு சிறப்புக்கூறிய கடவுளின் லக்ஷணங்கூறக்கருதி, நித்திய, நிர்மல, நிஷ்கள, நிராலம்பமான நிர்க்குணக் கடவுள் ஹிருதயகமலத்தின் கண்ணேயுள்ள தஹராகாசத்தில் "ஏகினான்"—புகுந்தானாகவும், அவனுடைய அனந்தகுண நித்திய கலியாணங்களைக் கூறுகிறார்.

* * *

"வேண்டுதல் வேண்டாமை யிலான்."

(4) "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்
தியாண்டு மிடும்பை யில." [தார்க்

நிஷ்கள நிர்க்குணக்கடவுள், அருள்பெற்றாரை யனுக்ரகிக்கவேண்டி, சகளவடிவாய், அவர் ஹிருதய கமலத்திலுள்ள தஹராகாசத்திற் புகுந்து திருவுருக்கொண்டு தோன்றினாலும், அவருக்கு "வேண்டுதல் வேண்டாமை" இல்லை. ஏனெனில், அவர் "ஸர்வகாரண பூதாசக்தியான தேவியின் பாங்காரயிருத்தலினாலே யென்க.

நிர்க்குண ப்ரஹ்மத்தையேயன்றி சகுண ப்ரஹ்மத்தை ஆச்ரயித்து "அவன் அடி சேர்ந்தார்க்கு" (சித்திபெற்றார்க்கு) "எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உண்டாகா" என்று அனுபூதியுரைத்தலையே கடவுள் வாழ்த்தாகக்கொண்டு சொல்கிறார்.

* * *

"இருவினை நேரொப்பு."

மூன்று நான்காவது குறள்களினால் ஸஹஜானுபவம், ஸ்வானுபவ மிரண்டையும் சொல்லி, ஐந்தாவது குறளில் "அணைந்தோர் தன்மை" கூறுகிறார்.

"இருவினை நேரொப்ப வின்னருட் சக்தி
குருவென வந்து குணம்பல காட்டித்
தருமென ஞானத்தாற் றன்செய லற்றாற்
றிரிமலந் தீர்ந்து சிவனவ னாமே."

என்றோதியுள்ள திருமந்திரோப தேசப்படிச் "சிவனவனாகி" "இறைவன்"மெய்ம்மை சேர்ந்தபுகழை விரும்பினோரிடத்து, மயக்கத்தைத் தரும் "இருவினையுஞ் சேரா" என்பது 5-வது குறளின் கருத்தாம். அது இது:—

(5) "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இதனால் "அணைந்தோர் தன்மை" கூறி அடுத்த 6-வது குறளில், அவனையடைந்து அவர் ஒழுக்க நெறியின் வழுவாது நின்றவர்" தாமும் "நீடு வாழ்வார்"—பிறப்பறுத்து எக்காலத்தும் ஒரே தன்மையராய் வாழ்வார் என்று கூறி,—

(6) "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொ
நெறிநின்றார் நீடு வாழ்வார்" [ழுக்க

என்று அதையே கடவுள் வாழ்த்தாக அர்ப்பணஞ்செய்கிறார்: ஏனெனில், கடவுள் தன்னையடுத்தார் வசத்தினராதலாலும், அவர்கள் தம்மைப்படுத்து அறவழி நின்றாரை ஆச்ரயிப்பவராயிருத்தலினாலும் என்க. "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று பகவான் தானே அடியெடுத்துக் கொடுத்ததையும் உள்ளாய்ந்து உணர்க.

* * *

"மனக்கவலை மாற்றவழி."

இதனால் விஜ்ஞானகலருக்கு பிறவித்துன்ப நீக்கம் சித்திக்கும் உபாயங்கூறி, அவ்வளவு பரிபக்குவம் சித்திக்கப்பெறாது, "மனக்கவலை"மட்டும் தீர்ந்தால் போதுமென்னும், பிரளயாகலரான ஜீவன்களுக்கு, அத்துன்பந்தீரும் வழியும் கடவுளை யடைதலே யென்றுவற்புறுத்திக் கூறுவான்,—

(7) "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தா
மனக்கவலை மாற்ற லரிது" [ர்க் கல்லால்

என்கிறார்.

உலகத்தார் துன்பந் துடைத்தல்வழி புகட்டுதலால், இதுவும் கடவுள் வாழ்த்தேபாம்.

* * *

"தர்மம் சர."

பிறகு 8-வது குறளில் "தர்மம்சர" என்னும் வேதவாக்கை யனுசரித்து அறத்தைப் பிரித்து ஸம்ஸார ஸாஹரத்தில் விழுந்துழலும் சகளஜீவன்களுக்கு அறவழியைச் சிறப்பித்துக் கூறுவான்,—

(8) "அறவாழி யந்தணன் தான்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லறிது."

என்றுகடவுள்வாழ்த்துக் கூறுகிறார். ஏனெனில் "தர்மம் சர" என்னும் வேதவாக்கை யனுஷ்டிப்போர் குருசேவை பெற்றுய்யத் தன்னாலே அருகராவர்.

"அறவழி யேயது குருவழி யாம்
மறவழி யெல்லாம் பிற'வழி யாம்
அறவழி யேதனி வழிநடந் தால்
அறவழி யேகுரு எதிர்ப்படு வார்."*

* * *

"வணங்காத்தலை" "காணக்கண்"

அறத்தைச் சொல்லிப் பின் "தீவினை விட்டீட்டல் பொருள்" என்று ஔவையார் ஓதிய "அர்த்தம்" என்னும் பொருட் பகுதியைப் பொருந்தப் பொருத்தி யதுவும் கடவுளை வழிபடுதற்கானதோர் வழியாமென்பதை வற்புறுத்துவான்,

(9) "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை." [குணத்தான்
என்றேறுதலானும்.

அஷ்டகுண கலியாணரான கடவுளை வணங்காத்தலைகள், காணாக்கண் கேளாச்செவிபோல், பயனிலாதனவாம்—என்றார்.

"எண்சாணுடம்புக்கும் சிரஸே பிரதான" மாதலால், சகளவடிவினரான ஜீவர்களின் கடவுளைவணங்கா (அதாவது, தீவினைவிட்டு தர்மத்தையநுசரித்து ஒழுகாத) தலை, (உடம்பு, ஜன்மம்) பிரயோசனமற்றதா மென்றபடி. அறவழி நின்றொழுகவும் பக்குவம் போதாது பொருளீட்டலிலேயே கருத்தாயிருப்பவர் உய்யும்பொருட்டு அஷ்டைசுவரியங்களுக்கும் இருப்பிடமாய் அனந்தகுண கலியாணராயிருக்கும் சகளவடிவினரான "எண்குணத்தான் தாளை" வணங்காத்தலையானது "காணாக்கண்போல்" இருந்தும்பயனில்லை யென்றார். "உடம்பினைப்பெற்ற பயன்" சித்திபெறுமையால் "குணமில" என்றார்.

* * *

"உடம்பின் பயன்."

"உடம்பின் பயன்" என்ன வெனிலோ, ஔவை தம் குறளிற் சொல்லக்கேண்மின்:—

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்."

7, 8, 9-வதாகிய மேற்கண்ட மூன்றுபாட்டுக்களாலும் "கடவுளை" நினைத்தலும், வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்ட" தென்பர் மேலோர்.

* * *

திரிகரணசுத்தி : திரிமலந்தீர்த்தல்.

மனக்கவலைமாற்றக் கடவுளை நினைத்தலும், ஸம்ஸார துக்கம்நீங்கக் கடவுளை வாழ்த்தலும், உடம்பின் பயன்பெறக் கடவுளை வணங்கலும் வேண்டுமெனத் திரிகரணங்களாலும் கடவுளை வழிபடுமுறை செப்பிக் காரணகாரிய தொடர்யாக (தொடர்ச்சியாக) வரும் "பிறவிப்பெருங் கடலை"த் திரிகரணங்களாலும் கடவுளை வணங்கித் திரிமலந்தீர்ந்து "இறைவனடி சேர்ந்தவர்" மட்டுமே மூழ்கிப்போகாமல் நீந்தி அக்கரையாகிய பேரின்பவீடு பெறுவர். அப்படி "இறைவனடி சேராதார்" நீந்தாராகி மூழ்கிப்போய் சகளராய்த்தானே பிறந்துபிறந்திறப்பர் என்பான்

(10) "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

என்று பத்தாவதான † தசமஸ்தானத்திலிருந்து உண்மையை உள்ளபடியுணர்ந்து "ஸத்யம் வத" என்னும் வேதவாக்கையனுசரித் துண்மை

* விவேகசிந்தாமணி 128-வது பக்கம் பார்க்கவும்.

† "தசமியிலே சாகரத்துக்கப்பாலேறிச் சிலம்பொலியுமுனதுடைய இருக்கால் கண்டு" என்றதனால் **தசமஸ்தானம்** பிறவிக்கடல் தாண்டி யுள்ளதென்றுணர்க.



கூறுதலை கடவுள் வாழ்த்தெனப் பத்துப்பாக்களினாலும், "அம்பாம் வாழ்க"வென்றுசீர் வசனம் சொல்லிய ஆண்டியைப்போல், "கடவுள் வாழ்த்து"க்கூறி முடித்தார். இப்படியே அறம், பொருள், இன்பம் என்கிற முப்பகுதியிலும், கடவுளை வழிபடுதலையே முக்கியமாகக்கொண்டு, "வள்ளுவர் தம் வாயால் கேளாதனவெல்லாங் கேட்டு" இறைவனைத் தலைவனாகக்கொண்ட சங்கப்புலவர்கள் ஒவ்வொருவரும் வியப்பு முவப்புமடைந்து அக்குறள்பாடிய அவரையும் அக்குறளையும் அபேதமாகநினைத்து வாழ்த்திய கவிகளை "திருவள்ளுவமாலையில்" காணலாம். அவர்களிலொருவரான சீத்தலைச்சாத்தனார், அச்சங்கத்தவராயிருந்ததனாலே யவ் வித்வத் சபையில் அரங்கேற்றப்பெறும் நூல்களிலுள்ள குற்றங்களைக் கேட்கப்பொறுதாராகி, "ஐயோ என் தலைவிதி இதையெல்லாங் கேட்டிருக்கப் படைத்ததே" யென்று, தலையிலடித்துக்கொண்டு புண்பட்டு "சீத்தலை" யாயினர். அப்படிப்பட்ட சாத்தனார்

"தடுமைகத் துளைத் தேழ்கடலைப்புகட்டிக்
குறுகத் தறித்த குறள்."

எனப்பெருமைபெற்ற இந்நூலில் விவரிக்கப்பெற்ற "வள்ளுவர் முப்பாலால், தலைக்குத்துத் தீர்வு" பெற்றாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் இதில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலால் கூறியவெல்லாம் இறைவன் வழிப்பாடாகவே யிருந்ததனால் எல்லாமிறைவன் மஹிமையையே கூறுவதாயிருந்ததுபற்றி யென்று கொள்க. சகஜ ஞானத்தில் ஸர்வம் பிரஹ்மமயமென்கிற அனுபவம் உதிக்கின்றமையால், அவர்கள் வாய்ப்பிறப்பெல்லாம் வேதவாக்கே. பரை, பச்யந்தி, மத்தியமை, வைகரி யென்னும் நான்குவாக்குக்களும் ஒன்றுக்கொன்று பொருந்தப் பொருத்திப் பேசுந்திறன் அவர்களுக்கேயுண்டு. இதற்குச் சான்றாகப் பொய்யாமொழிப்புலவர் அனுபவத்தை யிங்கெடுத்துரைப்போம்:—

"வள்ளுவனார் வைப்பு" வாய்ப்பு.

"முப்பாலு முண்டோம் முலைப்பா லினிநுகரோம்
அப்பாலுக் கப்பாலு மாயினேம்—எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து."

"வள்ளுவனார் வைப்பு" (பொக்கிஷம்) நித்தியமாயுள்ளதாதலின் எமக்கும் வாய்த்தது: எப்படியெனில், சொல்வோம். இந்தத் திருமயிலையின்கண்ணே வடபாரிசத்திலுள்ள திருவள்ளுவர் கோயிலில் "வள்ளுவனார்" திருவுருவமைந்து கருவுருமிகுந்த "கல்லுரு" வொன்றிருக்கிறது. அவ்வுருவைப் பிடித்ததன்கருவைப்பெருக்கி யக்கருவும் கரையக்கரைந்துருகி மனம் "திருவுரு"வாகவும் அவர் திருவுருத்தானும், "ஸ்ரீகுருமூர்த்தமாய்" "ஸ்ரீயுரு"க்கொண்டு, காரிருள் நீங்கப் பேரருள் தந்தெனைப் பேசாமடந்தையாப் புணர்ந்துருக்காட்டி யுருவழித்தேபினும் அருவாயிருந்து உருவாயமர்ந்து, "அருவேயுருவும், உருவேயருவுமாய்த், திருவுருக்கொண்டெனைத் தேற்றியேவிட்டது". ஆனதுபற்றி யான் அவரையே சிந்தித் தானுணர்வொழித்து உண்மையே கதியாக் கிடந்ததோர் போது,—

அடியளவாலே குறள்வடிவாயின
அடிமுடிகாணப் பொருள்குறி தமிழ்வேதம்
†வடிவளவாலும் குறள்வடிவேயாகி
அடிமுடிமேல்காணக் குறிகாட்ட லாயிற்று.
காட்டியகுறியைக் கண்டதிலிருந்தேன்.
சாட்டியநெறியை விண்டதிலுரைத்தேன்.
சாட்டியும் ஆட்டியும் ஓட்டியநெறியைக்
காட்டிய கைக்குறி தன்னில் காணார்,
தீட்டியபுத்தியின் தெள்ளறிவாலே
யீட்டியதிருக்குறள் முப்பாலதனையும்
காட்டியகுறள்வடி வானதோர்பதிப்பில்
நீட்டிநீட்டிப் பொருள்பெறநீட்டித்
தாட்டியாகவே தானவனுமள
ஊட்டியூட்டியுணர்ந்துய்வாரே!.—ஓம் தத்ஸத்.

† Refers to the pocket edition of the work now under review and the memories of *Self-Experience* its reading aroused in the writer.

# "MYSTIC DALLIANCE" AT TIRUVALLUVAR'S.

"பின்னுரை."

[அகாரமாம் உயிர்முதலெழுத்தைக் கொண்டு துவக்கிக் ககாரமாம் மெய்ம்முதலெழுத்தடுத்துவர உயிருடலிரண்டு மொன்றிய பிரஹ்மாத்மைக்கிய ஸ்வரூப லீலையைப் புருஷார்த்தம்பற்றிப் போதிப்பான் முப்பாலால் கூறத்தக்கதனைத் தினையுங்கூறிக் கடைசியில்,

"ஊடுதல்காமத்திற் கின்பமதற்கின்பங்
கூடிமுயங்கப் பெறின்."

என்று னகாரத்நால் முடித்துப்பின்னர்,—"மௌனமந்திராதிக்ய வித்யையினால்" முப்பாலுக்கப்பாலாய் விளங்கும் "வீட்டுநெறிப்பாலைக் "காட்டேக்குறியுங் கடந்தவர்" என்பான், இடது கையில் திருக்குறட்சுவடியும், வலதுகையிலுள்ள ஜபமாலை அஜபாமந்திரயோகசித்தியில் நழுவிக்கையி லசைவின்றி தொங்கிக்கொண்டிருக்க "காட்டுக்குறியுங் கடந்தவர் காரணத்தை, யேட்டின்புறத்தி லெழுதிவைத்தென்பயன்!" என்று சிந்திப்பார்போல் சிந்திக்கச் சித்தவிருத்தி நிரோதனத்தில் சிந்தைநழுவிப்போகவும் அப்படியே சமாதியுற்று, "இதுதான் வீட்டுப்பால்" என்று "பாசீன நினைந்திம்மூன்றும் விட்டார்க்கு" ஓதாதோதுவார் (தக்ஷிணாமூர்த்தி) திருக்கோலங்கொண்டு வீற்றிருக்கும் அவர் திருக்கோயிலில் நடந்ததோர் அதிசயத்தைத் "திருவூடல்" என்னும் தலைப்பின்கீழ் 1904-ம்வருஷத்தில் (Vol XIII. No. 3) ஜூலை மாசத்து விவேகசிந்தாமணியில் வெளிவந்தவாறு, வியாக்கியானங்களை நீக்கிச் சுருக்கமாகவேயிங்கெடுத்துரைத்தல் "இறைவனடி தொழுவார்க்கு" இனிப்பாயிருக்குமென்று அன்பர் ஒருவர் வற்புறுத்தினதன்மேல் அஃதைக் கீழேயெடுத்து வரைகிறோம்.]

## "திருவூடல்."

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர்க்குங் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம்; பரனைநினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."—ஔவையார்.

### I

அபேதபாவத்தில் மும்மல நீக்கம் அல்லது திரோதான நிவர்த்தி.

The Cleansing of the Spirit.

"நஞ்சனிலாவிடில்பஞ்சமர்நீவிர்கெட்டிடுவீரெனுள்பேதமிலள்
வஞ்சநினைத்திலள்வாய்மையேசெப்பினள்நெஞ்சகத்தேயெனைவைத்தஅவள்;
பஞ்சமர்கெட்டிடில்வெஞ்சமர்விட்டிடுமென்றேயியம்பினன்வேறற்றே;
சஞ்சலநீங்கச் 'சா-மா'வெனவழைத்தஞ்சறவென்னையடித்தனளே!"

### II

சத்திநிபாதம், என்னும் திருவருட் பிரசாதம்.

Growing in the Light of Grace.

"நெஞ்சயர்ந்தம்மா அச்சா அஉம்என்றழுதனனுன்
கிஞ்சித்துமென்னிற்குறையோராதவள்கொஞ்சினள்கான்
தஞ்சமாத்தரையில்ஓமெனப்பழுத்துவிழுந்துபுரண்டேனை
அஞ்சலென்றவளார்வநிறைந்தெடுத்தார்முதூட்டினளே!"



### III

"ஸாயுஜ்ய ஸாம்பிராஜ்ய"மென்னும் முத்திசித்தி.

Entering the Kingdom of God, or Freedom of Soul.

"ஊட்டினள் அன்பள் உண்டனன் அருளன்!
ஈட்டினபொருளெலாமென்றணக்கீன்றனள்
ஆட்டியுங்காட்டியுஞ்சாட்டியுமென்றனை
ஓட்டிப்போட்டிஓமிலடைத்தனள்."

### IV

துதி.

Praise.

ஆள்வாரற்ற மாடாய்த் திரிந்த அறிவிலியை
மாள்வார் வலையிற் சிக்காதுகாக்க மருட்டிவிட்டு
ஆள்வான் தனிநினைந் தன்பா லழைப்பித்துக்
† கேள்வியிலாத வள்ளுவன் கோயிலிற் கட்டினாள் வல்லவளே!

ஓம் தத்ஸத்.

## Easy lessons in Economics-IV.

குடிவாழ்க்கை.

### பாடம் IV. தொழில்.

அமெரிக்காவில் விளைந்த கோதுமை இங்கிலாந்திலுள்ள ஜனங்களின் ஆகாரத்திற்கு அவசியமாயிருப்பதால், அதைப் பயிர்செய்பவர்களுக்கும், அவர்களுக்குவேண்டிய கருவிகளைச் செய்துகொடுப்பவர்களுக்கும், விளைந்த தானியத்தைக் கப்பலேற்றி இங்கிலாண்டுக்குக் கொண்டு போகிறவர்களுக்கும், அவ்விடத்தில் அதை உணவுப் பொருளாக மாற்றுகிறவர்களுக்கும் தனித்தனி இவ்வளவுபாகம் போய்ச்சேருமென்று கணக்கிட்டுக் கூறுதல் அசாத்தியம்.

இந்தியாவிலிருந்து பஞ்சு இங்கிலாண்டுக்கு ஏராளமாய் ஏற்றுமதிசெய்யப்படுகிறது. அது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்டு அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பஞ்சாலைக்குக் கொண்டு போய் மூட்டைகட்டப்பட்டுத், துறைமுகம் கொண்டுபோய் கப்பல்மார்க்கமாய் இங்கிலாந்துக்குக் கொண்டுபோகப்பெற்று, அவ்

† "நாதமுங்கடந்த காரணத்தால் கேட்கப்படும் சுருதி வாக்கியங்களுக்கு மப்பாலுள்ள" என்றதனால் "மௌன மந்திராதிக்யவித்யையினாலே, 'காட்டுக்குறியுங்கடந்த வீட்டுப்பால் தன்னை' நித்தமுத்த நிர்விகற்பசமாதியிலிருந்து விளக்கிக் காட்டுகிற வள்ளுவனார்" என்பது பெறறப்பட்டது. இதுவே "வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து" என்று பொய்யாமொழிப்புலவர் பெறலரும்பேறுய்ப் பெற்றதோர் "வைப்பு"—வள்ளுவனார் வைத்த பொக்கிஷமாம். இது "ஏலேலோசிங்கன் பொருள்" போல், என்றுங் குறையாது, எத்தாலும் நீங்காது.

விடத்தில் கடற்கரையிலிருந்து நெசவுசாலையிருக்குமிடத்திற்கு புகைவண்டியில் அனுப்பப்பட்டு, நூலாகவும் வஸ்திரமாகவும் செய்யப்பெற்று, போனவழியாகப் பின்னும் நம்முடைய தேசத்திற்கு பல வர்த்தகர்கள் மூலமாய் நமக்குக் கிடைக்கின்றது. இவ்வளவு சுற்றலில் சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள், தரகுக்காரர்கள், வேலைக்காரர்கள், வண்டிக்காரர்கள் படகு கப்பல்காரர்கள், சுங்கக்காரர்கள் முதலியவர்கள் வஸ்திரத்தின் மூலமாக இலாபமடைகின்றனர்.

பருத்தியைப் பயிரிட்டு நூலாக நூற்றால் அது 'பலமுறை' வஸ்திரமாவதில்லை. இப்படியே சணல், ஆட்டுரோமம், பட்டு, தோல் முதலியவைகளின்வேலை. அவைகளின் கிரயம் முழுவதும் செய்யப்படும் வஸ்திரம் அல்லது பொருளினின்று ஒரேமுறையில், செய்கிறவர்களுக்குச் சேரவேண்டியிருக்கிறது. பருத்தி, சணல், ஆட்டுரோமம், பட்டு முதலியவைகளை வஸ்திரமாக்க வேண்டிய கருவியல்லது யந்திரமோ, பலமுறை அவ்வேலையைச் செய்யுமாகையால், யந்திரத்தின்கிரயம்முழுவதும், அவ்வெந்திரம் ஒருதடவையில் செய்கிற வஸ்திரத்தினின்றுமே பெறப்படுகிறதில்லை. நெசவுயந்திரமொன்றைக் கொண்டு பல வருஷங்களுக்கு நெய்து கொண்டிருக்கலாம். கருவிகளை வருஷா வருஷம் புதிதாகச் சம்பாதிக்கவேண்டியதில்லை. கருவிகள் அல்லது யந்திரங்கள் எவ்வளவு காலத்திற்கு நீடித்து நிற்குமோ அவ்வளவுக்கு அது மேலானதென எண்ணப்படுகிறது. யந்திரங்களைச் செய்கிறவன் அதன் கிரயத்தைச் சிறுகச்சிறுகப் பெற்றுக்கொள்ளலாம். அவன் செய்துவிற்கும் யந்திரம் ஒருவருஷத்தில் கெட்டுப்போகாததாகையால், அதன் கிரயத்தை இத்தனைவருஷங்களில் பெற்றுக்கொள்ளுகிறதென்று உடன்பட்டு அதன் கிரயத்தையடைகின்றான்.

செய்துமுடித்த சாமான்களை வேண்டுமிடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதும் ஒரு தொழிலாகக்கருதவேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் செய்யப்படும் துணிகளை இங்கே கொண்டுவராவிட்டால் ஆங்கிலேயருடைய நெசவுத்தொழிலானது பயனற்றதாய்விடும். கப்பல் வேலைக்காரர்கள், ரயில்வண்டி வேலைக்காரர்கள், மாட்டுவண்டிக்காரர்கள், பொதிஎருத்துக் காரர்கள், படகுக் காரர்கள், தலைச்சுமையெடுப்பவர்கள் முதலிய பலவித தொழிலாளிகளுக்கு இவ்வேலையானது ஜீவனத்திற்குக் காரணமாயிருக்கின்றது. தவிர கப்பல், ஓடம், படகு இருப்புப்பாதை, வண்டிகள், பாதைகள், கால்வாய் முதலியவைகளைச் செய்கிறவர்களுக்கும் அவ்வேலையே ஆதாரமாகின்றது.

தானியங்கள் அறுவடை செய்யப்படும் இடத்திற்கும், கைத்தொழில்சாலைகளுக்கும் ஒவ்வொருவனும் போய்த் தனக்கு அவசியமான பொருள்களை வாங்கிக்கொண்டு வருவது சாத்தியமில்லை. ஆகவே அவைகளை வரவழைத்து வைத்துக்கொண்டு யாவருக்கும் உடனே கிடைக்கும்படி விற்பதும் ஒரு தொழிலாக ஏற்படுகிறது. கடையென்பதில்லாத முன்காலத்தில சந்தையென்று ஒருதினம் ஏற்படுத்தி, விற்போரும் வாங்குவோரும் சந்தித்து வந்தனர். இப்பொழுதும் இவ்வழக்கம் நடந்து வருகிறது. பயிரிடுவோர்க்கு வருஷத்தில் சிறிது காலம் அதிக வேலையின்றி யிருக்குமாகையால் சந்தைகளுக்குப்போக சாவகாசமிருக்கலாம். வேலையை நிறுத்தாமல் செய்ய வேண்டிய தொழிலாளிகளுக்கு சந்தைகள் பயன்படுவதில்லை. ஆகையால் ஓரிடத்தில் நிலையாயுள்ள வியாபாரமே விற்போர் வாங்குவோராகிய இருதிறத்தாருக்கும் சௌகரியமாகையால் பெரிய விடங்களில் கடைகளேற்பட, வர்த்தகம் என்பதும் ஒரு தொழிலாக ஏற்பட்டது.

நம்முடைய தேசத்தில் பலவிடங்களில் நெய்வோர், கருமார், மரத்தச்சர், முதலிய சில தொழிலாளிகள் தாங்கள் செய்யும் சாமான்களைத் தாங்களே விற்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தெருத் தெருவாகத் திரியும்நேரத்தில் வீட்டிலிருந்து வேறுவேலையைச் செய்யக் கூடுமாயினும், முதலில்லாமையால், உணவுக்கும் தொழிலுக்கும் வேண்டியதற்கு ஏற்கெனவே செய்த பொருளை விற்றே ஆக வேண்டியிருக்கின்றது. வியாபாரிகளுக்கு விற்பதில் அவர்களுக்கு இலாபம் தள்ளி விற்க வேண்டியிருக்கிறது. அந்த இலாபம் சொற்பமாயினும், அதையும் தாங்க சக்தியற்றவர்களாய் தாங்களே சாமான்களை விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள்.



தவிர நமது தேசத்தவர்கள் பிரதேசங்களிலிருந்து வரும் துணி முதல் ஊசிவரையிலுள்ள ஒவ்வொரு கைத்தொழில் சாமானையும் அதிக பிரியமாய் வாங்கி உபயோகிப்பதால் நமது தேசக் கைத்தொழில் கெட்டு, கைத்தொழிலாளிகளின் வரும்படி குறைந்து, தினக்கூலியும் சரியாகக் கிடைப்பது அரிதாகித் தவிக்கிறார்கள்.

T. C. வெங்கடரமண அய்யர்.

## SOME MILESTONES IN THE PATH OF YOGA,

*Or The Negapatam Yogi and the Yoga-Bhumikas.*

## "நாகப்பட்டணம் யோகி"யும் யோக-பூமிகளும்.

காதலிற்போதம்—"அசரீரிவாக்கு."

"போகவா மீயென்றாய் பொற்பாதம் சேர்வேனென்றாய்
யோக சமாதியிலும் போதநிலை யனுபோகமதிலும்
ஏகமாய் உயிர்நிலை யறிந்துள்ள மூடையுமட்டும்
ஏகமாயெனையறிந் தென்னகத்திருத்துவை யிவ்வரமீவை யென்றாய்."

ஸ்ரீ நீலாயதாக்ஷியை நம:

நாகப்பட்டணத்திலே ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் கோயிலிலுள்ள கற்பக விநாயகாதி அர்த்தமண்டபத்தில் இன்றைக்குச் சுமார் ஒன்றரைவருஷத்திற்குமுன் ஒரு மௌனயோகி வந்திருந்து சில தினங்களுக்குப்பிறகு காணாமற்போனார். பிறகு அவர் அவ்விடம்தானே வந்து அந்த அர்த்தமண்டபத்தில் தானே நிஷ்டைகூடி சமாதியிலிருந்து வருகிறார். இன்றைக்கும் அவர் அங்கேயிருக்கிறார். ஜனங்கள் அவருக்கிழைத்த வருத்தங்களைப்பற்றிக் கதை கதையாகச் சொல்கிறார்கள். அவர் மௌனியாதலாலும் யோக நிஷ்டையுள்ளவராதலாலும் அவர் அவற்றையெல்லாம் பாராட்டியிருக்க மாட்டார். ஆதலால் நாமும் அதைப் பாராட்டாது விட்டு, இப்படிப்பட்ட சாதுக்களைத் தொந்திரவு செய்து ஹிம்ஸிப்போர் மஹா பாபிகளாவார்களென்றும் பெருந்துன்ப மனுபவிப்பார்களென்றும் மட்டும் சொல்லி யெச்சரித்துவிட்டுப் பின்னர் அவருடைய யோகசமாதி நிலையைப்பற்றி விசாரிப்போம்.

இவரைப்பற்றிய விர்த்தாந்தங்களை விசாரித்ததில், இவர் சுமார் 40-வயதுக் குட்பட்டவரென்றும், இவரைப் பெற்றோரிருவரு மின்னுமிருக்கிறார்களென்றும், அவர்களுடைய பூர்வஸ்தலம் வேதாரண்யத்துக் கடுத்த கருப்பம்பலம் என்னும் கிராமமென்றும் சொல்லக்கேட்டோம். இதனுண்மை யெப்படியாயினும் இவருடைய யோகநிலையை விசாரித்தறிய இவை

தற்காலம் அத்யாவசியமானவையல்லவால், இதைவிட்டு, இவருடைய தீக்ஷாகாலத்தைப்பற்றி நாம் விசாரித்தறிந்ததைச் சொல்வோம்.

* * *

சாதகர் நிலையுணர்த்தல்.

எத்தனையோ பேர்கள் ஆயிரக்கணக்காய் அவர்களது பிறப்பு வளர்ப்பு, ஊர் பேர், குலங் கோத்திரம் எல்லாவற்றையுந் தியாகஞ் செய்துவிட்டு நல்வழிபற்றி உய்வான் சமயதீக்ஷைகளும், யோகதீக்ஷைகளும், ஞானதீக்ஷைகளும் பெற்று, உலகத்தை விட்டொழித்து அப்பியாசயோகம் செய்து கடைத்தேறவேண்டி இப்புண்ய பூமியிற் பிறந்ததற்குப் பலனைத் தெய்வத்தை நேரில் அறிந்து அத்தேவனோடொன்றுபட்டுய்ய வுழைத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட அநாமதேயர்களில் இவர் ஒருவர். இவர் தீக்ஷாகாலத்தில் இருமுறை காசிக்குப் போய்வந்ததாகவும், பின்னர் இரண்டு வருஷ காலம் "திருப்பெருந்துறையுறை சிவ"னெதிரே, மௌனவிருதம் பூண்டு, மாணிக்கவாசகருக்குக் குருமூர்த்தமாய் வந்ததுபோல், தன்னையும் தடுத்தாண்டு ஈடேற்ற வேண்டுமென்று, ஸதா சிந்தையில் அவர் திருவருளைத் தியானித்து "எனக்கு மோர்வழி சொன்னாலன்றி நின் ஸந்நிதி விட்டகலே"னென்று கிடந்தாரெனத் தெரிகிறது.

'பதியிந்த நிலை'யெனவு மெனையாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமானந்த
கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூர் இந்தக்
கதியின்றி யுறங்கேன் மேற்கருமம் பாரேன்"

என்ற மஹாதீரரைப்போல், இவரும் 'கொடினும் பேதையும் கொண்டது விடாதெனும்,' தர்மம்பற்றி லக்ஷியத்தைப்பிடித்த பிடி நழுவாமல் தானே *மூன்றும் பூமியில் தபஸிருந்து மௌனியாய் யோகநிஷ்டை செய்து வந்தார்.

"பேரெடுத்தேன் பெருந் தபஸ்வியென்றே
ஊரெடுத்தே யுருத்தான் ஜபித்தேன்
பேரெடுத்து ரெடுத்துல கெடுத்தேன் †
பேரிலா ஸ்ரீகுரு நாமங் காணேன்."

திருப்பெருந்துறையிருந்து இவர் இறைவனுக்கிணங்கப்படி திருவாரூர் சென்று தியாகராஜரை வணங்கி 'வழி யீதென்ன' வென்று கேட்டு நிற்கவும், அவர் திருவருளிருந்தவாறென்னே! யென் றதிசயிக்கும்படி, அங்குள சிலர் இவரை வேஷதாரி யென்றும் கபட நாடகனென்றும் தம் துஷ்டப்புத்திகொண்டு இவரையுமதித்து இவரைப் பேசும்படி சூடிட்டு விட்டாரென்று சொல்கிறார்கள். இது எப்படியாயினும் இவர் திருமேனியில் சூடிட்ட வடுக்கள் இன்னுமிருக்கின்றன.

* * *

சூடிட்டாட்கொண்ட சூக்ஷ்மம்.

"ஆள்வாரற்ற மாடாய்த்திரிந்த அறிவிலி" யென்று தியாகராஜர் தம் திருக்கோயில் கொண்டானைப் பிடித்துச் "சித்தமெனுந் திண்கயிற்றால்" கட்டுவித்து கோயிற்காளைக்குச் சூடு போட்டு விடுவதுபோல், இவரைச் சுட்ட வடு விளங்கச் சூடிட்டு இவர் மௌனத்தைப் பரிசோதித்து "இனிப்போய்ச் சும்மாக்கிட" வென்று கட்டளை யிட்டனுப்பினர், போலும் தம் மூரைவிட்டு வெருட்டி விட்டார். "சூடுண்டமாடு நாடெங்குந் திரியினு மதற்குக் கேடொன்றும் வாராது" என்பது இப்புண்யபூமியில் கோயில் மாடுகளின் அனுபவமல்லவா?

அப்படியே இவரும் கெட்டலைந்து படாதபாடெல்லாம் பட்டுத்தேறி மவுனபங்கம் வாராமற்றானே, நீலாயதாக்ஷியம்மனையடுத்து அகங்குழைந்து முகம்வாடிநிற்க, அவள் இந்த

* 3-வது யோகபூமியென்று யோகசாஸ்திரங்கள் சொல்லும் தனுமானஸி—லக்ஷியம் ஒன்றிலேயே ஏகாக்ரசித்தமாய்ப் படிந்த சூக்ஷ்மமனதினாலாகும் நித்திதியாஸனம் மூன்றாவதுபூமி.

† (சுபேக்ஷை, விசாரணை, தனுமானஸி என்னும்) முதல் மூன்று பூமியும் தாண்டின சாதகருக்கும் "ஸ்ரீகுரு" தரிசனம் துர்லபமாமென்பது கூறப்பட்டது.



யோகிக்குத் திருவுருத் தெரிசனங்காட்டி "ஸ்ரீகுரு"வாய் வந்து "மூத்த பிள்ளையார் வாசலிற் சென்று மூச்சடங்கக்கிட" வென்று கூறி யறைந்தனள் போலும், அறிவுருவதனில் திருவுருத் தெரிசனம் தானேகண்டு, கற்பகவிநாயகரது அர்த்தமண்டபத்திற் போய் நிஷ்டைகூடி சமாதி சேர்ந்தார்.

கலியின் கொடுமை யாரைவிட்டது! இவர் தேஹப்பற்றை விட்டொழித்துத் தேஹியையே சதமென்று நம்பி அத்தேஹியே தானாய் ஆகுவான் கடுந்தடவியற்றிக் காமத்தைத் தஹிக்க முயன்று வந்தாரேனும், அறிவிலி மாந்தர்கள் அவர்தனை யடுத்துத் தம் "தேஹோஹ பாவனாசித்தியை" அவர் மேலேற்றி, அவரைத் தொட்டும், தடவியும் நமஸ்கரித்துத் தாம் கொணர்ந்த சிற்றுண்டிகளை யூட்டுவான் அவரைக் கஷ்டப்படுத்தியும் பலவாறு ஹிம்ஸைகள் புரிய, அவர் மிக வருந்திப்போனார். சூடுண்டபோதும் வாய்திறவா மௌனியாம் தீரர் அடியுண்டபோதவர் நிஷ்டைகுலைவரோ! இவர்களுடைய ஹிம்ஸைகளை யெல்லாம் கடந்துபோவான் அவர் ஆழ்ந்த சமாதியிலிருக்க, "அவர் ஓர் மஹான்" என்றுணர்ந்த அவ்வூரிலுள்ள மதிராஸ்பாங்கி ஸ்ரீவேலாயுதம் பிள்ளையவர்கள், அம்மண்டபத்தைச் சுற்றிக் கிராதிகள் போட்டுத் திக்பந்தனம் செய்து, அவருக்கு வேண்டிய உணவை அவரெப்பொழுது கண்விழிப்பாரோ அச்சமயமறிந்து குழந்தைக்குத் தாய் பாலூட்டுமாறுபோல் உள்ளங்குழைந்து உள்ளன்பு மிகுதியால் அவரிஷ்டமறிந்து சிறிது நீராகாரம் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்து பெரும்புண்யம் கட்டிக்கொண்டாரென்று அறிகிறோம். இப்படிப்பட்ட தர்மசீலர்கள் சிலர் இன்னும் இப்பூமியில் இருப்பதினால்தான், அபூர்வமாயேனும் மழைபொழிகிறது. இல்லாவிடில் வான்வறண்டுபோ மென்பதிற் சந்தேகமில்லை!

யோகசித்தரான மஹான்களை வழிபடுமுறையுணர்த்தல்.

தஞ்சையிலுள்ள சாமந்தாங்குளக்கரையில் ஒரு அவதூத சித்தர் பெரியவராயிருந்தார். அவர் யோகசித்திபெற்ற மஹான். மௌனியாயினும் சித்திவிளையாட்டிற் பிரியர். காரியத்திற் பசு, காரணத்திற் சூரர். அவரையொரு பிராம்மணவாலிபர் அடுத்து ஏதோ 'வாதசித்தி' பெற வேண்டிக் காத்திருந்தார். ஸ்வாமிகள் அவதூத சித்தர் என்று சொன்னோம். அஹத்திலன்றிப் புறத்திலுமப்படியேயிருப்பர். தஞ்சாவூர் ராஜ வீதியில் இவர் பிறந்தமேனியாய்ப் போகப் போலீஸார் பிடித்து மாஜிஸ்திரேட் முன் கொண்டுபோய் சட்டப்படி இவர் மானங்கெட்டு வெளியில்வந்தவரென்று குற்றஞ்சாட்டினார்கள். சித்தர் சும்மாவிருந்தார். அவரதுண்மையறிந்த ஒருவர், அவரது மஹிமையைக்கூற, மாஜிஸ்திரேட்டு என்கடமையை யான்நிறைவேற்றுகிறேனென்று ஐந்துரூபாய்அவருக்கு அபராதம்போட்டார். உடனே சிலர்கூடி அபராதத்தைச்செலுத்திவிட்டு அவரை யழைத்துச் சென்றார்கள். ஆனால் அவதூதசித்தர் தன் நியமம் தவறினாரில்லை. பின்னரும் அவர் நிர்வாணமாகவேயிருப்பர். சந்துகளில்போனால் அவரை யொருவரும் தடுப்பதில்லை. ராஜவீதியில் அவர் நடக்கப்புகுந்தால், "ஐயோ! போலீஸார் பிடித்துக்கொள்வார்களே"யென்று அந்தப்பிராமண வாலிபர் தனது மேலுத்திரீயத்தை யெடுத்து அவர் அரையில் சுற்றிக்கட்டுவார். அதற்குப் பலனாக அவதூத சித்தர் அவரை முதுகில் பளீர் பளீரென்று அறைவார். அவ்வாலிபரும் அடிபொறுக்க மாட்டாமல் பாவம்! முதுகை நெளித்துக்கொண்டு, அவர் அம்மணத்தை மூடாது கூடவேபோவார். இவர் மஹானென்று தெரிந்துகொண்ட சில "பணத்தாற் பெரியமனுஷ்யர்கள்" பாலும் பழமும் கொண்டு அவரைத் தரிசிக்கப்போய் ஸ்வாமிகள் அவர் கொண்டுவந்ததைப் புசிக்கவேண்டுமென்று பார்த்தார்கள். மரியாதையாய் தூரவி

ருந்து பார்த்துக்கொண்டிருக்குமட்டும், அவதூதர் அவரைக் கண்திரும்பியும் பாராது சும்மாவிருப்பர். கிட்டச்சென்று அவரைத் தொட்டு அலட்டியூட்டப்போனால் பளீரென்று கன்னத்தில் கொடுப்பார். இவர் இப்படிச்செய்வதறிந்து போலிபக்தர்கள் அடிபடப் பொருதவராய் அவரையண்டித் தொந்திரவு செய்வதை விட்டுவிட்டார்கள். உண்மைப் பக்தர்கள்போனால் உள்ளமறிந்தவர் உண்மையறிந்து பக்குவ புருஷர்க்குப் பரிந்தனுக்ரஹிப்பர். அபக்குவர் தம்மை அலக்ஷியமாய் விடுவர்.

இவரைப்பற்றி நாம் கேள்விப்பட்டதுயோகவழியிலோ ரிடையூறுற்றுக் கடைப்பிடி ரகஸியம் கண்டுங் காணாது தவித்ததோர் அவசரத்திலென்க.

அம்மஹானைத் தியானித்து "நீர் சித்த புருஷரானதாலென் சித்தங்குடிகொண்டு சித்துருவான நிர்விகல்பந்தனில் நிலைக்கவே யருளவேண்டும்" என்று ஐம்பொறி யடக்கிக் காமங் களைந்து நிஷ்டைகூடிச் சவிகல்பந்தாண்டி நிர்விகல்பஞ் செல்லு மவசரந்தன்னில் ஆருயிர்துடிக்க அங்கம் பொடிபட அயர்ந்தேபோனேம். அதுவே தருணமென்றச் சித்தபுருஷர்தானும் சித்துருக்கொண்டு சத்துடன் கலந்து எழில்நிறையம்பலத் "தவதாரபுருஷராய்ச்" "சிற்றம்பல" வாசலிற் சிறப்புடன் எதிர்க்கொண்டு, அம்பலவாயிலின் அடைப்பதைக் காட்டி, துவம்பதலக்ஷியத்தைத் துவம்ஸம் பண்ணியே, "பலியிது கொடுத்தேன் திறவினி வாசல்!" என்றுமேயவரும் சொல்லாமற் சொல்ல, அம்பலக் கதவும் அடிபடத் திறந்தது!

முன்வழி காட்டப் பின்வழி சென்றனன்.

உள்ளே போன பின் உடனிருந்த யோகியை உற்றுப்பார்த்தனன்! தத்பத துவம்பத மிரண்டும் ஒன்றும் அசிபதந் தன்னில் அடைந்தது கண்டேன்.

கண்டேன் கண்டதை விண்டில னேன்:
விண்டதீ தெல்லாம் வியர்த்தமே யாமால்,
உண்டதொன் றுண்டு, உண்மையுமதுவே!
"கண்ணு லுறப்பார்த்துக் காதலாற் றுளேக்கில்
உண்ணூமே யீச னொளி" யென்றதின்—
உண்மையை யுணர்ந்தா ருணர்வார், உணரார்
உணர்விலாதார்.

"கரையற்ற செல்வத்தைக் காணுங் காலத்தில்
உரையற் றிருப்பது உணர்வு"—ஆதலால்,
"உண்டுபசி தீர்ந்தாற் போலுடம் பெல்லாஅங்
கண்டுகொள் காதல் மிகும்."—

என்றுதான் சொல்லலாம். மேற்சொல்ல வாயில்லை! நினைக்க மனமும் இல்லை!

ஒருவருஷங்கழித்து அருவிற்கண்ட அந்த மஹானை உருவிலுருவா யிருப்பதைப் † பார்க்கப்போனேன். பனிநீர் மலர்கொண் டவர் பொற்பாதம் பூசித்துத் தனிநின்றேனைக் கண்டு "நீ யார்?" என்றார். "உரைகெட வுன்னைக் கண்டவன்தானே திரைகெடப் பின்னும் தெரிசிக்க வந்தனன்" என்று, உள்ளத்தே யுன்னியதை வாயால் உளறச் சித்தரும் உடனே மௌனியானார். "சாகாதிருந்த தலமே மௌனமதால்,' மௌன தெரிசனமளிப்பான் அருவுருக்காட்டியுருவருவழித்த உத்தமபுருஷராய் அகண்டதெரிசனம் அகமகிழ்ந்து தந்தனர்: அவரிற் பிறிதேதுங் காணேன்.

* * *

"மகான்கள் நல்லபாம்புக்கு ஸமானம்."

இது மஹான்களையண்டி அருள்பெறும் வழியாம். அதைவிட்டு அவர் தேஹத்தைத்தொட்டு அவர் தபஸைக்கலைத்துத் தம்மழுக்குறு சிந்தையை அவர் அழுக்கறு தபஸில் சேர்த்தால், அது அவருக்குப் பெருங்கஷ்டமாயிருக்கும்.

† ஸ்தூல வடிவில் திருமேனி கொண்டிருப்பதை என்றபடி.



அவர் துன்பம் பொறுக்காது "ஆ,கெடுவாய்!" என்று நினைத்தால் கெடுதி வந்தவரைச் சூழ்ந்தேகொள்ளும். ஆகையால் தபஸ்விகளிடம் பாம்போடு பழகுவது போலப் பழகல்வேண்டும்! தூரநின்று "சுப்பிரமண்யா!" என்று கும்பிடலாமே யன்றி, கிட்டப்போய் அதன் வாலைப்பிடித்து வாயைத்திறந்து பாலைக்குடியென்றாலது வெடுக்கென்று கடிக்கும். தாபஸாக்னி ஆலகால விஷத்திலுங் கொடியது. "அங்கியிற் பஞ்சுபோல்" அது சித்த மாங்கார மெல்லாவற்றையும் எரித்து பஸ்மமாக்கும். ஆகையால் தபஸ்விகளைக் குழந்தைபோல் தாயன்பால் பூசனைசெய்யப் பக்குவமிலாதார் பாம்புபோற்பயந்து பாலைவார்த்துவிட்டு தூரநின்று தரிசிப்பது முறையாம். முரட்டுத் துணிச்சலைக் குருட்டுத்தனமாய் தபஸ்விகளிடம் காட்டுதல் கேடுபயப்பதாம்.

சாதகரான அப்பியாஸயோகிகள் நிலைகலங்கி உயிர் துடிப்பார்கள். சாத்தியரான யோகசித்தர்கள் நிஷ்டைகுலைந்தால் தஹித்தே விடுவார்.

* * *

"சேத்தாலன்றிச் † சுடுகாடறியார்."

'நாகபட்டணம் யோகி' ஒரு வருஷமாய் இப்படி செத்தபிணம் போல் நிஷ்டையிலிருக்கிறாரே, ஈதென்ன தபமென்று உலகஞானிகள் ஏளனம் கூறுவார்கள். இவர்கள் தம்மனதையடக்கிப் பார்த்தால் அப்பொழுதுதெரியும் அதன் வருத்தம்! "செத்தாலன்றிச் சுடுகாடறியார்!" சுஷும்ன என்னும் சுழிமுனை மலத்தைச்சுத்திகரிக்கும் தலமாதலால் சுடுகாடு, ஸ்மசானம் என்கிற சிறப்புப்பெயர் பெற்றுள்ளது. அதுவும் காமத்தைக் களையவேண்டில் அது தேஹமெல்லாம் ஜல்லிவேரோடிக்கிடப்பதும், அதைக் களையும்போது தேஹமே யிடிந்து விழுந்துபோம் போலிருப்பதும் தானேத் தெரியவரும்.

காமத்தைக் களைவானேனெனில்?

"இந்தக்காமம் தானே ஞானிக்கு நித்திய சத்துருவாயிருக்கிறது." (பகவத்கீதை iii. 39.)

"இந்தக் காமம் மனோபுத்திகளால் ஞானத்தையும் மறைத்துப் புருஷனையும் மோஹிக்கச் செய்கிறது." (பகவத்கீதை iii. 40.)

இந்தக் காமம் எல்லாவற்றிற்கும் ஆவரணமாய் மூடிக்கொண்டிருப்பதால், இதுவே வருணசப்தத்தால் விளங்கும்: மேகத்துக்கும் மயிலுக்கு முள்ள ராசி இதனால் விளங்கும்.

"ஆதலில், அர்ச்சுனா நீ இந்திரிய நிக்ரஹத்தை முதலிற்செய்து, ஆத்ம ஞானத்தையும் அநுபவ ஞானத்தையும் நசிக்கச் செய்கின்ற காமத்தைப் பாவியென்றுணர்ந்து நீங்கி யிருப்பாயாக."— என்று பகவான் கீதையிற் போதித்திருக்கிறார். இந்த காமத்தைக் களைய முதலில் "இந்திரிய நிக்ரகம்" சாதனமாகச் சொல்லியிருக்கிறார். இந்திரியநிக்ரகம் செய்தவர்களுக்கு வாசிவசப்படும். வாசிவசம் பூரணமாய் சித்தித்தால் மனம் வசப்படும். மனம் வசப்பட்டால், சங்கல்பவிகல்பமான அதன் காரியங்கள் வசப்படும். நினைப்பும் மறப்பும், புத்தியைதாம் போனவழியில் இழுத்துக்கொண்டு செல்லாது புத்தியின் வசப்பட்டுநிற்கும். "ஆள்வாரற்ற மாடாய்த்திரிந்த மனம்" சூடுண்ட கோயில்மாடுபோல் தன் ஸ்வதந்திரங்கெடாமல் "சத்துவாபத்தி" யால் ஆத்மபுத்தியின் வசத்ததாய் கட்டுக்குட்பட்டதாகும். மனோவசத்தால் புத்தி வசப்படும். புத்தி வசப்பட்டால், நிதானம் உண்டாகி "திரையற்ற நீர்போல் சிந்தைதெளியும்". இதனால் ஆத்மதரிசன முண்டாகும்.

* * *

காயத்தைக் கட்டுமுறை—விவேகசிந்தாமணி.

சின்னதைப் பெரிதால் கட்டவேண்டுமேயன்றி, தன்னினத்தைக் கொண்டெதிர்த்தால் சிதைவுறும். தேஹத்தைக்காட்டிலும் இந்திரி

‡ சுடுகாடு அல்லது ஸ்மசானம் என்பது சுழிமுனையின் யோகசங்கேத நாமங்களில் ஒன்று.

யங்கள் சிறந்தனவாகையால், இந்திரியங்களைக்கட்ட தேஹம் கட்டுப்படும். ஆனால், மனதைக்கொண்டே இந்திரியங்களை நிக்ரகிக்கவேண்டும். மனதைக்காட்டிலும் புத்தி சிறந்ததால் விவேகபுத்தியால் தானே மனதைக் கட்டல் வேண்டும். புத்தியைவிட ஆத்மா சிறந்ததாகையால், ஆத்மதரிசனம் உண்டானாலே விவேக-சிந்தாமணி-புத்தி சித்திக்கும். ஆத்துமதரிசனமேகுருவருள். 'விவேகாநந்தம்' என்பதும் இதுவே. † ஆத்மாவும் குருவுமொன்றாதலால் குருதரிசனத்தாலேயே ஆத்மதரிசனம் சித்திக்கவேண்டும்.

"குருதரிசனம்" தெய்வானுக்ரகத்தாலும், அந்த அனுக்ரகம், பரசேவையாலும், பரசேவை கர்மபலனையிச்சிக்காமலும் ஈசுவரார்ப்பணமாகவும் ஸத்கர்மத்தையும் ஸ்வதர்மத்தையும் செய்வதாலும் உண்டாவதாயிருப்பதால், கர்மயோகத்தை உபதேசித்துவந்த பகவான் கடைசியில்,—

"அர்ச்சுனா! இவ்வண்ணமாகப் புத்தியைக் காட்டிலுஞ் சிறந்த ஆத்மாவை நன்றாக வுணர்ந்துகொண்டு புத்தியால் மனத்தை நிக்கிரகித்துத் துக்கோற்பத்திக்குக் காரணமான கர்மத்தை யொழிப்பாயாக."—

என்று வற்புறுத்திக் கூறலானார். இந்த உபதேசத்தை மேற்கொண்டு காமத்தை யொழிக்கச் செய்யுந் தபஸே தேஹத்தைச் சின்னாபின்னப்படுத்தி மாணத்தையும் சிலசமய முண்டுபண்ணிவிடும். ஆகையால்தான் காயஸித்திபெற்ற யோகிகளும் குருதரிசனத்துக்குக் காத்திருந்து குருவருளினாலே காமத்தைக்களையும்பொழுது, தேகமாத்யந்தம் ஜல்லிவேரோடிப்படர்ந்த அந்தக் காமம், களையப்படும்பொழுது தேஹத்தைச் சின்னாபின்னப் படுத்திவிடும்: அதனால் தேஹம் விழுந்து போகாதபடி, தேஹத்தை இந்திரியங்களிலும், இந்திரியங்களை மனத்திலும், மனத்தைப் புத்தியிலும் புத்தியை அறிவெனும் ஆத்மாவிலுமாக லய்க்கிரமமாக வொடுங்க வொடுக்கிக் காமத்தை வேரோடு களையவேண்டும். அப்பொழுது லயயோக சித்தியினால் காமத்தைக் கண்டவன் ஹடயோகசித்தியாம் கேவல-கும்பகத்தினால் மிருத்யுவை (மரணத்தை) ஜயித்தவனாகி பிராணனை தேஹம்உயிரோடிருக்கவும் அதனின்று பிரித்துக்கொள்ளும் அதிரகஸியமான "ராஜகுப்த" வித்தையினால், தேஹம் விழுந்து போகாமல் தானே காமத்தை வேரோடு களைந்து அதனால் தேஹமெல்லாம் கட்டுவிட்டுக் கலந்து சேரப்பெற்று, விவேகத்தோடு கூடிய காமவிவர்ஜிதமான மனதினால், நிஷ்காமியசித்தி பெற்ற யோகியானவன் "தேஹோ தேவாலயப்ரோக்த: ஸஜீவக்கேவல:சிவ:" என்ற சுருதிவாக்கிற்சொல்லிய தேவாலயமாக, தேஹத்தை இடித்துக்கட்டுகிறான். இதற்குத் தான் "Resurrection" "செத்துப் பிழைத்தல்" என்று சொல்கிறது. இப்படிச் செத்துச் சுண்ணாம்பாகிப் பின்னும் தேஹத்தைச் சுத்தமாக நிர்மித்துக் கொண்டிருக்கும் யோகியின் தபஸை கலைக்கலாமா? அது மஹாபாபமல்லவா!

* * *

"ஹடயோகசித்தி"—ராஜயோகசாதனம்.

லயயோகசித்திபெற்றவனான யோகி தத்துவதரிசியாவன். பின்னர் ஹடயோகத்தால் பிராணாயாம சித்திபெற்று, காமத்தைக்களையவேண்டுமென்கிற ஹடாத்காரமான லக்ஷியத்தால், பிடிவாத சித்தத்துடனே ஜல்லிவேர்பாய்ந்த காமத்தைத் தத்துவம் தொண்ணூற்றாறும் பிரியப் பிடிங்கி யெறிந்து யோகதற்பரனாய் நாதாந்தத்தி லிருந்துகொண்டு பின்னும் தன் தேஹத்தைக்"கட்டுவிட்டுக் கலந்து சேர"க்கட்டி முடித்துக் கேவலகும்பகம் என்னும் பிராணாயாம சித்தியால் கும்பாபிஷேகம் செய்து யோகத்துக்கெல்லாம் ராஜாவான அத்யாத்மயோகத்தால் ராஜயோகி யென்கிற பேரெடுத்து ஜகத்ப்ரசித்தனாய் விளங்குவான்.

கர்மயோகத்தின் முடிவு காமத்தைக் களைதலால், காமத்தைக் களைந்தபின் காயசித்தி தானே வந்து லபிக்கும். மந்திரம், கற்பம் முதலியவற்றால் ஆகும் காயசித்தி சாதனமாத்திரமேயன்றி உண்மைச் சித்தியளிக்காது. உண்மையான காயசித்தி காமத்தைக் களைந்தபின் சித்திப்பதே யாதலாலும், அந்தக்காமமும் ஆத்மதரிசனத்தாலுண்டான அபரோக்ஷ அகண்டஞான விருத்தியாலன்றி களையப்படுதலில்லையாலும், முத்தி சித்திபெற்றவர்கள் விதேஹ கைவல்யார்த்தம், தேஹத்தை ஆத்மஞானத்துக் கனுகூலமாகச் செய்து கொண்டிருப்பதே "காயசித்தி" என்னும் வாக்கியார்த்தத்துக்கு லக்ஷியமாம். மற்றவையெல்லாம் சாதன மாத்திரமாய் அப்பியாஸத்துக்கு மட்டும் யோக்கியமாயிருந்ததவும்.

ஓம்தத்ஸத்.

---

## Sivayoga-Deepika.
## Chapter III.
### (First Part, Ashtavadhana Siddhi.)

ஓம் ஸ்ரீ. சாவித்திரியை நம:

### சிவயோக தீபிகையில்
### அஷ்டாங்க பூஜா அந்தரங்க சதுரங்க விதானமென்ற

மூன்றாவது படலம்.

---

(முதற்பாகம், அஷ்டாவதான சித்தி.)

1. இந்தப்பிரகாரம் யமம் முதலிய பாஹிய சதுரங்க விதானமானது அழகிய வாக்கியங்களால் மேற் சொல்லப்பட்டது. இனிமேல் ஓ சிஷ்யனே அந்தரங்க சதுரங்கவிதானத்தைச் சொல்லுகின்றோம்: சிவத்தினிடத்தில் அற்பிதமான மனத்தோடு கூடினவனாய் கேட்பாயாக.

2. அதெப்படி யென்றால் சுத்தமனமாகிற சாணைக்கல்லில் சுரோத்திரம் முதலிய இந்திரியங்களால் அரைக்கப்பட்டு பிறந்த விஷயங்களாகிற நிர்மலகந்தத்தை குரு சதாசிவலிங்கத்துக்குச் சமர்ப்பிக்கவும்.

3. எவ்விதம் ஆமையானது தன்னுடைய அங்கங்களை தன்னிடம் அடக்கிக் கொள்ளுமோ, அவ்விதம் சகல இந்திரியங்களையும் தன்னுள்ளடக்கிக் கொண்டு யோகீசுவரனானவன் நியமம் தப்பாமல் சிவத்தியானம் செய்யவேண்டும். அவ்விதயோகீசுவரன் பரமதத்வஞானி என்று எண்ணப்படுவன்.

பிரத்தியாஹாரம்.

4. அநேகவித வர்ணங்களோடு கூடிய ஆதாரம் முதலிய கமலங்களில் அவைகளின் மத்தியில் பிரகாசிக்கும் அநேக விதமான சகுண நிர்க்குண பாவங்களாகிற புஷ்பங்களால் இரவும் பகலும் ஸ்ரீலிங்க மூர்த்தியை ஹிருதய கமலத்தில் விடாமல் பூஜிக்கவும்.

5. ஆதாராதி கமலங் களாவன:—ஆதாரம் (என்னும் மூலம்), லிங்கம் (என்னும் ஸ்வாதிஷ்டானம்), மணிபூரகம், ஹிருதயம் (என்ற அனாஹதம்), விசுத்தி, புருவமத்தியம் (என்கிற ஆக்ஞை), ஆகாசரந்திரம் (என்னும் ஸஹஸ்ர கமலமும்), ஆகிய ஏழும் யோகீசுவரர்களுக்கு சுகத்தைக் கொடுக்கும்படியான மகா விசித்திரமுள்ள தியான ஸ்தலங்களென்று சொல்லப்படும்.

6. மனதை அந்தர்முகமாகச் செய்து திருஷ்டியை பாஹியத்தில் நிறுத்தி இஷ்டமான ஆசனத்தில் தேகம் வளையாமல் இருந்து கொண்டு ஹிருதய கமலத்தில் இடைவிடாமல் அசைவற்றதும் சாந்தமானதும் அத்வைதரூபமானதும் தனது ஆத்ம ரூபமுமான சிவத்தை தியானம் செய்வாயாக. அப்படிச் செய்வாயாகில் நீ சத்யோமுக்தனாவாய்.

† "(விவேக) சிந்தாமணியானது குரு ஒருவரேயன்றி மற்ற வேதாந்த தர்க்கவசனங்களாலும், ஆகமங்களாலும், நானாவித சாஸ்திரக் கூட்டங்களாலும், தியானமுதலிய நற்செய்கைகளாலும், அறியத்தக்கதன்று." என்று இராஜயோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

7. சகல தியானஸ்தலங்களுள் நவசக்கரங்களும் சிரேஷ்டமானதாய் யோகிகளால் சொல்லப்படும். அவைகளை நாம் சொல்லுகிறோம் கேள்.

8. மூலாதாரத்தில் மூன்று சுற்றுள்ள பகாகாரமான (திரிகோணரூபமான) பிரஹ்ம சக்கரம் இருக்கின்றது. அதின் மத்தியில் அக்கினி பிரகாசமாய் சகல அபீஷ்டங்களையும் கொடுக்கும் ஆதிசக்தியை* தியானம் செய்யவும்.

9. அதற்குமேல் சுவாதிஷ்டான கமலம் நாலு இதழ்களுடன் இருக்கும். அதுவே உட்டியாணபந்த ஸ்தலம். அவ்விடத்தில் மேற்கு முகமாய் இருக்கும் சிவத்தை தியானம் செய்யவும்.

10. இதற்குமேல் நாபி ஸ்தானத்தில் ஐந்து சுற்றுள்ள மணிபூரக சக்கரம் இருக்கும். அதில் பாம்பு ரூபமாய் மின்னற்கொடிபோல் பிரகாசிக்கும் முக்தியைக்கொடுப்பதான குண்டலினீ என்னும் "மத்யகுண்டலினீ சக்தியை" தியானம் செய்யவேண்டும்.

11. அதற்குமேல் ஹிருதயஸ்தானத்தில் எட்டு இதழ்களுடன் கூடிய அதோமுகமான அனுஹதசக்கரம் இருக்கும். அதன் கர்ணிகையின் மத்தியில் ஜோதிர்லிங்காகாரமான இஷ்டபிரதசக்தியை தியானம் செய்யவேணும்.

12. அதற்குமேல் கண்டஸ்தானத்தில் ஐந்தாவதான (விசுத்தி) சக்கரமிருக்கும். அதில் நாலாம் அங்குலத்தில் இடைக்கும் பிங்கலைக்கும் மத்தியஸ்தலத்தில் சுஷும்னா சக்தியை ஸ்திரமாயிருப்பதாய் தியானம் செய்யவும்.

13. அதற்குமேல் ஆறாவதான கண்டிகாலிங்க மூலசக்கரம் உண்டு. அதுவே ராஜதந்தகமென்று சொல்லப்படும். அதற்குமேல் அதனுடைய துவாரத்தை சித்தியின் பொருட்டு சூன்யமாக தியானிக்கவும்.

14. அதற்குமேல் ஏழாவதான ப்ரூ (புருவ)* சக்கரமுண்டு. அதுவே ஏகநாளமென்றும் கந்தஸ்தானமென்றும், வாக்பிரதம் என்றும் சொல்லப்படும். அதன் மத்தியில் ஞானலாஞ்சனமான தீபசிகாகாரத்தை தியானம் செய்யவும். [லாஞ்சனம்=அடையாளம்.]

15. அதற்குமேல் எட்டாவதான பிரஹ்மரந்திரத்தில் நிர்வாணம் என்று சொல்லப்படும் மிகச்சூக்ஷ்மமான சக்கரம் இருக்கும். அவ்டத்தில் மோக்ஷத்தைக் கொடுப்பதும் தூமசிகாரூப[மாயிருப்பதுமான] ஜாலந்தரத்தை தியானம் செய்யவும்.

16. அதற்குமேல் ஒன்பதாவதான ஆகாச சக்கரம் பிரகாசிக்கும். அது "த்ரிகூடம்" என்றும், பூர்ணகிரிபீடம் என்றும் சொல்லப்படும். அது பதினாறு தளங்களுடன்கூடின கமலமாய் இருக்கும். அதில் சகல சுகத்தையும் கொடுக்கும் சூன்ய ஊர்த்துவசக்தியை † தியானம் செய்யவும்.

* ["மூலத்தீ" யென்னும் "ஆதார குண்டலினீ" யாகிய அதோமுகசக்தி மூலத்திரிகோண மத்தியில் அக்கினிப் பிரகாசரூபமாய் இருக்கிறது.—வி. சி. ப.]

* சம்ஸ்கிருத ஏட்டுகளிலும் சில மொழிபெயர்ப்பு பிரதிகளிலும் "பூசக்கிரம்" என்று பாடம் காணப்படுகின்றது. அது ப்ரூசக்கிரம் என்று இருக்கவேண்டும். ['பூசக்ர'மென்பதே பாடமாயின், அதற்கு ஸ்ரீசக்ரத்தில் 'பூப்ரஸ்தம்' என்று சொல்லப்படும் புவனமண்டலத்தின் மேல்முனை புருவமத்தியாதலால், "காரியமேழும் கரைந்திடும் மாயையில்" என்ற திருமந்திரத்தின் லக்ஷியார்த்தத்தைக் கொண்டு, "புருவமத்தி" யென்று கொள்ளல்வேண்டும்.—வி. சி. ப.]

† [இதற்கு ஊர்த்துவகுண்டலினீ யென்றுபெயர், மத்யகுண்டலினீ நாபிஸ்தானத்திலுள்ள மணிபூரக சக்ரத்தில் மின்னல்கொடிபோல் பிரகாசிக்குமென்று 10-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறார். ஆதார குண்டலினி யென்னும் அதோமுகசக்தி அக்னிப் பிரகாசரூபமாய் மூலத்திரிகோண மத்தியிலிருக்குமென்று 8-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறார். —வி. சி. ப.]



17. (ஸ்ரீகுரு மூர்த்தியானவர் சிஷ்யனைப் பார்த்து இந்தப்பிரகாரம் மோக்ஷார்த்தியான யோகீசுவரனானவன் இந்த நவசக்கரஸ்தானங்களை யறிந்து தியானம் பண்ண வேண்டுமென்று சொல்லி) பின்னும் பதினாறு ஆதாரங்களுண்டு: அவைகளை விசேஷமாகச் சொல்கின்றேன் கேள் என்றார். அவைகளென்னவென்றால்:—

முதலாவது, பாதாங்குஷ்டம். அதனிடம் பிரகாசத்தைத் தியானம் செய்தால் பார்வை ஸ்திரப்படும்.

18. இரண்டாவது ஆதாரமாவது, பாதத்தின் குதிகாலின் பின்பாகம். அதைக்கையால் பிடித்து (மனதை அதில்) ஸ்திரப்படுத்தினால் அந்த க்ஷணமே அக்னிதீபன முண்டாகும்.

19. அதற்குமேல் மூன்றாவது குதஸ்தானம். (1)அதை சதாகாலமும் சங்கோசனத்தினாலே ஆகுஞ்சனம் பண்ணினால் அபானவாயு ஸ்திரப்படும்.

20. நாலாமாதாரமாவது லிங்க ஸ்தானம்: அதில் தண்ட சங்கோசனம் பண்ணினால் மனமும் வாயுவும் பிரஹ்ம (கிரந்தி முதலிய) கிரந்திகள் (முடிச்சுகள்) மூன்றையும் பேதித்து (2)வஜ்ஜிரநாடியில் (சுஷும்னையில்) பிரவேசிப்பதால் பிந்துஸ்தம்பனமாகும்.

21. ஐந்தாவது ஆதாரமாவது ஒட்டியானபந்தஸ்தானம். அதனிடம் அடிக்கடி முத்திரையினாலே [மனதை] நிறுத்தினால் சீக்கிரத்தில் மலம் மூத்திர கிருமிகள் நாசமாகும்.(3)

22. ஆறாமாதாரமாவது நாபிஸ்தானம். அதிலே யாதொரு புத்திமானானவன் ஏகாக்கிர சித்தத்தோடு கூடின ஸமாதியினால் பிரணவத்தை ஜபிப்பானே அவனுக்கு நாதோதயமாகும்(4) (நாதம் கேட்கும்)

23. ஏழாமாதாரமாவது ஹிருதய ஸ்தானம். அதிலே பிராணவாயுவை நிறுத்தினால் அவனுக்கு க்ஷணத்தில் மத்திமகமலம் விகசிக்கும் (மலரும்).

24. (எட்டாமாதாரமாவது) கண்டஸ்தானம். கண்டத்தின் மூலத்தை சிபுகத்தால்(5) அமுக்கினால் அப்பொழுது இடை பிங்கலை இவைகளில் சஞ்சரிக்கின்ற வாயு ஸ்திரப்படும்.

25. ஒன்பதாவதாதாரமாவது கண்டிகா ஸ்தானம். இதில் நாக்கு நுனியை நிறுத்தினால்(6) கிருப்தியை யுண்டு பண்ணுவதான அமிர்தகலை பெருகும்.

26. பத்தாவது ஆதாரமானது தாலுமூல ஸ்தானம். அதன் கர்ப்பகோளத்திலே சாலனம், தோஹனம்(7) இவைகளால் நீட்டப்பெற்ற நாக்குநுனியை விபரீதமாகப் பிரவேசிக்கப்பண்ணினவன் உன்மனீபாவத்தை யடைவான்.

(1) ஆதாரமென்பது சம்ஸ்கிருத புஸ்தகங்களின் பாடம்.

(2) "வாமநாடி" யென்று மோர் பாடமுண்டு. [வாமதேவர் மார்க்கமென்று சொல்லும் 'கிரமமுத்தி மார்க்கத்தார் போற்றும் வாலை' யிருக்கும் நாடிக்கு "வாமநாடி" யென்று சித்தர்முறையில் பெயர். "மூலத்துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள் வாலைதனைப் போற்றாமல் மதியிழந்தேன் பூரணமே" யென்று பட்டினத்துப் பிள்ளையும் பாடியிருக்கிறார். "மூலநாடி முக்கட்டலகுச்சியுள், நாலுவாசல் நடுவில் நிற்பீர்காள்" என்ற திருமந்திரோபதேசத்திலும் இது விளங்கும்.—வி. சி. ப.]

(3) தியானம்செய்து, சுவாசத்தை நிறுத்தி, ஓர் மாசம் நிறுத்தி என்பன சம்ஸ்கிருதத்தில் வேறு பாடங்கள்.

(4) நாதல்யமாகும் என்பதும் பாடம்.

(5) "நாடியினாலே" என்பது தமிழ்மொழி பெயர்ப்பின் பாடம். 'சிபுக'மென்றால் முகவாய்க்கட்டை (Chin). [நாடிதாரணை சித்திபெற்றவர்கள் அந்த சித்திசாமர்த்தியத்தாலே சிபுகத்தால் அமுக்கப்படும் வாயுவை "நாடியினாலே"யே அமுக்கி ஸ்திரப்படுத்துவார்கள்.—வி. சி. ப.]

(6) நிறுத்தினால், அழுத்தினால் என்பவை தமிழ் மொழிபெயர்ப்பின் பாடங்கள்.

(7) இவைகளைக் குறித்து ஹடயோகப் பிரதீபிகையைப் பார்க்கலாம். [25, 26, 27, 28 இந்த சுலோகங்களில் சொன்ன சித்திகள் 'லம்பிகாயோகம்' என்கிற அப்பியாஸயோகத்தைச் சேர்ந்ததாம்.—வி. சி. ப.]

27. (பதினோராவதாதாரமாவது) ரசனாதாரம் (நாக்கின் அடிபாகம்). அதிலே நாக்கு நுனியை உறையப்பண்ணினவனுக்கு அமிருதபானமும் கவிசெய்யும் திறமையும் நன்றாய் சித்தியாகும்.

28. பனிரெண்டாமாதாரமாவது தந்த ஸ்தானம். அதற்கு மேல்பாகம் ராஜதந்தக மெனப்படும். அதில் நாக்கு நுனியை உறையப் பண்ணினால் ஆறுமாதத்தில் உள்ஜோதி காணப்படும்.

29. பதின்மூன்றாவதாதாரம் கிராணமூலம்(8) (மூக்கின்மூலம்). அதனிடம் நித்தியமும் எவன் மனதோடு கூடிய திருஷ்டியை ஸ்திரப்படுத்துவானோ அவனுக்கு வாயுஸ்திரப்படும்.

30. பதினாலாவதாதாரமாவது லலாடஸ்தானம். அதிலே யோகியானவன் மனதுடன் வாயுவை நிறுத்தினால் சர்வசித்திகளையு மடைவான்.

31. அதற்குமேல் பதினைந்தாமாதாரமாவது ப்ரூ (புருவ) ஸ்தானம். அதற்கு மேலாக சலனமற்ற திருஷ்டியால் எந்த அறிவுடையோன் பார்ப்பானோ அவனால் சீக்கிரத்திலேயே கிரணகாரமாக (கிரணங்களைப்போல்) ரூபமானது பார்க்கப்படும்.

32. பதினாறுமாதாரமாவது நேத்திர ஸ்தானம். அதற்குமேல் பார்க்கப்பட்ட அறிவுடையோனுக்கு சீக்கிரத்திலேயே கடைக்கண்களில் மனோகரமான ஜோதிக்கூட்டமானது காணப்படும்.

33. (இப்பொழுது சொன்ன முறைப்படி-) (1-3) மூன்று பந்தங்கள், (4) ஆசனபந்தனம் (ஆசனங்கூடல்) (5) மந்திரம், (6) நாதசிரவணம் (நாதத்தைக்கேட்டல்), 7) கேவலகும்பகம்), (8) தியானம் இவை யெட்டின் அப்பியாசத்தால் யோகியானவன் சித்தத்தை அஷ்டவிதங்களால் அவதானம் செய்தவெனெனச் சொல்லப்படுவன் (அஷ்டாவதானியெனச் சொல்லப்படுவன்).

(இன்னும் வரும்.)

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

(8) பிராணமூலமென்றும் பாடமுண்டு,

## Kannaki—A Social Drama.

### கண்ணகி.

அங்கம் III] [காட்சி-3.

இடம்—உறையூருக்கும் மதுரைக்கும் மத்தியில் உள்ள ஒரு சாலை

காலம்—விடியற் காலம்

பாத்திரர்— கோவலன், கண்ணகி, கௌந்தி, ஓர் அந்தணன்.

கண்ணகி:—நாதா! நாம் நேற்று அந்தத் தோப்பில் தங்கி இளைப்பாறிவிட்டு இன்று காலையில் புறப்பட்டது மிகவும் நலமல்லவா? அங்கு தங்கினதால் களைதீர்ந்து ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இன்று வழிநடந்து செல்லச் சாத்தியமாகிறது.

கோவலன்:—ஆமாம்; நீ சொல்வது வாஸ்தவமே. எல்லாம் வல்ல கடவுளை, தாம் இளைப்பாறும் பொருட்டு சங்கார கிருத்தியத்தை நடத்துகிறார் என்றால் கேவலம் கறைகெழுமிய அறிவும், முறை திறம்பிய செயலுமுடைய மக்களாகிய நமக்கு இளைப்பாறுதல் அவசியம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கௌந்தி:—கோவலா! நல்ல உதாரணம் எடுத்துக் காட்டினாய்! மெச்சினேன் உனது அறிவை.

கோவலன்:—அடிகாள்! அதோ யாரோ ஒரு அந்தணர் வருகின்றார்! அவரை விசாரித்தால் மதுரைக்குப்போகும் வழி தெரிந்து கொள்ளலாம்! தாங்களும் கண்ணகியும் இந்தப் பூவரசு மரத்தடியில் உட்கார்ந்திருங்கள்! யான் அவரை விசாரித்து மதுரைக்குப் போகும்வழி தெரிந்து வருகிறேன்!

கண்ணகி:—காதலா! நாங்கள் இருவரும் இங்கேயே இருக்கிறோம்! அந்தணர் (அந்தணரைச் சுட்டிக்காட்டி) இதோ நெருங்கி வந்துவிட்டார்! விரைவில் சென்று அவரை விசாரியுங்கள்!

கோவலன்:—(அந்தணரை நெருங்கி) சுவாமி! (இருகையும் கூப்பித்தொழுகிறான்) தாங்கள் யார்? தாங்கள் எங்கிருப்பது? இங்கு வரக்காரணமென்ன? தயைசெய்து கூறும்படி வேண்டுகிறேன்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 8 OCT 1910 MADRAS.

அந்தணர்:—ஐயா! தமக்கு எல்லா மங்களமும் உண்டாவதாக! (கோவலனை ஆசிர்வதிக்கிறார்) குடகு மலைக்குப் பக்கத்தேயுள்ள மாங்காடு என்னும் ஊரில் வசிக்கும் அந்தணன் யான்! பாண்டியனுடைய கொடைத்திறத்தையும், அளித்திறத்தையும் நான் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்! பாண்டிய நகரத்தின் சீரையுஞ் சிறப்பையும் பற்றிப் பலர் புகழ்ந்து பேசுவதையும் நான் கேட்டுளேன்! பாண்டி நாட்டின் சிறப்பையும் தென்னவனின் கொடைத்திறத்தையும் காதினாலே கேட்டது மட்டும்போதாது என்று கருதி கண்குளிரப் பார்த்து வரவேண்டுமென்னும் ஆசையால் மதுரை மாநகர் சென்று பாண்டியனை நாவால் வாழ்த்தித் திரும்புகின்றேன்! நான் காதால் கேட்டதைவிடக் கண்ணால் பார்த்தது பன்மடங்கு விசேஷமே! தாம் யார்? அதோ அந்த மரத்தடியில் தங்கியிருக்கும் ஸ்திரீகள் யார்? தெரிவித்தல் கூடுமோ?

கோவலன்:—முத்தீயாளா! நாங்கள் இருப்பது காவிரிப்பூம்பட்டினம்! வியாபாரம் செய்வதற்காக மதுரைக்குப் போகிறோம்! முதிர்ந்த அறிவோடு அதோ வீற்றிருக்கும் பெரியவர் எனது குரு! அவருடைய பெயர் கௌந்தியடிகள்! அவரோடுகூட இருக்கும் பெண் எனது மனைவி! அவள்பெயர் கண்ணகி! வாருங்கள்! கௌந்தியடிகளைத் தாங்களும் கண்டு சம்பாஷித்துவிட்டுப் போகலாம்! (அந்தணரை கௌந்தியிடம் அழைத்துச் செல்லுகின்றான்).

கௌந்தி:—ஹே! பிரமகுல சிரேஷ்டா! வரவேண்டும் (அந்தணரை ஆசிர்வதிக்கிறாள்) (கண்ணகி அந்தணரை நமஸ்கரிக்கிறாள்.) நாங்கள் மதுரைமாநகர் போகவேண்டும்! அதற்காகத் தங்களுடைய உதவியை எதிர் பார்க்கிறோம்!

கோவலன்:—ஆம் சுவாமி! தயைசெய்து மதுரைக்குப் போகும்வழியை எங்களுக்கு விளங்கும்படி சொல்லுங்கள்!

அந்தணர்:—ஐயா! சொல்லுகிறேன் கேளும்! பாறையும் துறுகலும், கல்லுங்கரடுமாயிருக்கும் இந்தப்பெரிய சுரத்தைக் கடந்து சென்றால், கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் பொதுவாகிய ஒரு பெரிய ஏரி காணப்படும். அந்த ஏரிக்கரையைத் தாண்டினால், முடியில் பிறைச் சந்திரனை அணிந்த பரமசிவனுடைய சூலத்தைப் போல மூன்று வழிசெல்லுகிறது! வலது கைப்புறமாகச் செல்லும் வழியில் நீங்கள் சென்றால், விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், பொரிந்த தாளையுடைய வாகையும், மூங்கிற் குத்துகளும் காணப்படும். நீருண்டலை விரும்பி மான்கூட்டங்கள் கும்பலாய் நின்று துள்ளி விளையாடும்! இவைகளை யெல்லாம் பார்த்து ஆனந்தித்துக்கொண்டே இன்னும் சிறிதுதூரம் செல்லுவீர்களே யாகில் "ஐவன வெண்ணெலு, மறைக்கட்கரும்புங், கொய்பூந்தினையுங், கொழும்புன வரகுங், காயமு மஞ்சளு, மாய்கொடிக் கவலையும், வாழையுங் கமுகுந், தாழ்குலைத்தெங்கு, மாவும் பலாவுஞ், சூழடுத்தோங்கிய தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்." சிறுமலை என்னும் பெயரையுடைய அந்த மலையின் இடதுபுறமாகச் சென்றால் மதுரைக்குப் போகலாம்.

கோவலன்:—மலையின் வலது புறமாகச் சென்றாலோ?

அந்தணர்:—வலது புறமாகச்சென்றால் சிறகையுடையவண்டுகள் மதுவையுண்டு, யாழைப்போல் ரீங்கார சத்தம் செய்துகொண்டிருக்கும். ஆழ்ந்த தடத்தோடும், தாழ்ந்த வயலோடும், குளிர்ந்த பூங்காவோடும் அருஞ்சுரங்கள் பல காணப்படும்! அவைகளைக் கடந்து சென்றால் அழகர் திருமலையைக் காணலாம். அந்தமலையின் பிலத்துவாரத்துள் சென்றால் தேவர்களால் ஏத்தப்படுதலின் யாவரும் வியக்கத்தகும் மாபினையுடைய புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் பெயர்களையுடைய மூன்று பொய்கைகள் இருப்பதைக் காணலாம்!

கண்ணகி:—அப்பொய்கைகளின் விசேடங்கள் யாவை?

கோவலன்:—பொறு! பொறு! அவசரப்படாதே! அந்தணர் எல்லா விவரங்களையும் தெரிவிப்பார்!

கௌந்தி:—கண்ணகிக்கு ஆக்கப் பொறுத்தது ஆறப்பொறுக்கவில்லை! (புன் சிரிப்பு)

அந்தணர்:—(கண்ணகியை நோக்கி) அம்மா! சொல்லுகிறேன் கேள்! "புண்ணிய சரவணம்" என்னும் பொய்கையில் நீராடினால் இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திரவியாகரணம் என்னும் இலக்கணத்தை ஒருவரும் அறிவிக்காமலே ஒருவன் அறிந்து கொள்ளக்கூடும்! "பவகாரணி" என்னும் பொய்கையில் ஸ்நானம் செய்தால் இப்பிறப்பிலே முன்னும் பின்னுமாகிய இரு பிறப்பையும் ஒருவன் உய்த்துணர்ந்து

கொள்ளக்கூடும்! பழவினையை அறிந்து அதை அனுபவித்து இனிமேல் பிறப்பு வரவொட்டாதபடி ஒருவன் செய்து கொள்ளவும் கூடும்! "இட்டசித்தி" என்னும் பொய்கையில் தீர்த்தமாடினால் ஒருவன் தன்னுடைய இஷ்ட சித்திகளைப்பெறுவான்! அதாவது ஒருவன் நினைத்த தெல்லாம் அவனுக்குக் கைகூடும்! இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்னும் எட்டு வகை யோகாப்பியாசத்தாலும், தவஞ்செய்து உடலையும் உயிரையும் வருத்தியும், மிக அரிதிலே பெறும் அட்டமாசித்திகளை ஒருவன் "இட்டசித்தி" என்னும் பொய்கையில் நீராடின மாத்திரத்தால் பெறுவானென்றால் அந்தப் பொய்கையின் மகத்துவத்தைச் சொல்லவும் வேண்டுமோ?

**கண்ணகி:**—அந்த மலையின் பிலத்துவாரத்துக்குள் செல்ல வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

**அந்தணர்:**—அந்த அழகர் மலையில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருமாலின் திருவடிகளைக் கையால் தொழுது, மனத்தால் நினைந்து, வாக்கால் துதித்து அம்மலையை மூன்று தரம் பிரதட்சணம் செய்யவேண்டும்! அப்படிச்செய்தால் அங்கேயுள்ள நூபுரகங்கை என்னும் ஆற்றினது கரையில் நிற்கும் ஒரு கோங்கு மரத்தின் கீழே பொற்கொடி போலவும், மின்னல் போலவும், புயல் போன்ற கூந்தலையும் வளைந்த தொடியையும் உடையாள் ஒருத்தி தோன்றுவாள்!

**கண்ணகி:**—தோன்றி என்ன செய்வாள்?

**அந்தணர்:**—உங்களைச் சில கேள்விகள் கேட்பாள்!

**கோவலன்:**—அக்கேள்விகள் யாவை?

**அந்தணர்:**—"இப்பிறப்புக்கு இன்பமும், மறுபிறப்புக்கு இன்பமும், இவை யிரண்டு மொழிந்து எக்காலத்தும் ஒன்றாந் தன்மையாய் அழிவற நிற்கும் இன்பமும் ஆகிய பொருள்கள் யாவை?" என்று கேட்பாள்.

**கண்ணகி:**—அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டாலோ—?

**அந்தணர்:**—"நான் இந்த மலைக்குக் கீழே வசிப்பவள்! என்னுடைய பெயர் வரோத்தமை! நான் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டால் உங்களுக்கு நான் உரியவளாவேன்! உங்களுக்கு வேண்டிய காரியங்களை முடித்து வைப்பேன்! இந்தப் பிலத்துவாரத்தின் வாயையும் திறந்து தருவேன்" என்று அந்த பொற்கொடி சொல்லுவாள்.

**கண்ணகி:**—சரி; அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு பிலத் துவாரத்துக்குள் நுழைத்து விட்டோம் என்று வைத்துக்கொள்ளலாம். அதன் பிறகு என்ன நடக்கும்?

**அந்தணர்:**—பிலத் துவாரத்துக்குள் நுழைந்து போனால் அநேக வாயிற்படிகள் காணப்படும்! அவைகளை யெல்லாம் கடந்து சென்றால் இரட்டைக் கதவையுடைய வாயிற்படி ஒன்று இருக்கும்! அதைக் கடந்த வுடன் ஒரு மங்கை சித்திரத்திலெழுதிய பாவையைப் போலத்தோன்றி "முடிவில்லாத இன்பம் யாது?" என்று கேட்பாள்! அந்தக் கேள்விக்கு பதில் சொன்னால் நான் முன்பு சொன்ன மூன்று பொய்கைகளையும் காட்டி அவைகளின் பெயரையும் மகத்துவத்தையும் சொல்லி நீராடும்படிச் செய்வாள் பதில் சொல்லாவிட்டால் வந்தவழியே உங்களைத் திருப்பி அனுப்பிவிடுவாள்! மற்றப்படி வேறு ஒரு கெடுதலும் செய்ய மாட்டாள்! ஆதலால் நீங்கள் மூவரும் சென்று அந்தப் பொய்கைகளில் நீராடி உங்களுக்கு வேண்டிய இஷ்ட சித்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்! அந்தப் பொய்கைகளின் பயனைப்பெற உங்களுக்கு இஷ்டமில்லா விட்டால் அந்த மலையில் எழுந்தருளி யிருக்கும் திருமாலினுடைய தாமரை மலர் போன்ற திருவடியை நினையுங்கள்! அப்படி நினைத்தால் அப்பொழுதே கருடப்பறவை யெழுதிய துவஜஸ்தம்பத்தை நீங்கள் அடையலாம்! அந்த ஸ்தம்பத்தைக் கண்ட அளவிலே அந்தக் கடவுளுடைய திருவடி உங்களுடைய பிறவித் துன்பத்தை நீக்கும்! நீங்கள் கண்கூடாகக் காணத்தகும் பிலத்தின் தன்மை இப்படிப்பட்டது! ஆதலால் நீங்கள் அங்கு சென்று அக்கடவுளுடைய அருளைப்பெற்றுக் கொண்டு பின்பு மதுரைக்குச் செல்லுங்கள்! நானும் நிலங்கடந்த நெடுமுடி யண்ணலின் தாள்களைத் தொழுவதற்குச் செல்லுகிறேன்! (போக எத்தனிக்கிறான்).

**கௌந்தி:**—அந்தணரே! சற்று நில்லும்! நான் ஒன்று சொல்லுகிறேன்! அதைக் கேட்டுவிட்டுச் செல்லும்.



**அந்தணர்:**—அடிகாள்! சொல்லுங்கள்! தாங்கள் சொல்லுவதைக்கேட்க அடியேன் காத்துக்கொண்டிருக்கிறேன்!

**கௌந்தி:**—நலம்புரிகொள்கை நான்மறையாளா! இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தை நாங்கள் அறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை! ஏனெனில், எங்களுடைய * அருகக்கடவுள் அருளிச்செய்த ஆகமங்களில் ஐந்திரவியாகரணத்திலுள்ள எல்லாப்பொருள்களும் அடங்கி யிருக்கின்றன! ஆதலால் நீர் சொன்ன "புண்ணிய சரவணம்" என்னும் பொய்கையில் நீராடவேண்டியஅவசியமில்லை! தவிர, முற்பிறப்பிற் செய்த வினையின் பயனே இப்பிறப்பில் அனுபவிக்கப்படுகிறது என்பதை நீர் கண்கூடாகப் பார்க்கவில்லையோ? ஆதலால் "பவகாரணி" என்னும் பொய்கையிலும் நாங்கள் நீராடவேண்டிய அவசியமில்லை! நிற்க; சத்தியம் கொல்லாமை என்னும் இரண்டினையும் வழுவாது பாதுகாப்பவர்களுக்குக் கைகூடாத காரியங்களும் இருக்கின்றனவோ? இல்லை. ஆதலால் இட்டசித்தியைப்பெற "இட்டசித்தி"என்னும் பொய்கையில் நீராடவேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை! ஆகவே நாங்கள் பிலத்துக்குச் செல்லவேண்டியது அநாவசியமாயிற்று! நீர் விரும்பி வந்த தெய்வத்தைக்கண்டு அடிபணிதற்கு நீர் செல்லலாம்! நாங்கள் மதுரைக்குச் செல்லுகிறோம்!

**அந்தணர்:**—ஆஹா! அப்படியே! விடைதரவேண்டும்!

**கௌந்தி:**—சரி; போய்வாருங்கள்! (அந்தணர் செல்லுகிறார்)

**கோவலன்:**—(கௌந்தியை நோக்கி) அம்மணி! நேரமாய்விட்டது! நாழிகை பத்துக்குமேலிருக்கலாம் போல் காணப்படுகிறது! நாமும் இவ்விடத்தை விட்டுப் புறப்படுவோமே!

**கண்ணகி:**—ஆமாம்; சாயந்திரத்துக்குள் ஏதாவது ஒரு ஊரை அடையவேண்டாமா? சீக்கிரம் புறப்படுவதே உத்தமம்!

**கௌந்தி:**—ஆஹா! அப்படியே! (கண்ணகியை நோக்கி) என்னம்மா! நீ என்னோடு வருகிறாயா, அல்லது உன் கோவலனோடு வருகிறாயா?

**கண்ணகி:**—இரண்டு பேருடனும் வருகிறேன்! (கோவலனை ஒரு கையிலும் கௌந்தியை மற்றொரு கையிலும் பிடித்துக் கொள்ளுகிறாள்).

**கௌந்தி:**—சரி; போகலாம்! (கோவலன், கண்ணகி, கௌந்தி மூவரும் அவ்விடம் விட்டு நீங்குகிறார்கள்)

[3-வதுஅங்கம் 3-வது காட்சி முற்றும்]

நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன்.

---

ஓம் ஸ்ரீ:

ஸ்ரீ சாவித்திரியை நம:

# உபநிஷதர்த்த தீபிகை.

## V. அத்வயதாரகோபநிஷத்.

—:(o):—

ஓம் பூர்ணமத இதி சாந்தி:

[இவ்வுபநிஷத்தானது பெரும்பாலும் மண்டல பிராஹ்மணோபநிஷத்து வாக்கியங்களுக்கு ஒத்து இருக்கும்.]

அத்வயதாரக மென்னும் உபநிஷத்து இந்திரியங்களை ஜயித்தவனும் சமம் முதலிய அறு குணங்கள் நிறைந்தவனுமான யதியின் பொருட்டு (கர்மங்களின் பலத்தில் ஆசையை விட்டவனான சந்நியாசியின் பொருட்டு) சொல்லப்படும். நான் சித்ஸ்வரூபன் (அறிவே உருவமாயுடையவன்) என்று சதாகாலமும் பாவித்து, கண்களை மூடிக்கொண்டாவது கொஞ்சம் திறந்து கொண்டாவது, அந்தர் திருஷ்டியால் (அகமுக நாட்டப் பார்வையால்) புருவ (மத்தியிலுள்ள) தகரத்திற்குமேல் (தகராகாசமாகிய சிறு அம்

* கௌந்தியடிகள் பௌத்த சந்நியாசியாதலாலும், அருகர் பௌத்தமதக் கடவுளாதலாலும், கௌந்தி மற்ற தேவர்களால் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களைப் பற்றிச்சொல்லாது அருகர் செய்ததைக் கூறினாள்.

பலத்திற்குமேல்) சச்சிதாநந்த பிரகாசக்கூட்ட ரூபமாகிய பரப்பிரம்மத்தை தரிசித்துக்கொண்டு அந்த ரூபமாகிறான். கர்ப்பம், ஜன்மம், ஜரை (மூப்பு), மரணம் (இந்த ரூபமாகிய) சம்சாரமாகிய பெரிய பயத்தைத் தாண்டச்செய்வதால் இதற்கு தாரகம் என்று பெயர். ஜீவ ஈசுவரர்கள் மாயாசம்பந்தமானவர்கள் என்றறிந்து சகல விசேஷங்களையும் நேதி நேதி யென்று (இல்லை இல்லை யென்று) தள்ள, எது மிஞ்சிநிற்குமோ அது அத்வயமான பிரஹ்மம். அது (அப்பிரஹ்மம்) சித்திக்கும் பொருட்டு மூன்று லக்ஷியங்களின் அநுஸந்தானம் செய்யத்தக்கது. அந்தர்லக்ஷியமாவது:—தேகத்தின் மத்தியில் பிரஹ்மநாடியாகிய சுஷும்னையானது சூர்ய ரூபியாய் பூர்ண சந்திரனைப் போல் பிரகாசித்துக்கொண்டு நிற்கின்றது: அது மூலாதாரத்திலாரம்பித்து பிரஹ்மரந்திரம் வரையில் சென்று நிற்கும். அதன் மத்தியில் கோடி மின்னல்களுக்குச் சமானமான காந்தியுடன் தாமரைத் தண்டின் நூல்போல் சூக்ஷ்மமான அங்கத்தை யுடையதாய் குண்டிலினீ யென்பது பிரசித்தமாயிருக்கும். மனிதன் அதை மனதாலேயே பார்த்து சர்வ பாபங்களின் நாசவாயிலாக முக்தனாகிறான். நெற்றிக்குமேலே இருக்கும் லலாடத்திலுள்ள சந்திரமண்டலத்தில்* சதாகாலமும் தாரகயோகத்தின் ஸ்புரணத்தால் தேஜஸை (பிரகாசத்தை)ப் பார்ப்பானாகில் அவன் சித்தனாவன். சுட்டு விரல்களின் நுனிகளால் மூடப்பட்ட காதுகளி னிரண்டு துவாரங்களிலும் பூத்கார சப்தம் (பூ! என்னும் சப்தம்) உண்டாகும். மனம் அவிடத்தில் நிற்க கண்களின் மத்தியிலுள்ள நீலஜ்யோதி ஸ்தலத்தைப்பார்த்து அந்தர் திருஷ்டியால் (அகமுகப் பார்வையால்) நிரதிசயமான சுகத்தை யடைகிறான். இவ்விதமாக ஹிருதயத்திலும் பார்க்கிறான். இவ்விதம் அந்தர் லக்ஷ்யத்தின் லக்ஷணம் முமுக்ஷுக்களால் உபாசிக்கத் தக்கது.

* விசேஷ மண்டலத்தில் என்றும் பாடமுண்டு.

இதன்மேல் பஹிர் லக்ஷியத்தின் லக்ஷணம்:—மூக்கின் நுனியிலிருந்து நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு அங்குலங்களுக் கப்பால் வரிசையாய் நீலம், சியாமம் (கருப்பு அல்லது கரு நீலம்), சிகப்பு, மஞ்சள், வெண்மைநிறங்களுடன் கூடிய வியோமத்தை (ஆகாசத்தை)ப் பார்ப்பானாகில் அவன்யோகியாவான். சலிக்கும் பார்வையால்* வியோமபாகத்தைப் பார்க்கும் புருஷனுடையபார்வைக்குமுன் ஜ்யோதிக்கிரணங்களுண்டாகும். அதன் தர்சனத்தால் யோகியாகிறான். காய்ச்சின தங்கத்திற்குச் சமானமாகிய ஜ்யோதிக்கிரணங்களை கடைக்கண்ணின்முடிவிலாவது பூமியிலாவது பார்க்கின்றான். அந்தப்பார்வை ஸ்திரமாகும். சிரசுக்குமேல் பன்னிரண்டங்குலமுள்ள ஜ்யோதியைப் பார்ப்பவனுக்கு அமிர்தத்துவம் (மரணமின்மை) உண்டாகும். எங்கெங்கு நின்றாலும் அவனுக்கு சிரசில் வியோமஜ்யோதி தோன்றினாலவன் யோகியாகிறான்.

மத்தியலக்ஷிய லக்ஷணமாவது:—தன்னுள் காலையில் அநேக வர்ணங்களுடன் கூடிய அகண்ட சூர்ய மண்டலத்தைப்போலவும், அக்னி ஜ்வாலைக் கூட்டங்களைப்போலவும், இவைகளற்ற ஆகாசத்தைப்போலும் பார்க்கிறான். அதன் ரூபமாய் நிற்கின்றான். அதை மறுபடியும் (அடிக்கடி) பார்ப்பதால் குணமற்ற ஆகாசமாகிறான். பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள்போல்வனவால் பிரகாசிப்பிக்கப்பட்டதும் எங்கும் காடாந்தகாரத்துக்கு (மிகுந்த இருளுக்கு) சரியானதுமாகிய பரமாகாசமாகிறான். காலாக்னிக்குச் சமமாய் பிரகாசிக்கும் மஹாகாசமாகிறான். சர்வத்திற்கும் மேன்மையான பரமப் பிரகாசத்தோடு பிரகாசிக்கும் தத்துவாகாசமாகிறான். கோடி சூர்ய பிரகாசத்தின் வைபவத்திற்குச் சரியான சூர்யாகாசமாகிறான். இவ்விதம் பாஹ்யத்திலும் (புறம்பிலும்) அந்தரத்திலும் (உள்ளும்) இருக்கும் வியோம பஞ்சகம் (ஐந்து ஆகாசங்கள்) தாரகத்தின் லக்ஷியமாகும். அதை தர்சிப்

* "சலியாத திருஷ்டியால்" என்றும் பாடமுண்டு.



பவன் முக்தியைப் பலனாகவுடையவனாய் அதைப்போல் ஆகாய சமானமாகிறான். ஆகையால் தாரகமே அமனஸ்க (யோக) மாகிற பலத்தைக் கொடுக்கக்கூடிய லக்ஷியமாகும். அதற்கு இந்த சுலோகமுண்டு: "அந்தயோகத்தை பூர்வம் உத்தரம் (முன், பின்) என்கிற பிரிவினால் இருவிதமென்றறி. பூர்வ[பாகம்] தாரகமென்றும் உத்தர[பாகம்] அமநஸ்கமென்றும் [சொல்லப்படும்]." கண்களுக்குள்ளிருக்கும் தாரகங்களில்[கருவிழிகளில்] [pupils of the eye] சந்திரசூர்யர்களின் பிரதிபலனம் உண்டாகிறது. * தாரகங்களினால் சூர்யசந்திர மண்டல தரிசனம் (உண்டாகும்). பிரம்மாண்டத்திற்போல் பிண்டாண்டத்திலும் (தேகத்திலும்) சூரியசந்திர மண்டலங்களிரண்டுண்டென்று நிச்சயித்து, தாரகங்கள் இரண்டிலும் அவைகளின் (சூர்யசந்திரமண்டலங்களின்) தரிசனம் [செய்யவேண்டியது]. இரண்டின் ஐக்கிய திருஷ்டியினால் [பிரம்மாண்டத்திலுள்ள சூர்யசந்திர மண்டலங்களும் தேகத்திலுள்ள சூர்ய சந்திர மண்டலங்களும் ஒன்றேயென்கிற பார்வையால்] மனதுடன் தியானம் செய்யவேண்டியது. அதன் [மனதின்] சேர்க்கையில்லாவிடில் அந்தர பிரவிர்த்திக்கிடமில்லாமற் போய்விடும். ஆகையால் அந்தர் திருஷ்டியால் [அகமுகப்பார்வையால்] தாரகமே அனுசந்தானம் செய்யத்தக்கது. அத்தாரகமும், மூர்த்திதாரகம் அமூர்த்திதாரகமென இருவகைப்படும். எது இந்திரியங்களுக் கப்பாற்பட்டதோ அது மூர்த்திதாரகம்; எது புருவமத்தியத்திற்கப்பாற்பட்டதோ அது அமூர்த்திதாரகம். எங்கும் உட்பதார்த்தங்களின் விவேகத்திற்கு [பிரித்தறிவதற்கு] மனதுசேர்ந்த அப்பியாசமேவேண்டும். தாரகங்களால் [அதன் மேலிருக்கும்] * தத்துவத்தின் தரிசனமுண்டாவதால் மனதுடன்கூடிய அகமுகப்பார்வையால் சச்சிதாநந்தஸ்வரூபமாகிய பிரஹ்மமே [அறியப்படுகின்றது]. † ஆகையால் வெண்மையாகிய தேஜோமயமானது [பிரகாசமயமானது] பிரஹ்மமென ஏற்படும். அப்பிரஹ்மமானது மனதுடன்கூடிய கண்ணினால் (அகமுகப்பார்வையால்) அறியப்படும். இவ்விதம் தஹரம் முதலியனவாகிய அமூர்த்திதாரகம் மனதுடன் சேர்ந்த கண்ணால்தான் அறியப்படும்! ஏனெனில் மனமானது கண்ணிற்கு அதீனமாயிருக்கும். வெளிமுகத்திற்போல் அகமுகத்தி

* தாரகமென்கிற பதத்திற்கு நக்ஷத்திரமென்றும் கண்ணின் கருவிழியென்றும் அர்த்தமுண்டு. மண்டலபிராஹ்மண உபநிஷத்தின் பாஷ்யகாரர் மேல்மொழிபெயர்த்த வாக்கியங்களையே பெரும்பாலும் எடுத்தெழுதியிருக்கின்றார். அவர் அபிப்பிராயம் பின் வருமாறு:—பிரம்மாண்டத்தில் சூர்யசந்திரர்களின் கதி [நடை] நக்ஷத்திரங்களை ஆசிரயித்ததாயிருக்கும். ஏனெனில் சலனமற்ற நக்ஷத்திரங்களைக் கொண்டே சலனமுள்ள கிரகங்களின் நிலைகளையும் அவைகளின் நடைக்கு எல்லைகளாகிய பண்டங்களையும் அறிய வேண்டும். அதனாலேயே நாம் சூர்யன் அசுவனி நக்ஷத்திரத்தின் முதற்பாதத்திலிருக்கிறான் முதலிய வாக்கியங்களைச் சொல்கிறோம். தேகத்திலும் இடது வலது கண்களாகிய சூர்யசந்திரகதியானது லயகதிக்கிரமத்தில் தாரகங்களை [கருவிழிகளை]ஒட்டிநிற்கும். அக்கருவிழிகளில் சூர்யசந்திரர்கள் பிரதிபலனமாவதால் அக்கருவிழிகளே [தாரகங்களே] அண்டத்தில் நக்ஷத்திரங்களுக்கு [தாரகங்களுக்கு] அபேதமாகும். தாரகங்களாகிய நக்ஷத்திரங்களால் சூர்யசந்திரர்களின் நடைக்கு எல்லை நிர்ணயிக்கப்பட்டு அவ்வெல்லைக்குட்பட்டசூர்யமண்டல சந்திரமண்டலதரிசனம்உண்டாகுமெனவே, பிண்டத்திலும் சிரசின்மத்தியிலுள்ள ஆகாயத்திலும் சூர்யசந்திரமண்டலங்கள் உண்டென்கிற நிச்சயத்தால் தாரகங்களால் [கருவிழிகளால்]அம்மண்டலங்களின் தரிசனம், அண்டபிண்டங்களிலுள்ள மண்டலங்களின் ஐக்கியப்பார்வையால் உண்டாகவேண்டுமென வேற்படும். இது அகமுகப் பார்வையானதால் தாரகங்களால் மாத்திரம் கூடும். ஆகவே இந்தயோகத்திற்கும் தாரகமெனப்பெயர். சாதாரணமாய் வேறுவிதமாக தாரக சப்தத்திற்கு பொருள் சொல்வதுண்டு. சம்சாரத்தைத் தாண்டச்செய்வதால் (த்ரு-தாண்டுதல்) தாரகமென்று சொல்லப்படும்.

* சத்துவம் என்றும் பாடமுண்டு.

† மண்டலபிராஹ்மணோபநிஷத் பாஷ்யகாரர் இதற்கு ஆதாரமாக "எது வெண்மையோ அது பிரஹ்மம்" என்னும் அதர்வசிரசின் வாக்கியத்தை உதாகரிக்கின்றார்.

னும் ரூபத்தை அறிவதான காரியமானது ஆத்மா கண் [பார்வை] இவ்விரண்டின் சேர்க்கையால்தான் உற்பத்தியாகும். ‡ ஆகையால் மனதுடன்கூடிய அந்தர்திருஷ்டி [அகமுகப்பார்வை] தாரகப்பிரகாசத்திற்கு [அதன் தரிசனமுண்டாவதற்கு]க் காரணமாகும்.

இருபுருவ மத்தியிலிருக்கும் துவாரத்தில் பார்வை (வைக்கவும்) அதன் மூலமாக மேலிருக்கும் தேஜசு (பிரகாசம்) உண்டாகவே தாரகயோகமாகும். அதனோடு (பிரகாசத்தோடு) மனதுடன் சேர்ந்த தாரகத்தைபார்வையை நன்றாய்ச்சேர்த்து பிரயத்தனத்துடன் சாவதானமாய் (ஜாக்கிரதையாய்) இருபுருவங்களையும் கொஞ்சம் மேல்தூக்கவேண்டும். * இது பூர்வ பாகமாகிய தாரகயோகம்.

உத்தர(பாக)மானது அமூர்த்தமாகிய அமநஸ்கமெனச் சொல்லப்படும். தாலுமூலத்தின் † மேல் பாகத்தில் பெரிதாகிய ஜ்யோதிக்கிரணங்களிருக்கின்றன. ‡ அது யோகிகளால் தியானம் செய்யத்தக்கது. அதனின்று அணிமாதி சித்திகளுண்டாகும். பார்வையானது அந்தர பாஹ்ய லக்ஷியங்களில் மூடுதல் திறத்தலற்றிருந்தால் அது சாம்பவீ முத்திரையாகும். அம்முத்திரையில் ஆரூடனை (அம்முத்திரையின் சாதனம் முற்றிலும் வசமுள்ள சாத்தியனை) ஞானி வசிக்கும் பூமி (அவனால்) சுத்தமாகும். அவன் பார்வையால் சகல லோகங்களும் பவித்திர (சுத்த) மாகும். யாதொருவனுக்கு அப்படிக்கொத்த பரமயோகியின் பூஜைகிடைக்குமோ அவன் முக்தனாவான்.

(அவ்வமநஸ்கத்தின்) அந்தர்லக்ஷியம் ஜலஜ்யோதி ஸ்வரூபமாகும். பரமகுருவின் உபதேசத்தால் சஹஸ்ரதள கமலத்தில் ஜலஜ்யோதியாவது அல்லது புத்தியாகிய குகையில் மறைந்திருக்கும் ஜ்யோதியாவது, ஷோடசாந்தத்திலிருக்கும் துரீயசைதன்யமாவது அந்தர்லக்ஷியமாகும். அதன் தர்சனம் ஆசார்யரையே மூலமாக [காரணமாக] உடையதாயிருக்கும்.* வேதசம்பன்னராயும், விஷ்ணுபக்தராயும், மாத்சர்ய மில்லாதவராயும் [பொறாமையற்றவராயும்], யோகத்தை யறிந்தவராயும், யோக நிஷ்டராயும் [யோகாப்பியாசி யாகவும்] எப்பொழுதும் யோகஸ்வரூபராயும் [யோகத்தின் சித்திபெற்று யோகமே தன் ஸ்வரூபமாகவுடையவராகவும்], சுத்தராயும்இருப்பவர் ஆசாரியர் [குரு]. குருபக்தியோடு கூடினவராயும், விசேஷமாகிய புருஷ [ஆத்ம] ஞான முடையவராயும், இந்த லக்ஷணங்களோடு கூடினவரே குருவென்று சொல்லப்படுவர். [குருவென்கிற பதத்தில்] "கு" என்கிற சப்தம் அந்தகாரத்தை [அஞ்ஞானத்தை] யும், "ரு" என்னும் சப்தம் நாசத்தையும் குறிக்கும். அந்தகாரத்தை [அஞ்ஞானத்தை] நாசம் செய்வதால் "குரு"வென்று சொல்லப்படும். "குருவே பரப்பிரஹ்மம், குருவே பரங்கதி, குருவே பரா வித்யை, குருவே

‡ வெளி முகப்பார்வையில் எப்படி மனமும் கண்ணும் சேர்ந்தால் தான் ஓர் ரூபத்தினறிவுண்டாகுமோ, அதுபோல் அகமுகப்பார்வையிலும் ஆத்மாவுடன் கருவிழியால் குறிக்கப்பட்ட உள்ளிந்திரியத்தின் சேர்க்கையால் தான் மூர்த்திதாரகயோகத்துக்கு லக்ஷியமாகிய மூர்த்திகளின் ரூபங்களும், அமூர்த்தி தாரகயோகத்திற்கு லக்ஷியமாகிய சுக்லதேஜோமயமாகிய (வெண்மைப் பிரகாச மயமாகிய) பிரஹ்மத்தின் ரூபமும் அறியப்படுமென்பது பொருள்.

* அப்படிச் செய்வதால் உன்மனீபாவத்துக்குக் காரணமாகுமென்று மண்டலப்பிராஹ்மணோபநிஷத் பாஷ்யகாரர் சொல்லுகிறார்.

† தாலுமூலத்திலிருந்து பனிரண்டங்குலத்தின் கடைசியில் இருள்தோற்ற முண்டாகுமென்றும், அந்த இருளின் நடுவில் பார்வையை நிறுத்த அகண்டமண்டல ஜ்யோதி பிரகாசிக்குமென்றும், அதன் தியானத்தால் மனத்தின் ஸ்திரமும் அதன் வழியாய் வாயுவின் ஸ்திரமும் ஏற்படுமென்றும், ஹடயோகத்தை நூறு வருஷம் அப்பியசித்தாலும் ராஜயோகத்திலாவதுபோல் மனம் வாயு இரண்டின் ஸ்திரத்தன்மை ஏற்படாது என்றும் மண்டலப்ராஹ்மணோபநிஷத் உரையாசிரியர் சொல்லுகிறார்.

‡ ஜ்யோதி மண்டலமென்றும் பாடமுண்டு.

* அத்தரிசனம் குருவினருளால்தான் கிடைக்குமென்பது பொருள்.



பராயனம் [முக்கியமா யடைய வேண்டிய பொருள்], குருவே மேன்மையான முடிவு, குருவே மேன்மையான தனம் [பொருள்]. அதை [பிரஹ்மத்தை]உபதேசிப்பதால் குருவே குருதரமானவர் [மிகவும் மேன்மையுள்ளவர்]." எவன் இதை [இக்குருஸ்துதியை] ஓர் தடவை உச்சரிக்கின்றானோ அவனுக்கு [அது] மோக்ஷத்துக்குக் காரணமாகும். சகல ஜன்மங்களில் செய்த பாபங்களும் அந்த க்ஷணத்திலேயே நாசமடைகின்றன. சர்வ காமங்களையுமடைகின்றான். சர்வ புருஷார்த்தங்களின் சித்தியுமுண்டாகும்.

ஓ௦ பூர்ணமத இதி சாந்திஃ

"பூர்ணமதః பூர்ணமிதம் பூர்ணாத்பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே."

அது பூர்ணம். இது பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் உதிக்கின்றது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தை எடுக்க பூர்ணமே மிஞ்சுகின்றது.

ஓ௦ சாந்திஃ சாந்திஃ சாந்திஃ

இங்ஙனம் விவேகசிந்தாமணி:
யுபநிஷத் வாக்கியார்த்த தீபிகையில்
ஐந்தாவதான அத்வயதாரகோபநிஷத்

முற்றுப்பெறும்.

## ON THE NECESSITY

### Of Mental Training, even for Physical Culture.

### தேகப்பயிற்சிக்கும் மனப்பயிற்சி அவசியமே.

"The readers of your journal appreciate it very much at it contains matter calculated to raise the mental and moral tone."—*The Voice of Truth in the Republic of Letters.*

" மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத்துள்ளே மகிழ்ந்திருப்பார்க்கு
மன்மனத்துள்ளே மனோலயமாமே."

—திருமந்திரம்.

பயிற்சி யிரண்டு விதம்: மனப்பயிற்சி, தேஹப்பயிற்சி என்று சொல்லப்படும். தேஹம் என்பது ஸப்ததாதுகளாலும் சேர்ந்து கட்டப்பட்டு தசேந்திரியங்களாலும் இயக்கப்படும் இயற்கையிலமைந்ததோர் அற்புத யந்திரமாம். இந்த யந்திரத்தைப் பழக்குவது தேஹப் பயிற்சியாம். "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையார். இந்த தேஹம் என்பு, நரம்பு, உதிரம், மாம்ஸம், கொழுப்பு, சுக்கிலம் இவற்றால் இசைக்கப்பட்டு தோலினால் போர்த்தப்பட்டதோர் கூடு. இந்தக் கூட்டுக்குள் வாசம் செய்கிறவர் தசேந்திரியங்கள் என்றுசொல்லும் கருவிமாத்திர உறுப்புக்கள். இந்த இந்திரியங்களை இயக்கும் சக்திவாய்ந்தது மனம். மனதாகிய சூத்திரதாரிக்கு சூத்திரக்கயிறு போலிருந்துதவுவது பிராணன் முதலான வாயுக்கள். முக்கிய வாயுக்கள் ஐந்தோடு அவற்றின் இயக்க விசேஷமான சூக்ஷ்மவாயுக்கள் ஐந்தும் சேர்ந்து ஆகப் பத்துவாயுக்களுக்கும் பொதுவாய் பிராணவாயு வென்றுபேர். பிராணனைக் குதிரையென்றும் மனதைக் குதிரையேறிச் சவாரிசெய்யும் ஆரூடனென்றும் சொல்வர். இவ்விருவரும் ஒத்து நின்றாலன்றி ஒன்றும் பலிக்காது. ஆருடன் வடக்கே திருப்பி முடுக்கினால், குதிரை தெற்கேபார்த்து ஓடுவதானால் காரியம் எப்படிமுடியும்? முடியாதே போல், மனம் ஒருவழியிற் சங்கற்பிக்கப் பிராணன் பழக்க வாசனையால் வேறொருவழியிற் சென்றால் ஜீவயாத்திரை இனிதுமுடியாது பழுதுண்டு சிதறிப்போம். இல்லறதர்மமும் அப்படியே. ஆரூடனாகிய புருஷன் ஒருவழியிற் சங்கற்பிக்க இல்லற தர்மத்துக்குப் பிராணனும் ஸ்தானத்திலிருக்கும் இல்லாள் வேறுவழி சென்றாளாயின், " இல்லறமென்னும் இயல்புடைய வான்சகடம் செல்லாது தெற்றிற்று நின்று".

இது இகம் பரமிரண்டிற்கும், விளையாட்டு வினையெல்லாவற்றிற்கும் உண்மையாய்ப் பொருந்து

மொரு உத்தம தர்மமாம். ஸநாதநமான இந்த தர்மத்தை யாவர் அறிந்துணர்ந்து அதன் வழிப்பட்டு நடக்கிறார்களில்லையோ அவர்கள் அல்லற்பட்டு அழிவெய்துவார். இது யோக மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும், இல்லறத்திலும், துறவறத்திலும் தான் பொருந்துமென்பதில்லை. எல்லா விதத்திலும் எல்லாவழியிலும் இத்னுண்மை யுள்ளபடிபார்க்கிற் பொருந்தும்.

சென்ற ஆகஸ்டு மீ 29உ திங்கட்கிழமையன்று மாலையில் சென்னை பீப்ல்ஸ்பார்க்கிலுள்ள தென்னிந்தியா தேஹப்பயிற்சி சங்கத்தார் (South Indian Athletic Association) அவர்களுடைய பந்தயஓட்ட சாலையில் பள்ளிப்பிள்ளைகளுடையவும் மற்றவர்களுடையவும் தேஹப்பயிற்சியைத் தூண்டுவதற்கான பந்தய ஓட்டங்களும் விளையாட்டுகளும் வைத்துக்கொண்டு பரிசுகொடுத்தார்கள். அங்கே பந்தயத்துக்கு எற்றதாய்க்குறிக்கப்பட்ட விளையாட்டுகளிற் சில பின்வருமாறு :—

(1) கால்நடையாக ஓட்டம்பிடித்தல்—100 கஜதூரம்.

(2) கண்கட்டிக்கொண்டு குதிரையோட்ட மாதிரியோடும் பந்தயம் (Tandem Race) 50 கஜதூரம்.

(3) கண்கட்டிக்கொண்டு ஜலம்நிறப்பிய சட்டியை தூக்கிக்கொண்டு ஓடுதல்—50 கஜதூரம்.

(4) மூன்றுகால் ஓட்டப்பந்தயம். (இருவர் சேர்ந்து மூன்று கால்களால் ஓடுதல்.)

(5) பைஸிகள் ஓட்டம்.

(6) ஒற்றைக்குதிரை கட்டிய ரேக்ளா வண்டியோட்டம்.

(7) ஒற்றைமாடுகட்டிய ரேக்ளாவண்டி யோட்டம்.

(8) தேர்வடம்பிடித்து மல்லுக்கு நிற்றல்.

இதில் முதலாகநின்று பந்தயம் கெலித்தவர்களுக்கு ரூ. 5, 6 முதல் 10, 12, 25-வரையில் வெகுமதி கொடுத்தார்கள்.

முதலாவது பந்தயமான கால்நடையாக ஓட்டம் பிடித்தலில், யார் மூச்சையடக்கிப் பிடித்துக்கொண்டு, பிராணனை ரூடுக்கியோடப் பழகியிருந்தாரோ அவரே ஜயிப்பர். ஜயித்தவரும் அப்படிப் பழகினவரே.

இரண்டாவதான கண்கட்டிக் குதிரையோட்டமாதிரியோடும் பந்தயத்தில், ஒருவர் கண்ணைக் கட்டிக்கொண்டு முன்னிற்க, அவர்தோளில் குதிரை லகான் போல் வேஷ்டியைப்போட்டுப் பின்னே அதைப் பிடித்து நிற்பர் அவர்தோழர் ஒருவர். முன்னின்றவர் கண்ணைக் கட்டிக்கொண்டு ஓடவேண்டும். பின்நின்று லகான்பிடிப்பவர் அவர்நேரே ஜயஸ்தம்பத்தைநோக்கியோடும்படி லகானைப் பிடித்திழுப்பதாற் சைகை காட்டவேண்டும். இந்தப் பந்தயத்தில் முரட்டுத்தனமாய் ஓடுகிறவன் வழிதப்பியோடுவான். பந்தயம் ஜெயிக்கவேண்டுமானால் இருவருக்கும் வாயுவுக்கும் மனதுக்குமுள்ள ஒற்றுமையிருக்கவேண்டும். கண்மூடி முன்னின்றோடுபவன் வாயுவுக்குச் சமானம். அவன் பின்னின்று இயக்குமவன் இயக்கத்துக்கிணங்கி நேர்வழி யறிந்தோடினாலன்றி அவன் பிரயத்தனம் பலியாது. ஆகவே கண்ணோட்டம் பின்னின்று இயக்குமவனதாகவும், காலோட்டம் முன்னின்றோடுமவனதாகவு மிருக்கவேண்டும். முன்னவன் கால்கள் பின்னவன் கண்களின் நோக்கறிந் தோடவேண்டும். அது எப்படி ? குதிரையானது எப்படி சாரதியின் நோக்கறிந்து ஓடுகின்றதோ அப்படியே முன்னின்ற கண்கட்டி மனிதன் தன் எண்ணமெல்லாவற்றையும் பின்னவன்மேல் வைக்கவேண்டும். பின்னின்று செலுத்துமவன் தன்னெண்ண மெல்லாவற்றையும் ஜயஸ்தம்பத்தில்வைத்து முன்னின்றோடுமவனை நேரே யதனிடம் செலுத்துவதில் கருத்தூன்றி நிற்கவேண்டும். இப்படி இருவரும் பிராணனும் மனமும்போல் ஒத்துழைத்தாலன்றி பந்தயத்தில் ஜெயம் பெறுவது துர்லபமாம். மனதொத்துப் போய்விட்டால் விசையறிந்தோடத் தானேவரும். இஃதெல்லாம் இந்திரியங்களையடக்கி மனவழிப்படுத்தலாலேயே வந்தமையும். முன்னவன்முற்றும் அந்தர்முகமாயிருக்கப் பின்னவன் முற்றும் பஹிர்முகமாயிருக்க, இருவரின் பஹிரஹ முகப்பார்வைகள் ஒன்றுசேர்ந்து ஒருமைப்படவேண்டும். இந்த மனப்பழக்கமில்லாதார் இப்பந்தய ஓட்டத்தில் சிறிதும் ஜயிக்கமாட்டார்கள். இம்மனப்பழக்கம் முற்றும் வெளியாகவேண்டியே, முன்னின்று ஓடும்வரையும் பின்னின்று செலுத்துமவரையும் அவர்கள் ஓடவேண்டிய திசைக்கு எதிர்முகமாக நிற்கவைத்து, கண்ணைக்கட்டி ஓடுந்தருவாயில் திரும்பியோடும்படிச் செய்தார்கள். இந்தச் சூதை யுணரமாட்டாமல் அனேகர் மூலைமுடுக்குகளை நோக்கி ஓடிப் பந்தயத்தை இழந்தார்கள். இப்படியே ஒவ்வொன்றிலும் மனப்பயிற்சியில்லாது தேஹப்பயிற்சிமட்டும் பயின்றவர்கள். அவர் தேஹவலிமையைச் சரிவர உபயோகித்துப் பந்தயத்தை ஜயிக்கமுடியாமல்



குருட்டுவழியில் முரட்டுத்தனமாயோடி, மூலைமுடுக்குகளில்போய் முட்டிக்கொண்டு அவமானப்பட்டார்கள். பந்தயம் ஓடினவர்களில் பலர் புல்லாந்தரையில் பந்தய ஓட்டமார்க்கம் இருக்க, கப்பி ரோட்டிலும் மண்தரையிலும் காலடிபடுவது தெரியாமல் பந்தற்கால், தூண், நாற்காலி, பைஸிகிள் முதலானவற்றின்மேலெல்லாம் விழுந்தோடி வீண் துன்பப்பட்டு அவமானத்துக்காளானார்கள்.

இப்படியே ஒற்றைக்குதிரை ரேக்ளா வண்டிப் பந்தய மோடுகையில், முக்கால் வட்டமும் [ரவுண்ட்] முதலாகவே முந்தியோடிய குதிரைவண்டியொன்று, பந்தயம் ஜயிக்கும்படியான காலத்தில் பந்தயவீதியிலேயே சுற்றியோடாது, வந்தவழியை நினைத்துக் குதிரைபாய்ந்தோட, அதை லாகவமாய்த் திருப்பப் பழகாதவன், குதிரையை வெருள அடிக்க அது துள்ளிக்குதித்து ரேக்ளா வண்டிக்காரனையும், "வண்டியையும் கீழேதள்ளி அதுவும் விழுந்து உதைத்துக் கொள்ளநேரிட்டது. இது குதிரையும் குதிரைக் காரனும் மனதொத்துப்பந்தயம் ஓடாமல் முரண்டு கொண்டு ஓடுவதின் பயனாய் முடிந்தது. இப்படி ஜீவயாத்திரையென்னும் பந்தய ஓட்டத்தில் "வாயு மனம் ஒத்த" உத்தமர்கள் காரியகாரணஸித்தி யென்னும் ஜயஸ்தம்பத்தையடைந்து பந்தயம் கெலித்தவர்களாக, அந்த ஒற்றுமை யடியப் பழகாதவர்கள் பந்தயவோட்டத்தில் முந்தியோடியும் பந்தயம் ஜெயிக்காமல் விழுந் தவதிப்பட்ட ரேக்ளா வண்டிக்காரனைப்போல் "குருட்டாட்டமாடி(த்துன்ப)க் குழியில் விழுந்து" வருந்துகிறார்கள்.

தேர்வடத்தைப் பிடித்துக்கொண்டு மல்லுக்கு நின்ற பந்தயத்திலும், தேஹப்பயிற்சியை மனப்பயிற்சியோடு ஒக்கப்பழகிய 'ஸோல்ஜர்கள்' என்னும் போர் வீரர்கள் அவர்களுடைய தலைவர்எதிர்நின்று காட்டிய கைவாய்ச் சைகைகளுக்கிணங்கப் பழக்கவாசனையால் அவர்கள் மனதும் பிராணனும் இசைந்தொழுக எளிதில் வெற்றிபெற்றார்கள். அவர்களை யெதிர்த்துநின்ற போலீஸார் முதலான மற்றொருசாரார், அப்பழக்கமின்றித் தோல்வியடைந்தனர். இப்படியாக தேஹப்பயிற்சிக்கும் மனப்பயிற்சியே முக்கியமும் முதலுமாயிருக்கிறது. இப்படியுள்ள தேஹமனப்பயிற்சிக்குக் காரணம் வாயுமனம் ஒன்றுதலாம். இந்த ஒற்றுமையேமுக்தியு மளிக்கும். யோகசித்தி காயசித்திகளுக்கும். இந்த வாயுமனவொற்றுமையே யின்றியமையாச் சாதனமாம். இதற்கு யோக பரிபாஷையில் கேவலகும்பகம் என்று பேர்சொல்வர். முக்திபெறவேண்டில் உடம்பை ஹிம்ஸித்து வருத்தவேண்டுமென்று நினைப்பது தப்பெண்ணம்.

விதேஹகைவல்யமாகிய உயர்முக்தி பெறுவதற்கும் தேஹமே ஆதாரமாகவுள்ளது. தேஹம் இடையே விழுந்துபோனால் ஆத்மா பூரணமெய்துவது பூஜ்யம்தான்.

"உடம்பாரழியில் உயிராரழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கு முபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே."

என்பது திருமந்திரோபதேசம். ஆகையால் தேஹப்பயிற்சிக்கும் மனப்பயிற்சியே அவசியமாதலால், தேஹமனமிரண்டும் ஒன்றுமிடமாம் பிராணனை வசப்படுத்தல்வேண்டும். இதற்குப் பிராணாயாமமென்று பேர். இந்த பிராணயாமசித்தி பெற்றார் இகம்பரமிரண்டிலும் பெறலரும் பேறெல்லாம் பெற்றுவாழ்வார் என்பதற்கையமில்லை. இந்த வுண்மைபற்றியே பார்ப்பனச்சிறுவர்க்கு 7-வயதில்தானே உபநயநம்செய்து பிரஹ்மோபதேசத்தோடு "பிராணாயாம அப்பியாஸம்" பழகிவரக் கற்பிக்கிறார்கள். அதற்கு பிரஹ்மோபதேசம் என்னத்திற்கு என்றால் பிராணாயாமஸித்தி ஸர்வ சக்தியையுங்கொடுக்க வல்லதாகையால், அஃது உத்தமமானஉயர்லக்ஷியமின்றி யப்பியஸிப்பார், அசுரபாவந் தலையெடுக்கப் பெறுவரேல், உலகுக்கே தீங்கு விளைப்பவராவர். ஆகையால் அறியத்தக்க வெல்லாவற்றிலும் மேலாய் அறிவறிதாயுள்ள பிரஹ்மோபதேசம் ஒன்றின்பொருட்டே பிராணாயமம் தர்மவழியில் உபதேசிக்கத்தக்கது. இது பெரியோர் ஏற்படுத்திய உயர்லக்ஷியம். அஃதைக் குறுக்கி நறுக்கிக் குறைவுபடப்பழகிச் சிறைப்பட்டுழல்வார் எத்தனையோ பேர். அவர்களைப்பற்றி நாம் ஒன்றும்சொல்லவரவில்லை. உண்மையைச்சொல்லி உத்தமவழியைக் காட்டலாமேயன்றி, மத்தியமவழியைக் காட்டுவது முறையல்ல.

ஓம்தத்ஸத்.

# ON DISEASE or SICKNESS.

## நோய்.

மக்களாய்ப் பிறந்தார்க்கு நேரும் துன்பங்கள் பலவற்றுள்ளும் 'நோய்' அல்லது 'பிணி'யும் ஒன்றாகும். யாக்கையை இழித்துக் கூறுவதற்கு முதற்காரணம் அது நோயணுகுதற்கிடனாயிருத்தலேயாம். இது பற்றியன்றோ 'பொல்லாப்புழுமலி நோய்ப்புன் குரம்பை' என்றார் பிறரும். யாக்கையைப் புன்மைபடுத்தும் இந்நோய் இன்றேல் மானுடவாழ்க்கைபெரிதும் பயனுடைத்தாதலும், நோய் உளதேல் அது பயனின்றாய்க் கழிதலும் உண்டோ எனின், உண்டு. எவ்வாறெனின்; கூறுதும். உலகத்தவராற் பெரிதும் மதிக்கப்படுவது செல்வம். ஏனெனின் அஃது "அறனீனும் இன்பமுமீனும்." இத்தகைய செல்வமோ குறையின்றி எந்நாளும் நிலைத்திருப்பதன்று. 'நிறைசெல்வம் நீரிற்சுருட்டு நெடுந்திரைபோல் குறைதலும் நிறைதலும் அறவேயழிதலுமாகிய இயல்பிற்று. ஆனால் இச்செல்வம் குறைவற்றதாயின் இதன்பெருமை எத்துணையாகும்? குறைவற்ற செல்வம் ஒருவர்க்குக் கிட்டுமாயின் அதை அவர் மறுப்பாரோ? மறார். குறைவற்ற செல்வத்தோடொப்ப நோக்கத்தக்கது வேறொன்று கிடைப்பினும் அதனையும் மறார் என்பது திண்ணம். குறைவற்ற செல்வத்தோடொப்பது என்னையெனின் நோயற்றவாழ்வேயாகும். 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பண்டையோர் கூற்றுமுண்டு. ஆதலின் நோயின்றேல் மானுடவாழ்க்கை பெரிதும் பயனுடைத்தாகும். 'எழுமையும் [1]ஏமாப்புடைய' கல்வியைக்கற்றற்கும் இன்னும் மானுடதேகம் எடுத்ததற்கு இன்றியமையாது செய்யவேண்டுவன பலசெய்தற்கும் இடையூறாயிருத்தலான் நோயுளதேல் மானுடவாழ்க்கை பயனின்றாய்க் கழியுமென்க. அற்றேல் இந் நோயினைப்பற்றி நாம் நன்காராய்தல்வேண்டும். முதற்கண் நோயாவது என்னையென்று விசாரிப்பாம்.

*'மிகினுங் குறையினும் நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.'

அஃதாவது உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த அளவினவன்றி அதினின் மிகுமாயினுங் குறையுமாயினும் பெரியோரால் சொல்லப்பட்ட வாதம், பித்தம், சிலேட்டுமம் என்னும் மூன்றுவகையான துன்பமே நோயெனப்படும். இதனாலே நோய் இன்னதென்பதும், அது உண்டாதற்குக் காரணமும் அறிந்தாம்.

உணவுஞ் செயல்களும் மிகாமலும் குறையாமலும் இருக்குமேல் நோய்கள் வாராதோ வெனின் அப்போழ்தும்வரக்கூடும். ஆயின் அவை பழவினையான் வருவனவாதலின் அதன் கழிவின்கணல்லது தீராது. ஆகவே ஏனைக் காரணங்களால் வருவனவற்றையே நாம் ஆராய வேண்டும். உணவு ஒத்தலாவது சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். வாதபதார்த்தங்களையே மிகுதியு முண்ணலும், பித்தபதார்த்தங்களையே மிகுதியு முண்ணலும், சிலேட்டும பதார்த்தங்களையே மிகுதியு முண்ணலும் ஆகாது. மூன்றையும் சமமாகக் கொள்ளல் வேண்டும். அளவிலும் அவ்வாறே. ஈண்டு அளவென்றது உணவளவும் கால அளவுமாம். உணவு உருசியாயிருக்கும் காரணம் பற்றியாவது வேறு எக்காரணம் பற்றியாவது மிகுதியாயுண்டலும், மற்றை அமயங்களில் குறைவாயுண்ணலும் ஆகாது. கால அளவாவது குறித்த காலத்திற் சாப்பிடுவதாம். காலையுணவை இன்று காலை ஐந்து நாழிகைக்கும் நாளைக்காலை எட்டு நாழிகைக்கும், மறுநாட்காலை பத்துநாழிகைக்கும், இவ்வாறு மாறுபட்ட நேரங்களில் அருந்துதல் கூடாது. இனிச்செயல்களொத்த

1 ஏமாப்பு=உதவுதல்.



லாவது மனமொழி மெய்களாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே யொழிதல். எந்தக்காரியத்திலும் தன் சக்திக்கு மேற்பட்டு உழைத்தல் உடம்பிற்குக் கெடுதியை உண்டாக்கும். நோய்க்கு முக்கிய காரணமாயிருப்பது நாமுண்ணும் உணவேயாம்.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

ஒருவன் முன் உண்டது ஜீரணித்தாயிற்று என்பதைக் குறிகளாற் றெளியவறிந்து பின் உண்ணுவானாயின், அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறு வேண்டியதில்லை. உண்ட உணவு அற்றதற்கு ஜீரணித்ததற்கு அறிகுறியாவது உடம்பு பலங்குன்றுதல், வயிற்றில் நெருப்பெரிவது போலிருத்தல் முதலியன.

பெறுதற்கரிய மானுடதேகம் பெற்றானொருவன் அவ்வுடம்மை நெடுங்காலம் கொண்டு செலுத்த விரும்புவானாயின் முன் உண்ட உணவு அற்றதறிந்து பின் உண்ணும் உணவை அளவோடருந்தல் வேண்டும். இதனாலன்றோ

*அற்றாலளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்குமாறு.

எனப்பணித்தார் அறிவானான்ற பெரியாரும். உணவு கொள்ளும்போது ஒன்றற்கொன்று மாறுபாடான உணவுகளைக் கொள்ளுதல்கூடாது. தேனும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல் காண்க. உண்ணும்பதார்த்தங்களின் குணகுணங்களை அறியாது மனம் பட்டவாற்றாற் [2]றுய்ப்பின் அதனானே நோயும்மரணமும் வருதலின் ஒவ்வொன்றின் குணகுணத்தை நன்றாய்க்கடைப்பிடித்தறிந்து உண்ணல்வேண்டும்.

*அற்றதறிந்து கடைப்பிடித்துமாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

என்ற நாயனார் வாக்கை உற்று நோக்குக.

*மாறுபாடில்லாத வுண்டிமறுத்துண்ணின்
ஊறுபாடில்லை உயிர்க்கு.

2 துய்ப்பின்=உண்டால்.

என்றபடி முன்சொல்லப்பட்ட மூவகைமாறுகோளுமில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டிய அளவோடல்லாமல் பிணிவரா அளவில் ஒருவன் உண்பானாயின் அவனுக்குப் பிணி வராது.

உண்ணக்கூடிய அளவிற்குச் சிறிதுகுறைய உண்டலே நல்லது. பெருந்தீனி தின்பதுமாகாது. சிலர் மாடுமுதலிய மிருகங்கள் இரையெடுப்பதுபோல் அளவுகடந்த உணவு அருந்துகிறார்கள்.

இழிவறிந்துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேரிரையான்கண் நோய்

என்றபடி அன்னார் மாட்டு நோய் குடிகொண்டிருக்குமென்பதற் கையமில்லை.

*தீயள வின்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்.

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவாய்மலர்ந்தருளியாங்கு தனக்கு வேண்டிய உணவை வேண்டியகாலத்தில் வயிற்றுத்தீயளவுக்குமேல் ஒருவன் உண்பானாயின் அவனிடத்து நோய்களும் அளவுக்கு மேலதிகமாய் வளரும். இதுகாறும் நோயின் இயல்பும், அதன்காரணங்களும், அதைத்தடுப்பதற்கேற்ற மார்க்கங்களும் இவையென உரைத்தோம். இனிநம் காப்பைக் கடந்து நோய்வந்துற்றதாயின், அப்பொழுது செய்யவேண்டுவதிவையென்று கூறுவோம்.

நோயைத்தீர்க்கு முபாயமே மருத்துவமெனப்படும். நோயுற்றதறிந்த வுடனேயே மருத்துவ நூலிற்றேர்ந்த ஒருவனைக் கொண்டு அதற்குத்தக்க சிகிச்சைசெய்தல் வேண்டும். நோய்க்குச் சிகிச்சைசெய்வான் தேர்ந்தெடுக்கப்பட்ட வைத்தியன்,

*நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

வேண்டும். அன்றியும்,—

* உற்ரு னளவும் பிணியளவுங் காலமும்
கற்ருன் கருதிச் செயல்

வேண்டுவ தவசியம்.

*உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பாலுற் கூற்றே மருந்து.

என்றபடி பிணிக்கு மருந்தாவது, நோய் உற்றவன், அதனைத்தீர்க்கும் மருத்துவன், அவனுக்குக் கருவியாகிய மருந்து, மருத்துவன் சொல்லியபடி மருந்துகளைச் செய்பவன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியை உடைய நான்கு திறத்தது. அவற்றுள் உற்றவன் வகை நான்காவன:—பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலை யுரைத்தல் வன்மை, மருத்துத் துன்பம்பொறுத்தலெனவிவை. தீர்ப்பான் வகைநான்காவன:-பலபிணிநோய் காண்டற்கஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியு நுண்ணறிவு முடைமை, பலகாலுந் தீர்த்துவருதல், மனமொழிமெய்கள் தூயவாதலெனவிவை. மருந்தின்வகைநான்காவன:-பலபிணிகட்கு மேற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதினெய்தப்படுதல் பகுதியோடு பொருந்துத லெனவிவை. இயற்றுவான் வகை நான்காவன, [3]ஆதுரன் மாட்டன் புடைமை, மனமொழிமெய்கள் தூயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல்வன்மை. அறிவுடைமையென விவை. இவை யெல்லாங் கூடிய வழியல்லாது பிணி தீராமையின் மருந்து என்பதற்கு இவை இன்றியமையாது வேண்டப்படுவனவாம். ஆயுள்வேத முடையார் இவை கால்களாக நடக்கு மென்பது பற்றிப் பாதம் என்றும் இவை மாறுபட்டவழிச் சாத்தியமும் முதிர்ந்து அசாத்திய மென்றுங் கூறுவர்.

டி. எஸ். தியாகராஜஞானியார்.

---

N. B. இவ்வியாசம் திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளித் திருக்குறளின் மருந்து என்னும் அதிகாரத்தையே ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

* திருக்குறள்.

3. ஆதுரன்=நோயாளி.

விவேகசிந்தாமணி கையொப்பக்காரர்களுக்கறிக்கை.

நமது கையொப்பக்காரர்களி லனேகர் இன்னமும் அவர்களது சந்தாபாக்கியைச் செலுத்தாதுவைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்தமாதக்கடைசிக்குள் கையொப்ப பாக்கியை யனுப்பாவிடில் அடுத்த சஞ்சிகை இவர்களுக்கு V. P. P.—மூலமாயனுப்பப்படுமென்பதை யறியவேண்டியது. மூன்றுமாசத்துக்குமேல் சந்தா பாக்கியிருந்தால் அது V. P. P. மூலமாய் வசூல்செய்யப்படுமென்று இதனால் எல்லாருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

—அ. ப். ஏஜன்ஸி காரியதரிசி.

*"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your choice and stick to it till you reach the End."*
ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"Hitch your wagon to a Star." "To Thine Own Self be True."

Office of the Registrar of Books REGISTERED 10 NOV 1910 MADRAS.



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்யமே ஜெயம்—SATYAMEVA JAYATI.

புத்தகம். 18.] 1910௵ அக்டோபர்மீ, சாதாரணஞு அர்ப்பிசிமீ [சஞ்சிகை. 7.

# * TIRUKKURAL-THE ESSENCE OF TRUTH.

## 2. *The Ministry of "Heaven"-Rain.*

"**Kundalini** when roused from slumber by excessive heat, is thirsty and hisses round in search of **Amrit** (nectar) to quench its thirst."

"Wet the whole (body) and further wet. Know me always as born from the one."—(Taitr-Ar. 1).

"May Kundalini whose movements are secret and who by the blaze of the fire, by the illumination of the sun and by the brightness of the moon causes the ambrosia to flow through the seventy-two thousand (nerve) channels, make us contended."—**Sukasamhita.**

"The Universal Soul is the alone creator of the useful and the beautiful ...... the omnipotent agent is Nature".—Emerson on Art.

"Nature in its ministry to man, is not only the material, but is also the process and the result. All the parts incessantly work into each other's hands for the profit of man. The wind sows the seed; the sun evaporates the sea; the Ice on the other side of the planet condenses rain on this; the rain feeds the plant; the plants feed the animal, and thus the endless circulation of the divine charity nourish man"—Essay **on Nature**, by **Emerson.**

# திருக்குறளியல்.

## 2. வான்சிறப்பு.

"அந்நாத்பவந்திபூதாநிபர்ஜந்யாதந்நஸம்பவ:
யக்ஞாத்பவதிபர்ஜந்யோயக்ஞ:கர்மஸமுத்பவ:."

பகவத்கீதை—III-14.

[“பிராணிகள் அன்னத்தினாலேயே பிறக்கிறார்கள். அன்னம் வருணதேவனாலாக்கப்படுகிறது. வருணதேவன் யஜ்ஞத்தாற் பிறக்கிறான். யஜ்ஞம்கருமத்தாலுண்டாகிறது.”]

"பார்வை யிரண்டுண்டு; பகிர்-அகமுகமென்பர்;
பார்வை பகிர்முகம் பாந்தவுல காராய்ந்தால்;
பார்வை யகமுக முள்ளுணர்வை யோர்ந்துணரில்;
பார்வை யிரண்டு மொன்றுவதுணரார் பாதவித்துழல்வாரே."

—அகண்டானந்தம்.

“இமம்மேவருண ச்ருதீஹவமத்யாச்ச ம்ருடயத்வாமவஸ்யுராச்சகே”....—சாயங்கால ஸந்தியாவந்தன சூரியோபஸ்தாநமந்திரம். (ருக்வேதவாக்கியம்.)

[வருணசப்தம் பரமாத்மாவைக் குறிக்கிறது: எப்படியெனில் “வருண ஏவ வருண:”—“சேதநாசேதநாத்மகமான எல்லா வஸ்துக்களுக்கும் ஆவரணம்” ஆகிறபடியால் வருணன்.]

“ஓ வருண இன்றையதினம் நீ என்னுடைய பிரார்த்தனையைக்கேட்டு என்னை மனங்குளிரச்செய்வாய். உன்னுடைய கடாட்சத்தை இச்சித்து நான் உன்னை வேண்டுகிறேன்.”—என்பது பொருள்.

“மேற்கொண்ட என்றன் தாபமது தீர்ப்பான்
வேற்போலுங் கண்ணாள் ஸ்ரீவித்தை யென்தேவி
மேற்போன உன்றனுக்கென் ஸ்வரூப மீதுணரென்று
வேற்போலும் வானத்தைக் கிழித்தொளியா நின்றுள்பார்.”

—பஞ்சதசாக்ஷரீஸ்தவம்.

“மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை.”—ஔவையார்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED MADRAS

வான்சிறப்பு (அதிகாரமுறை.)

கடவுள் வாழ்த்துக்”கூறிய வள்ளுவனார்பின், “முதலெழுத் தோதியநூலின் பய”னாய் உள்ள “ஆதியாய்நின்றஅறிவு,” “வான்” வழி தோன்றும் சிறப்பை யெடுத்துரைக்கிறார். வான் என்பது வானத்திலிருந் துண்டாகும் மழைக்குச் சிறப்புப் பெயராகநின்றது. “வேற்போலும் வானத்தைக் கிழித்தொளியாய் நின்ற” குண்டலினியாகிய சிற்சக்தி அகக்கண்ணுக்கு அருள்வடிவாயும் அதுவே பின்னர் தெருள் (தெளிவு) வடிவாயும் முகக்கண்ணுக்கு மின்னல் வடிவாயும், “மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை” யாதலால் அதுவே பின்னர் மழைவடிவாகவும் தோன்றி விளங்கும். அகமுகத்தில் (அகத்தில்) அருளும் தெருளுமாயும் பஹிர்முகத்தில் (புறத்தில்) மின்னலும் மழையுமாயும் உருக்கொண்டு விளங்கும் வான்சிறப்பை, அது கடவுளின் மஹிமையாதலால், கடவுள் வாழ்த்துக்குப்பின் அதைப்பரவியல் பற்றியும் உலகியல் பற்றியும் காரண—காரிய தொடர்ணமுறைபாலே இரண்டாவதாக வைத்துச் சொல்லத் தொடங்குகிறார்.

* * *

“அஹம்-புறம்.”

ஔவையாரும் “ஆதியாய் நின்ற அறிவு” விளங்கக் கூறியபின், பிறப்பியல் கூறுவான்—

“பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறிற் றோன்றும் பிறப்பு.”—

எனக்கூறியிருக்கிறார். பரமாய சக்தியுள்ள இடம் “பராகாசம்” என்னப்படும். அந்தப் பராகாசத்திலிருந்து பொழிவது “அமிர்தவருஷம்” என்னும் மழை. அந்த “அமிர்த” மழையானது, அக்னிமண்டலத்தின் ஜ்வாலாசாரத்தாலும், சூரியமண்டலத்தின் பிரகாச வெப்பத்தாலும், சந்திரமண்டலத்தின் தண்ணொளியாலும் இயக்கப்பட்ட “குண்டலினி சக்தியின்” நடையால், ஸஹஸ்ரதளமென்று உபசாரமாய்ச் சொல்லப்பட்ட பராகாசத்தின் கண்ணுள்ள “அமிர்தம்” மழையாகப் பொழிந்து எழுபத்தியீராயிரம் நாடிகளையும் நனைத்து உயிர்க்காதாரமாய் நின்று உள்ளத்துவகையால் திருப்தியையுண்டுபண்ணுகிறது. இது அகமுகத்தேகண்டனுபவிக்கத் தக்கதோர் காட்சி, அஃதேபோல, பஹிர்முகத்தும் உலகியல் நடையில்,—

“வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.”

[“வானமிழ்தமான” மழை இடையறாது நிற்ப, (அகமுகத்தே உயிர்க்கிருப்பிடமான 72,000 நாடிகளைப்போல் பஹிர்முகத்தே உயிர்களுக் கெல்லாமிருப்பிடமான) உலகம் (பிறப்பிடையறாமையின் எஞ்ஞான்றும் உடம்பொடு காணப்பட்டு வருதலாகிய நித்திய) நிலைபெற்று வருதலான், (அது) உலகத்துக்கு அமிழ்தமென்று உணரும் பான்மையை உடைத்து.]

பராகாசத்திலிருந்து குண்டலினி சக்தியின் இயக்கத்தால் நாதபிந்து ரூபமாய்த் தோன்றி அமிர்த வருஷம் பொழியும் ரஸதன்மாத்திரையான ஆப்தத்துவம் 72,000 நாடிகளையும் நனைத்து உயிருடலுறவை உறுதி செய்வதுபோல, மஹாகாசத்திலிருந்து மஹாமாயையின் சலனத்தால், மின்னலிடி ரூபமாய்த்தோன்றி மழையாக வருஷிக்கும் ஆப்தத்துவ மஹாபூதமான (ஜல) மழை உயிருலகுறவை உறுதி செய்து பிரபஞ்சதர்மம் இடையறாது நடக்கச் செய்கிறதாகையால், அது “அமிழ்தமென் றுணரற் பாற்று” என்றார்.

இது அகம்புறமிரண்டுமொக்க வுரைத்ததோர் உண்மை யென்றினிச் சொல்லாமேயமையும். உண்மையென்றால் “தத்துவம்”—தாதாத்மிய சம்பந்தத்தால் தத்பத, துவம்பத மிரண்டு மொன்றதாம்.

“தத்துவமெங்குண்டு தத்துவனங்குண்டு” என்னும் திருமந்திரோபதேசப்படி தத்துவனைக்

காட்டியபின் எல்லாவற்றிற்கும் மேலான தத்துவத்தை யெடுத்துரைக்கிறார்.

அநித்தியமான தத்துவங்கள் "பூதமுதலாகவே நாதபரியந்தமும் பொய்"யென்று கூறியிருத்தலாலே விளங்கும். நாதம்வரையில் அபாதத்துவங்களாம். நாதத்துக்குமேலுள்ள நாதாந்தம் பாதத்துவமாம். அது "நாதாந்த வெட்டவெளி" யென்றதனால், பரவெளி யென்றும் பராகாச மென்றும் பெறப்படும். இந்த 'நாதாந்தரூப'மே 'வேதாந்தமோன'மும் ஆம். அங்கே "நானெனுமகந்தை" தீர்ந்துபோக, தற்போதமாம் "என்மதி" ப்ரபோதசந்திரோதயமான "மஹத்" என்னும் "ப்ரபுத்தி"யில் ஒடுங்கிநிற்கும். ஆதலால்தான் அதை "நானெனுமகந்தை தீர்த்தென் மதியுண்டமதியான மதிவதனவல்லியே!" என்று அருவிலுருவாய்க் கண்டு தொழுதுள்ளார் மேலோர்.

நாதாந்தத்திலிருந்து "நாதம்" பிறந்ததாகவே, "நாதவடிவாகிய மஹாமந்திராதிரூபியே" யென்றுகூறிய "மனோன்மனி"க்கும் மேலாயுள்ள அவஸ்தாதீதமான "மௌனமந்திராதிக்யவித்யை"யே "பாராகாசம்" என்று சொல்லும் 'நாதாந்த வெட்டவெளி." இந்த நாதாந்தவெட்டவெளியில் "சிவ-சக்தியைக்கியம்" நேரிடும்பொழுது அமிர்தவருஷம் பொழியும். தத்துவதரிசனமாய் அபாதத்துவங்களெல்லாம் "பொய்", அதாவது, நிலையற்றன வென்று கண்டுதள்ளின யோகதற்பரனுக்கே, பராகாச வெளியிற்புகும் சக்தியுண்டு. அங்ஙனே போனவனுக்குப் பராசக்தி மின்னல்போல் ...ள்வடிவாய்த்"தோன்றி மறைந்து "மழை...ய்" அருள்பொழிவள். அதுவே "வான்" ...ன் பரார்த்தம். அபரத்தில் அதும்ஹா...ன்று மின்னலிடியதுவாய்த் தோன்...ழ்யதுவாய்ப்பொழியும். ஆகையால் ...பாகத்தில் யோகதற்பரனை யோ... "ஆதியாய் நின்றஅறிவு' வடி...ரவித்யைரூபமாய்,—

"மேற்போன உன்றனக்கென் ஸ்வரூப மீதென்றென்று
வேற்போலும் வானத்தைக் கிழித்தொளியாய் நின்றருள்வார்"

என்று காட்டியது. "வேல்" எதையும் ஊடுருவிச்செல்லும் சக்திவாய்ந்தது. அது சக்திரூபமாயிருத்தலால் அதற்கு "சக்தியாயுதம்" என்று பேர். "வேற்போலும் வானம்" என்றதனால் எல்லாவற்றையும் ஊடுருவிச் செல்லத் தக்க ஸர்வவியாபகசக்திவாய்ந்த "பராகாசம்" குறிக்கப்பட்டது. அந்த வானைக் கிழித்தலாவது அதன் வியாபகசக்தியாகிய ரஸத்தைப்பொழியச்செய்வதாம். அதுதான் "அமிருதவருஷம்" என்பது.

பராகாசத்தின் ஸர்வவியாபக சக்தியை ரஸமாகப் பிழிந்தெடுத்தால், எல்லாவஸ்துக்களினும் அந்தர்யாமியாய் நிற்கும் நிலை சித்திக்கும். இதுவே அமிர்த சித்தியாம். இதனால் "மிருத்யு நாசம்" தானேலபிக்கிறது. "மிருத்யுநாசமுண்டானால்" உயிருடலுறவு இடையறாது நிலைபெற்றிருக்கச் சித்திக்கிறது. இந்த சித்தியே நித்தியத்துவம். அபரத்தில் இது ஈசத்துவமாம்.

* * *

### அதன் சாதகமுறைத்தல்.

இப்படியாக உயிருடலுறவை யுறுதிப்படுத்தலால் "அமிழ்தமென் றுணரற்பாற்றதான" மழை, எப்படிப்பட்டது எனில்,—

(2) "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை."

[உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி (உண்டாக்கி), அவைகளை யுண்பார்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம்மழை —பரிமேலழகருரை.]

இந்த மழையானது தாஹதாப மிரண்டையுந்தீர்க்க வல்லதாயிருக்கிறது. தாஹம் (நீர் வேட்கை), தாபம் (பசிவேட்கை);—இவ்விரண்டையும் தீர்ப்பதும் மழையேயாம். உயிருடலுறவை நிலைநிறுத்துவது பசிதாஹங்களைத் தீர்த்தலாலன்றி கூடாததலின் காரணகாரிய தோரணையாலே, உயிருடலுறவு நிலைநின்ற



போது பசிதாஹம் என்னும் ஈரவஸ்தைகளும் தீர்க்கப்பட்டதாக வேனுமாதலால், அதற்குக் காரணம் வேறுளதென்றெண்ணுவதற் கிடமின்றி உயிருடலுறவின் நிலைப்பேற்றுக்குக் காரணமாய் நின்றமழையே அந்த நிலைப்பேற்றின் காரியமான பசி, தாஹம் இரண்டையும் போக்குவதா யிருக்கிறது என்று பின்னுமதன் சிறப்பை யெடுத்துக் கூறினார்.

அருள்வழிப் பட்டார்க்குப் பிறப்பிறப்பென்னும் பேதைமை யொழிந்து போதலாலே, அந்த அருண்மழையினாலே "உயிருடலுறவு" என்று சொல்லும் அத்துவிதநிலை சித்திக்கும். சாசுவதமான அந்தநிலை சித்திக்கக் காரணமாயிருக்கும் அருண்மழைதானே போகபோக்கியங்களாகிய நல்ல உணவுகளை யுண்டுபண்ணி, கிருதகிருத்தியப்ராப்தி யென்னும் நைஷ்கர்ம சித்தியால் காரணகாரிய தோரணையறிதலாகிய ஆத்மதாஹத்தையும் தணிக்கும்.

* * *

### சாதகங்கூறிப் பாதகமுரைத்தல்.

மழையினாலுண்டாகும் சாதகங்கூறி அதன் சிறப்பை வற்புறுத்துவான் அது இல்லாமையினாலுண்டாகும் பாதகத்தை அடுத்தபாட்டில் கூறுகிறார்.

(3) "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி."

[மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின் நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி.—பரிமேலழகருரை.]

"Wet the whole (body) and further wet. Know me always as born from the One." என்று தைத்ரேய ஆரண்யகத்தில் சுருதி முறையிட்டிருக்கிறது. அருள் மழை பெய்து தாபத்திரயங்களாலும் எரிக்கப்பட்டுக் காய்ந்துபோன (உயிர்நிலைக்கிடமான) நாடிகளையெல்லாம் நனைத்துக்கொண்டே வாராவிடில் ஸமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்நி போலுமுள்ள உதராக்கினி நிறைந்த ரக்தநாடிகளால் சூழப்பட்ட பிண்டத்தினுள்ளே (தாபத்திரியங்களான) பசி நிலையாகநின்று ஜீவனைவருத்தும். உதிரம்ஜலரூபமேயாயினும், கடல்நீரைப்போல் பயன்படாதொழியும். கடல்நீரானது எப்படி அதிலுள்ள வடவாமுகாக்நியினாலும், சூரியப்பிரகாசத்தின் வெப்பத்தாலும், சந்திரனின் தண்ணொளியினாலும், மேகங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு, மின்னலிடியோடுகூட மழையாகப் பொழிந்தால் மட்டுமே, உணவுகளை யுண்டுபண்ணித் தானுமுணவாதல்போல, உதரத்திலுள்ள குண்டலிநிசக்தியானது மூலாக்நியின் ஜ்வாலாகாரமான உதிராக்நியாலும், மணிபூரக, அநாகத, விசுத்தி ஸ்தானங்களிலுள்ள சூரியமண்டலத்தின் கேவலகும்பகப் பிரகாச வெப்பத்தாலும் ஆஜ்ஞைக்குமேல் ஸஹஸ்ரகமலம் வரையிலுள்ள சந்திரமண்டலத்தின் தண்ணொளியாலும் ஆகர்ஷிக்கப்பட்டு ஆவிரூபமாயெழும்பி ஸஹஸ்ராரத்திலுள்ள பராகாசவெளியில் மின்னலிடி ரூபமாகத்தோன்றி (பிந்து நாத தத்துவங்களின் ஊர்த்துவமுக சேர்க்கையால்) "அமிர்தவருஷிணி" யென்னும் அருள்மழை பொழிந்தாலன்றி ஜீவாத்மாவுக்கியல்பாயுள்ள தாபத்திரியம் நீங்காதாகி, அதினுண்ணின்று வளர்ந்து அறிவைமயக்கி ஆத்மாவைவருத்தும்.

ஆகையால் சமுத்திர ஜலமானது எப்படிலயப்பட்டு மேகங்களாகிப் பின்னர் மழையாகப் பொழிந்து உலகை (உயிர்களை)க்காக்கின்றதோ, அப்படிப்போல, உதிரத்திலுள்ள ஜலமானது லயயோகத்தாலே கருணைமுகிலாகமாறிப் பின்னர் † அருள்மழைபொழிந்தாலன்றி ஆத்மாவைப்பற்றிய தாபத்திரயங்களும் அவற்றாலுண்டாகும் "பசியும்" நீங்காது நிலைபெற்று அறிவை மயக்கி வருத்தும்.

† Compare: "செம்பித்தளிம்பபோல செங்குருதி தன்னில்தாயே" "அம்பரத்தமேசன் அருவென்னுங்களிம் பொன்றுண்டு".

"வசியமானால் கட்டழிகி பசியுங்காணு தசியுமாவாய்
நசியா திவ்வுடலங்காண் நாதபிந்து சேர்ந்தால்
பசியாதென்று சொன்னதுவும் பரமாகவலியம்
நசியாத இவ்வுடலை நயந்து பாரே!"

—சித்தவாக்கு.

"பசி நிலைநின்று வருத்தும்" என்னவே, பசி நிலைநிற்பதற்கான காரணம் கூறவேண்டி மழையின்மை உணவின்மையாவதையுணர்த்த அடுத்தபாட்டில் மழையின்மையால் வரும்பயனைக் காரண-காரிய தோரணையினனே யுணர்த்துகிறார்:—

(4) "ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்."

[உழவர் ஏரானுமுழுதலையுஞ் செய்யார், மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின்.—பரிமேலழகருரை.]

உழவர் ஏருழுவதுஞ் செய்யாராக விளைவு குன்றி உணவிலையாகு மென்றார். அதைக் கேட்டு மழையின்மையின் கொடுமையைக்கண்டு ஒருதலைச் சார்பான எண்ணங் கொள்ளாதபடி மழையின் ஆற்றல் முற்றும் முறையே கூறுவான், அடுத்தபாட்டில்,—

5. "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்
யெடுப்பதூஉ மெல்லா மழை." [மற்றாங்கே
—என்றார்.

[பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம், அவ்வாறு கெட்டார்க்குத்துணையாய்ப் பெய்து முன்கெடுத்தாற்போல் எடுப்பதூஉம் இவையெல்லாம் வல்லது மழை.—பரிமேலழகருரை.]

"அடிக்குமோருகை அணைக்குமோருகை" யென்றவாறு "கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்" வல்லது மழை. அருள்வழிப்பட்டார்க் கிதனுண்மை விகசிதமாம்.

"அருளினாலன்றி யாவதொன் றில்லையால்
மருளினால் நானெனச் செய்வதொன் றில்லை
தெருளினாலுள்ளந் தெளிந்திடச் செய்யுமுன்
னருளினாலன்றி யாவதொன் றில்லையே!"

"கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்" அருளினாலன்றி வேறில்லை யாதலால்; அருள் வழிப்பட்டு நிற்பார், அதாவது, "நாமெனுமகந்தை நீர்ந்தோராகி" எல்லாம் திருவருட் பிரஸாதமென்றுப்பாருக்கு "இருவினைநேரொப்பு" நேர்தலால், அவர்களை நன்மைதீமையென்னும் இருவினையுஞ் சேரா. எல்லாம் கடவுளின் திருவிளையாடலாக வுடன்பட்டு நிற்பார். ஆனால் அவர்கள் சக்தியற்றவர்களோ வெனின், இல்லை யில்லை. காரண காரிய தோரணையுரைப்பான் உண்மையைஓதினதன்றி வேறல்ல. விவேகிகள், மணிமேகலையில் சொல்லியபடி,—

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."—

என்ற மூதுரை வழிப்பட்டு திருவள்ளுவர் கூறியதின் ;"பொருளுரை"யான லக்ஷியார்த்தத்தை யுணர்ந்து உண்மையிற்றேறி யுய்வர். மழையின் வல்லமை கூறிப், பின்னர் அதன் இன்றியமையாமையுங் கூறுகிறார்:—

(6) "விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது."

[மேகத்திற் றுளி வீழக் காண்பதல்லது, வீழாதாயின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டல் அரிது.—ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம்.—பரிமேலழகருரை.]

விசும்பிலிருந்து மழைத்துளி வீழ்ந்தாலல்லது ஒரு பசும்புல்தானும் தலையெடுக்காது. "பசும்புல்"—"ஓரறிவுயிர்." ஐம்பொறி புலனில் "ஓரறிவு" ஆகிய ஸ்பரிசஞானம் மாத்திரம் அமைந்துள்ளது. லயக்கிரமத்தில் ரூபரஸகந்தமெல்லா மொடுங்கிய விடத்தும் எஞ்சி நிற்பது ஸ்பரிசஞானமாம். இது மற்றமூன்றையுந் தன்னுளடக்கி நிற்கும். "மிஸ் ஹெலென் கெல்லர்" (Miss Helen Keller) என்னும் ஒரு அமெரிக்கமாது, பிறவிமுதற்கொண்டே கேளாச்செவி, காணாக்கண், பேசாவாய், முகராமூக்குப்படைத்த நிர்ப்பாக்கியளாயினும், அவளது



ஸ்பரிசஞானமொன்றினாலே அவளைப்பெற்றோர் அவளைத் தேற்றுவிக்க அவள் இப்பொழுது அந்த ஸ்பரிசஞானமொன்றின் அதீதமான முதிர்ச்சியாலே மற்றப்பொறிகளில்லாக் குறையை நிறைவு செய்துக்கொண்டு தத்துவ ஞானம்பெற்று க்கிரந்தங்களும் எழுதியிருக்கிறாள். மழையில்லாவிடில் பசும்புல்லும் தலையெடுக்காது, புலன் பொறிகளெல்லா மொடுங்கி சுத்தஜடமாகப் போம். கல்லொன்றே மழையின்றி யிருக்கத் தக்கதாக எல்லாம் ஜடாத்மக மாய்விடுமென்பது பொருள்.

* * *

"உயிரேனப்படுவ துள்ளிருந்தோங்குவது".

"Evolution is the Law of Life". அருளிலையாகின் அறிவுடன்கூடிய உயிருமில்லை யென்பது பொருள்.

"ஓங்காரியென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காதபச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரியாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத்துள்ளே யினிதிருந்தாளே."

—திருமந்திரம்.

மழைமுகங் காணுப்பயிர்போல் தாய்முகங் காணு அறிவுயிர் தலையெடுக்காது. தாய் என்பது இங்கு "அருட்தாய் தன்னை"யென்று கொள்க. அது "ஆதியாய் நின்றஅறிவு"தானேயாகும்.

"அறிவார் பராசக்தி யானந்த மென்பர்
அறிவார் அறிவுரு வாமவ ளென்பர்
அறிவார் கருமம் அவளிச்சை யென்பர்
அறிவார் பரனு மவளிடந் தானே."

—திருமந்திரம்.

காரியார்த்தமாயன்றி காரணத்திற்கும் (அருள்) மழைவேண்டு மென்பதைப் பின்வரும் பாட்டால் தெரிவிக்கிறார்:——

7. "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்."

["அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும், மேகந்தான் அதனைக்குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்." தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின முத்து பவளம், படாமையுமாம்.—பரிமேலழகருரை.]

நூலிலாவிடத்து மாலை சிதறுண்டு போதல் போல, மழை (அருள்) இலாவிடத்து, அதற்குக் காரணமாகிய "நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்." "அறிவார் பரனுமவளிடந்தானே" யென்றதிருமந்திரத்தினால் காரணங்கடந்த கடவுளும், பராசக்தி ரூப அருள்வடிவில்லையாயின் "தன் நீர்மை குன்றும்" என்பது பொருள் (லக்ஷியார்த்தம்). இதற்கு மேற்கோளாக ஸ்ரீமத் ஆதி சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளிச்செய்த சௌந்தரிய லஹரியில் முதல் மந்திரத்தைப் பார்க்க. அதன் மொழிபெயர்ப்பு இது:—

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தி யொடுசேரின்
எத்தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடினியங்குதற் குமரிதரிதெனு
மறையிரைக்குமால்,
நவபெரும் புவன மெவ்வகைத்தொழில் நடத்தி
யாவரும் வழுத்துதாள்
அவனியின் கணொரு தவமிலார்
பணியலாவதோ பரவலாவதோ."

முதலிரண்டடிகளாலே, "அறிவார் கருமமவளிச்சை யென்பர், அறிவார் பரனுமவளிடந் தானே" என்ற திருமந்திரோபதேசத்தினுண்மைதானே சுருதியுக்தி யனுபவங்களால் உறுதிப்பட்டது விளங்கும். இவ்வேழுபாட்டானும் உலகம் நடத்தற் கேதுவாதல் கூறப்பட்ட" தென்பர் மேலோர். நவவ்யூகரூபமான "நவபெரும்புவன மெவ்வகைத்தொழில்நடத்தி யாவரும் வழுத்துதாள்" என்ற பராசக்தியின் திருவடிமஹிமையே ஏதுவாதலால் அதைக் காரண காரிய தோரணைபற்றிக் காரியவுலகில்"வான்"—மழையாகக்கொண்டு சகஜஞானத்திருந்து கூறினார். "ஏகமேவாத்விதீயம்" என்ற கடவுளுக்கும், "அனேகம்" என்றும் "நவபெரும்புவன"

மென்றும் சொல்லற்பெற்ற நாமரூபப் பிரபஞ்
சத்திற்குழ் உபாதிபேதத்தினுல் மட்டும் பேத
மேயன்றி உண்மையிற் பேதமில்லையாலும்,
இந்த உபாதி பேதமும் காரியகாரண தோரணை
யறிந்த யோகசித்தர்களுக்கும் சகஜஞானிகளுக்
கும் சிருஷ்டி-ஸ்திதி-லயக்கிரமானுசாரம் ஒன்
றிலிருந்து தானே விரிந்து பாவிப்பின்னும் தலை
கீழாகத்தானே யொடுங்குதலாகி அந்த ஒன்றில்
தானே லயித்து நிற்பதால் "ஸர்வம் பிரஹ்ம
மயம்" என்கிற அபரோக்ஷானுபூதி அவர்களு
க்கு அப்பியாஸ முதிர்ச்சியில் யாதொரு பிரயத்
தனமுமின்றி தன்னிற்றுனுய் எல்லாம் தன்மய
மாய் விளங்குகிறது. அப்பொழுது அவர்கள்
வாய்ப்பிறப் பெல்லாம் ஸாஸ்வதி வாக்காகின்
றது. திருவள்ளுவமாலையில் நாமகள்தானே
தான் முதலில் அதாவது படைப்புக்காலத்தில்
நான்முகன் நாவிலிருந்து நான்கு வேதங்களை
யும் பாடி, பின்னர்மத்தியில் வியாசர் வாயிலி
ருந்து பாரதம் பாடி, அதன் பின் "வள்ளுவன்
வாயதென்வாக்கு" என்று சொல்லியிருக்கிருள்.
இதனுலே நான்மறை பூர்வவேதமென்றும், பார
தம் மத்திய வேதமென்றும், திருக்குறள் உத்
தாவேத மென்றும் சொல்லியதாயிற்று. வேத
மந்திரங்களை வெறும் குப்பைகூள மென்றுற்
போல, ஸ்தூலபுத்தி தடித்தவர் மழைபெய்யா
விடின் புல்லும் முளைக்காது என்ற விஷயத்
தைத் திருவள்ளுவர் கூறிவிட்டதென்ன அதி
சயமோ வென்று புன்மொழி கூறுவர். அவர்
விஷயப் பற்று அறவொழிந்த ஸஹஜஞானி
யாதலாலும், யோகசித்தாராதலாலும், அவர்
"திரையற்ற நீர்போல் சிந்தைதெளிந்தா',
ரிற் சேர்ந்தவர். "சித்தவிருத்தி நிரோதன'
சித்தியாலே அவ்வாறு சிந்தை தெளியப் பெற்
றூர்க்குப் "புரையற்றிருந்தான் புரிசடையோ
னே" யென்ற திருமந்திரப்படி, அவருக்கு எல்
லாம் பரிபூரணமாகவே அறிவிற்பட்டது. ஆகை
யால் அவரது வாய்ப்பிறப்பெல்லாம் பரிபூரண
மாகவே யர்த்தம் செய்து கொள்ளற் கேற்றன
வாம்.

வானம்வறக்குமேல் "உருவத்தாலாயபயனு †"
மிலை.

இவ்வேழுபாட்டாலும் உலகு நடத்தற்
கேதுவாதல். கூறி இனி அறம் பொருள் இன்ப
மாகிய புருஷார்த்தங்களுக்கும் வான் (மழை)
இன்றியமையா வென்பதை யெடுத்துச்சொல்கி
றூர்.

(8.) "சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு."

'வானம் வறக்குமேல்'=மழைபெய்யாதாகில்
வானோர்க்கும் இவ்வுலகில் சிறப்பொடு பூசனை
செல்லாது. நித்திய நைமத்திக தர்மங்கள்
பிறழ்படுவதால் தேவபூஜைகளும் தவறுபடும்
என்றூர். "அவனியின் கண் ஒருதவமிலார்
பணியலாவதோ" என்றதனுல் தவப்பயன் பெற்
றூரன்றி மற்றவர் பராசக்தியின் தாளை வணங்க
வல்லாராகார் என்றூர். இவர் அஃதோடு நில்லா
மல், அருண்மழை பெய்யாதாகில் பார்த்த
மான தேவிபூஜைமட்டு மல்ல, அபரார்த்தமான
தேவதாபூசனைகளும் நடவாது என்றூர். ஏனெ
னில் உலகம் இருளடைந்துபோமால் வானோர்
பூசை நடவாதோடு உலகின்கண் தானம், தவம்
இரண்டும் தங்கா; அதனுல் இல்லறம், துறவற
மிரண்டும் கெட்டுப்போ மென்பான்,—

(9.) "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்."—என்றூர்.

தானம் என்பது பாத்திரமறிந்து தீவினை
விட்டீட்டிய பொருளைக் கொடுத்தல். தவம்
என்பது லக்ஷியமறிந்து தீவினை விட்டோட்டிய
மனதை விஷயத்திற் செல்லாது தடுத்துக் கட்
டல். ஏனெனில் மழைபெய்யாதெனின் அருள்
(ஜீவகாருண்யம்), பொருள் (உலகின்பங்களை
யனுபவிப்பதற்கான பொருள்) இரண்டும் இல
வாம். "அருளிலார்க்கில்லை யவ்வுலகம், பொரு
ளிலார்க்கில்லை யிவ்வுலகம்" என்ற வாசகப்படி,

† "தருமம் பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன்."—ஔவைகுறள்.



மழையில்லையாயின் மக்கள்கள் இகபரசுகமிரண்
டுங் கெட்டழிவர் என்று சொல்லியதற்குக்கார
ணம் பின்வரும் பாட்டிற் சொல்கிறூர்.—

10. "நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு."

எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரையின்றி
உலகியல் முறையான (போக போக்கியங்கள்)
அமையாதென்பது வெளிப்படை யாதலால்,
வானையின்றி ஸநாதனமான ஒழுக்கங்கள்
அமையா.

அநித்தியமான ஸ்வர்க்காதிபோக உலகின்
பங்களுக்கும் நித்திய நிர்மலாகாரமான ஸநா
தநவொழுக்கத்துக்கும் வான் (மழை) அவசி
யம். எப்படியெனில், ஒன்றிற்கு நீர் இன்றி
யமையாததுபோல் மற்றொன்றுக்கு மழை
இன்றியமையாதது. சிற்றின்பம், பேரின்பமிர
ண்டுக்கும் காலோபாதியினுல் மட்டும் பேதமே
யன்றி ஆத்மார்த்தமான இன்பசுகத்தில் பேத
மில்லை. காரணகாரிய பேதத்தாலுண்டான பே
தத்தை மழை-நீர் என்கிற காரணகாரிய வஸ்
துக்களால் எடுத்துக்காட்டி ரூபித்தார். காரியப்
பிரபஞ்சத்தில் எப்படியோ அப்படியே கார
ணப் பிரபஞ்சத்திலும் சுகானுபோகங்களுக்கு
இன்றியமையாத காரணமொன்றுண்டு. அது
காரியத்தில் நீர்போல் காரணத்தில் மழை. விய
ஷ்டி ஜீவன் நீரின்றி யுலகியல் அறியாததுபோல,
சமஷ்டி ஜீவனுன மன்குலம் மழையின்றி ஸநா
தநமான பிரகிருதி தர்மத்தை யுணர்வதில்லை.
ஏனெனில், உலகவின்பப்பொருள்களுக்கு நீரில்
உற்பத்திலயம் இருப்பதுபோல, ஸநாதநமான
பிரகிருதி தர்மமான தத்துவப்பொருள்களுக்கு
விரிவொடுக்கமென்னும் "Law of Evolution
& Involution" ஸ்ரீசக்ரத்தில் உற்பத்திலயம்
உண்டு. மழையில்லாவிடில், அந்த ஸ்ரீசக்ராதம்
"செல்லாது தெற்றிற்று நின்று."

* * *

"இமம்மேவருண ச்ருதீஹவம்."

இவ்வாருக முன்னர் "கடவுள் வாழ்த்து"க்
கூறிப் பின்னர் "வான்சிறப்பு" என்னுந்தலைப்

பின்கீழ் கடவுளின் திருவருட் சக்தியைக் கூறு
வான் வேதத்தில் வருண சப்தத்தால் துதிக்கப்
பட்ட ஆவரணசக்தியோடு கூடிய பரமாத்
மாவை வான் சப்தார்த்த லக்ஷியமான "மழை
பொழிதற்" பெயரால் கடவுளின் ஆவரணசக்தி
யின் சிறப்பைக் கூறினுர்.

கடவுளை வாழ்த்தி அவரிருப்பிடங் கூறு
விடில் "பேரைச்சொல்லி ஊரைமறைத்த"தொக்
கும். "மலர்மிசை யேகினுன்" கடவுளிருக்கு
மூர் அண்டத்தில் வானும் பிண்டத்தில் சிற்றம்
பலமு மாதலாலும், அந்தவானின்றிழிவது
(அருள்) மழையாதலாலும் அதன் சிறப்புக்
கூறினுர்.

"மலைமகள் துணைவன் முக்கணன்
நீல மணிமிடற்றவ னெனவானோர்
திலகனே யுன்னைத் தஹரமாங் குகையுட்
தியானஞ் செய்திடு முறைசெப்பி
அலரவன் முகந்தனீச ரேடுைவயும் ஐய!
நின்விபூதியென் றுரைக்கு
மலவிருள் துமித்துச் சிவச்சுடர் விளக்க
வந்த கைவல்ய மறையே."

என்றதனுல் கடவுளைத் தியானஞ் செய்யு
முறையுமிடனுங் குறிக்கப்பட்டது.

இங்கே குறிப்பிட்டவாறு தஹரோபாசனை
செய்து கடவுளைக்கண்டு வழிபட்டு, அறவழி
யேநின்று அவரிருக்குமிடத்தையுங் காட்ட
வல்லார் முற்றத்துறந்த முனிவராதலால், வான்
சிறப்புக்குப்பின் நீத்தார்பெருமை யென்னுமதி
காரம் இயல்பினுனே நின்றது விளங்கும்.

எழுத்திலாத முதலெழுத்தோதும் "ஆதி
பகவனை" முதலாகவுடைய உலகியல் கூறு
வான் அந்த "ஆதிபகவனின்" அனுதிகாரண
மான கடவுள் வாழ்த்துக்கூறிப் பின்னர், அவ்
வெழுத்தலாத முதலெழுத்துப் பதிந்துள்ள
ஏடலாத ஏட்டின் (சிதாகாசத்தின்) தகை
மையை" வான்சிறப்பு அதிகாரத்திற்கூறியதன்
பின்னர், "ஏடலாத ஏட்டிலுள்ள எழுதாக்ஷ
ரம்வாசிக்க" வல்லாரான 'நீத்தார்பெருமையை'
க்கூறத்தொடங்குகிறூர். பிறகு அவர் சாதனை
பற்றிச்சாதித்து நின்ற "அறன்வலியுணர்த்த
லும்" இப்படியே காரணகாரிய தோரணைமுறை
யானே பொருந்தும். ஓம்தத்ஸத்.

# Easy lessons in Economics.

## Lesson V. Wages.

## குடிவாழ்க்கை.

### பாடம் V. கூலி.

கூலி என்பது நாம் செய்யும் வேலைக்குத் தாரகமாகப் பெறும்பொருளே எனலாம். மண்வெட்டியை வெட்டுவோரும், கோடாரி எடுத்து உடைப்பவரும் பெறுவதுமாத்திரமே கூலி என்று எண்ணமுடியாது. பித்தளை, செம்பு முதலிய தகட்டைவாங்கிப் பாத்திரமாகச் செய்து விற்கும் கம்மாளன் தான்விற்கும் பாத்திரத்தின் மூலமாய்க் கைம்முதலோடு கூலியையும் பெறுகிறான். துணியைவாங்கி சட்டையாகச் செய்து விற்கிறவன் தான்விற்கும் சட்டையின் மூலமாய்த்துணியின் விலையுடன் தைக்கும்கூலியையும் அடைகின்றான். பூமியை வாரம் அல்லது குத்தகைக்கு அடைத்துவிடும் சொந்தக்காரனும், சாருபடி சரியாய் நடத்தப்படுகிறதாவென்று தினமும் பூமியைச்சுற்றிப்பார்த்துவரும் வேலைக்கு தான் பெறும் தானியத்தில் சிறிதுபாகத்தை கூலியென்று மதிக்கவேண்டியதே. பட்டுநூற்காரனுக்கும் நெய்கிறசேடனுக்கும் முதலைக் கடனாகக் கொடுத்துதவும் சாவுகாரனும், முதலையவர்கள் தின்றுவிடாமல் பார்க்கவும், அவர்கள் செய்த துணிகளை வசூல் செய்யவும், தாங்களும் தங்கள் காரியஸ்தர் மூலமாய்ச்செய்யும் வேலைக்கீடாக, தங்கள்முதலுக்கு வட்டியுடன் கூலியையும் எதிர்பார்க்க வேண்டியவனாகின்றான். இராஜாங்க உத்தியோகஸ்தர்களுக்கு கிடைக்கும் சம்பளமும் வக்கீல்களுக்குக் கொடுக்கப்படும் தொகையும் கூலியென்றே கருதவேண்டும்.

பாலங்கள் கட்டவும், பாதைகள் போடவும், ஒப்பந்தங்கள் பெறும் தனவான்கள் அதிக இலாபமடைவது சகஜமானாலும், அந்த இலாபத்தில்ஒருபாகம் அவர்கள் போட்ட முதலுக்கு வட்டியாக, மற்றது அவர்கள் செய்த மேற்பார்வைக்குக் கூலியேதவிர மற்றப்படியன்று. இவ்விதமாக எத்தொழிலுக்கும் தேக சிரமமும் புத்திகூர்மையும் அவசியமாயினும் அதற்கு ஈடாகப் பெறுவது கூலியேயாகும். கூலியென்பது பெரும்பாலும் பணமொன்றையே குறிப்பது வழக்கம். நெய்கிறவன் நெய்ததுணியைக் கூலியாக அடைந்தாலும், அவன் அந்தத் துணியைக் கிரயப்படுத்தியே கூலியையெடுத்து தனக்கு அவசியமானஉணவுப் பொருள்முதலியவற்றைப் பெறுதல்வேண்டும். பெறும் கூலியாகிய பணம் பணமாகவே யிருந்தால் பிரயோஜன மற்றதாகுமாதலால் அதற்குபதிலாகவடையும் உணவுப்பொருள், ஆடை, இருப்பிடம் முதலிய ஜீவனத்திற்குரிய சாதனங்களையே கூலியென்று கருதவேண்டியிருக்கிறது. இச்சாதனங்களைப் பெறுவதற்கே ஒவ்வொரு வேலைக்காரனும் பாடுபடுகிறான்.

ஒரு குடும்பஸ்தனுக்கு ஒரு வருஷத்தில் தனது குடும்பத்திற்கு 200 ரூபாய் போதுமானதாயிருக்கலாம். மற்ற சில வருஷங்களில் அது எட்டுமாதத்திற்கும் போதாததாக ஏற்படுகிறபடியால், மனிதருக்கு அவசியமான சாதனங்களின் விலையில் ஏற்றத்தாழ்வே முக்கியகாரணமென்று கருதவேண்டியதாகின்றது. உணவுப்பொருள், ஆடை, இருப்பிடம் முதலிய அவசியமான சாதனங்களுக்கு விலை ஏறியிருப்பதற்குத் தகுந்த விதமாய் வேலைசெய்யும் கூலிக்காரனுக்கு கூலிகிடைப்பது நியாயமாகவிருக்க, கூலியையே நம்பியிருக்கப்பட்ட பலருக்கு அதுசரியாகக் கிடைக்கிறதில்லை யென்ற கூக்குரல் எங்கு மொரேவிதமாயிருக்கிறது. வாஸ்தவத்தில் இருபது வருஷத்திற்குமுன் 15 ரூபாய் மாதசம்பளத்திலிருந்த ஒருவர் தன்



குடும்பத்திலுள்ள ஐந்து நபர்களைக் காப்பாற்றிக்கொண்டு மரியாதையாய் ஜீவனஞ்செய்து சிறிது கைமுதலும் சேர்த்துவந்தார். இப்பொழுதோ அதே 15 ரூபாய் மாதச்சம்பளத்தி லுள்ள ஒருவர் மனைவியும் தானுமாகிய குடும்பத்தைக் காப்பாற்ற அசக்தனாகிக் கடன்பட்டும் இராப்பட்டினி கிடக்கிறார். இதனால் கூலிக்காரர்களுடைய கூலி உயரவில்லையென்றும் அவனுக்கு அவசியமான பொருள்களின் விலையானது ஏறியிருக்கிறதென்றும் விசிதமாகின்றது.

முதலாளி யொருவன் பிறனுக்குத் தகுந்த ஈட்டின்பேரில் கடன்கொடுத்து, முதல்போன வழியை கவனியாது வட்டியைப் பெறுகிறான். அம்முதலைக்கொண்டு, தானே ஒரு தொழிலைச் செய்வானாயின், முதலுக்குவட்டியுடன் தொழிலிலுள்ள அபாயத்திற்குத் தக்கபடி கூலியும் பெறவேண்டியவனாகின்றான். ஆதலால் முதல் நம்மிடமுண்டாயின் சிரமமின்றி கிடைக்கக்கூடிய வட்டியையும் சிரமத்திற்குத் தகுந்த இலாபமாகிய கூலியையும் பெறலாமென்பது திண்ணம். ஆனால் சிரமப்பட்டாலொழிய கூலியாகிய இலாபம் கிட்டாது.

ஒவ்வொரு முதலாளியும் தன்னிடம் வேலை செய்யும் கூலிக்காரனுக்கு அவனுடைய சக்திக்குத்தக்கபடி கூலிகொடுப்பதாக சொல்லுகிறார்களேயன்றி குறைத்துக்கொடுப்பதாக சொல்லுகிறார்களில்லை. தன் ஜீவனம் சுகமாக நடப்பதற்குத்தகுந்த அளவு கூலிபெறுகிற கூலிக்காரன் அவற்றிற்குத்தக்க வேலைசெய்கிறதில்லையென்று சொல்லமுடியாது. வேலைக்குத்தக்க கூலியை முதலாளி தன்னிடம் வேலைசெய்கிறவர்களுக்குக் கொடாவிட்டால் கூலிக்காரனுடைய மெய்வலி குறையும். மெய்வலி குன்ற வேலைத்திறமையும் குறையும். ஆகவே முதலாளி தன்னிடம் வேலைசெய்யும் கூலிக்காரனுக்கு அவன் தேகவலிமை குன்றாவண்ணம் சுகஜீவனம் செய்வதற்குத் தக்ககூலியுடன் உற்சாகமும் தென்புமுண்டாகி, சற்று கைப்பொருள் சேர்த்துவைக்கத் தகுந்த விதம் வருஷவாரி இனமாகவாவது, கூலியுடன்சற்றுசேர்த்தியாவது கொடுக்கவேண்டும்.

இங்கிலாந்து அமெரிகா முதலிய தேசங்களில் பெரும் முதல்வைத்து தொழில் செய்வோர் தங்களிடம் வேலைசெய்யும் கூலிக்காரர்களுக்குத் தகுந்த விதமாய்க் கூலிகொடுப்பதுடன் வருஷவாரி வரவு செலவு கணக்குகளைப் பார்த்து முடிவு செய்யும் பொழுது, முதலாளி தான் போட்டிருக்கிற முதலுக்கு வட்டியை மட்டு மெடுத்துக்கொண்டு, ஒவ்வொரு கூலிக்காரனையும் செவ்வையாகக்கவனித்து, கல்யாணமாகாதவனா யிருந்தால் அதற்கென்று ஒரு தொகையும், வீடு இல்லாதவனாயிருந்தால் அதற்கென்று சிறிது தொகையும், குழந்தை குட்டிகள் அதிகப்பட்டிருந்தால் அதற்கென்று சிறிது தொகையும் கொடுத்துதவுவதன்றி, அவர்கள் உல்லாசமாக விளையாடுவதற்கு வேண்டிய பந்தாடு மேடை முதலியவைகளையும் அறிவு பெருக்கத்திற்குத் தக்க புஸ்தகசாலை, பத்திரிகாசாலை முதலியவைகளையும், கூலிக்காரர்களின் பிள்ளைகளும் பெண்களும் படிக்கத்தகுந்த பாடசாலைகளையும், தங்கள் தொழிற்சாலைகளுக்குள் அமைத்தும், அவர்கள் நோயின்றி சுகமாயிருக்கும் பொருட்டு வைத்தியசாலைகளை ஏற்படுத்தி மருந்துகளை இனாமாகக்கொடுப்பித்தும், கூலிக்காரர்களின் தேகசுகமும் மனவுற்சாகமுமே தன் கைமுதலாகிய பெருந்தொகையானது போடப்பட்டிருக்கும் பத்திரமான இரும்புப் பெட்டியென்று கருதுகிறார்கள்.

இத்தேசத்திலோ, குயவன் தனக்கு வேண்டிய களிமண்ணை வேண்டிய அளவு தூக்கிவைத்து ஓட்டிக் கொண்டுவந்து மண்ணை வீட்டு வாசலிற் தள்ளிக்கொண்டும், வண்ணான் தன் மோழிநையை சுமக்க முடியாத அளவு ஆற்றிலிருந்து சுமத்திக்கொண்டு வந்து வீட்டில் இர

க்கிக்கொண்டும், நன்றி இன்றித் தனது இடது காலால் இரண்டுதை யுதைத்து, தெருவழியில் குப்பையைப் பொறுக்கித் தின்னும்படி ஓட்டி விடப்படுகிற கழுதைக்கும் ஈனமாய் வேண்டிய வரையில் வேலையை வாங்கிக்கொண்டு ஈனமிரக்கமின்றி, குறைந்த கூலியையும் சரியாய்க்கொடாமல் கூலிக்காரர்களைவருத்தி வாட்டுகிறார்கள். இப்படி நடத்தினால் கூலிக்காரர்கள் தேகமன உறுதியாகவும் உற்சாகத்துடனும் வேலைசெய்வதெப்படி? அவன் நிலையாக நின்று வேலைசெய்வதெங்ஙனம்? முதலாளி இலாப மடைவதெவ்விதம்? தொழில் செழிப்பதும் தேசம் முன்னுக்கு வருவது மெவ்வாறு? கூலிக்காரர்கள் சுகமே தொழில் விர்த்திக்கு முக்கியமென்பதைக் கருதாதவர்கள் நீடித்த காலம் முதலாளிகளாயிரார்.

T. C. வெங்கடரமணய்யர்.

## THE "MENTAL CAUSE"—

### Secret of the "Mental Science" Cure.

## "மனமாயை" என்னும் "மார்ஜாலவித்தை."

"மனமாயை மாயை யிம்மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றொன்று மில்லை,
பினைமாய்வ தில்லை பிதற்றவும் வேண்டாந்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே."

—திருமந்திரம்.

"மெய்யெலாம் மையலாள் மயக்கமறச் செப்ப
[லாமே."

—சித்தவாக்கு.

மயக்கத்தை யுண்டுபண்ணுவது மாயை. இந்த மாயையின் சக்தி இருவிதமாம். ஒன்று உள்ளதை மறைப்பது; மற்றொன்று இல்லாதை உண்டுபோல் தோற்றுவிப்பது. இந்த இரண்டும் உலக வியவஹாரங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிறது. இவ்விரண்டுமற்றால் வியவஹாரமுமற்றது. இதுபொது. இதன் சிறப்பிலக்கணமே மேற்றிசையார் 'Mental Science' என்று சொல்லும் மனதைக்கொண்டு தேஹவியாதிகளைச் சொஸ்தம் செய்யும் முறை யேற்பட்டதற்குக் காரணம். இதைக் காரியத்திலுபயோகிப்பதில் எத்தனையோவித தந்திரங்கள் உண்டு. அவற்றை யெல்லாம் வரையறுத்துரைப்பதில் பிரயோசனமில்லை. ஏனெனில், ஒன்று ஒருவருக்குப்பலித்தால் அதுவே யெல்லாருக்கும் பலிக்கும் என்றுசொல்லக்கூடாது. கூடமாயுள்ள மந்திரத்தை யுள்ளபடியுணராமல், தந்திரத்தை மாத்திரமுபயோகிப்போர், மதியிழந்து, கதியிழந்து, பிழைக்கும் வழியிழந்து பரிதபிக்க வேண்டிநேரிடும். சொற்பகாலத்துக்கு ஏதோ ஜனங்களை யேமாற்றிப் பணம் பறிக்கலாம். ஆனால்சீக்கிரத்தில் அவர்களுடைய சூது வெளியாகிவிடும்.

"மந்த்ரராஜாய வித்மஹே, மஹாமந்த்ராய தீமஹி, தன்னோமந்த்ரப் பிரசோதயாத்"—என்பது மந்திரங்களை யுபயோகிக்கும் உண்மை வழி.

[1] முதலாவது "மந்திரராஜா"வை யறிந்து கொள்வோமாக!

[2] பிறகு "மஹாமந்திரத்தை" தியானிப்போமாக!

[3] மந்த்ரராஜாவை யறிந்துக் கொண்டு மஹாமந்த்ரத்தை தியானித்து தியேயாகாரமானபின் அந்தமந்த்ர சக்தியானது நம் கருவி



கரணங்களாகிய புத்தி, மனசு, முதலானவைகளையும் சுரோத்திராதி இந்திரியங்களையும் பிரகாசிக்கச்செய்யட்டும்.

இப்படி பிரகாசிக்கச் செய்தபின் அந்த மந்த்ரசக்தியானது உபாஸகனுக்குப் பிரத்தியக்ஷமாய் நிற்கும். தற்பிரயோசனத்தை நாடாத உத்தம சீலனாயிருந்தால் அம்மந்திர சக்தி அவனுக்கு வசப்பட்டு நிற்கும். ஸ்ரீசங்கரபகவானுக்கு சாரதாதேவி வசமானதும், ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளுக்கு காயத்ரீதேவதை வசமானதும், அவர்கள் அத்தேவதைகளின் தரிசனமே பூரணதிருப்தியைக் கொடுத்ததென்று இருந்ததனால்தான். காமியதபஸிகளுக்கு இச்சித்த பலனைமட்டும் கொடுக்கும். முன்னவர்களுக்கு "மந்திரதிருஷ்டா"வென்று பெயர். காமியதபஸிகளுக்கு இச்சித்த காரிய மட்டும் பலிப்பதால் அவர்களுக்கு மந்திர வாதிகளென்று பேர். மந்திரதிருஷ்டாக்களான மஹான்கள் லோகபரிபாலனார்த்தம் மந்திர சக்தியைக் காரியத்திலுபயோகிக்க மனமுவப்பார்களாயின் அவர்களுக்கு 'மந்திரசித்தர்கள்' என்றுபெயர். இவர்கள் பிரதிபலனை நாடாது லோகோபகாரமாகவே யதையும் செய்வர். "உருவிலாகும் வித்தியெல்லாம் உலகந் தோர்க்கே"யென்பது அவர்களுடைய மேலான கொள்கை.

மந்திரத்தை உபயோகிக்கத் தந்திரசாதனம் வேண்டும். மந்த்ரமும் தந்த்ரமும் உயிருடல் போலவும், தேஹி தேஹம்போலவும் இணைபிரியாத சம்பந்தமுள்ளது. ஒன்றிலொன்று ஒடுங்கி விரிந்து தோன்றி மறையுமேயன்றி இரண்டையும் வெவ்வேறாக துவைதப்படுத்திப் பிரித்தல் ஆகாது.

"மனம் ஒருவழிப்பட்டது மந்திர"மானால், அது ஒருவழிப்படுமார்க்கம் தந்திரமாம். "மற்றொன்று மற்றொன்று மனோபவம்" என்றபடி பஹிர்முகப்பட்ட மனது ஒன்றைவிட்டொன்று பற்றித்திரியும். அப்படித்திரியும் மனம் "ஒருவழிப்படுங்கால்" அது பஹிர்முகம் விட்டுத்திரும்பி "அந்தர்முகப்பட்டு" ஏகாக்ர சித்தத்தினால் சூக்ஷ்மவடிவாகி, "பற்றொன்று பற்றொன்று பவோபவம்" என்கிறபடி அதன் சூக்ஷ்மவுணர்ச்சியால் அந்தர்லக்ஷ்யமான ஒன்றையே பற்றிநிற்கும். இப்படித் திரும்பிய மனம் லயக்கிரமப்படி ஒன்றைவிட்டொன்றில் ஒடுங்கி காரியகாரணத் தொடர்ச்சிக்கிரமேண ஆதிகாரணமான பிந்துவில் ஒடுங்கும்.

இப்படியாகக் காரியவுலகம்ஏழும் ஒன்றொன்றாக ஒழிய இவையெல்லாமொழிந்த காரியப்பாழாம் "ஒழிவில்" ஒடுங்கியமனம், அந்தச் சூனியவெளிதாண்டி காரணவுலகாம் உட்பிரபஞ்சங்கள் ஏழையும் விசாரித்துத்தள்ளி காரணப்பாழாம் "கடுவெளி" தன்னில் ஒடுங்கிச் சற்று இளைப்பாறிய பின்னர் அதுவுங்கடந்துள்ள "காரியகாரண வாசனைப்பற்று"தானும் பொருதாகி சாந்தோபசாந்தத்தைநாடி அஃதையும் விட்டொழிக்க; யோசபூமிகளேழும் உபசாந்தத்தைத் தரும் சித்வெளியாகி, "ஆதி" யென்று சொல்லும் "மனஉபாதி" நீங்கி, நித்த முத்த நிர்மலசுத்த சாந்தி" சித்திக்கும். இஃதைத் திருமூலதேவர் ஒரு திருமந்திரத்தில் வெகுஅழகாய் உபதேசித்திருக்கிறார்:—

"காரியமேழுங் காந்திமோயையுள்
காரணமேழுங் கரக்குங்கடுவெளி
காரியகாரண வாதனைப்பற்றறப்
பாரணவுமப சாந்தப்பரிசிதே."

காரியகாரணதோரணை யுணர்த்தும் வழியொன்றெதுவோ அஃதே "தந்த்ரம்" என்று சொல்லப்படும். இது மந்த்ர சப்தார்த்தம் சித்ரகுப்தமாய் (இரகஸிய சித்திரரூபமாய்) விளங்கும் வைபவத்தை விளக்குவதாம். சித்ரகுப்தமாயுள்ள இந்த சூக்ஷ்ம ரகஸியத்தை "ஏடலாத ஏட்டிலுள்ள எழுதாக்ஷரம் வாசிக்கலாம்" என்றுண்மை யோதிய மந்த்ர திருஷ்

டாக்கள் மாத்திரமே யறிவார்கள். அவர்கள் தம்மையடுத்த சற்சிஷர்பால் வைத்த கருணை மிகுதியால் அந்த குப்த வித்யையை ஸ்பஷ்டமாக விளக்கிக்காட்டும் பொருட்டு அவைகளை யந்திரங்களில் அடைத்து "யந்திர ஸ்தாபனம்" செய்வார்கள். "உடல்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே" என்ற இலக்கண சூத்திரப்படி சித்ரகுப்தமாயுள்ள மந்திரசக்திகள் அவற்றின் இயல்புக்கேற்க வமைக்கப்பட்ட "யந்திரங்கள்" தன்னில் வந்தொன்றுவதானது "பிராகிருத தர்மம்" என்னும் "இயல்பாம்."

"தந்த்ரராஜாயவித்மஹே, மஹாதந்த்ராயதீமஹி,
தன்னோதந்த்ரப்ரசோதயாத்."

தந்தரராஜாவை யறிந்து, மஹாதந்த்ரத்தை தியானம் செய்து தியேயாகாரமானபின், அந்தத் தந்த்ர ஸ்வரூபமான சித்ரகுப்தவித்யை நமது கருவிகரணங்களைப் பிரகாசிக்கச் செய்கிறது என்பது இதன் கருத்து. அப்படியே யந்த்ரபூஜைக்கும் யந்த்ரசித்திக்கும் அமையும்.

இப்படியாகத் தந்த்ர மந்த்ர யந்த்ரங்களெல்லாம் "ஆதியாய்நின்ற அறிவு" ஒன்றின் "ஆபாஸமாக" (பிரதிபிம்பரூபமாய்) உற்பத்தியாக, அந்த "ஆதி"யிலிருந்துண்டான முதல் வியாதி "பிறப்பு" என்றுசொல்லும் தீராப் பிணியாம்.

"பரமாய சக்தியுட் பஞ்சமா பூதந்
தாமாறிற் றோன்றும் பிறப்பு."

என்னும் குறளடியால் ஔவையார் ஆதியிலிருந்துண்டாகும் முதல் வியாதியைச் சொன்னார்.

"ஓசைபரிச முருவஞ் சுவை நாற்றம்
ஆசை படுத்து மளறு."

ஆதியாய் நின்ற அறிவிலிருந்து இச்சாமாத்திரத்தாலுண்டான "பரமாய சக்தியிலிருந்து குணபேதத்தால் 'பஞ்சமாபூத' ஸ்வரூப பஞ்சகிருத்தியங்களுண்டாக, அதனால்பிறப்பும், அந்தப் பிறப்பிலிருந்து கர்த்தா போக்தாவென்கிற எண்ணத்துக் கிருப்பிடமாகிற "நான்" என்னும் அஹம்பாவ "ஆசை" யுண்டாக, அந்த "ஆசை"யானது பிறப்பென்னும் "ஆவரணம் மூடிய அறிவை" சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்கிற பஞ்சதன்மாத்ராவிஷயமாம் "சேற்றில்" அழுத்திவிடுகிறது. இந்த அவஸரத்திலே உருவமேற்பட்டு உபாதியுமேற்பட்டுப் போய் விடுவதால், "சிதாபாஸனை" ஜீவன், புருஷார்த்தங்களைத் தேடியலைகிறான்.

"தருமம் பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன்."

இனி பஞ்சீகரண விதியால் "சிவமூர்த்தியைந்தும்" "திகழ்சத்தியாறும்" "தாதுக்களேழும்" "அஷ்ட மூர்த்தங்களும்" உண்டாகி ஸம்ஸாரவிருக்ஷம் முளைத்துக்கிளைத்து பலத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து "விந்து" வெனும் வித்து விட்டு நிற்கிறது.

"இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது வித்து."

விந்துவாகிய இந்த வித்திலிருந்து பின்னும் பிறப்பாகிய விருக்ஷம் முளைத்துக் கிளைத்து வளர்ந்து "உடம்பாய வொன்று" ஆகிறது.

இப்படி "ஆதியாய் நின்ற அறிவு"தனில் வசிக்காநின்ற பரமாய சத்தியுட் பிறப்புத் தோன்ற, அது "உடம்பாய வொன்றாகி" அந்த உடம்பின் தத்துவங்களெல்லாம் சேர்ந்து "விந்து" வாகி, அதுவே பின்னும் பிறப்புக்கு வித்தாயிருக்கிறது.

"உடம்பாரழிந்தால் உயிராரழிவார்" என்னும் திருமந்திரப்படி, உடம்பழிந்தால் உயிரழியும். ஆனால் உடம்பழியின் அது விந்துவாதலாலும், விந்துவென்பது மரத்தின் வித்துப்போல "உடம்பாய வொன்றினவை யெல்லா



மானதா" யிருப்பதாலும், விந்துநாசத்தாலன்றி உடம்பு அழியாது. விந்துவுக்கு நாதத்தில் ஒடுக்க மானதால், "அழியாதிவ்வுடலங்காண் நாதவிந்து சேர்ந்தால்" என்ற மூதுரைப்படி, அது நித்திய தத்துவமாகிறது. "தனையாய்ந்திருப்பது தத்துவந்தானே" என்ற திருமந்திரப்படி அந்த அழியாத தன்னை யாய்திருப்பது "தத்துவம்"—தத்பத, துவம்பத லக்ஷியார்த்தங்களாகிய பிரஹ்மாத்மஐக்கியத்தைக்குறிக்குமோர் நித்திய வஸ்துவாம்.

"தத்துவ மெங்குண்டு தத்துவ னங்குண்டு" என்ற திருமந்திரோபதேசத்தால், ப்ரஹ்மாத்ம ஐக்கிய ஸ்வரூபமாகிய ஸ்ரீசக்ரம் என்னும் காரணதேஹத்தில் தத்துவகாரணனை தத்துவனை [கடவுளைக்] காணலாம். தத்துவங்களெல்லாம் கடந்தவனுதலால் அவனுக்குக் கடவுள் என்னும் திருநாமமமைந்தது.

"அறிவார் பராசக்தி யானந்தமென்பர்
அறிவார் அறிவுரு வாமவளென்பர்
அறிவார் கரும மவளிச்சை யென்பர்
அறிவார் பரனு மவளிடந்தானே".

என்னும் திருமந்திரோபதேசத்தால், பிரஹ்மாத்ம ஐக்கிய ஸ்வரூபமான "ஆனந்தமே பராசக்தி" யென்று ஞானமூர்த்திகளான பெரியோர் சொல்வர். "ஆதியாய் நின்ற அறிவு" என்ற ஔவையார் வாக்கியத்தால் அவள் "அறிவுருவா" யமர்ந்துள்ளாளென்றதும் பிரசித்தம். பிறப்பு முதலான ஸம்ஸார விருக்ஷம் அவளுடைய சக்தியினுலேயே யுண்டாவதால் "கருமமவளிச்சை" யென்றுர். தத்துவமாயுள்ள அவளுக்குள்ளே தத்துவனை கடவுளிருப்பதால் "பரனுமவளிடந்தானே" என்றுர். காரியவாதிகளான நவீன நாகரிகப்புஞ்சங்கள் இவையெல்லாம் தெரிந்து என்னத்திற்குப் பிரயோசனமென்பர். யாவத் பிரயோசனமும் இதனாலேயேயென்று இதிஹாஸபூர்வமாய்க் காட்டுவோம்.

கைலையங்கிரியில் ஸ்ரீசங்கரரோடு அர்த்தநாரீசுவரியாயமைந் திருப்பவர் "பரமாயசக்தி" யென்றுசொல்லிய பராசக்தி. அந்தப்பராசக்தி தானே "உடம்பாயவொன்று" ஆனால் அவளுக்கு "சங்கரபார்வதி" யென்றுபேர். அப்படியென்றால் "நன்மையையே செய்பவளான பர்வதராஜபுத்ரி" யென்பது வாச்சியார்த்தமாம்.

இங்கே லக்ஷியார்த்தம் கூறில்,—

"நன்மை" யென்பதற்கு லக்ஷியார்த்தம் "பரசிவம்". அப்பரசிவத்தைக் காட்டிக்கொடுப்பதாம் தொழிலையே "செய்பவள்" என்னும் வாச்சியார்த்தத்திற்கு லக்ஷியார்த்தம் பராசக்தி. இது காரணதீதமான கலாதீதத்தில் பொருந்தும். ஸ்தூலபாவத்தில், அந்த "நன்மையே செய்பவள்" 'பர்வதராஜன்" என்னும் "தாணு"வில் சிரேஷ்டமான ஒன்றினின்றும், "புத்ரி"—"பிறப்பு மார்க்கமாய்த் தோன்றினவள், அதாவது "உடம்பு".

ஆகையால் "சங்கரபார்வதி" யென்னும் சப்தம் மாயாஸஹிதமார்ஜாலதேஹமாம் மனதோடுகூடியஉடம்பில் வசிப்பவளான "தேஹி' யைக் குறிக்கும்.

இந்த சங்கரபார்வதிக்கு ஒருநாள் ஒருயுக்தி தோன்றியது. பகவான் க்ஷீராப்தியைக்கடைந்தகாலத்தில்வாஸுகி கக்கிய ஆலகாலவிஷத்தை உலகரக்ஷணார்த்தம் கையில்திரட்டி ஆசமநம் பண்ணி, விஷதாபத்தால் சோர்ந்தவர்போல் திருவுருச்சாய்ந்து மூர்ச்சையாக, கூடவிருந்த உமையம்மையையும் சகலமானதேவர்களையும் ஏகாதசியன்று அல்லும்பகலும் ஆசமநீயதீர்த்தமுமருந்த வாய்க்காமல் செய்து, பகவான் மூர்ச்சைதெளியுமாறு தேவி சிசுருஷைசெய்து கொண்டு இரவிற்கண்கொட்டாது விழித்திருந்தனாதலால், அந்த ஞாபகம் மனதிலுதிக்க இந்தக்கலிகாலத்தில், பகவானையப்படி ஏய்க்க வேண்டுமென்று நினைத்து நரவுருத் தரித்து

நாரியாய்த்தோன்றி, பகவான் அந்தர்யாமியாய் வந்தவதரிக்கும் தருணம்பார்த்திருந்து கன்னி வடிவாய் அவரைக் கடிமணஞ்செய்து, தன் மாயையைக்கொண்டு மார்ஜாலவித்யையெல்லாம் காட்டிவந்தாள்.

புருஷனையடைந்து ஸ்ரீபுமான்களாக வாழும் பொழுதும் தன் மார்ஜால வித்யையைக் காட்டி, மதனலீலையிலும் மாயபோகமேயளித்துவந்தாள். அந்தர்யாமியான சிவபெருமான் "மாயைவென்றவள்" போகம் துய்த்தும் துய்க்காது யோகமியற்றிப், "பந்தம்பறி" யுற்சவ லீலையினுண்மையையுணர்ந்து, தன்னந்தனியனாய்த் தற்பரமேயானவனாய்ப் தர்மஸம்வர்த்தனியைக்குறித்துத் தபஸிருந்து அவளுடைய தரிசனவிசேஷத்தால், அவளைக்கண்ட அந்த அவசரத்தில் தானே திருமணம் புரிந்து சதிபதிதர்மம் சிதறாது இல்லறம் நடத்திவருகையில், சுந்தரமூர்த்தியாம் திருவருட்குழவியின் மத்தியஸ்த விசேஷத்தால் மனக்கிலேசந்தீர்ந்த பார்வதி, பதியை யடைந்தும் சதியோசனைவிட்டிலளாகி, கரபாத்திரதாரியாம் புருஷனுக்குத் தான் என்னவஞ்சனைசெய்தும் அதுபலிக்காது அவன் நித்தியதிருப்தனா யிருப்பதைக்கண்டு பொறாதவளாகித் தன்னைப்பெற்ற ஆத்தாளுக்கு மூத்தாளோடுகலந்து ஒரு சூழ்வினை செய்யலானாள்.

கலியுகத்தில் உண்டிசுருங்கில் உடல்சுருங்குமென்பதை யுணர்ந்து, உண்டியைச்சுருக்கித் தன்னுடலையுலர்த்தி உதிராக்கினியைக்கொண்டு ஜாடராக்னியை மூட்டி ஜ்வரத்தீயை வளர்த்தாள். வியாதிகளுக்கெல்லாம் வித்தான ஜ்வரமெனும் அந்த யாகத்தீயில்,

"தொக்குதிரத் தோடேன் மூளைநிண
மென்பு சுக்கிலந் தாதுக ளேழு".

என்று ஔவையார் கூறிய சப்ததாதுக்களையும் யஜனஞ் செய்வான் விகற்பவாதனையால் தனக்கியல்பாயமைந்ததோர் சதிதர்மத்தைப் "பதி வஞ்சனைக்கென்றே" பாரிலுபயோகித்தாள். "தொக்குதிரத் தோடேன் மூளைநிண மென்பு" என்ற தொடக்கத்தில் தோலுமென்புந்தவிரமற்றைத்தாதுக்களையெல்லாம் "ஆகாதயஜ்ஞமாம்" அந்த அக்னிகுண்டத்தில் தாக்ஷாயணியைப் போலவே, அவள் எண்ணத்துக்கு மாறாகத் தியாகஞ்செய்து விட்டாள்.

புருஷஸ்வரூபமான சங்கரனும் பார்த்தார்:

"பழிபாவத்துக்கஞ்சாப் பாவியென்றுன்னியவ
ளிழிபாவத்துக்கேற்ற வழியொன்றுதேடலுற்றார்:
கழிபெருங்கண்ணோட்டத் தாலுருகி யமிழ்தேயாகிப்
பழியஞ்சாப் பெண்ணுக் குற்றதோர் மருந்தானார்.

"மருந்தும் பலித்தது மாயமும் வெளியாச்சு
அருந்தும் சுவையது கைப்பாலே குணமாச்சு
அருந்தவமில்லா விருந்துண்ணும் பூச்சிகள்
இருந்துண்ண மாட்டாமல் மாய்ந்துவிழுந்தன."

"விழுந்தன பூச்சிகள் விஷமங்கள் வெளியாக
அழுந்தின ஜ்வரதாபம் அடியற்று விழலாச்சு
உழுந்துழுந்தாகவே யுள்மலம் வெளியாச்சு
எழுந்நடக்கவே ரஸவாதந்தானாச்சு."

"பராசத்தி" பார்வதியாம் நூசரீரமானாற்போல் 'உள்மல நீலமும்' (ஸ்தூலதத்துவங்களொடுங்கும் வாயுவாம் நீலவர்ண உள்மலம்) உழுந்துபோல் கறுப்பாச்சு.

ஆதி வியாதிகளெல்லாம் பிறப்பிறப்பென்னுமோர் துவந்துவத்தில் அடங்கும். "துவந்துவ ஜ்வரம்" வந்ததானால் கெந்தகக் கசப்பதில்போகாதென்றார்! பிறப்பிறப்பாம் ஆதிவியாதிக்கு உப்பின் கைப்பதோ மருந்தாகும்! "கைப்பல்லோ உப்பிலிருந் துன்னைக் கொல்வது!" என்றார் ஞானவெட்டிபாடிய வள்ளுவசித்தரும். ஆகையால் உப்பிலுள்ள [தேஹத்திலுள்ள] கைப்பைப்போக்கக் கைப்பையே உபயோகிக்கவேண்டும்.

"கைப்பாலே கைப்பென்னும் மாய்ப்புப்போனால்
கைப்பெல்லாம் மாய்ப்பில்லா மதுரமாகும்."



என்பது சித்தர் அனுபோக முறையாதலால், உப்பிலுள்ள கைப்புக்கொப்பான தேஹத்திலுள்ள அசுத்தமனமாம் கைப்புப்போக, அசுத்தரூபத்தால் கைப்புமயமான "ஆத்மதத்துவத்தைக்"கொண்டு அசுத்த மனங்காரணமாகவுண்டாகும் "கைப்பென்னும மாய்ப்பு"ப்போனால், பின்னர் ஜநநபரம்பரையாகவரும் மரணரூபக் "கைப்பேல்லாம்" அசுத்தமனத்தோடு அசுத்தவாசனையு மற்றுப்போன காரணத்தால், "மாய்ப்பில்லா மதுரமாகும்." அப்படியென்றால் இறவாப்பிறவியாம் ஜீவன்முக்தி பதத்தை யளிக்கும். திருமூலதேவரும்,

"மனமாயைமாயை யிம்மாயை மயக்க
மனமாயைதான் மாயு மற்றொன்று மில்லை"

யென்றோதி யிருக்கிறாரல்லவா? மனமாயை மாய்ந்தால், பிறகு மாயவேண்டிய தொன்றுமில்லையாதலால் "பிணைமாய்வதில்லை" யென்றும், நித்தமுத்த நிர்மலசுத்தமான ஆத்மதரிசனங் கிடைத்தபின் "பிறப்பிறப் பென்னும் பேச்சு "பிதற்றலே" யாகுமாதலால் "பிதற்றவும் வேண்டா"மென்றும் சொன்னார். காரண ஸ்வரூபியான தன்னையாய்ந்து ஓய்ந்து "சும்மாவிருக்கச் சுகம் சுகமென்றோதும் மறையெல்லாம்" ஆதலால் உபசாந்திபெற்றுச் சும்மா "இருப்பது" தத்துவந்தானே"—"பிரஹ்மாத்மைக்கிய ஸ்வரூபத்தை" விளக்கும், "சிவசக்தியைக்கிய ஸ்வரூபிணி"யாம் "ஸ்ரீசக்ரராஜா" அதுவே யென்று ஓதினார். இந்த உண்மையை லக்ஷிய லக்ஷணவிதியை யனுசரித்துக் காரண காரிய முறையினானே தாபத்திரியங்களும் நிறைந்த ஸம்ஸாரஜ்வரம் முதலாக தேஹத்திரியங்களைவாதிக்கும் ஆதி—வியாதி சம்பந்தமான ஜ்வரமீறாக எல்லாவற்றிற்கும் பிரயோகமுறையாலே உபயோகிக்கலாம்.

இதற்கு மந்திர தந்திர யந்திரஸ்வரூப ஞானமும், தாரணைத் தியான சமாதி பொருந்திய யோக-ஸம்யம சித்தியும் இன்றியமையாச் சாதனங்களாம். இவை யிருக்கின்' பிரயோகமுறை தானே தோன்றும். சாதகர்களுக் குதவியாகப் பெரியோர் மஹாமந்திரங்களுக்கு தியானலக்ஷணமும் பிரயோக விதியும் யந்திர நிர்மாணமும் அதிசூக்ஷ்மமாக அவர்களது காருண்ய விசேஷத்தால் உணர்ந்து குறித்து வைத்திருக்கிறார்கள். இதை காசுபறிக்க உபயோகிக்கிறவர்கள், காசுவாங்குவதனாலல்ல, காசாசைக் கிடங்கொடுக்கும் அசுத்தமனம் உள்ளே யிருப்பதின் காரணமாக அனேக ஆபத்து விபத்துக்களுக்காளாகிறார்கள். இவர்கள் தண்ணீரிலுள்ள முதலையைக் கண்டஞ்சியோடி நிலத்திலுள்ள கரடியைக் கட்டிக் கொண்டவர்களுக்கு சமானமாவார்களென்று எம்பெருமான் திருமூலநாயனார் திருமந்திர மோதியிருக்கிறார்.

## Stilt-Walking in Excelsis.

## "பொய்க்கால் நடைமலிப் போலியர் உயர்வு."

"You are down and therefore we kick you"—
the Social Stilt-Walker.

"பொய்க்கால்" என்றால் என்ன? சிறுவர்கள் தாம் சிறுவுருக்கொண்டும் பெரியவர்களாகத் தோற்றவேண்டுமென்று மூங்கில் மரம் இவைகளால் போலிக்கால் செய்து அதுமேலேறிக்கொண்டு தத்தித்தத்தி நடப்பதுண்டு. அச்சிறுவர்கள் தங்களை உயர்த்திக் கொள்ள உபயோகிக்கும் மரம் அல்லது மூங்கிலாலாகிய போலிக்காலுக்கு "பொய்க்கால்" என்று பெயர்.

பொய்க்காலூர்ந்து போலிநடை நடந்து தன்னை உயர்த்திக்காட்டிக் கொள்ளும் சிறுவர்களைப்போல், பொய்மலியுலகில் பொய்யிரவல் வாங்கிப் பொய்மதம்பேசிப் [illegible] ணையால் தன்னையுயர்த்திக் கொள்ளும் தன்மை வாய்ந்த போலிமனிதர்கள் எத்தனையோ பேர்.



[illegible] 600

களிருக்கிறார்கள். என்தாய் உண்மையுபதேசம் செய்யுங்கால், "உலகமே பொய்யாக (நித்தியமில்லாமல் மர்றிக்கொண்டிருக்க,) அதிலும், இரவல் பொய் வாங்கிப்புளுகும் போக்கிலிப் புளுகர் எத்தனையோபேர்" என்று சொல்லி தம் முன்வரும் போலிமனிதர்களது பொய்க்காலைப் பிடித்திழுத்து அவர்கள் 'உயர்-பாவங்களை' யெல்லாம் அக்கக்காக வெடுத்துப் பிரித்துக் காட்டிப் புல்லியர் சேர்க்கையைக் பொய்யெனத்தள்ளும் வழியுரைப்பாள். அப்பொழுது அவள் சொல்லியதெல்லாம் ஏதோ புதுமையாக விருந்தது. இப்பொழுது மனிதர்களுடைய குணமும் மணமும் காணக் கண் படைத்த காரணத்தால் அவள் சொன்னது அவ்வளவும் உண்மையாயிருக்கக்கண்டு அதிசயிக்கிறோம்.

பொய்மதம்பேசிப் 'பெரியதனம்' பாராட்டும் போலியர் பலரையும் வர்ணித்துரைக்க வாயிடங்கொடாது. ஆயினும் சிறிது சொல்லாமற் சொல்லிச் சுட்டிக்காட்டுவோம். "பெரியதனம்" குணத்தாற் பெரியவர் தன்மையைக் குறிக்கும். அவரே மனத்தாற் பெரியவருமாவர். ஆனால் இங்கே பெரியதனம் பாராட்டும் போலியர் நடிப்பைக்குறிக்க அப்பதம் உபயோகிக்கப்படும் பொழுது, அவர்கள் "பொய் பாவனை" அல்லது "வீண் பாவனை" யென்கிற "போய்க்காலேறிப்" போலி நடை நடக்கும் நடிப்பைக் குறிப்பதாகும். இப்படியாகவுள்ள 'பெரியதனக்காரர்' பலவகையாவார். அவர்களிற் சில்லரையான வகுப்பார் சிலரைக்கீழே குறித்துக் காட்டுவோம்:—

(1) "ஊரிற்பெரியவர்"—எனநடிக்க விரும்புவோர், ஊருக் குழைக்கிறதாக பாவனைகாட்டித் தன்னயமொன்றே கண்ணாயிருந்து தருமாதருமமிரண்டும் விட்டு, ஊரைக்கெடுக்கு முபாயமுணர்ந்தே தம் பேரைக்கொடுத்துப் பெருவாழ் வெய்துவர். இவர்களுடைய எண்ணம் பலித்தக்கால், "அற்பனுக்குப் பவுஷ் வந்த" மாதிரி இவர்கள் தம் பெருமையைச் சிறியார் பெரியார் எல்லாரிடத்தும் சிறுமைப்படக்காட்டிப் பெருமைப்படுவர். இந்த வீண்பெருமை பாராட்டுவதானது அற்பன் "அர்த்தராத்திரியில் குடைபிடி"ப்பதிலும் வேடிக்கையாகவிருக்கும். "ஊரெல்லாம் 'வாழக் கேடொன்றுமில்லை" யென்கிற பழமொழி இவர்களுக்குத் தலைகீழாகப்பாடம். ஊரெலாங்கெடினும் தான்வாழவே பார்ப்பர். "பாழும் ஊருக்கு நரி ராஜா" என்கிற மாதிரி இவர்கள் தருமாதருமங்களை யெல்லாம் பிரஜைகள் மனதில் பாழ்படச்செய்துவிட்டு, அப்படிப்பாழ்பட்ட மனத்தர் தம் புகழைத்தேடிப் பிரலாபம் சம்பாதித்துக்கொண்டு மகிழ்வர். இதுவு மொருவாழ்வு! இப்பொய் வாழ்வு எத்தனைகாலம்நிலைக்குமென்று ஓராது, உணராது, தேறு மனத்தராய்த் தயங்கித்திரிவார்கள். ஆயினும் ஊருக்குப் பெரியவன் நானிருக்க யாரடா வாயைத்திறக்கிறவனென்று சண்டைக்குப் புறப்படுவர்.

(2) "பேரிற்பெரியவர்".—ஊரிற்பெரிய போலியருக்குப்பின் "பேரிற்பெரிய" போலியர் நடை மிக நகைக்கத்தக்கதாம். "பசுவைக்கொன்று செருப்புதானம் செய்த" புண்ணியவானைப் போல, இவர் தருமசொத்தைக் கொள்ளையிட்டு தண்ணீர்ப்பந்தல் தருமம் செய்வர். பேரும் புகழும் கிடைத்தால் போதும். நல்லது பொல்லாது என்கிற வியவஸ்தை கிடையாது. ஊரெலாம் தன்பேர் கல்லிலாயினும் கட்டடத்தாயினும், பத்திரிகையிலானும் வேறு எத்தகை வழியிலாயினும் விளங்கினாற் போதும். புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் இவர்கள் வித்தியாசமறியார். எப்படியாவது தன்பேர் ஊரார் வாயில் பட்டு அடிபட்டால்போதும்; பேரைக் கொண்டே யிவர் பிரசித்தி யடைவர். பட்டம் வாங்கப் படாதபாடெல்லாம் படுவர். நல்லதும் பொல்லாதும் நனிமிகச்சொல்லி எல்லாவற்றினும் தம் பேரையே பெரிதாய் வெளியிடப் பார்



ப்பர். நன்மையேசெய்ய ஆற்றலரேனும் தீமையே புரிந்து தம் பேரை வளர்ப்பர். உண்மைக் கீர்த்தியை உணராப் போலியர் அண்மைப் பேரை அருமையாவளர்ப்பர். தொட்டிவிட்ட பாட்டி யிட்டதோர் பேரை யொட்டியொட்டிப் பல பட்டங்களைச் சேர்த்து வட்டிக்கிட்ட பணம் போல் பேரை வளர்ப்பர். பேர்ற்பெரிய போலியராம் பேதைகள் ஊரைக் கெடுத்தேனும் பேரை வளர்ப்பர்.

(3) "பணத்தாற் பெரியர்."—மூன்றாவதான பெரியதனக்காரர் எவரெனக் கேட்கின், "பணத்தாற் பெரியவர்." "பணத்தாற்பெரியவர் பிணத்திலுங் கடையர்." எப்படியெனிலோ இயம்பக் கேண்மின். ஊர், பேர், இரண்டிலும் பெரியனும் போலியன் இகத்துள கீர்த்தி யொன்றையே விற்பன். பரம் என்னும் பதத்தைப் பகுத்துணர் அறிவிலன். பணமே பெரிதாய்க் கொண்டதோர் பொய்பனே அண்டபிண்ட மிரண்டையுமொன்றாய் விற்றேவிடுவன். பணத்தாற் பெரியவன் பணமே சேர்ப்பன்; தன்னை விற்றாயினும் பணமே சேர்ப்பன். பணம் சேர்ப்பதுவே குணமெனக்கொள்வன்; (அவனுக்கு) பணம் குணமிரண்டும் பேதமில் பொருள்களாம். பணமில்லாக் குணமவற்குப் பிணத்திலுங் கேடாம். பணம் பணமென்றவன் பணத்தைச் சேர்த்துப் பணக்குவியல்தனைப் பெருக்கவே பார்ப்பன். தான தருமங்கள் செய்பவன் போலவன் போட்ட பணத்தை மீட்டும் பன்மடங்கதிகமா யெடுக்கும் வகையையே பார்ப்பன். அறம்பொருளின்பமூன்றுமவற்குப் பணமொன்றினிலே பதிந்து கிடக்கும். பிணமதுதானும் அதன் குணத்தைக் காட்டிப் பல்லார் அறிந்து அதையொறுக்கச் செய்யும்; பணவாசைகொண்ட போலிமனிதன் நடைப்பிணமாகியும் அவன் குணத்தைக் காட்டியொறுக்கச்செய்யான். மாயாவேஷங்கள் பலவுங் கற்றுப் பேய்போல் பணத்தில் ஆசையைவைத்து, இகபரமிரண்டையும் விற்றதைச் சேர்ப்பன், பணத்தாற்பெரியனும் போலிமனிதன் குணக்கேட்டிற்கெலா மிருப்பிடமாவன். கடவுளையுங் கூடுமானால் அவன் விலைக்கு வாங்கி வட்டிமேற்போட்டு வியாபாரஞ் செய்வன். பாணாசுரனிலும் மிகக் கோணாசுரன் அவன்! கோவணமொன்றேயன்றிக் குறிக்குமோர் பண்டஞ்சேரார், கரபாத்திரந்தானேயாகிக் கடவுளைத்துதிக்குஞ்சித்தர், ருணமாத்திரமேயாகிக் குணமிலாப்பணப்பேயாகும் புல்லியர் தம்பால் பிச்சையேற்கவும் பொறுக்கார் அம்மா! பரம்பொருளொன்றே பொருள் (லக்ஷியம்) அன்றி மற்றவா யுள்ள பார்முதற்பூதமா மெல்லாவற்றையும் பொருளாவெண்ணாது, கரபாத்திரமாய்த் தாமுண்பதும் அப்பொருள் பற்றியேயன்றி வேறு நிமித்தமில்லாத வீராதிவீரரும் தீராதிதீரருமானசித்தர்களும் பணக்காரனிடம் போய் பல்லிளித்து நிற்பதைப் பொறுக்காமல் தம் இஷ்டதேவதையை நொந்து கொண்டு பாடியிருக்கிறார்களென்றால், மற்றவர்களுக்குக் கேட்பானேன்!

"புல்லரிடத்திற்போய் பொருள்தனக்குக்கையேந்தி
பல்லைமிகக்காட்டிப் பறக்க விழிக்கிறேன்'டி!
பல்லைமிகக்காட்டாமல் பறக்கவிழிக்காமல்
புல்ல[illegible]ம் போகாமல் என்கண்ணம்மா!
பொருளெனக்குத் தாராயோ!"

என்பது சித்தர்வாய்ப் பிறந்ததோர் பாடல்.

அகண்ட பரிபூரணமே லக்ஷியமாய்க் கொண்ட மஹாசித்தரும் கரபாத்திரமேற்று அவ்வகண்ட லக்ஷியத்தையே வளர்ப்பர். புல்லரிடமேற்ற பிச்சைதானும் புன்மைநிறைந்ததால், அகண்டலக்ஷியத்தை வளர்க்கக் கையேந்திய உணவுபொருள் தானும் கொடுப்பான் சிந்தையின் கொடுமையால் கண்டதுண்டமாவது கண்டு உண்டதோர் உணவுபொருள்தானும் அகண்டலக்ஷியத்தை வளர்க்காமல், கண்டதுண்டமான பேதபாவனையாலீந்த பொருளாதலால் அந்தபேதபாவனையையே யுண்டு பண்ணுவதால் "ஐயோ! இதென்ன கூத்து!" என்று திரிபுரமுந் தஹனமாகச் சிரித்து (பல்லைமிகக் காட்டி), அந்தபேத

பாவனையெல்லாம் அற்றுப்போக—"பறக்க மிக விழிக்கிறேன்'டி' யென்று தம் இஷ்டதேவதையாம் சித்சக்தியிடம் முறையிடுகிறார்! பணத்தாற் பெரிய பாதகன் (Mammonite)முன்னே, குணத்தாற் பெரிய சித்தரும் குன்றி நிற்பாரென்றால், சாதகபுருஷர்கள் படும் பாட்டுக்குக் கேட்பானேன்! ஆகையால் சின்மயானந்த ஸ்வரூபியாகிய "என்கண்ணம்மா!" "பல்லை மிகக் காட்டாமல் பறக்க விழிக்காமல்"—கரபாத்திர பிச்சையெடுப்பதிலுமுள்ள இந்த உபாதிதானும் நீங்கப்பெற்று, அகண்டலக்ஷிய சாதனமுங்கடந்து சென்ற சகஜசமாதியினால் "புல்லரிடம் போகாமல்" அகண்டலக்ஷியார்த்தமான "பொருளெனக்குத்தாராயோ!" என்று பிரலாபித்துக் கேட்கலானார். அவ்விண்ணப்பத்தி லீடுபட்டு வீடுபெறப் பறக்கு மிவ்வேழைக்கு மேலொன்றும் தோன்றவில்லை. தோன்றாமையால், தோன்றாமை தோன்ற எழுதவும் கூடவில்லை.

ஓம்தத்ஸத்.

## Sivayoga-Deepika.

## Chapter III.

### (Second Part, Ashtangayoga Siddhi.)

ஓம் ஸ்ரீ சாவித்திரியை நமஃ

## சிவயோக தீபிகையில்

## அஷ்டாங்க பூஜா அந்தரங்க சதுரங்க விதானமென்ற

### மூன்றாவது படலம்.

### (இரண்டாம் பாகம், அஷ்டாங்கயோக சித்தி.)

### தியானம்.

34. தேகமாகிய பாத்திரத்தில் விளங்கிக்கொண்டிருக்கும் ஞானமென்கிற அக்னியிலே பூத குணங்களென்ற தசாங்கத்தை மனோதாரணையினால் தூபமாகப்போடு. இது தியான லக்ஷணம்.

35. தியான மொன்றிலேயே சாதகனுடைய மனம் அதிக ஸ்திரமானால் அதுவே தாரணையென்று சிவயோகிகள் சொல்வர். அது முன்னரே கிரமமாகச் சொல்லப்பட்ட போதிலும் இங்கு வேறு மாதிரியாக பூமி முதலியவைகளினிடம் தாரணைக் கிரமமாக வெவ்வேறாய்ச் சொல்வோம்.

36. அத்தாரணை யானது, தாரணீ (பூமி சம்பந்தமானது) எனறும், வாருணீ (ஜல சம்பந்தமானது) என்றும், ஆக்நேயீ (அக்னி சம்பந்தமானது) என்றும், மாருதீ (வாயு சம்பந்தமானது) என்றும், நபோமயீ (ஆகாச சம்பந்தமானது) என்றும் (இவ்வாறு) ஐந்து விதமாக வித்வான்களாற் சொல்லப்படும்.

37. ஆகையால் எப்போதும் அப்பியாச சூரர்களா யிருக்கிறவர்களுக்கு சர்வசித்திகளையுங் கொடுக்கிறபடியினால் யோகீசுவரர்களால் இவை தாரணை யெனப்படும்.

38. அதில் தாரணீயென்கிற தாரணைக்கு பாதம் முதல் முழங்கால்வரையுள்ளது பூசக்கிர ஸ்தானம் (பிருதிவீ ஸ்தானம்); அதில் லகார பீஜத்துடன் வாயுவை நிறுத்தி நாலு கைகளும் நாலு முகங்களுமுடைய பிரம்மாவை தாரணை பண்ணினால் பூமிஜய முண்டாகும்.

39. இரண்டாவதான வாருணீ யென்கிற தாரணைக்கு முழங்கால் முதற்கொண்டு நாபி பரியந்தம் ஜலசக்கிர ஸ்தானம். அதிலே வகார பீஜத்துடனே வாயுவை நிறுத்தி பீதாம்பரத்தை தரித்தவராயும், பிரசன்னமாகிய முகத்தை யுடையவராயும், சுத்தஸ்படிகவர்ணமுடையவராயும், சங்க சக்கரங்களைத் தரித்தவராயும், மன்மதன் பிதாவுமான ஸ்ரீ மகாவிஷ்ணுவை நமஸ்கரித்து தியானம் பண்ணினால் சீக்கிரமாக ஜலத்தின் ஜயமுண்டாகும்.

40. மூன்றாவதான ஆக்நேயீ என்கிற தாரணைக்கு நாபி முதற்கொண்டு கண்ட பரியந்தம்



அக்னி சக்ரஸ்தானம். அதிலே ரகார பீஜத்துடன் வாயுவை நிறுத்தி மூன்று கண்கள், பிரசன்ன வதனம், அபயவரத ஹஸ்தங்கள், விபூதியாலுத்தூளனஞ் செய்யப்பட்ட மேனி, இவைகளை யுடையவரும் சாந்தரும், பாலசூரியப் பிரகாசருமாகிய ருத்திரமூர்த்தியை நமஸ்கரித்து தாரணைபண்ணினால் அக்னி ஜெயமுண்டாகும்.

41. நாலாவதான வாயவீ (மாருதீ) யென்கிற தாரணைக்கு கண்டமுதற்கொண்டு புருவமத்திய பரியந்தம் வாயு சக்ரஸ்தானம். இவ்விடத்தில் யகார பீஜத்தோடுகூட வாயுவை நிறுத்தி பிரகாச ஸ்வரூபமாய் நிச்சல திவ்வியதேஜஸோடு கூடின மஹேசுவரனைத் தியானம் பண்ணி தாரணை செய்யுமவன் ஈசுவரனுடைய பிரசாதத்தால் (வாயு ஜயம் பெற்று) வாயுவைப்போல் சஞ்சரிக்கலாம்.

42. (ஐந்தாவதான நபோமயீ என்ற) தாரணைக்கு புருவ மத்திய முதற்கொண்டு லலாடமுடிவுபர்யந்தம் [1] ஆகாச சக்ர ஸ்தானமாகும். இவிடத்தில் ஹகார பீஜத்துடன் வாயுவை திடப்படுத்தி ஐந்து முகமும, பத்துக்கைகளும், மூன்று கண்களும் சந்திரகலையாகிய கிரீடத்தைதரித்தவரும், ஆயுதங்களோடு கூடினவரும் இச்சித்ததற்குமேல் வரத்தைக் கொடுப்பவரும், எப்பொழுதும் அபயத்தோடு கூடினவரும் சகலதத்துவங்களுக்கெல்லாம் ஆதி தத்துவமானவரும், பிந்துவாகிய வியோம (ஆகாச) ஸ்வரூப மானவருமாகிய ஸ்ரீ கண்டசிவனை (சதாசிவத்தை) நமஸ்கரித்து ஏகாக்கிர மனத்துடன் தாரணை செய்பவன் முக்தியடைவான்.

43. இந்தப் பிரகாரம் ஐந்து தாரணைகளையும் ஒவ்வொன்றினுக்கு ஐந்து நாழிகை வீதம் அப்பியசிப்பவன் காயசித்தி [2] யடைவான்.

44. இவ்விதம் தாரணீமுதலிய பஞ்சதாரணைகளிலும் எப்பொழுதும் ஒருவன் பிராணனை நிறுத்துவானாகில் (வாத, பித்த, சிலேஷ்மமென்ற) மூன்று தோஷங்களாலுண்டாகிய பழைய ரோகங்களெல்லாம் சீக்கிரமாகவே நசிக்கும். இதிற் சந்தேக மில்லை.

45. ஞானத்தினாலாகிலும் [3] கர்மத்தினாலாகிலும் இந்த பஞ்சதாரணைகளும் எந்த யோகீசுவரர்களால் தரிக்கப்படுமோ [4] அவர்கள் எளிதில் சம்சாரமாகிய சாகரத்தைத் தாண்டுவார்கள்.

46. (இதுவரை தாரணைசொல்லி மேற் சமாதி கூறுகிறார்):—செவ்விய ஞானமாகிய தீபத்தை நிர்மலபுத்தி யென்கிற கையினாற் பிடித்து ஹிருதயமென்கிற ஆலயத்திற் பிரவேசிக்கச் செய்து, அஞ்ஞானமாகிய அந்தகாரத்தைப்போக்கி அங்கே விளங்குகிற பரமாத்ம லிங்க மூர்த்தியை (மனோதிருஷ்டியாலே பார்த்து) ஸ்திரமான சமாதியினாலே உன்னுடைய ஜீவாத்மாவை யந்த பரமாத்ம லிங்கத்திற்கு நைவேத்தியம் பண்ணு.

47. உப்பும் நீரும் சேர்ந்து ஒன்றானாற்போல் மனதும் சத்ரூபமாகிய ஆத்மாவும் சேர்ந்து சமரசப் படுதலே சமாதியென யோகீந்திரர்களாற் சொல்லப்படும்.

48. எப்பொழுது ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்கிய முண்டாகுமோ அப்போது (சமஸ்த வஸ்துக்களுக்கும் மிஞ்சி) யோகீசுவரர்கள் சமாதி யவஸ்தையை அடைவர்.

---

[1] சம்ஸ்கிருதத்தில் மயிரின்முடிவு பரியந்தம் என்பது பாடம்.

[2] காயசுத்தி யெனவும் பாடமுண்டு.

[3] தியானத்தினாலாகிலும் எனவும் பாடமுண்டு.

[4] மூலத்தில் "எவரால் தரிக்கப்பட்டு அதன் அப்பியாசத்தில் ஊக்க முடையவர்களா யிருப்பார்களோ" என்று காணப்படும். வேறுபாடப்படி "எவரால் தரிக்கப்பட்டு சமரசபாவத்தில் ஊக்க முடையவர்களா யிருப்பார்களோ" என்றும் காணப்படும்.

49. இச்சமாதியால் யோகீசுவரர்களுடைய மனம் பரப்பிரஹ்மத்தில் லயிக்கவே அவர்களுக்கு சுரோத்திரம் முதலிய இந்திரியங்களும் சப்தாதி விஷயங்களும் அகங்காரமும், மனமும், மனோவிருத்திகளும், மான அவமானங்களும், சுகதுக்கங்களும், சீதோஷ்ணங்களும், புண்ய பாபங்களும், (இவை முதலிய) சங்கல்ப ஜாலங்களனைத்தும் இல்லை.

50. இவ்விதம் (பிரஹ்மத்தில் லீனமான மனத்தையுடைய) யோகீசுவரன் உத்தமமான ஆகாரத்தைப் புசித்தாலும் புசிப்பன்; ஆகாரஞ் செய்யாமலிருந்தாலுமிருப்பன்; நித்திரையோடு கூடியிருந்தாலு மிருப்பன், நித்திரையில்லாமலிருந்தாலு மிருப்பன்; குகையில் வாசஞ்செய்தாலும் செய்வன், சகல பூமியிலும் சஞ்சரித்தாலும் சஞ்சரிப்பன்; அபேக்ஷையில்லாமலே நாநாவித கர்மகிரியைகளைச் செய்தாலும் செய்வன், நிஷ்கிரியனாயிருந்தாலுமிருப்பன்; இவ்விதம் நானாவித சேஷ்டைகளைப் பண்ணிக்கொண்டிருந்தும் சமாதியிற் சேர்ந்த மனம் சலியாமலிருப்பன். [இவனே அவதூதன் † என்கிற சப்தத்திற் குறித்தானவன்.]

51. இவ்விதம் அஷ்டாங்கங்களுடனேகூடிய ஹடயோகத்தை ஆலஸ்யமில்லாமல் அப்பியாசம் பண்ணி நிஷ்டாபரனான யோகிக்கு உண்டாகும் சித்திகளைச் சொல்வோம் கேள்.

52. (அப்படிக்கொத்த யோகீசுவரனுக்கு அப்பியாச காலத்தில் கிரமமாக) முதல்வருஷத்தில் சர்வரோகங்களும்போய் சர்வஜனப்பிரியனாவான். இரண்டாவது வருஷத்தில் தேவவாக்கினாலே சகல வித்தையும் சொல்வான். மூன்றாவது வருஷத்தில் சர்ப்பம் முதலிய வைகளாலவனுக்குப் பாதையில்லை.

53. நாலாவது வருஷத்தில் பசி தாகம் நித்திரை முதலியவைகளும், சீதோஷ்ணங்களுமவனுக்கில்லை. ஐந்தாவது வருஷத்தில் தூரசிரவணமும், வாக்கு சித்தியும், பரகாயப் பிரவேசமுமுண்டாகும்.

54. ஆறும் வருஷத்தில் வச்சிரம்[5]முதலான ஆயுதங்களால் பாதையில்லை; மிகுந்த வேகமும் தூரதரிசனமுமுண்டாகும். ஏழாவது வருஷத்தில் பூமியில் நில்லான் (தேவத்துவ மடைவன்). எட்டாவது வருஷத்தில் அஷ்டைசுவரியமுமுண்டாகும்.

55. ஒன்பதாவது வருஷத்தில் தேகம் வச்சிரதேகமாய் ஆகாசகமனமும் சகலதிக்குகளிலும் சஞ்சாரமுமுண்டாகும். பத்தாவது வருஷத்தில் மனோவேகமாக நினைத்த விடத்திற்குச் செல்லலாம்.

56. பதினோராவது வருஷத்தில் (சர்வசராசரங்கள் தன்வசமான) சர்வஞ்ஞத்துவமும் சகல சித்திகளுமுண்டாகும். பனிரெண்டாம் வருஷத்தில் சாக்ஷாத் பரமேசுவரனுக்குச் சமானமாய்த்தானே சகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிக்கவும் சம்ஹாரம்பண்ணவும் தக்கவனாவான்.

57. இப்படியாகப் பன்னிரண்டு வருஷம சத்குருவின் பாதங்களில் பக்தியால் விக்னமில்லாமல் அப்பியாசம்செய்த யோகி திடமாய் ஆத்மாவை யடைந்தவனாய் சித்தனாவான் என்றறியவும்.

58. ஆகையினாலே மகாச்சரியமான சிவபூஜாங்கமான இந்த அஷ்டாங்கயோகத்தை நீயுமப்பியாசஞ்செய்.

59. இவ்விதம் நிரந்தரம் அப்பியாசம்செய்வதால், ஜனனமரணமற்றவனாய் தேகமுள்ளபரியந்தம் லோகத்கில் இச்சைப்படி (ஜீவன் முக்தனாய் )இருந்து, பின்பு விதேகமுக்தியை யடைவன்.

† ["அவதூதன்" என்றால் உதறிவிட்டவன்-(விஷயபந்தங்களை) உதறி யெறிந்தவன் என்பது பொருள்-வி-சி-ப.]

5 சஸ்திரம் எனவும் பாடமுண்டு.



60. இயமம், நியமம் இவை இரண்டை மாத்திரமே ஆசரித்தபடியினாற்றானே சிவபக்தனென்றுசொல்லப்படுவன். சித்தாசன [6] அப்பியாசம் பண்ணினவன் மஹேசுவரபதத்தை யடைவன்.

61. சராசரங்களுக் கெல்லாம் லயஸ்தானமான லிங்கமாகிய ஆகாசமென்று சொல்லப்படும் ஸ்தானத்தில் பிராணவாயுவை கேவல கும்பகத்தால் லயிக்கப்பண்ணினவன் "பிராணலிங்கி" என்று சொல்லப்படுவன்.

62. பிரத்தியாகாரத்தோடு கூடினவன் சம்சயமின்றி "பிரசாதி ஸ்தலத்தை" யடைந்தவன். தியான தாரணைகளுடன் கூடினபுத்திமான் "சரணஸ்தலத்தை" யடைந்தவனாவான்.

63. நிச்சலமாகிய ஐக்கிய சமாதியால் லிங்கைக்கியமாகிய அத்வைதபாவத்தை யடைந்தவனாவன். இவ்விதம் அஷ்டாங்கயோக நிஷ்டனான யோகீசுவரன் வீரசைவனென்று சொல்லப்படுவான் [7].

64. ஆகையால் நீயும், ஓ சிஷ்யனே, கர்மயோகங்களினாலேயாவது ஞானத்தாலாவது சர்வயத்தனங்களாலும் இந்த அஷ்டாங்கயோக மார்க்கத்தால் சிவயோகியாவாயாக. (சிவயோகாப்பியாசம் செய்வாயாக).

இப்படி ஸ்ரீ சதாசிவ யோகிசுவரரால் செய்யப்பட்ட சிவயோகதீபிகையில் அஷ்டாங்க பூஜா அந்தரங்க சதுரங்க விதானமென்ற மூன்றாம் படலம் முற்றும்.

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

[6] ஸ்திராசன மெனவும் பாடமுண்டு.

[7] இவ்விடத்தில் நூலாசிரியர் இவ்வஷ்டாங்க யோகத்தை யப்பியசிப்பவன் வீரசைவனாவா னெனச்சொல்லவிரும்பி, வீரசைவ சித்தாந்தத்தில் சிவபூஜாக்கிரமத்தில் உபாசகர்களடையும் ஷட்ஸ்தலங்களாகிய பக்தஸ்தலம், மஹேசுவரஸ்தலம், பிராணலிங்கிஸ்தலம், பிரசாதிஸ்தலம், சரணஸ்தலம், ஐக்கியஸ்தலம் என்ற ஆறு ஸ்தலங்களும் யோகத்தில் இயமம் முதல் சமாதி வரையிலுள்ள எட்டு அங்கங்களும் ஒன்றேயெனக் காட்டுகின்றார். இதை யொட்டி பழையமொழிபெயர்ப்பைத் திருத்தியிருக்கின்றோம். ஷட்ஸ்தலங்களின் விரிவை சித்தாந்தசிகாமணி, விசேஷார்த்தப்பிரகாசிகை, அநுபவசூத்திரம் முதலிய வீரசைவநூல்களில் பார்க்கலாம்.

## Kannaki—A Social Drama.

### கண்ணகி.

அங்கம். III] [காட்சி-4.

இடம்—ஐயைகோட்டம்

காலம்—அந்திப்பொழுது

பாத்திரர்— { கோவலன், கண்ணகி, கௌந்தி, சாலினி, மறவர்கள்.

**கண்ணகி**:—நாதா! அந்த அந்தணர் சொன்ன வழியைப் பின்பற்றிக் கொண்டே நெடுந்தூரம் வந்துவிட்டோம்! (இளைப்போடு) உஸ்! ஆ! பிராணபதி! என் கால் நோவுகின்றதே! நாவு உலருகின்றதே! கண் சுழலுகின்றதே! காதலா! என்ன செய்வேன்! நாதா இதோ பார்த்தீர்களா; என்னுடைய கால்களில் கொப்புளங் கண்டிருக்கிறதே? (பாதத்தைக்காட்டுகிறாள்). இனி என்றால் ஓரடிகூட எடுத்துவைக்க முடியாது! நின்றபடியே கோவலன் தோளின் மேல் சாய்கிறாள்.)

**கோவலன்**:—(கண்ணகியைத் தன்தோளில் அணைத்துக்கொண்டு) மாசறுபொன்னே, வலம்புரிமுத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே, அரும்பெறற்பாவாய், ஆருயிர்மருந்தே, பெருங்குடி வாணிகன் பெருமடமகளே, மலையிடைப்பிறவாமணியே, அலையிடைப் பிறவாஅமிழ்தே, யாழிடைப்பிறவா இசையே, நீயேன் வருந்துகின்றாய்? இனி நாம் நடக்கவேண்டுவதில்லை. இதோ ஐயைகோட்டத்தை நெருங்கிவிட்டோம். இன்றிரவை இங்கே கழித்துச்செல்லுவோம்.

**கௌந்தி**:—ஆம்; அம்மா! ஏனழுகின்றாய்? கஷ்டப்படவேண்டிய காலத்தில் கஷ்டப்பட்டுத்தானே தீரவேண்டும்! இன்னும் கொஞ்சதூரம்வா! (கண்ணகியை மெதுவாக அழைத்துச் செல்லுகிறாள்).

**கோவலன்**:- அடிகாள்! இதோ ஐயைகோட்டம் வந்து விட்டோம்! (மூவரும் தங்குதல்.)

**ஒரு மறவன்**:—(மற்ற மறவர்களைப் பார்த்து) ஏ! அண்ணே! அங்கிட்டு பாத்தியா! சாலினிமேலே

காளிவந்து கூத்தாடு தாங்றேன்! எ! ஆத்தாடியோ! எம்பிட்டு சனங்கபோருவோ! வாண்ணு! நம்ளு போயிட்டு வருவோங்றே!

மற்றொருவன்:—ஆமாண்டோ ஆமா! சாலினி மயிரை விரிச்சுபோட்டுக் கிட்டு கூத்தாடுருளாம்! அவ்ளுக்கு ஒண்ணுமே தெரியலியாம்! எம்மிட்டு பேரு புடிச்சாலும் அடங்க மாட்டேங்கிருளாம்டா!

வேறொருவன்:—ஆமா அண்ணே! யாருகடன் வச்சாலும் மாரிகடன் வச்சுக்கலாமா? சாமிக்கு பலி கிலி கொடுத்தால்ல? மாடு வெட்டி மாமாங்க மாச்சுதாம்! ஆடு கோழிகூட சாமிக்கி கொடுக்காயிட்டா அது கோவிச்சுக்காதா? நீதாஞ் சொல்லேன்!

இன்னொருவன்:—இங்கிட்டு எண்டாலே நிக்கிஹும்! கிளம்புங்க அந்த வேடிக்கை யெப் பாப்போம்! (இவர்கள் நால்வரும் வேறு சிலரும் சாலினி கூத்தாடும் இடத்தை நோக்கி ஓடுகிறார்கள்.)

கண்ணகி:—மணாளா! அதோ பாருங்கள்! அதோ ஒரு பெரிய வெளிச்சம் தோன்றுகிறது! மறவர்கள் அந்த வெளிச்சத்தை நோக்கி ஓடுகிறார்கள்!

கௌந்தி:—நாமிருக்கும் இடத்துக்கும் அந்த வெளிச்ச மிருக்கும் இடத்துக்கும் கூப்பிடு தூரம் கூட இராதென்றே நினைக்கிறேன்!

கோவலன்:—ஆனால் நாமும் சென்று அங்கு என்ன அதிசயம் நடக்கிறதென்பதைப் பார்த்து வருவோமா?

கௌந்தி:—நீங்களிருவரும் சென்று பார்த்து வாருங்கள்! (இருவரும் போகிறார்கள்.)

சாலினி:—(தலைவிரி கோலமாய்க் கூத்தாடிக் கொண்டே) எ மறவர்களே! எ எயினர்களே! நீங்கள் எனக்குச் செலுத்த வேண்டிய கடனைச் செலுத்தாதலால் உங்களுடைய சேரிகள் பாழ்பட்டன. உங்கள் பகைவர்களுடைய ஊர்களில் பசுக்கூட்டங்கள் மிகுந்து போயின! வழி பறித்தடிப்பதாலும் சூறையாடுவதாலும் வரும் வரும்படி உங்களுக்குக் குறைந்து போயின! நீங்களும் உங்கள் கொலைத் தொழிலாகிய மறத்தொழிலை இயற்ற முடியாதவர்களாய் அறத்தொழில் செய்வோரைப்போலச் சினங்குறைந்து செருக்கடங்கி விட்டீர்கள்! களவாடி மதுவுண்டு வாழும் உங்கள் வாழ்க்கையை விரும்பினால் எனக்குச் சேரவேண்டிய கடனைக் கொடுங்கள்! இல்லாவிட்டால் உங்கள் குலத்தொழில் நாசமடையும்!

மறவர்கள்: (ஒரே கூச்சலாய்) தாயே பொறுத்துக்கோ! ஆயி பொறுத்துக்கோ! யென்னமோ தெரிஞ்சுந் தெரியாமே சேஞ்ச பிள்ளையை உன்னுேடே மனசிலே வச்சுக்காதே! தாயே! இந்தத் தடவே மட்டும் மன்னுப்பு செஞ்சிக்கோ! உனக்கு வேணுங்கிறதெல்லாந் தாரோம்! (சுற்றிவந்து காலில் விழுகிறார்கள்.)

கோவலன்:—இதுவும் ஒரு வேடிக்கை தான்! (சிரிக்கிறான்)

கண்ணகி:—பிராணபதி! அதோ பாருங்கள்! அந்தச் சாலினிக்கு இவர்கள் என்னென்ன அலங்காரஞ் செய்கிறார்கள்! அவளுடைய கரிய கூந்தலைச் சடையாகக் கட்டி அந்த முடியிலே சிறிய வெள்ளிய பொன் ஞாணை வளையக்கிடத்தி, தோட்டப் பயிரை அழித்த பன்றிகளின் கொம்பைப் பிடுங்கி வெள்ளை நிறமுடைய பிறையென்று சொல்லும்படிச் சாத்தி அலங்கரிக்கிறார்கள்! புலிகளின் வாயைக் கிழித்து அவைகளின் பற்களை உதிர்த்து வரிசையாகக் கோர்த்து வைத்திருக்கும் வடத்தை நிரைத்தாலியாகக் கட்டுகிறார்கள்! புலியின் தோலை அவளுக்கு மேகலையாக உடுத்துகிறார்கள்! இன்னும் நாதா! அதோ பாருங்கள்! வயிரவில்லை வருத்தத்தோடு வளைத்து அவள் கையில் கொடுத்திருக்கிறார்கள்! மதனப் பாவை, கிளி, சிறகின் மயிர், காட்டுக்கோழி, நீல நிறமுடைய மயில் முதலியவற்றைக் கொண்டு சேவித்துத் துதித்து நிற்கிறார்கள்! "வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும், * நிணச்சோறும், பூவும் புகையுமேவிய விரையும்" கையிலேந்திக்கொண்டு எவற்பெண்கள் பின் செல்லுகிறார்கள்! வழிபறிக்கும் போது கொட்டும் பறையும், சூறைகொள்ளும் போது ஊதுஞ் சின்னமும், துத்தரிக்கொம்பும், குழிக்குழலும், இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கின்றன. உயிர்ப் பலியை யுண்ணும் விரித்த பலி பீடத்தை முன்னதாகத் தொழுது பின்பு அவளைத் துதிக்கிறார்கள்! இவைகளை யெல்லாம் கவனிக்கும் போது, நாதா, உங்களுக்கு ஆச்சரிய முண்டாகவில்லையா? இப்படிப்பட்ட தெய்வ வழிபாட்டை நீங்கள் வேறு எங்காவது கண்டிருக்கிறீர்களா?

* நிணச்சோறு=இரத்தத்தோடு கலந்து பிசைந்த பலிச்சோறு.



கோவலன்:—பிராண சகி! இந்தக் கூத்தும் காலக் கூத்துதான்! இந்த † மறவர்களுடைய ஈசுவர பக்தி எப்படிப்பட்டதென்பதை இப்போது கண்கூடா யறிந்தோம்!

சாலினி:—(கண்ணகியைச் சுட்டிக்காட்டி) இவள் கொங்கு நாட்டினை யாளும் செல்வி! குட நாட்டினை யாளும் அரசி! தென்றமிழ் நாட்டினையாளும் பாவை! இவள் இப்படியாவதற்குக் காரணம் இவள் முன் ஜென்மத்தில் செய்த நல்ல தவமே யாகும்! இந்த உலகத்திற்கு முழுமாணிக்கம்போன்று உயர்ச்சி பெற்ற பெண்ணுருக் கொண்டதோர் திருமணியாம் இந்தக் கண்ணகி! (என்று அங்கு கூடியிருந்த மறவர்களுக்குச் சொல்லுகிறாள்)

கண்ணகி:—(தன்னைப் புகழ்ந்து சாலினி கூறியதைப் பொருது நாணினவளாய் தன் கணவன் பக்கத்தில் மறைந்துகொண்டு) நாதா! இவள் தெய்வ மயக்கத்தால் ஒன்று மறியாது மயங்கி என்னைப் புகழ்ந்து பேசுகிறாள்! இவளுடைய அறிவின்மையை என்னென்பேன்! (புன்சிரிப்பு சிரிக்கிறாள்.)

கோவலன்:—இந்த மறவர்களுடைய குலமே குலம்! ஏனெனில் சாலினியைப் போன்ற மூதறிவுடைய பெண் உதித்தது மறவர் குலமாதலால்!

கண்ணகி:—சரி; நாதா! கூத்தும் முடிந்தது! சாலினியின் மேல் வந்திருந்த தெய்வமும் மறைந்தது! மறவர்களெல்லோரும் கள்ளுண்டு களித்து இது வரையில் ஆடிய ஆட்டத்தால் களைத்து அவரவர்கள் உறங்குவதற்குச் செல்லுகிறார்கள்! நாமும் செல்லுவோமே!

கோவலன்:—ஆமாம்! அதோ கௌந்தி யடிகளும் நம்முடைய வரவை எதிர்பார்த்தவர்களாயிருக்கிறார்கள்! சீக்கிரம் செல்லுவோம்!

கண்ணகி:—இங்கு நாம் கண்ட அதிசயத்தைக் கௌந்தி யடிகளுக்குச் சொல்லுவோமா?

கோவலன்:—அஹா! அப்படியே செய்யலாம் (இருவரும் திரும்பிப் போய் கௌந்தி யடிகளைச் சேர்ந்து தாங்கள் கண்ட காட்சியைச் சொல்லிவிட்டு நித்திரை புரியச் சென்றார்கள்)

[3-ம் அங்கம் 4-ம் காட்சி முற்றும்]

நாகை ஸி. கோபாலகிருஷ்ணன்.

† முற்காலத்தில் மறவர்கள் அனுசரித்து வந்த தெய்வ வழிபாட்டை அறிந்து கொள்வதில் அநேகருக்கு விருப்ப மிருக்குமெனக் கருதியும், அவர்களுடைய வழக்க ஒழுக்கங்கள் பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்குமென நினைத்தும் இப்பகுதியை மட்டும் சிலப்பதிகாரத்தில் உள்ளபடியே சிற் சில மாறுபாடுகளுடன் எழுதினோம்.

ஓம் ஸ்ரீஃ

ஸ்ரீ சாவித்ரியைநமஃ

# உபநிஷதர்த்த தீபிகை.

## VI. வஜ்ஜிர சூசிகோபநிஷத்.

ஓம் ஆப்யாயந்து இதிசாந்திஃ

1. சித்சதானந்த ரூபராயும், சர்வமனோ விருத்திகளுக்கும் சாக்ஷியானவரும் வேதாந்தத்தால் அறியக்கூடியவராயும் அநந்த ரூபியாயும் இருக்கும் பிரஹ்மத்திற்கு நமஸ்காரம்.

2. அஞ்ஞானத்தைப் பிளப்பதாயும், ஞானமற்றவர்களுக்கு தூஷணமாயும், ஞானக் கண்ணுடையோருக்கு பூஷணமாயும் (அலங்காரமாயும்) இருக்கும் வஜ்ஜிரசூசி யென்கிற சாஸ்திரத்தைச் சொல்கிறேன்.

3. பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என நான்கு வர்ணங்களுண்டு. அவ்வர்ணங்களுக்குள் பிராஹ்மணனே பிரதான மானவனென்று வேதவாக்கியங்களை யனுஸரித்து ஸ்மிருதிகளும் சொல்லும்.

4. அதில் ஓர் வினா ஏற்படும். பிராஹ்மணனென்றால் யார்? ஜீவனா, தேகமா, ஜாதியா, ஞானமா, கர்மமா, அல்லது தர்மத்தையுடையவனா?

5. முதலில் ஜீவன் பிராஹ்மணனென்றால் அது பொருந்தாது. ஏனெனில் போனதும் இனிமேல் வரக்கூடியதுமாகிய அநேக தேகங்களிலும் ஜீவன் ஒருவனே. மேலும் ஒருவனுக்கு கர்மவசத்தால் அநேக தேகங்களுண்டாகும். அப்படிப்பட்ட சகல தேகங்களிலும் ஜீவன் ஒருவனே யாவன். ஆகையால் ஜீவன் பிராஹ்மணனல்ல.

6. ஆனால் தேகம் பிராஹ்மணனோ வென்றால் அதுவுமல்ல. ஏனெனில் சண்டாளன் வரையுள்ள சகல மனுஷ்யர்களுக்கும் தேகமானது பஞ்ச பூதங்களால் ஏற்பட்ட காரணத்தால் ஒரே ரூபமாயிருக்கும். மேலும் (சகல மனுஷ்ய சரீரங்களுக்கும்) மூப்பு, மரணம், தர்மம் அதர்மம் முதலியவை சமமாய்த் தோற்றுகின்றன. மேலும் பிராஹ்மணன் வெளுப்பு வர்ணமென்றும், க்ஷத்திரியன் ரக்த வர்ணமென்றும், வைசியன் பீதவர்ணமென்றும், சூத்திரன் கருப்பு வர்ணமென்றும் நியமம் இல்லை., அல்லாமலும் தகப்பன் முதலியவர்களின் சரீரத்தை தகனம் செய்வதால் பிரஹ்மஹத்தி முதலிய தோஷம் சம்பவிக்கும். ஆகையால் தேகம் பிராஹ்மணனல்ல.

7. ஆனால் ஜாதி பிராஹ்மண னென்னலாமோவெனில், அதுவுமல்ல. ஏனெனில் ஜாத்யந்தரமாகிய ஜந்துக்களினின்றும் பலஜாதிகளினின்றும் உண்டான மஹரிஷிகள் பலர் உண்டு. ரிஷ்யசிருங்கர் மானினின்றும் பிறந்தவர். கௌசிகர் குசம் என்கிற தர்ப்பையினின்றும் பிறந்தவர். ஜாம்பூகர் நரியினின்றும் பிறந்தவர். வால்மீகர் வல்மீகத்தினின்றும் (புத்தினின்றும்) பிறந்தவர். வியாசர் வலையக் கன்னிகையிடம்பிறந்தவர், கௌதமர் முயலினின்றும் பிறந்தவர். வசிஷ்டர் ஊர்வசியினிடம் பிறந்தவர். அகஸ்தியர் கலசத்தினின்றும் பிறந்தவரென்று இவ்விதம் சுருதியில் சொல்லப்படும். இவர்களுள் ஜாதி சம்பந்தம் இல்லாமலே ஞானத்தால் ரிஷிகளானவர்கள் பலர்உண்டு. ஆகவே ஜாதி பிராஹ்மணனல்ல.

8. ஆனால் ஞானம் பிராஹ்மணனோ வென்றால் அதுவுமல்ல. ஏனெனில் க்ஷத்திரியர் முதலியவர்கள் கூட பரமார்த்தர்களாய் ஞானிகளாய் பலர் உளர். ஆகையால் ஞானம் பிராஹ்மணனல்ல.

9. ஆனால் கர்மம் பிராஹ்மணனோ வென்றால் அதுவுமல்ல. ஏனெனில் சகல பிராணிகளுக்கும் பிராரப்தம் சஞ்சிதம் ஆகாம்ய மென்கிற கர்மங்கள் பொதுவாய் காண்கின்றோம். கர்மத்தால் தூண்டப்பட்டவர்களாய் ஜனங்கள் கிரியைகளைச் செய்கின்றார்கள். ஆகையால் கர்மம் பிராஹ்மணனல்ல.

10. ஆனால் தார்மிகன் பிராஹ்மணனோவெனில் அதுவுமல்ல. சுவர்ணதானம் செய்யும் க்ஷத்திரியரநேகருளர். ஆகையால் தார்மிகன் பிராஹ்மணனல்ல.

11. அப்படியாகில் யார்தான் பிராஹ்மணனென்றால், யாதாமொருவன் அத்விதீயமானதும் ஜாதி குணம் கிரியை யற்றதும், ஷடூர்மிகள் [1] ஷட்பாவங்கள் [2] முதலிய சர்வதோஷங்களு மில்லாததும், சத்யஞான அநந்த ஸ்வரூபமானதும், ஸ்வயம் நிர்விகல்பமானதும் சகல கல்பனைகளுக்கும் ஆதாரமானதும், சகல வஸ்துகளுக்கும் அந்தர்யாமியாய் நிற்பதும், உள்ளும் புறம்பும் ஆகாசத்தைப்போல் ஊடுருவி நிற்பதும், அகண்டானந்த ஸ்வபாவத்தை யுடையதும், பிரமாணத்திற் கப்பாற்பட்டதும், அனுபவத்தால் மட்டும் அறியக் கூடியதும், அபரோக்ஷமாய் பிரகாசிப்பதுமான ஆத்மாவை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அபரோக்ஷ சாக்ஷாத்காரம் செய்து கிருதார்த்தனாபடியால் காமம் ராகம் முதலிய தோஷங்களற்றவனாய், சமதமாதி குணங்களுடன் கூடினவனாய், பற்று மாத்சர்யம் திருஷ்ணை (விஷயத்தினிடம் ஆவல்) ஆசை மோஹம் முதலியவைகளற்றவனாய் தம்பம் (கர்வம்) அகங்காரம் முதலியவைகளால் தொடப்படாத மனத்தை யுடையானாய், இருக்கப்பட்டவனே (பிராஹ்மணன்). மேற்கூறிய லக்ஷணத்தோடு கூடியவனே பிராஹ்மணனென்பது சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களின் அபிப்பிராயம். (அந்த லக்ஷணங்கள்) இல்லாவிட்டால் பிராஹ்மணத்துவம் (ஒருவனுக்கு) சித்திக்கவே மாட்டாது. ஆத்மாவை சச்சிதானந்த அத்விதீயமாகிய பிரஹ்மமாக பாவிக்கவும்.—என உபநிஷத்.

(1) ஊர்மி என்றால் தோஷம். அவையாவன:—சோகம், மோகம், மூப்பு, மரணம், பசி, தாகம் என ஆறு.

(2) காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்சர்யங்கள்.

இங்ஙனம் விவேகசிந்தாமணி
உபநிஷத் வாச்சியார்த்த தீபிகையில்
ஆறுவதான வஜ்ரசூசிகோபநிஷத்
முற்றுப்பெறும்.
மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

## Stray Lessons in Civics.
## துரைத்தன விளக்கம்
## தனிப்பாடங்கள்.

### I. Toll. I. சுங்கம்.

நம் இந்தியாவில் உள்ள குடிகளில் பெரும்பாலோர் படிக்க வைக்கப் படாததால் புத்திக் குறைவுள்ளவர்களா யிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் படித்தவர்களில் பெரும்பாலோரும் "கண்ணிருந்தாலும் பாரேன், காதிருக்கினும் கேளேன்" என்று ஆராய்ச்சியின் குறைவால் தன்னைச்சுற்றி நடப்பவைகள் அநேகத்திற்குக் காரணம் கேட்கின் பதில் சொல்ல இயலாமல் விழிக்க நேரிடும். சாதாரணமாய் தென்னை மட்டை எல்லோராலும் ஸதாபார்க்கப் பட்டிருக்கினும், ஓலையின் அமைப்பை வரைந்து காட்டும்படி கேட்கின், பெரும்பாலோர் ஓலைகள் ஓரிடத்திலிருந்து ஜதை ஜதையாய்ப் போயிருப்பதாய் வரைவார்களே ஒழிய, ஒரு பக்கத்திய ஓலை கிளம்பின இடத்திற்குச் சற்று மேலாக மற்றப் பக்கத்திய ஓலை கிளம்பி யிருப்பதை வரைய மாட்டார்களென்பது திண்ணம். இதற்குக் காரணம் உற்று நோக்கும் அப்பியாச மில்லாததல்லவா? அதுபோல் நம்மில் அநேகர் அநேகந் தடவைகளில் வண்டி ஏறிச் செல்லும்பொழுது வண்டி சுங்கச் சாவடியிடம் நின்று சாவடியிலிருப்பவனுக்கு வரி கட்டியான பிறகு ஓட்டிச் செல்லப்படுவதும், விறகு வண்டி, விறகுசுமை முதலியன ஊரில் கொண்டுவரப் படின் அவைகளுக்காக வரி வாங்கப் படுவதும் பார்த்திருக்கலாம். எதற்காக சர்க்காரால் இவ்வரி வாங்கபபடுகிற தென்றும், இவ்வரியினால் ஊராருக்குள்ள லாபா லாபங்கள் என்ன வென்றும் கேட்கப்படின் அவர்களால் திருப்திகரமாண பதிலை அளித்தல் இயலா, முதல் முதல் சுங்கவரி ஏற்படுத்தியிருப்பது எதக்காக வென்று வசாரித்த பிறகு, அதனால் ஊர் ஜனங்களுக்குண்டாகும் நன்மை தீமைகளைப் பகருவோம்.

அநேகமாய் ரஸ்தாக்களில் வாங்கும் வண்டி, கால்நடைகள் முதலானவைகளின் சுங்கம், அவைகள் ரஸ்தாக்களின் மேல்போய் ரஸ்தாக்களைக் கெடுத்து விடுவதால் மறுபடி அவைகளைச் சீர்திருத்தி, சில்லிமண் முதலியன போட்டு மேடு பள்ள மில்லாமல் வைத்திருக்க வேண்டியதற்காகவே. சில சமயங்களில், ரஸ்தாவை சீராய் வைத்திருக்க வேண்டிய பணத்தைத் தரக்கூடிய சுங்கக் கேட்டுக்கள் முன்னமே ஏற்பட்டிருக்கினும், நடுவிலுள்ள பாலம் முதலியன அதிகச் செலவுசெய்து கட்டவேண்டி நேரிடின் புதிதாய் சுங்கக்கேட்டு ஏற்படுத்தப் படுவதும் உண்டு. ஆனால் அவ்வாறு ஏற்பட்டது, போதுமான பணம் சேர்ந்ததும் எடுபட்டுப் போகும்.

மற்றசில விடங்களில் தலைகளிற் கொண்டுவரும் விறகு சுமைக்கு சுங்கம் வாங்குவதுண்டு. இது ஸர்

க்கார் காடுகளினின்று விறகுவெட்டிக்கொண்டு வந்ததற்காகக் கொடுக்கும் வரியாக விருக்கினும் இருக்கலாம், அல்லது முன்னரே ஊரிலிருக்கும் விறகின் விலையை சகாயமாய் வேறு விறகு வருவதால் குறைக்காமலிருக்கும்படி ஏற்படுத்தப் பட்டதாயு மிருக்கலாம். இது விஷயம் மேற்போகப்போக நன்கு விளக்கிக் காட்டப்படும்.

இனி இச்சுங்கத்திஞல் ஜனங்களின் லாபா லாபத்தைப்பற்றி விசாரிப்போம்.

ஸர்க்காரால் இச்சுங்க வரி வசூல் செய்யப்படுவதால் ரஸ்தாககள் மேடு பள்ளமில்லாமல் வைக்கப்பட்டு, ரஸ்தாவின் இருபுறங்களிலும் நிழலைத் தரத்தக்க மரங்கள்பயிர்செய்யப் பட்டிருத்தலால் பிரயாணிகள் ஆபத்தில்லாமலும், கதிரவனது உஷ்ணம் பாதிக்காமலும் யாத்திரை செய்ய இயலும். ஆனுல் எவ்வாறு ஒவ்வொரு பதார்த்தத்திலும் நற்குணங்களோடு துர்க்குணமும் சேர்ந்திருப்பது ஸஹஜமோ அவ்வாறே இச்சுங்க வரியால் ஊராருக்குக் கொஞ்சம் கெடுதியுமுண்டு. அதெவ்வாறெனின், நான்கு ரூபாய் பொறுமான ஒருவண்டி விறகு ஒருவன் கொண்டுவருவதாய் வைத்துக் கொள்ளுவோம். சுங்க மில்லாவிடில் ஊரார் அவ்விறகை நான்கு ரூபாய்க்கே வாங்கிக் கொள்ளலாகும். ஆனுல் அவ்வண்டிக் காரனிடமிருந்து நாலு அணு சுங்கம் வாங்கப்படின் அச்சுங்கப் பணம் கொடுப்பதுயார்? விறகு வண்டிக்காரன் அல்லவென்ருல் அநேகர் நம்பமாட்டார்கள். ஆனுல் வாஸ்தவத்தில் அவ்வண்டிக்காரன் சுங்கத் தீர்வை நாலணுவையும் விறகின் தலையில் வைத்து விற்பதால் சுங்கம் விறகு வாங்குவோர்கள் செலுத்துகிருர்கள் என்பதில் ஆக்ஷேபனை என்ன? இவ்வாறே ரயில்வே கம்பெனியார்கள் அனுப்பப்படும் சாமான்களின் மேல் தீர்வையை அதிகப்படுத்தும் பக்ஷத்தில் அத்தீர்வையைச் செலுத்துவது வியாபாரிகள் அல்ல, சாமான்கள் வாங்குவோர் என்பது அனேகருக்குத் தெரிந்திரா தென்பது திண்ணம்.

அமெரிக்கா முதலான தேயங்களில், உள்நாட்டு கைத்தொழில் முதலானவைகள் அபிவிருத்தி யாகு நிமித்தம், வெளிநாட்டினின்று வரும் சாமான்களின் மேல் அதிக தீர்வை போடுவதால் வெளிநாட்டார்கள் தங்கள் சாமான்களை போட்டி போட்டு விற்கமுயலாமல் அச்சாமான்களின் இறக்குமதி குறைகிறது, ஆகவே ஜனங்களுக்கு சாமான்கள் எவ்வளவுக் கெவ்வள தேவையோ அவ்வளவும் உள்நாட்டிலேயே உண்டாக நேர்வதால் அதிகமாய் கைத்தொழில் விர்த்தியாவதற்கு ஆக்ஷேபனை என்ன!

ஏதாவதொரு தேசத்தில் கைத்தொழில்களில் நெசவு தொழில் க்ஷீணித்திருப்பதாய் வைத்துக் கொள்வோம், இதற்குக் காரணம்யாது? இறக்குமதியாகும் துணிகளின் மீது வரிபோடப் படாததாலும், உள்நாட்டு நெசவுகாரர்கள், தேச இயற்கையிஞல் யந்திரங்களின் மூலமாய் சவுளிகள் சுளுவில் நெய்யப்பட்டதால் சஹாயமாய் தங்களைவிட நேர்த்தியான துணிகள் விற்கும் வெளி நாட்டார்களுடன் போட்டி போட இயலாமல் தங்கள் தங்கள் தொழிலை நிறுத்தி ஏழைகளாவதே! ஆனுல் தற்கால நிலைமையைப் பார்த்தால் ஜனங்கள் "நம்தேசத்திய நெசவுகாரர்கள் ஏன் சிரமப்படவேண்டும். வெளி தேசத்திய நெசவுகாரர்கள் நமக்காகப் பாடுபட்டு நமக்குத் தான் ஸஹாயமாய் உடைகள் அளிக்கிருர்களே" என்பார்கள் பலர். ஆனுல் இவ்வபிப் பிராயம் தேசத்தின் க்ஷேமத்திற்கும், விருத்திக்கும் கூற்றம் என்பதை அவர்கள் கவனிக்கவேண்டியது அத்தியாவசியம்.

தற்காலத்தில் அதிக பணச்செலவில்லை யென்றும் அரை ரூபாய் செலவழித்து மரக்கால்நாட்டிப்பந்தல் போடுவது வழக்கம்; அக்கால் சீக்கிரம் செல்லரித்து மக்கிப்போவதால் வேறு கால்கள் அடிக்கடி நடப்பட, அக்கால்களின் கிரயம் ஒரு கருங்கல் காலினது கிரயத்தைவிட எவ்வளவோ ஜாஸ்தியாய்ப் போவது தெரிந்த விஷயமல்லவா? எவ்வாறு கொஞ்சம் சிரமப்பட்டாவது பணச்செலவு செய்து கற்றூண்நாட்டின் அது சாசுவதமாயிருப்பதும் தவிர அடிக்கடி காலூன்றும் வேலை இராததல்லவோ! அவ்வாறு தற்காலத்தில் வெளி நாட்டினின்று வரும் துணி முதலியன ஸஹாயமா யிருக்கினும், தேசத்தின் கற்றூண்போன்ற சாசுவதமான நன்மையை நோக்கியே அநேக தேசத்திய ஜனங்கள் வெளி நாட்டினின்று வரும் சாமான்களின் மேல் போடும் தீர்வையை அங்கீகரித்து, உள் நாட்டினின்றுண்டாகும் மட்டமான துணிகளை அதிக விலை கொடுத்து வாங்கிச் சந்தோஷமாய் உபயோகிக்கின்றனர். "லோகாஸ்ஸ மஸ்தாஸ்ஸுகிநோ பவந்து" என்னும் வாக்கியத்திற் கிணங்க ஒவ்வொருவரும்



பொதுநன்மையைக் கோரின், தேசத்தில் யாதொரு குறைவு மிராதென்பதை எல்லோரும் அறிந்து அனுசரிப்பார்களாக. ஓம் தத்ஸத்.

எம். என். கணேசய்யர்.

---

## Madras School-fee Regulations.

## சென்னைப் பள்ளிக்கூடச் சம்பளங்கள்.

சென்னை "எடியுகேஷனல் ரூல்ஸ்" எட்டாவது அதிகாரத்திலுள்ள பள்ளிக்கூடச் சம்பள விதிகளுக்குப் பதிலாக, சென்னை கவர்ன்மெண்டார் அச்சம்பளங்களை யுயர்த்திப் புதிய விதிகளேற்படுத்தி யிருக்கிருர்கள். பள்ளிக்கூடச் சம்பளங்களை யுயர்த்துவது கூடாதென்று சென்னை சட்ட நிருபண சபையில் கனம் மிஸ்டர். பெர்ராஸு அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் 18 மெம்பர்களால் மட்டும் அங்கீகரிக்கப்பட்டு 23 மெம்பர்களால் எதிர்க்கப் பட்டதால் அது தள்ளுபடியாய் விட்டது. ஆனுல் அப்பொழுது நடந்த தர்க்கத்தில் பள்ளிக்கூடச் சம்பளங்களை யுயர்த்துவது யுக்தமல்லவென்று பல காரணங்கள் எடுத்துக் கூறிப்பேசிய உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களுக்கு சமாதான முண்டாக அவர்கள் அன்று சொல்லியதை யெல்லாம் நன்ருக மனதில் வைத்துத் தீர்க்காலோசனை செய்வதாக மேன்மை தங்கிய கவர்னர் அவர்களும் கனம் பொருந்திய மிஸ்டர் ஹாமிக்கு அவர்களும் வாக்களித்தனர். ஆனுல் வெளியாயிருக்கிற விளம்பரத்தைப் பார்த்தால் சம்பளங்களை யுயர்த்தும் விஷயத்தில் யாதொரு சகாயமும் செய்யக் காரணமில்லை யென்று கவர்ன் மெண்டாருக்குப் பட்டிருப்பதாகத் தோற்றுகிறது. இது தப்பு என்று எல்லாரும் பொதுவாய் சொல்லுகிருர்கள். சொல்லி யென்ன பயன், கவர்ன்மெண்டார் விதியை வெல்ல ஜனப்பிரதிநிதிகள் மதியாகுமா? ஆகுமென்று தான் பார்த்தார்கள். ஆனுல் மூவர் வோட்டுக்குறைவால் பலிக்காமற் போய்விட்டது. பள்ளிக் கூடத்தில் படித்து முன்னுக்குவர ஆசைப்படுகிறவர்கள் பிரதமாரம்பம் முதல் பி. ஏ. வகுப்பு வரையில் அதிகச் சம்பளம் கொடுத்தே தீரவேண்டும் இப்புதிய சம்பள விகிதங்கள் காலேஜுகளுக்கு 1911-ம் ஹூ ஜுலை மாதம் முதற்கொண்டும், ஸ்கூல்களுக்கு 1912 இல் ஜுலை மாதம் முதற்கொண்டும் ஊர்ஜிதத்திற்கு வரும். இப்பொழுதுள்ள சம்பளங்களுக்கும் புதிய விதிப்படி கட்டவேண்டிய சம்பளங்களுக்கு முள்ள வித்தியாசம் பின் வரும் அட்டவணையால் விளங்கும்.

| காலேஜ் வகுப்புகள் | தற்கால சம்பளம் | புது விகித சம்பளம் |
|---|---|---|
| பி. ஏ. | ரூ—84 | ரூ—112 |
| எ.ப். ஏ ... | ,, 72 | ரூ 88 |
| ஸ்கூல் | | |
| 6-வது-பாரம் | ,, 38 | ரூ 42 |
| 5-வது-பாரம் | 34 | |
| 4-வது-பாரம் | ,, 30 | |
| 3-வது-பாரம் | ,, 22 | ரூ 22 |
| 2-வது-பாரம் | ,, 18 | |
| 1-வது-பாரம் | 15 | |

பள்ளிக்கூட வருஷம் லாங்டர்ம் என்றும் ஷார்ட்டர்ம் என்று இரு பகுதியாகப் பிரிக்கப்படும். கோடைராஜா கழிந்த பின் ஸ்கூல் வருஷம் ஆரம்பிக்கும். ஜுலை முதல் டிசம்பரில் வரும் கிறிஸ்தமஸ் விடுமுறை வரையில் லாங்டர்ம் எனப்படும். இந்த நீண்டப் பகுதியின் சம்பளம் 5 மாதத் தவணைகளில் கொடுக்கப்படும். பிறகு ஜனவரி முதல் கோடைகால விடுமுறை வரையில் "ஷார்ட்டர்ம் என்னும் குறுகிய பகுதியின் சம்பளம் மூன்றுமாதத் தவணைகளில் கட்டப்பட வேண்டும்.

——:(o):——

## கமலாம்பாள் சரித்திரம்.

ஒவ்வொருவரும் வைத்து வாசிக்க வேண்டிய தத்துவார்த்தமான ரசம் பொழியும் கதை. புதிய பதிப்பு வெளியாகவிருக்கிறது. விலை ரூபா 1-4-0 வி. பி. பிரத்தியேகம்.

100-க்குக் குறையாமல் வாங்குகிற வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் மைலாப்பூர் லலிதாலயத்திலிருக்கும் அ. ப. ஏஜென்ஸி காரியதரிசிக்கு எழுதவும்.

## The Mahalaya Fortnight.

### மஹாலய பக்ஷம்.

இப்பொழுது நடக்கும் காலம் மஹாலயபக்ஷம் என்று சொல்லப்படும். புரட்டாசி மாசம் கிருஷ்ணபட்சப் பிரமதை முதல் அமாவாசை வரையில் மஹாலய பக்ஷமாம். இந்தக் காலத்தில் மஹா பூதங்களெல்லாம் வாயுவில் லயப்படுந் தன்மை வாய்ந்ததாயிருக்கும். பிருதிவி அப்புவிலும், அப்பு தேயுவிலும், தேயு வாயுவிலுமாக லயித்து நிற்கும். தேவதைகளுக்கு எல்லாம் லயஸ்தானம் வாயு வாதலால் கரையேறாத பிதிர் தேவதைகளெல்லாம் மஹாலயமுண்டாவதைக் கண்டஞ்சி, அவரவர் சந்ததியாரிடம் வந்து காத்திருப்பார்கள் என்பது கொண்டு, பிராஹ்மணர் ஒவ்வொருவரும் மற்ற, வருணத்தாரும் கூட, அவரவர் பிதிர் திதியில் ஹிரண்மய சிரார்த்தம் செய்து பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் செய்வார்கள். இது சாமான்யமான ஐதிகபுத்தியோடு செய்கிறவர்களுடைய எண்ணம். இதன் தத்துவார்த்தம் என்னவென்றால், இந்த புரட்டாசி மாசத்தில் சூரியன் கன்யாராசியில் புகுந்து நிற்க, சந்திரன் மீனத்தைவிட்டு மேஷத்திற் பிரவேசிக்கவும், அதன் கலைகள் குறைந்து கொண்டுவந்து கந்நியா ராசியில் சூரியனோடு சேரவும் அது லயித்துப்போய் விடுகிறது. கந்நியாராசி காலபுருஷனுக்கு விசுத்தி ஸ்தானமாம். விசுத்தி வாயுசக்ரம் இருக்கும் ஸ்தானம். ஆத்மாவுக் கதிஷ்டானமான சூரியனும் மனதுக்கு அதிஷ்டான தேவதையான சந்திரனும் காலபுருஷனின் விசுத்தி ஸ்தானத்தில் வாயுசக்ரத்தில் வந்து சேரும் பொழுது ஸ்வபாவத்தாலே சந்திரன் சூரியனில் லயமாக (மறைய), தேவதைகளுக் கெல்லாம் அதிபனும் ஸ்ரீ விஷ்ணுவின் அம்சனு மாதலால் "சூரிய நாராயணன்" என்று பேர்பெற்ற ஆத்மாவுக்கு அதிர்ஷ்டானமான தேவதையும் வாயு சக்ரத்தில் அகப்பட்டுக் கொண்டதால், வாயுவின் ஸ்திரத் தன்மையினால் தன் பிரகாசம் மங்கி, வீரியம் குறைந்து, ஒருவித லயத்தை யடைகிறான். இதனால் அந்த அதிர்ஷ்டானதேவதையை ஆச்ரயித்திருக்கும் ஜீவன்களெல்லாம் வீரியங் குன்றி லயதசை யடைந்து நிற்பார்கள். பிதிர்க்கள் லீனமடைந்த ஜீவன்களாதலால் அவர்கள் இந்த லயத் தன்மையை விசேஷமா யுணர்வார்கள். லயயோகம் செய்து பழகியவர்களுக்கு இக் காலத்தில் லயசாமதி இயற்கையில் தானேவரும். ஸ்தூல சூக்ஷ்மகாரணமென்ற மூன்று தேஹமும் தன்னளவாலே ஒன்றிலொன்று காரிய காரணதோரணை யினாலே சுகமாய் லயிக்கும். ஸ்தூல தேஹமான இந்திரியக் கூட்டங்கள் மனதில் லயித்தால் பசி தாஹம், சீதோஷ்ணம் முதலிய தாபங்கள் தீர்ந்துபோம்.

சங்கற்ப விகற்பரூபமான மனசு புத்தியில் லயித்தால் அதன் சங்கல்ப சலனங்கள் குறைந்து சித்த விருத்தி நிரோதனத்துக்கு அனுகூல முண்டாகும். மனசு புத்தியில் லயித்தால், ஆத்ம புத்தியின் பிரகாசத்தினால், இன்ப துன்ப, சுகதுக்காதி துவந்துவங்களெல்லாம் மனதைப் பாதிக்காது விட்டகன்றுபோம். ஆத்ம புத்தியாகிய "மன் மனம்" எங்கே யிருக்கிறதோ, அங்கே வாயுவும் ஸ்திரப்பட்டு நிற்கும்.

"மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே."

என்பது திருமந்திரோபதேசம். கால புருஷனுடைய கண்ட ஸ்தானமாகிய விசுத்தியில் வாயு சக்ரஸ்தான மிருப்பதாலும், அங்கே மன்மனமாகிய சூரியனும், சங்கல்ப மனமான சந்திரனும் ஒன்றிலொன்று லயமாய் நிற்பதாலும், எல்லாவற்றிற்கும் லயஸ்தானமாகிய வாயுசக்ரத்தில் மனோலயமுண்டாக, அப்பொழுது மஹாலய தரிசனம் தானே சித்திக்கும். இந்த மஹாலய தரிசனம் நமக்கு 1906-ம் வருஷத்தில் முதல் முதல் சித்தித்த பொழுது அந்த வருஷம் ஸெப்டெம்பர் மாசத்துச் சஞ்சிகையில் அதனுண்மையை விளக்கிக் காட்டினோம். அதை அப்படியே இங்கு பிரசுரிக்கிறோம். வியாக்கியானம் வேண்டுவோர் 1906-வரு ஸெப்டெம்பர் மாசத்து விவேகசிந்தாமணியைப் பார்க்கவும்.



"மண்ணிலே பிறந்து தண்ணிலே வளர்ந்து
எண்ணிலே யிறந்துமனம் புண்ணாகி—மனப்
புண்ணிலே பிறந்து பண்ணிலே வளர்ந்து
கண்ணிலே மறைந்ததோர் பாம்பாகி-யென்
கண்ணிலே பிறந்துட் கண்ணிலே வளர்ந்து
விண்ணிலே மறைந்திரு வினைகடிந்து—தன்
கண்ணினைக் கொடுத்துக் கண்ணதைப் பெற்றவன்
காலாலுதைத்துக் கண்ணினைப் பற்றவும்-கால்வடி [வாய்
விண்ணிலே யிருந்து மண்ணிலே தோன்றி
மறைபொருளாலென் கண்ணப்பா நில்லென்ற- [காளத்திநாதனுயர்
குன்றிலே யிருந்துணர் வாயுலிங்கர் தானாகிக்
கர்ப்பூரதீபத்தைக் காற்றிலணையவிட்டு—எண்ணிலே [தானிருந்
தேகாந்தமாய் விளங்கும் வேதாந்த உண்மைதனை
நாதாந்தத் தேயிருந்து சித்தாந்த மாயுணரச்-சித்த [முணர்
வேதாந்த நாதாந்த சித்தாந்த மூன்றுமே தான்
சத்துச்சித்தானந்த சொரூபமதாய் நின்றதுகாண்."

(இதற்கு வியாக்கியானம் 1906-ம் வரு ஸெப்டெம்பர் மாசத்து விவேகசிந்தாமணியில் விஸ்தாரமாய் செய்யப்பட்டிருக்கிறது.)

---

விவேகசிந்தாமணி.—இது ஸ்ரீமத். சி. வி. சுவாமிநாதைய ரவர்களால் மாச மொருமுறை நல்ல செந்தமிழ் நடையிலெழுதி அச்சிடப்பட்டு வரும் ஓர் சிறந்த பத்திரிகை. இதில் யோகம், பக்தி, ஞானம் முதலிய சாதனமுறைகளும், நீதி போதம், வேதாந்த சாத்திரம், சுதேச விதேச சரித்திரங்கள், மகாத்மாக்களின் அமிர்த வசனங்கள் ஆகிய இவைகளும், வேறு பல மிகப்பிரயோசனமான விஷயங்களு மடங்கியிருக்கிறன. இதனை வாசிப்போர் பலவித அறிவிலும் வளர்ந்து வருவார்களென்பது நாம் சொல்ல வேண்டியதில்லை. ஸ்ரீமத். சுவாமிநாதையரவர்கள் தமிழ் ஆங்கில மென்னு மிருபாஷைகளிலும் அதி நிபுணர். நமது சமய சாஸ்திரங்களை இவர்போற் கற்றிருப்பவர்கள் மிகச் சிலரேயாவர். இவரது திறமை இப்பத்திரிகையில் இவர் எழுதிவரும் விஷயங்களால் மாத்திரமன்று இவர் ஆங்கிலத்தில் பல பத்திரிகைகளுக்கும் எழுதிவரும் விஷயங்களாலும் நன்கு விளங்கக் கிடக்கின்றது. யாழ்ப்பாணம் கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகையில் மெஸ் வெல்ப்ஸ் அவர்களின் உபநியாசங்களுக்கு விரோதமாய் நிகழ்த்தப் பட்ட ஆக்ஷேபங்களை நிராகரித்து நமதுஇந்துசாதன இங்கிலிஷ் பத்திரிகையில் எழுதி வருபவரிவரே. இவரெழுதிவரும் இவ்வரியவிவேகசிந்தாமணிப்பத்திரிகையைக் கண்ணுறும் அறிவுடையோர் அதற்குச் சந்தாநேயராகி அதனைப்பெற்று வாசியாது விடமாட்டார். அப்பத்திரிகையை நமக்கு ஒழுங்காயனுப்பி வரும் ஐயரவர்கட்கு நாம் நமது மனமுவந்த ஸ்துதி கூறுகின்றோம்.

—யாழ்ப்பாணம் இந்து சாதனம்.

—(*)—

## மண்டல பிராஹ்மணோபநிஷத்தில்

### நேர்ந்த அச்சுப்பிழைத் திருத்தங்கள்.

எப்ரல்-மே விவேகசிந்தாமணியில்

பக்கம் 47-வரி கீழிருந்து 3-வது. "பலத்தில்" என்பதற்குமுன் "கர்மத்தின்" என்று சேர்க்கவும்.
" 48-வரி-3. "இந்திரியங்களின் பொருளாகிய விஷயங்களினின்றும் மனதைத் தடுத்தல் பிரத்தியாகாரமாம்" எனத் திருத்துக.
" 48-கீழிருந்து 9-வது வரி. "நிவிருத்தியா." என்பதில் யாவை எடுத்து விடுக.
" 48- " 8 " - "காதின்" என்பதற்கு "காதுகளின்" என வைக்கவும்.

| | |
|---|---|
| " 48-கீழிருந்து1-வரி - | "ஜ்யோதிக் கூட்டங்கள்" என்பதை "ஜ்யோதிக்கிரணங்கள்" என்று மாற்றவும். |
| " 49-வரி-3-வது வரி- | "சந்திர" என்பதிற்கு பதிலாக "சந்திரர்களைப்போலும்" என்று எழுதவும். |
| " 49-கீழிருந்து 3-வது வரி- | "சிரசுக்கள்" என்பதை "சிரசுக்குள்" என்று மாற்றவும். |
| " 50-கீழிருந்து 3-வது வரி- | "சதா" என்பதை "சுதா" என்று திருத்தவும். |
| " 50 மூன்றாவது குறிப்பில்- | "புத்தி" என்பதற்கு முன், "மஹத் அல்லது" சேர்க்கவும். 'ஆத்தமா' என்பதை 'ஆத்மா' எனத் திருத்தவும். |
| " 51-வரி-6. | "அப்பியாசத்தால்" என்பதன் பிறகு "தாலு மூலத்தில்" என்று சேர்க்கவும். |
| " 51-வரி-7. | "ஜ்யோதி" என்பதற்கு பின்வரும் குறிப்பைச் சேர்க்கவும்:— "தாலு மூலத்திலிருந்து பனிரெண்டங்குலங்களின் முடிவில் இருள் தோற்றமுண்டா மென்றும், அவ்விருளின் நடுவில் பார்வையை நிறுத்த அகண்ட மண்டல ஜ்யோதி பிரகாசிக்குமென்றும், அதனால் மனம் ஸ்திரமாகி அதன் வழியாய் வாயுவும் ஸ்திரமாகுமென்றும், ஹடயோகத்தை நூறுவருஷகால மப்பியாசம்செய்தாலும் ராஜ யோகத்தாலாவது போல் மனம் வாயு இவை இரண்டின் ஸ்திரத்தன்மை ஏற்படாதென்று உரையாசிரியர் கூறுகிறார்." |
| பக்கம் 51-வரி-22 - | "பார்வை" என்பதை "பாவனை" யென்று திருத்தவும். |
| ,, 51. முதல் குறிப்பு. - | "பிரதிபத் என்று பிரதமைதிதிக்குப்பேர்" என்று திருத்தவும். |
| ,, 52 முதல் குறிப்பு—வரி 2. | "பொருளும்" என்பதை "பொருளுமற்று" என்று மாற்றவும். |
| ,, 52 3-வது குறிப்பு-வரி 2. | "அற்ற சுத்த" என்பதை "என்கிற ஹம்ஸ" என்று திருத்தவும் |
| ,, 53 கீழிருந்து வரி 7, 6. | "ஞாபக, ஞாப்தி" என்பதை "ஞாபகம், ஞப்தி" என்றுதிருத்தவும். |
| ,, 54 வரி 9. | "பிரஹ்மமாகிவிட்ட" என்பதை 'பிரஹ்மமாகிய' என்று திருத்தவும். |
| ,, 54 வரி 12. | "பிந்துவை" என்பதற்கு பின்வரும் குறிப்பைச் சேர்க்கவும்:— "பிந்து என்பதின் பொருள் விவேகசிந்தாமணி இந்த தொகுதியில் 14-வது பக்கத்தைப்பார்க்க விளங்கும்." |
| ;, 54 வரி 13. | "அஜாட்ய" என்பதற்கு பிறகு "சஹஜ" என்று சேர்க்கவும். |
| ;, 54 கீழிருந்து வரி 7. | "பிரகாசமாயும்" என்பதை "பராகாசமாயும்" எனத்திருத்தவும். |
| " 55 வரி 3. | "கழிந்தவனுகி," என்பதற்குப்பிறகு "எப்பொழுதும்" என்றுசேர்க்க. |
| ,, 56 வரி 8. | "யடையப்" என்பதை "யடைவதால்" என்று திருத்தவும். |
| ,, 56 வரி 12. | "துவனியெனப்பெயர்:" என்பதை "துவனியெதோ," என்று திருத்தவும். |
| ,, 56 முதல் குறிப்பு வரி 1. | * "சக்ர" என்பதை "சக்ரம்" என்று திருத்தவும். |
| ,, 56 முதல் குறிப்பு வரி 1. | * "த்ரலக்ஷியம்" என்பதை "த்ரிலக்ஷியம்" எனத்திருத்தவும். |
| ,, 56 இரண்டாவது குறிப்பு. | "வஸ்துவாகிய" என்பதை எடுத்து விடவும். |
| " 56 3வது குறிப்பு. | "த்வநி" யென்பதை "த்வநி:" என்றுவிஸர்க்கம் சேர்த்துதிருத்தவும். |

* இப்பொழுது அச்சிடும் ஆபீஸில் கிரந்த எழுத்துக்கள் இல்லாமையால் தமிழ் எழுத்துக்களையே உபயோகிக்க லாயிற்று.

*"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief, that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you can find it." But,*

*"Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 3- DEC 1910 MADRAS



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்யமே ஜெயா—**SATYAMEVA JAYATI.**

புத்தகம். 18.] 1910ஆ நவம்பர்மீ, சாதாரணஆ கார்த்திகைமீ [சஞ்சிகை. 8.

# HARISCHANDRA—THE MARTYR TO TRUTH.

## *(A New Version.)**

"Truth is Supreme; that which is Supreme is Truth; on Truth the Universe is based. Think Truth, Speak Truth Act Truth".—*Taittiriyopanashad.*

"The episode of Harischandra is one of the greatest and most valuable possessions of ancient Indian Ideal. I have attempted......to present in modern dramatic form to my countrymen of the Tamil land.........I have......attempted to give the story a somewhat new setting......The story, it struck me, as told in our books, as handed by tradition or as acted in the street or the stage, almost borders on the burlesque.........There is no real tragedy in mere physical or even in mental suffering, character can only be overcome by itself, and the consummate tempter is a casuist.........In a word my object has been to present the story in a modern form. Primeval art, it will be remembered, mostly delighted in mass and number! Complexity of conception and subtlety of suggestion were foreign to it. I confess to having consciously attempted to modify the story in details, but whether the modification has been an improvement it is not for me to discuss."—*Extracts from the author's preface.*

* A Drama in Tamil by S. Bavanandam Pillai, F. R. H. S. (Lond.) and M. R. A. S. (Lond.) Demy 8vo pp. xxxviii—361, with frontispiece of the author, S. P. C. K. Press, Madras. Ordinary edition (paper cover) Rs. 2.

# சத்தியவாக்கு அரிச்சந்திரன்.*

## "சத்தியம்வத: தர்மம்சர"

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினி நமக்குளதென நினைக்குங்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றான்
மதியிழந்து தன் வாயிழந்தருந்தவன் மறைத்தான்."—அரிச்சந்திரபுராணம்.

"மநஸ்யேக வசஸ்யேக கர்மண்யேக மஹாத்மநாம்
மநஸ்யந்யத் சவஸ்யந்யத் கர்மண்யந்யத் துராத்மநாம்."

சத்திய வாக்கு அரிச்சந்திரனும் அயோத்தி மன்னன் கதையைக் கேட்டுக் கரைந்துருகாதார் இல்லை. "சத்தியமேசதம்" என்பதையும் "சத்தியமே ஜயம்" என்பதையும் காரியவுலகில் வற்புறுத்திக் கூறுவான் புராணவாயிலாகப் பெரியோரால் போதிக்கப் பட்டதோர் உண்மையுணர்த்தும் உத்தமக்கதை அரிச்சந்திர புராணம் என்பது எல்லாரும் அறிந்த விஷயம். உண்மையை யுணர்த்த வேண்டில் உள்ளதையுள்ளபடி யுரைக்கவேண்டும். ரிஷிகள் ஸ்தூல சூக்ஷ்மகாரண மென்னும் மூவகைத் தோற்றமாம் திரிலோகத்தையும் அறிந்தவர்களாதலால், அவர்கள் பிராகிருத தர்மங்கள் அனைத்தையும் நன்றாயறிந்தவர்களா மென்பது சொல்லாதே அமையும். அப்படிப்பட்டவர்கள் சத்தியத்தையே லக்ஷியமாகக் கொண்டுள்ள ஒரு உண்மையைக் காரண காரிய தோரணையாக வெடுத்துரைக்குங்கால் ஒருதலைச்சார்பாயிருந்துரைத்தல் அவர்களுக்கு அழகன்றாம். இங்கே "லக்ஷியம்" என்பதென்ன வென்று சற்று விசாரிக்கத் தக்கது.

லக்ஷியமென்பது லக்ஷணங்களுக் கெல்லாமிருப்பிடமானது. லக்ஷணங்களெல்லாம் பொருந்தப் பெற்ற தொன்று எதுவோ அதுவே திரிபுர சுந்தரியாய் திரிலோகத்திலும் அழகு நிறைந்து - அழகுருவேயாகி நிற்பது. இப்படியுள்ள லக்ஷணங்களெல்லாம் பொருந்தி யமைந்ததான உத்தமலக்ஷியம் (Supreme Ideal) மூவுலகுக்கும் ஒன்றேயாம். அந்த ஒன்றே யுண்மையாயுள்ள அழகு. அந்த அழகே "உண்மை"—"சத்தியம்:" அச்சத்தியமே "அழகு" இப்படியாக அழகும் சத்தியமும் அபேதமானது.

"Truth is Beauty : Beauty is Truth. That is all
You know on earth and all ye need to know."
—*Keats.*

சத்தியமே அழகு: அழகே சத்தியம்: "த்ரிஜகத்" ரூபமான உலகில் அறியத்தக்க தெல்லாமும், அறியவேண்டிய தெல்லாமும் அவ்வளவில் அடங்கும். அந்த அளவு ஒன்றுதானும் அளவுகடந்தது. அப்படியென்றால் (தற்போத) அறிவினாலறிந்து அளவிடப்பட முடியாதது.

* அரிச்சந்திரன்: ச. பவானந்தம் பிள்ளை அவர்கள் இயற்றியதோர் நவீன நாடகம்.



அதற்குப்பேர் "ப்ரஜ்ஞாபாரமிதா" என்றும் "ஆரியப்ரஜ்ஞாபாரமிதா" என்றும்சொல்லுவர் மேலோர். அவள் புத்தபகவானுக்குத் தாயும் தாரமுமாவள். அப்படியென்றால் ஸர்வஜ்ஞத்துவம் தானும் அவளிலே பிறந்து அவளையே ஆச்ரயித்து வளர்ந்து, அளவிறந்த ப்ரஜ்ஞானகனரூபிணியான அவளில் தானே யொடுங்கும் என்பது மேலோர்தம் ஸ்வானுபவமாம்.

"ஓங்காரி யென்பாளவளொரு பெண்பிள்ளை
நீங்காதபச்சைநிறத்தையுடையவள்
ஆங்காரியாகியேஐவரைப்பெற்றிட்டு
றீங்காரத்துள்ளேயினிதிருந்தாளே"

யென்பது திருமந்திரோபதேசம். ஜகத்காரணியும் ஜகத்ரக்ஷணியுமான (தாயும் தாரமுமான) அவளே ஜகத்பூரணியுமாம்—ஜகமெங்கும் பூரணமாய் நிறைந்திருப்பவள்: அதாவது, ஜகத்தைத் தன்னுள் அடக்கிக் கொள்பவள். இந்த ஜகமெல்லாம் ஈசுவரசங்கல்ப மாத்திரத்தினாலே யுண்டான தாகையால், நாமரூபப்பிரபஞ்சமான உலகை "சங்கல்பமாத்ரமான"தென்றும் அந்த சங்கல்பம் பிரஹ்மகல்பம் வரையிலிருந்தாலும் கடைசியில் நிலைபற்றதாகையால், அதுகொண்டு "ஜகம்போய்"என்றும் சொல்லுவர் மேலோர். அவர்கள் காலாதீதத்திற் "போய்" என்று சொல்வதை உண்மை விவேக மில்லாதார் கால பரிச்சேதத்திலும் பொய்யென்று தப்பர்த்தம் செய்துகொண்டு அநர்த்தம் விளைத்து ஆர்ப்பாடம் செய்வதுண்டு. இது "நிலையில்லாக்காரியத்தை நிலை நிறுத்த வேண்டாம்" என்னும் பெரியோர் மூதுரைக்கு விருத்தமா யிருப்பதால், விவேகிகள் இவர்கள் செய்யும் கண்டதுண்ட வாதத்துக்குச் சரியாக எதிர்வாதுரையாது வாளாவிருப்பர். இதனால், பூர்வகாலத்து லக்ஷியங்கள் உயர்ந்தனவாயினும் லக்ஷணக் குறைவுள்ளனவென்று நவீனநாகரிகர் நயந்துரை கூறுவர். இது நயவஞ்சகமேயன்றி உண்மையுரையாகமாட்டாது. ஏனெனில் லக்ஷணக் குறைவுண்டானால் லக்ஷியம் மூளியாய்ப் பூரணங் குறைந்துபோம். பூரணமில்லாத காரணம் ஒருக்காலும் "லக்ஷியம்" ஆகமாட்டாது.

ஆகையால் அரிச்சந்திரபுராணத்துக்கு லக்ஷியார்த்தமான சிறப்புண்டென்று ஒப்புக்கொண்டால், பிறகு வாச்சியார்த்தங்களில் குற்றங்கூறி பேதபாடம் செய்வது ஒவ்வாததாகும். அரிச்சந்திர புராணத்தை ஆதாரமாகக் கொண்டு அதன் விஷயங்களை மாற்றி நவீன நாடகமியற்றலாகா தென்பது நம் கருத்தல்ல! இதை நன்றாக உணர்ந்து உட்கொண்டு உறுதி பாராட்டல் வேண்டும்.

அரிச்சந்திர புராணம் லக்ஷியார்த்தம் பொருந்திய புராதன சரிதைகளில் ஒன்று என்று ஒப்புக் கொண்டால், மனதில் கல்மஷம் (குற்றம்) ஏற்பட இடங்கொடாமல் அஃதையுள்ளபடி யாராய்ந்து பார்க்கவேண்டியது விவேகிகளின் கடமையாம். லக்ஷியார்த்தத்துக்குப் பொருத்தமான வாச்சியார்த்தமும், வாச்சியார்த்தத்துக்குப் பொருத்தமான பதார்த்தமும் ஆக இப்படி வாக்குப் பொருத்தம் பூரணமாயமைந்திராவிட்டால், அப்பொழுது அதைக் குறை தீர்த்துக் குற்றங்கடிந்து நிறைபொருள் பொருந்த நிர்ணய விதிப்படி பாடபேதம் கற்பித்துத் திருத்த வேண்டிய தவசியமேயாம்.

"மறைபொருளா லோதியவோர் மந்திரத்தை வெளியிடாதே!
நிறைபொருளா லர்ச்சித்தோர்க்கு நியமவிதியினேரேகூறு!
குறைபொருளாற் குண்மையோதிற் குற்றம்வரும் நற்றம் போமா
விறைமேலானை புலம்பாதே யென்றியம்பினு ளென்னம் பாள் வாலை."

என்பது வாகீசுவரி ஆஜ்ஞையாக விருக்கிறபடியாலே பெரியோர்கள் புராண மெழுதுவதில் பூரணத்தைக் காரணத்தில் ஒளித்துக் காரணத்தைக் காரியத்தி லொடுங்கச்செய்து காரண காரிய தோரணை(தொடர்ச்சி)யாக உண்மையை யோதிக்கொண்டு போயிருக்கிறார்கள். புராணத்தின் நோக்கமெல்லாம் காரணமான பூர

ணத்தைக் காரியமான சீரணத்திற் பொருந்தப் பொருத்திக் காட்டுவதேயாம். இது வெள்ளிடை மலைபோல் சிறுபாலாரும் அறியச்செப்பியிருக்கின்றார் மேலோர். கல்விகற்று வல்லுனரான வித்வத் சிரேஷ்டர்கள் நாம் பழம்பாட்டிக்கதையை யெடுத்துக் காரணம் காட்டுகின்றோமென்று நம்மை எள்ளாது, உள்ளத்தை யுணர்வான் சற்று மனத்தை நிறுத்திப் பார்ப்பாராக! கதையின் நோக்கமெல்லாம் என்னவெனில் :—

"கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஒருழக்காம்
ஒருழக்கில் புல்முளைத்தது!
புல்லைக்கொண்டு பசுவுக்குப்போட்டேன்
பசுமாடு பால்தந்தது
பாலைக்கொண்டு பாட்டியிடம் கொடுத்தேன்
பாட்டி அப்பம் தந்தாள்!
அப்பத்தைக்கொண்டு காக்காய்க்குப்போட்டேன்
காக்காய் கரிதந்தது!
கரியைக்கொண்டு கருமானிடம் கொடுத்தேன்
கருமான்வந்து செம்புதந்தான்
செம்பைக்கொண்டு பூச்செடிக்கு ஜலம்வார்த்தேன்
பூச்செடி புஷ்பம் தந்தது!
புஷ்பத்தைக்கொண்டு பிள்ளையாருக்கு அர்ச்சித்தே
பிள்ளையார் எல்லாம் தந்தார்." [ன்

கதை கதையாகச் சொல்வதெல்லாம் காரணமாமந்தப் பூரணத்தைக் காட்டவே யாதலால் "கதை கதையாம் காரணமாம்" என்றார். அனந்தமாய் அளவற்றதாயுள்ள காரண பூரணத்தின் ஒரு "கலை"—"ஒருழக்காம்" அந்தக் கலாரூப மாத்திரையில் நீங்காத (பிரணவ ஸ்வரூப) பச்சையாம் "புல்" முளைத்தது. அந்தப் பிரணவ காரணத்தின் காரியமான "புல்லை"ப் பாசபந்தப் பசுவாம் ஆங்கார ஸ்வரூப ஜீவனுக்குப்போட்டேன். அந்தப் பசு பிரணவப்புல்லை யுட்கொண்டு தற்போத மென்னும் "நாதப்பால்" தந்தது. அந்தத் தற்போதம் தானும் அவித்தையாம் "பாட்டி"யிடம் சேர, பாட்டி "புரியஷ்டக" ரூப "அப்பம்" தந்தாள். "புரியஷ்டக" ரூப அப்பத்தைக் காமசங்கல்ப ரூப அசுத்தமனமாம் "காக்கை" கொள்ள, அது தாமஸரூப "கரி" தந்தது. தாமஸரூப "கரி"யானது கர்த்துருத்துவ ரூப "கருமா"னிடம் சேரவும் அதில் ராஜஸகுணம் சேர்ந்து கடரூப செம்பாயிற்று. கடரூப "உடலை"க்கொண்டு பூச்செடிக்கு ஜலம் விடுவதாம் சுபவாசனையை வளர்க்க அது "தஹராகாச"ரூபப் "பூ"த்தந்தது. தஹராகாச மலரைக்கொண்டு பிள்ளையாரைப் பூஜைசெய்ய அவர் ஸர்வ சித்தியையும் ("எல்லாம்") கொடுத்தார். அதைக்கொண்டு ஜீவன் கிரமமுத்திமார்க்கத்தில் ஸர்வஜ்ஞனாகிக் கிருதகிருத்தியஞ்ஞன் என்பது கருத்து.

இப்படியாக எல்லாக்கதைகளும் உண்மையுணர்த்தல் ஒன்றையே நோக்கமாகக் கொண்டிருக்க அது பூர்வீகமானதுபற்றி இக்காலத்துக்குப் பொருந்தா துள்ளனவற்றை விலக்கி நவீன நடைக்கேற்றதைச் சேர்த்துத் திருத்தியிருக்கிறேனென்கிறார். அரிச்சந்திரன் என்னும் நவீன நாடகமியற்றிய நண்பர் நவீனமான திருத்தங்கள் செய்ததைப்பற்றி நாமொன்றும் குறை கூறவில்லை. புராதனமான கதை இக்காலத்துக்குப் பொருந்தாதென்று அதற்கோர் இழுக்குரைத்தது பூர்வ கிரந்தத்துக்குப் பொருந்தாதொன்றையே யெடுத்துக்காட்டத் துணிந்தோம். ஏனெனில் இவர் இக்காலத்துக் கேலாதனவென் றுரைப்பதற்கான காரணமெல்லாம் இக்காலத்தாரது அறியாமையைக் காட்டுவதன்றி பூர்வ கிரந்தத்திலுள்ள குறையைக் காட்டுவதாகவில்லை. இவர் "இயற்கை யமைப்புக்கேற்ப" வென்று கொண்டனவெல்லாம் பிராகிருத தர்மத்துக்கு விரோதமென்று தத்துவ தரிசன வகையானே எளிதிற்காட்டலாம். "ஐம்பொறி புலன்களும் கண்டதே காட்சி" யென்பது இக்காலத்தின் "இயற்கை யமைப்புக்கேற்ப" தென்று கொள்வரேல், அப்பொழுதும் (Hypnotism) முதலான வசீகர வித்தைகள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் "விசுவாமித்திர சிருஷ்டி" மட்டும் ஏலாதென்று சாதிப்பதெப்படி?



OFFICE OF THE ... REGISTERED 3- ... 1910 ... ADRAS

இவர் மைத்திரேயோபநிஷத் வாக்கியமொன்றை யெடுத்தாண்டிருப்பதோடு அதன் கருத்தையே உட்கொண்டு பின்வருகிறபடி அவையடக்கத்துக்குப்பின் "கட்டுரை" கூறியிருக்கின்றார்:—

"சத்திய மதற்கு மேலாந் தருக்கமு மில்லை நீங்காச்
சத்திய மதற்கு மேலாஞ் சாத்திரங் கணித மில்லை
சத்திய மதற்கு மேலாஞ் சமயமு மில்லை யொன்றுஞ்
சத்திய மொன்றே வீடு தந்திடு தகைமைத் தாமால்."

சத்தியமொன்றே சித்திகளெல்லாமளிக்குமென்பதையிவர் இக்காலத்தார் நம்பமாட்டாரென்றெண்ணினர் போலும். "ஜோதிரந் தர்க்கதம்மனஃ" என்று கூறிய ஜோதிர்மனஸானது "த்ரிஜகத் சிருஷ்டி ஸ்திதிவ்யஸந கர்மகிருது" என்ற சுருதி வாக்கியப்படி "திக்ஜகத்" ரூபமான எல்லாவற்றையும் படைத்துக் காத்து அழிக்கும் சக்தி வாய்ந்ததென்பதை யிவர் அறியார்போலும். "கலி, கலி" யென்று கலிகாலத்தின் மேல் பழியைப்போட்டு, இக்காலத்தார் தம் அறியாமையை யெல்லாம் காலபலனைப் பாவித்துக் காலசக்ரத்தில் அகப்பட்டுழன்று கதியிழந்து விதிவழி பற்றிச் செல்கின்றார்கள். விதி விதி யென்றால் என்ன? தன்னுடைய பூர்வ சங்கல்பபலனே யன்றி வேறு தனக்கு அந்யமான விதியொன்றுமில்லை. நன்மை விதைத்தால் நன்மை விளையும்; தீமை விதைத்தால் தீமை விளையும்; மனிதன் நைஷ்கர்ம்ய சித்தி பெற்றக்கால் விதியை வென்று மதியுடன் கூடலாம்.

"தான்முன்னஞ் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னஞ் செய்தங்குவைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னஞ் சென்னி குறிவழியே சென்று
நான்முன்னஞ் செய்ததே நன்னில மானதே."

என்பது திருமந்திரோபதேசம்.

அரிச்சந்திர புராணப் பூர்வ கிரந்த வரலாறு ஏளனத்துக்கிடமானதாயிருக்கிறதென்பது நம் நவீன நூலாசிரியர் துணிபு. இப்படி நினைப்போர் இவர் ஒருவரேயன்றி இன்னும் அனேகர் இருக்கின்றார்களென்பது நாமறிந்ததே. ஒருக் காலத்தில் நாமும் அப்படியே நினைத்ததுண்டென்று ஒப்புக்கொள்வோம். "நானறியாப் பருவத்தே" நினைத்ததெல்லாம் "என்னையானறியப் பொய்யாப் போனதை யிங்கே மறைக்கவேண்டிய நிமித்தமொன்றுமில்லாமையால் நாம் நினைத்ததுங் கூடத் தவறே யென்று எல்லாம் வல்ல தெய்வத்தின் முன்பாகக் கன்னத்தில் போட்டுக்கொள்ள சித்தமாயிருக்கின்றோம். ஆனால் மற்றோரெல்லாரும் நம்மைப்போல்தானே தப்பெடுத்துக் காட்டவும் தவடையில் போட்டுக் கொள்வார்களென்று நாம் எண்ணவில்லை. அவரவர்க்கும் அனுபவம் முதிருங்கால் உண்மை தானே வெளிப்படும்.

"என்னை யறிய விசைவித்த வென்னந்தி
யென்னை யறிந் தறியாத விடத்துய்த்துப்
பின்னை யொளியிற் சொருகிப் புறப்பட்டுத்
தன்னை யளித்தான் தற்பர மாகவே."—திருமந்திரம்.

"பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்க
ளுற்றிருந் தாரை யுலைவன சொல்லுவர்
கற்றிருந் தார்வழி யுற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றியார் பெரும் பேறே."

—திருமந்திரம்.

வைரத்தை வைரத்தாலறுக்க வேண்டுமே யன்றி வேறொன்றால் அறுக்க முடியாது. அதே மாதிரி குணத்தைக் குணத்தால் வெல்லலாமே யன்றி வேறொன்றால் வெல்ல லாகாது. அரிச்சந்திரனைப் பொய்சொல்லத் தூண்டுவான் சபதங் கூறி முன்வந்த விசுவாமித்ரர், அவனைப் பொய் யொன்று சொல் என்று பன்முறையுந் தூண்டினது பதடித்தன மென்கிறார் நம் நவீன கிரந்தகர்த்தா.

"விசுவாமித்திர சிருஷ்டி"யை நவீன நாகரிகக் கொள்கைக் கொவ்வாதென்று தள்ளினவர் "விச்வாமித்ர சூழ்ச்சியையும் பதடித்தனத்தோடு சேர்ந்ததாகக் கூறுகின்றார்.

சீத்தலைச் சாத்தனார் "மணிமேகலையில்"

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற
பொய்யிலாப் புலவன் பொருளுரை தேறாய்."

என்று சொல்லியதோர் மந்திரோபதேசத்தை விசுவாமித்திரர் சூழ்ச்சிக்குப் பொருந்த மாற்றி மந்திரமா யுபதேசிக்க மனமுற்றும்,—

"குறைபொருளார்க் குண்மையோதிற் குற்றம் வரும் நற்றம் போமல், இறை மேலாணை புலம்பாதே யென்றி யம்பினளென்னம்பாள்" சொற்கேட்டு சொல்லாமற் சுட்டிக்காட்டி விடுவதே யுத்தமமென்று உள்ளெழுந்தவாரியாய்க் கூறி விட்டோம்.

"விசுவாமித்ர சிருஷ்டியின்" உண்மையுணர்ந்தால் "விசுவாமித்ர சூழ்ச்சியின்" சூக்ஷமம் விளங்கும். விசுவாமித்ர சூழ்ச்சியில் மூடத்துவமுமில்லை : அரிச்சந்திரன் நடத்தையில் அசட்டுப் பிடிவாதமுமில்லை.

சத்தியவிரதம் பூண்டார் ஒழுக்கத்தைப் பரிசோதிக்கப் புகுந்தான் விசுவாமித்திரன். தான் படாத பாடும் பட்டுத் தபஸியற்றித் தடுமாறித் தேறினவராதலால், ஸத்தியவிரதம் பூண்டொழுகுவார் உலகிலில்லை யென்பது அவருடைய மதம். இம்மதத்தைக் குலைப்பான் வசிஷ்டர் "உண்டென்று" சாதித்து விசுவாமித்ரரிடமுள்ள ரஜோகுண வாஸனையை வெளியிடுமாறு பந்தயம் போட்டுக் கொண்டார். தேவ சபையில் இந்திரன் முன்பாக இவ்விரு ரிஷிகளும் சபதம் கூறிக் கொண்டதை யேற்றுக்கொண்ட நம் கிரந்தகர்த்தாவுக்கு "விசுவாமித்ர சிருஷ்டி"யை யேற்றுக்கொள்வதும் "விசுவாமித்ர சூழ்ச்சி"யின் சூக்ஷமத்தை யுணர்வதும் "இக்கால வமைப்புக்கேற்ப" வில்லை யென்று தள்ளும்படி நேரிட்டது. "மலையை விழுங்கிய மஹாதேவருக்கு உலக்கை தொண்டையிற் சிக்கிக் கொண்ட கதை" யாகத் தானிருக்கிறது. ,Ideal" என்று சொல்வது குப்பை கூளம் சேர்ந்த குவியல் இல்லை. இலக்ஷணங்களெல்லாம் நன்கமையப் பெற்ற இலக்ஷியமாமது; அதில் ஒரு பாகத்தைத் தள்ளவும் கொள்ளவும் இடமில்லை ! எல்லாம் அழகு பொருந்த அமைந்திருக்க அதை மாற்றினால் அதன் அழகு குலையாதா? "யாரே அழகுக் கழகு செய்வார்?" அப்படியே அழகு செய்தாலும், "அழகுக்கழகு செய்தாலது பொருந்துமா?" பொருந்தாதென்பதே பெரியோர் அனுபவமும் நமது சித்தாந்தமுமாம். "என்னிஷ்டம்! அதற்குயார் இரண்டு சொல்வது?" என்று கேட்டால், அதற்கு பதில் சொல்ல நமக்கு வாயில்லை. "வாயில்லா நாயனாரே" பதில் சொல்லவேண்டும்.

"கொட்டுக் குந்தாலியிரண்டே யிரண்டிற்குங்
கொட்டுக் குந்தாலிக்கும் பாரை வலிதென்பர்
கொட்டுக் குந்தாலிக்கும் பாரைக்கு மூன்றுக்கு
மிஷ்டம் வலிதென்பரீச னருளே !"

என்பது திருமந்திரோபதேச மென்று மட்டும் எடுத்துரைக்க வல்லேம்.

நான்முகத்தே பூர்வகிரந்தத்தின் கதையைத் திருத்துவது அவசிய மாயிற்றென்று சொல்லும் அவருடைய ஆக்ஷேப சமாதானங்களுக்கெல்லாம் ஒரே திருமந்திரத்தில் பதிலுரை காணலாம்:—

"தத்துவ மெங்குண்டு தத்துவனங் குண்டு
தத்துவ மெங்கில்லை தத்துவனங் கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மையை யறிந்தபின்
தத்துவ னங்கே தலைப்படுந் தானே.',

பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும். மெய்யைச் சொன்னாலும் மருளின்றிச் சொல்லவேண்டும். "அருளிலார்க்கில்லை யவ்வுலகம்: பொருளிலார்க்கில்லை யிவ்வுலகம்" என்பது பழமொழி. அருளிலார்க்கு அத்தனுலகு (Kingdom of God) இல்லைபோல், "பொருளிலார்க்கு"—லக்ஷியநாட்ட மில்லாதவர்களுக்கு இவ்வுலக ஞானம், அதாவது 'தத்துவஞானம்' இல்லையாகும்.

ஓம் தத்ஸத்.



## Easy Lessons for the Young.

*(Copyright.)*

### 1. How to Control the Uncontrolable Mind.

### சிறுவர்க்கான ஹிதோபதேசங்கள்.

### 1. அடங்காப்பிடாரியை அடக்கும்விதம்.

"உள்ளதெல்லாம் ஒன்றே." அப்படி யென்றால் என்ன? மிட்டாய்க்கடையில் விதம்விதமாய் செய்து வைத்திருக்கும் நாமரூப பேபதங்களான மிட்டாய்களெல்லாம் கடையிலிருக்குமட்டும், காசுகொடுத்து வாங்கும் வரையில், பலவேறு தினிசுகளாகவிருந்தாலும், வாங்கி வாயில் போட்டுக்கோண்டு பார்த்தால் எல்லாம் ஒன்றே—ஒரே தித்திப்பாய்த்தானிருக்கிறது நிஜம். இது எல்லாக்குழந்தைகளுடைய அனுபவத்துக்கும் ஒத்திருப்பதால், இதற்கு பிரத்தியக்ஷப் பிரமாணம் என்று பேர். (மிட்டாய்க் கடையில்) "உள்ளதெல்லாம் ஒன்றே" யென்னும் அறிவு "அனுபவஞானம்' என்று சொல்லப்படும். அஃதேபோல, இந்த பூலோகமுதல் சந்திர சூரியாதி கிரகங்கள் சேர்ந்த இந்த சூரியமண்டலமும், அதற்கப்பாலுள்ள நக்ஷத்திர மண்டலங்களும் நாமரூபத்தால் பேதப்பட்டாலும், அவைகளைத்தின்னுபார்க்கும் குழந்தைகளான அனுபவஞானிகளுக்கு அவையெல்லாம் ஒன்றேயாக விருக்கிறது நிஜம். அந்த ஒன்றும் என்னமா யிருக்கிறதென்றால், சர்க்கரையின் தித்திப்புப்போல் அனுபவிக்க மதுரமாயிருக்கிறது. இதற்கு "மதுரபாவம்" என்றுபேர். சிறு குழந்தை கடையிலுள்ள மிட்டாய்களை யெல்லாம் பார்த்து 'இதுவேணும், அதுவேணும்' என்று அழுது பல மிட்டாய்களைத்தின்னு ருசியறிந்து கடைசியில் எல்லாம் ஒரே தித்திப்பு என்று தெரிந்தபின் எப்படி அதன்ஆசையடங்கிவிடுகிறதோ அப்படிப்போல, அபயவரதஹஸ்தங்களோடு கிளிமொழிபேசிக் கனிமொழிகாட்டும் தடஸ்தாகாரமான தேவியின் உட்டியாணபீடமான சிற்றிடைமருங்கில் விளங்கும் சிற்றம்பல வீதியிலே உட்டியமசக்தியினாலே எடுத்துக்கொண்டு போகப்பட்ட அருட்குழவிகள் சூரிய சந்திராதி நக்ஷத்திர மண்டலங்களையெல்லாம், 'இதுவேணும், அதுவேணும்' என்று அருட்தாயிடம் அழுதுகேட்டு வரப்பிரஸாதமாய்ப்பெற்றதோர் உலகப்பேறுகளை யெல்லாம் உண்டு ருசிபார்த்தபின் இவையெல்லாம் திருவருள் தானேயென்று உணரும் உணர்ச்சி யொன்றுண்டு. அதற்கு உள்ளுணர்வு என்றுபேர் இந்த உள்ளுணர்வில், கள்ளம் கபடு இல்லை. மாசுமறு இல்லை. சுத்தஸ்படிகம்போல் அது ஒன்றிலும் ஒட்டாது எல்லாவற்றின் பிரதிபிம்பத்திற்கும் இடங்கொடுத்துக் கொண்டு எதனாலும் கல்மஷப்பட்டதாகாமல் எதையும் கல்மஷப்படுத்தாமல் ஜோதியையுண்டு ஜோதிர்மயமதாய் ஜ்வலித்துக் கொண்டிருக்கும். இந்த உள்ளுணர் வுடையாருக்கு "எல்லாம் ஒன்றே" என்கிற ஞானம், மிட்டாய்களை விதம் விதமாய் வாங்கித் தின்னனுபத்த குழந்தைக்கு "மிட்டாயெல்லாம் ஒன்றே" என்கிற அனுபவஞானமுதயமாகிறாற் போல, தானே உதயமாகும். அந்த ஸ்வயஞ்ஞானேதயம் ஆகும்பொழுது, அவர்களுக்கு எல்லாம் அவர்கள் உள்ளத்திற் பிரகாசிக்கும் திருவருட்பிரகாச மயமாய் விளங்கும். அந்த திருவருட்பிரகாசமே திரிபுரதஹநமஹாஸம்ஹாரகாலத்திலும் மஹாப்பிரளயகாலத்திலும் ஆனந்தத் தாண்டவம் செய்யும் அம்பிகாபதியின் திருமேனியில் விளங்கும் "திருநீறு" என்று சொல்லும் விபூதி மஹாத்மியமாய் விளங்கும்.

மஹாப்பிரளயத்திற்குப் பின் உண்டாகும் மஹாசிருஷ்டி காலத்தில் அந்தத் "திருநீறு" தானே "திருவருட்சக்தி" யாகத்தோன்றி ஜீவ

ன்களின் எஞ்சின கர்மங்கள் அனுபவித்துத்
தொலையும் பொருட்டு தனுகரண புவன போ
காதி நாமரூபப் பிரபஞ்சங்களை யெல்லாம் சிரு
ஷ்டிக்கும். ஒரு மஹாகல்பமளவும் உயிர்கள்
உய்யும் வகை யுணர்ந்துய்யுமாறு லீலைகளியற்
றிப் பஞ்சகிருத்திய பரயோக நிஷ்டைகூடிய
பின், பகவான் தன்கலைகளை உள்ளே யிழுத்துக்
கொள்ள, மஹாப்பிரளய முண்டாகி எல்லாம்
திருநீறு மயமாய் மாறி பகவான் திருமேனி
யில் உத்தூளனமாகத் தரிக்கப் பெற்றதாகும்.
இது தான் பகவான் அசைவற்று நின்றாடும்
ஆதியந்த மில்லாத ஆனந்த நிருத்தம். இந்த
நிருத்தந்தை (தாண்டவத்தைத்) தரிசித்தவர்
"எல்லாம் வல்லசித்த ராவர்."

இந்த "எல்லாம் வல்ல சித்தர்" எப்படிப்
பட்டவர்? என்று ஒரு கேள்வி பிறக்கலாம்
அவர்கள் பஹிமையை அளவிட்டு முடியாது.
"சித்தன் போக்கு சிவன் போக்கு" என்று
தான் சொல்லலாம். சிவனுலாகத்தக்க தெல்
லாம் சிவனை யன்றி வேறொன்றுமில்லை யென்
றுள்ளுணர்வா லுணர்ந்தமர்ந்து விசாரந் தீர்
ந்த சித்தனால் ஆகும். ஸத்யம் அது தானே
வாக்கு ரூபமாகி, அந்த ஸத்ய வாக்கே அரிச்
சந்திரனாகி, தர்ம மதுதானே உருவெடுத் தமை
ந்து. சந்திரமதியவளாய் அவன் பக்கலில் நிற்க,
இருவரும் உளம் கலந்து உயிர்கலந்து உணர்வு
கலந்து உடலுங் கலந்து. பெற்றதோர் பாக்கிய
மாய் நின்ற "அகண்ட லக்ஷியமே" உருவா
யமைந்ததொக்கும் 'லோகிதாக்ஷன்' காலில் முள்
தைத்ததை யெடுக்கும் வியாஜம் மேற்கொண்டு,
காலைக் குளறி விஷத்தை யூட்டு மோர் பாவி
யொருக்காலும் "எல்லாம் வல்ல சித்தன்" ஆக
மாட்டான். அவன் அமானுஷீகச் சேற்றிற்
பிறந்து வளர்ந்ததோர் மானிடப்பதராம். மானி
டப்பதரும் மணி நெல்லோடு கலந்து விளை
ந்தாலும், பனியில் நனைந்து வெயிலில் உலர்ந்து,
உரலில் மசிந்து, உலையில் வெந்து தேவர்களுந்
தேடும் ஹவிஸுக்குதவும் அமுதாமோ அப்
பதர்? ஆகாததுபோலும், காற்றில் தூற்றவே
கடிதில் பிரியும் பதரே போலும் வஞ்சக நெஞ்
சுடை மானிடப் பதர்கள் தாம் எத்தகைப்
பெருமை யெய்தின ராயினும் "எல்லாம் வல்ல
சித்தர் தம்" பாததூசி பெறுந்திறன் பொருந்
தார். ஆதலால் சிற்றறிவுடைய சிறுபெரும்
மனிதர் தப்பளைபோற்றம் ஊனுணர்வதனை
யூதி யூதியே உப்பிடச்செயினும், தேவாதிதேவ
னும் விரும்பிய உருவாம் புருஷ காம்பீரம் நிறை
ந்ததோர் விருஷப மெய்திட நினைப்பது வீணே!
ஈஸப் கதையில் தப்பளையின் விதி தானே லபிக்
கும், சாதன சாத்திய முணர்ந் துண்மையிற்
பழகார் தமக்கு. ஊனுணர் வற்றதோர் உண்
மையை யுணரத் தானுணர்வாகி யூனுணர்
வொழிக்கவே வேண்டும். ஊனுணர் வொழிந்த
உத்தமர்க்கன்றி மற்றவர் தம்மை "மாயாஜால
மனமெனும் பெண்மயில்" "வாயால் வல்லவள்"
ஆகவே தோன்றி, அடங்காப் பிடாரியைப்
பெண்டு கொண்டே பின்னர் பேயாட்டந் தானு
டும் பின்புத்திப் "பொய்க்கால் நடைமலிப் போ
லியர்" உயர்வை மையல் என்னுமோர் தைய
லாம் பிணையிட்டுக் கால்கட்டு கட்டிக் கடை
வீழச்செய்யுமே!

எல்லாம் வல்லதோர் சித்தரைக்கண்டு நான்,
உண்மையில் அடங்காப் பிடாரியாம் பெண்ம
யில்,—மாயாஜால மனமெனும் தூர்த்தையை,
வாயால் வல்ல அவள் வன்மையை வென்று,
நாய்போல் நயந்து நடக்கவேசெய்யும் உபாயம்
ஏதென்றுண்மையாய்க்கேட்டேன்: கேட்டவன்
குறிப்பைக் குணம்பெறக் கிரஹித்ததோர் எல்
லாம்வல்ல சித்தர் தாமும், நயம்பெற நாட்டார்
நகைமிகை நாடேல்: உண்மை யெதுவுண்டோ,
அதை யுண்மையிற் பற்றுக: அன்பினாலாவது
அரற்றினாலாகுமோ! வாயை மூடித் தாயைத்
தொழுது, துஷ்டரை வெல்லும் துர்க்கையைச்
சரண்புகுந் துத்தம பக்தியால் உளங்குளிரப்
பூசித்து, பஞ்ச பூதங்களை யமிர்தமாய்ச் சமை
த்து, பரித்தியாக சித்தத்தை வெண்சாமர



மாக்கி, உள்ளத்திலுண்மையை யுள்ளபடி நாடி
கள்ளத்தை விட்டுக்கபடத்தை யறுத்து "நாள்
ளென்று சொல்லுமுன் எண்ணெயாய் விடு
மோர்" பரிபக்குவ மறிந்து பதிவிரதந் தானெ
டுத்தால் சதிபதி தர்ம்ம உணர்ச்சியின் உண்மை
யால் கதிபெற வாழலாம், கன்னியமும் தான்
பெறலாம்,—என்றுமே செப்பி யென்றுடை
தேஹத்தை வெள்ளாடை யுரித்து வினைகெடத்
தான் பார்த்து, சிற்றுடை கட்டிச் சிறுபெண்
தானாக்கி பதிவிரதா தர்மத்தைப் பாரில் நீ
காக்க வென்றார். "பதிவிரத மென்பதின் பான்
மைபுணராச் சிறியேன் தனக்குச்செய்யுபதேச
மென்?" என்றுமே யானவரைப் பணிந்துமிகக்
கேட்கத், துணிந்து நின்றேற்குப் பக்குவ
சோதனை பண்ணுவானவரும் "தோப்புக்கரணம்
போடவே" யென்று தொந்திசரிய எனைவாட்டி,
ஸம்ஹார சக்கர நடுவில் வைத்து சாக்ஷியாத்
தேவிஸ்பத் தான் குறித்து துர்க்கையை அதிர்
ஷ்டானமாக வைத்து துன்மொழி மந்திரம்
தான் ஜபித்தார். அன்பேயுருவாய் நின்ற அவர்
அதட்டின சப்தமும் குளிர்ந்ததாச்சு: இன்பயு
யுருவாய் நின்ற அவர் இதோபதேசமும் இது
வாச்சு:—

ஓம் ஸ்ரீ துர்க்கமாயை நமஃ

I

"அண்டை அயல் கேட்க அலறாதே!
சண்டை போட்டெதிர் பேசாதே!
உண்டதற் கிரண்டகம் நினைக்காதே!
கொண்டவனைக் குடி கெடுக்காதே!
சண்டித்தன மினிச் செய்யாதே!

II

ஊமைக் கோபம் கொள்ளாதே!
தூய்மைத் துரோகம் செய்யாதே!
வாய்மை வஞ்சகம் செய்யாதே!
நேர்மை கடந்து நடவாதே!
சீர்மை தான்கெடச் சினக்காதே!



III

நெஞ்சில் வஞ்சகம் நினையாதே!
பஞ்சில் தீப்பொறி வையாதே!
குஞ்சு குழந்தையைக் கெடுக்காதே!
வஞ்சக நெஞ்சரைச் சேராதே!
பஞ்ச பூதப்பழி போடாதே!

"மூவைந்து மானதோர் ஐந்தைக்கொண்டு நீ
உள்ளொழும் ஐயங்களெல்லாம் தொலைப்பாய்
தொலைத்தபின் உன் மனத்தெளிவில் வந்து
தோகையே பின்னுமுபதேசஞ் செய்வேன்!"
என்றவர் இனியமொழிகேட்டு அவர் பாதபத்
மங்களில் தான் விழுந்தேன். விழுந்தெழுந் தர
ஹரவெனத் தொழுதேன். வெட்டவெளியன்றி
வேறுகாணேன்.

[இதற்குப் பதார்த்தமும் வாச்சியார்த்தமும் தானே
விளங்குவதா யிருப்பதால் நாம் இங்கெடுத்தோதத்
தேவையில்லை. தத்துவார்த்த பதார்த்தங்களும் லக்ஷி
யார்த்த முணர்ந்தோரியவருக்கே விளங்கும். மனத்
தெளிவடைந்த யாராயினும் இதற்கு லக்ஷியார்த்த
முரைத்தால் அவருக்கு விவேகசிந்தாமணியின் 18-
வது வால்யம் முழுவதும் அனுப்பும்படி ஆக்ஞை
யானபடியால், அதற்கிசைந்து அவருடைய ஆக்ஞை
யை வெளியிட்டோம். பதில் அனுப்புகிறவர் நவம்
பர்மீ 15உக்குள் பத்திராசிரியர் கையில் வந்து சேரு
ம்படி தீர்க்கமாயெழுதி யனுப்பவேண்டும். அங்கீ
கரிக்கப் படாதவை பிரசுரிக்கவும் திரும்பவும் பட
மாட்டா. வி. சி. ப-ர்.]

---


## கமலாம்பாள் சரித்திரம்.

ஒவ்வொருவரும் வைத்து வாசிக்க வேண்
டிய தத்துவார்த்தமான ரசம் பொழியும் கதை.
கமலாம்பாள் சரித்திரம் 3-வது பதிப்பு: 328
பக்கம் தயாராய்விட்டது. விலை ரூபா 1-4-0
தபாற் செலவு வேறு.

100-க்குக் குறையாமல் வாங்குகிற வியா
பாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் மைலாப்பூர் லலிதாலயத்தி
லிருக்கும் அ. ப. ஏஜென்ஸி காரியதரிசிக்கு
எழுதவும்.

# TEN YEARS' WAR OF THE FLESH AND THE SPIRIT 1901-1910.

## "OVERCOMING THE WORLD."

### Or, The Great Vow of Renunciation.

*"Like the hart panteth after the water in the brook, so panteth my heart after Thee, O Lord!"*

"From a number of useful articles written to "The *Hindu Organ*," Jaffna, I am of opinion you have a sound knowledge of our *Yoga Sastras* and you have some *Siddis* also. Therefore I approach you in the attitude of a disciple to a Guru and entreat you to show me the Way to the Light of God......Oh my Guru! Will you pity this humble servant and show him "What *Daharâkasâ* is! What *Kanakasabhai* of *Chit-ambaram* is! What the seat of Brahman within me is! The thousand-petalled lotus! The seat of வாலைசக்தி! Her three letters! etc. How am I to see the Dances of Natarajah within myself......Oh Guru! Have mercy on me and show me the Way clearly to see my Self, to see the Dances of Natarajah, to see my Eternal Mother! I am determined to go to India and see you personally......"—*A Thirsty soul from over the seas.*

திருமூலதேவர் திருமந்திரோபதேசம்.

"காணுறுகோடிகடிகமழ்சந்தனம்
வானுறமாமலரிட்டுவணங்கினும்
ஊனினைநீக்கி யுணர்பவர்க்கல்லது
தேனமர்பூங்கழல்சேரவொண்ணாதே."

"அரித்தவுடலையைம்பூதத்தில்வைத்து
பொருத்தவைம்பூதஞ்சித்தாதியிற்போந்து
தெரித்தமனாதிசத்தாதியிற்செல்லத்
தரித்ததுதாரணைதற்பரத்தோடே."

"ஆவிக்கமலத்தினப்புறத்தின்புற
மேவித்திரியும்விரிசடைநந்தியை
கூவிக்கருதிச் கொடுபோய்சிவத்திடை
தாபிக்குமந்திரந்தாமறியாரே."

## I—* வயிற்றொடுகிளத்தல்—1901.

### உலகைவிட்டொழித்தல் அல்லது மஹாபிநிஷ்க்ரமணம்.

I.

Man the Microcosm—Analysis of His Physical Body.

மண்ணிற்பிறந்து மண்ணாகு மிவ்வுடலம்
மாயைவலைப்பட்டு மாக்ஷிபெற்ற தென்னேடி !
எண்சாணுடலுக்கும் ஒருசாண் வயிறேகாண் :
சாண்வயிற்றுக்குள்ளே சமைந்தது நீள் குடலம்மா !
ஆகாரப்பையொன்று அதன்மேலே வீற்றிருக்கும் !
பைக்குள்ளே செல்லும்வாய் தானாக அசையுமடி ;
அசையும்வாய் கொண்டதெல்லாம் அரைத்துள்ளே செல்லவிடும் ;
உட்செல்வதாகாரம் அது உடன்படுதல் சீரணமாம் ;
சீரணமாம் சக்தியினால் சித்திப்ப தென்னேடி ?

* A talk with the Belly as representing the 'World' within. Extracted from "the Gospel of the Holy Mother" published on *Vijayadasami* day 1903. Price Rupee one. V. P. P. Extra. Apply to the D. K. Agency Mylapore.
What external Nature is one the Cosmic World, so is the Belly in the Microcosm of Man.



II.

His Subtle Bodies or Discrimination of The Natural from Real Man *i. e.* Jiva and Atman.

சித்திப்ப தன்னமய மதுவேதா னுடலங்காண் !
அன்னமயத்துள்ளே அமைந்துளது பிராணமயம் :
பார்த்தாலதுவாயு : பிராணனென்றால் வேறல்ல ;
பிராணமயம்போக மூன்றுமயம் மேலுண்டு :
மனோமயமதுகாண் "நான்" "என" தென்றடிவரும்.
விஜ்ஞான மயமென்பார் கூர்புத்தி யதுவேகாண் ;
ஆனந்த மயமதுவோ சுத்தமனச் சாக்ஷியம்மா ;
இத்தனைக்கு மேலுள்ளான் **பரமனவனொருவன்**
**அவனே நானன்றி** அயல்வேறு அல்லன்காண் !

III.

The Pratyagatman or Adam before the Fall.

பசிதாக மெனக்கில்லை பாந்தவியந் தானில்லை !
சுகதுக்க மெனக்கில்லை சுற்றமுமே தானில்லை !
எங்கும் நிறைந்திருந்தும் ஏகாங்கியாயிருப்பேன் :
எனக் கங்கமில்லை பங்கமில்லை இங்கிதசங் கேதமில்லை :
மானமில்லை ஈனமில்லை மாயை மயக்கமில்லை :
ஊணுறக்கந்தானில்லை ஊனமொன்று மெனக்கில்லை :
மணைவிமக்க ளெனக்கில்லை மாநிலத்தார் யாருமில்லை.
இப்படியிருக்கு ‡ மெனக்கோர் குறைசொல்லி
1 மாயக்காரியவள் † மதனியிடம் முறையிட்டாள்.

IV.

The Evolution of Natural Man or creation of EVE and MAN's fall

முறையிட்ட சப்தமது முயழுங்கியதே யம்பரத்தில் §
அம்பரத்தாடு மழகனது கண்டுகொண்டே
† ஆடாமெடன் றடினன் ஆட்டிவிட்ட பம்பரம்போல்
2 தேவியவளொருத்தி தேவடியாள்போற் குதித்தாள்.
ஆட்டமுங்குதிப்பு மதிசயமா யிருக்குதென்று
ஆனந்த மயங்கடந்து அகண்டவெளியாயிருந்த
3 ஆதியவள் எனையின்றுள் அவசரமா யோடிவந்தாள் :
4 மாயப்புலைச்சியவள் மகிழ்ந்துசில வார்த்தைசொல்ல
5 மாயவுருவானேனுன் மனமறுகப் பேசலுற்றேன்.

1. Maya or Avidya symbolised by the Serpent in the Bible.
‡ Perfect Man or Adam before his Fall.
† Vidya or true knowledge - EVE before the fall :—Perfect Womanhood—the Crowning Glory of God's creation.
§ The Voice reached the Throne of God *i.e.* The Self-luminous plane or The highest plane transcending, though where the *light* of all lights shineth in Glory.
† Set the Great Law of Evolution to work.
2 The Divine Energy called the World or the Holy Ghost—The whole line means : The Law of Evolution began to work with the utmost speed.
3 Suddhamaya *at one* with God, variously called Parasakti, Ambika and other names all connoting the same state of consciousness known as the Turya state or Paramahamsa—pure Satva.
4 Asuddhamaya *i.e.* impure or tainted by a slight admixture of Rajas and Tamas or subject to Gunas *i.e.* to passion and ignorance *i.e.* Nature in the Eve that yielded to Temptation.
5 Denotes the fall of Man from his perfect State : Describes Jivotpatthi, or birth of Natural Man.

## V.

Natural Man and His bitter Experience of the World *i. e.* After 'Paradise Lost.'

பேசினபேச் சென்ன வாதிட்ட வார்த்தையென்ன
6 மாயைவந்து ஜாலஞ்செய்ய மல்லுக்குநான் நின்றதென்ன
சொல்லச்சொல்ல வளருமம்மா சூதுவாது தொடருமம்மா.
சுருங்கச்சொல்லி விளங்கவைப்பேன் சின்மயமே சாக்ஷிநிற்பாய்.
7 மாயையவள் கையாலே மதனன் பட்ட அவஸ்தையெல்லாம்
சொல்லத்தான் வாறாது சொல்வன்மை போதாது :
8 வயிற்றையவன் நொந்துகொண்டான் வாயால்மிகப் பிதற்றலுற்றான் ;
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிமிக நொந்துபோனான்.
பாழ்வயிறே பழங்கணே பழிபாவ முனக்கில்லையே !

## VI.

His disgust of the world and turning away from its vanities.

"இதா ஹிதம்பாராயே 'இடும்பை கூர் என்வயிறே !'
உன்னைத் தீர்த்தாலும் தீர்வதில்லை தூரெடுத்தாலும் தெளிவதில்லை
துறந்தாலும் விடுவதில்லை துதித்தாலுங் கேட்பதில்லை
உறைத்தால் உபாதிகொள்வாய் புளிப்பானால் போகாதென்பாய்
மிகுந்து போட்டால் வருந்திடுவாய் குறைந்து போட்டால் எரிந்திடுவாய்
மட்டுமிதம் தப்பாமல் மணிசிறிதும் பிசகாமல்
சுசிருசியோ டுன்றனக்கு சமைத்துச் சுடப்படைக்கவேண்டும்.
வேண்டியதை வேண்டியபடி வேணமட்டும் படைத்தேனே !
படைத்ததற்குப் பயனென்சொல் பாழ்வயிறே பெருச்சாளியே."9

## VII.

His thirsting to attain his former state of Bliss or endeavour to regain Paradise.

"உண்டுடுத் துறங்கியுனக் குழைத்ததெல்லாம் போதுமென்றே
ஓய்ந்தொழிந் திட்டேனா வுன்னினே னுள்ளத்தே.
நீ ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடினேன் வெகுகாலம்
ஆடியலுத்ததன்றி ஆனதொன்று கண்டதில்லை.
பண்டைபோ லுன்றனுக்குப் படைக்க இப்போ ஆளில்லை !
ஆளில்லா வேளையிலே நீ யடுத்தல்லோ பிழைக்கவேண்டும் !
சுசியென்ன உருசியென்ன சொகுசு தானுனக்கென்ன !
அடைகாய் கனிகிழங்கு அகப்பட்டதைப் புசிக்கும்—
பெரியதொரு வீடுதனில் பெருமை யுனக்குண்டோ சொல்லாய் !"

6 The Differentiating Spirit called the World or Worldly Spirit.
7 The real man *i.e.* the Soul of man or Atman that knows and wills.
8 Belly the Symbolical representation of the Cosmic World or external Nature in the Microcosm of Man.
9 The fabled Vehicle of Ganesa or Vigneswara, the Lord of Nature and Natural or Psychic Powers which are the greatest obstacles to realisation by man of his own true Self.



## VIII.

Rising of the Christ in Man : Takes the Great Vow of Renunciation and thus "Overcomes the World." 10

"உன்னோடு வாழ்தலரி" தணர்ந்தே யுனையொழித்தார் பெரியோர்கள் ;
உனையொழிக்காக் காரணத்தா லுழலுகிறேன் மிகநொந்து ;
உன்னோடு ஒத்துவாழ உபாயமொன்று சொல்லுவன்கேள்,
என்சொற்படியே நீ நடந்தால் எக்காலும் சுகித்திடலாம் :
"கண்டது கிடைத்ததுவைக் கனிவுடனே பரிந்தளிப்பேன் ;
அளித்ததைப் புசித்து நீ யடங்கியே யிருந்தையானால்,
அகிலமுழு தனதாகு மதிலேதும் சங்கையில்லை ;
சற்றேனு மேறுமாறாக விருந்தாயே யாமாகில்,
கூறுமதுனை யொழித்துக் குந்திடுவேன் சும்மாகாண்."

ஓம் தத்ஸத். —ஆனந்தத்தாய் மொழி,

---

## II.—NAVARATRI—1910.

## "Hunger and Thirst" Conquered.

## நவராத்திரி பூஜை—1910.

### II.—வயிற்றை விட்டொழித்தல்—1910.

### வைராக்கிய சித்தன்வேசடை நீக்கம்.

ப்ரஹ்மவித்வரன் ப்ரேமாநந்தகீதம்.

---

"க்ஷுத்பிபாஸாமலாம் ஜ்யேஷ்டாம் அலக்ஷ்மீம் நாசயாமியஹம் !
அபூதம் அசம்ருத்தம்ச் சஸர்வாம் நிர்ணுதமே க்ருஹாத்." —ஸ்ரீஸூக்தம்.

[பசிதாகமாகிற மாலிந்யத்தை யுண்டுபண்ணுகிற பெரியவளாகிய அலக்ஷ்மியை நான் (உம்முடைய அநுக்ரஹத்தால்) போக்கடிக்கிறேன்: தாரித்திரியத்தையும் ஸகலமான விருத்தி யில்லாமையையும் என்னுடைய க்ருஹத்தினின்றும் போக்கடியும்—என்பது பதப்பொருள். இதன்மேல் வித்யாரண்யர் வியாக்கியானம் இது:—"பசிதாஹம் முதலிய அசுத்தத்தை யுண்டாக்குகிறவளும் ஸ்ரீமஹாலக்ஷ்மியான உமக்கு முன்னே பிறந்தவளுமான அலக்ஷ்மியை நான் நாசம்செய்து விடுகிறேன். ஸ்ரீமஹாலக்ஷ்மியே ! ஏழைமையையும் குறைவையு மென்வீட்டில் நின்றும் வெளியே துறத்தும்."]

மூலத்துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப் போற்றி வயிறிழந்தேன்பூரணமே.

"புல்லரிடத்திற்குப்போய் பொருள்தனக்கு கையேந்தி
பல்லை மிகக்காட்டிப் பறக்கவிழிக்கிறேன்டி !
பல்லைமிகக் காட்டாமல் பறக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா !
பொருளெனக்குத் தாராயோ" !—சித்தர் விண்ணப்பம்.

10 Aiming to lead the original Blissful Life of undifferentiating knowledge which is Life Eternal.

"என்னென்ன செய்கினு நீ ஏதேதியற்றிடினும்
உன்பிள்ளை யுன்னடிமை யுனக்கோநா னர்ப்பணம்காண்!
"என்பிள்ளை யென்பொருளென் றெதிர்த்துவரு மமகாரத்தை
உன்பிள்ளை யுன்பொருளென் றுன்பாதத் திடைபணித்தேன்."

### ப்ரஹ்மவித்வரன் ப்ரேமானந்த கீதம்.

1. *ஸ்வார்ப்பண பிந்துதர்ப்பணயஜ்ஞம்.*

(1) அர்ப்பணம் உனக்கென்றே யென்தனைக் கொடுத்தேன்
தர்ப்பணம் பிந்துவால் † பின்னுநான் செய்தேன்
அர்ப்பணஞ் செய்துபின் தர்ப்பணஞ் செய்தவென்
அர்ப்பணதர்ப்பண யாகத்தின் மகிமையை யென்னசொல்வேன்!

2. *யாகாக்நியின் சிறப்புரைத்தல்.*

(2) முப்புரத்தில் முன்னையிட்ட தீயதுவே 'வாம'மதாய்
இப்புரத்தில் என்னஹத்தே மூலத்தீ தானாகி
எப்புரத்தி லுள்ளமலம் எத்தனைதா னானாலும்
அப்புரத்தை யத்தோடு மெரித்திடுதீ யானதுவே!

3. *"க்ஷுத்பிபாஸாமலாம் ஜ்யேஷ்டாம் அலக்ஷ்மீம் நாசயாமியஹம்."*

(3) மும்மலத்தை யெரித்திடுதீ மூலத்தீ யதுவொன்றே
எம்மலத்தை யானாலும் எரித்திடுதீ யாகுமம்மா!
எம்மலத்தை யெரித்திடுதீ யென்பசிதாஹப் புன்மலத்தை
நின்மலமா யெரித்ததுவும் நிர்விகற்பத் தாலன்றோ!

4. *நிர்விகற்பசித்தி யுரைத்தல்.*

(4) நிர்விகற்பத் தாலன்றி நீயுலகில் வெற்றியில்லை
நிர்விகற்பந் தானதுவே நினைவொன்று மில்லாமனம்
நிர்விகற்ப மனமதுவே நிறைசூன்யம் என்றுரைப்பர்
நிர்விகற்ப மாமனதை நிஷ்டையிலே கண்டுணர்வாய்!

5. "ஒழிவிலொடுங்கி 'ஓம்'என் றுற்றுப்பார்!"

(5) நிஷ்டையிலே கண்டுணர்ந்த நிர்விகற்ப மனந்தானும்
நிஷ்டையிலே நீயொடுங்க நிறைசூன்யம் தானாகும்;
நிஷ்டையிலே நிறைசூன்யம் தானான நீயுமப்போ
நிஷ்டையிலே நிறைசூன்யத் துள்விளங்கும் சோதியைப்பார்!

† ("பிந்து என்றால் என்ன?" வென்பதை விவேகசிந்தாமணியின் சென்ற ஏப்ரல்-மே-மாசத்து சஞ்சிகையின் 14 வது பக்கத்தில் பார்க்க.



6. *சிற்றம்பல தரிசனம்.*

(6) சோதியைப்பார் சூல்கொண்ட மேகம்போல் சூனியத்தில்,
ஆதியைப்பார் அம்பலத்தில் ஆடுமவன் கூத்தைப்பார்!
ஆதியைப்பார் பாதியைப்பார்! ஆதிபாதியின் சோபனம்பார்!
ஆதிபாதியின் இடையிருக்கும் சிற்றம்பல வீதியைப்பார்!

7. *சிற்சபாநாதன் சயனம்.*

(7) சிற்றம்பல வீதியைப்பார்! சின்மயானந்த சோதியைப்பார்!
சிற்றம்பல நாடியைப்பார்! சின்மயசக்தியின் கூத்தைப்பார்!
சிற்றம்பல மாடியைப்பார்! சின்மயசுக நித்ரையைப்பார்!
சிற்றம்பலத் தாடியனுத்த சிற்சபாநாதன் சயனம்பார்!

8. *சிற்சபாநாதன் அறிதுயில் அதிர்சயம்.*

(8) சிற்சபாநாதன் சயனம்பார்! திருவரங்க க்ஷேத்திரம்பார்!
சிற்சபாநாதன் கோயிலைச்சுற்றிய திருமதில்கள் ஏழும்பார்!
சிற்சபாநாதன் சயனக்ரஹத்தைச் சுற்றிலுமுள்ள சோதியைப்பார்!
சிற்சபாநாதன் அறிதுயில்கொள்ளும் அதிர்சயத்தையு முற்றுப்பார்!

9. *"ஏகைவசக்தி பரமேசுவரஸ்ய."*

(9) மூலத்துதித்த வாலையுமங்கே விருத்தையாகி யிருப்பதைப்பார்!
காலத்துதித்த பைரவரங்கே பரஞ்சோதியாகி ப்ரகாசிக்கப்பார்!
† சீலத்துதித்த சேஷநாதமும் அரவணையாக அமர்ந்ததுபார்!
நீலத்துதித்த நின்மலாதேவியின் கோலாஹலத்தையுங் ‡ கூர்ந்துபார்.

10. *"அரங்கத் தாடியனுத்தவன் நித்ரை."*

(10) கூர்ந்துபாரதோ நீளாதேவி குதூஹலநித்ரா சுகமளிக்க
கூர்ந்துபாரதோ ஸ்ரீதேவிதானும் ஆடியனுத்த கால்பிடிக்கக்
கூர்ந்துபாரதோ பூதேவிபின்னும் பாதம்வருடிப் பரிமளம் வீசுறாள்;
கூர்ந்துபாரதோ அரங்கத்தாடி யனுத்தவன்நித்ரை செய்கோலத்தை!

11. *அறிதுயில்கொள்ளும் அரங்கநாதர் ஸந்நிதான மஹிமை.*

(11) அரங்கத்தாடி யனுத்தவனித்ரை செய்குவதைநீ கண்டுவிட்டாய்
அரங்கத்தாடி யனுத்தவன்போல் ஆவதுமல்லதும் விட்டுவிட்டாய்!
அரங்கத்தாடி யனுத்தவன்கால்போல் 'விகற்பநிவிகற்பமும் ஓய்ந்ததப்பா!
அரங்கத்தாடி யனுத்தவன் நித்ரைமுன் பசிதாஹங்களும் பாந்ததப்பா!

‡ ஸம்ஹாரசக்தி அகண்டாலந்தலக்ஷ்மியாய் ஐக்கியபோகம் அளித்ததையும் என்றபடி
† உன்மனி ஆதிசேஷமாய் நின்றத்தத் துவாதீதமான நாதம்.

12. பசிதாகவேசடை நீக்கம்.

(12) பசிதாஹங்களும் பறந்ததப்பா பார்முதற்பூதங்க ளொழிந்ததப்பா!
பசிதாஹங்களும் இறந்ததப்பா பார்முதற்பூதங்கள் தாமொடுங்க;
பசிதாஹங்களுக் குற்பத்திலயம் பார்முதற்பூதங்கள் என்றுணரப்பா!
பசிதாஹங்களுக் காஸ்பதமாமந்த மூத்தாளுமுன்னைவிட் டோடிப்போனாள்!

13. ப்ரஹ்மவித்வரன் சாக்ஷாத்கார தரிசனம்.

(13) பாத்தை மறைத்ததோர் பார்முதற் பூதங்கள்
பாத்தில் மறைந்ததோர் புதுமை போல்
† 'வரனை மறைத்ததோர் விஜ்ஞான விருத்திகள்
† 'வரனில் மறைந்ததோர் புதுமை காண்!

14. ப்ரஹ்மவித்-வான்,-வாரியன்,-வரிஷ்டன்.

(14) ப்ரஹ்மவித் தாமவன் ப்ரஹ்மத்தை யறிந்தவன்
ப்ரஹ்மவித் வராவன் ஸ்ரீவித்யை வரித்தவன்
ப்ரஹ்மவித் வாரியன் ஸ்ரீவித்யை தரித்தவன்
ப்ரஹ்மவித் வரிஷ்டன் சிவசக்தியைக்கிய ஸ்வரூபாரூபனே!

ஓம்தத்ஸத்.

## விஜயதசமி.

தசமியிலே சாகரத்துக் கப்பாலேறிச் சிலம்பொலியுமுனதுடைய இருக்கால்கண்டு
நிசமாகஸ்தூல சூக்ஷமத்தில்தோன்றி நிஷ்களத்தில் நீயுநானுமொன்றேயாகி,
யறிவில்லா ஆனந்த மயமேயாகி, யருள்வெளியாய் வரமருள்வாய் அகண்டரூபி,
சுசிவழியாய் சுசிமுகமாய்ப் பின்னைமுகம் பார்த்தாள்வாய், சோதியே மனோன்மணியே [கதினவாழ்வே

ஓம் ஸ்ரீ:

# The Vision of the Merging of the Unifying Spirit in Unity Eternal.

## "குருலிங்க சங்கம தரிசனம்."

"ஸ்ரீகுரு: ஸர்வகாரண பூதாசக்தி:"—பாவனோப நிஷத்."

"திருவருட்பால்தான் சுரக்கதேவி சுந்தரேசுவரரைக்
கூடிக்கலந்து குதூஹலந்தானிறைய
உண்டேனேயுண்டேனே யவளுண்ணுமுலையொழுகும்
மீனாக்ஷிசுந்தரேசர் மெய்யமுதப்பாலமே."

The Day of Cleansing of the Spirit (1st July 1900.)

ஆனித்திருமஞ்சனம் அல்லது அருட்குழவி யுற்பவம்.

"இழுக்கென்றிருந்தேனீசன்றன்கோயிலேதமிலேன்
கழுக்குன்றிலேவந்தேவியழைத்தென்குறையோரா
திழுக்காவென்றனையிழுத்தேகித்திருக்குடந்தையிலே
அழுக்கா றழித்திருமஞ்சநீராடிப்பழுக்கவைத்தவன்வெருட்டினனே."

—ஆனந்தத்தாய்மொழி.

† 'ப்ரஹ்மவித்வரன்' என்றுகொள்க.



The Day of Merging of the Spirit. (16-10-1910.)

"குருலிங்க சங்கமம்"

குருபரனருளால் நோக்கத்
திரிபுரமெரித்தாள் குறுநகையாலே
எரிபுரமாமென் சிந்தையுட்கூடித்
திரிமலந்தீர்த்த குடந்தைக்கோனே!
அரிஅயன்காணு அடிமுடிகாட்டி
நரிபரியாக்கிய நலமுங்காட்டிப்
பரிநரியாகிப் பாரினிலோடாக்
கிரிபுரமாமுன் சிவபுரங்காட்டிப்
பிரிவிலாப்பிரிவால் பற்றெலாந்தீர்த்துத்
திரிமலதஹனந் தசவருடத்திற் செய்தாய் போற்றி!

# Correcting the False Notion of Body.

## (By St. Thayumanavar)

## உடல்பொய்யுறவுணர்த்தல்.

("பசிதாஹமற்றுப் பாழ்வயிற்றைத் துறந்திருக்கலாகுமா?"
என்னும் கேள்விக்குத் தாயுமானவர் பதில்.)

"உடல்போய் யுறவாயி னுண்மையுறவாகக்
கடவராா? தண்ணருளே கண்டாய்—திடமுடனே
உற்றுப்பார்! மோன ஞெருசொல்லே யுண்மைநன்றுப்
பற்றிப்பார்! மற்ற வெல்லாம்பாழ்."

1. "ஆசையறுமின் ஆசையறுமின்!"

"மெய்யான தன்மை விளங்கினல் யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ—ஐயாவே!
மன்னு நிராசை யின்னம் உதித்தல்ல வுன்னடிமை
யென்னுநிலை யெய்துமா றென்!"

2. அறிவான் தன்மனத்தொடு கிளத்தல்.

"எதுக்குச்சும்மா விருமனமே யென்றுனக்குப் [க்கு
போதித்த வுண்மையெங்கே போகவிட்டாய்—வாது
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி நீயேயுன்
புந்தியென்ன போதமென்ன போ!"

3. பரிபக்குவனன்றி அபக்குவனுக்கு 'குருலிங்கசங்கம' தரிசனம் கிடைத்தலரிதுணர்த்தல்.

"குருலிங்க சங்கமமாக்' கொண்ட திருமேனி
கருவொன்றும் மேனிநம்பாற் காட்டாத்-அருளென்று
கண்டவர்க்கே யானந்தங் கண்டுகொள லாம்,அலது
கொண்டவர்க்கிங் கென்ன கிடைக்கும்!"

4. 'ஒழிவிலொடுக்க' முணர்த்தல்.

அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தாற்
கல்லு முருகாதோ கன்னெஞ்சே—பொல்லாத
தப்புவழி யேனினைந்தாய் சந்ததமு நீயிறந்த
†வெய்ப்பிலே யானந்தமே.

† எய்ப்பு—ஒடுக்கம்.

5. பரங்கருணை வள்ளலாமிறைவன் துணையுணர்த்தல்.

இனிய கருணைமுகி லெம்பிரான் முக்கட்
கனியமிர்த வாரியின்பக் கட்டி—தனிமுதல்வன்
நித்தன் பரமன் நிமலனிறை வாய்நிறைந்த
சுத்தனமக் கென்றுந் துணை.

6. மௌனோபதேசமே யுபதேசமென்பதுணர்த்தல்.

நீதியாய்க் கல்லாலி னீழலின்கீ ழேயிருந்து
போதியா வுண்மையெலாம் போதித்தான்—எதில்
சனகாதி யாய தவத்தோர்க்கு ஞான
தினகரனு மௌன சிவன்.

7. தேகமனோ சேஷ்டைகளொழிந்த ஞானிகளுக்கு யோகநிலையும் மோகநிலையாமென்பதுணர்த்தல்.

தேகச்செயல்தானுஞ் சிந்தையுட னேகுழையில்
யோகநிலை ஞானிகளுக் கொப்புவதோ—மோகநிலை
யல்லலிலே வாழ்வாரோ † அப்பனே நீயற்ற
வெல்லையிலே சும்மா விரு.

8. யோகத்திற்றேர்ந்த மனமும் சும்மாவிருக்கச் சுகோதயமா மென்பதுணர்த்தல்.

சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா யோகயினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாருமோர் சொல்லவேண் டாங்கன்ம
நிஷ்டா சிறுபிள்ளாய் நீ.

9. மனமிறக்க (கழுத்தையறுக்க) மாயை நீங்குமன்றி தத்பதலக்ஷியத்தோடைக்கியமான துவம்பதத்துக்கு என்றும் அழிவில்லை.

நீயற்ற வந்நிலையே நிஷ்டையதில் நீயிலையோ?
வாயற் றவனே மயங்காதே!—போயற்
றிருந்தாலு நீபோகாய் என்றுமுள்ளாய் சும்மா
வருந்தாதே யின்பமுண்டு வா.

10. குருபரன் யோகதற்பரனான சீஷனுக்கு ‡ "எதுமறநில்" லென்றுணர்த்தல்.

வாவாவென் றின்பம் வரவழைக்குங் கண்ணீரோட்
ஆ! ஆ! வென்றேயழுத வப்பனே—நீவாடா!
எல்லா நமக்கெனவே யீந்தனையே யீந்தபடி
நில்லாய் அதுவே நிலை.

† அப்பனே—விவேகமனதைச் சுட்டிச்சொல்லியது.

‡ Compare. "பூதமுதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றனைக்காட்டி யென் போதத்துள் நடுவாக அடியீறுமில்லத போதபூரணவெளிக்குள் எதுமறநில்லென் றுபாயமாய் வைத்து."

11. குருலிங்க சங்கம தரிசனத்தால் இடைக்கும் அகண்டலக்ஷியமே சிரேஷ்டமான வழி யென்றுணர்த்தல்.

நில்லாப் பொருளை நினையாதே நின்னையுள்ளோர்!
சொல்லாப் பொருட்டிரளைச் சொல்லாதே-சல்லாதே
சிந்தை குழைந்துசுகஞ் சேரக் குருவருளால்
வந்தவழி நல்ல வழி.

12. ஓர்மொழி யுபதேச மஹிமையும் அதன் சித்தியுமுணர்த்தல்.

வழியிதென்று மல்லா வழியிதென்றுஞ் சொல்லிற்
பழிப்பழியாம் நல்லருளாற் பார்த்தோர்-மொழியுனக்கே
யேற்றிருக்கச் சொன்னவன்றே யெங்கும் பெருவெளியாம்
பார்த்தவிட மெல்லாம்நீ பார்.

13. அகத்துறவு புறத்துறவுண்மை யுணர்த்தல்.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ
லாருந் துறக்கை யரிதரிது—நேரே
மனத்துறவு மப்படியே மாறு விவற்றி
† லுனக்கிசைந்த வாறென்றே யோர்.

14. விசாரம் தீர்ந்து பாராமற்பார்க்கும் பரமநிஷ்டையும் அதன் சித்தியுமுணர்த்தல்.

ஓராம லேயொருகா லுன்று மலுள்ளொளியைப்
பாராம லுள்ளபடி பார்த்திருந்தால்—வாராதோ
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளந்
தத்திக் கரைபுரண்டு தான்.

15. அஹங்காரந்தோன்ற விடங்கொடாமல் அகத்திலே யந்தர்யாமியாயுள்ளதுபோல் புறத்திலும் ஸர்வவியாபியாயிரு வென்றுணர்த்தல்.

தானான தன்மைவந்து தாக்கிற லவ்விடத்தே
வானாதி மாயை வழங்காவோ—ஞானகேள்
உன்னுள்ளே தோன்று வுறவாகி நின்றதென
வென்னுள்ளே யென்று மிரு.

16. குருலிங்கசங்கம தரிசனங் கண்ட பரிபக்குவனுக்கு குருசிஷ்ய அபேதசித்தியே அகண்டானந்த மளிக்குமென்ப துணர்த்தல்.

என்னையுன்னை யின்னதிது வென்னும னிற்குநிலை
தன்னையரு ளென்ற தருணத்தி—லன்னைபெற்ற
† பிள்ளைக்குஞ்சொல்லாத பெற்றிகண்டா யையனே
யுள்ளத்தி னுள்ளே யுணர்.

† ஒன்றுகைகூடின் மற்றொன்றும் கைகூடு மென்றபடி.

16 ‡ Compare திருமந்திரோபதேசம்:
"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத்தாய் தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறெங்ஙனே."



17. "கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்" என்றதி னுண்மை யுணர்த்தல்.

சொன்னவர்தாம் நிஷ்டை தொகுத்திரார் நிஷ்டையிலே
மன்னினவர் போதியார் மாமௌனன்—தன்னுள்
விருப்பாகக் கைகாட்டி மிக்க வடகீழ
லிருப்பான் நிருவிகற்பத் தே.‡

18. ஒப்பற்ற கரபாத்திர தீக்ஷையும் காரிய காரண தோரணை யறிந்து 'காரிய காரண வாசனைப் பற்றற'வன்றி வேறொன்றுக்குமில்லை யென்றுணர்த்தல்.

இந்த நிருவிகற்பத் தெந்தை யிருக்கநிட்டை
சிந்தைநீ தேறாய் செகமனைத்தும்—வந்ததொடர்ப்
பாடுகெட வன்றோவோர் † பாத்திரத்துக் காடலல்
லாலாடுவதே னுட்டு மவன்.

19. 'குருலிங்க சங்கம' விசேஷத்தால் அவனே தாமான ஸஹஜநிஷ்டரே பரமகுருவா மென்றுணர்த்தல்

அவனே பரமு மவனே குருவும்
அவனே யகில மனைத்தும்—அவனேதாம்
ஆனவரே சொன்ன லவரே குருவெனக்கு
கானவனாய் நிற்பதெந்த நாள்!

‡ Compare.

"கைம்மாறு தானில்லையென்றே கைப்பொருளெல்லா முனதெனக் கொண்டாய், கைம்மாறு தானிலை யென்றே கைப்பொருள் மெய்ப்பொருள் காண்டுகொள் என்றாய், கைம்மாறு தானிலாவொன்றைக் களவுநினைவழிந் தருள் நிறைந்துழி கண்டேன்."

†. ஓர்பாத்திரத்துக்காடல்—ஒப்பற்ற கரபாத்திர தீக்ஷை வகித்து அந்தக் கரபாத்திர பிக்ஷையானமேற் கமனம் ஆடல்.

20. குருவடி சரண்புகுந்த மனம் திருவடி விட்டகலாதிருந்தால் அஹங்கார புருஷனும் அதற்கு ஆளாமென்ப துணர்த்தல்.

நாளவங்கள் போகாமல் நாடோறு நந்தமையே
யாளவந்தார் தாளின்கீ ழாட்புகுந்தாய்—மீளவுன்னைக்
காட்டாம னிற்குங் கருத்தறிந்தால் நெஞ்சேயுன்
ஆள்தான்நா னையமில்லை காண்.

21. நிஷ்டை நிலையிற் பழமை நினைந்திரங்குதலுணர்த்தல்.

யான்தா னெனலறலே யின்பநிஷ்டையென் றருணைக்
† கோன்தா னுரைத்தமொழி கொள்ளாயோ—தோன்றி
யிழுக்கடித்தாய் நெஞ்சேநீ யென்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணார் போலாம்.

21 †. அருணைக்கோன்—அருணகிரிநாதர். தோன்றி யிழுக்கடித்தாய்—சவிகற்ப நிஷ்டையிலிருந்தக்காலெல்லாம் இடை இடையே தோன்றி இழிக்கடித்தாய்; ஏனெனில் 'உள்மலம் ஒழிய' வென்றுணர்த்துவான் "அழுக்கடிக்கு வண்ணார் போலாய்" என்றார். நிருவிகற்பத்தில் ஒடுங்கின மனம் மாயை நீக்கத்தால் பின்னர்தோன்றி யிழுக்கடிப்பதில்லையால் பழமை நினைந்திரங்குத தென்றேற்பதாயிற்று.

———:—:———

(The following favourite Song of Sri Lokanayaki Ammal (Mrs. C. V. S.) is taken from the *Viveka Chintamani* for May 1901.)

## "எப்படி யிருந்தாலென்."

இராகம் - கல்யாணி.

### பல்லவி.

எப்படியிருந்தாலென்—எனக்கினி
எப்படியிருந்தாலென்

### அநுபல்லவி.

அப்படி யிப்படி ஆனந்தப்படி
சொப்பிர காசமான சுகமகமானபின் (எப்படி)

### சரணங்கள்.

1. நாடியே துதித்தாலும் அனைவரும் நாப்பியே பழித்தாலும்
தேடிய பொருள்தன்னில் நாடியே மனம்உறைத்
தாடிய கூத்தமர்ந்த் அசங்கோஹ மானபின் (எப்படி)

2. ஆறுவிகாரமற்றேன் அறிவென்னும் சொருபமொத்தனுபவித்தேன்,
சீறியே அகப்புத்தி சீதளமானபின்
சோதிர் மயமான சுகமக மானபின் (எப்படி)

3. தன்னிலே யடக்கமென்றே தடஸ்தமாய் தன்மயமாகின்றேன்
பொன்னுக்குள் பணியது பிரிந்தாற் போலவே
சின்மயமாயெங்கும் சேவித்து நின்றபின் (எப்படி)

—ஆவுடையாரம்மாள்.

"தானானதன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்கவொட்டாது தலைப்பட்டாங்கே
போனாலும் கற்பூரதீபம்போலப் போயொளிப்பதல்லாது புலம்வேறின்றும்
‡ ஞானாகாரத்தினொடு ஞேயமற்ற ஞாதுருவுநழுவாம நழுவிநிற்கும்
ஆனாலுமிதன்பெருமை யெவர்க்கார்சொல்வார் அதுவானாலதுவாவ ரதுவேசொல்லும்."

அதுவென்று லெதுவெனவொன் றடுக்குஞ்சங்கை யாதலினாலதுவெனவு மறவேவிட்டு
மதுவுண்டவண்டெனவுஞ் சநகனாதிமன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும்
பதியிந்தநிலையெனவு மென்னையாண்டபடிக்கு நிருவிகற்பத்தாற் பரமானந்தக்
கதிகண்டுகொள்ளளவு நின்னருள்கூர் இந்தக்கதியின்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன்.

—தாயுமானவர்.

———:-:———

ஓம் ஸ்ரீ சாவித்திரியைநமஃ

# உபநிஷதர்த்த தீபிகை.

## 7. சுகரஹஸ்யோபநிஷத்.

சஹநாவவது இதிசாந்திஃ

———

இப்பொழுது ரஹஸ்ய உபநிஷத்தை வியாக்கியானம் செய்கின்றோம்:—தேவரிஷிகள் பிரஹ்மாவைப் பூஜித்து நமஸ்காரம் செய்து "ஓ பகவானே, எங்களுக்கு ரஹஸ்யோபநிஷத்தைச் சொல்லவேண்டும்" என்று கேட்டார்கள். அவர் சொன்னதாவது:—

1. "முன்காலத்தில் மகா தேஜஸ்வியானவரும் சகல வேதங்களுக்கும் தபசுகளுக்கும் ஓர் நிதி (பொக்கிஷம்) போன்றவருமான வியாசர் அம்பிகையுடன்கூடிய சிவத்தை நமஸ்கரித்து அஞ்சலி ஹஸ்தராய் சொன்னார்."

2-3. ஸ்ரீ வேதவியாசர் வாக்கியம்: "தேவர்களுக்கெல்லாம் தேவனானவரே, மகாஞானியே, பாசங்களைப் போக்குவதையே நிச்சயமான விரதமாக வுடையவரே, என்னுடைய புத்திரனாகிய சுகருக்கு வேத சம்ஸ்கார கர்மத்தில் (உபநயனத்தில்) பிரஹ்மோபதேசம் செய்யவேண்டிய காலம் இப்பொழுது சமீபித்துவிட்டது. ஓ ஜகத்குருவே அப்பிரஹ்மோபதேசம் தங்களால் செய்யப்படவேண்டும்" என்றார்.

‡ ஞானம் ஞேயம் ஞாதுரு என்பவற்றைத் 'திரிபுடி' என்பார்கள். இது, அறிவு, அறியப்படும் பொருள் அறிபவன், ஆகிய மூன்றைக்குறிக்கும். இம்மூன்றையும் தள்ளி மிஞ்சினது தன்மயமாய் விளங்குமென்பர். "த்ரிஷ்ட தர்சனதர்சியாமித்யக்த்வா வாஸநயாஸஹ, தர்சனப்ரதமாபாஸ மாத்மாநம் கேவலம் பஜ" என்பது சுருதிவாக்கியம். 'பார்க்கிறவன், பார்வை, பார்க்கப்படுகிற வஸ்து இவைகளை வாஸனையுடன் தள்ளிவிட்டு விளங்குகிற சிரேஷ்டமான ஆத்மாவையே பஜி' என்பது இதன்பொருள்.



4. ஈசுவரன் சொன்னதாவது—கைவல்யமாயும் சாஸ்வதமாயுமிருக்கும் சாக்ஷாத் பிரஹ்மம் என்னால் உபதேசிக்கப்படில் (உன்)பிள்ளை மகா வைராக்கியத்தால் (சகலத்தையும்) விடுத்துத் தானே பிரகாசத்தை யடைவான்.

5-6. வேதவியாசர் சொன்னதாவது—அது எப்படியாகிலும் ஆகட்டும். உபநயன கர்மத்தில் என்புத்திரன் பிரஹ்மோபதேசம் பெருவானாகில் தங்கள் பிரசாதத்தால், ஓ மகேசுவரனே, சீக்கிரம் சர்வஞ்ஞனாவான். தங்கள் பிரசாதத்தை யடைந்தவனாகி நான்குவிதமாகிய (பத) முக்தியை யடைவான்.

7. வியாசரின் வாக்கியத்தைக் கேட்டு, தேவர்களும் ரிஷிகளும் சேர்ந்த அக்கூட்டத்தில் சாம்பசிவனானவர் திவ்யாசனத்தில் சந்தோஷத்துட னிருந்துகொண்டு உபதேசம் செய்யத் தொடங்கினார்.

8. பக்திமானும் கிருதகிருத்தியருமாகிய சுகரானவர் அவர் சமீபத்தையடைந்து அவரிடம் பிரணவத்தை யடைந்து பிறகு பின்வருமாறு சொன்னார்.

9-11. ஸ்ரீசுகர் சொன்னதாவது:—தேவர்களுக்கெல்லாம் ஆதியாகிய தேவனே, சர்வஞ்ஞனே, சச்சிதானந்த லட்சணத்தை யுடையவனே, உமாபதியே, சர்வ பூதங்களுக்கு மீசுவரனே, கருணாநிதியே, நீர் கிருபைவைக்க வேண்டும்; உம்மால் பிரணவத்தில் அந்தர்கதமான (உண்ணிற்கும்) மேன்மையாகிய பரப்பிரஹ்மமானது உபதேசிக்கப்பட்டது. தத்துவமசிமுதலிய வாக்கியங்களுடையவும், பிரஞ்ஞைமுதலியவைகளுடையவும் ஷடங்கங்களை (ஆறங்கங்களை) விசேஷமாய், கிரமப்பிரகாரம், உண்மையானபடி கேட்க இச்சிக்கிறேன். அவ்விரகசியங்களை ஓ! சதாசிவனே, கிருபையால் நீர் இப்பொழுது சொல்லவேண்டுமென்றார்.

12. ஸ்ரீசதாசிவர் சொல்கிறார்.—மிகவும் நல்லது, ஓ மகாபுத்திமானும் ஞானநிதியுமாகிய சுகமுனியே, உம்மால் கேட்கப்பட்டதான வேதத்தின் ரஹஸ்யமானது கேட்கப்படவேண்டியதே.

13. எதை யறிந்தமாத்திரத்திலேயே சம்சயமின்றி சாக்ஷாத் மோக்ஷமே கிடைக்குமோ (அந்த ரகஸியத்தை) ரஹஸ்யோபநிஷத் என்னும் பேரால் ஷடங்கங்களுடன் சொல்லுகிறேன் (கேள்.).

14. இவ்வங்கங்களில்லாமல் (மகா) வாக்கியங்களை குருவானவர் உபதேசிக்கக் கூடாது; ஷடங்கங்களோடு கூடியே மகா வாக்கியங்கள் எல்லாவற்றையும் உபதேசிக்க வேண்டும்.

15. நான்கு வேதங்களுக்கும் எவ்விதம் உபநிஷதங்கள் சிரசாகுமோ, அவ்விதமே இவ்விரகசியோபநிஷத்தும் உபநிஷதங்களுக்கெல்லாம் சிரசாகும்.

16. ரகஸ்யோபநிஷத்தாகிய பிரஹ்மமானது எந்த புத்திமானால் தியானம் செய்யப்படுமோ அவனுக்கு புண்ய காரணமாகிய தீர்த்தங்களாலும், மந்திரங்களாலும், சுருதிகளாலும் (வேதங்களாலும்) ஜபங்களாலும் என்ன பிரயோஜனம்!

17. நூறு வருஷம் (மகா) வாக்கியார்த்த விசாரத்தால் எதை யடைவானோ அது ரிஷி தியானம் இவைகளோடு கூடி ஓர் தடவை ஜபிப்பதால் (கிடைக்கும்.)

———

18. ஓம் இந்த ஸ்ரீ மகாவாக்கிய மகா மந்திரத்திற்கு ஹம்சன் ரிஷி; அவ்யக்த காயத்திரீ சந்தஸ்; பரமஹம்சன் தேவதை; ஹம் பீஜம்; ஸம் சக்தி; ஸோஹம் கீலகம்; என்னால் பரமஹம்சனை பிரீதி செய்யும் பொருட்டு மகாவாக்கிய ஜபத்தில் விநியோகம்,

(1) சத்யம் ஞானம் அனந்தம் பிரஹ்ம அங்குஷ்டாப்யாம் நமஃ,

(2) நித்யானந்தோ தர்ஜநீப்யாம் ஸ்வாஹா!

(3) நித்யாநந்த மயம் பிரஹ்ம மத்தியமாப்யாம் வஷட்.

(4) யோவை பூமா (எல்லாமாயிருப்பது அல்லது மேன்மையானதும் ஆகிய பிரஹ்மம்,) அநாமிகாப்யாம் ஹும்!

(5) யோவை பூமாதிபதிஃ (எல்லாவற்றிற்கும் அதிபதி) (எதுவோ) கனிஷ்டி காப்யாம் வௌஷட்.

(6) ஏகமேவாத்விதீயம் பிரஹ்ம கரதல கர பிருஷ்டாப்யாம் பட்.

(i) சத்யம் ஞானம் அநந்தம்பிரஹ்ம ஹிருதயாய நமஃ.

(ii) நித்யாநந்தோ பிரஹ்ம சிரசேஸ்வாஹா! [ட்
(iii) நித்தியானந்த மயம் பிரஹ்ம சிகாயைவஷ
(iv) யோவை பூமா கவசாய ஹும், [வௌஷட்
(v) யோவை பூமாதிபதிஃ நேத்திரதிரயாய
(vi) ஏகமேவாத்விதீயம் பிரஹ்ம அஸ்திராய
பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்தஃ [பட்.

த்யானம்:—நித்யாநந்தம் பரமசுகதம் கேவலம்
[ஞான மூர்த்திம்
விசுவாதீதம் ககன சத்ருசம் தத்துவஸ்யாதி
[லக்ஷியம்
ஏகம் நித்யம் விமலமசலம் சர்வதீ சாக்ஷிபூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் சத்குரும் தம்ந
[மாமி.

[நித்யானந்தராயும், பரம சுகத்தைக்கொடுப்பவராயும், கேவலராயும், ஞானஸ்வரூபியாயும், ஜகத்துக்கெல்லாம் அப்பாற்பட்டவராயும், நிர்மலராயும், சலன மற்றவராயும், சகல புத்திகளிலும் சாக்ஷியாய் நிற்பவராயும், பாவனாதீதராயும், முக்குணங்களு மற்றவராயுமிருக்கும் சற்குருவை நமஸ்கரிக்கின்றேன்.]

20. மகா வாக்கியங்கள் நான்காகும். அவையாவன:—

1. ஓம் பிரஞ்ஞானம் பிரஹ்ம,
2. ஓம் அஹம்பிரஹ்மாஸ்மி,
3. ஓம் தத்துவமஸி,
4. ஓம் அயமாத்மாபிரஹ்ம.

21. தத்துவமஸி யென்கிற அபேத வாசகமாகிற இதை யார் ஜபிக்கிறார்களோ அவர்கள் சிவசாயுஜ்ய மாகிய முக்தியை யடைவார்கள் —

22. தத்பதமாகிய மகா மந்திரத்திற்கு
பரமஹம்சன் ரிஷீ,
அவ்யக்த காத்ரீ சந்தஸ்;
பரமஹம்சன் தேவதை,
ஹம் பீஜம்;
ஸஃ சக்தி;
ஸோஹம் கீலகம்;

எனக்கு சாயுஜ்ய முக்தியின் பொருட்டு ஜபத்தில் விநியோகம்.

தத்புருஷாய அங்குஷ்டாப்யாம் நமஃ-
ஈசானாய தர்ஜனீப்யாம் சுவாஹா;
அகோராய மத்யமாப்யாம் வஷட்;
சத்யோ ஜாதாய அநாமிகாப்யாம் ஹும்;
வாமதேவாய கனிஷ்டிகாப்யாம் வௌஷட்;
தத்புருஷ, ஈசான, அகோர, சத்யோஜாத, வாமதேவேப்யோ நமஃ கரதலகரபிருஷ்டாப்யாம் பட்.

இவ்விதம் ஹிருதயாதி நியாசம்.
பூர்புவஸ்ஸுவரோம் என்று திக்பந்தம்.

தியாநம்:—

ஞானம் ஞேயம் ஞானகம் யாதீதம் சுத்தம் புத்தம் புக்தமவ்யயஞ்ச,
சத்யம் ஞானம் சச்சிதானந்த ரூபம் த்யாயே தேவம் தன்மஹோ பிராஜமானம்.

[ஞானமாயும், ஞேயமாயும், ஞானத்தாலடையப்படுவதற்கு அதீதமாயும், சுத்தமாயும், ஞான ரூபமாயும், முக்தமாயும், அழிவற்றதாயும், சத்யமாயும், ஞானமாயும், சச்சிதாநந்த ரூபமாயும் மகாப் பிரகாசமானதுமான அத்தேவதையை தியானம் செய்கின்றேன்.]

துவம்பத மகா மந்திரத்திற்கு
விஷ்ணு ரிஷி;
காயத்திரீ சந்தஸ்;
பரமாத்மா தேவதை,
ஐம் பீஜம்;
க்லீம் சக்தி; ஸௌஃ கீலகம்;
என் முக்தியின்பொருட்டு ஜபத்தில் விநியோகம்;

வாசுதேவாய அங்குஷ்டாப்யாம் நமஃ;
சங்கர்ஷணாய தர்ஜனீப்யாம் ஸ்வாஹா;
பிரத்யும்நாய மத்யமாப்யாம் வஷட்;
அநிருத்தாய அநாமிகாப்யாம் ஹும்;
வாசுதேவாய கனிஷ்டிகாப்யாம் வௌஷட்;
வாசுதேவ சங்கர்ஷண பிரத்தியும்ன அநிருத்தேப்யஃ கரதல கரபிருஷ்டாப்யாம் பட்;
இவ்விதமே ஹிருதயாதி நியாசமும்; பூர்புவஸ்ஸுவரோம் என்று திக்பந்தம்.

25. தியாநம்:—

ஜீவ த்வம் சர்வபூதானாம் சர்வத்ராகண்ட விக்ரஹம்,!
சித்தாஹங்கார யந்தாரம் ஜீவாக்யம் துவம் பதம்பஜே!!

[சகல பூதங்களுக்கும் ஜீவத்துவ மானவனும், எங்கும் அகண்டரூபியாயும், சித்த அகங்காரங்களை நடத்துபவனும் இருக்கும் ஜீவனென்று சொல்லப்படும் துவம் பதத்தை பஜிக்கின்றேன்.]

26. அசிபத மகாமந்திரத்திற்கு
மனம் ரிஷி;
காயத்ரீ சந்தஸ்;
அர்த்தநாரீசுவரர் தேவதை;
அவ்யக்தாதி பீஜம்;
நரசிம்ஹம் சக்தி;
பரமாத்மா கீலகம்;
ஜீவப்பிரஹ்ம ஐக்யத்தின் பொருட்டு ஜபத்தில் விநியோகம்.

பிருதிவீத்யணுகாய அங்குஷ்டாப்யாம் நமஃ.
அப் த்வயணுகாய தர்ஜனீப்யாம் ஸ்வாஹா
தேஜோத்வணுகாய மத்யமாப்யாம் வஷட்
வாயு த்வணுகாய அநாமிகாப்யாம் ஹும்
ஆகாசத்வயணுகாயகனிஷ்டிகாப்யாம்வௌஷட்.
பிருதிவ் யப் தேஜோ வாயு வாகாச த்வயணுகேப்ய கரதலகரபிருஷ்டாப்யாம் பட்.

பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்தஃ

27. தியானம்:—

ஜீவோ பிரஹ்மேதி வாக்யார்த்தம் யாவதஸ்தி மனஸ்திதிஃ
ஐக்யம் தத்வம்லயே குர்வன் தியாயேதஸிபதம் ஸதா!!—

[ஜீவன் பிரஹ்மம் என வாக்கியார்த்தத்தில் எதுவரையில் மனம் நிற்குமோ அதுபரியந்தம் (மனோ) லயத்தில் ஜீவன் பிரஹ்மம் இதன் இரண்டின் ஐக்கிய தத்துவத்தை அநுசந்தானம் செய்துகொண்டு "அஸி" பதத்தைத் தியானம் செய்யவேண்டும்.]

இவ்விதம் மகாவாக்கிய ஷடங்கங்கள் சொல்லப்பட்டன.

(இன்னும் வரும்.)

மு. கோ. நாராயணசாமி ஐயர்.

———:-:———


**Gleanings on the Way from Earth to Heaven**

An Original Mystical Work in English with a Chart of life. Sold at 2s. 6d. Offered for Rs. 1-10 by V.P.P.

Apply to the Secretary D. K. Agency,
Mylapore, Madras, S.

# Kannaki—A Social Drama.

## கண்ணகி.

அங்கம்.III] [காட்சி-5.

இடம்—வையை ஆற்றின் கரையில் உள்ள ஒரு நந்தவனம்; வையை ஆற்றின்கரை.

காலம்—விடியற்காலம்

பாத்திரர்— { கண்ணகி, கோவலன், கௌந்தி, கௌசிகன்

**கோவலன்:**—(கண்ணகியை நோக்கி) கண்மணி! நாம் ஐயைகோட்டத்தை விட்டுப் புறப்பட்டு நெடுந் தூரம் வந்துவிட்டோம்!

**கௌந்தி:**—ஆமாம்; பாணர்கள் சொன்ன வையை ஆறு இதுதான் போலும்! (ஆற்றைக் கையால் காட்டுகிறாள்.)

**கண்ணகி:**—மாதுஸ்ரீ! அந்தப் பாணர்கள் நம்மிடம் எவ்வளவு அன்பும் பட்சமும் காட்டிப் பேசினார்கள்; பார்த்தீர்களா!

**கௌந்தி:**—பாண்டிய நாட்டில் புலியும் மானும் ஒரு துறையில் நீர்குடிக்கிறதென்றால் அவர்கள் நம்மிடம் அன்பு காட்டியது ஒரு ஆச்சரியமா? "அரசனெவ்வழி குடிகளவ்வழி" என்னும் பழமொழியை நீ கேட்டதில்லையா? எல்லாவற்றுக்கும் அரசனுடைய செங்கோலே காரணம்!

**கோவலன்:**—(கௌந்தியை நோக்கி) மாதுஸ்ரீ, கதிரவனுதிக்குந் தருணமாயிற்று! நாம் இந்த நந்தவனத்தில் தங்கிக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பின்பு அக்கரை சென்று மதுரையை அடையலாமென்று நினைக்கிறேன்! தங்களுடைய சித்தம் எப்படி?

**கௌந்தி:**—ஆஹா! உன்னுடைய இஷ்டப்படியே செய்யலாம்.

**கண்ணகி:**—இந்த நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்து இங்குள்ள அற்புதங்களையும் அதிசயங்களையும் கண்டு ஆனந்தித்துச் செல்லலாமென்றே நானும் விரும்புகிறேன்!

**கோவலன்:**—ஆனால் சரி; நீங்களிருவரும் இந்த நந்தவனத்திலேயே இருங்கள்! நான் ஆற்றுக்குச் சென்று சந்தியாவந்தனம் முதலிய நித்திய கருமானுஷ்டானங்களைச் செய்து முடித்துக்கொண்டு ஒரு நொடியில் திரும்புகிறேன்.

**கௌந்தி:**—கோவலா! அப்படியே செய்.

**கோவலன்:**—ஜாக்கிரதையாயிருங்கள்! நான்போய் வருகிறேன்! (ஆற்றுக்குப்போகிறான்.)

**கௌசிகர்:**—(ஆற்றங்கரையின் ஒரு பக்கத்தில் நின்று தனக்குள் சொல்லிக் கொள்ளுகிறார்) நாமோ கோவலனைத்தேடிப் பலவிடங்களுக்குச் சென்றும் அவனைக் காணாமல் கடைசியாக இங்கு வந்திருக்கிறோம்! இங்காவது அவனைப் பார்க்கின்றோமோ இல்லையோ! இருக்கட்டும்! அதோ ஒரு சுந்தர புருஷன் ஆற்றை நோக்கி வந்துகொண்டிருக்கிறான்! அவன் ஒருகால் கோவலனாக இருந்தாலும் இருக்கலாம்! எல்லாவற்றிற்கும் நாம் அந்தக் குருக்கத்தி மரத்தினடியில் சென்று தங்குவோம்! (கரையோரமாயுள்ள ஒரு மாதவி மரத்தின் நிழலில் தங்குகிறார்.

**கோவலன்:**—(ஆற்றையடைந்த பின்பு தன் காதலியோடு கானகத்தில் நடந்து வந்த கஷ்டத்தை நினைத்து வருந்தித் தானேபுலம்புகிறான்) ஆ! சிவமே! ஜெகதீசா! உன்னுடைய திருவிளையாடலை நான் என்னென்று சொல்லுவேன்! நான் பிறந்தது எங்கே! வளர்ந்தது எங்கே! இப்போதிருப்பது எங்கே! இவைகளை யெல்லாம் நினைக்கும்போது என் மனம் பகீரென்கின்றதே! நான் எதை நினைந்தழுவேன்! அன்பினிற் சிறந்த வென் னருயிர்த்தந்தை மைந்தனெனக்கு மகிழ்மண முடித்ததை நினைந்தழுவேனே! கற்பினுக் கரசியாம் கண்ணகி தானும் பாவியேனிந்தக் கோவலன் தன்னால் கொடுந்துய ரெய்திய கொடுமை நினைந்தழுவேனே! கள்ள வொழுக்கமே தெள்ளிதென் றெண்ணிய மங்கை மாதவியின் பொய்த்திறம் நினைந்தழுவேனே! அக்கணிகைச் சிறுக்கியின் சிறுமை யுணராத வென் புல்லறிவு நினைந்தழுவேனே! கல்லினும் முள்ளினும் புல்லினும் புதரினும் என்னருங்காதலி எய்திய துயர் நினைந்தழுவேனே! கண்மணி போன்றவென் கண்ணகி தன்னின் காற்சிலம் பதனை விலையது கூறியே விற்றிட ஈசன் விதித்த விதியினை நினைந்தழுவேனே! யான் எதை நினைந்தழுவேன்! எதுதான் செய்வேன்! (கண்ணீர் சொரிய மௌனத்தோடு பூமியைப் பார்த்தபடியே யோசிக்கிறான். அவனுடைய சரீரம் வெளுத்துப்போயிற்று.)

**கௌசிகர்:**—(தனக்குள்) அதோ ஆற்றங்கரையில் நிற்பவனுடைய நிற வேறுபாட்டையும் மன வேறுபாட்டையும் நோக்குங்கால் அவன்தான் கோவலனாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். எல்லாவற்றிற்கும் நம்முடைய சந்தேகம் தெளிய ஒரு யுக்தி செய்யலாம்! (கோவலன் காதில் விழும்படியாகத் தாம் நின்ற குருக்கத்தி மரத்தைப்பார்த்துச் சொல்லுகிறார்) ஏ! மாதவியே! கோவலன் பிரிவினுக்கு ஆற்றாது காமத்தீயால் துயருற்று, அது முதல் இதுவரையில் வருந்தி வருகின்ற மாதவியைப்போல, இளவேனில் நீங்க அதற்கு ஆற்றாது முதுவேனிற் காலத்து வெயிலால் மாதவியாகிய நீயும் வருந்தி நிற்கின்றாய் போலும்! அந்த மாதவியின் பெயரை நீயும் அடைந்திருத்தலால் உனக்கும் அவளுடைய குணங்கள் இருக்கின்றன! (இங்கு மாதவி என்னும் வார்த்தை தாசியாகிய மாதவிக்கும், குருக்கத்திற்கும் பொதுவாக நிற்பது கவனிக்கத்தக்கது).

**கோவலன்:**—(கௌசிகர் சொன்ன இந்த வார்த்தை காதில் பட்டவுடன் அவரை அணுகிச்சென்று மிகுந்த பரபரப்புடன்) ஐயா! தாம்யார்! இந்த மரத்தைப்பார்த்து என்னமோ சொன்னீரே; அதன் பொருளென்ன? (என்று ஆவலுடன் கேட்டான்).

**கௌசிகர்:**—அப்பா! ஒன்றுமில்லை! இந்த மரத்தைப் பார்த்தவுடன் கோவலன் என்பான் ஒருவனைப் பிரிந்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நங்கையின் ஞாபகம் எனக்கு வந்தது! அதன்மேல் ஏதோ உளறியிருப்பேன்!

**கோவலன்;**—அந்த நங்கை யார்? அவள் எப்படிப் பட்டவள்? அவள் பெயரென்ன?

**கௌசிகர்:**—அவளுடைய அழகைச் சொல்லுவதென்றால் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாது! இருந்தபோதிலும் என் சிற்றறிவிற்கு எட்டிய மட்டும் ஒருவாறு அவளுடைய அழகைச் சொல்லுகிறேன்! நீ கவனமாய்க் கேட்பாயாக!

"அறனெறித்தன்ன செறிகுழற் கற்றையும்,
பிறைசெறித்தன்ன நறைகமழ் நுதலுங்,
கயலிணைத்தன்ன வகலிரு விழியுங்,
குமிழை முகிழ்த்தன்ன வமைவரு நாசியும்,
பளிங்கினன்ன துளக்கொளிக் கதுப்பும்,
வள்ளையன்ன தெள்ளொளிச்செவியும்,
குலிகந்தோய்த்த விலவுறழிதழும்,
முறுவல் பூப்ப மின்னென மிளிருங்,
குறு முத்தன்ன சிறு முள்ளெயிறுங்,
கொழுநீர்ப்பணிலத்து விழுமிய கழுத்துஞ்
சிவிறி விரித்தன்ன சிறுதிருவடியும்"



உடையாள் அந்த நங்கை! அவள் பெயர் மாதவி! அவள் விலைமகளாயினும் குலமகளினுஞ் சிறந்த கற்பினை யுடையாள்! கோவலன் என்பவனைத் தன் மனத்திலே எழுதி அழகுபெறப் பார்க்கும் பாவை நல்லாள்! கற்பினுக்கரசி! குணத்தினுக் குறைவிடம்! காதற் களஞ்சியம்! அன்பின் பொக்கிஷம்! பெண்கள் நாயகம்!

**கோவலன்:**—அந்த மாதவிக்கு இப்போதென்ன சம்பவித்து விட்டது?

**கௌசிகர்:**—ஐயா! அவளுடைய காதலனான கோவலனென்பான் அவளை விட்டுப் பிரிந்த துயரத்தால் அவள்மிகவும் மனம்வருந்தி ஊணுறக்கமின்றிப் பாயும் படுக்கையுமாயிருந்து அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய் சதா சர்வகாலம் பினற்றிக் கொண்டிருக்கிறாள்! அவள்தான் அப்படி என்றால்; கோவலனுடைய தாயுந் தகப்பனும் படும் துயரத்தைக் கண்ணால் பார்க்கமுடியவில்லை! அவர்கள் நாலா பக்கத்திலும் ஆட்களை விட்டுத் தேடச் சொல்லியிருக்கிறார்கள்! ஊர் ஜனங்களோ அக்கோவலன் பிரிவாற்றாது மனமுடைந்து துக்க சாகரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள்! அரிய மாணிக்கத்தை இழந்து விட்ட நாகம் போலவும், இனிய உயிரை இழந்து விட்ட உடலைப் போலவும் அவனுடைய சுற்றத்தார் துயரக்கடலில் ஆழ்ந்திருக்கின்றார்கள்! அந்தக் கோவலனைத் தேடியே நானும் செல்லுகிறேன்!

**கோவலன்:**—ஐயா! அந்தக் கோவலன் என்பவன் நானே!

**கௌசிகர்:**—(ஆச்சரியத்துடன்) ஆ! அப்படியா! மிகவும் நலமாயிற்று! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் தாங்களே வந்து விட்டீர்கள்! (மடியிலிருந்த கடிதத்தை எடுத்துக் கோவலன் கையில் கொடுத்து) ஐயா! இதை மாதவி உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்! தயை செய்து என்காதில் விழும்படிச் சற்று உரக்கவே வாசியுங்கள்!

**கோவலன்:**—(அக்கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்துவிட்டு) ஆஹா! அப்படியே வாசிக்கிறேன்! (கடிதத்தை உரக்கப்படிக்கிறான்.)

241-கணிகையர் வீதி; காவரிப்பூம்பட்டினம்.

18-7-கி. மு. 6-வது வருஷம்.

அன்பிற் சிறந்த ஆருயிர்க் கோவலா!

தேவரீர் திருவடிகளைத் திக்குநோக்கித் தண்டம் பண்ணித் தங்கள் காதலியாகிய மாதவி செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்! கற்பிற்சிறந்த கண்ணகியுடனே இரவில் புறப்பட்டுத் தாங்கள் நகர் நீங்கினீர்கள் என்ற செய்தியை என்தோழி வசந்தமாலை மூலமாக நான் கேள்விப்பட்டேன்! அதுமுதல் என்

மனம் அனலிலிட்ட மெழுகுபோல உருகுகின்றது! தங்களுடைய பெற்றோர்களைத் தவிக்கவிட்டு ஒருவருக்குந் தெரியாமல் வெளிப் புறப்படவேண்டிய காலம் தங்களுக்கும் வரவேண்டுமோ? அடியாள் செய்த பிழையின்பொருட்டுத் தாங்கள் சென்றிருந்தால் என்மனம் இன்னும் வருத்தத்தை யடையும்! அப்படியே நான் குற்றம் செய்திருந்தபோதிலும் அறிவிற் சிறந்த தாங்கள் அதைப் பாராட்டாமல், பெண்களுக்குப் பேதமையென்பது இயல்பாகவே உண்டானது என்றுகொண்டு என்னை மன்னிக்கும்படித் தங்களை வேண்டுகிறேன்! தங்களை இனி எப்போது பார்க்கப் போகிறேன் என்னும் ஏக்கமே எனக்கு அதிகமாயிருக்கிறது! உங்களைக் கனவில் காணலாமென்றாலும் முடியவில்லை! ஏனெனில் நித்திரையில்லாததால் கனவு காண்பதற்கு மார்க்கமில்லை! உங்களைப் படத்திலெழுதிப் பார்க்கவும் சக்தியற்றவளாய் இருக்கிறேன்! ஏனெனில் உங்களுடைய திருவுருவத்தைப்போல் படத்திலமைப்பது எந்த ஓவியக்காரருக்கும் சாத்தியமாகாத விஷயம்! அப்படியே ஒருகால் உங்களைப்போல் படத்தில் எழுதிவிட்டாலும், ஊற்றிலிருந்து நீர் பெருகுவதுபோல என் கண்களிலிருந்து இடையறாது பெருகும் கண்ணீரானது அந்தப் படத்தைப் பார்க்கமுடியாதபடி என் கண்ணொளியை மறைத்துவிடும்! ஆதலால் தங்களை நேரிற் காண்பதைவிட வேறு மார்க்கமில்லை! அறிவிற் சிறந்த தாங்கள் அடியாள்பொருட்டு மறுபடியும் ஊர்திரும்பி உங்கள் பெற்றோர்களின் துயரத்தை நீக்கி ஏழையாகிய நான்கொண்ட விரகதாபத்தையும் தணிக்கும்படியாகத் தங்களுடைய திருவடித் தாமரையைப் பற்றுகின்றேன்!

இங்ஙனம்,

தங்கள் உண்மைக்காதலி,

மாதவி.

**கௌசிகர்:**—சரி; இப்போது தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்!

**கோவலன்:**—மாதவி உண்மை அன்புடையவள் என்று அறிந்தேன்! குற்றம் என் மீதே ஒழிய அவள் மீது இல்லை! இருந்தபோதிலும் நான் மதுரைக்குப் போய் வியாபாரம் செய்துவிட்டு சீக்கிரம் காவிரிப்பூம் பட்டினத்துக்குத் திரும்பிவருகிறேன்! மாதவி கொடுத்த இக்கடிதத்தை என்பிதாவிடம் காட்டி அவளை ஆதரித்துப் பாதுகாக்கும்படி நான் சொன்னதாகச் சொல்லுங்கள்! அவர்களையும் வருத்தப்படவேண்டாமெனச் சொல்லுங்கள்! மாதவிக்கும் வேண்டிய தேறுதல் கூறுங்கள்!

**கௌசிகர்:**—ஆஹா! அப்படியே! சீக்கிரம் வந்துவிடுங்கள்! நான் சென்று வருகிறேன்! (அவ்விடம் விட்டு நீங்குகிறார்.)

**கோவலன்:**—(நந்தவனம் சென்று நடந்த சங்கதியைக் கௌந்திக்கு உரைத்துவிட்டு) "இனி நாம் அக்கரை செல்லலாமே!" என்று கண்ணகியைக் கேட்கிறான்.)

**கண்ணகி:**—அப்படியே! அதோ ஓடக்காரர்கள் இருக்கிறார்கள்! ஓடத்திலேறிப்போகலாம்! புறப்படுங்கள்! (மூவரும் ஓடத்திலேறி அக்கரைசென்று மதுரையின் கிழக்குக்கோட்டை வாயிற் படியண்டை உள்ள ஒரு முனிவர் ஆச்சிரமத்தில் தங்குகிறார்கள்.)

[3-ம் அங்கம் 5-ம் காட்சி முற்றும்]

நாகை ஸி. கோபாலகிருஷ்ணன்.

## Sita-A Tale of Hindu Domertic Life.

## சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

### 31-வது அதிகாரம்.

இராமச்சந்திரய்யருக்கு பி. எல். பரீக்ஷை தேறிவிட்டது அவர் ஒருவருஷம் வேலை பழகிவிட்டு பிறகு சம்ஸாரம், காமேசுவரய்யர் முதலானவர்களுடன் திருச்சினப்பள்ளியில் வக்கீல் வேலைபாய் இருப்பதாக தீர்மானித்து வந்துவிட்டார். திருச்சினப்பள்ளியில் ஆறு வருஷம் வக்கீல் வேலைபாயிருந்ததில் அவருக்கு நல்ல வரும்படியும் அதிக செல்வாக்கும் ஏற்பட்டது. சீதாவை நல்லவளென்று கொண்டாடாதவர்கள் கிடையாது. இராமச்சந்திரய்யர் தாயாருக்கும் இராமச்சந்திரய்யருக்கும் பணிவிடைசெய்யவும் காமேசுவரய்யருக்கு தகுந்தபடி நடந்துகொள்ளவும் தெய்வ பக்தியோடுகூட நடக்கவும் அவளைப்போல் வேறொருவராலும் இருக்கமுடியாது. நல்ல சமயங்களில் வீட்டு யோஜனையெல்லாம் இராமச்சந்திரய்யருக்கு நன்றாய் சொல்வாள். குடும்ப கணக்குகள் ஒன்று விடாமல் எல்லாம் எழுதிவைப்பாள். இராமச்சந்திரய்யர் யாருக்காவது கடிதம் எழுதவேண்டுமானால் சமாசாரம் மட்டும்தான் சொல்வார். மற்றதெல்லாம் சீதா தானே எழுதிவிடுவாள். இராமச்சந்திரய்யருக்கு வீட்டுவேலையே இருக்காது. தன் பையனுக்கு போதனை நன்றாய் செய்துவருவாள். சிலர் இங்கிலீஷ் படித்தாலும் அல்லது எழுத படிக்க தெரிந்தாலும் அது ஸ்திரீகளுக்கு அனர்த்தத்தை தான்விளைவிக்கும் என்கிறார்கள். இது சுத்தப் பிசகு. புருஷர்களுக்



கெல்லாம் எவ்வளவோ சுகத்தைத்தருகிறபடிப்பு ஸ்திரிகளுக்கு மட்டும் எப்படி கெடுதலை உண்டு பண்ணக் கூடும். கெடுதலை உண்டு பண்ணும் படிப்பெல்லாம் அரைகுறைப்படிப்பே அல்லாது வேறில்லை. அப்படிப்பு மிகவும் அபாயகரமானதுதான். ஏனென்றால் வெறும்பானை தான் கூப்பாடு அதிகமாக போடும். இப்படிப்பட்ட படிப்பை மட்டும் சொல்லித்தராமல் பெண்களுக்குத் தமிழ் பாஷையிலோ சம்ஸ்கிருத பாஷையிலோ இங்கிலீஷிலோ நல்ல புஸ்தகங்களையெல்லாம் வாசிக்கசெய்து அதிக பணம் செலவழித்தால் அது ஒருபோதும் வீணாகாது. படிப்பென்றால் பரிக்ஷை தேறுவதல்ல. இங்கிலீஷ்மட்டும் தெரிந்துகொள்ளுவதுமல்ல. எந்த பாஷையை எடுத்துக்கொண்டிருந்த போதிலும் அதை நன்றாய் படித்து அதிலிருக்கும் நல்ல விஷயங்களை யெல்லாம் படித்திருந்தால் அது ஒருபோதும் வீணாகமாட்டாது. சீதாவுக்கு இங்கிலீஷ் தமிழ் இரண்டும் நன்றாய் தெரியும். அந்த இரண்டுபாஷையிலும் அநேக நல்ல புஸ்தகங்கள் படித்திருக்கிறாள். மேலும் வளரும் குழந்தைக்குகொஞ்சம் கொஞ்சமாகத் தான்படிப்பில் எல்லாவற்றையும் நன்றாய்சொல்லி கொடுக்கலாமல்லவா? இப்படி இராமச்சந்திரய்யர் சீதாவுடன் வெகு சுகமாக இருந்துகொண்டு பூவரசநல்லூரில் தனக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் நல்ல ஒத்தாசை செய்துகொண்டும் இருந்தார். ஆனால் வெங்கடராம சாஸ்திரிகள் பிள்ளை முத்துசாமி அவன் வகையறாவுக்குமட்டும் அஸூயை நீங்கவில்லை. இப்படியிருக்க ஜெயிலில் அடைக்கப்பட்ட கைதிகள் சுப்பய்யன் வெங்கடராமசாஸ்திரிகள், நாராயணசாஸ்திரிகள் ஜெயிலில் ஜன்னலைப் பெயர்த்துவிட்டு வெளியே தப்பி ஓடிப் போய்விட்டார்களென்றும் அவர்களை மறுபடியும் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு நாறுரூபாய் தருவதாகவும் தண்டோராபோட்டார்கள். அத்துடன்முன் தூக்கிப்போடப்பட்டகிருஷ்ணசாமி அய்யருக்கு தூக்கில் போட்டதில் உயிர் போகவில்லையென்றும் அவனும் பிழைத்துகொண்டிருக்கிறானென்றும் அவனைப் பிடித்து கொடுப்பவர்களுக்கு எண்ணூறுரூபாய் இனாம் கொடுப்பதாகவும் தண்டோரா போட்டார்கள். இராமச்சந்திரய்யருக்கு இதை எல்லாம் கேட்க வெகு ஆச்சரியமாயிருந்தது. பூவரசநல்லூர்பக்கத்தில் சாத்தூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் ஜமீன்தார்உண்டு. அவர்பெயர் தெய்வசிகாமணி முதலியார். அவர் மகா கபடசிகாமணி. அவருக்கு தான்மட்டும் வாழவேண்டும் மற்றவர்கள் எல்லோரும் கெட்டுப்போய்விடவேண்டுமென்கிற எண்ணம். நல்லநாகரீகமுள்ள இராஜாங்கங்களில்பணக்காரன் சுகமாக இருக்கவேண்டுமானால் குடிகள் புஷ்டியாய் இருக்கவேண்டுமென்று விரும்புவார்கள். நமது முதலியாருக்கு மட்டும் அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. எவனாவது ஒரு முதலி அல்லது பிள்ளை அல்லது குடியானவன் ஒரு ஏகரா நிலம் வாங்கிவிட்டால் அவனை மறுநாளே கூப்பிட்டு உன்னை குத்திவிடட்டுமா நிலத்தை எனக்கு சாசனம் செய்கிறாயா என்று கேழ்ப்பார். அவன் ஏழை என்ன செய்வான். இவருக்குபயந்துகொண்டு சாசனத்தை அவருக்கே பண்ணிவைத்து விடுவான். ஆனால் அவருக்குத்தான்மட்டும் எந்த நியாயத்தைக்கொண்டு அவ்வளவு பூமி வாங்கினார் என்றும் இவர் முதல் ஏகரா வாங்கும்போது ஓர் பிராமணன் அக்காலத்தில் பணக்காரனாயிருந்து இவரைக் கூப்பிட்டு முதலிப்பயலே ஏது பங்கு வாங்கஆரம்பித்துவிட்டாயா? என்றுகேட்டால் அக்காலத்தில் தன் மனது எப்படியிருக்குமென்றும் இவர் யோஜிக்கவில்லை. உலகத்தில் படிப்பு அதிகரிக்க இராஜ்ஜியம் செழிக்குமென்று எல்லோரும் எண்ணி இருக்க இவருக்குமட்டும் படிப்பு என்பதே ஆகாது. தன் பிள்ளைகளுக்கு மட்டும் படிப்பு வேண்டுமேயல்லாது மற்றவர்களுக்கு படிப்புக் கூடாதென்பார். ஏனெனில் படித்துவிட்டால் படித்தவன் தனக்கு போட்டியாக வந்துவிடுவான். தன் அதிகாரத்தை குறைக்கப் பார்ப்பான். தனக்கு அடங்கமாட்டான். ஆகையால் படிப்பேஆகாதுஎன்பார். உத்தியோகஸ்தர்களைக்கண்டால் அவர்களுக்கு ஆசார உபசாரம்செய்வான். டெபுடி ரெவினியூ இன்ஸ்பெக்டரும் ஒரு இலக்ஷாதிபதியும் வந்தால் லக்ஷாதிபதியை பிக்ஷாதிபதிக்கு சமானமாக வைத்து ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு ஆசாரம்உபசாரம்செய்வார். ஏனென்றால் அவனால் அவனுக்கு காரியம்ஆகவேண்டும். இவருக்குக் கோள்சொல்லுபவனைக்கண்டால்வெகு பிரியம். வெங்கடராமசாஸ்திரிகளின் தகப்பன் இந்த ஜமீன்தாரின் தகப்பனிடத்தில் மிக மரி

யாதையாய் இருந்துகொண்டு அவருக்கு ஊரில் பங்குசேர்த்துக்கொடுத்தார். அவர்செய்த உபகார்த்துக்காக தெய்வசிகாமணி முதலியார் வெங்கட்ராமசாஸ்திரிகள்மீது வெகு பிரியமாயிருந்தார். வெங்கட்ராமசாஸ்திரிகள் பிரியமாய் இருப்பதை கண்டு காவாலி சுப்பய்யன் கேலி செய்வான். முதலியை லட்சியம் செய்து குடியானவனிடத்தில்போய் அவனைஸ்தோத்திரம் செய்து பிழைப்பார்களா என்று கேலி செய்துவந்தார். வெங்கடராம சாஸ்திரிகள் முதலில் முதலியாரிடத்தில் சலீசாய் நிலம் குத்தகைக்கு வாங்க ஆரம்பித்தார். குத்தகை பாக்கிக்காக துலுக்க சேவகனை முதலியார் அனுப்பினால் ஊரில் முதலியார் தன்பேரில் பிரியத்தினால் சேவகனை விட்டு ரகசியம் பேச கூட்டிவரச்சொல்லி இருக்கிறானென்றுபெருமை சொல்லிகொள்வார். பிரியம்உண்டானால் மரியாதையாக கடிதம் எழுதக்கூடாதா. வாரண்டு சேவகனை அனுப்புவதுபோல் அனுப்புவானேன். இதைஅறியாத அந்த ஊர் ஜனங்கள் எப்படியிருந்தபோதிலும் முதலியாருக்கு வெங்கடராம சாஸ்திரிகளிடம் பிரியம் பிரியம்தான் என்று சொல்லி தாங்களும் அப்படி இருக்க கொடுத்துவைக்கவில்லையே என்று மனதில் அஸூயைபடுவார்கள். உடனே சாந்துருக்குபோய் முதலியார் குத்தகை பாக்கிக்கு கண்டிக்க வெங்கடராம சாஸ்திரிகள் அவருக்கு நமஸ்காரம்செய்து பின்னால் கொடுப்பதாக கெஞ்சி கேட்டுகொண்டுவருவார். பூவரசநல்லூருக்கு வந்ததும் எல்லோரிடத்திலும் முதலியார் தன்னை பக்கத்தில் உட்கார்த்திக்கொண்டு வெகுநேரம் பேசினார் என்று பெருமை சொல்லிக்கொள்வார். ஒருவன் ராஜா என்னோடு பேசினாரென்று பெருமை அடித்துக்கொண்டுஎல்லோரிடத்திலும் சொல்லிக்கொண்டான். ஊரில் எல்லோரும் அவன் ராஜாவுக்கு வேண்டியவன்போல் இருக்கிறது என்று மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். பிறகு ஒரு நாள் வேறொரு மனிதன் அவனைக் கூப்பிட்டு அப்பா ராஜா வுன்னோடு என்ன பேசினாரென்றார். அவன் ஒன்றுமில்லை ராஜா போகும்போது வீதியில் நான் நின்றுகொண்டிருந்தேன் ராஜா உடனே என்னை பார்த்து சீ நாயே ஒதுங்கிப் போவென்று ராஜா என்னோடு பேசினாரென்றான். அதுபோல் வெங்கடராம சாஸ்திரிகள் முதலியாரிடத்தில் போய் கையைக் கட்டி வாயை பொத்தி வெளியில் நின்றபோதிலும் வெளியில் வந்து தான் முதலியாருக்கு வெகு ஆப்தீக சிநேசிதம் என்பார். ஆப்த சிநேகித மென்பதுகூட முதலியாரை நினைக்கும்போதே ஆப்தீகமென்று பயத்தால் உளரிவிடும். ஒருவேளை முதலியார் வீட்டு ஆப்தீகத்துக்கு இருப்பதாகத்தான் சிநேகமோ என்று சிலர் சந்தேகிப்பார்கள். வெங்கடராம சாஸ்திரிகள் இப்படி கொஞ்சநாளிருந்து பிறகு நமக்கு இந்தவேலை கட்டாதென்று நாரதருடைய உத்தியோகத்தையும் சேர்த்துக்கொண்டார். அதற்கு தான் மட்டும் போதாதென்று காவாலி சுப்பையனையும் தன்கக்ஷியில் சேர்த்துக்கொண்டார். உடனே இருவருக்கும் தகுந்த வேலை ஏற்பட்டது. தினந்தோறும் சாத்தூருக்கு போவதும் அங்கே முதலியாரிடத்தில் பூவரசநல்லூரில் தனக்கு ஆகாத பணக்காரர்கள்பேரில் எல்லாம் கோள் சொல்லுகிறதும் அவர்கள் முதலியாரை தூஷித்ததாகவும் அவர்களுக்கு ஏதாவது கெடுதலை செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொடுப்பார். முதலியாருக்கு பூவரசநல்லூரிலுள்ள நல்லபணக்காரர்களிடத்தில் எல்லாம் நல்ல மதிப்பு இருந்தது. வெங்கடராம சாஸ்திரிகள் சுப்பய்யன் இருவரும் அந்த மதிப்பை கெடுத்துவிட்டார்கள். மரத்தை வெட்டுவதற்கு மரமே தன் ஜாதியைவிட்டு கோடாலிக்கு பிடியாய்ப்போய் கோத்துக்கொண்டு மரத்தைவெட்ட ஒத்தாசை செய்வதுபோல் பூவரசநல்லூருக்கு வெங்கடராமசாஸ்திரிகள் சுப்பய்யன் இவர்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பு ஆனார்கள். ஆகையால் அவர்கள் ஜெயில்போய் இருந்ததில் ஊரில் எல்லோருக்கும் சந்தோஷம். முதலியார் கோள் சொல்லுகிறவர்கள்மீது பிரியமாயிருப்பதைப் பார்த்து வெங்கட்ராம சாஸ்திரிகள் குமாரன் முத்துசாமி தன் போஸ்டாபீசு வேலையைக்கூட விட்டுவிட்டு இவரிடம்போய் அமர்ந்துகொண்டான். இவனுக்கு வேறே வேலை கிடையாது. தினந்தோறும் இன்ன மனிதர்கள் இவர்களை தூஷித்தார்களென்றும், பூவரசநல்லூரில் இன்ன விசேஷம் நடந்ததென்றும் சொல்வதே வேலை. பூவரசநல்லூரில் தெய்வசிகாமணி முதலியாருக்கு நிலம் ஏராளமாயிருந்தது. அந்த நிலங்களைப்பார்க்கும் ஏஜண்டின்மீதும் முத்துசாமி



ஏதாவது கோள் சொல்லிக்கொண்டே இருப்பான். ஊருக்கு ஜனங்களுக்கு ஒரு காரியம் சுகமென்றால், அது முத்துசாமி அய்யருக்கும் அவர் சொல்லை கேட்கும் தெய்வசிகாமணி முதலியாருக்கும் பெரிய கஷ்டம். தெய்வசிகாமணி முதலியார் சுபாவத்தில் நல்லவராயிருந்தும் அவரை முத்துசாமி அய்யர் கெடுத்து அந்த ஊர் ஜனங்களுக்கும் ஜமீன்தாருக்கும் ஆகாமல் செய்துவிட்டார். இராமச்சந்திரய்யர் தான் சம்பாதித்ததைக்கொண்டு ஓர் கோவில் கட்டலாமென்று யோஜித்தார். உடனே அது விஷயத்தில் முத்துசாமிஅய்யர் மூலமாய் ஜமீன்தாருக்கு ஒரு அஸூயை விழுந்து விட்டது. இப்படியிருக்க அந்த ஊர்ப்படுகையில் கோவிலுக்காக சலீசாய் 2000ரூபாய்க்கு மரம் ஏலமெடுக்க ராமச்சந்திரய்யர் யோஜித்தார். இது தெரிந்த ஜமீன்தார் ராமச்சந்திரய்யருக்கு முன்னமேதான் மனுப்போட்டுக்கொண்டு ஓவர்சியர் முதலியவர்களுக்கு நல்ல இனாம் கொடுத்து அம்மரங்களை 1500 ரூபாய்க்கு ஏலமெடுத்துவிட்டார். ராமச்சந்திரய்யருக்கு இது விஷயத்தில் வெகு வருத்தம் வந்துவிட்டது. நான் தர்மத்துக்கு செய்யவேண்டுமென்று யோஜித்து ஜமீன்தாருக்கு இது விஷயம் தெரிவித்திருக்க அதற்கு ஒத்தாசை செய்வதைவிட்டு ஜமீன்தார் விரோதமாகக் கிளம்பினதைக்கண்டு ராமசந்திரய்யர் உடனே சர்க்காருக்கு ஜமீன்தார் 5000 ரூபாய்க்கு போகக்கூடிய மரத்தை 1500 ரூபாயிக்கு ஏலமெடுத்துவிட்டாரென்றும் ஏலம்போட்டதே ஒருவருக்கும் தெரியாதென்றும், தெரிந்திருந்தால் 5000 ரூபாய்க்கு வருமென்றும் ஓவர்சியர் முதலியவர்கள் ஜமீன்தாருக்கு உள்பட்டுவிட்டார்களென்றும் எழுதினார். இந்த பிடிஷனை விஜாரிக்க ரிவின்யூ இன்ஸ்பெக்டர் ஸ்பெஷலாய் அனுப்பப்பட்டார். ரிவினியூ இன்ஸ்பெக்டர் கிராமத்துக்கு வருவதாக தெரிந்ததும் ஊரில்எல்லோரும் கிராமசாவடிக்கு அவரைப் பார்க்கப்போனார்கள். ரிவின்யூ இன்ஸ்பெக்டர் சாவடியில் உட்கார்ந்திருக்கவும், கிராமத்தாரெல்லோரும் அவர் முன் கைகட்டி நின்றதை பார்த்தால், அவர் டிப்டிகலெக்டரோ என்று தோன்றும். கிராமங்களில் ஜில்லா ஜட்ஜி வந்தால்கூட அவனை லக்ஷியம் செய்யமாட்டார்கள்: அவனுக்கு ஒருவேளை அதிகாரமிருந்தபோதிலும், ஒன்றுமறியாத ஜனங்களுக்கு அவன் வருவகை லக்ஷியமாயிராது. 30 ரூபாய் 40 ரூபாய் வாங்கும் ரிவினியூ இன்ஸ்பெக்டர் வந்துவிட்டால் அவனுக்கு மரியாதை தலைகால் தெரியாமல் ஓடி ஓடிச் செய்வார்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர் வந்தவெகுநேரத்திற்குப் பிறகு ராமச்சந்திரய்யர் போய் அவர் பக்கத்திலுட்கார்ந்துகொண்டார். ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு மற்றவர்களெல்லாரும் நின்றதைபார்க்க, அதிகமாக அகம்பாவம் உண்டாகிவிட்டது. அவன் ராமச்சந்திரய்யரைப்பார்த்து என்னய்யா உங்களுக்குப் பெரியோர்களெல்லாரும் நிற்கிறார்களேயென்றான். ராமசந்திரய்யர் அவர்களெல்லோரும் தங்களுக்கும் பெரியவர்கள்தான். நாமிருவரும் நிற்கலாம் வாருங்களென்றார். ரிவினியூ இன்ஸ்பெக்டர் இவருடன் பேசி முடியாதென்று கண்டு, நல்லது உமது வாக்குமூலத்தை எழுந்திருந்து சொல்லும் என்றார். ராமச்சந்திரய்யர் தாங்களும் எழுந்திருந்து என்னைக் கேளுங்கள். நானும் எழுந்து சொல்லுகிறேனென்றார். ரிவினியூ இன்ஸ்பெக்டர் காரியம் ஒன்றும் சாயவில்லை. பிறகு ராமச்சந்திரய்யர் ஒன்று சொல்ல அவன் ஒன்று எழுதிக்கொண்டான். ராமச்சந்திரய்யர் தான் சொன்னபடி எழுதினால்தான் கையெழுத்து போடுவேனென்றார். பிறகு ராமச்சந்திரய்யர் இஷ்டப்படியே வாக்குமூலம் கொடுத்தார். ஜமீன்தாரிடத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு நல்ல வேட்டையென்பதை கேழ்க்கவும் வேண்டுமோ. பிறகு மற்ற சாக்ஷிகளைக் கேட்க எல்லோரும் ஜமீன்தாருக்கும் கோள்சொல்லி முத்துசாமி அய்யருக்கும் பயந்து சொல்லமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். அந்த ஊரில் நாராயணசாமி அய்யரென்பவருக்கு சாம்பசிவனென்ற ஒரு பிள்ளையுண்டு. அவன் சொல் ஒன்று சொன்னால் அதை ஒருபோதும் தவறமாட்டான். தனக்கு ஏதாவது வரவேண்டியிருந்தால் வெகு கண்டிப்பாய் வாங்குவான். தான் கொடுக்கவேண்டியிருந்தபோதிலும் வெகு கண்டிப்பாய் கொடுப்பான். சாம்பசிவன் இப்படி இருப்பதால் அவனை ஊரில் அனேகர் தூஷிப்பார்கள். ஒரு தடவை நாராயணசாமி அய்யன் பொய்சாக்ஷி சொல்லி 100 ரூ. சம்பாதித்து அதை சாம்பசிவனிடம்

கொண்டுவந்து கொடுத்தார். சாம்பசிவன் அதை வாங்கி கீழேவிசிரி எரிந்து இந்தக் காசுவந்து நாம் எங்கே கோட்டை கட்டப்போகிறோம். கிராமத்தில் வருகிறபணம் எனக்குப் போதும். இதுகளெல்லாம் வேண்டாமென்றான். நாராயணசாமி அய்யன் அடே பைத்யகாரா நாய்விற்ற காசு குலைக்குமா. கிடக்கிறது நான் எடுத்துக் கொள்கிறேனென்று எடுத்துக்கொண்டு விட்டார். இப்படிப்பட்ட சாம்பசிவனைக் கூப்பிட்டு ரிவினியூ இன்ஸ்பெக்டர் கேட்டார். கேட்டதும் அவன்முழுவதும் ராமச்சந்திரய்யர் சொன்னபடியே சொல்லிவிட்டான். ரிவினியூ இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரய்யர் மீது இருந்த கோபத்தை வைத்து ஏலம் போட்டது நியாயம் தானென்று எழுதிவிட்டார். ராமச்சந்திரய்யர் பார்த்தார். உடனே கலெக்டருக்கும் இஞ்சினியருக்கும் மனுப்போட்டு அவர்களை கீழ் உத்யோகஸ்தர்களை நம்பாமல் நேரில் வந்து ஜாகாவைப் பார்க்கும்படி கேட்டார். கலெக்டரும் எஞ்சினியரும் அதற்கிணங்கி ஜாகாவை வந்து பார்வையிட்டார்கள். ஜமீன்தார் அவர்களுக்கும் ஆசார உபசாரம் செய்தார். ஜமீன்தாருக்கு இது விஷயத்தில் செலவானதே 2500 ரூ.க்கு இருக்கும். கலெக்டர் எஞ்சினியர் இவர்கள் பெரிய உத்யோகஸ்தர்களாதலால் அவர்கள் ஜமீன்தாருக்கு கட்டுப்படாமல், எல்லா மரங்களையும் பார்வையிட்டு ஏலம் போட்ட தொகை ரொம்பவும் சொல்பத்தொகையென்றும், அதுகளை மறு ஏலம்போட வேண்டுமென்றும் உத்தரவு செய்தார்கள். ஜமீன்தாருக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. இவ்வளவு செலவு செய்து விடுகிறதா என்று மேலாவில் அப்பீல் செய்தார். அங்கேயும் அசல் உறுதியாகிவிட்டது. பிறகுஏலத்திற்கு வந்ததும் ராமச்சந்திரய்யர் ஊரில் பங்குவீதம் பணம் வசூல்செய்து மரங்களையெல்லாம் 5000 ரூபாய்க்கு ஏலமெடுத்து பிறகு எல்லோருக்கும் பிரித்துக் கொடுத்தார்.

எஸ். இராமஸ்வாமி அய்யர் பி. ஏ.

## Stray Lessons in Civics.

### துரைத்தன விளக்கம்.

### 2. Thumb-Impression.

### 2. கட்டைவிரல் அடையாளம்.

I.

தபாற்காரன்:—"லொட்! லொட்! லொட்! லொட்! யாரது ஒய் உள்ளே," என்று ஓர் கூரைக் குடிசையின் கதவைத் தட்டிக் கூப்பிட, அக்குடிசையினின்று ஓர் குடியானவன், யாருங்கோ சாமி அது, கூப்பட்றது என்று வெளிவருகிறான். மறுபடி தபாற்காரன், ஏன் ஒய், உம் பேர் தொப்பஞ்சாமிபா ஒய்? அப்படி ஆனால் மோரீசிலிருந்து ஒரு மணி ஆர்டர் உமக்கு வந்திருக்கிறது ஒய்.

குடியானவன்:—என்னங்கோ வந்திருக்கு? மணி ஆட்டிறதா? அப்படின்னா என்ன?

தபாற்காரன்:—பணம் ஒய்! பணம்! உமக்கு யாரோ மோரீசிலிருந்து ரூபா 25 அனுப்பியிருக்கிறான். உம்பேர் தொப்பஞ்சாமிதானே ஒய்?

குடியானவன்:—ஆஞ்சாமி, ஆஞ்சாமி! எனக்கு எங்கப்பனிட்டபேர் தொப்பஞ்சாமிதான்.

தபாற்காரன்:—ஆனால் இப்படிவா, எங்கே உன் கட்டைவிரலை இப்படிக் கொண்டுவா என்று சொல்லி, மைதடவி இருந்த ஒரு கண்ணாடியின்மேல் குடியானவனது கட்டை விரலைத் தேய்த்து, அதை எடுத்துத் தான் கொண்டுவந்திருந்த மணி ஆர்டர் பாரத்தில் ஒருதரம் உருட்டி மசியாக்கிக்கொண்டு, இருபத்தைந்து ரூபாய் எண்ணிக் குடியானவனிடம்கொடுத்துவிட்டு தன் இனும் கால் ரூபாயையும் வாங்கிக் கொண்டு போனான்.

குடியானவன்:—எதிர் வீட்டினின்று அப்பொழுதுதான் வந்த தொப்புளானை நோக்கி, அண்ணே! இன்னிக்கி வெள்ளென காடுபோனேன். சோளக்காட்டிலெருந்து ஒரு நரி ஓடிச்சண்ணே. என்ன அதட்டம் வரப்போகுதோ



என்று ஊடுவந்து, கூழுகுடிச்சு கையலம்பினே. யாரோ ஒத்தன், தோல்பரி சின்னதாப் பணிகழுத்திலே மாட்டிக்கிட்டுவந்து இருபது ரூபாயும், ஒரு அஞ்சு ரூபாயும் குடுத்துட்டுப் போனான். ஆனால் திருப்பிக்கால் ரூபா கேட்டான் குடுத்தேன்.

தொப்புளான்:—சரித்தான் கையிலே என்னண்ணேகரி?

தொப்பஞ்சாமி:—அந்த வேடிக்கைக் கேளேண்ணே! வந்தவன் பணத்தைக் குடுத்துட்டு கட்டைவரலே பிடிச்சிழித்து, வண்டி மசியைத் தடவி ஒரு பலகைத்துண்டு கொணாந்திருந்தான் அதிலெசீத்தி, ஒரு சேப்பு மசியாலே எழுதிருந்த காயிதத்திலே தீத் தீட்டு, அந்த காகிதத்தை மடிச்சிப் பரியிலே போட்டிக்கிட்டுப் போனான், என்ன பைத்தியக்காரன் அண்ணே! கையிலே வண்டிமையைத் தடவி, காகிதத்திலே தடவ இருவத்தஞ்சு ரூபாயா?

தொப்புளான்.— பைத்தியம் போகத்தாண்ணேகாணுது? எப்படி ஆனால் என்ன? உனக்கு நரிகண்டாத்துக்கு அதட்டம் வந்துட்டு தோன்னே?

தொப்பஞ்சாமி:—வந்துட்டுது! வந்துட்டுது! அய்யனார் சாமிக்கு அஞ்சு ரூபாக்கி ஒரு ஆடும், அரை ரூபாக்கி கோழியும் வாங்கி அறுத்து பொங்கல் போடணும் என்று சொல்லி இருவரும் தன்தன் வீடு சென்றார்கள்.

II.

போஸ்டாபீஸ்

போஸ்டு மாஸ்டர்:—ஏன், ஒய் ஷண்முகம் பிள்ளை! அன்று தொப்பஞ்சாமி என்பவனுக்கு ரூ. 25 மணி ஆர்டர் வந்ததே ஒய் அதை என்ன செய்தீர்?

தபாற்காரன் ஷண்முகம் பிள்ளை:—அதை அன்றே கொடுத்து "தம்ப் இம்பிரெஷன்" கூட வாங்கி வந்தேனே?

போஸ்டுமாஸ்டர்:—இன்று காலமே எவனோ வந்து தனக்கு மோரீசிலிருந்து இருபத்தைந்து ரூபாய் மணி ஆர்டர் வரவேண்டுமென்றும், தன் பெயர் தொப்பஞ்சாமி என்றும் சொன்னானே ஒய்?

ஷண்முகம் பிள்ளை:—அதென்னவோ! நான் விசாரித்ததில் நான் பணம் பட்டுவாடா செய்த ஆஸாமி பெயர் தான் தொப்பஞ்சாமி யென்று தெரிந்தது. பணம் பட்டுவாடா செய்தேன்.

போஸ்டு மாஸ்டர்:—நான் வந்தவனை ஒரு போலீஸ் கான்ஸ்டெபிலை அழைத்து வரும்படி அனுப்பி யிருக்கிறேன், அவர்கள் வந்ததும், அவர்களுடன் சென்று, நீர் பணம் பட்டுவாடா செய்த ஆஸாமியைக் காண்பியும்; அவர்கள் அவனை மாஜிஸ்திரேடிடம் கொண்டு செல்வார்கள்.

ஷண்முகம் பிள்ளை:—ஆஹா! அப்படியே!

III.

தொப்பஞ்சாமியும், தொப்புளானும்

தொப்பஞ்சாமி:—என்னண்ணே தொப்புளான்! அன்னைக்கிவந்துதே இருவத்தஞ்சு ரூபா, அதிலே அய்யனுருக்குப் பூசை போட பத்து ரூபா செலவழிஞ்சுது, பாக்கிப் பணத்துக்கு பரிவாங் கீட்டேன்! அதிருக்கிட்டும் அண்ணே! இன்னிக்கி வெள்ளென வெளியே வந்தேன், ஒருபல்லி தலைமேலவிழுந்திச்சு வள்ளுவன் தெருவிலே வந்துக் கிட்டிருந்தான், கேட்டேன், அவனும் ஆகாசத்தைப் பாத்துட்டு, ஏதோ கலகம் வரப்போகுது இன்னான்! என்ன கலகம் வரும் அண்ணே? யோசிச்சுச் சொல்லேன்.

தொப்புளான்:—அதென்னவோ அண்ணே? வந்தது வந்துட்டுப் போறதே? நீ வேணுன்னு பல்லியைப் புடிச்சி தலைலே போட்டுக்கிட்டாய்.

இதற்குள் தெருக்கோடியில் போலீஸ்காரனும், ஷண்முகம்பிள்ளையும், வாஸ்தவமான தொப்பஞ்சாமியும் வர, குடியானவன்:—தொப்புளாண்ணே! வந்துடிச்சண்ணே! அந்த சேப்புத்தலைக்காரன் புடிச்சு நோக்கிடுவாண்ணே! இதைத்தாண்ணே பல்லி காட்டிச்சு! என்று சொல்லி ஓட்டம்பிடிக்க, ஷண்முகம்பிள்ளை சுட்டிக் காட்டினதால் தான் தேடிவந்த ஆஸாமி ஓடினவன்தானென்று தெரிந்த கான்ஸ்டேபிலும் பின் தொடர்ந்தோடி அக்குடியானவனைப் பிடித்துப் பின்கட்டாய்க் கட்டிக்கொண்டுவர எல்லோரும் மாஜிஸ்திரேட் கோர்ட்டு சேர்ந்தார்கள்.

IV.

[மாஜிஸ்திரேட் தனது ஆஸனத்தில் வீற்றிருக்க, குடியானவன் பின்கட்டாய் கட்டியிருந்த கையுடன் பெட்டியின்மேல் நிற்கிருன் விசாரணை நடக்கிறது.]

மாஜிஸ்திரேட்:—கைதியை நோக்கி, நீ வேறொருவர்க்கு வந்த பணத்தை உனதென்று வாங்கிக்கொண்டதுண்டா?

குடியானவன்.—மனத்துள் (இல்லையென்றால் யார் கண்டார்கள்) இரைந்து, சாமி நான் ஒண்ணேயும் அறியேஞ்சாமி; தப்படரேஞ்சாமி! என்னெவிட்டுடுங்கோ சாமி! ஆஞ்சாமி.

கான்ஸ்டேபில்:—ஏய், கன்னுப்பின்னு என்று பேசாதே! கேட்டதற்கு மாத்திரம் பதில் சொல்.

குடியானவன்:—நான் ஒண்ணேயுங்காணேஞ் சாமி! அவளவுதாஞ்சாமி!

மாஜிஸ்திரேட்:—போஸ்டு பியூன் ஷண்முகம் பிள்ளையை நோக்கி, "என்ஓய் ஷண்முகம்பிள்ளே! நீர் இவனிடம் பணம் கொடுத்ததற்கு சாக்ஷி உண்டா? எவ்வாறு ருசுப்பிப்பீர்?"

ஷண்முகம்பிள்ளை:—இவன் தற்குறியாதலால் அவனது "கட்டைவிரற்குறி" இதோ இந்த மணி ஆர்டரில் எடுக்கப்பட்டிருக்கிறது. பரிசோதித்துப்பார்த்தால் தெரிந்துவிடும்.

மாஜிஸ்திரேட்டு:—குமாஸ்தாவை நோக்கி ஓய் சுப்புசேஷய்யரே, ஓர் துண்டுக்காகிதத்தில் கைதியின் கைக் கட்டைவிரற்குறியெடும்! பீரோவினின்று அந்த மைக்கிராஸ் கோப்பை எடும்! என அவ்வாறு செய்யப்பட்டு, மாஜிஸ்திரேட்டும் பரிசோதித்துப் பார்த்துத் திருப்தியடைந்து, குடியானவனை நோக்கி, "ஏய், நீ, பிறர் பணத்தை அபகரித்துக்கொண்டு பொய்யும் பேசியபடியால் உனக்கு ஆறுமாதம் கடுங்காவலும் நூறு ரூபாய் அபராதமும் விதித்திருக்கிறேன். கான்ஸ்டேபில்! கொண்டுபோ இவனை ஜெயிலுக்கு."

"சுப்புசேஷய்யரே! இவன் சொத்துக்களை ஜப்தி செய்து ஏலம்போட்டு அபராதப்பணத்தை வசூல் செய்து கஜானவில் கட்டவேண்டிய ஏற்பாடு செய்யும்."

சுப்புசேஷய்யர்:—ஆஹா, என, கான்ஸ்டேபில் குடியானவனை செட்டியைப் பிடித்துத்தள்ளி ஜெயில் கொண்டுபோகிறன்.

V.

[ஆறு மாதத்திற்குப் பிறகு ஜெயிலினின்றும் விடுபட்ட குடியானவனும், அவன் சிநேகிதன் தொப்புளானும் சந்திக்கப் பின்வரும் சம்பாஷணை நடந்தது.]

தொப்புளான்:—என்னண்ணே! இத்தனை நாள் எப்படி கழிச்சே?

குடியானவன்:—அப்படி ஒண்ணும் சஷ்டமில்லை அண்ணே! செயிலிலே என்னை சுகமாத்தான் வச்சிருந்தாங்கோ! கொஞ்சம் வேலை மாத்தரம் அதிகமா வாங்கினங்கோ, ஆன, கூழ் ரொம்ப குடுத்தாங்கோ! போத்துக்க கம்பிளி குடுத்தாங்கோ! அடிக்கடி வைத்தியன் வந்து நோயிகீயி வந்திருக்குதான்னு பாத்துட்டுப்போனன்! ஊட்டை விட செயிலே சுகமண்ணே.

தொப்புளான்:—அது சரிதான்! நீ தான் பணத்தை வாங்கிக்கிட்டாயின்னு அந்த கச்சேரிக்காரனுக்கு ஆர் அண்ணே சொன்னங்கோ? அவனுக்கு எப்படி தெரிஞ்சுது.

குடியானவன்:—அண்ணே! அந்த வேடிக்கையைக் கேளேன்! அந்தப் பசகள் என்னென்ன யுக்திகண்டு கிட்டிருக்காங்கோ! அன்னெக்கு அந்த சின்னப் பரிக்காரனை பைத்தியம் இன்னன்னு சொன்னேம், அவனில்லை பைத்தியம், நாம்பதான் பைத்தியம்! நீ ஒன் கட்டைவிரலை இப்படிக்காட்டு, (காட்ட) இதிலே இந்த கோடு இருக்கோ இல்லையோ இதிலே வண்டிமை பூந்துக்க, காயிதத்திலே அழுத்தின அப்படியே பொம்மை மாதிரி விழுந்துடாது. அப்படி விழுந்த பொம்மை மறுபடி வேணும் போது பொம்மை எடுத்து ரெண்டையும் பார்த்து நான் தான் மைதடவினவன் இன்னு தெரிஞ்சிக்கிருங்கோ! பின்னே ஒரு கண்ணாடி வச்சிருக்காங்கோ; அது சின்னத்தை பெரிசாகாட்டறது.

தொப்புளான்:—அப்படியா! இது முன்னே தெரியாதபோச்சு. அவுங்க சர்க்காருங்க தெரிஞ்சவங்கதான், உன் மாடெல்லாம் போச்சே, என்ன பண்ணப்போறே?

குடியானவன்:—பண்ணறதென்ன! மாடு வச்சிருந்தா அந்த சேப்புத்தலையான் வாரான், காசு கொடு இன்னு கேக்கருன்! மாட்டுக்குப் புண் என்கிருன், அது தொலைஞ்சுபோறது. கூலிவாங்கிப் பொழைக்கறேன்.

எம். என். கணேசய்யர்.

12 JAN 191. MADRAS

*"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it." But,*
*"Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."



அன்பேசிவம்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATI.

புத்தகம். 18.] 1910ஞ டிசம்பர்மீ, சாதாரண ஞ மார்கழிமீ [சஞ்சிகை. 9.

# KHANDA-YOG, OR ABSOLUTE MIND-CONTROL.

## *To Sri Chinna-musta Vidyesvari,*

### OR, THE BEHEADED YET LIVING FORM OF LOVE SUPERN.

"Truth is Beauty: Beauty is Truth. That is all
You know on earth, and all ye need to know."—*Keats.*

I

When Love to Beauty wed,
By Beauty is embracing led,—
Love and Beauty in Eternal Union knit
So rise up in flourishing form well-knit
That the life-current in triple-stream flowing,
Into its tripartite contents divided are glowing
Each running its course in high torrents tossed
Until its form in a ghost representing its own self is lost.

II

Thus the *pitta-nády* in a ray of Light is lost;
While the *sleshma-nady*'s in a ray of Darkness tossed;
Between the two is Love and Beauty's well-knit form
Which with its head cut off the body still lives in form!
For the life-current from its source in body rising, still flows through it;
Though cut in twain the head and trunk by the life-current true is still through knit
Thus the moral of Love inspired by Beauty's strength
The immortal picture of *Chinna-masta* portrays at length!
*Aum Sri Chinna-Masta Vidyesvariaii Namah!*

## கண்டயோகம்

## அல்லது "மனமிறக்கக் கற்றல்"

"மனமிறக்கக் கல்லார்க்குவாயேன்
பராபரமே!"—தாயுமானவர்.

"கண்டம்" என்றால் இரண்டு பட்டுப்போனது என்ற அர்த்தம்: வெட்டப்பட்டது என்றும் சொல்லலாம். ஸம்ஸ்கிருதத்தில் "சின்னம்" என்றாலும் சேதிக்கப்பட்டது, அதாவது கண்டம் என்றே அர்த்தம் கொள்ளும். தச வித்யைகளில் ஒன்றுக்குச் 'சின்னமஸ்தா" என்று பேர். அப்படியென்றால் சேதிக்கப்பட்ட தலையையுடையவள் என்று அர்த்தம். அஷ்டதள கமலத்தின் கர்ணிகையில் பரமசிவனால் தஹிக்கப்பட்டுப் பிறகு பண்டாசுரனாகி ஸ்ரீதேவியினால் காமேசுவராஸ்திரத்தினால் ஸம்ஹரிக்கப்பட்டபின், அபின்னசக்தியான லளிதாம்பாளின் வரப்பிரசாதத்தினால் ரதிதேவி மாங்கல்ய பிக்ஷைபெற்று அவளுக்குமட்டும் உருவாய்த் தோன்றும்படி அனுக்ரகிக்கப்பட்ட மன்மதனைப் பெற்றபின் "கண்ணிழந்து 'பெற்றான்" போல் கணவனையிழந்து பின்னும் பெற்ற பாக்கியவதியான ரதிதேவியானவள் அழகே யுருவாயமர்ந்துள்ள தான், காமேசுவராஸ்திரம் பட்டு விழுந்து பின்னுயிர்பெற்ற மஹிமையினால் ஆசைநோய் தீர்ந்து அன்பே யுருவாயமர்ந்த காமேசுவரரைப்போலுமுள்ள காமதேவனைக் கட்டியணைந்து மனத்தோடு மனம்பொருந்த முகத்தோடு முகம்வைத்துக் கிரீடிக்க, அழகே யுருவெடுத்து அன்பைத் தழுவினதுபோலும், "கமலாம்பாள் சரித்திரத்தில்" அரசைமரத்தைத் தழுவினின்ற முல்லைக்கொடியின் அழகைப்பார்த்து அதில் மனம் லயித்திருந்த ஸ்ரீனிவாஸனை முல்லைக்கொடிபோலும் தழுவி நின்ற லக்ஷ்மியைப்போலும் காமனும் ரதியும் கலந்ததோர் கள்ளிலிருந்து எழுந்ததோர் மதுவின் குதூஹலப்போலச் "சின்னமஸ்தாவித்யேசுவரி" யென்னும் "ஜ்யோதிரந்தர்க்கதம்மனஃ" என்று சுருதிபாடிய கீர்த்திபெற்ற வித்யேசுவரியானவள் உதய சூரியன்போல் தன் திருமேனி விளங்க எழுந்தருளி காமனைத்தழுவிய ரதியின் பிருஷ்டத்தில் ஒருகாலும் தோள்பட்டையிலொருகாலுமாய் திவ்ய நிருத்த கோலாகலத்தோடு எழுந்தருளி "சிருஷ்டி ஸ்திதி வ்யஸன கர்மகிருத்" என்ற சுருதி வாக்கியப்படி சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிய முத்தொழிலையும் லீலையாக வியற்றிக் கடைசியில் தானும் லயமடைந்து விஷ்ணு ஸ்வரூபமாக விளங்கும் அதிரஹஸ்ய உண்மையைப் பக்த 'கோடிகளுக்குள்ளபடி யுணர்த்துவான் பார் முதற்பூதமெல்லா மழித்துப் பசிதாஹங்களைத் துவம்ஸம்செய்து பித்த



OFFICE OF THE ... 12 JAN 1911 ... MADRAS.

வாத சிலேஷ்மங்களின் சையோக ரூபமாக விளங்கும் ஜீவநாடியையும் அதன் த்ரிகுணம் விளங்கப் பிரித்து பித்தநாடியை அதன் ஸ்வரூபாத்மகமான ஜோதிக்கிரணத்தின் பிரதிபாஸமானதோர் யோகினி ரூபத்திலும் சிலேஷ்மநாடியையும் அப்படியே அதன் ஸ்வரூபாத்மகமான அந்தகாரத்தின் பிரதிபாஸமானதோர் யோகினி ரூபத்திலும் ஒடுங்கச் செய்து, மிஞ்சிநின்ற வாதநாடியொன்று தானும் பிரஜ்ஞான ஸ்வரூபமான தன் மஸ்தத்தில் ஒடுங்கும்படிச்செய்து அது அப்படியே ஒடுங்கி நிற்பதின் உண்மையை யோக சித்தர்களுக்குக் கரதலாமலகமாய்க் காட்டக் கிருபை கூர்ந்து பிரபஞ்ச ஸம்ஹாரஞ்செய்த தன் (ஞான) வாளால் தானே தனது கழுத்தையரிந்து இடது கையில் தாங்கிக்கொண்டு, பித்த வாத சிலேஷ்ம நாடிகள் ஜீவநாடியிலிருந்து பிரிந்து செரிந்து ஒடுங்கும் உண்மையைக் காட்டி நிற்கிறாள். இந்த அதிரஹஸ்யமான யோக ரஹஸ்யத்தை அஹம்புற மொக்க அன்பினாலுணர்த்திய என் தாயாம் ஸ்ரீ சின்னமஸ்தா வித்யேசுவரியைச் சரணம் சரணமென்று அவள் திருவடி சரண்புகுந்து அவள் அருளால் அருளிய உண்மையை அருள்நிறைந்த மனத்தின் தெருளாலுணர்ந்து தெரிந்ததைத் தெரிந்தபடி தெளிவுடனுரைக்க ஸ்ரீ குருவைப் பணிந்தடைந்து துதித்து நிற்கிறோம்.

"சந்ததமும் என்நாவில் வந்துதவி செய்யுமம்மா
சாயாம்பூஸரஸ்வதியே ச்யாமளையே—
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீ குருயோகியே
சுவாமின்சமாதிகொலுவோ!"

"அஞ்ஞான விருள்பிரிந்து அருவருணோதயமாகின்
விஞ்ஞான சூரியன் உதித்தார்— [ந்து
ஜாக்ர ஸ்வப்ன சுஷுப்தி யென்ற இராத்திரி மூன்
[றுங்கழிந்து
ஸ்வானுபோகோதயமானேன் ஐயாவே!"

"உபதேசதாரகக் கிருபையான அருக்கன் உதித்தவுடன்
ததாகாரமான வெளியானேன் ஐயாவே
தக்ஷிணாமூர்த்தியே ஸ்ரீகுருயோகியே
ஸ்வாமின்ஸமாதிகொலுவோ!"

### பசுயஜ்ஞம்.

ஜீவேச்வரனென்றதிக்ஷிதரும் அத்வர்யுவும்
சின்மாத்திர யாகம்பண்ண தீக்ஷைவகித்து
ஆகாம்ய ஸஞ்சித வர்ணாசிரமங்களென்ற
நாமரூபகர்மப் பிராரப்த பசுவை

ஞானமென்றபரசுவினால்கண்டம்கண்டமாய்த்துணித்து
ஜோதியாகும்வபையையெடுத்து
ஞானயோக சமாதியினால் பிரபலாக்னி வளர்த்து
பரிபக்குவமாகச்சமைத்து,—

புண்யபாபங்களென்றஆச்சியந்தனைச்சொரிந்து
புரோடாஸ பிண்டஹவிஸை
அகண்டாகாரமென்றஅக்கினிகுண்டத்தில்
ராஜயோகஅத்வர்யர்கள்சூழ—

ஹம்ஸோஹம்ஸோஹமென்று அவயமிட்டுக்கோஷமாய்
ஆஹுதிகள்பண்ணிநிற்கிறார்
தக்ஷிணாமூர்த்தியேஸ்ரீகுருயோகியே
ஸ்வாமின்ஸமாதிகொலுவோ!

ஸ்ரீ சின்னமஸ்தா வித்யேசுவரி ஜீவநாடியைப்பிரித்துப் பிராண நாடியைப் பிரஜ்ஞான கனஸ்வரூபியான தன்னில் ஒடுங்கப் புசித்து, பசுயஜ்ஞம் செய்யும் பரம ரகஸியத்தை "மஹாத்துக்கள், பிரஹ்மநிஷ்டாள், பாலவிருத்தாள், மஹாயோகி, குரு ஸ்வாமியின் தெரிசனந்தேடி நிற்கின்றார்கள்" என்றுணர்ந்து பிராணனைப் பிரஜ்ஞானத்திலொடுக்கி, பிரஜ்ஞானம் பிரஹ்மமாகத், தான் அகண்டாகார லக்ஷ்மியாகி குரு ஸ்வாமியின் ஐக்யபோகம் அனுபவித்து நிற்பதை பரமார்த்த மிழந்த பாமரர்களுக்குரைப்பதெப்படி?

அஷ்டதள மலராமந்த ஸ்வாதிஷ்டான "சக்கிரத்தில் கமலகர்ணிகையின்மேலே வாஸனை சரீரத்தோடு காமனும் ரதியும் சேர்ந்த கலவியில் தானுதித்து பாலசூரியனைப் போன்ற காந்தியுடன் விளங்கா நின்ற "வித்தியாசரீரியாம்" தேஜோமனமதனைப்பூஜிக்கும் வழியுரைப்பான் "சின்னமஸ்தா" தானுதித்தாள். கண்டஸ்தானத்தில் வாயுசக்கிர மிருப்பதாலும், வாயுவினம்சமான மனம் கண்டஸ்தானத்திலிருப்

பதாலும், கண்டம் (கழுத்து) சுத்த தத்துவமான மஸ்தத்துக்கும் (தலைக்கும்) மிச்ர தத்துவமான உடலுக்கும் மத்தியிலிருப்பதால், அகண்ட பரிபூரணமான இரண்டற்ற பரம்பொருளைக் கண்டமாக்கிச் சின்னமாகவும் பின்னமாகவும் காட்டி ஈசுவரனுடைய மாயா சக்தியினால் நாமரூப பேதங்களான பிரபஞ்சமாம் (தோற்ற மாத்திரமான) உலகை உண்டுபண்ணிக் காத்தழித்து லீலைபுரிகின்றது. இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் மனதைக் கண்டித்து (நிரோதனம் செய்து) அதன் சித்தவிருத்தியைத் தடுத்து நிவிருத்தி மார்க்க ஏகாக்ர சித்தத்தில் செல்லப் பழக்குவதே யோகமாம். இதைப் பதஞ்சலி பகவான் "யோகம் சித்தவிருத்தி நிரோதனம்" என்னும் சூத்திரத்தால் வெகு அழகாய்க் குறிப்பித்துச் சொல்லியிருக்கிறார். இந்தச் சித்தவிருத்திநிரோதனம் செய்ய மனதைப் பிடித்தல்லவோ அதையடக்கல் வேண்டும்? மலடிமகனை யெங்குதேடிப் பிடிக்கிறது? அநிர்வாச்சியமான மனதைப் பிடிக்கும் வழி யெப்படி? இதற்காக ஒரு தந்திரம் செய்தார்கள்; "மனம் ஒருவழிப் பட்டது மந்திரம்" என்று இருப்பதால் அந்த "ஒருவழி' தானும் எது என்று கேட்கும் தேஹபாவம் நழுவாத சிஷ்யனுக்கு கண்டத்தைக் குறிப்பாய் (லக்ஷியமாய்)ச் சொன்னார். மஹாதந்திர ஸ்வரூபியான ஸ்ரீகுரு கண்டத்தைப்பற்றி அதைத் துண்டித்துப் பார்த்தால் மனதின் ஸ்வரூபம் தெரியும்! அப்படி யென்றால் என்ன? கழுத்தை யறுத்துக்கொண்டால் மனதை யறியலாமென்றாகிறது! கழுத்தை யறுத்துக்கொண்டால் பிராணன் கூட்டைவிட்டுப் போய்விடுமே யென்கிற சங்கைகிளம்ப, கழுத்தை யறுத்தாலும் பிராணன் கூட்டை விட்டுப் பிரியாதபடி யொரு தந்த்ரம் செய்யக் கற்பித்தார். அந்தக் கற்பிதயோகமே ஹடயோகம். ஹகாரமாகிய சூரியனையும் டகாரமான சந்திரனையும் தேஹத்தில்—பிரித்துக் கூட்டும் சக்திபுண்டானால் பிராணன் கூட்டை விட்டுப் பிரியாது எல்லா ஹடமும் சாதிக்கலாமென்றார். சரீரத்தில் சூரியசந்திர அம்சங்களாக விளங்கும் பிங்கலை, இடா என்கிற நாடிகளைப் பிரித்துச் சேர்க்கும் வகையை உபதேசிக்குமாறு ஹடயோக சாதனங்களை யுபதேசிக்கலானார். இந்த ஹடயோகத்தில் லயயோகமும், லயயோகத்தில் மந்திர யோகமும் அடங்கும். மனதை மந்தர யோகத்தால் ஒரு வழிப்படுத்தி, ஒரு வழிப்பட்ட மனத்தை லயயோகத்தால் கட்டி மூர்ச்சிக்கச் செய்து, லயயோக சமாதியப்பியாசத்தால் மூர்ச்சை தெளிந்து பிரஜ்ஞையுண்டாகும் வரையில் லயயோகத்தை அப்பியசித்து சித்திபெற்றுப் பின்னர், "நாடிதாரணை, வாயுதாரணை, அங்கிதாரணை, அமுததாரணை" யென்னு மிவைகளால் நாடிவழக்கம், வாயுவழக்கமறிந்த', அங்கிதாரணையால் சிவனைப் பூசித்து, அமுததாரணையினால் சந்திரனை வசப்படுத்திக் கொண்டால், "கேவலகும்பகம்" என்கிற ஹடயோகசித்தி கைகூடி வரும். இந்த கேவலகும்பகம் என்னும் ஹடயோக ஸித்தி கூடினால், ராஜயோகஞ்செய்ய யோக்கியனாவன்.

கண்டத்திலுள்ள தஹராகாசத்தைத் தியானித்தால், சித்தம் என்பது இன்னதென்றும் இத்தன்மைய தென்றும் தெரியவரும், சித்தம் என்டதை யறிந்தால் சித்தவிருத்தியே மனமாகையால், மனதையும் அதனால் அறியலாம். "சித்தவிருத்தி நிரோதனமே" யோகமாதலால், யோகத்தையும் அறியலாம். சித்தம் என்பது குயவன் பட்டடையிலுள்ள பக்குவம் செய்யப்பட்ட மண்ணுக்குவமேயமாகக் கொண்டால், மனம் என்பது அந்த மண்ணேற்றிய திருகை அல்லது சக்கரமாம். யோகம் என்பது அம்மண்ணை உருவாக்கும் குயவனுடைய கைச்சாமர்த்தியமாம். இப்படியாக உபாதான காரணம் (Material Cause,) கருவிகாரணம் (Instrumental Cause), கர்த்தாகாரணம் (Efficient Cause), என



மூன்றுவித காரணங்களின் ஞானமும் கண்டயோகத்தால் சித்திக்கிறது. திரிவிதமான காரணத்தை யறிந்தால் யோக சம்யமத்தாலே காரணகாரிய தோரணைபற்றி விசாரித்துக்கொண்டேபோய் முதற்காரணமான ஆதிபராசக்தியை அறியலாம். இதுவரையில் தான் யோகம் பயன்படும். ஆதிபராசக்தி பின்னமாயும் அபின்னமாயுமிருந்து விளங்குவதை ஞானயோகத்தால் அறிந்து அனுபவிக்கவேண்டும். "அறிவழிந்த சுகமதனை யனுபவித்தே யறியவேண்டும்." திரிபுடிஞானம்வரையில்தான் யோகம் செல்லும். திரிபுடி ரஹிதமான அகண்டாகார ஞானம் தற்போத அழிவினாலேயே சித்திக்கவேண்டுமாகையாலும் அந்த தற்போத அழிவும் அருள் நிறைவாலேயன்றி வேறுவிதத்தால் சிந்திக்காமையாலும், "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" வேறு விதமாக எழுதியும் சுட்டியும் காட்டவொண்ணாது என்று அப்பர் ஸ்வாமிகளும் மற்ற எல்லா ஸ்வானுபவச் செல்வர்களும் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள்.

தற்போத அழிவை "ஒழுவிலொடுக்கம்" என்றும், "மனமிறத்தல்" என்றும், "கண்டயோகம்" என்றும், ஸ்தூலபாவனையில் "கழுத்தையறுத்துக்கொள்ளல்" என்றும் பலவிதமாச் சொல்வதுண்டு. "தன்மனோ விலயம் யாதி" யென்ற சுருதிவாக்கியத்தின் லக்ஷியார்த்தம் எதுவோ அஃதொன்றையே இவையெல்லாம் சுட்டிக்காட்டும். ஆகவே தன் தலையை யறுத்து இடதுகையில் வைத்துக்கொண்டு வாதநாடியாம் பிராணனைப் புசித்துக்கொண்டு, பித்தநாடியை நாத தத்துவத்தை விளக்குமோர் யோகினியுண்ண, சிலேஷ்மநாடியைப் பூததத்துவத்தை யொடுக்கும் ஒரு யோகினி யுண்ண விளங்கும் ஸ்ரீ சின்னமஸ்தாவித்யேசுவரியின் தரிசனம் கிடைக்கப்பெற்ற நாம் அவளுடைய ரஹஸ்யோபதேசத்தையும் அவள் திருவுருவத்தின் இரஹஸ்யார்த்தத்தையும் உண்மைப் பக்தர்களும் உத்தமயோகிகளும் உணர்ந்துய்யுமாறு அவளது திருவருள் தூண்டத் தெவிட்டாத் தேன்கட்டியொத்த அவள் இன்சுவையுணர்ந்த வுணர்வினின்றும் உள்ளத்தாராய்ச்சியால் கதித்தெழுந்த கனவு நனவழிந்ததோர் துரியாவஸ்தையில் கண்டது கண்டபடி "உரையற்ற தொன்றை யுரைசெய்யும் ஊமர்கள்" வழிபற்றிச் சொல்லாது சொல்லிச் சூசிப்பித்தோம். ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் ராசி செய்யத் துணிந்து அது பலிக்காதபோது கழுத்தை யறுத்துக் கொள்வதாக பாவனைகாட்டி ஆலயங்களில் நடந்து வரும் ஐதிகம் கவனிக்கத்தக்கது. பிராணன் போகாமல் கழுத்தை யறுத்துக்கொண்டால் கண்ட துண்டமான பிரபஞ்சஞானம் அகண்டாகாரமாக விளங்கும். அகண்டாகார விருத்தியில் பேதபாவனைக் கிடமில்லையால் ஸ்வாமி யம்மன் என்கிற த்வைத பாவனையிலுண்டான ஊடல் த்வைதபாவனைக்கிடமான "மனம் இறக்கவும்" இருக்க இடமற்றுத் தானே தீர்ந்துபோம். இந்த வுண்மையையே தாயுமானஸ்வாமிகள் "மனமிறக்கக் கல்லாதார்க்கு வாயேன் பராபரமே!" யென்று பாடியிருக்கிறார். மனமிறந்தால் எல்லா சுகமும் சித்திக்கும். ஆகையால் மனமிறக்கக்கற்ற மாண்புடையெல்லாரும் உலகத்தாரை நல்வழிப்பட்டுய்யவேண்டி கூவாமற் கூவியழைக்கும் வண்மையாயிருக்கிறார்கள். அவர்கள் குரலோசை "சந்தையிரைச்சலிலே" குடியிருக்கும் ஜகத்தாருக்குக் காதில் நுழைவதில்லை பாவம்! இதற்கு என் செய்யலாம்!

காடுமேடெல்லாம் கால்விட்டோடும் மனத்தின்பிறகே யோடியலுத்த மன்னுயிரைத்தாயுமானவர் பின்வருகிறபடி கூவி யழைக்கிறார்:—

"காடுங் கரையு மனக்குரங்கு
 கால்விட் டோட வதன்பிறகே
யோடுந் தொழிலாற் பயனுளதோ!
 ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி
 யருளைப் பெறுதற் கன்புநிலை
தேடும் பருவ மீதுகண்டீர்
 சேர வாரும் சகத்தீரே!"

"காக முறவு கலந்துண்ணக்
கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ
வின்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் சகத்தீரே!"

ஓம்தத்ஸத்.

---

## The Supplicating Voice and the Responsive Echoe.

### தேவிப்ரச்னோத்தரம்.

(ஞானவாசிஷ்டம்—"தேவியுத்தரம்.")

"ஒருவருக்குநா மொன்றும் நல்கிலம்
உணர்வின்வண்ணமே யுயிர்களெப்துமாற்
கருதிமுந்திநீ கதிவிரும்பினாய்
காதலித்தசிற் கண்ணளித்தனம்!
பெருகுகாதலா விந்தவண்ணமிப்
பேதைவேண்டவிப் பேறுநல்கினம்!
ஹிருதயத்திலே நினைந்தெய்திடும்
எமதுபார்வையால் யார்க்குமென்றனள்."

—லீலைகதை.

பிரச்னை (27-10-10).

"ஸ்ரீமத் சுவாமிகள் திவ்ய தரிசனைக்கு அநேகம் முறை வந்தும் கிடைக்கவில்லை. அடியனுங் கிருதார்த்தனாகும் வண்ணம் இன்னும் சுவாமிகள் அடைந்த பேரின்ப நிலையை எளியனுந் தெளியுமாறு, அவ்விடத்திற்குத் திருவுள்ளப் பாங்காகில், உத்தரவாக மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். மஹான்கள் அந்தரங்கத்தைச் சீக்கிரம் வெளியே சொல்லார்கள்."

ஸ்ரீ தேவிக்கர்ப்பணமிது. 27-10-10.

ஸ்ரீதேவி சரண்.

உத்தரம் (28-10-10)

"ஆஷாடபூதிப் பண்டார மவன்
வேசடை நீக்கும் வழியறியான்:
பாசறையில் வைத்த பொக்கிஷத்தைக்
காசறையில் வைத்துப் போக்காதே!
தாசரதே! யென்ற குரங்கின்சேஷ்டையும்
தசரதன் சோரமும் ஒன்றுமோ!
அசரீரி யாயுள்ள ஆத்மாஹஸியத்தை
ஸசரீரிகளு முணரப் போமோ?
போகா தப்பா போகாது!
புலன்பொறி யாளர்க்குப் போகாது!"

---

## Easy Lessons for the Young

(*Copy-right*)

### 2. The Siddha's Sayings Explained.

—:-:—

### சிறுவர்க்கான ஹிதோபதேசங்கள்.

2. சித்தரது உபதேசவாக்கியங்களின் உண்மை விளக்கம்.

முதலுபதேசத்தில் "எல்லாம் வல்ல சித்தராம்" குருபரன் தன்னைச் சரண் என்றடைந்ததோர் ஆத்மனைப் பெண்ணாக்கிப் "பதிவிரதா தர்மத்தைப் பாரில் நீ காக்க" வென்று சொல்லி "மூவைந்து மானதோர் ஐந்தைக் கொண்டு உள்ளெழும் ஐயங்களை யெல்லாம் தொலைப்பாய்!" என்று உபதேசித்துப் போனதைக் கூறினோம். "கல்யானை கரும்பு தின்னச் செய்தவரான" அந்த சித்தர் வாய்ப்பிறந்த திவ்யோப தேசங்களின் உட்கருத் தென்ன வென்று உள்ளாய்ந்து பார்ப்போம். அவர் சொன்ன மாத்திரத்திலே "பெண்தன்மை" (அதாவது "கிராஹியசக்தி" வாய்ந்த ஆத்மன் "யாருமறியாத அரிச்சந்திரன் கட்டினதாலி" பூண்டு (அதாவது "மனம் கொண்டது மாங்கல்யம்" என்ற மூதுரைப்படி சிரவணமனன நிதித்தியாஸனத்தால் அவர் உபதேசத்தை யுட்கொண்டு அதே லக்ஷியமாய் நாதானுசந்தானம் செய்து) அவர்சொல்லிய அதிசாமான்யமான ஒவ்வொரு வாக்கியத்தின் உட்பொருளைச் சிந்தித்து மனோவாக்குக்காயங்களால் திரிகரணசுத்தியாய் அவருடைய வாக்கைப் பரிபாலனம் செய்துவர அவ் வாக்கியங்களின் வாச்சியார்த்தம்போல் லக்ஷியார்த்தமும் அதிபற்புதமாய் விளங்குவதாயிற்று.

"துர்க்கமாயைநம:"—"ஸமரேசதுர்க்கா" என்றபடி ஸ்ரீ துர்க்கையாம் அதிஷ்டான தேவதையை சம்ஹாரசக்தியாக நமஸ்கரிக்கச்சொன்னதால் "தன்னயம் பாராட்டாமையும் தன்னைக் கொடுத்தலுமான "சதிதர்மம்" சாசுவத துணையாகக் கொள்ளத்தக்க தென்பதைக்குறித்தது வெள்ளிடைமலைபோல் விளங்கா நின்றது.

இனி "மூவைந்துமானதோர் ஐந்தாம்" அவருடைய பதினைந்து வாக்கியங்களையும் அவற்றின் வாச்சிய லக்ஷியார்த்தங்களையும் ஆராய்வோம். "பஞ்சசங்கியாயைநம:" என்றதனால் தேவி ஐந்து என்னும் எண்ணுக்கதிஷ்டானமாய் பஞ்சீகரணவிதிக்குக் காரகமாய் இருக்கிறாளென்பது பெறப்பட்டது. "அறிவுருவாம்" தேவியை அந்தர்யாமியாகவும் அந்தர்ப்பூதமாகவும் அறிந்து ஆச்ரயித்து பதிவிரதாதர்மத்தை யனுசரிக்கவேண்டும். ஏனெனில் தேவியவள்தானே தர்மாம்பாளாகவும், தர்மஸம்வர்த்தினியாகவும் இருந்து தர்மத்தை ஸ்தாபித்து தர்மத்தை விருத்திசெய்கிறாள்.

(1) "அண்டை அயல் கேட்கப்பேசாதே." இதன் வாக்கியார்த்தம் வெகு சுலபம். இதன் லக்ஷியார்த்தமும் அப்படியே. "மோனமென்பது ஞானவரம்பு" என்றுராதலினாலே மோனத்துக்கு மிஞ்சிய சாதனமும் சாத்தியமுமில்லாமையினாலும், இதனால் "குருசொல் ஒருசொல்" என்றபடி தேவியின் "மௌனமந்திராதிக்ய வித்யை"யாம் மோனத்தையே உபதேசித்தார்.

மௌனம் மூன்றுவிதம்:—

(1) காஷ்டமௌனம்,—அதாவது, தேகம் நிச்சலனமாய்த் தாணுவைப்போல் தண்டாகாரமாய் ஸ்தம்பித்து நிற்பது. இது பிராணாயாமவிதிபெற்றவருக்கே ஸாத்தியம். மற்றவர்களுக்கு நேரும் காஷ்டமௌனம் "மூர்ச்சை" யென்று சொல்லப்படும்.—

(2) வாக்குமௌனம்.— "யாகாவா ராயினும் நாகாக்க"வென்ற திருவள்ளுவரின் பொய்யாமொழியானும், "மௌனம் ஸர்வார்த்தஸாதகம்", "மௌனம் கலஹநாஸ்தி" யென்ற ஆப்தவசனங்களினாலும் வாக்குமௌனத்தின் விசேஷம் தானேவிளங்கும்.

(3) இவை யிரண்டினும் பெரிதும் ஸர்வோத்கிருஷ்டமுமானது "மனோமௌனம்". இந்த மனோமௌனத்தை யுத்தேசித்தே மற்ற மௌனங்களெல்லாம் அப்பியசிப்பது. அவைகளெல்லாம் சாதனங்களாம். இஃதொன்றே சித்திமுக்தியெலலாமளிக்கும்: ஆகையால், சாத்தியபுருஷர்களால் மிகவும் விசேஷமாகக் கொண்டாடப்பெற்றது.

கல்லால நீழலிலிருந்து பரமகுருவாகிய தக்ஷிணாமூர்த்தி சநகாதி நால்வர்க்கு உபதேசித்ததும் இதுவே. மௌனோபதேசமே யுபதேசமன்றி மற்றவெல்லாம் உபதேசமாகா.

"நீதியாய்க் கல்லாலி னீழலின்கீ ழேயிருந்து
போதியா வுண்மையெலாம் போதித்தான்—ஏதில்
சநகாதியாய தவத்தோர்க்கு ஞான
தினகரனு மௌன சிவன்."—தாயுமானவர்.

என்றதனாலேயும் மௌனோபதேசத்தின் பெருமைவிளங்கும்.



REGISTERED 12 JAN 1911 MADRAS

(2) "சண்டைபோட்டெதிர் பேசாதே." இதன் வாச்சியார்த்தம் வெள்ளிடையாக விளங்கும். பதிவிரதாதர்மம் பூண்டோர், ஆணாயினும் பெண்ணாயினுஞ்சரி சண்டைபோட்டெதிர்பேசலாகாது. ஏனெனில் சண்டையால் சண்டையே வளரும். எதிர் பேசுவதினால் வார்த்தை வளருமன்றி வேறு பிரயோசனமில்லை. வார்த்தை கொடுத்தால் வார்த்தையின் அர்த்தத்தைக் கிரஹித்துக்கொண்டு அதன் லக்ஷியத்தைபுணர முயல்வோரிடம் வாக்குக் கொடுக்கவேண்டுமேயன்றி, தாம் என்றால் தோம் என்று எதிர்சப்தம்செய்யும் "வாதரோவாளரிடம்" பேசுவது மகா தொல்லை! ஏனெனில் அவர்கள் விவேகசூனியர்களென்பது திண்ணம். "வேதமுதலான நல்லாகமத்தன்மையை விளக்குமுட் கண்ணிலார்க்கும், மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும், வீறுவாதம் செய்யும் வாய்-வாதரோவாளர்க்கு மெட்டாத முக்கணுடைமாபருந்துக் கமிர்தமே!" யென்று அனுபவித்தறிந்தவர் கூறியிருப்பதால் எதிர்வாதம் செய்வதை பொருபொருட்டாக நினைப்பவர் விசாரமுடிவெய்தி விச்ராந்தியடையார். ஆதலால் திரிகரணங்களாலும் "சண்டைபோட்டெதிர்பேசாதே" யென்றார். இக்கலிகாலத்தில் பரம சாதுவாயிருந்தால் எல்லோரும் தலையிலொரு சொட்டுவைப்பார்களேயென்றால், அப்படியல்ல! நல்லபாம்புக்குச்செய்த உபதேசம்போல் அந்தக் காண சுத்தியார்த்தம் கர்ம சங்கல்பம் நழுவுவதற்காகச் சொன்னதை அசட்டுத்தனமாயர்த்தம்செய்துகொண்டு மோசம் போகக் கூடாது. "சக்திக்கு வித்துத் தனதுபசாந்தமே" யென்று திருமந்த்ரோபதேச மிருப்பதால் அந்த உபசாந்தத்தைப் பெறவேண்டி மனவிச்ராந்தியடைவதற்கான சாதனத்தை யுபதேசித்தார். அதனால் இளிச்சவாய்த்தனம் போகவேண்டுமென்பதல்ல. அற்ப விஷயங்களில் பொறுமை விவேகித்துத் தானே வரும். பொறுக்கக் கூடாத பெரிய விஷயங்களில் "எய்தவனிருக்க அம்பை நோவாமல்" அனுபவத்தைக்கொண்டு காரிய காரண தோரணையாக விசாரணை செய்துகொண்டு போனால் கர்மத்தின் விதி விளங்கும். விளங்குங்கால்,—

"தான்முன்னஞ் செய்தவிதிவழி தானல்லால் [ல்லை."
வான்முன்னஞ் செய்தங்குவைத்ததோர் மாட்டி

என்னும் திருமந்திரோப தேசத்தின் உண்மை விளங்கும்.

(3) "உண்டதற் கிரண்டகம் நினைக்காதே." சாந்தோக்கியோபநிஷத்திற்சொல்லியபடி "பஞ்சயஜ்ஞத்தாலே" இந்த மானுடதேஹம் சித்தித்ததினால், பஞ்சயஜ்ஞத்தையே பரமசாதனமாகக் கொண்டு வந்தவழியைத் தேடிக்கொண்டு மீண்டும் கடவுளின் திருவடியைச் சேர்ந்து ஜன்மஸாபல்யம் பெறவேண்டும். உண்ணும் பொழுது இந்த தேஹத்தையே யாககுண்டமாக வமைத்து அதிலுள்ள ஜாடராக்னியையே யாகாக்னியாகக்கொண்டு பஞ்சாக்னி வித்யையினாலே, பிராண, அபான, வியான, உதான, சமானனாகிய பஞ்சப் பிராணன்களுக்கும் உண்ணுமுணவை யாகுதியாகச் செய்து, பஞ்சப் பிராணனும் சேர்ந்த ஜீவனை (பசுவாக பாவித்து) சிதக்னி குண்டத்தில் யாகஞ்செய்து பிரஹ்மத்துக்கு அர்ப்பணமாக்க வேண்டியது. இது உண்டது உடம்பில் ஒட்டி உயிர்வளர்ப்பதற்குக்காரணம். ஈசுவரத்தியாகத்தால் இந்த தேஹம் கிடைத்ததால், தேஹத்திலுள்ள ஜீவனை வளர்த்து ஈசுவரனுக்கு அர்ப்பணமாக யாகஞ்செய்வதால் அவனிடத்தில் பட்ட கடனைத் திரும்பிக்கொடுத்து ருணந்தீர்ந்தவர்களாகிறோம். இல்லாவிட்டால் ருணபாதகர்களாய் ஆகாமிய சஞ்சித ப்ராரப்த கர்மங்களாலே தூண்டப்பட்டு மேன்மேலும் கர்மத்தையே செய்து கர்மவலையிற் பட்டு "புனரபிஜநநம் புனரபிமரணம்" என்றபடி பிறப்பதும் இறப்பது மாகவே யிருந்து காலசக்ரத்தில் சிக்கிச் சுழன்றுழன்று அவதிப்பட வேண்டியது தான். ஆதலால் ஊனை வளர்த்து யமன் வாய்க்கிறையாகாமல், ஊனுணர்வைச் சிதக்னி குண்டத்தில் ஆகுதிசெய்து சின்மயானந்தராகவே உண்ணல் வேண்டும். இதைவிட்டு, 'பூதமொடு பழகிவளர் இந்திரிய மாம்பேய்கள் புந்திமுதலானபேய்கள், போராடு கோபாதி ராக்ஷஸப் பேய்களென் போகத்தை யூடழித்து வாதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன் விதித்த"தோர் விதிக்காளாகி மாயை மயக்கி லகப்பட்டு மயங்கித்திரியில் அது "உண்டதற் கிரண்டகம்" நினைத்தலாம்—அப்படிச் செய்ய நினைக்காதே யென்றார்.

(4) "கொண்டவனைக் குடி கெடுக்காதே."

வாச்சியார்த்தத்தில் கொண்டபுருஷன் குடியைக் கெடுப்பது இல்லற தர்மத்துக்கு எப்படி விருத்தமோ, அப்படி லக்ஷியார்த்தத்தில், தன்னை ஆட்கொண்டவனான கருணாகரக் கடவுளின் அகிலாண்டகோடிகள் நிறைந்த குடித்தனத்தை "கெடுக்காதே"—ஜீவகாருண்யமில்லாத கொடுமையால் கெடுக்காதே யென்றார். விவேகிகள் இதனர்த்தத்தை நிதித்யாஸனத்தில் விஸ்தாரமாக அறிந்துக்கொள்வார்கள்.

(5) "சண்டித்தன மினிச் செய்யாதே."

சண்டித்தனம் செய்வதால் "இல்வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகடம் செல்லாது தெற்றிற்றுநின்று." சதிபதி தர்மம் எப்படி காதலனும் காதலியும் மனதொத்துத் தீதிலொருகருமம் செய்யாவிடத்துத் தவறிப்போய் விடுமோ அப்படிப்போல ஸநாதனமான பசுபதி தர்மமும் கடவுள் வழிப்பாடின்றித் தான்போனதேபோக்கென்று அஹங்கார மகாரசேஷ்டைகளால் சண்டித்தனம் செய்தால் நடைப்பட்டு நின்றுபோம்.

"பதிபசு பாசமெனப் பகர்மூன்றில்
பதியினைப்போற் பசுபாசமனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாச நில்லாவே."





—என்பது திருமந்திரோபதேசமானதால், "சித்தன் போக்கு சிவன் போக்கு" என்றபடி சிவனது வழிபாட்டையன்றித் தனக்கென்று வேறொருவழிபற்றாச் சித்தன் குருமூர்த்தமாய் வந்து தரிசனமளித்து உபதேச அனுக்ரஹமும் செய்தபின் "சண்டித்தனம்" செய்தால் "பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்" தொலையாது துன்பம் விளைத்துவரும். "சண்டித்தனமினிச் செய்யாதே" என்ற குருசொல் கேட்டு, அஹங்கார மமகாரங்களை விட்டொழித்தால் பரங்கருணை மிகுதியால் பதியணுகும். "பதியணுகிற் பசுபாசம் நில்லாவே." இதன் பயன் நாம் சொல்லாமலே விளங்கும் சுகோதயமானோர்க்கு.

ஓம்தத்ஸத்.

## MILKING THE SNAKES.

பால்கறந்தால் பாம்பு இரையெடுக்காது.

பம்பாயிலுள்ள பாரேல் லேபோரேடரியில் பாம்பின் விஷமெடுக்கவென்று பாம்புகளைப் பிடித்து வளர்த்து வருகிறார்கள். பாம்பினின்றும் பால்கறக்க, ஒரு பெரிய ஸர்ப்பத்தைக் கொண்டுவந்து அதைக்கூட்டைவிட்டு வெளியேற்றியதும் அது படமெடுத்து ஆடும் பொழுது அதற்காகவென்று பழக்கப்பட்ட பிடாரன் ஒரு கோலினால் அதைக்கீழே அழுத்திப் பிடித்துக்கொண்டு அதன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு ரப்பர்மூடியிட்ட ஒயின்க்ளாஸ் ஒன்றை அதன்வாயின் எதிரே கொண்டு போய்த்திணிக்க, ஸர்ப்பம் சீறி அந்த ரப்பரைக் கடிக்கிறது. உடனே ஒரு உத்திரணி விஷம், பால்கறந்தாப்போல், கிளாவில் விழுகிறது. இப்படி வேண்டிய விஷம் கறந்தபின் அதை ஒரு சீஸாவில் அடைத்து ஹிமாலயத்திலுள்ள காஸௌலி லேபொரேடரிக்கு அனுப்பிவிடு

கிறார்கள். அங்கே அந்த விஷப்பால் பாம்பு சடிக்கு ஔஷதமாம் ஒருவித "ஸிரம்" செய்ய உபயோகிக்கப்படுகிறது. இப்படி விஷம் கறக்கப்பட்ட பாம்பானது பின்னர் இரை யெடுப்பதில்லையால் அதற்கு கோழிமுட்டையைப் பாலில்கலந்து சேர அடித்துப் புகட்டுவது வழக்கம். தன் விஷமாகிய வீரியத்தை யிழந்த ஸர்ப்பம் பசிதாஹம் பாராட்டாது இரை யெடுப்பதில்லை.

பாம்புக்கு விஷம் எப்படியோ அப்படி ஜீவனுக்கு பிந்து வீரியத்தைக் கொடுப்பதாம். "ஆதியாய்நின்ற அறிவு" முதல் தேஹத்தின் தத்துவங்களெல்லாம் "சேர்ந்தாய ஒன்று" "விந்து" என்று ஔவையார் சொல்லியிருக்கிறார். ஆதியாய் நின்ற அறிவாம் பராசக்திக்குக் கடைசியாய் விளையும் விந்து தர்ப்பணத்தால் சந்துஷ்டியதிகம். இது சக்திக்கும் விந்துக்குமுள்ள ஆகர்ஷணசக்தியைக்காட்டுகிறது. வித்திலே சக்தியிருப்பதால் வித்தினால் தர்ப்பணம் செய்தால் சக்திக்கு சந்துஷ்டி யென்பது சகஜந்தானே. ஆதியாயுள்ள சக்தியும் அந்தமாயுள்ள விந்துவும் போக, நடுவிலுள்ள தொன்றுண்டு. அதுதான் "கீலகம்" என்று சொல்லும் முளை. வித்தில் ஜலம் வார்த்தால் அதிலுள்ள சக்திவெளிப்படுகிறது: முளையென்னும் விருத்தி லபிக்கிறது. அந்த வித்தை வறுத்துவிட்டால் முளையும் முளைக்குஞ்சக்தியும் மறித்துப்போகிறது. இதேபோல, ஜீவனாகிய முளைக்கு அஹம்=பீஜம்; ஸ=சக்தி. அஹம் என்கிற பீஜம் பிராணன் என்கிற ஜலம் பட்டால் "அஹங்காரம்" என்கிற முளைவிட்டுச் சிறிக்கிளம்பும். அஹத்திலிருந்து அஹங்காரமாகச் சீறி யெழுந்த முளையானது (ஸம்ஸார விருத்தி), விஷம் கறக்கப்பட்ட பாம்புபோல் அஹங்காரமடங்கக் குளிர்ந்துபோனால் விஞ்ஞானவிருத்தியோடு ஸம்ஸாரவிருத்தியும் அடங்கிப்போம். இந்த விருத்திகளிரண்டும் அடங்கின் துக்கநிவிர்த்தி யுண்டாகி கோபதாபம் முதல் பசிதாஹங்கள் ஈறாக எல்லா சேஷ்டைகளு மடங்கிப்போம். சேஷ்டை யடங்கினால் தேஹம் காஷ்டமாகுமாதலால், தேஹஸம்ரக்ஷணைக்கு வேண்டிய ஏற்பாடுகளை முன் போல் பசிதாஹக்கொடுமை பொறுக்காது செய்ய நிமித்தமில்லையானாலும் ஈசுவராராதனமாக நடத்திவரவேண்டியது.

"உடம்பினை யிழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள்கண்டேன்
உடம்பிலேயுத்தமன்கோயில்கொண்டானென்
றுடம்பினையானிருந்தோம்புகின்றேனே."

என்பது திருமூலதேவர் திருமந்திரம்.

இப்படி நடத்திவந்தால் ஜீவாஹங்காரம் நசித்தவிடத்தில் பராஹங்காரம் தோன்றி அதுவும் பரவியோமாகாரமாக விளங்கும். ஆதலால் தான் "அஹம் சீறியே குளிர்ந்தபின் எப்படியிருந்தாலென்"? என்று ஸ்வானுபவச் செல்வியாம் ஆவுடையாரம்மாள் பாடியிருக்கிறார்.

விஷத்தைகக்கின பாம்பு இரையெடுக்காததுபோல, அஹங்காரத்தை யிழந்த புருஷன் பிரவிருத்தி மார்க்கத்தில் பிரவேசியான். ஆனாலும் அவன் கர்மசேஷத்தால் பிரவிர்த்திக்க நேரிட்டாலும் அதன் பலாபலனைப் புசிக்காமல் கர்த்தா போக்தா வென்கிற நினைவிழந்து நிஷ்காமியமாகவே கர்மத்தைச் செய்து நைஷ்கர்ம சித்தி பெற்று விளங்குவான். நைஷ்கர்மசித்தி பெற்றவன் "எப்படி யிருந்தாலென்?" ஆவுடையாரம்மாள் பல்லவிபாடி யிருப்பதின் கருத்து இதுவே. இப்படி யஹங்காரத்தை யடக்குவதற்கு "நாதப்பால் கறக்கிறது" என்று சொல்கிறது. "பூத முதலாகவே நாதபரியந்தமும் பொய்யென்றனைக்காட்டி" யென்றிருப்பதால் தத்துவங்களுக்கெல்லாம் மேலான நாதத்தைப் பால்கறந்து விட்டால், தத்துவ விருத்திகளெல்லாம் ஓய்ந்துபோம். தத்துவப் பேய்களின் தொந்தரவு இல்லையாகில் தத்துவங்களை விட்டு தத்துவனோடைக்கியமா யிருக்கலாம். இதற்குச் சாதனம் மௌனமொன்றே. மௌனசாதனம் சித்திபெற்றால் ஞானமென்பது தானே கைகூடும். ஆதலால் தான் "மோன மென்பது ஞான வரம்பு"—என்றார்.



ஓம் ஸ்ரீ சாவித்திரியைநமஃ

# உபநிஷதர்த்த தீபிகை.

—:-:—

## 7. சுகரஹஸ்யோபநிஷத்.

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

சஹநாவவது இதிசாந்தி ஃ

28. மேல் ரஹஸ்யோபநிஷத்தில் தனித்தனியாய் வாக்கியார்த்த சுலோகங்கள் சொல்லப்படுகின்றன :—

[முதல் மஹாவாக்கியார்த்தம்.]

29. எதனால் பார்க்கின்றானோ, கேட்கின்றானோ, முகர்கின்றானோ, சொல்கின்றானோ, ருசியுள்ளன ருசியில்லாதனவைகளை யறிகின்றானோ அது விஞ்ஞானமென்று சொல்லப்படும்.(2)

பிரஹ்மா, இந்திரன் முதலிய தேவர்களிலும், மநுஷ்யர் குதிரை மாடு முதலியவைகளிலும் ஏகமாய் (நிற்கும்) சைதன்யம் எதுவோ அது பிரஹ்மமென்னப்படும். ஆகவே பிரஞ்ஞானமாகிய பிரஹ்மம் என்னிலும் (இருக்கின்றது)(3)

[2-வது மஹாவாக்கியார்த்தம்.]

30. அவித்தைக்கு அதிகாரியான இந்த தேகத்தில்பரிபூர்ணமாகிய பரமாத்மாவானவர் புத்திக்குச் சாக்ஷியாய் நின்று பிரகாசிப்பர். அவரையே "அஹம்" என்று சொல்லப்படும்.(4)

தானே பூர்ணமாயிருக்கும் பரமாத்மா இவ்விடத்தில் "பிரஹ்ம" என்கிற சப்தத்தால் வர்ணிக்கப்படும். "அஸ்மி" என்பது (அவ்விரண்டின்) ஐக்கியஞானமாகும். ஆகையால் நானே பிரஹ்மமாக விருக்கிறேன்.(5)

[3-வது மஹாவாக்கியார்த்தம்.]

31. ஒன்றேயாயும் அத்வதீயமாயும் நாமரூபமற்றதாயும் இருந்துகொண்டு, சிருஷ்டிக்குமுன்னும் இப்பவும் அவ்விதமாகவே யிருக்கும் தன்மையை தத் என்கிற பதத்தால் சொல்லப்படும்.(6)

(இம் மகாவாக்கியத்தை)க் கேட்பவனுடைய தேகம் இந்திரியம் இவைகளுக்கு அப்பாற்பட்ட வஸ்து எதுவோ அது "துவம்" என்கிற பதத்தால் சொல்லப்படும். "அசி" என்பதால் அவைகளின் ஐக்கியமறியப்படும். அந்த ஐக்கியத்தை யனுபவிப்பாயாக.(7)

[4-வது மஹாவாக்கியார்த்தம்.]

32. ஸ்வப்பிரகாசத்துவமும் அபரோக்ஷத்துவமும் (ஆகிய லக்ஷணங்களோடு கூடியதாக) சொல்லப்படுவதால் அறியப்படுவது "அயம்" என்னும் பதத்திற்குப் பொருளென்று சொல்லப்படும். அகங்காரம் முதல் தேகபரியந்தம் எது "பிரத்தியகாத்மதகமாய் (அந்தர்யாமியாய்) இருக்கின்றதோ அது "ஆத்மா" வென்னப்படும்.(8)

* தவயணுகம் என்பது இரண்டு அணுக்கள் சேர்ந்தது (Dyad)

(2) இச்சுலோகத்தால் "பிரஞ்ஞானம் பிரஹ்ம" என்கிற மகாவாக்கியத்தில் "பிரஞ்ஞானம்" என்பது சொல்லப்பட்டது.

(3) இதனால் "பிஹ்மம்" என்கிறமுழு மகாவாக்கியத்தின் அர்த்தமும் சொல்லப்பட்டது.

(4) இவ்விடத்தில் "அஹம் பிரஹ்ம அஸ்மி" என்கிற மகாவாக்கியத்தில் "அஹம்" என்னும் பதத்தின் பொருள் சொல்லப்பட்டது.

(5) "அஹம் பிரஹ்ம அஸ்மி" என்கிற மகாவாக்கியத்தின் அர்த்தம் இதனால் சொல்லப்பட்டது.

(6) இதில் "தத்துவம் அசி" என்கிற மகாவாக்கியத்தில் தத் பதத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது.

(7) இச்சுலோகத்தால் அதே மகாவாக்கியத்தில் துவம், அசி இரண்டு பதங்களின் அர்த்தமும், முழு வாக்கியத்தின் அர்த்தமும் சொல்லப்பட்டது.

(8) இச்சுலோகத்தில் "அயம் ஆத்மா பிரஹ்ம" என்கிற மகாவாக்கியத்தில், "அயம்" "ஆத்மா" என்கிற பதங்களுக்குப் பொருள் சொல்லப்பட்டது.

தோற்றப்படும் சகல ஜகங்களுக்கும் தத்துவமானது (உண்மையானது) எதுவோ அது "பிரஹ்மம்" என்கிற சப்தத்தால் சொல்லப்படும். அப்பிரஹ்மம் சுவயம்பிரகாச ரூபமானது.(9)

33. அநாத்ம திருஷ்டியால் (ஆத்மா வல்லாததை ஆத்மாவாய்ப் பார்க்கும் இருட்பார்வையால், அவிவேகமென்கிற நித்திரையையும் நான் எனது என்று என்னும் ஸ்வப்நாவஸ்தையும் அடைந்த நான், குருவால் தெளிவாய் உபதேசிக்கப்பட்ட மகாவாக்கியங்களின் பதங்களால் ஸ்வரூபமாகிய (பிரஹ்மஞானமாகிய) சூர்யன் உதயமாகவும் விழித்துக் கொண்டேன் (அறிவையடைந்தேன்).

[வாச்சியார்த்த லக்ஷியார்த்தங்கள்].

(34) (மகா) வாக்கியங்களின் அர்த்தம், வாச்சியார்த்தம், லக்ஷியார்த்தமென இருவகைப்படும். "துவம்" பதத்தின் வாச்சியார்த்தம் பாஞ்ச பௌதிகமும் (சரீரமும்) இந்திரியம் முதலியவைகளுமாம்; "துவம்" பதத்தின் லக்ஷியார்த்தம் (பிரத்தியகாத்மாவாகிய) அவன். "தத்" பதத்தின் வாச்சியார்த்தம் ஈசுவரத்துவ ஞானமாகும்; அதன் லக்ஷியார்த்தம் சச்சிதாநந்த பிரஹ்மமாகும். அவை யிரண்டின் (லக்ஷியார்த்த மிரண்டின்) ஐக்கியம் "அசி" பதமாகும்.

35. துவம் (நீ) தத் (அது), என்கிற இவ்விரண்டும் காரிய காரண உபாதிகளுள்ளவரையே (உண்டு). (அவ்வுபாதிகள்) இல்லாவிடில் ஏகமாகிய சச்சிதாநந்த ரூபம் மட்டுமே (நிற்கும்).

36. இந்த ஜகத்தில் இரண்டு என்கிற வார்த்தைக்குக் காரணமாகிய தேசகாலங்களை விடவே, 'அவன் அந்த தேவதத்தன்" என்கிற வாக்கியத்தில் எவ்விதம் தேவதத்தன் ஒருவனோ, (அவ்விதம் துவம், தத் இவ்விரண்டு பதங்களின் அர்த்தமும் ஒரு பொருளையே குறிக்கும்).

37. காரியோபாதியையுடையவன் ஜீவன். காரணோபாதியையுடையவன் ஈசுவரன். காரியகாரணத்தன்மையைத்தள்ள பூர்ண ஞானமே மிஞ்சி நிற்கும்.

[சிரவண, மனன, நிதித்தியாஸநம்]

38. அந்த பூர்ணஞானத்திற்கு முதலில் குருவினிடம் சிரவணமும், பிறகு (கேட்டதின்) மனனமும், அதன் பிறகு நிதித்யாசனமும் (நிஷ்டை அப்பியாசமும்) காரணமாகும்.

39. மற்ற வித்தைகளின் ஞானம் அவசியம் நாசமடையும். பிரஹ்ம வித்யா ஞானம் மட்டிலும் பிரஹ்மத்தை யடைவிப்பதாகும்.

[உபதேசக்கிரமம்.]

40. பிரஹ்மாவின் வாக்கியப்படி (பிரஹ்மா இவ்வுபநிஷத்தில் உபதேசித்தப் பிரகாரம்) ஷடங்கங்களோடும் குருவானவர் மகாவாக்கியங்களை உபதேசிக்க வேண்டும். கேவல வாக்கியங்களை மாத்திரம் உபதேசிக்கக் கூடாது.

41. ஈசுவரன் சொல்கிறார்:—முனிசிரேஷ்டனாகிய ஓ சுகரே, பிரஹ்மவாதியாகிய உன்பிதா வியாசரால் கேட்கப்பட்டு என்னால் ரஹஸ்யோபநிஷத்தானது (இவ்விதம்) சொல்லப்பட்டது.

அதனால் உனக்கு சச்சிதானந்த லக்ஷணமுடைய பிரஹ்மமானது உபதேசிக்கப்பட்டது. நீ ஜீவன்முக்தனாய் சதாகாலமும் தியானத்தில் நின்றுகொண்டு சஞ்சரிப்பாயாக.

42. எவரை வேதத்தின் ஆதியில் ஸ்வரமென்று சொல்லப்படுமோ, எவர் வேதாந்தத்தில் ஸ்திரமாய் நின்கின்றாரே (அல்லது பிரதிபாதிக்கப்படுகிறாரோ), பிரகிருதியில் லயமாயிருப்பவருக்கு மேற்பட்டவரெவரோ அவரே மஹேசுவரர்.

43. இவ்விதம் சிவனாலுபதேசிக்கப் பட்டவராய், சகல ஜகத்தும் அம்மயமாகி (சிவமயமாகி) (சுகரானவர்) எழுந்து ஈசுவரனை நமஸ்கரித்து சகல பற்றுக்களையும் விட்டவராய் பரப்பிரஹ்மமாகிய மகாசமுத்திரத்தில் நீந்துபவரைப்போல் அப்பொழுது வெளியிற் புறப்பட்டார். சகலத்தையும் விடுத்துப் போகும் அவரை கிருஷ்ணத்வைபாயனராகிய (வியாச) முநிவர் தன் புத்திரனுடைய பிரிவால் துக்கமடைந்தவராய் பின் தொடர்ந்து கூப்பிட்டார். உடனே ஸ்தாவர ஜங்கமமாகிய சகல ஜகத்தும் பிரத்யுத்தரம் செய்தன.

44. சகலாகாரமான சத்யவதியின் பிள்ளையாகிய வியாசர் அதைக்கேட்டு தன் குமாரனுடன் சேர்ந்து பிரீதியினால் பரானந்தத்தை யடைந்தார். எவன் குருவின் அநுக்கிரகத்தால் இந்த ரஹஸ்யோபநிஷத்தைப் படிப்பானோ அவன் சர்வபாபங்களினின்றும் விடுபட்டு சாக்ஷாத் கைவல்யத்தை யநுபவிப்பான்.

(7-வது சுகரஹஸ்யோபநிஷத் சம்பூர்ணம்.)

மு. கோ. நாராயணஸ்வாமி அய்யர்.

(9) இதில் நான்காம் மகாவாக்கியத்தில் "பிரஹ்மம்" என்கிற பதத்தின் பொருளும் மகாவாக்கியத்தின் பொருளும் சொல்லப்பட்டன.



ஸ்ரீ சாவித்திரியை நமஃ

# Sivayoga-Deepika.

## Chapter IV.

### (Sankhya Yoga and Taraka Yoga).

### சிவயோக தீபிகையில்

### சாங்கிய தாரகயோக விதானமென்கிற

### நான்காவது படலம்.

(1) சர்வ வியாபகமாய், சுருதியின் சிரத்திலிருப்பதாய், அத்துவைதமாய், சகலத்திற்கு மாதியாய், ஜோதிர்மயமாய், த்ருடவைராக்கியமுள்ள யோகீசுவரர்களா லடையத்தக்கதாய், லக்ஷியத்திற் பிரகாசிப்பதாயிருக்கின்ற யாதொரு வஸ்துவுண்டோ, அப்படிக்கொத்த பிரஹ்ம ஸ்வரூபமான சதாசிவ யோகீசுவர ரென்கிற லிங்கஸ்வரூபியான பரம குருவை நான் பிரதி தினமும் சேவிக்கின்றேன்.

(2) இராஜயோகத்தின் அஷ்டாங்கங்கள்.

சகல யோகங்களிலும் ராஜயோகம் சிரேஷ்டமெனப் பெரியோர்களாற் சொல்லப்படும். ஆகையால், ஓ சீஷனே, உனக்கிப்பொழுது ராஜயோகத்திற்குச் சாதனமான அஷ்டாங்க ஹடயோகத்தைச் சொல்கிறோம் கேள்.

3. முன் ஹடயோகத்திற் சொல்லிய அஷ்டாங்கங்களையும் இப்பொழுது ராஜயோகாங்கமாக ஒவ்வொரு சுலோகத்தாற் சொல்லுகிறோம். நிச்சலமான மனத்துடன் கேள்.

4. (i) இயமமாவது.—ஆகாரம், நித்திரை, இந்திரியங்கள், தேகம் இவையின் சகல வியாபாரங்கள், சீதோஷ்ணங்கள், என்னுமிவற்றின் ஜயமும், சாந்தியும் இயமமெனப்படும். இந்த யோகாங்கத்தை மெள்ளமெள்ள சாதகஞ் செய்யவேண்டும்.

5. (ii) நியமமாவது—குருபக்தியும், பரமதத்துவ பதத்தில் அபேக்ஷையும், (மூலித) சங்கமின்மையும் (பற்றின்மையும்), தானே கிடைத்த லாபத்தில் சந்தோஷமும், ஏகாந்த வாசத்தில் ஊக்கமும், மனோநிவிருத்தியும், வைராக்கிய பாவமும் ஆகிய இவை நியமங்களென்று சொல்லப்படும்.

6. (iii) ஆசனமாவது.—சுகாஸனத்திலிருந்து ஸ்வஸ்வரூபத்திலே சதாகாலமும் அப்பியாசமும், சகல வஸ்துக்களிலும் (1) உதாசீன பாவமும் ஆகிய இவை ஆஸனமெனப்படும்.

(1) "பூரணபாவம்" என்று சில தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகளின் பாடம்.

7. (iv) பிராணாயாமமாவது.—ரேசக, பூரக, கும்பகங்களாகிற யத்தினத்தால் பிராணனை ஸ்திரப்படுத்துவதும், ஜகங்கள் மித்தை † யென்கிற பாவனையில் சித்தத்தை நிலைநிறுத்துவதும் பிராணாயாம மெனப்படும்.

8. (v) பிரத்தியாகாரமாவது.—அந்தர்முகியானால் சித்தம் நிர்மலமாகும். அந்த நிர்மல சித்தத்தினால் வெகுவித சைதன்ய ஜாலத்தோடு கூடின பிரபஞ்சத்தை மறந்து, மனதினால் உத்பத்தியாகிற நாநாவிதமாகிய விகாரங்களை நீக்குவதே பிரத்தியாகாரமெனப்படும். இவ்வித பிரத்தியாகாரத்தில் சலனமில்லாத மனத்தையுடைய யோகீசுவரனை சதாகாலமும் நமஸ்கரித்து பஜிக்கின்றேன்.

9. (vi) தியானமாவது — ஸோஹம்பாவனையால் த்ருடமான பரஹ்மாத்வைத பாவமும் லோகத்தில் விளங்கிக் கொண்டிருக்கு மெல்லாவற்றையும் சிவஸ்வரூபமாக பாவித்தலும், குருகடாக்ஷத்தால் சகல பூதங்களிடமும் சமதிருஷ்டியும், ஸ்வாநுபவமான ஆத்மானுபவத்தில் ஆநந்தமடைதலும் (ஆகிய) இவற்றையுடையவன் தியானநிஷ்டனென்று சொல்லப்படுவன்.

10 (vii) தாரணையாவது.—உள்ளும்புறம்பும் ஏகமாய் விளங்குகிற பரமதத்துவ ஸ்வரூபத்தை சதாகாலமும் நிர்மலபுத்தியால் சலனமில்லாமல் நிறுத்திக்கொள்ளுதல் தாரணை யெனப்படும். சலனமற்ற சித்தமே கேவலதாரணையெனச் சொல்லப்படும்.

11. (viii) நிர்விகற்பசமாதியாவது.—நிஜாநுபவ (ஸ்வானுபவ) சீலத்துவமும், சமஸ்த தத்துவங்களிடமும் சமத்துவபாவமும், தாரணை சலனப்படாமலிருப்பதும், ஸ்திரபாவத்தினால் அநாயாசகரமாய்ச் சதாகாலமும் ஐக்கியபாவனை ஸஹஜமாய் நிற்பதும் நிர்விகற்பசமாதி யெனப்படும். (*)

12. உள்ளும் புறம்பும் சகல ஜந்துக்களினும் பரப்பிரஹ்ம ஸ்வரூபம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இருந்தும் சத்குருவை பஜனை பண்ணாதவர்கள் அப் பிரஹ்மபதத்தை யடையமாட்டார்கள்.

13. ஆகையால் மிக ஆச்சரியமான இந்த ராஜயோக அஷ்டாங்கத்தை (சத்புருஷனானவன்) குருகடாக்ஷத்தினாலே அடைவன். மற்ற கர்மங்களா லடையமாட்டான்.

14. மகா ஆயாசகரமாயுள்ள துஷ்கரமான அப்பியாசயோகத்தினால் என்ன பிரயோஜனம்? சற்குரு கடாக்ஷத்தால் ஓர் க்ஷணத்திலேயே பிரஹ்மானுபவத்தை யடையலாம்.

15. கண்டஞானிகளுக்கும் (1) (பூரண ஞானியல்லாதவர்களுக்கும்) அறுசமயங்களாகிய மயக்கத்தால் அந்தகாரத்தை யடைந்தவர்களுக்கும், நானாவிதமாகிய வேதம், புராணம், சாஸ்திரம், காவியம் இவைகளில் தேர்ந்து வாக்கு திருடமுள்ளவர்களுக்கும், நாலு ஆசிரமங்களின் நியமங்களால் கெர்வித்தவர்களுக்கும் குருமுகமின்றி இந்த அபரோக்ஷ யோக ஞானமானது எவ்விதமுண்டாகும்!

16. க்ஷேத்திரம் (ஊர்), பொருள், அழகியவீடு, பெண்சாதி பிள்ளைகள், பந்துக்கள் முதலியவை, வாதம், ஔஷதம், ரசாயனம், முதலிய தாதுவாதங்கள், காமிய மாகிய மந்திர, லய, ஹடயோகங்கள் இவை முதலிய பிரதிபந்தங்களால் கட்டுப்பட்டவர்களுக்கு குருப் பிரசாதம் எவ்விதம் கிடைக்கும்!

17. ஆகையால் முதல் வர்ணாசிரம ஆசாரத்தைப்போதிக்கும் குருவினிடம் பிரஹ்ம ஞானமும் இருக்குமாகில் அவரை ஆசிரயிக்க வேண்டும். இல்லாவிடில் வேறு சற்குருவை ஆசிரயிக்க வேண்டும்.

18. அத்துவைத மாயும், அநந்தமாயும், ஆதியாயும், நிரஞ்சனமாயும், நிச்சலமாயும், நித்தியப் பிரகாசமாயும், சச்சிதானந்த ஸ்வரூபமாயும், பரமாமிருத ரூபமாயு மிருக்கின்ற ஆத் மதத்துவத்தை ஸ்வபாவத்தி லறிந்தவரே சற்குரு வென்றறியவும்.

19. ஞான வைராக்கியங்களினால் மூவுலகங்களையும் திருணமாக்கி, சத்குருவை முதலில் ஆசிரயித்து தத்துவ ஞானத்தை அப்பியாசிக்க வேண்டும்.

பஞ்சவிம்சதி தத்துவங்கள்

20. தத்துவங்களேவை யென்னில்:—

ஆகாசத்தில் ஆகாசாம்சம் ஞானம், வாயு அம்சம் சமானவாயு, அக்னியம்சம் சுரோத்திரேந்திரியம், ஜல அம்சம் சப்தம், பூமி அம்சம் வாக்கு. இவை ஐந்தும் ஆகாச பஞ்சகமென்று சொல்லப்படும்.

21. வாயுவில் ஆகாசாம்சம் மனம், வாயுவம்சம் வியான வாயு, அக்னியம்சம் துவக்கு, ஜலாம்சம் ஸ்பர்சம், பூமியம்சம் பாணி; இந்த ஐந்தும் வாயு பஞ்சகமென்று சொல்லப்படும்.

22. அக்னியில் ஆகாசாம்சம் புத்தி, வாயுவம்சம் உதான வாயு, அக்னியம்சம் நேத்திரம், ஜலாம்சம் ரூபம், பூமியம்சம் பாதம்; இவையைந்தும் அக்னி பஞ்சகமென்று சொல்லப்படும்.

23. ஜலத்தில் ஆகாசாம்சம் சித்தம், வாயுவம்சம் அபானவாயு, அக்னியம்சம் ரசனை (ஜிஹ்வை), ஜலாம்சம் ரசம், பூமியம்சம் உபஸ்தம்; இவ்வைந்தும் ஜல தத்துவ பஞ்சகமெனப்படும்.

24. பிரிதிவியில் ஆகாசாம்சம் அகங்காரம்; வாயு வம்சம் பிராணவாயு, அக்னியம்சம் கிராணம், ஜலாம்சம் கந்தம், பூமியம்சம் குதம்; இவை யைந்தும் பிருதிவீ பஞ்சகமெனப்படும்.

25. பஞ்ச பூதங்களாற் பிறந்த இவ்விருபத்தைந்து தத்துவங்களையும் யாவனொருவன் அறிகிறானோ அவனே தத்துவஞானி. அவனே மோக்ஷாதிகாரி.

26. ஜீவனுடைய அந்தக்கரணங்களிலும் தசேந்திரியங்களிலும் உள்ள ஆத்யாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் என்கிற அம்சங்களைப் பிரித்துப் பார்த்து (1)—

சாங்கிய யோகம்.

27. நான் பூதங்களுமன்று, குணங்களுமன்று, இந்திரியங்களுமன்று, மனோபுத்தி அகங்கார சித்தரூபமான அந்தக்கரணமு மன்று, சரீரமுமன்று, பிராணனுமன்று, தத்தம் ஆசிரம தர்ம கர்மங்களில் ஊக்கமுடைய சகல பிரபஞ்சமுமன்று, ஆனால் நித்தியமும் நிச்சலமும், அத்துவிதீயமும், நாசமற்றதும், ஜநநமற்றதும், சாந்தமானதும், சிவமானதும், நிர்க்குணமானதும் சுத்தபோத ஸ்வரூபமானதும் எதுவோ, அதுவே, நானென்று நிச்சயித்து நின்றவனே முக்தனென்று சொல்லப்படும்.

† 'மித்தை' யென்றால் பொய், அதாவது நித்தியமில்லாதது, ஸ்திரமில்லாதது; தோற்றன் மாத்திரமாய், ஓடுகிற ஆற்றின் நீர் போல் நிலையில்லாதது.

(*) வேறு பாடப்படி "ஸ்மிருதியின் சலனமின்மையும் ஸ்திரமான நிவிர்த்தியாசனமும், ஆயாசமின்றி சத்தாகிய ஐக்கியபாவனை சகஜமாய் நிற்பதும், நிர்விகல்பமாகிய சகஜசமாதி யெனப்படும்" எனப்பொருளாகும். இந்த சுலோகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு பிரதிகளில் மொழிபெயர்ப்பு தவறுதலாயிருந்ததை திருத்தியிருக்கின்றோம்.

(1) i. e. those who know in part only.

(1) தமிழ் மொழிபயர்ப்பு பிரதிகளில் பின்வருமாறு காணப்படுகின்றது. அது மூலபாடத்துக்கு ஒத்திருப்பதாய்த் தோன்றுமையால் மேலே போடாமல் இவ்விடம் அதைக் குறிக்கின்றோம்:—

"இந்த பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்களிலே ஆத்யாத்மிக ஆதிதெய்விக ஆதிபௌதிகங்களென்ற மூன்றுங் கிரமமாக இந்திரியங்களிலும், இந்திரிய தேவதைகளிலும் அந்தக்கரணங்களிலும் உண்டாயிருக்கும்; அதேதென்றால் சுரோத்திரம் ஆத்தியாத்மிகம், சப்தம் ஆதிபூதம், திசைகள் ஆதிதெய்விகம்; இவ்விதமாக தசேந்திரியங்களுக்கும் பார்த்துக்கொள்ளத் தக்கது."

28. ஸ்தூல சூக்ஷ்ம காரணமாகிய மூவித தேகங்களிலும் உள்ள பதினாறு விகாரங்களையும், பதினேழு லிங்கங்களையும், ஒன்பது பதார்த்தங்களையும், பிரகிருதியின் எட்டுவித ஸ்வபாவங்களையும் அறிந்து, இவைகளெல்லாம் நானல்ல, [இவ்வகளுக்கு] அப்பாற்பட்டவனென்று எவன் பாவனை பண்ணுகிறானோ அவனே மஹாத்மா.(1)

29. சத்தியமும் ஞானமும் அநந்தமுமானது எதுவோ அதுவே பிரஹ்மமென்று வேதங்கள் சொல்லும். நித்யானந்தஸ்வரூபமான அதுவே நீயாகிறாய் (தத்துவமஸி). இது நிச்சயம்.

30. இது நானல்ல, இது நானல்ல, வென்று ஆத்மாவை அவைகளுக்கு அன்னியமாக பாவனைசெய். அவனே நான் (ஸோஹம்), அவனே நான் (ஸோஹம்) என்று ஆத்மாவை எல்லாமாக பாவனைசெய்.(2)

31. ஹிருதயத்தில் ஞானத்தினாலேயே மோக்ஷம் என்கிற வாக்கியத்தை ஆதரவுடன் கேட்டு, இந்த ஞான யோகத்திலே மனதை ஸ்திரப்படுத்தென்று (குருமூர்த்தியானவர் சாங்கிய யோகத்தைச் சொல்லி மேல் தாரகயோகத்தைச் சொல்லுகிறார்.)

## தாரகயோகம்.

32. பிராணசிநேகிதனான ஓ சிஷ்யனே, இதற்குமேல் இதற்கு மேன்மையானதும் மிக ரகசியமானதும், பிரத்தியக்ஷப் பிரமாணமானதும் நமக்கு அனுபவசித்தமுமான தாரகயோகத்தை உனக்குச் சொல்கிறேன் கேள்.

33. பிரஹ்மானுபவமடையாத வர்களும் வித்துவான்கள் மந்திர, லய, ஹடயோகங்களால் கிலேச மடைகின்றார்கள்.

34. [அப்படிக் கிலேசப்படாமல்] கண்களை மூடியாகிலும், கொஞ்சம் திறந்து கொண்டாகிலும், மனோதிருஷ்டியால் பிரஹ்ம ஸ்வரூபத்தைப் பார்ப்பவன் எவனோ அவன் யோகீசுவரன்.

35. சந்திர சூர்யர்களின் மத்தியில் ஸ்திரமான தேஜஸ்ஸையுடைய தாரகங்களையும் (தேஜோரூபமான இரண்டு பிந்துக்களையும்) ஒன்றுபடுத்தி பிரஹ்மதாரகத்தை அப்பியசிக்கவேண்டும்.

36. இப்படிக்கொத்த தாரகயோகத்தில் பிரஹ்ம தெரிசனம் பண்ண நினைப்பவனுக்கு பாஹிய லக்ஷியம், அந்தர்லக்ஷியம், மத்தியலக்ஷியம் என்கிற மூன்று லக்ஷியங்களிலும் பார்க்கப்பட்டதும் பார்க்கப்படாததுமான ஸ்வரூபங்கள் பல உள. அவைகளை அப்பியாசம் பண்ணிப் பார்க்கவேண்டும்.

37. (அந்தர்லக்ஷியம்).—மூலாந்தத்திலிருந்து தண்டத்தை (வீணாதண்டமாகிய முதுகெலும்பை) ஒட்டினதான சந்திரப்பிரபை (காந்தி) யோடு கூடின பிரஹ்மநாடியுண்டு; அதன் மத்தியில் கோடிமின்னற் பிரகாசமுள்ள ஊர்த்துவ காமினியான (மேல்நோக்கிச் செல்லும்) ஓர் தேஜசு உண்டு.

38. இத்தேஜஸானது தாமரைநாளுக்கு சமானமாய் (நுட்பமாய்) பிரஹ்ம ரந்திர பரியந்தம் வியாபித்து சர்வசித்திகளையும் கொடுக்கின்றதாயிருக்கும். அப்படிக் கொத்த தேஜோமூர்த்தியை மனதில் லக்ஷியமாகச்செய்து தெரிசிக்க வேண்டும்.

(1) "பதினாறு விகாரங்களாவன", ஞானேந்திரியங்கள்-5, கர்மேந்திரியங்கள்-5, சப்தாதி விஷயங்கள்-5, மனம் ஆகப்பதினாறு என்று மொழிபெயர்ப்பின் உரை.

"பதினேழு லிங்கங்களாவன" ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், பஞ்ச மகாபூதங்கள், மனம், புத்தி என்பன வென்றும்,

"ஒன்பது பதார்த்தங்களாவன" கர்த்தா, கர்மம், கிரியை, ஞாதா, ஞானம் ஞேயம், போக்தா, போகம், போக்யம் என்பன என்றும், "எட்டுவித பிரகிருதி ஸ்வபாவங்கள்" பஞ்ச பூதங்கள், மாயை, மோகம் (அவித்தியை) அகங்காரம் என்பன வென்றும் மொழிபெயர்ப்பின் உரை.

(2) இச்சுலோகத்தின் மொழிபெயர்ப்பு தமிழ் பிரதிகளிற் காணப்படவில்லை.



39. இன்னமொரு பிரகாரமாவது:—லலாடத்திற்குமேல் கொல்லாட மண்டபத்தில் லக்ஷியத்தை வைத்த யோகீசுவரன் நக்ஷத்திரப்பிரகாசமான தேஜஸை மனதால் லக்ஷியம் வைத்துப் பார்க்க வேண்டும்.

40. இன்னமொரு பிரகாரமாவது—தர்ஜனியென்கிற சுட்டுவிரல்களால் காதுகளிரண்டையும் மூடினால் சிரசிலே கும்கும் என்று பிரணவ நாதம் கேட்கப்படும்.

41. வேறொரு பிரகாரமாவது—கண்களின் மத்தியத்திலே நீலஜ்யோதிரூபத்தை லக்ஷியம் வைத்துப் பார்க்கவேண்டும். இம்மட்டும் அந்தர் லக்ஷியம் சொல்லப்பட்டது. இனிமேல் பாஹிய லக்ஷியத்தை சொல்லுகிறோம், கேள்.

42. (பாஹிய லக்ஷியம்:—)நாஸாக்கிரமுதற்கொண்டு வெளியிலே 4, 6, 8, 10, 12 இந்த அங்குலங்களைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு கிரமமாக ஆகாசம் முதலிய பஞ்சதத்துவப் பிரகாரமாக நீலவர்ணம், தூம்ரவர்ணம் (புகை வர்ணம்) ரக்தவர்ணம், தரங்கவர்ணம் (1), பீதவர்ணமுமாக நமஸ்கரித்துத் தியானம்பண்ண வேண்டும்.

43. இன்னொரு பிரகாரமாவது:— ஷண்முகாகாசத்தை (2) ஸ்திரதிருஷ்டியினால் பார்க்கும் தீரமாகிய மனத்தையுடைய யோகீசுவரனுக்கு எதிரே ஜ்யோதிக் கிரணங்கள் தோற்றும்.

44. இன்னொரு பிரகாரம்:—திருஷ்டிக்கு முன்னேயாகிலும் கடைக்கண்களிலேயாகிலும் நன்றாய்க் காய்ச்சின பொன்னின் நிறம்போலிருக்கும் பூமியை (3) லக்ஷியம் வைத்துப் பார்த்த யோகீசுவரனுக்கு திருஷ்டி ஸ்திரப்படும்.

45. இன்னொரு பிரகாரம்:—சிரசுக்குமேல் துவாதசாங்குல (பனிரெண்டங்குல) ஸ்தானத்தில் நிராகாரமான ஜ்யோதிக் கூட்டத்தை லக்ஷியமாக வைத்துபார்க்கும் யோகீசுவரனுக்கு அது முக்தியைக் கொடுக்கும்.

46. வேறொரு பிரகாரம்:—யோகியானவன் எங்கெங்கே லக்ஷியம் வைப்பானோ அங்கங்கே ஆகாசமே தோற்றப்பட்டால் அவனுடைய சித்தமும் ஆகாசத்துக்குச் சமானமாகும்.

47. இப்படியநேக விதங்களான பாஹிய லக்ஷியமானது சொல்லப்பட்டது. இனிமேல் பூர்வ வித்துவான்களாற் சொல்லப்பட்ட மத்தியலக்ஷியத்தைச் சொல்லுகிறேன் கேள்.

48. (மத்தியலக்ஷியமாவது):— வெண்மை முதலிய வர்ணங்களோடு கூடிய அர்த்த சந்திரனைப்போலவும், மின்னற்கொடி போலவும், அக்னிஜ்வாலையின் பொரிகளைப்போலவும் அல்லது ஸ்தலஹீனமான ஆகாசத்தைப் போலவும் லக்ஷியத்தைப்பார்ப்பது மத்தியலக்ஷிய மெனப்படும்.

49-50. இன்னொரு பிரகாரமாவது:—நிராகாரமான குணரஹிதமான (சித்)ஆகாசத்தையும் அத்தியந்த அந்தகார ரூபமான பராகாசத்தையும், காலாக்னியைப்போல் ஜ்வலிக்கும் மகாகாசத்தையும், மிகுந்த பிரகாசத்தோடு கூடிய தத்துவாகாசத்தையும், நாறு சூர்யர்களுக்குச்

(1) தரங்கமென்றால் அலை: மூலத்தில் பாடம் இவ்விதமேதான் காணப்படுகின்றது. மொழிபெயர்ப்புப் பிரதிகளிலும் அப்படியேதான் பாடம் இருக்கின்றது.

(2) அர்த்தசந்திர முகாகாசமெனவும் பாடமுண்டு; மேற்சொல்லிய லக்ஷியத்தைக் குறித்து மண்டல பிராஹ்மணோபநிஷத்து, அத்வயதாரகோபநிஷத்து இவைகளைப் பார்க்கவும்.

(3) கடைக்கண்களிலாகிலும் பூமியிலாகிலும் என்று அத்வயதாரகோபநிஷத்திலும் மண்டலபிராஹ்மணோபநிஷத்திலும் காணப்படுகின்றது.

சமானமான சூர்யாகாசத்தையும், இந்த வியோம பஞ்சகமென்கிற உள்ளும் புறம்பும் நிறைந்திருக்கும் (இந்த) ஐந்து ஆகாசங்களையும் யாவனொருவன் லக்ஷியத்தில் பார்ப்பானோ அவன் ஆகாசத்துக்குச் சமான மாவான்.

51. இத்தாரக யோகமானது குரு சிஷ்யரிருவரையும் பவசாகரத்தைக் கடக்கப் பண்ணுவதால் தாரகயோக மென்று சொல்லப்படும். ஆகையாலதை நீ அப்பியாசம் பண்ணு.

52. சாங்கிய தாரகயோகங்க ளிரண்டுக்கும் அநுஷ்டானக்கிரமம் இருவித மாகினும் பலன் ஒன்றே. சாங்கியம் உபாதி யற்றது; யோகம் ஸோபாதிகமானது.

இவ்விதம் சதாசிவ யோகீந்திரரால் செய்யப்பட்ட சிவயோக தீபிகையில் சாங்கிய தாரக யோகவிதான மென்கிற நான்காவது படலம் முற்றும்.

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

---

## Kannaki—A Social Drama.

### கண்ணகி.

---

அங்கம். IV] [காட்சி. I

இடம்—மதுரையின் புறத்திலுள்ள முனிவராச்சிரமமும், மதுரை மாநகரும்.

காலம்—விடியற்காலம்

பாத்திரர்— கௌவுந்தி, கண்ணகி, கோவலன், மாடலன், மாதரி

**கோவலன்:**—(கௌந்தியை நோக்கி) அம்மையே! எவ்வளவு காலத்திற்கு நானும் கண்ணகியும் இந்த ஆச்சிரமத்தில் இருந்து கொண்டிருப்பது? நான் நகருட்சென்று நாங்கள் வசிப்பதற்குத் தகுதியான வீடு ஒன்று பார்த்து வருகிறேன்! நான் சென்று திரும்பும் வரையில் என் கண்மணி கண்ணகியை ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொள்ளுங்கள்! அடியேனுக்கும் போக விடை தாருங்கள்! (என்று அன்புடனும் பணிவுடனும் கேட்கிறான்.)

**கௌந்தி:**—கோவலா! நீ சென்று வாலாம்! கண்மணியை இமை காத்துவருவதுபோல் நான் உன் கண்மணியைக் காத்து வருவேன்! அவளைக்குறித்து நீ கவலையுற வேண்டாம்! சந்தோஷத்துடன் சென்று விரைவில் திரும்பிவிடு!

**கோவலன்:**—ஆஹா! சந்தோஷம்! (அவ்விடத்தைவிட்டு நீங்கி இரண்டொரு அடி எடுத்து வைக்கிறான்.)

**கண்ணகி:**—(கோவலனை அழைத்து) நாதா! நகருக்குப்போய்த் திரும்பிவிட்டீர்களோ?

**கோவலன்:**—(சிரித்துக் கொண்டு) கண்மணி! மதுரைமாநகரைச்சுற்றித் திரும்புவதென்றால் இவ்வளவு சீக்கிரத்தில் முடியுமா? ஸ்ரீராமனுடன் காட்டுக்குச் செல்லும்பொருட்டுப் புறப்பட்ட சீதா தேவி அயோத்தி நகரின் கோட்டை வாயிலைத் தாண்டுவதற்குள் "நாதா; காட்டுக்கு வந்துவிட்டோமா?" என்று ஸ்ரீராமனைக் கேட்டது போலன்றோ விருக்கிறது நீ என்னைக் கேட்பது! கண்மணி! விடைகொடு! நான் சென்று சீக்கிரத்தில் திரும்பி விடுகிறேன்! (கண்ணகியைத் தன் மார்பின் மீது அணைத்துக் கொண்டு மிகுந்த பரிவுடன் கேட்கிறான்.)

**கண்ணகி:**—நாதா! சீக்கிரம் சென்று திரும்பி விடுங்கள்! வருஷத்தை நிமிஷமாகச்செய்யும் நீங்கள், நிமிஷத்தை வருஷமாகச் செய்து என் மனத்தை வருத்தக்கூடாது! ஞாபக மிருக்கட்டும்! (கோவலனை அணைத்து முத்தமிடுகிறாள்.)

**கோவலன்:**—ஆருயிரே! அப்படியே! நான்சென்று ஒரு நொடிப்பொழுதில் திரும்பி விடுகிறேன்! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்! தவத்திற் சிறந்த கௌந்தியடிகள் உன்னோடிருக்கும்போது உனக்கு யாது கவலை? (கண்ணகியிடம் விடை பெற்று முனிவராச்சிரமத்தை விட்டு நீங்குகிறான்.)

**கண்ணகி:**—[கோவலனுடைய உருவம் மறையும் வரையில் உற்று நோக்கிப் பின்பு பெருமூச்சுடன்] ஆ! அவர் சென்றால் என்னுயிரும் கூடச் செல்லு



கின்றதே! என்ன காரணம்? [தன்னை நோக்கி] நான் தானோ கண்ணகி? நான் தானோ மாநாய்கனுடைய மகள்? நான் தானோ மாசாத்துவனுடைய மருமகள்? நான் தானோ கோவலனுடைய மனைவி? நான் தானோ கௌந்தியினுடைய சிஷ்யை? நான் தானோ பெருங்குடியர் குலத்திலுதித்த பெண்? ஆ! இதென்ன ஆச்சரியம்! அப்படியிருந்தால் கோவலன் மதுரையை நோக்கிச்சென்ற பின்பும், அவரை நோக்கி என்னுடைய உயிர் சென்ற பின்பும் என்னுடைய உடல் மட்டும் இவ்விடத்தில் நின்றுவிடக் காரணமென்ன? [சற்று நேரம் மௌனமாயிருந்து] சீ! என்ன மூடத்தனம்? என்னுடைய சுகத்துக்காக வீடு பார்க்கும்படி எனது கணவன் சென்றால் அதற்காக நான் வருத்தப் படுவானேன்? சந்தோஷமன்றோ படவேண்டும்? "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்னும் பழமொழி உண்மை தான் போலும்! இருந்தபோதிலும் அவர் சென்றதைக் கண்டு வருத்தப்பட்டது என்னுடைய குற்றமல்ல! என்னை அவர் வசப்படுத்திய எனது காதலின் குற்றம்! காதலுக்குக் கண்ணில்லையென்று சொல்லுவார்கள்! ஆனாலும் அது மிகத் தெளிவாகவும், நன்றாகவும், பார்க்கக் கூடியதாகவே இருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது! கண்ணிருந்தும் காணமுடியாத அநேக அற்புதங்களை கண்ணற்ற காதல் விளக்கிக் காட்டுகிறதென்றால் அதனுடைய மகிமையை என்னென்று சொல்லுவது! என்னே காதலின் மகிமை! [பாடுகிறாள்.]

"*இம்மை யின்பத்தின் இனிய முதலாய்ச்
செம்மை யிலகுறா உஞ் சீரிய காதலே!
அனைத்தையும் தன்வயம் நினைப்பினில் ஆக்குங்
கடவுட் டன்மை கவின்ற பொருளே!
ஆக்கப் படும்பொருள் அல்லா வினைவே!
ஏக்கற்று நின்றவர்க் கெய்திய மருந்தே!
உடையும் ஊணும் நடையுங் குலனும்
ஒவ்வா தாரையும் ஒன்று படுத்துவை;
செவ்வே யன்னார்தந் திணிமன மலர்த்துவை;
தற்செயலாகத் தனித்தெதிர்ப் படுநரை
இச்சை கொளுத்தி இசைவுற அவர்மனந்
தம்மைச் சேர்த்துத் தகைபெற யாட்டை.
அம்மவோ! நின்னுலன்றோ
உலகி னெலாமுறை விலகலின் றொழுகலே!"

**கௌந்தி:**—(கண்ணகியை நெருங்கிவந்து) கண்ணகி! நீ எவ்வளவு நேரம் இங்கு நின்றுகொண்டிருந்த போதிலும் கோவலன் உன் கண்ணைவிட்டு மறையப்போகிற தில்லை!

**கண்ணகி:**—என் மனத்தைவிட்டு மறைந்தாலல்லவோ கண்ணை விட்டு அவர் மறைவதற்கு?

**கௌந்தி:**—ஆதலால்; வா! நாம் ஆச்சிரமத்துக்குள் செல்லலாம்! (இருவரும் ஆச்சிரமத்துள் செல்லுகிறார்கள்.)

**கோவலன்:**—(மதுரைக்குள் சென்று நகரத்தின் விசேஷங்களைக் கண்டு வர்ணித்துக்கொண்டே ஒவ்வொரு வீதியாய்ச் செல்லுகிறவன் தானாகவே பின் வருமாறு பேசிக்கொள்ளுகிறான்); ஆஹா! இந்தக் காலைப்பொழுதில் இந்த மதுரைமாநகரம் எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது! சூரியனுடைய வருகையைக் கண்டு உலகத்தோர் சந்தோஷப்படுகிறார்களென்று அக்கதிரவனுக்கு முன்னதாக அறிவிக்கும் தூதுவர்களைப்போல் தடாகங்களில் மலிந்து கிடக்கும் தாமரை முகைகள், முகமலர்ந்து ஞாயிறை நோக்கிய வண்ணமாக இருக்கும் காட்சி எவ்வளவு அற்புதமான காட்சி! முப்புரமெரித்த முக்கட் கடவுளாகிய சிவபெருமானின் திருக்கோவிலும், கருடப்பறவையை வாகனமாகக் கொண்ட திருமால் இயமமும், கலப்பையை ஆயுதமாக வலக்கையில் ஏந்திய பலதேவர் இல்லமும், சேவற் கொடியை உயர்த்திப்பிடித்த முருகவேளின் ஆலயமும், இந்த நகரத்துக்கு பிர்மாவின் நான்கு சிரங்களைப்போல் விளங்கி படைத்தற்றொழிலையுடைய நான்முகனின் ஞாபகத்தை மனிதர்களுக்கு உண்டாக்குவது அரியதோர் காட்சியன்றோ? யானைகள் கூட்டங் கூட்டமாய்ச் செல்லுவதற்காகக் கட்டப்பட்டிருக்கும், மதில்வாயில்களும், இந்த மதில்வாயில்களைச்சுற்றிக் காவலுக்காக நியமிக்கப்பட்டிருக்கும் சினர்களும், துருக்கர்களும் காவல் புரியும் தன்மையும், இந்த நகருக்கே உரிய ஒரு சிறந்த விசேஷம் போலும்! மேற்றிசைக்காற்று மெல்லென வீசுவதும், உயர்ந்த மாளிகைகளில் தூக்கிக்கட்டப்பட்டிருக்கும் கொடிகள் அக்காற்றின் அசைவால், சிற்றிடை மாதர்களின் இடைகளைப்போல் துவண்டு துவண்டு அசைவதும், அம்மாளிகைகளில் உறையும் பொதுமகளிர் தாம் காதலிக்குஞ் செல்வத்தையுடைய காமுகரோடு கூடி இடையறாது பெருகும் வையை

---

* ஸ்ரீமான் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியின் "தனிப்பாசுரத்தொகை."

ஆற்றில் நீராடுவதும், குளிர்ந்த முல்லை மலரையும், தாழ்ந்த தடாகங்களில் பூத்த குவளை மலரையும், மல்லிகையின் முகைகளையும், செழுங்கழுநீர்ப் புஷ்பத்தின் இதழ்களையும் கலந்து கலந்து மாலையாகச் செய்து கழுத்தில் அணிந்துகொண்டும் தலையில் சூடிக்கொண்டும் குலஸ்திரீகள் தங்கள் கணவர்களோடு சொக்கநாதர் ஆலயத்திற்குப் பத்தியுடன் செல்லுவதும் பார்ப்பவர் மனத்தைப் பற்றியிழுக்கும் இயல்புடையவைகளாயிருக்கின்றன! அங்காடி வீதிகளும், மிக நுட்பமான பருத்தி நூலினாலும், எலிமயிரினாலும், பட்டு நூலினாலும் நெய்யப்பட்ட புடைவை மடிகள் மலைகளைப்போல் நெருக்கமாக அடுக்கப்பட்டிருக்கும் கடை வீதிகளும், நிறுக்கும் துலாக் கோலையும், மறிக்கும் பறையையும், அளக்கும் மரக்காலையும், நடுநிலை திறம்பாத அரசனைப்போல் உபயோகிக்கும் வணிகர்கள் நிறைந்த பலசரக்குக் கடைவீதிகளும், அந்தணர் அரசர் வணிகர் வேளாளரெனச் சொல்லப்பட்டாரிருக்கும் வீதிகளும், சான்றோருறையும் நலங்கிளர் வீதிகளும், சாமுகர் உறையும் தாசிகள் வீதிகளும், பறையர்கள் வசிக்கும் புறச்சேரிகளும், என்னுடைய மனத்தைவிட்டு ஒருபோதும் நீங்கமாட்டா! காவிரிப்பூம் பட்டினம் இம்மதுரைமாநகரின் அழகில் நூற்றில் ஒருபங்கு கூட இல்லை என்றே நான் நினைக்கிறேன்! இருக்கட்டும்! நான் ஆலவாயில் அழல் நிறக் கடவுளை அடிபணிந்து விட்டு சீக்கிரம் என் காதலியிடம் செல்லுகிறேன்! அவள் என்னை எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பாள்! [சொக்கநாதர் ஆலயத்துள் பிரவேசிக்கிறான்.]

கௌந்தி:—(கண்ணகியை நோக்கி) குழந்தாய்! அதோபார்! யாரோ ஒரு பிராமணர் நம்முடைய ஆச்சிரமத்தை நோக்கி வருகிறார்! (தூரத்தில் வரும் ஒரு அந்தணரை சுட்டிக்காட்டுகிறாள்.)

கண்ணகி:—அம்மணி! வந்தால் வரட்டுமே! அவர் வருவதற்கு நாம் எவ்வளவோ புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமே! வந்த விருந்தினரை உபசரித்தனுப்ப வேண்டியது கோவலன் மனைவியாகிய எனக்குக் கடமையன்றோ? இதோ அவர் சமீபத்தில் வந்து விட்டார்! நான் அவரை எதிர் சென்று அழைத்து வருகிறேன் (வெளியே செல்லுகிறாள்.)

மாடலன்:—(தனக்குள்) யாரோ ஒரு கற்பாசி நம்மை நோக்கி வருகின்றாளே! சற்று நின்று பார்ப்போம்! (ஆச்சிரமத்துக்கு சமீபத்திலுள்ள ஒரு மரத்தின் நிழலில் தங்குகிறார்.)

கண்ணகி:—(மாடலனை நெருங்கி) சுவாமி! நமஸ்காரம்! இதோ இருக்கும் ஆச்சிரமத்திற்குத் தாங்கள் வந்துவிட்டுப் போகவேண்டும்! (நமஸ்கரிக்கிறாள்.)

மாடலன்:—(சந்தோஷத்துடன்) பெண்ணே! உனக்கு எல்லா நலங்களும் உண்டாகட்டும்! நீ இவ்வளவு அன்போடு அழைக்கும்போது வரமாட்டேனென்று நான் சொல்லுவேனா? இதோ வருகின்றேன்! (இருவரும் ஆச்சிரமத்துக்குப் போகிறார்கள்.)

கௌந்தி:—(அந்தணர் வந்ததும் அவரை நோக்கி) அந்தணரே! தம்முடைய வரவு நல்வரவாகட்டும். இதோ இருக்கும் ஆசனத்தில் தயை செய்து எழுந்தருள வேண்டும்! (பக்கத்தில் கிடக்கும் ஒரு இருக்கையைக் காட்டுகிறாள்) தாம் எங்கிருப்பது? தம்முடைய நாமதேயமென்ன? தயைசெய்து சொல்லக் கூடுமோ?

மாடலன்:—முதிர்ந்த தவத்தையுடைய அடிகளே! காவிரிப்பூம்பட்டினத்துக்குத் தென் மேற்கிலே நான்கு நாழிகை வழி தூரத்திலுள்ள தலைச்செங்காடு என்னும் கிராமத்தில் வசிப்பவன் நான்! என்னுடையபெயர் மாடலன்! தென்திசை சென்று கன்னியாகுமரி ஆற்றில் நீராடி அங்குள்ள ஆலயங்களைத் தரிசித்துக்கொண்டு மறுபடியும் நான் என்னுடைய ஜென்ம நாட்டுக்குத் திரும்புகிறேன்!

கோவலன்:—(மதுரை நகரத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு ஆச்சிரமத்துக்கு வந்ததும் தன்னுடைய நண்பனாகிய மாடலன் அங்கிருப்பதைக்கண்டு ஆச்சரியத்துடன்) நண்பா! மாடலா! நீ இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்? உன்னைப்பார்க்க நேரிட்டதே எனக்கு மிகவும் சந்தோஷம்!

மாடலன்:—(கோவலனைத் தழுவிக்கொண்டு) ஆ! பிரிய சிநேகிதா! நீ இங்குவரக் காரணமென்ன? இவர்கள் யார்?

கோவலன்:—விதி யாரை விட்டது? நண்பா! இறந்தோரைப் பிழைக்கச்செய்யும் அமிர்தம் போன்ற இன் சொல்லோடு இதோ இருக்கிறாளே; இவள்தான் என்னுடைய அருமை மனைவி—கண்ணகி! அதோ



இருப்பவர்கள் என்னுடைய குருநாதராகிய கௌந்தியடிகள்! காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டு நடந்தே இந்நகர் வந்தடைந்தோம்!

மாடலன்:—(மிகுந்த விசனத்தோடு) கோவலா! இல்லற ஒழுக்கத்திலும், கற்பிலும், சிறந்த மாதவி என்னும் உனதருமைத் தாசியின்வயிற்றில் உனக்குப் பிறந்த பெண்குழந்தைக்கு மணிமேகலை என்று நாமகரணஞ் சூட்டியபோது ஏழை எளியவர்களுக்கு செம்பொன் மழையை உனது செங்கையாலே நீ பொழியவில்லையா? அச்சமயத்தில் உன்னிடத்தில் தானம் வாங்குவதற்காக கோலூன்றிக் கொண்டு வந்த ஒரு கிழப்பிராமணரை மதம்பிடித்த யானை தன்னுடைய துதிக்கையால் பிடிக்கப் போனதைக் கண்டு சரேலென்று ஓடி அவரை அந்த யானை வாயிலகப்படாமல் இரட்சித்ததுமன்றி அந்த யானை மஸ்தகத்திலேறி அதனுடைய மதத்தை யடக்கிய அஞ்சாத வீரனல்லவா நீ? ஒரு பார்ப்பனி வளர்த்த கீரிப்பிள்ளை அவளுடைய பிள்ளையைக் காத்திருக்க, ஒரு பாம்பு அக்குழந்தையைக்கடிக்க அணுகும்போது அதனைக்கடித்துப் பிள்ளையைக் காப்பாற்றின அக்கீரிப்பிள்ளை வாயில் இரத்தக்குறியுடன் குளத்துக்குச் சென்ற பார்ப்பனியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்க, குழந்தையைக் கடித்து விட்டதென அந்த பிராமணஸ்திரீ தண்ணீர்க்குடத்தைக் அக்கீரியின் மேல்போட்டு அதைக்கொன்று விட்டுப் பிறகு உண்மை தெரிந்து பிரலாபித்துக் கொண்டிருந்ததை நீ கண்டு அவளுக்கு வேண்டிய தைரியங்கூறி அவசர புத்தியினால் அவள் செய்தகொலைப்பாவம் நீங்கும் பொருட்டு தருமசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி, பிராயச்சித்தம் செய்து தானதருமங்களியற்றுவதற்கு வேண்டுமான பொற்காசுகளை நீ அவளுக்குக் கொடுத்துதவியதோடுகூட அவளுடைய செயலைக்கண்டு கோபித்துக்கொண்டு போய்விட்ட அவளுடைய கணவனையும் நீ அவளிடம் அழைத்து வந்து சேர்க்க வில்லையா? இன்னும் எவ்வளவோ அருமையான காரியங்களை நீ இயற்ற வில்லையா? உனக்கு இத்துன்பம் வருவானேன்?

கண்ணகி:—(அந்தணரை நோக்கி) மாதவப் பெருமானே! தங்களுக்குத்தெரியாத விஷயமும்உண்டோ? முன் ஜென்மங்களில் செய்த வினைப்பயன் யாரைவிட்டது? விதியின் பயனை யார் அறிவார்கள்?

"வினைப்போகமே ஒருதேகங்கண்டாய் வினைதானொழிந்தால்
தினைப்போதளவு நில்லாதுகண்டாய் சிவன்பாதம் நினை
நினைப்போரைமேவு நினையாரைநீங்கு இந்நெறியினின்றால்
உனைப்போலொருவருண்டோ மனமே யெனக்குற்றவரே".

என்று நம்முடைய பெரியோர்கள் அருளிச் செய்திருப்பதைத் தாங்கள் அறியாதவர்களல்லவே? முன் ஜென்மத்தில் செய்யும் வினையின்பயன் இந்த ஜென்மத்தில் அனுபவிக்கப்படுவதில்லை என்று சொன்னால், இந்த ஜென்மத்தில் பிறந்த ஒரு பச்சைக் குழந்தை துன்ப மடைவானேன்? பிறக்கும் குழந்தைகளில் சில எளியவர்களிடம் பிறந்து வறுமை யடைவானேன்? வேறு சில செல்வவான்கள் வீட்டுக்குழந்தைகளாயிருந்து அளவற்ற செல்வத்தையும் சுகத்தையும் அனுபவிப்பானேன்? ஒரு குழந்தை நல்லறிவுடையதாய் இருப்பானேன்? மற்றொரு குழந்தை தீய அறிவு உடையதாய் இருப்பானேன்? இப்படி உலகத்தில் பலவிதமான பேதங்கள் காணப்படுவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டு மல்லவா? காரணமின்றிக் காரியம் உண்டாகாதே! ஆகவே ஆன்மாக்களுக்கு அநாதி முதற்கொண்டே இருந்துவரும் கர்மவினையே காரணமென்பது புலப்படவில்லையா?

"பேரிழவின்பமோடு பிணிமூப்புச் சாக்காடென்னும்
ஆறுமுன் கருவுட்பட்ட தவ்விதியனுபவத்தால்
ஏறிடு முன்புசெய்த கன்மமிங் கிதனுக்கேது
தேறுநீ இனிச்செய்கன்ம மேலுடற்சேருமன்றே".

என்னும் ஆன்றோர்வாக்கால் இவ்வுண்மை வெளிப்படுகிறதல்லவா? போன ஜென்மத்தில் செய்தவினை இந்த ஜென்மத்தில் நமக்கு ஞாபகம் இல்லாதது கொண்டே முன்ஜென்மமாவது, முன் வினையாவது கிடையாதென்று சொல்லிவிடுதல் பொருந்தாது. நேற்று உண்ட கறிவகைகள் இன்று ஞாபக மில்லாதபோது முன் ஜென்மவினைகள் எப்படி ஞாபக மிருக்கும்? குழந்தைப் பருவத்தில் செய்த செய்கைகளை மறந்துவிட்ட ஒருவன் அவைகள் ஞாபக மில்லாதது கொண்டு "நான் குழந்தைப்பருவத்தில் இருந்ததே இல்லை" என்று சொல்லுவானா? ஆதலால், அந்தணரே! முன்ஜென்மவினையே எனக்கும் என் கணவருக்கும் இவ்விதம் வந்து மூண்டது!

மாடலன்:—குழந்தாய்! நீ சொல்லுவது வாஸ்தவமே! உன்னுடைய பொறுமையும், புத்திசாலித்தனமும், தைரியமும், அன்பும், கோவலனை எவ்விதமான துன்பத்திலிருந்தும் நீக்கிவிடும்! உன்னுடைய வாழ்நாள் சிறப்பதாக!

**கோவலன்:**—மாடலா! எல்லாம் உன்போன்ற பிராமணர்களின் ஆசீர்வாதத்தையும், கடவுளுடைய அனுக்கிரகத்தையும் பொறுத்திருக்கின்றன. காவிரிப் பூம்பட்டினத்தில் எல்லோரும் க்ஷேமந்தானு? கண்மணி மாதவி சுகமாயிருக்கின்ருளா?

**மாடலன்:**—கோவலா! எல்லோரும் க்ஷேமந்தான்! மாதவி சௌக்கியமாய்த் தானிருக்கிருள்; ஆனல் சுகமாயில்லை! அவள் நன்ருய்த் தானிருக்கிருள்; ஆனல் சந்தோஷமாயில்லை! அவள் தைரியமாய்த்தானிருக்கிருள்; ஆனல் கவலையற்றில்லை! வீட்டைவிட்டு அவள் வெளியே வருவதேயில்லை! மகாராஜா ஒரு கச்சேரிக்குக் கூப்பிட்டனுப்பினர்! அதற்குக்கூட அவள் வரவில்லை! உன்னுடை ஞாபகமே அவளுக்கு இருந்து கொண்டிருக்கிறது.

**கோவலன்:**—ஆ! அப்படியா! நீ காவிரிப்பூம்பட்டினம் சென்றவுடன் அவளைப் போய்ப்பார்த்து அவளுக்கு வேண்டிய தேறுதல் சொல்லு! குழந்தை மணிமேகலையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளச் சொல்லு!

**மாடலன்:**—அதற்கென்ன! அப்படியே சொல்லுகிறேன்! நீ இந்த ஆச்சிரமத்திலிருப்பது சரியல்ல!

**கோவலன்:**—நண்பா! நீ சொல்லுவது நியாயந்தான்! இல்லறத்திலிருக்கும் நாங்கள் துறவிகள் வசிக்கும் ஆச்சிரமங்களில் இருப்பது கொஞ்சமும் சரியல்ல! அதை உத்தேசித்துத் தான் நகரத்தில் ஒருவீடு பார்த்து வரலாமென்று போயிருந்தேன்!

**கண்ணகி:**—பிராணேசா! அதோ ஒரு ஸ்திரீ நமது கௌந்தியடிகளைத் தேடி வந்திருக்கிருள்!

**கோவலன்:**—ஆச்சிரமத்துள் அழைத்துவா! கௌந்தியடிகள் உள்ளே இருக்கிருர்கள்! அவர்களிடத்திலும் சங்கதியைத் தெரிவி!

**கண்ணகி:**—அப்படியே! [வெளியே சென்று மாதரியைக் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே வருகிருள்.]

**கௌந்தி:**—மாதரி! வரவேண்டும்! ஏது இவ்வளவு தூரம்!

**மாதரி:**—அம்மணி! தயிர்விற்று விட்டு இப்பொழுதுதான் மதுரைக்குப் போகிறேன்! மாட்டுக்கு வைக்கோல் இல்லை; தவிடு இல்லை; நாழியோ பதினைந்தாகிவிட்டது! உங்களைத் தரிசித்துப் போகலாமென வந்தேன்!

**கௌந்தி:**—மிகவும் சந்தோஷம்! (கண்ணகியைக் காட்டி) இவளுக்கும் இவள் புருஷனுக்கும் வசிப்பதற்கு மதுரையில் ஒரு வீடுபார்த்துக் கொடுக்க முடியுமா?

**மாதரி:**—வீடு பார்ப்பதென்ன! என்னுடைய வீட்டிலேயே இருக்கட்டும்! இவர்களுக்கு வேண்டிய சகல உபசாரங்களும் நான் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்! (கண்ணகியைத் தழுவிக் கொண்டு) குழந்தாய்! என்னுடைய வீட்டிலிருக்க உனக்குச் சம்மதந்தானே?

**கண்ணகி:**—(நாணத்தினுல் தலை கவிழ்ந்தபடியே புன்சிரிப்புடன்) அவர்களுக்குச் சம்மதமானுல் எனக்கும் சம்மதந்தான்! அவர்களைக் கேளுங்கள் (கோவலனைக் காட்டுகிருள்.)

**கோவலன்:**—எனக்குச் சம்மதந்தான்!

**கண்ணகி:**—ஆனல் எனக்கும் சம்மதமே!

**மாதரி:**—மிகுந்த சந்தோஷம்! (கௌந்தியை நோக்கி) அம்மணி! என்னோடு அனுப்புங்கள்! என்னுடைய சொந்தக் குழந்தைகளைப்போல் இவர்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!

**கௌந்தி:**—மாதரி! இந்தக்கண்ணகி கற்பினிற் சிறந்த காரிகை! புருஷனைத் தெய்வமெனக் கொள்ளும் மங்கையர் திலகம்! கஷ்டம் இன்னதென்று கனவிலும் அறியாதவள்! அறிவிற் சிறந்த அணங்கு! ஆதலால் அவளைப்பற்றி நீ அதிகமான கவலை எடுத்துக் கொள்ளவேண்டும்!

**மாதரி:**—அப்படியே!

**கௌந்தி:**—(இருவரையும் நோக்கி) குழந்தைகாள்! மாதரியோடு சென்று சுகமாய் இருங்கள்! (வாழ்த்துகிருள்.)

**கோவலன்:**—அப்படியே! (நமஸ்கரிக்கிருன்.)

**கண்ணகி.**—அம்மணி! போய் வருகிறோம் விடைதரவேண்டும்! (நமஸ்கரித்த பின்பு, கோவலன் மாதரி சகிதம் ஆச்சிரமத்தை விட்டு நீங்குகிருள்).

[4-ம் அங்கம் 1-ம் காட்சி முற்றும்]

நாகை ஸி. கோபாலகிருஷ்ணன்.

———:-:———



## Sketches for Children.

### (1) Sita-Manonmani—a Dialogue.

### சீதா-மனோன்மணி.

பூனையைப்பற்றிய ஓர் ஸம்பாஷணை.

*சீதா:*—மனோன்மணி! நாம் இன்று பூனையைப்பற்றிச் சற்று நேரம் ஸம்பாஷிப்போமா?

*மனோன்மணி:*—ஆஹா! அவ்வாறே செய்வோம், எல்லாவற்றிற்கும் ஸந்தேகம் வந்தால் நிவர்த்தி செய்து கொள்ள பூனை பக்கத்திலிருந்தால் நலமல்லவா?

*சீதா:*—ஆமாம், நீ சொல்வதும் வாஸ்தவந்தான். பூனையைப்பற்றி நீ ஒன்று சொல்ல நான் ஒன்று சொல்லில் நமது வாக்கு வாதத்தைத் தீர்க்க நமது அருமை உபாத்தினியம்மையும் இவ்விடமில்லையல்லவா! ஓர் பூனை நேராகவிருக்கின், நாமே நமது சந்தேஹங்களை நிவர்த்தி செய்து கொள்ளல் இயலுமல்லவா? சரி, நீ போய் நமது வெள்ளைப்பூனையைக் கொண்டு வருகிருயாவென, மனோன்மணியும் சென்று பூனையுடன் திரும்பி வருகிருள்.

*சீதா:*—ஸரி! பூனைதான் வந்து விட்டதே! நாம் நமது உபாத்தினி சொல்லியவாறு கிரமேண அதன் அங்க அவயவங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வோம்! முதலில் அதன்கால்கள் எவ்வாறிருக்கின்றன வென்று பார்ப்போம். எங்கே அதன் ஒரு பாதத்தை இப்படிக்காட்டு என்று வினவி அதைத் தொட்டுப் பார்த்து, சரி பூனைக்குக் கால்கள் மிருதுவான மெத்தை போன்ற சதைவளர்ச்சியுடன் கூடியிருக்கின்றன. இதுதான் நாம் முதலில் பூனையைப் பற்றித் தெரிந்து கொண்ட விஷயம்.

*மனோன்மணி:*—சரிதான்; நாம் அனேகந் தடவைகள் பூனை எலியைப் பிடிப்பதைப் பார்திருக்கிறோம்; பந்துடன் விளையாடினதையும் பார்த்திருக்கிறோம். ஆயினும் அச்சமயங்களில் கவனித்துப் பார்த்திராததால் இப்பொழுது ஓர் பந்தை உருட்டு இப்பூனை அதை எப்படி இந்த மொண்ணைக்காலுடன் பிடிக்கிறதென்பதைப் பார்ப்போம், என, சீதா பந்தொன்றை நிலத்தில் உருட்ட, மனோன்மணி பூனையைக் கீழே விட்டதும் அதுவும் ஓர் பாச்சலாய்ப் பாய்ந்து அதைப் பிடித்தது.

*சீதா:*—சரிதான்! நீ இதன் கால்கள் மொண்ணைக் கால்கள் என்றனையே! பார் இப்பொழுது! இதன் முன் பின் கால்கள் ஒவ்வொன்றிலும் அவ்வைந்து வளைந்த நகங்கள் இருக்கின்றனவே! இவைகள் முதல் முதல் நாம் பார்த்தபொழுது காணுமல்லவா? இப்பொழுது எங்கிருந்து வந்தனவோ?

*மனோன்மணி:*—எங்கிருந்து வரும்? வெளியிலிருந்தா வரும்! இப்பூனைகளுக்குத் தங்கள் நகங்களை இஷ்டம்போல் உள்ளிழுத்துக் கொள்ளவும், எதையாவது பிராண்ட வேண்டுமென்ருலும், பிடிக்க வேண்டுமென்ருலும் மரம் முதலியவைகளைத் தொத்தி ஏறவேண்டுமென்ருலும் வெளியில் நீட்டவும் சக்தியுண்டென்று தெரியவருகிறது.

*சீதா:*—ஆமாம்: இக்கூரிய வளைந்த நகங்கள் தாம் மேற்கூறிய வாறு அதற்குதவி யாகிறது. அதன் பாதத் தடியில் மெத்தைபோன்ற சதை வளர்ச்சிக்கும் ஏதாவது உபயோகமிருக்கலாமோ?

*மனோன்மணி:*—ஆஹா! உதவி யில்லாமல் ஒன்றும் ஈசனுல் உண்டாக்கப்பட மாட்டாது! நமக்கதன் உதவி இன்னதென்று தெரியாததனுல் தானே உதவியற்றதென்று நிர்ணயித்தல் கூடாது! "அவன் பூனைபோல் வந்து நின்ருன்" என்னும் பேச்சைக் கேட்டிருக்கிறோம் அல்லவா? அவ்வசனத்திற்குக் காரணபூதமானது இம்மெத்தை போன்ற பாதத் தடிகளே! இவைகளினுல் தான் பூனை கொஞ்சங்கூட சத்தமின்

றி நடந்து, சிறிய ஜந்துக்களின் பின்னால்போய், திடீரென்று பாய்ந்து, வாயினால் கௌவியோ அல்லது தனது கூரியவளைந்த நகங்களாலேயோ அவைகளை ஓடிப்போக விடாமல் பிடித்துக் கொள்ளும்.

மனோன்மணி:—சரிதான்; "ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரப்பிரதானம்" என்று நாம் கேட்டிருப்பதால், இப்பொழுது இதன் தலையைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

சீதா:—தலையிலும் "ஸர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்" என்றிருப்பதால் முதல் முதல் அதன் கண்களைப்பற்றி விசாரிப்போமே!

மனோன்மணி.—சரி! அப்படியாயின் அப்பூனையை வெளிச்சம் கண்களில் படும்படி இக்கதவினிடமாகப்பிடி; பார் இப்பொழுது இதன் கண்களை; கண்கள் இருப்பதாகவே காணோமே! அவைகள் இருந்த விடங்களில் இரண்டு கோடுகள் இருப்பதாக வல்லவோ காண்கிறது! இதனால் நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால் பூனைக்கு வெளிச்சம் ஆகாதென்பதல்லவா?

சீதா:—ஆமாம்! ஆனால் இருட்டுப் பக்கம் அம்முகத்தைத் திருப்பு! பார் இப்பொழுது! கோடாய் இருந்த கண்கள் வட்டமானவைகளாய் ஆய்விட்டன! வெளிச்சமாயின் பூனை தன் கண்களை அனேகமாய் முற்றிலும் மூடிக் கொள்கிறது, இருட்டிலானால் நன்றாய்த் திறந்து கொள்கிறது. பூனைக்கு இரவில் கண் நன்கு தெரியுமென்பதும் வாஸ்தவமே!

மனோன்மணி:—சரி! அதன் வாயைத்திற; பற்கள் எப்படியிருக்கின்றனவென்று பார்ப்போம்! சரி! அவைகள் நீண்டும் கூராயுமிருக்கின்றன; முன் பக்கங்களில் நான்கு நீண்ட பற்களிருக்கின்றனவே ஒழிய நம்போல கடைவாய்ப் பற்களையே காணோமே!

சீதா:—இப்பற்களின் அமைப்பினின்றும், கடைவாய்ப் பற்கள் இல்லாததனின்றும் நாம் தெரிந்து கொள்ளும் விஷயம் யாதோ?

மனோன்மணி:—நாம் இரண்டு விஷயங்கள் இதினின்றும் தெரிந்து கொள்ளல் கூடும்; ஒன்று, மேற்கூறிய கூரிய பற்கள் பூனை எலி முதலியவைகளைக் கொன்றதும், அவைகளை நார் நாராய்க் கிழித்துத் தின்ன அமைக்கப் பட்டிருக்கிறதென்பதும், பூனை நம்போலும் பசுமுதலிய பிராணிகளைப்போலும் அசைபோடுதல் முடியாதென்பதுமே

சீதா:—ஆம்! இதன் நாக்கைப் பார்த்தாயா! எவ்வளவு சொர சொரப்பாயும், வைப்பின்றியுமிருக்கிறது? இது மாத்திரம் இப்பொழுது என் கையை நக்கிராவிடில் இவ்விஷயம் எனக்குத் தெரிந்தே யிராதே! இதன் நாக்கு மாத்திரம் ஏன் இப்படி ஏற்பட்டிருக்க வேண்டும்?

மனோன்மணி:—ஏன்! சொல்கிறேன் கேள். எலும்புகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் மாமிசத்தைச் சுரண்டித் தின்ன இச்சொர சொரப்பு அநுகூலமாகிறது. தவிர தன் மயிரை சுத்தம் செய்து கொள்ளவும் அனுகூலம்; தவிர கொஞ்சம் பால் ஓர் தட்டில்வை! இது நக்கிக் குடிக்கும் பொழுது பார்த்தாயா! நாக்கை காண்டி முட்டைபோல் மடித்துப் பாலை உட்கொள்ளும் ஆச்சரியத்தை; இதற்கும் அவ்வித அமைப்பு அனுகூலமே!

சீதா:—இதன் மயிரைப்பார்! எல்லாம் பின்புறமாகவே சாய்ந்திருக்கிறது தவிர அது மிக்க அடர்த்தியாயும் மிருதுவாயு மிருக்கிறது. நாம் இதைத் தடவிக் கொடுத்தல் முன் பக்கமிருந்து பின் பக்கமாகத்தடவ வேண்டுமொழிய பின்னிருந்து முன்னால் கூடாது. இம்மயிரின் அமைப்பு கூரையின் மேல் போட்டுள்ள வைக்கோலுக்கல்லவோ ஒப்பிட்டுச்சொல்லலாகும் போலிருக்கிறது!

மனோன்மணி:—ஆம்! பார் இப்பொழுது இப்பூனையை! அதன்மேல் விழுந்த ஒரு சொட்டுப் பாலை எவ்வாறு துடைக்கிற தென்பதை! மற்றப் பிராணிகளைப் போலில்லாமல் தன் தேக



த்தை மிக்க சுத்தமாய் வைத்துக் கொள்வதல்லவோ இது; தவிர, பூனை ஜலத்தில் நீந்தியதை எப்போதாகிலும் பார்த்திருக்கிறாயா?

சீதா:—அவ்வளவு தூரம் போவானேன்! பூனைக்கு ஜலத்தைக் கண்டால் வெறுப் பென்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே! கீழே கொஞ்சம் ஜலத்தை இறைத்து அதன்மேல் இப்பூனையை நடக்கச்செய் பார்க்கலாம்! முடியாது. இதை உத்தேசித்துத் தான் "பூனைக்கு மீன் மேல் பிரியம், ஆனால் அதற்காகத் தன் காலை நனைக்க மிக அப்பிரியம்" என்ற இங்கிலீஷ் பழமொழி ஒன்று உண்டாயிருக்கிறது! இதெல்லா மிருக்கட்டும்; இதற்கு முகத்திலுள்ள நீண்ட மயிர்களால் ஏதேனும் பிரயோஜனம் உண்டோ?

மனோன்மணி:—உண்டு. நாம் ஓர் இருட்டறையில் ஏதாவதொன்றை எடுக்கவேண்டினால் தடவிப்பார்க்க எவ்வாறு கைகளை உபயோகிக்கிறோமோ அவ்வாறு புதர், வளை முதலியவைகளில் புகும்பொழுது, இம்மயிர்கள் உபயோகமாகின்றன.

சீதா:—முடிவில் பூனை சாகபக்ஷிணியா? அல்லது மாமிசபக்ஷிணியா?

மனோன்மணி:—இதைப்பற்றிச் சந்தேகமேன்! அது மாமிசபக்ஷிணியே! எப்படியெனில் அது குருவி, எலி, அணில் முதலியவைகளைப் பிடித்துத் தின்பதை நாம் பார்த்திருக்கிறோம்! தவிர, அதன் பற்களின் அமைப்பும் மாமிசத்தைக் கிழித்துத் தின்னத்தக்கதாய் அமைந்திருக்கிருக்கின்றனவல்லவா?

சீதா:—ஸரி! நாம் ஏதாவது தெரிந்துகொள்ளக்கூடிய முக்கிய விஷயத்தை விட்டிருக்கிறதாய்க் காண்கிறதா?

மனோன்மணி:—எனக்குத் தெரிந்தவரையில் ஒன்றிருக்கிறதாய் அபிப்பிராயம். ஆனால் தெரிந்துகொள்ளக் கூடியவைகள் அனேகம் விட்டிருக்கலாம்.



சீதா:—ஏதோ ஒன்றிருப்பதாய்ச் சொன்னையே அதென்னவோ?

மனோன்மணி:—அதுதான் பூனை ஏன் ஜலத்தைக்கண்டால் நடுங்குகிறதென்பது.

சீதா:—அதெவ்வாறென்பதைச் சற்று விரித்துரைப்பாயா?

மனோன்மணி:—ஆஹா! நீ பறவைகளின் இறகுகள் பார்த்திருக்கிறாயா?

சீதா:—பார்த்திருக்கிறேன்.

மனோன்மணி:—அவைகளில் ஜலம் பட்டால் என்னவாகிறது.

சீதா:—ஜலம் ஒட்டுகிறதில்லை! தெறித்துப் போகிறது.

மனோன்மணி:—அதற்குக் காரணம் தெரியுமா?

சீதா:—ஓர்வித இயற்கையான தைலம் அச்சிறகில் இருப்பதால் என்று நம் உபாத்தினி அம்மணி சொல்லியிருப்பது ஞாபகம் வருகிறது.

மனோன்மணி அப்பேர்ப்பட்ட தைலம் அனேக பிராணிகளின் மயிரில் இருக்கும் ஜாஸ்தியாகவோ அல்லது கொஞ்சமாகவோ. ஆனால் பூனையின் மயிரில் கிஞ்சித்தேனும் அத்தைலமில்லை, ஆதலால், ஜலம் மேற்பட்டால் வெயில் அல்லது உஷ்ணம் பட்டாலன்றி காய்ந்து போக ஹேஷியமின்மையாலும், குளிரை ஸஹிக்கக்கூடிய பிராணி அல்லாததாலும் தான் அது அவ்வாறு ஜலத்தை வெறுப்பது.

சீதா:—ஆஹா! அப்படியா! நாம் இன்று வெகு ஸங்கதிகள் பூனையைப்பற்றித் தெரிந்து கொண்டோம். இன்னொருநாள் வேறு ஏதாவதொரு பிராணியைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். நேரமாய்விட்டதால் நாம் இப்பொழுது போவோமாவென, இருவரும் போகின்றார்கள். அடுத்த சஞ்சிகையில் அவர்களது அடுத்த ஸம்பாஷணையை வரைவோம்.

எம். என். கணேசய்யர்.

# Easy Lessons in Economics.

## குடிவாழ்க்கை.

### VI. இலாபம்

நிலம், முதல், முயற்சி இம்மூன்றினால் உற்பத்தியாகும் திரவியத்தில் வேலைசெய்வோரடையும் பாகத்தைக் கூலியென்கிறோம். முதலாளிக்குச் செலவான பொருள் வட்டியுடன் வரவேண்டும். வேலை செய்கிறவனுக்குக் கூலி கிடைக்கவேண்டும். இவைகளுக்குமேல் கிடைக்கப்பட்ட பாகத்தையே இலாபமெனத்தகும். எத்தேசத்திலும் முதலாளி வேறு, வேலைக்காரர் வேறு, என்று இருக்கின்றமையாலும், முதலாளி தன் முதலினின்றும் தன்னிடத்திலமர்ந்துள்ள வேலைக்காரருக்குக் கூலிகொடுப்பது வழக்கமாயிருப்பதாலும், கூலியை முதலின் ஓர் பாகமெனக் கூறுவதுண்டு. இது நியாயமன்று. கூலி முதலாகாது. திரவிய உற்பத்திக்கு வேண்டிய வேலைக்காரர்கள் வேலை செய்து திரவியம் விர்த்தியானபின் அதினின்றும் ஒருபாகத்தைப் பெறலாம். ஆதலின் முதலாளி கூலிக்காக ஒரு முதல் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. திரவிய விர்த்திக்கு வேண்டியது வேலை; அந்த வேலைக்கு ஈட்டை திரவிய விர்த்தியானபின் கொடுக்கலாம். அப்படி பெற்றுக் கொள்ளத்தக்கதான நிலைமை நம் தேசத்திலுள்ள கூலிக்காரர்களுக்கு இல்லை. முதலாளிகள் அவர்களை அந்நிலைமையில் வைக்கவில்லையென்று கூறினும் தகும். சுகமாகத் தான் ஜீவிக்கிறதற்கு வேண்டிய அளவுக்குக் குறைந்த கூலிக்கு வேலை செய்வோனொருவன் வேலை செய்யான் என்னலாகுமா? அவ்வளவு கூலியை முதலாளி அவனுக்குக் கொடாவிட்டால் அவனுடைய மெய்வலி குறையும். மெய்வலிகுன்ற அவனுடைய வேலைத் திறமையும் குன்றும். அவ்வேலையினால் உற்பத்தியாகும் தனத்தின் அளவும் குன்றும்.

உற்பத்தியாகும் தனமென்பதில், முதலுக்கு வட்டி, வேலைச்சுக்கூலி, இலாபமென மூன்று வகைப்படுகிறது. முதலாளிகள் தாங்கள் போடும் முதலுக்கு வட்டியை ஒருவாறு நிர்ணயப்படுத்திக்கொள்கிறார்களென்பதில் தடையில்லை. ஆனால் திரவிய உற்பத்திக்கு முக்கிய காரணமாகிய வேலைக்குக் கூலியை நிர்ணயப்படுத்த சக்தியில்லாதவர்களாக இருக்கிறார்கள். எப்படியென்றால், இலாபத்தை அதிகமாகக் கருதியோ முதலுக்கு அதிக வட்டியை திட்டப்படுத்தியோ, வேலைக்குக் கொடுபடவேண்டிய கூலியைக் குறைத்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வதால் இலாபம் என்ற கலத்தில் பூஜ்யம் ஏற்படுவதுமன்றி முதலுக்கு உத்தேசித்தவட்டி கிடையாமற் போவதுமல்லாமல், போட்டமுதலுக்கும் நஷ்டமுண்டாகின்றது.

ஒருவரிடத்திலுள்ள முதலானது, அல்லது பல பேரிடத்திலுள்ள முதலானது ஒரு தொழிலில் அமர்ந்து, தொழிற்சாலையாகவும், கருவிகளாகவும், தொழில் விருத்திக்குரிய பண்டங்களாகவும் நின்று வேலைக்காரர்களுக்கு உதவி செய்யும். முதல் பெருகப்பெருக வேலைக்கு வேண்டிய கருவி, யந்திரம் முதலிய சாதகப் பொருள்களை முன்னிருந்ததைவிட சிரேஷ்டமானவைகளாக வாங்கலாம். இப்படி செய்வதால் வருவாயும் அதிகப்படும். வருவாய் அதிகப்படும்பொழுது அதில் வேலைக்காரர்களுடைய கூலி விகிதமும் அதிகப்படவேண்டும். முதலாளியின் முதல் அதிகப்படும்பொழுது வட்டி என்னப்படும் முதலாளியின் வரும்படி குறையவேண்டியது. எப்படியென்றால் ஒரு சாவுகார் மற்றொருவனுக்கு 25 ரூபாய் கடன் கொடுப்பதாயிருந்தால் 100-க்கு இரண்டு ரூபாய் வீதம் வட்டி கேட்கிறான். அதே சாவுகார் மற்றொருவனுக்கு 100-ரூபாய் கடன் கொடுக்கும்பொழுது 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கேட்கிறான். 1000 ரூபாய் கொடுப்பதாயிருந்தால் 100-க்கு அரை ரூபாய் கேட்கிறான். பத்தாயிரமானால் 100-க்கு கால் ரூபாய் வீதமும் அதற்கும் குறைவாகவும் பெறுகிறான். அதாவது தொகை அதிகப்படுவதற்குத் தக்கபடி வட்டி வீதம் குறையவேண்டியது. நியாயம், அப்படி இருக்க, தொழில் ஆரம்பத்தில் 1000-ரூபாய் முதல் வைத்தவர் முதலை அதிகப்படுத்துகிறவரை, முதலில் தீர்மானித்த வட்டியாகிய 100-க்கு ஒரு ரூபாய் கணக்கிட்டு எடுத்துக்கொள்ளுவது கிரமம். அந்த முதல்தானே 10,000-மாக பெருகிவிட்டபொழுது அதே பிரகாரம் 100-க்கு ஒரு ரூபாய் வீதம் கணக்கிட்டு எடுத்துக்கொள்ளுவது அடாது.



ஆகவே மொத்த வரும்படியில் முதலாளியின் வீதம் முதல் அதிகப்படுவதற்குத் தகுந்த வீதமாய்க் குறைவதும் பெருகுவதும் நியாயமாகும். ஆகையால் தேசத்தில் உள்ள முதல் விருத்தியடைவதினால் வேலைக்காரர்களுக்கு நன்மை விளையவேண்டும்.

வேலை செய்வோர் வேலையைக் குழப்பிக் கெடுத்தால் தங்களுக்கு நீடித்த காலத்திற்கு வேலை கிடைக்குமென்று எண்ணி முதலாளிகளுக்கு நஷ்டத்தை யுண்டாக்குவது சகஜம். இது பெரும்பிழை. வேலையை ஊக்கத்துடன் செய்து எவ்வளவுக்கு வரும்படியுண்டாகும்படி செய்கின்றனரோ அவ்வளவுக்கு வேலைக்காரர்களுக்கே நன்மையைப் பயப்பதாயிருக்கிறது. ஐந்து நாளையில் செய்து முடிக்கக்கூடிய வேலையை பத்துநாளில் முடித்தால், அச்சமயத்திற்கு முதலாளிக்கு நஷ்டமும், வேலைக்காரனுக்கு இலாபம்போலவும் தோற்றும். அதாவது முடிந்த வேலையினாலுண்டாகிய பொருள் 10-ரூபாயானால் ஐந்து நாளில் முடித்த வேலைக்காரனுக்கு 4 ரூபாயும், முதலுக்கு ஈடு 4 ரூபாயும், முதலாளிக்கு இலாபம் இரண்டு ரூபாயுமாகப் பிரிவதாக வைத்துக்கொள்ளுவோம். ஐந்து நாள் வேலையை பத்து நாளைக்கு ஓட்டிவிடுவதினால், வேலைக்காரனுக்கு ரூபாய் எட்டு கிடைக்கலாம். ஆனால் முதலாளிக்கு நஷ்டமுண்டாகுமாதலால் அந்த வேலைக்காரனை அம்முதலாளி பின்னும் தன்னிடம் வைத்துக்கொள்ள சம்மதியானென்பது திண்ணம். மறுபடியும் அமைக்கப்பட்ட வேறு வேலையாட்களும் அத்தன்மையராயின் முதலாளி தன் முதலை அம்மாதிரி நஷ்டம் விளைக்கும் தொழிலினின்றும் விலக்குவானென்பதில் தடையுண்டோ? இவ்விதம் பலமுதலாளிகள் தங்கள் முதலை தொழில்களினின்றும் விலக்கிக் கொள்வாராயின், தேசமொத்தத்தில் தொழில்களிலமர்ந்துள்ள முதலானது குறையவே குறையும். முதல் குறையவே செல்வ விருத்திக்கு முதலால் அமையும் உதவியும் குன்றும். செல்வத்தை விருத்தி செய்ய முதலாளியின் உதவியின்மையால் வேலை செய்வோர்களால் தொழிலை நடத்த இயலாது. இவ்விதமாக வேலையை குழப்புகிற வேலையாட்கள் தங்களுக்கும் தங்கள் நிலைமையிலுள்ள பிறருக்கும் நஷ்டத்தையே உண்டாக்குகிறார்கள். முதலாளிகள் தங்களிடம் வேலைசெய்கிற கூலிக்காரர்களுக்குத் தகுந்த கூலிகொடாமலிருப்பது தேசத்திற்கே பெருத்த நஷ்டமாய் முடிந்திருக்கின்றது.

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த வியவசாய இலாகா டயரக்டர் வியவசாய வகுப்பாரின் நிலைமையைப் பற்றியும் வேலையாட்களின் நிலைமையைப்பற்றியும், இவ்விருவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் சில முக்கியமான அபிப்பிராயங்களை சென்ற வருஷத்து ரிபோர்ட்டில் வெளியிட்டிருக்கிறார். அவருடைய அபிப்பிராயங்களை ரிவினியூ போர்டாரும் அங்கீகரித்திருக்கிறார்கள். அவை யென்னவென்றால்.—“வியவசாய வகுப்பாரின் நிலைமை எங்

கும் குறையாமல் உயர்ந்தே இருக்கின்றது. அதற்குத் தற்காலம் விலைவாசிகள் ஏறியிருப்பது காரணம். கூலிவேலை செய்வோர் வியவசாயத்தில் தக்க கூலி கிடைக்காமலிருப்பதால், சிலோன் மலேயா நாடுகள் போன்ற அந்நிய தேசங்களுக்குப்போய் விடுகிறார்கள். வேலையாட்கள் இல்லாவிட்டால் வியவசாயம் நடப்பதற்குக்கஷ்டமேற்பட்டுப் போகாமையால் மிராசுதாரர்கள் தங்கள் கீழ் வேலைசெய்யும் கூலியாட்களுக்கு அவர்களுடைய சுகஜீவனத்திற்குப் போதும்படி கூலி விகிதங்களை உயர்த்திக் கொடுத்தாலன்றி, இன்னும் சிறிது காலத்திற்குள் வியவசாயத்திற்கு வேண்டிய ஆட்கள் கிடையாமற் போய்விடுவார்கள்.”

இப்படி வியவசாய டயரக்டர் கூறுவதுமன்றி, வேலையாட்களுக்கு வியவசாயத்தில் வருஷமுழுவதும் வேலை கிடைப்பதில்லையென்றும், ஜீவனத்திற்குத் தக்கபடி கூலியகப்படுவதில்லையென்றும், ஆகையால் வேலையாட்கள் காப்பி, தேயிலை, ரப்பர் முதலியவைகள் பயிர் செய்யப்படுமிடங்களுக்குப் போய் விடுகிறார்களென்றும், சென்றவருஷம் முதல் ஆறுமாத காலத்தில் மட்டும் 50,000 கூலியாட்கள் இலங்கைக்கு மட்டும் போயிருக்கிறார்களென்றும், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களுக்கு 32,000 கூலியாட்கள் சென்றார்களென்றும் கூறுகிறார். தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு எவ்வளவு பேர் சென்றார்களோ தெரியவில்லை. வியவசாய டயரக்டர் கூறியது வியவசாயத்திற்கு மட்டுமென்று சொல்லமுடியாது. ஒவ்வொரு தொழிலுக்கும் அமையும்.

ஆகவே, முதலாளிகள் தங்கள் கீழ்வேலை செய்யும் கூலியாட்களும் ஜீவனத்திற்குத் தக்கபடி கூலிகொடாமல் வருத்துவதனாலேயே பல முதலாளிகளுக்கு பெருத்த நஷ்டமும், வேலையாட்களுக்கு அந்நிய தேசவாசமும், சுதேசத்திற்குப் பெருத்த நஷ்டமுமுண்டாகின்றது. பெருத்த முதல் வைத்து தொழில் நடத்துவோரும், பெரிய மிராசுதாரர்களும் இதை கவனிக்காமலிருந்தால் நாளாவட்டத்தில் அது அவர்களுக்கு மன்றி தேசத்திற்கே பெருங்கேடாக விளையும்.

டி. சி. வெங்கடரமண அய்யர்.

## Sita-A Tale of Hindu Domestic Life.

## சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

### 32-வது அதிகாரம்.

ஜமீன்தார் இராமச்சந்திரய்யரை என்ன செய்யலாமென்று சமயம் பார்த்துக்கொண்டே இருந்தார். இராமச்சந்திரய்யர் தான் பிடித்த காரியத்தை ஜயித்து விட்டதைப்பற்றி சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார். உடனே கோவில் வேலையை ஆரம்பம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தார். அன்றைய தினம் ஆருத்ரா தரிசனம் ஆகையால் இராமச்சந்திரய்யர் அதுதான் தகுந்த தினமென்று வேலையை ஆரம்பிக்கச் சொன்னார். ஆருத்ரா தரிசனத்துக்கென்று தனியாக அபிஷேகம் சுவாமிக்குச் செய்ய வேண்டுமென்று இராமச்சந்திரய்யர் முதநாளே சாமான்களையெல்லாம் சேகரித்து வைத்திருந்தார். இராமச்சந்திரய்யர் பிள்ளைக்கு அன்றைக்கு வெகு நேர்த்தியாய் சிங்காரம் செய்து இராமச்சந்திரய்யர் பரிசாரகன் அவ்விடம் கொண்டுவந்தான். இராமச்சந்திரய்யர் அவனைப்பார்த்து வெகு சந்தோஷப்பட்டுக்கொண்டு சீதா என் இன்னும் வரவில்லை, என்ன செய்கிறாளென்று கேட்டார். பரிசாரகன் தூங்குகிறாளென்றான். அதோ சுவாமி வரப்போகிறதே இன்னுமா தூங்குகிறாள்?



சீக்கிரம் வரச்சொல் என்றார். அன்றையதினம் சுவாமி விடிந்த உடனே புறப்பட்டு விட்டது. ஊரில் வீட்டுக்குவீடு வாசலில் கோலம் போட்டிருந்தது. ஒருவராவது வீட்டிற்குள்ளிருக்கவில்லை. எல்லோரும் வெளியில் வந்து சுவாமி தரிசனத்துக்கு காத்துகொண்டிருந்தார்கள். அந்த ஊருக்கு புதிதாய் வந்த ஓர் மலையாளி தன் தாயாரைக் கூப்பிட்டான். அவள் உள்ளே இருந்தாள். உடனே அவன் பலமாக ‘அம்மா அம்மா இன்னிக்கு அருத்த தருசனமென்று உனக்கு தெரியாதா? எழவு வாகனம் வருகிறது; சீக்கிரம் வா வா’ என்றான். அவள் உடனே ஓடிவந்து ‘என்ன என்ன’ என்றாள். அவன் பழையபடி முன்போலவே சொன்னான். எல்லோரும்கேட்டு சிரித்துவிட்டு அவனை திருத்தினார்கள்; அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. சுவாமி புறப்பட்டுத் தெருவில் வரும்போது வியாபாரிகள் வெகு பேர் வந்திருந்தார்கள். சுவாமிக்கு முன் பக்தி வாய்ந்தவள் போல் ஓர் தாசி ஒரு அடி எடுத்து வைப்பதற்குள் பத்து குலுக்கு குலுக்கிக் கொண்டு போனாள். வைதீகர்களெல்லாம் பஞ்சாதியை வாயால் சொல்லி கண்ணை தாசிமீது வைத்துக்கொண்டு போனார்கள். நல்ல மரத்தில் புல்லுருவிபாய்வதுபோல் கோவிலில் பக்தி வரவேண்டிய இடத்தில் இருக்கிற சொல்ப பக்தியையும் தாசிமீது வைத்து செலுத்துவதற்காக அவளுக்குச் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். சுவாமிக்கு தாசி எதற்கோ தெரியவில்லை. அப்படியாவது வேசித்தொழில் இல்லாமல் குடித்தன ஸ்திரீ போல் இருக்கும் தாசியைத் தான் கோவிலுக்கு வைப்பதென்று ஏற்பாடு செய்கிறார்களா? அதுவுமில்லை. தாசியுடன் நாகசுரமும் புறப்பட்டது. தவுல்காரன் தெருவு முழுவதும் பிசாசு ஆடுவது போல் ஆடிக்கொண்டே தவுல் அடித்தான். நாகசுரக்காரன் பக்கத்திலிருப்பவர்களுடைய காதை இடைவிடாமல் துளைத்தான். நமது பாலக்காட்டான் சுவாமி தரிசனத்தோடு நிற்கவில்லை. வியாபாரமும் கொஞ்சம் செய்யவேண்டுமென்று பக்ஷணக் கடையில் புகுந்தான். அங்கே போனதும் பக்ஷணக்கடைக்காரனைபார்த்து இதெல்லாம் என்ன விலையென்றான். இவன் கேட்ட கேள்வியிலேயே இவன் முட்டாளென்று கண்டுகொண்ட பக்ஷண கடைக்காரன் சில ஊசிப்போன வடைகளை கொடுத்தான். அவன் வாங்கி விண்டுபார்க்க, அதில் நூல் போல் இழைந்தது. இதைக்கண்ட மலையாளி அது கெட்ட பதார்த்தமென்று நினையாமல் அவனுடைய சாமர்த்தியத்தை மெச்சி வடை தான் செய்தாய் நூல் எப்படி நூற்றாய் என்று கேட்டான். எல்லோரும் இதைக்கேட்டு அவனைக் கேலிசெய்தார்கள். இராமச்சந்திரய்யர் சுவாமி வந்த சமயத்திலும் சீதாவுக்கு சொல்லியனுப்பினார். காணோம்; சுவாமி போன பிறகு சீதாவின் உள்ளே போய் பார்த்தார். உள் தாள் போட்டிருந்தது. வெகு நாழிகை இடித்தார். திறக்கபடவில்லை; பிறகு கதவைப்பெயர்த்து வைக்கச் சொன்னார். பெயர்த்து வைத்தும் உள்ளே சீதாவைக் காணோம். இராமச்சந்திரய்யர் வீட்டிலெல்லாம் தேடிப்பார்த்தார்: எங்கேயும் காணோம். பிறகு ஊர் முழுவதும் தேடும்படி ஆள் அனுப்பினார். எங்கே தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. உடனே இராமச்சந்திரய்யர் பூலாவடி கிராமத்திற்கு தந்தி கொடுத்தார். அங்கேயும் அவர்கள் இல்லையென்று மறு தந்திகொடுத்துவிட்டு இது விஷயம் விபரமாக விசாரிக்கும்பொருட்டு இராமச்சந்திரய்யருடைய மாமனார் மாமியார் இருவரும் வந்து சேர்ந்தார்கள். எங்கே பார்த்தாலும் அகப்படவில்லை. ஜமீன்தார் இதுதான்சமயம் என்று கண்டு இராமச்சந்திரய்யர் தன் பெண்சாதியைக் கொலைசெய்துவிட்டாரென்று கட்டுகட்டிவிட்டார். வெங்கட்டராமசாஸ்திரிகள்பிள்ளை முத்துசாமி இதுதான் சமயமென்றுகண்டு, எனக்கு முன்னமேயே தெரியும். படிப்பு படிப்பு என்று படிக்கிறார்களே, படித்தபெண் எல்லோரும் அசலாத்து சேஷனை

கூட்டிக்கொண்டுதான் ஓடிப்போய்விடுகிறார்கள். இவளும் அப்படித்தான் ஓடிப்போய்விட்டாளென்று அவதூறு பேசினான். இராமச்சந்திரய்யர் ஒன்றும்செய்யத் தோன்றாமல் தன் பெண்சாதியின் சமாசாரத்தை சொல்பவர்களுக்கு ஐந்நூறு ரூபாய் இனாம் தருவதாக கெஜட்டில் விளம்பரப்படுத்தினார். இப்படியிருக்க அந்த ஊரில் இராமச்சந்திரய்யர் பெண்சாதி காணாமல்போனதினத்துக்குமுதல்நாள் ஓர் பிரேதம் நதியில் மிதந்துவந்தது. கிராமமுனிசீப் பார்த்துவிட்டு அதை ஒருவருக்கும்தெரியாமல் புதைத்துவிட்டார். தெய்வசிகாமணி முதலியார் இதுதான் சமயமென்று கண்டு கிராம முனிசிப்புக்கு லஞ்சம் கொடுத்து போலீஸாரை வரவழைக்கவும் ரிபோர்ட்டெழுதவும் ஏற்பாடு செய்தார். கிராம முனிசீப்புக்கும் இராமச்சந்திரய்யருக்கும்விரோதம்; அவன் உடனே சீதாகாணாமல் போனதையும் இராமச்சந்திரய்யர்மீது சந்தேகத்தையும் ரிபோர்ட்டு செய்தனுப்பினான். இதற்குள் போலீசாரும் வந்தார்கள். தெய்வசிகாமணி முதலியாருக்கு கேட்கவும் வேண்டுமோ? போலீசாருக்கு ஆசார உபசாரம் செய்தார். கலெக்டருக்குகூட அந்த உபசாரம் நடக்காது. போலீசாருக்கும் ஜமீன்தார் தகுந்த சம்மானம் கொடுத்துவிட்டார். உடனே கிராமமுனிசீப்பு போலீசார்எல்லோரும் சேர்ந்து இரண்டு மூன்று பொய்ச்சாக்ஷிகளை தயார்செய்து அவர்கள் காண்பித்ததுபோல் முன் புதைக்கப்பட்ட பிரேதத்தை எடுத்தார்கள். இப்படியிருக்க அன்றையதினம் தற்செயலாய் திருச்சினாப்பள்ளி டாக்டர் ய்ருன்சல் வந்திருந்தார். அவர் வந்ததும் ஜமீன்தார் அவருக்கும் தகுந்த 'சப்ளை' செய்ய ஏற்பாடுசெய்தார். இராமச்சந்திரய்யர் போலீசாருடன் பேசவந்தவர் அவர்களுடன் பேசிவிட்டு டாக்டரை லட்சியம் செய்யாமல் போய்விட்டார். டாக்டருக்கு இராமச்சந்திரய்யர் மீது கோபம் வந்துவிட்டது. இதுதான் சமயமென்றுகண்டு ஜமீன்தார் அந்த டாக்டரை சர்ட்டிபிகேட்டு கொடுக்கும்படி கேட்டார். டாக்டர் அந்த கோபத்தில் அது ஒரு பெண்ணின் பிரேதமென்றும் வயது இருபது இருக்கலாமென்றும், அப்பெண் கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறாளென்றும், சர்ட்டிபிகேட்டு கொடுத்தார். போலீசார் இதையெல்லாம் வைத்துக்கொண்டு இராமச்சந்திரய்யரைப் பிடிக்கிறதென்று போனார்கள். இராமச்சந்திரய்யர் இது சங்கதி தெரிந்துகொண்டு ரகசியமாக பட்டணம் போய்விட்டார். பட்டணத்தில்போய் பாரிஸ்டர் காடன் துரையைப்பார்த்து அவரை நேரே கூட்டிக்கொண்டு கலெக்டரிடம் போய்ச் சேர்ந்தார். கலெக்டரிடம் காடன்துரை ரொப்ப ஓடியாடி இராமச்சந்திரய்யரை ஜாமீன்பேரில் விடுதலை செய்யும்படி ஏற்பாடு செய்தார். பிறகு இராமச்சந்திரய்யர் விசாரணை கலெக்டரிடம் நடந்தது. ஊரில் இருந்து கிராமமுனிசிப்பு, தெய்வசிகாமணி முதலியார் முத்துசாமிய்யர் போலீசாரெல்லோரும் சாக்ஷியாக வந்தார்கள். ஒவ்வொருவரும் தான் நேரில் கொலை நடந்ததைப் பார்த்ததாக சொன்னார்கள். ஆனால் இராமச்சந்திரய்யர் ஏன் தன் பெண்சாதியைக் கொலை செய்யவேண்டுமென்பதற்கு ஒரு காரணமும் சர்க்காரால் சொல்ல முடியவில்லை. மேலும் பேபரில் அவளைப்பற்றி தெரிவிப்பவர்களுக்கு ஐந்நூறு ரூபாய் இனாம் தருவதாக இராமச்சந்திரய்யர் ஏன் எழுதவேண்டும் என்று கலெக்டர் சந்தேகித்து இராமச்சந்திரய்யரை ஸெஷன்ஸ் விசாரணையிலும் ஜாமீன் பேரில்தான் விடவேண்டுமென்றும் ஸெஷனுக்கு கமிட் செய்யப்பட்டதென்றும் உத்தரவு செய்தார். உடனே இராமச்சந்திரய்யர் முன்னைவிட அதிகபணம்கொடுத்து ஸெஷனுக்கும் காடன்துரையேவரவேண்டுமென்றுபேசினார். இராமச்சந்திரய்யர் கொலைக்கேஸ் அந்த ஜில்லாமுழுமையும் தெரிந்துவிட்டது. தெய்வசிகாமணி முதலியார் இதில் தன் பணத்தை பணமாகப்பார்க்கவில்லை. சாக்ஷிகள் ஒவ்வொருவனுக்கும் பணம் இஷ்டம்போல்கொடுத்தார். இராமச்சந்திரய்யர் கேஸ் விசாரணையென்று கோர்ட்



டில் வெகுகூட்டம் வந்திருந்தது. ஒருவருக்கும் மூச்சுவிடக்கூட இடமில்லை; காடன்துரை வரப்போகிறார் என்றதை கேட்கவும் அநேகர் கூட்டம் கூட்டமாகக்கூடினார்கள். காடன் துரை கேஸ்கள் விசாரிப்பதில் வெகு பெயர்போனவர்; அவரை சென்னை ராஜதானி முழுவதும் கூப்பிடுவார்கள். கோர்ட்டு கூடப்போகிறதற்கு ஒருமணி முந்தியே எல்லாக் கூட்டங்களும் விட்டது. பதினொரு மணி அடிக்கவும் எல்லோரும் காடன்துரை வரவை எதிர்பார்த்திருக்க காடனுக்கு பதிலாக வேறு சிறுபிள்ளை முகத்தில் மீசைகூட இல்லாதவனாக வந்து நின்றார். ஜனங்களுக்கெல்லாம் இவ்வளவுதானா என்று ஆகிவிட்டது. இராமச்சந்திரய்யரை ஜட்ஜ் தனியாக உட்காரச்சொன்னார். புதிதாய் வந்தவர் ஓர் கடிதத்தை துரையிடம் கொடுத்தார். அதில் காடன்துரைக்கு வர சரிப்படவில்லையென்றும் ஆனால் தன்னைப்பார்க்கிலும் வந்த வக்கீல் வெகு நன்றாய் கேஸை நடத்துவாரென்றும், அவர் சிறுபிள்ளையென்று மனதிற் கவலைப்படவேண்டாமென்றும் எழுதியிருந்தார். உடனே கேஸ் ஆரம்பிக்கப்பட்டது. வாதி பக்கத்திற்காக நாராயணசாமி அய்யர் பப்ளிக் பிராசிகூடர் கேஸ் நடத்தினார். தெய்வசிகாமணி முதலியார் கேஸுக்கு முதல் சாக்ஷியாக வந்தார். அவர் கொலை நடந்த ராத்திரி பூவரசநல்லூரில் இருந்ததாகவும் கூச்சல் கேட்டுத்தான் ஓடிப்போய்ப் பார்த்ததாகவும் இராமச்சந்திரய்யர் சீதாவுடையகழுத்தை அழுத்திகொண்டிருந்ததாகவும், பிறகு வேண்டாமென்று தான் சொல்லிவிட்டுப் போய் விட்டதாகவும் சொன்னார். கிராம முனிசீப் அசட்டாளமணியய்யர் தெய்வசிகாமணி முதலியார் திரும்பிவந்தபோது தான் எதிரில் போனதாகவும் இராமச்சந்திரய்யர் ஓர் கத்தியை வைத்துக்கொண்டிருந்ததாகவும், அதால் சீதாமீது இரண்டு காயம் உண்டுபண்ணினதாகவும் கொலை அவர்தான் செய்ததென்றும் சொன்னார். டாக்டர் சர்ட்டிபிகேட்டை சரிதானென்று ருசுசெய்தார். போலீசார்கள் தாங்கள் ஊரில் விசாரித்த விபரங்களையெல்லாம் சொன்னார்கள். பஞ்சாங்கம் சேஷப்யா என்பவர் ஒருவர் வாதி பக்கத்திற்கு கடைசி சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். இவருக்கு யாரோஒருவர் வெள்ளைக்காரர் முன் போனால் தலையில் ஏதாவது முக்கியமாக கட்டிக்கொண்டு போகவேண்டுமென்றுசொல்லி வைத்தார். அவருக்கு பெருத்த தொந்தி போட்டிருந்தது. வேஷ்டியில் ஏக கிழிசல்களும் அதில் தையல்களும் போட்டிருந்தது. அதை மடித்து மடித்துக்கட்டியிருந்தார். வேஷ்டியை என்ன தூக்கிக்கட்டியும் அது தொங்கிக் கீழே வந்துவிட்டது. மேலுக்கு ஒரு பழைய கந்தைதான் கொண்டுவந்திருந்தபடியால் அந்தக்கந்தையை கோர்ட்டாருக்கு மரியாதையாக தலையில் கட்டிகொண்டுவிட்டார். மேலுக்கு துணி ஒன்றுமில்லை. கோர்ட்டிற்குள் வந்ததும் வேஷ்டியைத் தொங்கவிட்டு கட்டிக்கொள்வது மரியாதையல்லவென்று அதையும் மேலே தூக்கி சொருகிக் கொண்டார். இவர் கோர்ட்டில் நுழைந்து பெட்டியில் ஏறினதும் எல்லோரும் இவரைப் பார்த்து கொல்லென்று சிரித்தார்கள். உடனே கோர்ட்டார் அவரை வேஷ்டியைக் கீழேதொங்கவிடச் சொல்லித் தலை வேஷ்டியை மேலே போட்டுத் தொந்தியை மூடச்சொன்னார். பப்ளிக் பிராசிகூட்டர் நாராயணசாமிய்யர் கேள்வி கேட்கவும் அவருக்கு ஒன்றும் காதில் படவில்லை. பிறகு அவர் செவிடென்று தெரிந்துகொண்டு நாராயணசாமிய்யர் அவர் பக்கத்தில்போய்க்கேட்டார். அவர், தானும் கூச்சல் கேட்டுப் போனதாகவும் போய் பார்த்தபோது இராமச்சந்திரய்யர் சீதாவை அடித்துக்கொண்டிருந்ததாகவும் சொன்னார். நாராயணசாமிய்யர் எப்படி ஐயா அடித்தார் என்றார். கிழவர் உடனே அவர் தோளில்ஓர் அடி அடித்து 'இப்படித்தான் அடித்தார்' என்றார். கோர்ட்டில்எல்லோரும் சிரித்தார்கள். கோர்ட்டார் அவர் கூச்சல் போட்டதைப் பார்த்துக் கோபித்துக்கொண்டு ஓய் 'ஏன் கழு

தைபேர்ல்களைக்கிறீர்' என்ருர். சாஸ்திரிகள் ஒன்றும் சொல்லாமல், பிறகுதான் இராமச்சந்திரய்யருக்குச் சமாதானம் சொன்னதாகவும், அவர் கேட்கவில்லையென்றும் சொன்னர். இதற்குள் ஓர் கழுதை வெளியில் கத்திற்று. கோர்ட்டார் ப்யூனைக்கூப்பிட்டு அதுஎன்ன சப்தமென்ருர். சாஸ்திரிகள் அது எனக்குத் தெரியும் என்ருர். கோர்ட்டார் என்னவென்று கேட்க அது கோர்ட்டாருடைய பிரதித்வனி என்ருர். இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள், கோர்ட்டார் கோபித்துக்கொண்டு உம்மை என் தண்டிக்கக் கூடாதென்ருர். சாஸ்திரிகள் நீங்கள் என்னைக் கழுதை என்று சொல்ல வில்லையா? கோர்ட்டார் மட்டும் செய்யலாமென்று எந்த சட்டத்தில் சொல்லியிருக்கிறதுஎன்ருர். பிறகு புதுவக்கீல் எல்லா சாக்ஷிகளையும் நீங்கள் நேரில் இராமச்சந்திரய்யர் பெண்சாதியைக் கொன்றதை பார்த்தீர்களாஎன்றுகேட்டார். ஒவ்வொருவரும் நேரில் பார்த்தேன் என்ருன். மறுபடி வக்கீல் அவர்பிணத்தை புதைத்ததைப் பார்த்தீர்களா வன்று கேட்டார். அவர்கள் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தோம் என்ருர்கள். வக்கீல் மறுபடி இப்போது டாக்டர் சர்டிபிகேட் கொடுத்த பிணமும் நீங்கள் சோதனைபோட்டு எடுத்த பிணமும் சீதாவின் பிணமா என்று கேட்டார். சாக்ஷிகள் சீதாவுடையது தான் என்ருர்கள். நீங்கள் உங்கள்ஊரில் அதற்கு இரண்டு நாளைக்குமுன் ஒருஅநாதைப்ரேதத்தைப்புதைத்ததுண்டா என்று கேட்டார். சாக்ஷிகள் இல்லையென்ருர்கள். வக்கீல் பிறகு எல்லோரும் இப்போது நான் கேட்டதற்கு சொன்ன பதில் சத்தியமாக நிசமென்று சொல்வீர்களா என்ருர். சாக்ஷிகள் சொல்வோம் என்ருர்கள். உடனே வக்கீல் தான் டிபன்ஸ் ஆரம்பிக்க வேண்டியது தான் என்ருர். துரை உம் டிபன்ஸ் என்னவென்று கேட்டார். வக்கீல் என் டிபன்ஸ் நான் தான் என்ருர். துரை அர்த்தமாகாமல் அது என்னவென்று கேட்க, உடனே வக்கீல் தன் நிஜார் உடுப்பு காப் எல்லாவற்றையும் கழற்றி ஓர் பெண்ணாக நின்ருர். இராமச்சந்திரய்யர் கோர்ட் என்றுகூடப்பாராமல் "ஆ சீதா!" என்று சந்தோஷத்திளுல்கத்திஞர். கோர்ட்டில் எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள். துரை உடனே வாதி சாக்ஷிகளை யெல்லாம் கூட்டில் ஏற்றி இராமச்சந்திரய்யர் பெண்சாதி சீதா இவள்தானு என்று கேட்டார். எல்லோரும் இவள் தான் என்ருர்கள். துரை சீதாவின் சாமர்த்தியத்தைக் கண்டு வெகு ஆச்சரியப்பட்டு உடனே இராமச்சந்திரய்யரை விடுதலை செய்தார். மேலும் இராமச்சந்திரய்யரை அக்கிரமமாகக் கோர்ட்டிற்கு இழுத்ததற்காக கவர்ன்மெண்டார் 1000-ரூபாய் இராமச்சந்திரய்யருக்கு நஷ்டம் கொடுக்கவேண்டுமென்றும், போலீசார் இதில் கிராமமுன்சீப் இடம் சேர்ந்து வேண்டுமென்றே பொய்க்கேஸ் உற்பத்தி செய்திருப்பதால் அவர்களை யெல்லாம் அந்தந்த டிபார்டுமெண்டுக்காரர் உடனே வேலையை விட்டு நீக்கிவிட வேண்டுமென்றும் வாதிபக்ஷம் பொய்ச்சாக்ஷி சொன்னவர்களெல்லாம் பொய்ச்சாக்ஷியம் சொன்னதற்காக விசாரணை செய்யப்பட சாங்ஷன் கொடுத்திருப்பதாகவும், கூடியசீக்கிரத்தில் அவர்களை யெல்லாம் விசாரிக்கப்படுமென்றும் உத்தரவு சொன்னர்.

எஸ். இராமஸ்வாமி அய்யர் பி. ஏ.

## கமலாம்பாள் சரித்திரம்.

ஒவ்வொருவரும் வைத்து வாசிக்க வேண்டிய தத்துவார்த்தமான ரசம் பொழியும் கதை. கமலாம்பாள் சரித்திரம் 3-வது பதிப்பு: 328 பக்கம் தயாராய்விட்டது. விலை ரூபா 1-4-0 தபாற் செலவு வேறு.

100-க்குக் குறையாமல் வாங்குகிற வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் மைலாப்பூர் லலிதாலயத்திலிருக்கும் அ. ப. ஏஜென்ஸி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளவும்.

11 MAR 1911 MADRAS.

"Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it." But,
"Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.
"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

161180



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: Aum

ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATI.

புத்தகம். 18.] 1911ஞு பிப்ரவரிமீ, சாதாரணஞு மாசிமீ [சஞ்சிகை. 11.

# DARKNESS AND DAWN.

## A Parable.

18. "From the undefined all things defined take shape at Dawn of Cosmic Day,
But come Nightfall, they melt back all to that same 'Chaos' undefined."

19. "This self-same swarm of creature shapes from state to state evolved, melts back,
O Pártha, Helpless, when Night falls, and takes new shape at Dawn of Day."

20. "But' neath this 'chaos' there abides a State yet deeper, 'Undefined' †
Etérnal, which, at fated time of cosmic Doom, is not dissolved"

21. The, 'Indissoluble Undefined' Its Name—It is called the Final Goal,
Which reached, they come not 'back' again. That is my Home beyond this All."

—Bhagavad Gita VIII Verses 18—21

† In the sense of "Not perceivable by the senses and the mind"



Rm211, MSD
M.S2/10-18

# அர்ச்சராதி தூமாதி மார்க்கங்கள்.

## உத்தராயண தக்ஷிணாயன விசேஷார்த்தம்.

இரவு கழிந்தது. பொழுது புலர்ந்தது. மனுஷனுக்கு ஒருவருஷம், தேவதைகளுக்கு ஒருநாள். அந்த தேவநாள், மனுஷனுக்கு இராப்பகல் என்றுள்ளதுபோல், தக்ஷிணாயனம், உத்தராயணம் என்று இருபகுதியாய் விளங்கும். உத்தராயணம் அர்ச்சராதி மார்க்கம் என்று சொல்லப்படும். தக்ஷிணாயனம் தூமாதி மார்க்கம் என்று சொல்லப்படும். சூரியன் ஆடிமாசம் வியாஸபௌரணமியன்று சந்திரனுடைய வீடாகிய கடகராசியில் (அவனுக்கு ஸ்தானத்தில்) இருக்கச், சந்திரன் மகரராசியில் இருக்கிறான். இதுதான் தேவதைகளுக்கு ஸந்தியாகாலம். பிறகு சூரியன் மகாசங்கிராந்தியின்பொழுது மகரராசிக்குள் புகவும், இரவுகழிந்து பொழுதுபுலர்ந்து தேவதைகளுக்கு விடியற்காலம் ஆகிறது. சூரியன் மகரராசியில் சேரவும் சந்திரன் கடகராசியில் அவனுக்கு எதிரே ஒளிவிட்டுப் பிரகாசித்துநிற்க மறுபடியும் சிருஷ்டிகாரியம் துவங்குகிறது. தைப்பூசத்தின் விசேஷம் இதுவே.

மனிதன் பகலில் உழைத்து இரவில் இளைப்பாறுவதுபோல, தேவசிருஷ்டியும் உத்தராயணத்தில் உற்சவகோலமாய் நடந்து தக்ஷிணாயனத்தில்ஒடுங்கும். பிரபஞ்சம் தோன்றுவதும் ஒடுங்குவதுமா யிருப்பதாலும், அதற்குக்காரணம் சிருஷ்டிஸ்திதி லயமாகையாலும், இத்தொழில் நடப்பதையறிந்து அதன் வழிபட்டுய்வதே ஜன்மசாபல்ய மாதலாலும், இந்த வேதபூமியில் எல்லா க்ஷேத்திரங்களிலும் இந்தத் தோற்றவொடுக்கத்தையே லிங்காகாரமாகப் பிரதிஷ்டை செய்து, ஸ்திதிதர்மத்தைச் சக்திரூபமாகவும் விஷ்ணுரூபமாகவும் ஆவாஹனம்பண்ணி ஆலயங்களில் உற்சவம் நடத்திவருகிறார்கள். பெரியோர்கள் எவ்வளவோ பரிசிரமப்பட்டுச்செய்த மந்திர தந்திர உபாயங்கள், இப்பொழுது பரிபாலிக்கத்தக்க புண்யசீலர்களில்லாமல், அதன் பூர்வநோக்கம் இழந்து மங்கிப்போய்க் கொண்டு வருகிறது.

மார்கழிமாதம் திருவாதிரையன்று ஆத்மஸ்வரூபியான பகவான் பிறப்புக்குள்ளாகித் தோற்றுகிறார். அதாவது சிஷ்டானுக்கிரகார்த்தம் சிருஷ்டித்தொழிலில் பிரவேசிக்கச் சங்கல்பிக்கிறார். இந்த சங்கல்பஸ்தானம் ஸ்வாதிஷ்டானமாகையால், ஆத்மஸ்வரூபியான சூரியன் தனுஸ்ராசியிலிருந்து, சந்திரனுக்கு எதிரே நின்று தரிசனமளிக்கும்பொழுது ஆருத்ரா தரிசனம், அல்லது கிறிஸ்து பிறந்தநாள் வருகிறது. துவந்துவ உபாதியினால் இருளடைந்துகிடந்தமனஸ் சூரியனுடைய திவ்யதரிசனம்பெற்றதும் சூரியன் மூலப்பிரகிருதியில் பிரவேசித்து பூமியைச் செழிக்கச்செய்கிறான். இதுதான் உத்தராயண புண்யகாலம். இந்தப்புண்யகாலத்தில் தைப்பூசத்தன்று திருமைலாப்பூரில் ஸ்வாமி தெப்பஉற்சவம் கொண்டாடுவது வழக்கம். பிரளயகாலத்தில் ஒடுங்கின ஜீவகோடிகளெல்லாம், ஆபதுத்தாரண மூர்த்தியான பகவானுடைய பாதஸ்பரிசத்தினால் பின்னுமுயிர்பெற்று கர்மவசத்தால் இயங்கத் தலைப்படுகின்றன. மனிதனுக்கு இராப்பகல் எப்படியோ, அப்படியே தேவதைகளுக்கு உத்தராயண தக்ஷிணாயன காலங்கள் என்று சொன்னோம். பிரம்மகல்பத்துக்கும் இதுசரியே. பகவத்கீதை 8-வது அத்தியாயம் 18-வது சுலோகத்தில் பகவான் சொல்கிறார்:—



“பிரமாவின் பகற்காலத் தொடக்கத்தில் அவ்வியக்தமான பிரகிருதியிலிருந்து வியக்தமான தாவரசங்கமாத்மக ஸர்வபூத பிரபஞ்சங்கள் பிறந்தன. அந்தப் பிரமனது இராக்காலத் தொடக்கத்தில் இப்பிரபஞ்சங்கள் அவ்வியக்தமான பிரகிருதியில் மீண்டும் லயமடைகின்றன.

பிறப்பும் இறப்பும், பகலிரவன்னத் தானே சுழன்று வருகிறது. இதைத்தான் காலசக்ரமென்று சொல்கிறது. காலநேமி யென்பதும் இதுவே. இந்தக் காலசக்கரத்தை யாராலும் தடுக்கமுடியாது. பகவானுடைய திருக்கையிலேந்திய ஆயுதமானாலும் அது தானகச்சுழன்றுவருகிறது. பகவான் அடுத்த சுலோகத்தில் சொல்கிறார்:—

“ஓபார்த்தா! எந்தப்பிராணசமூகம் தற்பூர்வகற்பத்திற் பிறந்தனவோ, அந்தப்பிராண சமூகமே சுவாதீனமில்லாததாய் பகல்தோறும்பிறந்து இராத்தோறும் ஒடுங்குகின்றன.”

இப்படியே தர்மாதர்ம விருத்திக்ஷயங்களும் மனுஷனுடைய புண்யாபுண்ய பலன்களுக்குத் தக்கபடி “பகல்தோறும் பிறந்து இராத்தோறும் ஒடுங்குகின்றன.” தர்மசிந்தையே பகல், அதர்மசிந்தையே இரவு. ஆகவே தர்மசிந்தையுதிக்குந்தோறும் விருத்தியும், அதர்ம சிந்தையுதிக்குந்தோறும் க்ஷயமும் “சுவாதீனமில்லாததாய்” தோன்றி பொடுங்கிவரும். இதுதான் ஸநாதனமான தர்மம். இதை யுண்மையறிந்தோர் சாக்ஷிமாத்ரமா யிருந்துணர்ந்து அதற்கு அநுகுணமா யுழைத்து வருவார்கள். உண்மையறியாதோர் தர்மசக்கரத்தை யெதிர்த்து நின்று சின்னாபின்னமாகச் சேதப்பட்டுப்போவார்கள். இந்த உண்மையைச் சாமான்யர் அறியார். சகஜஞானிகள் மட்டுமேயறிந்து பிரகிருதிதர்மத்துக் கநுகுணமா யிருந்துழைப்பார்கள். அவர்கள் எங்கிருந்துழைப்பார்கள்? அவர்களுக்குப் புகலிடம் ஒன்று வேண்டுமேயென்னில், அவர்களுக்குப் புகலிடமாயிருக்குமொன்றை பகவான் அடுத்த 20-வது சுலோகத்திற் சொல்கிறார், கேண்மின்:—

“மேற்கூறிய பூதமய பிரபஞ்சத்திற்குக் காரணரூபனான ஈசுவரனைக்காட்டிலும், வேறே உத்கிருஷ்டமாய் அகோசரமாய் சாஸ்வதமாயுள்ள பரப்பிரம்மமொன்றுண்டு. அந்த பரப்பிரம்மம் பிரபஞ்சமுழுதும் நசிக்கையில் நசியாதிருக்கும்.”

அது விருத்திக்ஷயகாலத்தில் லிங்காகாரமாகவிருந்து (Law of Evolution and Involution) விளங்கி, நாசகாலத்தில் அழிவற்ற பரப்பிரம்மமாக எங்கும் நிறைந்து ஏகமாய் இருக்கும்.

அந்த ஸ்தானமே மோக்ஷஸ்தானம். அங்கேயிருப்பவர்கள் விருத்திக்ஷய தோற்றவொடுக்கங்களால் பாதிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் உபாதியில் ஒட்டியும் ஒட்டாது நிற்கும் மஹிமை பெற்றவர்களாகையினால், உபாதியின் உற்பத்திநாசத்தால், அவர்கள் மயங்குகிறதில்லை.

“எந்தப் பரப்பிரம்மமானது இந்திரியங்களுக்கு நாசரகிதமாயிருக்குமென்று சொல்லப்பட்டதோ, அதுவே பரமோத்கிருஷ்டமான மோக்ஷஸ்தானமாகச் சொல்லப்படும். அந்தஸ்தானத்தை யடைந்தவர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை. அதுவே எனது ஸ்தானமான பரமபதம் என்றறிக” வென்று பகவான் உபதேசித்திருக்கிறாராகையால், அந்தப் பரமபதத்திலிருந்து வாழ்பவர்களே ஜகத்ரக்ஷகர்கள் (Saviours of the World) ஆவார்கள். உலகுக்குழைப்பவர்கள், அந்த மஹாபுருஷனைச் சரணடைந்து அவனது திருவடிச் சேவகர்களாய் உலகுய்ய உழைக்கவேண்டும். இப்படிப்பட்ட அடியார்கள் தாமே, உலகத்தாருக்குபகாரஞ் செய்யத்தக்கவர்கள். மற்றவர்களெல்லாம் வழிகாட்டிகளாக வருவது,—“குருடும் குருடும் குருட்டாட்டமா

டிக் குழிவிழுந்தற்றே" யென்று எம்பெருமான் திருமூலதேவர் உபதேசித்திருக்கிறார். பகவானும்,—

"ஓ பார்த்தா! எந்த மஹாபுருஷனிடத்தில் இந்த ஜகமுழுவதும் லயமடைகின்றதோ; எந்த மஹாபுருஷனால் இந்த ஜகமுழுவதும் வியாபிக்கப்பட்டதோ, அத்தகைய பரமபுருஷனை வேறு விருப்பில்லாத நிச்சல பக்தியோகத்தால் அடையவேண்டும்."—என்கிறார்.

இதுவே உலகுய்ய உழைக்கும்வழி. இதுவே இராப்பகல் தர்மத்தின் உண்மை. இதுவே காலசக்ரத்தின் கிரமக்கிரமகர்மம். இதுவே உத்தராயண தக்ஷிணாயன கால விசேஷத்தின் லக்ஷியார்த்த உண்மை. இதையறிந்தவர்களுக்கு எல்லாம் திரைவிரித்தாற்போல், திரிகாலமும் தன் இரகஸியத்தை விரித்துக்காட்டும். இவர்களே திரிகாலஞானிகள். இவர்களே தீர்க்கதரிசிகள். இவர்கள் இக்காலத்தில் நடக்கும் விஷயங்களை ஐயந்திரிபற வுணர்ந்து காலசக்ரம் சுழலுவதறிந்து அதற்கனுகுணமாயிருந்துழைப்பார்கள். விபரீதவார்த்தைகள் பேசார்கள். விபரீதஞானம் பற்றார்கள். அபேதபாவனையிலிருந்து பேதபாவனைகளெல்லாம் 'போம் வழி வரும்வழி மயாவழி"யறிந்து, சாக்ஷிமாத்திரமாயிருந்து நிஷ்பக்ஷவாதராய் நிர்மலசித்தராயிருந்து தர்மம் தலையெடுக்க வுழைப்பார்கள். அதர்மம் நாசகாரணமாகையால், அதர்மத்தை யடக்கார்கள். ஏனெனில் அது தானே யழியுந் தன்மையுள்ளது. அதைத் தடுப்பதினாலேயே அதற்கு உறமுண்டாகிறது. அதைத் தடுக்காது விட்டால் அது தானே யழிந்துபோம். அதர்மம் அழிந்தவிடத்து தர்மம் தனக்குத் தானே தலையெடுக்கும். இதன் மர்மமறியாது மாயாவலையிற் சிக்கிய மாந்தர்கள், பற்பலவாச் சிந்தித்து பாரைமிக்க காப்பாதாகப் பாசாங்கு செய்து பரமோத்க்ருஷ்டமான தர்மத்தை யிழந்து பாழ்வழியில் உழைப்பார்கள். உத்தராயண தக்ஷிணாயனங்களைப் பகலிரவாகப் பாவிக்கும் சிந்தனையால் மனிதன் உள்ளம் பெருங் கவன்சிந்தை விட்டு திவ்யமான தேஜோமனமோடு ஒன்றும் யோகசம்பத்தை யடைகிறான். இந்தத் தேஜோமனம் தானே "ஸ்ருஷ்டி ஸ்திதிவ்யஸனகர்மக்ருத்" என்ற சுருதி வாக்கியப்படி, முத்தொழிலையும் சங்கல்ப மாத்திரத்தாலே யியற்றும் சக்தி வாய்ந்ததாகும். "தன்மனோ விலயம்யாதி தத்விஷ்ணோ பரமம் பதம்" என்ற சுருதி வாக்கியப்படி இந்த மனம் லயித்த இடந்தானே பரமபதம் ஆகும். அண்ட பிண்ட சமத்துவ ஞானத்தாலே அகம் புறமிரண்டும் ஒன்றாய் விளங்கும் ஸமரஸ ஞானம் பெற்றோர். "இராப்பகலில்லா விடத்தே, குரவஞ் செய்கின்ற குழலியையுன்னி" தர்மா தர்ம மிரண்டையும் விட்டுத் தானேதானாய் தன்மயமாய் எங்கும் நிறைந்து ஏகபரிபூரணமாய் விளங்கிக்கொண்டு, உலகுய்ய வழிகாட்டி நிற்பார்கள். இந்தப் பரமோத்தமர்களது கருணாகடாக்ஷத்தினாலேயே, இத்தேசத்திலுள்ள கோயில்களெல்லாம், லிங்காங்க சங்கமமாகிய தத்துவமஸி மஹாவாக்கிய உண்மையை, பாமரர் தம் பக்குவத்துக் கேற்றபடி காமியார்த்தமாய் உணர்த்துப்பக் கட்டப்பட்டு உற்சவாதிகளால் காலதத்துவத்தை விளக்க நடத்தப்பட்டு வருகின்றன. இதை யுணர்த்த வேண்டியே, இந்த உத்தராயண புண்ய காலத்தின் தத்துவார்த்த உண்மையை யெடுத்துக்கூறினோம். ஓம் தத்ஸத்.

---

## கமலாம்பாள் சரித்திரம்.

ஒவ்வொருவரும் வைத்து வாசிக்க வேண்டிய தத்துவார்த்தமான ரசம் பொழியும் கதை. கமலாம்பாள் சரித்திரம் 3-வது பதிப்பு: 323 பக்கம் தயாராய்விட்டது. விலை ரூபா 1-4-0 தபாற் செலவு வேறு.

100-க்குக் குறையாமல் வாங்குகிற வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் மைலாப்பூர் லலிதாலயத்திலிருக்கும் அ. ப. ஏஜென்ஸி காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளவும்.



# STRAY LESSONS IN CIVICS.

## Our New Viceroy on 'Civic Responsibilities.'

"It will be my constant endeavour to keep a jealous watch over them (the Reforms) and to see that the object for which they were instituted is attained."—Viceroy's Repy to the Congress Deputation.

"Gentlemen, I am glad that the remarks I have made on one or two previous occasions, have given you satisfaction, for they are the sincere expression of the sentiments with which I have undertaken the responsible office I hold. It is my desire to secure the Co-operation of thoughtful men of the various communities of this great country, and, while your condenmation of lawlessness and violence justifies me in the confidence that I shall have your support in putting down any recrudence of disorder that may occur, it is a source of satisfaction to me to feel that I shall equally have your support in my endeavours to conciliate all races, classes and creeds. I trust that my attitude towards your aspirations and ideals may continue to commend itself to you and that the blessings of contentment and prosperity may be diffused throughout the land."—*The Viceroy in reply to the Calcutta Indian Association.*

## துரைத்தனப் பொறுப்புகளைப்பற்றி நமது இராஜப் பிரதிநிதியவர்கள் போதனை.

நமது புதிய இராஜப்பிரதிநிதி கனம்பொருந்திய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள், இதற்குமுன் இந்தியா கவர்னர்-ஜெனரலாயிருந்த லார்ட் ஹார்டிஞ்சு அவர்களின் பேரப்பிள்ளை. இவர் உத்தியோகப்பொறுப்புள்ள சிந்தை யுடையவர் என்று நன்றாய்க் காட்டியிருக்கிறார். காங்ரெஸ் ப்ரெஸிடெண்ட் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அவர்களும் இன்னும் சில காங்ரெஸ் பிரதிநிதிகளும் இவரை நேரிற்கண்டு முகமன் கூறிய பொழுது, இவர்கூறிய மறுமொழியில், இந்தியாவில் ஜனப்பிரதிநிதிகளுக்கு துரைத்தன காரியங்களில் ஒருவித பொறுப்பும் அதிகாரமும் உண்டாகும்படி சட்ட நிரூபண சபைகளில் ஜனப்பிரதிநிதிகளை நியமிக்கவும், கவர்ன்மெண்டு மந்திராலோசனை சபைகளில், ஒரு இந்தியரைப் பொறுப்புள்ள மந்திரியாக நியமிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்களென்றும்; இந்தச் சீர்திருத்தங்கள் ஜனங்களுக்கு துரைத்தன காரியங்களில் பொறுப்புண்டாக வேண்டுமென்றும், துரைத்தனப் பொறுப்புக்குத் தக்கபடி அவர்களுக்கு துரைத்தன காரியங்களில் அதிகாரமுமிருக்க வேண்டுமென்றும் உத்தேசித்துச் செய்யப் பட்டிருக்கிறபடியால், அச்சீர்திருத்தங்களை அவர் மிகவும் உஷாராகவிருந்து பார்த்து வந்து, அவைகளின் நோக்கம் சிதைவுறாதபடி பார்த்து வருவது தன்னுடைய கடமையாகக் கொண்டு, அவர் உத்தியோகப் பொறுப்பை வகித்திருப்பதாகச் சொன்னார்.

இங்கே யொரு விஷயம் நாம் முக்கியமாய் வற்புறுத்திக் கூறவேண்டியதாயிருக்கிறது. இராஜப் பிரதிநிதியவர்கள் துரைத்தன சீர்திருத்தங்களின் நோக்கம் வீண்போகாதபடி அதிக விழிப்பாயிருந்து பார்த்துவரத் தீர்மானித்திருப்பதுபோல், ஜனங்களும், தங்களுடைய பொறுப்பை யுணர்ந்து, அரசியல் முறை தவறாது இராஜ்ய தர்மத்தைக் கடைப்பிடியாகப் பிடித்து நின்று, அரசு, குடி யிரண்டுக்கும் இடையே இருந்து துரைத்தன காரியங்களை நடத்தும் சிப்பந்திகளாக அமைந்துள்ள உத்தியோகஸ்

தர்கள் தங்களுடைய கடமையை மீறி நடவாமல் அதிக உஷாராகப் பார்த்து வரவேண்டும். இல்லாவிட்டால், இராஜப் பிரதிநிதியவர்களின் விழிப்பெல்லாம் வியர்த்தமாகவே முடியும். ஏனெனில், "தூங்கினவன் கன்று கடாக்கன்று" என்கிற பழமொழி உலகியல் பற்றிவந்தது. காலம் கலிகாலமாயிருப்பதால், கால தர்மத்தை யுத்தேசித்து, எல்லாரும் தர்ம சிந்தையோடுழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை மனதிலிருத்திக் கொண்டு, "அப்படி யுழைக்கிறார்களா?" என்பதை ஊகமாய்ப் பார்த்துக்கொண்டு வரவேண்டும். உத்யோகஸ்தர்கள் செய்யும் சில்லரை அக்கிரமங்கள் பெரும்பாலும், ஜனங்கள் மௌட்டியத்தால் உண்டாகிறது. ஜனங்கள் தங்களுடைய ஸ்வதந்திரத்தை யுள்ளபடி யறிந்திருப்பார்களானால், உத்யோகஸ்தர்கள் அக்கிரமஞ் செய்யும் பொழுது அவர்கள் அக்கிரமச் செய்கைகளைக் கண்டுபிடித்து வெளியிடலாம். இதற்கு ஜனங்களிடத்தில் ஒற்றுமையும், ஜனப்பிரமுகர்களா யிருப்பவர்களிடத்தில் பொறுமையும் பொதுநன்மைக்காகக் கஷ்டப்பட்டுழைக்கும் தன்மையு மிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் ஜனங்களிடத்தில் குற்றம் சொல்ல வேண்டிய பாகம் நிரம்பவிருக்கிறது. ஆனால் அவர்கள் அறியாமை காரணமாகத் தவறிப்போகிறபடியால், அறிந்தவர்கள் அவர்களுக்குப் புத்தி சொல்லி ஒத்தாசை செய்யவேண்டும். இது ஜனப்பிரதிநிதிகளின் கடமையாம். சபைமெச்ச சட்டநிருபணசபையில் பேசினால் மட்டும் போதாது. "நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை" யென்னும் பூர்வதர்ம வசனத்தை நம்பி ஊரார் படுங்கஷ்டங்களை யெல்லாம் தன்னதாகப் பாவித்துப் பணம் சம்பாதிக்க எவ்வளவு ஊக்கத்தோடு பாடுபடுகிறார்களோ, அவ்வளவு ஊக்கத்தோடு பொது விஷயத்துக்கும் பாடுபட்டுழைக்க வேண்டும். இதுதான் "துரைத்தனப் பொறுப்பு" என்று சொல்வது. இது அரசன் முதல் ஏழைக்குடிவரையில் எல்லாரையும் பொறுத்தது. ஒவ்வொருவரும் இப்பொறுப்பைத் தன்னதாக வகித்து வேலை செய்யவேண்டும். உலகப்பற்றுகளை யெல்லாம் விட்ட ஞானிகளையும் இந்தப் பொறுப்பு விடாது. ஏனெனில் அரசியல் கோணினால், இல்லறம், துறவறம் இரண்டும் கெட்டு "அறன் வலி" குன்றிப்போம். இதை நமது இராஜப் பிரதிநிதிபவர்கள் நன்றாக வுணர்ந்திருக்கிறதாகக் காட்டினார்.

மற்றொரு சமயத்தில் கல்கத்தா இந்தியன் அஸ்ஸோஸியேஷன் சங்கத்தார் இராஜப் பிரதிநிதிக்கு முகமன் கூறிய பொழுது, அவர்களுக்கு மறுமொழி கூறியதில் லார்ட்ஹார்டிஞ்ச் அவர்கள் சொல்லிய வசனங்களும் அவரது உள்ளக் கருத்துகளும் நாம் ஊகித்துச் சொன்னதற்கு உறுதியாக விளங்குகிறது. அவர் சொன்னதை யெல்லாரும் நன்றாக வுணரும் பொருட்டு, மூலத்தில் தானே இங்கிலீஷில் அச்சிட்டிருக்கிறோம். அதன் கருத்தும் மொழி பெயர்ப்பும் இது:—

"நான் முந்தி யிரண்டொரு முறைகளில் சொல்லிய வாக்கியங்கள் உங்களுக்குத் திருப்தியைத் தந்தனவென்று கேட்கச் சந்தோஷப்படுகிறேன். ஏனெனில், நான் சொன்னவை யெல்லாம், நான் உண்மையாக உத்தியோகப் பொறுப்பை வகித்த உள்ளக் கருத்துகளாயிருக்கின்றன. இந்த மஹாதேசத்திலுள்ள பல ஜனசமூகத்தார்களிலுமிருக்கிற "முனி புங்வர்களுக் கொப்பான" யோஜனை மிகுந்த தீரர்கள் (Thoughtful men) உதவி யொத்தாசையையும் கூட்டுறவையும் துரைத்தன காரியங்களில் நாடித் தேடியடைய விருப்புள்ளவனாயிருக்கிறேன். சட்ட விரோதமாகவும் சமாதானத்துக்கு விருத்தமாகவும் நடந்து கொள்வது பிசகென்று நீங்கள் கண்டித்துச் சொல்வதிலிருந்து குழப்பத்துக்குக் காரணமான



OFFICE OF ... REGISTERED 11 MAR 1911 MADRAS.

அக்கிரமங்கள் பின்னும் தலைகாட்டில், அவற்றை யடக்குவதற்கு நீங்கள் ஒத்தாசை செய்வீர்களென்று பூர்த்தியாக நம்புகிறேன். அஃதேயன்றி, இத்தேசத்திலுள்ள பலவேறு ஜாதி, மதஸ்தர்கள், வகுப்பார்களிடத்தும் நயப்பட நடந்துகொண்டு அவர்களை யெல்லாம் விநய பூர்வகமாய்துரைத்தனத்தாரோடொத்துழைக்கச் செய்யும் முயற்சிகளிலும் நீங்கள் எனக்குத் துணையிருந்து அனுகுணமாக வுழைப்பீர்களென்று நம்பியிருக்கிறேன். உங்களுடைய உயரெண்ணங்கள் உத்தம லக்ஷியங்கள் சம்பந்தமாய் நான் கொண்டுள்ள இந்த மனோபாவமானது தங்களுக்கு எப்போதும் திருப்தியைக் கொடுத்து வருமென்றும், அதனால் தேசத்தில் ஜனங்களுக்குள் க்ஷேம விருத்தியும் மனத் திருப்தியும் பாவிவருமென்றும் நம்பி யிருக்கிறேன்."

இராஜப்பிரதிநிதி யவர்களுடைய இத்தகைய உத்தம சங்கல்பங்கள் வீண் போகாதபடி பலனைத் தரவேண்டுமாயின், அவருடைய எண்ணம்போல் எல்லா உத்தியோகஸ்தர்களுடைய எண்ணமும் இருக்கும்படி அவர்கள் நடத்தையில் காட்டிவர வேண்டுமென்று எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் தக்கபடி தாக்கீது செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இராஜப் பிரதிநிதியவர்களுடைய எண்ணங்கள் பலித்துப் பயனைத்தராது, எத்தனையோ நல்லெண்ணங்கள் மின்மினிபோல் இராஜாதிகாரிகள் மனதில் தோன்றி மறைந்து பயனற்றுக் கழிந்தமைபோல், இதுவும் கழியும். எண்ணங்கள் சங்கல்ப ரூபமாய் வெளியிடப் பட்டால் அவையெப்படியும் பலித்துப் பலனைத்தருமென்பதற்குச் சந்தேகமில்லை. இது மனோதர்மமும் ஆத்ம தர்மமுமாம். சங்கல்ப லக்ஷண மென்னவெனில், நினைப்புக்கெல்லாம் மூலஸ்தானமாயுள்ள சங்கல்ப க்ஷேத்திரத்தில் உதித்த எண்ணம், வாக்காய்ப் பிறக்கும் பொழுது, பரை, பச்யந்தி, மத்யமை யென்கிற மூன்றும் ஒன்று படப் பொருந்தி அவைக்கேற்க வாயில்பிறக்கும் வைகரிவாக்கும் ஒத்திருக்கவேண்டும். இதற்குத்தான் திரிகரண சுத்தமான சங்கல்பமென்று பேர். மனோவாக்குக் காயம் மூன்றும் சுத்தமாயிருந்து சங்கல்பித்தால், அந்த சங்கல்பம் எப்படியும் பலித்துப் பயனைத்தரும். ரிஷிகளுடைய வாக்குப் பலிப்பதற்குக் காரணமும், அவர்களுடைய செல்வாக்குக்குக் காரணமும் இதுவே. "இருஷி கர்ப்பம் இராத்தங்காது" என்று சகஜமாய்ச் சொல்லும் பழமொழியின் தத்துவார்த்தமும் இதுவே. இருஷிகள் எப்போதும் திரிகரணசுத்தியோ டிருப்பார்களாதலால், (அவர்களுக்கே பார்ப்பான், பார்வை, பார்ப்பன மூன்றும் ஒன்றாகப் பொருந்தி சங்கல்பாத்மக தரிசனம் சித்திக்கும்), அவர்கள் "கர்ப்பம்" அதாவது ஸத்திய பூர்வகமாயுள்ள அவர்கள் நிர்விகற்ப மனதி லிருந்தெழும் கருத்து அல்லது எண்ணம் இருளடைந்து மருளுக்குக் காரணமான, (அறியாமை காரணமாக வுண்டாகும் மயக்கம் குழப்பம் நிறைந்த) "இராத்தங்காது"—இருட்டறையில் தங்காது. அப்படியென்றால், பரவெளியில்தோன்றி உடனே பலனைத்தரும் சித்தர் வாக்காக விளங்கும்என்று அருத்தம். இப்படிப் பட்ட வாக்குசித்தி பெற்றவர்கள் வாக்கே, வாக்தேவியின் மஹத்துவத்தை விளக்குவதாயிருக்கிறது.

இந்த வாக்சித்திபெறக் காசுபணம்வேண்டியதில்லை. ஆனால் தானமும் தபஸும் வேண்டும். "தன்னைக் கொடுக்கும் தியாகமே தானம்." இதற்கு அதிஷ்டான தேவதை தியாகராஜர். "தானடங்கத் தன் சிருஷ்டியடங்க, மனமடங்க மாயைநீங்க, ஸர்வஸம்ஹார க்ஷேத்திரத்தில் ஆனந்தத்தாண்டவம் செய்பவரும், "அசைவற்று ஆட வல்லபவருமான" நடராஜ மூர்த்தியே தபஸுக்கு அதிஷ்டான தேவதை. "தியாகம்," "நடம்" இவ்விரண்டும் தானம், தபஸ் இவற்றின் தத்துவாதீத ஸ்வரூபங்களாம். இந் தத்தத்துவாதீதமானபொருளையே தியாகராஜர்

என்றும், நடராஜர் என்றும், அரங்கநாதர் என்றும் சொல்லி, லக்ஷிய லக்ஷணங்கள் பொருந்தக் கோயில்கட்டிப் பிரதிஷ்டைசெய்து நாம் கும்பிடுந் தெய்வங்களாம். இவைகளை இத்தேசத்தார் உண்மையாய்க் கொண்டாடும் உத்தம லக்ஷியங்களாம். இவற்றை யறியக்கூடியவர் யாவரே யாயினும் அவர் உண்மையில் இராஜாதிராஜனும் தேவாதிதேவனுமான நரஸிம்ம மூர்த்தியின் பிரதிநிதியேயாம். சிங்கத்தின் நீரம் விளங்கும் சங்கல்ப சக்தியும், கருணாஸலாகரமான பானுஷீகத் தன்மையும் நிறைந்தவர் எவராயினும் அவரை "இந்திரா தேவி' கரங்குவித்துக் கும்பிட்டு புநிதக்ஷேத்திரமான தன்னையாளும் க்ஷேத்ரஜ்ஞ மூர்த்தியாகக் கொண்டாடுவாள்.

இந்த வருஷம் நடராஜர தரிசனம் மார்கழி மாச முதலில் வந்த திருவாதிரை நாளிலும், அரங்கநாதர் தரிசனம், மார்கழி மாசம் கடைசியில் வந்த வைகுண்ட ஏகாதசி திதியிலும், பாரிலுள்ள பக்தர்களுக்கெல்லாம் கிடைக்கலாயிற்று. தியாகராஜருடைய ஊர்த்துவ தாண்டவ மஹா தரிசனம் இனிவரும் பங்குனி மாசத்து உத்தர நாளில் கிடைக்கும். அது திருவாரூர் க்ஷேத்திரத்தில் விசேஷமாம். மனுஷனுடைய ஆத்மா வேறு, மனம் வேறு, தேஹம் வேறு என்று இல்லாமல், மூன்றும் ஏகமேவாத்வி தீயமாயிருக்கும் ஒரே பரம்பொருளின் பரிணாம சேஷ பரிச்சேதமா யிருப்பதால், காரியத்தில் பங்குபோட்டுப்பேச இடமுண்டானாலும், உண்மையில் (உத்தமலக்ஷியத்தில்) மனம் பொருந்தியவர்களுக்கு) அவ்வித பேதத்துக்கு இடமில்லை.

ஓம்தத்ஸத்.

ஓம் ஸ்ரீ சாவித்திரியைநமः

# Sivayoga-Deepika.

## Chapter V.

### Part II. The Six States of Conseiousness.

### சிவயோகதீபிகையில் அமனஸ்க விதானமென்கிற ஐந்தாவது படலம்.

### 2. ஆறு அவஸ்தைகள்.

—— :-:——

29 சகல இந்திரியங்களும் குணங்களு மில்லாதிருப்பதாய் சகல ரூபங்களுக்கு மதீதமானதாய் நிரஞ்சனமாய் சாந்தமாய், பாவாபாவங்களுக்கு மிகவும் அப்பாற்பட்டதான அவஸ்தையெதுவோ அதுவே சஹஜாவஸ்தையென்று சொல்லப்படும்.

30. ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரீயம் துரீயாதீதம், சஹஜம் (இந்த ஆறும் அவஸ்தைகளெனப்படும்.) இதற்குமேல் ஒன்றுமில்லையென்றறியத்தக்கது.

31. சகல துஷ்கர்மங்களையும் விட்டுச் சுபகர்மங்களைப்பிடித்து சுவர்க்கசுகத்தை அபேக்ஷித்த புருஷனானவன் பிரவிருத்தனென்று சொல்லப்படுவன். அவன் ஜாக்கிராவஸ்தைக் கதிகாரி யாகமாட்டான்.

32. (இகலோக சுகங்களும் பரலோக சுகங்களுமாகிய) பதசுகங்கள் போதும் போதும் என்று அவையினிடம் அபேக்ஷையில்லாம லிருப்பவனே நிவிருத்தனென்று சொல்லப்படும். அவன் ஜாக்கிராவஸ்தையி லிருந்துகொண்டு மோக்ஷ சுகத்தையடைய அதிகாரியாவான்.

33. இச்சம்சார சாகரத்தை எவ்விதம் கடப்பேன் என்று சிந்தித்து ஆசாரியரை சேவித்தலும், பெரியவர்களுடைய சகாவாசமும், அபேக்ஷை யில்லாமலிருப்பதும், நல்ல ஆசாரமும், மௌனமும், வைராக்கியமும் (இவைகளுடனேகூடின தீக்ஷைகளோடும்) வேதசாஸ்திரங்களிலே நிச்சயமான புத்தியால் காமக்குரோதங்களாகிற சத்துருக்களை நாசம்செய்தலும், டம்பமில்லாமலிருத்தலும் இந்தக் காரியங்கள் யாதொரு புருஷனால் சாதிக்கப்படுமோ அவன் ஜாக்கிராவஸ்தையோடு கூடினவனாகி யோகாப்பியாசத்தை யடைகிறான்.

34. ஜாக்கிராவஸ்தையில் மரணமடைந்தவன் மறுஜன்மத்தில் பூர்வாப்பியாச வசத்தினால் இந்த பூமியிலே ஸ்வப்பனாவஸ்தையை யடைவன்.

35. இந்தப்படி ஸ்வப்னாவஸ்தையை யடைந்த யோகீசுவரன் சகல லோகங்களையும் சொப்பனம்போல் பார்த்துக்கொண்டு சித்தத்திலே சரத்காலத்து மேகத்தைப்போல் சத்தாமாத்திரமாக நின்று சஞ்சரிப்பான்.

36. சுழுத்தியவஸ்தையை யடைந்த யோகீசுவரன் துவைத பாவங்களையெல்லாம் நீக்கி, மிஞ்சிநிற்கும் சாந்தத்தை வகித்து, பிரகாச ஸ்வபாவமாய், சிதானந்தமாகிய சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்க பாஹியத்தில் விருத்திகளோடு கூடியிருந்தாலும் ஹிருதயத்தில் விருத்திகளற்றவனாய்ச் சித்திரப் பிரதிமைபோல் விளங்கிக்கொண்டிருப்பான். இது மகாச்சரியம்.

37. துரீயாவஸ்தையை யடைந்த யோகீசுவரன் பிழைத்திருந்தாலும் செத்தவனைப்போல் மனோவிருத்தி யில்லாதவனாய் சாந்தியையடைந்து / கந்தம் முதலிய குணங்களில்லாதவனாய் பாவனாகிதனாய் முக்தியை யடைந்திருப்பன்.

38. பின்னும் துரீயாவஸ்தையிலேயே யிருக்கும் யோகீசுவரன் சமுத்திர மத்தியிலே வைக்கப்பட்ட நிறைகுடம் போலவும் ஆகாசத்தில் நிறுத்தின சூன்ய கும்பம் போலவும் விஷ்ணு பதத்தில் உள்ளும் புறம்பும் கிரமமாக பூர்ண பாவத்தையும் சூன்யபாவத்தையும் அடைந்து சித்திரத்திலெழுதிய தீபத்தைப் போல் விளங்கிக் கொண்டிருப்பான்.



39. துரீயாதீதாவஸ்தையை யடைந்த யோகீசுவரன் பாஹியத்தில் லோகங்களில் சிலரால் பிரஹ்மாவென்றும், சிலரால் விஷ்ணுவென்றும், சிலரால் சிவனென்றும், சிலரால் சூன்யமென்றும், சிலரால் பிரகிருதி யென்றும், சிலரால் புருஷனென்றும், சிலரால் காலமென்றும், சிலரால் அர்த்த (பொருள்) ரூபியென்றும், இவ்விதம் நானாவித கற்பனைகளாகிய சொற்களாற் சொல்லப்பட்டும், தேகத்தோடு அவன் கூடியிருந்தாலும், அவன் நித்தியமுக்தனாய் சுகித்திருப்பன்.

40. ஆகையால் நீயும் சகல பிரயத்தினங்களாலும் கிரமமமாக அப்பியாசம் பண்ணி இந்த துரீயாதீதாவஸ்தையை யடைந்து சுகத்தை யடையக் கடவாய்.

41. (சகஜாவஸ்தை) சகலஅவஸ்தைகளையுமடைந்திருந்தாலும் சகல அவஸ்தைகளையும் நினையாமலிரு. மனதில் உள்ளும் புறம்புமுள்ள சகல பற்றுக்களையும் அடியோடு விட்டுவிடு. (12)

42. அந்நியகர்மங்கள் எல்லாவற்றையும் விட்டு இச்சிவயோகத்தை யப்பியாசம் பண்ணு. சகஜமாய் சத்சித் மயமான (13) அமனஸ்கமென்கிற முத்திரையை யடைவாயாக.

43. ஆத்மாவையும் பிந்துவையும் ஆகாசமாகச்செய்து இந்த இரண்டையும் சமரசப்படுத்தினால் அதுவே அமனஸ்ககளை(முத்திரை) யெனப்படும். (அதுவே கேசரீ யவஸ்தையென்றும், உன்மனீயென்றும், அஜாட்யநித்திரை யென்றும் இப்படிப்பட்ட பரியாய நாமங்களாற் சொல்லப்படும்.)

(12) கீழ்வரும் தமிழ் மொழிபெயர்ப்புப் பாடம் மூலத்திற்கு முரணாயிருக்கின்றது. "ஸகல அவஸ்தைகளைய மடைந்திருந்தாலும், சகலாவஸ்தைகளையும் மறந்திருந்தாலும் உள்ளும் புறம்பும் வியாபகமான சகல சங்கங்களையும் விட்டு விடு."

(13) "ஸ்வசம்வேத்தியமான" என்பது சில மொழிபெயர்ப்புப் பிரதிகளின் பாடம்.

44. ஓ ஸ்வாமி, ஜாக்கிர. சொப்பனங்களை அதிக்கிரமித்து ஜனன மரணங்களில்லாமல், சிவ ஸ்வரூபமாகிய அமனஸ்கமென்கிற முத்திரையை எப்பொழுது அடையப் போகிறேம் (என்று கேட்ட சிஷ்யனுக்கு குரு மூர்த்தியானவர் வேறொரு பிரகாரமாக மனோ நிவிருத்தியைச் சொல்லுகிறார்.)

45. சராசரமாகிய சகல லோகமும் மனத்துக்கு திருசியமாகும். அம்மனம் உன்மனீ பாவத்தையடைந்தால் அது எவ்விதம் உண்மையாகிய மோக்ஷபதமாகாது.

46. அதெப்படியென்றால், மனம் எங்கெங்கே போகுமோ அங்கங்கே நிறுத்தி அது காரணமாக மனோலய மடையவேண்டும். அந்தப்படி மனதை (போக) விடாமல் தடுப்பதினால் [அதைத் தடுப்பதினாலே, வெள்ளத்துக்கணை போட்டாற்போல்] விஷயம் விருத்தியாகும்.

47. ஆகையினால் அந்த மனதை போக்கிலே விட்டால் யதேச்சையாய் திரிந்து தானே திரும்பி யதாஸ்தானம்†சேரும். அதெப்படி யென்றால், மதமடைந்த யானையானது அங்குசத்திற்குள் அகப்படாமல் இஷ்டப்படி திரிந்து தானே தன்னிடம் திரும்பி யடைவது போலாகும்.

48. * லயத்தில் சிறந்தது நாதம். முத்திரையிலே சிறந்தது கேசரீ. யோகத்திற் சிறந்தது நிராலம்பம். அவஸ்தைகளிற் சிறந்தது மனோன்மனீ.

49. ஆகையினால் ராஜயோகத்தின் (சக்தி ரூபமான) இந்த மனோன்மனீ முத்திரையை யடைந்த யோகீசுவரன் பாலோன்மத்த பிசாசங்களைப்போல் சகல லோகங்களிலும் சஞ்சரிப்பான்.

50. ஆகையினால் இந்த ஜீவன்முக்திப் பிரகாரத்திற்கு இதுவே யோகம். இதைவிடவேறில்லை. இதுவே மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கதும் சமஸ்த தரிசனங்களுக்கும் சம்மதமானதும்.

51. மந்திரயோகம் லயயோக மிரண்டும் ஆரம்ப மாத்திரம். ஹடயோகம் அப்பியாசமாகும்; ராஜயோகம் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதென்று சொல்லப்படும். ஆகையால் (முந்தின மூன்றையும் பூர்வபக்ஷமாய் நிறுத்தி) இந்த ராஜயோக மொன்றே (மோக்ஷத்தைக்கொடுப்பதால்) மேன்மையான தாகும்—(கடைப்பிடியாகக் கொள்ளத்தக்கது.)

52. ஆகையால் யோகீசுவரனுக்கு மோக்ஷமடைவதற்கு இந்த ராஜயோகாப்பியாசம் செய்யவேண்டியது. இந்த யோகத்துக்கு விக்கினங்களாவன (இடையூறுகளாவன):—ஆலஸ்யம் (ஊக்கமின்மை), துஷ்டர்களின் சகவாசம், பந்துக்கள் சாஸ்திரங்கள் இவைகளின் வாசனை, ரோகங்கள் முதலியவை. இவை முதலானவெகு விக்கினங்களை யெல்லாம் ஜயித்து இந்த மகா யோகாப்பியாசத்தினால் பிறந்த (அணிமாதி) அஷ்டைசுவரியங்களையும் (காயம், வாதம் முதலிய) சித்திகளையும்விட்டு நல்ல தேசத்தில் சத்ஜனங்களால் சூழப்பட்ட (ராஜநிஷ்டூரங்களும்) உபாதிகளு மில்லாத தர்மராஜ்யத்திலிருந்து கொண்டு இந்த ராஜயோகத்தை யப்பியாசம் செய்யவேண்டும்.

53. இந்தப்படி ராஜயோகாப்பியாசம் பண்ணின மகாத்மாக்களுக்கு தாபத்திரயங்களும் நவ வித (பதார்த்த) வியவகாரங்களும், அரிஷட்வர்க்கங்களும், பஞ்சகோசங்களும், ஷட் பாவ விகாரங்களும், ஷட்ஊர்மிகளும்,—இது முதலானவைகள்—இல்லவே யில்லை.

54. மகாப்பிரகாசமான அக்கினியானது பச்சை விறகையும் உலர்ந்த விறகையும் ஏகமாய் எப்படி யெரிக்குமோ அப்படியே ஞானாக்

† [மனதுக்கு உற்பத்தி ஸ்தானம் எதுவோ, அதுவே லயஸ்தானமுமா மாகையால்,"தன்மனோவிலயம் யாதி தத் விஷ்ணோ பரமம்பதம்" என்ற சுருதி வாக்யெத்தால் சூசிக்கப்பட்ட பரமபதமான பராகாசவெளியை "யதாஸ்தானம்" என்று குறிப்பிட்டுச் சொன்னர்.—வி-சி-ப.]

* 'லயக்கிரமத்தில்' என்பது அருத்தம்.



கினியானது க்ஷணமாத்திரத்திலே புண்யபாபங்களெல்லா வற்றையும் தகித்து பின்பு ராஜயோக சித்தியை யடையப் பண்ணும்; அப்படி யடைந்த மகாத்மா முக்தனுவான்.

55. அற்பமாகிய தீபமானது எப்படி மகத்தாகி திரண்ட அந்தகாரத்தை ஹடத்தாற் போக்குமோ அப்படியே இந்த ராஜயோக சமாதியானது கொஞ்சம் உண்டானாலும் சுபாசுப கர்மங்களெல்லாவற்றையும் போக்கும்.

56. இந்த ராஜயோகத்தை யாதாமொருவன் அப்பியசிக்க எத்தனம் பண்ணி யோக சித்தியை யடையுமுன்னே இறப்பானாகில் அவன் *சுவர்லோகத்தை அடைந்து வெகுகாலம் சுகமனுபவித்து அதன்பின் பூமியில் ஐசுவரியவான்களாய் வெகு சாஸ்திர சம்பன்னர்களாய் யோகீசுவரர்களாய் இருக்கும் சத்புருஷர்களின் குலத்திற் பிறந்து (பூர்வஜன்மாப்பியாச வசத்தால்) இந்த ராஜயோகத்தை சம்பூர்ணமாய் அப்பியசித்து சிவமெனப்படும் பரமபதத்தை யடைவான்.

57. இந்தப்படி ராஜயோகத்தினால் எவனுடைய மனதானது பரப்பிரஹ்மத்தில் லயமடையுமோ அவனுடைய தாய் தகப்பனிருவரும் கிருதார்த்தராவார்கள். அவனுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் யாவரும் மகாபுண்யவான்களாவர். அவன் சஞ்சரிக்கும் பூமியானது அவன் பாதம் படுவதால் புண்ணிய க்ஷேத்திரமாகும்.

58. (இந்தப்பிரகாரம் சிவயோக மகத்துவம் சொல்லி கிரந்தகர்த்தாவானவர் இந்த கிரந்தத்தின் ஸ்வரூபத்தைச் சொல்கிறார்):—

சகல யோக சாஸ்திரங்களின் ரகசியங்களையும் சித்தபுருஷர்களுடைய சித்தாந்தத்தின் வழியையும் சோதித்து நிச்சயம் பண்ணி சுருக்கமாய் இந்த சிவயோகப்பிரதீபிகை யென்னும் கிரந்தம் செய்யப்பட்டது.

59. இந்த சிவயோக தீபிகையானது மகா ரகசியமானது. இதை யப்பியசிக்க வைராக்கியமுள்ளவனாய், இந்திரியங்களை ஜயித்தவனாய், சிவனிடத்தும் குருவிடத்தும் சலனமில்லாத பக்தியுள்ளவனாய், இருப்பவனுக்குக் கொடுக்க வேணும்; அல்லாமல் மூடனுக்குக்கொடுப்பானாகில் குருத்துரோகி யாவான்.

60. இச் சிவயோகதீபிகையானது "பரம" முதலிய சப்தங்களால் ஆரம்பிக்கும் அநேக விருத்தங்களால் அலங்கரிக்கப்பட்ட ஐந்து படலங்களாகச் செய்யப்பட்டு "கிரிநாமாம்பக' என்கிற சங்கியையுள்ள (287) சுலோகங்களுடன் கூடியிருக்கும். அப்படலங்களின் சுலோகத் தொகை வரிசையாக "பரபாணன்" (53), "அஜசாயகான்" (59), "சமுத்ராரிதான்" (64), 'கரேஷேன்" (52) "நிதிபாணன்" (69) என்னும் எண்களாகும்.

இவ்விதம் சதாசிவ யோகீந்திரரால் செய்யப்பட்ட சிவயோக தீபிகை யென்கிற யோகசாஸ்திரத்தில் அமனஸ்கவிதானமென்ற ஐந்தாம் படலம் முற்றும்.

சிவயோகதீபிகை முற்றுப் பெறும்.

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

* 'சிவலோகம்' என்றும் பாடமுண்டு.

THE SPIRIT OF RELIGION
OR
VEERA-SAIVAM TO THE FORE.
AN EXPOSITION
*OF THE PRINCIPLE OF UNITY IN RELIGION IN THE LIGHT OF ACTUAL EXPERIENCE*
AND WITH
*Special Reference to the Veera-Saiva faith*
BY
C. V SWAMINATHA AIYER,
*Editor of the Vivekachintamani,*
*With Corresponding Texts and References From the Veera-Saiva Scriptures*
BY
M. K. NARAYANASWAMI AIYER, B. A., B. L.,
*High Court Vakil.*
MADRAS:
THE LALITA PUBLISHING CO.,
LALITALAYA, MYLAPORE.
Price 8 As.] [1 Shilling.
*London Agents;—Messrs Luzac & co, Oriental Booksellers,*

# AIDS TO NATURE STUDY.

## *Elementary Botany and Study of Plant Life

Nature Study and Child Study—these two in their fullness and perfection complete the Education of Man, drawing out the Soul of man to the fullest extent possible and preparing him to work in tune with the Infinite."—*Guru Vak.*

"Nature Study by inductive method ought to occupy a prominent place in our Elementary Schools, as it will greatly strengthen the spirit of enquiry and improve the powers of observation in children."...*Extract from the author's Preface to the Elementary Botany.*

"The Bean plant was selected as the type of flowering plants . . . Prominence is given to the functional aspect; this standpoint of view is the most important one. Form and structure have no significience apart from their functions.' —*Extract from the author's preface to the Life of the Bean Plant."—in Tamil.*

* (1) Elementary Botany in Tamil by K. Rangachari, M.A., L.T., with 233 illustrations, Messrs. P. R. Rama Iyer & Co., Madras, 1-8-0 (2) Life of the Bean Plant in Tamil by the same author with 26 illustrations & coloured frontispiece. Messrs. P. R. Rama Iyer & Co., Price As. 6.

## பிரகிருதி வித்யைக்குவேண்டிய சாதக சாதனங்கள்.

(விவேகசிந்தாமணி 309-வது பக்கத்தொடர்ச்சி.)

### V.

இப்படி, யெல்லாசாதகங்களிலும் பரமசாதகமான மனப்பழக்கம் (Proper training of the mind) தீக்ஷாரூபமாக முன்காலத்தில் போதிக்கப்பட்டுவந்தது. இப்பொழுதும் உண்மையாளர் அவ்வழிப்பற்றியே போதித்துச் சாதித்து வருகிறார்கள். பொய்ம்மொழி பேசும் புன்மையாளரைப்பற்றி இங்கே நமக்கு விசாரமில்லை. ஒருகோட்டை தானியத்தில் ஒரு மணிநெல்லே யுள்ளதாயினும், அந்த ஒரு மணிநெல் தானே முளைத்துப் பல்கிப்பெருகிப் பலனைத் தருமன்றி, மற்றப் பதர்களெல்லாம் முளைக்காது—எருவுக்கே யுதவும்.

அதுபோல மனப்பழக்க மில்லாக் கற்றறிமூடர்கள் மனிதரிற் பதராவர். இப்பதரிலிருந்து மனித நெல்லைப் பொறுக்கியெடுத்து, விதைத்து, நீர் பாய்ச்சி, வளர்த்து, விவசாயம் செய்து தீக்ஷையினால் மனப்பழக்கம் பெற்ற மணிகளான மன்குல திலகரை விர்த்திசெய்ய வேண்டும். இந்த மணிகளினால் தான் மன்குலம் விளங்கவந்தவரித்த இப் பாரதவருஷம் விளங்கவேண்டும்.

மன்குலம் விளங்குதலாவது "(Progress of Humanity)" என்று, வார்த்தையின் அர்த்தம் தெரியாது இங்கிலீஷில் சொல்வதே. மன்குலம் (Humanity) விளங்குவது அருட்பேறென்றினாலேயே யாகும். அருட்பேறின்றி நேர்வழி நடக்க வறியாது மன்குலம் அருளைவிட்டு அழியும்பொருளையே (Material Wealth) பெரிதாக நாடும் மேற்றிசைநாகரிக விர்த்தியால் மன்குலவிர்த்தி (Human Progress) சாணைப்பான் பூச்சி செக்கடியைச் சுற்றுவதுபோல் காலசக்கிரத்திலகப்பட்டுச் சுழன்றுழன்று வருகிறது. இதைமாற்ற மனப்பழக்கம் அவசியம் வேண்டும். அதுவே பரமசாதகம்.

### VI.

அந்தப் பரமசாதகம் அமையப்பெறச் சாதனங்கள் வேண்டும்.

அவைதான் இல்லப்பழக்கம் (Home influence) பள்ளிப்பழக்கம் (School influence) என்று சொல்லும் நல்ல படிப்புவாசனை.



"இல்லறமல்லது நல்லறமல்ல" ஆதலால் இல்லறம் வழுவாது நல்லறஞ்செய்துவரும் நற்குலத்தில் பிறந்த பிள்ளைகளுக்கே இல்லப்பழக்கம் நல்லதாயமையும்.

அரசியல் என்னும் பொதுவறம் வழுவாது செங்கோல் செழித்தோங்கும் இராஜ்யத்திலேயே பள்ளிப்பழக்கம் நல்லதாயமையும்.

ஏனெனில், "அரசனெவ்வழிக் குடிகளவ்வழி!" யென்பது பொய்யிலாப் பழமொழி.

இராஜதர்மம் பிசகினால் துரைத்தனம் சீர்கெடும். இராஜ்ய தர்மம் என்பது "அரசியல் முறை"யெனும் "General and eternal Principles of Government" என்று இங்கிலீஷில் சொல்வதையே சொன்னதன்றி வேறல்ல. இந்த இராஜ்ய தர்மம் பிசகினால் துரைத்தனம் (Administration of State) சீர் கெடும். துரைத்தனம் சீர்கெட்டால், அக்கிரம அநியாயங்கள் மலிந்து மிகும். அக்கிரம அநியாயங்கள் மலிந்து மிகுந்தால் பிரஜைகளுக்கு தர்மத்திலுள்ள நம்பிக்கையும் அதனால் தர்மசிந்தையும் கெடும். தர்மசிந்தை கெட்டால் அரசியலுக் காதாரமாயுள்ள உயிர்நிலை குலையும். தர்மமே செங்கோல், தர்மபரிபாலனமே அரசுரிமை. தர்ம சிந்தையை வளர்த்தலே சிஷ்டபரிபாலனம். அதர்மத்தை யடக்குதலே துஷ்டநிக்ரஹம். அறன்வலி தானே (Righteousness or the Might of Right) அரசனுக்குப் படைவலிமை. மன்குல விருத்தியை நாடுதலொன்றே நாடு, ஸத்யமே ஜயம் என்பதே அரண். தர்மமே ஜயம் என்னும் ஆப்த வாக்கியமே யாராலும் அசைக்க முடியாத கோடி. இவ்வெல்லாம் பொருந்தச் சேர்ந்ததே அரசு.

இப்படியாகக் குடி, படை, நாடு, அரண், கோடி, அரசு, என்னும் ஆறு அங்கங்களும் அமைந்தது அரசியல். இந்த அரசியல் முறை தவறினால் பள்ளிப்பழக்கம் நல்லதாகாது. பள்ளிப் பழக்கம் நல்லதாகா விட்டால் இராஜ்யத்தில் பிறந்த பிள்ளைகளெல்லாம் கொள்ளிக் கட்டைகளாக ஆய்விடுமென்பதிற் சந்தேகமில்லை.

### VII.

ஆறு கரைபுரண்டால் அணைகோலி யடைக்கலாம். சமுத்திரமும் கரைபுண்டால் அதற்கு அணைகோலுவது எப்படி?

அதுபோல மனுஷ்ஞற்செய்த சட்டம் பிசகினால் அதைத்திருத்தி விடலாம். ஸநாதனமான தர்மம் பிசகினால், வருபயனைத் தடுக்க யாராலும் முடியாது, பகவானாலுங்கூட முடியாது. இதை ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையின் 8-வது அத்தியாயம் 18, 19, 20-வது சுலோகங்களில் அர்ச்சுனனுக்குவெகு நன்றாய் எடுத்துரைத்து விளக்கியிருக்கிறார்.

### VIII.

பிள்ளைப்பழக்கம் நல்லதாக வேண்டுமாயின் இந்திரியங்களெல்லாம் தீக்ஷண்யமாகத் தத்தம் வேலைகளைச் செய்யவேண்டும்.

1. கண் ஸ்தூல சூக்ஷ்ம காரணம் மூன்றையும் பார்த்துக் கிரகித்து பார்வையைத் தள்ளி பார்க்கப்பட்ட வஸ்துவையும் தள்ளித் தானே தானும் தன்மயமாய்ப்பார்ப்பான் மாத்திரமாய் நிற்க வேண்டும்.

2. காதும் அப்படியே ஸ்தூலசூக்ஷ்மகாரணமான சப்தங்களைக்கேட்டு நாதானுசந்தானத்தில் பழகிக்கேட்ட சப்தம், கேள்வி யிரண்டையும் தள்ளிக் கேட்டவன் மாத்திரமாக நிற்க வேண்டும்.

3. மூக்கு (நாசி) ஸ்தூல சூக்ஷ்மகாரணமான மூன்றுவாசனைகளையும் முகர்ந்துணர்ந்து, மோப்பம், முகரப்பட்டவாசனை யிரண்டையுந்தள்ளி முகர்ந்தான் மாத்திரமாக நிற்கவேண்டும்.

4. இப்படியே துவக்கேந்திரியம் (தோல்) ஸ்தூல சூக்ஷ்ம காரணமான மூன்று ஸ்பரிசங்க

ளையும் உணர்ந்து ஸ்பரிசிக்கப்பட்ட பொருள், ஸ்பரிசம் இரண்டையும் தள்ளி ஸ்பரிசித்தான் மாத்திரமாக நிற்கவேண்டும்.

5. அஃதேபோல், நாக்கும் ஸ்தூல சூக்ஷ்ம காரணமான உருசிகளையெல்லாமுணர்ந்து ரஸிக்கப்பட்ட பொருள் ரஸனை யிரண்டையுந் தள்ளி ரஸித்தான் மாத்திரமாக நிற்கவேண்டும்.

இவை யெல்லாவற்றிலும் "தானேதானாய்த் தன்மயமாய்" என்பதைக் கூட்டிக்கொண்டு அர்த்தம் செய்து கொள்ளல்வேண்டும்.

அப்படியே வாய், கை, கால் முதலிய கன்மேந்திரியங்களும் அததன் செய்தொழிலைச் செய்து தொழிலின் பலனைப் பற்றி நிற்காமல் அகமுகநோக்கிச் செயலின் அதிஷ்டான தேவதையைப்பற்றி நிற்கவேண்டும்.

இப்படி இந்திரியங்களைப் பழக்கும் விதம் இந்தியாவிலே தீக்ஷாவிதிகளாக வேற்பட்டுள்ளது. மேற்றிசையில் ப்ரோபெல், பேஸ்டலோஜி (Frœbel, Pestelozi) இவர்களால் முறைபறிந்து ஓதியுணரப் பெற்றிருக்கிறது. அவர்கள் உணரப்பெற்றதை யுணர்த்துவான் கிரந்தங்களும் இருக்கின்றன. ஆனால் அவர்களுடைய உண்மையை உள்ளபடி உணரும் சக்திவாய்ந்த மாணவரும் போதகருந்தான் விசேஷமாயில்லை.

IX

'ஸர்க்கஸில்' மிருகங்களைப் பழக்குவதுபோல் இந்திரியங்களைப் பழக்கினால் பிரயோசனமில்லை. ("இவ்விசை வித்வான்கள் தாரதம்மியம்" பார்க்க.)

காட்டு மிருகங்களையும் கரடி புலி பாம்புகளையும் அடிதடிப் பிரயோகங்களால் (அல்லது இன்னிசை மயக்கால்) அடக்குவது பெரிதல்ல; அடி தடிப் பிரயோகாதிகளால் அவற்றின் குணம் மாறாது. வெறும் பழக்கம் மட்டும் ஏற்படும். மந்திர தந்திரோபாயங்களால் அவற்றின் குணத்தையே மாற்றிவிடலாம், பாம்புதானே பதஞ்சலி முனிவரானதும், வியாக்கிரம்தானே வியாக்கிரபாத ரிஷியானதும் இதற்கு இதிஹாஸங்களாம். இதுதான் மனப்பழக்கம். யோக சாஸ்திரங்களில் இந்த மனப்பழக்கத்தையே "சித்த விருத்தி நிரோதனம்" என்று சொல்வர். இந்த "சித்த விருத்தி நிரோதன" சம்பத்தே, "யோக சித்தி" யென்றும் "ஞான ஸாதனம்" என்றும் "பரி பக்குவம்" என்றும் பலவாறாகச் சொல்லப்படும். மனம்பழுத்தால், அது தானே நழுவி விழுந்து விடும். இப்படி மனம் பழுத்துத் தானாய் விழுவதே "வீடு,' முக்தி, மோக்ஷம் என்று சொல்வது. மனம் பழுத்தால், புளியோடுபோல் தேகமும் ஆத்மாவும் (அறிவும்) பிரிந்தும் பிரியாமல், ஒட்டாமலொட்டிக்கொண்டிருக்கும்.

இந்த உத்தமநிலை பெறுவது தான் "பெறற்கரிய பேறு." இந்நிலை யடைந்தவர்களே "எல்லாம்வல்ல சித்தர்களாவார்கள்." இதுவே வித்யாப்யாஸத்தின் பூரணமான பலன்.

X.

இப்படிப்பட்ட பூரண பலனைத்தரும் வித்யாப்பியாஸம் பள்ளியில் தலையெடுக்கவேண்டியுழைப்பது விவேகிகள் எல்லாருடைய பொறுப்பும் கடனுமாயிருக்கிறது. இந்த வித்யையின் ஒருபகுதியான பிரகிருதிவித்யையில் பள்ளியிற் படிக்கும் சிறுவர்கள் மனஞ்செல்லுமாறு, அதற்குச்சாதனமாக தாவரநூல்என்றும், அவரையின் வாழ்க்கையென்றும் இரு நூல்கள் மிகவும் உபயோகமாகும்படி தமிழில் இயற்றிப் பிரசுரித்துள்ள கிரந்தகர்த்தாவுக்கும், அதை அச்சிட்டுப் பதிப்பித்த புஸ்தக கம்பெனியாருக்கும் தமிழுலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

பொது லக்ஷணத்தை விரித்துரைக்க வேண்டிய தவசியமா யிருந்ததால், அஃதையே மிகவும்கூறி அப்"பொதுவியல்" கூறக்காரணமாயிருந்த இந்நூலின் சிறப்பிலக்கணத்தை வித்தியார்த்திகள் வாங்கிப் படித்து தாமேயறிந்து கொள்ள வேண்டுமென்று விட்டதற்காக இதை வாசிப்போர் க்ஷமைபாராட்ட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம்.



## Last Days of Tolstoy.
## டால்ஸ்டாயின் துறவும் தேஹவியோகமும்.

"How is your wife? Is she a woman that will help you in your march towards God, or will she keep you tight in bondage?"—*Sri Ramakrishna Paramahamsa's first solicitude for "married men" on the Path.*

"Even if Tolstoy's ideal be accepted in principle, it should not be left for fulfilment until the shadows grow long. Men should sit down and think awhile, not only at the end of their days, but rather in their earlier years when the way of life is still uncertain."—*The (London) Times.*

"தேவியவள் புறம்விட்டுத் திக்கற்ற நாதன்போல் [ண்டு."
ஆவிதனையொடுக்கிக்கொண்டு அருந்தவங்கள்செய்துகொ

கௌண்ட் லியோ டால்ஸ்டாய் பேர்போன தத்துவஞானி. அவர் ருஷியா தேசத்தவர். மனச்சாக்ஷிக்கு விரோதமாய் நடக்க இஷ்டமில்லாதவர். அத்தேசத்துப் பிரபுகுலதிலராயினும் அவர் விரக்தி வைராக்கியத்திற் சிறந்தவர். அவருடைய மனைவியும் பிரபு குலத் துதித்தவர். இவர்களுக்குப் பிள்ளை குட்டிகளும் ஆஸ்தி பாஸ்திகளும் மற்ற உலக சம்பத்துக்களும் நிரம்ப இருந்தும், டால்ஸ்டாய் அவர்களுக்கு அவற்றில் பற்றுதலில்லை. அவர் உள்ளம் அகத்துறவு பூண்டொழுகி அதில் முதிர்ந்த தானதால், உள்ளும் புறமும் ஒத்திருக்க வேண்டியது அவருக்கு அவசியமாக நேரிட்டது. ஆனால் அவர் மனைவி உலகப்பற்றுகளை விட்டவளல்ல. இப்படி யிருவர் மனமும் ஒத்திராத காரணத்தால், டால்ஸ்டாய்க்கு வருத்தம் மிகவுண்டாயிற்று. ஆனாலும் எல்லாவற்றையும் பொறுமைக்குக் காரணமாக நினைத்து "வர்மமப்பா வெல்வதில்லை" யென்றுன்னித் தான் உண்மை வழிப்பட்டு உள்ளன்பு பூண்டு, தன்னை வெறுத்த மனைவியை விருப்பு வெறுப்பின்றி உண்மையாய் நேசித்தொழுகி வந்தார். தம்பதிகள் மனதொத்திராவிட்டால், இல்லறம் சிறக்காதாகையால் துறவறமேமேலென்று நம்மில் பெரியோர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். பட்டணத்துப் பிள்ளையும், மஹா உத்தமியான தனது மனைவியின் உள்நோக்கம் தனது அபாரமான விரக்தி வைராக்கிய சித்தத்துக்கு ஒத்ததாயிராதென் றாகமாயுணர்ந்தே எல்லாவற்றையும்விட்டுத் துறவறம்பூண்டார். பிறவி ஞானியாயிருந்தும் இல்லறம் பூண்ட திருவள்ளுவர், பக்குவனொருவன் அவரை யடைந்து "இல்லறம் நல்லதா துறவறம் நல்லதா'? வென்று கேட்ட பொழுது, தான் முற்றுந் துறந்த முக்தராயிருந்தும் இல்லறம் நடத்தும் பொழுது துறவறத்தைச் சிலாகித்தால் தன் வாக்குச் செல்லா தென்றுணர்ந்து, தனது மனைவியின் பரிபக்குவத்தை யுணர்த்த அவள் கிணற்றில் பாதிஜலம் இழுத்துக் கொண்டிருக்கும் பொழுது அழைக்க, அந்த அம்மாள் பதி சொல் காதில்விழவும், பாதிக்கிணறு வந்த தண்ணீர்த் தோண்டியை அப்படித்தானே யிருக்க விட்டுவிட்டு, உடனே வந்தார். அதைக் காட்டி, சந்தேகம் கேட்க வந்தவனுக்கு,—

"பர்த்தாவுக் கேற்ற பதிவிரதையுண்டானா
லெத்தாலும் மொத்து வாழலாம்-சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாயின்
கூறாமற் சநியாசம் கொள்."

என்று உண்மையை உள்ளபடி யுரைத்தனுப்பியது யாவருக்கும் தெரிந்ததே. ஸநாதனமான இந்தச் சத்தியவாக்கு டால்ஸ்டாய் விஷயத்தில் உண்மையாயிருந்தது. அவருக்கு வயது 82 க்கு மேலான போதிலும், அவர் தன் மனைவியைத் தன்வழிக்குத் திருப்பச்செய்த யத்தனங்களெல்லாம் பலிக்காது அவள் "ஏறுமாறாக விருந்தது" அவர் உள்ளத்திற் படவும், அவர் கூறாமற் சநியாசம் கொள்ளத் தீர்மானித்துச், சென்ற நவம்பர்மாசம் முதலில் அவருடைய வாசஸ்தலத்தைவிட்டு வெளிக்கிளம்பி ஆண்டி

யாய்த் தன் வாழ்நாளைக் கழிக்கத் தீர்மானித்தார். நடுநிசியில் எழுந்திருந்து தன் அரண்மனை போன்ற வீடுதிறை விட்டுத் தன் பெண்சாதிக்குத் தெரியாமல் பிரயாணப்பட்டு வெளியேறி விட்டார். வெளியேறினவர், பாவம்! வழியிலுண்டான களைப்பிளைப்புத் தாங்காமல், வயது முதிர்ந்தவரானதால், தேக உபாதி யுண்டாகி ரயில்பாதையிலுள்ள ஒரு ஸ்டேஷனிலிறங்கி, சிலநாள் வியாதியாயிருந்து, தன்பிராணனைவிட்டார். அவருடைய கடைசிப் பெண் கூடவேயிருந் துதவிசெய்தும், பெண்டு பிள்ளைகளெல்லாரும் அங்குவந்து கூடியும், பெரியவர் தன் விரக்தி வைராக்கியத்துக்குப் பங்கம்வராது, தேஹவியோகமெய்திப் பரகதி பெற்றார்.

ஞான மார்க்கத்தில் பிரவேசிக்கிறவர்கள் பெண்டு பிள்ளைகள் முதலான உலகப்பற்றுகளை அறவொழிக்க வேண்டுமென்பது, தேஹயாத்திரை பழக்கவாசனை மிகுதியால் நடப்பதாயிருப்பதால், அந்த வாசனையைத் தேஹத்தில் புலமுள்ள போதே மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது பற்றி யன்றி, உண்மையில் பெண்டு பிள்ளைகளால் ஞானத்துக்குத் தடையுண்டாகுமென்றல்ல. ஞானம் திரிகரண சுத்தியாயிருப்பவர்களிடத்தே குடிகொண்டிருக்கும். "தந்தை தாய் தமர் சுற்றம்" உள்ளம் ஒத்த உத்தம பக்குவம் முதிர்ந்தவராயிராவிடில் உள்ளும் புறமும் ஒன்றாய் விளங்க வசிக்கவிடார்கள். ஏனெனில் இப் பொய்யுலகத்தில் பொய் வேஷம் போட்டே பிழைத்து ஆகவேண்டுமென்பது அவர்களுடைய கொள்கை. அக்கொள்கைக்கு விரோதமாய் நடந்தால் அவர்களுக்கு வருத்தமாயிருக்கும். விட்டுப் பிரியவும் மனசுவராது: ஒத்து நடக்கவும் பக்குவம் போதாது. இப்படிப்பட்ட தர்ம ஸங்கடத்துக்கிடங்கொடுக்கக் கூடாதென்றே "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை" யுண்டானால் மட்டும் இல்லறத்திலிருந்து ஞானசாதனம் சாதிக்கலாமென்றும், இல்லாவிடில் முடியாதென்றும் சொன்னார். ஞானசித்தியில் ஆசைவைத்த முமுக்ஷு "முடியாது" என்கிற வார்த்தையைக் கேட்கமாட்டானாதலாலும், அவனுக்கு "முடியாதது" ஒன்றுமில்லையாதலாலும், ஸஹஜானுபவம் கைவந்த திருவள்ளுவர், மனைவி "சற்றேனும் ஏறுமாறாக விருப்பாளே யாமாயின், கூறுமற் சந்யாசங் கொள்" என்று உண்மையை உள்ளபடி யுபதேசித்தார்.

அகப்பொருளில் லக்ஷியம் வைத்தோர் இகப்பொருளை மதியார். புறப்பொருளை பெரிதாக வெண்ணிய வுலகத்தார் அகப்பொருளின் அருமைபறியாராதலால், அவர்கள் ஞானிகள் வழிப்பட்டு நடப்பதும் துர்லபம். ஆதலால்தான் "உலகத்துக்கு ஞானி பையத்தியக்காரன்" என்னும் பழமொழி ஏற்பட்டது. பித்தம் தலைக்கேறினால், அது பைத்தியம். உலகத்தார் பித்தத்தை (பிராணாத்மகனான சூரியன் ரஸ்மியை) வயிற்றில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது அவர்களுக்குப் பசி தாஹம் என்னு முபாதிகளை யுண்டுபண்ணி, அன்னமய தேஹத்தையும் பிராணமய வுயிரையும் வளர்க்கக் காரணமாகிறது.

ஞானி பித்தத்தைத் தலையில் வைத்துக்கொண்டிருக்கிறான்: அதாவது பிராணாத்மகனான சூரியனை, மஹத் அல்லது புத்தியாத்மகமான ஷோடசீகலா சந்திரனில் ஒடுங்கச்செய்து அந்தச் சந்திரனின் நித்தியமான குறைவுநிறைவற்ற ஸாதாக்கிய கலையைச் சிவபிரான் தலையில் வைத்திருப்பது போல், சுத்த தத்துவாத்மகமான தலைமுடியில் சூட்டிக் கொண்டிருப்பார்கள். ஆகையால் அவர்களைப் பித்தனென்றும், பேயனென்றும் சொல்வது உண்மையில் ஒக்கும்.

நிர்வாண தேசத்தில் கோவணங்கட்டியவன் பைத்தியக் காரனாவதுபோல், ஈஷணாத்திரியங்களால் நிறைந்துளோருலகில், உலகப்பற்றையும் ஈஷணாத்திரியங்களையும் விட்டவன் பைத்தியக்காரனே. "தேஹோஹம்" என்கிற தேஹபாவனை கொண்டாடும் உலகத்தார் மத்தியில் "தேஹம் நான்" என்கிற பாவனையை அறவொழித்து நித்தமுத்த சுத்தனான "சிவன் நான்" என்று "சிவோஹம்" மாத்திரமாயிருப்பவர்கள் பைத்தியக்காரர்கள் என்பதற்குக் கேட்பானேன்?

பிரபஞ்சம் கீழ்மேலாகப் புரண்டு கொண்டிருக்கும் ஒரு பெரிய ஜாலவித்தை. கீழ்மேல் இரண்டையும் விட்டு எங்கும் நிறைந்து ஸர்வாந்தர்யாமியாய் நிற்பவர்கள் யாரோ அவர்களே ஞானியாவர். அவர்கள் பிரஹ்மவித் என்றும், வரன், வாரியன், வரிஷ்டன் என்றும் நால்வகைத்தாக விளங்குவர். பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மவித். இவன் எப்போதும் துரியஜாக்ராவஸ்தையிலிருந்து பிரஹ்மத்தைப் பூஜித்து வருவன். இவன் பூஜாபலத்தால் பூஜ்யன் ஆகிறான்.

பிரஹ்மவரன் ஜாக்ர ஸ்வப்னங்களிலும் பிரஹ்மத்தியானம் செய்து பகவானுக்குப் பிரிய சேவகனாகிறான். இவன் தியான பலத்தால் அடியான் ஆகிறான்.

வாரியன் ஜாக்ர-ஸ்வப்ன-சுஷுப்தியவஸ்தைகள் மூன்றிலும் பிரஹ்மத்தை யன்றி வேறு புகலிடமின்றிப் புதுமணம்செய்த புருஷனைப்போல், அஹம்புற மிரண்டிலும் தன் காதலியையே சாக்ஷாத்காரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

வரிஷ்டன் மேலவஸ்தைகள் மூன்றும் கடந்த துரீயத்தில் துரியனாய் (அதாவது, துரியாதீதனாய்) பிரஹ்மத்தை இடையறாதனுபவித்துவரும் அனுபவாதீதனாயிருக்கிறான். அறிவழிந்த இவன் அனுபவசுகத்தைச் சொல்லமுடியாது. இவன் தான் "ஸஹஜன்." இந்த ஸஹஜானுபவமே முக்தி லக்ஷியம்.

ஓம் தத்ஸத்.





உ

ஓம் ஸ்ரீசாவித்திரியை நம:

# உபநிஷதர்த்த தீபிகை.

## 9. அத்யாத்மோபநிஷத்.

ஓம் பூர்ணமத இதி சாந்தி:

ஹரி: ஓம்—சரீரத்தினுள்ளே குகையில் (தகராகாசத்தில்) எக்காலமும் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு பிருதிவி சரீரம்; பிருதிவியினுள் சஞ்சரிக்குமெவரைப் பிருதிவி அறியவில்லையோ; எவருக்கு அப்பு (ஜலத்துவம்) சரீரமோ, ஜலத்தினுள் சஞ்சரிக்கு மெவரை ஜலம் அறியவில்லையோ; எவருக்கு அக்நி சரீரமோ, அக்நியினுள் சஞ்சரிக்கு மெவரை அக்நி அறியவில்லையோ; எவருக்கு வாயு சரீரமோ, வாயுவுக்குள் சஞ்சரிக்கு மெவரை வாயு அறியவில்லையோ; எவருக்கு ஆகாயம் சரீரமோ ஆகாசத்தினுள் சஞ்சரிக்கு மெவரை ஆகாச மறியவில்லையோ; எவருக்கு மனம் சரீரமோ மனத்திற்குள் சஞ்சரிக்கு மெவரை மனம் அறியவில்லையோ; எவருக்கு புத்தி சரீரமோ புத்தியினுள் சஞ்சரிக்கு மெவரை புத்தி அறியவில்லையோ; எவருக்கு அகங்காரம் சரீரமோ அகங்காரத்தினுள் சஞ்சரிக்கு மெவரை அகங்காரமறியவில்லையோ; எவருக்கு சித்தம் சரீரமோ சித்தத்தினுள் சஞ்சரிக்கு மெவரை சித்தமறியவில்லையோ; எவருக்கு அவ்யக்தம் சரீரமோ அவ்யக்தத்தினுள் சஞ்சரிக்குமெவரை அவ்யக்தமறியவில்லையோ; எவருக்கு அக்ஷரம் சரீரமோ அக்ஷரத்தினுள் சஞ்சரிக்கு மெவரை அக்ஷரம் மறியவில்லையோ; எவருக்கு மிருத்யு சரீரமோ மிருத்தியுவினுள் சஞ்சரிக்கு மெவரை மிருத்தியு அறியவில்லையோ; அவர் சர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவானவரும் (அந்தர்யாமியானவரும்) பாபமற்றவரும் திவ்ய

ரும் (பிரகாசரூபரும்) ஏகருமாகிய தேவரான நாராயணர்.

2. ஆத்மாவல்லாத தேஹம் இந்திரியம் முதலியவைகளில் நான் எனது என்கிற புத்தியாகிய அத்யாசமானது* வித்துவானால் பிரஹ்ம நிஷ்டையால் நீக்கப்படவேண்டும்.

3. புத்திக்கும் அதன் விருத்திகளுக்கும் சாக்ஷியானவனும், பிரத்தியகாத்மாவு மாகிய தன்னை அறிந்து (ஸோஹம்) நான் அவனே யென்கிற விருத்தியால் தனக் கன்யமானவைகளில் ஆத்ம புத்தியை விட்டொழிக்கவேண்டும்.

4. லோகத்தை அநுசரித்தலைவிட்டு, தேகத்தை அநுசரித்தலைவிட்டு, சாஸ்திரத்தை யநுசரித்தலை விட்டு உன்னிடமுள்ள அத்தியாசத்தை நீக்குவாயாக.

5. சுருதியாலும், யுக்தியாலும், ஸ்வாநுபூதியாலும் ஆத்மாவின் ஸர்வாத்மத்துவத்தை (சகலத்திற்கும் ஆத்மாவாய் இருக்கும் லக்ஷணத்தை) யறிந்து, தன் ஆத்மாவிலேயே சதாகாலமும் நிற்பதால் யோகிகளுக்கு மனம் நசிக்கும்.

6. நித்திரைக்கும், லோக வார்த்தைக்கும் (லோக வியவகாரத்திற்கும்) சப்தம் முதலியவைகளுக்கும் (விஷயங்களுக்கும்) ஆத்மாவின் மறதிக்கும் கொஞ்சமாவது இடங்கொடாமல் ஆத்மாவை ஆத்மாவினிடம் சிந்தனைசெய்.

7. சரீரமானது மாதாபிதாவின் மலத்தினின்றும் உத்பத்தியானது; மலமாம்சங்களால் நிறைந்தது. அதைச் சண்டாளனைப்போல் தூரத்தில் விடுத்து பிரஹ்மமாகி கிருதார்த்தனுவாயாக.

8. மஹாகாசத்தில் கடாகாசத்தை (லயம் செய்வது) போல் ஆத்மாவை பரமாத்மாவினிடம் லயஞ்செய்து அகண்டபாவத்தோடு (பூர்ணஸ்வரூபத்தோடு), ஓ முனியே, நீ எக்காலமும் மௌனமாய் இருப்பாயாக.

9. எக்காலமும் ஆத்மாவால் ஸ்வயம்பிரகாசமாகிய அதிஷ்டானம் தானேயாகி பிண்டாண்டத்தைப் போல் (சரீரத்தைப்போல்) பிரஹ்மாண்டத்தையும் மலஞ்சேர்ந்த பானையைத் (தள்ளுவது) போல் தள்ளிவிட வேண்டும்.

10. தேகத்தினிடம் ஏறியிருக்கும் நான் என்கிற புத்தியை சதானந்தமாக சித்ரூபமான (அறிவு ரூபமான) ஆத்மாவினிடம் வைத்து லிங்கத்தை* விடுத்து எக்காலமும் கேவலனுவாயாக.

11. எதனிடம் ஜகத்தானது கண்ணாடிக்குள் (தோன்றும்) நகரத்தைப்போல் தோற்றுகின்றதோ, அந்த பிரஹ்மம் தானென்று அறிந்து, ஓ பாசற்றவனே, நீ கிருதகிருத்தியனுவாயாக.

12. அஹங்காரத்தினின்றும் விடுபட்டவனாய், சந்திரனைப்போல் நிர்மலமாயும், பூர்ணமாயும், சதாநந்தமாயும், ஸ்வயம்பிரகாசமாயுமிருக்கும் தனது ஸ்வரூபம் அடையப்படுகின்றது.

12. கிரியையின் நாசத்தால் சிந்தையின் நாசமுண்டாகும். அதிலிருந்து வாசனுக்ஷயம் (உண்டாகும்).

13. வாசனுக்ஷயமே மோக்ஷம்; அதுவே ஜீவன்முக்தியென அங்கீகரிக்கப்படும்.

[குறிப்பு:—சிந்தை யென்றால் நினைவு என்றும், துக்கம் அல்லது வியாகுலம் என்றும் பொருள் சொல்லலாம்.]

* அத்தியாச மென்பது ஓர் வஸ்துவினிடம் இல்லாத குணத்தை அதினிடம் இருப்பதாக அறிதல்; பழுதையைப் பாம்பாகப் பார்த்தல், உதாரணமாகும்.

* லிங்கம் என்றால் காரியவஸ்து என்று பொருள். ஆகவே காரியமாகிய தேகங்களினிடம் ஆத்ம புத்தியைவிடுத்து அதிஷ்டானமாகிய பிரஹ்மத்தனிடம் வை என்று பொருளாகும். லிங்கம் என்றால் லிங்க சரீரம் என்று அர்த்தம் சொல்லலாம்.



14. சத்பாவத்தின் ('பிரஹ்மமே உண்மையிலுளது' என்கிற) பாவனை ஸ்திரப்படுவதால், எங்கும் எவ்விதத்திலும் சகலத்தையும் பிரஹ்மமாகப் பார்ப்பதாகிய வாசனுலயம் உண்டாகும்.

15. பிரஹ்ம நிஷ்டையில் தவறுதல் ஒருக்காலும் செய்யக் கூடாது. (பிரஹ்ம) வித்தையினிடம் தவறுதலை பிரஹ்மஞானிகள் மிருத்தியு வென்று சொல்லுவார்கள்.

16. எவ்விதம் பாசியானது ஒதுக்கப்பட்டபோதிலும் க்ஷணமாத்திரங் கூட நிற்காமல் (ஜலத்தை) மூடுமோ அவ்விதமே மாயையும் பராமுகமா யிருப்பவனை (அஜாக்கிரதையாயிருப்பவனை) ஞானியாயிருந்தாலும் (மறைக்கும்).

17. ஜீவித்திருக்கு மெவனுக்கு கேவலத்துவம் (சித்தித்திருக்குமோ) அவனுக்கு விதேகமுண்டானாலும் கேவலத்துவமுண்டு. ஆகையால், ஓ தோஷமற்றவனே, சமாதியில் ஸ்திரத்தை யடைந்து நிர்விகல்பனுவாயாக.

[குறிப்பு:—ஜீவன் முக்தனால் நிர்விகற்ப சமாதியினின்றும் அனுபவிக்கப்படும் அநுபவத்திற்கும் விதேகமுக்தன் அனுபவத்திற்கும் வித்தியாசமில்லை. ஜீவன்முக்தனால் சமாதி கூடி யநுபவிக்கப்படும் அனுபவம் விதேகமுக்தனால் எக்காலமும் எவ்வவஸ்தையிலும் சகஜமாய் அநுபவிக்கப்படும். ஆகவே அப்பியாச முதிர்ச்சியின் ஏற்றக் குறைச்சலால் வித்தியாசமேயொழிய முடிவில் இருவரும் அநுபவிப்பது ஒன்றே. ஆகையால் பிரயத்தின பூர்வகமாய் நிர்விகற்பசமாதி யனுபவத்தை யடைந்தால் பிறகு ஞானி ஜீவாவஸ்தையைக்கடந்து ஜீவன் நசித்த விடமாகிய அருளவஸ்தையை யடைந்தவனுதலால், அவன் நடக்கை அருட்பாரமானபடியால், அருள் நடத்தியபடி நடந்து அவன் காலக்கிரமத்தில் விதேகமுக்தியாகிய சகஜாவஸ்தையை யடைவான். ஆகையால் நிர்விகற்பசமாதியடையும் பரியந்தமே புருஷப் பிரயத்னத்திற்கு இடமாதலால் அதை முயன்று அடைய வேண்டியது முமுக்ஷுவின் கடனாகும். ஜீவன்முக்தியை சுத்த வாசனையாகிய அகண்டவிருத்தி ஸ்வரூபமான மனதின் ரூபநாசமென்றும், விதேகமுத்தியை வாசனுக்ஷய ரூபமான மனதின் அரூபநாசம் என்றும் லக்ஷணம் சொல்வதை யோகவாசிஷ்டத்திலும் பல உபநிஷத்துக்களிலும் பார்க்கலாம்.]

18. நிர்விகற்ப சமாதியால் அத்வைதாத்மாவின் தரிசனம் எப்பொழுதுண்டாகுமோ, அப்பொழுதே அஞ்ஞானத்தாலுண்டாகிய சகல ஹிருதயக் கிரந்திகளும் நாசமாகும்.

[குறிப்பு:—கிரந்தி என்றால் முடிச்சு, அதாவது கோணல், பொய், எனப் பொருளாகும்.]

19. அதனிடம் (பிரஹ்மத்தினிடம்) ஆத்மத்துவத்தை (அது தன் ஆத்மா என்னும் விருத்தியை) பலப்படுத்தி, 'நான்' முதலியவைகளில் (அகங்காரம் முதலியவைகளில் ஆத்மத்துவத்தை) விடுத்து, கடம் துணி முதலியவைகளில் போல் அவைகளிடம் உதாசினத்தோடு (பற்றுதலில்லாமல்) நில்லு.

20. பிரஹ்மா முதல் ஸ்தம்ப பரியந்தம் உபாதிகள் மித்தியா மாத்திர மானவைகள் (என்றறிந்து) பிறகு ஏகாத்மாவாக (எல்லாவற்றிலும் ஒரே ஸ்வரூபமாக) நிற்கும் பூர்ணமாகிய தன் ஆத்மாவைப் பார்க்கவேண்டும்.

21. பிரஹ்மா தானே, விஷ்ணு தானே, இந்திரன் தானே, சிவன் தானே, இந்த ஜகமெல்லாம் தானே, தன்னைவிட வேறொன்றுமில்லை.

22. தன் ஆத்மாவினிடம் ஆரோபிதமாயிருக்கும் சகல ஆபாஸ வஸ்துக்களையும் நீக்குவதால் தானே பூர்ணமாயும், அத்வைதமாயும், கிரியையற்றதாயு மிருக்கும் பரப்பிரஹ்மமே தானாக (மிஞ்சுகின்றான்).

[குறிப்பு:—"ஆரோபம்" என்பதும் முன் சொல்லப்பட்ட "அத்தியாசம்" என்பதும் ஒன்

றையே குறிக்கும். "ஆபாஸம்" என்றால் தோற்றுதல் மாத்திரம்.]

23. ஏகமாகிய வஸ்துவினிடம் ஜகத்தென்னும் விகல்பமானது அசத்கல்பம். நிர்விகாரமானதும் நிராதாரமானதும் நிர்விசேஷமுமான பிரஹ்மத்தினிடம் பேதம் எவ்விதம் (உண்டாகும்.)

[குறிப்பு:—"அசத்கல்பம்" அசத் என்றால் பொய், அசத்கல்பமென்றால் பொய்க்கு கிட்டதட்ட சமானமானது. நிர்விகாரம்=மாறுதலற்றது. நிராகாரம்=ரூபமற்றது. 'அசங்கல்போ' எனவும் பாடமுண்டு]

24-25. பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் பொருள் முதலிய (திரிபுடி) பாவங்கள் முழுதிலுமற்றதும், நிராமயமானதும் கல்பகாலத்துச் சமுத்திரம் போல் (பிரளயகாலத்துச் சமுத்திரம் போல்) பரிபூர்ணமா யிருக்கும் சிதாத்மாவினிடம் (அறிவுமயமான ஆத்மாவினிடம்) எதனிடத்தில் பிராந்தியின் (மயக்கத்தின்) காரணம் (ஆகிய அஞ்ஞானப்) பிரகாசத்தினிடம் இருளைப்போல் லயித்து (நசித்து) இருக்கின்றதோ, அப்படிக்கொத்த அத்வைதமாயும் நிர்விசேஷமுமான பரதத்துவத்தினிடம் பேதம் எங்ஙனம்?

26. ஏகாத்மகமான (ஏகஸ்வரூபமான) பரதத்துவத்தினிடம் பேதமானது எவ்விதம் வசிக்கக்கூடும்? சுகமாத்திரமாயிருக்கும் சுஷுப்தியில் (பூர்ணநித்திரையில்) பேதம் எவனால் பார்க்கப்படும்? (ஒருவராலும் முடியாதென்றவாறு.)

[குறிப்பு:—"பேதகர்த்தா" என்றும் பாடமுண்டு. அப்பொழுது பேதம் செய்வோன் எங்ஙனம் வசிப்பான் என்று மொழிபெயர்க்கலாகும்.]

27. இவ்விகல்பம் சித்தத்தை(மனதைக்) காரணமாக வுடைத்து. சித்தமில்லாவிடில் (அது) கொஞ்சமுமில்லை; ஆதலால் சித்தத்தை ப்ரத்தியக் (ஆத்மா) ரூபமான பரமாத்மாவினிடம் சேர்க்கவும்.

[குறிப்பு:—'சேர்க்கவும்' என்பது மூலத்தில் "சமாதேஹி" என்று காணப்படும். "சமாதி" என்பதும் இதே தாதுவிலிருந்து தான் உற்பத்தி யாதலால் அதற்கு சேர்த்தல், ஒன்றுபடுத்தல் எனப்பொருளாகும்.]

(இன்னும் வரும்.)

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

——:-:——

## Kannaki—A Social Drama.

## கண்ணகி.

அங்கம் IV.] [காட்சி 3.

இடம்—மதுரையில் ஒரு கடைவீதி.
காலம்—பிற்பகல்.

பாத்திரர்— { கோவலன்.
பொற்கொல்லன்.

கோவலன்:—(தனக்குள்) அதோ ஒரு பொற்கொல்லன் மிகுந்த ஆடம்பரத்துடன் செல்லுகிறான்! அவனைச்சூழ்ந்துகொண்டு நூற்றுக்கணக்கான பொற்கொல்லர்கள் போவதையும், அவன்செல்லும் காம்பீரத்தையும் பார்த்தால் அவன அரண்மனை அந்தப்புரத்து ஸ்திரீகளுக்கு ஆபரணங்கள் செய்துகொடுக்கும் பொற்கொல்லனைப்போல் காணப்படுகிறான்! ஆதலால் நான் கொண்டுவந்திருக்கும் சிலம்பை இவனிடம் காட்டினால் அதற்குச் சரியானவிலைஇன்னதென்றுசொல்லுவான்! (பொற்கொல்லனை நெருங்குகிறான்.)

பொற்கொல்லன்:—(கோவலனை நோக்கி) ஐயா; என்ன விசேஷம்?

கோவலன்:—ஐயா; என்னிடத்தில் ஒரு காற்சிலம்பு இருக்கிறது! அதனுடைய மதிப்பு இன்னதென்று சரியாய்ச்சொல்ல முடியுமோ?

பொற்கொல்லன்:—ஐயா; எனக்கு அவ்வளவு சாமர்த்தியம் இருக்குமோ; இருக்காதோ; நான் அறியேன்! ஆனாலும் நான் அரண்மனைக் கொல்லன்! சிலம்பைக் காட்டினால் பார்த்துக் கூடியவரையில் சரியான மதிப்பைத் தெரிவிக்கக் காத்திருக்கிறேன்!



கோவலன்:—ஆனால் சரி; சந்தோஷம்! இந்தாருங்கள்! (சிலம்பைக் கொல்லன் கையில் கொடுக்கிறான்.)

பொற்கொல்லன்:—(சிலம்பினுடைய உயர்வைக் கண்டு ஆச்சரியப்பட்டவனாய்) ஐயா! உயர்ந்த மாணிக்கங்களும், வைரக்கற்களும், மரகதக்கற்களும், கண்ணைப்பறிக்கும் படியான பிரகாசத்தோடு கிளிச்சிறை என்னும் உயர்ந்த பசும் பொன்னில் அழுத்தப்பட்டு, அநேக அருமையான சித்திரவேலைகளோடு இலங்குகின்ற இந்தச்சிலம்புடைய மதிப்பை அளவிட்டுச் சொல்ல என்னால் முடியாது! ஆனாலும் இப்படிப்பட்ட சிலம்பை வாங்க யோக்கியதையுடையவர் அரசனுடைய பட்டமகிஷியே! ஆதலால் தங்களுக்கு நம்பிக்கையும் இஷ்டமுமிருந்தால் சற்று நேரம் இங்கேயே பக்கத்திலிருக்கும் என்னுடைய வீட்டில் தங்கியிருங்கள்! யான் அரசனுடைய அரண்மனைக்குச் சென்று அரசனுக்குத் தெரிவித்து அவருக்கு வேண்டியதாயிருந்தால் தகுந்த ரத்தின வியாபாரிகளை இங்கே அழைத்து வருகிறேன்! அவர்கள் மதிப்பிட்டு விலை சொல்லுவார்கள்! சிலம்பை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டு இங்கேயே இருக்கிறீர்களா?

கோவலன்:—ஐயா; அப்படியே செய்யுங்கள்! நான் தாங்கள் வருமளவும் இவ்விடத்திலேயே இருக்கிறேன்! (கோவலன் அங்கேயே தங்கியிருக்கிறான். பொற்கொல்லன் அரண்மனை நோக்கிச் செல்லுகிறான்.)

[4- அங்கம் 3-ம் காட்சி முற்றும்]

நாகை ஸி. கோபாலகிருஷ்ணன்.

——►◆◄——

## Sita-A Tale of Hindu Domestic Life

## சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

33 – வது அதிகாரம்.

——:-:——

இராமச்சந்திரய்யர் சீதாவை நீ எப்படி காடன் துரையிடத்தில் உத்தரவு வாங்கினாய் என்றார். சீதா அவரைதான் நேரில்போய்ப் பார்த்ததாகவும் தான் சீதாதான் என்பதற்கு இராமச்சந்திரய்யர் கடிதங்கள் எல்லாவற்றையும் கொண்டுபோய்க் காண்பித்ததாகவும் துரைக்கு வேண்டியவரான ஒருவரும் சீதாதான் என்று அவருக்குச் சொன்னதாகவும் அதன் பேரில் துரையும் அந்த கோளாறுக்கு சந்தோஷப்பட்டு கேள்விகள் கேட்கவேண்டிய விதமும் தான் இன்னாரென்று எப்போது சொல்லுகிறதென்ற விபரமும் எல்லாம் துரையே சொல்லித்தந்ததாகவும் சொன்னாள். எல்லாம் சொல்லிவிட்டு பிறகு சீதா நான் தங்களுக்கு ஒருலாபமும் உண்டுபண்ணி யிருக்கிறேனென்றாள். இராமச்சந்திரய்யர் அது என்னவென்றுகேட்க, சீதா துரை அதில் 2000 ரூபா தனக்கு வேண்டாமென்றும் தன்வேலையை நான் குறைத்துவிட்டபடியால் தான் 2000 ரூபா குறைத்துக்கொள்ளாமலிருப்பது நியாயமில்லையென்றும் சொல்லி ரூபா 2000 வாபீஸ் செய்ததாக அதை இராமச்சந்திரய்யரிடம் கொடுத்தாள். இராமச்சந்திரய்யருக்கு சீதாவின்மீது வெகு சந்தோஷம். சீதா எனக்கு ஜட்ஜி நீதான் என்றார். பிறகு இராமச்சந்திரய்யர் உன்னைத் தூக்கிப்போனதுயார் என்றார். சீதா அது ஒரு பெரிய சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள்:-

முன் நாராயண சாஸ்திரிகள், வெங்கட்டராம சாஸ்திரிகள், சுப்பய்யன் எல்லோரும் ஜெயிலிலிருந்து தப்பியோடிப்போனதாக தமுக்கு போட்டார்களே, அவர்கள் தப்பித்துக்கொண்டது நமக்காகத்தான். சின்ன சாமி அய்யர் தப்பித்துக்கொண்டதும் நமக்காகத்தான். இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி யோஜித்து என்னை படுக்கையோடே தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். பிறகு நான கண்விழித்துக்கொண்டு பார்த்தேன். சங்கதியை அறிந்து அவர்களிடம் சகஜமாய் இருப்பதுபோல் பாசாங்குசெய்தேன். ஆனால் அப்போது எனக்கு அவர்கள் மீது இருந்தகோபத்தை என்னவென்றுசொல்வது! இருக்கட்டுமென்று பொறுத்துக்கொண்டுமிருந்தேன். அவர்கள் எல்லாரும் சங்கீத வித்வான்போல் வேஷம்போட்டுக்கொண்டு நாராயணசாஸ்திரிகள், சுப்பய்யன் இவர்கள் பாடுகிறதும் வெங்கட்டராம சாஸ்திரிகள் தாளம்போடுவதும் கிஷ்ணசாமிய்யர் சொம்பில் அரிசி வாங்குவதுமாக ஊர் ஊராய்த் திரிந்தார்கள். என்னை சமயல் செய்து போடச் சொன்னார்கள். நாராயணசாஸ்திரிகள் ஓர் தம்பூரு சம்பாதித்துக்கொண்டு அதற்கு துணி போட்டு வெகு அழகாய் வைத்திருந்தார். இது எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நாங்கள் புதுப்பட்டி என்ற ஒரு பட்டிக்காட்டுக்குப் போனோம். அங்கே இருக்கும் ஜனங்கள் கிரம்ப கர்னாடகங்கள். அவர்களுக்கு சங்கீதமென்பதே தெரியாது. தம்பூர்

கூட பார்த்ததில்லை. நாங்கள் எல்லோரும்போய் அந்த ஊரில் தகுந்த தனவான் யாரென்று கேட்டோம். அந்தஊர் மணியம் வெங்கடேசய்யர் தகுந்த தனவான் என்றும் சொன்னார்கள். உடனே நாங்கள் அவர் வீட்டை நோக்கிப்போனோம். போனதும் அவர் நீ யாரென்று கேட்டார், நாராயணசாஸ்திரி நாங்கள் தஞ்சாவூர் என்றார். அவர் அப்படியா என்று சொல்லிவிட்டு என்ன வேண்டுமென்றார். நாராயண சாஸ்திரிகள் உங்களுக்கு சங்கீதம் வேணுமோ என்றார். அவர் சங்கீதமென்றால் ஏதோ சாமான்கள் என்று நினைத்துக்கொண்டு எங்கே எங்கே அந்த மூட்டையை அவரும் பார்ப்போம் என்றார். நாராயணசாஸ்திரிகள் சங்கீதம் என்றால் மூட்டையா நன்றாய் இருக்கிறதே என்றார். அவர் பின்னே என்ன ஒய் அந்த சாமானை யெடுமே என்றார். நாராயணசாஸ்திரிகள் சாமான் இல்லை. பாட்டு என்றார். அதற்கு அவர் கோபித்துக்கொண்டு என்ன ஒய் நினைத்து நினைத்து பேசுகிறீர்கள் போம் என்றார். நாங்களெல்லாம் போய்விட்டோம். கொஞ்சம் தூரம் போனபிறகு அவர் தம்பூரு கொண்டுபோன நாராயண சாஸ்திரிகளை பார்த்து ஒய் நீளமே நீளமே என்று கூப்பிட்டார். நாங்கள் திரும்பிப் பார்க்க, உங்களைத்தான் நீளமாக ஏதோ வைத்து கொண்டிருக்கிறீர்களே அதற்கு உங்களை கூப்பிட்டேன் இங்கே வாருங்கள் என்றார். நாராயண சாஸ்திரிகள் போய் ஏனய்யா கூப்பிட்டீர்கள் என்றார். நாங்களும் கூட இருந்தோம். அவர் என்பெண்சாதி உங்களை கூப்பிடுகிறாளய்யா உங்களிடம் புல்லாக்கு வாங்கவேணுமாம் என்றார். நாங்கள் உள்ளேபோய் அந்தம்மாளிடம் என்ன வேண்டுமென்று கேட்டோம். அந்தம்மாள் உங்களிடம் சங்கீதம் தானா வியாபாரம், புல்லாக்கு இல்லையா என்றாள். நாங்கள் இல்லையம்மா; எங்கள் சங்கீதத்தை கொஞ்சம் கேட்கவேண்டு மென்றுசொல்லி உட்கார்ந்தோம். நாராயண சாஸ்திரிகள் பாடுவதற்காக தம்பூரை நிறுத்தி உட்கார்ந்தார். அந்தம்மாள் அதை பார்த்து தம்பூர் துணிபோட்டிருததால் அது யாரோ மனிதனென்று நினைத்துக் கொண்டு ஏனய்யா நீங்களெல்லாம் உட்கார்ந்து இருக்கிறீர்களே அவர் மட்டும் ஏன் நிற்கிறார் என்று தம்பூரை காண்பித்தாள். நாராயண சாஸ்திரிகள் இது தம்பூர் என்றார். தம்பூர் என்ற வார்த்தையை மட்டும் காதில் கேழ்க்க அவள் புருஷன் வெகுவேகமாய் ஓடிவந்து நாராயண சாஸ்திரிகள் முதுகில் ஒரு அறை அறைந்து ஏ பொலீக்கி என்னிடம் தஞ்சாவூர் என்று சொல்லிவிட்டு அவளிடம் தம்பூரென்று வேறு ஊர் பேர் சொல்லிகிறாயா என்றார். நாராயண சாஸ்திரிகளுக்கு சிரிப்பு ஒரு பக்கமும் பட்ட அடியால் வருத்தம் ஒரு பக்கமுமாக வந்து, அய்யா, தம்பூர் என்றால் இந்த வாத்தியத்துக்கு சொல்வது என்றார். அந்த பிராமணனிடம் இதற்குள் இரண்டு மூன்று போலீஸ் கான்ஸ்டேபில் வந்தார்கள். அந்த கிராமமுனிசீப். உடனே கான்ஸ்டேபில்களைப்பார்த்து அடே இவர்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். இவர்கள் சூனியக்காரர்கள் போலிருக்கிறது. நமதுவீட்டுள் ஒருபெரிய பொம்மையைக் கொண்டுவந்து சூனியம் வைக்கப் பார்க்கிறார்கள் என்றார். அவர் தம்பூரைத்தான் பொம்மைஎன்று சொன்னார். நான் உடனே இதுதான் சமயம் என்று கண்டு அவருடனே உள்ள சங்கிதியை சொல்லி கஜட்டில் காணோமென்று போடப்பட்ட பெண் நான்தானென்றும் உன்னைக் காண்பித்துக் கொடுத்தால் எங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கிடைக்குமென்றும் அவர்களையும் காண்பித்தால் சர்க்காரில் இனாம் கிடைக்கு மென்றும் சொன்னேன். நாராயண சாஸ்திரிகள் அங்கேயே என்னை கொன்றுவிடப்பார்த்தார். நான் தப்பித்துகொண்டுபிறகு அந்த கிராம முனிசீபால் கூட்டிவரப்பட்டு இங்கே வந்ததும் கேஸ் இருக்கிறது என்று தெரிய வந்தது. உடனே யோசனை செய்துகொண்டு காடன் துரையிடம் போனேன். பிறது நடந்தது தங்களுக்குத் தெரியுமென்றாள்.

இராமசந்திரய்யருக்கு இதை கேட்க வெகுஆச்சரியமா யிருந்தது. பிறகு நாராயணசாஸ்திரிகள் வெங்கட்டராம சாஸ்திரிகள் சுப்பய்யன் இவர்களைஜயிலில் இருந்து ஓடி யொளித்ததற்காக மறுபடி அதிகமாக இரண்டுவருஷம் போடபட்டதாகவும்கிருஷ்ணசாமிய்யருக்கு திட்டேத்தி விட்டுவிடும்படி உத்தரவு ஆனதும் இராமச்சந்திரய்யருக்குத் தெரியவந்தது.

இராமச் சந்திரய்யர் கேசில்பொய்ச் சாக்ஷிசொன்னவர் களுக்கெல்லாம் விசாரணைநடந்தது. குற்றம் நன்றாய் விளங்கியது. ஜமீன்தாரைத் தவிர மற்றவர்க்கெல்லாம் 2-வருஷம் கடினக்காவல் போட்டார்கள். ஜமீன்தார் தெய்வசிகாமணிமுதலியார்பொய்சொன்னதாக காணப்படவில்லையென்றும் அவரைமட்டும் விடுதலைசெய்துவிட்டார்கள். இராமச்சந்திரய்யரைப்பார்க்க வேண்டுமென்றுஅவருடைய உறவினர்களில்பூலாவடியிலிருந்து ஒரு சாமி என்றவரும் அவர்பெண்ஜாதி



தேவியும் புறப்பட்டுப்போனார்கள். இவர்கள் இதுவரையில் பூவரசனல்லூருக்கு போனதே இல்லை. இராமச்சந்திரய்யர் மாமனார்தனக்கு போகசரிப்படவில்லையென்று அவரை அனுப்பினார்; அவர்கள்வரும்போது தன்பேரன் ராஜகோபாலனை கூட்டிவரும்படி சொல்லிஅனுப்பினார். இவர்கள் பூவரசனல்லூருக்கு எப்படிபோகிறதென்று எதிரில்வந்த ஓர் அம்மாளை கேட்க அவள் நீர் இன்னும் 18-மைல்போய் சேஷனை விசாரித்தால் தெரியுமென்றாள். அந்தம்மாள் கர்னாடக மானதால் ஸ்டேஷனென்பது வாயில் நுழையாமல் சேஷனென்றாள். சாமி அய்யர் சேஷன் என்பது ஒரு மனிதனென்று எண்ணிக்கொண்டே அந்த ஊர் போய் சேஷனைப்பார்க்க வண்டிபோகுமா என்றார். அங்கே ஒருவன் சேஷனிடம் கொண்டு போய் விடுவதாக ஒப்புக் கொண்டான். சாமி அய்யர் தேவி இருவரும் வண்டியிலேறிக் கொண்டுபோனார்கள். வண்டிக்காரன் வண்டியை நிறுத்தினதும் சாமி அய்யர் வண்டிக்காரனைப் பார்த்து சேஷன் எங்கேடா என்றார். வண்டிக்காரன் இதுதானென்று ஓர் பெரிய கட்டிடத்தை காண்பித்தான். சாமி அய்யர் அக்கட்டிடத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டு அடே அப்பா இவனா சேஷன். சேஷா நீ எத்தனை பெரியவண்டா எத்தனை உயரமடா என்றார். அங்கே ஓர் பெரியநதி ஓடிற்று. சாமிஅய்யர் பட்டிக்காட்டில் நதியேகிடையாது. எல்லாம் ஏத்தக்கிணறுதான். ஏத்துவைத்து இறைத்துத்தான் ஜலமெடுக்கவேணும். அவர் இந்த நதியைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுக்கொண்டு, அடேயென்சாமி, எவ்வளவு ஜலமடா ஆயிரம் ஏத்து வைத்தாலும் இந்தஜலம் இறைத்துமாளாதுபோல் இருக்கிறதேயென்றார். இவர் இப்படி யோஜித்துக் கொண்டு நிற்க, ஒருவன்வந்து ஒய் டிக்கட்டு வாங்கினீரா என்றான். உடனே சாமிஅய்யர்போய் டிக்கட்டு கொடுக்குமிடத்தில் எல்லோரும் கைவிடுவதைக் கண்டு தானும் கைவிட்டு, ஐயா இக்கட்டு இக்கட்டு என்றார். அவர் கோபித்துக்கொண்டு, என்னஒய் இக்கட்டாவது யாருக்கு இக்கட்டு, உங்கப்பனுக்கு இக்கட்டுவரட்டும்! பணத்தையெடு டிக்கட்டு என்று சொல் என்றார் சாமிஅய்யர் ஐயா டிக்கட்டுதான் எடும் எடுமென்றார். அவர் பணத்தை எடுங்கணும் பிறகு பேசலாமென்றார். சாமிஅய்யர் அய்யா எல்லாரும் கைநீட்டிக் கேழ்க்கிறார்களே என்னிடம் மட்டும் பணம் கேழ்க்கிறீரே, இனாமாய் கொடுக்கக்கூடாதா என்றார். அவர் ஒய்முட்டாள்! எல்லாரும் பணம் கொடுக்கிறார்கள். உமக்கு என்ன டிக்கட்டு வேணுங்காணும் என்றார். சாமி அய்யர் ஐயா எனக்கு ஒரு ஆம்பளை டிக்கட்டு ஒரு பெம்பளை டிக்கட்டு வேணுமென்றார். அவர் கோபித்துக்கொண்டு எல்லாம் ஒரே டிக்கட்டுதான் என்றார். சாமிஅய்யர் ஆனால் இரண்டு டிக்கட்டு எடுங்களென்றார். அவர் எவ்விடத்துக்குங்காணும் டிக்கட்டு என்றார். சாமிஅய்யர் அகடத்துக்கு, அகண்டத்துக்கு என்றார். அவர் ஒய் ஆருக்குங்காணும் அகண்டது! ஸ்டேஷனைச் சொல்லும் என்றார். பிறகு சாமிஅய்யர் சாலூர் ஸ்டேஷனென்றார். அவர் பணத்தையெடும் என்றார். சாமிஅய்யர் எவ்வளவு என்றார். அவர் ஒருரூபா எடுமென்றார். சாமிஅய்யர் சொல்லித்தாருமென்றார். அவர் ஒய் 2-வது பேச்சுக்கிடையாது. போடும் ஒரு ரூபாயை என்றார். சாமிஅய்யர் என்னய்யா போக்குவண்டிக்குக்கூடவா ஒருரூபா கேழ்க்கிறது கொஞ்சம்குறைத்துத்தாரும் என்றார். அவர் கோபித்துக்கொண்டு ஒய் வெளியேபோம் என்கவும், சாமிஅய்யர் 1 ரூபா கொடுத்துவிட்டார். டிக்கட்டு வாங்கினதும் ஒருவன் மணியை அடித்துவிட்டு டிக்கட்டு வாங்கினவர்களெல்லாம் பிளாட்பாரத்துக்குப் போகலாமென்று கத்தினான். உடனே தேவி சாமி அய்யரைப்பார்த்து இதென்ன டிக்கட்டு வாங்கினவர்களெல்லாம் பாட்டு பாரத்துக்கு போகலாமென்கிறானே. ஒருவேளை பாட்டு பாடாதபோனால் உள்ளே விடமாட்டார்களோ என்னமோ என்றாள். சாமி அய்யர் ஆனால் பாடு என்றார். உடனே அவள் வெகு பலமாய்பாட ஆரம்பித்து விட்டாள். இப்படி இவள் பாடிக்கொண்டிருக்கும்போது ரயில்வந்து விட்டு புறப்பட்டு போய்விட்டது. ரயில போனபிறகு சாமிஅய்யர் வெகு வேகமாய் ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய் என்னய்யா ஸ்டேஷன் மாஸ்டரவாள் ரயில் எப்போது வரப்போகிறது. சாவகாசம் இருக்கிறதோன்னோ என்றார். அவர் உமக்கு சாவகாசத்துக்கென்னய்யா குறைச்சல். ரயில் இப்போதுதான் போனது. நாளை இன்னேரம் வரையில் உமக்கு சாவகாசந்தானென்றார். சாமி அய்யர் உடனே வாயிலும்வயிற்றிலும் அடித்துக்கொண்டு அய்யா எனக்கு டிக்கெட்டு கொடுத்து என்னிடம் சொல்லிக்கொள்ளாமல் எப்படி நீர் வண்டியை விட்டீர். எங்கூர்தபால் வண்டியைவிட உம்மவண்டி வெகு ஓசத்தியோ! அவன் கூட நான் டிக்கட்டு வாங்கி விட்டால், பாதிராத்திரியில் ஆத்தில் வந்து என்னை எழுப்புவானே! என் ரூபாயை கொடும். நானும் அப்

போ முதல் ரயில்வருமென்று உயர இருக்கும் தந்தியை பார்த்துக்கொண்டே இருந்தேனே. எங்கேங் காணும் ரயில்போனது! என்னிடத்தில் பொய்பேசுகிறீரா என்றார். ஸ்டேஷன் மாஸ்டர் ரொம்ப நல்லவர் அவர் மறுபடியும் சாமி அய்யரை பார்த்து, ஓய் என்ன சுத்த கர்நாடகமாயிருக்கிறீர்! தந்தியில் ரயல் போகவாவது உமக்கு பைத்யமா, ரயில் கீழே அல்லவா போகுமென்றார். சாமி அய்யர் பிறகு மறு ரயிலிலாவது போகலாமென்று அங்கேயே இருந்தார். மறுநாள் 12 மணி நேரமான பிறகு ஓர் ரயில் வந்தது. ரயில் வந்த சமயத்தில் தேவி கக்கூஸுக்கு போய்விட்டாள். ரயில் ஊதிவிட்டது. மணியடித்துவிட்டார்கள். சாமிஅய்யர் இதைப்பார்த்து, ரயில் போகப்போகிறது. சீக்கிரம் வாடியென்று கத்தினார். தேவி, அவரைப்பார்த்து சித்தே இருக்கச்சொல்லுங்கோ இதோ சீக்கிரம் வந்துவிடுவோளென்று வண்டிக்காரங்கிட்ட சொல்லுங்கோ! என்றாள். கடைசியில் வண்டி நகர ஆரம்பித்தது.

சாமிஅய்யர் மறுபடியும் அடியேவாடி வண்டிபோகிறது சீக்கிரம் வா என்றார். அவள், இதென்ன சனியன் அவனை கட்டேலாவக்கா அவனுக்கு என்ன அவசரம். டிக்கட்டு கொடுத்துவிட்டு அவன் வண்டியை விட்டுவிடுவேனோ என்றாள். சாமிஅய்யர் அடி வண்டி புறப்பட்டுவிட்டது. நேத்திக்கி டிக்கெட்டை கொடுத்துவிட்டு நம்மோடே சொல்லாமல் வண்டியை விட்டுவிடவில்லையா! இவர்கள் அயோக்யபயல்களடி சீக்கிரம் வா என்றார். அவள், உங்களுக்கு ஒன்னும் தெரியவில்லையே உங்களை கேக்காதே வண்டியை அந்த கட்டேலேபோவன் விட்டால் வண்டியை இழுத்துக்கொள்ளுங்களேன் என்றாள். இவ்வளவு சால்ஜாப்பும் அவள் கக்கூசுக்குள்ளவே இருந்து சொல்லிக்கொண்டிருப்பதற்குள் வண்டி புறப்பட்டுவிட்டது.

சாமிஅய்யர் பெண்டாட்டிசொல்படி வண்டியை இழுத்துப்பிடித்தார். அது இவரையும் இழுத்தது. உடனே அவர் பெண்டாட்டியைக்கூப்பிட்டு அடியே சீக்கிரம் வா! நான் வண்டியை இழுக்கிறேன் அது என்னையும் இழுக்கிறது என்றார். இதற்குள் போர்ட்டர் ஒருவன் அடே இதுயார் பட்டிக்காட்டு மனுஷன்! என்று சாமிஅய்யரை தூரத்தள்ளினன். சாமிஅய்யர் ஏலே பணம் வாங்கிக்கொண்டு நீ என்னை இப்போ பட்டிக்காட்டு மனுஷனென்று சொல்லமாட்டியா! பணம் கொடுக்கும்போதுமட்டும் நான் பட்டணவாஸத்து மனுஷனோ என்று சொல்வதற்குள் வண்டி போய்விட்டது. கடைசியில் சாமி அய்யருக்கு சமாதானம் சொல்லி ஒருவர் தன் வீட்டுக்குக் கூட்டிப் போய் அவருக்கு ரயிலின் விபரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார். சாமி அய்யர் பிறகு அவருடைய ஒத்தாசையின்பேரில் பூவரசனல்லூருக்கு போய்சேர்ந்தார். அங்கே சீதா எல்லோரையும் பார்த்துவிட்டு அங்கேயே கொஞ்சநா ளிருந்துவிட்டு பிறகு வரும்போது இராமசந்திரய்யருடைய பிள்ளை ராஜகோபாலனைக் கூட்டிக்கொண்டு பூலாவாடிக்குப் போய்சேர்ந்தார். பூலாவாடியில் சாமி அய்யர் ரயிலில் போன கதை இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இராமசந்திரய்யர் இனி தனக்கு விசாரமில்லையென்று திருச்சினாப்பள்ளியில் வெகுசிறப்பாயிருந்து வந்தார். அவருக்கு சீதாமீது முன்னைவிட இப்போது பதின் மடங்கு அதிக பிரியம் எற்பட்டது. இப்படி 1 வருஷமிருக்க பிறகு ஒரு நாள்சீதா உள்ளே ராத்திரி கட்டிலில் படுத்திருக்க விடிந்ததும், கட்டிலையுங் காணோம்,சீதாவையுங்காணோம் இராமசந்திரய்யர் எங்கு தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. முன்போல தமது சத்துருக்கள் தாக்கிக்கொண்டுதான் போயிருக்கவேண்டும் என்று கடைசியில் ராமசந்திரய்யர் தீர்மானித்தார். இப்படியிருக்க, பூலாவடியில் தன் குழந்தையையும் காணோமென்று தந்திவந்தது. இராமசந்திரய்யர் என்ன செய்வார்! அவருக்கு எரிகிற உடம்பில் எண்ணெயைக் காச்சிக்கொட்டினது போலிருந்தது. முன் ஒருவளைத் தேடவேண்டியிருந்தது. இப்போதோ இருவரைத் தேடவேண்டி யிருந்தது. இராமச்சந்திரய்யர் தாயார் அய்யய்யோ பகவானே என் ஒருபிள்ளையையும் என் இப்படி கஷ்டப்படும்படிவிட்டு சோதிக்கிறீரென்று அழுதாள். கடைசியில் இராமச்சந்திரய்யர் அவர்களுக்கு எல்லாம் தைரியம் சொல்லிவிட்டு, ஊர் ஊராய்ப்போய் தேடிப்பார்த்து, கெஜட்டுகளிலும் அவர்களைக் கண்டுபிடித்துக்கொடுக்கிறவர்களுக்கு இனும் கொடுப்பதாயும் பிரசுரம்செய்து, எப்படியாவது அவர்களைக் கண்டுபிடித்துக் கூட்டிவருவதாய்ச் சொன்னார். பார்வதியம்மாள் தானும் வருவதாகச் சொல்ல அவர் உனக்கும் என் வீண் அலைச்சல் உன்னைக்கூட்டிப்போனல் எனக்கும் தேடமுடியாது. உன்னையும் கவனித்துக்கொண்டிருக்கவேண்டும்: நான்மட்டும் போய்வருகிறேன்! ஆனல் வாரத்திற்கொருதரம் கடிதம் போடுகிறேனென்று சொல்லி சீதாவைத் தேடுவதற்குப் புறப்பட்டார்.

(இனும்வரும்.)

எஸ். ராமஸ்வாமிஐயர்.

---



# TEMPLE TRADITIONS.

## கோயில் புராணம்: "திருவூடல்*"

சித்தலைப்பின் கீழ் சிவனும் சக்தியும் அதாவது அறிவானும் அறிவும் ஒன்றுபட்டு அத்துவிதமாகக் கூடலும், கூடலுவகையிலும் ஊடலுவகை பெரிதென்று, திருக்கலியாண மஹோற்சவமான மறுநாளே "திருவூடல்" கொண்டு விளையாடி, ஊடலும் கூடலும் உள்ளமொன்று பட்டவிடத்தில் ஒன்றேயாமென்று காட்ட, "பந்தம் பறியுற்சவம்" என்றும், "மட்டையடி" யென்றும் "திருவூடல்" விளையாட்டுக்காட்டி தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தியடிகள் வந்து இருவருக்கும் ஊடல்தீர்த்தலும், மகத்தான தத்துவார்த்தத்தை விளக்குவதாயிருக்கிறதென்று போன வருஷம் திருமயிலையில் நடந்த பந்தம்பறியுற்சவக்காட்சியைக்கண்டு உவந்து விவேகசிந்தாமணியில் விளக்கிக் காட்டினோம். அத்தருணத்தில் "ஓதுவார்" ஒருவரால் பரிவட்டங் கட்டிக்கொண்டு ஓதப்பட்டு வரும் திருவூடல் விளையாட்டுப் பாடல்களை ஸ்ரீமத் விசுவநாதக் குருக்கள் அவர்கள் ஏட்டுப்பிரதியாக வைத்திருந்த பண்டாரத்தின் கையேட்டுக் குறிப்பைக் கொணர்ந்துகாட்டி உளமகிழச்செய்தார். அப்பாடல்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும் "ஞானப்பிரகாசம்" என்னும் பத்திரிகையிற்பிரசுரிக்கப்பட்டிருப்பதால், அதை யெடுத்து எல்லாருமறியக் கீழே பிரசுரிக்கிறோம்.—

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவுளக் குறிப்பின்படி சுவாமி சந்நிதானத்திற் பணிந்த மொழியும் தணிந்தநடையும் ஒதுக்கிய ஆடையும் புதைத்தவாயு முடையராய் வந்து, தமது ஆன்மநாயகராகிய சிவபெருமானுடைய சரணாரவிந்தங்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய் நின்றாராக.

பண்—நேரிசை.

நம்பியாரூரன்வந்தான் நாவலூர்நம்பிவந்தான்
உம்பராலறியவொண்ணா வுண்மைகளுரைப்பான்வந்தான்
செம்பொனல்மதில்கள்சூழ்ந்த திகழ்செல்வந்திருவாரூரிற்
றம்பிரான்றோழன்வந்தா னென்றனதாசைசின்னம்.

வசனம்.

சுவாமி சுந்தரமூர்த்திநாயனாரை அழைத்துத் திருவூடல் தீர்க்கும் திருவருட்குறிப்பாகப் பரிவட்டங்கட்டி விடுத்தருளும்பொழுது சுவாமி சந்நிதானத்திலே ஓதுகின்ற தேவாரம்:

பண்—கொல்லிக்கௌவாணம்.

பத்தூர்புக்கிரந்துண்டு பலபதிகம்பாடிப் பாவையரைக்கிறிபேசிப் படிறுடித்திரிவீர் [ரங்கேர்
செத்தார்தமெலும்பணிந்து சேவேறித்திரிவீர் செல்வத்தைமறைத்துவைத்தீ ரெனக்கொருநாளி
முத்தாரமிலங்கிமிளிர் மணிவயிரக்கோவை யவையணிந்தருளி மெய்க்கினிதாநாறுங்
கத்தூரிகமழ்சாந்தும் பணித்தருளவேண்டுங் கடனாகைக்காரோண மேவியிருந்தீரே;

* யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ. வைத்தீசுவர சுவாமி கோயிலிலே மார்கழி மாசத் திருவாதிரையிலே சந்நிதானத்திலே ஓதப்பட்டுவரும். [தென்னிந்தியாவிலுள்ள சிவன்கோயில்கள் பலவற்றிலும் இதுவே யோதப்பட்டு வருகிறது]

வசனம்.

இந்தத் தேவாரத்தைச் சுவாமி சந்நிதானத்திலே ஓதி விண்ணப்பஞ்செய்து நின்றபொழுது சுந்தர மூர்த்தி நாயனருக்குச் சுவாமி திருவுளம் பற்றுமாறு:—

முன்னே பரவையாருக்கும் உமக்கும் உண்டான ஊடலை நாமல்லவோ தீர்த்துவிட்டோம். நீரும் நம்முடைய ஊடலைப் போய்தீர்த்துப் பார்ப்பதியாரை (பார்வதியாரை) அழைத்துவாரும் என்று சுவாமி திருவருள் செய்தலும் தம்பிரான்தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனர் பார்ப்பதி (பார்வதி) தேவியார் சந்நிதானத்தை அடைந்து விண்ணப்பஞ்செய்து வினவி விடைகொண்டு ஓதுகின்ற

தேவாரம்.

பண்—கோல்லி.

ஒருத்திதன் றலைச்சென்றாளைக்கரந்திட்டானுலகமேத்த
ஒருத்திக்குநல்லனுகிமறப்படுத்தொளித்துமீண்டே
யொருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினையுழுண்ணி
யொருத்திக்குநல்லனல்லனெற்றியூருடையகோவே.

திருவிருத்தம்.

கற்றூர்பயில்கடனாகைக்காரோணத்தெங்கண்ணுதலே
விற்றாங்கியகரம்வேனெடுங்கண்ணிவியன்கரமே
நற்றாணெடுஞ்சிலைநாண்வலித்தகரநின்கரமே
செற்றார்புரஞ்செற்றசேவகமென்னைகொல்செப்புமினே.

வசனம்.

இந்தத் தேவாரங்களை ஓதிச் சுந்தரமூர்த்தி நாயனர் பாப்பதியாருக்கு விண்ணப்பஞ் செய்வது:—

அநாதிநித்திய சச்சிதாநந்த சோதிஸ்வரூபராகிய எம் இறைவர் செய்தருளும் சிருட்டிஸ்திதி சங்கார திரோத்பாவானுக்கிரகமென்று சொல்லப்படும் பஞ்சகிருத்தியாவசரத்தில் தேவரீரையன்றி அங்கொன்றுமில்லை. இன்னும் அப்பெருமானர் திரிபுரதகனம் செய்தருளும் பொழுதும் தேவரீர் விற்பிடித்து நிற்கவன்றே வெற்றியுற்றருளியது; ஆதலினால் எவ்வாற்றானுந் திருவுளமிரங்கி எம்பெருமான்பால் எழுந்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து நிற்றலும், பார்ப்பதிதேவியார் சுந்தரமூர்த்தி நாயனரை நோக்கித் திருவுளம்பற்றுமாறு:—

எமக்குமொருத்தி எதிரியாகிச் சக்களத்தியாயினள். அவளுடன் நாம் வேறுபாடானேம் என்றார் என்றுஞ்சொன்னீர். ஆதலினால் நீரும் நல்ல வித்துவானேயாம். உமது கர்த்தாவும் மிகப்பெரியவரேயாம் இவைகளெல்லாம் உம்மிருவர்க்குமே ஒக்கும். நீர் அப்பாற்செல்லுமென்று சேடியருந் தாமுமாக ஆக்ஷேபஞ் செய்து பிடித்து வெளியே தள்ளிவிடுதலும், சுந்தரமூர்த்திநாயனர் சுவாமி சந்நிதானத்தை அடைந்து இவைகளையெல்லாம் விண்ணப்பஞ்செய்து வினவி ஓதுகின்ற தேவாரம்:—

பண்—சீகாமரம்.

மங்கைவாணுதன்மான்மனத்திடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தாயதென்னைகொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாயாத்தூரம்மானே.



பண்—கோல்லிக்கௌவாணம்.

பூண்பதோரிளவாமைபொருவிடையொன்றேறிப் பொல்லாதவேடங்கொண்டெல்லாருங்காணப்,
பாண்பேசிப்படுதலையிற்பலிகொள்கைதவிரீர் பாம்பினொடுபடர்சடைமேல்மதிவைத்தபண்பீர்,
வீண்பேசிமடவார்கைவெள்வளைகள்கொண்டால் வெற்பரையன்மடப்பாவைபொறுக்குமோசொ
காண்பினியமணிமாடநிறைந்தநெடுவீதிக் கடனாகைக்காரோணமேவியிருந்தீரே. [ல்லீர்,

வசனம்.

இந்தத்தேவாரங்களை ஓதி நின்றபொழுது சுந்தரமூர்த்தி நாயனருக்குச் சுவாமி திருவுளம்பற்று மாறு:—நாம் தலைஅன்புகொண்டு இருவரையும் ஒன்றாகவைத்துச் சமமாக நடத்துவோமென்று சொல்லி, எவ்வாற்றானும் சம்மதிப்பித்து அழைத்துவாருமென்று திருவருள் செய்தலும், சுந்தரமூர்த்திநாயனர் பார்ப்பதிதேவியார் சந்நிதானத்தை அடைந்து வினவி ஓதுகின்ற தேவாரம்:

பண்—இந்தளம்.

கங்கைபைச்சடையுள்வைத்தார் கதிர்ப்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே.

வசனம்.

இந்தத் தேவாரத்தை ஓதிநின்றபொழுது பார்வதிதேவியார் திருவுளம் பற்றுமாறு:—என்னை ஒரு பாகத்தே வைத்தாரென்றும் எனக்கெதிராகக் கங்கையாளைச் சடையினிற் கரந்து வைத்தார் என்றும் சொன்னீர். ஆதலினால் என்னிலும் அவள் விசிட்டமுடையள். அவரினும் நீர் விசிட்டமுடையீர்; நீரும் நல்ல புத்திமானேயாம்; உம்முடைய கர்த்தாவும் மிகப் பெரியரேயாம் என்று வைதுரைத்துச் சேடியருந் தாமுமாக ஆக்ஷேபஞ்செய்து அப்பாற் செல்லுமாறு தள்ளி அடித்து வெளியே விடுத்தபொழுது, சுந்தர மூர்த்தி நாயனர் மகா மகத்துவம் பொருந்திய இருஷிச்சுவரர்களை அடைந்து இவைகளை எல்லாம் எடுத்துக் கூறி ஆகுமாறெவ்வாறென்று வினவியபொழுது அவர்கள் தம்முட்சிந்தித்துத் திருவுளம் பற்றுமாறு.

வாரீர் தம்பிரான் தோழரே! நீவிர் அறியாததொன்று மில்லை. தோழமைப் பேறு தொண்டமையின் நீவிர் முன் தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்துப்பின் இவ்வருஞ்செயற் குரியருமாயினீர்.

நாம் இதனைச் சிந்தித்தற்குமுரியமோ. நீவிரும் கர்த்தாவும், உபநிடதங்களில் கேட்கப்படும் சில ஞானார்த்தங்களைப் புலப்படுத்தி உலகினர்க்கறிவுறுத்தவே, சாங்கியார்த்தமாயுள்ள இத்திருவூடலைக் செய்தருளினீர்கள். இதன் சூக்குமார்த்தம் மற்றையோர் மனோவாக்கிற் கெட்டாதது. இப்பரமரகசிய சாரமும் அவரருளால் ஒரு சிறிது எமக்கும் புலனாயிற்று. இதன் நுண்பொருள்களை விளங்க வைத்து நீவிர் தேவாரப் பதிகமொன்று அருளல் வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு பின்னும் திருவுளம்பற்று கின்றார்:—

ஆலாலசுந்தரரே, முன்னே கயிலைபங்கிரியை இராவணன் தூக்கியபொழுது நிகழ்ந்தன நீவிரறி யாததோ. சாமவேத பாராயணமே நல்ல உபாயமென்று கூறி விடுத்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனர் சுவாமி சந்நிதானத்தை அடைந்து ஓதுகின்ற தேவாரம்:

பண்—திருநேரிசை.

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப்
பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக்
கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நின்றவெந்தை
மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே.

பண்—கோல்லிக்கௌவாணம்.

தூசுடையவகலல்குற் றாமொழியாளுடல் தொலையாதகாலத்தோர் சொற்பாடாய்வந்து தேசுடையவிலங்கையர்கோன் வரையெடுக்கவடர்த்துத் திப்பியகீதம்பாடத் தேரொடுவாள்கொடுத்தீர் நேசமுடையடியவர்கள் வருந்தாமையருந்த நிறைமறைபோருறைவீழி மிழலைதனில்நித்தல் காசருளிச்செய்தீரின் றெனக்கருளவேண்டுங் கடனாகைக்காரோண மேவியிருந்தீரே.

திருநேரிசை.

கங்கைநீர்சடையுள்வைக்கக்காண்டலுமங்கையூடத்
தெங்கையான்றேர்கடாவிச்சென்றெடுத்தான்மலையை
முன்கையானரம்புவெட்டிமுன்னிருக்கிசைகள்பாட
அங்கைவாளருளினானூரணிமறைக்காடுதானே.

வசனம்.

இந்தத் தேவாரங்களை ஓதி விண்ணப்பஞ் செய்வது:—

சுவாமி, புழுத்தநாயினுங் கடைப்பட்ட அடியேன் நும்மிருவருக்கும் வெறுப்புடையனாயினேன். ஆயினும் முன்னோர் காலத்திலே இராவணேசுவரன் கயிலையங்கிரியைத் தோள்கொண்டு தூக்கி நெரிவுற்றபொழுது, அவன் தன் தலையிலொன்றைக் கிள்ளி அதிலே நரம்பினைத் தந்திரியாகப்பூட்டி வீணை ஆக்கி அதிலே இசைநுணுக்கம் தோன்றச் சாமவேத கானஞ் செய்தது திருச்செவிசாத்தியன்றே, பார்ப்பதி தேவியார் திருவுளமிரங்கி மகிழ்ந்து அவனுக்கு அனுக்கிரகஞ் செய்தருளியது.

ஆதலின் தேவரீரும் சாமவேதகானஞ் செய்யின் தேவியார் திருவுளமிரங்குவர் என்று விண்ணப்பஞ் செய்தலும், ஊடலும் கூடலும் பயனும் ஊட்டுபவரும் யாவும் தாமேயாகிய காமாந்தக மூர்த்தி "தோழனே, அப்படியே ஆகுக" என்று அருளிக் கங்கையைச் சடையினுள்ளே சுவறக்கரந்து வைத்துச் சாமவேதகானம் செய்தருளினார்.

இதற்குள் சுந்தரமூர்த்தி நாயனார் பார்ப்பதி தேவியார் சந்நிதானத்தை அடைந்து விநவி ஓதுகின்ற தேவாரம்:—

திருநேரிசை.

சூடினார்கங்கையாளைச்சூடியதுழனிகேட்டங்
கூடினாளங்கையாளூடலையொழிக்கவேண்டிப்
பாடினார்சாமவேதம்பாடியபாணியாலே
யாடினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே.

இந்த தேவாரத்தை ஓதிச் சுந்தரமூர்த்தி நாயனார் விண்ணப்பஞ் செய்வது:—

அங்கயற்கண்ணம்மையே, மரகதப்பூங்கொம்பே, அருட்கொடியே, ஒன்றே பலவுருவாமோதிமமே, ஆடவர் ஒழுக்கிறந்து இழுக்குறினும் கற்புடைமகளிர் பலருமறியத் தூற்றுதல் செய்யமாட்டார். பண்டே மாயோன் ஆயர்பாடியிலே கோடாலர் மனைவியரைக் கூடி அணைந்திருந்தும் இலக்குமிதேவி மனநிலை திரிவுற்றுப் பழிப்புரைகள் ஏதும் பகர்ந்தனளோ? இந்திரன் அகலிகையிடத்தில் மோகமுற்ற காரணத்தினால் மேனி எங்கும் கண்ணாகி நாணிவந்தபொழுதும் இந்திராணி நிந்தித்தேதும் உரைத்தனளோ? சந்திரன் குருதார கமனஞ் செய்து உடற் களங்கமுற்றுத் தேய்வுறுவது கண்டும் உரோகிணி வெறுத்து நீக்கி ஊடினளோ?

ஆதலாற் தேவரீர் இவைகளைத் திருவுளத்தடைத்துத் திருவூடல் தணிந்து வேதசொரூபாகிய எம்பெருமான் சாமகீதம் பாடியருள்கின்றார்: திருச்செவிசாய்த்தருளுக என்று பிரார்த்தித்து நின்றார்.



சாமவேதம்.

பராபர வஸ்துவாகிய எம்பெருமான் உபநிஷதார்த்தத்தை உலகியலில் வைத்தும் நடித்துக்காட்டும் நாடக முகத்தான் நம்மனோர்க்கு விளங்கிக்காட்டத் திருவுளங்கொண்டு பாடியருளிய சாமவேதகானவோசை திருச்செவிகளிற் சார்தலும் தேவியார் திருவுளமகிழ்ந்து தன் வசமழிந்து சுவாமி இடத்திலே எழுந்தருளி வந்து இருவரும் கூடித் திருக்காட்சிதந்து நிற்றலும் சுந்தரமூர்த்தி நாயனார் ஓதுகின்ற

தேவாரம்.

திருநேரிசை.

கூடினாருமைதன்னோடேகுறிப்புடைவேடங்கொண்டு
சூடினார்கங்கையாளைச்சுவறிடுசடையர்போலும்
பாடினார்சாமவேதம்பைம்பொழிற்பழனமேயார்
ஆடினார்காளிகாணவாலங்காட்டடிகளாரே.

திருத்தாண்டகம்.

முன்னமவனுடையநாமங்கேட்டாள் மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள்
பின்னையவனுடையவாரூர்கேட்டாள் பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள்
அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தை
தன்னைமறந்தாள்தன்னாமங்கெட்டாள்தலைப்பட்டாள்நங்கைதலைவன்றாளே.

திருவாசகம்.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன்காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

---

## "The Sage and the Singer."

### "இயலிசைப்புலவர் தாரதம்மியம்."

[கீழேவருவதனால் சுத்த விவேகவிர்த்திக்கும், கேவல மனவசீகரசித்திக்குமுள்ள வித்தியாசத்தைநன்கெடுத்துக் காட்டியிருப்பதை அப்பியாசமார்க்கத்திலிருப்பவர்கள் அறிந்துய்ய வேண்டும். கேவலமான "மனோவசியம்"மாயையை வளர்க்கும் உண்மையான "சித்தவிருத்தி நிரோதனம்" விவேகஞானத்தை விருத்தி செய்து யோக சாம்பிராஜ்யமாம் அபேத சித்தியையும் அகண்ட ஞானோதயத்தையு முண்டு பண்ணும். அநிர்வசநீயமான மாயாரூபமனதின் ரகஸியத்தை யறியவேண்டி மேற்றிசையார் மபக்காம் (Occultism) மாயாவித்தையில் மனம்படிந்து, மாயாவிகளை மஹாத்மாக்களென்று மயங்கி மருளுற்றுத் தெருளற்றுத் தியங்குகிறார்கள். இதைப்பற்றி இப்பொழுது தினசரிப்பத்திரிகைகளில் பிரஸ்தாபம் அதிகமாக நடந்து வருவதால் இரண்டுக்குமுள்ள தாரதம்மியம் விளங்கவேண்டியும் இவ்விஷயத்தில் நித்தேசத்தாருடைய பூர்வசுபவாசனை விளங்கவேண்டியும் இதை யிங்கேயெடுத்துப் பிரசுரிக்கலானோம்.]

இத்தலைப்பின் கீழ் வித்யாபாநு பத்திராசிரியர் பின்வருமாறு எழுதுகிறார்:—

வையங்காப்பவர் முதல் ஐயம்புகுபவர் ஈறாக எல்லாரிடத்தும் செவிவழிச் சென்று மனத்துட்புக்கு நல்லின்பம் பயப்பன இயலும் இசையுமேயாம். சொல்லும், பொருளும் எவ்வாறு ஒன்றோடொன்று பிணைந்து நிற்பனவோ அவ்வாறே சங்கீத சாஹித்யங்களும் பெரும்பாலும் பிணைந்து நிற்பனவாகும்.

ஓர் இசையைப் பாடுங்கால் ஒரு பாட்டும் வேண்டும். ஒரு பாட்டைப் பாடுங்கால் ஓர் இசையும் தானே வரும். ஆனால் சிறுபான்மை சொற்றொடரன்றி வெற்றொலி பரப்புதல் போன்று தனித்து இராகத்தை மட்டும் பாடுதலும் உண்டு. ஆயினும் பாட்டுடன் சேர்ந்த இசையொலியே விரைவில் மனத்தைக் குளிர்விக்கும். பாட்டைக்கொள்ளாத இசையொலி (இராகம்பாடுதல்) யுஞ் செவிக்கின்பம் பயப்பதுபோலவே இசையுடன் கலவாமல் தனித்தனி பிரித்துக் கூறப்படுஞ் சொற்றொடர்களமைந்த கவிகளும் அவற்றின் சொற்சுவையாலும் பொருட்சுவையாலும் மனத்தைக் கவர்ந்து இன்பமூட்டும் பெற்றித்தாம். அன்றியும், இசைக்கு ஆதாரமாகிய "சரிகமபதநி" என்னும் சப்தசுரங்களும் இயலின் வகுப்பைச் சேர்ந்தனவாகும். தனித்தாயினும், சேர்ந்தாயினும் இவ்விரண்டும் கேட்பவரை ஆனந்தத்தில் அழுத்திவிடு மென்பதில் ஐயமில்லை.

ஆனதுபற்றியே பண்டைக்காலமுதல் அரசர்களும் பிரபுக்களும் இயற்புலவர்களையும், இசைப்புலவர்களையும் நன்கு அபிமானித்து ஆதரித்து வந்தனர். தற்காலத்தும் பற்பல சம்ஸ்தானபதிகளும் பிரபுக்களும் இவ்விருவகைப் புலவர்களையும் பாதுகாத்து வருகின்றார்கள். இங்ஙனம் ஆதரிக்கப்படும் இவ்விருவகைப் புலவர்களும் செவிச்சுவை யளிப்பவரேயாயினும் இவருள் பெரிதும் தாரதம்மியம் முண்டு. என்னை?

சந்திரனில்லாத இராக்காலம் மயக்கத்திற் கேதுவாயிருக்கும்; இராக்காலமில்லாத சந்திரன் ஒளி மழுங்கி யிருப்பான் அதுபோலவே இயற்புலவரில்லாத அரசர் மயக்க முற்றிருப்பார். அரசரில்லாத இயற்புலவர் கீர்த்திமிகுறி யடங்கி யிருப்பார். ஆகையால் இயற்புலவருக்கு அரசரும், அரசருக்கு இயற்புலவரும் இன்றியமையாத் துணையாதல் விளங்கும்.

அன்றியும் புறப்பொருள்களை யெல்லாம் உள்ளவாறு காட்டுங்கண்ணைப்போல அகப்பொருள்களாகிய தருமார்த்த காம மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களை விளக்கிக் காட்டுவன இயல்நூல்களேயாம். ஆனதுபற்றியன்றே இயற்புலவர்கள் அரசர்க்குக் கண்போல்வாரென்று பண்டைநூல்கள் கூறுகின்றன. "கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்" என்பது சீவகசிந்தாமணி. இங்ஙனமாகிய இயலினது மேம்பாட்டைக் கருதியன்றோ நூல்களை இயலிசை நாடகமென முத்திறப்படுத்திய முதியோர் முதலில் இயலை வைத்துக் கூறுவாராயினர்.

இசைப்புலமை நிரம்பிய எந்தப்பெரிய வித்துவானாயினும் சரி, அவர்பாடிய நல்லிசையால் அடையும் இன்பம் அந்த க்ஷணமே மறைந்துவிடும். அவர்பாடிய இசையொலியெல்லாம் காற்றோடு காற்றாகப் போய் விடுமேயன்றி வேறில்லை. பெரும்பாலும் இசையொலி காமத்தை வளர்விக்கும். மாணாக்கர்கள் இசைப்பாட்டின் விருப்பத்தால் தாம் தேறவேண்டிய பரீக்ஷைகளிற் றவறி வருந்துவதை நம்மவர் பலரும் காண்பரன்றோ?

இயற்புலவர்கள் கூறிய செய்யுட்களின் பொருள்கள் கேட்பவர் மனத்திற் பன்னாள் நின்று நிலவும். அதுமட்டோ அக்ஷரவடிவிற்றாகி எத்தனை காலங்கட்குப் பின்னுற்றாரும் அறிந்து உய்தற்கு ஏற்ற துணையாகும். இதுபற்றியன்றே,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன்வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு."—என்றார்பிறரும்.

இராசநீதிகளையும், ஆசாராதிகளையும், வழக்கங்களையும், தெய்வத் திறத்தையும், புண்ணிய பாவ மோக்ஷ நரகாதிகளையும், சிவ ஞானத்தையும் யாவர்க்கும் உணர்த்துவதும், பூர்வசரிதங்களை விளக்குவதும் இவ்வியற் புலமையன்றோ? இத்தகைய உயர்வு தாழ்வுகளை யறிந்தே பூர்வ அரசர்களில் எத்தனையோ பேர், இயற்புலவர்கட்கு *முற்றூட்டாகப் பல கிராமங்களைத் தானஞ்செய்தும், பலபல ஆடை யாபரண வாகன முதலிய விசேஷ மரியாதைகளைச் செய்தும் பாதுகாத்ததுடன் தமக்கு முக்கிய மந்திரிகளாகவும், உயர்ந்த துணைவர்களாகவும், தம்மினுமிக்க மரியாதையுடன் எப்போதுந் தம்முடன் (இவ்வியற் புலவர்களையே) வைத்து, அவர்கள் சொல்வழிநின்று புவிபுரந்து புகழ்புனைந்து வாழ்ந்தார்களென்பது புறநானூறு முதலிய பழைய நூல்களால் நன்கு புலப்படுவதாகும். இயற்புலவர் சொல்வழிநின்று யுத்தத்தை யொழித்துச் சமாதானமடைந்தார் பலர். சிறைவிடுத்தார் பலர். இன்னும் பற்பல பெருங்காரியங்களை யெல்லாம் இயற்புலவர் சொல்வழியே அரசர்கள் செய்து வந்திருக்கின்றனர். இந்தப் புலவர்கள் பெருமையும், இவர்க்குதவிய மன்னவர் கீர்த்தியும், இப்புலவர்களியற்றிய இயல்நூல்களும் பல்லாயிரவருடங்கள் சென்ற பின்னும் யாவரும் அறிந்து பாராட்டுமாறு விளங்குதல் இன்னும் பிரத்தியட்சமன்றோ? எந்தப் பெருவேந்தர்களாவது இசைப்புலவர்கட்கு *முற்றூட்டாகப் பெரிய தானங்களைக் கொடுத்தனரென்றேனும், அவர்களை மந்திரிகளாகக் கொண்டு அவர்களாற் பெரியதோருதவி பெற்றனரென்றேனும், சரிதங்கள் கேட்டதுண்டோ?

பாணபத்திரருக்குப் பொருள்தரவேண்டித், திருவால வாயுடையார் சேரமான் பெருமாணாயனாருக்குத் திருமுகப்பாசுரங் கட்டளையிட்டருளியதும், அத்தகைய பிறசில சரிதங்களும் இசைப்புலவர் மாட்டு ஈசுவராநுக்கிரகம் நிறைந்திருந்த தென்பதை விளக்குவனவன்றோ எனின், இவ்வாறாக இயற்புலவர்கட்குக் கிடைத்த ஈசுவராநுக்கிரகங்களைக் கூறப்புகின் அவையொரு கடல்போற்பெருகு மென்க. என்பு பெண்ணானதும், கருங்கல் மிதந்ததும், நீற்றறை குளிர்ந்ததும், முதலைவாய்ப்பட்டு மூவாண்டு சென்றமைந்தன் உயிர்பெற்று மீண்டதும், திருவாலவாயுடையார் திருமுடியில் மண்சுமந்து பிரம்படி கொண்டதும், அவர் திருக்கைலாய மலையிலிருந்து ஞான உலா முதலிய இயற்றமிழ் நூல்களைக் கேட்டு மகிழ்ந்தருளியதும், தம் அருமைத் திருக்கரத்தால் திருக்கோவையாரை எழுதியருளியதும், "அர்ச்சனை பாட்டேயாகு மாதலின் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் திருவாய் மலர்ந்து வலியவேண்டியதும் இவைபோல்வனபலவும் இயற்பாட்டின் பெருமையை விளக்குவனவன்றோ? இதுமட்டோ! சிவபிரான், முருகக் கடவுள், நாமகள் இவர்கள் சங்கப்பலகையேறி இயற்புலவராக வீற்றிருந்தமையும், முருகக்கடவுள் நக்கீரரிடத்தும், பொய்யாமொழிப் புலவரிடத்தும் வலியச்சென்று தம்மீது இயற்பாட்டை வேண்டி யடைந்தமையும், இடைக்காடன் என்னும் புலவர் நிலசர் பிணக்கை நீக்குவான் திருவாலவாயுடையார் திருக்கோயிலை விட்டு நீக்கி வேற்றிடம்புக்கு வாழ்ந்தமையும், கச்சிப் பெருமாள் ஒரு புலவன் பின் சென்றமையும் இவை போல்வன பிறவும் இயற்புலவர் பாலுள்ள ஈசுவராநுக்கிரகாதிக்கத்தைப் பசுமரத் தாணிபோல் நாட்டத் தக்கனவேயாம். அன்றியும் இயற்புலவருள்ளே சாபாநுக்கிரக வாக்கிகளாக வாழ்ந்தார் பலராவர். ஔவைப்பிராட்டியார், கம்ப நாட்டாழ்வார், காளமேகப் புலவர் முதலியவர்களின் அற்புத சரிதங்களைக் கூறப்புகின் அவை யொவ்வொன்றுமே யொருதனிப் புத்தகமாகுமன்றோ? இங்ஙனம் இசைப்புலவர்களுள்ளே சாபாநுக்கிரக சீலர்களாக யாரேனு மிருந்தாரென்று யாண்டுங் கேட்கப்பட்டதில்லையே. ஆதலின் கடவுளரை வசீகரிப்பிக்கும் சக்தி இசைப்புலமையைப் பார்க்கினும் இயற்புலமைக்கே மிக்கிருந்ததென்பதை எவரும் மறுக்கொண்ணாதென்க. நம்மைப்போன்ற மதப்பற்றுடையார்க்கு மட்டும் உவப்பையும் நம்பிக்கையையுந் தரும் இத்தகைய தெய்வத் தன்மைச் சரிதங்கள் ஒருபுறமிருக்க, யாவராலும் அங்கீகரிக்கப் பெற்ற சரித்திரவாயிலாக ஆராயப்புகினும் இயற்புலமையின் பெருமையே மிக்குத் தோன்றுவதாகும். தமிழ்நாட்டு வேந்தர்கள் இயற்புலவர்களை உயிர்த்துணைவராகக் கருதித் தம்மினும் மிக்குமதித்துத் தம் அரசும், கல்வியறி வொழுக்கங்களும், நியாயமும், வீரமும், கொடையும் இப்புலவர்களானே நிலைபெற்று வளர்வனவாகக்கொண்டு இவரைப் போற்றி வந்தனரென்பது சரித்திராராய்ச்சிக்குக் கருவியாய புறநானூறு முதலிய பண்டைநூல்களானே செவ்விதாக விளங்கும். இசையால் அடையு மின்பத்தை மனிதர்கள் வாயிலாகப் பெறுதலினும் அதிகமாகவே குயில் பூவை முதலிய பக்ஷிகளின் வாயிலாகவும், வீணை பிடில் முதலிய அசரப்பொருள்கள் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். இயற்பாவாற் பெறுமின்பமோ பெறுதற்கரிய மானுடப்பிறவி யுற்றாருள்ளும் கற்றுணர்ந்த மேன்மக்கள் வாயிலாகவே பெறவேண்டுமன்றி வேறில்லை. இதை நோக்குமிடத்து இசைக்கும் இயலுக்கும் உள்ள வித்தியாசம் பறவைகட்கும் மனிதருக்குமுள்ள வித்தியாசத்தை விடக் குறைந்ததன்றென்பதை மறுப்பவர் யாவர்?

இனி ஒருவர் மனத்தைத் தன்வசப்படுத்திச் சலனமறச் செய்யும் ஆற்றல் இசைக்கே அதிகமுண்டெனவும், பாம்பு முதலிய ஊர்வனவற்றையும், பறவைகளையும், யானை முதலிய விலங்கினங்களையும், அறிவு நிரம்பாத இளமகார்களையும் தன்வசப்படுத்துவது இசையே யெனவும், இவற்றை, "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் யாழ்வரைத் தங்கி யாங்கு" என்னும் கலித்தொகையானும், "அணியிழை மகளிரும் யானையும் வணக்கு மணியொலி வீணை" என்னும் பெருங்கதையானும், "மகரயாழ் வல்ல மைந்தனொருவனைக் கண்ட மத்தப் புகர்முகக் களிற்றின்" என்னும் மேருமந்தர புராணத்தானும், பிறவும் பற்பல நூல்களானும் அறியலா மன்றோ எனவுங் கூறின் அது பொருளன்றென்க. என்னை? மனத்தைத் திருத்தி நல்லறிவை வளர்த்தலே பயனுடைத்தாமன்றி மனத்தை வசப்படுத்த லொன்றாற் பெறும் பயன் ஒன்றுமின்றே. கள் முதலி மயக்கும் பொருள்களும், பரத்தைய ரின்பமும் மனத்தை வசப்படுத்துவனவன்றோ? அவற்றை அதுகொண்டு பெருமைப்படுத்தக் கண்டிலம். மனத்தை வசப்படுத்திப் பயன் பெறச் செய்வதே சிறந்ததாமென்க.

## Agricultural Notes.
## வியவசாயக் குறிப்புகள்.

### மிளகு.

மிளகுக் கொடியானது மலையாள தேசத்தில் ஒரு விசேஷமான பயிர். இது தற்காலத்திற்கூட மலைத்தொடர்களிலுள்ள உன்னதமான காடுகளில் யாராலும் பயிரிடப்படாமலே தானாயுண்டாகும் காட்டுச் செடிகளைப்போற் காணப்படுகின்றது. இங்கேயிருந்து ஒரு திக்கில்

* முற்றூட்டு —சர்வசுதந்தரம்.

குடகு (Coorg) வைனாட் (Wynaad) பரியந்தமும் மற்றொரு திக்கில் நேர்குறுக்கே சமுத்திர பரியந்தமும் பரவி யிருப்பதுடன், மரங்களடர்ந்த ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு சிறு மிளகுத்தோட்டம் வைத்துண்டாக்கப்பட்டிருக்கிறது. மிளகுச்செடி பூர்வீகத்தில் மலையாள தேசத்துப் பயிராகவே யிருந்ததென்றாலும் அது மற்றப் பாகங்களுக்குப் பரவித் தற்காலத்தில் ஆஸ்திரேலியா பரியந்தமுள்ள எல்லாத்தீவுகளிலும் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றன. இக்காரணத்தால் மிளகின் முக்கிய வியாபாரஸ்தலம் இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு மாறி விட்டது. தலைச்சேரி (Tellicherry) யைவிட சிங்கப்பூரில் நூறு மடங்கு சரக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் மாலையாளதேசத்து மிளகு, ஏற்றுமதியின் அளவில் பின் தாங்கி விட்டபோதிலும், வியாபாரிகள் தலைச்சேரி மிளகையே அதிசிலாக்கியமான தென்று இன்னும் எண்ணுகிறார்கள். இது இந்தியாவின் மேற்கு சமுத்திரக்கரையில் மாத்திரம் பயிரிடத்தக்கது.

இந்துதேச சரித்திரத்தில் மிளகின் சம்பந்தமானது மிகவும் விசேஷமானதா யிருக்கிறது. இந்தியாவின் தற்கால நிலைமைக்கு அனுகுணமாயிருந்தது மற்றெல்லாப் பயிரையும்விட மிளகே யென்று ஒரு வகையாகச் சொல்லவேண்டியதா யிருக்கிறது. இந்தியாவைச் சுற்றிப் பார்த்து ஆராய்ந்து போகவந்த ஐரோப்பியர்களுடைய கவனத்தையும், ஐரோப்பிய வியாபாரிகளுடைய முக்கிய கருத்தையும் முதல் முதல் கவர்ந்தது இந்த மிளகேயாம். நன்னம்பிக்கை முனையைச் (Cape of Good Hope) சுற்றி, பெயர்பெற்ற கப்பல் யாத்திரைசெய்த வாஸ்கோடிகாமா (Vasco de Gama) என்பவர் மலையாள தேசத்துக்கு வந்ததும் மிளகின் விலையை நயமாக்குவதற்கு வழி ஏதாவது உண்டாவென்று கண்டுபிடிப்பதற்காகவே. மேல் சமுத்திரக்கரையில் போர்ச்சுகல் தேசத்தார் (Portuguese) குடியேறினதற்குக் காரணமும் அதுவே. ஐரோப்பாவில், இந்த மிளகு வியாபாரத்தில் வேறொருவருக்கும் யாதொரு பாத்தியதையு மில்லாமல் தாங்களே ஏகபந்தமாய் வியாபாரம் நடத்திவந்த டச்சுத் தேசத்தார்கள் (Dutch) இதற்குப்பின்வந்தார்கள். இவர்கள் மிளகின் விலையை உயர்த்தினதினால் தான், தனவந்தர்களாகிய சில லண்டன் (London) வியாபாரிகள் ஒன்று கூடி இந்தியாவுடன் மிளகு வியாபாரம் நேரே செய்யத் தீர்மானித்து ஈஸ்டு இந்தியா கம்பெனி (East India Company) யென்று ஒருசங்கம் ஏற்படுத்தினார்கள். ஆகவே இந்துதேச சரித்திரத்திற்கே எப்போதும் ஒரு முக்கிய அடையாளமாயிருந்த ஓயாத உள்நாட்டுக்கொடூர சண்டைச்சச்சரவுகளை ஒழித்துப் பற்பல நாட்டார்களையும் ஒற்றுமைப்படுத்தி, ஒரே ஆளுகைக்குள்ளாக்கி இத்தேசத்தை ஆங்கிலேயர் சுவாதீனமாக்கியாள மிளகே முதற்காரணமா யிருக்கிறது.

மிளகுச் செடிகளின் குணலக்ஷணங்களை அறிந்து, அதை விருத்திசெய்து, மிளகுத் தோட்டக்காரர்களுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்றஎண்ணத்துடன்கவர்ன்மெண்டார் தாலிப்பரம்பா (Taliparamba) என்னுமிடத்தில் மிளகு சாகுபடிசெய்ய ஒரு பண்ணையை ஸ்தாபித்தார்கள். மிளகுக் கொடிகள் நடுமுன்னே இன்னின்ன தினுசுகள் நல்லதென்றும், இன்னின்னவைகள் நல்ல பலன் தாராவென்றும் பகுத்தறிவது இப்போது மிக எளிதான காரியமென்று தெரியவந்திருக்கிறது. இவ்விஷயங்களைக் குறித்து வேண்டிய சமாசாரங்களை அறிய விரும்புகிறவர்கள், அந்தப் பண்ணை மானேஜர் அவர்களைக் கேட்டுக் கொண்டால் அவர் மிகச் சந்தோஷத்துடன் தெரிவிப்பார். நல்ல மாதிரிச் செடிகளையும் உபயோகமற்றவைகளையும் வைத்துப் பயிராக்கச் செல்லுஞ் செலவு ஒன்றாகவே இருக்கும். நல்ல மாதிரியைப் பார்த்துத் தெரிந்தெடுங்கள். வேர்களைச்சுற்றிக் கொஞ்சம் ஒவ்வொரு வருஷமும் தோண்டி, தோட்டத்தின் மற்றப் பாகங்களி லிருந்து மட்கிய இலைச் சருகுகளையும் வீட்டைச் சுற்றி அகப்படும் குப்பையையும் சேகரித்து அக்கொடிகள் தொத்தியிருக்கும் மரத்தின் அடியில் ஒரு சிறு குவியலாகப் போடுங்கள்.

வி. ஏ. பார்பர்,

கவர்ன்மெண்டு தாவரசாஸ்திரி.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 - APR 1911
MADRAS.

"*Give me not O God, that blind, fool faith in my friend, that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.*"
"*Seek Truth wherever you can find it.*" *But,*
"*Make your choice and stick to it till you reach the End.*"

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன்: அறிவேசக்தி: [ஓம் தத்ஸத்] [God is Love: Knowledge is Power: *Aum*

ஸத்தியமேவ ஜெயதே—SATYAMEVA JAYATI.

புத்தகம். 18.] 1911ஆ மார்ச்சுமீ, சாதாரணஆ பங்குனிமீ [சஞ்சிகை. 12.

# "Aviation"—As Pure Science and Black Art.

"In this electric age of passion-tension, greed, and selfishness, we need more than ever to shout out to the world with all our lung-power the grand and peerless doctrine of the Gita which asks you and the whole world to work for mutual good with all your might and main: to aid the Race-Evolution by the unremitting and loving exercise of pen and tongue and never to care for the result, never to think of yourself. *Universal Energy is a force above the Law of good and evil. Any one can specialise it. But the motive back of such specialization affects your evolution.* All remarkable souls, Socractes, Pythagoras, Galileo, Swedenburg, Jacob Boehme, Luther, Michael Angelo, Edison, Drawin, Arnold, Comte, Ardrew Jackson Davis, Emerson, etc., etc., and the luminous bands of perfect souls in India, Persia, Chaldea, Babylon, Greece and Europe—Sages, philosophers, mystics and occults—who worked with brain, body, soul and spirit, to sustain this world of weaklings and milksops—had recognised this fact and intuitively specialised it along their puculiar lines of genius and ability. If you pass a galvanic current along a platinum wire it will manifest as light; along an iron wire, as heat; around a bar of soft iron, as magnetic energy; led into a solution, as a force that decomposes and recombines. Again this electric force can be harnessed for working mills, ringing bells, lighting fires, and washing clothes and cooking your food. Also this same force can be used for "Electrocutions," and as destructive agent. Do you see? the "ocean of mentative energy" is the same throughout and the specializing media—the varying types of Brains, human or animal,—transmute it into varying forms. The virtuous man, when developed intellectually, (and intuitively), blesses the world. The animalised man, when developed intellectually, (and instinctively), is a curse to every one. The kite, although soaring aloft in the sky, has its eyes still fixed upon rotten carrion!"—Mr. S. P. Mukerji in the *Kalpaka.*

# பறத்தல் வித்யையும் வேடிக்கையும்.

## சுத்தவித்தை சூந்யவித்தைகளின் பேதம்.

"ஓம் கருடவாஹன குரு கடாக்ஷ வீக்ஷண்ய ப்ராப்த ரஸ்து." கருடவாஹனருடராகிய குருமூர்த்தியின் கடாக்ஷ வீக்ஷண்யம் ஸித்திப்பதாக! பறத்தல் பக்ஷிகளின் ஸ்வபாவம். ஆகையால் தான் அவைகளுக்குப் "பறவை" என்னும் சிறப்புப் பெயர் அமைந்தது. மனுஷன் புல்லாய்ப் பூண்டாய்ப் புழுவாய்ப் பறவையாய், மிருகமாய், மிருகப் பிராயமான மனிதனாய்த் தேவனாய் உள்ள ஜன்மங்கள் ஒவ்வொன்றும் எடுத்துப் பட்டபாடெல்லாம் பட்டு அலுத்துப்போனபின், ஜீவகாருண்யமே யுருக்கொண்ட மன்குலத்தில் மனுபுத்திரனாய் அதாவது மனுஷனாய்ப் பிறக்கிறான். பிறந்தவன் பூர்வ ஜன்மங்களில் பட்ட அனுபவங்களெல்லாம் வாஸனா தேகத்திலிருக்க, அதிலிருந்து அவைகளைக்கிளப்பி அவற்றின் அனுபவசாரங்களை யுள்ளபடி கிரகித்து, "அப்பா இந்த வேஷமெல்லாம் போட்டு வேடிக்கை யாடினதுபோதும்போதும்," என்று திருப்தி அடைந்தவனாய் இந்தக் கூட்டைவிட்டு வெளிப்படும் வழியென்ன வென்று பிழைக்கும் வழி தேடப் பார்க்கிறான். பிழைக்கும்வழி கண்டு பிடித்துவிற்று, ஆடு கோழி வெட்டிப் புசித்து, உலகத்தாரையேமாற்றி ஊனைவளர்த்தலன்று. அறிவேயுருவான ஆத்மா அறிவழிந்து மருவடைந்து துக்க ஸாகரத்தில் விழுந்து துன்பங்களுக்கெல்லாம் இருப்பிடமான தேஹத்தில், கூட்டிலடைத்த பறவைபோல் அடைபட்டுக் கிடப்பதினின்றும்தப்பி, விவேகம் என்னும் பிரகாச வெளியில், சுத்தமும் சூந்யமும் தாண்டி சுபாவமாத்திரமாய்நின்று, தூங்கியாடு பம்பரம்போல், உலகியல் வழியிலிருந்தாலும் அதில் சிக்காது 'ஒழிவு'என்னும் விச்ராந்திபெற்றுக் களைதீர்ந்து வினைதீர்ந்து "ஒடுக்கம்"என்னும் அரங்கநாதர் பள்ளியில் ஒன்றுபட்டு, எல்லாவற்றிலும் யதார்த்த மாத்திரமாய், எல்லா இரகஸியத்திலும் இரகஸியமாய், பந்தமோக்ஷமென்கிற பாவனைகளெல்லாம் அற்று அறநீங்கிய "அறுதி"யில் "மோனவுரு" மாத்திரமாய் மிஞ்சி, நித்தமுத்த சுத்த சிவமாய் நிற்பதொன்றெதுவோ அதுவே பறந்தல்வித்யையாம். அதற்கு உதாரணம் கருடன். பகவான் கீதையில் "பக்ஷிகளில் நான் கருடனா யிருக்கிறே" னென்று சொன்னதின் கூடார்த்தம் அதுவே.

"கஞ்சி வரதப்பா!" என்றால் "எங்கு வரதப்பா"? என்று கேட்கும் பசிப்பிணியாளர் எக்காலத்து முண்டு. திரிசங்கு தான் கூட்டோடு கைலாஸம் போக வேண்டுமென்று ஆசைப் பட்டு வசிஷ்டர் முதலான மஹாரிஷிகளையெல்லாம் அதற்கு வேண்டிய யாகயஜ்ஞங்களைத் தனக்குச் செய்துவைக்க வேண்டுமென்று கேட்க, அவர்களெல்லாரும், "அது கூடாது; ஸநாதனமான தர்மத்துக்குப் பங்கம் வரும்" என்று சொல்லி மறுக்க, இராஜஸ குண மொழியாது, தபோபலத்தால் மட்டும், பிரகிருதியை வென்ற பிரதாபவீரனான விசுவாமித்திரருஷி மாத்திரம், தனது வாசனாமலம் நீங்காத தோஷத்தால், "அப்படியே ஆகுக!" என்று ஒப்புக்கொண்டு, தனது யோக மஹிமையால், திரிசங்குராஜனைக் கூட்டோடு (ஸ்தூல தேஹத்தோடு) கைலாயத்துக்கு அனுப்ப அவனுக்கு நேர்ந்த தீராத ஆபத்து இன்னதென்பது எல்லாருக்கும் தெரியுமே.

விசுவாமித்திரர் அஹம்பாவச் செருக்கால் அவருடைய யோகசித்தியை யுபயோகித்த காரணத்தால், "அஹங்காரவேகம்" அடங்கினதும்,



திரிசங்கு தலைகீழாக விழ வாரம்பித்தான். "கூ! கூ!" வென்று கதறின அவனைப் பார்த்து, அடைக்கலம் புகுந்தானை ஆபத்தில் விட்டுப் பார்த்தல் சரியல்ல வென்று, விசுவாமித்திர ருஷி தனது தபோமஹிமை யினால், தனது புண்யத்தைக் கொண்டு, "திரிசங்குக் கென்று தனியாக ஒரு ஸ்வர்க்கம் நிர்மித்துக்கொடுத்து அங்கே யவனை யிருக்கச் செய்து," பேருக்கு மட்டும் தன் வாக்கைக் காப்பாற்றி விட்டதாக வீண் விருதுகட்டிக்கொண்டு திரிந்தார். அதனால் "திரிசங்கு ஸ்வர்க்கம்" என்பது இன்றைக்கும் இரண்டுங் கெட்ட திண்டாட்டநிலைக்குப் பழமொழியாகி இழிமொழிவசனமாய் உலகத்தில் வழங்கி வருகிறது.

இவைபோன்ற அசாதாரணமான வீண்சாகஸச் செய்கைகளெல்லாம் "மாயாஜாலம்" என்று சொல்லப்படும். அதையே "வேடிக்கை" யென்று இயற்றமிழ் மொழியில் மேலே கூறினோம். "வித்யை" யென்பது மாயாஜாலத்துக்கு எதிரிடையாக, மாயையை வெல்லும் ஆற்றலுள்ள ஆத்மஸ்வரூப சித்சக்திக்குப் பெயராக வுபயோகித்திருக்கிறோம். அதற்கு "அருட்சக்தி" யென்றும் "அருட்பேறு" என்றும் சொல்வது ஆன்றோர் வழக்கம்.

அருட்சக்தியினால் பறக்கும் சாமர்த்தியம் வாய்ந்தவன் யாராயிருந்தாலும் சரி, அவனுக்கு "கருடன்" என்றுபேர். தமிழ்வேதத்தில் அந்த மஹானைப் "பெரிய திருவடி" யென்று சிறந்து புகழ்ந்து போற்றியிருக்கிறார்கள். பகவான் "முனிமானவிஹஹம்ஸனா" யிருப்பதால், அவருக்கு "கருடவாஹன குரு" என்கிற சிறப்புப் பேர் வந்தது. சிவனுக்கு நந்தி யெப்படி வாஹனமாயிற்றோ, (சுபாவமான உபாதி யாயிற்றோ) அப்படிப்போல ஜகத் ரக்ஷகரான எம்பெருமானும் விஷ்ணுவுக்கு கருடன் "சுபாவமான உபாதி" (வாஹனம்) ஆயிற்று. அது அவருக்கு "சுபாவமான உபாதி" யானால் அதை ஏன் அவருடைய "தேஹம்" என்று சொல்லக் கூடாது? என்று ஒரு விசாரம் பிறக்கலாம். தேஹத்தோடு கூடியிருக்கிற தேஹி ஸ்தூல சூக்ஷ்ம வாஸனா மலங்களாலே கட்டப்பட்டவனா யிருப்பதாலே,—அதாவது, இந்திரியங்கள், சங்கல்ப-விகல்ரூப மனசு, சுபாசுபவாஸனா ரூப பாவனா-விருத்திகள் இவற்றிலே சிக்குண்டு பந்தப்பட் டிருப்பதாலேயும், பகவானுக்கு அவ்விதக் கட்டு அல்லது பந்தம், சிக்கல், ஒன்றுமன்றி துரகமும்(குதிரையும்)ஆருடனும் (ஏறியுள்ளவனும்) போல, இச்சாமாத்திரத்தால் ஒன்றுபட்டுக் கூடியும், பந்தமொன்று மில்லாமலிருப்பதினாலே, அந்த "ஸம்பம" சம்பந்தார்த்தம் ஜனிக்க "வாஹனம்"என்கிறபதம் உபயோகிக்கப்படலாயிற்று. கருடனை அவனுக்கு "மோட்டார் ஷெல்"—"ஷெல் ஸ்பிரிட்" என்று சொல்லும் உபாதிகரணம் பக்வன்நாமமே. அந்த நாமத்தை மந்திரோக்தமாகத் திரிகரணசுத்தியாய் உச்சரிப்பதே(Automobile) தானே ஜனிக்கும்சக்தி (யந்திரமாம்). அவருடைய கடாக்ஷ வீக்ஷண்யமே (அருட்பேறே) கருடனை அவனுக்கு ஆகாசத்திற்பறக்கும் வித்யையை அளிக்கும். அவன் அப்படி பறக்கும் பொழுது தேவ கந்தர்வர்களெல்லாம் "ஹர ஹர, ஹரி ஹர, நர ஹரி"யென்று கோஷம் செய்து அவனுடைய வித்யையைப் பார்த்து ஆனந்தித்துக் கோஷிப்பார்கள். அப்படி ஆகாயகமனம் செய்த அற்புதாத்மகமான "கருடன்"ஜகன்மாதாவாகிய தன் தாயிடம் தனது அனுபவத்தைச் சொல்லும் இரகஸிய வாக்கு இது:—

தாயே தயாபரமே தஞ்சமொன்று அடைந்தேனை
சாட்டிவிட்ட பம்பரம்போல் ஆட்டிவிட்டே பார்த்தி
[ருந்தாய்:
ஆட்டிவிட்ட பம்பரமும் அசைவோய்ந்து நின்றபின்பு
சூக்ஷ்மமாய் எடுத்தாய் நீ, சூந்யத்தைக் கட்டைவிட்டு;
சூந்யத்தை யெடுத்து நீ சூக்ஷ்மமாய் வைத்துக்கொ
[ண்டு
ஆகாயக் கூண்டதனில் அடைத்துவிட்டாய் நீயதனை;
சூந்யம் அடைத்தகூண்டு சூக்ஷ்மமா யெழுந்ததுகாண்:
வேகு வேகென்று உயர்ந்ததம்மா அக்கூண்டு;
உச்சத்தில் உயர்வற்றுச் சுற்றியே நின்றதம்மா!"

இதன் பொருள் என்னவெனில்:—"அருட்சத்தியே! பிராணாயாம சித்திபெற்ற என்னை உன்திருவருட் பார்வையால் "சாட்டிவிட்ட பம்பரம்போல் ஆட்டிவிட்டே பார்த்திருந்தாய்!" ஆட்டிவிட்ட பம்பரத்தின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, அது தூங்கியாடு பம்பரமாய் "அசைவற்றுச் சுழலும்." "சூந்யம்" என்பது "சுத்தம்" என்கிற துவம்பதத்தின் "சூக்ஷ்ம ஸ்வரூபம்." அந்த சூக்ஷ்ம ஸ்வரூபமான "சூந்யத்திற்கு" காரணமாயிருப்பது "சுபாவம்." இந்த மூன்றையும் தேஹத்திரயங்களாகவுடைய அபிமான தேவதை "திருப்பள்ளி" ஸ்தானத்தில் (ஒழிவில்) அறிதுயிலமர்ந்து பக்தகோடிகளுக்குச் சாந்தியளிக்கும் "நிஜபத" நிர்ணய ஸ்வரூபியான ஸ்ரீ அரங்கநாதர். திருப்பள்ளி ஸ்தானமாகிய "ஒழிவு" பதத்தையே ஸ்ரீரங்கக்ஷேத்திரமாக அமைத்துள்ளனர். அங்கு திருப்பள்ளி கொண்டு அறிதுயிலமர்ந்திருக்கும் ஸ்ரீரங்கநாதரே நிஜபத-லக்ஷியமான "ஒடுக்கம்." அவருடைய வாஹனமான "பெரிய திருவடி" யென்னும் கருடபகவான் சந்நிதானத்திலிருந்து அரங்கத்தாடியமர்ந்த அப்பன் கொள்ளும் ஆநந்த நித்திரையைப் பார்த்து அதில் ஈடுபட்டுக் கிடைத் தேறினவராய் "உலந்தலர்ந்துன் காலடைந்தேன், களையுந் தீர்ந்தேன்" என்று சிந்தியாது சிந்திக்கும் அருட்சிந்தையில் அமர்ந்து அவரது ஐயனைப்பார்த்த வண்ணம் பேரானந்த சமாதியிலிருக்கும் கோலத்தை ஸ்ரீ ரங்கக்ஷேத்திர தரிசனம்செய்தவர்கள் நன்றாகப் பார்க்கலாம். இஃதெல்லாம் "பறத்தல் வித்யையாம்".

இனிப் "பறத்தல்-வேடிக்கை"யைப் பற்றிச் சிறிது கூறுவோம். பிரகிருதியினுண்மையையுணர்ந்துய்ய மாட்டாது அதைப் பார்த்து நடிக்கக் கற்றல் உலகியல் நாடகமாம். அது ஜீவகோடிகளுக்கு கர்மசேஷபலத்தாலும் பூர்வஜன்ம வாஸனையாலும் சிருஷ்டி காலத்தில் (பிறக்குங் காலத்தில்) தானே லபிக்கும். உலகியல் நடையைப்பார்த்து, மனிதனைப் பார்த்துக் குரங்கு சேஷ்டை செய்வதுபோல், தேஹமனோவாக்குகளால் பேல் வேஷம்போட்டு ஹாஸியக்காரன் நடிப்பதுபோல் பிறர் கண்டு களிக்கவோ நகைக்கவோ நடிப்பது வைகிருதநடை அல்லது ஐதிகநாடகம் என்று சொல்வது. செயற்கை நாடகமென்பதும் இதுவே. ஒரு வேஷக்காரன் சாக்காய்ப்பொன் உடையை அரசன் தரிக்கும் பொற்றுடையாகப் பாவனை காட்டத் தரித்து, மத்தாப்பு வெளிச்சத்தில் நாடகசாலையில் நின்று "நான் ஒரு அரசன்" என்று நடிப்பது ஐதிக வைகிருதத்திலும் தாழ்ந்த "கூத்தாடி நாடகம்" என்று சொல்வது.

பக்ஷி பறக்கிறது: அதைப்பார்த்து மனிதன் நானும் பறப்பேனென்று (Automobile) யந்திர சக்தியின் இயக்கத்தால் மேல்காற்றுண்டாகும்படி விசை வைத்து பக்ஷிபோன்ற உருவமைந்த ஒரு யந்திரத்தை யமைத்து அதில் தான் உட்கார்ந்துகொண்டு, யந்திரத்தை முடுக்கி அதனாலுண்டாகும் மேல்காற்று வேகம், இறக்கைபோன்ற "சிறகுகளில்" தாக்க, யந்திரம் மேலெழுந்து பறக்கத் தான் பறப்பதாக பாவனை காட்டி ஊரார் கண்டுகளிக்கப் "பறக்கிறான்." முதலிற் சொன்னது "உலகியல் நடை." இரண்டாவது சொன்ன "பறக்கும் மனிதன்" (Aviator) செய்யும் வேடிக்கை வைகிருதநடை அல்லது ஐதிக நாடகம். இறக்கைபோல் மரத்தால் அல்லது வேறு உபகரணங்களால் செய்த "இறகுகளை" த்தோளில் வைத்துக் கட்டிக்கொண்டு, தான் தேவலோகத்திலிருந்து வந்த கந்தர்வன்போல் பாவனை காட்டிப் பறக்கவும் சக்தியில்லாமற் கூத்தாடுவது "கூத்தாடி நாடகம்" என்று சொல்வது. பிப்ரவரி மாசம் 14-௳ யன்று சென்னப்பட்டணம் "தீவு"ப்பிரதேச வெளியில் (கோட்டைக்கும் கவர்னர் தோட்டத்துக்கும் மத்தியிலுள்ள மைதானத்தில்) மான்ஷியர் டிக் என்பவர் பறக்கும் யந்திரம் (Aeroplane) கொண்டு பறக்கும் வேடிக்கைகாட்ட யத்தனித்தார்.



பறக்கும் யந்திரமாவது மஹா பெரிய ஒரு தட்டாரப்பூச்சிபோல் செய்யப்பட்டு அதன் வால் நுனியில் இரண்டு சிறிய இறக்கைகளும் திரும்புவதற்கான ஒரு "வால் துடுப்பும்" அமைத்திருக்கிறது. உடலின் பக்கத்திலுள்ள இரண்டு பெரிய இறக்கைகளுக்கும் இடையே உள்ள உடல் மத்திய பாகத்தில் "மண்ணெண்ணெய்க்கட்டியை" எரிப்பதனால் இயங்கும் (Monoplane) யந்திரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த யந்திரத்தின் முகப்பில் காற்றாடிபோல் சுழலும் மரத்தால் செய்த ஒரு பெரிய ஈரிலைத்தண்டு இருக்கிறது. பறக்கும் மனிதன் (Aviator) யந்திரத்துக்குப் பின்னுள்ள பந்தோபஸ்தான ஸ்தானத்திலுட்கார்ந்துகொண்டதும், இயந்திரத்தை முடுக்கி முன்னேயுள்ள ஈரிலைத்தண்டைச் சுழற்றி விடுகிறார்கள். அது "வேகுவேகென்று" சுற்றவும் அதனியக்கத்தால் மேல்நோக்கியெழும் சுழல்காற்றுப்போன்ற வைகிருத(செயற்கை)க் காற்றோட்டமொன்று ஏற்படுகிறது. இந்த மேல்காற்றின் வேகம் இருபக்கத்திலும் விரித்துள்ள இறக்கைகள் போன்ற அழுத்தமும் பலமுமான பாய்களில் தாக்க, அவை யந்திரத்தையும் தூக்கிக்கொண்டு மேலெழும்புகின்றன. ஆனாலிது வைகிருத சக்தியினாலெழும் காற்றானதால் கொஞ்சதூரம் மேலெழுந்ததும், "வியஷ்டி சமஷ்டியிலொடுங்கும்" விதிப்படி, வீசியடிக்கும் இயற்கைக் காற்றானது, யந்திரத்தின் சுழற்சி வேகத்தாலுண்டாகும் வைகிருதக்காற்று வேகத்தை விழுங்கிவிடுகிறது. அப்பொழுது யந்திரம் பொட்டென்று கீழே யிறங்கி விடுகிறது. காற்றடித்ததனால் மேலேறிப்பறக்க முடியவில்லையென்று, இரண்டு மூன்றுதரம் யத்தனித்துப் பார்த்தும் பலிக்காததால், வேடிக்கையை நிறுத்திவிட்டு, 16௳ மறுபடியும் பறப்பதாகச் சொல்லி, காற்றோட்டமில்லாத காலைநேரத்தில் பறந்துகாட்டி, எல்லாரையும் மகிழச்செய்தார்.

பறக்கும் யந்திரமும் (Aeroplane) அதையுபயோகிக்கும் பறக்கும் மனிதனும் (Aviator) காற்றில்லாவிடத்தில் தங்கள் சக்தியைக்காட்டி தூற்றலாமேயன்றி, காற்றுள்ளபோது அவர்கள் ஜபம் பலிக்காது என்பது அவர் சொன்னதிலிருந்து ஏற்படுகிறது. "பறக்கும் வித்யை" கற்றோர், காற்றைபடக்கி யாளும் சக்திவாய்ந்தோர். அப்படியென்றால், புறத்திலடிக்கும் காற்றையடக்குவதில்லை. அதுவும் சாத்தியமேயாயினும், ஸநாதன தர்மத்துக்கு விரோதமாமென்று வீண் வேடிக்கை செய்து பார்க்கமாட்டார்கள். ஆனால் தங்கள் பிண்டத்தினுள்ளே யிருக்கும் வாசியை வசம் செய்து கொண்டு பிராணயவாசியோகத்தால் பூமண்டலமாம் ஸ்தூலபாவபந்தத்தைவிட்டு, புவர்லோகமாம் சூக்ஷ்மசரீரத்தில் புகுந்து, அதையும் அற்பமென்று விட்டு ஸுவர்லோகமாம் காரண உபாதியுட் புகுந்து வாஸனாமாத்திரமாய் நின்று அதன் அபிமானியான ஜீவனைக் கூடஸ்தனில் சேர்த்து அதனால் தம் காரண தேஹமான அவித்யாவாஸனையும் மாயையும், மரம் தோப்பில் மறைந்ததுபோல், ஒன்றாயிலங்க ஈசுவரனும் ப்ரஹ்மமும் ஒன்றான விடத்தில் ஸர்வசாக்ஷி மாத்திரமாய் நின்று மாயையைவென்று, மாயையைக்கொண்டு மாயாஜாலமெல்லாம் செய்தும், மாயைவலையில் சிக்காமல், மாயாதீத மாட்சிமைபெற்று மஹத்துக்களாய் விளங்குவர்.

இதனால் பறக்கும் யந்திரத்தைப்பற்றியாவது, பறக்கும் மனிதர்களைப்பற்றியாவது நிஷிதமாகவொன்றும் சொல்லவரவில்லை. எதுவும் உள்ளத்துணர்விலுணர்ந்தவாறு தானே சிறுமை பெருமைக்கிடமாகுமாதலால், "சுத்த சாதக" மார்க்கம் பற்றி "சுத்தம், சூந்யம், சுபாவம், ஒழிவு, ஒடுக்கம்" என்கிற வாக்கியாதீத பஞ்ச மஹாபத வித்திபெற்று, தேஹத்திரயங்

களுக்கும் அதீதமான "அபிமானி" மாத்திரமாயிருந்து "அசையாமலாடி"க் "குலுங்காமற் குதிக்கும்" திரிகுணாதீத திவ்ய லக்ஷணம் பொருந்திய இருஷிகளின் பூர்ணப்பார்வையில் இவ்வேடிக்கையின் மதிப்பென்னுமென்பதை யெடுத்துக்காட்டினதன்றி வேறல்ல. அண்டபிண்ட சமத்துவஞானத்தால், ஹடயோகசித்தி பெற்ற யோகிகள் "வாயுஸ்தம்பம்" என்று சொல்லும் வித்யையால், "வாசிவசம்" செய்து "வாயுஸ்தம்பனம்" என்கிற பூரக கும்பக சாதனத்தினால், ஸ்தூல தேஹத்தையும் ஆகாசத்தில் தூக்கி நிற்கச் செய்வார்கள். ஆனால் இந்த வேடிக்கைகளெல்லாம் "சூந்யமே" கதியாகவுடைய சூந்ய வித்தைகளாதலால் சுபாவமே பெரிதென்ற விவேகம் வாய்ந்தோர் (பிரகிருதி) சுபாவத்தைநாடி, "ஒழிவில் ஒடுக்கமாம்" உத்தமவழியே தேடுவார்களன்றி "சூந்ய வித்தை" கற்று ஸ்வப்நாவஸ்தையில் தானே சிக்கியுழலச்சிறிதும் ஸம்மதியார்.

இராவணன் ஸந்நியாசம் பூண்டாலும் காமாதுரனாகவே யிருப்பன்— பரதார கமனத்திலேயே கண்ணாயிருப்பன். இராஜ்ஜிய மாண்டாலும் சரி, இராமன் காடுபுகுந்து கெட்டலைந்தாலும் சரி, ஏகபத்னீ விருதனாகவே யிருப்பன். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஆயிரங் காரியம் செய்தாலும் காரணங் கடந்த தன் சுபாவமும், ஒழிவும், ஒடுக்கமும் குலையாது நிலை நிற்க நிறுத்தியே உழைப்பர். மஹாத்மாக்களுக்கும் துராத்மாக்களுக்கு முள்ள வித்தியாஸம் இதுவே.

ஆசைகளிலெல்லாம் காமம் கொடியது. அதிலும் கொடியது பண ஆசை; அதனிலும் கொடியது பேராசை; அதனிலும் கொடியது சித்தி விளையாடுவதிலுள்ள ஆசை; கொடிது கொடிதம்மா குரூரமாம் சூந்ய வித்தையிலாசை வைத்தல்! அப்படியானால் சூந்ய வித்தையிற் பழகும் பாதகர்களை யென்ன தான் செய்யலாம். இராவணேசுவரன் திரிலோகாதிபதியாக ஆண்டான்: தர்ம சிந்தை கெட்டதனால் பூண்டோடழிந்தான். ஆகையால் தர்மசிந்தை கெட்டு வாழ்வதிலும் வாழாமை நல்லதே. சூந்ய வித்தையில் இந்தியர்கள் மனஞ்செல்வதிலும் ஸநாதன தர்மத்துக்குக் கேடு வேறு இல்லை.

வித்யை (Science) ஒன்றே. அதற்குச் சூந்யவித்தை யென்றும் சுத்தவித்தை யென்றும் பேர் வந்தது அவ்வித்தையைப் பழகுவோர் உள்ளக் கருத்துப்போல் அவர்கள் அடையும் தீக்கதி நற்கதியைக் குறித்தன்றி வேறல்ல.

ஆகாச கமனம் நல்ல வித்தை தான். ஆனால் இராவணன் அந்த வித்தையினுதவியால் சீதையை யபகரித்துக் கொண்டுபோனான். இராமரோ இராவணஸம்ஹாரம் செய்துவிட்டு சீதையை மீட்டுக்கொண்டு போகும் பொழுது, பரதனுடைய ஆவல் தீர்க்கவேண்டுமென்று ஆகாச மார்க்கமாய்ச் சீதையை யழைத்துக் கொண்டு போனார்; மேற்றிசை நாகரிகமாம் (Western materialism) ஸ்தூலவித்தைக்கும் கீழ்த்திசை நாகரீகமாம் ஆத்மவித்தைக்கும் உள்ள வித்தியாஸம் இதுவே. பறக்கும்வித்தையைப் பார்க்கப்போகையிலும் பணத்தை யபகரிப்பதே முக்கிய நோக்கம். பணப்பேய் பிடித்தாடும் பேயாட்டத்தைப் பெருவித்தையாகக் கொண்டாடுவோர்க்கு நாம் சொல்வது விபரீதமாகத்தான்படும். ஆயினும் உள்ளதை யுள்ளபடி யெடுத்துரைக்க வேண்டியதவசிய மாகையால் வேடிக்கையிலும் வினையிருக்கிறதென்பதைச் சொல்லாமற் சொல்லிச் சுட்டிக்காட்டினோம். வினையறுப்பதே மனுஷத்தனமும் ஜன்மஸாபல்யமுமன்றி வினையை வளர்ப்பதல்ல.

"உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினி லுத்தமனைக்காண்."

என்று ஔவைப்பிராட்டியார் ஜன்ம ஸாபல்யத்தை யோர் குறளடியிற் கூறியிருப்பதைக் காண்க.

ஓம் தத்ஸத்.



## THE MAGH MELA.

### மாசி மகம்.

மார்கழி மாசத்துக்குத் திருவாதிரை நாள் எப்படியோ, தைமாசத்துக்குப் பூசம் எப்படியோ, அப்படி மாசி மாசத்துக்கு மகம் என்கிற நக்ஷத்திரம் அல்லது நாள் விசேஷம். இந்த நாளின் விசேஷம் என்னவென்றால், சமஷ்டிப் பிராணாத்மகஸ்வரூபியான சூரியன் கும்பராசியில் பிரவேசித்திருக்க சமஷ்டியிந்திரியாத்மக ஸ்வரூபியான சந்திரன் அதற்கு நேரெதிர் வீடான ஸிம்மராசியில் மக நக்ஷத்திரத்திற் பிரவேசிக்க, சூரியப்பிரகாசம் (ஆத்ம ஜோதி) அதில் பிரதிபிம்பிக்க, அதனால் அது பூரணத்துவ மடைந்து பிரகாசிக்கும். ஆனால், சூரியன் மூலாதாரத்தில் மூலப்பிரகிருதி சம்பந்தனாயிருந்து பிரகாசிப்பதால், நிலத்தின் ஈரம் பனியாக வெழுந்து மூடுபனியாகப்பார்வையை (தர்சனத்தை) மறைப்பது போல, மாயாசம்பந்தமான மூலாவரணம் சந்திரனாகிய மனதுக்குண்டாகும் ஆத்மதரிசனத்தை மறைக்கும். இந்தமாயாமலம் (மனக்குழப்பம்) கழிய, மாசி மாசத்துப்பௌர்ணமி வரையில், புண்ய தீர்த்தங்களின் சங்கமத்தில் ஸ்நானம் செய்து மனதைச்சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டியது. இதுதான் மக நக்ஷத்திரத்தின் விசேஷம். தை அமாவாசை முதல் மாசிமகம் வரையில் சுக்ல பக்ஷம் முழுவதும் மனத்தூய்மைக்குச் சுபாவமாகச் சாதனமுண்டாகையாலும், பனியின் கொடுமையால் மட்டும் கேடுண்டாகையாலும், பனியால் வருங்கேட்டை நதிசங்கமங்களில் ஸ்நானஞ் செய்தலாகிய "ஏகாக்ரசித்தவசம்" என்கிற யோகஸம்யமத்தால் தினைதினை போக்கிக்கொண்டு, பூரணசந்திரனுதயமாகும் காலையில் யோகஸம்யமசித்தியினால் மனோசுத்தி லபித்ததற்கு அடையாளமாக, ஸ்வாமி திருக்கோலங் கொண்டு எழுந்தருளி ஜீவகோடிகளுக்குத் தீர்த்த வாரியில் தரிசனங் கொடுத்தருளுவார்.

ஞான பூமியாகிய இப்பரதக் கண்டத்தில் ஓடும் நதிகளெல்லாவற்றிலும் கங்கையும் யமுனையும் மஹா புண்ணிய நதிகளாகையால், அவையிரண்டும் கூடும் சங்கமஸ்தானத்தில் மகநாளுற்சவம் வெகுவிசேஷமாகநடக்கும். ஜனங்கள் லக்ஷக் கணக்காக அங்கே ஸ்நானம் செய்ய வருவார்கள். பகவான் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் எல்லா க்ஷேத்திரங்களிலும் ஸ்வாமி திருக்கோலங் கொண்டு எழுந்தருளி பக்தகோடிகளுக்கு தீர்த்தவாரியும் தரிசனமும் அளிப்பார். அந்தர்முகத்தில் மனதை யடக்கியாளத் தெரியாத ஜனங்கள் பஹிர்முகத்தில் நடக்கும் இந்த ஐதிக விசேஷ மஹோற்சவங்களால் தெய்வத்தினிடத்தில் மனங் குவிந்து பக்தியுண்டாகப் பெறுவார்கள். இது அகம்புறமிரண்டும் ஒன்றே யென்று ரூபிப்பதற்காக ஏற்பட்டுள்ள சாதனங்களில் ஒன்று. அகத்திற் கண்டதைப் புறத்திற் கண்டுணரச் சக்தியில்லாதார்க்குக், கருவிகரணங்கள் தபோமகிமையால் ஒடுங்கி யிருந்தாலும், பஹிர்முகப் பட்ட காலத்தில் மாயைமயக்கால் நிலைதடுமாறித் தன்வசமழிந்து குழப்பத்தை யுண்டுபண்ணும்; ஆகையால் பஹிரகமுகப் பார்வை யிரண்டையும் ஒன்றுபடுத்தி ஸமரஸ நந்நிலைபெற்ற உத்தம யோகிகள் அகமுகத்திற்கண்டனுபவித்ததை பஹிர்முகமாயனுபவித்து, சம்பிரதாய மாத்திரத்தினாற் கட்டுப் பட்டு ஜனங்களுக்கு உள்ளன்பும் உண்மையு முண்டாக உதாரணமாக நின்றொழுகக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.

"உள்ளத்தினுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரேற்
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே"

யென்பது திருமந்திரோபதேசம். இது யோகிகளுக்குச் சொன்னது. "செறிவானுறைபதம்" சென்று, பராகாசமாகிய சிற்றம்பலவீதியிலே மிருத்யுவை வென்ற தேவர்கள் (அமார்

கள்) பிரதக்ஷணஞ் செய்து தொழும் ('வலங்கொள்') ஆதிப்பிரானை, யோகிகள் தங்களுடைய "சித்தவிருத்தி நிரோதனம்" செய்த விவேக மனதை வசப்படுத்தி அறிவார்கள். பிறப் பிறப்புக்குள்ளான மற்ற உலகத்தார், (சிவபிரான் முடியிலிருந்து) வளைகளை யணிந்த கைகளோடிழிந்துவரும் கங்கையின் நீரானது ('பொறியார்") தங்கள் காணங்கள் நிறையப் புகுந்து (தாபத்திரயங்களைப் போக்கிச் சாந்தமாம்) பரிசுத்தமுண்டாக தீர்த்தமாடினால் புண்ணியராவார்கள் என்று திருமூலதேவர் அதே யதிகாரத்தில் பிந்தியுபதேசித் திருக்கிறார்.

"அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொன்
மறிவார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல் மூழ்கப் புண்ணியராமே."

—திருமந்திரம்.

இன்னொரு திருமந்திரத்தில், "தெளியறிவாளர்தம்சிந்தை யுள்ளான்" ஆகிய கடவுள், தேஹோஹ பாவனை யுள்ளவர்களுக்குத் "தண்ணிதாய்த் தோன்றும்," கோஹ மனதுடையவர்களுக்கு "கூடவு மொண்ணான்" என்றும், வாசிவசம்பெற்ற யோகிகளான "வளிபறிவாளர்க்கு" அவனுடைய தரிசனம் "வாய்க்கிலும் வாய்க்கும்' என்று சொல்லியிருக்கிறார். இதை யெழுதிக்கொண் டிருக்கையில் ஸ்வாமி சருடவாக னருடராய் தீர்த்தவாரிக்குப் போகிறதாக வந்து கூப்பிடுவதால், நாமும் "வளைக்கை வருபுனற் கங்கைப் பொறியார் புனல் மூழ்கப்" போவோம்.

மாசிமகத் திருநாளில் தீர்த்தவாரியில் மனத்தூய்மைபெற்று, அருள்வெளி யடைந்தவர்கள், அந்த அருள்வெளியில் தானே சிந்தைபதிந்துள்ளவர்களா யிருப்பார்களாதலால், அடுத்துவரும் கிருஷ்ண பக்ஷத்திலும் அருள் வடிவையே உபாஸித்து சிவராத்திரியன்று சிவசாயுஜ்யம்பெற்று அப்பால்வரும் 'அமாவாஸை பூரணையாக"த் தம் புநிதசிந்தையிற்பார்த்து அந்த அகமுக தரிசனத்தை அடுத்த சுக்லபக்ஷமுடிவாம் பங்குனி யுத்தரநாளில் பஹிர்முகமாக பகவான் ஊர்த்தவ தாண்டவமாடுவதைத் தரிசித்துக் கிருதார்த்தராவர். ஓம் தத்ஸத்.

---

வ

ஓம் ஸ்ரீசாவித்திரியைநமஃ

# உபநிஷதர்த்த தீபிகை.

## 9. அத்யாத்மோபநிஷத்.

ஓம் பூர்ணமத இதி சாந்தி:

II.

(332-வது பக்கத் தொடர்ச்சி)

——:-:——

அகண்டாநந்தமாகிய ஆத்மாவைத் தனது ஸ்வரூபமென்றறிந்து ஆத்மாவினிடமே உள்ளும்புறம்பும் சதா காலமும் ஆனந்த ரசத்தை யநுபவிப்பாயாக.

29. வைராக்கியத்தின் பலன் போதமாகும், (விவேக ஞானமாகும்); போதத்தின் பலன் உபரதியாகும்; உபரதியின் பலன் தன் ஆனந்தாநுபவத்தால் வரும் சாந்தியே.

30. இவைகளில் முன் சொல்லிய ஒவ்வொரு குணமும் பின் சொல்லியதில்லாவிட்டால் நிஷ்பலமாகும். நிவிருத்தி யென்பது (மோக்ஷமென்பது) பரமதிருப்தி யென்றும் நிகரற்ற ஆனந்தமென்றும் அறியப்படும்.

31. மாயையை உபாதியாக உடையவனும், ஜகத்துக்குக் காரணமானவனும், சர்வஞ்ஞத்துவம் முதலிய லக்ஷணங்களோடு கூடினவனும், பரோக்ஷத்துவ லக்ஷணத்தை யுடையவனும், சத்தியம் முதலிய (ஞானம், ஆநந்தம் என்கிற) குணங்களோடும் கூடினவன் தத் என்கிற பதத்தால் குறிக்கப்படுவான்.

[குறிப்பு:—பரோக்ஷத்துவ லக்ஷணத்தை யுடையவன் என்கிற வரையில் "தத்-துவம் அசி" என்கிற மகாவாக்கியத்தில தத் என்னும் பதத்தின் வாச்சியார்த்தமாகிய ஈசுவரனைத் தடஸ்த லக்ஷணத்தால் குறித்து, பிறகு சத்தியம் என்பதால் அப்பதத்தின் லக்ஷியார்த்தமாகிய ஈசுவரசாக்ஷியை ஸ்வரூப லக்ஷணத்தால் குறித்திருக்கின்றது.]



32. எவன் நான் என்கிற ஞானத்திற்கும் சப்தத்திற்கும் ஆதாரமாய்ப் பிரகாசிக்கின்றானோ, அந்தக்கரணத்தால் பின்னமாக்கப்பட்ட போதத்தோடு (அறிவோடு) கூடினவனோ அவன் துவம் பதத்தால் குறிக்கப்படுவான்.

[குறிப்பு:—இது துவம்பத வாச்சியார்த்தமாகிய கர்த்தா போக்தாவாகிய ஜீவனைக் குறிக்கும்.]

33. ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உபாதிகளாகிய மாயையையும் அவித்தையையும் விடுத்தே, அகண்ட சச்சிதானந்தமாகிய பரப்பிரஹ்மம் அறியப்படும்.

[குறிப்பு:—இச்சுலோகம் தத்பதார்த்த துவம்பதார்த்த லக்ஷியங்களாகிய ஜீவேசுவர சாக்ஷிகளின் ஐக்கியரூபமான அஸிபதார்த்தத்தைச் சொல்லும்.]

34. இந்தப்பிரகாரம் வாக்கியங்களால் (மஹாவாக்கியங்களால்) அவைகளின் அர்த்தத்தின் அநுசந்தானமே சிரவணமாகும். யுக்தியினால் அவ்வர்த்தம் சரியென அநுசந்தானம் செய்வதே மனனமாகும்.

35. இவை இரண்டாலும் (சிரவண மனனத்தாலும்) சந்தேகமற்றிருக்கும் பொருளில் (பிரஹ்மத்தில்) ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சித்தத்தின் ஏகாக்கிரத் தன்மையே நிதித்தியாஸனமெனப்படும்.

36. (எப்பொழுது) சித்தமானது கிரமமாக தியானம்செய்வோன், தியானம் (இவை இரண்டையும்) விடுத்து, நிவாத தீபத்தைப்போல் (காற்றில்லாவிடத்து தீபத்தைப்போல்) தியேய (தியானிக்கப்படும்) வஸ்துவினிடம் மாத்திரம் நிற்குமோ, (அப்பொழுது) சமாதியெனச் சொல்லப்படும்.

[குறிப்பு:—நிதித்தியாசனமாகிய தாரணை தியானங்களில், தியானிப்போன், தியேயம் (தியானிக்கப்படும் பொருள்), அவையின் சம்பந்தமாகிய தியானம் இம்மூன்றும் உண்டு. இவையே திரிபுடி எனப்படும். தியானத்தின் விஸ்மரணை ரூபமாகிய சமாதியில் தியானிப்பவனும் தியானமும் கெட்டு, சித்தம் தியானிப்பவனிடம் ஒன்றுபட்டு தியேயாகாரமாய்நிற்கும்.

37. ஆத்மாவிடம் நிற்கும் விருத்திகள் அப்பொழுது (சமாதி நிலையில்) அறியப்படாமலிருந்த போதிலும் பிறகு (சமாதியை விட்டு) எழுந்தவனிடம் எழும் ஸ்மரணத்தால் அவைகள் (சமாதியினிடம் உளவென்று) ஊகிக்கப்படும்.

[குறிப்பு:—ஆழ்ந்த தூக்கத்தில் ஓர்வித மனோவிருத்திகளும் உண்டானதாக அவ்வவஸ்தையில் அறியப்படாமற்போனாலும், நித்திரையை விட்டு எழுந்தபிறகு நான் சுகமாய்த் தூங்கினேன் என்கிற ஞாபகம் உண்டாவதால், தூக்கத்தில் சுகரூபமான விருத்தியிருந்ததாகவும் எழுந்த பிறகு அதன் சம்ஸ்காரமே ஸ்மரண ரூபமாய் வெளியாவதாய் ஊகிக்கப்படுவதுபோல், சமாதியிலும் எழுந்த பிறகு ஆநந்தரூப பிரஹ்மமாயிருந்தோம் என்கிற ஸ்மரணமுண்டாவதால் ஆனந்த ரூபவிருத்தி சமாதியிலுண்டாயிருக்கவேண்டுமென்று அநுமானிக்கப்படும்.]

38. அநாதியாகிய இந்த சம்சாரத்தில் சேர்க்கப்பட்ட கர்மகோடிகள் இதனால் (சமாதியால்) லயமடைகின்றன (நசிக்கின்றன), சுத்தகர்மமும் விருத்தியடைகின்றது.

[குறிப்பு:—சுத்தகர்மம் என்பது ஜீவன்முக்தர்களிடம் இருப்பதாகச்சொல்லப்படும் சுத்த வாசனை யென்கிற மோக்ஷவாசனையைக் குறிக்கும். சமாதியால் இச்சுத்தவாசனை பெருக்கடையும்.]

39. இந்த சமாதியானது தர்மமாகிய அமிருத தாரைகளை ஆயிரமாயிரமாகப் பொழி

கின்றமையால், மஹாயோகிகள் இதைத் தர்மமேக சமாதியென்பர்.

40. இதனால் (இச்சமாதியினால்) வாசனைக்கூட்டங்களனைத்தும் லயமாகவே, புண்யபாபமென்று சொல்லப்படும் கர்மத்தின் கூட்டமானது* வேருடன் களையப்படவே, (சமாதிக்கு) முன், வாக்கியம் (மஹாவாக்கியம்) பரோக்ஷமாய் அறியப்பட்டதானது, பின் (நிர்விகல்ப சமாதியால்) பிரதிபந்தங்களில்லாததாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் (அம்மஹாவாக்கியத்தின்) அபரோக்ஷஞானம் உண்டாகும்.

41-45. போக்யத்தினிடம் (அனுபவிக்கக்கூடிய வஸ்துக்களிடம்) வாசனை உதயமாகாதிருப்பதே வைராக்கியத்தின் முடிவாகும். அகம்பாவமுதயமாகாதிருத்தலே போதத்தின் (விவேகஞானத்தின்) சிரேஷ்டமான முடிவாகும். லயமடைந்த விருத்திகள் உதயமாகாதிருத்தலே உபரதியின் எல்லையாகும். எவன் பிரஹ்மத்தினிடம் ஆத்மலயமடைந்து நிர்விகாரியாய் நிஷ்கிரியனாய் (தொழிலற்றவனாய்) சதானந்தத்தைப்புசிப்பானோ அவனே ஸ்திரமான பிரஞ்ஞையை (அறிவை) யுடைய யதியாவான் (சந்நியாசியாவான்.)

(லக்ஷண விருத்திகளால்) சோதிக்கப்பட்ட பிரஹ்மத்திற்கும் ஆத்மாவுக்கும் (பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும்) உள்ள ஐக்கிய பாவத்தில் மூழ்கியிருப்பதான நிர்விகல்ப சின்மாத்திர விருத்தியே பிரஞ்ஞையென்று சொல்லப்படும். இது (இப்பிரஞ்ஞை) யாரிடம் எப்பொழுது மிருக்குமோ அவனே ஜீவன்முக்தனென்று சொல்லப்படுவான்.

46. தேக இந்திரியங்களில் நான் என்னும் பாவமும் மற்றவைகளில் இது என்னும் பாவமும் எவனுக்கு ஒருக்காலும் உண்டாவதில்லையோ அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுவான்.

47. எவனொருவன் பிரத்தியக்கிற்கும் (ஜீவாத்மாவுக்கும்) பிரஹ்மத்திற்கும், (அப்படியே) பிரஹ்மத்திற்கும் (அதன்) சிருஷ்டிக்கும், பிரஞ்ஞையினால் எவ்விதத்திலும் பேதத்தை அறியமாட்டானோ அவன் ஜீவன்முக்தனெனப்படுவான்.

48. இது (இத்தேகமானது) நல்லோர்களால் பூஜிக்கப்பட்ட போதிலும், துர்ஜனங்களால் பீடிக்கப்பட்ட போதிலும், எவன் சமபாவத்திலிருப்பானோ அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுவான்.

49. பிரஹ்ம தத்துவத்தை அறிந்தவனுக்கு முன்போல் சம்சார முண்டாகாது. உண்டாயிற்றென்றால் அவன் பஹிர்முகன், (வெளிமுகப்பார்வையுள்ளவன்); பிரஹ்ம ஸ்வரூபத்தையறிந்தவனாக மாட்டான்.

50. சுகம் முதலியவையின் அநுபவம் எதுவரை யுண்டோ அதுவரை பிராரப்தம் உண்டு. கிரியையை முன்னிட்டே பலன் உற்பத்தியாகும். கிரியையற்றவன் எங்குமில்லை.

[குறிப்பு:—இந்த சுலோகத்தில் கடைசி வாக்கியத்தில் "நிஷ்கிரியோ" என்கிற பாடப்படி மொழிபெயர்த் திருக்கிறது. "நிஷ்கிரியே" என்று பாடமாகின் "கிரியை யற்றவனிடம் பிராரப்த மென்பது எங்குமில்லை" எனமொழிபெயர்க்கலாகும்.]

51. நான் பிரஹ்மம் என்கிற ஞானத்தால் நூறுகோடி கல்ப காலமாய் சம்பாதித்த (சஞ்சித) கர்மங்களெல்லாம், விழிப்பதால் ஸ்வப்னத்தின் கர்மங்களைப்போல், நாசமாகும்.

52. தன்னை ஆகாசத்தைப்போல் அசங்கனென்றும் (பற்றற்றவனென்னும்) உதாசீனனென்றும் (உபேக்ஷை யுள்ளவனென்றும்) அறிந்து, யதியானவன் (சந்நியாசியானவன்) எப்பொழுதேனும் கொஞ்சமேனும் ஆகாமிய கர்மங்களில் தொடப்பட மாட்டான்.

* மூலத்தில் கர்ம சஞ்சயம் எனப்பாடம். ஆகவே சஞ்சிதகர்மத்தைக் குறிக்கும்.



53. எவ்விதம் ஆகாயமானது கடத்தின் சம்பந்தத்தாலும் சாராயத்தின் வாசனையாலும் மாசடையாதோ அவ்விதம் ஆத்மாவும் உபாதிகளுடைய சம்பந்தத்தாலும் அவைகளின் தர்மங்களாலும் (குணங்களாலும்) மாசடைவதில்லை.

54. ஞானம் உண்டாவதற்கு முன் ஆரம்பித்துவிட்ட (பிராரப்த) கர்மம் லக்ஷியத்தைக் குறித்து விடுத்த அம்பைப்போல் தன் பலனைக் கொடாமல் ஞானத்தால் நசிக்கிறதில்லை.

55. புலி என்று நினைத்து விடுத்த அம்பு பிறகு (அது) பசுவென்று தெரிந்த போதிலும் எவ்விதம் நிற்காமல் அதிவேகத்துடன் லக்ஷியத்தை அடிக்குமோ (அவ்விதமே பிராரப்த கர்மமும் பலனைக்கொடாமல் விடாது).

56. நரை ஜரை (மூப்பு) இல்லாதவன், மரண மில்லாதவன் என்று எவன் ஆத்மாவையடைகின்றானோ, (அவ்விதமடைந்து) ஆத்மாவாக நிற்கின்றானோ அவனுக்கு பிராரப்தத்தின் கல்பனை எங்ஙனம்!

[குறிப்பு:—55-வது சுலோகம் வரை பிராரப்த கர்மம் ஞானியையும் விடுவதில்லை என்று சொல்லி, இப்பொழுது அப்பிராரப்தகர்மம் அவன் தேகமட்டும் சம்பந்தமாகி லோகத்திற்கு மாத்திரம் அவன் அநுபவிப்பதாய்த் தோன்றுமேயன்றி, உண்மையில் சதாகாலமும் பிரஹ்மத்தினிடம் ஒன்றுபட்டிருக்கும் ஞானிக்கு பிராரப்த கர்மத்தின் சம்பந்தமேயில்லை யென்று இவ்விடம் சொல்லப்படுகின்றது.]

57. எதுவரை தேகமே ஆத்மாவென்கிற புத்தியுண்டோ அதுவரை தான் பிராரப்தம் சித்திக்கும். (ஞானிக்கோ) தேகம் ஆத்மா வென்கிற அறிவு இல்லை. ஆகையால் (ஞானிக்கு) பிராரப்தம் (உண்டு) என்பதை விடவும்.

58–59. இவனுடைய (ஞானியின்) தேகத்திற்கு பிராரப்தத்தைக் கல்பிப்பதும் பிராந்தியே தான். அத்தியாசமானதற்கு (கல்பிதப் பொருளான தேகத்திற்கு) எவ்விதம் உண்மை சொல்லலாம். அசத்பமானதற்கு எவ்விதம் உத்பத்தி. பிறக்காததற்கு எவ்விதம் நாசம். அசத்தானதற்கு (உண்மையற்றதற்கு) எவ்விதம் பிராரப்தம்.

60–61. ஞானத்தால் அஞ்ஞானத்தின் காரியங்கள் (தேகம் முதலிய உபாதிகள்) அதன் காரணத்துடன் (அஞ்ஞானத்துடன்) நசிக்குமானால், தேகமானது எவ்விதம் நிற்குமென்று (கேட்கும்) மூடர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு சுருதியும் பாஹ்ய திருஷ்டியால் பிராரப்தத்தை (உண்டென்று) சொல்கின்றது. ஞானிகளுக்கு தேகம் முதலியவையின் உண்மையைப் போதிக்கும் பொருட்டல்ல.

61–64. பரிபூர்ணமாயும், ஆதியந்த மற்றதாயும், சத்கனமாயும், சித்கனமாயும், நித்யமாயும், ஆநந்தகனமாயும், நாசமற்றதாயும், ஆத்மாவின் அகண்டஏகரசமாயும், பூர்ணமாயும், அந்தமற்றதாயும், சர்வதோமுகமாயும் (எங்கு மிருக்கும் பிரகாச ரூபமாயும்), தள்ளக்கூடாததாயும் வைத்துக்கொள்ளக் கூடாததாயும், ஆதாரமற்றதாயும், நிர்க்குணமாயும், கிரியையற்றதாயும், சூக்ஷ்மமாயும், நிர்விகல்பமாயும், நிரஞ்சனமாயும் (மாயாரஹிதமாயும்), நிரூபிக்கக்கூடாத ஸ்வரூபத்தை யுடைத்தானதாயும், மனோவாக்குக் கெட்டததாயும் இருப்பதெதுவோ, அது சத் சம்பூர்ணமானதும் ஸ்வதஸ்ஸித்த மானதும், சுத்தமானதும், ஞான ஸ்வரூபமானதும், இவ்விதமெனச் சொல்லக் கூடாததுமான இரண்டற்ற ஒன்றேயான பிரஹ்மம், இதனிடம் நாநா (பல்விதம்) என்பது கொஞ்சமேனும் இல்லை.

65. ஸ்வானுபூதியால் அகண்டமாகிய தன் ஆத்மாவை தானே அறிந்து, ஆத்மாவினிடம்

நிர்விகல்ப ஸ்வரூபத்தோடு மிகவும் சுகமாய் நிற்பவன் சித்தன்.

66. இந்த ஜகத்தானது எங்கே போயிற்று, யாரால் கொண்டுபோகப்பட்டது, எவ்விடம் லயித்தது, இப்பொழுதேதன் என்னால் பார்க்கப்பட்ட (அது) இல்லாமல் போய்விட்டது இதென்ன மஹாச்சர்யம்.

67. அகண்டானந்தமாகிய அமிர்தத்தால் பூர்ணமாயிருக்கும் பிரஹ்மமாகிய மஹா சமுத்திரத்தில் எதை விடுவேன் எதை எடுத்துக் கொள்வேன், வேறென்பது எது, அதற்கு விலக்ஷணமானது எது.

68. (அதனிடம்) நான் ஒன்றையும் பார்க்கிலேன், கேட்கிலேன், அறிகிலேன், சதானந்த ரூபியாகிய என்னாத்ம ஸ்வரூபத்தோடு ஸ்வலக்ஷணனாய் (என் லக்ஷணத்தோடு கூடினவனாய்) இருக்கின்றேன்.

69–70. சங்கமற்றவன் (பற்றுதலற்றவன்) நானே, அங்கங்களில்லாதவன் நானே, லிங்கமற்றவன் (பிரமாணங்களாலறியப் படாதவன்) நானே, ஹரி நானே, சாந்தன் நானே, அந்தமற்றவன் நானே, பரிபூர்ணன், புராதனன், கர்த்தாவல்லாதவன் நானே, போக்தா வல்லாதவன் நானே, சுத்தஞ்ஞானஸ்வரூபன் நானே, கேவலனாகிய சதாசிவன் (எக்காலும் மங்களமாகிய ஸ்வரூபத்தை யுடைத்தானவன்) நானே. சதாசிவர் இந்த வித்தையை அவாந்தர தமஸுக்குக் கொடுத்தார். அவாந்தர தமசு பிரஹ்மாவுக்குக் கொடுத்தார். பிரஹ்மா கோராங்கிரசுக்குக் கொடுத்தார். கோராங்கிரசு ரைக்வருக்குக் கொடுத்தார். ரைக்வர் ராமருக்குக் கொடுத்தார். ராமர் சகலப் பிராணிகளுக்கும் கொடுத்தார். இதுவே நிர்வாணநுசாஸநம், வேதாநுசாஸநம்.

(9-வது அத்யாத்மோபநிஷத் வாச்யார்த்தம் முற்றிற்று)

மு. கோ. நாராயணஸ்வாமி ஐயர்.

---

## Sita-A Tale of Hindu Domestic Life.

### சீதா அல்லது இல்லறவாழ்க்கை.

34 – வது அதிகாரம்.

——:-:——

இராமச்சந்திரய்யர் பட்டகஷ்டம் சொல்ல முடியாது. அய்யோ பகவானே என்னை எனிப்படி சோதிக்கிறீர். நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன். நான் ஒரு பாவத்தையு மறியேனே. இப்படியிருக்க, 'பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்' என்பதுபோல் என் பெண்சாதியைக் கொண்டு போனது மல்லாமல் என் பிள்ளையையும் கொண்டு போய்விட்டீரே. பிள்ளை யென்றாலும் சாதாரணமான பிள்ளையா. அவன் அழகும் அவன் புத்தியும், எல்லாம் இப்படி அவன் காணமற்போய் நான் நினைத்துப் புலம்ப வேண்டுமென்பதற்காகத் தான் அவ்வளவு நன்றாய் அமைந்ததோ தெரியவில்லை யென்று இப்படி வாயில் வந்தபடி யெல்லாம் சொல்லி புலம்பிக் கொண்டே யிருந்தார், அவருக்கு தூக்கமென்பதே கிடையாது. அதே ஞாபகத்தால், தூங்கும் போதே சீதா வந்ததாக ஸ்வப்னங்கண்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டு 'ஆ சீதா, சீதா, எங்கே இப்போது வந்தாளே' என்பார். இப்படி இராமச்சந்திரய்யருக்கு இதே பைத்தியமாகப் பிடித்துவிட்டது. இராமச்சந்திரய்யர் இனி வீட்டிலிருந்து வருத்தப்பட்டு முடியாதென்று சீதாவை எங்கிலும் தேடிக்கொண்டு புறப்பட்டார். 1-வருஷம் இப்படித் தேடியும் எங்கேயும் அகப்படவில்லை. பட்டணத்திற்குப்போய் தேடிப்பார்த்து விட்டு அங்கேயும் அகப்படாமல் போனால் காசிக்குப் போய் சன்யாசம் வாங்கிக்கொண்டு விடலாமென்று யோஜித்து இராமச்சந்திரய்யர் பட்டணத்திற்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார். பட்டணத்தில் ஒரு நாள் சமுத்திரக் கரையில் இவர் போகும்போது எதிரில் ஓர் பையன் வந்தான். பையன் அதிபால்யமாயும் வெகு அழகாயுமிருந்தான். இராமச்சந்திரய்யருக்கு அந்தப் பையனைப் பார்க்கப் பார்க்க தன்னை யறியாமலே அவன் மீது ஓர்பிரிய முண்டாயிற்று. பிரிய முண்டாகவும் இராமச்சந்திரய்யர் அப்பையனை விட்டுப் பிரிய மனம்வராமல் அவனைத் தொடர்ந்துகொண்டே கூடப்போனார். இப்படி வெகுதூரம் போனபிறகு, இராமச்சந்திரய்யர் 'சீ இதென்ன அஞ்ஞானம்! நாம்



வீட்டைப்பார்க்க போவோம்: நமது பையனைப்போல பூலோகத்தில் வேறு ஒருவருமில்லையா! என்று சொல்லிக் கொண்டே மெள்ள மெள்ள திரும்பிவந்தார். இவர் திரும்பிவரும் போதே பின்புறமிருந்து இருவர் வந்து இவர் கைகளைப்பிடித்துக்கொண்டார்கள். இராமச்சந்திரய்யர் திரும்பிப்பார்த்தார். அவர்கள் இரண்டு போலீஸ் கான்ஸ்டேபில்கள். இராமச்சந்திரய்யர் அவர்களைப் பார்த்து நடுங்கி என்னவென்று கேட்டார். அவர்களுள் ஒருவன், அடே திருட்டுப்பயலே, என்ன கைகாரனையா! ஒன்றும் தெரியாதவன்போல் என்னவென்கிறான்பார் என்றான். மற்றவன் அடே உள்ளத்தை சொல்லிவிடு; அந்தப் பையனுடைய தங்க வளையை எங்கே ஒளித்து வைத்தாய். அது உன்னை விட்டுப் போகவில்லை. பேசாமல் கொடுத்துவிடுஎன்றான். இராமச்சந்திரய்யர் அடே நானென்ன திருடனா? நான் திருச்சினாப்பள்ளியில் வக்கீல் தெரியுமா. உன் வளையை யார் கண்டார்கள் என்றார். கான்ஸ்டேபிள் மற்றவனைப்பார்த்து, அண்ணா பக்காத்திருடன். இவன் வக்கீல் என்று வேஷம் வேறே போடுகிறானென்று சொல்லி உடனே இராமச்சந்திரய்யருக்கு கையிலும் காலிலும் விலங்குபோட்டுக்கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். இராமச்சந்திரய்யர் 'சிவனே! இதுவும் உன்செயலா? நான் சொல்வதை நம்பக்கூட மாட்டேனென்கிறார்களே, ஓ ஹோ அந்தப் பையன் மீது நமது அபிமானத்தைக் காண்பித்ததற்கு இதுதான் பயன்' என்று மனதில் வருந்தப்பட்டுக் கொண்டே கான்ஸ்டேபில்களோடு போனார். இராமச்சந்திரய்யர் பிறகு 2 நாள் கொட்டடியிலேயே இருக்கவேண்டியிருந்தது. மூன்றாம் நாள் தான் விசாரணைக்குக் கொண்டுபோகப்பட்டார். ராமச்சந்திரய்யர் மாஜிஸ்ட்ரேட்டிடம் தான் திருச்சினாப்பள்ளியில் வக்கீலென்றும் அதை ருஜுப்படுத்த தன்னிடம் ஆதரவுகளெல்லாம் இருக்கின்றன வென்றும், அந்தப்பையனைத் தொடர்ந்துபோனது வாஸ்தவந்தானென்றும், அந்தப் பையன் தன் காணமற்போன பிள்ளை ராஜகோபாலன் போலவே இருந்தபடியால் தான் அவனுடன் கூடவே ஆசையால் தொடர்ந்து போனதாகவும் சொன்னார். மாஜிஸ்ட்ரேட்டார் ஆதாவுகளெங்கே என்று கேட்க, நல்லதம்பித்தெருவு 54 நெ. வீட்டில், இராகவேந்திராவ் வசம் இருக்கிறதென்றும் சொல்ல, மாஜிஸ்ட்ரேட்டு பரிதாபப்பட்டு உடனே ஸ்பெஷல் ஸம்மன் அவருக்குப் போட்டுத் தெரிவித்தார். இராகவேந்திராவ் ஓர் பெட்டியுடன் கோர்ட்டில் ஆஜரானார். இராமச்சந்திரய்யர் தன்னிடமிருந்த ஒரு சாவியால் அப்பெட்டியைத்திறந்துதன் ஸர்டிபிகேட்டு கடிதங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் காண்பித்தார். மாஜிஸ்ட்ரேட்டு அவருடைய வார்த்தையை நம்பி அவரை விடுதலை செய்தார். இராமச்சந்திரய்யருக்கு இதையெல்லாம் பார்த்து வைராக்கியம் அதிகமாகி உடனே காசிக்கு புறப்பட்டுப் போய்விட்டார்.

* * *

தான் படுத்திருந்த கட்டிலிலிருந்து சீதா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். அய்யோ இதென்ன, நான் கனவுகாண்கிறேனா என்ன! என் வீட்டின் அறையில் நான் படுத்திருக்க நானிங்கே எப்படி வந்தேன். என்னைக் கொண்டுவந்தவர்கள் யாரோ ஒருவரையும் காணோமே என்று சுற்று முற்றும் பார்த்தாள். ஒருவரையும் காணோம்; சீதாவுக்கு பயம் அதிகமாகி விட்டது. சற்றுநேரத்திற் கெல்லாம் வெகு அழகாய் சிங்காரித்துக் கொண்டு ஜமீன்தார் தெய்வசிகாமணி முதலியார் வந்தார் தெய்வசிகாமணி முதலியார் கு் கிராமத்தி லிருந்தபடியால், அவருக்கு நாகரிகமான சங்கதிகளொன்றும் தெரியாது. ஸ்திரீகளை வசியம் செய்யும் சாமர்த்தியமும் அவரிடம் கிடையாது. முதலியார் தன் சொத்தை யடைந்த சமயத்தில் ஒரு ஜமீன்தார் இவருக்கு இனாமாக ஓர் கோச்சு வண்டி கொடுத்தார். அந்த வண்டியில் முன்புறம் வெகு உயரமாயும் வெகு அலங்காரம் செய்யப்பட்டு மிருந்தது. முதலியாருக்கு அந்த வண்டியை எப்படி உபயோகப்படுத்துகிறதென்பது தெரியவில்லை; வண்டி கொடுத்தவரைக் கேட்பதற்கும் வெட்கமாயிருந்தது. கடைசியில் அவர்போனபிறகு ஓர் நல்லநாள் பார்த்து எல்லா ஜனங்களையும் வரவழைத்து, சுவாமிக்கு பூஜைசெய்து வண்டியேற ஆரம்பித்தார். வண்டியேறும் சமயத்தில் ஜமீன்தார் தன்னுடைய முக்கிய மந்திரியைக் கூப்பிட்டு மந்திரி இந்த வண்டியின் உயரப்பக்கம் இருக்கிற அழகைப்பார்த்தால் அதில் தான் நான் உட்கார்ந்து கொள்ளவேண்டும் போலிருக்கிறது என்றார். அந்தமந்திரி எப்போதும் தன் யஜமானன் மனதுபோல் நடக்கிற வழக்கம். அப்படி நடந்ததால் தான் அவன் வெகுநாளைக்கு நிலைத்திருந்தான்.

ஒரு சமயம் முதலியாருக்கு கத்தரிக்காயில் வெகு பிரியமேற்பட்டது. கத்தரிக்காயை நல்லசமயல் செய்யச்சொல்லி மந்திரியையும் கூட சாப்பிடச் சொன்னார். சாப்பிடும்போது, "மந்திரி கத்தரிக்காயைப்

போல் நல்ல பதார்த்தம் வேறு ஒன்று மில்லை பார்த்தாயா" என்றார். மந்திரி, "ஆமாம் சுவாமி கத்தரிக்காய் பதார்த்தங்களுக் கெல்லாம், ராஜா, என்பதை காண்பிக்கும் பொருட்டுத்தானே அதன் தலையில் ஓர் கிரீடம் கூட வைத்திருக்கிற தென்று காம்பைக் காண்பித்தார். முதலியார் அந்த உத்ஸாகத்தில் மறுநாளும் அதையே சமைக்கச்சொல்லி அன்றைக்கும் மந்திரியை சாப்பிடச் சொன்னார். அன்றைக்கு கத்தரிக்காயிலிருந்த ஓர் முள் முதலியாரின் நாக்கில் ஏறிவிட்டது. முதலியாருக்கு உடனே கத்தரிக்காய் மீது வெகு வெறுப்பு வந்து விட்டது. உடனே மந்திரி கத்தரிக்காயைப்போல கெட்ட பதார்த்தம் கிடையாது" என்றார். மந்திரி "தடையென்ன, கத்தரிக் காயைப்போல் கெட்டபதார்த்தம் கிடையா தென்று தானே அதன் தலையில் பகவான் ஒரு ஆணியை அடித்து விட்டா"ரென்று முன் காட்டின காம்பையே காட்டினார்.

இப்படிப்பட்ட மந்திரிவண்டியின் உயரப்பக்கம்சிலாக்கிய மென்றுசொல்ல கேட்கவும் வேண்டுமோ? முதலியார்எண்ணப்படியே மந்திரியும், "சுவாமி உன்னதமாய் இருப்பதையும் அலங்காரஞ் செய்திருப்பதையும் பார்த்தால் அது உங்களுக்காக ஏற்பட்ட சிம்மாசனமென்றுதோன்றுகிறது" என்றான். முதலியார் உடனே உன்னத ஸ்தானத்தில் குரங்குபோல் ஏறி உட்கார்ந்துகொண்டார். எல்லோரும் இதைப்பார்த்து சந்தோஷப்பட்டார்கள். சந்தோஷப்படாதவன் வண்டிக்காரன் ஒருவனே. அவன் முதலியாரைப் பார்த்து "நான் உட்காருகிறது" என்றான். மந்திரிக்கு கோபம் வந்து அவனை ஓர் உதைகொடுத்து அவனை வண்டியின்உள்ளேஇழுத்து உட்காரவைத்து கதவைப்பூட்டினார். பிறகு வண்டியை எப்படி கோச்சுமேன் ஓட்டுவது என்பது தெரியாமல் எல்லோரும் சிரித்தார்கள். பிறகு முதலியார் வண்டிக்குள் வர, வண்டிக்காரன் மேலே போனான். முதலியாருடையபுத்தி இப்படிப் பட்டதாதலால் அவருக்கு சீதாவிடம் நடந்துகொள்ள வேண்டிய தந்திரம் தெரியவில்லை. சீதா அவரைக் கண்டதும் எழுந்து தூரத்தில் நின்றாள். தெய்வசிகாமணி முதலியார் 'கண்ணே உனக்கு என்னைத் தெரியுமா?' என்றார். சீதா கோபித்துக் கொண்டு அய்யா தாங்கள் கொலைக் கேசில் வந்த முதல் சாக்ஷியல்லவா? உங்களை எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. ஆகிலும் நீங்கள் இவ்வளவு கெட்டிக்காரராயிருந்தும் என்னை கண்ணே என்று கூப்பிடுகிறீர்களே இது தர்மமா என்றாள். ஜமீன்தார் சிரித்துக் கொண்டு "ஒகோ என்னை கண்ணே என்று கூப்பிடுகிறதோடேயா இருக்கிறது. உடனே அனுபவிக்க வேண்டாமா என்கிறாயோ"என்றார். சீதா பார்த்தாள். ஒகோ நாம் இவனிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்வது சரியல்லவென்று கண்டு பேச்சுக்கொடுத்தே பேர்தைப் போக்கும் பொருட்டு என்ன முதலியாரே என்னைக் கொண்டு வரவும் உங்களுக்கு காடுதானா அகப்பட்டது. நல்லதோட்டம் ஒன்றுமில்லையா என்றாள். முதலியார் "பெண்ணே, நீ எங்கே போகலாமென்று சொன்ன போதிலும் வருகிறேன். என்னைவிட இராமச்சந்திரன் எந்தவிதத்தில் சிலாக்யம்? பார்! நான் அவனைவிட அழகாய்த்தா னிருக்கிறேன். என் பணத்திற்கோ சொல்லவேண்டாம்" என்றார். சீதா அதெல்லாம் தெரிந்துதா னிருக்கிறதுஎன்றாள். ஜமீன்தார் என் பெண்ணே வீண் தாமதம் செய்கிறாயே, உன் அழகுக்கும் உன் புத்திக்கும் உன்னை சற்றுக் கூடப்பிரிந்திருக்க எனக்கு முடியவில்லையே என்றார். சீதாவின் கண்ணிலே கோபப்பொறி பறந்தது. பிறகு தன் கோபத்தை யடக்கிக் கொண்டு, "அய்யா, கிணற்று ஜலத்தை வெள்ளம் கொண்டு போகுமா! நான் எங்கு படுத்திருந்தேன். நீங்கள் எப்படி என்னைக்கொண்டுவந்தீர்கள்"என்றாள். ஜமீன்தார் "பெண்ணே என் ஆள்களை விட்டு, உன்னை கட்டிலோடே தூக்கிவரச் சொன்னேன். உனக்கு நடுவில் ஞாபகம் வாராமலிருக்கும்படி உனக்கு பாலில் ஒரு மருந்தைக் கலந்து உன் பரிசாரகனைகொடுக்கச் சொன்னேன்" என்றார். சீதாவுக்கு, தன் பரிசாரகனும் இதில் சேர்ந்ததை நினைக்க வெகு கோபம்வந்தது. பிறகு அதையும் அடக்கிக்கொண்டு தங்கள் ஆள்கள் எங்கே என்றாள். முதலியார் உடனே கையைத்தட்டினார். உடனே 4-ஆள்கள் ஓர் புதரிலிருந்து வெகு வேகமாய் ஓடிவந்தார்கள். சீதா அவர்களைப் பார்த்துவிட்டு நல்லது நீங்கள் போங்களென்றாள். அவர்க ளெல்லோரும் போய்விட்டார்கள். ஜமீன்தாருக்குக் காமம் கொஞ்சங் கூட பொறுக்கக் கூட வில்லை. பெண்ணே, என் தாமதம் செய்கிறாயென்றார். சீதா, நன்றாயிருக்கிறது. இனிமேல் காடு உங்களுடையது தானே. ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப்பொறுக்கவில்லை யென்கிற கதையாயிருக்கிறதே. நானென்ன, காலமே கைகால் சுத்தம் செய்துகொள்ள வேண்டாமா என்றாள். உடனே முதலியார் ஒரு ஆளைக்கூப்பிட்டு கிணறு அல்லது



OFFICE OF THE ... OF BOOKS REGISTERED 5 APR 1911 MADRAS.

குளத்திற்கு சீதாவைக் கூட்டிப்போகச் சொன்னார்: குளத்திற்குப் போனதும் அங்கே கொஞ்சதூரத்தில் ஆள்கள் சப்தம் கேட்டது. சீதா இனிமேல் பயமில்லை யென்று பல்தேயத்து சுத்தம் செய்து கொண்டு மறுபடி ஜமீன்தாரிடம்போனாள். ஜமீன்தார் இவள்வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இவள் போனதும் பெண்ணே நீ முன்னைவிட இப்போது இன்னும் அழகாயிருக்கிறாய். அழகை நன்றாய்உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்; அதற்கு அந்த இராமச்சந்திரனை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது என்றார். சீதா கோபித்துக்கொண்டு அய்யா அவர் பிராமணராச்சுதே, அவரை நீங்கள் மரியாதையில்லாமல் அவனென்று சொல்லலாமா என்றாள். முதலியார்: பெண்ணே,நீ எது பேச்சிலேயே காலத்தை வீண் போக்குகிறாய். வா வா நாமிப்படிப் பிரிந்திருக்கலாகாது என்றார். சீதா: என்ன ஐயா, முதலியார்கள் எவ்வளவு நாகரிகம் தெரிந்தவர்கள். நீங்களென்ன இப்படி பேசுகிறீர்களே. நாம் அனுபவிப்பதற்கு இது தகுந்த இடமா. நல்ல தோட்டத்திற்கல்லவா போகவேண்டும் என்றாள்.

முதலியார்: பெண்ணே இது சரிப்படாது. நீ வாராமல் போனால் நான் உன்னை பலாத்காரம் செய்வேனென்றார்.

சீதா: அய்யா நீங்கள் பலாத்காரம் கூட செய்ய வேண்டுமா. நான்தான் காத்துக் கொண்டிருக்கிறேனே யென்றாள்.

முதலியார்: ஆனால் வா என்று பக்கத்தில் வந்தார். சீதா சிறிது பின் நகர்ந்துபோய், பக்கத்தில் மனிதர்கள் சப்தத்தைக் கேட்டு, கொஞ்சம் தைரியமுண்டாகி, ஏனய்யா பிறர் பெண்சாதியை இப்படி கூப்பிடலாமா. உங்கள் பெண்சாதியை ஒருவன் இப்படி கூப்பிட்டால் நீங்கள் பொறுப்பீர்களா என்றாள். முதலியார் இன்னும் பக்கத்தில் வந்து, பெண்ணே உன்னை இந்த நியாயமெல்லாம் கேட்கவில்லை; வருவாயா மாட்டாயா என்றார்.

சீதா: இப்படி காமப்பட்டு ராவணன் மாண்டது தங்களுக்குத்தெரியாதோ! வேண்டாம்: அன்ய ஸ்திரீகள் மீது ஆசைவைப்பது உங்களுக்கு நியாயமில்லை யென்றாள். முதலியார் இதைக்கண்டு சீதாமீது ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து பலாத்காரம் செய்யஓடிவந்தார். சீதாவும் ஓடிக்கொண்டே "சுவாமி பகவானே அநாதையைக் காப்பாற்றும் நீர் இப்போது வரக்கூடாதா" என்று கதறினாள்.

பதிவ்ரதா ஸ்திரீகளுக்கு கெடுதல் வருவதை பகவான் சகிக்கமாட்டாரல்லவா? முதலியார் ஓடிவந்து சீதாவைத் தொடுவதற்குள் இரண்டு இராஜகுமாரர்கள் ஓடிவந்து ஒரு நிமிஷத்தில் ஜமீன்தாரைத் தோற்கடித்து அவரைக் கீழேதள்ளி விட்டார்கள். ஜமீன்தார் உடம்பெல்லாம் காயப்பட்டுப்போய் கீழே விழுந்தவர் எழுந்திருக்க முடியவில்லை. இராஜகுமாரர்கள் இருவரும் உடனே சீதாவை அழைத்துக்கொண்டு வெகுதூரம் கூட்டிப் போனார்கள். பாதிதூரம் போவதற்குள் அவர்கள் இருவருக்குள்ளாகவே பெண்ணை யாரடைகிற தென்பதைப் பற்றி சண்டை வந்து விட்டது. சீதா பார்த்தாள்: தனக்குள் ஓர் தந்திரம் செய்ய எண்ணி ராஜகுமாரர்களே, எனக்கு உங்கள் இருவர் மீதும் வெகு பிரியமாயிருக்கிறது. என்னசெய்கிறது. ஆகிலும் நான் ஒருவரைத்தானே அடையலாம். நீங்கள் இருவரும் உங்கள் குதிரையைவிட்டு அதோ இருக்கிற குளத்தின் நடுவிலிருக்கிற தாமரை புஷ்பத்தை யார் முந்திக் கொண்டு வருகிறீர்களோ அவர்களைத்தான் நானடைவேனென்றாள். உடனே இருவரும் வெகு வேகமாய் இதோ நான் கொண்டுவருவேனென்று பெருமை பேசிக்கொண்டு ஓடினார்கள். சீதா இதுதான் சமயமென்று கண்டு உடனே ஆண்வேஷம் போட்டுக் கொண்டு அவர்கள் குதிரைகள் இரண்டையும் சே... தது சவாரிசெய்துகொண்டு அக்காட்டிலேயே ... வேகமாய்ப் போய்விட்டாள். ராஜகுமாரர்கள் ... டி போட்டுக்கொண்டு வெகு வேகமாய் குள... ஓடிப்போய், குளத்தில் இறங்கி நீந்தி, அங்கே ... களை எதிர்த்த முதலைகளைக் கூடக்கொன்று ... சிரமப்பட்டு தாமரைப்புஷ்பங்களை எடுத்துக்கொ... ஒருவருக் கொருவர் போட்டி போட்டுக்கொ... ஓடிவந்து இருவரும் ஒரே காலத்தில் புறப்பட்ட ... த்தில் வந்து சேர்ந்தார்கள். அங்கே தங்கள் குதி... களையும் காணோம். பெண்ணையும் காணோம். ... கள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு, ஓகோ ... பெண் நம்மை மோசம் செய்துபோனது மல்லா... குதிரைகளையும் கொண்டுபோய் விட்டாளேயெ... துக்கித்து எப்போதும் கால் நடையாக அவர்கள் ... ந்து வழக்கமில்லாததால், இப்பெண்ணைக் கண்டு ... த்து அவளை அவமானம் செய்யாமல் விடுவதில் ... என்று சபதம் கூறிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்... கள். சீதாவும் வேறொரு பட்டணம் போய்ச் ... ந்தாள்.

(இன்னும் வரும்)

எஸ். ராமஸ்வா...

## Agricultural Notes.

### கம்பளிப்பூச்சியைப்பற்றிய குறிப்பு.

——:-:——

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப் பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச் சேதப்படுத்தும் ஜெந்துக்களென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்குந் தெரியும். மழைக்காலத்தில் திடீரென்று உண்டாகி வேளாண்மைகளுக்கு அதிகக் கெடுதி செய்கிறது. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறு வகைகள் இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக் கம்பளிப்பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங் கொட்டையைப்போல் உருமாறி மறு வருஷம் மழைக்காலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். அக்காலம் ஆரம்பித்துத் தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப் பூச்சிகள் மேல்நோக்கித் துளைத்துக்கொண்டு தரை மட்டத்துக்கு வந்து, பொட்டுப் பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடுங் கூடிய வெள்ளைப் பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகள் சாதாரணமாய்க் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒருசேரக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச் சுற்றிலும் இவைகள் கூட்டமாய்த் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப் பூச்சிகள் இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள் திரளாய் முட்டைகளிருக்கக் காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப் பூச்சிகளாகும்.

இதற்குப் பரிகாரமான உபாயங்கள்:—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500 முதல் [illegible]) முட்டைவரையிலும் இடும். ஆகையால் ஒரு [illegible]யைக் கொன்றால் பின்னிட்டு 500 முதல் [illegible]) புழுக்கள் வரையிலும் கொன்றது போலா[illegible] மழையி[illegible]

கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய்ப் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல். இந்தப் புழுக்களின் தொந்தரவுள்ள இடங்களில் சமயம்பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்து விடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும் பூச்சிகளைத்தானகக் கொல்லும் ஒரு சூத்திரம். இச் சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ் வந்த பூச்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கை உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலைக் கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப் பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6 அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி மண்ணெண்ணெய் பாதியாகக் கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயைவிட இந்தக்கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப் பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். $2\frac{1}{2}$ முதல் 3 அங்குல ஆழமும் இரண்டடி சதுரம் உள்ள ஒரு தகரத் தட்டம் இதற்கு ஏற்றதென்று அனுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6 அல்லது 8 அணாவுக்கு எந்தத் தகரக்கடைக்காரனும் செய்து கொடுப்பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல அகன்றவாயுள்ள எந்தப் பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கிற்கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்கு மேலே லாந்தரைத் தொங்கவிட வேண்டியது. ஆழமில்லாத பாத்திர மாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல் வைத்து அந்தக் கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப்பயிரைக்காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப் பயிர்மட்டத்திற்கு மேல் இந்தக் கருவி முழுதும் உயர்ந்திருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி ஒரு மண்குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறிச் சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதைச் சோதித்தறியும் பொருட்டு 1909 வருஷம் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் மஞ்சகுப்பஞ் ஜில்லாவிலிருக்கிற பன்னிகுப்பம் கிராமத்து நிலங்களில் 15 விளக்குப்பொறி வைத்திருந்தது. முதலில் ஒரு சிறுகூட்டம் முந்தியநாள் பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜூலைமீ 23உ இரவிலும், பிறகு அதிலும் மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8உ பெய்த $1\frac{1}{2}$ அங்குல மழைக்குப்பின் 10உ சாயந்திரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அவ்வருஷம் [illegible]ப்பூச்சிகள் புறப்பட்டன; முதற் கூட்டமோ கொஞ்[illegible] 400 பூச்சிகள் தான். 4 ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலிரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800 முதனாளிரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளிற் குறைந்த பட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்க[illegible]வண்டும். ஒரு பெட்டை 500 முதல் 1,200 முட்டைகள் வரை யிடுகிறதென்பதை யோசித்துப் பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பது [illegible]தெளிவாய் நாம் காண்கிறோம். (இந்த உபாயத்தால்) தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூடக் காணாததினாலே பன்னிகுப்பங் கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்து கொண்டார்கள்.

முடிவு.—இந்தத் தந்திரத்தினால் பூரண நன்மையடைய வேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் [illegible]ரண்டொரு குடியானவர்கள் மட்டும் தங்கள் நிலங்க[illegible] விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச் செய்வதனால் அந்தப் புலங்களிலும் அவைகளுக் [illegible]த்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமற் பிடிபட்டிறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப் புலங்களில் இடப்பட்டிருக்கும் முட்டைகள் பொரித்த புழுக்கள் கடைசியில் இங்கும் வந்து சேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லாக் குடிகளும் ஏகோபித்துக் கொல்லைகளெங்கும் விளக்குப் பொறிகளைக் கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்க முடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமற் போனாலோ இப்பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் (முதல்) மழைபெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும்; முதனாளிரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப் பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்து பின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் (மழை நின்றவுடனே) சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்து விடவேண்டியது அவசியம்.

விளக்குப்பொறி வைத்தல்.—செலவு சுருக்கமான விஷயம் அதற்குவேண்டிய கைம்முதல் ஒரு ரூபாவுக்கு மேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதானால் அது ஒரு 6 அல்லது 8 அணா. மூங்கிற்காற்சட்டம் வகையராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேற் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பலவருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைசா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டு வாரத்துக்குமேல் விளக்கு வைக்கவேண்டியிராது. ஆகையினாலே எண்ணெய்ச் செலவு 8 அணா பிடிக்கும். (இக்கம்பளிப் பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தைப் பார்த்தாலோ) அரைவாசி, முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் உயர்ச்சிக்கும் தக்கபடி ஏகர் ஒன்றுக்கு 20 ரூபா முதல் 50 ரூபா வரையில் நஷ்டம் உண்டாகிறது.

——◆——

## The Spiritual Year

### Or, Worship of the Spirit in Time.

### "வருஷத்துக்கொருநாள்"--அல்லது "காலவந்தனம்."

——◆——

காலாதீதமான நித்த முத்த சுத்த வஸ்துவாம் பரம்பொருளை, கால தேச வர்த்தமான பரிச்சேதங்களால் கட்டுண்டு கிடக்கிற உலகத்தார் அவைகளை அதிக்கிரமித்துப் பார்க்கச் சக்தி யில்லாதவர்களாக விருப்பதால், அவர்கள் புருஷ தத்துவத்தைக் காலத்தில் வைத்துக் காலபுருஷனாக பாவித்து அந்த தேவனதையைத் தொழ வேண்டியவர்களாக விருக்கிறார்கள். இவர்களுடைய தேவதா சிந்தனைக்காக வருஷத்தின் பனிரண்டு மாசங்களிலும் விசேஷங்களைக்

கற்பித்துப் பிரகிருதி, சுபாவத்தால் பகவதாராதனை நடந்துவரப் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வருஷம் இரண்டு அயனங்களாகப் பிரிக்கப்பட்டு, உத்தராயணம், தக்ஷிணாயனம் என்றுள்ள இரண்டு பகுதிகளில் முன்னது பிரகாச மார்க்கம் (அர்ச்சாரதி மார்க்கம்) என்றும், பின்னது இருள் மார்க்கம் (தூமமார்க்கம்) என்றும் ஏற்பட்டதுபோல, அந்தந்த மார்க்கங்களின் அதிஷ்டான தேவதைகளும் அத்தேவதைகளுக்குப் பூஜையும் ஏற்பட்டிருக்கிறது. அர்ச்சாரதி மார்க்கத்துக்கு அதிஷ்டான தேவதை சூரியன்: ஆகையால் உத்தராயண காலத்தில் பகல் நேரம் வளர்ந்து இரவு குறைந்து வரும். தூமமார்க்கமாகிய தக்ஷிணாயனத்துக்கு அதிஷ்டான தேவதை சந்திரன்: ஆகையால் தக்ஷிணாயனத்தால் இராக்காலம் அதிகரித்து பகற்காலம் குறைந்து வரும்.

சந்திரன் "இருளில் ஒளியாய்" விளங்குவதால் சரீரத் திரயங்களுக்கும் அபிமானியாகிய ஜீவனின் சமஷ்டிரூபமாகச் சொல்லப்படுவன், ஜீவசமஷ்டிக்கு விசுவதேவன் என்றுபேர். ஈரமில்லாவிட்டால் மரமில்லை; (உலர்ந்து பட்டமரம் வெறும் கட்டையே); அதுபோல், ஜீவனிடத்தில் இரக்கம் (காருண்யம், ஈரம்) இல்லாவிட்டால், உயிர் நில்லாது. உயிருமுடலும் சேர்ந்தால் மட்டுமே ஜீவதெசை யுண்டாவது போல், விசுவதேவர் ஆதியாய்வந்த அழியாத உள்ளுடம்போடு, கருணையால் உயிரதும்கூட, சூக்ஷ்ம காரண ரூபம் இரண்டும் சேர்ந்தவராய் விளங்குவர்; உள்ளுடம்பு சாக்ஷிமாத்திரமாயுள்ளது; உயிராய் நிற்பது சரீரத் திரயங்களின் அபிமானி.

உயிருக்கு உடலில் பற்றுள்ள வரையில் (அபிமானமுள்ள வரையில்) அதற்கு விமோசனமில்லை. ஆதலால் தான் அதற்கு அபிமான தேவதை யென்றுபேர். அதாவது தேஹத்தை யபிமானித்து நிற்கும் தேஜோமயமான ரூபம். இந்த ஜீவசமஷ்டிக்கு விசுவதேவர் என்று சொன்னோம். விபஷ்டி மனிதனுக்கு தேஹத் திரயங்களுடன், சீவன், கூடஸ்தன் என்கிற ஐந்து அம்சங்கள் உண்டாயிருப்பது போல், இந்த சமஷ்டி மனிதனும் காலபுருஷனுக்கு வஸு, ருத்தர, ஆதித்திய ரூபங்களாம் சரீரத் திரயங்களும், "ஆர்த்ரவர், புரூரவர்" என்று சொல்லும் அபிமான தேவதை, குடித் தேவதை ரூபங்களும் உண்டு; தூமமார்க்க அபிமானியாம் இவர்கள் பூமண்டலத்திலிருந்து சந்திரமண்டலம் வரையில் சென்று அதற்கு மேல் போக முடியாமல், கர்மவாசனையினுலு தேஹாபிமானத்தாலும், மறுஜன்மம் எடுக்கும் படியான நிலைமையிலிருக்கும்பொழுது பிதுர் கள் என்றும் சந்திரமண்டலம் தாண்டி சூரிய மண்டலம் வரையில் போய் சூரியனோடு ஐக்கியமாகித் திரும்பும் சக்தி வாய்ந்தவர்களுக்கு பிதுர்க்களின் அபிமான தேவதையும், கூடஸ்த ரூபமுமாகிய விசுவதேவர் என்றும் பெயர். இவர்கள் தூமமார்க்க அபிமானிகள் அதாவது அஞ்ஞானவாசனை நீங்காதவர்கள்.

பிரஜாவிருத்திக்குக் காரணமாய் இருப்பவர்கள் இவர்களே. இவர்களுடைய ஆராதனை யில்லாவிட்டால் பிரஜாவிருத்தி யுண்டாகமாட்டாது. வித்துமுளைக்கப் பூமியும் பூசாரமும் எப்படி அவசியமோ, அப்படியே பிரஜாவிருத்திக்குக் கர்மசேஷமும், தர்ம வாசனாரூபிகளான பிதுர்க்களும், அவர்களின் அபிமான தேவதையான விசுவதேவரும் அவசியமாயிருக்கிறார்கள்.

பகலின்றி இரவில்லை: இரவின்றிப் பகலில்லை. இராப்பகலில்லா விடத்தே குறைவு நிறைவும், தேய்தல் வளர்தலும் இல்லையாம். ஆகவே பிறப்பிறப்பு மில்லையாம். தேஹத்தை நிலையற்றதென்றுணர்ந்து அதிலுள்ள ஆசையை விட்டு, தேஹத்தின் அபிமான தேவதையான ஜீவனை